OM

Respectfully dedicated to The Goddess SRI VASAVI, the Bestower of all good and under Her fostering care to the World and Humanity in token of Universal Love and Service, on behalf of the learned author of this book Vidwan Sri Anathur M. K. Venkatraman.

(Sd.) K. Sundaram Chettiar,
(DEWAN BAHADUR)
Retired High Court Judge, SALEM.
Camp PALNI.
21-1-1944.

Under the auspices of
Dakshina Kandam
Arya Vysya Maha Sabha

ஸ்ரீ வாசவீ விஜயம்.

தக்ஷிணகண்ட மலர் 1.



ஆசிரியர்கள்

உபயபாஷாப்ரவீண பண்டிதராய

ரத்தி. வேங்கடகோபால் செட்டியார், கோவை.

M. V. கோபால் செட்டியார், சேலம்.

கே. வெங்கட்ராமன், ஆனத்தூர்.

தக்ஷிணகண்ட

ஆர்ய வைஸ்ய மஹாசபையாரால்

பிரசுரிக்கப்பெற்றது.

முதற் பதிப்பு.

1943.

உரிமைகள் யாவும்

தக்ஷிணகண்ட ஆர்ய வைஸ்ய மஹாசபையைச் சேர்ந்தவை.

விலை ரூ. 5—0—0.

கிடைக்குமிடம் :—

S. V. நாகசுப்ரமண்யம் செட்டியார்,

ப்ரோப்ரைட்டர், ஆரியன் சோப் கம்பெனி, கோயம்புத்தூர்.

(காஷியர், ஆர்ய வைஸ்ய மஹாசபை, தக்ஷிணகண்டம்.)

ரோபால் எலக்ட்ரிக் பிரிண்டிங் ஒர்க்ஸ், உடுமலைப்பேட்டை.

ஸ்ரீ பரப்ரம்மணே நமः

அறிவொளி வணக்கம்.

அருளறிவா யெங்குநிறைந் தானந்தம் நல்கும்
பொருளீனநன் னெஞ்சே நீ போற்று.

எத்தனை விதங்களாய் எத்தனை பெயர்களால்
எவ்வெவ ரழைப்பினு மவர்
இதயத்தி லெண்ணிய வுருக்கொண்டு முன்தோன்றி
என்னவரம் வேண்டு மென்றே

சித்தமகிழ் வோடுகேட் டெவ்வரமு நல்கியருள்
செய்யுமொரு கருணை சமுத்
திரமே யருட்சச்சி தானந்த வொளியே
சிதாகாச மோன வடிவே

தத்துவமெ லாங்கடந் திலகுமெய்ஞ் ஞானமே
சத்யமே சாந்த மேநற்
சத்வமே தயவே யவாங்மனே கோசரத்
தனிநிலைய மேயெ னன்பே

பத்தியொடு நினதருட் புகழினைத் தமிழிலே
பரவிடக் கிருபை செய்வாய்
பல்லுயிரு மின்பமுற வருளுவா யெங்கும்
பரந்துநிறை யறிவு மயமே.

சக்தி வழிபாடு.

ஐங்கரன் என வாகி யறுமுகன்
அந்தி வண்ணன் அரியய னுகியே

சங்கரி பர தேவிச ரஸ்வதி
தாம ரைமலர் மேவுந்தி ருவுமாய்

மங்குல் வாயு வனல்புனல் பாருமாய்
மருவு பேரழ கியுமி யற்கையுமாய்

எங்கு மாகி நிறைந்தருள் சக்தியாய்
இலகு மன்னை யிணையடி யேத்துவாம்.

சேரு டைப்பல நற்கலை யோங்குக
செய்தொ ழில்கள் சிறந்து விளங்குக

பாரி லெங்கணும் பஞ்சம் அணுகிடாப்
பண்பி னோடும் இல்வாழ்க்கை நிலவுக

தூரி யந்தின் ஒலியும் முழங்குக
தூய்ய தையலர் மங்களம் பாடுக

வீர சக்தி விரைவில் வருகென
வேண்டிப் போற்றிநல் லின்பம் விரும்புவாம்.

வாச வியென்னுஞ் சக்தியைத் தூய்மைசேர்
மனமெ னுந்திவ்வி யாலயத் தேயொளிர்

தேசு மிக்க அறிவெனும் பீடத்தில்
சேர்த்து சாந்தநன் னீரினி லாட்டியே

மாசில் அன்பெனும் மாமலர் தூவியே
மல்கும் ஆனந்த வாரிதி மூழ்கிடில்

பாச வல்வினை மாய்ந்திடும் ஆதலால்
பரிவி னேடுநாம் பாடிப் பரவுவாம்.

உண்மை யெங்கும் உலாவுக மெய்த்தவர்
உத்தமர் சித்தர் எங்கும் பொலிகநல்

தண்மை யாஞ்சுத்த சாத்தம்நி றைகஇத்
தரையில் கோபம் பொறுமை மறைக மெய்த்

திண்மை வீரம் முயற்சி அறம்புகழ்
சேவை பக்திவிஞ் ஞானம் வளர்கெனப்

பெண்மையே உரு வாய்வரும் அன்னையைப்
பேணிப் போற்றிநம் வாழ்வை விளக்குவாம்.

இன்ப வுருவமுடன் எங்கும் மன்னியே—அன்பர்
இன்ன லகற்றியருள் செய்யு மன்னையே!
மன்பதை கட்குநலம் தந்தி டுவையே—அவர்
மனத்துறும் மாசகற்ற வந்தி டுவையே;

பசியைத் தவிர்க்கவல்ல வின்ன முதமே!—மேலாம்
பரசுக மேமணக்கும் பைங்கு முதமே!
அசைவில் மனோநிடத்தை நல்கு மருந்தே!—உண்மை
அடியவர் கண்களுக் கினிய விருந்தே!

ஞான மொழிமழையைப் பெய்யு முகிலே!—பக்தர்
நாடு மறிவொளியை வீசு பகலே!
த்யான மிகுமுளத்தில் மேவு பொருளே!—நல்ல
த்யாக வுணர்ச்சிகொடுக் கும்மெய் யருளே!

யோக முனிவர்கட்கு கந்த துணையே!—ஜன்ம
உததி கடத்துதற்கே வந்த புணையே!
ஏக மெனப்பொலியும் ஜோதி மயமே!—இப்போ
தெனையும் திருத்திற்றம்மா நின்உ தயமே;

என்பிழை களனைத்தும் மன்னித் திடுவாய்—என்றன்
இதயக் குகையினுள்ளே மன்னிப் பொலிவாய்;
இன்ப வொளிபெருக எண்ணி யருள்வாய்—என்றும்
இரண்டற வேகலந்தே உண்ணி லவுவாய்;

எங்கணும் நின்மயமாய்க் காணவே செய்வாய்—சூழும்
இருவினை யற்றுமோனம் பேணவே செய்வாய்;
கங்குல் பகலென்றின்றி வாழ்ந்திடச் செய்வாய்-நின்றன்
கழல்நிழ லின்சுகத்தி லாழ்ந்திடச் செய்வாய்.

கே. வேங்கட்ராமன், ஆனத்தூர்.

ஓம்

ஸ்ரீ வாசவீ சஹாயம்.

பதிப்புரை.

பூவுலகிற் சிறந்த புண்ணிய பூமியாகிய இப்பாரத நாட்டு மக்கள் தொன்று தொட்டு நான்கு வருணங்களாய்ப் பாகுபடுத்திக் கொண்டே வாழ்க்கையை நடத்திவருவது உணரற்பாலது. ஆரிய வைசியர்களாகிய நாம் ஆங்காங்கும் ஸ்ரீ வாசவாம்பிகைக்கு ஆலயம் அமைத்து வழிபட்டு வருகின்றோம். கல்யாணம் முதலிய விசேஷ சடங்குகளிலும் அவ்வன்னையைத் தவறாது வழிபடுகின்றோம். அவ்வம்பிகையே நம் குல தெய்வமென்றும் கொண்டாடுகின்றோம். ஆனால், தமிழ் நாட்டிலுள்ள அநேகருக்கு அவ்வம்பிகையின் வரலாறு நன்கு தெரியாமலிருப்பது ஒரு பெருங் குறையாகும். இக்குறையை நீக்குதற்கு ஓர் தகுந்த வழியைத் தேடவேண்டுமென வெகுநாளாய் அடியேன் எதிர்பார்த்ததுண்டு.

ஸ்ரீ வாசவியின் கிருபா கடாட்சத்தால் இக்கைங்கர்யம் நிறை வேறுவதற்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் வாய்த்தது. 14—10—1941ல் திருவண்ணாமலை க்ஷேத்திரத்தில் நடந்த வடாற்காடு ஜில்லா ஆர்ய வைஸ்ய மஹாசபையின் இரண்டாவது ஆண்டு விழாவிற்கும், அருணை ஆர்ய வைஸ்ய சமாஜ ஆறுவது ஆண்டு விழாவிற்கும் சென்று கலந்துகொள்ளும் பேறு அம்பிகையின் அருளால் அடியேனுக்குக் கிடைத்தது. அவ்வமயம் ஆனத்தூர் ஸ்ரீ கே. வெங்கட்ராமன் என்னும் இளைஞரைச் சந்தித்தேன். அவரியற்றிய தமிழ்க் கவிதை யின் சுவையினைக் கண்டு வியந்து, அவரைச் சேலத்திற்கு அழைத்து வந்தேன். அத்தருணத்தில் தெய்வாதீனமாக எனது அருட்குரு வாகிய கோவை உபயபாஷாப்ரவீண, பண்டிதராய **ஸ்ரீமான் கிரந்தி வேங்கட கோபால ஸ்ரேஷ்டியார்** அவர்களும் ஹிந்துபுர யாத்திரை செய்துகொண்டு சேலமாநகர் வந்து சேர்ந்தமையினால் எமக்கு மிகவும் சவுகரியமாயிற்று. உடனே ஸ்ரீ வாசவீ விஜயம் என்னும் இந்நூலை வெளியிடுவதைப் பற்றிப் பத்திரிகைகளில் பிரசுரித்தேன். பல இடங்களிலிருந்து ஆசிகளும் சம்ஸ்க்ருத ஆந்த்ர ப்ரதிகள் நான்கைந்தும் வந்து சேர்ந்தன. எத்திட்டத்தில் எம்முறையில்

இதனை வரைவதென மூவரும் கலந்து ஆலோசித்துத் தீர்மானித்து முடிவு செய்துகொண்டு ஒரு நன்னாளில் எழுதத் தொடங்கினேம். இறைவியின் திருவருளால் ஒருவாறு இனிது முடிந்தது.

எற்கனவே ஸ்ரீ கன்னிகா புராணம் என்ற பெயரால் வெளி வந்துள்ள பல ப்ரதிகளையும், ஸ்ரீ வைஸ்ய புராணம், வைஸ்ய தர்ம ப்ரகாசிகா, வைஸ்ய தர்ம தீபிகா முதலிய பல புஸ்தகங்களையும், சரித்ர ஆதாரங்களையும் இயன்றமட்டிலும் ஆராய்ந்தே இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நூல் புராதன கருத்துக்களை யொட்டி, சிறந்த முறையில் நவநாகரீகத்துக்கும் ஏற்ப, க்ரந்த ரசன முறையின் படி அமைந்துளது எனக் கூறலாம். ஒரு வைசியன் அல்லது ஒரு மனிதன் என்னென்ன விஷயங்களை முக்கியமாகத் தெரிந்துகொள்ள வேண்டுமோ, அவை அனைத்தும் இதன் கண் உள என்றுல் அது மிகையாகாது. வீரம் தீரம் தேகம் தேசம் குடும்பம் சமூகம் தர்மம் தத்வம் பக்தி யோகம் ஞானம் ஆன்மார்த்தம் ஆதிய எல்லாத் துறை களிலும் அவசியம் அறிய வேண்டிய அநேக அம்சங்கள் இதனுள் பொதிந்து கிடக்கின்றன. சொல், பொருள், தொகுப்பு முறை, நடை முதலியன அனைவருளத்தையும் அவசியம் கவர்ந்து நன்மையளிக்கு மென்பது என் நம்பிக்கை. தமிழ் நாட்டிற்கு இத்தகைய நூல் மிகவும் இன்றியமையாததொன்றே.

அன்னை வாசவியின் அருட்பெருக்கின் உதவியால், இப்புத்தகம் தக்ஷிணகண்ட ஆர்ய வைஸ்ய மஹாசபையின் மூலமாய் வெளிவருவது பற்றி அடியேன் சொல்லொணப் பெருமகிழ்வெய்துகின்றேன்.

இந்நூலை அச்சேற்றி ப்ரசுரிக்கப் பெரிதும் ஸ்ரத்தை எடுத்துக் கொண்டு, ஒப்பற்ற பேருதவி புரிந்தருளிய எனது ஆப்த நண்பரும், தக்ஷிணகண்ட ஆர்ய வைஸ்ய மஹாசபைத் தலைவருமான கோவை வள்ளல் வைஸ்ய பூஷணம், வைஸ்ய சிரோன்மணி **ஸ்ரீமான் P. A. ராஜு செட்டியார் அவர்கட்கும்,** ஷி மஹாசபையின் உப - காரியதரிசியும், தனதிகாரியுமான எனது நண்பர் கோவை **ஸ்ரீமான் S. V. நாகசுப்ரமண்யம் செட்டியார் அவர்கட்கும்,** இந்நூலை அச்சிடப் பொருளுதவி புரிந்த கோவை நகர வைஸ்ய ப்ரமுகர்கள் அனைவர்க்கும், அடியேனுடைய வேண்டுகோளை அங்கீ கரித்து முக்வுரை எழுதித்தந்த எனது உத்தம நண்பராகிய

ரிடையர்ட் ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீமான் திவான்பஹதூர் **K. சுந்தரம் செட்டியார் அவர்கட்கும்,** அணிந்துரை வழங்கியோர், பிழை திருத்தம் புரிந்தோர் முதலியவர்கட்கும், இந்நூலை அச்சிடுவதில் சிறந்த பங்கெடுத்துக்கொண்டு செவ்வனே அச்சிட்டுத்தந்த உடுமலை கோபால் மின் இயக்கிப் பதிப்பக உரிமையாளர் **ஸ்ரீமான் T. V. ராதா கிருஷ்ண செட்டியார் அவர்கட்கும்,** இன்னும் இப் புஸ்தக சம் பந்தமாகப் பொருள், வாக்கு, எழுத்து, சரீர ஸ்ரமம் முதலிய பல துறைகளால் உதவிபுரிந்த நண்பர்கள் யாவர்க்கும் எனது மனமார்ந்த வந்தனங்களைத் தக்ஷிணகண்ட ஆர்ய வைஸ்ய மஹாசபையின் சார் பாகத் தெரிவித்துக் கொள்வதன்னியில், இந்நூல் வெளியாவதில் ஸ்ரத்தை எடுத்துக்கொண்ட யாவர்க்கும் ஸ்ரீ வாசவாம்பிகையின் தண்ணருள் உறுதுணையாயிருந்து உண்மையின்பம் தந்தருளவேண்டு மெனவும் பிரார்த்திக்கின்றேன்.

இந்நூலில் கூறப்படும் அநேக அற்புத உண்மைகளைப்பயின்று, உணர்ந்து, இதயத்திருத்தி, அநுஷ்டானத்திற் கொணர்ந்து, அம்பிகை யின் திருவருட்குப் பாத்திரராகி, அருள் வல்லபத்தால் ஆனந்த வாழ் வில் ஈடுபட்டுச் சுகித்தல் வேண்டுமென யாவரும் முற்படுவராயின், அதுதான் இந்நூலை வெளியிடற்காக ஒப்பற்ற பெரு முயற்சி எடுத்துக் கொண்ட பெரியார்கள் அனைவர்க்கும் உண்மையன்புடன் நன்றி செலுத்துவதாகும். எல்லாம் வல்ல இறைவி ஸ்ரீ வாசவி சர்வ மங்களமும் எங்கும் பெருக அநுக்ரஹிப்பாராக!

தங்கள் அன்புசால்,

M. V. கோபால், சேலம்.

பொதுக்காரியதரிசி,

ஆர்ய வைஸ்ய மஹாசபை, தக்ஷிணகண்டம்.

&

ஜாயிண்ட் காரியதரிசி, ஆர்ய வைஸ்ய மஹாசபை.

பொருளடக்கம்.

அத்தியாயம்.	உட்பிரிவு	விஷயம்.	பக்கம்.
i.		அறிவொளி வணக்கம்.	1
ii.		சக்தி வழிபாடு.	2
iii.		பதிப்புரை.	5
iv.		பொருளடக்கம்.	8
v.		ஸ்ரீ சக்ரம்.	10
vi.		ஸ்ரீ வாசவி அஷ்டோத்ர சத நாமாவளி	17
vii.		ஓர் வேண்டுகோள்.	23
viii.		A Foreword.	26
ix.		அணிந்துரை.	28
x.		ஓர் சிறந்த நிருபம்.	29
xi.		சாற்றுக்கவி.	32
xii.		உபோற்காதம்.	க-யிஉ
xiii.		நூன்முகம்.	i-xxvi
xiv.		புராண வரலாறு.	I-V
I.	(1)	ஓம் என ஒலித்திடும் உயர் நதிப் பெருமையும் பூமக ளருள்மிகு புரங்களும் வைஸ்யரும்.	1
	(2)	பிரியமுடனே குசுமன் இல்லறம் பேணலும் அருமகப் பேறுபெற யாத்திரை செய்தலும்.	57
II.	(1)	ஸ்ரீபர மாத்மனின் திருவருட் டுணையால் மாவேள்வி புரிதலும் மகப்பேறு பெறுதலும்.	83
	(2)	மகேஸ்வரி மகவுபோல் மன்னி விளையாடல்.	107

அத்தியாயம்.	உட்பிரிவு	விஷயம்.	பக்கம்.
III.	(1)	வாலேக்கி யெழுதூளி வரவு சொல மன்னன் சேனு சமுத்ரமொடு திக்விஜயம் செய்தல்.	161
	(2)	கௌரவ மிழந்துபுன் காமமோ யடைதல்.	191
IV.		சதுரங்க சேனையொடு தன்னகர் திரும்பல்.	209
V.	(1)	வீறுடன் வைசியர்கள் யோசனை புரிதல்.	233
	(2)	வைசியர்கள் மன்னனிடம் வரது செய்திடுதல்.	243
VI.		விக்கிரம வைசியர்கள் மீண்டு கூடுதலும், அக்கொடிய அரசன் நிலை அம்பிகைக் குணர்த்தலும்.	277
VII.	(1)	ஜகதீஸ்வரீ வாசவாம்பிகையு மாங்கே, மகிழ்வோடு ஞானமொழி மழையை வருஷித்தல்.	293
	(2)	வரைவில்பே ரொளியோடு வாசவாம் பிகையும், விரைவில்தன் விஸ்வரூ பத்தினைக் காட்டல்.	311
	(3)	இளைஞர்கள் கடமையும் ஏனை நீதிகளும்.	331
VIII.		யஜ்ஞ பூஜைக்கும் மண வைபவத்திற்கும், இந்நகர் அலங்கரிமின் என்று பறைசாற்றல்.	389
IX.	(1)	முக்தியருள் சக்திபத முளரிகள் துதித்தே, பக்தியொடு ஞானுங்கி பாய்ந்து மூழ்கிடுதல்.	409
	(2)	சாந்த விருபாட்சனுக்கு சக்தி முடி சூட்டல்.	469
க.		கோத்ர ப்ரவர விபரம்.	485
உ.		கோத்ரங்களும் ஸங்கேத நாமங்களும்.	494
ங.		ஸமான கோத்ரங்கள்.	501
		எச்சரிக்கை.	
		பிழைதிருத்தம்.	
		தெலுங்கு கட்டுரைகள்.	

ஸ்ரீ சக்கரம்.

ஸ்ரீ வாசவீ விஜயம் என்னும் இந்நூலில் ஸ்ரீ சக்கரம் அவசியம் இருக்கவேண்டும் எனப் பலருடைய அபிப்பிராயமிருந்தமையாலும், புஸ்தகத்தில் ஸ்ரீ அம்பிகையின் சக்கரமும், அம்பிகையின் திருவுருவ மும் இருப்பது நலனுதலாலும், இந்நூலில் ஸ்ரீ சக்கரத்தைச் சேர்க்க நேர்ந்தது. யாவரும் சற்று விபரமாக உணர்ந்துகொள்ளும்பொருட்டு அதன்கண் அமைந்துள்ள பல சக்கரங்களையும் தேவதைகளையும் பெயர் குறிப்பிடவும் நேர்ந்ததுபற்றி இக் குறிப்பு எழுதவேண்டியதாயிற்று.

வேதமும் உபநிஷத்தும் காயத்ரியும் கீதையும் இன்னோன்ன பல நூல்களும் 'தத்' பதத்தின் லக்ஷியார்த்தமாகிய சாக்ஷாத் பர மாத்ம வஸ்துவைப்பற்றி மிக மிகப் பேசுகின்றன. பரம்பொரு ளுருவை அருள்வடிவம் எனினும், ஞான ஸ்வரூபமெனினும், ஸர்வ மங்கள சக்தியெனினும் பொருந்தும். சிவம், சக்தி, நாதம், விந்து, சதா சிவன், மஹேஸ்வரன், ருத்திரன், விஷ்ணு, பிரம்மா ஆகிய நவ வடிவங் களும், மண், நீர், அனல், காற்று, ஆகாயம், கதிர், மதி, ஆன்மா ஆகிய அஷ்ட மூர்த்தங்களும் அப் பரம்பொருளின் உருவங்களே யாகும். எல்லாம் அதுவே. அதுவன்றி எதுவுமில்லை.

ஆன்மகோடிகள் உண்மையின்பத்தை யெய்துதற்கான மார்க் கங்களைப்பற்றி ஆகம நூல்கள் கூறுகின்றன. அவற்றுள் பரமாத்ம ஸ்வரூபத்தைக் கூறுமிடத்து ஆறு அத்துவாக்கள் கூறப்படுகின்றன. அவை :— மந்திராத்துவா, பதாத்துவா, வர்ணத்துவா, புவ னத்துவா, தத்துவாத்துவா, கலாத்துவா என்பனவாம். மந்திரங்கள் பதங்களாலும், பதங்கள் வர்ணங்களாலும், வர்ணங்கள் புவனங்க ளாலும், புவனங்கள் தத்துவங்களாலும், தத்துவங்கள் கலைகளாலும் வியாபிக்கப்பட்டனவென அவைகள் கூறுகின்றன. இந்த ஆறு அத்துவாக்களில் முதன்மையானது மந்திராத்துவா. ஆகவே மந்திர வடிவம் பரமாத்மாவுக்குளதென்பது புலனுகிறது. மந்திரங்களின் சகாயத்தினுல் பரம்பொருளைத் தரிசிக்கலாம். இஷ்ட சித்தியெய்த லாம். சகல நன்மைகளும் பெற்றுய்யலாம். பக்தர்கள் எவ்வுருவை விரும்பி வழிபாடு செயினும், அவ்வுருவில் தரிசனம் கிடைக்கும். இவ் வழிபாட்டிற்குச் சக்ர அமைப்பு அவசியம். பரம்பொருள் ஆண்வடிவ மாகவோ பெண் வடிவமாகவோ தோன்றி அருள் செய்வதுண்டு.

"அறிவே கடவுள்; அருளே சக்தி" என்பது ஆன்றோர் துணிபு. ப்ரம்மத்தையன்றி வேறு பொருள் இல்லை. ஆனல், நெருப்பிற் சூடு போல் அபின்னமாக ஒரு சக்தி அப் பரப்ரம்மத்தினிடத்திலேயே உள்ளது. அதைத் தனிமையாய்ப் பிரிக்க இயலாது. அச் சக்தியும் ப்ரம்மமும் வேறென்று கூற முடியாது. அச்சக்தி, தன்னிடத்தினின்று முக்குணங்களைத் தோற்றுவித்து, அவற்றினின்றும் முறையே ஈஸ்வரனையும், மும்மூர்த்திகளையும், உயிர்களையும், உலகத்தையும் உண்டாக்கி, விளையாடச்செய்து, மீண்டும் (முன்போல்) தன்னிடத்திலேயே ஒடுக்கிக்கொள்ளுகிறது. அத்தகைய நிலையில் உள்ள மஹா சக்தியின் அநுக்ரஹத்தைப் பெற விரும்புவோர் இந்த ஸ்ரீ சக்கரத்தை விதிப்படி யமைத்துச் சரியாகப் பூஜித்துப் பக்தி ஸ்ரத்தையுடன் வழிபடவேண்டும். அவ்வாறு வழிபட்டு வருபவர்கள் ஸர்வாபீஷ்டங்களும் சித்திக்கப்பெறுவர். பலாபேக்ஷையின்றி நிஷ்காம்யமாக வழிபாடு செய்யின் சிறந்த பலன் உண்டு. ஞானமிருதத்தையெய்தி ஜீவன் முக்திச் சுகம் பெற்றுப் பேரின்பமனுபவிக்கவும் இயலுமென்பது ஆன்றோர் துணிபு. யந்த்ர ரத்நாகரம், யந்த்ர மார்த்தாண்டம் லலிதா ஸ்தவரத்னம் முதலிய நூல்களிலும், இன்னும் பல மாந்த்ரீக நூல்களிலும் இச் சக்கரத்தின் விசேஷ அமைப்புகளையும், அம்சங்களையும், அற்புதங்களையும், வழிபாட்டு முறைகளையும், விசேஷ பலன்களையும் விரிவுறக் காணலாம். வாசகர்கட்கு இச் சக்கரத்தில் அமைந்துள்ள சில முக்ய அம்சங்களின் பெயர்களை மாத்திரம் ஞாபகப்படுத்தலாமெனும் நோக்கத்துடன் இதில் சில குறிப்புகள் கொடுக்கப்படுகின்றன.

ஸ்ரீ சக்கரத்தை நாற்பத்து மூக்கோணம் என்றும் சொல்வதுண்டு. இதில் அமைந்துள்ள யாவும் நம் சரீரத்திலுள் இருக்கின்றனவென்றும் கூறுவர். உலகம் முழுவதும் இதில் அடங்கியுளது என்றும் கூறுவர். என்? சர்வமும் இதில் அடங்கியுளது எனினும் அது மிகையாகாது.

இச் சக்கரத்தின் உட்பிரிவுகளைக் கூர்ந்து கவனித்தால், இதனுள் அநேக சக்கரங்கள் தோன்றும். நடுவிலுள்ள சக்கரம் ஸர்வாநந்தமய சக்கரம் எனப்படும். இதுவே 'பிந்துவின் கட்டில்' என்றும் 'பஞ்ச பஞ்சிகா பீட பிந்து' என்றும் சொல்லப்படும். இக் கட்டிலில் நான்கு கால்களும், நாற்புறமும் ஐந்து படிக்கட்டுக்களும் உள.

இவைகளில் முறையே (i) பஞ்ச லக்ஷ்மிகள், (ii) பஞ்ச கோசாம் பிகைகள், (iii) பஞ்ச கல்ப லதைகள், (iv) பஞ்ச காமதுக்கம்பி கைகள், (v) பஞ்ச ரத்னம்பிகைகள் ஆகியோர் அமைந்துள்ளனர். இக் கட்டில் மைய முக்கோணத்தின் நடுவில் அமைந்துள்ளது. சதா சிவப் பலகையும், மேல் விதானமும், ஹம்ஸதூலிகா சயனமும் இதன் கண் உள்ளன. சாக்ஷாத் பரதேவியாகிய ஸ்ரீ அம்பிகை இதிலே பிரத்தியக்ஷமாய் அமைந்திருக்கின்றாள். பரப்ரம்ம ப்ரகாசம் ஸதா மிளிர்ந்துகொண்டிருக்கிறது. அருள் ஞானவொளி விளங்கியவண்ண மாயுளது. ஆனல், இருளைப்போற் கறுத்த மாயைத் திரையொன்று அங்கே பாசத்தாற் கட்டப்பெற்றுத் தொங்கிக்கொண்டிருக்கிறது. அது நடுவில் மறைத்துக்கொண்டிருக்கிறது. திருவருளின் துணையைக் கொண்டு, அத்திரையை விலக்கிப் பரவொளியைக் கண்டு தரிசித்து ஆனந்த மெய்துதல் வேண்டும்.

இந்த ஸர்வானந்தமய சக்கரத்தைக் காணுவதற்கு முன் வரிசையாக எட்டுச் சக்கரங்களைக் காணுதல் வேண்டும். அவைகளைச் சுற்றிலுமுள்ள கோட்டைகளையெல்லாங் கடந்து சென்றுதான் அச் சக்கரங்களைக் காணமுடியும். ஒவ்வொரு கோட்டையையும் ஆங்காங்குள்ள தேவதைகளின் அருள் பெற்றுக் கடந்து உட்சென்று, ஒவ்வொரு சக்கரத்திலும் அமைந்துள்ள தேவதைகளை வணங்கி அவர்களின் அருள் பெற்று, உட்சென்று ஸர்வானந்தமய சக்கரத் தைக்காண வேண்டும். அவைகளின் சுருக்கமான விபரம் வருமாறு:—

உலோகக் கோட்டைகள் 8. (1) இரும்புக் கோட்டை, (2) எஃகுக் கோட்டை அல்லது வெண்கலக் கோட்டை, (3) செப் புக் கோட்டை, (4) ஈயக் கோட்டை, (5) பித்தளைக் கோட்டை, (6) பஞ்சலோஹக் கோட்டை, (7) வெள்ளிக் கோட்டை, (8) தங்கக் கோட்டை. கோட்டைகள் ஒவ்வொன்றுக்கும் இடை வெளியுண்டு. அவ்வாறு இந்த உலோஹக் கோட்டைகள் எட்டின் இடையே ஏழு இடைவெளிகள் உள்ளன. அவை முறையே (i) நான விருட்ச மஹோத்யானம், (ii) கற்பக வாடிகை, (iii) சந்தான வாடிகை, (iv) ஹரிசந்தன வாடிகை, (v) மந்தார வாடிகை, (vi) பாரிஜாத வாடிகை, (vii) கதம்பவன வாடிகை

எனப்படும். முதல் வாடிகையில் மஹாகாளர் மஹாகாளியும், மற்றைய ஆறு வாடிகைகளிலும் வசந்தருதுநாதன் முதல் ஆறு ருதுநாதர்களும் உள்ளனர்.

உலோஹக் கோட்டைகளைக் கடந்ததும் அரதனக் கோட்டைகள் 11 உள்ளன. (1) புஷ்பராகக் கோட்டை, (2) பத்மராகக் கோட்டை. (3) கோமேதகக் கோட்டை, (4) வஜ்ரமணிக் கோட்டை, (5) வைடூரியக் கோட்டை, (6) இந்திரநீலக் கோட்டை, (7) முத்துக்கோட்டை, (8) மரகதக் கோட்டை, (9) பவழக் கோட்டை, (10) நவரத்னக் கோட்டை, (11) நாஞ்ரத்னக் கோட்டை. இவற்றினிடையிலுள்ள இடைவெளிகளில் பலர் இருக்கின்றனர். உலோஹக் கோட்டைகளுக்கும் அரதனக் கோட்டைகளுக்கும் நடுவில் மாதங்கி இல்லம் உளது. அந்த இடைவெளியில் சித்தர் கணமும், உள்ளேயுள்ள இடைவெளிகள் 10ல் முறையே (i) சாரணர் குழு; (ii) சங்கர் ஷிணீ; (iii) அரம்பையாதியர், வஜ்ரா நதி, வஜ்ரேசி; (iv) கார்க்கோடகாதி நாகர்கள், மாவலியாதி யசுரர்கள்; (v) சாதோதரி யருள் பெற்ற பூபாலர்கள் (மது, மாந்தாதா முதலிய சக்ரவர்த்திகள்); (vi) அஷ்ட திக்குப் பாலகர்கள், ருத்திரர்கள்; (vii) பனங்காடு, வாராஹி; (viii) பிரம்மா; (ix) மாணிக்க மண்டபம், விஷ்ணு; (x) ஆயிரக்கால் மண்டபம், ஈசன் ஆதியரும் உள்ளனர்.

அரதனக் கோட்டைகளைக் கடந்தபின் மஹா பத்மாடவிக் கோட்டைகள் 6 உள்ளன. அவை, (1) மனோமயக் கோட்டை, (2) புத்திமயக் கோட்டை, (3) அகங்காரக் கோட்டை, (4) ஆத போத்காரம் (சூரியத் துவாரம்), (5) சந்த்ரோத்காரம் (மதிவாயில்), (6) சிருங்காரக் கோட்டை என்பனவாம். மனோமயக் கோட்டையைச் சுற்றி அமிர்த வாபிகை உளது. ஆங்கிருக்கும் அம்பிகை தாராதேவி. மற்ற உள் இடைவெளி ஐந்திலும் இருப்பவர்கள் முறையே (i) ஆனந்த வாபிகை—வாருணீ தேவி, பரிவார தேவிகள்; (ii) விமர்சவாபிகை – குருகுள்ளாதேவி; (iii) மார்த்தாண்ட பைரவன்; (iv) சந்திரன்; (v) மன்மதன் ஆகியோர். உள் கோட்டையாகிய சிருங்காரக் கோட்டையைச் சுற்றி சிருங்கார அகழி உளது.

சிருங்காரக் கோட்டையைக் கடந்தபின் மஹாபத்மாடவி இருக்கிறது. இங்கே கிழக்கு திக்கில் பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், மஹேஸ்வரன், சதாசிவன் ஆகிய ஐவரின் வீடுகள் உள்ளன. தேவி, பவானி, சியாமளை, வாராஹி இவர்களின் இரதங்கள் (தேர்கள்) நான்கு மூலைகளிலும் உள்ளன. கிழக்குப் பக்கத்தில் (தென்கிழக்குப் பாகத்தில்) சிதக்நி குண்டம் உளது. அக்னியும் சூர்யனும் இம் மஹாபத்மாடவியில் இருக்கின்றனர். ஷோடசகலைகள், காரணேசர் கலைகள், அமிர்தமய அர்க்கியம், பூஜா பாத்திரங்கள் முதலியனவும், மும்மூர்த்திகளது பவனமும் இங்கே உள்ளன.

இதன் நடுவில் சிந்தாமணி கிருஹராஜம் உளது. அதற்கு நான்கு வாயில்கள் உண்டு. அவ்வாயில்களில் முறையே பூர்வாம்னய தேவதைகள், தக்ஷிணாம்னய தேவதைகள், பச்சிமாம்னய தேவதைகள், உத்தராம்னய தேவதைகள் ஆகியோர் உள்ளனர். கிழக்கு வாயிலில் தென்புறம் வாராஹி இல்லமும், வடபுறம் சியாமளை இல்லமும் உள்ளன. இந்த சிந்தாமணி கிருஹத்துக்குள்தான் படத்தில் காட்டியுள்ள சக்கரம் இருக்கிறது.

கோட்டைகள் ஒவ்வொன்றுக்கும் நான்கு வாயில்கள் உண்டு. எல்லாக் கோட்டைகளையும் கடந்து சிந்தாமணிக் கிருஹத்தின் கிழக்கு வாயிலில் வந்து நின்று, அங்கே நேராகப் பார்த்தால், அநேக அற்புதமான மணிகளின் பீடங்கள் அமைந்து அதன்மேல் பிந்து சக்கரம் பிரகாசிப்பது தோன்றும். அதனைப் பார்த்து வணங்கிய பின்னர் அந்த அதியற்புதமான மேருவில் அமைந்துள்ள ஒன்பது சக்கரங்களையும் அவ்வவற்றில் அமர்ந்துள்ளவர்களையும் தொழுது, அவர்களின் அருளைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

(1) த்ரை லோக்ய மோஹனச் சக்கரம். இது சதுரமாக இருப்பது. இதில் மூன்று படிகள் உண்டு. கீழே முதற்படியில் (வெளிப்பூபுரம்) அஷ்டசித்தித் தேவதைகளும், சற்று உயரத்தில் இரண்டாம் படியில் (நடுப்பூபுரம்) பிராஹ்மி ஆதி மாத்ருகைகளும், அதற்குமேல் மூன்றும் படியில் (உள்பூபுரம்) 10 முத்திரைத் தேவியரும் உள்ளனர். அவர்களைத் தொழுதுகொண்டு, இரண்டாவது சக்கரத்திற்குச் செல்லவேண்டும். ஒவ்வொரு சக்கரத்திலுள்ளவர்களையும் வணங்கிக் கொண்டு அச்சக்கரத்தைக் கடக்க வேண்டும்.

ஸ்ரீ சக்ரம்

மேரு ப்ரஸ்தாரம்.



சிந்தாம ணிக்ரஹத்துள் தெய்வீக மாய்ப்பொலியும்
யந்த்ரா ரவிந்தமதை ஏத்து.

ஸ்ரீ சக்ரம்

பூ ப்ரஸ்தாரம்.



பற்பலசக் ரங்களையுட் பார்த்தன்பாற் போற்றிடுவோம்
சிற்பரையின் பேரருளால் தேர்ந்து.

அவ்வாறு வணங்கவேண்டிய தேவதைகள் :—

(2) 16 குப்த யோகினிகள், ஸர்வாசா பரிபூரக சக்ர (16 இதழ்க் கமலம்) நாயகி த்ரிபுரை (3) 8 குப்ததர யோகினிகள், ஸர்வஸம்க்ஷோபண சக்ர (எட்டிதழ்க் கமலம்) நாயகி ஸ்ரீ திரிபுரசுந்தரி, ஸம்க்ஷோபிணி முதலிய சக்திகள். (4) 14 ஸம்பிரதாய யோகினிகள், மன்வச்ரமென்னும் ஸௌபாக்ய தாயக சக்ர (14 கோணம்) நாயகி ஸ்ரீ திரிபுர வாஸினி. (5) ஸர்வ ஸித்தியாதியர், 10 குலோத்தீர்ண யோகினிகள், பஹிர்த்தசார மென்னும் ஸர்வார்த்த ஸாதக சக்ர (10 கோணம்) நாயகி திரிபுரா ஸ்ரீ. (6) ஸர்வஜ்ஞையாதியர், அந்தர்த்தசாரமென்னும் ஸர்வ ரக்ஷாகர சக்கரம் (10 கோணம்), 10 நிகர்ப்ப யோகினிகளுள்ள நாயகி ஸ்ரீ திரிபுர மாலினி. (7) எட்டு ரஹஸ்ய யோகினிகள், (8 கோணம்) ஸர்வரோகஹர சக்ரேஸ்வரி திரிபுர ஸித்தை, அஸ்த்ர சஸ்த்ர மஹாபீடம், காமேஸ்வரி. (8) ஸர்வ ஸித்திப் பிரத சக்ர (பஞ்சதசியையும் ஷோடசியையும் காட்டும் மைய முக்கோணம்) நாயகி ஸ்ரீ திரிபுராம்பா, (அதோமுக முக்கோணத்திலிருக்கும் குரு மண்டலங்களில் அமர்ந்துள்ள) 4 குருமூர்த்திகள், ஆகிய இவர்களைத் தரிசித்தல் வேண்டும். இன்னும் இச்சக்ரத்தில் திவ்யௌகம், ஸித்தௌகம், மானவௌகம் என்னும் மூன்று ரேகைகள் உண்டு. இச்சக்கரத்தில் 3 நித்யா தேவிகளையும், ஷடங்க தேவிகளையும் தரிசித்தல் வேண்டும். அதன் பின்னர் ஸர்வானந்தமய சக்கரத்தைச் சார்ந்து அம்பிகையைத் தரிசித்தல் வேண்டும்.

சரியான விதி முறைப்படி இந்த ஸ்ரீ சக்கரத்தை அமைத்து உண்மையான பக்தி ஸ்ரத்தையுடன் பூஜிப்பவர்கள் நிச்சயமாய் அம்பிகையைத் தரிசிப்பதேயன்றி, அவ்வன்னையின் திருவருளால் பிறவிப் பெருங்கடல் நீந்திப் பேரானந்த மெய்துதல் திண்ணம்.

ஸ்ரீ வாசவீ விஜயம் என்னும் நூல் இந்த ஸ்ரீ சக்கரத்தின் அமைப்பைத் தத்துவ முறையால் உணர்த்துகின்றது என்றும் கூறலாம். அதன் சுருக்கம் வருமாறு :— விஷ்ணு வர்த்தனன் என்னும் மன்னன் முற்பிறப்பில் அம்பிகையை வழிபட்டு வந்தான் என்பது இச் சக்கர வழிபாட்டில் ஈடுபட்ட பக்தனே விஷ்ணு வர்த்தனன் என்பதை உணர்த்துகிறது. அவன் பல கோட்டைகளையும் கடந்து செல்வதே திக்விஜயமாகும். சூரியப்ராகாரத்தை யடைவதே தானும் சேனைகளும் களைப்புற்றதாகும். சந்த்ர ப்ராகாரம். செல்வதே

ஸ்ரமபரிகாரத்திற்கு ஊர் திரும்ப எண்ணி உத்யானவனம் சேர்ந்த தாகும். சிருங்காரக் கோட்டையே பெனுகொண்டாபுரியாகும். அக் கோட்டைக்குக் காவலாகிய மன்மதனின் செயலே காம விடாயுற்ற தாகும். பக்தனுகிய மன்னனின் எண்ணம் முழுமையும் அம்பிகையின் திருவடி தரிசனங் காணும் வேட்கையாதலால் அவன் மனம் வேறு சாதாரணப் பெண்களின்பால் செல்லவில்லை. முற்பிறப்பிலே தபோ மஹிமையினுல் எல்லாக் கோட்டைகளையும் கடந்து மஹாபத்மாடவி யையடைந்த நூற்றிரண்டு கோத்திர வைசியர்கள் சிதக்னி குண்டத் தில் மூழ்கி எழுந்து சிந்தாமணிக் கிருஹத்தைச் சார்ந்து அம்பிகை அருளால் (திவ்ய தரிசனம் கண்டு) ஜீவன் முக்தி யெய்தினர். வெகு சிரமப்பட்டு சிருங்காரக் கோட்டையை அம்பிகையின் அருளால் கடந்த பக்தனுகிய விஷ்ணுவர்த்தனனும் அவ்வன்னையின் கிருபா கடாக்ஷத்தால் திவ்ய தரிசனம் கண்டு பேரானந்த மெய்துகின்றனன். எங்கும் சக்தியொளி வீசுகின்றது. சாக்தேய மணம் கமழ்கிறது. சாந்தவொளி நிலவுகிறது. ஸ்ரீ விரூபாக்ஷன் ஸிம்மாஸனத்தில் அமர்ந் திருப்பது மேல் நோக்காகிய ஞான மார்க்கம் அரசு செய்வதை யுணர்த்துகிறது. ஞானசிங்காதன பீடத்தில் அமர்ந்த பரமாத்மாவின் அநுக்ரஹத்தால் எங்கும் திருவருட் செங்கோலாட்சி பொலிகிறது என்று கூறலாம்.

ஸ்ரீசக்ர நாயகியின் திருவருள் வாழ்க!

ஸ்ரீ வாசவாம்பிகை.

தேசுநிறை கல்விபுகழ்ச் செல்வமுயர் ஞானமருள்
வர்சவிதாள் நெஞ்சே வழுத்து.

ஸ்ரீ வாசவி.

துரியாதீ தந்நன்னிற்
ஜோதியொளி வீசும்
பலரூபவைப் பார்த்துப் பணி.

நனவும் கனவும் துக்கமும் கடந்து துரியநிலையாகும். துரிய நிலையிலே தன்னை முழுதும் மறந்து பரவொளியாகிய ஜோதிப்ரகாசத்திலே லயிக்கும் இடமே துரியாதீதமெனப்படும். அப் பெருவெளியின்கண்ணே சுயஞ்ஜோதி மயமாய் விளங்கும் ஞானஸ்வரூபியாகிய பராசக்தியின் நிசரூபம் கண்டு பணிந்தால் பவங்கள் அனைத்தும் பஸ்மீகரிக்கப்படும். அவ்வாறு பணிவோர் பிறவிப் பெருங்கடல் நீந்திப் போய்ப்பக்கரை சேர்ந்து சதா சர்வகாலமும் சச்சிதானந்தத் திருவமுதுண்டு சாந்தியுடன் இருப்பர்.

ஓம் ஸ்ரீ கந்யகாபரமேச்வர்யை நம :

ஸ்ரீ வாசவி அஷ்டோத்ர சத நாமாவளி.

1 ஓம் ஸௌபாக்ய ஜநந்யை நம :
2 ஓம் மாத்ரே நம :
3 ஓம் மாங்கல்யாயை நம :
4 ஓம் மாநவர்த்திந்யை நம :
5 ஓம் மஹா கீர்த்தி ப்ரஸாரிண்யை நம :
6 ஓம் மஹா பாக்ய ப்ரதாயிந்யை நம :
7 ஓம் வாஸவாம்பாயை நம :
8 ஓம் கமலாக்ஷ்யை நம :
9 ஓம் விஷ்ணுவர்த்தந மது ஹாரிண்யை நம :
10 ஓம் வைச்ய வம்சோத்பவாயை நம :
11 ஓம் சித்யை நம :
12 ஓம் குலகீர்த்தி ப்ரவர்த்திந்யை நம :
13 ஓம் குமார்யை நம :
14 ஓம் கந்யகாயை நம :
15 ஓம் காம்யதாயை நம :
16 ஓம் கருணாநித்யை நம :

---

1 பக்தர்களுக்கு சகல மங்களத்தையும் கொடுப்பவள். 2 எல்லா உலகுக்கும் (யாவர்க்கும்) தாயார். 3 மங்கள ஸ்வரூபி. 4 தன்பால் பக்தர்கள் கொண்ட அபிமானத்தை விருத்தி செய்பவள். 5 பக்தர்களின் கீர்த்தியைப் பரவச் செய்பவள். 6 பக்தர்களுக்கு மிகுந்த ஐசுவரியத்தைக் கொடுப்பவள். 7 எங்கும் வியாபித்திருப்பவள். 8 தாமரை போன்ற கண்களை யுடையவள். 9 விஷ்ணுவர்த்தனனுடைய அஹங்காரத்தை மாய்த்தவள். 10 ஆரிய வைஸ்ய மரபில் அவதரித்தவள். 11 ஞான ஸ்வரூபி. 12 ஆரிய வைசிய குலத்தின் கீர்த்தியைப் பெருக்குபவள். 13 வாலிபப் பருவத்தை யுடையவள். 14 கன்னிகை (கல்யாணமற்றவள்). 15 மனோபிஷ்டங்களைக் கொடுப்பவள். 16 கருணையங்கடல்.

17 ஓம் விசித்ர ரூபாயை நம :

18 ஓம் பாலாயை நம :

19 ஓம் விசேஷ பலதாயிந்யை நம:

20 ஓம் ஸத்யகீர்த்யை நம :

21 ஓம் ஸத்யவத்யை நம :

22 ஓம் ஸர்வாவயவ சோபிந்யை நம :

23 ஓம் த்ருடசித்த மஹா மூர்த்யை நம :

24 ஓம் ஞானக்நி குண்ட விலாஸிந்யை நம :

25 ஓம் கன்யகாபரமேச்வர்யை நம :

26 ஓம் வைச்ய வம்சாப்தி சந்த்ரிகாயை நம :

27 ஓம் த்ரிதிவர்ண நிலயாயை நம :

28 ஓம் ஸாம்ராஜ்ய சுகதாயிந்யை நம :

29 ஓம் பேநகொண்ட புராவாஸாயை நம :

30 ஓம் விரூபாக்ஷ ஸஹோதர்யை நம :

31 ஓம் விச்வக்யாதாயை நம :

32 ஓம் விமாநஸ்தாயை நம :

33 ஓம் மஹோத்ஸவ விலாஸின்யை நம :

34 ஓம் வைவாஹ மண்டபஸ்தாயை நம :

35 ஓம் மஹா விபவ சாலிந்யை நம :

36 ஓம் பாலநாகர ஸுப்ரீதாயை நம :

---

17 மிகவும் அழகிய ரூபத்துடன் கூடியவள். 18 என்றும் இளமையோடிருப்பவள். 19 பக்தர்களுக்கு விசேஷமான பலனைக் கொடுப்பவள். 20 உண்மையான கீர்த்தியை புடையவள். 21 உண்மையை புடையவள். 22 சாமுத்ரிகா லக்ஷணங்களுடன் விளங்குபவள். 23 திட்மான மனதையுடையவள். 24 ஞானமாகிற அக்நி குண்டத்தில் பிரகாசிப்பவள். 25 கன்னிகைப் பருவத்தையுடைய ஈசுவரி. 26 வைசிய குல சமுத்திரத்தை விருத்திசெய்வதில் சந்திரன்போன்றவள். 27 ஆரிய வைசிய வம்சத்தில் ஸ்திரமாக இருப்பவள். 28 தேசத்திற்கு சுகத்தைக் கொடுப்பவள்; பேரின்பமாகிய மோக்ஷ சாம்ராஜ்ய சுகத்தைக் கொடுப்பவள். 29 பெனுகொண்டா நகரத்தில் வசித்தவள். 30 விஷ்ணு அம்சமான விரூபாக்ஷனுடைய சகோதரி. 31 பிரபஞ்சத்தில் கீர்த்திபெற்றவள்; பிரபஞ்சத்தின் கீர்த்தியே வடிவமானவள். 32 விமானத்தில் வீற்றிருப்பவள்; கோபுரங்கள் நிறைந்த ஆலயத்தில் பொலிபவள். 33 சிறந்த உத்ஸவங்களில் ஈடுபடுபவள். 34 விவாஹ மண்டபத்தில் சிறந்து விளங்குபவள். 35 சிறந்த ஐசுவரியத்தை புடையவள். 36 பால நகரஸ்தர்களிடம் நற் பிரீதியையுடையவள்.

37 ஓம் ஸௌகந்தி குசும ப்ரீதாயை நம :

38 ஓம் ஸுதா ஸௌகந்த லேபாயை நம :

39 ஓம் ஸத்ய ப்ரமாண நிலயாயை நம :

40 ஓம் பத்மபாண்யை நம :

41 ஓம் க்ஷமாவத்யை நம :

42 ஓம் வ்யாலோக்த விதி வர்த்திந்யை நம :

43 ஓம் ப்ரம்ஹ ப்ரதிஷ்டா ஸுப்ரீதாயை நம :

44 ஓம் ஸர்வப்ராண ஹிதேரதாயை நம :

45 ஓம் காந்தாயை நம :

46 ஓம் கமல கந்திந்யை நம :

47 ஓம் காமிதார்த்த ப்ரதாயிந்யை நம :

48 ஓம் மல்லிகா குசும ஸுப்ரீதாயை நம :

49 ஓம் முநிகாருண்ய தோஷிண்யை நம :

50 ஓம் சித்ர ரூபாயை நம :

51 ஓம் சித்ர வேஷாயை நம :

52 ஓம் சித்ர கீர்த்தி ப்ரஸாரிண்யை நம :

53 ஓம் விசித்ர மஹிமாயை நம :

54 ஓம் நாராயிண்யை நம :

55 ஓம் நமிதாஜன போஷிண்யை நம :

56 ஓம் கீதகாநாநந்த கார்யை நம :

---

37 சுகந்த புஷ்பங்களே விரும்புபவள். 38 எப்பொழுதும் சுகந்த சந்தனத்தைத் தரித்திருப்பவள். 39 உண்மை யளவில் எப்பொழுதும் நிலைப்பவள். 40 தாமரைப் பூவைக் கையில் கொண்டவள்; தாமரை போன்ற கைகளையுடையவள். 41 பொறுமையுடையவள். 42 வியாஸர் கூறிய விதிகளைப் பரவச்செய்பவள். 43 பக்தர்களிடத்தில் ப்ரம்ஹ வொளியை ப்ரதிஷ்டை செய்வதில் மிக்க ப்ரீதியுடையவள் 44 எல்லா ப்ராணிகளிடமும் ப்ரியமாக இருப்பவள் 45 மிகவும் அழகியவள்; பக்தர்களால் விரும்பத்தக்கவள் 46 தாமரைப் பூவைப்போன்ற சுகந்தத்தையுடையவள் 47 பக்தர்களின் மனோபிஷ்டத்தைக் கொடுப்பவள் 48 மல்லிகைப் பூவை விரும்புபவள் 49 முனிவர்களுக்குக் கருணையினால் சந்தோஷத்தைக் கொடுப்பவள் 50 அழகிய ரூபத்தையுடையவள்; ஓவியம்போன்ற உருவினள் 51 அழகிய உடைகளையுடையவள் 52 தன் அழகிய கீர்த்தியைப் பரவச் செய்பவள் 53 விசித்ரமான மஹிமையுடையவள் 54 நாராயணனுடைய சகோதரி 55 தன்னை நமஸ்கரிக்கும் ஜனங்களைப் போஷிப்பவள் 56 ஸங்கீதத்தினால் ஆநந்திப்பவள்.

57 ஓம் ஸ்வார்த்தி காஹ்லாத காரிண்யை நம :
58 ஓம் புண்ய கீர்த்யை நம :
59 ஓம் புஷ்பமாலா விபூஷண்யை நம :
60 ஓம் ஸ்வர்ண ப்ரபாயை நம :
61 ஓம் ஸ்வர்ண காந்த்யை நம :
62 ஓம் கலாயை நம :
63 ஓம் சுருஷ்டி ஸ்திதி லய காரணயை நம :
64 ஓம் பாவந்யை நம :
65 ஓம் புண்ய சாரிண்யை நம :
66 ஓம் கல்மஷாரண்ய வஹ்நயே நம :
67 ஓம் வாணிஜ்ய வித்யா தர்மஜ்ஞாயை நம :
68 ஓம் பவ பந்த விநாசிந்யை நம :
69 ஓம் ஸதாஸத் தர்ம பூஷண்யை நம :
70 ஓம் பிந்துநாத களாத்மிகாயை நம :
71 ஓம் களாஷோடச ஸம்யுதாயை நம :
72 ஓம் தர்ம ப்ரதாயை நம :
73 ஓம் தர்ம சித்தாயை நம :
74 ஓம் கல்யாண்யை நம :
75 ஓம் லாப காரிண்யை நம :
76 ஓம் நாயக்யை நம :
77 ஓம் நகரஸ்தாயை நம :
78 ஓம் நாநாரத்ந விபூஷணயை நம :

---

57 தன்னை யண்டியவர்களுக்கு ப்ரேமையோடு கருணை புரிபவள் 58 புண்ய மான ப்ரதாபத்தையுடையவள் 59 பூமாலைகளால் அலங்கரிக்கப்பட்டவள் 60 தங்கம் போன்ற தேஜஸைப் படைத்தவள் 61 பொன்னுர் மேனியள் 62 ஸகல கலைகளின் சொரூபமாய் மிளிர்பவள் 63 முத்தொழிலுக்கும் காரணமானவள் 64 பரிசுத்த மானவள்; பரிசுத்தத்தைச் செய்பவள் 65 புண்ய காரியங்களைச் செய்பவள் 66 பாப வனத்தை எரிக்கும் காட்டுத் தீயைப் போன்றவள் 67 வியாபார வித்தையின் தர்மா தர்மங்களை யறிவிப்பவள் 68 ஸம்ஸார பந்தத்தை (நாசம் செய்விப்பவள்) விடுவிப்பவள் 69 எப்பொழுதும் நற் கருமங்களால் விளங்குபவள் 70 விந்து நாத ஸ்வரூபியானவள் 71 பதினாறு கலைகளுடன் பிரகாசிப்பவள் 72 தர்மத்தைக் கொடுப்பவள் 73 தர்ம மனதையுடையவள் 74 கல்யாண குணங்களையுடையவள் 75 தன் குலத்தவர்களுக்கு லாபத்தைத் தருபவள் 76 சகல லோக நாயகி (அரசி)யாக விளங்குபவள் 77 பட்டணத்தில் வாசம்செய்பவள் 78 பல மணிகளால் (அலங்கரிக்கப்பட்டு) சிறந்து விளங்குபவள்

79 ஓம் ம்ருடா தாராயை நம :

80 ஓம் குஹ்யாயை நம :

81 ஓம் தேவிகாயை நம :

82 ஓம் ஸ்ரீகோமளாங்க்யை நம :

83 ஓம் ஸ்ரீகுஹ்யை நம :

84 ஓம் ஸ்ரீமுக்யை நம :

85 ஓம் ஸ்ரீப தாயிங்யை நம :

86 ஓம் தேவ துர்க்காயை நம :

87 ஓம் ஜாஹ்நவ்யை நம :

88 ஓம் தாக்ஷாயிண்யை நம :

89 ஓம் த்ரைலோக்ய ஜநந்யை நம :

90 ஓம் பஞ்ச பூதாத்மிகாயை நம :

91 ஓம் ப்ரம்ஹ வித்யா ப்ரதாயிங்யை நம :

92 ஓம் ஸ்ரீபாஷிண்யை நம :

93 ஓம் ஸ்ரீவாலிங்யை நம :

94 ஓம் ஸர்வ மந்த்ர பல ப்ரதாயை நம :

95 ஓம் வைச்ய ப்ரபூஜிதாயை நம :

96 ஓம் ஹ்ருதய க்ரந்தி பேதிங்யை நம :

97 ஓம் கரவீர நிவாஸிங்யை நம :

98 ஓம் ஸ்ரீமத் கந்யா சிரோமண்யை நம :

---

79 பார்வதியின் அவதாரத்தைத் தரிப்பவள். 80 கம்பீரமானவள்; ஹ்ருதய குஹையில் வசிப்பவள். 81 உத்தம தேவி; எவ்வுயிர்க்கும் தலேவி. 82 மெல்லிய தேகத்தைப் படைத்தவள். 83 நற்குணங்கள் யாவும் பொருந்தியவள். 84 யாவரிலும் முக்யமானவள்; முதன்மையானவள். 85 மங்களத்தைக் கொடுப்பவள். 86 துர்க்கா தேவியின் அவதாரமானவள்; தேவர்களும் கண்டு வியந்து பயந்து வணங்கும் ரூபமுடைய வள்; கோபம் மிகுந்த ராக்ஷஸர்களே ஸம்ஹரிப்பவள்; தீயன யாவையும் தொலேப்பவள். 87 கங்கா ஸ்வரூபியானவள். 88 தக்ஷனுடைய புத்ரி (உமை). 89 மூவுலகத்திற்கும் தாயாக விளங்குபவள். 90 ஐம்பூதங்களேயும் தன்னிட்டத்தே கொண்டவள். 91 வேதாந்த வித்தையைக் கொடுப்பவள். 92 நல்வாக்கை யுடையவள். 93 நல் வஸ்திரங்களேத் தரிப்பவள். 94 எல்லா மந்த்ரங்களின் பலனேயும் கொடுப்பவள். 95 ஆரிய வைசி யர்களால் பூஜிக்கப்படுபவள். 96 தன் ஸ்வரூபத்தை அறியும் பக்தர்களின் ஹ்ருதயக் கிலேசங்களேப் போக்குபவள். 97 அலரி புஷ்பத்தில் வசிப்பவள்; தர்ம யுத்தம்செய்யும் வாள் முனேயில் வசிப்பவள். 98 கன்னி சிரேஷ்டை.

99 ஓம் ஸத்பக்தி சாலிந்யை நம :

100 ஓம் ப்ரம்ஹ விஷ்ணு சிவாத்மிகாயை நம :

101 ஓம் ஸர்வ மோஹிந்யை நம :

102 ஓம் வேத சாஸ்த்ர ப்ரமாண்யை நம :

103 ஓம் விசாலாக்ஷ்யை நம :

104 ஓம் ஸர்வோபத்ரவ நாசிந்யை நம :

105 ஓம் லலிதாம்பா பீட நிலயாயை நம :

106 ஓம் ஸௌமங்கல்யாதி தேவதாயை நம :

107 ஓம் ஸ்ரீ மந்த்ர புரவாஸிந்யை நம :

108 ஓம் ஸர்வ மங்களாயை நம :

ஓம் நாநாவித திவ்ய பரிமள மந்த்ர புஷ்பாணி சமர்ப்பயாமி

ஓம் தத் ஸத்.

---

99 உத்தம பக்தியுள்ளவள். 100 மும்மூர்த்தி ஸ்வரூபத்தை யுடையவள். 101 சர்வ லோகங்களையும் தன் வசப்படுத்துபவள். 102 வேத சாஸ்த்ரங்களின் உண்மைப்படி நடப்பவள்; வேத சாஸ்த்ரங்களின் அளவாகவும் முடிபாகவும் விளங்குபவள். 103 விசாலமான கண்களையுடையவள்; சகல உலக விஷயங்களையும் ஏககாலத்து உணரும் பரந்த நோக்கமுடையவள். 104 எல்லா உபத்திரவங்களையும் போக்குபவள். 105 அழகிய அரியாசனத்தில் அமர்ந்திருப்பவள். 106 நன் மங்கலமிக்க ஆதிதேவி ஸ்வரூபியானவள். 107 மந்த்ரங்களாகிய நகரில் வஸிப்பவள். 108 சர்வ மங்களத்தையும் (உடையவள்) பக்தர்களுக்குக் கொடுப்பவள்.

ஏற்கனவே கன்னட எழுத்துக்களால் வெளிவந்த இந்த நாமாவளியை உடுமலைப்பேட்டை, வழக்கறிஞர் ஸ்ரீமான் S. திருஷ்ண ராவ், M. A., B. L., அவர்கள் தமிழ் எழுத்துக்களால் தொகுத்துத் தந்ததேயன்றி, அதற்கு முக்யமான குறிப்புரையும் எழுதித் தந்தனர். அக்குறிப்புரையே இதில் பிரகரிக்கப்பட்டுள்ளது. உரையில் கண்டுள்ள பதங்கள் ஒவ்வொன்றின் இறுதியிலும், நான்காவது அல்லது எட்டாவது வேற்றுமை உருபு சேர்த்துக்கொண்டு, " நமஸ்கரிக்கின்றேன் " என்ற பதத்தைச் சேர்த்துச் சொல்லிக்கொள்ளல் வேண்டும்.

ஒவ்வொரு நாமத்திற்கும் முன்னர் ஓங்காரம் சேர்க்கப்பட்டுள்ளது. விசேஷமாக ப்ரயோகிக்க விரும்புபவர் ஓங்காரத்துடன் " ஐம், க்லீம், ஸௌம் " என்னும் த்ரியாக்ஷரியைச் சேர்த்துச் சொல்லலாம். மிகவும் அதிக விசேஷமாய் ப்ரயோகிப்போர், ஓங்காரத்துடன் " ஹ்ரீம், ஸ்ரீம், ஐம், க்லீம், ஸௌம் " எனும் பஞ்சாக்ஷரியைச் சேர்த்துச் சொல்லலாம். நாமத்தின் இறுதியில் " நமோ நம : " என்றும் சேர்த்துச் சொல்லலாம். ஓங்காரத்தை ஆதி அந்தம் இரண்டிலும் உபயோகித்தல் சிறந்தது.

கோவை வள்ளல்

வைஸ்ய பூஷணம், வைஸ்ய சிரோன்மணி

ஸ்ரீ P. A. ராஜா ஸ்ரேஷ்டியார்.



எல்லோரும் வாழ்ந் தினிதே உதவிசெயும்
நல்லோரைப் போற்றிடுவோம் நாம்.

ஓம்

ஸ்ரீ வாசவீ சஹாயம்.

ஆர்ய வைஸ்ய மஹாஜனங்களுக்கு
ஓர் வேண்டுகோள்.

சகோதரிகளே ! சகோதரர்களே !! பெரியோர்களே !!!

ஸ்ரீ வாசவீ விஜயமாகிய இந்நூலை முன்னிட்டு, '*தக்ஷிண கண்ட ஆர்ய வைஸ்ய மஹாசபையின் தலைவன்*' என்னும் நிலைமையில், இவ்வேண்டுகோள் வரைவது என் கடமையெனத் தோன்றியதால், இதைத் தங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன். கல்விமான்கள் குற்றங் குறைகளைப் பாராட்டாமல் ஏதாவது விசேஷமிருந்தால் அதைமட்டும் அங்கீகரிக்கவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்நூல் இதுவரை சிறந்த முறையில் தமிழ் மொழியில் பிரசுரிக்கப்படவில்லையென்றே நினைக்கிறேன். நம்மவருக்கிருந்த இப் பெருங்குறையும் தீர்ந்துவிட்டது. நம் தலைவர்களாகிய, உபய பாஷா ப்ரவீண பண்டிதராய ஸ்ரீ கிரந்தி வேங்கடகோபால சிரேஷ்டிகாரு, தக்ஷிணகண்ட ஆர்ய வைஸ்ய மஹாசபையின் பொதுக் காரியதரிசி சேலம் ஸ்ரீ M. V. கோபால் சிரேஷ்டிகாரு, ஆனத்தூர் பாலகவி ஸ்ரீ K. வேங்கடராம கவி சிரேஷ்டிகாரு ஆகிய இம்மூவரே இக் குறையைத் தீர்த்தவர்கள். மும்மூர்த்திகளைப்போன்ற இவர்களைவிட இக்காரியத்திற்குத் தகுதிவாய்ந்தவர்கள் இத் தக்ஷிணகண்ட ஆர்ய வைஸ்யர்களில் இனி யார் இருக்கிறார்கள் ? கல்வி, கேள்வி, அனுபவ ஞானங்களில் முதிர்ந்த இம்மூவர் மனதிலும் ஏக காலத்தில் இவ் வெண்ணம் தோன்றி இப்பெருங்காரியம் வெற்றிகரமாக முடிந்திருப் பதில் பராசக்தியாகிய ஸ்ரீ வாசவாம்பிகையின் திருவுள்ளப்போக்கும், கருணை விசேஷமும் நன்கு விளங்குகிறதென்பதே என் நம்பிக்கை.

இந்நூல் சம்பிரதாயத்தை யனுசரித்துப் புராண ரூபமாக எழுதப்பட்டிருப்பினும், ஏனைய புராணங்களைப்போலல்லாமல், பராசக்தியினவதாரமாக வந்த ஸ்ரீ வாசவாம்பிகையின் ஜீவியகாலத்தில்

ஸ்தூலமாக, உண்மையாக நிகழ்ந்த சம்பவங்களைக் கொண்டதாகையால் சரித்திர சம்பந்தமானது. இதை நிரூபிக்க எவ்வளவு ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றனவோ, அவ்வளவையும் ஆராய்ந்தே இம்முடிவுக்கு வந்திருக்கிறார்கள். இவ்வாதாரங்கள் எல்லாவற்றையும் விட மேலானதும் மறுக்க முடியாததுமான ஆதாரம் இத்தேச முழுதும் ஆங்காங்கு வசித்துவரும் ஆர்ய வைஸ்ய சமூகத்தாராகிய நாம் ஸ்ரீ வாசவகன்னிகா பரமேஸ்வரியைக் குல தெய்வமாகக் கொண்டு வழிபட்டுவருவதேதான் என்று சொல்லலாம்.

இந்நூல் மானிட வாழ்க்கையின் லக்ஷியமென்று சொல்லப்படுகிற தர்ம அர்த்த காம மோக்ஷமென்னும் புருஷார்த்தங்களைப் பற்றி நாம் முக்யமாகத் தெரிந்துகொள்ளவேண்டிய சாராம்சத்தை நன்முக எடுத்துக்காட்டுகிறது. ஸ்ரீ அம்பிகையின் அவதார தத்வங்களையும், வேதாந்த சித்தாந்த சாரங்களையும், பக்தி, அஷ்டாங்காதியோக லக்ஷணங்களையும் எடுத்துச் சொல்லியிருப்பதுடன், தர்மம், நீதி, சமூகம் ஆகிய இவைகளைப் பற்றியும், சரித்திர சம்பந்தமான குறிப்புகளைப்பற்றியும் விஸ்தாரமாகச் சொல்லுகிறது. பல நூற்களையும் படித்து ஆராய்வதற்குப் போதிய அவகாசமில்லாத நம்மவருக்கு இது ஒரு ஞானபொக்கிஷம் போன்றதாகும்.

இந்நூல் நம் சமூகத்தாருக்கு ஜீவநாடி போன்றதாம். நாம் எக்காலத்தும் கடைப்பிடித்தொழுக வேண்டிய வாழ்க்கை வழிகள் ஸ்ரீ அம்பிகையின் உபதேச வாயிலாகச் சொல்லப்பட்டுள்ளன. இவ்வுபதேசங்களை நம் தினசரி வாழ்க்கையில் அநுஷ்டிப்பதன் மூலம் ஸ்ரீ அம்பிகையின் திருவருள் நம்மீது என்றென்றும் சுரக்கும்படிச் செய்துகொள்ளவேண்டும். நம் சமூகம் தோன்றிய நாள் முதல் நாளிதுவரை எவ்வளவோ பெரிய ராஜீய சமுதாய மாறுதல்களும், இடுக்கண்களும் தோன்றியிருந்தும், முக்கியமான உபதேசங்களை நாம் கூடியவரை கடைப்பிடித்தொழுகிவந்ததால்தான் இக் கஷ்டங்களைச் சமாளித்து ஸ்ரீ அம்பிகையினருளால் முன்னேறிக்கொண்டிருக்கிறோம் என்பது என் அபிப்பிராயம். இவ்வுபதேசங்களின் சாராம்சம், அருளைக் கைவிடாமல் பொருளீட்டுதலேயாம். அதாவது சத்யம், தர்மம், நியாயம், பெருந்தன்மை, நேர்மை, பொறுமை இவைகளை எக்காலத்தும் கைவிடாமல் வாழ்க்கையை நடத்தவேண்டுமென்பதே.

இக்குணங்களே நமது தினசரி வாழ்க்கையில் பழக்கத்திற்கொண்டு வந்து, நம்மவரெல்லாரும் ஒரேவிதமான ஆசார அநுஷ்டானங்களைக் கொண்டு, கௌரவத்தைக் கைவிடாமல் வாழ்வதே நிரந்தரமான முன்னேற்றத்துக்கும், அசைக்கமுடியாத ஒற்றுமைக்கும் சிறந்த வழியாகும்.

இந்நூல், நம்மவர்க்குக் காமதேனுவைப் போன்றதாம். இதைப் பார்த்தவுடனே தூய உணர்ச்சிகள் நம்முள்ளத்தில் தோன்றும். மனம் நிர்மலமாகும். காரியங்கள் ஊக்கத்தைப் பெற்றுப் பரிசுத்தமாகும். எக்குறைவும் ஏற்படாது. நம்மவர் ஒவ்வொருவருடைய வீட்டிலும் இந்நூல் அவசியம் இருக்கவேண்டியதே. ஒவ்வொருவரும் இந்நூலைப் பக்தியுடன் படித்து, அதன்படி நடந்து, ஸ்ரீ வாசவாம்பிகையின் திருவருளுக்குப் பாத்திரராய், இகபர சுகங்களைப் பெற்று இன்புற்றுவாழ ப்ரார்த்திக்கிறேன். இதுவே என் வேண்டுகோளாகும்.

தங்கள் அன்பிற்குரிய,

(Sd.) ப. அ ராஜு செட்டி,

கோயம்புத்தூர்.

[தலைவர், ஆர்ய வைஸ்ய மஹாசபை, தக்ஷிணகண்டம்.]

Om.

A FOREWORD

BY

Sreeman Dewan Bahadur K. Sundaram Sreshtigaru B. A., B. L.,

RETIRED HIGH COURT JUDGE.

I am availing myself of the privilege given to me of writing a brief foreword to this book styled as 'SRI VASAVI VIJAYAM'. It is the Puranic story of Sri Kannika Parameswari, as an Avatar or incarnation among the Arya Vysia Community at Penukonda (in Godavari District). Down to this day, this Avatar is worshipped in several parts of India, by the Arya Vysias, as their tutelary Deity, with religious fervour and devotion, in several temples and shrines constructed for the purpose. It is necessary for them to have some knowledge of the events connected with the birth and life of the Goddess in her incarnation on this earth. A Tamil rendering of this sacred Puranic story, serves a very good purpose in the southern Presidency.

The ornate style, the flowery diction, the picturesque word-painting and the masterly description, are some of the attractive features in this book, and redound to the credit of the author, as the maiden attempt of a young but profound Tamil scholar. Not content with a mere narration of the puranic story, the learned author has made careful research into the mysteries and esoteric significance of the symbology, and the rites and ceremonies observed in the Hindu temples, and furnished a mine of information to the readers of this treatise. The assiduous labour, unstintingly bestowed on a production of this kind, should evoke grateful feelings in the minds of the reading public. Some realistic minded critics

ரிடையர்ட் ஹை-கோர்ட் ஜட்ஜ்,

திவான்பஹதூர், ஸ்ரீ. K. சுந்தரம் செட்டியார் B. A., B. L., (சேலம்).



ஆணவமா யாகன்ம நீத்தருளா லான்மார்த்தம்
பேணுவதே நற்பிறவிப் பேறு.

may say as regards the imagery in this book, that it is somewhat like the poet's imagination running riot. But a calm reflection would show the futility of such a criticism. Standards applied to the limitations of humanity, in the matter of descriptions, cannot hold good in the case of divine manifestations. Their transcendental beauty, intelligence, wisdom and prowess, are unfathomable, and elude the grasp of human imagination. Words are inadequate to describe their grandeur, and naturally, oriental savants had to use all the superlatives available, to make atleast a frail attempt to describe the divine glory.

The author has to be congratulated on this literary achievement. I trust that this book will be widely read by the Vysia public, and even by non-Vysias, who are lovers of Tamil literature, and have no sectarian bias. The author eminently deserves all possible encouragement. The Grace of 'SRI VASAVI', will descend upon the learned author, **Sriman Anathur M. K. Venkatraman**, as a fitting recompense for this unique service.

Last, though not the least, is the substantial help rendered for the printing and publication of this work, by noble and generous minded gentlemen, Sriman *Vysia Bhushanam* **P. A. Raju Chettiar** and his friends in Coimbatore, as also the incentive and encouragement given to the author for embarking on this literary adventure, by the reputed selfless worker in the cause of our country and the Vysia Community, who is no other than Sriman **M. V. Gopal Chettiar** of Salem. This foreword cannot be closed without mentioning the valuable help by way of inspiration and guidance to the author, by the revered *Ubayabasha Pravina Pandit* Sriman **Grandi Venkata Gopala Sreshtigaru** of Coimbatore.

[Sd.] **K. Sundaram Chetty.**

*அணிந்துரை.

தமிழ் நாட்டின்கண் வசிக்கும் ஆரிய வைசியர்களாகிய நாம், நமது தாய்மொழி ஆந்திர பாஷையாக இருந்தபோதிலும், நாம் வசிக்கும் நாட்டின் பாஷையையும் பழக்க வழக்கங்களையும் அனுசரித்து நடக்க வேண்டியதன் காரணமாகத் தாய் மொழியை நமது இல்லங்களில் பேசுவதற்கு மாத்திரம் உபயோகித்துவருகிறோம் என்பது தெரிந்தவிஷயம். ஆகையால் நாம் நமது குலதேவதையாகிய ஸ்ரீ வாசவ கன்னிகாபரமேஸ்வரியின் சரிதமும், நம் கடமைகளும், நித்ய கர்மானுஷ்டானங்கள், தெய்வ வழிபாடுகள் முதலியவைகளின் அர்த்தங்கள், முறைகள் முதலியனவும், சரிவரத் தெரிந்து கொள்ளாமல் நடந்துவந்தோம். இவ்விஷயங்களை நமக்குவிளக்க அநேக ஆந்ர, சம்ஸ்கிருத, தமிழ் கிரந்தங்கள் தனித்தனியாக இருப்பினும், எல்லாவற்றையும் ஒருமிக்க சேர்த்துத் தமிழ் நாட்டினராகிய நாம் சுலபமாக அறிந்துகொள்ளுமாறு தொகுத்த தமிழ் கிரந்தம் ஒன்றுமில்லை.

இந்த லோபங்களையெல்லாம் போக்கி நம் கண்களை விழிக்கச் செய்த நம் தக்ஷிணகண்ட ஆரிய வைசிய மகாசபையாருக்கு வைசிய ரத்னவரும் நன்றியுடையவர்களாக இருக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அம் மகாசபையின் தலைவரான கோவை வள்ளல் "வைசிய பூஷணம்", "வைசிய சிரோன்மணி" ஸ்ரீ P. A. ராஜா ஸ்ரேஷ்டியார், கெடி மகாசபையின் சிருஷ்டி கர்த்தாவும், பணியே உடல், பொருள், ஆவி என்று உழைக்கும் கெடி மகாசபையின் காரியதரிசியுமாகிய "வைஸ்ய திலகம்" சேலம், ஸ்ரீ M. V. கோபால் ஸ்ரேஷ்டியார் ஆகிய இவர்களின் நன்முயற்சி இல்லாவிடில் தக்ஷிணகண்ட ஆர்ய வைஸ்ய மஹாசபையின் முதலாண்டு (**1943**-ஹ) விருந்தாக "**ஸ்ரீ வாசவீ விஜயம்**" என்கிற இவ்வற்புத கிரந்தத்தை அடைந்திருக்க முடியாதென்பது திண்ணம்.

---

*இஃது, திருவண்ணாமலை நகர பரிபாலனசபைத் தலைவரும், வடாற்காடு ஜில்லா ஆர்ய வைஸ்ய மஹாசபைத் தலைவரும், அருணை ஆர்ய வைஸ்ய சமாஜத்தின் போஷகருமான, ஸ்ரீ **P. S. B.** வெங்கடாசலபதி ஸ்ரேஷ்டியாரவர்களால் வரையப்பெற்றது.

இவ்வரிய கிரந்தத்தை இயற்றிய இளைஞரும், பாலகவியும், "வைசிய பாரதி" யுமாகிய ஆனத்தூர், ஸ்ரீ K. வேங்கட்ராம ஸ்ரேஷ்டியார் அவர்களுக்கு நம் அனைவருடைய ஆசியும் உரித்தானது. இவ்வற்புத பொக்கிஷத்தை ஷெட்டியார் கோயம்புத்தூர் 'உபய பாஷா ப்ரவீண' 'பண்டிதராய' ஸ்ரீ கிரந்தி வேங்கடகோபால குப்தாகாரு அவர்களின் உதவியால், ஆந்திர, சம்ஸ்க்ருத, தமிழ் கிரந்தங்களை ஆராய்ச்சி செய்து வெகு சீக்கிரத்திலும், எல்லோரும் சுலபமாய் அறியும்படியாயும், நல்லநடையிலும் தொகுத்து நம் தமிழ்நாட்டு ஆரிய வைசிய மக்களுக்கு அளித்துள்ளனர். இந்த ஞானக் களஞ்சியத்தை ஆரிய வைசியர் யாவரும் தவறாமல் வாசித்து ஸ்ரீ பராசக்தியின் அருளைப் பெறுவதுடன் இதன் ஆசிரியரை மனமார வாழ்த்துமாறும் கோருகிறேன்.

(Sd.) Venkatachalapathy.

நூலாசிரியருக்கு ஒப்பற்ற உற்சாகத்தை ஊட்டி,
இப்பணியில் மிகுந்த ஸ்ரத்தையுடன் ஈடுபடும்படிச் செய்வித்த

ஓர் சிறந்த நிருபம்.

அனுப்புதல் :—

வைத்தியர், அ. வேங்கடாசல முதலியார்,
23, வளையல்காரத் தெரு, திருவண்ணாமலை.
விஷ ஐப்பசி உ-வ (7-11-1941)

சுபம். விளைவது மிஃதே.

அன்பு கெழுமிய ஆர்வலர், (ஆனத்தூர்) ஸ்ரீ கே. வேங்கடராம செட்டியார் அவர்களுக்கு :—

நாமகளின் நல்லருள் சுரந்து ஸ்ரீ வாசவியின் மகாத்மியத்தைத் தெள்ளிய தமிழால் உள்ளங்கவர் உன்னத நடையில் எழுதித் தமிழுலகில் ஓர் புத்துணர்ச்சியைத் தோற்றுவிக்கத் தக்க நாவீறு நல்கும்படி நாவின் தேவாகிய ஸ்ரீ நாமகளை வந்தித்தும் சிந்தித்தும் எழுதுவதித்தனை.

அன்புசால் நண்பீர் !

4—11—'41 தேதியுள்ள ஆர்வமிகு நிருபங் கிடைத்துப் படித்துப் பேருவகை அடைந்தாம். கல்வி நலம் வாய்ந்த கருணையாள ராகிய ஸ்ரீமான் எம். வீ. கோபால் ஸ்ரேஷ்டியார் அவர்களின் அன்பு, அபிமானம், அவா, ஆற்றல், சிந்தனை, முயற்சி, உறுதுணை, எதிர்கால உயர்நிலை முதலாயவாற்றால், கற்றாரும் உற்றாரும் இறும்பூது எய்தும் வகையில் தங்கட்கு எழில்பெறு புகழ் பல எய்தலாம் எனல் எனது எண்ணம். (இறைவி அருள்புரிக.)

ஸ்ரீ வாசவாம்பிகையின் மகாத்மியத்தைத் தமிழில் யாத்தல் பற்றிக் கடிதத்தின் இடையிடையே கலக்கந்தரு மொழிகள் பல காண்கின்றன.

ஸ்ரீ கம்பநாடர் போன்ற மகா கவிகளும்கூட ஆரம்பத்தில் இவ்வகைக் கலக்கம் கொண்டனரென அக்கவிச் சக்ரவர்த்தியாரின் அவையடக்கப் பாக்களாம் " ஒசை பெற்றுயர் பார்க்கட லுற்றேரு " எழுவாயாதி செய்புட்களான் தேற்றம்.

நாமகளின் நல்லருள் பெற்ற நாவல்லோர்க்கே இச்சங்கை தோற்றுமாயின், ஏனையோர்க்கு இது இயல்பே ! என, எவ்வகை ஐயமுங் கொள்ளாது ஆற்றலுடன் அப் பாமகளின் பதம் பணிந்து பணியாற்றலே இத்தகு வேண்டுவது.

கவிச் சக்ரவர்த்தி கம்பநாடர் அமிழ்தினும் இனிய தமிழ் மொழிப் பாக்களால் ஸ்ரீமத் ராமாயணத்தை யாத்தது பூர்வம்விட்ட குறையைப் பூர்த்தி செய்யவேயாம்.

இஃதே போன்று ஸ்ரீ வாசவீ தேவியின் மகாத்மியத்தைத் தமிழில் எழுத நேர்ந்ததும்,

" ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவர்க்
கெழுமையு மேமாப் புடைத்து "

என்றபடி எப்போதோ விட்டுவைத்ததை இப்போது தொடர்ந்து செய்வதே யாகும்.

இலக்கணம் பற்றிய ஆசங்கைகளும் கடிதத்தில் எழுகின்றன.

இலசட்சணம் என்பதே இலக்கணம். இதைப்பற்றி இருதயத்தில் இடர்ப்பட வேண்டுவதில்லை.

நாமகளைப் பணிந்து எழுதுகோலை எடுத்தால் நாவீறு நாற்றிசையும் மிளிரும்.

> ''படிக நிறமும் பவளச்செவ் வாயும்
> கடிகமழ்பூந் தாமரைபோற் கையும் — துடியிடையும்
> அல்லும் பகலும் அனவரத முந்துதித்தால்
> கல்லும்சொல் லாதோ கவி''

என்ற கம்பர் வாக்கு கரதலாமலகமன்றே ?

இத்திடசித்தத்துடன் இசை மடந்தையின் இணையடி பணிந்து தீவிரமாக செயலாற்றல் சீர்மையுடைத்து.

இந்நூல் யாத்து முடிவெய்திய பின்னர் அரங்கேற்றலின் போழ்து ஏதேனும் வாது நேருமாயின்,

> ''சேதிக்க லாந்தர்க்க மார்க்கங்க ளெவ்வெவர் சிந்தனையுஞ்
> சோதிக்க லாமுறப் போதிக்க லாஞ்சொன்ன தேதுணிந்து
> சாதிக்க லாமிகப் பேதிக்க லாமுத்தி தானெய்தலா
> மாதிக்க லாமயில் வல்லிபொற் பூளை யடைந்தவரே''

எனக் கம்பநாடர் அருளியவாறு அந்த வாக்குத் தேவியே ஸ்ரீ வாசவி ரூபமாய் நின்று வாதப்போர் வாராவண்ணம் வாயுரை வழங்கும். எனவே,

மயக்கம் மாய்ந்து மங்களம் பெறுக !
தியக்கம் தேய்ந்து திடம் வருக !
கலக்கம் கலங்கிக் கவிநயம் உறுக !

இருதய வன்மையுடன் இச் சமூக சேவையை ஆனந்தத்தொடு ஆற்றுக. மேற்கூறியாங்கு எழிலும் புகழும் இன்னன பிற நலன்களும் தங்கட்கு அமைய அருள்புரியுமாறு ஸ்ரீ ஆதிமூல நாயகனை அடிபணிகின்ற,

அன்பு மறவா,

வைத்தியர், அ. வேங்கடாசல முதலியார்.

தக்ஷிண கண்ட
ஆர்ய வைஸ்ய மஹாசபையின் உபதலைவரும்,
உடுமலைப்பேட்டை V. R. B. ஸன்ஸ் மில்ஸ் உரிமையாளரும்,
பிரபல மிராசுதாரருமான,

ஸ்ரீ V. R. B. கோபால்ரத்னம் குப்தா அவர்கள்,

இந்நூலாசிரியர்மீதியற்றிய

சாற்றுக் கவி.

ஆசிரியப்பா.

அருணை அடுத்த ஆனத் தூரில்
கருணை வைகிய குலத்தே தோன்றி
இமிழ்திரை ஞாலத்து எழிலுறத் திகழும்
அமிழ்தினு மினிய அருந்தமிழ் பயின்று
பாலிய வைகிய பாரதி யாய்த்திரு
மாலின் பெயர்கொள் மாண்புறு கவிஞ !
செவிவிருந் தூட்டும் தெள்ளிய அமுதாம்
கவிபல படித்தேன் கவிசில கேட்டேன்
தேமது ரத்தமிழ் இனிமை விளங்கக்
கோமதி வாசவி அன்னையி னருளால்
அருள்வள மிகநிறை யஞ்சொற் கவிபல
விரைவினில் வரையும் வேங்கட ரமண
பாரதி நின்னுல் பாரதி. நினைவைச்
சிருட னெய்தச் சிரிய செயலே
செய்தோய் வாழி! தீங்கனிக் கவிகள்
பெய்தோய் வாழி! தேவியின் சரிதை
வாசவி விஜயம் தேசுற வாக்கிய
மாசிலாச் சீர்தனித் தோழனே வாழி !
வாழிய நின்புகழ்! வாழிய நம்குலம் !
வாழ்த்தி யமைகுவன் வாழிய பெரிதே !

கோபால்ரத்னம் குப்தா,
உடுமலை.

ஓம்.

உபோற்காதம்.

மானிடர்கள் இவ்வுலகில் எந்நாட்டிலும் கல்வி பயின்று தேர்ந்த மக்கள் ஒருசார்பாகவும், ஐஸ்வரியம் நிறையவுள்ள ப்ரபுக்கள் மற்றொரு சார்பாகவும், நாடோறும் பாடுபட்டு கை விருத்திகளில் தேர்ந்தவர்கள் பிறிதொரு சார்பாகவும், மேற் சொன்னவர்களிடம் சென்று வணங்கி யாஸ்ரயித்து ஜீவிக்குமவர்கள் வேறொரு சார்பாகவும் ஒன்றுபடாமல் வெவ்வேறுகப் பிரிந்து இருப்பதையே காண்கின்றோம். இப் பிரிதலே நான்கு வருணங்களாகக் கொள்வதற்குக் காரணமாம். நம் முன்னோர்களும் முதலில் குடும்பங்களாக இருந்து நமது இந்திய நாட்டிற் பிரவேசித்து, முற்காலத்தில் வேதங்களை வாய் மொழியாகப் பாடிக்கொண்டு, பூமியில் உழுதல், பிறருடன் போர் புரிதல், வேதங்களிலுள்ள பழமொழிகளை யோதுதல், அதற்கிசைந்து நடத்தல், பசு வர்க்கங்களை வளர்த்தல், நெய்தல், மஞ்சகோலல், போர் புரி ஆயுதங்கள் செய்துகொள்ளுதல், வியாபாரம் செய்தல் முதலிய வைகள் யாவுந் தெரிந்து காகரிகத்துடன் நடத்துந் திறன்கொண்டு குடும்பங்களாய் இத்தேயத்தில் ப்ரவேசித்தனர் என அந்நிய சரித்திரக் காரர்களும் எழுதியுள்ளனர்.

ஆகவே மேற்சொன்ன வ்ருத்திகளை வழங்குகின்ற குடும்பங்கள் தத்தம் தலைவர்களின் பெயரால் குடும்பங்களைத் தெரிவித்து வந்தார்கள், அக் குடும்பத் தலைவர்களே ரிஷிகள். அக் குடும்பங்கள் ஒவ்வொன்றும் பல குடும்பங்களாக பிரிகைந்தும், தலைவர்களின் பெயர் களையே வழங்கிவந்தார்கள். அக் குடும்பங்களின் பெயர்கள் தலைவர் களின் பெயராற் சொல்லப்படும்போது 'கோத்ரம்' எனப்படும். ('கோ'—என்றால், க்ரணங்கள், கிளைகள், முதலிய பொருளைத் தரும். 'கோத்ர' என்றால் — கிளை வர்க்கங்களை ஒன்றாகத் திரட்டப்பட்ட சமூகம்—கோத்ரம் என்று வழங்கப்பட்டு வந்துவிட்டது. இவ்வழக்கம் சுருதிகளிலேயே காணலாம்.

வேதங்களை ஓதுதல், அதன் வழி நடத்தல், நடத்துவித்தல் முதலியவை வேலையாகக் கொண்ட பலர் ஒன்றுகூடி ஒன்றுகூடி

பிராம்மணர்கள் என வழங்கப்பட்டனர். நம்மவர்கள் பிற நாட்டில் பிரவேசித்தபோது தம் வரவை நல்வரவு கூறுது எதிர்த்தவர்களை எதிர்த்துப் போர்புரியத் திறன்கொண்ட பலர் க்ஷத்திரியர் எனப்பட்டனர். தங்களால் தொன்று தொட்டு நடத்தப்பட்டு வருகிற வ்யவசாயம், வ்யாபாரம், கற்று ஆ பசுவினம் காத்தல், பல தொழில் செய்தல், நெய்தல் முதலிய செய்தவர்கள் எஞ்சிய பலர்.

இவர்கள் நம்நாட்டில் தொன்று மூற்பட்டுப் பிரவேசித்தவர்களாதலால், 'விசர்கள்' (விச–பிரவேசித்தல்) என வழங்கப்பட்டு, விசர்களே 'வைசியர்கள்' எனவும் திருநாமம் பூண்டனர்.

இவர்கள் (மூற்கூறிய மூவகையாரும்) 'ஆர்யர்கள்' எனவும் வழங்கப்பட்டார்கள் (ரி–கதௌ–நேராய்ச் செல்லுதல். உழுதல் நேராய்ச்செல்லுதலால் எருழுதல் எனவும்படும்.) 'ரி' (செல்லுதல்) என்னும் பதத்திலிருந்து 'ஆர்ய' என்று வந்தது. (எரை நேராகச் செலுத்துகிறவன்.) ஆகையினால் 'வைசிய' 'ஆர்ய' என்னும் பதங்கள் வழங்கப்பட்டன. மூற்காலத்தில் பசுக்கள் தனமாகவும் பண்ட மாற்றுதற்கு உபயோகப்படுத்தப்பட்ட சாதனமாகவும் இருந்தன. ஆகையினால் இவை (கன்று காலிகள்) அதிகமாகவுடையவன் 'கோமத்' என்னும் 'கோமீ' என்னும் சொல்லப்பட்டான். இப்பெயர் ஐச்வர்ய வந்தர்களுக்கும் ஐச்வர்யத்திற்கும் சிறப்புப் பெயராக வேதத்தில் பல்லாயிர இடங்களில் காணப்படுகின்றன. பல ஆயிர வருஷங்களுக்கு முன் அமரசிம்ஹன் "கோமான் கோமீ கவீச்வரே" என்று எழுதியிருக்கிறார்.

எனவே 'கோமத்' என்னும் பதமானது (ம்ருத்–மண்–மடி என்று ஹிந்தியில் தத்பவப்பட்டு, அதாவது உருவத்தில் விகாரப்பட்டு வந்ததுபோல், தெலுங்கில்) 'கோமடி' என்று திரிந்தது. இது வன்றியும் கோமதீ நதியின் தீரங்களில் சிலகாலம் வசித்து, அந்நதியின் பெயரைத் தங்களுக்குப் பெயராகப் பெற்றார்களெனவும் கூறலாம். அச் சொல், 'கோமதி' என்பது பைசாசிகபாஷை திரிபு. தெலுங்கில் பல பதங்களுக்கு ஏற்பட்டுள்ள திரிதல் விகாரவழியில் 'கோ–ம–தி' என்பது 'கோ–ம–டி' என்று மாறிற்றென வேறு சில இலக்கண ஆசிரியர்களின் கொள்கை. 'வைசிய' என்ற பதம் தெலுங்கில் 'பச்சு' என மாறுதலும் காண்க. ஆனல், 'ராவ்'

என்பது 'ராஜ' சப்தத்தின் திரிபு. இது ஜாதியைக் குறிக்கும் சொல் அல்ல. பதவியைக் குறிக்கும் சொல்.

இன்னும் பிற்காலத்தவர்கள் வடமொழியில் (தண்டி, தச குமார சரித்ரம் முதலியவை எழுதப்பட்ட காலத்தில்) 'ஸ்ரேஷ்டி' என்னும் பதம் வியாபார நிபுணர்களுக்கு உபயோகப்படுத்தப்பட்டு, வரவர வியாபார நிபுணர்களல்லாத மற்ற யாவரும் அப்பெயரைச் 'செட்டி' எனப் பிரிந்து சாதாரணமாக யாவரும் வழங்குகிறார்கள். அது காரணமாக இது இனத்தைக் குறிப்பது இல்லையாக மாறிற்று.

ஆரியர்களின் சமுதாயத்தார் அநேக பகுதிகளாகப் பிரிந்து, வடநாட்டை விட்டுத் தென்னாட்டிலும் ப்ரவேசிக்கலானார்கள். அப்படிப் பிரியும்போது இவர்கள் பேசிக் கொண்டிருந்த பாஷை சுத்த ஸம்ஸ்கிருதமாக இருந்தாலும், எந்தெந்த தேசங்களில் நெடுங்காலம் தங்கியிருந்தார்களோ அந்தந்த தேச பாஷையை வழக்கத்துக்குக் கொண்டுவரநேர்ந்தது. அப்படிச் சில தொகுதியார் தென் திசையிற் கலிங்கம் ஆந்ரம் கர்நாடகம் முதலிய நாடுகளில் பெருவாரியாகப் பிரவேசித்து வாழலானார்கள். அப்பொழுது அந்தந்த தேச பாஷைகளை அதிகமாகப் பேசிப் பழகி, தொன்று தொட்டுத் தாம் பேசிவந்த வட மொழியை மறந்துவிடலாயினர். அப்படி மறந்தாலும், மத சம்பந்தமான க்ரியைகளிலும் பூஜையிலும் அர்ச்சனைகளிலும் மந்த்ரங்களிலும் சுபா சுபக்ரியைகளிலும் வ்ரதாதிகளிலும் அவ்வடமொழியையே இன்றும் உபயோகித்துவருகிறார்கள். ஆனால், மற்ற வியவஹாரங்களில் அந்தந்த தேச பாஷையைத்தான் உபயோகிக்கலானார்கள்.

ஆர்யர்களின் சில தொகுதியார் தெலுங்கு நாடுகளாகிய கலிங்கம், ஆந்ரம், கர்நாடகம் முதலிய நாடுகளில் நெடுநாள் தங்கி அந்த பாஷையை வழங்கிவந்த காலத்தில் நமது அம்மையாரின் திருவவதார காலமாக ஏற்படுகிறது. ஆகவே, நமது அம்மையார் அவதரித்த காலமாகிய விஷ்ணுவர்த்தன அரசன் காலத்தில் தெலுங்கு தேசத்தில் வெகுநாள் தங்கினவர்களானதினால் தெலுங்கு பாஷையே பாஷையாகவும், தெலுங்கு நாடே தமது நாடாகவும் கொண்டு தெலுங்கு அரசர்களுடன் வியவஹாரங்கள் நடாத்தநேர்ந்தது. அந்தத் தேசங்களில் இப் பகுதியார்க்கு தெலுங்கில் பல நாமதேயங்கள்

ஏற்பட்டன. தங்களுடைய குலங்களுக்கும் கோத்ரங்களுக்கும் தெலுங்கு மொழியிலே குறிப்புப் பெயர்களை வைத்துக்கொண்டனர். வைசியர்களுக்கு "கோமடிகள்" என்றும், "பச்சுகள்" என்றும், "பேரிகள்" என்றும் பெயர்கள் ஏற்பட்டிருப்பதே இதற்கு உதாரணமாம். பழைமையான ஆந்த்ர காவ்யங்களில் மஹா கவிகளால் வைசியர்கள் என்னும் பொருள்பட மேற்கண்ட பதங்களை உபயோகித்திருப்பதும் நாளதுவரை அவ்வாறே காவ்யாந்தரங்களிலும் வழங்கப்படுவதும் காண்க.

'சூத்ரகந்யே' என்னும் பதத்திலிருந்து 'சூத்த' பதம் பிறந்துள்ளது. பொருளை ரக்ஷித்து அல்லது சேமித்து வைத்திருக்கிறவன் 'சூத்தன்' எனக் குறிப்பிடவந்தது. அதுவும் இவ்விஜாதார்களுக்குக் குறிப்பால் வந்தது. விஷ்ணு புராணம் மூன்றுவது அம்சம் பத்தாவது அத்தியாயத்தில் உள்ள 'ஸர்மேதி ப்ராம்மணஸ்யோக்தம், வர்மேதி க்ஷத்ர ஸம்ஸ்ரயம், சூத்த தாஸாத் மகே நாமனீ ப்ரசஸ்தே வைஸ்ய சூத்ரயோ:' என்ற சுலோகம் ப்ராம்மணர்களுக்கு 'சர்ம' என்ற பெயரும், க்ஷத்ரியர்களுக்கு 'வர்ம' என்ற பெயரும் வைஸ்யர்களுக்கு 'சூத்த' என்ற பெயரும், சூத்ரர்களுக்கு 'தாஸ' என்ற பெயரும் உண்டென்று விளக்குகின்றது.

வைசியர்கள் வ்யாபாரம் செய்தலும், ஸர்வ வஸ்துக்களையும் சேமித்தலும், எல்லாவித தொழில்களையும் செய்வித்தலும், ஏர் உழுது பலவித தான்ய விசேஷங்களை வேளாண்மையால் விளைவித்தலும், பலவிதமான சிற்பத் தொழில்களைச் செய்தலும் ஆகிய இவை முதலிய வைகளில் நிபுணர்களாகி மேம்பாடடைந்தனர். ராஜ்ய தந்திரத்திலும் பின் அடைந்தவர்கள் அல்ல.

விஷ்ணு புராணம் நாலாவது அம்சத்தில், இருபத்து நாலாவது அத்யாயத்தில், "உத்ஸார்யா கில க்ஷத்ர ஜாதிம் பத்மா வத்யாம் காச்யாம் குர்யாம் மதுரா யாமது கங்காம் ப்ரயாகம் மாகதாந் சூத்தாநீஸ்ச போக்ஷ்யதி." என்று கூறப்படுவதால், மகத தேசத்தில் இருந்த வைசியர்கள் சகல தேசங்களிலுமிருந்த க்ஷத்ரியர்களை ஜயித்து கங்கா தீரத்தில் ப்ரயாகா வரையில் பத்மாவதி, காசீபுரம், மதுரா முதலான தேசங்களைப் பரிபாலித்தனர் எனத் தெரிகிறது.

வாயு புராணத்தில் "அநுகங்கா ப்ரயாகஞ்ச ஸாகேதம் மகதாம் ஸ்ததா, ஏதாம் ஜநபதாந் ஸர்வாந், போக்ஷ்யந்தே குப்தவம்சஜா:" என்றதால், வடக்கில் கங்கா தீரத்தில் ப்ரயாகா, ஸாகேதம், மகதம் ஆகிய இவ்வெல்லாத் தேசங்களையும், தெற்கில் காஞ்சீபுரம், பத்மாவதி, மதுரை முதலிய இவ்விடங்கள் வரையிலுமுள்ள அரசர்க ளெல்லாரையும் ஜயித்து ஆண்டார்களென்ப் புலப்படுகிறது.

ஐரோப்பிய பண்டிதரான 'காமஸ்' துரை யவர்களால் இயற் றப்பட்ட 'குப்தவம்சம்' என்னும் க்ரந்தத்தில், வைசிய அரசர்களைப் பற்றிக் கூறுவதாவது :— The materials available for the determination of the age and the spread of the dominions of the Guptas seem to arrange themselves in the following order (a) Inscriptions (b) Written History (c) Tradition (d) Coins என்பனவாம்.

மஹா அலெக்ஸாண்டர் இந்து தேசத்தின்மீது படையெடுத்து வந்தபோது, (அதாவது கிரிஸ்து பிறப்பதற்கு முந்தி குப்தர்கள் மிக உன்னத பதவி யடைந்திருந்தவர்கள் என்று 'மெகஸ்தனீஸ்' என்னும் கிரேக்க சரித்திரக்காரரும் சிலாகித்துள்ளார். அப்பொழுது சந்திர குப்த மஹாராஜாவின் காலம். சந்த்ர குப்தர் குப்த ராஜாக் களில் ஒருவர். அவர் காலத்தில் இந்து தேசமுழுமையும் ஆண்ட தாகவும், அவருடைய வம்சஸ்தர்கள் ஏழு சந்ததியார் சுமார் மூன்று சதாப்தங்களாக அதாவது முந்நூறு வருஷங்கள் மஹா ப்ரதாபமாக அரசாட்சி புரிந்துவந்ததாகவும் தெரியவருகிறது.

சீன ப்ரசாரகர்கள் பாஹ்யான் ஹ்யூவென்ஸாங் முதலியோர் எழுதியுள்ள சரித்திரத்திலும் இவை தெளிவாகின்றன. சந்த்ர குப்தனுடைய அரசாட்சியை இவர்கள் மஹா பெருமையாய்ச் சொல்லியுள்ளார்கள். சந்த்ரகுப்தனதியோர் குப்த அரசர்களே. கிரேக்கருடைய பாஷையில் சரித்திரம் எழுதிய 'மெகஸ்தனீஸ்' என் பவர் நமது சந்த்ர குப்தரைச் 'சாந்த்ர கோடாஸ்' என்று சொல்லி யிருக்கிறார். (இங்கு 'குப்தஸ்' என்ற பதம் 'கோடஸ்' என்று ஆயிருத்தல் காண்க.)

இந்த குப்த அரசர்கள் திக்விஜயங்கள் செய்து மஹேப்ரதேசங்களில் சிலா சாஸனங்களை உண்டாக்கி, தங்கள் அரசாட்சியின் வன்மையையும் வண்மையையும் பகிரங்கப்படுத்தியுள்ளார்கள். இவைகளில், மிக மேன்மையை நமக்கு அறிவுறுத்தும் அசோக ரென்னும் குப்த அரசரின் அறக்கோட்பாடுகள், சிலைகளிலும் ஸ்தூபிகைகளிலும் உள்ள, தர்ம சூத்ரங்கள் முதலியன யாவரும் எங்நிலையிலும் அநுஷ்டிக்குமாறு போதிக்கின்றன வென்றால், இவ்விடத்தில் குப்த அரசர்களின் பெருமை கன்மேலெழுத்தாய் விளங்குகிறதென்பது மிகையாகாது.

ஸ்வர்ண நாணயங்களை உபயோகப்படுத்தி, பண்டிதர்களுக்கு விசேஷ பரிசளித்து, கல்வியை ஸம்ஸ்க்ருத பாஷையின் மூலமாக அதிகமாய் அபிவ்ருத்தி செய்து, கைத்தொழிலையும் வியாபாரத்தையும் உற்சாகப்படுத்தி, தேச தேசங்களிலும் கண்டாந்தரங்களிலும் மஹா பெருங் கப்பல்களால் அமூல்யமான ரத்னங்கள் தான்யங்கள் சரக்குகள் வாசனத்ரவியங்கள் கைநூலால் நெய்த (மிகவுயர்ந்த) மெல்லிய ஆடைகள் முதலியன பண்டமாற்றால் கொடுக்கப்படுமளவில், நமது பாஷை சாஸ்த்ர மர்மங்கள், நாகரிகப் பெருமைகள் சிற்பத்திறன்கள் முதலியவை பண்டமாற்றுடன் அந்நிய தேசங்களில் அந்நிய பாஷையிற்புகுந்து அச்சொற்களுடன் வ்யாபித்து அத்தேயத்தாரது மனதைக் கவரும் அரும் பெருமை நமது குப்தர்களாலன்றோ ஏற்பட்டது? இவ்வாறு வியாபாரத்தைப் பெருவாரியாகப் பெருக்கி வ்யவசாயிகளுக்குச் சகாயம் செய்து வேளாண்மையையுஞ் சிறக்கச் செய்தனர்.

மத்ய காலத்தில் இந்த குப்தர்களே 'நூத்தர்கள்' என்றும் வழங்கப்பட்டு, இந்திய வியாபாரத்தை உலகமுழுவதும் சிறந்தோங்கி வளரச் செய்தவர்கள். உலகத்திலுள்ள விலையுயர்ந்த பொருள்கள் யாவையும் வியாபாரத்தினால் இந்தியர்கள் அடைந்து நமது பாரத நாடு செல்வம் நிறைந்த நாடாகச் செய்தவர்கள் இந்த குப்தர்களே.

மகமத் கஜினி பன்னிரு தடவைகள் இந்தியாவில் படையெடுத்து செல்வத்தைக் கொள்ளை கொண்டதும், டெரையஸ், அலெக்ஸாண்டர், நாதர்ஷா முதலியவர்கள் படையெடுத்துத் தமது பணப் பேராவாவைத் தீர்த்துக்கொண்டதும், நாதர்ஷா என்பவன் நமது

இந்தியர் செல்வத்தைச் சூறையாடி, தமது பாரசீக உலகம் மூன்று வருஷங்கள் வரை எவ்வகையான வரிகளும் வட்டங்களும் குடிகள் தரவேண்டியதில்லையென்று பறை சாற்றியதும் நமது இந்தியாவிலிருந்து கொண்டுபோன அளவற்ற திரவியங்களினலன்றே? அவ்வளவு அதிக செல்வ நிறைவுக்கு ஏதுவானவர்கள் இந்த குப்தர்களே.

சரித்திரக்காரர்களால் சுத்தமாய் மறந்துபோன கலிங்க ராஜ்யம், விஜயநகர ராஜ்யம் ஆகிய ராஜ்யங்கள் ஐந்து சதாப்தங்களாக குப்தர்கள் என்னும் பொது மக்களாலும், குப்த அரசர்களாலும், அவர்களின் சந்ததியாராலும் அரசாட்சி செய்யப்பட்டு, செல்வம் நிறைய நிறைய வளர்ந்தோங்கப்பெற்றது.

இவர்களிற் பலர் கல்வியிலும் தேர்ந்துள்ளார்கள். 'மாக (Magha) கவி' என்பவர் வைசியர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவரெழுதிய காவியம் காளிதாஸருடைய காவியத்திற்குச் சமானமாகவும், சிற்சில இடங்களில் மேற்பட்டுமுள்ளது எனக்கூறலாம்.

வைசியர்கள் ஆந்த்ர ஜில்லாக்களில் நெருக்கமாகவும், தக்ஷிண ஜில்லாக்களில் ஆங்காங்கு சற்றுச் சற்றுச் சிதறியும் இருக்கிறார்கள். நிஜாம் ராஜ்யத்திலும், கர்நாடக ராஜ்யத்திலும், பம்பாய் ராஜதானியிற் சில ஜில்லாக்களிலும் மைசூர் ராஜ்யத்திலும் நெருக்கமாகவும் இந்தியா முழுவதிலும் ஆங்காங்கு சிதறியும் இருக்கிறார்கள்.

தற்காலம் தெலுங்கு ஜில்லாக்களில் தெலுங்கு முக்யமாப் பேசியும், தமிழ் ஜில்லாக்களில் தெலுங்குந் தமிழும் பேசியும், சில இடங்களில் மாத்திரம் தமிழையே பேசியும், வடநாட்டில் ஹிந்தி பேசியும், கன்னட ஜில்லாக்களில் கன்னடமுந் தெலுங்குங் கலந்து பேசியும் வருகிறார்கள். வைசியர்களுக்கு வடநாட்டில் 'பனியா' என்றும் பெயர் வழங்கப்படுகிறது. தென்னாட்டிலுள்ளோர் சைவ, வைஷ்ணவ மதங்களைத் தழுவியும், வடநாட்டில் சிலர் ஜைன மதத்தைத் தழுவியும், பௌத்த மதத்தைத் தழுவியும் இருந்துவருகிறார்கள். உதாரணமாக மகாத்மா காந்தியடிகள் ஜைன வைசியர் என்றறிக்க இடமுளது. முற்காலத்தில் இவ்வகையாரில் பலர் இசை பெற்று கல்வியிலும் மற்றத் துறைகளின் திறமையிலும் பெயர் பெற்றவர்கள் பல்லோர் இருந்திருப்பினும், இக்காலத்தில் கல்வியிலும் சீர் சிறப்புச் செல்வங்களிலும் மிகுந்து விளங்கும் பலர் உள்ளனர்.

ஸ்ரீ மாமிடி — வேங்கடார்யா அவர்களும், ஆத்மூரி — ஸ்ரீ — லக்ஷ்மீநரசிம்ம சோமயாஜிகளும் சற்று முன்புதான் இம்மண்ணுலகை நீத்தாராயினும், அவர் பெருமை நமது உள்ளத்தில் குடிபுகுந்து இப் போதும் உள்ளார் போலும் உணரப்பெறுகிறோம்.

தேசங்கள் ஒவ்வொன்றும் சாம்ராஜ்யத்திலும் வியாபாரத்தி லும் பெரும்பதவியைப் பெறவேண்டுமெனும் போராட்டங்களில் ஈடுபடுவதும், சமூக அபிவிருத்திக்கு இவை இன்றியமையாதன வெனக்கொள்வதும் மரபாம். சமூகோத்தாரணம், தேசோத்தாரணம் முதலியவை செய்வதற்கு நூதன விதான விஞ்ஞானங்களும், ஸர்வஸ் திதி பரிஜ்ஞானமும் வேண்டியதாகும். ஸ்வஜனோத்தாரணம், சமூ கோத்தாரணம், தேசோத்தாரணம் இவைகட்கு இன்றியமையாதன வான போராட்டங்களில் அதிக அனுபவம்பெற்று மேம்பாடடைய ஒவ்வொருவரும் தயாராகியும், ஏகீபாவப்பட்டு சமூகத்திற்காகவும் தேசத்திற்காகவும் ஸ்வார்த்தபரித்யாகம் செய்து, சத்தியமும், தரும மும், க்ரமவ்யவஹார ப்ரஜ்ஞையும், வியாபார பரிஜ்ஞானமும், கண் டாந்தரங்களிலுள்ள ஐரோப்பிய அமெரிக்க வ்யாபார வ்யவஹார ராஜீய, ஆர்த்திக, விஞ்ஞான விஷயங்களும் ஆகிய இவைகளில் நிக ரற்ற நிபுணத்வமடைந்துந்தான், நாம் மேன்மைபெற வேண்டுமென் பதை யறிகிறோம். அத்தகைய பெருமைகளைப் பெற்றவர்கள் நம் மிடையே பலருளர் எனவும் காண்கின்றோம்.

ராஜீய வ்யவகாரங்களுக்குத் தலைப்படுவதினாலும், வியாபார விஸ்தார விஞ்ஞானத்தினாலும், அதன் அங்கங்கள் உபாங்கங்கள் யாவுந்தெரிந்து, அவைகளை நடாத்தும் திறமை பூண்டு, வியவஹார ஞானமும் சாஸ்திர ஞானமும் உணர்ந்து அனுபவ ஞானத்தோடு ஒருங்குபடுத்தி நடத்துபவர்கள் பலருளர்.

மேற்கு தேசங்களில் இவ்விஷயங்களொவ்வொன்றும் சுலப மாகவும் விஸ்தாரமாகவும் தெரிந்துகொள்ள க்ரந்தங்கள் எற்பட்டு, தகுந்த வழிகள் கண்டுபிடிக்கப்பட்டு, தம் வாழ்க்கை முழுவதும் அர்ப்பணம் செய்து, தங்கள் சக்தி சாமர்த்தியங்களையெல்லாம் வினி யோகப்படுத்தி, பெரும் வழிகளைக்கண்டுபிடித்த விஞ்ஞானிகள் இருப் பினும், நமது நாட்டிலும் நமது வகையாரிலும் அதைப்போல்வாரும் உளர்.

நமது நாட்டுக்கு வெளியுலகம் விஞ்ஞான அபிவிருத்தி மார்க்கத்தில் எவ்வளவு வேகத்துடன் செல்லுகிறதோ அதற்குப் பின்னடையாமல் நாமுந்தான் செல்லவேண்டும். அதற்கு வேண்டிய கல்வித் திறமையும், வியாபாரத் திறமையும், வ்யவகாரத் திறமையும், இவற்றிற் காதாரமாயுள்ள செல்வத்தைத் திரட்டுந் திறமையும், இவ் வெல்லாவற்றிற்கும் முதன்மையான ஐக்யமும் நம்மிடை நிலைகின்றிருக்க வேண்டும். இவை நமது பிரயத்தனத்தினலும், இறைவனது பேரருளாலும் ஆகக்கடவது. இறைவனது பேரருளைப் பெறுவதும், நம்து கல்வி, நல்லொழுக்கம், இறைவன்மேலன்பு, ஆன்றோர் அகலுரை வழி நடத்தல் முதலியவையினலாம்.

கல்வித் திறனைப் பெறவேண்டுமானல், அதற்கு வேண்டிய வித்யா நிலையங்கள், ஆராய்ச்சி நிலையங்கள், மாணக்கருக்குப் போஷக நிலையங்கள் முதலியவைகளும் நமது நாட்டில் போதிய அளவு இல்லை. நமது சமூகத்தார்க்கும் இல்லை. ஆன்றோர் வழி நடந்து இறைவனை வழிபட்டு அவனது பேரருளைப் பெறுவதற்குத் தகுந்த பாரமார்த்திக போதனலையங்களும், யோக மார்க்க போதகாலயங்களும் நமது நாட்டில் இல்லை. அவையும் ஸர்வ கலாசாலைகளின் வழியாக ஏற்படல் வேண்டும். இவ்வளவும் ஏற்பட்டாலல்லவா நம் நாட்டினர் நற்பயன் பெறுவதற்காகும்? ஆதலால் அவையனைத்தும் அமையுமாறு நாம் பெரிதும் முயற்சி செய்தல் வேண்டும். இறைவனும் திருவருள் புரிவானாக!

இந்தியாவிலிருந்த ஆரிய வைசியர்களின் சரித்திரம் ஒருவாறு அந்நிய தேச ஆசிரியர்களாலும் பொதுச் சரித்திரத்தில் நன்கு மதிக்கப்பட்டு சித்தரிக்கப்பட்டுள்ளது.

நம் பகுதியார் வழிபடு கடவுள் எல்லாம்வல்ல இறைவனேயாயினும், வருஷத்தில் ஓர் பகுதியில் (தசரா காலத்தில்) யாவரும் பிறழாமல் தொழும் கடவுள் ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரீ அம்மையார். நமது தேசத்தின்கண் சமூகங்கள் வேறுபட்டு, ஒவ்வொரு சமூகத்தில் ஒவ்வொரு விதமான வழிபடு கடவுள் ஏற்பட்டுளதைக் காண்கின்றோம். இவ்வார்ய வைசிய சமூகத்தார் எங்கணும் ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரியை வழிபடுகின்றார்கள். தேயந்தோறு மவ் வழிபாட்டில்

ஒருமைப்பட்டிருக்கிறார்கள். சமயப்புரட்சி ஏற்பட்டு, புத்த சமயம் ஜைன சமயம் முதலியவை எங்கும் பரந்து விளங்கிய காலங்களிலும் இவர்கள் தமது ஒழுக்கத்தையே கைவிடாதாதரித்தமையும், இதுவரை நிகழ்த்தி வருவதையும் இன்றும் காண்கிறோம். இஃது எவ்வாறெனில், முன்பு சமயங்கள் பெருகி, ஜனங்களுக்கு நுணுக்கங்கள் உய்த்தாலோசிக்க இயலாததினால் கலக்கங்கள் ஏற்பட்டு இருந்தக்கால், திருக் கைலாயத்திலிருந்து ஸ்ரீ சிவபெருமான் அம்சமே வந்தாற் போன்று உதயம் செய்த ஸ்ரீ சங்கராசாரியார், இக் கலக்கம் தீரத் திருவவதாரம் செய்து, கடவுள் ஒருவரே '**மெய்யறிவு**' என்றும், பிறதுணர்ச்சி பொய் என்றும் போதித்தனர். அதினாலும் இக்கலக்கம் தீராது ராமானுஜர் முதலியோர் திருவவதரித்து " அம் மெய்யுணர்வே கடவுளாயினும், ஸ்ரீகரமாய் விகாரப்பட்டிருப்பதும் அம் மெய் யுணர்வே " என்றும், " ஸ்ரூபங்களுள்ள கடவுள் எவ்வரு வாயினு மாகுக " என்றும் போதித்தும் இக்கலக்கந் தீராதாயிற்று.

பிறகு அப் பரம்பொருளின் சக்தி திருவவதாரமாகித் தம் உருவே வழிபடு கடவுளின் உருவம் எனப் போந்தகாலை இச் சாகை யாரின் கலக்கம் ஓர்வகையாகத் தீர்ந்தமையால் அவ்வாறே வழிபட லாயினர். அத் திருவவதாரத்தின் சரித்திரந்தான் இந்நூலிற் கூறப் படுகிறது.

இஃது பலர் பலவாறுகக் கூறினும், ஸ்காந்தத்தில் செப்பியுள தெனினும், ஸங்க்ஷேபமாய்ச் சொல்லியிருப்ப தெனினும், அவ்வாறு சொல்வது ஸ்காந்தத்தில் ஸனத்ஸுஜாத ஸம்ஹிதையில் எனினும், வேறு சிலர் பிரம்மாண்ட புராணத்தில் கூறியுளதெனினும், பலர் பல வாறுகச் சொல்லினும் நிரூபிப்பதரிது. எஃதெங்ஙனமிருப்பினும், அவ்வம்மையார், இக்குலத்தாரிடை குசும குப்தன் குடும்பத்தில் பிறப் பும், அன்னவரின் அழகு பார்த்து வியந்து விஷ்ணுவர்த்தனன் என்னு மோர் அரசன் இச்சையுற்று மணம் புரிய வேண்டலும், அவ்வம்மை யாரின் தாய் தந்தையரும் குலத்தாரும் ஒவ்வாமையும், அவ்வம்மை யார் தம் தெய்வீகத் தன்மையை ப்ரத்யக்ஷமாகக் காட்டி, அப்பொழு திருந்த தீயொழுக்கங்களைப் போக்கி, ஸதாசார நற்குண நற்செய்கை களின் வழிகளைக் காட்டுவதற்கே தாம் அவதரித்து வந்ததாகத் தெரி வித்து, நேர்முகமாக ஆத்ம ஞானத்தையும் ஊட்டிப் பேருபதேசம் செய்தலும், அவ்வினத்தார், அக்காலத்து அரசர்களின் ஆஜ்ஞைகளை

ஆதரித்து நடக்க ஒவ்வாத ப்ரஜைகளுக்குப் பிறரின் சகாயம் எதுவும் உபயோகப்படாத நிலைமையில் அம்பிகையை வேண்டலும், அவ்வம்பிகை சிறுவர் சிறுமிகட்கும் பெரியவர்க்கும் பெண்டிர்கட்கும் வேண்டிய ஆசார சீலங்களையும், தர்ம நீதிகளையும், ஆத்ம ஞான மார்க்கங்களையும் விரிவாய் எடுத்துரைத்து, முதிஞர் அனைவர்க்கும் முத்தியின்பமீதலும், இளைஞர்கட்குத் தீர்க்காயுள் நல்கி, அரசாட்சி அனுக்ரஹித்தலும் ஆகிய இவை எவராலும் எந்த ஊரிலும் வரலாறுகச் சொல்லப்படுகின்றன. இவைகளைக்கொண்டு இந்நூல் விரிவாகவும், விளக்கமாகவும், எளிய நடையில் அழகுபெற எழுதப்பெற்றுள்ளது. இது வெறுங் கதையென்று மட்டிலும் கொள்ளாமல், இதில் அடங்கியுள்ள யோக, ஞான, தத்துவ விஷயங்களை ஒவ்வொருவரும் நுணுகியாராய்ந்து, ஈடுபட்டு ஒழுகிப் பழகிப் பேரின்ப சுகத்தை அடைய முயலுதல் அத்யாவசியமாகும். ஆதலால் இப் புனித சரிதையில் அடங்கியுள்ள தத்துவார்த்த ரஹஸிய விஷயங்களை ஒரு சிறிது சுருக்கமாக ஈண்டு குறிக்கலாமென்று எண்ணுகிறேன். அதாவது :—

[ஸ்ரீ வாசவீ விஜய தத்துவார்த்தச் சுருக்கம்.]

வீணாதண்டம் (முதுகெலும்பு) — ப்ருஹத்தரி மலை. சுஷும்னையே — கோதாவரி நதி. புருவ மத்யஸ்தானமே — பெனுகொண்டா நகரம். மூன்று நாடிகளும் ஆறுதாரங்களிலும் சம்பந்தப்படும் இடங்களே — அஷ்டாதச பட்டணங்கள். இடை பிங்கலை இரண்டும் உள்சேர்ந்து அங்கே ஒன்றுபடுவதே — நகரேஸ்வர ஜ்ஞாநத்தன ஆலயங்கள். உலக விவஹார ப்ரஜ்ஞையே — குசும ஸ்ரேஷ்டி. விவஹார ஹேதுவாகிய ஞானமே — குசுமாம்பிகை.

உள்நோக்கமாகிய அந்தர் த்ருஷ்டியே — விரூபாக்ஷன். ஆத்ம ஞானமே — ஸ்ரீ வாசவாம்பிகை.

அஞ்ஞான பூமியே — வேங்கி நாடு. மஹாமோஹமே — ராஜமஹேந்த்ர நகரக் கோட்டை. அஹங்காரமே — விஷ்ணுவர்த்தனன். காமம் க்ரோதம் லோபம் மோஹம் மதம் மற்சரம் டம்பம் ஈர்ஷை அசூயை முதலிய துர்க்குணங்களே — அவ்விஷ்ணுவர்த்தனனின் மந்த்ரி ப்ரதானிகள், மனஸி மக்கள், சேனை சமூகங்கள் முதலியன. மஹாமோஹ ப்ரபாவத்தையும், அஹங்காரத்தின் அதிகார பலத்தையும் ஸ்தாபிப்பதற்காக, ப்ரதி விவஹாரங்களிலும் தலையிட்டு, வெற்றி பெறுவதே — திக்விஜயம்.

ஆத்ம ஞானத்தை நியாயமான வழியில் அடையாமல், அஹங்காரத்தினல் ஒழுங்கற்ற முறையில் அடைய எண்ணி முயன்று துன்புறுவதே — விஷ்ணுவர்த்தனன் ஸ்ரீ வாசவாம்பிகையைக் கண்டு மோஹித்தல். துன்பம் வருவதையும் பாராட்டாமல் தவருன வழியிலேயே பிடிவாதமாய்ச் செல்ல முயல்வதே — ஸ்ரீ வாசவாம்பிகையை மணப்பதற்காக விஷ்ணுவர்த்தனன் விடாது செய்யும் முயற்சி.

நல்ல தீய குணங்களின் சமூகம் வைசிய லோகம். 'வைசிய' என்ற பதம் 'மனிதன்' என்னும் பொருளைத் தரும். 'விச' என்றல் பிரவேசித்தல் என்று பொருள். அதாவது சரீரத்தில் பிரவேசித்த ஆத்மா என்பதைக் குறிக்கவே 'வைசிய' என்ற பதத்தை உபயோகப் படுத்தியுள்ளதாயும் கொள்ளலாம். பிரவேசித்த அபிமானத்தையே மேற்கோளாகக் கொண்டு நடத்தலே ஜீவனின் தொழில்.

அவ்வபிமானத்தை விட்டு, ஆத்மாவினிடம் லக்ஷியம் வைத்து உட்செல்லும் நோக்கமே ஞானம். அம்பிகையின் அருட்பிரகாசமே ஞானக்னி. 102 கோத்ரத்தவர் ஆத்மாநுபவத்தை வேண்டினேர். ஆத்ம ஞானத்தை விரும்பாதோர் எஞ்சியபலர். இவ்விருவகைக் குணங்கள் நிறைந்த வைசிய (மனித) சமூகத்தினர் யாவரும் சேர்ந்து ஆலோசிக்கின்றர். ஆத்ம ஞானத்தை விரும்பிய சிலர் ஒன்றுபடுகின்றனர். எனையோர் வேறுபடுகின்றனர்.

ஆத்ம ஞானத்தை விரும்பியவர்கள் ஒன்றுபட்டு, அவ்வாத்ம ஞானத்தை நல்லக்கூடிய ஞான(சொரூபி)சக்தியாகிய பரமேஸ்வரியின் அருள் நலத்தைப் பெறவேண்டுமென ஒரே நோக்கத்தில் அம்பிகையை வேண்ட, தயா சமுத்திரமாகிய அம்பிகை பெருங் கருணைகூர்ந்து, இவர்கள் உள்நோக்கத்திற் பற்றுடையவர்களென்று பெரிதும் மகிழ்ந்து, பக்குவ ஆன்மாக்களாகிய பெரியோர்கட்கு மெய்ஞ்ஞான அமுதத்தையூட்டி, தன்னருள்வெளியாகிய ஞானக்னியில் தோயச் செய்து, தன் அருட்பதவியாகிய ஜீவன்முக்தி இன்பத்தை சதா சர்வ காலமும் அனுபவித்துக் கொண்டிருக்குமாறு அருள்பாலித்து, அவர் சந்ததியார்க்கும் இருவினையொப்பு மலபரிபாகம் வாய்த்தற்கேற்ற வாறு உத்தம உபதேசங்களைச் செய்து, தர்ம நீதிகளைப் போதித்து, அந்தர்த் திருஷ்டியினல் உண்டாகும் அதியற்புதமான சாந்த நிலைக்கு

அருட்சக்தியாகிய திருமுடியைப் பூஜித்து, ஞான சிங்காதன பீடத் தமர்ந்து திருவருட் செங்கோலாட்சி செலுத்தும் வண்ணம் அமைத்து, எங்கும் நிறைந்து மங்களத்தை உண்டாக்கிக் கொண்டிருந்தனர். எங்கும் அருளாட்சி நிலவியது; என்று கொள்ளலாம்.

ஞானவாரிதி எங்கும் பரந்து ப்ரவகித்து நிறைந்து இன்பமய மாய்ப் பொலிகிறது. மஹரிஷிகளின் சந்ததியாரான நூற்றிரண்டு கோத்ரத்தவர்களும், சகல சுகுணங்களும் பொருந்தி, (இன்றும்) அடக் கம், ஒழுக்கம், சாந்தம், அமைதி இவைகளே முற்பட நடக்கும் நட வடிக்கைகளேயே கைக்கொண்டுள்ளனர். இத்தகைய பல அற்புத விஷ யங்கள் இந்நூலில் பொதிந்துகிடக்கின்றன. ஆதலால் இந்நூலை யாவரும் அன்புடன் கைக்கொண்டு ஆர்வமுடன் பயின்று, அவ்வாறு நடந்து, இறைவியின் திருவடிகளுக்குப் பக்திசெய்து, யோக ஞானத் துறைகளில் ஈடுபட்டு, பிறவிப்பயனுகிய பேரின்ப சுகத்தைப் பெற் றுய்ய வேண்டுமென ப்ரார்த்திக்கின்றேன்.

(Sd.) கி. வேங்கடகோபால செட்டி.

இந்த உபோற்காதம் கோவை உபயபாஷாப்ரவீண பண்டிதராய ஸ்ரீமான் கிரந்தி வேங்கட கோபால ஸ்ரேஷ்டியார் அவர்களால் வரையப்பெற்றது.

நான்முகம்.

அருமறையி னுருவாகி யாகமத்தின் பொருளாகி யனைத்து மாகித்
திருமகளுங் கலைமகளு மலைமகளு நிலமகளுந் தேவ லோக
மருவுபல சுரவனிதை யருஞ்சசியு மெனப்பலவாம் வடிவ மாகி
அருள்பொழியும் வாசவிகல் யாணிபதம் பேணிநித மகத்துட்
கொள்வாம்.

பூவுலகில் வாழும் ஆன்மகோடிகளாகிய நம்மனோர் இம்மை மறுமை இன்பங்களை அடைவதற்காக, எங்கும் இடையற நிறைந்த இன்பப் பேரொளி வடிவினனாகிய இறைவன் திருவருளால் ஏற் படுத்தப்பட்ட மார்க்கங்களும் முறைகளும் பலவுள. 'ப்ரம்ம க்ஷத் ரிய வைஸ்ய சூத்ர' என்னும் வர்ணங்களும், 'ப்ரம்மச்சாரி க்ருஹஸ் தன் வானப்ரஸ்தன் சந்நியாசி' என்னும் ஆச்சிரமங்களும், 'கர்மம் (சரியை) பக்தி (கிரியை) யோகம் ஞானம்' என்னும் துறைகளும் அவற்றைச் சார்ந்தனவேயாம்.

இவற்றில் 'வர்ணம்' என்பது நிறம் எனப் பொருள்படு கிறது. அதாவது, அவரவர்கள் முகத்தில் தோன்றும் ஓர்வித 'தேஜஸ்' (ஒளி) என்று குறிப்பிடலாம். அது சூக்ஷமமாய்க் காணக் கூடியது. அத்தகைய தேஜஸ் நான்கு விதங்களானவை என்று ஆதியினின்றுங் கூறப்பட்டுள்ளது.

அஃதாவது, நிறைந்த கல்வி, வ்யவகார நுட்பமறியும் நிறைந்த அறிவு, சூக்ஷம ஆராய்ச்சியில் தேர்ச்சி, யோக ஞானங்களில் உள் ஆராயும் உணர்ச்சி இவை மிகுந்து முதிர்ந்துள்ள வொளியே 'ப்ராம்மண தேஜஸ்' என்றும்,

கீர்த்தியை நிலைப்பித்தல், கடமையினின்றுந் தவறுங்கால் தவறுநர்களைத் திருத்தக் கொள்ளும் ஊக்கம், நியாயாந்யாய பரி சீலனை செய்து நல்லொழுக்கத்தை ஸ்தாபிக்கும் ஆக்கம், பெருந்தன் மையை வருவிக்கவும் பேருதவியைப் புரியவும் கொள்ளும் மூன்றைக் கம், முயற்சி, துணிவு, நியாயமான போரில் ஜயிக்குந் திறன் இவை மிகுந்த வொளி 'க்ஷத்திரிய தேஜஸ்' என்றும்,

உலக வ்யவகாரத்திலும் வாதாநுவாதங்களிலும் நயந்து போதல், தொழில் செய்வதில் விடா முய்ற்சியும் தூர நோக்கமுங் கொள்ளுதல், தவறுதல்களேற்படும் போதும் குற்றங்குறை கூறும் போதும் வாதாநுவாதங்களில் கூர்ந்து கவனித்து அறிந்து சமாதான வழிகளில் சமப்படுத்தும் பொறுமை, வ்யாபார வ்யவகாரங்களில் சிக்கல்களைத் தந்திரத்தில் விமரிசை செய்தல், பெருந் தொழில்களையும் பெருவாரியான வ்யாபாரங்களையும் மாபெரும் காரியங்களையும் செய்வதில் விடா முயற்சியும், செய்து முடிக்கும் வன்மையும், தந்திரமும் உற்சாகமும் உடைத்தாயிருத்தல் ஆகிய இவற்றால் உண்டாகும் ஒளி 'வைஸ்ய தேஜஸ்' என்றும்,

தொழிலிலும் கல்வியிலும் மாபெருங் காரியங்களிலும் ஈடுபடுகிறவர்களுக்குப் பேருதவி செய்யும் ஆற்றலும் பொறுமையும் செய்கைத் திறனும் உடைமையே அறியாமையுடன் கலந்திருப்பதனால் உண்டாகும் ஒளி 'சூத்திர தேஜஸ்' என்றும் எண்ணப்பட்டு வந்தது.

" குணத்துக்கும் செய்கைக்கும் தக்கபடி நான், நான்கு வர்ணங்களைச் சமைத்தேன். செய்கை யற்றவனும் அழிவற்றவனுமாகிய யானே அவற்றைச் செய்தேனென்றுணர் " என்பதும்,

" எதனிலே ஒருவன் பயிலப்பயில உவகை மிகுதியுறப் பெறுவானே, எதனில் துக்க நாச மெய்துவானே, எது தொடக்கத்தில் விஷத்தை யொத்ததாய் விளைவில் அமிர்தமொப்ப மாறுவதோ, அந்த இன்பமே சாத்விக மாகும்; அஃது தன் மதியின் விளக்கத்திலே பிறப்பது. விஷயங்களிலே புலன்களைப் பொருத்துவதனால் தொடக்கத்தில் அமுதைப்போலிருந்து விளைவில் நஞ்சு போன்றதாய் முடியுமின்பம் ராஜஸ மெனப்படும். தொடக்கத்திலும் இறுதியிலும் ஒருங்கே ஆத்மாவுக்கு மயக்கம் விளைவிப்பதாய், உறக்கத்தினின்றும் சோம்பரினின்றும் தவறுதலினின்றும் பிறக்கும் இன்பம் தாமஸம் என்று கருதப்படும். இயற்கையில் தோன்றும் இம்மூன்று குணங்களினின்றும் விடுபட்ட உயிர் மண்ணுலகத்திலுமில்லை; வானுலகத்தில் தேவருள்ளேயுமில்லை. ப்ராமண்ணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர்

இவர்களுடைய தொழில்கள் அவரவரின் இயல்பில் விளையும் குணங்களின்படி வகுப்புற்றனவாம். அகக் கரணத்தை யடக்குதல், புறக் கரணத்தை யடக்குதல், தவம், தூய்மை, பொறுமை, நேர்மை, ஞானம், கல்வி, ஆஸ்திகம் இவை இயல்பிலே தோன்றும் ப்ராம்மண கர்மங்களாம். சூரத்தன்மை, ஒளி, உறுதி, திறமை, போரில் புறங்காட்டாமை, ஈகை, இறைமை இவை இயற்கையிலே தோன்றும் க்ஷத்திரிய கர்மங்களாம். உழவு, பசுக் காத்தல், வாணிபம் இவை இயற்கையிலே பிறக்கும் வைசிய கர்மங்களாம். தொண்டு புரிதல் சூத்திரனுக்கு அவனியற்கையால் ஏற்பட்ட தொழில். தனக்கு உரிய கர்மத்திலே மகிழ்ச்சியுறும் மனிதன் ஈடேற்றம் பெறுகிறான். தனக்குரிய தொழிலில் இன்புறுவோன் சித்தியடைகிறான். உயிர்களுக் கெல்லாம் பிறப்பிடமாய் இவ்வையக மனைத்திலும் நிறைந்திருக்கும் கடவுளைத் தனக்குரிய கர்மத்தால் பூஜை செய்யும் மனிதன் ஈடேறுகிறான்" என்பதும், ஸ்ரீ கண்ணபிரானருளிய கீதா வாக்யங்களாகும்.

"வாள் வலிமையுடைய ஜாதி எதுவோ, அது க்ஷத்திரிய ஜாதியாகிறது. கல்வி யறிவுடையது எதுவோ, அது ப்ராம்மண ஜாதியாகிறது. செல்வத்தை யுடையது எதுவோ, அது வைசிய ஜாதியாகிறது.

சத்துவம், இரஜஸ், தமஸ் என்னும் மூக்-குண்ங்களில் யாதேனும் ஒன்று கூடியோ குறைந்தோ ஒவ்வொரு மனிதனிடத்தும் இருப்பது போல, ப்ராம்மணனுக்கும் க்ஷத்ரியனுக்கும் வைசியனுக்கும் சூத்திரனுக்கும் தனித்தனியே உரிய குணங்கள் கூடியோ குறைந்தோ ஒவ்வொரு மனிதனிடத்தும் அடங்கியுள்ளன. ஆனால், சிற்சில வேளைகளில் இக்குணங்களில் யாதேனும் ஒன்று அவனிடத்து வெவ்வேறான அளவுக்குத் தலை யெடுத்து நின்று, அவ்வண்ணமே வெளித்தோன்றிவரும். உதாரணமாக, பல தொழில்களையும் புரியும் ஒரு மனிதனை எடுத்துக் கொள்ளுவோம். சம்பளத்திற்காக இன்னொருவனுக்குக் கீழ்ச் சேவகம் பண்ணிக்கொண்டிருக்கும்போது அவன் சூத்திரத் தன்மையை அடைகிறான். தனக்கு லாபம் பெறும் கருத்தோடு சுறுசுறுப்பாக அவன் ஒரு வியாபாரத்தை நடத்தி வரும் பொழுது அவன் வைசியனாகிறான். தீமையை யகற்றி நன்மையை

நிலைநாட்டும் பொருட்டுப் போர்புரியுங்கால் க்ஷத்திரியனது குணங்கள் அவனிடத்து வெளிப்படுகின்றன. அவன் கடவுளைப்பற்றித் தியானம் பண்ணும்போதும், கடவுளைப்பற்றிப் பேசுவதில் பொழுது போக்கும் போதும் அவன் பிராம்மணனாகிறான். ஒருவனுக்கு ஒரு ஜாதியிலிருந்து இன்னொரு ஜாதிக்கு முற்றிலும் மாற முடியும். அதுவும் இயல் பன்றே ? இல்லையேல் விசுவாமித்திரர் பிராம்மணரானதும், பரசு ராமர் க்ஷத்திரியரானதும் எப்படி ?

நாங்கள் வைதிக நெறியினின்று வழுவாத இந்தியர்களே. ஆனால், 'தொட்டால் தீட்டு' என்னும் கொள்கை யுடையாரோடு சேர்ந்தவராக எம்மைக் கருதுவதற்கு முற்றிலும் மறுத்துவிடுவோம். அது ஹிந்துமத மல்ல. அது எமது நூற்களில் ஒன்றிலும் இல்லை. அது வைதிகநெறிக்கு மாறான ஒரு மூட நம்பிக்கையாகும்" என்பது ஸ்ரீமத் விவேகானந்தரின் திருவாக்காகும்.

"விராட் சொரூபிக்கு ப்ராம்மணன் தலை; க்ஷத்ரியன் கை; வைசியன் தொடை; சூத்திரன் பாதம்." (இந்த நான்கு வர்ணங் களும் விராட் புருஷனுடைய முழு வடிவமாகும்) என்பது இருக்கு வேதம் எடுத் துரைக்கும் இன்மொழி யாகும்.

"வர்ணம் என்றால் நிறந்தான்; ஆனால், இவ்விடத்தில் அது மனிதனுடைய ஸ்தூல சரீரத்தின் நிறத்தைக் குறிப்பதில்லை; முக் குணங்கள் கலந்த மனத்தையே குறிக்கின்றது. சத்துவம் நிறைந்த மனத்தினின்றும் பிரகாசமொன்று வெளிப்படுவதைச் சூக்ஷ்ம திருஷ்டி யுள்ளவர்கள் காணலாம். ஆகவே, நான்கு வர்ணங்கள் குறிப்பிடுகிற நிறங்கள் உடலைப் பொறுத்தவை யல்ல; சித்தத்தைப் பொறுத்த வையேயாகும். ஆகவே ஸ்தூலப் பிறவியை யொட்டியே வர்ணத்தை நிர்ணயிப்பது தகாது.

வேதங்களில் குறிப்பிட்டுள்ள நான்கு வர்ணப் பிரிவினை புவனம் முழுவதற்கும் பொதுவான தொன்றாகும். சொல்லாலும் சிந்தனையாலும் செய்கையாலும் சத்துவ குணத்தை வெளித் தோற்று விப்பவர்கள் யாவரும் ப்ராம்மணர்களே யாவர். சத்துவ ரஜோகுண முடையவர்கள் க்ஷத்திரியர்கள்; ரஜோ தமோகுண முடையவர்கள் வைசியர்கள்; தமோகுண முடையவர்கள் சூத்திரர்கள். உலகில்

எந்தப் பாகத்தில் இருக்கும் மக்களையும் இவ்வாறு நான்கு வர்ணங்களாகப் பிரிக்கலாம். சத்வகுண முள்ளவன் இந்தியாவிலோ ஐரோப்பாவிலோ அமெரிக்காவிலோ வேறெந்த நாட்டிலோ பிறந்தாலும் அவன் ப்ராம்மணனே யாவன். இதை நமது முன்னோர்கள் நன்முக அறிந்திருந்தனர். ஆதலால்தான் பண்டை நாளில் சமூகப் பாகுபாடு இப்பொழுதிருப்பதைப்போல இறுகிப் போனதாக இல்லை. ஆரிய சமூகத்தைச் சேராத அந்நிய இனத்தாராகிய ஹூணர்கள் ஸிதியர்கள் ஆகியோர் இந்தியாவில் வந்து குடியேறியதும் அவர்கள் ஹிந்து சமூகத்தினில் கலந்துகொண்டு க்ஷத்திரியர்கள் அல்லது வைசியர்களுடைய ஸ்தானத்தைப் பெற்றனர். (ஆனால் பிற்காலத்திலோ அந்நியர்களை யெல்லாம் மிலேச்சர் என்று கூறிப் பிறருடன் தொடர்பு கொள்ளுவதை நிறுத்தினர். அன்று முதல் இந்தியாவின் வீழ்ச்சியும் தொடங்கிற்று.) வர்ணம் என்பதை ஜாதிப் பிரிவினையாகக் குறுக்கியதும் ஹிந்து சமூகம் வளர்ச்சி குன்றிப்போய் முற்போக் கற்றதாயிற்று. குணம், கர்மம் இவற்றை அனுசரவு செய்து பிறப்பு, குலம் ஆகியவற்றையே முக்கியமெனக் கருதவும், கடமைகளைச் செய்வதற்குப் பதிலாக உரிமைகளைப் பிடுங்கலாயினர் எல்லா ஜாதியினரும். ஆனால் ஸ்ரீ கிருஷ்ணருடைய எண்ணம் இதுவல்ல. (இக் கருத்தைக் கொண்டு அவர் கீதையில் வர்ணத்தைக் குறிக்கவில்லை.) ப்ராம்மணனது கர்மத்தைச் செய்யும் வரையிலேயே ப்ராம்மணன் ப்ராம்மணனுவான். அவ்வாறேதான் மற்ற வர்ணங்களின் விஷயத்திலுமாம்.

இன்னுமொரு முக்யமான விஷயத்தையும் கவனிக்கவேண்டும். நமது சாஸ்திரங்கள் கூறுகின்றபடி, எல்லா ஜீவராசிகளிலும் நான்கு வர்ணங்கள் உண்டு. தேவர்களில் நான்கு வர்ணத்தார் உண்டு. உதாரணமாக, பிருகஸ்பதியும் சுக்ராசாரியரும் பிராம்மண தேவர்கள்; இந்திரனும் வருணனும் க்ஷத்திரிய தேவர்கள்; குபேரன் வைசிய தேவன்; அசுவினிகள் இருவரும் சூத்ர தேவர்கள் ஆவர். பசு ப்ராம்மண மிருகம் ஆகும். சிங்கமும் புலியும் க்ஷத்திரிய மிருகங்கள். ஓட்டகமும் குதிரையும் வைசியப் பிராணிகள். ஆடு சூத்ர மிருகம். தாவர வர்க்கத்திலும் இப் பாகுபாடு உண்டு. ஆகவே தாவரங்கள் முதல் தேவர்கள்வரை எல்லா ஜீவராசிகளிடமும் நான்கு வர்ணங்கள் உண்டு. எனவே வெறும் பிறவியை அடிப்படையாகக் கொண்டு

குணத்தையோ கர்மத்தையோ கருதாமல் பாகுபாடு செய்யப்பட்டு வரும் ஜாதிப் பிரிவினை எற்பாடு கீதையில் கூறிய நான்கு வர்ணப் பிரிவினையாகாது.

வர்ணங்கள் பகவானால் சிருஷ்டிக்கப்பட்டவை என்பதால் அவை மனித இயல்பை யொட்டியதோர் இயற்கையான ஏற்பாடே யன்றிச் செயற்கையான வொரு திட்டமல்ல என்பது தெளிவாகின் றது" என்பது ஸ்ரீமத் சர்வானந்த சுவாமிகளது திருவாக்காகும்.

எனவே, குணத்தாலும் அதையோட்டி கர்மத்தாலுமே ஆதியில் வர்ணங்களைக் குறிக்கலாயினர் என்பது வெள்ளிடைமலை.

ஆனால், பிறகொரு காலத்தில் மக்கள் இக்கருத்து முழுமையும் விடுத்து, பிறவியினாலேற்படுவதுதான் வர்ணம் என்று சொல்லிக் கொள்ளலாயினர். அதனால் இன்ன இன்ன ஜாதியினர் இன்ன இன்ன தொழில்களை ஆசரித்தல் வேண்டும் என்று விதித்துக்கொள்ள லாயினர். ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல், என்னும் அறு தொழில்களும் அந்தணர்க்கு ஆம் என்றும், ஓதல், வேட்டல், ஈதல், உலகோம்பல், படைக்கலம் பயிலல், (யுத்த தர்ம நீதியாக) போர் செய் நீட்டல் என்னும் அறு தொழில்களும் அரசர் கட்கு ஆம் என்றும், ஓதல், வேட்டல், வேளாண்மை, வாணிகம், பசுக்காத்தல், உழவு என்னும் அறுதொழில்களும் வைசியர்க்கு ஆம் என்றும், பசுக்காத்தல், பொருளிட்டல், பயிரிடல், ஓதல், ஈதல் (எவ் வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகுதலால் அந்தண்மை வாய்க்கப் பெற்ற அறவோர்களாகிய) அந்தணர் முதலியோர்க்கு அநுகூல மாகிய தொழில் செய்தல் என்னும் அறு தொழில்களும் சூத்திரர்க்கு ஆம் என்றும் அப்போது வரையறுத்துக் கொண்டனர். அவ்வக் குலத்தவர்களும் தத்தமது குலாசார முறைகளை மேற்சொன்னபடியே அனுஷ்டிக்கலாயினர்.

ஆனால் பிற்காலத்தில் கலியின் கொடுமையால் (கால வித்யா சத்தால்) மனித சமூகத்தினரில் அநேகர் உலக மயலில் ஆழ்ந்து, உணவு, உடை, செல்வம், தாக்கம், காமம் இவைகளே உத்தம புரு ஷார்த்தங்கள் என்று எண்ணி, அவற்றின் வசமாகி, வருணச்சிரம

தர்மங்களையும், தத்தமக்குரிய முக்ய கடமைகளையும், இன்னோரன்ன பிறவற்றையும் மறந்து, உயிர்க்குறுதி பயக்கும் உண்மை இன்பத் தினை நாடாது விடுத்து, உடற்கு நலந்தருவன போல (வெளிக்குப் பகட்டாகக்) காணப்படும் பொய்மை இன்பத்திற் காசைப்பட்டு, அதற்காகத் தீநெறிகளிற் புகுந்திட லாயினர்.

ஆயினும் ஒவ்வொரு ஜாதியிலும் ஒரு சில உத்தம புருஷர்கள் உண்மையாகவே தத்தமது வருணச்சிரம ஆசாரங்களைச் சீரிய முறையிற் காப்பாற்றி யொழுகிவந்தனர். ஒரு சிலர் தெரிந்தும் தெரியாமலும் நடுத்தரமாய் இருந்துவந்தனர். அவர்கள் தமக்குத் தெரிந்த சிற்சில விஷயங்களைக் கொண்டு, 'எம்மைவிட யாருந் தெரிந்தவர்களில்லை' என மமதையுற்று, ஒன்றும் தெரியாதவர்களிடம் சென்று ஏமாற்றியும், விரட்டியும், 'அது தவறு; இது தவறு; இப்படித்தான் செய்ய வேண்டும்; அப்படிச் செய்வது கூடாது' என்று தமது வாய்க்குவந்தபடி பலவாறுங் உளறிப் பலரைப் பயமுறுத்தியும், ஒழுக்கங்களை மாற்றியும், வீண் வாதங்கள் புரிந்தும், வஞ்சகமாகப் பொருள் திரட்டியும், காரணமற்ற பலவித விவகாரங்களை இயற்றலாயினர். வேத விரோதமான, நியாயமில்லாத விருதா விஷயங்களில் தலையிடலாயினர். அது காரணமாக நாட்டில் ஜாதிச் சண்டைகளும், சமயச்சச்சரவுகளும், அநாவசிய மனஸ்தாபங்களும், விரோதங்களும், ஒற்றுமையின்மையும் நேர்ந்து, அதனால் பணச் செலவும், தேக சிரமமும், மானக் கேடும், இவைபோன்ற இன்னும் அநேக துன்பங்களும் ஏற்படலாயின.

சில ஆண்டுகளுக்கு முன் ஒரு சில பிராமணர்களும், சில பிராமண மடாதிபதிகளும், "வைசியர்க்கு வேதாதிகார மில்லை" (அதாவது வைசியர்கள் வேத மோதுதலும், வைதிக க்ரியைகள் நடாத்தலும் கூடாது) என்று கூறநேர்ந்தனர். அவர்கள் அவ்வாறு கூறியதன்னியில், பத்திரிகைகள் மூலமாகவும், க்ரந்த ரூபமாகவும் பிரசாரம் செய்யலாயினர். தவிரவும், தக்க காரணமேயின்றி பலவிதங்களில் இடையூறுகளும் செய்யத் தொடங்கிவிட்டனர்.

கி. பி. 1764 முதல் 1834 வரை இவ்வுலகில் ஜீவியம் நடாத்திய உத்தம புருஷரும், ஆந்த்ரம், ஸம்ஸ்க்ருதம், ஆங்கிலம் ஆதிய பாஷைகளில் அளவற்ற புலமை பெற்று விளங்கிய மகா வித்வான்களும்,

சப்தார்த்த கல்பதரு, ஆந்த்ர தீபிகா, ஆந்த்ர லக்ஷணம், பர்யாய ரத்னமாலா, சகட ரேபாலக்ஷணம், வியாகரணம், விசேஷ சப்த சிந்தாமணி, வைஸ்யாசார சுதாமணி முதலிய க்ரந்தங்களை யியற்றிய ப்ரபன்னரும், க்ருஷ்ணா ஜில்லாவில் பந்தர் நகரத்தில் தமது வாழ்க்கையை நடாத்திய ஸத்குண சீலரும், வைஸ்ய மரபிற்கு எழுச்சியும் உற்சாகமும் மளித்து உண்மையை யுணர்த்தியருளிய வைசிய குல விளக்கை யனையவருமான, பண்டிதராய **மாமிடி - வேங்கடார்யா** அவர்களும்,

25—8—1845 முதல் 13—6—1901 வரையில் இப் பூவுலகிற் பொலிந்து விளங்கியவரும், ஆந்த்ரம் ஸம்ஸ்க்ருதம் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மகா பாண்டித்யம் பெற்றுத் திகழ்ந்தவரும், வேதார்த்த ப்ரகாசிகா என்ற ஸம்ஸ்க்ருத பத்திரிகை நடத்தியவரும், பகவத் கீதை, உபநிஷத்துகள், ப்ரம்ம சூத்ரம், வேத மந்த்ரங்கள் முதலியவற்றை மொழி பெயர்த்தவரும், விக்டோரியா மஹா ராணியார், மாக்ஸ் முல்லர் க்ரிப்த்ஸ் (என்ற ஆங்கில மஹாஞானி) முதலியோரால் புகழ்ந்து போற்றப்பட்டு, பொற் பதக்கங்கள் பெற்றவரும், வைஸ்ய உலகிற்கு அளவிடற்கரிய உதவியைப் புரிந்தவரும், ஏராளமான பொருட் செலவு செய்து மகா ஸ்ரமப்பட்டு வெகுவாக உழைத்து எண்ணிறந்த நூல்களை ஸம்ஸ்க்ருதம் ஆந்த்ரம் ஆகிய மொழிகளிற் பார்த்துப் பரிசோதித்து, இடையில், எதிர்த்து வாதித்த அந்தண வகுப்பைச் சார்ந்த பலரைத் தர்க்கவாத மூலமாயும், கோர்ட்டு மூலமாயும், நூல்களில் உள்ள கோட்பாடுகளையும் விதி முறைகளையும் விவரமாக எடுத்துக் காட்டி விளக்கியும், நியாயாந்யாயங்களை விபரமாகக் கூறித் தர்க்கித்தும் வெற்றி கொண்டவரும், தாமே (சோம யாகம் என்ற) ஒரு பெரிய யாகத்தைச் சிறந்த முறையில் நடத்திக் காண்பித்தவரும், 'தீக்ஷித்' என்று யாவரும் இன்றும் புகழ்ந்து பாராட்டக்கூடிய பெருங் கீர்த்தி வாய்ந்தவரும், வைசிய குல திலகமுமான (பந்தர் நகரவாசி) **ஸ்ரீ ஆத்மூரி லக்ஷ்மீநரசிம்ம சோமயாஜுலு** B.A.,B.L., F. R. A. S., அவர்களும்,

வைசியர்கள், ரிஷி கோத்ரங்களை யுடையவர்களே யென்றும், வைசியர்கட்கும் வேதாதிகாரம் உண்டென்றும், 'இல்லை' என்று ஒருசிலர் இடையில் கூறிவந்த வதந்தி முற்றிலும் பொய்மை யென்றும்

தீர்மானித்து, ஆங்காங்கும் ப்ரசார மூலமாகவும், நூல்கள் மூலமாகவும் பகிரங்கப்படுத்தினர்.

இவற்றை, ஸ்ரீ மாமிடி வேங்கடார்யா அவர்கள் இயற்றிய 'வைஸ்யாசார சுதாமணி' என்ற நூலிலும், ஸ்ரீ ஸோமயாஜுலு அவர்கள் இயற்றிய "வைஸ்ய தர்ம ப்ரகாசிகா" என்ற நூலிலும் தக்க ஆதாரங்களுடன், விவரமாகத் தெளிவுறக் காணலாம். வைசிய உலகம், பல துறைகளிலும், சிறிது காலத்திற்கு முன்பு இருந்த நிலைமையைவிட, இப்போது சற்று முன்னணியில் வந்துகொண்டுள தென்றே ஒருவாறு நிச்சயிக்கலாம். அனைவர்க்கும் ஒருவித புத்துணர்ச்சி தோன்றியுள்ளது. இளைஞர்களுக்கு இணையற்ற உற்சாகம் பிறந்துள்ளது. இவை யெல்லாம் இனிவரும் நன்மையை எடுத்துக் காட்டும் அறிகுறிகளே யாகும். எனினும், வடநாடு (Andhra Districts) தென்னாட்டைவிட அதிக முன்னணியில் வந்துளது. வெகு நாட்களாகப் பாடுபட்டு வருகின்றமையால் விளைந்த பயன் அதுவாகும். தென்னாடும் ஒருவாறு முன்னேக்கத்தை எதிர்பார்த்துக் கொண்டுளது. முன்னணியில் வரத் தொடங்கிவிட்டது. ஒரு சில ஜில்லாக்கள் துணிந்து சீர்திருத்த முறையில் ஈடுபட்டுவிட்டன. ஏனைய ஜில்லாக்களும் கூடிய சீக்கிரம் பின்பற்றும். இறைவன் அருள் புரிவானாக!

நம் மரபினரின் பண்டைய நிலைக்கும், தற்போதைய நிலைக்கும் எத்தகைய வேறுபாடுகள் காணப்பட்ட போதிலும், ஒரு விஷயம் மட்டும் மாறுமல் இருந்துவந்துளது. அதாவது, நமது அன்னையாகிய ஸ்ரீ வாசவாம்பிகையின் வழிபாட்டினை ஒருவாறு காப்பாற்றிக் கொண்டே வந்துள்ளார்கள். இவ் வம்மையின் சரிதம் உலகின் கண்ணே நடைபெற்றது உண்மையே யாயினும், அச் சரித்திரத்தை வரைய நேர்ந்த ப்ராம்மணர்களும், ஏனையர்களும், தத்தமது கருத்துக் கிணங்க சிற்சில விஷயங்களைக் கூட்டியும், குறைத்தும், வேறுபடுத்தியும், மயங்கச் செய்தும், பல திறப்பட்ட துறைகளில் பிழைபட்ட கருத்துக்களுடனும் வரைந்துவிட்டனர். அதனால், ஒருவர் எழுதிய ப்ரதிக்கும் மற்றொருவர் எழுதிய ப்ரதிக்கும் சிற்சில இடங்களில் வித்யாசங்கள் ஏற்படுகின்றன.

ஆதியில் வைசியர்கள் கைலாயத்தில் மனைவி மக்களுடன் குடும்பம் நடாத்திக்கொண் டிருந்தார்களென்றும், அப்போது ஆகாய மார்க்கமாகச் சென்றுகொண் டிருந்த சித்ரக்கண்டனெனும் கந்தர்வ னொருவன் ஆங்கிருந்த சோமதத்தனெனும் வைசியனுடையபுத்ரியைக் கண்டு, காமுற்றுப் பெண்கேட்டபோது, ஒருவருக் கொருவர் சாபங் கொடுத்துக்கொண்டனர் என்றும், அச் சாபங்களின்படி அவர்கள் புவியிற் ரோன்ற, அதன் பின்னர் இவ் வாசவி சரிதம் நடைபெற்ற தென்றும், ஒருவகைக் காரணத்தைப் பிணைத்துக் கூறுகின்றனர். அதுவுமன்றி, அங்கே கைலையிலிருந்த வைசியர்கள், தாகூஷாயிணி பிறப்பு, திருமணம், ஹிமவான்தவம், பார்வதி அவதாரம், சிவபெரு மான் யோகத் தமர்ந்து ஸநகாதியர்க்கு ஸமாதி நிலை யுணர்த்தல், பார்வதி பரிணயம், முருகன் திருவவதாரம், சூரபதும சம்மாரம், முதலிய அனைத்தையும் நேரிலிருந்து பார்த்து ஆனந்தித்தன ரென்றும் கூறப்படுகின்றது. அவர்களே கைலையினின்றும் பெனுகொண்டா விற்கு வந்து சேர்ந்ததாகவும் கூறப்படுகின்றது. யுக யுகாந்தரங்களில் நடந்த அந்தச் சம்பவங்கள் அனைத்தையும் இவர்கள் நேரில் பார்த்து ஆனந்தித்தவண்ணமே கைலையில் குடும்பம் நடத்திவந்தார்களென்பது கலப்பற்ற முழுப் பொய் யென்பதில் கடுகளவேனும் ஐயப்பாடிலது.

எனெனில், ஸ்ரீ வாசவியி னவதாரம் இக் கலியுகத்தில் (கலி 2600 ஆண்டுகளுக்கு மேல்) என்று அந் நூலிலேயே கூறப்படுகின் றது. ஒவ்வொருவரும் எத்தனை கோடி யுகங்கள் உயிர் வாழ்ந்தா ரென்பது புரியவில்லை. இறப்பே யின்றி பிறப்பினை (புத்ர பௌத் ராதிகளை) மட்டும் பெருக்கிக்கொண்டே குடும்பஸ்தர்களாக இவ் வாறு எண்ணற்ற கோடி யுகங்கள் இருந்து இச் சம்பவங்கள் யாவற் றையும் நேரிற் கண்டார்கள் என்பதை எவரும் நம்பவே இயலாது.

என்னெனின், கைலாயம் என்பது இனிப் பிறவா முத்தியை நல்கும் மோக்ஷ உலகம் என்பது யாவரு மறிந்த தொன்று. அங்கு ஜாதி என்பதே கிடையாது. குடும்பம் முதலியன நடாத்துதலும் கிடையாது. மோக்ஷ மடைந்தவர்கள் எக்காலத்தும் மீண்டு பிறத்த லும் இயலாது. (மோக்ஷம் என்பது இரும்புண்ட நீருக்கு நிகர் என்று நூல்கள் கூறுகின்றன.) தவிரவும், கைலாயத்தில் காமாதிகள் உண்டாகக் காரணமே யில்லை. பெண்டு பிள்ளைகளுடன், விஷய இச்சைகளைப் பெருக்கிக்கொண்டு, கோபம் பொய்மை வஞ்சகம்

மதம் வஞ்சினம் முதலான தீக்குணங்களுக்கு மிலக்காகிச் சாதாரண மனித வாழ்வை நடாத்துவோர்க்கு அங்கு இடமேயில்லை. அப்படிப் பட்டவர்கள் உள்ள இடம் கைலாயமாகாது. அதுவுமல்லாமல், கைலாயத்தில் ஆண்டவனும் அவனது திருவருள் பெற்ற உத்தம அடியார்களும் இருப்பார்கள் என்று ஒருவாறு கூறலாமே யன்றி, வேறெதுவுங் கூறவே இயலாது. கைலைக்கு நேரே வாகனத்திலேறிக் கொண்டு செல்லுதல் கூடாதென்பதும், அதைப்பற்றி அநேக நூல் களிற் கூறப்பட்டுள்ளதென்பதும், முன்னொருகால் இலங்கேசனாகிய இராவணன் விமானமீதேறிச் செல்கையில், கைலைக்கருகு சேர்ந்ததும் விமானந் தடைபட்டு நின்றுவிட்டதென்பதும், பின்னர் அவன் கைலை யைத் தூக்க முயன்று துன்புற்றானென்பதும், அப்பர் சுவாமிகள் கைலை காணச்சென்று, மிகவும் வருந்தி முயன்றும் செல்ல முடியாமல் சோர்வுற்ற ரென்பதும், உணரற்பாலதாம். அன்றியும் அந் நாவரசர் சோர்வுற்ற விடத்து இறைவன் தோன்றி இனைப்பாற்றி இன்மொழி கூறி, பொதி சோறளித்து உண்ணச் செய்து, ஆங்கே நூதனமா யப்போதுண்டாக்கிய ஓர் தடாகத்தில் மூழ்குவித்து, திருவையாற்றிற் கரை யேற்றிக் காட்சி தந்தாரென்பது சரித்திரமாகும். அவ் வாகீசர் மூழ்கிய அத் தடமே 'மானஸ ஸரோவரம்' (Manasa Sarovar) என்று இப்போது கூறப்படும் தடாகம் (ஏரி) என்றும், அது சமுத்ர மட்டத்திற்கு மேல் 14000 அடி உயரத்தில் உளதென்றும், அங்கு சென்றுலேயே பனியின் குளிர்ச்சி தாங்க முடியவில்லை என்றும், அதற்குமேல் சென்றால் மனிதன் குளிர் தாங்காமல் கண்டிப்பாய் உயிர் நீத்துவிடுவான் என்றும், அன்றியும், அதற்கு மேல் செல்லவே இயலாது என்றும், ஆகாய விமானங்களின் மூலமாக எப்படியாவது செல்ல முயன்றாலும், எத்தகைய வசதிகளைச் செய்துகொண்டு சென் றாலும், ஆபத்து நேர்ந்து, உயிர்க்கிறுதி யுண்டாகி விடுகிறதென்றும், தற்கால, ஹிமாலய யாத்திரிகர்களாகிய வேதர்ந்திகளும், சந்நியாசிக ளும், மகான்களும், ஐரோப்பிய ஆராய்ச்சிக்காரர்களும் கூறுகின் றார்கள். அக்கைலைமலை 23000 அடி உயரத்தில் இருப்பதாய்த் தற் கால ஆராய்ச்சிக்காரர்கள் உரைக்கின்றனர். அங்கு மனிதர்கள் வாசம் புரிவதென்பதே நடவாதகாரியம். ஒருகால் ஞான சரீரிகளா யிருந்து இறைவன் திருவருளால் வாழ்ந்தார்களென்றால், அவர்களுக் குப் பெண்டு பிள்ளைகளும் குடும்பமும் இருப்பதும், சாபங்கள் முதலி யன உண்டாவதும், பின்னர்ப் பூமியிற் பிறந்து துன்புறுவதும் ஆகிய

இவைகள் உண்மையென்று கூற அணுவளவும் இடமில்லாமற் போகிறது. ஆகையால் அவ் விஷயங்களை நம்புவதற்கின்று.

ஆர்யர்கள் வட நாட்டில், சுத்தஜலக் கடலாகிய ஏரல்கட லுக்கு (Arel Sea) அருகிலிருந்து, பின்பு, கணவாய்களின் வழியாக சிந்து சமவெளிக்கு வந்தவர்களாதலால், வழியில் ஹிமாசலத்திலே கைலை இருப்பதால் (கைலை மலைச் சிகரத்தையுடைய) ஹிமாலய மார்க்கமாக இந்தியாவுக்கு வந்த ஞாபகத்தைக்கொண்டு இவ்வாறு கூறினர்களென்று கொள்வதுதான் நியாயம். சுத்தோதகக் கடலைப் பற்றி இருக்கு வேதத்தில் பல இடங்களில் கூறப்பட்டிருப்பதும், ஆரியர்கள் வடநாட்டிலிருந்து இந்தியாவுக்கு ப்ரவேசித்தார்களென்று இந்துதேச சரித்திரம் எழுதுகிற எல்லா சரித்திரக்காரர்களும் கூறுவதுமே இதற்குச் சான்றுகளாம்.

குசும ஸ்ரேஷ்டியாரின் முற் பிறப்பைப் பற்றிக் கூறுகையில், 'நந்தி தேவர்' என்றும், 'சோமதத்தன்' என்ற பெயருடன் கைலாயத்தில் வசித்த வைசியன் என்றும், 'சமாதி' என்கிற பெயருடன் சக்தியை நோக்கித் தவம் புரிந்த வைசியன் என்றும் பலவாறுகக் கூறப்படுகின்றன.

ஸ்ரீ வாசவ கன்னிகையை, ஸ்ரீ பார்வதியின் அவதாரமெனவும், ஸ்ரீ மகாலக்ஷ்மியின் அவதாரமெனவும், கைலாசத்தில் வசித்துவந்த சோமதத்தனெனும் வைசியனின் குமாரத்தியாகப் பிறந்து சித்ரக் கண்டனெனும் கந்தர்வனெருவனால் மோகிக்கப்பட்ட பெண்மணியின் மறு பிறப்பெனவும் பல விதங்களாகக் கூறியுள்ளனர்.

வாசவியை விஷ்ணுவர்த்தனன் சந்தித்தது, அப் பெண்மணி ஏழாவது உப்பரிகையிலிருக்கும்போதென்றும், தகப்பனரிடம் ஏதோ பேசுவதற்காக ஓடி வருகையில் என்றும், அரசனுக்கு ஹாரத்தியெடுக்கையில் என்றும், சாதாரணமாக அரண்மனையின் முன்புறத்தில் ஓர் சார் தனது தாயாரோடு நின்றுகொண்டு அரசன் பவனிவரும் விநோதங்களைக் காணும்போதென்றும் பல்வேறு விதங்களாகக் கூறியுள்ளனர். அரசன் வாசவியைக் காணும் முறையிலும், பெண் கேட்கும் முறையிலும், அரசனுக்கும் வைசியர்கட்கும் நிகழ்ந்த தர்க்க வகைகளிலும், இன்னும் அநேக இடங்களிலும் ஒருபிரதிக் கொருபிரதி வித்யாசமான அபிப்பிராயங்களைத் தருகின்றன. ஒரு புஸ்தகத்திலேயே முன்னுக்குப் பின் முரண்படுகின்றது.

அன்றியும், வேத விரோதமான, நியாயமற்ற சில கட்டளைகளை அம்பிகை கூறியதாகக் குறித்துள்ளனர். தக்க காரணங்களே யாதொன்று மின்றி அபாண்டமான சாபங்கள் அநேக இடங்களில் கூறப்படுகின்றன. பல விஷயங்கள் ஆராய்ச்சிக்கும் அனுபவத்துக் கும் ஒரு சிறிதும் ஒவ்வாதனவாயுள. ஆராய்ச்சியும் பரிசீலனையும் யாதுமின்றி, பொருளில் கருத்துக்கொண்டு, கேவலம் விற்பனைக் கென்றே எண்ணி லாபத்தை மட்டுங் கருதி, வைசியர்களல்லாத ஏனையரால் எழுதப்பட்டதினுலாகிய விளைவே இவ்வளவுமென்பதை வாசகர்கள் உணர்தல் வேண்டும்.

எவை எப்படியிருப்பினும், கோதாவரி நதிக் கடுத்துள்ள 'டெனு கொண்டா' என்ற பட்டணத்தையும் அதைச் சுற்றிச் சூழ்ந்த பதினெட்டு பட்டணங்களையும் ஸ்ரீ குசும ஸ்ரேஷ்டியார் என்பவர் ஆண்டுவந்தார் என்பதும், அவருக்கு ஸ்ரீ குசுமாம்பிகை என்னும் பத்தினியாரிருந்தன ரென்பதும், புத்ரோற்பத்தி வேண்டி புத்ர காமேஷ்டி யாகம் செய்து அதன்பயனைப் பாயசம் பெற்றுண்டு பன்னிருமாதம் சென்று ஆண் பெண் மகவுகளையடைந்தனரென்பதும், பெண்மணி பிறந்தவுடனே திவ்ய தரிசன மீந்து பல நன்மொழிகள் கூறி பின்பு சாதாரணக் குழந்தை வடிவந்தாங்கி விளங்கினரென்ப தும், அப்பெண்மணி வளர்ந்து கலை பயின்று மணப் பருவமுற்ற காலை, அந்நகருக்கு வர நேர்ந்த விஷ்ணுவர்த்தனனென்னும் மன்ன னனவன் அப்பெண்ணைப் பார்த்து மணம் புரிய விரும்பினனென்ப தும், அதுபற்றி வைசியர்கள் யாவருங் கூடி ஆலோசித்தனர் என்ப தும், பலவித தர்க்கங்களின் பேரிலும், யோசனைகளின் பேரிலும் ஒருவித முடிவுக்கு வந்து, யாவருந் தீக்குதித்தனர் என்பதும், இறுதி யில் சகல உண்மைகளும் தர்ம நியாயங்களும் வெள்ளிடை மலைபோல விளங்கலாயின வென்பதும் எல்லா ப்ரதிகளிலும் ஒப்புக்கொள்ளப் படுவனவாம். அவைகளை அடிப்படையாகக் கொண்டு, காலத்திற் கேற்றவாறு, வேதாகம நெறிகளை யனுசரித்து, சிறந்த முறையில் இந் நூல் வெளியிடப் பெற்றதாகும்.

இந்நூலிலும் ஏதாவது திருத்தங்கள் செய்ய பிரியங்கொள் வோர், சேலம் ஸ்ரீ M. V. கோபால் செட்டியார் விலாசத்திற்கு எழுதியனுப்பினுல், அடுத்த பதிப்பில் சேர்த்து அச்சிட் நலமாம்.

நாங்கள் இயன்ற வரையில் ஆராய்ச்சி செய்தே இந்நூலை வரைந்துள்ளோம்.

குசுமஸ்ரேஷ்டியாரின் காலத்தை நிர்ணயித்தறியப் புகுங்கால் நிச்சயமான முடிவை அறிவது ஸ்ரமமாயிருக்கிறது. ஏனெனில், ஸ்ரீ கன்னிகா புராணத்தைப் பார்த்தால், இச்சரிதம் ஸ்காந்த புராணத்திலிருப்பதாக எழுதப்பெற்றுளது. ஸ்காந்த புராணம் வேத வ்யாசரால் எழுதப்பட்டது. வேத வ்யாசர் துவாபர யுகத்திலிருந்த மஹரிஷி யாவர்.

இராஜமகேந்திரவரத்தில் விஷ்ணுவர்த்தன மன்னனின் அவைக்களத்தில் பெனுகொண்டா பட்டணத்து வைசியர்கள் சென்று தர்க்கித்ததாக வெடி கன்னிகாபுராணத்தில் ஒரு கட்டமுளது. அச்சந்தர்ப்பத்தில் அரசனது மந்திரிகள் பாரதத்திலுள்ள யயாதி சரிதையை உதாரணமாக எடுத்துக் கூறுகையில், வைசியர்கள் துவாபரயுக தர்மம் கலியுகத்திற் கொவ்வாதெனக் கூறுவதால், வெடி சம்பவம் கலியுகத்தில் நடந்ததென நன்கு புலப்படுகிறது.

கி. பி. 1887-ம்ஆண்டில் (தென்னற்காடு ஜில்லா) வளவனூர் செங்காடு கிருஷ்ணப்ப செட்டியார் குமாரர் முத்தியாலு செட்டியார் என்பவரின் முயற்சியைக்கொண்டும், அநேக வைசியர்களின் பொருளுதவியைக் கொண்டும், சூலை சோமசுந்தர நாயகர் அவர்களால் இயற்றப்பட்டு வெளியான 'கங்கிகா தேவி புராணம்' எனும் தமிழ் நூலில் கடைசியில் 203-ஆம் பக்கத்தில்,

> "சேடனுரைத் திடத்தரும நந்தனனும் வசியர்குலச் சிறுவன் கேட்ட
> பாடுபெறு வசியர்கதை நாரதர்சொற் றிடக்கேட்டுப் பழுதில் சீர்த்தி
> நீடுதிகழ் சாலங்கா யனர்வசிய முனிவருக்கு நிறுவி னரவ்
> வீடில்சுப சரிதமுவந் தியம்பினரால் சூநர்தமை யிறைஞ்சினேர்க்கே"

என்ற பாடலினால், புராணந் தோன்றிய வழி கூறப்படுகிறது. அப்பாடலின்படி, ஆதிசேடன் — தருமநந்தனனென்னும் வைசியச் சிறுவன் — நாரதர் — சாலங்காயனர் — வைசிய முனிவர்கள் — சூத மகாமுனி — நைமிச வன முனிவர் என குரு சிஷ்ய பரம்பரை ஏழு ஆகின்றன. அந்நூலில் (பக்கம் 157-ல்) எட்டாவது அத்தியாயத்தில், ஸ்ரீ வாசவியும் 102 கோத்ரத்தவர்களும் அக்னி ப்ரவேசமான தினம்

ஸ்ரீ கலியப்தம் 2628-ல் நிகழும் பிரபவ-ஹ்ரு மாஸ-ஸ்ரீ சுக்லபக்ஷம் த்விதியை குருவாரம் கூடிய நன்னாள் எனக் குறிக்கப்பட்டுள்ளது. அப்புத்தகத்தில் ஆரும் அத்யாயத்தில் (பக்கம்.-85) விஷ்ணுவர்த்தனரைப் பற்றிக் கூறுகையில், அவன் பாண்டு மன்னனின் ஏழாவது பேரன் என்று கூறப்பட்டுளது. ஒரு தலைமுறை தோன்றச் சுற்றேறக்குறைய 30 வருஷங்கள் அல்லது (அதிகமானால்) 50 வருஷங்கள் செல்லும். தர்ம புத்ராதியர் கலியுக ஆரம்ப காலம் வரையில் இருந்தார்களெனத் தெரிய வருகிறது. ஏழு தலைமுறைகள் ஆவதற்கு 200 அல்லது 300 வருஷங்கள் போதுமானது. 2628 வருஷங்கள் ஆயின என்பதை நோக்கின், அப் புத்தகத்திலேயே முன்னுக்குப் பின் விஷயங்கள் முரண்படுகின்றன.

பாஸ்கராச்சாரியர் என்னும் ப்ராம்மணோத்தமர் ஒருவரால் கவிதா ரூபமாக இயற்றப் பெற்றுள்ள 'ஸ்ரீ வைஸ்ய புராணம்' என்னும் ஆந்த்ர புஸ்தகத்திலும், (அஷ்டமாஸ்வாசத்தில்) எட்டாம் அத்தியாயத்தில், குண்ட ப்ரவேசமான தினத்தைக் குறிக்கையில் இவ்வாறே (தமிழ் நூலிலுள்ளது போலவே) கூறப்பட்டுள்ளது. அந்நூலில் புராண வரலாறு கூறுகையில் முதலத்யாயத் தொடக்கத்தில், ஹிமிச வனத்தில் சாலங்காயன முனிவர் வைகிய முனிவர்களுக்கு இச் சரிதத்தை ஸம்ஸ்க்ருத பாஷையில் கூறியதாயும், அவ் விஷயங்கள் பல புராணங்களில் இருப்பதாயும் அவற்றை தான் தெலுங்கில் கவிதாரூபமா யுரைப்பதாயும் கூறுகிறார். ஆனால் எந்தப் புராணங்களிலிருந்து எடுத்துக்கூறுகிறார் என்பதைத் தெரிவிக்கவில்லை. ஆரும் அத்யாயத்தில் விஷ்ணுவர்த்தனரைப் பற்றிக் கூறுகையில், அர் ஜுனன் வம்சத்தைச் சார்ந்தவனென்றும், சாளுக்ய வம்சத்தைச் சார்ந்தவனென்றும் இந் நூலாசிரியர் சொல்லிச் செல்கிறார்.

இச் சரித்திரத்தைப் பற்றி ப்ரம்மாண்ட புராணம், ஸ்காந்த புராணம், விஷ்ணு புராணம், தேவீ பாகவதம், மகா பாகவதம் ஆதிய நூல்களில் கூறப் பெற்றுள்ளதாக ஒரு சிலர் சொல்லிக் கொள்கின்றனர். இவ்வாறு கூறும் அனைத்தையும் ஆராய்ந்து நோக்கின், ஒன்றுக் கொன்று சிற்சில விஷயங்களில் முரண்படுகின்றன. ஏற்கனவே, இக் கன்னிகா புராணகாலத்தை வரையறுக்க வுன்னி, அறிவு அனுபவம் ஆராய்ச்சி சமூகசேவை முன்னேற்றம் சீர்திருத்தம் இவைகளிற் சிறந்த வைகிய ப்ரமுகர்கள் பலர், அநேக க்ரந்தங்களையும்

சரித்திர ஆதாரங்களையும் (Historical Points) ஒப்புற நோக்கி, அதற்காக எவ்வளவோ பணச் செலவுசெய்தும், வெகு ஸ்ரமப்பட்டுப் பல நாட்கள் ஆராய்ச்சி செய்தும் ஒருவித முடிவுக்கு வந்துள்ளனர். அவ்வாறு கண்ட முடிவை பத்திரிகைகளின் வாயிலாக வெளியிட்டும் உள்ளனர். அத்தகைய ஆராய்ச்சியின் முடிவான கருத்தைத் தெரிவிக்கும் கட்டுரையொன்றை இங்கே குறித்துள்ளோம்.

அக் கட்டுரை வருமாறு :—

"வாசவி" என்னும் ஆந்த்ர பத்திரிகை.

[அசுவய-ஹ்ய புரட்டாசி-மீ]

1926—'27. தொகுதி 1. பகுதி 6. பக்கம் 3.

கட்டுரைப் பெயர் :— "விஷ்ணுவர்த்தன மன்னர்களின் சரிதம்"

கட்டுரையாளர் :— ராவ்பகதூர் ஸ்ரீ T. பகவந்தம் குப்தா B.A.,B.L., அவர்கள்,

(Ritired District Collector, Madras.)

ரிடையர்ட் ஜில்லா கலெக்டர், சென்னை.

அம்சம் :— சந்திரவம்சத்திற் பிறந்த சாளுக்ய மன்னர்கள் வட இந்தியாவை விட்டு தென்னிந்தியாவின் மேற்குப் பாகத்திற்கு வந்து ராஜ்யத்தை ஸ்தாபித்துக்கொண்டனர். இவ்வாறு சாளுக்ய வம்சத்தை ஸ்தாபித்தவர், முதல் புலிகேசி என்பவர். இரண்டாம் புலிகேசி என்பவர் காலத்தில், அவருடைய சகோதரராகிய குப்ஜ விஷ்ணுவர்த்தனன், கிருஷ்ணை கோதாவரி நதிகளின் நடுப்பாகத்திலிருக்கும் வேங்கி நாட்டிற்கு அரசனாகிய சாலங்காயனனை ஜயித்து, கி. பி. 609 ஆம் வருஷத்தில் அத்தேசத்திற்கு, மேற்கு சாளுக்ய சாம்ராஜ்யத்தின் ப்ரதிநிதியாக ஏற்பட்டனன். பிறகு 615 ஆம் வருஷத்தில் குப்ஜவர்த்தனன் தம் சகோதரரை விட்டு ஸ்வதந்திரனாகி கிழக்கு சாளுக்ய ராஜ்யத்தை ஸ்தாபித்தனன். இவருடைய வம்சத்தில் பிறந்தவரே ஸ்ரீ கன்னிகாபுராணத்தில் சொல்லப்பட்ட விஷ்ணுவர்த்தனனவன்.

இவ்வாறு வேங்கி நாட்டை யாண்ட கிழக்கு சாளுக்ய அரசர்கள் :—

1.	குப்ஜவிஷ்ணுவர்த்தனன்	ஆண்ட காலம்	18 வரு
2.	முதல் ஜயஸிம்ஹ வல்லபன்	,,	30 ,,
3.	இரண்டாம் ராஜானந்த விஷ்ணு வர்த்தனன்	,,	9 ,,
4.	மங்கி ராஜன்	,,	25 ,,
5.	கொக்கிலி	,,	6 மீ
6.	இரண்டாம் ஜயஸிம்ஹ வல்லபன்	,,	13 வரு
7.	மூன்றும் விஷ்ணுவர்த்தனன்	,,	18 ,,
8.	நான்காம் விஷ்ணுவர்த்தனன்	,,	30 ,,
9.	விஜயாதித்ய நரேந்திர மிருகராஜன்	,,	48 ,,
10.	ஐந்தாம் கலி விஷ்ணுவர்த்தனன்	,,	1½ ,,
11.	மூன்றும் குணக விஜயாதித்தன்	,,	44 ,,
12.	தர்ப்பன்	,,	1 மீ
13.	யுத்தமல்லன்	,,	7 வரு
14.	சாளுக்ய பீமன்	,,	30 ,,
15.	கொல்லபி கண்டன்	,,	6 மீ
16.	விக்ரமாதித்யன்	,,	11 ,,
17.	முதல் அம்மராஜன் அல்லது ஆறும் விஷ்ணுவர்த்தனன்	,, (கி. பி. 918-925)	7 வரு
18.	ராஜபீமன்	,, (934—945)	12 ,,
19.	இரண்டாம் அம்மராஜன் அல்லது விஜயாதித்யன்	,, (945—970)	25 ,,
20.	தான நிருபன்	,, (970—973)	3 ,,
21.	சோழ அரசர்கள் (இடி ராஜ்யத்தைக் கைப்பற்றி)	,, (973—999)	27 ,,
22.	சக்திவர்மன் (மீண்டும் ராஜ்யத்தை மீட்டு)	,, (999-1011)	12 ,,
23.	விமலாதித்யன் அல்லது ஏழாம் விஷ்ணுவர்த்தனன்	,, (1015-1022)	7 ,,
24	ராஜ ராஜன் (ஆண்ட காலம், கி. பி. 1023 முதல் 1063 வரையில்		40 வரு)

* * *

குப்ஜவர்த்தனன் கோதாவரி தீரத்தில் அரசாட்சி நடத்தினன். ஆறும் விஷ்ணு வர்த்தனன் 'ராஜமகேந்திரன்' என்ற பட்டம் பெற்று, நகரத்திற்கும் அப்பெயரை (ராஜமகேந்திரபுரம் எனச் சூட்டினன்.)

* * *

கிழக்கு சாளுக்ய அரசர்கள் சுமார் நான்கு நூற்றாண்டுகள் நிர்ப்பயமாய்ப் பரிபாலித்தனர். வேங்கி நாடேயன்றி, அதற்கு வடக்கிலுள்ள கலிங்க நாட்டில் சிறிது பாகத்தையுங்கூட ஆண்டு வந்தனர். ராஜராஜ நரேந்திரனுக்குப் பிறகு (கி. பி. 1063-க்கு மேல்) வேங்கிநாடு சோழ அரசர்களின் வசமாயிற்று. இந்த சோழ அரசர்கள் 1228ஆம் வருஷத்தில் ஓரங்கல் கஜபதி மன்னனால் தோற்கடிக்கப் பட்டார்கள்.

* * *

ஆரும் விஷ்ணுவர்த்தனன்	கி. பி.	918	முதல்	925	வரையும்,
இரண்டாம் அம்மராஜன்	,,	945	,,	970	,,
ஷெியார் தம்பி தான நிருபன்	,,	970	,,	973	,,

பரிபாலித்தார்கள்.

பிறகு வேங்கிநாடு 27-ஹு சோழ அரசாட்சியிலிருந்தது. பிறகு தானநிருபனுடைய குமாரன் சக்தி வர்மா 999-ஆம் வருஷம் ராஜ்யத்திற்கு வந்தார். இவரே நம் கன்னிகா புராணத்தில் சொல்லிய 'விஜயார்க்கன்' என்னும் அரசர். இவர் 12-ஆண்டுகள் ராஜ்யபரி பாலனம் செய்தாராகையால், இவருடைய பரிபாலன காலம் கி. பி. 999 முதல் 1011 வரையிலுமாக இருக்கவேண்டும். பிறகு (அவர் குமாரனுகிய) 'விமலாதித்யன்' என்பவர் 1011-ஆம் வருஷம் மே-மாதம்-10-ஆம் தேதி வியாழனன்று அரசரானர். ஆனல், உடனே சோழ அரசனுகிய ராஜேந்திர சோழனல் தஞ்சாவூருக்கு கைதியாகக் கொண்டு போகப்பட்டு, 1015 ஆம் வருஷத்தில் விடுதலை செய்யப்பட் டார். ஆகையால் இவருடைய ராஜ்யம் 1015 முதல் 1022 வரை 7 வருஷங்களாகக் காணப்படுகிறது. இவரே கன்னிகா புராணத்தில் சொல்லப்பட்ட விஷ்ணுவர்த்தனன். இவர் ஏழாம் விஷ்ணுவர்த்த னன். இவர் சோழ தேசத்திலிருக்கும்பொழுது ராஜேந்த்ர சோழ னின் தங்கையாகிய குந்தவியை மணந்தார். இவருடைய குமார ராகிய ராஜராஜன் 1022 ஆம் வருஷத்தில் ராஜேந்திர சோழனின் புத்ரியை மணந்தார். நன்னயபட்டி பாரதம் எழுதியதும் இவர் காலத்தில் தான். வைஸ்யர்கள் குண்ட ப்ரவேச மான பிறகு பால நகரத்தவரை சாந்தப்படுத்தியதும் இவரே.

* * *

இக்கட்டுரை, தெலுங்கிலிருந்து தமிழில் ஒருவாறு மொழி பெயர்க்கப்பெற்றது. (இந்நூலி னிறுதியில் காண்க.) இக்கட்டுரையை

ஆதரித்து (ஸ்ரீமத் ஆந்த்ர வித்யா வாசஸ்பதி, ஸாஹித்ய ஸரஸ்வதி, வித்யா விநோத கவிபூஷண, வித்யா ஸாகர, ஆசுகவி தல்லஜ, கவிரத்ன, ஆசுகவிதாதுரீண, வித்வான், சதாவதானி) சென்னை ஸ்ரீ. தோ மா வேங்கடஸ்வாமி குப்தா அவர்கள், 'வாசவி' எனும் அப்பத்திரிகையி லேயே விபவ-ஜூன ஆடி-மீ (1928-'29) மலர்-3 இதழ்-4ல் பக்கம் 131ல் 'ஸ்ரீ கன்யகா புராணம்' என்ற தலைப்பைக் கொண்டு கொடுத் திருக்கும் ஒரு கட்டுரையும், (இந்நூலின் இறுதியில் காண்க.)

அதே 'வாசவி' பத்திரிகையில், பவ-ஜூன ஆவணி-மீ சஞ்சிகை பக்கம் 161ல் "ஸ்ரீ வாசவ கன்னிகையின் காலத்தில் வைசியர்களின் ஆசார விவகாரங்கள்" என்னுந் தலைப்பில், அஷ்டாவதானி-வித்வான்-ஸ்ரீ. அம்படி, சுப்பராய ஸ்ரேஷ்டி M. A. B. E. D. அவர்கள் வரைந் துள்ள கட்டுரையும், (மேற்கண்ட ஸ்ரீ பகவந்தம் குப்தா அவர்களின் கட்டுரையிலுள்ள) அவ்விஷயங்களை ஊர்ஜிதப்படுத்துகின்றன.

கி. பி. 1930 ஆம் ஆண்டில், ஸ்ரீ மாமிடி வேங்கடார்யா அவர்களின் ஜீவிய சரித்ரத்தை எழுதவந்த ஸ்ரீ க்ரந்தி வேங்கடசுப்ப ராய சர்மா என்பவரும் அந்நூல்-30-32-ஆம் பக்கங்களில் ஸ்ரீ வாசவி சரிதத்தின் கால நிர்ணயத்தைப்பற்றி மேற்கண்ட அபிப்பிரா யத்தைத்தான் தருகிறார். சித்தூர் — வாடம்பாடி — வேங்கட நரசிம்ம ஸ்ரேஷ்டியாரின் உதவியால், சுமார் 3000 ஸ்லோகங்கள் கொண்ட "ஸ்ரீமத் கன்யகா புராணம்" என்னும் ஆந்த்ர புத்தகம், ஸ்ரீ ஸ்காந்த புராண ஸஹ்யாத்ரி ஸம்ஹிதையிலுள்ள ஸம்ஸ்க்ருத ஸ்லோகங்களுடன், ஸ்ரீ — ஸ ரஸ் வ தி — வேங்கடசுப்பராய சாஸ்த்ரியார் அவர்களியற்றிய ஆந்த்ர பத விசேஷார்த்தங்களுடன் சித்தூரில் அச்சிடப்பெற்று, ஸ்ரீமான் உ. வெ. சவுந்தரராஜ ஐயங்கார் ஸ்வாமிகளால் பரிசோதிக்கப்பெற்றதென கி.பி. 1923 ஆம் ஆண்டில் ப்ரசுரிக்கப்பட்டுளது. அப்புத்தகத்தில் 18-ஆம் அத்யாயத்தில் (144 — 145ஆம் பக்கங்களில்) விஷ்ணுவர்த்தனன் வரலாறு கூறுகை யில், பாண்டு — அர்ஜுனன் — அபிமன்யு — பரீக்ஷித் — ஜனமே ஜயன் — சதானிகன் — சேமகந்தன் — விஜயார்க்கன் — விஷ்ணு வர்த்தனன் என்று (ஒன்பது தலைமுறைகளின்) வம்சாவளி கூறப்பட் டுள்ளது. துவாபரயுகத்தில் பாரத யுத்தம் நடந்துள்ளது. அந்த யுத்த சமயத்தில் அபிமன்யு இறந்தபோது அவன் மனைவியாகிய் உத்தரை

கர்ப்பவதியாயிருந்தனளென்றும், அவளின்ற சேயே பரீக்ஷித் என்றும் பாரத நூல் கூறுகின்றது. கலியுக ஆரம்பத்தில் பரீக்ஷித் இருந்ததாகக் கொண்டாலும், அவனுக்குப் பின்னர் ஆறு தலைமுறைகள் ஏற்பட சுமார் 180 ஆண்டுகள் செல்லும். ஆனல், விஷ்ணுவர்த்தனன் ராஜமகேந்திரபுரத்தைத் தலைநகராய்க் கொண்டு அரசாண்டதாக கன்னிகா புராணம், வைசிய புராணம் முதலிய இந்நூல்களெல்லாம் கூறுகின்றன. 'A History & Civilisation in Ancient India' என்று ஆங்கில மொழியில் இந்து தேச சரித்திரத்தை எழுதியுள்ள ரோமேஷ சந்திர தத்தர் (Romesh Chandra Dutt C. I. E. Late of, the I. C. S., and of the middle Temple, Barrister-at-law, member of the Royal Asiatic Society of Great Britain and Ireland and of the Asiatic Society of Bengal) என்பவர் அச் சரித்ர புத்தகத்தில் வால்யூம் இரண்டில் (Vol. II. Book 5. Page 182) பக்கம் 182ல் சாளுக்ய வம்சத்தைப் பற்றிக் கூறுகையில்,

வல்லப அரசர்கள் குஜராத்திலிருந்துகொண்டு, நர்மதை கிருஷ்ணை ஆகிய இரு நதிகளுக்குமிடையிலுள்ள ராஜ்யத்தை யாண்டு வந்த காலத்தில், ராஜபுத்ர வம்சத்தைச் சேர்ந்த சாளுக்ய மன்னர்கள் தக்ஷிணத்தில் அரசாண்டனரென்றும், இவர்களுடைய அரசாட்சி கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதி முதல் (அதாவது ஆரும் நூற்றாண்டின் தொடக்கம் முதல்) பனிரெண்டாம் நூற்றாண்டின் முடிவுவரை யிருந்ததென்றும், அவர்கள் தமது இராஜ்யத்தை இரண்டாய் பிரித்து, மேற்கு சாளுக்ய அரசர்கள் 'கல்யாணபுரி' என்ற நகரத்தைத் தலைநகராகக் கொண்டிருந்தனரென்றும், கிழக்கு சாளுக்ய அரசர்கள் கோதாவரி நதியின் முகத்துவாரத்தில் உள்ள 'ராஜமகேந்திரபுரம்' என்ற நகரத்தைத் தலைநகராகக் கொண்டிருந்தன ரென்றும் கூறுகின்றனர். 'ஸர் வால்டர் எலியட்' (Sir Walter Elliot) என்பவர் 1858 ஆம் ஆண்டில் ப்ரசுரித்திருக்கும் கிழக்கு, மேற்கு சாளுக்ய வம்ச குடும்பங்களின் அட்டவணையிலும் ராஜமகேந்த்ரபுரத்தைத் தலைநகராய்க்கொண்ட கிழக்கு சாளுக்ய ராஜ்யத்தின் ஆரம்ப காலம் கி. பி. 605 ஆம் ஆண்டில் என்று குறிப்பிடுகின்றனர்.

[In the mean time Chalukyas, a Rajput tribe, had become a great power in the Deccan when the Valabhis rose in Gujarat, and held sway over the whole of the country

between the Nurbuddha and the Krishna rivers. The rule of the Chalukyas in the Deccan commenced about the close of the fifth century A. D., and continued to the close of the twelfth century, i.e., to the time when Northern India was conquered by the Mahommedans. The western branch of the Chalukyas held say in the Konkan and the Maharashtra country, and had their capital at Kalyan; while the Eastern branch of the same race ruled over Eastern Deccan, and had their capital at Rajamundry, near the mouth of the Godavari river. Sir Walter Elliot published lists of the kings of the two houses in 1858, and the lists have since been copied by the other writers.]

இவைகளை யோசித்தால் அங்ஙகர்க்கு ராஜமந்திரி என்று பெயர் ஏற்பட்ட காலமே கி. பி. ஆறும் நூற்றாண்டிற்குப் பிறகு (அதாவது கலியுகாதி 3700 வருஷங்களுக்குப் பிறகு) என்று தெரியவருகிறது. சரித்ர சம்பந்தமான ஆராய்ச்சியில் இவ்வாறிருக்கும்போது, அந்த ஆந்த்ர புத்தகத்திலுள்ள வம்சாவளியை நோக்கினால் கலி. 180 வருஷங்கள் என்று சொல்ல இடமுள்ளபடியால் அதை நம்புவதற்கில்லை. ஸ்காந்த புராணத்தில் ஸம்ஸ்க்ருத பாஷையிலுள்ளதாக அந்நூலில் எடுத்துரைக்கப்பட்டிருக்கும் ஸ்லோகங்களில் அநேக தெலுங்கு பதங்களும், வடமொழியல்லாத வேறு பல பாஷைகளின் பதங்களும் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. அவைகள் ஸம்ஸ்க்ருத வார்த்தை களேயல்லவென்று ஸம்ஸ்க்ருத பண்டிதர்கள் சொல்லுகின்றனர். வேதங்களை யெல்லாம் சிக்கறுத்து உலகிற்குதவிய உத்தம முனிவ ராகிய வியாசர் அவ்வாறு தெலுங்கு பதங்களையும் கிராமியச் சொற் களையும் அசம்பாவிதமாக ஸம்ஸ்க்ருத ஸ்லோகங்களில் சேர்த்து வரைய மாட்டார். அன்றியும் அவ் வாந்த்ர புத்தகத்திற் கண்டவை முரண் பாடான விஷயங்கள் என்று மேற்சொன்ன — க்ரந்தி — வேங்கட சுப்பராய சர்மா அவர்கள் தாம் வரைந்த நூலாகிய ஸ்ரீ மாமிடி — வேங்கடாரய ஜீவித மெனும் புத்தகத்தில் 65—66 ஆம் பக்கங்களில் கூறியிருக்கின்றார். அதுவும் ஸ்ரீ பகவந்தம் குப்தா அவர்களின் கட் டுரைக்கு ஆதரவாகிறது.

அக் கட்டுரையின்படி, சரித்ர ஆராய்ச்சிகளைக் கவனித்தால், கி. பி. 609-ஆம் ஆண்டில்தான் (இப்போது ராஜ மகேந்திரபுரம்

என்று சொல்லப்படும்) அந்த இடத்தில் ராஜ்யம் ஏற்பட்டதென்றும், கி. பி. 918 முதல் 925 வரை அரசாண்ட ஆரும் விஷ்ணுவர்த்தனன் என்னும் அரசன் 'ராஜமகேந்திரன்' என்ற பட்டம் பெற்றுத் தன் பெயரையே அந்நகருக்கும் சூட்டினன் என்றும் தெரிகின்றமையால், இற்றைக்குச் சுமார் 920 ஆண்டுகட்கு முன், அதாவது கி. பி. (A. D.) 1022-ல் (கலி–4124-ல்) நடந்த ஒரு சம்பவத்தை, இற்றைக்கு 2416 ஆண்டுகட்குமுன் (அதாவது கி. மு. [B. C.] 474-ல் [கலி–2628-ல்]) நடந்ததாக எழுதப்பட்டுளதென்றுணர நேருவது மன்றி, துவாபர யுகத்திலிருந்த பாண்டு மகாராஜனுக்கு (கலி–4124-ல் இருந்த) விஷ்ணுவர்த்தன மன்னனை ஏழாவது பேரனென்று கூறப்பட்டுள்ள தென்றும் உணர நேருகிறது.

ஆகவே, **'ஸ்ரீ வாசவ கன்னிகையின் சரிதம் நடந்தது கி. பி. 1015 முதல் 1022 வரை அரசாண்ட விமலாதித்தன் என்னும் ஏழாம் விஷ்ணுவர்த்தன மன்னனின் காலத்தில்தான்' என்று ஒருவாறு நிர்ணயிக்க இடமுளது.**

இச்சரிதம் நடைபெறும்போது பாஸ்கராச்சாரியார் இருந்ததாகக் கூறப்படுவது தவறென்னவும், கி. பி. பதினேழும் நூற்றாண்டில் இருந்த 'பாஸ்கராச்சாரியார்' என்ற பெயர்பெற்ற ப்ராம்மணர் ஒருவர் ஸம்ஸ்கிருதத்தில் சில ஸ்லோகங்கள் தெலுங்கு பதங்களை யெல்லாம் கலந்து வரைந்து 'கன்னிகா புராணம்' எனப் பெயரிட்டு, 'இது ஸ்காந்த புராணத்தில் இருந்தது. இச்சுலோகங்களை யுடைய ஸ்காந்த புராணம் என்னிடத் துளது' என்று கூறியதே யன்றி, 'வைஸ்ய புராணம்' என்னுந் தெலுங்கு நூலொன்றையும் இயற்றினரெனவும், அவ்வாறல்லாமல், ஆதியில் பாஸ்கராச்சாரியார் ஒருவரிருந்திருந்தால் அவருடைய குலத்திற் பிறந்தோர்கள் என்று சொல்லிக்கொள்ளும் தற்கால பாஸ்கராச்சாரியார் பலரும் ஒரே ரிஷி கோத்திரத்தைச் சார்ந்தவர்களாயிருத்தல் வேண்டுமெனவும், இவர்களுடைய கோத்திரங்கள் வேறுபட்டுள்ளதும், சரித்திர ஆராய்ச்சியும் இதற்குச் சான்றுபுளது எனவும் அந்தக் கட்டுரைகள் கூறுகின்றன.

தவிரவும், ஸ்ரீ வைஸ்ய புராணத்தில் வேத நூல் அரங்கேற்ற காலத்தைப்பற்றி விபரமாகத் தெரிவிக்காமையும் இவ்விஷயங்களை உறுதிப்படுத்துகிறது.

எனினும், இந்நூல் ஆரம்பம் புராண தோரணையாகவேயிருத்தல் நலமென ஒரு சிலர் அபிப்ராயமிருந்தமையின், பெரியோர் வாயிலாக வைத்துச் சொல்வதால் குற்றமாகாதெனும் நோக்கத்துடன் சூதர் வாயிலாகக் கூறப்பட்டுள்ளது. கால நிர்ணயத்தைப்பற்றிச் சரித்திரவாயிலாயுணர விரும்புவோர்க்கு வேண்டியே இவ்வாராய்ச்சிக் கட்டுரைகளை ஈண்டு எடுத்துக் காட்டியுள்ளோம். எது எவ்வாறிருப்பினும் இவ்வாசகியின் சரித்திரம் நடந்தது முற்றிலும் உண்மைதான். அதில் எள்ளளவேனும் ஐயப்பாடிலது. அநேகர் எழுத வந்தபோது தத்தமது கருத்துக்கிணங்கச் சிற்சிலவற்றைப் புகுத்திக்கொண்டனர். அவற்றுள் விளைந்த கோளாறுகளே இவையாம். ஆனாலும் ஒருவாறு ஓர்வித முடிவுக்கு வந்துசேர இக்கட்டுரைகள் உதவி புரிந்தன. இன்னும் ஏதேனும் சரியான உண்மை ஆதாரங்கள் புலப்பட்டாலும், தெரிவிக்கின், மறுபதிப்பில் சேர்த்துத் திருத்தமுற வெளியிடுகின்றோம்.

உலக முழுமையும் உற்பத்தியாவதற்காதாரமாயுளது, அவ்வப் பொருளினிடத்தும் பொறிபுலன்களாற் காணற்கொணாது உள்ளொளியாய் விளங்கும் ஓர் அற்புதச்சக்தியே என்பது சகலரும் ஒப்புக் கொள்ளும் உண்மையாகும்.

அத்தகைய சக்தியே ஒரு பெண்ணுருக் கொண்டு பெனுகொண்டாபுரியிற் றோன்றியருளி, உலக நன்மையையும் நீதி நெறிகளையும் விளக்கி மறைந்ததாக இந்நூலில் கூறப்பெற்றுள்ளது.

மகா சக்தியின் அம்சம் ஒன்பது பாகுபாடுகளாகி [மாயா சக்தி க்ரியாசக்தி பராசக்தி இச்சாசக்தி ஞானசக்தி ஆதிசக்தி சிற்சக்தி ஆத்மசக்தி (ஆத்மகுணங்கள்) அருட்சக்தி ஆகிய] நவ சக்திகள் எனப் பெயர்பெறலாயின வெனக் கூறப்பெறுவதால் இந்நூலை ஒன்பது எழுத்துக்களாலாகிய பெயரால் அமைத்ததேயன்றி, ஒன்பது அத்தியாயங்களாயும் பிரித்துள்ளோம். எல்லாவற்றிற்கும் ஆதாரமாயுளது ஓங்கார சப்தமாதலால் 'ஓம்' என்ற எழுத்தை முதலில் வைத்து, பின்பு 'ஸ்ரீ வாசவீ விஜயம்' என்று எட்டு எழுத்துக்களை வைத்து எழுதியுள்ளோம். இவ்வொன்பது எழுத்துக்களை முறையே ஒவ்வொரு அத்தியாயத்தின் ஆரம்பத்திலுள்ள முதற் பாடலில் முதலெழுத்தாகக்கொண்டு வரைந்துள்ளோம். கடைசி எழுத்து

'ம்' என்பது மெய்யாக வளராதலால், 'மு' என்ற எழுத்தில் ஒன்பதாம் அத்தியாயத்து முகப்புப் பாடல் தொடங்குகிறது. அவ்வாறே எழுத்துக்களைச் சேர்த்தாலும் '' ஓம் ஸ்ரீ வாசவீ விஜயமு '' என்று வைஸ்யர்களின் தாய் பாஷையாக உள்ள தெலுங்கு பதம் போலக் காண்கிறதேயன்றி ஸம்ஸ்கிருத முரண்பாடொன்றுமிலது. ஆதலின் அவ்வாறு தொடங்கியுள்ளோம்.

[அன்றியும், இவ்வெழுத்துக்கள் ஒன்பதில் 'ஓம்' என்பது மேலேயுள்ளதால், அது பரம்பொருளையும், ஸ்ரீய எட்டும், அப்பரம் பொருள் விண் கால் அனல் புனல் பார் கதிர் மதி ஆன்மா ஆகிய அஷ்ட மூர்த்தங்களாக விளங்குதலையும் உணர்த்தும்.

மேலும், இவ்வெழுத்துக்களில் 'ஓம்' என்னும் எழுத்து ஸ்ரீ பரமாத்மாவையும், 'ஸ்ரீ' என்னும் எழுத்து அப்பரம்பொருளின் சக்தியையும், 'வாசவி' என்னும் மூன்றெழுத்துக்களும், அத்தகைய சக்தி (ஒரு தொழிலைச்செய்ய வேண்டுமென்று எண்ணம் உதிப்பதாகிய) இச்சை, (அத்தொழிலைச்செய்தற்குரிய) அறிவு, (அத்தொழிலைச்செய்வதாகிய) செயல் என்னும் மூவகையாய்த் தொழிற்படுகிறதென்பதையும், 'விஜயம்' என்னும் நான்கெழுத்துக்களும், மேற்சொன்ன விஷயங்களைச் சரிவர உணர்ந்து முறைப்படி யொழுகும் மூதறிஞர்களாகிய உத்தமர்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களையும் இனிதெய்தி ஆனந்தமுறுவர் என்பதையும், கடைசி எழுத்தாகிய 'ம்' என்பது உயிர்மெய்யா யிராமல் மெய்யாயிருப்பதால் அம்மோக்ஷ இன்பத்தைச் சாமான்யமாய் வாயினால் வெளியிட்டுக்கூற இயலாதென்பதையும் உணர்த்தும்.

அதுவுமல்லாமல், இவ்வொன்பது எழுத்துக்களும் (ப்ரம்மன் விஷ்ணு ருத்ரன் மகேசன் சதாசிவன் விந்து நாதம் சக்தி சிவம் எனும்) பரப்ரம்ம வஸ்துவின் நவ நிலைகளையும் உணர்த்தும்.]

பிராமி மகேஸ்வரி கௌமாரி வைஷ்ணவி வராகி இந்த்ராணி சாமுண்டி என்னும் ஸப்த மாதர்களும் அம் மகா சக்தியின் அம்சமே எனக் கூறப்படுவதால், இவற்றின் உட்பிரிவுகள் ஏழு காண்பிக்கப்பட்டன. ஒவ்வொரு பிரிவும் அம்மாதர்களின் பெயர்களிலுள்ள முதலெழுத்துக்களைக் கொண்டே ஆரம்பிக்கப்பெற்றமுள்ளன. இவை

அண்டத்திலும் பிண்ட (சரீர)த்திலும், ஜீவன், ப்ரம்மம், (இவை இரண்டிற்கும் இடையிலுள்ள) (மாயா விகாரமான) பஞ்ச பூதங்கள் ஆகிய ஏழு பொருள்கள் உள்ளதை உணர்த்தும்.

அப்படியின்றி இவைகளிரண்டையும் கூட்டினால் (9+7) பதினாறு வருவதால், நவ வடிவாகிய் அப் பரம்பொருளினிடத்திலிருந்து பிரிந்த ஆன்மகோடிகள் (தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்னும்) எழுவகைப் பிறவிகளையெய்தினும், பின்னர் அப்பரம் பொருளினிடத்திலேயே சென்று சேர்கின்றன வென்பதையும், ஜீவ நிலையும், ப்ரம்ம நிலையும் ஐக்யமாகையில் உயிர் பூர்ணத்வமடைகிற தென்பதையும், இறைவனுகிய சூரியனிடமிருந்து, ஜீவனுகிய சந்திரன் ஒளி பெறுகிறதென்பதையும், அம்மதி பதினாறு கலையும் பெறுந்தினத்தன்றே பூர்ண வொளியைப் பெறுகின்ற தென்பதையும், இந்நூல் சோடசகலா பரிபூர்ணமாக விளங்குதல் வேண்டுமென்பதையும் நோக்கங்களாகக் கொண்டே இவ்வாறு எழுதலானேம்.

இந்நூலில் திருவள்ளுவர் கம்பர் மணிவாசகர் ஆழ்வாராதியர் ஔவை குமரகுருபரர் அருணகிரியார் பட்டினத்தார் தாயுமானவர் இராமலிங்க அடிகள் சுப்ரமண்ய பாரதியார் முதலான பல மேலோர்களின் அருள்வாக்குகள் இடையிடையே அமைக்கப்பெற்றிருப்பதால் அன்பர்கள் அனைவரும், அவ்வருள்வாக்குக ளிருப்பதன் காரணமாக வாவது இந்நூலைப் பொன்னே போலப் போற்றிப் பயின்று பொலிவுறல் வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றனம்.

இந்நூல் வெளிவர வேண்டுமென்ற சத்சங்கல்பத்துடன் முயற்சி செய்தவர்கட்கும், இந்நூலை வெளியிடும் தக்ஷிணகண்ட ஆர்ய வைஸ்ய மஹாசபையினர்க்கும், இந்நூல் வரைவதற்கு ஈடுபட்ட நாள் முதற்கொண்டு இது காறும் சுமார் இரண்டு வருட காலத்திற்குமேல், அடியேனுக்குவேண்டிய உணவு, உடை, பொருள் முதலான சகல வசதிகளும் செய்து கொடுத்த பெரியார்களுக்கும், இந்நூல் வரைவதற்காகத் திருவண்ணாமலை, சேலம், கோவை, உடுமலை முதலிய பல ஊர்களில் தமியேன் தங்க நேர்ந்தகாலை, ஆங்காங்கும் வேண்டிய சவுகரியங்களைப் புரிந்து ஆதரித்த நண்பர்கட்கும், இந்நூலின்பால் உண்மை யன்புகூர்ந்து பிழை திருத்தம் செய்து கொடுத்தவர்கட்கும், முகவுரை, அணிந்துரை, சாற்றுக்கவி முதலியன

கொடுத்த அறிஞர்கட்கும், மிகுந்த சிரத்தையுடன் அழகுற அச்சிட்டுத்தந்த அச்சியந்திர சாலையினர்க்கும், இந்நூலை ஆர்வத்துடன் வாங்கி, பக்தி சிரத்தையுடன் வாசிக்கும் அனைவர்க்கும் யான் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். எனது அன்பார்ந்த வந்தனங்களைத் தெரிவித்துக் கொள்வதன்றி, எல்லாம் வல்ல சர்வேஸ்வரியாகிய ஸ்ரீ வாசவாம்பிகையின் திருவருள் அவர்க ளனைவர்க்கும் என்றென்றும் உண்மை யின்பத்தைக் கொடுத்தருளவேண்டுமெனப் பிரார்த்தித்துக் கொள்ளுகின்றேன்.

இங்ஙன்,

அன்பன், கே. வெங்கட்ராமன்.

ஸ்ரீ வாஸவ்யை நம:

எவ்வுருவும் ஆவது நீ எவ்வரமும் ஈவது நீ
எவ்வெவையும் செய்வதுநீ யே.

துடியென்னு மிடைகொண்ட பெண்ணமுத மே!எமது
துயர்தவிர்த் தாளுமகீ யே !
தூயநின் சரிதையைச் சொல்வதற் கேயுனருள்
துணைவேண்டி னேமுதவு வாய் ;

கடிகொள்நின் கழல்பரவு கோவைவேங் கடகோபால்
கவின்மேவு சேலநகர் வாழ்
கண்யமிகு மெம்விகோ பால்நினது துணையையே
கருதியா னத்தூரு றை

அடியன்வேங் கடராம னுனயாம் மூவர்சேர்ந்
தாற்றுமித் தொண்டையினி தே
அற்புதம தாய்முடித் தருள்க!வா சவிநின்ற
னருளினு லறநெறியி னைப்

படியின்மிசை பாலனம் செயுமார்ய வைசியர்கள்
பண்புடன் வாழ்க!இந் நூல்
பதிப்பவர் படிப்பவர் கேட்பவர் அனைவரும்
பகரரிய வின்புறுக வே!

மங்களசொ ரூபிநின் சரிதம்வெளி வந்திந்த
மண்ணுலகி னிற்பரவ வே

மாவுதவி செய்கோவை வைசியர்கள் வாழ,உயர்
வைஸ்யபூ ஷணமென்னு மோர்

துங்கநா மம்பெற்ற வணிகர்கள் சிரோன்மணி
சுகுணநிறை ராஜுவள் ளல்

தூயநற் புகழோடு பல்லாண்டும் வாழ,இத்
தொன்னூலி யாதரிப் போர்

இங்கிதம தாயணிந் துரைவழங் கிடுமறிஞ
ரினிதுபல வுதவிபுரி வோர்

எழிலோடு மச்சேற்று கின்றவுடு மலையச்சி
யந்த்ரசா லையினர்முத லோர்

பொங்குமகிழ் வோடென்று நன்றுவாழ்ந் திடவருள்
புரிந்துநீ காத்தருள்க வே!

புவியிலெல் லாவுயிரு மெய்யின்ப மெய்திடப்
பொலிவீந்து காத்தருள்க வே!!



ஓம்

ஸ்ரீ வாசவீ விஜயம்.

——:(o):——

புராண வரலாறு.

"ஓம் தத் ஸத்" என்னும் வேத பீஜத்தினின்றும் தோன்றும் மஹா மந்த்ரங்களின் உட்பொருளாய், உரைப் பொருளாய், உணர் பொருளாய், வேத வொலிகளும் கீத இசைகளும் நாதத் தொனிகளும் சென்று ஓய்ந்து ஒடுங்கி மறுபடியும் உதித்தற்காதாரமின்றாய், எவ்வுலகும் எவ்வுயிரும் எப்பொருளும் எத்தொழிலும் இயற்றவல்ல இயக்கவல்ல அளிக்கவல்ல அழிக்கவல்ல அருளுடைத்தாய், வேதாந்த சித்தாந்த நாதாந்த போதாந்த யோகாந்த கலாந்தங்களின் நிலையமாய், எல்லாம் வல்லதாய், எங்கும் நிறைந்ததாய், ஆதி நடு அந்தம் அனைத்துங் கடந்ததாய், குறியுங் குணமுங் கோலமுமற்றதாய், போக்கும் வரவும் புணர்வு மிலாதாய், வாக்கு மனச் செயலாற் காணலுறாதாய், அறிவுக் கறிதியாய், ஐந்தொழிற்கு மப்புறமாய், எவ்வுயிர்க்குந் தஞ்சமென நிற்கும் ஏகப்பொருளாய், மூன்றுங் கருவின்றி முளைத்தெழுங் கருவாய், அருளே உருவன்றி அன்னிய உருவிலதாய், இச்சா ஞானக் கிரியையைக் கதிதமாய், ஜாதி குலம் பிறப் பிறப்பு சார்ந்த பந்த முத்தி யின்றாய், அருவுரு நாமம் யாதுமிலாதாய், எப்பொருட்கண்ணும் எவ்வெவ்விடத்தும் பிரிவற நின்றே இயக்கம் புரியும் மாத் தூவெளியாய், ஐம்பூத இயல்கட்கும் அப்பாலுக் கப்பாலாய், பழமையிற் பழமையாய், புதுமையிற் புதுமையாய், உயிருக் குயிராய், அறிவுக் கறிவாய், உருவாய் அருவாய், உளதாய் இலதாய், மருவாய் மலராய், மணியாய் ஒளியாய், கருவாய் உயிராய், கதியாய் விதியாய், குருவாய் இறையாய், கோனுய் குடியாய், கதிராய் மதியாய், கணக்கில் உடுவாய், நாளாய் கோளாய், நலிவில்லாதாய், கண்ணில் மணியாய், மணியில் ஒளியாய், நூலில் நுண்மையாய், பாலில் வெண்மையாய், கல்லில் திண்மையாய், கருத்தில் உண்மையாய், நீரில் தண்மையாய், நெருப்பில் வெம்மையாய், மலரில் மணமாய், மருவும் நிறமாய், சொல்லில் ஒலியாய், சொல்லின்

பொருளாய், நித்யானந்த சத்யானந்த ஞானானந்த பரமானந்த சொரூபானந்த சுகானந்த ஆத்மானந்த அருளானந்த திவ்யானந்த தேஜோமயானந்த பேரானந்த பிரம்மானந்த தயானந்த சச்சிதானந்த சாந்தானந்த விமலானந்த விவேகானந்த ஏகானந்த இலட்சணானந்த கருணானந்த காவ்யானந்த சிவானந்த சின்மயானந்த சுத்தானந்த துரியானந்த ஜோதி ஸ்வரூப ஸ்வயம்ப்ரகாச திவ்ய மங்கள அனந்த கல்யாண குண விசேஷ ஸத்வ ஸ்வரூபியாய் விளங்கி, அளவிடற் கரிதாய அருளமுதம் பொழியும் முழு முதலாகிய பரம்பொருள், தனது திருவிளையாட்டால் பல உலகங்களையும் படைத்து, பல உயிர் வர்க்கங்களையும் படைத்து, அவரவர்களின் வினைக்கீடாக போகங்களைப் புசிப்பித்து, பக்குவமறிந்து, அருவாய், உருவாய், திருவாய், குருவாய் அவ்வப்போது தோன்றி அருள் புரிவதென்பது சுருதி யுக்தி அனுபவங்களால் நன்கு விளக்கம்.

அருவமாகவே அனேகருக்கு உணர்வுக் குணர்வாய்த் தோன்றி உள்ளொளி ஈந்தருளி யிருப்பதூஉம், உருவத்தில் ஆணையும், பெண்ணையும், குருவாயும் வந்து அளவற்ற பக்த சிகாமணிகளுக்கு அருள்புரிந் திருப்பதூஉம் ஆன்றோர் மொழிகளால் அறிதற் பாலதாம்.

அப் பரம்பொருள் "வாசவி" என்னும் பெயர் கொண்ட ஓர் பெண்ணுருவத்துடன் உலகில் தோன்றி அனுக்கிரகித்த வரலாற்றைச் சற்று கவனிப்பாம்.

†வானளாவிய உயரமுடைத்தாய், தேனளாவிய மலர்களுடைத்தாய், பண்ணளாவிய வண்டினமுடைத்தாய், கண்ணளாவிய கவின்மிக வுடைத்தாய், சார்ந்தோர் பவத்தைத் தகர்க்கும் வன்மைத்தாய், கருவழி தோன்றி உருவ அழி வரையும் துன்பந் தரும் இம் மாயப் பிறவியை மாய்த்தருள் திறத்ததாய், நைமிச மென்னும்

†தற்கால ஆராய்ச்சிக்காரர்கள் வாசவி இருந்த காலம் கி. பி. 1015 முதல் 1022 வரை வேங்கி நாட்டை அரசாண்ட ஏழாம் விஷ்ணு வர்த்தனனின் காலம் என்று கூறியிருந்த போதிலும், புராணம் வரைவோர் ஆன்றோர் வாயிலாகக் கூறுதல் வழக்கமாதலானும், எல்லா புராணங்களும் சூத முனிவர் வாயிலாகவே கூறப்பெற்றுள்ளன வாதலானும், இந்நாளும் இதுவரையில் பல கவிஞர்களால் அவ்வாறே வரையப் பெற்றுள்ள தாதலானும், நாமும் சூத புராணிகர் வாயிலாகச் சொல்வது நலனெனப் பலர் அபிப்பிராயமிருந்தமையானும் இவ்வாறு இவ்வரலாற்றை வரைய நேர்ந்தாம்.

நாம முடைத்தாய்த் திகழும் திவ்யாரண்யத்தி னிடையே எக்காலத்தும் எண்ணிறந்த புண்ணிய சீலர்களும், அவநெறி நீக்கித் தவநெறி பேணும் தபோ மகிமை வாய்ந்த மஹரிஷிகளும், ஆத்ம ஞானிகளும், ஆத்ம ஞானம், யோகாப்யாசம், சாஸ்த்ராப்யாசம் முதலிய பயிலும் பண்புடைச் சீடர்களும் செறிந்து திகழ்வர்.

அத்தகைய தபோ வனத்தின்கண், ஒருநாள் ஓர் அழகிய திவ்யாசனத்தில் அமர்ந்திருந்த (வேதவ்யாஸ பகவானின் ப்ரதம சிஷ்யராகிய) சூத மகா முனிவரை, மஹரிஷிகள் யாவரும் அன்புடன் வணங்கி, சில மொழிகள் புகலத் தொடங்கினர்.

"அன்பும் அருளும் மிக்க அடிகளாகிய தேவரீர், தேவர், முனிவர், ப்ராம்மணர், க்ஷத்ரியர் முதலாயவர்களின் சரித்திரங்களை இனிது மொழிந்து மகிழ்வித்தீர். கடலுடை யணிந்த இம் மாபெரும் புவியில் வாழும் பல்லுயிர்கட்கும் ஆன்ம திருப்தியை அளிக்கக்கூடிய அன்னத்தை அளவிலாது சொரிந்து, கோ ரக்ஷணை புரிந்து, க்ஷீரத்தைப் பெருக்கி, ஞானத்தை வளர்த்து, ஆத்மானு சந்தானத்தை அளிக்க வல்ல த்விஜர்களாகிய வைசியர்களின் குலப்பெருமையை நாங்கள் கேட்டு மகிழ அவாவுறுகின்றமையின் தாங்கள் தயவு செய்து திருவாய் மலர்ந்தருள வேண்டும்" என வணங்கிப் பிரார்த்தித்தனர்.

இவ்வாறு வினவிய தவசிகாமணிகளைப்பார்த்து சூதமகா முனிவர் கூறத் தொடங்கினர். "அப்பு தத்துவத்தின் குணம் நான்கிலிருந்து உண்டானவைகளாய், சிறந்த நான்கு மகா வாக்கியங்களையுடையதாய், ஆத்மானுபவம் அடைதற்கு மனமடங்கும் பல முறைகளைத் தெரிவிக்கக்கூடிய அங்க உபாங்க சாங்க ப்ரத்தியங்கங்களையுடையதாய், பொது வகையினாற் பதி பசு பாச லக்ஷணங்களையும் சிறப்பு வகையாற் பதி லக்ஷணத்தையும் விளக்குவதாய் உள்ள நான்கு வேதங்களின் உட்பொருள்களையும், சிறப்பு வகையாற் பசு லக்ஷணத்தை விளக்கும் ஆகமங்களையும், அவ்வாறே பாச லக்ஷணத்தை விளக்கும் பல புராணங்களையும், பக்தியை விளக்கும் இதிகாசங்களையும், கர்மத்தை விளக்கும் அநேக ஸ்மிருதிகளையும், தேவ ரிஷி ப்ரம்ம க்ஷத்ரியர்களின் விருத்தாந்தங்களையும் மகா தபஸ்விகளாகிய நீவிர்

நம்மிடத்தில் கேட்டிருக்கின்றீர்கள். லோகோபகாரிகளாகவும், லோக ஜீவ நாடிகளாகவும், வித்யா கலா வ்ருத்திகளுக்கு ஆதாரபூத மானவர்களாகவும் விளங்குகின்ற வைசிய ஸ்ரேஷ்டர்களின் விருத்தாந்த விபவங்களைக் கூறும்படி கேட்டது எமக்கு மிக்க சந்துஷ்டியைத் தருகின்றது. ஆதலின் கூறுகின்றோம். சாவதானமாய்க் கேட்பீர்களாக" என்று தொடங்கி, முதலில் தமது பரமாசாரியராகிய ஸ்ரீ வேத வியாச பகவானை த்ரிகரண சுத்தியாய்த் தியானித்து ஸ்தோத்திரம் செய்து சொல்லலாயினர்.

"ஆதிகாலத்தில் யாவரும் வைசியர்களே என்பது மிகையாகாது. வேதங்களை ஆதாரமாகக்கொண்டு உற்று நோக்கின், எல்லா ஜனங்களுமே "விச" சப்தத்தினால் அறிவுறுத்தப்படுகிறார்கள். †பத இலக்கணப்படி விசர்களே வைசியர்கள் எனக் கொள்ளப்படுகிறது. அவ்வாறிருக்க, அத்தனைச் சிறப்பு வாய்ந்த வைசிய சமூகத்தினரைப் பற்றி நாம் கூறுமல் வேறு யாரைப் பற்றித்தான் முக்யமாகக் கூற இயலும்? அவர்கள் வேத தர்மமும் நல்லொழுக்கமும் தன்னடக்கமும் ஈகையும் புகழும் கல்வியும் செல்வமும் விசால புத்தியும் விரிந்த ஆராய்ச்சியும் தெய்வ நம்பிக்கையும் தயாள குணமும் பெருந்தன்மையும் அன்பும் அருளும் இன்பும் எழிலும் நண்பும் நலனும் பண்பும் பயனும் திறனும் தெளிவும் பக்தியும் ஞானமும் அனைத்தும் பெற்று விளங்கும் சீரியராவர். ஒவ்வோர் ஊரிலும் அவர்கள் வாழும் இடமும் வாணிபம் முதலிய நடாத்தும் இடமும் ஊர் நடுவில் தக்க மதிப்புள்ள இடமாக இருக்கும். எவ்வகுப்பினரும் எத்துறையினரும் அவர்களுடைய வார்த்தைகட்கு மதிப்புக் கொடுப்பர். எக்காரணம் பற்றியும் அவர்கள் மானத்தையும் சத்யத்தையும் நம்பிக்கை யுறுதியையும் பரோபகார சிந்தையையும் சதாசார சீலத்தையும் கைவிடத் துணியார். பிறர்க்கென வாழுவே பிரியப்படுவர். "அனைவர்க்கும் உதவி செய்யவே ஆண்டவன் நம்மைப் படைத்துளான்" என்னும் அற்புத எண்ணத்தை அகத்தினில் கொண்டு அவனியில் வாழ்வர். அவர்களது சீர்த்திகள் யாவும் செப்புதற் கரிதாகும். மேலும் அவர்கள் குலத்தில் ஸ்ரீ பராசக்தி யம்மையார் திருவவதரித்ததன் காரணத்தால் அம்மரபின் பெருமை மிகவும் சிறந்து விளங்கலாயிற்று" என்றனர்.

† 'விச', 'வைசிய' பதப் பொருள் விபரம் உபோற்காதத்தில் காண்க.

அது கேட்ட முனிபுங்கவர்கள் சூத முனிவரைப் பார்த்து "ஸ்வாமீ! அப் பராசக்தியின் அவதார சரித்திரத்தை விவரமாகச் சொல்லியருளல் வேண்டும்" என் று கேட்டுக்கொள்ள, சூதமா முனிவர் சொல்லுவாராயினர்.

பராசக்தியின் அவதாரமாகிய அத்தகைய சிறந்த சரித்திரத்தை "ஸ்ரீ வாசவீ விஜயம்" என்ற பெயருடன் வரைதல் வேண்டுமென அடியேனுக்குக் கட்டளை கிடைத்தது. ஸ்ரீ வாசவாம்பிகையின் தண் ணருள் நம்மை இத் திருத்தொண்டில் ஈடுபடச் செய்கிறதென்பதை யுன்னி மியந்தும் உவந்தும் ஒப்புக்கொண்டு வரையத் துணிந்தனன். எழுகடல் நீரையும் எளிதில் பருக எண்ணித் துணிந்த ஒரு சிறு கொசுகைப் போலத் தமியேன் ஆய்ந்தோய்ந்து பாராமல் துணிந்து விட்ட போதிலும், பஞ்சத்ராவிட பாஷா ஞானம் மிகுந்தொளிரும் உத்தமரும், தென்னாட்டு ஆர்ய வைஸ்ய சமூகத்திற்கே ஒரு சிரோ ரத்னம் போன்றவரும், சேவைக்கென்றே தம் உடல் பொருள் ஆவி அனைத்தையும் உண்மையில் அர்ப்பணம் செய்து விளங்கும் த்யாக சிலருமான சேலம் ஸ்ரீமான். M. V. கோபால் ஸ்ரேஷ்டியார், அவ ருடைய குருவாகிய கோவை, உபய பாஷாப்ரவீண பண்டிதராய ஸ்ரீமான். க்ரந்தி வேங்கட கோபால ஸ்ரேஷ்டியார் ஆகிய இருவர் களின் உதவிகொண்டு ஒருவாறு இத் திருத்தொண்டை இனிது நிறை வேற்ற இறைவி அருளின் துணை கிடைக்கப்பெற்றது. இந்நூலில் உள்ள பிழைகளைத் திருத்தித் தந்து, குணங்களின் பயனை எல்லாம் வல்ல இறைவிக்கு அர்ப்பணம் செய்து ஆசி கூறுமாறு பிரார்த்திக் கின்றனன்.

கே. வெங்கட்ராமன்.

கே. வெங்கட்ராமன் (ஆனத்தூர்), இ. வேங்கடகோபால் செட்டியார் (கோவை), M. V. கோபால் (சேலம்).



எண்டிசையுஞ் சென்றெங்கு மெல்வியிக்குந் செய்திருந்த, தெண்டோட கொடுக்கந்த சுகம்.

ஸ்ரீ வாசவீ விஜயம்.

முதல் அத்தியாயம்

அன்பே! எனன்பிற்கு வித்தே! எ ன்றிவே! அவ்
வறிவினுக் கறிவே! அதில்
அனவரத மூறிடும் ஆனந்த வெள்ளமே!
அருள்பழுத் தோங்கு கனியே!

இன்பே! இகம்பர மிரண்டினு மேயுதவு
மினிய வமுதே! எனுறவே!
என்மெய்த் தவப்பயனில் விளைஞான போதமே!
எங்கள்குல தெய்வ மணியே!

துன்பே நவிர்த்தருள் வழங்கும் வாரிதியே!
சுகாதீத மோன வடிவே!
துரியநிறை வெளியே! சொலற்கரிய பொருளே!
சுயஞ்ஜோதி யான வொளியே!

நின்பாத பத்மந் துதிக்கின்ற தேயன்றி
நீள்புவியி லொன்றும் வேண்டேன்;
நெடியபிற விக்கடல் கடத்திமுத் திக்கரையில்
நேயமொடு சேர்த் தருள்கவே.

முதல் அத்தியாயம்.

[முதற் பகுதி]

*

அன்பிற் கரைந்திறைவிக் கன்புவழி பாடுசெயின்
இன்பம் பெறத்தடையொன் றில்.

ஓம்

ஸ்ரீ வாசவீ விஜயம்.

முதல் அத்தியாயம்.

[முதற் பகுதி]

ஓமென ஒலித்திடும் உயர்நதிப் பெருமையும்
பூமக ளருள்மிகு புரங்களும் வைஸ்யரும்.

ஓமெனும் வெளியாய் நிலைபெறுஞ் சக்தி யுமைதிரு நாமக ளாகி
மாமறைப் பொருளும் ஆகமத் துறையும் மந்திரப் படிவமு மாகி
நாமமும் உருவும் பலப்பல வாகி நலமிகு வைசியர் மரபில்
சோமதல் வதன வாசவி யாகிச் சொரிதிரு வருளினைத் துதிப்பாம்.

ஓமெனும் ஒலியை ஒழுங்குற இசைத்தெழுந் தரங்கக் கருங்கட லுடையணி தாரணியில் மிகச் சிறந்ததாய், அள விறந்த புண்ணிய சீலர்களும் அநேக பக்த கோடிகளும் ஆத்ம ஞானிகளும் சிறந்த த்யாகிகளும் உத்தம வீரர்களும் மகா கவிகளும் தோன்றி விளங்கிய சிறப்புடையதாய், "புண்ணிய பூமி" யென்றே தொன்றுதொட்டு யாவராலும் புகழப்பட்டதாய்த் திகழும் பரதகண்டத்தின் கண்ணே, அருங் கலைவாணரும் அனைவரும் புகழும் அற்புதப் பெருமைவாய்ந்த ஆந்திர தேசத்தில் (தற்காலம் "கோதாவரி ஜில்லா" என்ற பெயருடன் விளங்குமிடத்தில்) இயற்கை யின் அழகை இனிதே விளக்கும் "**ப்ருகதத்ரி**" என்னும் மலையொன் றுளது.

மலையின் மாண்பு.

அவ்வழகிய மலையானது, அகில் சந்தனம் தேவதாரம் தேக்கு நூக்கு கருங்காலி முதலிய பல விருக்ஷ ஜாதிகளையும், ஏலம் க்ராம்பு ஜாதிக்காய் குங்குமப்பூ முதலிய வாசனத்ரவ்யங்களையும், மிளகு தக்கோலம் கடுகு சோம்பு ஜீரகம் முதலிய சம்பார வர்க்கங்களையும், வேல் தைத்த புண் மாற்றும் மருந்தாகிய சல்லியகரணி, துணிக்கப் பட்ட உறுப்பைப் பொருத்தும் மருந்தாகிய சந்தான கரணி, வ்ரணந் தீர்க்கும் வல்லமை வாய்ந்த சமனிய கரணி, பல நோய்களைக் குணப்படுத்தக்கூடிய அநேகவித மூலிகைகள், பற்பல வகையான மருந்து சாமான்கள், காய் கனி கிழங்கு வேர் வர்க்கங்கள் ஆதிய பலவற்றையும் தன்னகத்தே கொண்டுளதன்றி, இவை முதலான ஏனைய பல நுண்பொருள்களையும் அரும்பொருள்களையும் விளைவிக்கத் தக்க பெருஞ் சிறப்பிருந்தும், கல்வியிலும் செல்வத்திலும் நற்குண நற்செய்கைகளிலும் ஒழுக்கத்திலும் மிக்க மேலோர்களின் அடக்கம் வாய்ந்த தோற்றம்போல, அதிக உயரமாய் வளராமல் சற்று அடங்கியே இருக்கும் தோற்றத்தைக் கொண்டு விளங்கும்.

ஆயினும், அம்மலை, ஆங்கு சுற்றிலுமுள்ள மலைகள் குன்றுகள் அனைத்தைக் காட்டிலும் பெரியதாகவே தோன்றும் நிலை, அடக்கமான தோற்றத்துடன் இருந்தபோதிலும் விழுமியோர்களின் சீரும் சிறப்பும் பேரும் புகழும் மாண்பும் மதிப்பும் மல்கியே விளங்கலை மன்பதைக் குணர்த்தும்.

மேலும், நிலமகள் தனது மக்கள் கலைபல கற்றுத் தொழில் பல பேணி அன்பு செறிந்தே இன்ப வாழ்வெய்தலைக் காண விரும்பித் தனது சிரசை நிமிர்த்திக்கொண்டு உயிர் வர்க்கங்களையும் பயிர் வர்க்கங்களையும் பல்வளன்களையும் பார்த்துப் பார்த்து பரமானந்த மடைதல் போலும் தோன்றும்.

அன்றியும், அம்மலையினிடமாக அநேக ஜீவராசிகள் வாசம் புரிவதும், அநேக கால் நடைகள் பசும்புல் மேய்தலும் வெகு நேர்த்தியாயிருக்கும். அவைகள் அருந்தற்கும், மேலே செல்லும் மாந்தர்கள் நீராடுதற்கும் ஏற்றதாகி, அப்பருவதமாம் மடந்தையின் பருமணி மார்பிற் றிகழும் வைரப் பதக்கங்கள் போன்றும், உண்மை

யன்பர்களின் (கண்ணுடி யனைய) களங்கமற்ற கலக்கமற்ற தெள்ளத் தெளிந்த மனத்தைப் போன்றும் விளங்கும் பல தெண்ணீர்ச் சுனைகள் நிம்மதமாய்த் திகழும்.

அம் மலையாகிய மங்கை மார்பி லணிந்திலகும் முத்தாரங்களைப் போலவும், எல்லாம்வல்ல இறைவனனவன் பஞ்ச பூதங்களி லொன்றுன பிரிதிவி யம்சமாகிய மலையுருக்கொண்டு பெருக்கும் கருணை வெள்ளத்தைப் போலவும், இறைவனுடைய பக்தியிற் பழுத்து உன்னத நிலையை அடைந்த அன்பர்கள் பரமாத்மாவின் திவ்ய தரிசனங் கண்டு தம் வசம் அழிந்து பரவசராகித் தமது திருக்கண்களினின்றும் பெருக்கும் ஆனந்த பாஷ்பம் போலவும் பெருகிப் புவியை நோக்கி ஓங்கார ஒலியுடன் இறங்கி வழிகின்ற பல அருவிகளும், சிற்றாறுகளும் அற்புதத் தோற்றத்தைத் தரும்.

அம் மலையின் சிகரத்திலும், ஆங்காங்குள்ள பல விருட்சங்களின் மீதும் மேகங்கள் தவழ்வது மிக்க அழகாக இருக்கும். சிகரத்திற்கு நேரே பிறைச் சந்திரன் வருகையில் பார்த்தால், அம் மலை சந்திரசேகரனை சிவபெருமானைப்போல் தோன்றும். சில சமயங்களில் காலையிலும் மாலையிலும் பார்த்தால், ஒருபுறம் சூரியனும், மற்றொருபுறம் சந்திரனும் இருக்க, நடுவிலுள்ள இம் மலை, சூர்ய சந்திரர்களையே குண்டலங்களாகக் காதிலணிந்து விராட் புருடனே விளங்குவது போலவும் தோன்றும். இரு புறங்களிலும் மணிக் குடங்களைக் கட்டிய காவடி யொன்றைச் சுமந்து ஒரு மகாபுருஷன் நிற்பது போலவும் விளங்கும். பூமாதேவியின் பொறுமை முழுதும் ஒருருக் கொண்டு பொலிவதைப் போலவும் தோன்றும்.

ஒரு சிறந்த உத்தமன் எழுந்து நின்று " என்னிடத்தில் அநேக விதப் பொருள்கள் உள்ளன; இங்கு வந்தால் அனைத்தும் பெறலாம்; இறைவனையும் தரிசிக்கலாம்; வாழ்வையும் மேன்மைப் படுத்திக்கொள்ளலாம்; ஆத்ம ஞானமும் அடையலாம்; எல்லாவற்றையும் எய்தப் பெற்று, இன்புறலாம்; ஆதலின், யாவரும் வம்மின் ! இங்கனே வம்மின் !! விரைந்து வம்மின் !!! " எனக் கூறி அழைத்தல் போலவும் தோன்றும்.

இத்தகைய பல அரிய வுணர்ச்சிகளே நல்கும் அம் மலையின் எழில் மிகு தோற்றம் எல்லோர் மனத்தையும் கவரத் தக்க உன்னத நிலையி லிருக்கும்.

வான்சொரி மழையின் வர்ணனை

பரந்து விரிந்த இப் பாரின் கண்ணே பஞ்சமும் பிணியும் ஏட்டிப் பாராமல் பறந்தோடுமாறும், ஆன்ம வர்க்கங்களின் அறிவுச் சுடரை ஏற்றுமாறும், செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, உண்மை, அன்பு, ஈகை, ஜீவ தயை, பரோபகாரம், அடக்கம், பணிவு, பக்தி, ஞானம், வீரம், வைராக்யம், சேவை, புகழ் முதலிய நற்குணங்களைப் போதிக்குமாறும் மானிடப் பிறவி தாங்கிய ஒவ்வொரு ஆணும் பெண்ணும் சிரத்தை கொண்டு உதவி புரிதல் அத்யாவசியமாகும். ஆதலின் மேலோர்கள், தம்மிடத்திற் செல்வமில்லாது போன காலத்தும், மேற்கூறிய நல்லெண்ணங்கள் (அவர்தம் மாசில் மனத்தகத்தே) தோன்றப் பெற்று, பல திரவிய வந்தர்களைச் சந்தித்து, ஸத் விஷயங்களின் நன்மைகளை நன்கு விளக்கி, அவர்களுடைய செல்வத்தைக் கொண்டு, தன்னல மென்பதைச் சற்று மென்னாது, பொது நலச் சேவைகளை அளவறப் புரிந்து, அச் செல்வ வந்தர்களின் திரவியம் யாவும் லோகோபகாரமான ஸத் விஷயங்கட்குச் செலவழிந்தமையை யுன்னி மகிழ்ந்து மனை சாந்தி யுறுவர் என்பதை யாவரும் அறிந்து உணர்ந்து ஒழுகும்படிக்கு உதாரணமாக நின் று உணர்த்துவது போல, †மேகங்களானவை ஆற்று நீர், ஊற்று நீர், வேற்று நீர் அல்லது மழை நீர் ஆகிய மூன்நீர் கலந்த முறையினற் றிகழும் சமுத்திரத்திலுள்ள உவர் நீரை முகந்து வந்து, நன்னீராக மாற்றி, உலகிலுள்ள மனுஷ்ய ம்ருக பக்ஷி க்ருமி கீட ஜாதிகளும், மரம் செடி கொடி புல் பூண்டு முதலிய ஸ்தாவர வர்க்கங்களும் உஜ்ஜீவிப்பான் வேண்டி மழையாக மாதம் மூன்று முறை தவறாது காலத்திற் கேற்பச் சுகங் கொடுத்து வருஷித்துக் கொண்டிருக்கும்.

அம் மழைப்பொழிவைப் பார்க்கின், பல அற்புத உணர்ச்சிகள் தோன்றி நிற்கும். §நீருண்ட கருங்கொண்டல்கள், சகல

† நன்னெறி "பிழைக்குதவி" § மணிவாசகர் திருவெம்பாவை.

உலகங்களையும் உயிர் வர்க்கங்களையும் ரக்ஷிக்கும் பராசக்தியைப்போல வும், வளைந்து அழகு தந்து விளங்கும் வான வில்லானது அவ்வம்மை யின் நீண்ட புருவங்களைப் போலவும், பிரகாசிக்கின்ற மின்னலானது அப்பிராட்டியின் இடையில் ஒளிரும் மேகலாபரணம் (ஒட்டியாணம்) போலவும், இடிச் சப்தமானது அவ்வன்னையின் திருவடிகளில் அணியப்பெற்ற மாற்றுயர்ந்த பொற் சிலம்புகளின் ஒலியைப் போல வும், உவரை நீக்கி, †அருந்துபவர்க்கு அருந்துதற்காய உணவுப் பொருள்களை (மண்ணெடு தானுங் கலந்திருந்து) உண்டாக்க வல்ல, உண்டாகிய (தானியம் இலை காய் கனி பதார்த்தமாதி) உணவு களை அருந்துதற்குத் தக்க பக்குவப்படுத்த வல்ல, தனியாகவே (தாக சாந்தியாக) அருந்துதற்கும் உதவ வல்ல தெண்ணீராக மாற்றிப் பொழியப்பெறும் மழையானது, அன்பு மிக்க உண்மைப் பக்தர்கள் அறியாதியற்றிய பாவங்கள் அனேந்தையும் தானே ஏற்றுக்கொண்டு, பரிசுத்தப்படுத்தி, அவர்களுக்குப் பொழியும் பேரானந்தத் திருவருள் போலவும் தோன்றும்

அன்றியும், அம்முகில்கள் சர்வலோக சரண்ய னும் நீலமேக ஸ்யாமள வண்ணனுமான திருமாலைப் போலவும், பெய்யும் மழையானது அத் திருமால் தமது தேவியாராகிய நில மக ளுடன் விளையாடுவான் எண்ணி சிறிறி கொண்டு நீரை அவள் மீது பொழிவது போலவும் தோன்றும்.

§அன்றியும், மேகங்கள் திருமாலைப் போலும், மின்னல்கள் அந் நாராயணமூர்த்தியின் வலத் திருக் கரத்தில் இலங்கும் சுதரிசனம் எனும் சக்ரத்தினுடைய ஒளியைப் போலும், இடி முழக்கமானது அப் பெருமானின் இடத் திருக் கரத்தில் இலங்கும் பாஞ்ச ஜன்யம் எனும் சங்கத்தின் தொனியைப் போலும், மழைத் துளிகளானவை அப்பகவன் தனது சார்ங்கம் எனும் வில்லை வளைத்துப் பெய்யும் சர மழையைப் போலும் தோன்றும்.

மேலும், ‡கரும்புயல்கள் கடல்நீரை முகத்தல் வேதம் முதலிய நூல்களி லமைந்த உண்மைப்பொருள்கள் யாவையும் உணர்வதையும்,

†குறள் "துப்பார்க்கு" §ஆண்டாள் திருப்பாவை. ‡மேகங்கட்கும் சற்குருவுக்கும் உவமை.

உப்புச் சுவை நீக்கி நன்னீராக்கல் அவற்றிலுள்ள எழுத்துப் பிழை சொற்பிழை பொருட்பிழை முதலாயவற்றைக் களைந்து தம் கருத்தில் இருத்துவதையும், உயிர்களும் பயிர்களும் வான் சுரப்பை விரும்பி வாடுந் தருணத்தில் அக்குறியறிந்து செழுமழையைப் பொழிதல் ஆன்மாக்களின் பக்குவ நிலையறிந்து (அவர்களுடைய ஆகாம்ய சஞ்சித ப்ராரப்தங்களாகிய முக்கர்மங்களையும் ஊழித் தீ முன் பஞ்சைப்போல பஸ்மீகரிக்க எண்ணி மானஸீக, நேத்ர வீக்ஷண்ய, அஸ்த மஸ்தக ஸையோக, பாதாதி தீக்ஷைகளாலும் அருள் புரிவ தன்றி) வாக் தீக்ஷையாகிய உபதேசத்தினுல் சகல சாஸ்த்ர உண்மைகளையும் திவ்ய மந்த்ர ப்ரபாவங்களையும் உணர்த்தும் திவ்ய ஞான வாக்குகளைப் பொழிவதையும் போலத் தோன்றலால், உண்மை ஞானம் உணர்த்த வல்ல சற்குரு நாதனையும் ஞாபகப்படுத்தும்.

†அன்றியும், கைம்மாறு வேண்டாக் கடப்பாடுடைய அம்மாரியானது, "மேலோர்கள் தமக்குக் கிடைத்த நல்ல பொருள்களை அப் பொருள்நசையுடைய மெய்யன்பர்கள் யாங்கண் இருப்பினும் அவண் தாமே சென்று, அவர்களிடமிருந்து யாதொருவித ப்ரதி ப்ரயோஜனத்தையும் எதிர்நோக்காது, அவர்களுடைய வெகுமதிகளையும் முகமன் மொழிகளையும் விரும்பாது, தம்மிடத்துள்ள பொருளை அவர்கட்கு ஈந்து உதவலால், அப்பயன்றூக்கார் செய்யும் உதவியை நயன்றூக்கி நோக்கின், அந்நன்மை கடலினும் பெரிதாகும்" எனத் தெரிவித்தல் போலுந் தோன்றும்.

கோதாவரியின் கோதிலாப் பெருமை

"பொதுநலங் கருதாது சுயநலமே கருதும் செல்வவந்தர்களே! சர்வேஸ்வரன் ஒரு சிலரிடம் ஏராளமான திரவியங்களை என் கொடுத்தருளுகின்றனெனின், நாட்டிலுள்ள யாவரும் பசிப்பிணியாற் பரிதபிக்காமல் இருக்கவும், கல்வி அன்பு பொறுமை வீரம் ஒழுக்கம் முதலாயவற்றிற் சிறந்தவராக விளங்கவும் வேண்டுமெனக் கருதி லோகோபகாரம் செய்வதற்கேயாகும். ஆதலால், இதனை நன்குணர்ந்து எல்லா உயிர்களும் அடையும் உண்மை இன்பங்களுக்காக அவரவர்களிடமுள்ள

† நன்னெறி "எல்லாமுகமன்"

திரவியங்களைத் தாராளமாக வினியோகித்துச் சீரும் சிறப்பும் பேரும் புகழும் பெற்றுப் பெருவாழ்வுறுமின்!" என நீதி நெறியை யுணர்த்த வேண்டிப் படிந்தோர் பவத்தைப் பல்மீகரிக்கத்தக்க புண்ய நதிகளில் ஒன்றுகிய கோதாவரியானது தன்னிடமிருந்து பெருங் கிளை நதி யொன்றை அனுப்பியதேபோல, ஓர் நதியானது கோதாவரியினின் றும் பிரிந்து ஆனந்தந் தரும் ஆண்டவன் அருட்பிரவாகம் போலவும், உலக நன்மையையே விரும்பும் மேலோர்களுடைய பேரன்பு போலவும் வேகமாக வந்து, ஆங்காங்கு இடையிடையே யுள்ள ஏரிகளையெல்லாம் நிரப்பிக்கொண்டே, அப்புண்ய சீலர்கள் (எந்நிலத்தாரும், எக்குலத்தாரும், எம்மதத்தாரும், எவ்வுயி ரும், எவ்வுருவும் சென் றெடுங்கக்கூடிய) பரமாத்மாவினிடம் ஐக்ய முறுகின்றதே போல், (பல நதிகளும் சென்றெடுங்கவும், தன்னை யடைந்த எந்நீருக்கும் தன் பெயரும், தன் நிறமும், தன் சுவையும் தந்து, தன் மயமாக்கும் தன்மை வாய்ந்த) பெருஞ் சமுத்திரத்தி னிடத்தே சென்று கலக்கும்.

மருதச் சிறப்பு.

இடையிடையே ஆங்காங்கு பல ஏரிகள் முதலிய நீர் நிலை களில் நிரம்பித் தேங்கிய தண்ணீரானது (எங்கும் அறிவு மயமாகச்செறிந்து பரிபூர்ணமாய் நிறைந்த திருவருளானது, அண்டபிண்ட சராசரங்களாகிய அனைத்துயிர்கட்கும் இன்பம் அளிக்கவேண்டி, பல சக்திகளின் மூல மாகவும், பல மூர்த்திகளின் மூலமாகவும், பல அடியார்களின் மூல மாகவும் வெளிப்படல் போலப்) பல பெரு மதகுகள், சிறு மதகுகள், கால்வாய்கள் முதலியவற்றின் வழியாக வெளிப்பட்டு, பல சிறு சிறு வாய்க்கால்களாகப் பிரிந்து, வயல்களினுள்ளே புகுந்து, அநேக உயிர் களுக்கும் பயிர்களுக்கும் வாழ்வளிக்க எண்ணிப் பாய்ந்துகொண் டிருக்கும்.

தாளம் பொழியும் சங்குகள் பலவும், தாமரை மலரும் கொடி கள் பலவும், மலர் நீலம் பல, மச்சம் பலபல, மல்குறும் வயல்களில் மடைகளின் வழியாய்த் தெண்ணீர் செறிந்து தேங்கித் திகழ்கையில், (ஜென்ம ஜென்மாந்திர தவத்தினுற் பிறந்த மேலோர் பலரும் எண் ணிலாப் பல்வித எண்ணங்கள் நிறைந்த மனமெனும் புனத்தை

அறிவாராய்ச்சியாம் கொழுவினுல் உழுதல் போல) உழவர்கள் பற் பலர் உழுதுகொண்டிருப்பர்.

அவ்வாறு அவர்கள் ஏருழும் அழகும், சால்வழியே சங்குகள் தவழும் அழகும், வாளைகள் வரால்கள் முதலிய மச்ச ஜாதிகள் பாய்ந்து புரண்டு பளிச்சுப் பளிச்சென ஒளி தரும் அழகும், ஞெண்டின் கூட்டம் நிறைந்தே குழுமி நெளிந்து நடந்து சென்றிடும் அழகும், முத்துக்களும் மணி வகைகளும் செறிந்து கிடந்திலங்கும் சீரழகும், (அம் மனமெனும் புனம் பண்பட்ட காலையில் பக்தியை நாட்டல் போல்) நாற்று நடுபவர் நடுகிற அழகும், (அன்பு நீர் பாய்ச்சல் போல்) ஆற்று நீர் பாய்ச்சலும், அந் நீர் பாய்ந்திடும் அற்புத அழகும், (காம க்ரோதக் களைகளைக் களைதல்போல்) அல்லி தாமரை நீலம் முதலிய மலர்களையும் இலைகளையும் செடிகளையும் கொடிகளையும் புல் பூண்டுகளையும் களைந்தெறியும் கடைகியர்களின் கட்டுரைகளி னெலி கலந்தெழு மழகும், (சாந்தம் நிரம்பித் தண்ணளி யுறல்போல்) தேங்கித் தெளிய நீரை நிறைக்குந் திவ்விய அழகும், (அருள் மீதூரல் போல்) கதிர்கள் முற்றிடும் கண்ணிறை யழகும், (இறைவன் காட்சியை எதிரே கண்டு இறைஞ்சுதல்போல்) விளைவு முதிர்ந்து கதிர்கள் பார் சாய்ந்திடும் வியன்சால் அழகும், (இறைவன் தோன்றியதும், ஜீவனிடத்துள்ள அஜ்ஞத்தை யகற்றுதற்போல்) அரிகளை அறுத்து, அடித்து, வையைப் பிரித்திடும் வாகா ரழகும், (ஆன்மாக்களை விமானத் தேற்றித் தன்னுல கழைத்துச் செல்லல்போல்) நெல்லைப் பாண்டிலின் மூலமாய் வீடு சேர்த்திடும் விழுமிய அழகும் அம் மருதப் பரப்பில் சாலச் சிறப்பாம்.

நகர் வளன்.

சந்த்ர மண்டல மளாவும் உன்னத எழில்மிகு கோபுரங்களும், மந்த்ரப் பொறிகள், சூக்ரப் பாவைகள் நிறுவிய முகில் தவழும் மதில்களும், ஆதிசேடனைக் காணச் செல்லும் ஆழமிக்க அகழியும், தம்மை அணுகும் உயிர் வர்க்கங்களைத் தமது இலைகளாகிய கரங்களால் "வருக! வருக!!" என நல்வரவு கூறி அழைத்து, தம் அருகில் அமரும்படித் தமது தண்ணிழலைத் தந்து, மென் காற்றுல் விசிறி, பலநிறம் பூனைந்த அழகிய மலர்களால் திவ்யமான நறுமணத்தை நுகர்வித்து,

இனைப்பையும் கனைப்பையும் எளிதினி லகற்றி, " இதோ! இந்த வனப்பும் இனிப்பும் மிக்க செழுங் கனிகளை யருந்துங்கள். 'இவற்றைப் பக்குவமாக சமைக்கவேண்டுமே' எனும் சிரமம் சிறிதும் கிடையாது. இவற்றை உயிர்கள் எளிதில் எடுத்து உட்கொள்ளுமாறு இறைவனே இனிது பக்குவப்படுத்தி ஈந்தருளுகின்றார் ஆதலின், இவற்றை அன்புடன் ஏற்று இனிதே புசித்து இன்பமடையுங்கள்!" என்று கூறுவது போல ஏராளமான செழுங் கனி வர்க்கங்களைத் தாங்கித் திகழும் பல சோலைகளும், சாலைகளும், உய்யானங்களும், நந்தவனங்களும், பூங்காவுகளும்,

சோலை யெழில்.

தெங்கு தேமா பலா விளா களா முந்திரி மாதுளை தாதுமாதுளை நார்த்தை எலுமிச்சை கொலுமிச்சை புளி இலந்தை கருநாவல் வெண்ணாவல் குழிநாவல் அத்தி பிரம்பு ஆரஞ்சி பொம்மிளிமாஸ் பேரீந்து திராட்சை அன்னசி அருநெல்லி பெருநெல்லி சந்தனம் அகில் பாதிரி புன்னை சுரபுன்னை அழிஞ்சில் குங்குமம் தேக்கு நாக்கு தேவதாரம் பனை கூந்தற்பனை தாளிப்பனை கமுகு மூங்கில் ஆல் அரசு பூவரசு புரசு புங்கு அசோகம் முருக்கு புனமுருக்கு முண்முருக்கு தேற்று மராமரம் வன்னி குருந்தம் வேங்கை ஆச்சா துரிஞ்சில் கருங்காலி செங்காலி இலுப்பை வேம்பு கொன்றை சரக்கொன்றை சவுக்கு குமிழ் கடம்பு மகிழ் கோங்கு சண்பகம் சிறுசண்பகம் மல்லிகை வனமல்லிகை மரமல்லிகை பவளமல்லிகை வாடாமல்லிகை ஜாதிமல்லிகை குண்டுமல்லிகை அடுக்குமல்லிகை முல்லை காயா வெட்சி இருவாட்சி துளசி வில்வம் அரளி மருவு மருக்கொழுந்து கதிர்ப்பச்சை அனிச்சம் அலரி தாழை நந்தியாவர்த்தம் செவ்வரத்தம் வாகை வாடாக்குறிஞ்சி செங்காந்தள் வெண்காந்தள் சூர்யகாந்தி முதலிய விருக்ஷ ஜாதிகளும், புஷ்பப் செடி வகைகளும்,

தோட்டச் சிறப்பு.

மலைவாழை மகரவாழை செவ்வாழை வெள்வாழை கருவாழை கர்ப்பூரவாழை உதிர்வாழை ரஸ்தாளிவாழை தேர்வாழை தேன்வாழை பேயன்வாழை மொந்தன் வாழை பூவன்வாழை பச்சைவாழை பங்காளவாழை நேந்திரன்வாழை முதலிய பல ரக வாழைத் தோட்டங்களும், செங்கரும்பு வெண்கரும்பு பண்ணைக்கரும்பு நாமதாரிக்கரும்பு

மூங்கிற்கரும்பு ரஸ்தாளிக்கரும்பு முதலான பலவித கருப்பந் தோட்டங்களும், வெற்றிலைத் தோட்டங்களும், இஞ்சித் தோட்டங்களும், மஞ்சள் தோட்டங்களும், பறங்கி பூசணி சாம்பற்பூசணி சர்க்கரைப் பூசணி சுரை அவரை புடல் பாகல் பீர்க்கு வெண்டை கத்தரி கொத்தவரை மிளகாய் கீரை முதலியன நிறைந்த பல தோட்டங்களும், கடலை துவரை மொச்சை உழுந்து கொள் காராமணி பெரும் பயறு பச்சைப்பயறு பனிப்பயறு முதலிய பயறு பண்டங்கள் விளையும் பல நிலங்களும், உருளை கருணை சேனை சேம்பு நல்லவள்ளி செவ்வள்ளி மரவள்ளிஓமவள்ளி இலைவள்ளி ஆள்வள்ளி சிறுவள்ளி பால்வள்ளி சர்க்கரைவள்ளி வெற்றிலைவள்ளி முள்ளங்கி வெங்காயம் முதலிய பல கிழங்குகள் விளை தோட்டங்களும், வெட்டிவேர் விளாமிச்சிவேர் குருவேர் முதலிய வேர் வகைகள் விளையும் தோட்டங்களும்,

நீர் நிலைகளின் நேர்த்தி.

ஏரிகளும், குளங்களும், வாவிகளும், வயற் கிணறுகளும், வஸந்த வோடைகளும், செங்குவளை யோடைகளும், ஆனந்த கூபமும், நறுநீர்த் தடாகமும், கைகால் சுத்தி செய்ய பல தனிக் குளங்களும், ஸ்நானம் செய்தற் குரிய பல தடாகங்களும், கால்நடைகளைக் குளிப் பாட்டற்குரிய பல குளங்களும், ஊருணி யுவளகங் களும், கேணிகளும், பல மடுக்களும், கிடங்குகளும், தாமரைப் பொய்கைகளும், அல்லித் தடங்களும் முதலாய பல நீர் நிலைகளும், தேர் நிலைகளும், யானைக் கூடங்களும், குதிரை லாயங்களும், சேனை யிடங்களும்,

மண்டப வனப்பு.

அரச மண்டபம் அந்தாணி மண்டபம் வேத மண்டபம் வேள்வி மண்டபம் நீதி மண்டபம் நிருத்த மண்டபம் கல்வி மண்டபம் கணித மண்டபம் கனக மண்டபம் கல்யாண மண்டபம் பாடல் மண்டபம் பளிங்கு மண்டபம் பச்சை மண்டபம் பவள மண்டபம் விசித்ர மண்டபம் விநோத மண்டபம் சித்ர மண்டபம் ஸ்வேத மண்டபம் தெய்வ மண்டபம் தென்றல் மண்டபம் (கதிரொளி கண்டு எரி கக்கும்) சூர்ய காந்த மண்டபம் (நிலவொளி கண்டு நீர் கக்கும்) சந்த்ர காந்த மண்டபம் முதலிய பல மண்டபங்களும்,

கட்டடக் கவின்.

மாட மாளிகைகளும், கூடகோபுரங்களும், உப்பரிகைகளும், மேல் மாடிகளும், முத்து மாளிகைகளும், ரத்ன பவனங்களும், கனக மந்திரங்களும், நீல நிலயங்களும், பொற்கலசங்களும், மணிச் சிகரங்களும், மாணிக்கப் பீடிகைகளும், மரகத மாடங்களும், முத்துச் சுவர்களும், சித்ரத் தெற்றிகளும், சிலம்பக் கூடங்களும், மணி முன்றில்களும், அங்கணங்களும், அரமியங்களும், சோபை மிக்க பல் சோபானங்களும், சூளிகைகளும், சாளரங்களும், (தெருப்பக்கத்தில் முன் புறமாக வீட்டில் உள்ளோர் உத்திரவை எதிர்பாராமல் வழிப்போக்கர்களும் இதர ஜனங்களும் தாராளமாக வரவும், உட்காரவும், வார்த்தையாடவும், கண் துயிலவும், சௌகரியமாக இருத்தற்கென்று வாசற்படிக் கிருபாலும் அமைக்கப்பட்ட அழகிய விசாலமான) பல திண்ணைகளும், தாழ்வாரங்களும், மணிப்பந்தர்களும், மகர தோரணங்களும், பூஜாக்ரகங்களும், செய்குன்றுகளும், பசுத் தொழுவங்களும், பசும் புல் தரைகளும், பாக சாலைகளும், யாக சாலைகளும், யோக சாலைகளும், பூக சாலைகளும், பாட சாலைகளும், பண்ட சாலைகளும், சகல சாஸ்த்ராப்யாச சாலைகளும், தேகாப்யாச சாலைகளும், ஆயுதச் சாலைகளும், அமுதச் சாலைகளும், அறச் சாலைகளும், அழகிய பல பொருட்காக்ஷி சாலைகளும், வைத்ய சாலைகளும், ப்ரஸவ (மருத்துவச்) சாலைகளும், புத்தக சாலைகளும், இன்னோரன்ன பிற பல வளன்கள் யாவும் இனிது நிறைந்த எழில் மிகு திவ்ய நகரம் ஒன்று, உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் சேரா தியல்வதாகி, முற்கூறிய ப்ருகதத்ரி மலைக்கடுத்து, கோதாவரி நதியின் கரைமீது விளங்கும். இந் நகரமானது அமைப்பிலும், அழகிலும், உயர்விலும், வளத்திலும், செல்வத்திலும், சீர்த்தியிலும் சிறந்ததாகி, பார்ப்போருக்கு ஒரு பெரிய மலை போலுந் தோற்றத்தைத் தருவதால் "பெரிய மலை" யெனும் பொருள்படத் தக்க ஆந்த்ர பதமாகிய "பெனு கொண்டா" என்னும் பெயரைப் பூண்டு பொலியலாயிற்று.

இத்தகைய நகரின் நடுவண், சகல செல்வ போகங்களும் நிறைந்த ராஜ அரண்மனை ரம்யமா யமைந்து காண்போர் மனத்தைக் கடிதினிற் கவர்ந்து கம்பீர தோற்றத்துடன் காட்சியளித்துக்கொண்டு கவினுறத் திகழும்.

தேவாலயங்கள்.

திங்களுங் கங்கையுந் திருமுடியி லிலகவும், திரி புண்டர மணி திருநுதல் மிளிரவும், அலர் கதிருந் தண்மதியும் அங்கியுமான மலர்க்கண் மூன்றுடன், மான் மழுதாங்கி, காளகண்ட சதுர்ப் புஜங்களுடன், மாகதச் சாயை தரும் மங்கை யுமையோடும், திவ்யமான மின்ன லொளி வீசுகின்ற பச்சை மலையுடன் கூடிய பவள மலையானது, ஓர் வெள்ளி மலைமீது வருவதுபோல, அநேக கோடி சூர்ய ப்ரகாசத் துடன் வ்ருஷப வாகனரூடராக, பக்தர்கள் முன் தோன்றி, வேண்டு வார் வேண்டியாங்கு திருவருள் புரியும் பரம கருணை மூர்த்தியாகிய சிவபெருமான் *"நகரேஸ்வரர்" எனும் திருநாமத்துடன் "விந்த வாஸினி" எனும் தேவியார் சமேதமாக எழுந்தருளியுள்ளதும், சிற்பக் கலைகள் யாவும் நிறைந்து செவ்வையாய்த் திகழ்வதுமான சிவாலயும் ஒரு புறம் சிறந்து விளங்கும்.

ஆலய அமைப்பும் ஆன்ம வுணர்ச்சியும்.

ஸ்ரீய:பதியாய், ஸ்ரீ வைகுண்ட வாசனுய், ஸர்வக்ஞனுய், ஸர்வ வியாபகனுய், ஸர்வாந்தர்யாமியாய், ஸர்வோத் கிருஷ்டனுய், ஜகத் ரக்ஷகனுய், ஆதி மத் யாந்த ரகிதனுய், அகில மங்கள குண ஸ்வரூபனுய், சரணாகதவத்ஸலனுய், சங்கு சக்ர கதா கட்க கோதண்ட மெனும் பஞ்சாயுதபாணியாய், இருபாலும் இரு பவளமலை படர்ந்த மரகத மலையொன்று, ஒரு பறக்குமலை மீதில் வருவதே யொத்து, ஸ்ரீ பூ தேவிகள் சகிதமாய் கருடாழ்வார் மீ தெழுந்தருளி பக்தர்கட்கு சேவை சாதித் தருளுபவனுய் விளங்கும் ஸ்ரீமந் நாராயணமூர்த்தி, †"ஜனர்த்தன ஸ்வாமி" என்ற திருநாமத்துடன், "கோநகமலை" என்ற தேவியார் சமேதம் எழுந்தருளியுள்ளதும், ஸர்வாம்சங்களும் நிறைந்ததுமான விஷ்ணுவாலயம் ஓர்புறம் விளங்கா நிற்கும்.

மேற்சொன்ன இரு ஆலயங்களும் "'யான் எனது' என்று சொல்லக்கூடிய அகங்கார மமகாரங்க ளாகிய அகப் பற்றும் புறப் பற்றும் அற்ற இடமே திருவடியாகவும், மோன சமாதி யான பரமானந்தநிலையே திருமுடியாகவும்,

---

* நகரேஸ்வரர் :- (உயிர்களின் உடம்பெனும்) நகருக்கு நாயகனுகிய அறிவு மயமான ஆண்டவன்.

† ஜனர்த்தனன் :- அவ்வவ் வுயிர்தோறும் அமர்ந்து இருந்து, உண்டாகும் சங்கற்பங்களை யடக்கக்கூடிய பரமாத்மா.

ஞானமே திருவுருவாகவும், இச்சையும் செயலும் அறிவுமே திருக்கண்களாகவும், திருவருளே திருக்கரங்களாகவும், பூமிமுழுதுமே சந்நிதியாகவும் கொண்ட ஏகவஸ்துவாகிய பரமாத்மாவை *மனமென்னும் ஆலயத்தில் அன்புடனமர்த்தி அர்ச்சனை புரிமின்!''என ஞாபகப்படுத்தும்.

அன்றியும், †பிண்ட சரீர தோற்றத்தைக் குறிக்கும் வானளாவிய மதில்களும், சரீரத்தின் நவத் துவாரங்களைத் தத்வரூபமாய்க் காண்பிக்கும் எழில் மிக்க உன்னத கோபுரங்களும், அகன்று உயர்ந்த வாயில்களும், ஆன்மாவை மூடியிருக்கும் (ஸ்தூல சரீர சம்பந்தமான) அன்னமயம், (சூட்சும சரீர சம்பந்தமான) ப்ராணமயம், மனோமயம், விஞ்ஞான மயம், (காரண சரீர சம்பந்தமான) ஆனந்தமயம் என்னும் கோசங்கள் ஐந்தையும் தெரிவிக்கும் அழகிய பஞ்ச ப்ராகாரங்களும், மனம் இவ்வாறு கரைந்துருக வேண்டுமென்று களங்கமற்று கலக்கமற்று உருவற்று நிறமற்று மணமற்று நிற்கும் நிலையை யுணர்த்தும் தெண்ணீர்த் தீர்த்தங்களும்,

‡ப்ராண வாயுவை இடை பிங்கலையிற் செலுத்தாது நடு நாடியாகிய ஸுஷும்னையில் அசைவற நிறுத்தி த்யானிக்கின், மனம் முதலிய கரணங்கள் யாவும் அடங்கி ப்ரபஞ்சமே தோன்றாது, ஜோதி தரிசனந் தோன்றி ப்ரம்மானந்தந் தரும் எனும் உண்மை உணர்ச்சியைத் தரக்கூடியதும், நமது சரீரத்தில் நாபி முதல் புருவ மத்தி யீறுக ஓர் நாடி யுளதென்றும், அந்த நாடியின் நுனியில் புருவ மத்தியின் உட்புறத்தில் ஓர் ஜவ்வு தொங்குகிறதென்றும், அதன் அடிப்புறம் வெள்ளை வர்ணம் என்றும், மேற்புறம் மஞ்சள் வர்ணம் என்றும், அந்த ஜவ்வின் கீழ் ஓர் நரம்பு ஏறவும் இறங்கவும் இருக்கிறதென்றும்,

---

* '' உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானுர்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு ஜீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணி விளக்கே '' (திருமந்திரம்)

† '' அறிந்தே யுயிரா லயத்தி னபேத
மறிந்தான் மெய்ஞ் ஞானிமல மற்று '' (சைவ சமய நெறி)

'' எவ்வுயிரும் பராபரன்றன் சந்நிதிய தாகும்
இலங்குமுயி ருடலனைத்து மீசன் கோயில் '' (சிவஞான தீபம்)

‡ '' வாக்காலு மிக்க மனத்தாலு மெக்காலுந்
தாக்கா வுணர்வரிய தன்மையனை — நோக்கிப்
பிறித்தறிவு தம்மிற் பிரியாமை தானே
குறிக்கு மருணல்கக் கொடி.. '' (உமாபதி சிவம்)

இக் கொடி பெரியோர்களால் "அருட்கொடி" என வழங்கப் பெற்றதென்றும், இது ஆன்மானுபவத்தில் விளங்கும் என்றும் ஞாபகப்படுத்தக் கூடியதுமான துவஜஸ்தம்பமும்,

"எஞ்ஞான்றும் தவாப் பிறப்பீனும் வித்தாகிய அவாவை அறவே ஒழித்துவிட்டேன்" என வெட்டி யகற்றும்படி யுணர்த்தும் *பலிபீடமும்,

"எந்தகைய தடைகள் வரினும் அவற்றில் எல்லாம் மனத்தைப் புகுத்திவிடாமல், இப்படி யப்படி திரும்பாமல், ஏகாக்ர சித்தமாக, போன்பு கொண்டு எக்காலமும் இரவென்றும் பகலென்றும் அறியாது, ஓயாது, தரிசனானந்தம் அனுபவித்துப் பேரானந்தம் அடையுங்கள்!" என ஞாபகப்படுத்தும் *நந்தி, கருட நிலையங்களும்,

மண்டபங்களின் மகிமை.

"(இராகம் த்வேஷம் காமம் க்ரோதம் லோபம் மோகம் மதம் மாச்சர்யம் டம்பம் தர்ப்பம் ஈர்ஷை அசூயை அகங்காரம் ஆகிய) பற்று அனைத்தும் அற விடுமின்!" என நிவர்த்தி கலையை உணர்த்தும் சபா மண்டபமும், "விலகிய பற்று மறுபடியும் சேராவண்ணம் அகற்றி பரமாத்மாவினிடம் அன்பை ஸ்தாபித்தால் தான் அவனுடைய பேரருளை அடையலாம்" என பிரதிஷ்டா கலையை உணர்த்தும் அலங்கார மண்டபமும், "உலகிற் சிறந்த அறுபத்து நான்கு கலை ஞானங்களையும் ஆன்ம வித்தை எனக் கூறும் மெய்ஞ் ஞானத்தையும் அறிந்து பயின்று ஆனந்த முறுமின்!" என வித்யா கலையை உணர்த்தும் ஸ்தபன மண்டபமும், "நன்மை தீமை, இன்பம் துன்பம் என எதையும் விரும்பாமல் வெறுக்காமல் நிஷ்காம்யமாக பல கர்மங்களையும் இயற்றி சாந்தமாக இருமின்!" என சாந்தி கலையை உணர்த்தும் மகா மண்டபமும், யாவிற்கும் அதீதமாக விளங்கும் பரமாத்மாவை அடைவதற்குத் தக்க சிறந்த வழியை எளிதிற்காட்டுவதாகிய சாந்தி அதீத கலையை உணர்த்தும் அர்த்த மண்டபமும்,

---

*"ஆய பதிதான் அருட்சிவ லிங்கமாம்
ஆய பசுவும் அடலே றென நிற்கும்
ஆய பலிபீட மாகுநற் பாசமாம்
ஆய அரனிலை ஆய்ந்துகொள் வார்கட்கே" (திருமந்திரம்)

அரூபியாயிருந்த கடவுள் ரூபாரூபியாக மாறி பல உலக உயிர் வர்க்கங்களைப் படைத்திடுதற்குக் காரணமா யிருப்பது (அவருடைய அருட்சக்தியை மாயையிடத்தே பிரவேசிக்கச் செய்வது) மூலப்ரகிருதி என்பதைத் தெரிவிப்பதும், "மூலஸ்தானம்" எனப் பெயரியதும், ப்ரதான மூர்த்தியை வைத்து வணங்கக்கூடிய இடமாயுளதுமாகிய கர்ப்பக்ரகமும், இன்னும் ஏனைய பலவும் மிக்க அழகுடன் மிளிர்ந்து கொண்டிருக்கும்.

ஆறு கால பூஜை அமைப்பு.

ஞானத்தை உண்டாக்கக் கூடிய சாதனமாகிய பூஜைகள் யாவும் (மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அனுகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்னும்) *ஆதாரங்கள் ஆறையும் உணர்த்தும் (விஸ்வரூப தரிசனம், காலை சந்தி, மத்தியான்ன சந்தி, சாயம் சந்தி, இராத்திரி சந்தி, அர்த்தயாமம் என்னும்) ஆறு காலங்களிலும் மேற்சொன்ன ஆலயங்களில் வேதாகம விதிப்படிச் செவ்வனே நடைபெறும். ஆறு கால பூஜைகளும் நடந்த பின்பு, ஸஹஸ்ராரகமலத்தில் ஜீவன் ப்ரம்மத்தினிடம் ஒன்றி, அறிவும் அருளும் கலந்து பேரின்ப மனுபவித்தலைக் குறிக்க இறைவன் உருவைப் பள்ளியறையிற் சேர்க்கும் காட்சியும் செவ்வனே நடைபெறும். நாத தத்துவத்தைத் தெரிவிக்கக்கூடிய கண்டா மணிகளின் ரீங்காரம் (ஓசை) ஆனது எட்டின மட்டும் கேட்குந் திறத்ததாய் இருக்கும்.

---

* ஆறு கால பூஜை ஆறு ஆதாரங்களை யுணர்த்துதலாவது :-

நமக்கு ஒரு தினத்திற்கு 21,600 ஸ்வாசம் செலவழிகிறது. இந்த ஸ்வாசத்தை உள் முகமாய்ச் செலுத்தி ஆறு ஆதாரங்களுக்கும் பங்கிட்டுத் தருதல் வேண்டுமெனவும், அவ்வாறு செய்கையில் யோக சித்தி கை கூடுமென்றும் ஆன்றோர் கூறுவர்.

ஆதாரம்.	அதிஷ்டான தேவதை.	நாழிகை முதல்.	நாழிகை வரை.	ஸ்வாசங்கள்.
		நா. வி.	நா. வி.	
மூலாதாரம்	கணபதி	ஸூர்யோதயம்	1 - 40	600
ஸ்வாதிஷ்டானம்	ப்ரம்மன்	1 - 40	4 - 26	1000
மணிபூரகம்	விஷ்ணு	4 - 26	21 - 6	6000
அனுகதம்	ருத்ரன்	21 - 6	37 - 46	6000
விசுத்தி	மகேசன்	37 - 46	54 - 26	6000
ஆஞ்ஞை	ஜீவன்	54 - 26	57 - 13	1000
ஸஹஸ்ராரம்	பரமாத்மா	57 - 13	60 -	1000
				ஆக 21600

அபிஷேகச் சிறப்பு.

ஆணவம், கன்மம், மாயை, திரோதாயி, மாயேயம் என்ற ஐவகைப் பாசங்களையும் களைதல் என்னும் கருத்தைப் பற்றிய ஆன்ம சுத்தி ஸ்தான சுத்தி த்ரவ்ய சுத்தி மந்த்ர சுத்தி லிங்க சுத்தி ஆகிய *பஞ்ச சுத்திகளையும் செய்துகொண்டு, பரமாத்மாவாகிய மூர்த்திக்கு †திருவருள் ஞானமே நீ ரென ப் பாவித்து ஆட்டி, மல நிவாரணம் செய்துகொள்ளல் என்றும், மருட் போதமே மலம் ஆதலால் அம் மல அசுத்தத்தைப் போக்கவேண்டி, ||துரிய நிறை சாந்தம் எனும் தேவதைக்கு அன்பு என்னும் அருள்நீர் கொண்டு அபிஷேகித்தல் என்றும், ‡ஜக ஜீவ பரங்களாய்ப் பல்வகைப் பேதமுறத் தோற்றுவிக்கும் இவ் வுலகப் பொய்த் தோற்றமனைத்தும் கானல் ஜலம்போல மித்தையென் றறியும் அறிவைப் பெறுதல் என்றும் சூசிக்கும் திருமஞ்சனமானது, அதிகாலையில் ஆற்று நீராடி தங்கக் குடங்களில் யானைகளின்மீது சகல மங்கள வாத்யங்களோடும் கொணர்ந்த கோதாவரி நீர்த்தம், வாசனைத் திரவியங்கள் கலந்த நீர், தைலம், பஞ்ச கவ்யம், பஞ்சாமிர்தம், நறு நெய், பால், தயிர், செழுந் தேன், கருப்பஞ்சாறு, பழங்களின் ரசம், இளநீர், பன்னீர், விபூதி, சந்தனம், களபம், புஷ்பம் முதலாய யாவத் திரவியங்களையுங்கொண்டு செவ்வனே நடைபெறும்.

இத்தகைய பல அதியற்புத உணர்ச்சிகளை நல்கக்கூடிய திரு மஞ்சனத்தை மிகவும் சிறப்பாய் நடத்திய பின்னர், "திரோதான சக்தி நீங்குதல்" எனும் பாவனை தோன்ற வெண்பட்டு கோசிகப் பட்டு பீதாம்பரம் முதலிய திருவாடைகளைப் புனைவிப்பர்.

---

* ஐம்புல னெடுக்கம் வேண்டுமென்பதைக் குறிக்கும் என்றும் கூறுவர்.

† "அருளெனும் புனலினை யாட்டி"

|| "துரியநிறை சாந்தமே வதையா முனக்கே, தொழும்பனன் பபிஷேக நீர்"
"தம்மிற் சிவலிங்கம் கண்டதனைத் தாம்வணங்கித்
தம்மன்பால் மஞ்சனநீர் தாமாட்டி"
"நெஞ்சகமே கோயில்; நினைவே சுகந்தம்; அன்பே
மஞ்சன நீர்; பூசைகொள்ள வாராய் பராபரமே"

‡ "ஓதும் வேதம் பேய்த்தேரென், றுணர்த லதுவொண் புனலாகும்"

அலங்காரம் செய்தல்.

'ஜீவர்கள் தமது மனத்தை மாசில்லாமற் ப்ரகாசமுறச் செம்மைப்படுத்தி இறைவனிடத்தே அமைத்தால், அவ்விறைவன் மாசற்று திவ்ய வொளி வீசும் அவ்வண்ணம் பார்களின் மனத்தைக் கவர்ந்து தமக்கோர் ஆபரண்மாகப் பூண்டு அம்மெய் யடியார்க்கு உண்மை ஞானமும் பரமானந்தமும் அருளுவன்' எனும் அற்புத உணர்ச்சியை யாவரும் பெறுமாறு, முத்துமாலை மோகனமாலை பவளமாலை படிக மாலை மாணிக்கமாலை மரகதமாலை பொற்காசுமாலை பொற்பதக்கங்கள் வைரகண்டிகை நவரத்னஹாரம் சந்த்ரஹாரம் வஜ்ரமுடி ரத்ன குண்டலம் முதலான திருவாபரணங்களை அணிவிப்பர்.

பூமாலை புனைவித்தல்.

புஷ்ப கைங்கர்யத்தின் மகிமையை உணர்ந்த பல அன்பர்கள் (நல்லமனம் என்ற அர்த்தந் தரக்கூடிய) 'ஸுமனஸ்' என்னும் பெயரை யுடைய மலர்களைக் கொய்து அன்புடன் தொடுத்து ஆண்டவனுக்கு அணிவிப்பதே சிறந்த தொண்டு என்றும், அதிலும், தமது நிலத்தில் தாமே உழுது பூமியைப் பண்படுத்தி, தாமே மலர்ச்செடிகளை வைத்துப் பாதுகாத்து நீர் பாய்ச்சிப் பாதுகாத்து, அச் செடிகளில் மலரும் நாண்மலர்களை பகவானுக்குச் சமர்ப்பிப்பதே உத்தமம் என்றும், காடுகளிலும் புறம்போக்கு நிலங்களிலும் யதேச்சையாக முளைத்து வளர்ந்துள்ள செடிகளிலிருக்கும் மலர்களைக் கொய்து வந்து சமர்ப்பிப்பது மத்யமம் என்றும், கோவில்களில் மற்றொருவரால் ஏற்படுத்தப்பட்ட நந்தவனங்களிலும், பிறருடைய நிலங்களிலும், பிறரால் உண்டாக்கப்பட்டுள்ள செடிகளிலிருக்கும் புஷ்பங்களைக் கொய்துவந்து சமர்ப்பித்தல் அதமம் என்றும், வேறொருவர் பூஜைக்காகப் பறித்துச் செல்லும் புஷ்பங்களை அவர்களது புஷ்பக்குடலையைக் கண்டதும், அவர்களிடம் கேட்டு சில மலர்களை வாங்கி பகவானுக்கு சமர்ப்பிப்பது அதமாதமம் என்றும் நூல்களில் கூறப்பெற்றுள்ளதை யறிந்து, உத்தம புஷ்பம் என்று சொல்லக்கூடிய முறையில் மலர்களை உற்பத்தி செய்வித்து, காலா காலங்களறிந்து பக்தி வினயத்துடன் புஷ்பவிதிப்படி கோட்டுப்பூ கொடிப்பூ நீர்ப்பூ நிலப்பூ ஆகிய நால்வகைப் பூக்களையும் கொய்துவந்து, "ஆன்ம பரிபூரணத்துட் பூரணமாம் போதம் புதுமலராயும் அன்பே நாராயும்" பாவித்துப்

பரிஜனவோடும் பாங்குடன் தொடுத்துக் கொணர்ந்து சமர்ப்பிக்கும் கொன்றைமாலை தும்பைமாலை வில்வமாலை துழாய்மாலை சண்பகமாலை முல்லைமாலை மல்லிகைமாலை மருக்கொழுந்துமாலை சாமந்திமாலை ரோஜா மாலை நந்தியாவர்த்தமாலை அரளிமாலை அறுகுதாலை முதலிய மாலைகளும் கோவைகளும் இண்டைச் சூருக்குகளும் தாமங்களும் கண்ணிகளும் பிணையல்களும் தொடையல்களும் இடனறிந்து சாத்தித் திவ்யமாக அலங்காரம் செய்வர்.

சோடசோபசார காரணம்.

அன்றியும், (பூஜையின் பொருட்டு கடவுளை மூலமந்திரத்தைச் சொல்லி வரவழைத்து அபிமுகமாகச் செய்யும்) [1]ஆவாஹனம், (" தயாநிதியே ! அடியேங்கட்கு அனுக்ரஹிப்பதற்காக இவ் விக்ரகத்தில் எழுந் தருளியிருக்கவேண்டும் ". என் று அன்புடன் யாசிக்கும்) [2]ஸ்தாபனம், பூஜிக்கப்படுபவனுகிய கடவுள் அனுக்ரகிக் கும் தன்மையையும் பூஜிக்கின்றவனுகிய தான் அனுக்ரகிக்கப்படும் தன் மை யை யும் உண்டுபண்ணுவதான) [3] ஸ ந் நி தா ன ம் , (" பகவானே ! எப்போதும் என்னிடத்தில் அனுக்ரத்தோடு இருக்க வேண்டும் " என்று பிரார்த்திக்கும்) [4]ஸந்நிரோதனம், (மூர்த்தியைச் சுற்றிக் கவச மந்திரத்தினுல் மூன்றகழ் உண்டானதாகப் பாவிக்கும்)

---

1. ஆவாஹனம் :- இதனுண்மையாவது இறைவனுடைய மேலான பரிபூர்ண ஞான ப்ரகாசத்தைச் சிவப்ரசாதமாகிய திருவருளால் அறிந்து அதில் அழுந்துதலாம்.

" இப்படித் தரைமுதற் சமணீ யிருப்பச், செப்பிவியா பிக்கும் பரம சிவனது
பொருவி லுயர்பரி பூரணந் தன்னை, யறிவில ழுத்துத லாவா கனமே. "

2. ஸ்தாபனம் :- இது மேற்கூறிய அழுத்தத்தில் மிகுபேருகப் பொருந்துதலாம்.

" அகிலா கழுந்த நிகிலபெறல் தாபனம் "

3. ஸந்நிதானம் :- இதனுண்மையைக் கூறுமிட்டத்து, ஆன்மாவினது அறிவு சிவ பூரணத் தினும், சிவ பூரணத்துவம் ஆன்ம அறிவினும் இடைவிடாமல் ஒன்றி அந்தியோந்திய மாயிருத்தல் என்ப.

" இவன்றன தறிவு சிவபூ ரணத்தினும்
சிவன்பூ ரணத்துவ மிவன்றன தறிவினு
மொன்றை யொன் றகலா துறவுசெய் திருப்ப
தொன்றிய சந்நி தானமென் றுரைப்பர் "

4. ஸந்நிரோதனம் :- ஆன்மாவினிடத்துப் பொருந்திய அறிவானது எக்காலத்தும் ஒழி வின்றிச் சிவத்திலே சமைந்து போதலாம்.

" இவனிடத் துறுமறி வென்று மொழியாச்
சமையது தானே சந்நிரோ தனமே "

[5]அவகுண்டனம், (கடவுளுக்கு முன்பாகப் பசுவின் மடி போன்ற தொரு முத்திரை காட்டுதலாகிய) [6]தேனு முத்திரை, (மூல மந்திரத்தை "ந்மः" என்னும் இறுதியை உடையதாக உச்சரித்து ஜலத்தைத் திரு வடிகளில் சமர்ப்பிக்கும்) [7]பாத்தியம், (மூல மந்திரத்தை "ஸ்வதா" என்னும் இறுதியை உடையதாக உச்சரித்து ஐந்து தடவை மும் மூன்று தரம் ஜலத்தை சமர்ப்பிக்கும்) [8]ஆசமனீயம், (மூல மந்திரத்தை உச்சரித்து கடவுளுருவின் சிரத்தினில் ஜலத்தை சமர்ப்பிக்கும்) [9]அர்க்கியம், (மூல மந்திரத்தை உச்சரித்து புஷ்பங்களைச் சாத்தும்) [10]புஷ்ப தானம், (ஆணவ மலமாகிய அறியாமையை க்ரியா சக்தியைக் கொண்டு நீக்குதல் என்னும் குறிப்பை உணர்த்த, க்ரியா சக்தி ரூப மாகிய தூபத்தை பகவத் சந்நிதானத்திலிடுவதாகிய) [11]தூபம், ("ஞிற் சக்தியாகிய தீபம் ஜீவர்களின் மலத்தைப் போக்கி ஞானத்தை விளக் குகிறது" என்னும் கருத்துத் தோன்ற இறைவன் சந்நிதியிற் சமர்ப் பிப்பதாகிய) [12]தீபம், (ஜீவ குணமாகிய அகங்காரம், சங்கற்பம்,

---

5. **அவகுண்டனம்:-** அப் பரம்பொருளி னிட்சத்தி லிருந்தே பிரம்ம, விஷ்ணு, ருத்திர ராகிய மும்மூர்த்திகளுந் தோன்றி (இச்சை, க்ரியை, ஞானம் எனும் முச் சக்திகளுந் தோன்றி) சிருஷ்டி திதி சங்காரம் ஆகிய முத்தொழிலும் புரிவர் என்பதையும், தத் வம், ரஜஸ், தமஸ் என்னும் திரிகுணங்களும் தோன்றி உலகை யுண்டாக்கும் என்ப தையும் உணர்த்தும்.

6. **தேனு முத்திரை:-** பசுவின் சரீர முழுதும் விளங்கும் பாலானது மடியின் மூலமாகச் சுரந்து வெளிப்பட்டு அனைவர்க்கும் உதவுவதே போல, பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூர ணனந்த பரப்ரம்மத்தின் திருவருள் இம் மூர்த்தியின் முக மாய் வெளிப்பட்டு அனைத்துயிர்கட்கும் ஆனந்தம் நல்குதலைக் குறிக்கும்.

7. **பாத்தியம்:-** இறைவனது ப்ரகாசமாகிய இச்சா ஞான க்ரியைகள் பொருந்தினதான திருவடிகளிற் சேர்தலை யுணர்த்தும். (சரீர சுத்தி)

8. **ஆசமனீயம்:-** சக்திகளுடைய விளக்கத்திலே திருவருள் என்னும் தன்மையை யுடைய திருமுகத்திற் பொருந்துவதாம். (மனோசுத்தி)

9. **அருக்கியம்:-** திருமுகம் என்னும் அருளைக் கழலும் தன்மையாகிய திருமுடியிற் பொருந் துவதாகும். (பற்றுகளை விடுத்தல்)

10. "அறுவகை பாவனைசந் தோடமெனு மலர்களா லந்தத் தேவாம்
பிறிவரிய வாத்துமதத் துவத்தையருச் சிப்பதே பெரிய பூஜை
குறிவடிவிற் பூசனைபூ சனையல்ல வகண்டமெனக் கூறுந் தெய்வ
நெறிகொள் புறத் தொழில்களா நேராதிங் கதனுலே நிறையு மின்பம்"
(ஞானவாசிட்டம்)

11 & 12. "ஞான விளக்க நண்ணுதற் பொருட்டுத்
தூபதீபந் துதைந்தினி தளித்து" (சதாசிவ ரூபம்)

குரோதம், மோகம் என்பவற்றையே அமுதாக இறைவனுக்குச் சமர்ப்பித்தலாகிய) [13]நைவேத்தியம், (வாசனை பொருந்திய தீர்த்தத்தை கடவுளுடைய திருப்திக்காகச் சமர்ப்பிக்கும்) [14]பானீயம், (மூலமந்திரத்தை நூற்றெட்டு உரு ஜெபித்து அதைக் கடவுளிடத்திலேயே ஒப்புவித்தலாகிய) [15]ஜப சமர்ப்பணை, (பரமாத்மா பல்லாயிரகோடி அண்டங்களாயும், அவற்றில் மேவும் எண்ணற்ற உயிர்வர்க்கங்களாயும், அநேக சக்திகளாயும், சக்திகளாயும், மூர்த்திகளாயும், அஷ்ட மூர்த்தங்களாயும், த்ரிமூர்த்திகளாயும், பஞ்ச மூர்த்திகளாயும், தத்வங்களாயும், பல திறம்பட விரிந்தும், பிறகு ஒடுங்கி ஒன்றுயும் விளங்கும் நிலையை உணர்ந்த (அலங்கார ஆர்த்தி முதல் ஏகார்த்தி ஈறாக) அநேக ஆர்த்திகளால் ஆராதித்து இறுதியில் ஜீவப்ரம்மைக்யத்தை உணர்த்த [16]கர்ப்பூர ஆர்த்தியும் காண்பிக்கின்றதாகிய) ஆராத்ரிகம் ஆகிய பதினறு வித உபசாரங்களையும் பக்திஸ்ரத்தையுடன் செய்வர்.

பூஜா காலங்களில் இறைவனுடைய திருவருட் பிரபாவங்களை எளிதில் விளக்கும் அஷ்டோத்ர சத நாம, ஸகஸ்ர நாம

---

13. " பாட்டிற் கின்புறு குருபரன் பாதமேற் கண்ணீர்
ஸாட்டிச் சொன்மல ரணிந்துதற் போதவின் னமுதை
யூட்டித் தற்பர ஞானமா மோமவெங் கனலை
மூட்டிச் சம்புவின் பூஜைமேன் முயற்சிய ரானுர் "

" ---------- தறுகட்பாசக்
கள்ளவினைப் பகுபோதக் களைமிடக் களித்துண்டு ---------- "
(திருவிளையாடற் புராணம்)

" பின்மன மமைவு பிறந்தற் பொருட்டு
நைவேத் தியமுக வாசமு நல்கி " (சதாசிவ ரூபம்)

14. பானீயம் :- பின்னும் எஞ்சியுள்ள மற்றுஞ்சில ஜீவ குணங்களையும் ஒப்புவித்து விடுதல் என்றும், நீராய்க் கரைந்துருகும் மனத்தை இறைவன்வசப்படுத்தல் என்றும் கூறுவர்.

15. " அகள சகள மாகையின் பொருட்டு
முகனுறச் செபித்தபின் முன்போல் நிட்களந்
தானுகவுஞ்செப தர்ப்பணம் பண்ணி " (சட்டநாத வள்ளலார்)

16. " அக்கினி கர்ப் பூரத்தை யறவிழுங்கிக் கொண்டாற்போன்
மக்கினம் பட்டுள்ளே மருவி யிருந்தாண்டி " (பட்டணத்துப் பிள்ளையார்)

" கர்ப்பூர மதனிற் தீபம், வயங்கவிட்டு மைக்யமுன்னி வருத்தி நிற்பேன் "

" தீதணையாக் கர்ப்பூர தீபமென நானகண்ட
ஜோதியுட னென்றித் துரிசறுப்ப தெந்நாளோ? " (தாயுமான சுவாமிகள்)

அர்ச்சனைகள் அதி விமரிசையாய் நடைபெறும். அவ்வாலயங்களில் பிரம்மோத்ஸவம் வருஷோத்ஸவம் மாஸோத்ஸவம் பக்ஷோத்ஸவம் முதலியன யாவும் நன்கு நடைபெற்றுக்கொண்டிருக்கும்.

உத்ஸவ விளக்கம்.

உயர்ந்த சிருஷ்டி முதலிய ஐந்தொழில்களையும் குறிக்கும் குறியாகிய *மஹோத்ஸவம்,

துவஜாரோஹணம். ஆரம்பமாவதற்கு முதல் நாள் சிருஷ்டியை உணர்த்தும்படியான மண் எடுப்பது, முடியிடுவது முதலிய செயல்களும், ஆரம்ப தினத்தில் சமம் விசாரம் சந்தோஷம் சாதுசங்கம் ஆகிய நான்கு குணங்களும் நல்லொழுக்கமும், பரிசுத்தமும் உடைய ஆன்மகோடிகளை, இறைவன் அவர்கள் இருக்கும் நிலையிலிருந்து மிக உயர்த்திவிடுகின்றான் எனவும், உண்மை யன்புடனும் விசேஷ பக்தியுடனும் திருவிழாவிற்கு வரும் அடியார்கள் அனைவர்க்கும் உறுதுயர் அகற்றி உயர்பதம் அடையச் செய்யும்பொருட்டு இப்பத்து தினங்களிலும் சிறப்பாக எழுந்தருளி அருள் செய்யப்போகின்றான் எனவும் குறிப்பிக்கும் †துவஜாரோகணமும் மிக சிறப்புடன் நடைபெறும்.

விருட்ச வாகனம். மரத்தின் கிளைகள் இலைகள் முதலியன போல அநேக தத்துவங்களாகவும் எண்ணிறந்த ஜீவராசிகளாகவும் கடவுள் விளங்குகிறார் என்பதையும், இத்தகைய சிருட்டிகளுக்கெல்லாம் மூலாதாரமாக (வேராக) இருப்பது அருள் என்கிற சக்தியோடு கூடிய அறிவு என்கிற கடவுளே என்பதையும் உணர்த்தக்கூடிய விருத்திக்ரம சிருஷ்டி கோலத்தைக் குறிக்கும் விருட்ச வாகனச் சேவை வெகு விமரிசையாய் நடைபெறும்.

---

* மஹா—பெரிய, உத்—உயர்வான, ஸவ—(சிருஷ்டி முதலிய) காரியங்கள்.
எனவே "மஹோத்ஸவம்" என்பது உயர்ந்த (ஐம்) தொழிலகளையும் குறிப்பது என்பர்.

† "நீபுரவா வையமெலா நீயறியக் கட்டினேன், கோபுர வாசற் கொடி." (உ. சிவம்)

சூர்ய சந்த்ர பிரபை வாகனம்.

விரி கடல் நீரை விரைவினில் உண்டு மேகங்கள் மழை பொழியவும், புல் பூண்டு முதலிய சகல தாவர வர்க்கங்களும் செழுமையுற்றுச் சிறந்து தழைத்தோங்கி வளரவும், உலகத்தில் உள்ள எல்லா உயிர்களும் பிழைத்திருக்கவும் காரணமானது சூர்ய வெப்பம் (க்ரணம், ஒளி, அல்லது ப்ரபை) என்பதையும், எல்லா உயிர் வர்க்கங்களுக்கும் களிப்பையகற்றித் தண்மையையும் இன்பத்தையும் தருவது சந்திரனின் அமுதக் கலைகள் என்பதையும், இவ்விரு சுடர்களுக்கும் ஆதார மூலமான அறிவாகிய கடவுள் அருட் சக்தியோடு கூடி இவ்விரு சுடர்களால் உலகை ரக்ஷிக்கிறான் என்பதையும் காட்டி, விருத்திக்ரம ஸ்திதி கோலத்தைத் தெரிவிப்பது போல சூர்ய, சந்த்ர ப்ரபைகளின் நடுவண் இறைவன் எழுந்தருளிச் சேவை தரல் மிகவும் திவ்யமாய் இருக்கும்.

அதிகார நந்தி, பூத வாகனம்.

மான்மழு சதுர்ப்புஜம் திரிநேத்ரம் முதலிய அடையாளங்களோடு சிவ சாரூப்ய பதவி பெற்ற விஞ்ஞான கலர் என்ற ஆன்ம வர்க்கங்களிற் சிறந்தவர் அதிகார நந்தி எனப்படுவ ராதலால் அவரது தோள்கள் மீதும், இறந்தவுடன் ஆன்மவர்க்கங்களைக் கொண்டுபோகும் தொழிலை யுடையன பூத கணங்கள் ஆதலின், வ்ருத்திக்ரம சங்கார கோலத்தைத் தெரிவிக்க அப் பூத வாகனத்தின் மீதும் பரமசிவன் எழுந்தருளிக் காட்சி தருதல் சங்கார கிருத்தியத்தை உணர்த்தும்.

ஹம்ஸ வாகனம்.

அஃதே போல் விஷ்ணு வாலயத்தில் "(இராவணாதி) துஷ்ட நிக்ரக (விபீஷணாதி) சிஷ்ட பரிபாலனார்த்தம் இறைவனே அவதாரமாகி தீயோர்களைத் தொலைத்து அறத்தை நிலைநாட்டியுள்ளான். ஆதலின் ஆன்மாக்களாகிய நீவிர் கேவலம் உலக இச்சையில் ஈடுபடாது, நிஷ்காம்ய கர்மத்தில் ஈடுபட்டு யாவும் ஈஸ்வரார்ப்பணம் செய்து, சதா அவன் திருவடியில் கருத்தினை நிறுத்தி மனமெனுங் கரத்தால் அவன் திருவடியை வருடி, அவனது திரு நாமமாகிய ஸ்ரீ "ராம" (தாரக) மந்திரத்தை இடைவிடாது வாயார ஜபித்து இன்பம்

அனுபவியுங்கள்" என்று கூறுவது போல சிறிய திருவடியாகிய ஹனுமார் தமது தோள்களில் ஸ்ரீமந் நாராயண மூர்த்தியைத் தாங்கிச் சேவைதருதல் மிகவும் சிறப்பாய் இருக்கும்.

நாக வாகனம்

பாம்பானது நஞ்சு மாணிக்கம் படம் ஆகிய மூன்றையும் மறைத்து, வேண்டும்போது நீட்டுவதும், அன்றி தானும் மறைந்திருந்து வேண்டும்போது புற்றில் இருந்து வெளி வருவதும், மறைத்தல் தொழிலை யுணர்த்தலால், கடவுளது திரோபவ சக்தியை (வ்ருத்தி க்ரமத் திரோபவ கோலத்தை)க் காட்டுகிறதென்றும், வட்ட மாக வளைந்து தலை நிமிர்த்தி ஓங்காரத்தை யுணர்த்துகிற தென்றும், குண்டலி சக்தியைக் காட்டுகிறதென்றும், சுழுமுனை நாடியைக் காட்டு கிற்தென்றும் பல தத்வங்களைக் குறிக்கத்தக்க நாக (சேஷ) வாகனக் காட்சி மிகவும் அற்புதமாய் நடைபெறும்.

வ்ருஷப வாகனம்

ஆன்மாக்கள் எவ்வகையான மாசும் இன்றி பரிசுத்த (வெள்ளை நிற)த்துடன் சமம் விசாரம் சந்தோஷம் சாதுசங்கம் ஆகிய குணங்கள் நான்கையும் ஆதாரமாகக் (கால்க ளாகக்) கொண்டு ஆணவ மலத்தை அகற்றி அருளோடு கூடிய அறிவைப் பணிவுடன் ஏற்று நிற்கின்ற காலத்தில் ஈஸ்வரானுக்ரஹம் பெறுதல் திண்ணம் எனச் சூசிப்பிக்க, நான்கு வேதமும் கால்களாகவும், கருமமும் ஞானமும் கண்களாகவும், ஆகமங்களும் சாத்திரங்களும் கொம்புகளாகவும், தருமமே உடலாக வும், தவமே நடையாகவும் கொண்டு விளங்கும் (ஸத்வ வடிவாகிய அல்லது புண்ய உருவாகிய) தரும இடபத்தின்மேல் சிவபெருமான் எழுந்தருளி (வ்ருத்திக்ரம அநுக்ரஹ கோலத்தைக் காண்பிப்பார் போல)ச் சேவை தருதல் சீரிய உணர்ச்சியைச் செவ்விதின் நல்கும்.

கருட வாகனம்

எங்கே மெய்யன்பர் உளரோ அங்கே நலந்தர இனிதெழுந் தருளுவோன் எனவும், எவ்வண்ணம் வேண்டுகிறும் அவ்வண்ணம் ஆங்கே இரங்கி ஈந்தருளுவோன் எனவும் யாவும் அறிவித்து ஆன்மார்த்த உணர்ச்சி யைத் தந்து அனைவர்க்கும் திருவருள் பாலிக்கத் திரு வுளங் கொண்டு, அன்பும் பக்தியும் பாதங்களாகவும், பரஞானமும்

அபரஞானமும் கண்களாகவும், பாவங்களைத் தொலைக்கும் வைராக்யமே மூக்காகவும், அடக்கமும் பணிவுமே திருமுடியாகவும், சாந்தமே சரீரமாகவும், விசிஷ்டாத்வைதமாகிய வைஷ்ணவ சித்தாந்தமும் சுத்தாத்வைதமாகிய வேதாந்தமும் சிறகுகளாகவும் கொண்டு விளங்கும் பெரிய திருவடியாகிய கருடாழ்வார் மீது எழுந்தருளி, பொருட்செல்வமும் அருட்செல்வமும் யாவத் செல்வமும் அன்புடன் அருளும் இலக்குமியாகிய ஸ்ரீ தேவியாரும், பொறையும் அறிவும் பிறவும் நல்கும் பூமிப் பிராட்டியாரும் இருபாலும் விளங்க, 'இறைவன் எழுந்தருளல் வேண்டும்' என எண்ணிலாத் தவம்புரிந்த (அக் கருடாழ்வாரின்) திருத் தோள்களிலே அமர்ந்து, "இறைவன் திருவடிகளைத் தாங்குதல் வேண்டும்" என இயம்பரும் பெருந்தவம் புரிந்த திருக்கரங்களிலே தமது திருவடிகளைவைத்து எல்லா ஆன்மாக்களும் பரமானந்தமடையுமாறு பரம கருணைமூர்த்தியான ஸ்ரீமந் நாராயணன் பவனிவரும் பான்மை பகர்தற்கும் அரிதாகும்.

யானை வாகனம்

ஆன்மாக்கள் பூமியிற் பிறந்தவுடனே சடவாயு அவர்கள் மீது பாய்ந்து பற்றிக்கொள்ளுகின்றது. அவர்களுடைய உடல் வளர வளர, உலக வாசனைகளும் பேராசைகளும் அகங்காரமும் ஆதிய அனைத்தும் வளர்ந்து கொண்டே வருகின்றன. வர வர அகங்காரம் அதிகரித்து மத யானைபோல ஆகி ஒருவரையும் மதியாது, தெய்வ நினைப்பையு மிழந்து கர்வமடைகிற காலத்தில், இறைவன் தோன்றி, அவர்களுடைய அகங்காரம் முழுதும் அடியோடு அடங்கும்படி அடக்கி யருளுவன். ஆதலால், நாம் அவ் வகங்காரமாகிய மத யானையின் வசமாகாமல், அடக்கமும் பணிவும் அன்பும் மேற்கொண்டொழுக வேண்டுமென்றும், ஒருகால் அம் மதயானை நம்மைத் தன்வசப்படுத்திக்கொள்ள நினைத்தால், சத்தியம், சாந்தம், தருமம், தெய்வ வுணர்வு என்னும் உலோகங்களாற் செய்யப்பெற்ற அங்குசத்தால் அடக்கியாள வேண்டுமென்றும் தெரிவிப்பதும், பரப்ரம்மத்தினின்றும் மாயா காரணத்தாற் பலபட விரிந்த பாகுபாடுகள் அனைத்தும் ஒருங்கே ஒடுங்கி ஒரே பிண்டமாக (பரமனுடைய உடம்பு கால்களையுடைய யானையைப்போல்) ஒடுங்கி விடுவதாகிய லயக்ரம சிருஷ்டி (ஒடுங்கும் முறை) கோலத்தை உணர்த்தத் தக்கதுமான ஐராவத (யானை) வாகனக் காட்சி அதியற்புதமாய் நடைபெறும்.

குதிரை வாகனம்

உலகிற் றோன்றிய உயிர் வர்க்கங்கட்கு மனம் எனும் குதிரை யொன்று இறைவனால் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும், அந்த மனமாகிய குதிரை மீதேறிய உயிரானது, அக்குதிரை முள்ளும் முரடும் கோணல் வழிகளும் நிறைந்த ஐம்புலக்காட்டில் செல்லாதபடி கடிவாளங்களே உறுதியென்கிற கரங்களால் இழுத்துப்பிடித்து, அறிவாகிய ஜாட்டியை உபயோகித்து, பரன்பதம் அடையும் சன்மார்க்கம் என்கிற தூய பாதையில் ஓட்டிக்கொண்டு சுகமாய்ச் சென்று ஞான நிலையம் என்கிற இடம் சேர்ந்து, பரபோதம் என்கிற ஆராவமுதை அருந்தி ஆனந்தம் அடைதல்வேண்டும் எனவும், அம்மனமாங் குதிரை அத்தகைய தூயநெறியில் செலற்கு அக்குதிரையை ஜீவர்கள் தம்வசமின்றி இறைவன் வசமாயாக்கிவிடல் வேண்டும் எனவும் தெரிவிக்க வேண்டி, *தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷம் என்கிற நான்கு புருஷார்த்தங்களே கால்களாகவும், ஞானகாண்டம் கருமகாண்டம் ஆகிய இரண்டும் காதுகளாகவும், காட்சியளவையைக் கடந்த ஒருமையான பரம் அபரம் என்கிற உணர்வே கண்களாகவும், அருமையான விதியே முகமாகவும், நிஷேதமே வாலாகவும், பல நூல்களே முதுகலங்காரமாகவும், மந்திரங்களே சதங்கைகள் கிண்கிணி மாலைகள் செம்பொற் சிலம்புகள் அவற்றுள் ஒலிக்கும் நவரத்தினங்கள் முதலியனவாகவும், சூரியனும் சந்திரனும் இருபுறத்தும் அங்கவடியாகவும், பெருமை பொருந்திய தாரகப்ரம்ம மந்திரமே கடிவாளமாகவும் கொண்டு, பரலோகமாகியலாயத்திலே தங்குவதாய், அண்டகோடிகளே யெல்லாம் ஒரு பிண்டமாக அடுக்கினது போலான முதுகின்மேலே உபநிடதமான ஜீனி கொண்டு, பரிசுத்தமாய் விளங்கும் வேதக் குதிரைமீ தெழுந்தருளி, மெய்யடியார்களின் வினைவிலங்கைப் போக்குதற்காக திருவடிகளிலே வீரக் கழலணிந்து, (வேத சாஸ்திர விசாரணையாகிய) உறையினுன்றும் உறுவிய ஞானமாகிய வாளானது புறத்திருளையும் போக்கி விளங்க, "பிறக்கவேண்டியவர்கள் மறந்தும் இங்கே வாராதீர்கள்; பிறவி தீர வேண்டியவர்கள் விரைவில் இங்கே வாருங்கள்! உங்கள் பிறவித் துயரைத் தீர்க்கவே பெருமான் இங்கே எழுந்தருளுகின்றன்" என்பதுபோலக் குதிரையின் கால்களிலேயுள்ள சிலம்புகள் சப்திக்கவும், எல்லாம் வல்ல ஸர்வேஸ்வரனே எழுந்தருளி வரலால், ஸரஸ்வதியே வெள்ளைக்

*திருவிளையாடற் புராணம்.

குடை ரூபங்கொண்டு விளங்குதல் போலவும், பூர்ண சந்திரனே குடையுருக்கொண்டு பொலிவது போலவும் வெண் கொற்றக் குடை நிழற்றவும், நான்கு வேதங்களே குதிரையுருக்கொண்டு பெருமானைத் தாங்கிச் செல்கின்றபடியால் நாமும் அப் பகவன் முன் சென்று பரவிடுவோமெனப் பதினெண் புராணங்களும் பண்புடன் வந்து "பாரினில்மேவும் ஆன்ம கோடிகளே! நாங்கள் கூறும் கடவுளும், வேதங்கள் முறையிடும் வித்தகனும், யாவையும் யாவரையும் படைத்துக் காத்து அழித்து பக்குவம் வருவித்துப் பரமானந்த மீயும் பரா பரனும் இவனே என்று எடுத்துரைத்தல் போல் பதினெட்டு வகை வாத்தியங்களும் முழங்க (லயக்ரம சங்கார கோலத்தை யுணர்த்த) இறைவன் உச்சயிச்சிரவ மெனும் வேதக் குதிரை வாகனமீது வீதி யுலா வரும் விசித்ர கோலத்தை விளம்புதலும் அரிதாம்.

கைலாஸ பர்வத வாகனம்

இராவணன் என்றும் ஆணவ மலம் நிறைந்த உயிரானது பிரபஞ்சத்தை அறிந்து இன்புற முயல்வதும், (கைலை மலையைத் தூக்க முயல்வதும்) முடியாமல் துன்புறலும், இறுதியில் ஆணவத்தை யிழந்து கடவுளைத் தியானித்து வரம்பெற்று, இறுதியில் இறைவன் நிரு வடி சார்ந்து இன்புறுகின்றதும் ஆகிய இவற்றை யுணர்த்த சிவாலயத்தில் கைலாச பர்வத வாகனக் காட்சி கவினுற நடைபெறும்.

இரதோத்ஸவம்

ஞானக்கினியின் சிகர ஒளியே குடையும் கொடியுமாயும், விசுவ விராட் சொரூபமே எட்டு அடுக்குகளாயும், சோடசாந்தமே உச்சியிலிருக்கும் கும்பமாயும், துவாதசாந்தமே அதற்கடுத்த கீழ் அடுக்காயும், மஸ்தக ஆஜ்ஞானமே அதற்கடுத்த அடுக்காயும், மஸ்தக மத்யஸ்தானமே அதற்கடுத்த அடுக்காயும், மஸ்தக அந்த ஸ்தானமே அதற்கடுத்த அடுக்காயும், புருவ மத்ய ஸ்தானமே அதற்கடுத்த அடுக்காயும், தத்துவக் கால்களே நடுவில் தாங்கும் குத்துக் கால்களாயும், சோமன் சூரியன் அக்னி என்னும் முச்சுடர்களாகிய மூன்று கண்களே முன் மூன்று துறைகளாயும், சிகையும் இட வலக் காதுகளுமே ஏனைய துறைகளாயும், முப்பாழாகிய இடமே இறைவன் எழுந்தருளும் கேடய பீடமாயும், நாசியின் சூர்ய சந்த்ர கலைகளே குதிரைகளாயும், அக்னிக் கலையே சாரதியாயும், கண்ட

ஸ்தானமே அதற்கடுத்த அடுக்காயும், இருதய ஸ்தானமே அதற்கடுத்த் அடுக்காயும், நாபிஸ்தானமே அதற்கடுத்த அடுக்காயும், குண்டலி ஸ்தானமே கீழ் அடுக்காயும், தசவாயுக்களே சக்ரங்களாயும், அண்ட பிண்டத்தையே உருவகப் படுத்தி, இவ்வாறு அமைந்த பிண்ட தத்துவ சரீரமாகிய இரதத்தில், தசவாயுக்களாகிய சக்ரங்களை நிறுத்தி, அசைவற்ற மனத்தை யுந்தி, குண்டலியிலிருந்து நாபிக்கும், அதி லிருந்து கண்டத்திற்கும், அதிலிருந்து வாய்க்கும் ஏற்றி லயப்படுத்தி, முறையே இரதக் குதிரையாம் நாசிக்கும், அங்கிருந்து கண் வழியாக வும் நடுவழியாகவும் மேல் நோக்கி, ஆரும் அடுக்காகிய புருவ மத்திக் கும் ஏற்றி லயப்பட்டு, சும்மா இருந்தபடி இருக்கும் நித்திய சுகியாய் இருந்திடல் வேண்டுமென்ற லயக்ரமத்தைக் காட்டக்கூடிய இரதோத்ஸவக் காட்சி வெகு விமரிசையாய் நடைபெறும்.

பிக்ஷாடனக் கோலமும் மோகினி அலங்காரமும்

தாருக வனத்து ரிஷிகளும், ரிஷி பத்னிகளும் ஆணவ மலத் தால் தாங்கள் சுதந்திரர்கள் என எண்ணி இறு மாந்து கடவுளை மறந்த காலையில் இறைவன் தோன்றி, அவர்கள் பர தந்திரர்களே யென்று உணர்த்தியதைக் காட்ட, சிவாலயத்தில் *பிக்ஷா டன மூர்த்தியின் காட்சியும், விஷ்ணுவாலயத்தில் மோகனவதாரக் காட்சியும் வெகு ரம்மியமாய் நடக்கும்.

நடராஜ தரிசனம்

சிருஷ்டியை உணர்த்தும் தமருகக் கரமும், ஸ்திதியை உணர்த் தும் அபய ஹஸ்தமும், சங்காரத்தை உணர்த்தும் எரிதாங்கிய கரமும், திரோபவத்தை உணர்த்தும் (மாயை யாகிய மூயலகனை மிதிக்கும்) (ஊன்றிய) வலத்திருவடியும், அநுக்ரஹத்தை உணர்த்தும் (தூக் கிய) இடத்திருவடியும், "இவ்விடத்தில் சேர்ந்து அநுக்ரஹம் பெறுக! ஆநந்த மடைக!!" என இடத்திருவடியைச் சுட்டிக் காட்டும் இட (வரத)த் திருக் கரமும் கொண்டு எழுந்தருளியுள்ள நடராஜ மூர்த்தி யானவர், "பஞ்ச கிருத்தியங்களையும் புரிபவன் யான் ஒருவனே" என (சபையை விட்டுப் புறப்படலால் சிருஷ்டியையும், அபிஷேகத்தால்

* உயிர்களது சத்தாவரண சக்திகளையும் கெடுத்துச் சர்வ சங்க பரித்யாகஞ் செய்து, பரம சாந்த நிராகார நிராமய சதானந்தமான மோட்சத்தைக் கொடுப்பவர் என்பதாம். இது லயக்ரம திரோபவ வடிவம் என்பர்.

ள்நிதிகையுப், சர்ந்தணிதலாலும் அலங்கார ஹாரதனையாலும் சன்
காரத்தையும், †வெள்ளைச் சாத்துபடியால் திரோபவத்தையும், வீதி
வலம்வரலால் அநுக்ரஹத்தையும்) எப்போதும் அமர்ந்துள்ள இடத்தி
லிருந்து புறப்பட்டு முதல் ஸாலிரவே ஆயிரக்கால் மண்டபம் சேர்ந்து
(அங்கு தரிசனத்தன்று காலையில்) அபிஷேக மாடி ஹாரதனைகளேற்று
அளவிறந்த பக்தகோடிகளும், அமரர் குழாங்களும், முனிபுங்கவர்க
ளும், ப்ரஹ்மாதி கண்டு ஆநந்தபெய்தி "அரஹர" என்று கோஷம்
செய்து அஞ்சலி பன்தராய்ப் பரவச மடையுமன்று திவ்ய தரிசனம்
தரல்லால், ஹ்ருதய கமலத்தில் வாசம் புரியும் பரமாத்மனை மூலாக்னியி
னுதவியால் ஸஹஸ்ராரமாகிய ப்ரம்மரந்த்ர ஸ்தானத்தில் சேர்ப்பித்து
பின்னர் தரிசித்தல்லில் பன்னுதற்கரிய பரமானந்தம் சித்திக்கு மென்
பதையும் உணர்த்தும் நடராஜ தரிசனக் காட்சி நகரேஸ்வராலயத்திலே
நன்கு நடைபெறும்.

ஸ்ரீராம பஞ்சாயதனக் காட்சி

"ஆஸ்ப கோடிகளாகிய நீங்கள் அனைவரும் புருஷார்த்தமர்க
ளாக, ஏகபத்னீ வ்ரதர்களாக, பிதுர் வாக்யு பரிபா
லன்களாக, ஆத்மஞான மடைந்த உத்தமமுகான்
கருக்கு வேண்டிய ஹிதங்களைப் புரிபவர்களாக,
சரணாகத வத்ஸலர்களாக, ஸத்ய வாக்ய பரி பால
கர்களாக, நல்ல நலங்களருளத் தகுந்தவையினர்க்
விளங்குதல் வேண்டும்" என்று உணர்த்தும் ஸ்ரீ ராமச் சந்த்ர மூர்த்தி
யும், மனைவியின் கடமைகள் அனைத்தையும் உலகினர்களுக்கு காட்ட
வேண்டி ஸ்த்ரீ தர்மமே உருவெனத் தோன்றிய சீதா பிராட்டி
யாரும், "சத்வகுண சீலனுகத் திகழும் தமையனே தஞ்சம்" எனத்
தெரிவிக்கும் இலட்சுமணனும், சகோதர வாஞ்சையே உருவாகக்
கொண்ட பரதனும், அத்தகைய தமையனையே பின்பற்றும் சத்ருக்ன
னும், ("உலகிலுள்ள எப்பொருளும் நன்மைதரா. நற்சுவை தரா.
இன்பந் தரா. முத்து, மணி, வைரம், பவள்ம், மரகதம், மாணிக்கம்,
தங்கம், வெள்ளி முதலிய எவற்று லமைந்த பணிகளும் உண்மை
யழகைத் தரா. ஆயின், ராம நாமகமானது அழகும் நலனும் சுவை
யும் இன்பமும் அனைத்தும் பொருந்தியது. ஆதலால் இம் மஹா
மந்த்ரத்தை, அவனுடைய நாமஸ்மரணையை, விடாது பஜித்து

† வெள்ளைச் சாத்துபடி - பச்சை கர்ப்பூரம் சாத்தல் என்பர்.

ஆனந்தமுறுமின்! அவனுடைய பாதாரவிந்தங்களே மிருதுவானவை யும், அழகியவையும், அனைத்துந் தர வல்லனவும், பேரின்பம் அருள வல்லனவுமாகலின், அடியேன் அத் திருவடிகளையே பற்றி வருடி ப்ரம்மானந்த முறுகின்றனன். நீவிரும் பிறவிப் பெருங்கடல் நீந்திப் பேரின்பக் கரையை யடைய விரும்புவீ ராயின், அவனது திருவடிப் புணையைப்பற்றி முத்தியங் கரை யடைந்து மொழிய வொண்ணு இன்பத்தில் மூழ்குங்கள்" எனவும், "'எல்லாம் ராம மயம்' என் னும் அதியற்புத வுணர்ச்சியை அனைவரும் அடைந்து ஆனந்த முறு மின்!" எனவும் கூறுவதே போல) ஸ்ரீ ராமபத்திரன் திருவடி களையே பற்றி வருடிக்கொண்டிருக்கும் ஹனுமனும் சேர்ந்து சேவை தரும் பட்டாபி ராம பஞ்சாயதனக் காட்சி விஷ்ணு வாலயத்தில் வெகு விமரிசையாய் நடைபெறும்.

காமதேனு வாகனம்

"மானிடப் பிறவியைப் பெறுவதே அரிது. கூன் குருடு செவி டுமை யாதி பேடு நீங்கிப் பிறத்தல் அதனினும் அரிது. ஞானமும் கல்வியும் ஒழுக்கமும் எய்தல் அதனினும் அரிது. அன்பும் பக்தியும் ஜீவகாருண்யமும் அனைத் தும் அடைதல் அதனினும் அரிது. தானமும் தவமும் மோன நல்லுணர்வும் சார்ந்தே திகழ்தல் அதனினும் அரிது" என் னும் ஆன்றோர் மொழிகளை அகமுற உணர்ந்து, தன்னுயிர் போல மன்னுயிரோம்பி, தன்னிடம் உள்ளதை இல்லை என்னாது, உண்மை யன்போடும் பிறர்க்குக் கொடுத்துதவி, அவ்வுதவியின் பயனை இறை வனுக்கு அர்ப்பணம் செய்யும் உத்தம நிலையான கர்ம யோகத்தை அநுசரிக்கும்படியான உன்னத நிலை வருகையில், அவ்வாறு பிறர்க்கு வழங்கும் பொருள்கள் பரம்பொருளருளால் நிரம்ப உண்டாகின் றனவென்றும், அதுகாலை இவ்வுலகை யியக்கும் மகா சக்தியே உகந்து அவர்கள்பால் சார்ந்து திருவருள் புரியச் சந்தர்ப்பம் வாய்க் கும் என்றும் யாவரும் உணரக் காமதேனு வாகனமீதும்,

ஸிம்ஹ வாகனம்

தற்பெருமையையும் கோபத்தையும் அகங்காரத்தையும் அடக்கி, தன்னடக்கம் சாந்தம் பணிவு அன்பு பக்தி முதலிய நற்குணங்களைக் கொள்வோர் பரா சக்தியின் திருவருட்குப் பாத்திரராவர் என்பதை உணர்த்த ஸிம்ஹ வாகன மீதும்,

அன்ன வாகனம்

அன்னமானது நீரை நீக்கிப் பாலைப் பருகல்போல், துஷ்கர்மங்களை நீக்கி ஸத்கர்மங்களை நல்லெண்ணத்தோடும் பரிசுத்த மனத்தோடும் இயற்றவல்ல தூய புண்ய சீலர்களுக்கு, எங்கும் நிறைந்த பராபரியின் திருவருள் உடனிருந்து துணை புரியும் என்பதை உணர்த்த ஹம்ஸ வாகன மீதும் அம்மையார் தோன்றிச் சேவைசருதல் மிக்க அற்புதமாய் இருக்கும்.

தீர்த்த வாரியும் ஸ்வாமி தரிசனமும்

இறைவனது அனுக்ரஹம் பெற்ற உயிர்கள் யாவும் அவனது அருட்பெருக்கில் அமிழ்வதைக் குறிக்கும் தீர்த்த வாரிக் காட்சியும், இறைவன் திருவடியில் சென்று ஐக்யமுற்று மோக்ஷம் அடைவதை யுணர்த்துவது போல அனைவரும் நீராடி ஆலயத்துட் சென்று வணங்கும் காட்சியும் திவ்யமாகத் தோன்றும். இத் தகைய ப்ரம்மோத்ஸவமானது அநேக சிறப்புக்களுடன் நடைபெறுவதேயன்றி, அநேக சிறந்த தத்துவ உண்மைகளை உணர்த்தி, மாந்தர் கட்கு மகிழ்வையும் மனச் சாந்தியையும் பேரானந்தத்தையும் நல்கும்.

விதிகள் அமைப்பு.

மேற்கூறிய பல சிறப்புகளும் வாய்ந்த பெனுகொண்டா நகரமானது, பன்னிரண்டு சூர்ய வீதிகளும், பதினாறு சந்த்ர வீதிகளும் ஆக மொத்தம் இருபத்தெட்டு வீதிகள் பக்கத்திற்கு ஏழு (அங்கணம்) ஆக நாற்புறமும் அமையப்பெற்று இருக்கும். அவ் வீதிகளைப் பார்த்தால் சிவாகமங்கள் இருபத்தெட்டுமே வீதியுருக்கொண்டு அமைந்து விளங்குதல் போலத் தோன்றும். அந் நகரின் நடுவிலே சர்வ வைபவங்களுங் கூடிய இராஜ அரண்மனை எழிலுடன் மிளிரும்.

புகையும் முகிலும்.

சோலைகள் தோறும் கரும்பாலைகளின் புகையும், மேற் சொன்ன வீதிகளிலுள்ள மாட மாளிகைகள் தோறும், வேள்விகளின் புகையும், அகில் தூபத்தின் புகையும், பூஜா காலத்திலும் ஏனைய காலங்களிலும் போடும் சாம்ப்ராணிப் புகையும், சமையல் பாகங்கள் செய்கையில் எற்படும் புகையும், குயவர்கள் பாண்டங்களைச் சுடும்

புகையும், கட்டடங்கள் கட்டுவோர் செங்கற் சுடற்காகச் சூளை போடும் புகையும், முகிற் கூட்டங்களும் சூழ்ந்து பரவிக்கொண்டு இருக்கும்.

பலவகை யொலி

ஏர் உழுவோர்களின் பாடல் ஓசையும், விதைகள் விதைப் போர் விளம்பும் மாற்றமும், நாற்று பிடுங்குவோர் நவிலும் மொழிகளும், நடவு நடுபவர் நம்பினைத் தொழுதலும், களைகளைக் களைவோர் கழறும் கதைகளும், தண்ணீர் பாய்ச்சுவோர் சதிராய்ப் பாடலும், அறுப் பறுப்பவர் அழகாய்ப் பேசலும், கட்டுக் கட்டுவோர் கவிஞருரை களும், நெற் சூடு அடிப்பவர் நேர்ந்துரை வார்த்தையும், நெற் கதிர் அடிக்கையில் நிகழும் சப்தமும், (அடித்து வைக்கோலைப் பிரித்து, மேருமலை போல ஒருபுறம் போர் செய்து, அம்மேரு வருகில் வான் சொரியும் மழைத் துளிகள் போல நெல்லைத் தூற்றி, நெல் முத்து சங்கு தாமரை அல்லி முதலிய பலவற்றையும் தனித்தனியாகக் குவித்து, மேரு மலையைச் சுற்றி மேகங்கள் செல்வது போல) நெல் மூட்டைகளை எருதுகள் பூட்டிய வண்டிகளில் ஏற்றி, (அந்த வைக் கோல் போரைச் சுற்றிக்கொண்டே) வண்டிகளை ஓட்டிச்செல்பவர் உவகையுடனே பாடும் பாடல்களின் ஒலியும், (ஏற்றிவந்த நெல்லை வீட் டில் இறக்கிக்கொண்டு அரசர்க்குரித்தாய ஆறில் ஒரு பங்கைத் தந்து, மிகுதியைத் தென்புலத்தார்க்கும், தெய்வத்திற்கும், விருந்தினர்க்கும், சுற்றத்தார்க்கும், தான தர்மங்கட்கும், பொதுச் சேவைக்கும், சுற் குருவுக்கும், தமக்கும் எனப் பிரித்து, அன்பு கனிந்த செம் மனத் தோடும் அனைவர்க்கும் நல்க) தான தர்மங்கள் பெற்றுச் செல்லும் சற் பாத்திரர்களாகிய அற நெறியாளரும், யாவரிடத்தும் செந் தண்மைபூண்டொழுகும் சீரிய உளத்தரும், கொடை வள்ளல்களை வாழ்த்தும் ஒலியும், பிதிர்கட்கும், சற் குருமார்க்கும் அன்போடு சமர்ப்பிக்கும் மந்த்ர ஒலியும், இறைவனை த்ரிகரண சுத்தியுடன் மெய் யன்பரெலாந் துதிக்கும் ஒலியும், விருந்தினரை அன்புடன் ஏற்று உபசரிக்கும் ஒலியும், உறவினர்க்கு உதவியாற்றும் உத்தமர்கள் பலர் உரைக்கும் உரைகளும், வேதம் நான்கையும் ஓதும் ஒலியும், கீத இசையினுற் கிளர்ந்தெழு மொலியும், யாழொலியும், வீணை யொலியும், குழலொலியும், மணி யொலியும், மங்கல வாத்தியங்களின் ஒலியும், மணவினைகள் புரியும் ஒலியும், சுபச் சடங்குகள் செய்யும் ஒலியும்,

சோபனங்கள் பாடிடும் ஒலியும், பண்ணெலியும், பயிலொலியும், ஆடலொலியும், முழவினெலியும், கலியினெலியும், களிற்றி னெலியும், புரவிகள் ஒலியும், புரவிகள் கழுத்திற் பூட்டியிருக்கும் கிண் கிணியொலியும், தாரின் மலரிற் றண்டேனுகரும் சுரும்பின் ஒலியும், தேர்கள் தெருக்களில் செல்லும் ஒலியும், சேனை வீரர்கள் சேர்ந்து செல் ஒலியும், மழலை யொலியும், மாங்குயி லொலியும், கிளியின் ஒலியும், கேகய ஒலியும், பல பல பறவைகள் பாடும் ஒலியும், ஐவகைக் கருவிகள் ஆர்க்கும் ஒலியும், வீதிகள் எங்கும் விழாவின் ஒலியும், அனைத்தும் சேர்ந்து காரொலியையும் அடக்குந் தன்மைய போலத் தோன்றுவ தன்றி, புதிதாய் வருபவர் பலவித ஒலிகளும் கடலொலி போல முழங்கலைச் செவிமடுத்து, "இத் திரையொலி கேட்கும் காரணம் யாது? கடலின் ஒலி இத்தனை தூரமோ கேட்கும்?" என ஐயுறத்தக்க நிலைமையி லிருக்கும்.

வைசியக் குழந்தைகள் விளையாடும் வளப்பு

அவ்வூர் வைசிய வீதிகளில் உள்ள சிறுவர்களும், சிறுமிகளும், தாங்கள் விளையாடுதற்காக வைத்துக் கொண்டிருக்கும் சிறிய வெள்ளி யடுப்பைக் கொண்டுவந்து வைத்து, அதன் மீது சிறிய தங்கப் பாத்திரத்தை வைத்து அடுப்பில் நெருப்புக்குப் பதிலாக சிவந்த நிறமுடைய மாணிக்கங்களையும் கெம்புகளையும் கொட்டி, உலையில் அரிசிக்குப் பதிலாக முத்துக்களைக் கொட்டி, பதார்த்தங்களுக்குப் பதிலாக கோமேதகம், புஷ்பராகம், மரகதம், நீலம் முதலிய மணிகளை வைத்துக்கொண்டு விளையாடுவது மிக விசித்திரமாயிருக்கும்.

மற்றும் சில வைசியச் சிறுமிகள் மரகதத்தாலம்மிகளும், வெள்ளியினு லரல்களும், வஜ்ரத்தா லலக்கைகளும், பசும் பொன்னால் இயந்திரங்களும் வைத்துக்கொண்டு விளையாடிக்கொண்டிருப்பர். இன்னும் சிலர் கோமேதகத்தாலாகிய உரலில் முத்துக்களாகிய அரிசியையும் நீல மணிகளாகிய உழுந்தையும் கொட்டிப் பன்னீராகிய ஜலத்தைத் தெளித்துக் குடைந்து விளையாடுவர்.

பின்னும் சிலர் பல வர்ணங்களான சோழிகளைக் கொணர்ந்து முப்புறமும் அடுப்புப்போல அமைத்து, தாமரை மலர்களைப் பாத்திர

மிராக வைத்து, முல்லை யரும்புகளை அரிசிபோலக் கொட்டி, அடுப்பிலே செவ்வரக்காம்பல் மலர்களை நெருப்புக்குப் பதிலாக உபயோகித்து, "எரியவில்லையே!" என மயிலிறகினாலே விசிறியும், பப்பாளி நாளம் முதலிய குழல்களால் ஊதியும், அடுப்பின்மேல் சர்தப் பொங்கிவிடு மென்று முங்கிலிலை தென்னம் பாளை முதலாய துடுப்புகளால் கிண்டியும் மிக்க ஆனந்தமாக விளையாடிக்கொண்டிருப்பர்.

சிறுவர்கள், நவரத்தினங்களாலும், பைம் பொன்னாலும், முத்துக்களாலும், யானைத் தந்தத்தாலும் செய்யப்பெற்று விநோதமாயுள்ள சிறு தேர்களை யுருட்டுவதும், அத்தேரை யுருட்டிக்கொண்டு அவ்வீட்டுச் சிறுமிகள் ஓடுகையில், அவர்கள் அரையிற் பூணைந்துள்ள சதங்கைகளும், கால்களில் அணிந்துள்ள கிண்கிணிக்களும் அலம்பும் ஒலியும், சிறு தேர்களிற் கட்டியுள்ள சிறு மணிகள் சப்திக்கும் ஒலியும், அச்சிறுவர்கள் ஓடிக்கொண்டே கூறும் சில மழலை மொழிகளின் ஒலியும் யாவும் சேர்ந்து அனைவர் செவிகட்கும் அமுதூட்டல் போலத் தோன்றும்.

சிறுமியர்கள், வைரங்களாலும், வைடூரியங்களாலும், பவளத்தினாலும் சிற்றில் கட்டலும், சிதைத்தலும், கினைத்தொளலும், சுமரானமாதலும் மிக்க விநோதமாயிருக்கும்.

அவர்கள் தங்களுக்குள்ளே ஊபாத்தியாயர் என்றும், உபாத்தியாயினி என்றும், மாணவ மாணவிகள் என்றும் ஏற்படுத்திக் கொண்டு, தங்கத் தகடுகளை யெல்லாம் வரிசையாக வெள்ளிக்கம்பி யினால் கோத்து, "இந்தான் ஓலைச்சுவடி! இந்தாளி அந்தச் சுவடியைக் கட்டும் நூல் காயிறு!" என்று வைத்துக்கொண்டு விளையாடுதல் மிக வேடிக்கையாயிருக்கும்.

அவர்கள் பல சிறு வாத்தியங்களை வைத்துக்கொண்டு சப்தம் செய்வதும், வாய்க்கு வந்தபடி பல சிறு பாடல்களை அழகாகப் பாடுவதும், பல மொழிகளிலும் அறை குறையாக மழலைச் சொற்களால் பேசுவதும், நகைப்பதும், குதித்துக் களித்து ஆடுவதும், ஓடுவதும், விழுவதும், எழுவதும், எவ்வளவோ சிறுவர்களையும் "ஓடிவா! ஓடிவா! சீக்கிரம் வா!" எனக் கையசைத்து அழைப்பதும், அவ்வளவில்

மகிழ்ந்து ஆனந்தமுறுவதும், அனைவரும் ஒருங்கே கலந்து விளையாடுவதும் வெகு மனோ ரம்யமாயிருக்கும்.

தூய மெய்ப்பொருளைத் துதித்துக்கொண்டே துயில் விட்டெழுதல்

அந் நகரின் கண் உள்ளார் அனைவரும் "எல்லாமாகி எங்கும் நிறைந்த பேரின்ப வடிவாகிய பெருங் கருணை வள்ளால்! 'இன்று இன்ன இன்ன (ஸத்கர்ம) வேலைகள் செய்து முடிக்கவேண்டும்' என நீ உள்ளிருந்து நினைப்பிக்க யான் நினைவுகொள்கின்றேன். ஆகலின் ஸர்வ வல்லமையுள்ள நீ என்னை இன்று எவ்வித நீச் செயல்களினும் செலுத்தாது, யாதொரு பாபங்கட்கும் உட்படுத்தாது உனது அருட் கிருபையால் ஸத்விஷயங்களிலேயே இன்று முழுவதும் ஈடுபடச்செய்து, அந்த ஸத் கருமங்களை நிஷ்காம்யமாக நிறைவேற்றுவித்து அடியேனைக் கிருதார்த்த னாக்கும்படி மிகவும் தாழ்மையுடனும், அன்புடனும், பரிசுத்த மனத்துடனும் உன் திருவடி சாட்சியாகப் பிரார்த்தித்துக் கொள்ளுகின்றேன். யாவும் உன் திருவுளச் செயல். நீ ஆட்டுவிக்கும் முறைப்படி யாடும் சூத்திரப் பாவையே யன்றி, யான் ஒன்றையும் நினைக்கவோ கூறவோ இயற்றவோ வல்லேனல்லன். ஆதலால், யாதுமறியாச் சிறுவனுகிய அடியனைக் காப்பது உனது கடமையே யாகும்" எனத் துதித்துக்கொண்டே உஷத் காலத்தில் (விடிய ஐந்து நாழிகைக்கு முன்) துயில்விட் டெழுதல் மிக்க ஆனந்தகரமாகவும் யாவரையும் பக்தி பரவசத்தில் ஈடுபடுத்துந் தன்மையதாகவுந் திகழும்.

காலைக்கடன்களைக் கருத்துடனற்றுங் கவின்

வேத விதிப்படி உபநயனம் செய்துகொண்டு (ஞான நேத்திரம் என்று சொல்லத்தக்க) உண்மை உணர்ச்சியைப் பெற்று, (கடவுள் உலகம் உயிர் என்னும் முப்பொருள்களையும், அவற்றின் தத்துவ உண்மைகளையும் உள்ளவாறு உணர்த்தும் முப்புரி நூலை முறையோ டணிந்து) சீரிய ஒழுக்கத்துடன் திகழும் பிரமசாரிகளும்,

அறிவில் ஆதிசேடனையும், கட்டழகில் காமனையும், ஆண்மையில் ஆண் சிங்கத்தையும், நடையில் மதயானையையும், வாய்மையில்

ஹரிச்சந்திரனையும், ஏகபத்னீ விரதத்தில் ஸ்ரீ ராமபத்திரனையும், நிஷ்காம்ய கர்மத்தில் ஸ்ரீ கண்ணபிரானையும், அஹிம்ஸையில் கௌதம புத்தரையும், வீர பராக்ரமத்தில் பீமசேனனையும், பக்தியில் சைதன்யரையும், அன்பில் கண்ணப்பரையும், ஆத்ம ஞானத்தில் ஆதி சங்கரரையும், காருண்யத்தில் இராமானுஜரையும், சகோதர வாஞ்சையில் பரதனையும், ஜீவதயையில் சிபிச் சக்ரவர்த்தியையும், நீதி நெறியில் மனுச் சோழனையும், தான தருமத்தில் கர்ணனையும், பரோபகாரத்தில் ததீசி முனிவரையும், பொறுமையில் பூமிதேவியையும், கனிவில் மணிவாசகரையும் ஒத்தவர்களாய், ஆசாரசீலம் ஒழுக்கம் ஊக்கம் சாந்தம் சற்ஜன நேயம் த்யாகம் சேவை அடக்கம் பணிவு முதலான நற்குணங்களையுடையவர்களாய், உறுதியே பேசல், இனியவே கூறல், இதமே செய்தல், பயனுள பாராட்டல், பெரியாரை வணங்கல், மர்தா பிதாக்களது மனக்குறிப் பறிந்து அவர்களிச்சையின்வழி மாண்புற ஒழுகல், சற்குரு நாதனின் கட்டளை வழி நிற்றல், நியாய வழியினுற் பொருளினை யீட்டல், ஈட்டிய பொருளை நல்ல வ்ழியிலே செலவிட்டு மகிழ்தல் ஆதிய நற் செய்கைகளை யுடையவர்களாய் விளங்கும் வாலிபர்களும்

கோதாவரி தீரம் சென்று ஆல் வேல் முதலிய குச்சிகளைக் கொண்டு சுமார் இரு நாழிகை நேரம் பரிசுத்தமாகத் தந்த சுத்தி செய்துகொண்டு, நதிக்கரையிலுள்ள மணற்றரையிலும் புற்றரையிலும் வ்யாயாம சபைகளிலும் (அவ்வவர்களின் வழக்கப்படி) சேர்ந்து, சூர்ய நமஸ்காரம், அஷ்டாங்க பஞ்சாங்க நமஸ்காரங்கள், ஆசன வகைகள், கசரத்து முறைகள் முதலிய அநேகவிதமான தேகப்பயிற்சிகளைச் செய்துவிட்டுச் சிறிது இளைப்பாறி,

பின்பு *ஆற்று நீரில் இறங்கி, நீரோரமாயுள்ள கற்களில் தங்கள் தங்கள் ஆடைகளைத் தாங்களே நன்கு தோய்த்துத் துவைத்து,

* மெய்யுணர்வற்று, "ஞானிகள் முழுகி விடையும் அகத் தீர்த்தங்களை யடைந்து முழுகி உய்யவேண்டும்" என்னும் கருத்தோடும், [சரீரத்திலே (அங் குட்டத்தினடி ப்ரம்ம தீர்த்தம் என்பர் சிலர்) கைக் நுதி தேவ தீர்த்தம் எனவும், விரல்களின் இறைச்சந்தி ஆர்ஷ தீர்த்தம் எனவும், கனிட்டிகை மூலம் மானுஷ தீர்த்தம் எனவும், மணிக்கட்டு பூத தீர்த்தம் எனவும், தர்ஜனி அங்குட்டங்களின் நடு பிதிர் தீர்த்தம் எனவும் கொண்டு, கர்மங்களை யியற்றி] (ஞான) நீரோடு தலை நலமாம்.

பிறகு ஆற்று நீரில் சற்று நேரம் ஆரோக்யமாக நீந்தி, (பின்னர் வாசனை கலந்த ஸ்நானப் பொடிகொண்டு தேய்த்துக் குளித்து) †ஸ்நானம் செய்து, காலை யனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு வஸ்திரங்களை உலர்த்திக்கொண்டும், மழைகாலமாயின், அப்படியே அடுக்காகத் தோள் மீது வைத்துக்கொண்டும், வீட்டில் பகவானுக்கு பூஜை செய்தற்குரிய மலர்கள் பத்திரங்கள் நிறைத்த குடலையைக்

† ப்ரம்ம தீர்த்த வாயிலாக சாகூாத்கார பரப்ரம்மத்தை உவப்பிக்கும்படி ஜீவ தத்துவம், வித்யா தத்துவம், பர தத்துவம் என்னும் மூன்று தத்துவங்களையும் உன்னிச் செய்யப் படும் கன்ம உண்மையை அறிந்து அவ்வழி நின்றும், உண்மை பேசல், தானம் செய்தல், சமமாய் நிற்றல், தமமுறல், இன்சொற் கூறல், அந்தக் கரண மடக்கல், புறக் கரண மொடுக்கல், ஒருவழிப் பட்டல், பொறுமை யுடைமை, திடமுடைமை, ஞான முடைமை, உயிர்கட் கிதம் செய்தல் என்னும் மானஸ தீர்த்தங்களை யடைந்து, கடவுள் த்யானம் என்னும் மானஸ விசேஷ ஸ்நானம் செய்தும், கருப்பையிற் புகுத்துகின்ற மூன்று மலங்களையும் கழுவிப் பரிசுத்தராய்ப் பேரானந்தப் பெரு வீட்டைதல் வேண்டும் என்னும் உண்மை யுணர்ச்சியோடும் நீராடல் வேண்டும்.

"..... தீர்த்தம் ஆடிடினும்
உமிழ்முடை யாக்கை சுவியுறுது; இறைவன்
உண்மை தேர்ந்து உயிர்சுத்தி யுறுமே." (தணிகைப் புராணம்)

"செய்பிரம தீர்த்தந்தா லாசமனஞ் செப்பியே
யுய்யவந்த தத்துவமூன் றும்"

"பஞ்சவித தீர்த்தத்தைப் பாங்காக வேயறிந்
தெஞ்சாதே கன்ம மியற்று." (சைவ சமய நெறி)

"சத்தியந் தானஞ் சமந்தம் மின்சொல்
சாற்றுத லொருவழிப் படுதல்
புத்தியே முதல கரணமோர் நான்கு
மடக்குதல் புலன்கள்போம் வழியில்
உய்த்திடா தமைத்தல் பொறைதிட ஞானம்
உயிர்க்கெலாந் தண்ணளி புரிதல்
இத்திற மனைத்து மானஸ தீர்த்தம்
எனவெடுத் தியம்பினர் மேலோர்."

"உரைப்பரு மானஸ தீர்த்தம் ஒதிடில்
சுருக்கமில் ஞானநீர் தோய்தல்; மற்றது
விருப்பொடு வெறுப்பென விளம்பப் பட்டதோர்
கருப்புகுத் திடுமலங் கழுவும் என்பவே." (காசி காண்டம்)

"ஸ்நானங்களுள் மானஸ ஸ்நானமே மேலானது; அது
கடவுளை த்யாவித்தலே யாம்." (யர்க்ஞவல்கியர்)

"அறிவினிற் பெரியோ ரகத்தினும் புறத்து
மாகிய தீர்த்தங்கள் மூழ்கிச்
செறிதருந் தெய்வத் தலங்களும் போற்றிச்
சிவானந்த முத்தியை யடைவார்." (சூத ஸம்ஹிதை)

கை விரலில் மாட்டித் தோளில் உயர்த்திக்கொண்டும் பொழுது விடிவதற்குள் வீடு திரும்பும் காட்சி வெகு ரமணீயமாய் இருக்கும்.

இளம்பெண்கள் ஒருவரையொருவர் எழுப்பிக்கொண்டு நீராடச்செல்லல்

"புள்ளினம் சிலம்பிய பொற்பினை நீ கண்டிலையோ? புண்ணியன் கோயிலில் வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ? கீழ்வானம் வெள்ளென்று தோன்றுதலும் காணையோ? மிக்குள்ள பிள்ளைகளும் போவான் போகின்றார்; அவரைப் போகாமல் காத்து, உன்னைக் கூவுவான் வந்து நின்றோம்; கௌதூகலமுடைய பாவாய்! எழுந்திராய்!" என்றும், "தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய, தூபம் கமழ, துயிலணைமேல் கண்வளரும் மாமான் மகளே! மணிக்கதவம் தாள் திறவாய்!" என்றும், "மாமீர்! அவளை எழுப்பீரோ? உம் மகள்தான் ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ? ஏமப் பெருந்துயில் மந்திரப்பட்டாளோ?" என்றும், "மாற்றமும் தாராயோ? வாசல் திறவாயோ? கூற்றத்தின் வாய் வீழ்ந்த கும்பகர்ணனும், தோற்றும் உனக்கே பெருந்துயில் தந்தானோ? ஆற்ற அனந்தலுடையாய்! அருங்கலமே! தேற்றமாய் வந்து திறவாய் கதவை" என்றும், "கனைத்திளங்கற் றெருமை கன்றுக் கிரங்கி, நினைத்து முலைவழியே நின்றுபால் சோர நனைத்தில்லம் சேறுக்கும் நற்செல்வன் தங்காய்! பனித்தலை வீழ நின் வாசல் கடைபற்றி, மனத்துக் கினியானைப் பாடவும் நீ வாய்திறவாய்; இனித்தா னெழுந்திராய்; ஈதென்ன பேருறக்கம்? பிள்ளைக ளெல்லாரும் பாவைக் களம் புக்கார்; வெள்ளி யெழுந்தது; வியாழ முறங்கிற்று; புள்ளும் சிலம்பினகாண்; போதரிக் கண்ணினையே! குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே பள்ளிக் கிடத்தியோ? பாவாய்! உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள் செங்கழுநீர் வாய் நெகிழ்ந்து, ஆம்பல்வாய் கூம்பினகாண்; செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர் தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்; எங்களை முன்னம் எழுப்புவான் வாய் பேசும் நங்காய்! எழுந்திராய்; நாணுதாய்! நாவுடையாய்! எல்லே! இளங்கிளியே! இன்னும் உறங்குதியோ?" என்றும்,

"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் ஜோதியை யாம் பாடக் கேட்டேயும், வாட்டடங்கண் மாதே! வளருதியோ? வன்

செவியோ நின்செவி?" என்றும், "பாசம் பரஞ்ஜோதிக் கென்பாய்! இராப் பகல், நாம் பேசும் போது எப்போது? இப்போதார் அமளிக்கே நேசமும் வைத்தனையோ? நேரிழையாய்!" என்றும், "முத்தன்ன வெண் ணகையாய்! முன் வந்து எதிர் எழுந்து, 'என் அத்தன் ஆனந்தன் அமுதன்' என்று அள்ளூறி, தித்திக்கப் பேசுவாய்! வந்துன் கடை திறவாய்;" என்றும், "ஒண்ணித்தில நகையாய்! இன்னம் புலர்ந் தின்றே? கண்ணைத்துயின்று அவமே காலத்தைப் போக்காதே; விண்ணுக் கொரு மருந்தை, வேத விழுப் பொருளைக் கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்து உள்ளம் உள் நெக்கு நின்றுருக நீவா!" என்றும், "மானே! நீ நென்னலே 'நானே வந்துங்களே நானே எழுப்புவன்' என்றலும், நாணுமே போனதிசை பகராய்! இன்னம் புலர்ந் தின்றே? வானே நிலனே பிறவே அறிவரியான் றனே வந்து எம்மைத் தலையளித்து ஆட்கொண் டருளும் வான்வார் கழல்பாடி வந்தோர்க்கு உன்வாய் திறவாய்;" என்றும், "'என்னையன் என்னையன் இன்னமுது' என்று எல்லோமும் சொன்னேம் கேள் வெவ் வேறாய்; இன்னும் துயிலுதியோ? வன்னெஞ்சப் பேதையர்போல் வாளாகிடத்தியால்; என்னே துயிலின் பரிசு?" என்றும், "கோழி சிலம் பச்சிலம்பும் குருகெங்கும்; எழிலியம்ப இயம்பும் வெண்சங்கெங்கும்; கேழில் பரஞ்ஜோதி கேழில் பரங்கருணை கேழில் விழுப்பொருள்கள் பாடினேம்; கேட்டிலையோ? வாழி யீ தென்ன வுறக்கமோ? வாய் திறவாய்; ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ? ஊழி முதல்வனாய் நின்ற வொருவனை, ஏழை பங்காளனையே பாடிடுவோம்" என்றும், பலவாறாக அந்நகரில் வாழும் பெண்கள் யாவரும் வைகறைப் போதில் ஒருவரை யொருவர் எழுப்பிக்கொண்டு இறைவன்பால் கனிந்த பேரன்போடும் நதிக்கரை சேர்வர்.

சேர்ந்து, தந்த சுத்தி செய்துகொண்டு ஆடைகளனைத்தையுந் தோய்த்துத் துவைத்துக்கொண்டு, "முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே! பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனே! உன்னைப் பிராட்டிப் பெற்ற உன் சீரடியோம், உன்னடியார் தாள் பணிவோம்; ஆங்கவர்க்கே பாங்காவோம்; அன்னவரே எம் கணவர் ஆவார்; அவர் உகந்து சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்; இன்னவகையே எமக்கு எம்கோன் நல்குதியேல்

என்ன குறையும் இலோம்" என்றும், "'உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்' என்று, அங்கப் பழஞ் சொல் புதுக்கும் எம் அச்சத்தால், எங்கள் பெருமான்! உனக்கு ஒன்று இசைப்போம் கேள்; எம் கோங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க; எம் கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க; கங்குல் பகல் எம் கண் மற்றொன்றும் காணற்க; இங்கு இப் பரிசே எமக்கு எம் கோன் நல்குதியேல், ஞாயிறு எங்கு எழில் எமக்கு என்?" என்றும் இறைவனைத் துதித்த வண்ணம் இளம் பெண்கள் பலரும் நீராடியும்,

"கண்ணுர் இரவி கதிர் வந்து கார் கரப்ப, தண்ணுர் ஒளி மழுங்கித் தாரகைகள் தாம் அகல, பெண்ணுகி ஆணுய் அலியாய்ப் பிறங்கொளிசேர் விண்ணுகி மண்ணுகி இத்தனையும் வேருகிக் கண்ணுர் அமுதமுமாய் நின்ருன் கழல் பாடிப் பூம்புனல் பாய்ந்து ஆடுவோம்" என்றும், "பைங்குவளைக் கார் மலரால், செங்கமலப் பைம்போதால், அங்கங் குருகினத்தால், பின்னும் அரவத்தால், தங் கண் மலங் கழுவுவார் வந்து சார்தலினுல், எங்கள் பிராட்டியும், எம் கோனும் போன்று இசைந்த பொங்குமடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்து, நம் சங்கம் கிலம்ப, சிலம்பு கலந்தார்ப்ப, கொங்கைகள் பொங்க, குடையும் புனல் பொங்க, பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடுவோம்" என்றும், சுமங்கல ஸ்த்ரீகள் யாவரும் வேதப் பொருள் பாடி, அப் பொரு ளாமா பாடி, ஆதித் திறம்பாடி, ஜோதித் திறம்பாடி, பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பேய்வளைதன் பாதத் திறம்பாடி, காதார் குழையாட, பைம்பூண் கலனுட, கோதை குழலாட, வண்டின் குழாமாட, சீதப் புனலாடியும், மன மகிழ்வோடும் பரம்பொருளை யுன்னி, "நாடுவார் நாடற் கரியோனே! ஆடும் ஆனந்தம் உகப்போனே! நான்மறை யாறங்க நவில்வோனே! அடியார்க் காரமு தானேனே! பாடுவார் பாட லுகப்போனே! உள்குவா ருள்ளத் துறைவோனே! தீவினைகளெலாந் தீர்ப்போனே! வேண்டுவார் வேண்டுவ ஈவோனே!"

"போற்றி யருளுக நின் ஆதியாம் பாதமலர்!
போற்றி யருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்!!
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்!!!
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்!!!!"

எனப் போற்றித் துதித்துக்கொண்டே தத்தமது வீடு சேர்வர்.

கோ பூஜைச் சிறப்பு.

சேர்ந்து வீடுகளைச் சுத்தி செய்து, பசுத் தொழுவத்தையும் சுத்தம் செய்து, எங்கும் வெண் சுதைகள் தீட்டி, பயபக்தியுடன் கோபூஜை செய்வர். *பசு எல்லாப் பிறப்பிலும் உயர்வுள்ள தென்றும், அது தெய்வக் காமதேனுவின் அம்சம் என்றும், அதன் கொம்பின் அடியில் பிரம்ம விஷ்ணுக்களின் அம்சமும், கொம்பின் நுனியில் காவிரி முதலான புண்ய தீர்த்தங்களின் அம்சமும், சிரசில் சிவபெருமானின் அம்சமும், நெற்றியில் அருட் சக்தியின் அம்சமும், காதுகளில் அசுவினி தேவர்களின் அம்சமும், கண்களில் சூர்ய சந்த்ரர்களின் அம்சமும், நாசியில் சுப்ரமண்யக்கடவுளின் அம்சமும், நாவில் வருணனின் அம்சமும், குரலில் சரஸ்வதியின் அம்சமும், மார்பில் கந்தருவர் அம்சமும், கழுத்தில் இந்திரனின் அம்சமும், முதுகில் உருத்திரர்களின் அம்சமும், குறியில் சப்த மாதர்களின் அம்சமும், குதத்தில் மகாலட்சுமியின் அம்சமும், மூத்திரத்தில் கங்கையின் அம்சமும், வயிற்றில் பூமி தேவியின் அம்சமும், சாணத்தில் யமுனையின் அம்சமும், மூலையில் திருப்பாற் கடலின் அம்சமும், வயிறு முகம் இதயம் ஆதி இடங்களில் யாகாக்னியின் அம்சமும், உடம்பில் அருந்ததி முதலான கற்புள்ள ஸ்த்ரீகளின் அம்சமும் பொருந்தி யிருப்பதாயும் ஆன்றோர்கள் கூறியுள்ளபடியால், அந்நகர மகளிர் யாவரும் அந்த கோ பூஜையினை மிக்க சிறப்போடும் வெகு பக்தி விநயத்தோடும் செய்து அந்தப் பசுக்களை வலம் வந்து வணங்கித் தங்கள் கிரக கிருத்தியங்களைக் கவனிக்கத் தொடங்குவர்.

---

* "தங்கும் அகில யோனிகட்கும் மேலாம் பெருமைத் தகைமையன
பொங்கு புனித தீர்த்தங்கள் எல்லாம் என்றும் பொருந்துவன
துங்க அமரர் திருமுனிவர் கணங்கள் சூழ்ந்து பிரியாத
அங்கம் அனைத்தும் தாமுடைய அல்ல வோநல் ஆனினங்கள்"

(பெரிய புராணம் — சண்டேசுர நாயனார் புராணம் — பாடல் 19.)

அன்றியும், வீடுகளில் பசுக்கள் இருப்பதால், (பரிசுத்தம் செய்தற் கேதுவாகிய) கோசல, கோமயங்களும், உயிர்கட்கு உணவாகி யுதவும், பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் முதலிய பொருள்களும் உண்டாகிச் சுகமளிக்கின்றன. திருநீற்றுக்கு ஆதார மூலமான கோமயம் இடைக்கிறது. விவசாயத்தையும் ஏனைய வசதிகளையும் வளர்த்துப் பல்வகையானும் நன்மையளிக்கும் இட்பங்களையும் அப் பசுக்கள்தான் ஈன்று உதவுகின்றன. நல்ல எருவையும் தருகின்றன. திரவிய லாபம், தான்ய விளைவு, பால் பாக்யம், சரீர போஷணம், ஆரோக்யம், லக்ஷ்மிகரம், ஆன்ம லாபம் முதலாய எத்தனையோ நன்மைகள் அப் பசுக் கூட்டத்தால் எய்துகின்றன என்பது யாவராலும் ஒப்புக்கொள்ளக் கூடிய தாகும்:

திருவமுது சமைத்தல்.

உண்மை யன்புடனும் நல்ல மனத்துடனும் கடவுளே ப்ரார்த்தித்துப் பசுஞ் சாணத்தால் பரிசுத்தமாக அடுப்பை மெழுகிக் கோலம்வரைந்து அக்னிமூட்டி உலேயேற்றி ("தம் பொருட்டென்று மாத்திரமே உணவு சமைக்கும் பாவிகள் பாவத்தை உண்ணுகிறார்கள்" எனக் கீதையில் பகவான் கூறியிருப்பதால்) அதிதியார்க்கென ஒரு பிடியும், பகவான் திருவாராதனைக்கென ஒரு பிடியும், அவனுடைய அன்பர் கட்கென ஒரு பிடியும், பின்னர் மிகுதியுள்ளதுமாக பச்சை அரிசியை உலேயிற் பெய்து, தூய மனத்துடன் மலர்ந்த முகத்துடன் கடவுள் சிந்தனையுடன் மெல்லென இசைக்கும் தேவதா ஸ்தோத்திரங்களுடன் திருவமுதையும், பதார்த்த வகைகளையும் செவ்வனே பாகம் செய்து பகவானுடைய ஆராதனைக்குத் தயார் செய்வர்.

க்ரஹத்திலுள்ள மூர்த்திக்குப் பூஜை ஆற்றுதல்.

கோதாவரி வரை சென்று வர முடியாத தளர்ந்த முதியோர் பலர் வீடுகளிலேயே கிணற்றருகில் நீராடி நியமம் முடித்து, தோய்த் துலர்த்திய வஸ்திரங்களை யணிந்து பூஜா க்ரஹத்திற் கருகில் (பொழுது விடிவதற்குள்) வருவர். இதற்குள் கோதாவரி நதியிலிருந்து (ஸ்நானம் செய்து விட்டு அபிஷேக தீர்த்தமும் பத்ர புஷ்பங்களும் எடுத்துக்கொண்டு புறப்பட்ட) இளைஞர்களும் வீடு சேர்ந்து பூஜாக்ரஹத் தருகில் வந்து சேருவர். பின்னர் அனைவரும் பக்தி விநயத்துடனும், அன்புகனிந்துருகிய மனத்துடனும், மெல்லெனுங் குரலில்,

"புலம்பின புட்களும் பூம்பொழில் களின்வாய்
போயிற்றுக் கங்குல் புகுந்தது புலரி
கலந்தது குணதிசைக் கணகடல் அரவம்
களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த
அலங்கலந் தொடையல்கொண் டடியினை பணிவான்
அமரர்கள் புகுந்தனர் ஆதலில் அம்மா!
இலங்கையர் கோன்வழி பாடுசெய் கோயில்
எம்பெருமான்! பள்ளி யெழுந்தரு ளாயே!" என்றும்

"விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொருளே! உன தொழுப்படி யோங்கள்
மண்ணகத்தே வந்து வாழச் செய்தானே!
வண்திருப் பெருந்துறை யாய்! வழி யடியோம்
கண்ணகத்தே நின்று களிதரு தேனே!
கடலமுதே! கரும்பே! விரும் படியார்
எண்ணகத்தாய்! உலகுக் குயிரானுய்!
எம்பெருமான்! பள்ளி யெழுந்தரு ளாயே!"

என்றும் பலவாருகப் பள்ளி யெழுச்சி கூறி,

"திருக்கதவந் திறவாயோ? திறைகளெலாந் தவிர்த்தே
திருவருளாம் பெருஞ்ஜோதி திருவுருக்காட் டாயோ?"

என்று நைந்து வருந்திக்குறை யிரந்த வண்ணமாய்த் திருக் கதவத்தைத் திறந்து மூன்திரையை நீக்கி உட்சென்று, 'துர்க்குணங்களைநீக்கு' எனத் *திருவலகிட்டு, 'உண்மை அன்பு தருக' எனத் †திருமெழுக்கிட்டு,

---

* நேகாலயத்தினிடமாகப் பொருந்தி அழிவில்லாமற் கிடக்கும் காமம், வெகுளி, பொய் என்னுங் குப்பைகளையும், தொன்னூற்றாறு தத்துவங்கள் என்னுங் குப்பைகளையும் கலந்து நீக்கிப் பரிசுத்தமாய் விளங்குவே 'திருவலகிடல்' எனக் கூறிக்கற் பாற்று.

"கருமுதற் றொடங்கிப் பெருநா ளெல்லாம்
காமம் வெகுளி கழிபெரும் பொய்யெனும்
தூய்மையில் குப்பை தொலைவின்றிக் கிடந்ததை
அரிதின் அகற்றி அகத்து போக்கி" (திருக் காழல மும்மணிக் கோவை)

"தத்துவ முற்று மயக்குவ தள்ளி
மெய்த்த தனைப்பெற வேறுகொ டுத்தான்
பொய்த்துறு குப்பை இளைத்தொளி பெற்றது
முத்தை யளித்தென முத்தை தனக்கு." (ப்ரபுலிங்க லீலை)

† கோப முதலிய செத்தைகளை ஒருங்கே நீக்கி; வினை கடந்த தத்வ ஞான மென்னும் கூரிய சாணத்தைக் கொண்டு, அன்பென்னும் ஜலத்தோடு கலந்து மெழுகினற்றான் மனையத்தில் இறைவன் தோற்றப் பெற்று முத்தியடைவார்கள்; அன்றேல் இல்லையாம். இத்தொண்டே 'திருமெழுக்கிடல்' எனப்படும்.

"சினமுத லியமயல் நீர மாற்றுபு
வினைதபு வாய்மையா மெழுக்கை யன்பெனும்
புனலொடு வீரவியே பூசி னல்லது
மனமெனு மனையிடை வராதி லிங்கமே." (சிவப்ரகாச ஸ்வாமிகள்)

"பொருதிறன் மையிருள் நிறத்து
மதமுடை யடுசினத் தைவகைக் கடாவும்
யாப்பவிழ்த் தகற்றி யன்புகொடு மெழுகி" (பட்டினத்தடிகள்)

‡திருவிளக்கேற்றி, (மூர்த்திகளுக்கு நேற்று பூஜித்துள்ள) நிர்மால்ய (பத்ர புஷ்ப)ங்களை அகற்றி, அபிஷேகம் புரிந்து, தோய்த் துலர்த்திய புத்தாடை யுடுத்தி, 'அஹிம்ஸை, ஐம்பொறி யடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்பவையே கடவுளுக் குகந்த மலர்கள்' எனப் பாவித்து §அஷ்ட புஷ்பம் சாத்தி,

தேங்காய் உடைக்கும் காரணம்.

||தேங்காயைக் கையில் எடுத்துக்கொண்டு "ஸ்வாமீ! ஸர்வேசா, அடியேன் இதன் மேலுள்ள கடினமான பச்சைநிற மட்டையை எப்படி நீக்கினேனே! அப்படி என்னை மூடியிருக்கும் ஆணவ மலத்தை நீக்கி, இதிலிருந்த நாரை அடியேன் நீக்கியது போல, எனது அண்மை யறிவை அறிய வொட்டாமல் சுற்றி லும் (சூழ்ந்து) சிக்கவைத்திருக்கும் கர்ம பந்தங்களை நீக்கி, அடியேன்

---

‡ 'திருவிளக்கிடல்' என்பது, தேகாலயத்திலே மனம் என்னும் தகழியில் அறிவாகிய நெய்யை நிறைத்து, உயிர் எனும் திரியிலே ப்ராணன் என்னும் காற்றை நிறுத்தி, ஆணவத் துன்பம் என்னும் இருள் நீங்க, ப்ரம்ம ஞானம் என்னும் தூண்டா விளக்கை ஏற்றுதலாம்.

"உடம்பெனு மனைய கத்துள் உள்ளமே தகழி யாக
மடம்படு முணர்நெய் யட்டி யுயிரெனுந் திரி மயக்கி
யிடம்படு ஞானத் தீயா லெரிகொள விருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை கழலடி காண லாமே."

"ஊனி லுயிர்ப்பை யொடுக்கி யொண்சுடர்
ஞான விளக்கினை யேற்றி நன்புலத்
தேனை வழிதிறந் தேத்து வார்க்கிட
ரான கெடுப்பன வஞ்செ ழுத்துமே." (தேவாரம்)

".....அருள் விளக் கேற்றித்
துன்ப விருளைத் துறந்து....." (திருக் கழுமல மும்மணிக் கோவை)

§ அஷ்டபுஷ்பமாவன :— புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தம், நீலோற் பலம், பாதிரி, அலரி, செந்தாமரை என்பனவாம்.

|| தேங்காய் உடைப்பதற்குப் பிறிதோர் காரணமும் உண்டென்பர். அஃதாவது; ஒரு தென்னை மரத்தின் அடிப் பாகத்தில் (வேரில்) நாம் நீரை விடுத்தோமானால், அத் தெங்கு நாம் செய்த நன்றியை மறவாமல் நமக்கு இளநீராக, தேங்காயாகத் திருப்பிக் கொடுத் துதவுகிறது; மேலும், நாம் பரிசுத்தமில்லாத நீரை (சுவையற்ற நீரை) ஊற்றி வளர்த்தபோதிலும், அது மிக இனிமையான இளநீராகத் தருகிறது; தவிரவும், நாம் அம் மரத்தையே வெட்டினபோதிலும், அது நம்மீது முனிந்து, தன்னிடத்துள்ள இள நீரை மறைத்துக்கொள்வதில்லை. தனக்கு இன்னல் செய்வோர்க்கும் அது நன்மையே செய்கிறது. அஃதேபோல், நாமும் பிறர் செய்த உதவியை மறவாது பாராட்டவேண்டு மென்றும், பிறர் செய்த உதவி மிகவும் சிறியதாயினும், மிகப் பெரிதெனக்கொண்டு

இந்த (மிகக்) கடினமான ஓட்டை, கருங்கல் அல்லது இரும்புத் துண்டினால் உடைப்பதைப்போல, அடியேனது ஆன்ம வொளியை மூடியுள்ள மாயையைத் தேவரீரது ஞானவாளால் தகர்த்தெறிந்து, உள்ளே இருக்கும் வெண்மைப் பாகம்போல, என் மனதை யாதொரு மாசும் இன்றி தூய்மையாக மாற்றி, அதன் உள்ளிருக்கும் ஜலம்போல என் மனம் இளகிக் கரைந்துருகவும், அதன் சுவைபோலப் பேரானந்தம் அனுபவிக்கவும் அருள்பாலித்தல் வேண்டும்." எனப் பிரார்த்தித்து,

வாழைப் பழம் படைத்தல்.

வாழைப் பழத்தைக் கரத்தில் தாங்கி "ஸர்வாந்தர்யாமியாகிய கருணைநிதே! இந்தக் கனியின் மேல்தோலைத் தமியேன் நீக்குதல்போல, எளியேனது ஆன்ம ப்ரகாசத்தை (பேரின்பத்தை) மறைக்கின்ற மாயாதிரையினை நீக்கி, உள்ளேயிருக்கும் வெண்மையர்னு, ம்ருதுவான, கனிந்த, சுவைமிக்க கனிபோல எனது மனம் எவ்விதகளங்கமும் இன்றி பரிசுத்தமாயும், மிகக் கடினமாயின்றி எளிமையாயும், கனிந்துருகும் தன்மையதாயும், உண்மை யின்பம் பயக்கத் தக்கதாயும் மாறவேண்டும்" எனத் துதித்து,

நிவேதனம்.

நிவேதனத்தை (திருவமுதை) எடுத்து "எல்லாம் வல்ல தனித் தலைமைக் கடவுளே! எப்பொருட்கண்ணும் எவ்வுயிரிடத்தும் நீக்கமற நிறைந்து நிற்கின்ற பரிபூரணானந்த சொரூபம் வாய்ந் தொளிரும், பரம் பொருளே! *நீ உண்டால் இவ்வுலகிலுள்ள சகல சராசரங்களும் உண்ணும்; துயின்றால் துயிலும்; எழுந்தால் எழும்;

அவர்கட்கு நல்ல உபகாரங்களைச் செய்யவேண்டுமென்றும், பிறர் நமக்குத் தீங்கு செய்த போதிலும், நாம் அவர்கட்கு நன்மையே செய்யவேண்டுமென்றும், அத்தகைய உத்தம எண்ணத்தை அருள வேண்டுமென்றும், இறைவனைப் பிரார்த்திக் கொள்ள வேண்டுமென்று முணர்த்துகிறது என்பதாம்.

"நன்றி யொருவர்க்கு.....தருதலால்."
"சாந்தனையுந் தீயனவே.....மரம்."
"நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்ல(து), அன்றே மறப்பது நன்று"
"இன்னு செய்தாரை யொறுத்தல் அவர்நாண, நன்னயம் செய்துவிடல்"
என்னும் ஆன்றோர் அருண்மொழிகள், இதனை வலியுறுத்துமென்க.

* "உளகழு வீணையென் னெஞ்சினுள் ளினிதாத்
தொண்டனேன் நுகருமா நுகரே" (திருமாலிகைத்தேவர்)

அசைந்தால் அசையும்; பேசினுல் பேசும்; ஆதலால் அடியேங்க ளெல்லாம் உண்ண, நீ திருக்கை தொட் டருள்க!" எனப் பிரார்த் தித்து (திருவமுதைச் சமர்ப்பித்து) நிவேதித்து,

தீப ஆராதனை.

ஒற்றை ஆலாத்தியைக் கையில் எடுத்து, பசு நெய் ஊற்றி பரிசுத்தமான வெண் பஞ்சினுலாய திரியிட்டு,அங்கி சேர்த்து, தீபம் ஏற்றி, "எல்லா வுலகினும் இடையற நிறைந்து இனிதே விளங்கும் எம் பெருமானே! ஒவ் வோர் உயிர்க்கும் உள்ளொளி யாகி இலங்கிடும் உத்தமனே! இடையறுப் பேரன்போடும் அகங் குழைந்துருகும் அடியார்க் கருளும் ஆண்டவனே! †அன்பே தகளியாய், ஆர்வமே நெய்யாக, இன்புருகு சிந்தை இடு திரியாய், ஞானமே நற்சுடராய் ஞர்ன தீபம் ப்ரகாசிக்கத் தமியேன் எனக்குள்ளே உள்ளொளி கண்டு உரைக்கவொண்ணுத பேரானந்தம் எய்துதல் வேண்டும்" என்று த்தோத்திரம் செய்த வண்ணமாக ஆலாத்தியினுல் *தீப ஆரா தனை செய்து,

கர்ப்பூரம் கொளுத்தும் காரணம்.

கர்ப்பூரத்தைக் கொளுத்தி, "ஒப்புயர்வில்லா உத்தம மணியே! அன்பர்கட் குற்ற இடர்களை யகற்றவே அடிக்கடி அவதரிக்கும் ஆனந்த மூர்த்தியே! பேரின்பந்தரும் பெருமானே! இந்தக் கர்ப் பூரம் எவ்வளவு தூய்மையுடைத்தோ, அஃதே போல என் உளத்தினை யாதொரு மாசுமின்றி, வாலிதாம் தூய்மை யாக்கி, இக் கர்ப்பூரத்திலே அக்னி சேர்ந்ததைப் போல ஞானக்னி ஸ்வரூபனை நீ என்னுடன் கலந்து, கர்ப்பூரமும் அக்னியும் கலந்து எரிந்து மறைதல்போல நீயும் நானும் (ஜீவாத்மாவும் பரமாத்மாவும்)

---

† இஃது பூதத்தாழ்வார் கருத்து.

* "வையந் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக" என்றார் பெரியகையாழ்வார்.

தேகமே தகளி யென்றும், இரத்தமே நெய் என்றும், சுக்லமே திரி என்றும், ஆன்ம ப்ரகாசமே சுடர் என்றும், ஆன்ம ப்ரகாசம் (ஜீவாத்மா) விளங்க வேண்டுமேயானுல், தேகமாகிய தகளியையும், இரத்தமாகிய நெய்யையும் ஜாக்ரதையாகக் காத்தல் வேண் டும் என்றும், சுக்லமாகிய திரியை (வீணே செலவழித்து விடாமல்) வெகு ஜாக்ரதை யாகப் பாதுகாத்தல்வேண்டும் என்றும் யோக நூலோர் கூறுவர்.

இரண்டறக் கலந்து (நீ நானற்று) ஐக்யமுற்றுப் பேரின்ப வாழ்வெய்த அருள் பாலித்தல் வேண்டும்" எனத் தோத்தரித்து வணங்குவர்.

துளசீ ப்ருந்தாவன பூஜை.

பெண்கள் அனைவரும் துளசீ மாடத்திற்கு வெகுவாக அலங்காரம் செய்து த்ரிகரண சுத்தியோடும் பூஜை புரிந்து ப்ரதக்ஷண நமஸ்காரங்கள் செய்து துளசீ தீர்த்தம் சாப்பிடுவர். துளசீ தீர்த்தமானது சகல வ்யாதிகளையும் நிவர்த்திக்கக்கூடியதாதலாலும், துளசிச் செடியின் காற்று சரீரத்துக்கு ஆரோக்யம் தரக்கூடியதாதலாலும், அந்நகரில் ஒவ்வொருவர் வீட்டிலும் துளசீ ப்ருந்தாவன பூஜையும், தீர்த்தம் பருகலும் தினந்தோறும் தவறாமல் நடைபெற்றுவரும்.

வேத, சாஸ்த்ர பாராயணம்.

பின்னர், அவரவர்களும் நேர்ந்தபடி சிறிது நேரமாயினும் வேதம் உபநிஷத்துகள் பகவத்கீதை பக்திரசமிக்க புராண காவியங்கள் இதிகாசங்கள் நீதி நூல்கள் முதலான பல அரிய க்ரந்தங்களைப் பாராயணம் செய்வர். அப்படி அவர்கள் வாசிக்கையில் அவர்களுடைய மனம் அதிலேயே ஈடுபட்டிருக்கும். உண்மை அன்பும், தெய்வ பக்தியும், ஞான வுணர்ச்சியும், அவர்கள் திருவுளத்தில் தழைந்து விளங்கும். ஆனந்தக் கண்ணீர் ததும்பும்; சிற்சில சமயங் சமயங்களில் வாசித்துக்கொண்டே தம்வச மழிந்து ஆனந்த பாஷ்பத்தால் சுவடிகளை நனைத்து விடுவர். அவ்வற்புதக் காட்சி அனைவர் மனத்தையும் ஆண்டவன் அடித்யானத்தில் ஈடுபடுத்தும் திறத்ததாயிருக்கும். அத்திறனை எடுத்தியம்புதலு மரிதாகும்.

போஜனம்.

பிறகு, பகவானுக்கு ஆராதனை செய்யப்பட்ட அறுசுவையுள்ள திவ்ய ப்ரசாதத்தை ஆடவர்களுக்கு வீட்டில் உள்ள பெண்களே அன்புடன் பரிமாறுவர். அப்படி பரிமாறும் காலங்களில் அவ் வுணவு சம்பந்தமான மொழிகள் தவிர, சாப்பிடுபவர்கள் பதில் பகரவேண்டியவாறு மொழிகளைக் கூறுமல், "இந்த ப்ரசாதம் அடியேன் தயாரித்தது எப்படியிருக்கிறதோ? சுவையுடனுளதோ? இல்லையோ? அனுபவ மிக்க பெரியோர்கள் தயாரித்திருப்பின் வேண்டிய பூர்ணச் சுவையுடன்

பொருந்தியிருக்கும். அடியேன் தயாரித்தது அற்பச் சுவையுள ஆகாரமே யாயினும் அது பரமாத்மனுக்கு நிவேதனம் செய்யப் பட்டதாதலானும், தமியேன் மனப் பூர்ணமான அன்புடன் சமர்ப் பித்தேன் ஆதலானும், அதனைத் தாங்கள் அன்புடன் அங்கீகரித்து, ஸ்தூல சுவையை எதிர்பாராமல், அன்பைப் பிரதானமாய்க் கொண்டு அருந்தியருளுமாறு ப்ரார்த்திக்கின்றேன்" என்பன முதலிய இன் சொற்களைக் கூறி உபசரிப்பர். அவ்வுணவு உண்மையிலேயே நறுஞ் சுவையுடனே இருப்பதன்றியும், இவர்கள் கூறும் இன் சொல்லும் இவர்களின் அன்பும் கலந்து கூறுணுச் சுவையுடன் கூடி அருந்து பவர்கட்கு ஆநந்தம் நல்கும். உணவருந்துகையில் அவர்களுக்குத் தேவையானவற்றைக் குறிப்பினுல் அறிந்து பரிமாறுவர். ஆடவர்கள் உண்டெழுந்தபின் மகளிர் ஆகாரம் கொள்வர். அவரவர்களும் ஆகா ரம் அருந்திய பின்பு, துவர்ப்பு கரிப்பு கார்ப்பு இவை சேர்ந்த வைத்ய சம்பந்தமான பற்பொடி கொண்டு பல்துலக்கி, வாய் கொப்பளித்துக் கைகால் சுத்தி செய்துகொள்வர்.

நூத்தம் தொழில்களில் ஈடுபடல்.

சிறுவர்கள் கலை பயில்வதற்குத் தங்கள் தங்கள் தெருக்களில் அமைந்துள கலாசாலைகட்குச் செல்வர். வாலிபர் கள் தங்கள் தங்களுடைய வ்யாபாரங்களைக் கவ னிக்கவேண்டி, ஆவண வீதிகளில் உள்ள தத்தமது மனிகைகள், ஜவுளிக் கடைகள், கண்ணுடிக் கடை கள், படக் கடைகள், பலவித உலோகக் கடைகள், இரும்புக் கடை கள், பாத்திரக் கடைகள், மரச் சாமான் கடைகள், வாசனுத்ரவ்யக் கடைகள், ஆபரணக் கடைகள், நவரத்ன வ்யாபாரக் கடைகள், பலவித தான்யக் கடைகள், எண்ணெய்க் கடைகள், மருந்துக் கடைகள், புத்தகக் கடைகள், கம்பளக் கடைகள் ஆதிய வர்த்தக சாலைகட்கும், தொழிற் சாலைகட்கும், பண்ட சாலைகட்கும், பயிரிடும் பண்ணைகளுக்கும் செல்வர்.

முதியோர்கள் யாவரும் தங்கள் தங்கள் வீடுகளில் முன்புறத் தில் உள்ள மிக விசாலமான தாழ்வாரங்களில் வந்து அமருவர். அங்கே அவரவர்கட்கு வேண்டிய நண்பர்கள் பலர் வ்யாபார சம் பந்தமாகவும், நட்பு சம்பந்தமாகவும், கல்வி கேள்விகள் சம்பந்தமாக வும், நூலாராய்ச்சி சம்பந்தமாகவும், ஆத்ம விசாரணை சம்பந்தமாகவும்

பக்தி ஞான யோக மார்க்க சம்பந்தமாகவும், பொது வ்யவகார சம் பந்தமாகவும், லோகோபகார சம்பந்தமாகவும், லோக விசாரணை சம் பந்தமாகவும், தினசரி ஒழுக்க சம்பந்தமாகவும், சமய மத சம்பந்தமா கவும், சன்மார்க்க சம்பந்தமாகவும், அரசியல் முறை சம்பந்தமாகவும், வருணச்சிரம தர்ம சம்பந்தமாகவும், பெரியோர் சம்பந்தமாகவும், ஞானமார்க்க சம்பந்தமாகவும் வார்த்தையாட வருவர். அவரவர் கட்குத் தக்க நல்வரவு கூறி ஆசனமீந்து, உண்மை அன்புடன் உபசரித்து இனிமையான சொற்களால் உரையாடிக்கொண்டிருப்பர். கையில் ஒரு குடுக்கையில் பரிசுத்தம் செய்த பஞ்சை வைத்துக் கொண்டு பகவத் சிந்தனையுடன் அவன் திருநாம ஸ்மரணை செய்து கொண்டு பூணூல் நூற்பர்.

பல முதியோர்கள் மான்தோல் புலித்தோல் முதலிய ஆஸனங் களின் மீதமர்ந்து ஸ்ரீ பரமாத்மனிடம் மனத்தை நிறுத்தி சங்கற்பம் ஒழித்து பரமானந்தத்தில் மூழ்கியிருப்பர்.

வைஸ்ய இளைஞர்கள் பலரும் எல்லாவித வ்யாபாரங்களிலும் சொல்ல வொண்ணாத திறன் வாய்ந்தவர்களாக, வீர குணர்ச்சி மிகுந் தவர்களாக விளங்கி வந்தார்கள். சகல சாஸ்த்ரங்களையும் குருமுக மாக அடைவுடனே ஒதி யுணர்ந்து, அவற்றில் கூறப்பட்ட நீதி நெறி களை யெல்லாம் கருத்தகத் திருத்தி, இயன்றவரை அவைகளை அனு சரித்து நடக்கக் கூடியவர்களாயும், பலருக்கும் ஸத் விஷயங்களை யடிக்கடி ஞாபகமூட்டி நல்வழிப்படுத்த முயன்று, ஆங்காங்கு கல்விக் கழகங்களை நிறுவி, பலரும் அவண் சென்று குழுமி, அநேகவித புண்ய சரிதங்களையும் நீதி நூல்களையும் வேதாகமக் கோட்பாடுகளையும் பொது நூலுணர்ச்சிகளையும் ஆராய்ச்சி விஷயங்களையும் ராஜீய விஷயங் களையும் ராஜ பரிபாலன மார்க்கங்களையும் தேசீய விஷயங்களையும் சமூக விஷயங்களையும் சமயமத சன்மார்க்க விஷயங்களையும் இவை முதலிய பற்பல அரிய விஷயங்களையும் பற்றி அடிக்கடி அற்புதமான உபன்யாசங்கள் செய்து சீர்திருத்தக் கூடியவர்களாயும் திகழ்ந்தனர்.

பெண்மணிகள் தத்தமது க்ருஹத்திற்குத் தேவையான அரிசி யைத் தாங்கள் தாங்களே வீடுகளில் (கைக்குற்றலாகக்) குற்றி உபயோகிப்பர். சமையல் செய்வதற்கும் வீட்டு வேலைகளைக்

கவனிப்பதற்கும் கூலியாட்கள் ஒருவரையும் அமர்த்தார்கள். தாங்கள் தாங்களே அருமையாய்ப் பாகம் செய்து அனைவருக்கும் அன்புடன் பரிமாறுவர்.

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

"அகனமர்ந்து செய்யா ளுறையும்; முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில்"

"வித்தும் இடல்வேண்டுங் கொல்லோ? விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்"

"அற்ற ரழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றன் பொருள்வைப் புழி"

என்ற பொய்யா மொழியின் கருத்து அவர்தம் மனத்தே பொருந்திப் பொலியலாயிற்று. தமதகம் நோக்கி வரும் விருந்தினரை மிக்க அன்புடன் வரவேற்று உபசரித்து, "இன்னும் யாரேனும் விருந்தினர் உண்டோ?" என எதிர் நோக்கியவண்ணம் இருப்பர். "இல்லை" என்ற சப்தமே அந்நகரில் எங்கணும் இராது. அந்நகரில் உள்ளோர் அநேகர் 'ஐயமிட்டுண்ணுதல் வேண்டும்' என எண்ணி யாசகரை எதிர்நோக்குவர். ஆனல் அந்நகரிலே யிருப்பவர் அனைவரும் "நல்லா றெனினும் கொளல் தீது" என்ற அருண் மொழியையும்,

† "நிற்பதேது கொல்? நீடிசை யொன்றுமே நிற்கும்;
கற்பதேது? சொல் கசடறக் கற்பதே கல்வி;
அற்ப மாவ தே(து?) அனைத்தையும் அயல் கரத்(து) ஏற்றல்;
சிற்பமாமிவை செப்பெனச் செப்பினன் சிறுவன்."

என்ற பாரதச் செய்யுளின் பண்பையும் "ஏற்பது இகழ்ச்சி" என்னும் இணையிலா மொழியையும் எண்ணி யாராய்ந்து, ஒவ்வொரு தொழி லினை மேற்கொண்டு தாம் தாம் கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் வருமா னத்திலேயே வயிறார உண்டு வாழ்பவர்களாதலின், அந்நகர்க்கண் "பிச்சை" எனத் தெருவில் வருவோர் எவரும் இலாமையான், "அந்தோ! ஐயம் பெறுவோர் யாரும் வரக் காணேமே!" என வருத்தத்துடனே சாப்பிடச் செல்வர்.

† (வில்லிபுத்தூராழ்வாரியற்றிய) மகாபாரதம் - கச்சப்பொய்கைச் சருக்கம் - பாடல் 57.

அந் நகரத்திலுள்ள நாரீமணிகளும் செல்வச் சிறுமிகளும் சங் கீதத்தில் சிறந்து, யாழ் வீணை முதலாய இன்னிசைக் கருவிகளை வாசிக்கும் திறமையும், கந்தருவ கானத்தையொப்ப, பண்முறையாற் பரமாத்மனைத் துதிக்கும் தோத்திரப் பாடல்களை, அன்பினுற் கனிந்து மனமிக வுருகிப் பாடும் பண்பு உடையவராய் விளங்குவர்.

தினசரி, ராட்டினத்தின் சக்கரத்தைத் தேசபக்தியுடன், சிறந்த பிரியத்துடன், இறைவன் இணையடித் தியானத்துடன் சுழற்றி, மிக அருமையான மெல்லிய நூலை நூற்பர். பஞ்சைச் சுத்தம் செய்யவும், பட்டை போடவும், ராட்டில் நூற்கவும், நூலைச்சோரவும், சிலுப்பைக ளாக்கவும், சாயங்கள் சேர்க்கவும், பாவு தயாரிக்கவும், தரிகளில் அமைக்கவும், அழகுற ஆடைகளை நெய்யவும், இவ்வாறு நூற்ற நூல், நெய்த ஆடைகள் ஆகியவற்றைப் பரீட்சை பார்ப்பதற்காக ஏற்பட் டுள்ள வஸ்த்ரபா என்பவரிடம் காண்பித்து அவருடைய நல்லபிப் ராயத்தைப் பெறவும், அவரவர்கள் தயாரித்த ஆடைகளையே அன் புடன் அணிந்துகொள்ளவும் அனைவரும் அறிந்திருந்ததேயன்றி, மிக்க விருப்பத்தோடும் அன்போடும் தினசரி கடமையாய் மேற் கூறிய உடைகள் சம்பந்தமான தொழில்களை நடத்திக்கொண்டு வருவர். எத்துணைப் பெருஞ் செல்வர்களாயினும், கப்பல் வியாபாரத்தில் சிறந்தவர்களாயினும், அவர்களும் நம் நாட்டில் கைராட்டில் நூற்ற நூலால் நெய்யப்பட்ட உடைகளையே உடுத்திக் கொள்வதன்றி வேறு ஆடைகட்கு விருப்பமுறார்கள்.

கோதாவரி நதிக்கரையில் இந்நகரம் இருந்தமையாலும், அந் நதி சமுத்திர சங்கமம் ஆகும் இடமும் அதிக தூரமின்றி யிருந்தமை யாலும், அந்நகர வைஸ்யர்கள் கப்பல் வியாபாரத்தை மிகவும் அதிக மாக நடத்துவதற்குப் போதிய வசதிகள் இருந்தன. அதனால் அந் நகரம் கப்பல் வியாபாரத்தில் மிகச் சிறந்த பெயர் பெற்றிருந்தது. சமுத்திரக் கரையில் துறைமுகத்தில் தங்கும் கப்பலில் வருகிற சாமான்களை யெல்லாம் படகுகளில் ஏற்றி நதி வழியாகவே கொணர்ந்து, கரையில் உள்ள இந்நகரத்தில் இறக்குமதி செய்துகொள் வதும், அவைகட்குப் பதிலாகப் பண்ட மாற்றுதல் முறையில் இங்கு தயாராகிற் பொருள்களில் உபயோகத்திற்குத் தேவை போக மிகுதி

யுள்ள அழகிய மெல்லிய பலரக ஆடைகள், தான்ய வகைகள், பயறு வகைகள், ஏனைய பல பண்ட வகைகள், ஔஷத வகைகள், வாசனை த்ரவ்யங்கள், சம்பாரப் பொருள்கள் முதலிய யாவும் படகுகளின் மூலம் கொண்டுபோய் கப்பலில் ஏற்றுமதி செய்து விடுவதும் வெகு சுலபமாக இருந்தது. அந்நதியில் ஒரு கரையிலிருந்து மறுகரை செல்ல விரும்புவோர் வண்டிகளினின்றும் இறங்கி தோணிகளில் ஏறலும், ஆற்றைக் கடந்து மறுகரை சேர்ந்து தோணிகளினின்றும் இறங்கி வண்டிகளில் ஏறலும், இவ்வாறே இரு கரைகளிலும் மனிதர்களும் சாமான்களும் ஏறுவதும் இறங்குவதும் பார்ப்பதற்கு வெகு ரம்மியமாக இருக்கும்.

அந்த நகரத்தில் உள்ள வைசிய சிகாமணிகள் யாவரும் பற்பல வியாபாரத் துறைகளில் ஈடுபட்டிருப்பினும், அவர்களுடைய மனத்தில் ஸத்யம் பொறுமை இரக்கம் ஜீவதயை ஏழைகள்மீது அன்பு பரோபகார சிந்தனை தெய்வ பக்தி ஆத்ம விசாரம் முதலியன யாவும் குடிகொண்டிருந்தன.

"நாம் நமது வாழ்க்கையில் புரியும் செயல்கள் அனைத்தும் உலகிற்கும், உயிர் வர்க்கங்கட்கும், எங்கும் நிறைந்த ஏகப்பொருளாகிய ஸர்வேசனுக்கும் திருப்தியை ஊட்டத்தக்கதாக, நமது மனச்சாட்சி சம்மதிக்கத் தக்கதாக இருத்தல் வேண்டும்" என்றும்,

"பாவத்தான் வந்த பிறன் பொருளைப் பகுத் துண்ணின், அறம் பொருளுடையார் மேலும், பாவந் தன்மேலுமாய் நின்று, வழி யெஞ்சல் நிச்சயம்" என்றும், எண்ணியவர்களாக,

"பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின், இல்வாழ்க்கை
வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்" என்றும்,

"அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை; அஃதும்
பிறன்பழிப் பில்லாயின் நன்று" என்றும்,

"வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோற் செயின்"

என்றும் கூறும் தெய்வ நூற்கருத்தைச் சிந்தையில் இருத்தியவர்களாக, கொள்வது மிகுதியும் கொடுப்பது குறைவுமாகப் பிறரை

சம்யங்கண்டு ஏமாற்றும் வஞ்சக எண்ணங்களைச் சற்றும் நினையாதவர்களாக, 'பிறவியின் பயன் பிறர்க் குதவலே' எனும் பீடுசால் மொழியைப் பெருஞ் சிரத்தையுடன் ஆதரிப்பவர்களாக, சோற்ப லாபத்தையே கருதி வியாபாரத்தினைச் சீரிய முறையிற் செய்து வருபவர்களாக அவர்கள் விளங்கினர். "லோகோபகாரம் செய்யவே வைசியர்களாகிய நம்மை இறைவன் சிருட்டித்து, நம்மிடத்துப்பலவித பொருள்களைத் தந்து, வாணிபம் நடாத்த நியமித்திருக்கின்றனன்; ஆகலின் அவன் திருவுளப் பாங்கின்படி, (நமது மனச் சாட்சிக்கு விரோதமின்றி) நடந்து அவனுக்கு நமது வாழ்நாட்களையும், நமது சரீரத்தையும், பொருளையும், ஆவியையும் அன்புடன் அர்ப்பணம்செய்து, அவன் திருவடியடைந்து ஆனந்தமுறுவோம்" எனும் பரந்த நோக்கமும், விரிந்த உணர்வும், அகன்ற ஆராய்ச்சியும், ஆழ்ந்த கருத்தும், ஆன்ற முடிவும் கொண்டவர்களாகிச் செவ்வனே வியாபாரத்தைச் செய்து கொண்டிருப்பர்.

நிறைந்த செல்வர் என்றும், குறைந்த செல்வர் என்றும் சாமான்ய வியாபாரி என்றும், பிரபல வியாபாரி என்றும் வித்யாசங்களே பாராட்டமாட்டார்கள். படாடோபம் பொருமை பேராசை வீண்செலவு வெளிவேடம் கபடம் முதலிய எவையும் அவர்களிடத்தில் சற்றேனும் காண என்றும் இயலாது. "வரவுக்குத் தக்க செலவு செய்யவும், அனுவசிய செலவு செய்து கெடாமலிருக்கவும், பிற்காலத் தேவைக்கு மிகுதி வைக்கவும், பழைய நாகரீகத்தைக் காக்கவும், சுதர்மம் தவறுது ஒழுகவும், இவர்களிடத்தில்தான் நம்மனோர் யாவரும் கற்றுக்கொள்ளவேண்டும்; இத்தகைய விழுமிய குலத்திலல்லவா சிறந்த மகாத்மாக்கள் அவதரிப்பார்கள்?" என்று ஏனைய குலத்தினர் பலரும் அவ் வைசியோத்தமர்களின் சீர்த்தியைக் கண்டு வியக்கும் வண்ணமாய் அவர்கள் விளங்கினர். அவர்கள் எத்தொழிலில் ஈடுபடினும் தெய்வ பலத்தைக்கொண்டே ஈடுபடுவர்.

பதினெண் புரங்கள்.

அத்தகைய வைசிய ஸ்ரேஷ்டர்கள் வாசம்புரிந்துவந்த சிறந்த நகரமாகிய பெனுகொண்டாவைச் சுற்றிலும் சகல வளங்களும் நிறைந்த பாலகொலனு – கண்டஸ்ரலா – ஆஸண்டி – தனதபுரம் – விசாகப்பட்டணம் – தர்மபட்டணம் – டெந்தலூர் – ஏலாபுரம் –

மும்மடி – சிவபட்டணம் – நகர வீடிகா – பாஞ்சாலபுரம் – நரசிங்க புரம் – பீமபுரம் – வீர நாராயணபுரம் – ஜகந்நாதபுரம் – நிரவத்கம் – கலிங்க பட்டணம் – என்ற திரு நாமங்களைப் பூண்ந்த பட்டணங்கள் பதினெட்டும், பரமாத்மனுடைய ப்ரபாவங்களைச் சரித்திர ரூபமாகக் காண்பித்துப் பாமரர் மனத்திலும் பதியச் செய்யும்படியான பதி னெண் புராணங்களே போல விளங்கும். அவற்றின் நடுவண் இருபத்தெட்டு சைவாகமங்களை யனைய திரு வீதிகளையும், மேற் சொன்ன புராணங்கட்கும் ஆகமங்கட்கும் நாயகனை இறைவன் இனிதெழுந்தருளியிருக்கும் ஆலயங்களையும் தன்னகத்தே கொண்டு நடு நாயகமாகப் பொலியும் தலைநகரமாகிய பெனுகொண்டா நகர மானது, அப்பரம்பொருளின் அருட்பெருக்கத்தைப் போன்று அற்புதமாய் விளங்கும்.

குசு மார்யனின் கோல்.

எவ்வுயிரையும் தன்னுயிர்போல எண்ணித் தன்னிலும் தன் பரிஜனத்தாலும் பகைவர்களாலும் கள்வர்க ளாலும் பிற வுயிர்களாலும் துஷ்ட மிருகங்களா லும் யாவராலும் எவற்றாலும் எம் முறையாலும் எவ்வித தீங்கும் நேராத வண்ணம் இறைவன் திருவருள் துணையால் முற்கூறிய பதினெண் புரங்களையும், அவற்றின் நாயகமாகிய பெனுகொண்டாபுரியையும் அரசாட்சி புரிந்துவருகின்ற புண்ய சீலரும், வைசிய குல உத்தமரும், பரமோத்கிருஷ்டருமாகிய *குசும ஸ்ரேஷ்டியாரானவர் தமது தர்ம பத்னியாராகிய குசுமாம் பிகை என்னும் அம்மையாருடன் இல்லறவாழ்வை இனிது நடாத்தும் இராஜ அரண்மனையானது சகல செல்வ போகங்களுடன் அப்பெனு கொண்டா நகரின் நாப்பண் பீடுறத் திகழும்.

* இவருக்கு ஆதியில் வாசுதேவ ஸ்ரேஷ்டி என்று பெயர் என்றும், இவரை 'வாசு ஸ்ரேஷ்டி' என்றும் கூறுவதுண்டென்றும், இவரது மனைவியார் இறைவனுக்கு மலர் தொடுத்து அணிவிக்கும் திருத் தொண்டில் ஈடுபட்டு இருந்தமையால் [குசுமம் = புஷ்பம்] அவ்வம் மையார்க்கு குசுமாம்பிகை என்பது காரணப் பெயராய் அமைந்தது என்றும், அம் மங்கை திருமணம் செய்துகொண்ட பின்பும் (கன்னனுத்திரனு பெற்று) முன்போல இறைவனுக்குப் புஷ்பத் தொண்டு செய்து வந்தன ரென்றும், அம்மங்கையை வேட்ட வாசு ஸ்ரேஷ்டியாரும் மனமுவந்து அப்புஷ்ப கைங்கர்யத்தை உடன்கலந்து ஆற்றினர் என்றும், அது காரணத்தாலேயே அவரும் 'குசும ஸ்ரேஷ்டியார்' எனப் பெயர் பெற லாயினர் என்றும், வாசு ஸ்ரேஷ்டியார் என்று அவருக்குப் பெயரிருந்தமையால்தான் அவர் புத்ரி 'வாசவி' எனப் பெயர் பெறவும் காரணமாயிருந்தது என்றும் ஒரு சிலர் கூறுவர்.

முதல் அத்தியாயம்.

[இரண்டாம் பகுதி.]

*

அருளெனுமோர் நற்கனியைப் பெற்றிடுக வஃதே
பொருளென்னப் போற்றியுவந் துண்.

ஓம்

ஸ்ரீ வாசவீ விஜயம்.

முதல் அத்தியாயம்.

[இரண்டாம் பகுதி]

பிரியமுடனே குசுமன் இல்லறம் பேணலும், அருமகப் பேறுபெற யாத்தினை செய்தலும்.

மன்னவன் மாண்பு.

பிரியத்தோடுங் கொழுநற் றொழுதெழுங் குணவதியும், தற் காத்துத் தற்கொண்டாற்பேணித் தகைசான்ற சொற் காத்துச் சோர்விலா திலகும் மாதரசியுமாகிய குசு மாம்பிகையை வாழ்க்கைத் துணைவியாய்க் கொண்ட குசும ஸ்ரேஷ்டியார்க்கு எத்தகைய குறை பாடு மிலது. இல்லவள் மாண்பானுல் இல்லது என்? 'கற்பு' என்னும் திண்மை யுண்டாகப் பெறின், பெண்ணிற் பெருந்தக்க யாவுள? மனை மாட்சி இல்லாள்கண் இருக்குமேல், வாழ்க்கை எம்மாட்சியிற் குறை படும்? அதிலும், அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனுமதாம். அறநெறியால் இல்லறத்தை நடாத்தலைக் காட்டினும், புறத்தாற்றிற் போய்ப் பெறுவது என்ன இருக்கிறது? பல்லறங்களினும் சிறந்த நல்லறமாகிய இல்லறத்தைப் பேணுபவனே பிரமசாரி வானப்ரஸ்தன் சந்நியாசி ஆகிய மூவர்க்கும், வறுமை யாளர்கட்கும், தென்புலத்தார்க்கும், தெய்வத்திற்கும், விருந்தினர்க் கும், உறவினர்க்கும் கற்பக விருட்சம் காமதேனு போல உபசரிக்கக் கூடிய உறுதுணை யாகின்றனகலின், அறனிழுக்காது நல்லாற்றி னெழுகி, பிறன் பழிப்பின்றி ("அறனெனப் பட்டதே

இல்வாழ்க்கை" என ஆணித்தரமாய் நிஜைந்து) ஸ்வயத்துள் வாழ் வாங்கு வாழ்பவனே வானுறையும் தெய்வத்துக் கொப்பாகக் கூறுவதிற் பிழை யாதுளது?

நமது அருமைத் தம்பதிகளாகிய (குசும ஸ்ரேஷ்டியாரும் குசுமாம்பிகையும்) இருவரும் நீரும் நண்மையும், நெருப்பும் வெம் மையும், மலரும் மணமும், வீணையும் விரலும், பண்ணும் இசையும், கண்ணும் இமைகளும், காந்தமும் இரும்பும், சாந்தமும் அருளும் போல் ஒத்த மனத்தினர்களாய், கல்வி கேள்விகளிற் சிறந்தவர்களாய், நூற்கலே தொழிற்கலைகளில் வல்லுநராய், நூலாராய்ச்சி அன்பு ஆசாரம் தயை காருண்யம் ப்ரபக்தி வைராக்யம் சாந்தம் பொறுமை அடக்கம் பணிவு ஈகை புகழ் கண்யம் ஒழுக்கம் நடுநிலை இன்சொற் கூறல் விருந்தோம்பல் தூய்மை சமத்வம் ஞானம் வீரம் த்யாகம் சேவை அஹிம்ஸை ஆத்மார்த்தம் ஆகிய அனைத்திலும் சிறந்தவர்க ளாய், யாவரிடத்திலும் அன்புடையவர்களாய், அதிகாரதோரணை டம்பம் வீண்பெருமை படாடோபம் பயங்கரம் ஆடம்பரம் அகங் காரம் வறிஞர் செல்வர் எனும் வித்யாசம் முதலிய அனைத்தையும் அறவே யகற்றியவர்களாய் இருந்து செம்மையுற ஒழுகுதலைக்கண்டு, ஏனையர் யாவரும் 'அரசன் எவ்வழி அவ்வழி குடிகள்' என்பது போல, சகல தீச் செய்கைகளையும் மறந்தவர்களாகி, நற்குண நற் செய்கைகளிலே மேம்பட்டு வந்தனர்.

அம் மன்னவர், அகங்காரத்தை மறந்து, வேதவிதி வழியும், மனுநெறி முறை வழியும் (மதி நுட்பமுள்ள மந்திரிகள், சமைய சஞ்ஜீவிபோல நீதி புகட்டக்கூடிய சபை யாலோசகர்கள், தரும நியாயப்படி நடக்கும் அரச காரியவாதிகள் ஆகியோர்களின் உதவியி னலும், குடியரசு ஆட்சியினலும், தெய்வ க்ருபா பலத்தினலும்) ஆண்டு வந்தமையால், இறைவன் திருவருளினல் யாவும் இனிதே நிகழ்ந்து வந்தன.

படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் அஞ்சாமை ஈகை அறிவு ஊக்கம் தூங்காமை கல்வி துணிவு கொடை அளி செங்கோல் குடியோம்பல் ஆதிய பல நற் குணங்களுடனே கூடியவ ராய், காட்சிக் கெளியராய், கடுஞ்சொல் இலராய், செவிகைப்பச்

சொற்பொறுக்கும் பண்புடையராய், குடிதழீஇக் கோலோச்சுங் கொற்றவராய்விளங்கிய குசுமஸ்ரேஷ்டியார் இயல்புளிக் கோலோச்சி வந்தமையானும், அவர்தம் ஆட்சிக் குட்பட்ட பதினெண்புர வாசிகளும் கோனேக்கி வாழுங் கோதிலாக் குடிகளாய் அவர் கூறும் நெறியிற் சற்றும் பிறழாது செவ்வனே நடந்துவந்தமையானுந் தான் ஆங்கு பெயலும் விளையுளும் சிறிதுங் குன்றாது வளர்ந்தொளிரப் பெருமான் அருளும் துணை புரிந்துவந்தது.

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும் வல்ல மன்னவராகிய நம் குசுமஸ்ரேஷ்டியார் அரசாட்சியிற் சிறந்த பெயர் பெற்று விளங்கியதேயன்றி, வியாபாரத்திலும் சிறந்த பெயர் பெற்று விளங்கினர். அவர் கப்பல் வியாபாரத்தினை மிகவும் சிறப்புற நடத்தி வந்தனர்.

கப்பல் வாணிபம்.

பெனுகொண்டாவின் சமீபத்திலுள்ள நர்ஸாபுரமும், காக்கி நாடாவும் அவர்களுக்குத் துறைமுகங்களாக இருந்தன. நமது வைசியர்கள் கப்பல் வியாபாரத்தின் காரணமாகப் பல தேயங்களுக்குச் சென்றபோது, இவர்களின் பெயர்கள் ஆசாரங்கள் நடையுடை பாவனைகள் பகவத் உபாசனைகள் ராஜ தர்மங்கள் ஆகிய அனைத்தும் உணர்ந்த பிற நாட்டினர்களும் இவ்வாறே ஆசரித்து ஒழுகலாயினர். நம் நாட்டினர் மாத்திரம் எந் நாட்டுக்குச் சென்றபோதிலும், எக் காலத்திலும் எந்தவித அவஸ்தையிலும் எக் காரணத்தைக் கொண்டும் பிறருடைய கொள்கைகளையும் சமயங்களையும் ஆசாரங்களையும் அனுஷ்டித்ததாகத் தெரியவில்லை. பிற நாடுகளிற் சென்றபோதும், தொன்தாரவு நேர்ந்த காலத்தும், தமது ப்ராணனை இழந்தாவது ஹிந்து தர்மத்தையே நிலைநாட்டியதாகத் தேச சரித்திரங்களும் பறை சாற்றுகின்றன. சிங்கப்பூருக்கடுத்த ஜாவா இந்துசைனு பலி முதலிய இடங்களில் முக்ய நகரங்களில், தேவாலயங்கள் பகவத் உபாசனைகள் ராஜ தர்மங்கள் மக்களின் நாமதேயங்கள் ஆடல் பாடல்களின் முறைகள் ஆதிய பலவும் நம் ஹிந்துதர்மத்தை யொட்டியே இன்றும் நடந்துவருகின்றனவென்பதை உத்தம தேசபக்தரான ஸ்ரீ பண்டித-ஜவஹர்லால் நேரு அவர்களும் தாம் எழுதிய உலகசரித்திரக் குறிப்புகள் (**Glimpses of World's history**) என்னும் புத்தகத்தில் வரைந்துள்ளார்.

நம் பண்டைய நாகரீகமானது நமது நாட்டு வ்யாபாரிகளின் சஞ்சாரத்தினால் அந்நாடுகளில் ஏற்படலாயிற்று. இத்யாதி காரணங்களால் நம் நாட்டினர் பிற நாட்டாரோடு கப்பல் வ்யாபாரம் செய்தார்களென்பது நிச்சயமாகிறது.

இப்போது பாட்னா என்று அழைக்கப்படும் பாடலீபுத்ரம் உள்ள இடத்தில் குசுமபுரி என்னும் ஒரு நகரமிருந்ததென்றும், அந்தக் குசுமபுரியில் வைசியர்கள் ஏராளமாக வதிந்தனர் என்றும், அவர்கள் நாவிகா வ்யாபாரத்தில் மிகவும் சிறந்து விளங்கினர்கள் என்றும், அவ் வியாபாரத்தை மிகவும் பெருவாரியாகச் செய்து சீர் பெற்றார்களென்றும் சரித்திரக் குறிப்புகளால் தெளிவாகத் தெரிகிறது. நிற்க, வைஸ்யர்கள் கப்பல் யாத்திரை செய்யும்போது தாங்கள் நோய்வாய்ப்படாமல் இருப்பதற்காக, ஆயுர்வேதத்தினை முறைப்படி ஆராய்ந்துணர்ந்து தேர்ந்து தெளிந்துள்ள ஒரு சில வைஸ்யர்களை யுடனழைத்துச் சென்றனர். அவர்கள் 'வைத்யர்கள்' என அழைக்கப்பட்டனர். வைஸ்யரே 'வைத்யர்' என்று கொள்ளப்பட்டதாயும் தெரிகிறது. கி. மு. 328-ல் இவ்வாறு பெயர் பெற்றிருந்தார்கள் என ரொமேஷ சந்த்ர தத்தா **(Romesh Chandra Dath)** என்ற சரித்ரக் காரர் தாம் வரையும் சரித்திரத்தில் குறிப்பிடுகின்றமையால் இவ் விஷயம் நிச்சயமாகிறது. நம் நாட்டில் கை ராட்டினத்தால் நூற்ற நூலைக்கொண்டு அற்புதமான டாக்கா மஸ்லின்கள் தயார் செய்யப்பட்டு, கள்ளிக்கோட்டை துறைமுகத்தில் ஏற்றுமதி செய்யப்பட்டு, அத்துணி பிற தேசங்களுக்குச் சென்று, அங்கே 'இந்திய காலிகோ' என்ற நாமம் படைத்து மிகவும் பெயர்பெற்று விளங்கியதெனவும், அது ஏற்றுமதி செய்யப்பட்ட இடம் 'காலிகோ கட்டம்' என்று வழங்கப்பெற்று, பின்னர் 'காலிகட்' என்று மாறியது எனவும், விசாகப்பட்டணம் முதலான இடங்களில் அற்புதமான நூல், அதியுயர்ந்த விலை பெறுமான மிக மெல்லிய ஆடைகள் முதலியவற்றை நாரீமணிகளே நன்கு தயாரித்து வந்தனர் எனவும் கூறப்படுகிறது.

நமது பெனுகொண்டா நகரிலுள்ள பெண்மணிகளும் சிறுவர் சிறுமிகளுங்கூட அத்தகைய உயர்ந்த நூலையும் உடைகளையும் தயாரித்துவந்தார்கள். அவர்கள் தயாரிக்கும் ஆடைகள் வெளி நாடுகளில் வெகு பிரியமாக விற்பனையாகிவந்தன. ஆங்குவிளையும் தானியங்களும்

(நில வளத்தினாலும், அவர்கள் சாகுபடி செய்யும் தக்க முறையினாலும்) மிக சுவையுள்ளவைகளாக விளங்கின. ஆதலால் அங்கு விளையும் தானியங்களும் பிற நாடுகளில் மிக விரைவில் விற்பனையாகி விடும். அந்நகரமும் அதைச் சார்ந்த பதினெண் புரங்களும் தான்ய விளைவிலும் கைத் தொழில்களிலும் மிகவும் மேன்மையுற்று விளங்கினமையானும், சுற்றுப்பக்கத்தில் பல இடங்களிலிருந்து வியாபார நிமித்தமாக விளைபொருள்களும் ஏனைய பலவித பண்டங்களும் வராளமாக வந்து குவிகின்றதனாலும், கப்பல் வியாபாரத்தை இடைவிடாது செவ்விதின் நடத்த அந்நகரினர்க்குச் சௌகரியமாக இருந்தது.

பெனுகொண்டாவிலிருந்த வைஸ்யர்களும், அவர்களின் தலைவரான குசும ஸ்ரேஷ்டியாரும் இந் நாவிகா வாணிபத்தைச் சிறப்புற நடாத்திவந்தனர். அவர்கள் வெளி தேசங்களுக்குத் தேவையுள்ள பல பண்டங்களைக் கப்பல்களில் ஏற்றிக்கொண்டு சென்று, அங்கே விற்பனை செய்துவிட்டு, அங்கிருந்து இங்கு தேவையான பண்டங்களையும், பொன்னையும், விலையுயர்ந்த ரத்தினங்களையும், முத்து, கெம்பு முதலிய மணிவகைகளையும் கொண்டு திரும்பி வந்து சேருவர். இத் தகைய கப்பல் வியாபாரத்தை அவர்கள் மிகவும் சீர்சிறந்த முறையில் நடத்திவரலாயினர். 'தன்னுயிர்போல மன்னுயிர்க்காத்து அரசாட்சி புரிவதிலும், இல்லறமோம்பும் பண்பிலும், தூய முறையில் மாபெரும் வியாபாரத்தினைப் புரியுந் திறனிலும் குசும ஸ்ரேஷ்டியார்க்கு நிகராவார் உளரோ?' எனப் பலரும் அதிசயிப்பர்.

மகப்பேறின்றி மனவருத்தமுறல்.

மாசிலாக் கற்புடை மங்கை குசுமாப்பிகையுடன் இல்லற வாழ்வை இனிது நடாத்திவரும் குசும ஸ்ரேஷ்டியாரின் மனைமாட்சி மங்கலமாகவே யிருப்பினும், அம்மனை மாட்சிக்குத் தக்க நன்கலனாகிய நன் மகப்பேறு வாய்க்கப் பெற்றிலதாதலின், "உலக வாழ்விற் பெறவேண்டியவற்றுள் அறிவறிந்த மக்கட் பேறல்லாது பிறிதொன்றும் சிறந்த தலவே! நன் மக்களல்லவா தம்பொருள் என்பர் மேலோர்? அந்தோ! நாம் அத்தகைய மகப்பேற்றினை வாய்க்கப்பெற்றிலமே! புத்ரச் செல்வமின்றி பொருட் செல்வத்தால் யாது பயன்?" என்பன வாதிய எண்ணங்கள் குசுமாம்பிகையின் மனத்தே தோன்றி வருத்தத்தைத் தந்தன.

அவ்வம்மையின் மன வருத்தத்தைக் குறிப்பா லுணர்ந்த குசும ஸ்ரேஷ்டியார், "ஓ வனிதா ரத்தினமே! நினக்கு ஏதோ ஓர்வித மனக்குறை யேற்பட்டுளதாகத் தெரிகிறது. 'அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சங் கடுத்தது காட்டும் முகம்' எனும் ஆன்றோர் மொழிப்படி நினதகக் குறிப்பினை நின் முக வாட்டமே காண்பிக்கிற தாதலின் யானதனை நன் குணர்ந்தேன். உனது மன வாட்டத்திற் குக் காரணம் யாது?" என வினவலாயினர்.

அது கேட்ட குசுமாம்பிகை நமது கணவரைப் பணிவுடன் வணங்கி, "எனதுண்மை யன்பிற் குகந்த நாயக! தேவரீருடன் இல்வாழ்க்கை நடாத்தும் அரியதோர் பாக்யத்தைப் பெற்ற அடியா ளுக்கு யாது குறைபாடுளது? ஆயினும், 'பெறுமவற்றுட் பெரும் பேறுகிய அறிவறிந்த மக்கட்பேறு நமக்கு வாய்க்கப் பெற்றிலதே!' என்ற ஒரு வருத்தந்தான் உளது. தம் மக்கள் சிறுகை யளாவிய கூழ் அமிழ்தினும் ஆற்ற வினிதென்றும், மக்கள் மெய் தீண்டலே உடற்கின்ப மென்றும், அவர்தம் சொற் கேட்டலே செவிக் கின்ப மென்று மன்றே ஆன்றோர் கூறுவர்? தம் மக்கள் மழலைச் சொற் கேட்ட மானிட ஸ்ரேஷ்டர்கள் 'குழலினிது! யாழினிது!' எனக் கூறவும் முன் வருவாரோ? அந்தோ! அத்தகைய நன் மகப்பேறு நமக்குக் கிடைத்திலதே! இதற்கு யாதானும் ஓருபாய மிருப்பின், செய்து நம் குறையினைத் தீர்த்துக்கொள்ள லாகுமோ?" என்றனர்.

இவற்றைச் செவியுற்ற குசும ஸ்ரேஷ்டியார், "மாண்பிற் சிறந்த மாது சிரோமணீ! நீ கூறுவது உண்மையேயாயினும் அதற்கு நாம் யாது செய்ய இயலும்? யாவும் அப் பரமாத்மனது திருவுளப் பாங்கின்படி அவன் திருவருளாலே நடைபெறுகின்றன. ஆகலால் நாம் யாதொருவித மனை வ்யவகாரங்களும் வீண் கவலைகளும் எண் ணற்ற யோசனைகளு மின்றி, நிஷ்காம்யமாக அவனுடைய திருவடி த்யானத்தில் ஈடுபட்டிருந்து பேரின்ப மெய்தலே சிரேஷ்டமாகும்" என்றனர்.

உடனே குசுமாம்பிகை கணவரை நோக்கி, "களங்கமில்லா தொளிர் காதல! தாங்கள் கூறும் நிஷ்காம்ய கர்மயோகம் மிகவும் சிறந்த தென்பதில் யாதோர் ஐயமுமில்லை. ஆயினும்,

*" சொல்லும் நூல்களிற் பெரியதே(து?) அருமறைச் சுருதி;
இல்ல றத்தினுக் குரியதே(து?) எண்ணுடை யில்லாள்;
மல்லன் மாலியின் மணமுள தே(து?)வண் ஜாதி;
நல்ல மாதவ மேது? தம் குலம்புரி நடையே "

" முனிகுலந்தொழு கடவுள் யார்? மொய்துழாய் முகுந்தன்;
நனிமணங்கமழ் குழலினர்க் கியற்கையா(து?) அதுநாண்;
தனமிகுந்தவர்க் கேதரன்? தகைபெறு தானம்;
இனிய தே(து?) இரு செவிக்கிளங் குதலையர் இன்சொல் "

என மகாபாரத நூலில் கூறியுளதும், முற்றத் துறந்த முனிவர்களும் உலகநன்மையை விரும்பி அநேக அறநூல்களை அருளிச்செய்துளதும், சிறந்த உத்தம புத்திரர்களைத் தக்ககாலத்தில் ஈன்றளித்து, அவர்களால் உலகில் அறநெறியை நிலுவியுளதும், செயற்கரும் செயல்களைச் செய்வித்துளதும் தாங்கள் அறியாத தன்றே! அன்றியும், உயர்ந்தோர் பலராலும் இலக்கண வகையினுற் கூறப்படும் அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றனுள், முதன்மைத்தான அறமே, இம்மை மறுமை வீடென்னும் மூன்றினையும் பயத்தலானும்,

" சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
அறத்து வழிப் படுஉம் " என்றும்,

" அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு " என்றும்,

" ஒல்லும் வகையான் அறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாம் செயல் " என்றும்,

" அன்றறிவா மென்னு தறம்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றுத் துணை " என்றும்,

" அறத்தான் வருவதே இன்பம் " என்றும்,

" செயற்பாலது அறனே; உயற்பாலது பழியே " என்றும்,

ஆன்றோர் அருண்மொழிகள் அற்புதமாகக் கூறுகின்றமையான், அனைவரும் அறத்தினை ஓம்பவேண்டுவது கடமையாதலானும்,

* இவ்விரு பாடல்களும் விஷ்ணுபுராணம் பாரதம் "நச்சுப்பொய்கைச் சருக்கம்" பாடல் ... 55, 56.

அத்தகை அறத்தை ஆற்றும் நிலை யிரண்டனுள் முதன்மைத்தாய இல்லறத்தினை இயைபுடனேற்றுங்கால் (பிரம்ம க்ஷத்திரிய வைசியராகிய) இருபிறப்பாளர் மூவரானும், இயல்பாக விருக்கப் படுஉங் கடன் மூன்றனுள், முனிவர்கடன் கேள்வியானும், தேவர்கடன் வேள்வியானும், தென்புலத்தார்கடன் புதல்வரைப் பெறுதலானு மல்லது இறுக்கப்படாமையினாலும், அத்தகைய புதல்வரைப் பெற்று, அவர்களால் இதுகாறும் நாம் ஆற்றிவந்த அறங்களை முட்டின்றி முறையே நடைபெறச் செய்து, உலகிற்கு நன்மை யுண்டாக்குதலே நலமாதலானும், உலக க்ஷேமத்தை யுன்னி, நாம் இம்மகப்பேற்றைக் கோருவதால் பிழை யாது மில்லை யாகலானும், எனது மனத்தில் அவ்வித எண்ணம் தோன்றியது. அம்மகப்பேறு இன்றேல், நாம் மக்களிடை தர்மங்களை வேரறுன்றி நிலைக்கச் செய்ய எவ்வாறு இயலும்? புத்ரப் பேற்றினுல்தானே அவை நிலைபெறுதல் வேண்டும்? அன்றியும், புத்ரச் செல்வம்போல, இப் பொருட் செல்வமும் அரசச் செல்வமும் இம்மை மறுமை இன்பங்களைத் தராவே! பழி பிறங்காப் பண்புடை மக்கட் பெறின், எழுபிறப்புந் தீயவை தீண்டா வெனச் சீரியரெல்லாம் செப்பி யுள்ளனரே! நமக்குச் சந்ததி யில்லாவிடில், பிற்காலத்தில் கண்களில்லா முகமும், கதிரவனில்லாப் பகலும்போல, அரசாளத் தகுந்த அரசனின்றி, நமதாட்சிக் குட்பட்டு விளங்கும் நகரங்கள் யாவும் நிலை தடுமாறவும் நேருமே! ஆதலால், உலக க்ஷேமத்தின் பொருட்டாயினும், நாம் அம் மகப்பேறடையத் தக்க முயற்சிகளைச் செய்தல் வேண்டுமென எனக்குத் தோன்றுகிறது. இவை யனைத்தும் தங்களுக்குத் தெரியாததன்று. யாவு மறிந்த மகா விற்பன்னராகிய தேவரீருக்குத் தமியேன் கூறவேண்டுவது யாதுளது? ஆகலின் தேவரீரது திருவுளப்படி நடந்துகொள்ளத் தமியேன் சித்தமா யுள்ளேன்" என்றனர்.

இவ் வுலகின் கண்ணே ப்ராசீன தர்மத்தை யொட்டி பகவத் சேவையும் பாகவத சேவையும் மானவ சேவையும் பூத சேவையும் இடைவிடாது நிரந்தரமாக நடைபெறும் வண்ணமும், மானவவர்க்கம் பகுத்தறிவு ஞானங்களடைந்திருந்தும் மாயையினுல் இழுக்கப்பட்டு அவர்கள் மனம் சதா பாப கர்மங்களில் ஈடுபடுவதால் அவர்களுக்கு நல்வழிகளை உணர்த்தி உஜ்ஜீவிக்கச் செய்யும் வண்ணமும், மூன்று லோகங்களிலும் தனக்குத் தேவையான தொன்றும் இல்லாவிடினும்,

தான் அல்லும் பகலும் ஓயாமல் சத் கர்மங்களைச் செய்துகொண்டே, சத்புத்ரர்களையும் சத்புத்ரிகளையும் சிருட்டித்துக்கொண்டே இருப்ப தாக பகவான் கீதையின்கண்ணே (கர்மயோக அத்தியாயத்தில்) கூறியுள்ளபடியாலும்,

ஒவ்வொருவரும் சத்புத்ரப் பேற்றினைப் பெற்று, தாம் அனுஷ் டித்து வந்த சத்கர்மங்கள் யாவையும் தமக்குப் பின்னும் முட்டின்றி இனிது நடைபெறச் செய்து உலக க்ஷேமத்தை யுண்டாக்குவது நலமானதாலும், .

" அத்தகைய புத்ரப் பேற்றைக் குறித்து நாமும் முயலுதல் வேண்டும் " என வித்யாவதியாகிய குசுமாம்பிகை கூறியபடியினு லும், இவ் வார்த்தைகளைக் கேட்ட குசும ஸ்ரேஷ்டியார் தம்து தர்ம பத்னியைப் பார்த்து, " ப்ரியே ! நீ உனது அபீஷ்டப்படி இப் புத்ரப் பேற்றுக்கான முயற்சிகளைத் தேடுவாய். அதற்கு நான் எவ்வித ஆட்சேபனையும் செய்யவில்லை. உலகத்தில் தர்மம் குன்றாது நிரந் தரமாக நிலைத்திருத்தற்குத் தக்க முயற்சிகளைச் செய்தற்குத் தடை யாதுளது ? இறைவன் திருவுள மிருப்பின் யாவும் இனிதே நிறை வேறும். ஆதலால் நீ அவ்வாறே செய்க " எனக் கூறினர்.

அவற்றைச் செவியுற்ற குசுமாம்பிகை, " நலமிகுந் திலகும் நாத ! அடியாள் உடலும் தேவரீர் உயிருமாதலானும், கண்ணிரண்டு மொன்றையே காணுமாறு போலக் காதல் மனையாளும் காதலனும் மாறின்றித் தீதில் கருமங்களைச் செயல்வேண்டு மாதலானும், நாமிரு வருமாய் இறைவன் திருவருளை இறைஞ்சி, இப் புத்ரப் பேற்றுக் கியைந்த தானம், தருமம், விரதம், பூஜை ஆதியவற்றைப் புரிவோம் " எனப் புகன்றனர்.

பிள்ளைப்பேறு கருதிப் பெரு நோன்பாற்றல்.

அவ்வாறே அவர்கள் அம் மகப்பேற்றின் சார்பாக அநேக தானங்களும், தருமங்களும், அனசனம், சாந்த்ராயணம் முதலாகிய பல விரதங்க ளும், ஸ்தோத்ரம் த்யானம் ஜபம் தபம் முதலிய பல வழிபாடுகளும் அனைத்தும் மனப்பூர்வமான உண்மை யன்புடனும் பக்தி ஸ்ரத்தையுடனும் புரிந் தும், புத்ரப் பேறுண்டாகாமையால் மனமிக வருந்தியவர்களாகி,

" இக் குறைபாடு எவ்விதத்தினும் தீர்ந்தபாடிலது; ஆதலின் ' தீராக் குறைக்குத் தெய்வமே கதி ' " என்று துணிந்து தினந்தோறும் பக வானுடைய ஆலயத்துட் சென்று, ஆகம விதிப்படி தீர்த்தத்தில் நீராடி நியமம் முடித்து, பயபக்தியுடன் உள்ளே புக்கு, பஞ்சாவரண வல மும் வந்து, சந்நிதி நேரே அஷ்டாங்க பஞ்சாங்கமாக நமஸ்கரித்து, வணங்கிய முடியும் மலர்ந்த முகமும் அலர்ந்த மனமும் நீர்பொழி கண்ணும் துதிமொழி நாவும் கூப்பிய கரமும் புளகமுற்ற உடம்பும் கொண்டு நின்று, " எங்கும் நிறைந்து, யாவும் அறிந்து, வேண்டு வார் வேண்டியாங் கருளும் வித்தக மூர்த்தியே! ' மகப் பேறின்றி, அறங்கள் யாவும் இனிது நடைபெறுது பிழைபடுமே ' என யாங்கள் வருந்தல் தேவீர் திருவுள மறியாததோ ? தேவீர் கருணை புரியத் திருவுளத் தெண்ணில், இஃதொரு பெருஞ் செயலோ ? தேவீரா லாகாத்து மொன்றுளதோ ? சர்வேஸ்வரா! பரம கருணாநிதே ! பக்தவத்ஸலா! பரம தயாளா! தீன கருணாகரா! திவ்ய மங்களகரா! அன்பர்கட் கருளும் அண்ணல் ! அடியவர்க் கெளிய அப்பனே ! அடியேங்கள் குறையை அகற்றுதல் நும் பொறுப்பே யன்றி சிற் றணுவினுஞ் சிறியேமாகிய எம்மால் யாது செய்ய இயலும் ? தேவ ரீரை யன்றி எமக்கு உறுதுணையாவார் வேறு யார் உளர் ? ஆதலான் தாங்கள் எளியேங்கள் மீது கருணைகூர்ந்து ஓர் நன்மகப் பேற்றினை நல்கி இரட்சித்தல் வேண்டும் " எனப் பலவாறுக ஸ்தோத்தரித்தும், வணங்கியும், குறையிரந்தும், கதறிக் கதறிக் கண்ணீர்விட்டும், ' கட வுள் விட்டவழி யாகட்டும் ' எனத் தெளிந்தும், " எப்படியும் இறை வன் நம்மைக் காப்பாற்றுமற் கைவிடமாட்டார் " என மனத்துணி வுற்றும், தைரியமடைந்தும்,

" பலபிறவி களிற்சிறந்த மனிதவுரு
விணமருவிப் படிமேல் மேவி
நிலவுகெனப் பணித்தனை;நின் றிருவருளா
லுதித்தறநன் னெறியே பேணி
இலகுமுயிர் களுக்கிதமே புரிந்தளவில்
சுகத்துடனே யிருந்திட் டாலும்
குலவிருத்திக் கொருமகவு கிடையாதே
யென்றவொரு குறையுண் டண்ணல் ! "

" இத்தகைய வொருகுறையைத் தீர்த்தருள்த்
திருவுளத்தி லிரக்கங் கொண்டே
மெத்தவருள் புரிந்திடுவாய்; மேலவர்க
ளுளத்தமரும் மெய்ம்மைத் தேவே !
முத்தர்பலர் போற்றிசைக்கும் மோனவடி
வாயொளிரும் மூர்த்தீ ! உன்னை
நத்துபவர் வேண்டுவதை நல்கிடுவோ
னெனமறைகள் நவில்தல் கண்டேம் "

" மங்கலமாம் வடிவுபுனைந் தடியார்கள்
மனதில்விரும் புவதை யெல்லாம்
பொங்குமகிழ் வுடனருளிக் காப்பானென்
றேபலரும் புகல்கின் றாரால்;
இங்கணடி யேம்படுமோர் துயரகற்றி
மகப்பேற்றை யினிதி னீந்தே
எங்கள்மர பினைவிளக்கி யருள்புரிக !
இறையவனே ! அமர ரேறே !"

" இப்புவியில் யாம்புரிந்த அறம்பலவு
மினிதோம்பச் செங்கோ லோச்ச
செப்பமிகு மொருமகவைக் கொடுத்தருள்க !
எமதுகுறை தீர்த்தே யாள்க !
செப்பருமொண் கருணைவடி வாயொளிரும்
பெருமானே ! தெவிட்டாத் தேனே !
ஒப்பரிய அருளமுதே ! அறிவுருவே !
சின்மயமா யொளிருந் தேவே ! "

எனப் பலவாறுக மனங்கசிந்துருகிப் பாடித் துதித்தும், பரவசராகியும், உள்ளம் நெக்குருகி உவப்புடனேத்தியும், பக்தியின் பாலராய்ப் பண் புறப் போற்றியும், சிந்தை கரைந்து நைந்து நைந்துருகியும்,

" தீராத குறையனைத்துந் தீர்த்தருளுந்
தெய்வமெனச் செவ்வை யாகச்
சீராரும் நினதடியர் நவின்றிருக்க
வெமதுகுறை தீரா தாகிப்
பாராருந் துயர்க்கடலில் மூழ்கிவருந்
திடக்கண்டும், பரமா ! நின்றன்
ஏராருந் திருவுளஞ்சற் றிரங்காத
காரணந்தா னென்னே ! என்னே !! "

ன்ன எங்கி இரங்கியும், அகங் குழைந்து நெகிழ்ந்து அன்பா லுருகி யரற்றியும், பற்பல முறையிலும் பரம்பொருளைப் பரவி வந்தனர். எவ்வகைத்தானும் அவர்களுடைய குறை தீர்ந்தபாடிலது.

அதனால், ஓர் நாள் குசும ஸ்ரேஷ்டியாரும் குசுமாம்பிகையும் தம தரண்மனையின்கண்ணே ஒருசாரமர்ந்து யோசிப்பா ராயினர். "உலக நன்மையைக்கோரி நாம் ஒரு மகப்பேறுபெற வுன்னி அநேக வித முயற்சிகளைச் செய்தோம். ஆண்டவன் ஆலயம் சென்று அவனது அருளை விரும்பிப் பலவாறுகவும் தோத்திரம் செய்தோம். அப் பெருமானும் நமது குறையை யகற்றியருளத் திருவுளத் தெண்ணினு ரில்லை. கோயில் என்ன செய்யும்? குளம் என்ன செய்யும்? மூர்த்தி என்ன செய்யும்? அவை யனைத்தும் நல்லனவே. கடவுளும் பரம கருணாமூர்த்திதான். அவர் என்ன செய்வார்? அவரால் யாதொரு குறையுமில்லை. அவருடைய தண்ணருள் எங்கும் நிறைந்து பரிபூர்ணமாகிப் பொங்கித் ததும்பி வழிகின்றது. ஆயினும், நாம் புரிந்த தவப்பயன் இவ்வாறுளதால் அதற்குப் பிறர் என்ன செய்வர்? நாம் அதனை நினையாது ஆண்டவனை நோவதால் யாது பயன்? நம் முடைய வினைப் பயனே நமக்கு இத்தகைய வருத்தத்தைத் தருகிறது. நாம் இந்த ஜென்மத்தில் மனமறிந்து யாவர்க்கும் எத்தீங்கு மியற்றி யிராவிடினும், முன் ஜென்மங்களில் என்ன தீவினைகள் இயற்றி னோமோ? எத்தகைய பாபச் செய்கையைப் புரிந்தோமோ? யாவரை எவ்வித துன்பங்கட் காளாக்கினமோ? எந்த எந்த பெரி யோர்கட்கும் நல்லோர்கட்கும் ஆத்மஞானிகட்கும் திவ்ய குணக் குன்றனையார்க்கும் புண்ய சீலர்கட்கும் உத்தமோத்தமர்கட்கும் விழு மிய வேதாந்திகட்கும் பரம பாவனர்கட்கும் ஒழுக்கத்திற் சிறந் தோர்க்கும் உண்மையாளர்க்கும் அடைக்கலம் புகுந்தோர்க்கும் மாதா பிதாக்கட்கும் ஆசிரியர்கட்கும் குரு தேவர்கட்கும் ஞானசாரி யர்கட்கும் உறவினர்கட்கும் உண்மை நண்பினர்க்கும் அன்பர்கட் கும் அடியார்கட்கும் நோயினர்க்கும் வேதவழி யொழுகும் வித்தகர் கட்கும் கலைஞர்கட்கும் கவிஞர்கட்கும் தென்புலத்தினர்க்கும் தேவா லயத்திற்கும் திரு மடத்திற்கும் தரும சாலைகட்கும் தருமவான்களுக் கும் நாம் யாது தீங்கியற்றினோமோ? அந்தோ! அத்தகைய பாவங் களா லல்லவா நாம் இக் குறைபாடுடன் குன்றவேண்டியவர்களா னோம்?" என மன வருத்தமுறலாயினர்.

" இறைவனருளால் மெய்ஞ்ஞானம் வாய்க்கப் பெற்று அருளொளி கண்டு ஆநந்திக்கும் நிலை ஏற்படுகையில், சகல பாபங்களும் நசிக்கப்பெற்று உய்வுண்டாகிற தெனவும், அத்தகைய மெய்ஞ்ஞானம் சற்குரு வருளினலேயே கிடைக்குமெனவும், (அத்தகைய சற்குரு வாய்க்கப் பெறற்கு) *மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாற் றொடங்கி வழிபட்டுப் பிரார்த்திக்கின், இறைவனே குருவாய்த் தோன்றி ஈறிலா ஞானத்தை ஈந்தருளுவன் எனவும் ஆன்றோர்கள் மொழிந்துள்ளமையால், நாம் தீர்த்த யாத்திரைக்குப் புறப்படுவது உசிதம் " என அவர்கள் ஒருநாள் யோசித்துத் தீர்மானிக்கலாயினர்.

---

* தலம் காயசுத்தியையும், தீர்த்தம் வாக்கு சுத்தியையும், மூர்த்தி மனச் சுத்தியையும் நல்கலால் திரிகரணமும் சுத்தியாகின்றமையான், அங் நிலையுணர்ந்து இறைவன் சற்குரு வடிவாய்த் தோன்றி ஞானோபதேசம் அருளுவன் என்பது அன்றோர் துணிபு.

" மூர்த்திதலந் தீர்த்தம் முறையாற் றொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே "

(தாயுமான சுவாமிகள்)

" பசுவினிடமுள்ள பாலானது, வாஸ்தவத்தில் அதன் சரீர முழுவதிலும் ரத்த ரூபமாய்ப் பரவியுள்ளது. என்றாலும் அப்பசுவின் காதுகளையோ கொம்புகளையோ பிசைந்தால் பால் வராது. அதற்கு அதன் முலைக் காம்புகளைத்தான் பிடித்துக் கறக்கவேண்டும். அதுபோல, ஈசுவரன் இவ்வுலகத்தில் எல்லா இடங்களிலும் பரவியிருக்கிறான். ஆயினும் எல்லா விடத்தும் அவனை உன்னால் காண முடியாது. பூர்வ பக்தர்களுடைய குண விசேஷம் நிரம்பிய புண்ய ஸ்தலங்களாகிய கோயில்களில்தான் அவன் சுலபமாய்த் தென்படுகிறான். "

" ஈசுவரனை அடைவதற்காக அநேகமாயிரம் ஜனங்கள் நெடுநாட்களாக ஜபம், தபம், தியானம், பிரார்த்தனை, வந்தனை, வழிபாடுகள் செய்துவரும் இடங்களில் ஈசுவர சான்னித்யம் இருக்குமென்பதைத் தெரிந்துகொள். அவர்களுடைய பக்தியினால் ஆத்மிக எண்ணங்கள் உருவைடைந்துள்ளன போல அவ்விடங்கள் இருக்கின்றன. ஆதலால் அப்படிப்பட்ட இடங்களில் ஒருவனுக்கு ஆத்மீக அறிவு எளிதில் உண்டாகி ஈசுவர தரிசனம் கிடைக்கிறது. புராதன காலந் தொட்டு, கணக்கற்ற ஸாதுக்களும் பக்தர்களும் இத்தீர்த்தங்களுக்கு வந்து, ஈசுவர தரிசனம் வேண்டுமென்று ஆசைகளையெல்லாம் விட்டுவிட்டு, உள்ளன்போடு கதறியிருக்கின்றனர். ஆதலால் ஈசுவரன் எங்கும் இருக்கிறான் என்றாலும் இத்தகைய க்ஷேத்திரங்களில் விசேஷமாகத் தன்னைத் தோற்றுவிக்கிறான். உதாரணமாக, பூமியில் தோண்டினால் எங்கேயும் ஜலம் காணப்படும். ஆனால், குளம், கிணறு, ஏரி இவையுள்ள விடத்தில் தோண்ட வேண்டிய அவசியமில்லை. எப்போது வேண்டுமானாலும் ஜலத்தை எடுத்துக் குடிக்கலாம். "

" வயிறு நிறைய புல்லைத் தின்ற பசு, ஒரிடத்தில் சாந்தமாகப் படுத்துக்கொண்டு அசைபோடுவதைப் போல, தீர்த்த யாத்திரைக்கு நீ போய் வந்தால், அந்தந்த திவ்ய ஸ்தலத்தில் உன் மனத்தெழுந்த தூய எண்ணங்களைப் பற்றிச் சிந்தித்துத் தனியிடத்தில் உட்கார்ந்து அவற்றிலேயே ஆழ்ந்துபோக வேண்டும். "

(பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்)

சற்புத்திரை வேண்டி தலயாத்திரை செய்தல்.

பிறகு ஒரு நல்ல சுபதினத்தில் குசும ஸ்ரேஷ்டியாரும் குசுமாம்பிகையும் ஸ்நானம் செய்து, நித்யானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு, கோயிலுக்குவேண்டிய அபிஷேக சாமான்கள், பூஜைத்ரவியங்கள் யாவும் ஆட்கள் மூலமாக முன்னரே அனுப்பிவைத்து, தாமும் பல பெரியோர்களுடன் தமது உற்றூர் நட்பினர்கள்புடைசூழ ஆலயம் சென்று, திருமஞ்சனம், திருவாராதனை முதலிய யாவையும் திவ்யமாக நடாத்தி, இருகண் குளிரத் தரிசித்துப் பேரானந்தமடைந்து, கண்களில் ஆனந்த பாஷ்பம் பெருக, கரங்கள் தாமே சென்று சிரமேற் குவிய, நாக்குழற, மொழி தடுமாற, "எங்கும் இடையற நிறைந்த இன்ப வெள்ளமாகிய இறைவனே! அடியேங்களுடைய மனக் குறையை யகற்றும் மார்க்க மறியாமல் மயங்குகின்ற தருணத்தே, தேவரீரது கருணையினால் தீர்த்த யாத்திரை செய்யலாமென்ற எண்ண முதித்ததாகலின், யாங்கள் தேவரீர் திருக் கோயில்கொண் டெழுந்தருளியுள்ள பல க்ஷேத்திரங்களுக்குச் சென்று, ஆங்காங்குள்ள புண்ய தீர்த்தங்களாடி, மூர்த்திகளையும், பெரியோர்களையும் தரிசித்து, அவர்களது கருணையினால் எமது பாவத்தைப் போக்கிக்கொண்டு திரும்பி வருமாறும், எமது தீராக் குறையாகிய மகவிலாக் குறையைத் தீர்த்தருளுமாறும் கிருபை பாலிக்கவேண்டும் ஸ்வாமீ" என்று பலவாறுக உண்மை யன்புடன் உருகிய மனத்துடன் துதித்து வணங்கி, ஆலயத்தை வலம் வந்து, சந்நிதியின் முன்பு சாஷ்டாங்கமாக நமஸ்கரித் தெழுந்து, பகவத் ப்ரசாதங்களைப் பெற்றுக்கொண்டு, யாவரும் சூழ வீடு வந்து, வீட்டிலே சமையல் செய்திருந்த பாயச பலகாராதிகளொடு கூடிய அறுசுவை மிகுந்த உணவுப் பொருள்கள் யாவையும், பூஜாக்ரகத்தில் எழுந்தருளியுள்ள மூர்த்திக்கு ஆராதனை செய்து, அனைவரையும் பரிவுடனருத்தி, தாங்களும் புசித்து, யாத்திரைக்குவேண்டிய சாமக்ரியைகள் யாவையும் வண்டிகளி லேற்றிவிட்டு, மந்திரிகளை யழைத்து, ராஜ்யத்தைச் செவ்வனே பாலித்துவருமாறு வேண்டிய புத்திமதிகளைக் கூறி, முத்திரை மோதிரத்தைத் தந்து விடைபெற்றுக்கொண்டு, பல பெரியோர்களையும், உற்றூர் நட்பினர்களையும் உடனழைத்துக்கொண்டு, பரிசுத்த மனத்துடன், தெய்வ பலத்தைத் துணைகொண்டு, க்ஷேத்திர யாத்திரைக்குப் பிரயாணமாயினர்.

முதலில் பெனுகொண்டாவிலுள்ள தமது இஷ்ட தெய்வங்களாகிய ஸ்ரீ நகரேஸ்வரப் பெருமானும் ஸ்ரீ ஜனார்த்தன மூர்த்தியும் எழுந்தருளியுள்ள ஆலயங்கட்குச் சென்று, பணிந்து வணங்கி, அகங் குழைந் துருகி அன்பாற் கரைந்து பக்தி வினயத்துடன்,

" குலம்விளக்க வொருமகவு கொடுத்தருளல்
வேண்டுமெனக் குறையி ரந்தோம்
பலதருமம் புரிந்துவிர தங்களனுட்
டித்துமிகு பரிவி னேடும்
வலமுறவந் தேநினது திருக்கோயில்
தொழுதிறைஞ்சி வழுத்தி நின்றேம்
தலந்தொறுஞ்சென் றேநினது திருவுருவை
வணங்கவெண்ணிச் சார்கின் றேமால்."

" செல்லுகின்ற விடந்தொறும்நீ துணையெனவே
வரல்வேண்டுஞ் சில மேவும்
நல்லமகப் பேற்றினையுந் தரல்வேண்டும்
நினதுபுகழ் நவின்றே யென்றும்
அல்லலறுத் தானந்த மனுபவிக்கும்
வாழ்வினையா மடைதல் வேண்டும்
பல்லுலகும் படைத்தளிக்கும் பரம்பொருளே
நினதொளியிற் படிதல் வேண்டும்."

" ஆரணமா யாகமமா யளவிறந்த
கலைகளுமா யருளா னந்த
பூரணமாய்ப் புனிதமுமாய்ப் புதுமையுமாய்ப்
பழமையுமாய்ப் போத ஞான
காரணமா யுலகமெலாங் காத்தருளும்
பொருளேநின் கருணை நோக்கால்
தாரணிமீ தடியேங்கள் துயர்தவிர்ப்பாய்
தயவுநிறை சாந்தத் தேவே!"

என்று ஸ்தோத்தரித்து, "எங்களுக்குத் தோன்றுத் துணையாயிருந் தருள்புரிதல் வேண்டும்" எனப் பலவாருகப் பிரார்த்தித்து விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டு,

க்ஷேத்திரங்கள்

துங்கபத்ரா மந்த்ராலயம் பண்டரீபுரம் புனு பம்பாய் காஸிக் பஞ்சவடி சோமநாத் துவாரகை ஸிந்து சாகர சங்கமம் பாஞ்சாலம் காஷ்மீரம் விராடபுரம் கண்ணுவாசிரமம் ஸ்ரீ ராமநகரம் (ஸ்ரீநகர்) ஹரித்துவாரம் கேதாரம் பத்ரிகாசிரமம் கங்கோத்ரி யமுனோத்ரி அமர நாதம் பசுபதிநாதம் ஹிமாசலம் அல்மோரா கௌரீசங்கர் கைலாசகிரி ஸ்கந்தகிரி பதரீநாராயணம் ப்ரம்மகபாலம் இந்த்ரநீலபர்வதம் டில்லி (அஸ்தினபுரம்) குருக்ஷேத்திரம் ஆக்ரா ரிஷிகேசம் நேபாளம் அயோத்தி நந்திக்ராமம் காசி மிதிலாபுரி கயா ப்ரயாகா லக்னௌ கைமிசாரண்யம் தேவதாருவனம் வடமதுராபுரி ஆய்ப்பாடி கோவர்த்தனகிரி ப்ருந்தாவனம் மாந்தாதா ஜேப்பூர் புஷ்கரம் அவந்தி நருமதை யுற்பத்தி அமரகண்டக் சித்ரகூடபர்வதம் பரத்வாஜாசிரமம் வால்மீகாசிரமம் கௌதமாசிரமம் பாடலீபுரம் த்ரியம்பகம் சாலக்ராமம் கல்கத்தா கங்காசாகரசங்கமம் ஜாஜ்பூர் சங்குகண்ணம் ஜகந்நாதம் ஸ்ரீசைலம் கிஷ்கிந்தை ஏமகூடம் விரூபாட்சம் ஹம்பி சோலாப்பூர் பத்ராஜலம் மகேந்த்ரகிரி விஜயநகரம் ஸிம்ஹாசலம் ராஜமகேந்த்ரம் கோதாவரி ஹரிச்சந்த்ரம் திருஷ்ணை தெனாலி கடப்பை அனந்தபுரம் க்ஷீராப்தி வைகுண்டம் மேருகிரி முதலிய வடநாட்டுத் திருத்தலங்களையும்,

காளஹஸ்தி திருவேங்கடம் அலமேலுமங்காபுரம் திருமழிசை திருத்தணிகை விரிஞ்சிபுரம் திருமாற்பேறு திருவாலங்காடு திருவெவ்வளூர் திருவலிதாயம் திருவொற்றியூர் திருவல்லிக்கேணி திருமயிலாப்பூர் திருவான்மியூர் திருப்போரூர் திருக்கழுக்குன்றம் மகாபலிபுரம் அச்சிறுபாக்கம் மயிலம் காஞ்சீபுரம் திருவோத்தூர் ஸ்ரீபெரும்பூதூர் முதலிய தொண்டை நாட்டுத் திருத்தலங்களையும்,

திருவண்ணாமலை அரையணிநல்லூர் திருக்கோவலூர் திருவெண்ணெய்நல்லூர் திருநாவலூர் திருவாமூர் திருஅதிகை பண்ணையபுரம் திருவக்கரை பாதிரிப்புலியூர் திருவகீந்திரபுரம் ஸ்ரீமுஷ்ணம் கூடலையாற்றூர் விருத்தாசலம் முதலிய நடு நாட்டுத் திருத்தலங்களையும்,

சோழநாட்டின் வடபாகத்திலுள்ள சிதம்பரம் சிவபுரி ஆச்சாள்புரம் சீர்காழி வைத்தீஸ்வரன் கோவில் திருப்புன்கூர் திருவாலங்காடு திருஆரூர் திருக்கண்ணமங்கை திருக்கண்ணபுரம் திருப்புகலூர்

செங்காட்டங்குடி திருமருகல் திருவாஞ்சியம் திருவீழிமிழலை திருவிடைமருதூர் திருநாகேச்சுரம் ஒப்பிலியப்பர்கோவில் கும்பகோணம் திருச்சக்திமுற்றம் திருவாவடுதுறை மாயூரம் திருக்கடையூர் காரைக்கால் திருநள்ளாறு தருமபுரம் நாகப்பட்டினம் கன்றுப்பூர் எட்டிக்குடி வேதாரண்யம் ஆண்டார்கோவில் முதலிய திருத்தலங்களையும்,

சோணாட்டின் மேல்பாகத்திலுள்ள கலியபெருமாள்கோவில் ஸ்வாமிமலை ஆதனூர் திங்களூர் திருவையாறு சமயபுரம் கொல்லிமலை ஸ்ரீரங்கம் திருவானைக்காவல் முதலிய க்ஷேத்திரங்களையும்,

சோணாட்டின் தென்பாகத்திலுள்ள திருச்சிராப்பள்ளி திருமுக்தீச்சுரம் (உறையூர்) திருப்பூந்துருத்தி தஞ்சாவூர் பாபநாசம் விராலிமலை முதலிய திருத் தலங்களையும்,

பாண்டிய நாட்டிலுள்ள மதுரை திருப்பரங்குன்றம் திருமாலிருஞ்சோலை திருவாதவூர் திருச்சுழியல் திரிபுவனம் திண்டீச்சுரம் (திண்டுக்கல்) காரைக்குடி ஆவுடையார்கோவில் (திருப்பெருந்துறை) குற்றாலம் இராமநாதபுரம் உத்தரகோசமங்கை இராமேஸ்வரம் தர்ப்பசயனம் சிவகாசி ஸ்ரீவில்லிபுத்தூர் சங்கர நாராயணர் கோவில் திருநெல்வேலி ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீகைலாசபுரம் திருச்செந்தூர் பொதியமலை தென்காசி கன்னியாகுமரி முதலிய திருத்தலங்களையும்,

மேற்கு நாடுகளிலுள்ள பழனி திருவனந்தபுரம் ஜனார்த்தனம் காலடி அஞ்சைக்களம் கோட்டியூர் உடுப்பி கோகர்னம் தலைக்காவேரி மைசூர் ஸ்ரீரங்கப்பட்டணம் நந்திதுர்க்கம் சிவசமுத்ரம் சுகவனேச்சுரம் (சேலம்) சித்தீச்சுரம் நீலகிரி கோயம்புத்தூர் மேலைச் சிதம்பரம் (திருப் பேரூர்) திருப்பூர் திருமுருகன்பூண்டி திருச்செங்கோடு பாண்டிக்கொடுமுடி திருநாராயணபுரம் முதலிய திருத்தலங்களையும் தரிசித்துக்கொண்டு, ஆங்காங்குள்ள தீர்த்தங்களிலும்; மானஸ சரோவரம் முதலிய சிறந்த தடாகங்களிலும் ஸ்நானம் செய்துகொண்டு,

கோதாவரி கிருஷ்ணை துங்கபத்ரா தப்தி நர்மதா சரஸ்வதி மாஹி லூனி ஸிந்து ஜீலம் ஜீனுப் ராவி பியாஸ் ஸட்லெஜ் சாம்பல் ஸிந்த் பெட்வா கென் யமுனை கங்கை சரயு கௌமுதி கோக்ரா கண்டகி காசி ஸன் பத்மா டிஸ்டா ப்ரம்மபுத்ரா ப்ராம்மணி மகா நதி வடபெண்ணை பாலாறு தென்பெண்ணை மணிமுத்தாறு கொள்ளிடம் காவேரி வைகை தாம்ப்ரபரணி முதலிய புண்ய நதிகளில் நீராடிக்கொண்டு, புண்ய தினங்களில் தனுஷ்கோடி கன்யாகுமரி முதலிய பல இடங்களில் சமுத்திர ஸ்நானம் செய்துகொண்டு,

திருத்தலங்களில் தேவனை இறைஞ்சல்.

ஒவ்வொரு க்ஷேத்திரத்திலும் உள்ள மூர்த்திகளை த்ரிகரண சுத்தியாய்த் தரிசித்து, அன்புடன் பணிந்து வணங்கி, என்பெலாம் நெக்குருக, உரோமம் சிலிர்ப்ப, மனது அழலில் மெழுகாயிளக, "எங்கும் நிறைந் தொளிர் ஈஸ்வரனே! அருட் சக்தியோடு நிகழ் ஆண்டவனே! நினைப்பவர் மனங் கோயிலாக்கொண்ட நித்தியனே! இமைப் பொழுதேனும் இதயம் விட்டகலா இறையவனே! ஆகம மாகிநின் றண்ணிப் பானே! பிறப்பறுக்கும் பிஞ்ஞகனே! ஆராத இன்பம் அருளும் மலையே! விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய் எண்ணிறந் தெல்லை யிலாதானே! தேறலின் தெளிவே! தெய்வ மாமணியே! ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த இன்பமே! எமது பேரன்பே! முன்புமாய்ப் பின்பும் முழுதுமாய்ப் பரந்த முத்தனே! முடிவிலா முதலே! அரசனே! எங்கள் அப்பனே! குருவே! ஆசிலா அன்புடை அடியார் ஆவியோடாக்கை புரைபுரைகனியப் புகுந்துநின் றுருக்கிப் பொய்யிருள் கடிந்த மெய்ச் சுடரே! தூண்டு சுடரனைய ஜோதியே! தொல்லமரர்தம் சூளாமணியே! காண்டற்கினிய கடவுளே! கருதுவார்க்காற்ற எளியனே! வேண்டுவார் வேண்டுவதே ஈவோனே! மெய்ந் நெறி கூறி மிளிர்வோனே! விரதமெல்லாம் மாண்ட மனத்தார் மனத்தானே! வாடிய வாட்டந் தவிர்ப்போனே! அம்மை பயக்கும் அருளமுதே! இம்மை பயக்கும் எம் துரையே! வினைகள் போக மம்மரறுக்கும் மருந்தே! தலைசிறந்த பக்தியும் உனது பாதார விந்தங்களில் சரணமடையும் மனோபாவமும் தந்தருள்வாய்" என்றும்,

"ஜகத் ரக்ஷகனே! ஜகத்தையெல்லாம் மயக்கிவரும் மாயையின் வலியில் நாங்கள் சிக்குண்டுழலாது காப்பாற்றப்படவேண்டும்" என்றும், "ஏ ப க வா னே! நீ ரூபத்தோடு இருக்கின்றாயா, அல்லது நீ ரூபமற்றவனு என்பது எமக்குத் தெரியாது; நீ யெப்படி யிருந்தபோதிலும் எங்கள் மீதுள்ள உனது கருணையால் எம்மைக் கடாட்சித் தருள்வாய்; எமக்கு உன் தரிசனம் கிடைக்கும்படி அனுக்ரஹம் செய்வாய்" என்றும், "உலகெலா முணர்ந் தோதற் கரியானே! நாங்கள் உனது உண்மை ஸ்வரூபத்தை உணர்ந்தவர்க ளல்லேம்; உனது உண்மை ஸ்வரூபத்தை நீயே எமக்குக் காட்டி யருள வேண்டும்" என்றும்,

('மற்றுப் பற்றெனக் கின்றி' என்ற பண்)

"தேவர் மாமுனி வோர்கள் வாழ்த்துவர்;
சித்தர் நின்புகழ் பேசு வார்;
பாவ லோர்பலர் பண்கள் பாடியுன்
பாதம் நாளும்ப ராவு வார்;
யாவு மாகியி லங்குமே ல்வ!
ஈரெ டாதியி லாத வ!
பாவந் தீர்த்தரு ளீகுவாய் புத்ர
பாக்கி யந்தனை நல்குவாய்" எனவும்,

"மண்ணில் வாழுயிர் தம்மைக் காத்துநன்
மாட்சி யோடர சாண்டி ட,
நண்ணி யேயிது காறும் நாங்களும்
நாடி யாற்றிய பல்வி த
புண்ணி யங்கள்நி லைக்க, நீயொரு
புத்தி ரன்றனைத் தந்த ருள்;
எண்ணி லாக்கலை யாவும் போற்றிடும்
ஈச னே!பவ நாச னே!" எனவும்,

"உலக மெங்கும்நி றைந்தொ ளிர்ந்திடும்
உத்த மா!வுனைப் போற்றி னேம்;
இலகு மன்புடன் யாத்தி ரைபுரிந்
தேத்தி யுன்னையி றைஞ்சி னேம்;

குலவு நன்மகப் பேற்றை வேண்டியுன்
குரைக ழல்கள்வ ணங்கி னேம்;
நிலவு மப்பெரும் பேற்றை யீந்தருள்;
நித்த னே!யருட் சித்த னே!" எனவும்

பலவாருகத் தோத்தரித்தும், மகப்பேற்றை நல்கும்படி மகாதேவனை வேண்டிக்கொண்டும், தீர்த்த யாத்திரை செய்யுங்கால்,

திருவிழாக் கண்டு மன முருகியே தொழுதல்.

அநேக ஸ்தலங்களில் (இவர்கள் செல்லும் போது) பட்சோத்ஸவம், மாசோத்ஸவம், ப்ரம்மோத்ஸவம் ஆதிய பல உத்ஸவங்கள் அதி விமரிசையாய் நடைபெறும். அப்போது இவர்கள் அவ்வுத்ஸவங்கள் நடைபெறும் முறைகளையும் வாத்ய வொலிகளின் வண்மையையும் அலங்காராதிகளின் அற்புதத்தையுங் கண்டு மனக் களிப்புற்றும், இறைவனது விழாக் கோலத்தைக் கண்டு விளம்பவொண்ணாப் பேரானந்தமுற்றுப் பரவசமெய்தியும், மெய்ம்மறந்து நின்று பெருகு மன்போடும்,

"எந்தாயடி யவர்போற்றிட இனிதேபவ னிவரும்
ஈசாமறை தொழுதேத்திடும் எங்கள்தனி முதல்வா
நொந்தேமனம் நைந்தேயடி யேமீங்கு வருந்தல்
நோக்காய்சிறி தேனுந்திரு வருளாள நினக்கே
சந்தோடமு மாமோ இது தகுமோதரு மமிதோ
தஞ்சம்நின தடியேயென நம்பித்தொழு தனமோர்
சந்தானம ளித்தேபல தருமங்களைக் காவாய்
தாணீழலில் சேர்ப்பாயெமைச் சான்றோர்தொழு
மிறையே"

எனப் பற்பல விதமாய்ப் பெருமானைப் போற்றியும், அநேக தத்துவ நிலைகளைப் பற்றி யொருவர்க் கொருவர் எடுத்துக் கூறி விளக்கிக் கொண்டும், வேத வுரைகளையும் வேதாந்தத் துறைகளையும் பொற்பிற் சிறந்த புனிதர்களநேகர் பொலிவுறப் புகன்ற பொன்மொழிகளினுட் பொதிந்து கிடக்கும் பொருள் நுட்பங்களையும் எண்ணியெண்ணி வியந்துகூறி இனிய பல் மொழிகளால் யாவர் மனத்தையுங் குளிர்வித்துக்கொண்டும், அவ்விழாவினுல் வரும் பயனை யனுபவித்து மகிழ்வர்.

யாத்திரையில் உணர்ந்த அற்புதங்கள்.

அவர்கள் ஆங்காங்குள்ள பெரியோர்களை வணங்கிக்கொண்டும், சிருஷ்டிக்ரம விசித்திரங்களைக் கண்டு களித்துக் கொண்டும், ஆங்காங்கு அழகுறக் காணும் இயற்கைத் தோற்றங்களின் எழிலைக் கண்ணுற்று வியந்து கொண்டும், ஆங்காங்கு அமைக்கப்பட்டுள்ள அதியற்புத நிர்மாணங்களைப் பார்த்து ஆனந்தித்துக்கொண்டும், ஆலயங்களிலும் கோபுரங்களிலும் மண்டபங்களிலும் உள்ள சிற்பக் கலையின் திறன்களைக் கண்டு ஆச்சர்ய மடைந்து கொண்டும், மாடமாளிகைகள் கூட வரிசைகள் கட்டடப் பந்திகள் நிறுவப் பட்டிருக்கும் நேர்த்தியைக் கண்டு மகிழ்ந்து கொண்டும், வீதிகள் அமைத்திருக்கும் விநோதங்களையும் கடைகள் நிலவுகிற கம்பீரத் தோற்றத்தையும் காய்கனி வகைகள் விற்பனையாகும் கடைகளின் அழகையும் ஆங்காங்குள்ள ஆடவர் மகளிர் இளைஞர் ஆதியரின் நாகரிகமும் ஒழுக்கமும் அன்பும் வீரமும் சத்ய நெறியும் தியாக புத்தியும் அஹிம்ஸா வுணர்ச்சியும் தைர்யமும் சௌர்யமும் பொறையும் புகழும் மிக்க பொலிவும் வியாபாரம் புரியும் வன்மையும் வர்த்தகர்களின் நடையுடை பாவனைகளும் ஆதிய அனைத்தையும் நோக்கி அக மகிழ்வுற்றும், அந்தந்த தேசங்களிலும் வழங்கும் பல பாஷைகளின் ஞானத்தையும் கண்டு வியந்து தாமும் உடனுரையாடி யுவகை யடைந்தும், கால தேச வர்த்தமானங்களின் இயல்பனைத்தும் நன்கறிந்து நலமுற்றும், பழக்க வழக்கங்கள் யாவையும் அறிந்து தெளிந்து நன்கு பழகி ஆநந்த மடைந்தும், தேச நகர கிராம பரிபாலன முறைகள் ஆங்காங்கு நடைபெறும் விதங்களனைத்தையும் உணர்ந்தும், ராஜ தந்திர மார்க்கங்களைக் கண்டு யூகித்தும், அங்கங்கே உற்பத்தியாகும் விளைபொருள்கள் எவ்வெவை யென்பதையும் அவைகளின் குணகுணங்கள் யாவை யென்பதையும் ஆராய்ந்தறிந்தும், அவை உபயோகப்படும் வகைகள் உபயோகப்படுத்தும் முறைகள் உபயோகப்படும் இடங்கள் ஆகிய பலவும் அறிந்தும், அங்கங்கே நிகழும் கைத்தொழில்களைப் பற்றித் தெரிந்துகொண்டு அவற்றைக் குறித்து பல ஆராய்ச்சிகளையும் உணர்ந்தும், அந்தந்த இடங்களில் உள்ள ஆசார சீலங்களை யறிந்தும், பக்தி நிலைகளைத் தெரிந்தும், வழிபடும் முறைகளையும் அனுஷ்டிக்கும் துறைகளையும் உணர்ந்தும், பல பெரியோர்களையும் அவர்களைச் சார்ந்த நல்லோர்களையும்

சேவித்துக் கொண்டும், பல உத்தம யோகிகளின் ஆசிரமங்களைத் தரிசித்துக் கொண்டும், பல ஆத்ம ஞானிகளின் அற்புதக் காட்சி கிடைக்கப் பெற்று ஆனந்தித்துக் கொண்டும், ஆங்காங் குள்ளோர் யாத்ரீகர்களை ஆதரிக்கும் தன்மைகளைக் கண்டு வியந்து கொண்டும், ஆங்காங்கு நடைபெறும் பல வியாபாரங்களின் நிலைகளையும் முறைகளையும் மார்க்கங்களையும் நோக்கங்களையும் நுணுக்கங்களையும் பார்த்துக்கொண்டும், இறைவனுடைய திருவருட் செயலை எண்ணி எண்ணி மகிழ்ந்து கொண்டும், அடிக்கடி த்யானித்து ஆனந்த பரவசம் அடைந்து கொண்டும், இவ்வாறு ஒருவாருகத் தமது யாத்திரையைப் பூர்த்தி செய்தவர்களாய் குசும ஸ்ரேஷ்டியாரும் குசுமாம்பிகையும் தமது பந்து மித்திரர்களுடனும் உடன் வந்த பெரியோர்களுடனும் குண்டூருக் கடுத்த மங்களபுரி சேர்ந்து, அங்கே மூன்று இரவு தங்கி, ஆண்டவனை ஆராதித்து வணங்கி, அருமையான சந்தர்ப்பணைகளை நடத்தி, பின்னர் பெனுகொண்டாபுரிக்கு வந்து சேர்ந்தனர்.

அவர்கள் வருவதையறிந்த மந்திரி ப்ரதானிகளும் நகர வாசிகளும் யாவரும் மங்கள வாத்யங்களுடன் எதிர்கொள்ள, நகரெங்கணும் ஒரே விழாக் கோலமாக சர்வாலங்காரங்களுடன் பொலிய, நகருட்புகுந்து, ஆலயம் சேர்ந்து, எம்பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் புரிந்து வணங்கி, அரண்மனை சென்று, அங்கே பூஜாக்ரஹத்திலுள்ள பெருமானை ஆராதித்து வணங்கி, ஓர் சுபதினத்தில் தீர்த்த பூஜையைச் சிறப்புற நடாத்தி, யாவர்க்கும் அன்னமிட்டு, யாத்திரையைப் பூர்த்தி செய்து, "இனியாவது இறைவன் திருவருளால் மகப்பேறு கிடைத்தல் வேண்டும்" என்று எண்ணியவர்களாகத் தமது திரு மாளிகையிலே யிருந்துகொண்டு எப்போதும்போல் ராஜ்ய காரியங்களையும் வியாபாரத்தையும் கவனிக்கலாயினர்.

ஸ்ரீ வாசவீ விஜயம்.

இரண்டாம் அத்தியாயம்.

உலகம். யாவும் படைத்தருள் தெய்வம்
உயிரி னுக்குயி ராகிய தெய்வம்
இலகு பேரொளி யாயொளிர் தெய்வம்
எங்கு மாகி நிறைந்துறை தெய்வம்
அலகி லாக்கலை யீந்தருள் தெய்வம்
அறிவி னுக்கறி வாய்மிளிர் தெய்வம்
குலமு முதும்வ ணங்கிடு தெய்வம்
கோதிலா வருள் நல்கிடு தெய்வம்

குற்றம் யாவுமன் னித்தருள் தெய்வம்
குறைவி லின்பம் வழங்கிடு தெய்வம்
உற்ற துன்பம் ஒழித்தருள் தெய்வம்
உத்த மர்கள் வழுத்திடு தெய்வம்
நற்ற வம்புரி வோர்நவில் தெய்வம்
நலிவ கற்றிப் பொலிவருள் தெய்வம்
சொற்ற மிழ்க்கு மகிழ்ந்தருள் தெய்வம்
ஜோதி யின்பம் அளித்தருள் தெய்வம்

[வேறு.]

வாசவியென் றேபுவியில் வந்தருளுந் தெய்வம்
வாழ்த்துமன்பர்க் கேவரங்கள் தந்தருளுந்
[தெய்வம்
தேசுநிறை மெய்யறிவின் சீர்த்திதருந் தெய்வம்
செல்வங்கல்வி ஞானமருள் எங்கள்குல தெய்வம்

மாசிலாவிண் வாயுவங்கி நீருமான தெய்வம்
மண்ணுலகாய்ப் பல்பொருளாய் மன்னுபெருந்
[தெய்வம்
நேசமுட னேயடியார் முன்புவருந் தெய்வம்
நித்யசுத்த சக்தியெனுந் தெய்வமதே தெய்வம்.

இரண்டாம் அத்தியாயம்.

[முதற் பகுதி]

*

தத்துவமெல் லாங்கடந்து தானுகி நின்றவருட்
சித்துருவைச் சிந்தையினிற் சேர்.

ஓம்

ஸ்ரீ வாசவீ விஜயம்.

இரண்டாம் அத்தியாயம்.

[முதற் பகுதி.]

ஸ்ரீ பரமாத்மனின் திருவருட் நுணையால் மாவேள்வி புரிதலும் மகப்பேறு பெறுதலும்.

ஸ்ரீதரன் பரமன் பிரமனிந் திரனுந் திருவுமை வாணியுஞ் சசியும்
வேதமும் பிறவுஞ் சக்தியே யன்றி வேறென விளம்புதற் காமோ ?
மாதவம் பயின்று மேம்படு முனிவோர் வணங்கிட வைசியர் வழுத்த
ஆதரங் கொடுதண் ணருள்பொழிந் திடுமவ் வம்பிகை மலர்ப்பதம்
பணிவாம்.

ஸ்ரீ பரமாத்மாவின் திருவருளையே இரவும் பகலும் சிந்தித்த வண்ணமாய் வாழ்க்கையை நடாத்திக்கொண்டு வருங்காலையில், ஓர் நாள் குசும ஸ்ரேஷ்டியாரும் குசுமாம்பிகையும் வார்த்தை யாடிக்கொண்டிருக்கையில், குசுமாம்பிகை தமது கணவரை நோக்கி, " என தாருயிர்க் காதல ! நாம் எத்தனையோ நாட்களாய் புத்ரப்பேற்றைக் கோரி வருந்துகின்றோம்; ஆயினும் இதுகாறும் நமக்கு அப்பேறு சித்திக்கவில்லையே ! அதற்கு வேறு எதாவது வழி இருக்கிறதா ? என்பதைத் தாங்கள் எனக்குக் கூறியருள வேண்டும் " எனக் குறையிரந்து கேட்டுக்கொண்டனர்.

மகப்பேறுகுறித்து மறுபடியும் யோசித்தல்

அது கேட்ட குசும ஸ்ரேஷ்டியார், "எனதன்புக் குகந்த நாயகீ! நாம் இதற்காக எத்தனையோ வழிகளையெல்லாம் அனுஷ்டித்தோம். யான் பால்யமா யிருக்கையில் ஸகால உபநயனம் செய்து கொண்டு, குருகுல வாசம் செய்துவிட்டு, பிறகு ஸமாவர்த்தனம் எனும் விரதம் அனுஷ்டித்து, காசி முதலான க்ஷேத்ரங்களுக்கு யாத்ரை செய்துள்ளேனுயினும், உனது அபீஷ்டப்படி இப்பொழுதும் ஒருமுறை யாத்ரைசெய்ய எண்ணிச் செய்து முடித்தோம். இறைவன் திருவுளம் இன்னும் நம்பால் இரங்கவில்லைபோலும்! நீ ஒன்றுக்கும் கவலையுற வேண்டாம்; எல்லாம்வல்ல இறைவன் நம்மை எவ்வகையினும் காப்பானேயன்றிக் கைவிடமாட்டான். வேண்டுவார் வேண்டியாங் கருளும் விமலனன்றே அவன்? அவன் திருவருள்புரியும்வரையில் சற்று மனம் பொறுத்திருத்தலே நன்று. இம் மகப்பேறடைவதற்கு வேறு ஏதேனும் மார்க்க மிருப்பினும், நாளை பெரியோர்களைக் கேட்டறிந்து அதன் பின்னர் யாவும் யோசிப்போம்" என்றனர்.

ஆன்றோருடன்கலந் தாலோசித்தல்

அம்மறுதினத்தில் குசும ஸ்ரேஷ்டியார், எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அறவோர்களையும், குணமென்னுங் குன்றேறி நிற்கும் கோதிலார்களையும், வரனென்னும் வைப்புக்கேசர் வித்தாகி உரனென்னுந் தோட்டியான் மெய் வாய் கண் மூக்கு செவி யெனு மோரைந்துங் காக்க வல்ல உத்தமர்களையும், உலகத்தே மறைமொழி காட்டும் மாட்சிமை மிக்க நிறைமொழி மாந்தரையும், இருமை வகைதெரிந் தீண்டறம்பூண்ட பெருமை பிறங்கும் பெரியோர்களையும், செயற்கருஞ் செயல்களைச் செய்து முடிக்குந் திறல்மிகு சீரியர்களையும், புலனைந்த வித்துப் பொய் தீரொழுக்க நெறி நின்று நீடு வாழும் நேர்மையாளரையும், வாகார் கலைபல வளமுற வோதி வாலறிவன் முள் வாழ்த்தி வணங்கும் வண்கவி வாணர்களையும், வேத வேதாங்கங்களில் வல்ல விற்பன்னர்களையும், வைதீக ஆசாரங்கள் மிகுந்த ஆன்றவர்களையும், உய்வழியோர்ந்து செய்வன செய்யுந் தெருளுடையோரையும் தமது சபைக்கு எழுந்தருளச்செய்து, மிகுந்த பேரன்போடும் உபசரித்து, "கலியும் நிலையும் வாய்மையும் தூய்மையும் வண்மையும் தண்மையும் நீதியும் நெறியும் அன்பும் ஆர்வமும் பொறையும் புகழும் பக்தியும்

பணிவும் தயவும் த்யாகமும் அருளும் தெருளும் ஆண்மையும் கேண்மையும் மிக்க ஆன்றோர்களாக விளங்கும் நீவிர் எமக்குப் புத்ரப்பேறு சித்திக்கும்படியான சிறந்த வழியொன்றைத் திருவாய்மலர்ந்தருளி, அடியேங்களுடைய மனக் கவலையை மாற்றி யருளவேண்டும்" எனப் பலவாறுக ப்ரார்த்தித்தனர்.

இவற்றைச் செவியுற்ற வரைவில்சீர்மிகு வைகியப் பெரியோர்கள் ஒருபாயத்தினை உரைப்பாராயினர். "அன்புமிகுந்த அருங்குணசீல!

"தாயொக்கு மன்பிற் றவமொக்கு நலம்ப யப்பின்
சேயொக்கு முன்னின்றெருரு செல்கதி யுய்க்கு நீரால்
நோயொக்கு மென்னின் மருந்தொக்கு நுணங்கு கேள்வி
ஆயப்பு குங்கா லறிவொக்கு மெவர்க்கு மன்னன்"

* * * *

[வேறு.]

"வயிரவாள் பூணணி மடங்கன் மொய்ம்பினன்
உயிரெலாந் தன்னுயி ரொப்ப வோம்பலாற்
செயிரிலா வுலகினிற் சென்று நின்றுவாழ்
உயிரெலா முறைவதோ ருயிரு மாயினன்"

* * * *

"எய்யென வெழுபகை யெங்கு மின்மையான்
மொய்பொரு தினவுறு முழுவுத் தோளினன்
வய்யக முழுவதும் வறிஞ ரெம்புமோர்
செய்யெனக் காத்தினி தரசு செய்கின்றன்" எனக்

கம்ப நாடரால் புகழ்ந்து கூறப்பெற்ற தசரதச் சக்ரவர்த்தியானவர் கோசலநாட்டைக் கோதிலா தாண்டுவருங் காலத்தில், மகவிலாக் குறையினால் மனமிக வருந்தி, 'வெகுகாலமாக நான் இவ்வாறு கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்றேனே! இதற்கு ஏதாவது ஒரு பரிகாரம் கிடைக்காதா?' என வசிஷ்டர் முதலான உத்தமர்களையும், சுமந்திரர் முதலான மந்த்ரிமார்களையும்,

தயரதன் செயலினைச் சான்றோ ருரைத்தல்

கேட்டுக்கொண்டு, அவர்கள் சொற்படி 'புத்ர காமேஷ்டி' என்று சொல்லும் யாகத்தைச் செய்து நிவர்த்தித்துக்கொண்டனர். அப் போது தோன்றியவர்களன்றே ஸ்ரீராம லக்ஷ்மண பரத சத்ருக்னர் களாவர்? ஆதலால் நீரும் யாதொரு ஆலோசனையுமின்றி அம்மகா வேள்வியினை மாண்புட னியற்றி மகப்பே றடைந்து மகிதலும் போற் றும் மகிபனுக்கிவைத்து மன மகிழ்வுறுமின்!" என வெகு பிரியத் துடனும் கூறி யருளினர்.

அதுகேட்ட அறநெறியாளராகிய குசும ஸ்ரேஷ்டியார் மிக்க மன மகிழ்ச்சியும் முக மலர்ச்சியும் உற்றவராகி, அப் பெரியார்களை மீண்டும் வணங்கி, "நீராக் குறையைத் தீர்த்தருள எண்ணிய தெய்வங்களை யொத்த தாங்களே அவ் வேள்வியைத் தொடங்கத் தக்க சர்வ அங்கங்களும் பொருந்திய நாள் ஓரை முதலியன யாவை என்பதையும், அவ் வேள்வி யாற்றற்குத் தேவையான பொருள்கள் எவ்வெவை என்பதையும் கூறி யருளுவதன்றி, அடியேன்பேரில் தயவுகூர்ந்து தாங்களே உடனிருந்து அவ் வேள்வியைச் செவ்வனே நடாத்திவைத்து, முக்ய லட்சியமாகிய புத்ரச் செல்வத்தைத் தமியேன் பெற்றுய்யுமாறு கிருபை பாலிக்கவேண்டும்; தாங்கள் இவ்விஷயங் களை யெடுத்துக் கூறுகையில் என்னையுமறியாமல் எனக்கு ஓர் ஆனந்தந் தோன்றுகிறது. ஆதலால் 'இப்போதே எங்கள் குறை தீர்ந்துவிட்டது' என்று நிச்சயமாய்க்கூறுவேன். எங்கள் பவனை இன்றுடன் தொலைந் தது போலும்! ஆண்டவன் திருவருள் உமது மூலமாய் எமக்கு நன்மகவை நல்க முற்பட்டுள்ளமையால், தாங்களே இப்பேருதவி யினைப் புரிந்தருளல் வேண்டும்" என்று ப்ரார்த்தித்துக் கொண்டனர்.

அவ்வாறே அவர்களும் இசைந்தவர்களாகி, அவ் வேள்வி செயற்குரிய இடம், யாகசாலையமைக்கும் முறை, ஹோம குண்டத் தின் வடிவம், அளவு, வேதிகைகளின் அளவு, கலசங்களின் தொகை, அந்த யாகத்திற்கு வேண்டிய பண்டங்கள் யாவும் விபர மாகக் கூறி, அவ் வேள்வி சம்பந்தமாக யாக குண்டமும், வேதி கைகளும் அமைத்தற்கும், கலசஸ்தாபனம் ஹோமாக்னிப்ரதிஷ்டை முதலிய பல அங்கங்களும் தொடங்குதற்கும், பூர்ணாஹுதி முடித்தற் கும் உரிய வாரம், திதி, நட்சத்ரம், யோகம், கரணம் ஆதிய சகல அம் சங்களும் நிறைந்த நாளும் ஓரையும் நன்காய்ந்து நவின்றருளினர்.

அவ் வண்ணமே யாவும் அமைத்து, யாவத் திரவியங்களையும் சேகரித்து வைத்துக்கொண்டு, அவர்கள் கூறிய சுதினத்திலே, பஞ்ச பஞ்ச உஷத் காலத்தில் குசும ஸ்ரேஷ்டியாரும் குசுமாம்பிகையும் நீராடி மடியுடுத்து நியமம் முடித்து, யாகசாலே சேர்ந்து, ஆசாரசீலர்களாயும், வேத வித்துக்களாயும், வேத பாரங்கதர்களாயும், வேத வேதாங்கங்களில் வல்லுநராயும், வேதாந்த வித்தகர்களாயும், சித்தாந்த சிகாமணிகளாயும், மகா தபஸ்விகளாயும், பரமோத் கிருஷ்டர்களாயும் விளங்கும் பெரியார்களே, ஆசாரியர்களாகவும், உபதிருஷ்டாக்களாகவும், ஹோதாக்களாகவும், ருத்விக்குகளாகவும், சந்தான கர்த்தர்களாகவும் ஏற்படுத்திக் கொண்டு, நற்சுப ஓரையில் கிழக்கு முகமா யமர்ந்து யாக கிருத்தியங்களே ஆரம்பிக்கலாயினர்.

விழுமியோர் சொற்படி வேள்வியைத் தொடங்கல்

ஆரம்பித்து வேதாகம விதிப்படி, மிக்க பக்தி ஸ்ரத்தையுடன், வெகு விமரிசையாக யாகத்தை நடாத்திக்கொண்டு வருங்காலையில், வேத மந்திரங்களைச் சொல்லி, சர்வாலங்காரங்களுடன் ஸ்தாபித்துப் பூஜிக்கப்படுகிற கலசங்களிலும், நெய்யை அள்ளி யாகத் துதிக்கையால் சொரிவதுபோல மந்த்ர புரஸ்ஸரமாகச் சொரிவதால் வளர்கின்ற யாகாக்னியிலும், திருமால் ப்ரம்ம ருத்ரேந்த்ராதி தேவர்களுடைய அம்சங்களும், அஷ்ட திக்பாலகர் சப்த ரிஷிகள் நவக் கோள்கள் ஸப்த மாதர்கள் ஆதியோரின் அம்சங்களும் பொருந்திப் பெலிந்த பொற்பினைப் புகல யாவராலியலும்? அன்றியும் ஆகாய வீதியில் அமரர் குழாங்கள் யாவரும், யக்ஷர், கின்னரர், கிம்புருஷர், கருடர், காந்தர்வர், சித்தர் வித்யாதரர், ஆகாச போக பூமியர், அந்தரர், விஞ்சையர், பூதர் முதலான கணங்களின் கூட்டங்களும், காசிப பரத்வாஜ கண்ணுவ வசிஷ்ட கௌதம வால்மீக அகஸ்திய வேதவ்யாஸ சுக சௌனகாதி மகரிஷிகளும், ஆண்டு திங்கள் வாரம் திதி நட்சத்திரம் முதலான வற்றின் அதி தேவதைகளும் யாவரும் குழுமி, மனமகிழ்ச்சியோடும் பூஜைகளையும் ஆகுதிகளையும் கவனித்துக் கொண்டும், வேள்வியின் விபவத்தைக் கண்குளிரக்கண்டு ஆனந்தித்துக்கொண்டும், " எல்லா

புத்திரகாமேஷ்டியைப் புரியும் நேர்த்தி

அம்சங்களும் பொருந்திய இக்குசும ஸ்ரேஷ்டியார் குசுமாம்பிகை யாகிய இவர்களின் மனோபீஷ்டம் நிறைவேறக்கடவது! இவர்களின் தீராக் குறையாகிய மகவிலாக் குறைதீர்ந்து, புத்ர ப்ராப்தியடைந்து பொலிவுறக்கடவது!!" என்று பலவாறுக வாழ்த்திக்கொண்டும், மங்களாசீர் வசனங்களைக் கூறிக்கொண்டும் இருந்தார்கள்.

(ஆகவனீயம் காருகபத்யம் தக்ஷிணாக்னி என்னும் மூவகை வேள்விகட்கும்) ஸப்தபாக யக்ஞும் ஸப்த ஸோம யக்ஞும் ஸப்த ஹவிர் யக்ஞும் என்னும் இருபத்தொரு வித யக்ஞங்கட்கும் கர்த்தா வாய், "வேள்வியில் பாவனை செய்யப்பட்ட தேவர் உங்களுக்கு (நீவிர்) விரும்பிய போகங்களை யெல்லாந் தருவர்" என்றும், "எங்கும் நிறைந்த ப்ரம்மம் எப்போதும் வேள்வியில் நிலைபெற்றது" என்றும், "நான் ஹோமம்; நான் யாகம்; நான் 'ஸ்வதா' என்ற வாழ்த்துரை; நான் மருந்து; நான் மந்த்ரம்; நான் நெய்; நான் தீ; நான் அக்னி;" என்றும், "வாக்குகளில் நான் 'ஓம்' என்ற ஓரெழுத்து" என்றும், "நானே வேள்விகளில் எல்லாம் உணவு உண்பவன்; நானே தலைவன்;" என்றும் கீதையிலும், "அக்னியே ப்ரம்மம்" என்று வேதத்திலும் கூறியுள்ளவராய், பஞ்ச பூத வடிவினராய், சர்வாத்ம ஸ்வரூபியாய், ஞான உருவாளராய், அருட்சக்தி சகிதமாய் அனுக்ரஹம் புரியும் ஆதி மூர்த்தியாய், அறிவுச் சுடராய், க்ருபா சமுத்திரமாய் விளங்கும் பரம் பொருளாகிய சர்வேஸ்வரன் அந்த யாகாக்னியின் கண்ணே ஆவிர்ப்பவித்து அரூபியாய் இலங்கி, "அன்பே வடிவாய் அறநெறி யோம்பும் இக்குசும ஸ்ரேஷ்டியாருக்கு சர்வ மங்களங்களும் சித்திக்குமாறு ஆசீர்வதித்துக்கொண்டிருந்தமையினும், ஏழு நாவுடைய அக்னி பகவான் மகிழ்மீதூர்ந்து மிக வேகங்கிக் கொழுந்துவிட்டெரிய, அவ்வோம தூமமானது வானுலகை நோக்கிச் சென்று இமையா நாட்டத்தவர்களையும் இமைக்கச் செய்கையினாலும், ஆங்காங்குள்ள வைகிய கூட்டங்களும் செறிந்து வந்து குழுமி, குசும ஸ்ரேஷ்டியாரின் யாக விசேஷத்தையும் அவருடைய ஒப்பிலாக் கீர்த்தியையும், பற்றி எங்கு கண்டாலும் உவகையோடும் உரையாடிக்கொண்டிருந்தமையினாலும் மண்ணும் விண்ணும் யாவும் சேர்ந்து இவ்வேள்வி வைபவத்திற் கலந்து ஆனந்தந் தினைத்த வண்ணமாய்ப் பொலிவுறலாயின.

ஜனங்களடைந்த சந்துஷ்டி

இவ்வாறு நம் குசும ஸ்ரேஷ்டியா ரியற்றும் புத்ரகாமேஷ்டிட் யாகத்தைக் காணவேண்டி சகல தேசங் களினின்றும் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், பாவலர், நாவலர், கவிஞர், கணித விற்பன்னர், சிற்பியர், ஓவியர், இசைவலர், யாழ்வலர், புலவர், பண்டிதர், வித்வத்கோஷ்டிகள், பகவத் பக்தர்கள், பாகவத சிகாமணிகள், வேத வேதாந்தியர், ஆகம சித்தாந்தியர், பௌராணிகர்கள், சமய சாத்திரப் பிரசங்கிகள், தார்க்கீகர்கள், தாவர சாஸ்த்ரிகள், வான சாஸ்த்ரிகள், பூகோள சாஸ்த்ரிகள், தத் துவ சாஸ்த்ரிகள், பௌதிக சாஸ்த்ரிகள், சரித்திர நிபுணர்கள், ஆராய்ச்சியாளர்கள், வாக் வன்மையாளர்கள், ப்ரபல எழுத்தாளர் கள், ஆயுர் வேதியர், ஜோதிஷ சாஸ்த்ரிகள், பரத நாட்டியக்காரர்கள், வ்யாயாமம் வல்லுநர், பல பாஷா ஞான பண்டிதர்கள், ஆத்மார்த்த பூஜிதர்கள், யோகாப்யாசிகள், ஆத்ம ஞானிகள் முதலியோரும், குசும ஸ்ரேஷ்டியாருக்கு உற்றாரும் உறவினரும் நட்பினரும் அன்பி னரும் ஆர்வமிக்காரும் ப்ரேமை மிக்காரும் கன தனவான்களும் செல்வாக்காளரும் கொடையாளிகளும் சாந்த குண சீலரும் தயை மிகுந்தோரும் பொது நலம் பேணும் புனிதரும் சேவையிற் சிறந்து திகழ்வோரும் ஆகிய யாவரும் அந்த யாக சாலையைச் சுற்றிலும் நெருங்கி, அவரவர்கட்குத் தக்கவாறு அமைக்கப்பட்டிருக்கும் ஆச னங்களில் அமர்ந்து, யாகசாலையின் அற்புத அழகைப் பார்த்துக் கொண்டும், அலங்கரித்துள்ள விசித்ர விநோதங்களையும் ஓவியக் கவின் களையும் கண்ணுற்றுக்கொண்டும், ஆங்கு எழும் வேத வொலிகளையும், *உதாத்த அனுதாத்த சொரிதங்களுடன் கூறும் மந்த்ர சப்தங்களையும் செவிமடுத்துக்கொண்டும், வேத சாகைகளை விதிவழியா யத்யயனம் செய்தவர்கள் யாவரும் அந்தந்த கூட்டங்களுடன் கலந்துகொண்டு அந்தந்த சாகைகளின் வாக்யங்களை ஒரே சப்தமாகச் சொல்லிக் கொண்டும், †ஜடா, பதம், கன மெனும் மும் முறைகளில் தக்கவாறு

---

* வேதங்களி லொன்றிய சிட்சைக் கியைந்த உதாத்தம், அனுதாத்தம், ஸ்வரிதம், பிரசய மென்னும் சதுர்வித ஸ்வரகரணங்கள். உதாத்தம் - எடுத்தல், அனுதாத்தம் - படுத் தல், ஸ்வரிதம் - நலிதல், ப்ரசயம் - விலங்கல், இவற்றை முறையே தலையிசை, மிடற் றிசை, நெஞ்சிசை, மூக்கிசை என்னும் கூறுவர்.

† ஜடா, பதம், கன மெனல் - (வேதத்தின்) இசை விகற்பங்கள்.

உச்சரித்துக்கொண்டும், யாகசாலையில் அறுசுவையுடன் தயாரித்து அன்புடன் பரிமாறும் பக்ஷண பாயச சகிதமான அமிர்தம் போன்ற ஆகார வகைகளையும், அதியற்புதமாய்த் தயாரிக்கும் பல வகைத்தான சிற்றுணுக்கங்களையும் உரிய வேளைகளில் உண்டு களித்துக்கொண்டும், ஆங்காங்குள்ள அழகிய மாளிகைகளிலும் மண்டபங்களிலும் மேல் மாடிகளிலும் அமைத்துள்ள ஆசனங்களின் மீதும், ரத்னக் கம்பளங் களின் மீதும் அமர்ந்துகொண்டும், ஏலம் தக்கோலம் இலவங்கம் ஜாதிக்காய் கர்ப்பூரம் ஆகிய பஞ்ச வாசம் கலந்த தாம்பூலந் தரித்துக் கொண்டும், களப கஸ்தூரிகளையும், சந்தனம் அகில் தகரம் குங்கு மப்பூ கோட்டம் ஆகிய ஐவகை விரையையும் அணிந்துகொண்டும், மயிற்றூவி இலவின்பஞ்சு செம்பஞ்சு வெண்பஞ்சு அன்னத்தூவி இவற்றுல் ஆகிய பஞ்சணைகளின்மீது சயனித்துக்கொண்டும், ஏனை யோர்களின் வன்மைகளைக் கண்டு உவந்துகொண்டும், தமது திறன் களை ஏனையோர் மகிழக் காண்பித்துக்கொண்டும், பெனுகொண்டா புரியின் பெருமைகளையும் ஆலயங்களின் அமைப்புகளையும் செப்பொணு திலகும் பல சீர்த்திகளையும் கண்டு களித்துக்கொண்டும், பக்தியின் பாலராய்ப் பாமாத்மாவைப் பாடிப் பரவி மகிழ்ந்துகொண்டும், பர. மானந்த பரிதர்களாகி குசும ஸ்ரேஷ்டியாரையும் குசுமாம்பிகையை யும் வாயார வாழ்த்திப் புகழ்ந்துகொண்டும் இருந்தனர்.

இத்யாதி வைபவங்களுடன் மாபெரும் மக வேள்வியானது நடந்துவருங்காலையில் பூர்ணகுதி நாள்வர, அத்தினத்தில் பரம பாவ னர்களாகிய குசும ஸ்ரேஷ்டியாரும் குசுமாம்பிகையும் நீராடி நியமம் முடித்து, ஆசனத்தமர்ந்து வேத விதிப்படி யாக கிருத்தியங்களைப் புரிந்து, நல்ல சுப ஓரையில் பூர்ணகுதி பூர்த்தி செய்தனர்.

பரம்பொரு ளருளாற் பாயசம் பெறுதல்.

அச்சமயத்தில் ஹோமாக்னியானது யாக குண்டத்திலிருந்து ஆக்ய வீதியைத் தழுவச் செல்வதுபோல மிக வுயர்ந்து ஜ்வாலையை விகிரிம் பித்துக் கொண்டு கொழுந்து விட்டெரிந்தது. அந்த அக்னியின் நடுவில் பளிச்சென்று மின்ன லொளிபோன்ற ஓர் திவ்ய வொளி தோன்றவும், உடனே ஒரு மஹா புருஷர் மிக்க தேஜஸுடன், பாயசம் நிறைந்த ஒரு பொற்பாத்திரத்தைத்

தமது திருக் கரங்களில் தாங்கியவராகத் தோன்றி, அப் பாத்திரத் தைக் குசும ஸ்ரேஷ்டியாரிடம் தந்து, " நீவிர் இப் பாயசத்தை உமது தர்ம பத்னியாரிடமீந்து அருந்தச் செய்யின் மகப்பேறு சித்திக்கும் " எனக் கூறி மறைந்தனர். ஆகாய வீதியிலே வானதுந்துபி கண கண வென்று முழங்கியது. அமரர்கள் யாவரும் புஷ்பமாரி பொழிந்தனர்.

பாயச பாத்ரத்தை வாங்கிய குசும ஸ்ரேஷ்டியார் கூறுரைக் குதூகலமடைந்த, பரமானந்தக் கடலில் மூழ்கியவராகி மகிழ்ந்து, தமது தர்மபத்னியாராகிய குசுமாம்பிகையிடம் அப்பாய சாந்நத்தைத் தந்து புசிக்கச்செய்தனர்.

மண்ணவரும் விண்ணவரும் மகிழ்வுடன் வாழ்த்தல்.

சகல தேவர்களும் தங்கள் தங்கள் ஹவிசுகளை ஏற்றுத் திருப்தி யடைந்து, அருள் நிறைந்த ஆசிகளாகிய மொழி மழையும், தேவ பாரிஜாதம் முதலாய மலர்மழையும் பொழிந்து ஆனந்தித்து விண் வழி யேக, பூவுலகவாசிகள் அனைவரும் மனமிக மகிழ்ந்து, அன்பு கனிந்த ஆசீர்வாதமாகிய அருஞ்சொல் மழையும், அட்சதை மழையும் வருஷிக்க,

பெண்மக்கள் பலர் பேசிக்கொள்ளல்.

அன்பும் அழகும் கல்வியும் காருண்யமும் மிகுந்த மகளிர் யாவரும் சிலர் பலராக ஆங்காங்கு குழுமியும், தத்தமக்குள்ளே பலவாறுகப்பேசிக்கொள்ள, " விண்ணும் மண்ணும் மிகுந்து நிறைந்து செறிந்து சிறந்து நயந்து வியந்து உவந்து மிளிர்ந்து ஒளிர்ந்து குளிர்ந்து பரிந்து மகிழ்ந்து புகழ்ந்து மொழிந்து வாழ்த்திடுமாறு, இத்தகைய அற்புத வைபவத்துடனே இப் பெரு வேள்வியைப் புரிந்த கோமானுகிய குசும ஸ்ரேஷ்டியார் முன் ஜென் மங்களில் செய்திருந்த தவப்பயன்தான் என்னே! " என்று ஒருசில நங்கையரும்,

" இப்படிப்பட்ட அரும் புதல்வனைப் பெற் றெடுப்பதற்காக அவரது அருமைத் தந்தையார் ஆற்றிய அருந் தவப்பயனே அனைத் தினுஞ் சிறந்தது " எனச் சில ஆணங்குகளும்,

" இச் செம்மலை ஈன்றெடுத்த சீரன்னையாரின் சீரிய தவமே சிறந்ததாம் " எனச் சில சேயிழையாரும்,

" இவ்வுத்தமரைப் பயந்தார் தவச்சிறப் பொருபுறம் நிற்க, அவரை மணத்தற்குக் குசுமாம்பிகை செய்திருந்த கோதிலாத் தவமே கூரெணுச் சிறப்புடைத்து " எனச் சில குயிலனையாரும்,

" இவ் வித்தகரும் இவர்தம் தேவியாராகிய உத்தமியும் பிறத் தற்கும் இருத்தற்கும் இந்நாடு செய்தவமே நற்றவம் " எனச் சில நாரீமணிகளும்,

" இத்தரும குண தம்பதிகள் இல்வாழ்க்கை நடாத்தவும் நல் வேள்வி புரியவும் இந் நகர் புரிதவமே நவிலரும் தகைமைத்து " எனச் சில நகைமுக மாதரும்,

" இத்தகைய பெருஞ் சிறப்புடனே நடைபெறும் வேள்வி யைக் கண்ணுறுமாறு நம்மனோரியற்றிய நற்றவமொன்றே ஞாலந் தனிலே சாலச்சிறந்தது " எனச்சில வனிதை நல்லாருமாக வார்த்தை யாடிக் கொள்ள,

யாக பூர்த்தி.

சராசரங்கள் யாவும் ஆசி கூறுவதுபோல இயற்கை யழகினை யள்ளிப் பொழிந்து எழிலுடன் மிளிர்ந்து மகிழ்ச்சி காண்பிக்க, நாவாயிரம் படைத்த நாகராஜனும் நவில முடியாதென்னும்படி, அத்தகைய வைபவங் களுடன் யாகத்தைப் பூர்த்தி செய்து, புருவ மத்ய ஸ்தானத்தில் யாக ரக்ஷையைத் தரித்துக்கொண்டு,

" வேள்வியின் மிச்சத்தை யுண்ணும் நல்லோர் எல்லாப் பாபங்களினின்றும் விடுபடுகிறார்கள் " என்று கீதையில் பகவான் கூறியவண்ணம் அவ் வேள்வியின் சேஷத்தை யுண்டு, " இனி நமக் கும் நமது பெனுகொண்டா நகர்க்கும் பெரும் புண்யம் கிடைக்கப் போகிறது; தீராக் குறையும் தீர்ந்துவிடப்போகிறது; யாவும் அவ னருள் " என்று மனமகிழ்ச்சி யுற்றவர்களாய் குசும ஸ்ரேஷ்டி யாரும் குசுமாம்பிகையும் ஞான வொளி வீசும் கதிரும் மதியும் போலத் தமது திரு மாளிகையிலே திகழ்ந்து வந்தார்கள்.

ஆண்டவன் கிருபையால் அருட்கருதரித்தல்.

குசுமாம்பிகை பாயசாந்நம் அருந்தியதுமே இறைவன் திரு வருளால் கருவுற்பவ மாகியதால், அழகிய தனங்க ளிரண்டும் அமுதத்தை நிரப்பிய செப் புகளே யொப்பனவாக விளங்கவும், வளரு கின்ற தன பாரங்களைச் சுமந்து (உண்டோ ? இலையோ ? என ஐயுறுமாறு) இதுவரை தோன்றுதிருந்த சுருங்கிய இடையும் கட்புலனுக்குத் தோன்றவும்,

தூரதேசத்திற்குப் போயிருந்த கப்பல் துறைமுகத்திற்கு வந்து சேர்ந்ததென்று சொல்லக் கேட்ட வர்த்தகனைப் போலவும், கூடிப் பிரிந்த நங்கையின் குரலோசை கேட்ட நாயகனைப் போலவும், தாகங் கொண்டு தவிக்கும் காலத்தில் சமீபத்தே தண்ணீ ருண் டென்று சொல்லக் கேட்ட யாத்ரீகனைப் போலவும் குசும தம்பதி கள் இருவரும் மல்கிய உவகையால் மனமிகக் குளிர்ந்து உடல் பூரித்து அளவிடப்படாத ஆனந்தமடைந்த வராயினர்.

கர்ப்பக்குறிகள் தோன்றலும், பல்வித சடங்குகள் செய்தலும்.

குசுமாம்பிகைக்குக் கருவுற்பவ மானதிலிருந்து, முதல் மாதத் தில் உடல் தளர்ந்தும், இரண்டாம் மாதத்தில் இடை நொந்தும், பச்சை நரம் போடியும், பால் முகம் சுரந்தும், ஆகார வெறுப்பேற்பட்டும், மூன்றும் மாதம் மதி முகம் வெளுத்தும், முலை முகங் கறுத்தும், நான்காம் மாதம் மசக்கை யுண்டாயும் (இவ்வாறான) கர்ப்பக்குறிகள் தோன்ற லாயின. அந்த நான்காம் மாதத்தில் *புஂஸவனம் என்னும் கிரியை சர்வ பந்து மித்திரர்களும் சூழ செவ்வனே நடந்தேறியது. அம் மையாருக்கு ஐந்தாம் மாதத்தில், அவருடைய தமையனார் மிகச் சிறந்த அநேக திவ்ய உணவுகளையும் (பலகார பக்ஷணங்களையும்) கொண்டுவந்து தர உண்டு களித்தனர். ஆறும் மாதம் அடிவயிறு கனத்தது. ஏழாம் மாதம் இச்சை யுள்ளன புசிக்க எண்ணந் தோன்றியது. காணப்பட்ட எப்பொருளும் (எளியனவாயிருப் பினும்) அரியன வாய்த் தோன்றலால் விருப்பமுற, அவ்வெளிய

* புஂஸவனம் — வாமதேவ மந்திரத்தினால் ஆயிரந் தரமாவது நூற்றெட்டுத் தரமாவது ஹோமம் செய்து, ஆலந்தளிர் பால் உளுந்து இவற்றைக் கொண்டு ஆண் மகவு பிறக் கும் வண்ணம் கருப்பவதியின் நாசியில் மருந்து பிழிதலென்பர்.

பொருள்களையும், பல சிறந்த பொருள்களையும், தேவாமிர்தத்தையும் சந்த்ர மண்டல வழுதையு மனைய மிகவரிய பொருள்கள் பலவற்றை யும் நாயகனுகிய குசும ஸ்ரேஷ்டியாரால் வரவழைத்துத் தரப் பெற்றனர். எட்டாம் மாதத்தில் †சீமந்தம் ‡விஷ்ணுபலி ஆதிய கிரியைகள் யாவும் சீர்சிறந்த முறையில் செவ்வனே நடந்தேறின. அம் மாதத்தில் வயிற்றிலுள்ள சிசு முட்டிபோடலால் சிறிது சரீரத் தளர்ச்சி யுறவும், இது போன்ற பல குறிகள் காணவும், பல சுப சடங்குகள் வெகு விமரிசையாக நித்ய கல்யாணமாக நடந்துகொண் டிருக்கவும், அந்தக் குசும ஸ்ரேஷ்டியாரின் அரண்மனையும் அந்தப் புரமும் எப்போது பார்த்தாலும் மிக்க ரமணீயமாக விளங்கிக் கொண்டிருந்தன.

யோக ஞானங்களிற் சிறந்த புங்கவர்களும், வேதமுணர்ந்த வித்தகர்களும், விழுமியர்களும், வித்வத் சிகாமணிகளும் அவ்வப் போது வந்து வேதவிதிப்படி சடங்குகள் நடாத்தும் முறைமையைக் கூறியருளுவர். அந்நகரிலுள்ள ஆடவர் மகளிர் யாவரும் குசுமாம் பிகைக்குப் புத்திரப் பேறு வாய்க்கப் பெற்றதை யுன்னி அளவுகடந்த அகமகிழ்வுற்று, இறைவன் திருவருட் பெருமையை எண்ணி இதயங் குளிர்வர். அவ்வப்போது நடைபெறும் சடங்குகளில் சிறுவரும் சிறு மியரும் யாவரும் வந்து கலந்துகொண்டு ஆடல்கள் ஆடியும், பாடல் கள் பாடியும், கும்மி யடித்தும், கோலாட்டம் போட்டும், பற்பல விதங்களில் மகிழ்ச்சி யூட்டிக்கொண்டும், பலவித சித்ரான்னங்களை யும் பக்ஷண வகைகளையும் விருந்துகளையும் பலருக்குமிட்டும் தாமும் உண்டும் உவந்துகொண்டும், ஆனந்தந் திளைத்தவண்ணமா யிருப்பர். இவ்வாறு மிக்க மன மகிழ்ச்சியுடனே இருக்குங் காலையில், பத்து மாதங்களும் பண்புடன் கழிந்தன.

---

† சீமந்தம் :— வியாகிருதி அகோர மந்த்ரங்களால் நூற்றெட்டுத்தரம் ஹோமம் செய்து தருப்பை அத்தி அரக்கொம்பு பன்றிமுள் இவற்றைக் கூட்டி வித்யாங்க மந்த்ரத்தால் நெற்றி முதல் மேலேக்கி யிழுத்தலாம்.

‡ விஷ்ணுபலி :— வயிற்றிலுள்ள பிண்டம் வலிமையுறச் செய்தற்காக இருடிகேசாதி திரு நாமங்களால் விஷ்ணுவைக் காலை மாலைகளில் ஆவாகனம் செய்து, அருச்சித்து, அகோர வியாகிருதி மந்த்ரங்களால் நூற்றெட்டு ஹோமங்களும், விஷ்ணு மந்த்ரத்தால் ஆறு ஹோமங்களும் நெய்யினால் ஆறு ஹோமங்களும் செய்து முடிவில் எட்டு பிரமசாரிக்கு அன்னம் கொடுத்தலாம்.

குசுமாம்பிகையின் கனவு.

ஓர் காளிரவு குசுமாம்பிகையின் கனவிலே சாக்ஷாத் சர்வேஸ்வரி தோன்றி தரிசனம் தந்து, "சீரிய அன்பும் பக்தியும் பூண்டொளிர் தெரிவையே! நீயும் நின் கணவனும் செய்த அருந்தவப் பயனல் யாமே நின் திருவயிற்றில் ஜனிக்கின்றோம். உலகத்தில் தீமையை ஒழித்து நன்மையை நிறுத்தி (உமது) வைசிய குலப் பெருமையை அனைவர்க்கும் உணர்த்தி அருள் பாலிப்போம்" என்று கூறி மறைந்தருள, உடனே குசுமாம்பிகையார் எழுந்து நின்று இறைவியைத் துதித்து வணங்கி, கணவரிடமும் தாம் கண்ட கனவைக் குறித்துக் கூற, அவரும் மிக்க மகிழ்ச்சியுற்றவராய், பயபக்தியுடனே இறைவியை இறைஞ்சி, "'எப்போதெப்போது தர்மம் அழிந்துபோய் அதர்மம் எழுச்சி பெறுமோ, அப்போது நான் என்னைப் பிறப்பித்துக் கொள்ளுகிறேன்' என்று கீதையில் ஸ்ரீ கண்ணபிரான் கூறியருளி யிருப்பதால், துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலனார்த்தம் பரம்பொருள் அவ்வப்போது அவதரித்துத் தருமத்தை நிலைநாட்டுவது உண்மையே யாயினும், அத்தகைய திருவவதாரம் நமது குழந்தையாகக் கிடைக்கப் பெற்றமை மிகவும் ஆச்சர்யமாகும். ஆஹா! நாம் செய்த பாக்கியமே பாக்யம்" என்று உவகை மிகுந்து ஆனந்த பரவசராகி யிருந்தனர்.

அம்பிகையின் அவதாரம்.

இப்படி யிருக்கின்ற காலத்தில் ஒவ்வொரு நாளாக உல்லாசமாய்க் கழிந்து செல்லப் பன்னிரண்டு மாதங்கள் சம்பூர்ணமாக, தாரணியெங்கணும் தண்மையும் பசுமையும் தழைந்தொளி வீசவும், அனைத்துயிர்களும் ஓர் ஆனந்தம் அடையவும், சகல உயிர்களின் மனமும் சாந்திமேவிச் சலனமற்று விளங்கவும், உற்ற அந்நகரில் உறைபவர்க் கெல்லாம் உளமகிழ் வெய்தவும், தரும தேவதை தாண்டவ மாடவும், ப்ரம்ம விஷ்ணு ருத்ரேந்த்ராதி தேவர்களும், தேவகணங்களும், உமை திரு நாமகளாதி தேவ மாதர்களும், அப்ஸர ஸ்த்ரீகளும் ஆகாய வீதியில் நின்று மலர்மாரி சொரிந்து வாழ்த்தவும், தேவ துந்துமிகள் யாவும் கண கண வென்று முழங்கவும், யாதொருவித மாசும் இன்றி வானம் நிர்மலமாக விளங்கவும், தென்றல் காற்றானது மெல்லென மிக்க ரமணீயமாக அசைந்து

கொண்டு ஆனந்தக் கரவும், சமுத்திரமானது சந்தோஷத்தினுல் பொங்கி மகிழவும், வரி குளம் கிணறு முதலிய நீர் நிலைகளிலுள்ள தண்ணீரானது அசைவின்றிச் சற்று நேரம் அப்படியே தெள்ளத் தெளிந்து கண்ணுடிபோல் ஒளிதரவும், குயில் கிளி மைனு முதலிய பல பட்சி ஜாதிகளும் மிக்க அருமையான இசையுடன் பாடியும் பல நல்லுரைகளைப் பேசியும் அகமகிழ்வுறவும், குசும ஸ்ரேஷ்டியாரின் அரண்மனையிலுள்ள அனைவருடைய உள்ளமும் ஆனந்தத்தில் மூழ்கவும், தனலட்சுமி தான்ய லட்சுமி தைர்ய லட்சுமி சௌரிய லட்சுமி வித்யா லட்சுமி கீர்த்தி லட்சுமி விஜய லட்சுமி இராஜ்ய லட்சுமி எனும் அஷ்ட லட்சுமிகளும் ஆநந்த மெய்தவும், புண்யம் பொங்கவும், பாவம் மங்கவும், அருள் தங்கவும், அன்பு பெருகவும், பண்பு செறியவும், இன்பு நிறையவும்,

புவி புண்ணியமும் புகழும் பொலியவும், பரதகண்டத்தின் விழுமம் விளங்கவும், பெனுகொண்டாவின் பெருமை பிறங்கவும், வைசிய மரபின் வண்மை வளரவும், தந்தை தவத்தின் சால்பு தழைக்கவும், அன்னையாராற்றிய அருந்தவம் அணுகவும், நகரினர் நற்றவம் நல்லொளி நல்கவும், அனைவர்க்கும் புளகாங்கித முண்டாகவும்,

ஒவ்வொருவரும் "இஃதென்ன விந்தை? திடீரென மயிர்ப் புளக முண்டாகிறதே! இதற்குக் காரணம் யாதோ?" என எண்ணவும், "குசும ஸ்ரேஷ்டியாரின் தர்ம பத்னியாராகிய குசுமாம் பிகைக்குக் கர்ப்பந் தோன்றிப் பன்னிரண்டு மாதங்கள் சம்பூர்ணமாகின்றமையால், குழந்தை பிறக்கிற நற்சகுனம் போலும்!" எனச் சில பெரியோர்கள் கூறி மகிழவும், "எதேது! இக்குழந்தை தெய்வப் பிறப்புபோல் தோன்றுகின்றதே! இக்குழந்தை உதயம் செய்வதால் இந்நகருக்கே ஒரு நற்காலந் தோன்றுகின்றது" போலும்!" எனப் பல மேலோர்கள் நவின்று உவக்கவும்,

சித்திரை மாதம் சுக்லபட்சம் (வைசாக சுத்த) தசமி சுக்ர வாரம் புனர்வசு நட்சத்திரம் கூடிய சுப தினத்தில் சுப லக்னத்தில் குசுமாம்பிகையின் திரு வயிற்றினின்றும் **ஓர் ஆண் மகவும், ஓர் பெண் மகவும் உதயம் செய்தனர்.**

பெண் மகவு, பத்மம் பாசம் வீணை கிளி ஆகிய இவற்றைத் தாங்கிய நான்கு திருக் கரங்களுடனும், பச்சை நிறப் பட்டாடையுடனும், இரத்தின சோபிதமான பல ஸ்வர்ண பரணங்களுடனும், திருமுடியில் மாணிக்கக் கிரீடத்துடனும், புன்னகை பூத்துப்பொலியும் திருமுக மண்டலத்தில் கருணை ததும்பும் காட்சியுடனும், சாமுத்ரிகா நூலில் கூறப்படும் சர்வ உத்தம லட்சணங்களுடனும், கோடி சந்திரர்கள் ஏக காலத்தில் உதித்ததே போன்ற ப்ரகாசத்துடனும் எங்களும் ஒளி பெருக்கி விளங்கியதைக் கண்ட தாயும் தந்தையும், "சகல உலகங்களையும் காத்து ரக்ஷிக்க வல்ல கருணாகரியாகிய சர்வேஸ்வரியின் அவதாரமே இப்பெண் குழந்தை" யென்று நிச்சயித்தவர்களாய்,

அவதார லக்ஷணம்.

இரு கரங்களையும் சிரமேற் கூப்பிக்கொண்டு, அன்பிற் கனிந்து பக்தியாற் பரவி, "பக்தர்கட்கிரங்கிக் கருணையைப் பொழியும் பராபரீ! பிரம்மாண்ட கோடிகளையும் பிறப்பித்தருளும் பிராட்டீ! விண்ணவர் போற்றும் வித்தகீ! பாவலர் பரவும் பண்ணவீ! மூவுலகுந் தொழும் முதல்வீ! நல்லோ ருளத்தமர் நாயகீ! அன்பர்க் கருள்புரி யம்பிகா! தண்ணளி நல்குந் தயாபரீ! சதுர் மறைகள் புகழ் சாம்பவீ! ஆகம நூல் தொழும் ஆரணீ! மந்திர வடிவுகொள் மாதேவீ! சுந்தர சொரூப சுக கௌரீ! யந்திரந் தன்னி லமர்ந்திடு மன்னுயீ! பவ வினை போக்கும் பார்ப்பதீ! செல்வந் தந்தருள் ஸ்ரீதேவீ! வாக்கின் வண்மை வழங்கும் வாணீ! கலைஞானந் தரு காயத்ரீ! அருள்நிறை வாயொளிர் அபிராமீ! மண்ணவர் துதி செயும் மாகேந்த்ரீ! அடியேங்களை ஆள் அற்சச்செல்வீ! வேண்டுவார் வேண்டிய வருள் விமலாய்! பேரின்பந் தரு பெருமாட்டீ! கலிதீர்த் தருளுங் கௌமாரீ! எங்கள் இடரகலற்கே இனிதெழுந் தருளும் இறைவீ! தமியே மாற்றிய தவத்தின் பெருமை சாலச் சிறந்த தெனற்குத் தடை யொன்றுண்டோ? நினது திவ்ய தரிசனங் காணற்கு எமது நேத்திரங்களும், நின் முன்பாகக் கூப்பி வணங்குதற்கு எமதுகரங்களும், நின் எதிரிலிருந்து நினது மகிமாப்ரபாவத்தை

காட்சிகண் டுளநிறை களிப்போடு தொழுதல்.

சற்றேனும் புகழ்ந்து துதித்தற்கு எமது நாவும் என்ன பாக்யம் செய்தனவோ ? சர்வ ஜீவ தயாபரீ ! நினது பெருங் கருணைத் திறத்தினை அடியேங்கள் எமது அற்ப அறிவினுல் என்னென்று கருதி எவ்வாறு துதிப்போம் ? சர்வ லோக நாயகீ ! ஜகன் மாதா ! ஜகத் ரக்ஷகீ ! தேவ தேவீ ! மஹா தேவீ ! மஹா மாயா ! த்ரிபுர சுந்தரீ ! சக்தீ ! லக்ஷ்மீ ! ஸரஸ்வதீ ! பார்வதீ ! பகவதீ ! அந்தரீ ! நாரணீ ! பரிபூரணீ ! லோகோத் தாரணீ ! அன்ன பூரணீ ! ஞான ஸ்வரூபிணீ ! ப்ரம்ம பராயிணீ ! ஆத்மோபகாரிணீ ! எம் குலோத் தாரணீ ! " என்று பலவாருக ஸ்தோத்திரம் செய்துகொண்டும்,

" இப்புவியில் மனிதவுரு வுடன்பிறந்தேம் ;
இணையுல்பெரும் புகழும் பெற்றேம் ;
ஒப்பரிய வடிவழகு கொடுநீயும்
புநல்வியென உதிக்கப் பெற்றேம் ;
செப்பரிய திவ்வியதே சொடுநினது
சேவையுமே கிடைக்கப் பெற்றேம் ;
எப்பவழுந் தொலைத்தருளு மீஸ்வரியே !
எமதுதவ மகிமை யென்னே ! "

என்று தமது அருந்தவப் பயனை யுன்னி யுன்னி, அகமகிழ் வெய்தி ஆனந்தமடைந்து கொண்டிருக்கையில், பராசக்தி யம்மையார், குசும ஸ்ரேஷ்டியாரை நோக்கி, " நீர் எம்மைப் புத்ரியாக அடையவேண்டு மென முற் பிறப்பிலே தவ மியற்றினீராதலால், யாம் அத்தவத்திற் குவந்து இப்பிறப்பில் உமது அபீஷ்டத்தை நிறைவேற்ற வுன்னி, இப் பொழுது நுமக்குப் புத்ரியாக அவதரித்திருக்கின்றோம் " என்று திருவாய் மலர்ந்தருளித் தமது தெய்வத் திருவுருவை மறைத்தருளிப் பசுங் குழவிப் படிவங்கொண்டு, படுக்கையி லிருக்கின்றதைக் கண்டு, குசும ஸ்ரேஷ்டியாரும் குசுமாம்பிகையும் ஆங்கிருந்த ஏனைய பர்வரும் சொல்லிவாண்ணு வியப்பும் உவப்பு முற்றவர்களாகி, " நாம் கண்ட இவை யனைத்தும் ' கனவோ ? நினவோ ? ' என் ஐயுறத் தக்க நிலையிலல்லவா இருக்கின்றது ? " என்று ஒன்றும் புரியாதவர்க ளாகி ஸ்தம்பித்து நிற்கையில், ஆகாய வீதியினின்றும் ஓர் திருவாக்கு " ஓ வணிக ரத்னமே ! பூர்வ ஜன்மத்தில் நீவிரியற்றிய தவத்தின் பயனுகவும், துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனார்த்தமாகவும், தர்மத்தை

யும் வைதீக கர்மத்தையும் ஆசார சீலத்தையும் நிலை நிறுத்தற் பொருட்டாகவும் சர்வேஸ்வரியாகிய யாமே உமக்குத் தனையையாகத் தோன்றினம். சர்வலோக சரண்யனை விஷ்ணு மூர்த்தியின் அம்சமே உமக்குத் தற்போது பிறந்துள்ள ஆண்மகவாகும். எமது அவதாரத்தினல் அநேக நன்மைகள் விளைந்து அறம் நிலைபெறும்" என்று பலரும் கேட்க எழுந்தது கேட்டு, யாவரும் வியந்து விம்மிதமுற்றுக் கூசுகலித்தனர். "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச் சான்றோனெனக் கேட்ட தாய்" என்று ஆன்றோர் புகன்றனராதலின், தம் மக்கள் 'தெய்வப் பிறப்பு' என்று ஆகாய வாணியே கூறக் கேட்ட குசும ஸ்ரேஷ்டியாருங் குசுமாம்பிகையும் ஆனந்தக் கடலி லழுந்திக் கரை காணுதவராயினர்.

புத்ரோத்ஸவம் கொண்டாடும் பொலிவு.

அநேக நாட்களாய் அதிக ஆவலுடன் அனைவரும் எதிர் பார்த்திருந்த அருமகப்பேறு வாய்க்கப் பெற்றமையை யுன்னி குசும ஸ்ரேஷ்டியார் தந்த உத்தரவினல் நாட்டிலுள்ள எல்லா ஆலயங்கட்கும் பூஜைகள் வெகு சிறப்பாகச் செய்யப்பட்டன. புதிய உற்சவங்கள் நடத்தப் பட்டன. ஏராளமான தான தருமங்கள் வழங்கப்பட்டன. எல்லா அறச்சாலைகளிலும் அளவு கடந்த அன்னதானம் ஆற்றப்பட்டது. 'மூன்று வருடம் வரை ஒருவரும் வரி செலுத்த வேண்டியதில்லை' என்றும், 'ஏழு நாள் வரையிலும் பொக்கிஷத்திலுள்ள திரவியங்களைத் தத்தமக்குத் தேவையானவற்றைப் பெற்றுச் செல்லலாம்' என்றும் பறை சாற்றப்பட்டது. அரண்மனைக்கு வந்த அனைவருக்கும் அநேகவித பக்ஷண பாயசத்துடன் விருந்தும், ஆடையாபரணங்களும், சந்தன பஷ்ப தாம்பூலாதிகளும் ஏராளமாக வழங்கப்பட்டன.

அரண்மனையிலும் ராஜ வீதியிலும் வைகிய வீதிகளிலும் எனைய வீதிகளிலும் வாழை கமுகுகள் நாட்டி, மலர் மாலைகள் தூக்கி, மணிப்பந்தர்களாலும் மகர தோரணங்களாலும் அலங்கரித்து, சந்தனத்தால் மெழுகிப் பன்னீர் தெளித்து, முத்துப்போன்ற சித்ரச் சுதைகள் தீட்டி, மணி விளக்குகளால் விநோதமாக அலங்காரம் செய்து, அவர்வர்களும் ஆடையாபரணலங்கிருதர்களாகி, களப

கஸ்தூரிகள் பூசி, உவகை யுரைகளைப் பேசி, பொற்சுண்ணங்களைத் தூவி, புத்துணர்ச்சியினை மேவி, குழலில் நறுமலர் சூட்டிக்கொண்டும், பூஷணங்கள் பல பூட்டிக்கொண்டும், கண்களில் மையைத் தீட்டிக் கொண்டும், வீணையை யாழினை மீட்டிக் கொண்டும், இசையொடு குரலைக் கூட்டிக் கொண்டும், பாடல் பாடியும் ஆடல் ஆடியும் மன மகிழ்ச்சியினை யூட்டிக்கொண்டும், புருஷ ஸ்ரேஷ்டராம் குசும ஸ்ரேஷ்டியாருக்குப் புத்ரோற்பத்தி கிடைத்ததை யுன்னி உள்ளக் களிப்பில் மூழ்கி யிருந்தனர்.

வேதமுணர்ந்த விழுமியர் பலரும் வேதங்களை யிசைக்கும் ஒலி விண்ணளாவி எழுந்தது. புத்ரோத்ஸவத்தை முன்னிட்டு ஏராளமாக நெய்யைச் சொரிந்து ஓம வினைகள் செய்தலால் ஆங்கெழும் வேள்விப் புகையும், மாதர்கள் வீடுகளில் இடுகின்ற அகில் சந்தனம் சாம்பிராணி முதலிய வாசனைப் புகைகளும், விருந்து சமைக்கின்றமையாற் பாகசாலையினின்றும் விரைந்தெழும் புகையும் வானைக்கி எழுந்தன. ஆங்காங்கு சோலைகளிலும் நந்தவனங்களிலும் உள்ள மரம் செடி கொடி முதலிய யாவும் அளவற்ற மலர்களைத்தாங்கி அமிதமான நறுமணத்தைப் பெருக்கியது. தேவர்கள் ஆகாயவீதியினின்றும் சொரிகின்ற தேவ (கற்பக) மலர்களின் குவியல்கள் நகரெங்கும் செறிந்து சிறந்த காட்சியை யளித்தன.

"ஆதி பராசக்தியே அருட்குழந்தையா யவதரித்துள்ளாராதலின், நாமும் ஓமவினை செய்வோம்" என்று தடாகக் கரையின் சுற்றிலுமுள்ள சோலைகளிற் றிகழும் மாமரங்களைத்தும் எண்ணிக் கொண்டு, தத்தமது சினைகளாகிய கரங்களிற் கொண்டுள்ள கனிகளாகிய பாத்திரங்களிலிருந்து இனிய ரசமாகிய நெய்யை, கீழே தடாகத்தில் மலர்ந்து விளங்கும் பங்கயமாகிய ஓமகுண்டத்தில் பெய்ய, புன்னை மரங்களும் உடன் கலந்துகொள்ள எண்ணித் தமது புஷ்பங்களாகிய பொரிகளைச் சிந்த, கிள்ளைகள் பலவும் வேத மந்திரங்களைச் சொல்லி முழக்க, இந்த அற்புதத்தைக் கண்டு ஆனந்த முற்றுக் கைகளை நீட்டி, "ஆஹா! என்ன வியப்பு! என்ன அருமை!" என்று கரங்களை யசைத்துச் சந்தோஷங் காட்டல் போல் எதிரிலுள்ள செங்காந்தள் மலர்கள் அழகு காட்ட, அதுகண்டு "இவர்கள் பொருள் வேண்டுமென்று யாசிக்கிறார்கள் போலும்!" என்று நினைத்துக்

கொன்றையானது தன்னிடத்துள்ள பசுமலர்களாகிய பொன்னைப் பெற்றுச் செல்லும்படி வள்ளல் தன்மையாய் வாரி வழங்கிச் சொர்ண்மாரி பொழிவதுபோல ஏராளமாகச் சொரியவும் சோலைகள் எல்லாம் மிக்க பரமானந்தத்துடன் விளங்கின.

மற்றும் பல பூங்காவனங்களில், "பராசக்தியின் திருவவதார மும் லீலா விநோதங்களும் நிகழ்வதற்கு இந்தப் பெனுகொண்டாபுரி செய்த தவமே பெருந்தவம்" எனவும், "நம்மனோர் தவமும் நற்பயன் தந்தது" எனவும், "பிறவிப்பெரும்பயன் பெற்றோம்" எனவும் கூறி, திவ்வியமான இனிய குரலில் அருமையான ராகத்துடன் கிளிகள் யாவும் ஸ்ரவண சுகமாய் ஸாம கானத்தைச் செய்யவும், மகர யாழ்போல வண்டினம் மொலிக்கவும், பின்பாட்டுப்பாடி ராக நயங்களை விளக்குவதுபோலக் குயிலினம் கூடி யிசைக்கவும், மிருதங் கத்தைப்போல் முகில்வந்து முழங்கவும், நாட்டியக்காரர் போல் மயில் கூட்டங்கள் மகிழ்ந்தினி தாடவும், இவை யனைத்தையும் செவி மடுத்துப் பரமானந்த மடைவதுபோல அநேக மிருக ஜாதிகளும் அநேக பட்சிகளும் சூழ்ந்து நெருங்கி உவகையோடு நிற்கவும் சோலை களெங்கும் சுகபோக வடிவாய்ச் சொல்லொணு எழிலுடன் துலங்கின.

நடையில் அன்னத்தையும், சாயலில் மயிலையும், குரலில் குயிலை யும், மொழியில் கிளியையும், அழகில் மலர் மகளையும், கல்வியில் கலை மகளையும், கருணையில் மலை மகளையும், பொறையில் நிலமகளையும் அனைய குலமகளிர் அனைவரும், கரிய குழலை முடித்து, அழகிய உடை களுடுத்து, பற்பல மலர்கள் தொடுத்து, பல தானங்கள் கொடுத்து, இறைவியின் புகழைப் படித்து, களிப்பென்னும் பால் குடித்து, ஒருவரை யொருவர் அடுத்து, பல புதிர்கள் போட்டு வெடித்து, கூறுதாரைப் பரிகாச மொழிகளா லிடித்து, வாசனைப் பொருள்களைப் பொடித்து, வருவார் போவார் மீது அத்தூளை வீசி யடித்து, அடி யெடுத்து நனி பிடித்து துடிதுடித்து நொடி நொடித்துப் பதம் மடித்து துயர் விடுத்து நடம் நடித்துப் பலவாறுகக் களி கூர்ந்தும், தங்கள் தங்கள் வீடுகளில் அழகுற நிறுவி யிருக்கின்ற மணி விளக்குகளின் ஒளியோர் புறம் பிரகாசிக்க, தங்கள் காதுகளில் அணிந்துள்ள வைரத் தோடுகளின் ஒளி யோர்புறம் பிரகாசிக்க, விரைந்து செறிந்து வேதி

க்கைகளை யலங்கரித்தும், முளைப் பாலிகைகளை நிறைத்தும், பொற்கல சங்களை யமைத்தும், பூர்ண கும்பங்களைப் பொலிவித்தும், துளசி மேடைகளை தூய்மையாய் ஜோடித்தும், அநேக மணமிகுந்த மலர் மாலைகளைச் சூட்டியும், ஆராதனை செய்தும், தங்கள் தங்கள் பூஜா க்ரஹங்களிலுள்ள மூர்த்திகட்குப் பூசனை புரிந்தும், ஆராதித்தும், புருஷர்களோடு புத்ரோத்ஸவத்தைப் பற்றிப் புகழ்ந்து மொழிந்து மகிழ்ந்து கொண்டும், இறைவியின் திருவருளை எண்ணி இறைஞ்சிக் கொண்டும் நகரம் முழுவதும் ஒரே விழாக் கோலமாத் தோன்றியது.

ஜாதகன்மம் நடாத்தல்.

குசும ஸ்ரேஷ்டியார், வெகுநாட்களாகத் தீராதகுறை தீர்ந்து, மகப்பேறுற்றமையை யுன்னி, நித்ய தரித்திரனொருவன் பொற்புதையல் பெற்றுற்போலும், பிறவிக் குருடனொருவன் இரு விழிகளும் திவ்யமாகத் தெரியக்கண்டதைப்போலும், வெகுநாளாக வாடி வதங்கிய பயிர்கள் செழுமழை பொழியப் பெற்றமைபோலும், பாலை வனத்திலே வெகுதூரம் நடந் தலைந்து எங்குந் தண்ணீர் கிடையாமல் தாகத்தினால் தவித்து வருந்திய தேச சஞ்சாரியொருவன் செழுஞ் சோலை நாப்பணுள்ள வொரு தெண்ணீர்த் தடாகத்தைச் சேர்ந்தது போலவும் கூறவொண்ணாத மனக் குளிர்ச்சியடைந்து, புத்ரோத் ஸவத்தை வெகு சிறப்பாகக் கொண்டாடி, சகல கலைகளிலும் வல்ல பெரியார்களைக் கொண்டு சர்வ நலன்களுந் தாண்டவமாடும் ஜாதக பலனையுணர்ந்து ஜாதகன்மமெனும் சுபசடங்கைச் செவ்வனே நடத்தி ஆனந்தித் திருந்தனர்.

நாமகரண மஹோத்ஸவம்.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக இரு குழந் தைகளும் காலையிற் றேன்றும் இளங் கதிர்போலவும் கலை வளரும் இளமதி போலவும் வளர்ந்துகொண்டு வர, பத்துத் தினங்களும் பரமானந்தமாய்க் கழிய, பதினோராவது நாள் காலை குசும ஸ்ரேஷ்டியாரும் குசுமாம்பிகையும் மங்கள ஸ்நானம் செய்து, குழந்தைகட்கும் ஸ்நானம் செய்வித்து, ஆடை யாபரணங்கிருதர்களாகி, வேத வேதாங்கங்களில் வல்ல பெரியோர்களும் பந்து மித்ரர்களும் புடைசூழ, கிழக்குமுகமாக அமர்ந்து, ஹோமாதி

சடங்குகளனைத்தையும் வேத விதிவழிச்செய்து, நாமகரண மகோற்சவத்தைச் சிறப்பாக நடத்தி, ஆண் குழந்தைக்கு * "விரூபாக்ஷன்" என்றும், பெண் குழந்தைக்கு † "வாசவாம்பிகை" என்றும் நாமகரணம் செய்வித்து, சந்தன புஷ்ப தாம்பூலாதிகள் வழங்கி, ஆன்றோர்களால் ஆசிபெற்று, அனைவர்க்கும் சகல சம்ப்ரமத்துடன் விருந்திட்டு, யாவரும் களித்திருந்தனர்.

பின்பு நல்ல சுபமுகூர்த்தத்தில் குழந்தைகளைத் தொட்டிலிலிட உத்தேசித்து, வயதிலும் அறிவாற்றல்களிலும் மிகுந்த பெரியவர்களையும் உறவினர்களையும் சுமங்கல்ய ஸ்த்ரீகளையும் சிறுவர் சிறுமிகளையும் அழைத்து, அருமையான மாற்றுயர்ந்த தங்கத் தொட்டில்களில் குழந்தைகளைக் கண்வளரச் செய்து, பல திவ்யமான பாடல்களைப் பல சுமங்கலப் பெண்களும் சிறுமிகளும் பாட, கும்மி கோலாட்டம் ஆகிய களியாட்டங்கள் நடாத்தியும், கனிவர்க்கங்கள், நறுமலர்ச் செண்டுகள், சந்தன தாம்பூலாதிகள் யாவும் வழங்கியும், குசும தம்பதிகளும் நகரவாசிகளும் எல்லையில் மகிழ்ச்சியை எய்தி வாழ்ந்திருந்தனர்.

---

* **விரூபாக்ஷன்** :— உருவமாக வெளிக்கு (பிறர்க்குத்) தெரியாத கண்ணை யுடையவன். [அதாவது இச்சை கிரியை ஞானம் ஆகிய சக்திகள் மூன்றையும் உணர்த்தும் சதிர் மதி அங்கி ஆகிய த்ரிநேத்ரங்களில் (ஞான) அக்னி மயமான பால நேத்ரத்தை யுடைய சிவ பெருமான் எனப் பொருள்படும்.] சுருங்கக்கூறின் (ஸ்தூலமாய்த் தெரியாது சூக்ஷ்மமாயிலும்) ஞான நேத்ர முடையவன் எனலாம்.

† **வஸ்** :— எல்லா இடங்களிலும் நிறைந்திருத்தல் (ஸர்வ வ்யாபகம்). வஸ் + உ — வஸு. 'உ' என்பது நிலையைக் காட்டுகின்றது. ஆகையால் 'வசு' என்பது = சர்வ வ்யாபகமாகிய நிலை (எல்லா இடங்களிலும் வியாபித்து நிலைத்திருத்தல்.)

'வாசவி' என்றால் = அந்த நிலையிலுள்ள அம்மையார் எனப் பொருள்தரும்.

('வாசுதேவன்' என்னும் பதம் ... எல்லா இடங்களிலும் வியாபித்திருக்கும் பரமேஸ்வரன் என்னும் பொருள்தரல் காண்க.)

இரண்டாம் அத்தியாயம்.

[இரண்டாம் பகுதி.]

*

தீதுகளெல் லாமகலச் செம்மையருட் செல்வமுற
ஆதிபரை பொற்றா ளடை.

ஓம்

ஸ்ரீ வாசவீ விஜயம்.

இரண்டாம் அத்தியாயம்.

[இரண்டாம் பகுதி]

மகேஸ்வரி மகவுபோல் மன்னி விளையாடல்.

காப்புப் பருவம்.

மகாவிஷ்ணுவின் அம்சமாகிய விரூபாக்ஷனுக்கும், பரா சக்தியின் அம்சமாகிய வாசவாம்பிகைக்கும் இரண்டு மாதங்கள் ஆகி, மூன்றும் மாதம் பிறந்தது. ஒரு சுபதினத்தில் அவ்விரு குழந்தைகளையும் எடுத்துக்கொண்டு தாயாகிய குசுமாம்பிகையும் தந்தையாகிய குசும ஸ்ரேஷ்டியாரும் ஏனைய மந்திரி ப்ரதானிகளுடன் சுற்றத்தார் நட்பினர்களுடன் ஆலயத்திற்குச் சென்றனர். அபிஷேக ஆராதனைகள் புரிந்தனர். முறைப்படி ஆலயத்தை வலம் வந்தனர். சந்நிதி நேரே சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்தனர். இரு கரங்களையும் சிரமேற் கூப்பி வணங்குவாராயினர்.

"அரியதொரு பொருளே ! அளப்பரிய பொருளே !
அதீதமென நின்ற பொருளே !
ஆன்மபரி பூரணசு கத்தைக்கொ டுத்தொளிரும்
ஆனந்த மான பொருளே !
அருளமுதி னைப்பொழியு மற்புதக் கொண்டலே !
அன்பு வழிபா டுனைக்கே
ஆற்றினே மேற்றுநீ யெங்களுக் கருளினுய்
அழகியவி ரண்டு மகவை;

அருமறைக் கேள்விதொழில் அறிவுபொறை திருஞானம்
ஆயுளொடு பிணியில் வாழ்வும்
அனவரத நின்னடிப் பக்திபுகழ் வாய்மையுடன்
ஆண்மையும் பிறவு முதவித்
திருமுகத் திற்கருணை பொலியும்வா சவியெனும்
செல்வியைக் காத்தருள்க வே !
சீரிளங் கதிரெனத் திகழும்விரு பாக்ஷனும்
செல்வனைக் காத்தருள்க வே !! ”

எனப் பலவாறுக ஸ்தோத்தரித்து, “ எங்கும் நிறைந்துறை அறிவுச் சுடரே ! அன்பின் உருவே ! ஆனந்த மலையே ! ஜோதிப் பிழம்பே ! நலங்கிளர்ந் தொளிரும் யோக மணி விளக்கே ! ஞான ப்ரகாசமே ! ஆன்ம விளக்கமே ! உள்ளத் தொளியே ! உணர்வுக் குணர்வே ! ஆரா வமுதே ! தெவிட்டாத் தேனே ! இன்பக் கலியே ! சாந்தப் பெருக்கே ! மலையினும் மாண்பே ! வானினும் விரிவே ! சிதாகாச வெளியே ! பரமாகாச வியல்பே ! உபசாந்த நிலையே ! சச்சி தானந்தமே ! சிவாத்துவிதமே ! விசிட்டாத்துவிதமே ! கேவலாத் துவிதமே ! சுத்தாத் துவிதமே ! சமரசாத்துவிதமே ! நிரதிச யானந்தமே ! பரானந்த போதமே ! அழியாச் செல்வமே ! சக்தி மழை பொழி சண்டமாருதமே ! அருட் பிரவாகமே ! க்ருபா சமுத்ரமே ! நினது பெருங் கருணையினால் கிடைக்கப் பெற்ற இச் சிறு குழந்தைகட்குப் பரிபூர்ண ஆயுளும், சகல சாஸ்த்ர ஞானமும், ஒருமையுடன் நினது திரு மலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவும், உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசாத உயர்நிலையும், பெருமைபெறு நின்புகழ் பேசிடுந் திறனும், பொய்மையை மறந்து பொலிவுறும் வாய்மையும், பெருநெறி பிடித்தொழுகுந் தூய்மையும், நினை யென்றும் மறவாத நேயமும், களங்கமில் மதியும், நின்கருணை நிதியும், நீதியைப் போற்றிடும் நேர்மையும், அன்பினால் அனைவரையும் காக்கும் ஆற்றலும், சாந்த நிறைவும், ஆசார சீலமும், பொறையும் புகழும், திறலும் தெளிவும், நோயற்ற வாழ்க்கையும், குறைவற்ற செல்வமும், உயர் ஞான உணர்வும், உண்மை யின்பமும் யாவும் அருளிக் காத்தல் வேண்டும். இவர்களால் அறங்கள் நிலை பெறல் வேண்டும். எவ்வுயிர்க்கும் இன்பம் எய்திடல் வேண்டும். அனை வரும் சுகத்தினில் ஆழ்ந்திடல் வேண்டும். உண்மையாம் இன்பமதில்

உலகெலாந் தோய்ந்தே ஒப்பிலானந்த வமுது உண்ணுதல் வேண்டும்." என்று மனமுருகிப்ரார்த்தித்து, இரு குழந்தைகட்கும் இரு கரங்களிலும் காப்பணிவித்தனர். பின்னர் யாவரும் அரண்மனை சென்று அற்புத விருந்தை யருந்தி மகிழ்ந்து ஆனந்தமாக இருந்தனர்.

சகல உலக உயிர் வர்க்கங்களையும் ஊட்டி வளர்க்குந் தாயாகிய நமதம்பிகை, பெருந்தவ சீலம்மிகுந்த குசுமாம்பிகையின் திருமுலைப்பாலை யுண்டு வளர்வதைப் போல, உலகத்தார் மகிழத் தம் திருவிளையாட்டால் வளர்ந்து வருங் காலையில் நம தன்னையாம் வாசவிக்கு ஐந்து மாதங்கள் ஆயின.

செங்கீரைப் பருவம்.

அப்போது அவ்வம்மையார், "இறைவன் திருவருட் பெருமைகளை அன்றி வேறு எதையும் என் செவி கேளாது" என்றும், "இந்த மாயப்ரபஞ்சத்திலுள்ள எத்துணை மேலான ராஜபோகங்களாயினும் அவைக ளனைத்தையும் யான் அற்பமாக மதிப்பேனே யன்றி, அவற்றைப் பெரிதென எண்ணிவிட மாட்டேன்" என்றும், "எனக்குத் தகுந்த உத்தம புருஷனைக் கண்டு பிடிக்க உங்களால் முடியாது" என்றும், "நம் வைசிய குலத்திற்கு இன்று முதல் எவ்வித இடர்களும் கிடையாது; அப்படி ஒருகால் வரினும், அவ்விடர் நிற்காது நிற்காது" என்றும், கூறுவது போல, திருமுக மண்டலமானது சாய்ந்து சாய்ந்து அசைந்து அழகுதர, (ஒரு காலை மடக்கி, ஒரு காலை நீட்டி, இரு கைகளையும் நிலத்திலூன்றிக் கொண்டு தலை நிமிர்ந்து) "அம்மா! அப்பா!" என்று மழலை மொழிகளால் அறைகுறைச் சொற்களைக் கூறிக்கொண்டு செங்கீரை யாடுதல் செப்பொணாச் செம்மையுடன் திகழும்.

*ஞான ரூபியாம் நமதன்னையை ஆர்வத்தோடும் எடுத்துப் பல வனிதைமார்கள் மடிமீதமர்த்தியும், மார்மீதும் தோள்மீதும் தாங்கியும், பலவித இன்னிசைப் பாடல்களைப் பாடியும், பராக்குக் காட்டியும், பாராட்டியும், சீராட்டியும் பரிவுடன் விளையாடி மகிழ்ச்சியடைவர்.

---

* "காயமோ மாயை யன்று காண்பது சத்தி தன்னுல்"

"சத்திதன் வடிவே தென்னில் நடையிலா ஞானமாகும்" (சிவஞான சித்தியார்)

தாலப் பருவம்.

அண்ட சராசரங்களை யெல்லாம் படைத்து ஆட்டிவைக்கும் வல்லமை வாய்ந்த நமதன்னையாகிய வாசவாம் பிகைக்கு ஏழு மாதங்களும் இனிதே சென்றன. அவ்வம்மையைப் பல தாதியர்களும் பாங்கா யெடுத்துப் பைம்பொற் றொட்டிலில் கண்வளரச் செய்து, பல பாடல் களை இன்னிசையோடும் பாடித் தாலாட்டுதல் மிக்க அழகா யிருக்கும்.

குழந்தைகள் இருவரும் ஞானச் சுடர்களாக மிளிர்ந்து ஒரு நாள் தங்கத் தொட்டிலிலும், மறு நாள் முத்துத் தொட்டிலிலும், பிறிதொருநாள் பவளத் தொட்டிலிலும், மற்றொருநாள் வைரத் தொட் டிலிலும், இன்னொருநாள் நவரத்னத் தொட்டிலிலும், வேறொருநாள் தந்தத் தொட்டிலிலும் தூகழுதல் மிக்க விநோதமாயிருக்கும்.

நமது வாசவாம்பிகை முத்துத் தொட்டிலிலும் படிகத் தொட் டிலிலும் இருக்கையில், அந்தச் சோபை குழந்தை மேல்படுவதால், அப்போது பார்த்தால் கலைமகளைப் போலவும்,

கெம்புத் தொட்டிலிலும், மாணிக்கத் தொட்டிலிலும் இருக் கையில் இலக்குமியைப் போலவும்,

பச்சைத் தொட்டிலிலும், நீலத் தொட்டிலிலும் இருக்கையில் பார்வதியைப் போலவும் தோன்றலால், மூவரும் தானே யென்று அனைவர்க்கும் குறிப்பா லுணர்த்துவதைப் போல விளங்கும்.

நமதம்பிகை, தனது செம்பவளம் போன்ற வாயைத் திறந்து "அம்மா!" என்று அழுகிற ஒலியை, அந்தத் தொட்டிலின் மேலே அழகாக அலங்கரிக்கப் பட்டிருக்கும் புஷ்ப மாலைகளில் (நறுமலர்ப் பந்தரில்) தேனுண்ண வந்து கூடியுள்ள வண்டுகள் யாவும் மிக்க அன்புடன் கேட்டுக்கொண்டே, வேதவொலி கேட்ட அந்தணர்கள் போலவும், ஞானோபதேச மந்திரத்தைக் கேட்ட நன் மாணாக்கரைப் போலவும், (வசமழிந்து) ரீங்காரம் செய்வதையும் மறந்து நிற்கும்.

நமதன்னை குழவிப்பருவத்துடன் தொட்டிலில் படுத்துக் கைக ளின் விரல்களை யசைத்துக்கொண்டும், கால்களை உதறிக்கொண்டும்,

அழுதுக் கொண்டும், நகைத்துக் கொண்டும் இருப்பது எவ்வர்திருக்குமெனின், "வைகிய குலத்திற்கு நன்மை தரவே நான் வந்து பிறந்துள்ளேன். அனைவரும் என்னைச் சார்ந்து வந்தடைந்து வேண்டுவ பெற்று இன்புறுங்கள்!" என்று கூறி யழைப்பது போலவும், "உமக்கு ஏற்படுந் தீமைகள் அனைத்தையும் இதோ நான் உதைத்துத் தள்ளுகிறேன்" என்று கால்களை யசைப்பது போலவும் தோன்றும்.

குழந்தை அழுவதைக் கண்டு தாதியர் பலரும் ஓடோடி வந்து, தம் குயில் போன்ற இனிய குரலால் நல்லிசை யோடும்,

("மன்னு புகழ் கௌசலைதன்" என்ற மெட்டு.)

"பேரிலங்கும் பெனுகொண்டா நகர்புரியும் பெருந்தவத்தால்
சீரிலங்கும் சிறுகுழவி யெனவுதித்தே திகழ்மணியே!
பாரிலங்கும் பாவையர்தம் பாங்கனைத்தும் படைத்ததுபோல்
ஏரிலங்கும் வாசவியே! ஈஸ்வரியே! தாலேலோ!"

"ஈடில்பெருங் குசுமகுப்தன் இயற்றியசீர்த் தவவடிவே!
பீடுநிறைந் தொளிர்குசுமாம் பிகைபுரிநல் லறவுருவே!
கூடியபே ரன்பினெடுங் கூறவொணு மெய்யுணர்வால்
நாடிடுமோர் ஞானமெனும் நாயகியே! தாலேலோ!"

"பலவுலகாய்ப் பலவுயிராய்ப் பலவுருவா கியும்விளங்கும்
கலைவடிவே! விசுவபயனே! கருதரிதாஞ் சித்துருவே!
நிலைபெறுபே ரின்பமதை நினைத்துதிப்போர்க் கருள்புரிய
உலகமதில் வாசவியென் றுதிக்குமன்னுய்! தாலேலோ!"

"நாங்கள்புரி யருந்தவமே! நான்முகனை வாசவனைப்
பாங்குபெறும் பண்ணவரைப் படைத்தருளும் பகவதியே!
ஓங்குபுகழ்க் குசுமனகத் துறைமணியே! கண்மணியே!
ஈங்கெமக்கே சேவைதரும் இன்னமுதே! தாலேலோ!"

"திருமகளே! கலிமகளே! சீர்மிகுநன் மலிமகளே!
இருநிலமாம் பொறைமகளே! எழில்மிகுமோர் வாசவியே!
உருவருவாய் அருள்புரியும் உத்தமியே! சக்தியென
மருவுபரா பரியே! நான் மறைமுதலே! தாலேலோ!"

எனப் பலவாருகப் பண்புடன் பாடியும், இன்பமொழி கூறியும் அன்புடன் தாலாட்டி அகமகிழ் வெய்தி ஆனந்த முறுவர்.

சப்பாணிப் பருவம்.

நமதம்பிகை வாசவிக்கு ஒன்பது மாதமும் ஒருவாறு கழிய, ஒவ்வோர் தினத்தில் உவகை மிகுந்து, உலகோர் யாவரும் ஒருமுறை கண்டதும் உரைப்பரு மகிழ்வினை உடனே எய்துமாறு ஒப்பிலாக் கவினுடன் உட்கார்ந்து, இரண்டு கைகளையும் எழிலுற விரித்தும், பின்னர் இருகரங்களையும் விரைவினிற் சேர்த்தும், சப்பாணி கொட்டும் அழகு சாலவும் நேர்த்தியாயிருக்கும். அன்றியும், அங்கே அமர்ந்த வண்ணமே நமதம்மையார், அகிலத் துறையும் அனேத்துயிர்கட்கும் தத்துவம் அனேத்தையும் உணர்த்துதல் போலவும் தோன்றும்.

அஃதாவது, உயிர் வர்க்கங்களிடம் கருணை கூர்ந்த நம்மன்னை "ஒருவரும் மனத்தை விரிய (அலைய) விடாதீர்கள்! சங்கற்பங்களைச் சுருக்கி மனதை ஒருமுகப்படுத்தி ஏகாக்ர சித்தர்களாய் இருங்கள்!" என்று விரித்த கைகளைச் சேர்த்து சயிக்ஞை செய்து காட்டுவது போலவும், பிறகு கைகளை விரித்து, "எங்கும் அகண்டாகாரமாக நிறைந்துள்ள (ஏக வஸ்துவாகிய) பரம்பொருளைக் குறித்து த்யானம் செய்யுங்கள்!" என்று காட்டுவது போலவும், "எல்லாம் வல்ல பரம் பொருள் அறிவு மயமாய் எங்கும் இடையற நிறைந்து (பிரிவறப் பொலிந்து) இயங்குகின்றுளதலின், பெருவெளியிலே அவனது பேரொளியைக் காணுங்கள்!" என்று உணர்த்துவது போலவும், திரும்பவும் கைகளைச் சேர்த்துத் தட்டுகையில், "எல்லா வுலகங்களும் எல்லா வுயிர்வகைகளும் எல்லாப் பொருள்களும் எல்லா வொலி களும் சேர்ந்து ஒடுங்குதல் என்னிடமே" என்றும், திரும்பவும் கைகளை விரிக்கையில், ஒடுங்கியவாறே பிறகு எல்லா வுலகுயிர்களும் எல்லா வொலி யொளி வகைகளும் தோன்றி விரியும் என்றும் தெரி விப்பது போலவும் தோன்றும்.

அன்றியும், இவ்வாறு சப்பாணி கொட்டுதல் "வைசிய குல மணிகளே! நம் குலத்துதித்த மக்கள் யாவரும் பொறுமையை அறவே யகற்றி, அருளையை அன்பால் வென்று, மேலோன், கீழோன் என்றும் பின்ன பாவங்களை (எள்ளளவேனு மின்றிக்) களைந்தெறிந்து, வாக்கொன்று மனமொன்று செயலொன்றுய்ப்

பேதப்பட்ட பாவனைகளின்றி, த்ரிகரணசுத்தியாய், பாபசிந்தனையைக் கனவிலும் நினையா தகற்றி, ஒற்றுமையுடன் வாழுங்கள்! உங்களுக்கு நிச்சயம் வெற்றியுண்டாகும்" எனக் குறிப்பிப்பதுபோலவும்,

இரண்டு கைகளையுந் தட்டுகையில் "ஓ வைஸ்ய வீரர்களே! இளஞ் சிங்கங்களே! நீங்கள் உங்கள் சமூக முன்னேற்றத்திற்கான தொண்டுகளை யாற்ற உடனே புறப்படுங்கள்! 'உலக சேவைக்கே உடம்பெடுத் துதித்தோம்' என்று எண்ணி உடனே புறப்படுங்கள்! உறக்கத்தை விடுங்கள்! கோபத்தைத் தடுங்கள்! புத்தகங்களை எடுங்கள்! பலர்க்கும் போதனை கொடுங்கள்! உங்கள் மனதில் ஊக்கத்தை நடுங்கள்! கையில் கொடியை எடுங்கள்! வீரத்துடன் புறப்படுங்கள்!" என்று விழிப்பு தந்து தட்டி எழுப்புதல் போலவும் தோன்றும்.

சிற்சில தினங்களில் சிறுமிகள் யாவரும் சேர்ந்தே குழுமி, நமது வாசலியை நடுவில் உட்கார வைத்துவிட்டு, தாங்கள் சுற்றிலும் நின்றுகொண்டு,

(கும்மி மெட்டு)

"கும்மி யடிப்போம்நா மெல்லோரு மொன்றுகக்
கூடிக்கு லாவிக்கும் மியடிப் போம் — இப்போ
நம்மைக் காப்பாற்றவே தோன்றிய வாசவி
நற்புகழ் பாடிக்கும் மியடிப் போம்.

வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப் பாள்துய்ய
வெள்ளைக் கலைகள் தரித்திருப் பாள் — பல
வெள்ளைப் பணிகள் புனைந்திருப் பாளெல்லா
வித்தைக்கும் நாயகி யாயிருப் பாள்.

கல்வியும் ஞானமுந் தந்திடு வாளுயர்
காயத்ரி யின்வடி வாயொளிர் வாள் — சீரும்
செல்வமும் நல்குவாள் செங்கம லத்தினில்
சேர்ந்தழ கார்திரு வாய்மிளிர் வாள்.

வீரமுங் கீர்த்தியு மாண்மையு மீந்துநல்
விற்பன்ன ராய்த்திக ழப்புரி வாள் — அன்ன
பூரணி பார்வதி யென்றுப லபெயர்
பூண்டுபொ லிந்துவி ளங்கிடு வாள்.

அன்புடன் நாமவள் பாதங்கள் போற்றுவோம்
ஆர்வமு டன்பூஜை யாற்றிடு வோம் — உண்மை
இன்பம ருள்கவெல் லாவுயிர்க் கும்மென
ஏத்தியெல் லோருமி றைஞ்சிடு வோம் ”

என்று பல கும்மிப் பாடல்களைப் பற்பல விதங்களாகப் பாடியும், ஆடியும், கும்மி யடித்தும், கோலாட்டம் போட்டும், பலவித விளை யாடல்களைப் புரிந்துகொண்டும், மனமிக மகிழ்ந்து ஆனந்தித்துக் கொண்டும் இருப்பர்.

தவமும் பருவம்.

வேதாகம நூல்களிலும், சுருதி ஸ்மிருதி இதிகாச புராணங்க ளிலும், மந்த்ர சப்தங்களிலும், வேத வேதாங் கங்களில் வல்ல பெரியோர்களின் நாவிலும், ஹோமாக்னிகளிலும், பலதிறம்பட விரிந்த கலைக ளெல்லா வற்றிலும், மூர்த்தி தலம் தீர்த்த மகிமை மிகுந்த எல்லா சாஸ்த்திரங்களிலும், வந்தித்தும் சிந்தித்தும் வழிபாடு புரியும் பக்தர்கள் முன்பும் தவழ்ந்தருளும் பரமேஸ்வரி யாகிய நம தன்னை, குசும ஸ்ரேஷ்டியாருடைய திருமாளிகையில் புன்முறுவல் பூத்த முகத் துடனே விரைந்து விரைந்து சென்றும், சிறிது தயங்கியும், சற்று நின் றும், பின்பு சென்றும், முன்பு வந்தும், பல விசித்ர விநோதங்களைக் காட்டியும், தவழ்ந்துவருகிற அழகைக்கண்டால், சற்றேனும் நின்று பார்க்காது செல்ல யாவரால் முடியும்?

நமதம்பிகை காலில் அணிந்துள்ள பொற் சிலம்புகள் சிறிதே யொலிக்கத் தவழ்ந்து வருகையில் “என்னிடத்தில் உண்மை யன்பின் றிப் போலிவேடம் பூண்டு, அடியார்களென உலகை ஏமாற்றும் வஞ்சகர்கட்கு எனது திவ்ய தரிசனத்தைக் காண்பியாமல் இவ்வாறு மறைந்துவிடுவேன்” என்று உணர்த்துவது போலச் சற்றே ஒரு சார் மறைந்தும்,

“உண்மை யன்புடைய உத்தம பக்தர்களாகிய நல்லோர் நினைந்தபோதே அவர்கள் முன்பு ஒரு க்ஷண நேரத்தில் தோன்று வேன்” என்று தெரிவிப்பது போல வெகு சீக்கிரத்தில் நகை முகத் துடனே விரைந்து தவழ்ந்து ஓடிவந்தும் ஆங்குள அனைவர்க்கும் அக மகிழ் வளிப்பர்.

விரூபாக்ஷனும் வாசவாம்பிகையும் தவழ்ந்துகொண்டு வருகையில், ஒவ்வோர் சமயம் போட்டி வந்துவிடும். அவர்கள் ஒருவர்க் கொருவர் போட்டிகாட்டி, வெகு வேகமாகத் தவழ்ந்துகொண்டு, ஒருவரை யொருவர் தோற்கடிக்க எண்ணி முந்துவதைப் பார்க்கின், மாயைகளில் வல்ல பரமேஸ்வரி தனது மாயாசக்தியால் வெல்ல நினைத்தல் போலவும், மாயாஜாலம் மிகுந்தவரான மகாவிஷ்ணுவும் தனது மாயையால் வெல்ல நினைத்தல் போலவும் தோன்றும். பின்னர் அவ்விரு குழந்தைகளும் சேர்ந்து நகை முகத்தோடும் தவழ்ந்து வருவதைக் கண்டால், "நாம் இருவரும் அப் பரம்பொருளின் சக்திகளே" என்று தமக்குள் ஒற்றுமையாகி சமாதானம் செய்துகொண்டு, நிதானமாய் வருவதைப்போலவும் தோன்றும்.

முத்தப் பருவம்.

இவர்கள் இருவரும் தங்களுக்குள் சில சைகைகள் காட்டிக் கொண்டும், சிற்சில மழலை வார்த்தைகளால் பேசிக்கொண்டும், " வருக ! வருக !! " எனக் கைகளைக் காட்டி அனைவரையும் அருகில் வரும் படி அழைத்தும், தாங்களும் மகிழ்ந்தும், பலரையும் மகிழ்வித்தும், தாய் தந்தைகட்கும் மற்றும் அரண்மனையிலுள்ள மங்கையர் பலர்க்கும் ஒத்த பருவம் வாய்ந்த சிறுவர் சிறுமியர்கட்கும் மனக் களிப் பூட்டிக்கொண்டும், பத்து மாதப் பருவம் வாய்ந்து, அன்னை தந்தையர்க்கு முந்தந் தந்து முழுக் களிப் பீந்துகொண்டும் விளங்கிவந்தனர்.

தாய் தந்தைய ரிருவரும் சற்று தூரத்தில் இருந்துகொண்டு " வருக.! வருக !! " எனக் கைகாட்டி யழைக்க, நமதம்பிகை வெகு வேகமாகத் தவழ்ந்து சென்று, " அம்மா ! அப்பா ! " என்று அழைத்துக்கொண்டே அருகிற் சேர்வர். உடனே அவர்கள் அன்புடன் எடுத்து மடிமேல் வைத்துக்கொண்டு, " தேனே அமுதே செல்வக் கிளியே! மானே மயிலே மரகத வடிவே !! ஊனே உயிரே உணர்வே ஒளியே !!! வானே கதிரே மதியே க்ரணமே !!!! " என்று பலவாறுகக் கொஞ்சிக் கொஞ்சிக் குலவி முத்தாடிக் கூர்ந்தெழுமன்புடன் கூரிறுணு வுவப்புடன் கோடித்து வளர்ப்பர்.

நமது செல்வத் திருவாம் வாசவாம்பிகையை யாவரும் அண்மி விருப்புட னழைத்தும்,

" தெவிட்டாத வின்னமுதே !
செங்கனிவாய் முத்தந் தா ;
உவட்டாம லேயினிக்கும்
ஒண்கனியே ! முத்தந் தா ;

அம்பொனென வேயொளிரும்
அம்பிகையே ! முத்தந் தா ;
செம்பவளத் திருவாயைச்
சேர்த்தினிதே முத்தந் தா ;

நாங்கள் மகிழவந்த
நாயகியே ! முத்தந் தா ;
பாங்கியர்கள் போற்றவரும்
பாவாய் ! ஓர் முத்தந் தா ;

செஞ்சொல் மழலைபுகல்
தேவீ ! ஓர் முத்தந் தா ;
அஞ்சுகம்போ லேமிளிரும்
ஆரணங்கே ! முத்தந் தா ;

கண்ணே ! கருத்தே ! எம்
கற்பகமே ! முத்தந் தா ;
உண்ணேயத் தோடுமிங்கே
ஓடிவந்து முத்தந் தா ;

ஆரா வமுதே ! எம்
அற்புதமே ! முத்தந் தா ;
சீரார் திருமகளே !
சித்திரமே ! முத்தந் தா ;

அன்பு ததும்ப வந்தே
ஆர்வமுடன் முத்தந் தா ;
இன்பமுட னேடி வந்தே
இதழ்குளிர முத்தந் தா ;

குலுங்கக் குலுங்க வந்தே
குதுகலித்து முத்தந் தா ;
சிலம்பு சிலம்ப வந்தே
சீராக முத்தந் தா ;

கற்கண்டே ! முத்தந் தா ;
கனிரசமே ! முத்தந் தா ;
பொற்செண்டே ! முத்தந் தா ;
புத்தமுதே ! முத்தந் தா ; ”

என உண்மையன்புடனும், ஒப்பிலா ஆர்வத்துடனும், மிகுந்த பிரியத்துடனும் அழைத்தும், ஆர்வமீதூர்ந்து ஓடிவந்தெடுத்தும், உவந்து முத்தாடியும், கூடிய மகிழ்வுடன் கொஞ்சிக் களிப்பர்.

தளர்நடைப் பருவம்

உலகில் மலிந்து கிடக்கும் அவநெறிகள் யாவுந் தளரவும், அன்பர்களின் பவ (பழ) வினைகள் அனைத்துந் தளரவும், வையக உலகத்தின் தாக்கமும் சோர்வுந் தளரவும், தீமைகள் பலவுந் திகைத்துத் தளரவும், துன்பமே யோர்புறஞ் சோர்ந்து தளரவும், கயமை யோர்சார் கவலையாய்த் தளரவும், பொய்ம்மையும் சென்றே பொருமித் தளரவும், அழுக்கா றோர்புறம் அழுங்கித் தளரவும், தீவினை யோர் புறம் சென்றே தளரவும், அஞ்ஞான மோர்பால் அலறியே தளரவும், கோபமு மோர்சார் குறைந்தே தளரவும், கல்லாமையோர் புறம் கஷ்டமாய்த் தளரவும், வறுமையும் மடமையும் வருந்தித் தளரவும், சோம்பலும் அச்சமும் சோர்வுடன் தளரவும், நமதம்பிகை, புனைந்துள்ள தொடர் சங்கிலிகள் சலார் பிலாரென்ன, தூங்கு பொன் மணியும் கண கணென் றொலிப்ப, கிண்கிணியுங் கூடி யாரவாரிப்ப, உடைமணிப் பறையும் ஒத்துக்கறங்க, தடந்தாளிணை யணிந்த நூபுர மொலிப்ப, செக்கரிடை தூனிக்கொம்பில் தோன்றும் சிறுபிறை முளைப்போல் நக்கசெந் துவர்வாய்த் திண்ணிமீதே நளிர் வெண் பல் முளை யிலக, திரை நீர்ச் சந்திர மண்டலம் போலத் திருமுகமசைய, தன் திருநீர் முகத்துத் துலங்கு சுட்டி திகழ்ந் தெங்கும் புடைபெயர, படர் பங்கய மலர்வாய் நெகிழ, பெருநீர்த் திரையெழு கங்கையிலும் பெரியதோர் தீர்த்த பலந்தரு நீர் பனிபடு சிறு துளிபோல் இடங் கொண்ட செவ்வாயி னின்றும் ஊறியூறி இற்றிற்று வீழ, மின்னற் கொடிபோல மேனி சற்றசைய, அன்னையுந் தந்தையும் அளவில் மகிழ்வெய்த, எழிற் சீரடியினை எடுத்துப் பெயர்த்து வைத்து, ஆடியசைந்து, தட்டித் தடுமாறி, எட்டியடிவைத்துத் தளர் நடை நடந்தும், தாதியர் தங் கரங்களைப் பற்றிக்கொண்டு சதுருடன் நடந்தும், பிறகு

தாதியர்களின் கரங்களைப் பிடிக்காமலே தானே யசைந் தசைந்து விசைந்து விரைந்து மகிழ்ந்து நடந்தும்,

வேதாகமங்களுந் துதித்திலாக்கும் பெருமை யுடைத்தாய், அடியார்க் கருளும் அற்புதத் திறத்ததாய், பேரின்பம் நல்கும் பீடு சான்றதாய், முத்தியையளிக்கும் மொழியொன்ற வெழிலதாய், ஆன்ம வொளி யிந்தருள் அமல செங்கமலமாய், அமுதமே பொழி தரும் ஆனந்த மயமதாய், நினைத்தபோதே வரும் நீர்மையொடு பொலிவ தாய், தேவர் முனிவோர்கள் தொழ திவ்யமாய்த் திகழ்வதாய், எவ் வுலகுமே பணிய இன்ப மருளுவதாய் இலங்குகின்ற திருவடிக ளிரண்டும் பூமியிற் படிய, பொறுமையாய் நடந்தும், கூடு மன மகிழ்வினெடு குறுநடை நடந்தும், இவ்வாறு நடக்கப் பழகுகையில் யாவரையுங் களிப்பித்தும், விரைந்து நடந்தும், விழுந்து எழுந்தும், பலவாருக மன உற்சாகத்துடன் ஓடியும் ஆடியும், நடித்தும் நடந்தும், தளர்ந்தும் கிடந்தும், நின்றும் இருந்தும், அமர்ந்தும் எழுந்தும், பரிந்து நடந்தும், உவந்து சூளிர்ந்தும், திரும்ப விழுந்தும், உருண்டு புரண்டும், அலண்டு எழுந்தும், மகிழ்ந்து நடந்தும், பொலிந்து மிளிர்ந்தும், செறிந்து நிறைந்திடு மாந்தர் பலர்க்கும் சிறந்த மகிழ்ச்சி யை யிந்து திகழ்ந்தும், புனிதமாய் மழலைமொழி யொரு சில புகன்றும், அருகிலுற்றவர்க்கெலாம் அகமகிழ்வு தந்து, ஓராண்டு நிறைந்து ஒளிர்ந்திடலாயினர்.

வருகைப் பருவம்

மாளிகையில் பலர் மகிழ்வுட னழைக்கவும், "வருக! வருக!!" என வண்மையுடன் பல மாதர் அழைக்கவும், சிறுவர் சிறுமியர் செவ்வையா யழைக்கவும், உடனுறை சிறார்கள் உவகையோ டழைக் கவும், ஒத்த நண்பினர் ஒல்லையி லழைக்கவும், மிக்க பண்பினர் மேவி யழைக்கவும், அன்பினெ டெல்லாம் அருகிலழைக்கவும், பிரியத்துடன் பலர் பேணி யழைக்கவும், 'சாந்த மனத்துடன் சார்வாய்!' எனவும், 'தண்ணளி யோடிவண் சார்ந்திடுக!' எனவும், 'வளமுடனே யிவண் வருவாய்!' எனவும், 'பெண்களின் ரத்னமே! பெட்பொடு வா!' எனவும், 'பொறுமையின் உருவே! போதுவாய்!' எனவும், 'கண் ணே! மணியே! கடிதில் வா!' எனவும், 'விண்ணே! வியப்பே! விரைவில்வா!' எனவும், 'பண்ணே! பவளமே! பரிந்துவா!' எனவும்,

" அன்னே வருக ! அமுதே வருக !
பொன்னே வருக ! பொலிவாய் வருக !
அம்பிகை யேயிவண் அழகுடன் வருக !
நம்பின பேர்க்கருள் நாயகி வருக !

எங்கும் நிறைந்தொளிர் இறைவீ வருக!
பொங்கும் அருள்பொழி புங்கவி வருக !
சங்கரி வருக ! சாம்பவி வருக !
மங்கள மேதர மான்பாய் வருக !

திவ்விய மாயிவண் தேவீ வருக !
செவ்விய வொளிதரச் சீருடன் வருக !
குசுமாம் பிகையருள் குணமலை வருக !
வசுமுத லோர்தொழும் வாசவி வருக !

எங்கள் பராபரி ஈஸ்வரி வருக !
தங்கிடு மின்பந் தருவோய் வருக !
கலிமக ளேநீ கடிதினில் வருக !
மலிமக ளேநீ மகிழ்வுடன் வருக !

நிலமக ளேநீ நேர்ந்திவண் வருக !
அலர்மக ளேநீ அன்புடன் வருக !
எங்குல மணியே எழிலுடன் வருக !
மங்குத லில்லா மணியே வருக !

வணிகர் குலப்பெரு வாழ்வே வருக !
பணிபல பூண்டொளிர் பைங்கிளி வருக !
நகைமுக வதனீ நலமாய் வருக !
தகைமையு டன்இவண் சடுதியில் வருக !

தயைமிகு தாயே சக்தியே ! வருக !
நயமுட னெங்களை நாடியே வருக !
மகிழ்வுட னிங்கினி மான்பாய் வருக !
அகமது குளிரவெம் அருகினில் வருக !

புண்ணிய நிறைவே பொற்புடன் வருக !
எண்ணில் நலன்தரும் இன்பே வருக !
அன்பே வருக ! ஆருயிர் வருக ! "

எனவும், ஆடவர் மங்கையர், ஆடும் சிறுமியர், ஓடும் சிறுவர்கள், கூடுங் குமரர்கள், பாடும் வனிதையர், நாடுந் தாதியர், தேடுந் தோழியர், யாவரு மன்பாய் மேவி யழைக்கவும்,

அரண்மனைப் புலவர்களும், ஆஸ்தான வித்வான்களும், கவி பூஷணங்களும், பண்டித சிகாமணிகளும் பாங்குடன் வந்து, பைங் கிளிபோலப் பண்பாயொளிரும் வாசவாம்பிகை விளையாடலைக்கண்டு அருகி லழைக்க வுன்னி,

" பொன்னே வருக ! நூபுரஞ்சேர் பூந்தாட்குமரி யிவண்வருக !
புகழே வருக! புண்ணியத்தின் பொலிவேவருக! பொறைவடிவாம்
மின்னே வருக! பலவுருவாய் மிளிர்ந்தேநிறையும் பரைவருக!
மேலாஞ் சுகத்தை யன்பருக்கு விரைத்தேதருமீஸ் வரிவருக!
அன்னே வருக! நிகரறுபே ரழகேவருக! தெவிட்டாத்தெள்
ளமுதே வருக! கலைஞான வறிவேவருக! அருள்தர நீ
இன்னே வருக! வாசவியா மிறைவீவருக! எமதருகி
லிசைந்தே வருக! யாம்மகிழ் வினிதேவருக! வருகவே!! "

" வேயே நிகர்க்குந் தோட்குசுமாம் பிகையின்றருளும் வியன்குமரி
விரைந்தே வருக! வித்தகமா மணியேவருக! விழுமியசீர்த்
தாயே வருக! ஞானமெனுஞ் சுடரேவருக! சதுருடன்நின்
தாளே வழுத்து மடியார்க்குத் தயவோடருளிப் பிறவியெனும்
நோயே தவிர்க்கு மாறிபரா பரியேவருக! நூல்பலவும்
நுவலும் பெரியார் நுண்ணுணர்வால் நோக்கும்முதல்வி யிவண்மகிழ்ந்து
நீயே வருக! நெடும்புவிமே லெமக்கேயருளும் நினைவினெடு
நிமலாய் வருக! நிகரில்பரம் பரியேவருக! வருகவே!! "

" திருவே வருக! சீரடியார் செறிந்தேதினமும் பணிந்திறைஞ்சும்
தேவீ வருக! எமதகத்திற் றிகழும்மணியே பலபலவாம்
உருவே வருக! உத்தமிநீ யுவந்தேவருக! கண்மணியே
ஒளியே வருக! உவமையிலாக் கனியேவருக! உயர்ந்தகற்ப
தருவே வருக! எங்குநிறை தயவேவருக! எவ்வுயிர்க்குந்
தலைவீ வருக! சாந்தசமுத் திரமேவருக! சார்ந்திவணெம்
மருகே வருக! ஆர்வமுட னணைந்தேநடந்து வருக!எம
தன்பே வருக! ஆருயிரே அருளேவருக! வருகவே!! "

என்று அற்புத மொழிகளால் அன்புடன் பாடி ஆர்வமோ டழைக் கவும்,

ஒப்பில் பேரழகுடன் ஒளிரும் நம் அன்னையார் ஓடி வந்து மன மகிழ்வை யளித்தும், உவகை தளிர்த்தும், மனது களித்தும், பல பண்டங்களைத் தனது இளஞ் சிறு கரங்களால் வாரித் தெளித்தும், நீரில் குளித்தும், சிறிது நெளித்தும், மகிழ்வு திளைத்தும், பாலைக் குடித்தும், ஓடிக் குதித்தும், சாயை மிதித்தும், (" உலகத்திலுள்ள நாம ரூபங்களுடைய பொருள்கள் யாவும் இக்கணம் தோன்றி மறு கணத்தே மறையுந் தன்மையன வாதலின், அவற்றின் மீது அளவற்ற பிரியங்கொண்டு மகிழ்கின்றீர்களே! தள்ளத்தகுந்த வற்றைத்தலைமேல் தாங்கி மகிழ்வதைப் போலல்லவா தோன்றுகின்றது? ஆகையினால் அவற்றின் மீதுள்ள அகப்பற்று புறப்பற்று முதலிய ஆசைகளனைத் தையும் அறக்களைந் தெறிமின்!" என்று நற்புத்தி புகட்டுதல்போல) பல வஸ்துக்களைச் சிதைத்தும், "வேண்டாம்" எனச் சிலவற்றை யுதைத்தும், சில பண்டங்களைக் கடித்தும், ஒரு சிலவற்றை யொடித் தும், மற்றும் சில வற்றை நீரில் மடுத்தும், பிறகு எடுத்தும், சிறுர்க் குக் கொடுத்தும், சிலவற்றை நீரிலேயே விடுத்தும், பலவாறுக விளை யாடிக்கொண்டிருப்பர்.

நமதம்பிகை ஒரு சில சமையம் அழைப்பவர் அருகில் அண் மியே வந்தும், ஒருசிலர்க்கு "வர முடியாது" என்று தலையை யசைத்தும், ஒரு சிலருக்கு அன்புடன் முத்தங் கொடுத்தும், ஒரு சில ரிடத்தில் ஓடிவந் தணைந்தும், ஒரு சிலரிடத்தில் உவகையுட னெழுடியும், ஒரு சிலரிடத்தில் மழலைகள் மொழிந்தும், ஒரு சிலரிடத்தில் உற் சாகங் காட்டியும், ஒரு சிலரிடத்தில் தின்பண்ட மீந்தும், ஒருசிலர் மடிமீ துட்கார்ந்திருந்தும், ஒரு சிலர்க்குடைக ளுவப்புட னளித்தும், ஒரு சிலர் முன்பு உட்கார்ந்து விளையாடியும், ஒருசிலர் வருகையி லோடியே யெளிந்தும், ஒரு சிலர் வருகையி லுல்லாசமாய்க் குதித் தும், அனைவ ருளத்தையும் அடிக்கடி கவர்ந்தும், விநயத்துடனே விளையாடி மகிழ்வர்.

அம்புலிப் பருவம்.

நமது வாசவாம்பிகை, (எண்ணிரண்டு மாத வயது நிரம்புங் காலையில்) வளந்த காலத்திலே, இரவில் மிக்க சோபையுடன் தண்ணிலவைப் பொழிந்துகொண்டு பொலிந்து திகழும் பூர்ண சந்த்ர பிம்பத்தின் இன் னழகைக் கண்டு மனம் பூரித்துப் புன்னகை ததும்பி மகிழ்ச்சியுடன் பல அழகிய மழலை மொழிகளால் அம்புலியை

அருகில் வருமாறு கூவி யழைத்தும், கைகளால் ' வருக ! வருக !! ' எனச் சைகை காட்டியும், நிலாமுற்றத்தில் ஓடியாடி விளையாடியும், குதித்தும், குதூகலித்தும், கும்மியடிப்பது போல உவகை மீதூர்ந்து கைகளைத் தட்டியும், தண்மதியைப் பார்த்துப் பார்த்து மகிழ்வுடன் சிரித்தும், களிப்பில் திளைத்தும், கண்யமாய்த் தோன்றும் தோற்ற மானது,

" இந்தப் பூர்ண சந்திரன் எவ்வளவு அழகுடன் பிரகாசித்த போதிலும் நமது திவ்யமான முகத்திற்குச் சமானமான எழிலுடை யதாக ஒருக்காலும் விளங்க முடியாது " என்று கூறி நகைப்பது போலவும்,

"இந்தத் தண்மதி தன்னிடத்துள்ள முயற்கறையை மாற்றிக் கொள்ளச் சக்தி யில்லாவிடினும், ' உலகத்தில் நிறையிருளை முழுதும் ஓட்டி விடுவேன் ' என்று என் இவ்வாறு தருக்கிக்கொண்டு புறப்பட வேண்டும்? " எனப் பரிகசிப்பது போலவும்,

" இச்சந்திரன் இன்று கவுரவமுற்றே மெனக் கர்வ முறுகின் றதே ! இதன் கதி நேற்று அல்லது சுமார் பதினைந்து நாட்களுக்கு முன்பு இருந்த நிலையையாவது, அன்றி நாளைமுத லடையப்போகும் நிலையையாவது எண்ணிப் பார்த்தாலன்றே இதன் உண்மை நிலை தெரியவரும்? " எனக் கூறி ஏளனம் செய்வது போலவும்,

" இந்தச் சோமன் தன் கலைகள் யாவுந் தேய்ந்து, ' ஏஞ்சி யுள்ள ஒரு கலையும் போய்விடுமோ? ' என்று அஞ்சி நடுங்கி, ' தஞ்சம் ' என்று அடைந்த அந்த நாளில் அபயந் தந்து எமதாண்டவன் ஆத ரித்ததா லன்றே இவன் இன்றைய தினம் என் முகத்துடன் போட்டி போட எண்ணி, இவ்வளவு ஒளியுடன் நிலவைப் பொழிந்து நிலவுகின் றான்? " என்று பரிகாசமாக இழித்துக்கூறி நகைப்பது போலவும்,

" இந்த ப்ரபஞ்சத்தினர் இவனுக்கு என்ன ப்ரதி யுபகாரம் செய்வார்க ளென்று எண்ணி, இவ்வளவு துல்யமான அமுத க்ரணங் களைப் பொழிகின்றான்? இத் தண் கலைகளினுல் தோன்றும் ஒண்ணி லவின் தன்மையைத் தாங்கமாட்டாது அநேக காமுகர்களுங் கள்வர் களுந்தான் தூற்றுவார்களே யன்றி, உலகில் இத்தண்ணமுத

க்ரணங்களால் நன்மை யடையும் எவரும் இந்த மதியைக் குறித்து வாழ்த்துவாரும், நினைப்பாரும், மதிப்பாரும் இலர். தம்மை இகழ்ந்து கூறுவோர்க்கும் நல்ல வர்க்கும் தீயவர்க்கும் மேட்டிற்கும் பள்ளத் திற்கும் எங்கும் எவரிடத்தும் சம நிலையான மனப் பான்மையுடன் ('பிறக்குதவி செய்தலே பெருஞ்சேவை' யென்று நற்புத்தி புகட்டு வதே போல) குளிர்ச்சியையும் ஒளியையும் அழுதையும் பொழிந் தருளுகின்ற இந்த மதியின் பரந்த நோக்கத்தைக் கண்டாவது, உலகினர் நல்ல நீதியைத் தெரிந்து கொண்டு, யாவரிடத்தும் பகைமை பாராட்டாது, பொறுமை பூண்ந்து, புனித வாழ்வுறுதலே விரும்ப வில்லை யே!" யென உலகினரைக் கண்டு நகைப்பது போலவும், " ஆம்; அவர் கள் என் செய்வார்கள்? மதிதான் என் செயும்? அவ் வவர்களின் வினைக் கீடாக யாவும் நடைபெறுகின்றன;" என்று சொல்லிப் புன் முறுவல் கொள்வது போலவும், "வினைதான் என் செயும்? எல்லாம் சர்வவல்லமை வாய்ந்த மாயையின் செயல்களன்றே? அந்த மாயையும் நம் வயமே யன்றே? அப்படியிருக்க நாம் இவ்வாறு எல்லாம் ஏன் நினைத்தோம்? இப்படி நினைத்ததும் ஒரு விந்தையாக வல்லவா இருக் கின்றது?" என் றெண்ணி நகைப்பது போலவும் தோன்றும்.

சிற்சில தினங்களில் நம தருமைக் குழந்தையாகிய வாசவி மேல் மாடியில் நின்றுகொண்டு, பூர்ண சந்திரனைக் கண்டதும் அதை எட்டிப் பிடிக்கத் தாவியும், கைகளுக் கெட்டாமையால் வருந்தியும், குதித்துக் குதித்துத் தாவிப் பிடிக்கப் பார்த்தும், கிட்டாது வருத்த முற்று அழுதும், பிடித்துத் தரும்படியாகப் பலரையும் விநயத்துடன் கேட்டுக் கொண்டும், அவர்களும் பிடித்துத் தராமல் சாக்குப் போக்கு வார்த்தைகளைச் சொல்லி அவ்வெண்ணத்தை மாற்றப் பார்க்கையில் மிக்க சினங்கொண்டு அழுதும் தொந்தரவு செய்வர்.

அந்தச் சமயங்களில் மந்திரிகள் முதலியோர் யாராவது அங்கே தோன்றி, நம தம்பிகையின் கரங்களில் ஒரு அழகிய கண்ணா டியைத் தந்தால் அதில் சந்திரன் தோன்றுதல் கண்டு, 'பிடித்துக் கொடுத்து விட்டார்கள்' என்று எண்ணிக் களிப்புடன் குதித்து விளை யாடியும், பிறகு அண்ணாந்துமேல் நோக்குகையில், விண்ணில் மதியைக் கண்டு, 'போய் விட்டது' என்று அழுதும், பிறகு கரங்களில் உள்ள கண்ணாடியிலே பார்த்து, 'வந்து விட்டது' என்று மகிழ்ந்தும் விளை யாடுவதை நோக்கின்,

"நமது முகத்துடன் போட்டி போடும் இந்தச் சந்திரன் உயர ஆகாயத்தில் செல்லுதல் தகாது" என அதைக் கீழே கொண்டுவர முயற்சித்தல் போலவும், பிறகு கைகளில் (கண்ணுடிக்குள்) வந்து விட்டதும், 'விரோதியாயிருப்பினும் தாழ்ந்து வந்துவிட்டான்' எனஒரு வாறு சினங் குறைந்து சந்தோஷிப்பது போலவும், பிறகு விண்ணில் பார்க்கும்போது, "எது இவன் மிக்க கர்விபோல் இருக்கிறதே! தாழ்ந்து வந்தவன் போலப் போலி வேடங்காட்டி, 'பழையகந்தனே கந்தன்' என்றபடி ஆட்டங்காட்ட உயரப் போய்விட்டான்" என்று வெகுண்டு, பின்னர் ஆடியிற் கண்டதும் (பலகுற்றங்களைப் புரிந்த உயிராயினும், தனது குற்றங்களை உள்ளவா றுணர்ந்து பச்சாத்தாப மடைந்து, 'யாவும் அறியாதியற்றி விட்டேன்; அவையும் உன் னருளால் நிகழ்ந்தனவே யன்றி அடியேனுல் யாது செய்ய இயலும்? அடியேனுக்கு நின்னைத் தவிர வேறோர் துணையில்லை; ஆதலின் என் னைக் காப்பாற்றி யாட்கொண் டருளுதல் நின் பொறுப்பே யாகும்' என்று த்ரிகரண சுத்தியாய் விண்ணப்பித்துக் கொள்கையில், மன முவந்து பவங் களைந்து திருவருள் பொழியும் அம்பிகை யாதலின்,) 'குற்றத்தை யுணர்ந் திரங்கும் குணவானை மன்னித்தலே பெரியோர்க் கழகு' என்று எண்ணி மன்னித்தருளி மகிழ்வடைவது போலவும் தோன்றும்.

சிற்றில் பருவம்.

எல்லா வுலகங்களையும் உண்டுபண்ணி, ஒளிபெற ஒழுங்குடன் அமைக்கவல்ல பெருந்திறன் வாய்ந்த நமதம் பிகையும், சகல வுயிர்களையும் காத்துரக்ஷிக்கின்ற கருணை மூர்த்தியாகிய மகா விஷ்ணுவும் சாதாரண குழந்தைகளைப் போல உருவந்தாங்கி யுலகினில் ஒளிரும் அச் சமயத்தினில், அவ்விரு குழந்தைகளும் தெருவிலுள்ள சிறு குழந்தைகளுடன் கூடிக்கொண்டு மணலால் சிறு வீடுகள் கட்டுவதும், பிறகு ஒருவர் கட்டிய வீட்டை இன்னொருவர் கலைத்தலும், தான் கட்டிய அழகிய வீட்டை மற்றொரு குழந்தை கலைத்து விட்டதற்காக மன வருத்த முறுவதும், பிறகு கோபமாக எழுந்துசென்று தன்வீட்டைக் கலைத்த குழந்தை கட்டியிருக்கும் வீட்டை விரைவிற் கலைத்தலும், அப் போதும் தன் மன வருத்தம் நீங்காது 'என் அழகிய வீடு கலைந்துவிட் டதே' என அழுதலும், பின்னர் பல சிறுவர் சிறுமிகளும் வந்து

சமாதானம் கூறுகையில் அவர்கள்மேல் கோபங்கொண்டு எல்லாரும் கட்டியுள்ள சிறுவீடுகள் அனைத்தையும் அரை நொடியிற் கலைத்தலும், பின்பு சிறிது நேரம்சென்று யாவரும் சமாதானமாகி மனமகிழ்வுற்று, பலர்மீதும், அன்புகூர்ந்து, எல்லாக் குழந்தைகளுக்கும் தானே மிக அழகான சிற்றில்களை அமைத்துத் தருதலும், அதன்பிறகு அனைவரும் ஒற்றுமையாகக் கலந்து விளையாடுதலும், (ஆய்ந்து நோக்குங்கால்) நம் வாசவீ தேவியார், தானே எல்லா வுலகங்களையும் படைத்தும் காத்தும் அழித்தும் திரித்தும் அனுக்ரகம் செய்யும் அம்பிகை யென்று அவனியிலுளார்க்கு அறிவித்தலே போலத் தோன்றும்.

மணற் சிற்றிலமைத்தும், மணற்சிறு சோறட்டும், முத்துக்களாலும் *மணிகளாலும் சிறு வீடுகள் கட்டியும், வெள்ளியினாலும் தங்கத்தினாலும் செய்த பாத்திரங்களை வைத்துக் கொண்டு விளையாடியும்,

சிறுமியர் பலரும் ஓரிடம் சேர்ந்து நமதன்னையை ராணியாக ஓர் ஆசனத்தமர்த்தியும், சில பெண்மணிகள் மந்திரித் தொழில் வகிப்பவ ரெனவும், சிலர் சேவகத் தொழில் பூணுவோ ரெனம், சிலர் குடிஜனங்கள் எனவும், சிலர் புலமை வாய்ந்தோ ரெனவும், தத்தமது உத்தியோகத்திற் கேற்ற வேடம் புனைந்தும், ராஜசபை நடத்தியும், புலவர்க்குப் பரிசீந்தும், பகைவர்களை ஜெயித்தும், ஜெயபேரிகை யடித்தும், வெற்றிச் சங்கம் முழக்கியும், இவ்வாறு சிலதினங்கள் விளையாடியும்,

சில தினங்களில் நமது வாசவியை உபாத்யாயினியாக வமைத்து, ஏனையோர் மாணவிகள் போல வமர்ந்து, பாடங்கற்றல் செய்யுள்களைப் பாராயணம் செய்தல் வேதம் ஓதுதல் முதலிய விளையாடல்கள் புரிந்தும்,

சில தினங்களில் நமதம்பிகையை ஆசார்யை எனக்கொண்டு ஏனையர் சிஷ்யைகளாக இருந்து நமதன்னையா ரியற்றும் பூஜைக்கு வேண்டிய உபகரணங்கள் யாவும் கொணர்ந்து தருதலும், ஆசார்யை சொல்லும் உபதேசங்களை யுணர்ந்து ஓழுகலும், யோகாப்யாசத்தை அனுஷ்டிப்பவர்போல் பத்மாசனத்தி லுட்கார்ந்து நிஷ்டையிலிருப்பது போல் சிறிதுநேரம் அசையாது உட்கார்ந்திருந்தும், பிறகு எல்லோரும்

ஒரே ஆரவாரத்துடன் கூடிக்களித்தும் குதித்தும் ஆடியும் பாடியும் அநேக வினையாடல்களைச் செய்து கொண்டு வைசியக் குழந்தைகள் வளமுறத் திகழ்வர்.

கோதிலாப் பண்புடன் குடிகளையோம்புங் கொற்றவராகிய குசுமசிரேஷ்டியாரும், அவரது அற்புதப் பத்னியாராகிய குசுமாம்பிகையும், நமதம்பிகையாகிய அருட் குழந்தைக்கு வாச நீராட்டுவித்தும், இனிய வுணவுகளை யூட்டுவித்தும், பல பூஷணங்களைப் பூட்டுவித்தும், மடிமேல் வைத்து மகிழ்ந்து முத்தாடியும், திருந்தாத குதலைச் சொற்களைக் கேட்டு மகிழ்ந்தும், கற்பகத்தருவின் கனியினையனைய அற்புதப் பொருள்களை அவாவின போதிலும், அக்கணந்தனிலே தருவித்துக் கொடுத்தும், சிறிய திருவிளையாடல்களைச் செய்யக்கண்டு கீளித்தும், கற்புள்ளவள் கணவனை யுபசரிப்பதுபோல உபசரித்தும், படிப்பில் ஆசை வைத்தவன் பாடத்தைப் பாராட்டுவதுபோலப் பாராட்டியும், தன்னை உயர்ந்தவனுக்க நினைத்தவன் தருமத்தை வளர்ப்பது போல வளர்த்தும், முன் சிறுமை யடைந்து பின் செல்வத்தைப் பெற்றவன் அச் செல்வத்தைப் பாதுகாப்பது போலப் பாதுகாத்தும், புத்ரச் செல்வத்தால் வரும்பயனை யடைந்தவராயிருந்தனர்.

அம்மனைப் பருவம்.

நம் குலக் கொழுந்தாகிய வாசவீ தேவியார் தன்னுடனெத்த பருவம் வாய்ந்த சிறுமிகளுடனமர்ந்து, கழற்காய்களைக் கைகளிற் கொண்டு, கழங்காடியும், அம்மனையாடியும், அகமகிழ்ச்சி யுடனும் அனைவரையுங் களிப்பித்தும், வெற்றியே கொண்டும், வினயமாய் நின்றும், இன்மொழி புகன்றும், எழிலுடன் பொலிந்தும், யாவர் மனத்தையும் கொள்ளை கொண்டு தெள்ளிய மழலையை உள்ளத் துவகையால் அள்ளிப் பொழிந்து, பிள்ளைப் பருவப் பெற்றியோடிலகி, ஒள்ளிய புன்னகை யொளிரவே பொலிதல், கள்ளமில் உள்ளத்தர் கருத்தினைக் கவரும் திறத்ததாய்த் திகழும்.

நமது மரபினிற் றோன்றிய மணிச் சுடராகிய வாசவியம்மையார் அம்மனைக் காய்களை அங்கையிற்றூங்கி அழகுடன் ஆடலை அண்மியே நோக்கின், அகத்தினில் மகிழ்ந்து வியப்புறத் தக்க அதிசயம் பற்பல அங்குனே தோன்றும்.

அம்பிகை தனது அழகிய கரத்தினுல் முத்தாலாகிய அம்மனைக் காயினைத் தாங்குகையில், அழகிய கரத்தினுடைய செந்தாமரை போன்ற சிவந்த ஒளி அக்காய் மீது படுதலால் அந்தக்காய் சிவப்பு நிற முடையது போலவும், பூர்ண சந்திரனைப் பழிக்கத்தக்க முகவதனத்தில் புன்னகை பூத்துப் பொலியும் முல்லையரும்புகளைப் போன்ற அழகிய பல் வரிசைகளின் சாயை அந்தக் காயிற் படுகையில் பரிசுத்தமான வெண்மை நிற முடையது போலவும், அந்தக்காய் உயரச் சென்றதும் அம்பிகையின் கருணை பொழியுங் கருவிழிகளின் ஒளி கடிதினிற் பாய்கையில் கருநிற முடையதோர் காயினைப் போலவும் தோன்றலால், முத்தாலாகிய அவ்வம்மனைக் காயானது,

செந்நிற மெனப் புகல் ராஜத குணத்தையும், வெண்ணிற மெனப் புகல் சத்துவ குணத்தையும், கருநிற மெனப் புகல் தாமத குணத்தையும் (வினைக்கீடாக) மாறி மாறி யடையும் ஓருயிரின் தன்மையை யொத்துத் தோன்றும்.

நம தம்பிகை, முதலில் முத்தினுலாகிய ஓர் காயையும், பிறகு செம்மணியா (சிய மாணிக்கத்தா) லாகிய ஓர் காயையும் எறிய அவை ஒன்றன் பின் ஒன்றுகச் செல்வது, சூரிய னுவன் தனது காதலியாகிய தாமரை மலரை பகைவனுகிய சந்திரன் கலந்து செல்வதைக் கண்டு பொறுதவனுகிப் பின் தொடர்ந்து விரட்டுவதைப் போலவுந் தோன்றும்.

குல விளக்காகிய கோதிலாப் பெண்மணி, முத்தாலாகிய காயொன்றையும் மரகதக் காயொன்றையும் நீல மணிக்கா யொன்றையும் எறிந்து விளையாடுகையில், நம தம்பிகையின் நடைக் குதாரணமான அன்னமும், குரற் குதாரணமான குயிலும், மொழிக் குதாரணமான கிளியும் ஒன்றே டொன்று போட்டியிட்டுச் சண்டை செய்தல் போலத் தோன்றும்.

வைசியர் குலத்தில் வந்தவதரித்த வளர் புகழ் மணியாம் வாசவீ தேவியைத் தோழியர் பலரும் சுற்றிலும் சூழ்ந்துமுத்தாலாகிய அம்மனைக் காய்களை அழகுடன் வீசவும், உடனே நம் அன்னை அநேக காய்களை அங்கையால் அள்ளி இடஜாரி வலஜாரியாய்ச் சுழன்று அதி

சாமர்த்யமாய் வெகு விரைவில் வீசவும், ஏராளமான காய்கள் உயரச் சென்று அந்தரத்தில் சுழல்கையில், நமது அன்னையார் அருளினாலே சிருட்டிக்கப் பட்டுள்ள பல்லாயிர கோடி அண்டங்களும் அந்தரத்தில் நின்று அற்புதமாய்ச் சுழன்று கொண்டிருப்பது போலத்தோன்றும்.

நம தருந்தவப் பயனு யவனியிற் ரோன்றிய அன்னையாம் வாசவி, அங்கைகளாற் பல அம்மனைக்காய்களை ஆர்வமோ டெறிந்து விளையாடுகையில், முத்து பவளம் மரகதம் மாணிக்கம் நீலம் கோமேதகம் புருஷராகம் வைரம் வைடூரியம் ஆகிய மணிகளாலாகிய காய்கள் மேலெழும்பிச் செல்வதற்குள், அங்கு நிகழ்ந்த அதிர்ச்சியினாலும் ஓசையினாலும் நம தம்பிகையும் தாதியரும் அணிந்துள்ள மலர் மாலைகளில் மதுவுண்ண வந்திருந்த வண்டினங்கள் பலவும் பறந் தெழுந்து மேல் நோக்கிச் சென்று ஒருபடாம் போலத் திகழ்வது நீல நிறம் பொருந்திய ஆகாயம் போலவும், மேலேசென்ற பலமணிகளாலாகிய காய்கள் கீழ் நோக்கி வருதல் (நம தன்னையாகிய பராசக்தி பூவுலகிற் சென்று பிறந் துள்ளமையால் நாம் அவ்வன்னையா ரவதரித்துள்ள பாரத நாட்டினைப் பல் வளனும் பண்புற விளையும் பக்குவ முடையதாய் பசுமை மிக்கதாய் ஆக்கிவிட வேண்டுமென் றெண்ணி) மேகக் கூட்டங்கள் யாவும் செறிந்து செழுமழையைப் பொழிவது போலவும், மேல்நோக்கிப் பறந்து சென்ற இசை யளிகளின் இரு மூன் றடிகளில் ஓட்டிச் சென்ற மகரந்தங்கள் சிந்துதல் ஆகாய வீதியிலிருந்து தேவர்களனைவரும் (' சர்வேஸ்வரியே திருவவதரித் துள்ளபடியால் இந் நாட்டில் இன்பம் பொலியக்கடவது! துன்பந் தொலையக் கடவது ! ' என்று) புஷ்ப வருஷத்தினைச் சொரிவது போலவுந் தோன்றும்.

பராசக்தியாகிய நம் பரிமதி வதனப் பாவை வாசவி ஓர் பளிங்கு பீடத்திற் பாங்கா யமர்ந்து அம்மனைக் காய்களை அழகுற வீசி அகமகிழ்வுடனே யாட, சுற்றிலும் பற்பல பாங்கியர்கள் பரிவுடன் செறிந்து நிறைந்து அம்மையார் ஆடும் காய்கள் அந்தரத் தேகும் அற்புதங் கண்டும், தவறுங் காய்களைப் பரிந்தெடுத்துப் பண்புடனீந்தும், "அங்கிங் கெனப்பிரித் தரிதற்கோ ணுதுமெய் யறிவாய் நிறைந்தொளிதரும், ஆதிபரதேவியே எமதகங்குளிர நீ அம்மானை யாடியருளே ! அகிலாண்டகோடியு மளித்தாளு மம்மையே அம்மானை யாடியருளே !! " என இயம்பியும்,

" மானே ! மரகத மயிலே ! பொறையெனு
மலையே ! ஞானமெ னும்
வாரிதி யே ! கரு ணைநதி யே ! மதி
வதனக லாநிதி யே !

வானே ! அதிலெழு மொளியே ! அருளொளி
மருவுமெ காமணி யே !
வாதனை தீர்த்தருள் வாரிச மீந்திடும்
வாணி ! ம னேன்மணி யே !

தேனே ! தீங்கழை ரசமே ! சுவைமிகு
செங்கனி யே ! அமு தே !
தெருள்மிகு மேலவ ருளமுறை வாசவி
தேவி ! ப ராபரி யே !

யானு ரெனவுணர் ஞானியர் தொழுமனை
யாடுக வம்மனை யே !
யாருமு வந்தினி தேத்துமெ கேஸ்வரி
யாடுக வம்மனை யே !! "

எனப் பலவாறுகப் பாடியும், பல நிறக் காய்களைப் பதிலுக்கு வீசியும், நாற்புறமும் ஓடியாடி விளையாடுவதைப் பார்க்கின், சகல வுலகங்களையும் நமதன்னையாகிய லோகமாதா இருந்த இடத்தி லிருந்தே இருவினைகளாகிய சூத்திரக் கயிறுகளைக் கொண்டு ஆட்டி வைப்பது போலத் தோன்றும்.

துவாதசாந்தப் பெருவெளியின் உள்ளொளி யாகி, ஆயிரந் தோட்டு அமல கமலத்து ஆனந்த ஜோதியாய் அற்புத தரிசனந் தந்து, அன்பர்களுக்கு ஆமுதமாகியே அறிவினுக்கு அறிவாக அரு மையாய் நனிகலந்து, இன்பமிகு தேறலாய் என்றுங் கசிந்தூறும் எமதன்னை வாசவி, தனது கரங்களினின்றும் முத்துக் காய்களை அழ குடன் எறியவும், அந்தக் காய்களைத் தொடர்ந்து செல்ல வன்னிய கருவிழியாகிய வண்டு, பார்வையாகிய கருத்தை மாத்திரம் மேலே செலுத்தி, அக்காய் உயரச் சென்று திரும்புவதற்குள் அக்கருத்து திரும்பிவிடத் தான் இருந்த இடத்திலேயே இருக்கவும்,

இக்கருவிழியாம் வண்டைப் போலவே, குழலில் சூடியிருந்த மலரில் மதுவுண்ண வந்திருந்த வண்டுகளும், கையானது அம்மனைக் காயை எறிகையில், அக் கையைக் கண்டு தாமரை யென்றெண்ணி மதுவுண்ணச் சென்று, பின்பு கைகளென்று உணர்ந்து (ஏமாற்ற மடைந்து,) சென்ற கருத்தைத் திருப்பிக் கொண்டு, தா னமர்ந்திருந்த குழல் மலரிலேயே இருக்கவும்,

மணிகளாற் செய்யப்பட்ட அம்மனைக் காய்கள் நமதன்னை யின் கைகளால் மேலே யெறியப்பட்டு திரும்பி வருகையில், நமதம் பிகை தனது மழலை மொழிகளாற் பாடும் குயில் போன்ற குரலொலி யைக் கேட்டுக் கரைந்து சிறு சிறு துளிகளைச் சிந்தவும்,

பவளத்தாலாகிய அம்மனைக் காய்கள் நம் தாயின் சிவந்த விரல்களின் அழகைக் கவர்ந்து கொள்ள வேண்டுமென்னும் எண் ணங் கொண்டு செல்வதும் திரும்பி வந்து சேர்வதுமாகத் திரிதல் போலத் தோன்றவும்,

வேதாகமங்களும் விநயமாய்ப் பரவும் வித்தகியாகிய வாசவி யம்மையார், முத்துக்களாற் செய்த பல அம்மனைக் காய்களை அடை வுடன் வாரி அந்தரத்து விடுக்க, அவை வரிசையாக ஒரு மாலைபோல் அடுக்காக இறங்குகையில், நம தம்மையார் பரமாத்மாவை அருவ மாகப் பாவித்து முத்து மாலை சூட்டி வழிபடல் போலவும், அவ்வாறே நீல மணிகளாலாகிய காய்களையும், மரகதம் மாணிக்கம் கோமே தகம் வயிடூரியம் முதலியவற்றாலாய காய்களையும் எறிகையில், அவ்வம் மணிகள் கோத்த மாலைகளால் வழிபடல் போலவும், பல மணிகளா லாகிய காய்களையும் ஒருங்கே வாரி வீசி யாடுகையில் வானவில் அமைத்தது போலவும் தோன்றவும், இத்தகைய பல வியப்புகளுண் டாக மிக்க மகிழ்வுடன் அம்மாளை யாடுவர்.

எங்கும் நிறைந் தொளிர் இறைவியாகிய நமது அருமைக் கண்மணி, பெருமைப் பொன்மணி, அறிவாம் நன்மணி, அருளாம் ஒண்மணி தருமோர் அம்மணி, வாசவி யென்றே வந்தொளிர் பெண்மணி, தனது வண்கரங்களினால் வாலொளி முத்தின் காய் பல வற்றினை வாரிமேலேவவும், அவை வரிசையாய்ப் பரந்து வர்றை

எழுந்து வளரொளி சிறந்து வகையுட னிறங்கி வருபோது கண்ட வனிதையர் பலரும், தங்கள் வார்விழி சாயையைக் காயினிற் கண்டு, 'வருகாய் கறுப்பு' என்றும், முறுவலின் ஒளியினைக் காயினிற் கண்டு, 'முந்தி வருதல் வெண்மை' என்றும், செந்தாமரைநிகர் கைக ளினுருவைக் காய்களிற் கண்டு, 'செம்மணிக் காயொன்று வருகின் றது' என்றும், செப்பும் மொழிகளைச் சீருடன் நோக்கின்,

"பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூர ணானந்த பரமான்மா வானவன் எங்கள் மதத்தில் தான் பூர்ண ஸ்வரூபனுயிருந் தருள்புரிகின்றனன்" என்று தாழ்ந்த நோக்கத்துடன் ஒரு மதக் கொள்கையே உயர்ந்ததெனப் பிதற்றும் மாந்தர்க்கு நிகராக அம்மாதரும் தோன்றினர்.

நீர் விளையாட்டுப் பருவம்.

மெய்த்தவப் பக்தர்கட்கு அற்புதப் பொற்புறச் சிற்சுகத்தைத் தரும் கற்பரை வாசவி, தாயாருடனும் தாதி யருடனும் தடாகத்திற்குச் சதுருடனேகியும், தனது முகத்திற்கும் உள்ளங் கைகட்கும் பகையா யிருத்தலால் அவற்றைக் கிள்ளி யெறிதல் வேண்டுமென் றெண்ணிக் கொய்தல்போல அந்நீர்க்கரையி லுள்ள செங்கமலங்களை அங்கையாற் கிள்ளியும், கண்களுக்குப் பகையாயுள்ள கரு நீலங்களைக் கடிதினிற் கிள்ளக் கருத்தினில் நினைத்துக் களைதலே போல நீலோற்பலங்களை நேர்த்தியாய்க் கொய் தும், நாசிப் பகையாங் குமிழம் பூவை நாடியே பார்த்து நகங்களாற் கிள்ளியும், பற்களின் பகையாம் முல்லை யரும்புகளை முனைந்து பறித் தும், உதட்டைப் பகைக்கும் கொவ்வைக் கனிகளைக் கொடிதெனக் கொய்தும்,

நடையில் போட்டி யிடுவதால் கோபங்கொண்டு துரத்துதல் போல அன்னப் பறவைகளை ஓடிப்பிடித்து உவந்து விளையாடியும், சாயலில் ஒத்திருத்தலால் முனிந்து பிடிக்கச் செல்வதைப் போல மஞ்ஞைகளுடன் ஓடிச் சென்று மகிழ்ந்து விளையாடியும், "தேன் போன்ற இனிய மொழிகளில் போட்டியிடுவதால் உன்னை விட மாட்டேன்" என்று கையினல் நன்கு பற்றிக் கொள்வதே போல் பைங்கிளிகளைக் கையில் பிடித்துப் பரிவுடன் பேசிப் பாங்குற

விளையாடிய பின்னர் பறக்க விடுத்து, அவைகள் பறந்து செல்லும் எழிலைக்கண்டு உளங்களிகூர்ந்தும், இன்னோரன்ன பலஅற்புதங்களைக் கண்டு ஆனந்தித்து அக மகிழ்வுற்றும், அன்பும் ஆர்வமும் பொங்க விளையாடுவர்.

அச்சமயத்தில் மிக்க அருமையான தீங்குர லொலியுடன் தாமரை மலர்களில் தேனுண்ண வந்த வண்டினங்கள் பாடலும், மாதர்களனைவரும் தாங்கள் பேசிக்கொண்டிருந்ததை நிறுத்தி, அக் குரலொலி கேட்குந் திசையை உற்று நோக்கவும், அம்மாதரின் முக மாகிய மதியைக் கண்டு பங்கயம் முகிழ்ப்பத் தங்கள் குரலைத் திருடி வந்த வண்டினங்களை அம் மாதர்கள் சிறையிலிட்டது போலத் தோன்றவும், பிறகு அவ்வனிதையர் ஒவ் வொருவரும் ஒவ்வோர் கம லத்தருகில் சென்று, ' வண்டுகள் உள்ளே மெதுவாகப் பாடினலுங் கேட்டு ஆனந்த முறுவோம் ' என்று எண்ணி, செவிசாய்த்துக்கேட்க, அவர்கள் காதுகளில் அணிந்திருந்த வைரத் தோட்டின், ஒளியைக் கண்டு, ' சூரியன் வந்து விட்டான் ' என்று பங்கயங்கள் மலர, உள்ளே யிருந்த வண்டினங்கள் ரீங்காரம் செய்து கொண்டு பறந்து செல்வதைப் பார்க்கின், அந்த வனிதையர்கள் சற்று மனமிரங்கி, "இதுகாறும் இவைகளைச் சிறைச் சாலையில் வைத்திருந்தது போதும்" என்று எண்ணித் திறந்துவிட்டது போலவும் தோன்றும்.

நீரிலுள்ள பாசியும் நீண்டடர்ந்த கூந்தலும் ஒத்துத் தோன்ற வும், செவ்வல்லி மலர்களும் செங்காந்தள் மலர்களும் இள மென் கரங்களும் இது வது வெனத் தெரியாது இணையாய்த் தோன்றவும், செந்தாமரைகளும் திருமுக மண்டலங்களும் சேர்ந்தே திகழவும், தேமாந் தளிர்களும் மாதர்கள் மேனியும் தெவ்வியமாகவே ஒத்துத் தோன்றவும், குயில்களின் ஒலியும் குழலின் இசையும் கொம்பனையார் குரலும் ஒன்றுய்த் தோன்றவும், நீலோற்பலங்களும் மாதர்கள் கண் களும் நேத்தியோ டொத்து நிகரெனத் தோன்றவும், இவர்களின் முழந் தாள்களின் எழிலும் ரெண்டின் குழுவும் இணையாய்த் தோன் றவும், வரால் மீன் கூட்டமும் வனிதையர்களின் வனப்பார்ந்த கணைக் கால் நீட்டமும் வரிசையாக ஒன்றுய்த் தோன்றவும், தடநீரின் ஒலியும் மடவாரின் அடிகளில் நிலவும் அழகிய நூபுரங்கள் அலம்பும் ஒலியும் இசைந்தே இலங்கவும், துல்லியமாக மெல்லென வீசுங் காற்றுல்

பூந்துகிலசையவும், மதிமுகங் குளிரவும், மனச்சாந்தி மிளிரவும், மாஞா னம் ஒளிரவும், இன்பமே வளரவும், துன்பமே தளரவும், உளமகிழ் கிளரவும்,

நீரினிற் சிறிது தூரமிறங்கி, சற்றுநேர மிருந்து, கூறரு முவ கையொ டாடி மகிழ்ந்து, நீரில் குளித்து, மனது களித்து, செம்மை தளிர்த்து, மலர்கள்பறித்து, கையில்நிறைத்து, புவியில்தெறித்து, மகிழ்வு குறித்து, ஓடியொளித்து, தேடி யடுத்து, நாடிமறித்து, நுதலே நெறித்து, முனிவுதவிர்த்து, இனிதுசிரித்து, கனிகள் குவித்து, கடிதிலுரித்து, விதை கள் பிரித்து, விரைவில் புசித்து, கவிதை யிசைத்து, உவகை தெழித்து, அன்பு கொழித்து, இன்பு செழித்து, நண்பு தழைத்து, பண்பு மிகுத்து உண்மை யுரைத்து, நிண்மை நினைத்து, நன்மை விளைத்து, தண்மை நிலைத்து, பொழுது கழித்து, பொன்னவிர் மாளிகை புகுந்து பொலிந்து பொற்புற விளங்குவர்.

குசும ஸ்ரேஷ்டியாரின் அரண்மனைக்கே அருளொளியாய் விளங்கும் நம தருமைச் செல்வியாம் ஆனந்தவல்லி ஆதிபராபரை அம்பிகை வாசவி அக மகிழ்வேறும்

ஊசற் பருவம். தாதியர் பற்பலர் அருகினில் சூழ அழகுடன் சென்றே, (பவளக் கால்களைப் பண்புற வமைத்து, பொற்புடன் படிகப் போதிகைகள் வைத்து, கோமே தகத்தாற் கொடுங்கைகள் நிறுவி, வயிர விட்டத்தினை வாகாய்ப் பொருத்தி, தங்கவல்லியங்களைச் சதுருடன் மாட்டி, நில வொழுகுவதை யனைய தரள வடம் வீக்கி, நல்லொளிகாலும் நவ ரத்தின மிழைத்த அற் புதப் பலகையினை அழகாய்த் தொங்கவிட்டு, விநோதமா யமைத் துள்ள) ஊஞ்சலி லமர்ந்து, உல்லாசமாய்ப் பொலிய, பாங்கியர்கள் பற்பலரும் அருகினில் நின்று, பேரன்போடும், மிகுந்த ஆர்வத் தோடும், குயிலின் குரலும் குழலின் ஒலியும் யாழின் இசையும் பின்னிடுமாறு, மிகவும் இனிமையாக,

“ கருமுகில்கள் தவழ்ந்திடுமா ளிகையின் நாப்பண்
கனகமணி மண்டபத்தில் களங்க மில்லாத்
திருவனைய மாதர்பலர் செறிந்து வாழ்த்த
சேடியர்கள் பலர்வழுத்தச் செங்கை கூப்பி

அருமறையும் சாத்திரமும் ஆய்ந்தோர் போற்ற
அழகியவெண் சாமரைகள் அருகே வீச
இருள்கடியும் மதிவதனத் தெழிலே மின்ன
சரஸ்வரியே ! வாசவியே ! ஆடி ரூசல்."

"உலகமெலாம் படைத்தருளி யொருங்கே காத்தும்
உரியபக்கு வந்தனையே யுணர்ந்து நோக்கி
அலகில்பரா னந்தமெனும் அருளே நல்கும்
அற்புதப்பே ரொளிவடிவே ! ஆடி ரூசல் ;
நிலவுபல வருவமுமாய் நீக்க மின்றி
நிறைந்திலகும் மெஞ்ஞான நிலையே ! எங்கள்
குலமணியே ! குறைவில்புகழ்க் குசும னின்ற
குணமலையே ! வாசவியே ! ஆடி ரூசல்."

"கற்புநிறைந் திடுகுசுமாம் பிகைபு ரிந்த
கணக்கில்பெருந் தவவடிவே ! ஆடி ரூசல் ;
பொற்புறுமங் கையரழகெல் லாமொன் ரூகிப்
பொலிந்திடுமோர் புங்கவியே ! ஆடி ரூசல் ;
நற்புகழே ! பூரணமே ! நவிலற் கொண்ணு
ஞானமெனும் சாகரமே ! ஆடி ரூசல் ;
சிற்பரியே ! சித்துருவே ! திகழும் மேலாம்
திவ்வியதே ஜோமயமே ! ஆடி ரூசல்."

என்பன முதலிய பண்களை யிசைக்கப் பொங்கு மகிழ்வுடன் ஊச லாடியும்,

பின்பு, தோழியர் சூழச் சோலையிற் சென்று, ஆங்குறு மரங் களின் அழகிய சினைகளில் நறுமலர்க் கொடிகளால் நன்கமைத் திடு மோர் ஊசலில் அமர்ந்து உவகையோடாடியும், கீதங்கள் பாடியும், கீழே யிறங்கியும், ஓடி விளையாடியும், ஒருவருக் கொருவர் கண்களைத் துகில் கொண்டு மூடித் தொடர்ந்து சென் ரோடியும், தேடிப் பிடித் தும், கூடி நகைத்தும், குளிர்ந்து விளையாடியும் குலாவி மகிழ்வர்.

பின்பு, பளிங்குமண்டபத்திற்கு வந்து, வெள்ளுடை தரித்து, வயிராபரணங்களைப் பூண்டு, அம்மண்டபத்தின் கண்ணே முத்திலல் அமைக்கப் பட்டிருக்கும் ஊஞ்சலி லமர்ந்து திருவூச லாடுகையில் பார்த்தால் சரஸ்வதி தேவியைப் போலவும்,

பவள மண்டபம் சென்று, சிவந்த பட்டாடை புனைந்து, கெம்பிலுலும் செம்மணிகளாலும் ஆகிய பூஷணங்களைப் பூண்டு, பவள ஊஞ்சல் மீதமர்ந்து பரிவுட னுடுகையில் பார்த்தால் சாகூஹாத் மகா லட்சுமியைப் போலவும்,

பச்சை மண்டபத்திற் பரிவுடன் சென்று, பச்சைப் பட்டாடையைப் பாங்காய்ப் புனைந்து, மரகத மணிகளாற் செய்த ஆபரணங்களை யணிந்து, மரகத ஊஞ்சலில் மாட்சியோ டமர்ந்து மகிழ்வுட னுடுகையில் ஸ்ரீ பார்வதா தேவியைப் போலவும் தோன்றும்.

சிலதினங்களில் மஞ்சளாடை தரித்து, பைம் பொற் பணிகள் புனைந்து, தங்க மண்டபத்திற் சார்ந்து, பொன்னூசலி லமர்ந்து பொற் புடன் ஆடலும், மற்றும் சில நாட்களில் நீல வுடை தரித்து, நீல மணிப் பூண்கள் அணிந்து, நீலமணி மண்டப மூற்று, நீலமணி யூசலி லமர்ந்து, நேர்த்தியோடாடலும் பார்ப்பவர் கண்களுக்குப் பரமானந்தத்தை யளிக்கும்.

சிறுபறைப் பருவம்.

வீர சிங்கக் குருளை போன்ற இளஞ் சிறுவனுகிய விரூபாட்சனும், வாசவாம் பிகையும் சில வினோயாட்டு வாத்தியங்களை வைத்துக் கொண்டு ஒலி முழக்கியும், வாய்க்கு வந்தபடி மழலைச் சொற்களால் பாடல்கள் பாடியும் வினோயாடுவது எப்படி யிருக்கு மெனின், "ஓ பாமர ஜனங்களே! நீங்கள், 'கடவுள், பல' என்றுவது, 'உருவம்' என்றுவது, 'அருவம்' என்றுவது 'உருவருவம்' என்றுவது, 'ஆண் தான்' என்றுவது, 'பெண்தான்' என்றுவது, சண்டையிடாதீர்கள். உருவாயிருப்பதும், அருவாயிருப்பதும், உருவருவாயிருப்பதும், ஆணுயிருப்பதும், பெண்ணுயிருப்பதும், பாமேவு தெய்வப் பழமறையும், தேமேவு நாதமும், நாதாந்த முடிவும், நவைதீர்ந்த போதமும், பந்தந் தணந்த பரஞ்சுடரும், எங்கும் செறிந்தே யிலகுமெய்ஞ் ஞானமும், மனுதிகளுக்கெட்டா வடிவும், பஞ்சவித ரூப பரசுகமும், தொன்னூற் பரசமயந் தோறும் அதுவதுவே நன்னூலெனத் தெரிந்து நாட்டுவிப்பதும், முந்நூல் விரதம் முதலாய பல மெய்த்தவத்தி னுண்மை, சரியை, கிரியை, யோகங்களைச் சார்விப்பதும், ஆனந்த வமுதை அருந்த அளிப்பதும், கருணை திருவுருவாய்க் காசினியில் தோன்றுவதும்

யாவும் யாமே. *உயிர்வர்க்கங்கட்கு அனுக்ரஹிப்பான் வேண்டி, யாமே பலவுருக் கொள்வோம். ஆதலால் இனிமேல் பேதச்சண்டைகளின்றி எங்கும்நிறைந்துள்ள எமது தன்மையை (அறிவெனும் ஒளியை) அறிந்து வழி பட்டு ஆனந்த மடைமின்! ஆனந்த மடைமின்!!"

---

* "உருமேனி தரித்துக் கொண்ட தென்றனு முருவி றந்த
அருமேனி யதுவுங் கண்டோ மருவுரு வான போது
திருமேனி யுபயம் பெற்றேம் செப்பிய மூன்றும் நந்தம்
கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவு தானே"

"ஒருவனே யிராவ ணுதி பாவக முற்றுற் போலத்
தருவனிவ் வுருவ மெல்லாந் தன்மையுந் திரியா ஞகும்
வரும்வடி வெல்லாஞ் சத்தி சத்திதான் மரமும் காழ்ப்பும்
இருமையும் போல மன்னிச் சிவத்தினே டியைந்து நிற்கும்"
(சிவஞான சித்தியார்)

"பொன்னிறங் கட்டியினும் பூணினும் றின்ருற்போல்
அந்நிறம் அண்ணலும் அம்பிகையும் — செந்நிறத்தள்
எந்நிறத்த ளாயிருப்பள் எங்கள் சிவபதியும்
அந்நிறத்த ஞயிருப்பன் ஆங்கு" (திருக்களிற்றுப் படியார்)

"இருசுடர் முலைத்துணைச் சிவன்வடிவு நீயதனே யானுநவ மாக நீனவேன்
உருவநிறை தன்னிலை வொத்தபர மானந்த முடையபர னேடு பரையாய்
மருவுமினி தாமுங்கள் கூட்டமது சேடமு மறுத்ததனை யுடைய துவுமாய்
அருகிலிரு வர்க்குமொரு பொதுவாகி நிற்குங்கொ லழிவற்ற ஞான முதலே"
(சௌந்தரியலகரி)

"ஒன்ரு யிருநிறமா யோரைந்தா யையைந்தாய்
அன்ரு தியின்மீட்டு மைந்தா யளப்பிலையாய்
நின்ராய் சிவனேயிந் நீர்மையெலாந் தெங்ககற்றி
நன்ராவி கட்கு நலம்புரிதற் கேயன்றோ?" (ஸ்கந்த புராணம்)

"ஆணினோடு பெண்ணுமாகி யல்லவோடு நல்லவாய்" (திருமழிசை யாழ்வார்)

"சன்தாளுமாய் எனக்(கு) எந்தையுமாய்" (திருநாவுக்கரசர்)

"அம்மையே! அப்பா!" (மாணிக்கவாசகர்)

"இலனது உடையனி(து) எனநினே வரியவன்
நிலனிடை விசும்பிடை உருவின னருவினன்
புலனொடு புலனலன் ஒழிவிலன் பரந்தவந்
தலனுடை யொருவனை நணுகினம் நாமே"

"நாமவ னிவனுவன் அவனிவ ளுவளெவள்
தாமவ நிவருவ ரதுவிது வுதுவெது
வீமவை யிவையுவை யவைநலம் தீங்கவை
ஆமவை யரயவை யரய்தின்ற வவரே"

"உளனெனில் உளனவன் உருவமிவ் வுருவுகள்
உளனலன் எனிலவ னருவமிவ் வருவுகள்
உளனென இலனென இவைகுண முடைமையில்
உளன்இரு தகைமையோ டொழிவிலன் பரந்தே" (நம்மாழ்வார்)

எனப் பரம் பொருளே வந்து பறை சாற்றி உணர்த்துதல் போலத் தோன்றும்.

இவர்கள் இருவரும் தெருக்களிலே சிறுதேருருட்டியும், சிறுவர்களுடனே சேர்ந்துகொண்டு பலவிதமான விளையாடல்களைப் புரிந்தும் உள்ளக் களிப்புடன் உலாவித் திரிவர்.

சிறுதேர்ப் பருவம்.

§ "எல்லா வுலகங்களையும் உண்டாக்குகின்ற அருள் வல்ல பத்திற் காதார மூலமாக விளங்குகின்ற மகா சக்தியும், அச்சத்தியா லுண்டாக்கப் பட்ட எல்லா வுயிர்வர்க்கங்களையும் காத்து ரட்சித் தருளுகின்ற காப்புக் கடவுளாகிய மகா விஷ்ணுவும் தமதருள் விளையாட்டால் சிறு குழந்தைகளின் படிவத்துடனே பாரிற் போந்தன ராகலின், அவர்கள் உருட்டும் அழகிய சிறு விளையாட்டுத் தேர்களாகவும், வனப்பு மிக்க சிறு வண்டிகளாகவும் வடிவ மெடுத்து இவ்விருவரது தரிசனம் காண்பதற்கு ஏனைய பல அண்டங்களே வந்துள்ளனபோலும்!" என்று எண்ணும்வண்ணம் அவ்வளவு அழகுடன் அற்புதமாய்ப் பொலியுஞ் சிறு செம்பொற் றேர்களை மிகத் திறமையாகவும், தெவ்வியமாகவும், வேகமாகவும், விநோதமாகவும், வேடிக்கையாகவும் ராஜ வீதியிலே யுருட்டி விளையாடுவர்.

கலை பயிற் பருவம்.

இவ்வாறு இருக்குங் காலையில், வைசியர் குலத்தின் வளரொளி விளக்காய் வந்தவதரித்த வாசவாம்பிகைக்கும், வீர சிங்கம் போல வீறுடன் விளங்கும் விரூபாட்சனுக்கும் நான்காண்டு சம்பூர்ணமாகி ஐந்தாவது ஆண்டு ஆரம்ப மாயது. அஃதுணர்ந்த குசுமஸ்ரேடியாரும் குசுமாம்பிகையும் மனமகிழ்வுற்றவர்களாகி நல்லதோர்

---

§ "எள்ளரிய பல்லுயிரும் எவ்வுலகும் ஈன்றருள்"

"பரையாதி விருப்பறிவு தொழிலாகி யுலகமெலாம் படைத்துக் காத்து வரையாது துடைத்துமறைத் தருளியவை நின்றுந்தன் வடிவு வேறாய் உரையாதி மறை கடந்த வொரு முதல்வி"

"கள்ளமா நெறியொழுகும் பொறிகடந்து கரணமெலாங் கடந்தானந்த வெள்ளமாம் பரஞான வடிவுடையாள்" (திருவிளையாடற் புராணம்)

சுதினத்திலே சுப லக்னத்தில் இவ்வருட் குழந்தைகளிருவரையும் குரு குலத்திற்கு அழைத்துச்சென்று ஆசார்யரிடத்தில் அட்சராப்யாசம் செய்வித்தனர். அத்தினத்திலே குசும ஸ்ரேஷ்டியாருடைய அழைப்பிற் கிணங்கி விஜயம் செய்திருந்த வேதாகம நூலுணர்வு மிக்க விழுமியோர்களும், வித்யா வல்லுனர்களும், சாஸ்த்ர விற்பன்னர்களும், வித்தகர்களும், வித்துவான்களும், சுற்றத்தார்களும், நட்பினர்களும், உற்று நிறைந்து, தேசு திகழ்ந்து, பேசி மகிழ்ந்து, ஆசிமொழிந்து, அன்பு செறிந்து அளித்த விருந்தை அருந்தி யுவந்து, வியந்து புகழ்ந்து நடந்தனர் நன்கே.

நமது வாசவாம்பிகையும் விரூபாட்சனும் கலை பயிலும் குருகுலம் அநேக அழகிய போர்ணசாலைகளையும், படர்ந்து விரிந்து அடர்ந்த நிழலைத் தந்திலகும் ஆல் அரசு வேம்பு முதலான பல விருட்சங்களையும் கொண்டு மிக விசாலமான இடத்தில் வெகு விநோதமாய்த் திகழும்.

ஆங் கிருக்கும் உபாத்யாய உபாத்யாயினிகளை நோக்கின், அவர்கள் ஹயக்கிரீவனிடமே பாடங் கற்றுக் கொண்டவர்களோ என ஐயுற வேண்டியிருக்கும்.

அக் குருகுலத்தில், பெனுகொண்டாவிலும் அதைச் சார்ந்த பதினெண் புரங்களிலு மிருப்போர் மாத்திரமன்றி, பாரத நாட்டின் எல்லா மூலைகளிலிருந்தும், இளஞ் சிறுர்களும் சிறுமியர்களும் வாணியருளைப் பெறுவதற்கு வந்து குவிந்த வண்ணமாக இருப்பர். அவ்வவர்களின் பெற்றோர்கள் ஆங்கு அழைத்து வந்து ஒப்புவித்துச் செல்வர்.

பாரத பூமியிலுள்ள எல்லா பாஷைகளையும் பேசும் நானா ஜன சமூக இளைஞர்களும் பெண் மணிகளும் வெகு ஜாக்கிரதையாகவும், மிக்க பிரியமாகவும் பாதுகாக்கப் படுவர். அவர்களுக்கு வேண்டிய உணவாதிய சகல வசதிகளும், தங்கள் வீட்டைவிட இங்கே மேலாகக் கிடைப்பதாலும், இங்கு உள்ள யாவரும் தமது தாய் தந்தையர்களைக் காட்டிலும், பன்மடங்கு பிரியத்தோடும் ஆதரிக்கின்றமையினாலும், தாம் பிறந்த இல்லத்தை மறந்து, அவர்கள்

தமது ஜீவிய காலம் முழுதும் இங்கேயே தங்கிவிடலாம் என எண்ணுந் தகைமைத்தா யிருக்கும்.

அக் குருகுலத்திற்கு வேண்டிய சகல வசதிகளையும் நமது குசுமஸ்ரேஷ்டியார் தம் சொந்த செலவில் செய்துகொண்டுவந்தனர். அ தனல் அக் கலாசாலைக்கு "குசும வித்யாலயம்" என்றும், "குசுமார்ய குருகுலம்" என்றும் பெயர் ஏற்படலாயிற்று.

இந்தக் குசும வித்யா பீடத்தில் கலை பயில்வோர் யாவரும் நாடோறும் ரௌத்ரீய முகூர்த்தத்தில் (4½ மணிக்கு முன்) துயில் விட்டெழுந்து, தந்த சுத்தி செய்துகொண்டு, கடவுளைத் தொழுது, முன்னுள் படித்த பாடங்களை ஞாபகப்படுத்திக்கொண்டு, கூந்தலை முடித்து, புஷ்பங்க ளணிந்து, பரிசுத்தமான கதர் ஆடை புனைந்து, நெற்றியில் திருநீறு திருமண் திலகம் ஆதிய சுபச் சின்னங்கள் தரித்து ப்ரசன்ன முகங்களுடன்,

("வேதவல்லீ! வித்யாவதீ! விதுஷீ மணீ! விஸ்வ மாதா! ப்ருகந் நாயகீ! மகாமதீ! மேதாவீ! மனோ நாயகீ! தீ மதீ! த்ரிபுர சுந்தரீ! தைவ மணீ! தேவபந்து! ப்ரேம நாயகீ! தயாபரீ! ராம ப்ரீயா! கிருஷ்ணப்ரியா! குஹப்ரியா! யோகமாதா! கல்யாணீ! கமலோத்பவீ! மனோன்மணீ! ஞானசக்தீ! சிவமாயா! சிவப்ரியா! சுந்தரீ! ஜயா! விஜயா! பத்மினீ! பவானீ! ருத்ராணீ! புவனேஸ்வரீ! மகேஸ்வரீ! காமாட்சீ! கமலாட்சீ! விசாலாட்சீ! உமா! சர்வஜன ப்ரியா! மகாலட்சுமீ! சரஸ்வதீ! சாவித்ரீ! அன்னபூர்ணை! சிவகாமீ! பத்மாட்சீ! விமலா! சந்த்ரவதனை! சசிலேகா! கலாரூபிணீ! நிரஞ்சனீ! ஹம்ஸாஸனீ! கமலாஸனீ! புண்யகாந்தா! ம்ருதுவசனீ! பத்மாஸனீ! வரலட்சுமீ!" என்பனவாதிய நாமதேயங்களைச் சொல்லிச்) சிறுமியர்களையும்,

("ஜகன்னுதா! ஜனார்த்தனை! தீனபந்து! தேவப்ரியா! ப்ரணதார்த்தீஹரா! பவபந்த விமோசனை! பார்த்தசாரதீ! ராமச் சந்த்ரா! ஸ்ரீகண்டா! சின்மயநாதா! சுத்த சாத்வீகரா! ஷண் முகா! ஞானசம்பன்னை! ஸ்ரீதரா! ஸ்கந்தா! பக்தவத்ஸலா! ஜீவ ரக்ஷகா! ஸநாதனை! ஸுமனோகரா! சுப்ரம்மண்யா! க்ருபாநிதீ!

ஸாமப்ரியா ! த்ரிமூர்த்தீ ! சதாசிவா ! ம்ருத்யுஞ்ஜயா ! க்ருஷ்ணா ! கமலநாதா ! வாசுதேவா ! கோவிந்தா ! அனந்தஸயனா ! கோவர்த்தனா ! கோபாலா ! ஸத்யவாசா ! வேணுநாதா ! தாமோதரா ! நாராயணா ! தீர்த்தபாதா ! தயாநிதீ ! பாஸ்கரா ! ஸ்ரீராமா ! ராஜேந்த்ரா ! த்ரிலோக ரக்ஷகா ! புண்யோதயா ! ஜானகீ ராமா !" என்பனவாதிய நாமதேயங்களைச் சொல்லிச்) சிறுவர்களையும், (ஒருவர்க்கொருவர்) அழைத்துக்கொண்டு குழாங் குழாங்களாகக் கன்னிகைகள் ஓர்புறமும், சிறுவர்கள் ஓர்புறமும் மிகவும் ஆனந்தமாக சிரித்துக்கொண்டும், இனிய வசனங்களைக் கூறிக்கொண்டும், தத்தமது பாடங்களில் ஆசிரியர் கூறிய அற்புதப் பொருள் விசேஷங்களைப்பற்றி வியந்து புகழ்ந்துகொண்டும், ஒருவர் புயத்தின்மேல் ஒருவர் கை போட்டுக்கொண்டும் மிகுந்த ப்ரேம சல்லாபங்களுடன் போகும் பவனியை நோக்கினால்,

" பெனுகொண்டா நகரத்தில் மிக அருமையான வித்யாலயம் அமைந்துள்ளபடியால், நாமும் என் ஆங்கு சென்று கலைபயிலக் கூடாது ? " என்றெண்ணி தேவலோகத்துச் சிறுவர்களும் சிறுமியர்களும் வருகின்றார்களோ ? என வியக்கத் தக்கதாயிருக்கும். அன்றியும், இவர்கள் செல்வதைப் பார்த்தால், கோகுலத்தில் ப்ருந்தாவனத்தில் ஸ்ரீ கண்ணபிரானோடு ஆடிப்பாடி ஆனந்தமாக இளஞ் சிறு கோபாலர்களும் கோபிகைகளும் ஒருவரையொருவர் அழைத்துக் கொண்டு, சந்தோஷத்துடன் தாண்டவமாடிக்கொண்டு, யமுனை நதிக் கரையில் விஹரித்த கோப சங்கத்தையும் நினைவுப்படுத்தும்.

அன்றியும், நமது வாசவாம்பிகை தனது ஸ்நேகிதைகளுடன் கூடிக்கொண்டு மனமகிழ்ச்சியோடு அதி யுல்லாசமாகச் செல்வதைப் பார்த்தால், ஸ்ரீவில்லிபுத்தூரில் பெரியாழ்வாராகிய விஷ்ணு சித்தரின் தனயையாய்த் தோன்றி, திருமால்மீது கரைகடந்த பக்திகொண்டு யாவரையும் அவ்வுத்தம பக்தியில் ஈடுபடுத்தி அதி காலையில் அனைவரையும் எழுப்பிக்கொண்டு நீராடப் புறப்பட்ட கோதையாரையும் (ஸ்ரீ ஆண்டாள்) அவர் குழாங்களையும், (மாணிக்கவாசக ஸ்வாமிகளால் திருவாசகத்தில் திருவெம்பாவை யெனும் திவ்ய ப்ரபந்தத்தில் வியந்து கூறப்பெற்ற) திருவண்ணமலையில், ஒருவரையொருவர் எழுப்பிக் கொண்டு, (ஆதியும் நடுவும் அந்தமுமில்லா அரும் பெருஞ் ஜோதியாம்

அந்திவண்ணனை அற்புதக் கூத்தனை அகமுறத் தொழுது போற்றிக் கொண்டு) ஆனந்தமாக நீராடச் செல்லும் சைவப் பெண்மணிகளின் குழாங்களையும் ஞாபகப்படுத்தும்.

சிறுமியர் குழாங்களுடன் செல்லும் நமது வாசவாம்பிகையும், சிறுவர் குழாங்களுடன் செல்லும் நம் விரூபாட்சனும் தாங்கள் இராஜகுமாரி அல்லது இராஜகுமாரன் என்ற எண்ணத்தை அறவே மறந்து, யாதொரு படாடோபமுமின்றி, சாதாரண குழந்தைகளைப் போல ஓலைச் சுவடிகளைத் தாங்களே கையிலேந்திக்கொண்டு, ராஜ வீதியைவிட்டு வெகு அழகாகக் குருகுலம் செல்லும் விநோதக் காட்சியைக் காணுகையில் யாவர் மனந்தான் அன்பும் ஆர்வமும் ஆச்சர்யமும் ஆனந்தமும் அடையாமலிருக்கும் ?

எல்லா மாணவ மாணவிகளும் ஒழுங்காக ப்ராம்மீய முகூர்த்தத்தில் ($4\frac{1}{2}$ மணிமுதல் 6 மணிவரை) குருகுலம் சென்று சேர்வர்.

ஆங்கிருக்கும் விசாலமான விருட்சங்களினடியில் ஆசிரியர்கள் அமர்ந்திருப்பதும், தத்தமது ஆசிரியர்களைச் சுற்றிலும் மாணவர்களும், ஆசிரியைகளைச் சுற்றிலும் மாணவிகளும், தத்தமது ஓலைச் சுவடிகளையும் எழுத்தாணிகளையும் கற்பலகைகளையும் எழுதுகோல்களையும் வைத்துக்கொண்டு, அணியணியாக அமர்ந்து அழகுற விளங்குவதும், அருகில் கோதாவரி தீர்த்தம் அற்புதமாகச் செல்வதும், தென்றல் காற்று மெல்லென வீசி மனோரம்ய மீவதும் யாவுங் காணில் அவ்வித்யாலயமானது இயற்கை யழகினை இனிதே விளக்கி யாவர் மனத்தையும் விரைவில் ஈர்க்கத்தக்கதாய் வனப்புடன் விளங்கும்.

குசுமார்ய குருகுலத்தில் உள்ள ஆசிரியர்களும் ஆசிரியைகளும் குழந்தைகளின் பரிபாகத்தை யறிந்து எவ்வெவர்க்கு எவ்வெவ் வயதில் எவ்விதமாக எவ்விஷயங்களைப் போதிக்கவேண்டுமென்பதை நன்கு உணர்ந்து, பாகுபாடுகளை ஏற்படுத்தி, ஆரம்பத்தில் தாய்பாஷையும் தேவபாஷையும் வேதபாஷையுமான சம்ஸ்க்ருதத்தைக் கண்டிப்பாய்க் கற்பித்து, பின்பு ஏனைய பாஷைகளைக் கற்பித்து, அவரவர்களுடைய தேசங்களில் எந்தெந்த மொழி வழங்கப்படுகிறதோ அந்தந்த மொழியில் தேர்ச்சியுறச் செய்து, காவ்யாலங்கார, இலக்கண, தர்க்க,

மீமாம்ச, ப்ரஸ்தானத்ரய, உபநிஷத்தந்தமாக யாவுங் கற்பிப்பர். அந்தப்படிப்பானது தற்காலத்திய சர்வ கலாசாலைகளில் போதிக்கப் படுவதைவிட எத்தனையோ மடங்கு சிறந்ததாயிருக்கும்.

ஆங்கு படிக்கும் பிள்ளைகளும் மிக்க பக்தி வினயத்துடனும், உண்மை யன்புடனும், அதி ஸ்ரத்தையுடனும், படித்துவந்தார்கள். ஊதியத்துக் கென்றுவது, உத்யோகத்துக் கென்றுவது, சுமாஸ்தா வேலைக்கென்றுவது, பட்டம் பதவிகள் பெறுவதற்கென்றுவது, நல்ல வரனையோ, நல்ல பெண்ணையோ, அதிக வரதட்சிணையையோ அடை வதற்கென்றுவது, 'என்னைவிட யாருளர்?' என்று இறுமாப்புறுவதற் கென்றுவது, உலகத்தார் தன்னை ஒரு பெரிய கல்விமானைக் கருத வேண்டுமென்றுவது எண்ணிக் கடமைக்குப் படிப்பவர்க ளல்லாத வாறும், அவரவர்களும் உண்மை யன்புடனும் கலைமகளருளை அடைய விரும்பி மிக்க உற்சாகத்துடன் கல்வி பயில்வோர்க ளாதலாலும், அவர்களுடைய கல்விச் சாலைக்கருகில் மிக ஆனந்தமாகச் செல்லும் கோதாவரி தீர்த்தத்தின், ஊற்றுப்போலும். அந் நதியின் தெள்ளத் தெளிந்த வெள்ள ப்ரவாகத்தைப் போலும் ("தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறு மறிவு" என்றவாறு) அவர்களுடைய களங்கமற்ற உள்ளத்திற் கல்வியாம் ஊற்று கடிதினிற் பெருகி வித்யா சாரமாகிய வெள்ளம் மிக ப்ரவாகமாய் பரவத் தொடங்கியது.

அவர்கள் வேதம் முதலான சகல கலைகளையும் ஆசிரியர் மூல மாய் முறைப்படி யோதி, மனதிலிருத்தி, மனனம் செய்து, ப்ரவசனத் தால் விஸ்தாரப்படுத்தி, அத்யயனம் செய்துவந்தார்கள். அக்காலத்தில் அத்தகைய ஊக்கத்துடனே கல்வியை ஆதரித்து வந்தமையினால்தான் நமது இத்தியாவின் பெருமை அன்றுதொட்டு இன்று வரையிலும் மங்காது மல்கி விளங்குகின்றது. இந்தப் பரத கண்டத்திற்குப் 'புண்ய பூமி' யென்ற நாமதேயங் கிடைத்ததற்கும் இத்தகைய குருகுலங்களின் விசேஷமன்றோ காரணம்?

அத்தகைய பெருஞ் சிறப்புவாய்ந்த நமது குசுமார்ய குருகுலத் திற்கு நமது பரமேஸ்வரியாகிய வாசவாம்பிகையும், விஷ்ணு அம்சமான

விரூபாட்சச் செல்வனும் தமது திவ்ய ஞான ஒளியினால் இன்னும் விசேஷ ப்ரகாசத்தை யுண்டாக்கினர்கள்.

இவர்கள் ஒருநாள் ஓரிடத்தமர்ந்து இலக்கண பாடத்தை இனிதே கற்பர். பாணினீ சூத்திரத்தைப் பாதஞ்சலீ மகாபாஷ்யத்துடனும், வர ருசியின் வாக்யத்துடனும், மகா வ்யாக்யானங்களுடனும் கேட்டுணர்ந்து தெளிவுறுவர்.

மற்றொருநாள் மற்றோரிடத்தில் அமர்ந்து ரகுவம்சத்தை மகா வ்யாக்யானங்களுடன் ஸ்ரீமத் ராமாயணத்திற்கு உள்ள சம்பந்தங்களுடன் விஸ்தாரப்படுத்தி, வாதானுவாதம் செய்தும், மற்றொருநாள் குமார சம்பவத்தையும் அதன் வ்யாக்யானங்களையும் ஸ்காந்த புராணத்தையும் ஸ்கந்த புராணத்தையும் ஒன்றுக்கொன்று ஒப்பு நோக்கி ஆராய்ச்சி செய்தும், சகல அம்சங்களும் மனதிற் பசுமரத் தாணி போற் பதியுமாறு பயில்வர்.

பிறிதொருநாள் பிறிதோரிடத்திலமர்ந்து சாகுந்தலம் முதலான நாடகங்களையும் அவைகளின் அர்த்த விசேஷங்களையும் சப்தாலங்கார விசேஷங்களையும் சந்தேகமறத் தெளிவுறக் கற்று சிந்தை மகிழ்வர்.

சிற்சில தினங்களில் அருமையான பாடல்களை இனிய குரலோடு இசையுடன் பாடிக் கற்றுக்கொண்டும், பக்க வாத்தியங்களுடன் பாடியும், வீணை, யாழ், புல்லாங்குழல், தும்புருவீணை, ராவணஸ்தம் முதலான பல வாத்யங்களை மீட்டிக்கொண்டும், ம்ருதங்கம் தாளம் கரதாளம் முதலான பலரக வாத்யக் கருவிகளை வாசித்துக் கொண்டும், பண்க ளிசைத்தும், ஸ்தோத்திரம் பாடியும், கீர்த்தனைகள் பாடியும், நாடகங்கள் நடித்தும், வெகு திறமையுடன் ஸங்கீதக் கலையில் தேர்ச்சிபெற்று வருவர்.

வேறோர் தினத்தில் வேறோரிடத் தமர்ந்து மகா பாரதமும், அதனுடைய ஆந்த்ர ப்ரவசனமும், அதை நிர்வகித்த நன்னைய பட்டி முதலியோரால் இயற்றப்பெற்ற ஆந்த்ர மகா காவியங்களும் யாவும் பரிசீலித்து, அதன் சம்பந்தங்களையும், ஆந்த்ர பாஷையின் பேரழகினையும், கவிப்பெருமான்களுடைய அகன்ற அர்த்தபாவங்களைக்கொண்ட வாக் ரமணீயத்தையும், பரிசுத்தமான தெலுங்கிற்கும் கீர்வாண

பாஷைக்குமுள்ள நட்பும், நயமும், இனிப்பும், ஒருமைப்பாடும் அறிந்து வியந்து ஆனந்தமுறுவர்.

இன்னொரு நாளில் இன்னோரிடத்தில் இனிதேயமர்ந்து, சூத்ரோக்த தர்மங்களையும், வைதிக க்ரியைகளின் ரகஸ்யங்களையும், நாடோறும் அனுஷ்டானம் செய்யப்பட்டு வருகிற சந்தியாவந்தனம், ஔபாஸனம், வைஸ்வதேவம், தேவபூஜை முதலிய க்ரியைகளின் தத்வங்களையும், ரகஸ்யங்களையும், அனுஷ்டான க்ரமங்களையும், அர்த்த விஸ்தாரங்களையும், அவற்றால் உண்டாகும் ப்ரயோஜனங்களையும், கேட்டும், ப்ரஸ்னித்தும், அறிந்தும், அனுஷ்டித்து வரும் வழக்கத்தைப்பற்றிப் பேசி மகிழ்ந்தும், வியந்தும் அவ்வாறே நடக்க முயலுவர்.

பின்னொர் நாளில் பின்னோரிடத் தமர்ந்து, விட்டில் க்ரகபதிகளும், குலஸ்த்ரீகளும், குலமக்களும் அவ்வந் நாளில் நடக்கவேண்டிய வழக்க முறைகளும், பெரியோரைச் சிறியோர் வணங்கும் முறைகளும், வழிபடும் முறைகளும், யாவுந் தெளிவுறக் கற்று, தாமே நடந்து கொள்வதும், நடாத்துவதும், கற்பிப்பதும் ஆகிய மும்மையும் தெரிந்து ஆனந்த மெய்துவர்.

சிற்சில நாட்களில் வ்யாயாம சாலையில் சென்றமர்ந்து, சூர்ய நமஸ்காரம், அஷ்டாங்க நமஸ்காரம், ஆசன முறைகள், பலவித கசரத்துகள், மற்போர், வாட்போர், அஸ்த்ர சஸ்த்ர ப்ரயோகங்கள், ஆயுத பரிச்சயம், யுத்த சாதன பரிச்சயம், ரதாரோகண கஜாரோகண அசுவாரோகண ஆகாசாரோகண அதோகமன பாதாளகமன சமுத்ர கமன யுத்தயான வாகன பேதாதி பரிச்சயம், இந்த்ரஜால யுத்த மகேந்த்ரஜால யுத்த சதக்ஞி ப்ரயோக சித்தெளஷத ப்ரயோக மகாவிஷ ப்ரயோகாதி கோர யுத்த முறைகளும், ஆகாய க்ரக கண பரிச்சயம், வான சாஸ்த்ர பரிச்சயம், ஜோதிஷ பரிச்சயம், மாந்த்ரீக பரிச்சயம் முதலாயவற்றையும், ஆகாய விமானங்கள் பீரங்கி தூக்கிச் செல்லும் விமானங்களாதியவற்றைச் செய்யும் முறைகள் முதலாயவற்றையும் அறிந்தும், பயின்றும், சாஸ்த்ர நுட்ப ஆராய்ச்சிகள் செய்யும் சாலைகளில் சென்று நன்கு ஆராய்ந்து உணர்ந்தும், விஞ்ஞான வளர்ச்சியும் நிறைந்து விளங்குவர்.

அன்றியும் கீதா ரகஸ்யங்கள், கீதையின் தத்துவங்கள், ஆழ்ந்த கருத்துக்கள், மனு முதலியோர்களால் ஆசரிக்கப்பட்ட நீதிமுறைகள், நீதி சாஸ்திரங்கள், அற நூல்கள், ராஜ தர்மங்கள், தேச தர்மங்கள், பஞ்ச தந்த்ரங்கள், களா தந்த்ரங்கள், அந்நிய தந்த்ரங்கள் முதலிய யாவும் அந்தந்த களாவந்தர்களான மேதாவிகள் செய்த சூத்ரங் களின் மகத்தரமான கருத்துக்களை விமர்சித்தும், விஸ்தாரப்படுத்தியும், தெளிவுறுத்தியும் கற்பிக்கப்படுதலைக் கேட்டும் வியந்தும் மனதி லிருத்தி மகிழ்ச்சி கொள்ளுவர்.

காலபேதத்தினாலும் க்ரக பேதத்தினாலும் ஏற்படும் வித்யாசங் களையும், அதனால் ஏற்படும் நுண்ணறிவு நுண்ணிய நோக்கம் முதலிய வைகளையும், அவற்றைத் தெரிந்து தக்க முறைகளை யறிந்து நடக்க வேண்டிய மார்க்கங்களையும் ஒருங்கேயுணர்ந்து உள்ளங்களிப்பர்.

அன்றியும், தேக தத்துவங்கள், காலதேச வர்த்தமானங்களினா லேற்படுகிற ஸ்திதி மாறுதல், இட மாறுதல், சமய மாறுதல், நிலை மாறுதல், வழி மாறுதல், முறை மாறுதல் முதலியவற்றையும், தகுந்த பதார்த்தங்களினால் தேகத்தைப் பேணும் முறை தவறுவதால் நேரும் வியாதிகளையும், இடர்களையும், தகர்க்கத் தக்க ஔஷத வகைகள், ஆகார நியமங்கள், பரிபக்குவ முறைகள் ஆதியவற்றையும், தேகம் வாழ்க்கை தொழில் அனுஷ்டானம் யோகம் வழிபாடு ஆதிய சகல சௌகர்யத்திற்கும் ஆதாரமாக இருக்கக்கூடிய முறைகளைக் கையாள, பால்யத்திலேயே, பழகுதல், ஈடுபடுதல், அனுஷ்டித்தல், அனுஷ்டிக்கச் செய்தல் முதலியவற்றின் தத்துவங்களையும், விசேஷங் களையும், குண குணங்களையும் விரித்து விளக்கி உபன்யசிக்கப் படுவதைக்கேட்டு ஆனந்தமடைவர்.

தேச விரோதிகள், ஜன விரோதிகள், ராஜ்ய விரோதிகள், க்ரூரக்ரியைகளைச் செய்பவர்கள், துன்மார்க்க ப்ரவர்த்தகர்கள், குசேஷ்டகர்கள் முதலியவர்களுக்குத் தகுந்த சிக்ஷைகளை விதித்தலும், சீர்திருத்துதலும், கலகங்களை யடக்குதலும், சமாதானத்தை யுண்டாக் குதலுமாகிய ஆபத் தர்மங்களையும்,

பாத்யா பாத்யங்கள் வர்த்தக முறைகள் லாபானுபவ விநி யோகங்கள் நாணயங்கள் ஆதாரங்கள் இவைகளைக் கைம்மாறும்

முறைகள் பாத்யக்ரமங்கள் வ்யவசாய வ்யாபார சேவா ஜீவன மார்க்கங்கள் இவற்றை க்ரமமாய் நடத்த வேண்டிய முறைகளையும் பரிகாரங்களையும் கற்பித்தும், ப்ரவேசித்து ப்ரவர்த்திக்கும் வழிகளும் தத்துவங்களும் விஸ்தாரமாக எடுத்து விளக்கி போதிக்கும் உபன்யாசங்களால் தெளிவுபடுத்தியும் மனதிற் பதிய வைப்பதைக் கண்டு நன்குணர்ந்து வியப்பும் களிப்பும் எய்துவர்.

சிற்சில தினங்களில் வ்யாபார தர்மங்களும், முறைகளும், வழி பாகுபாடுகளும், வினிமய வினியோக க்ரமங்களும், சரக்குகளின் விலையேற்றம் விலையிறக்கம் தகுதி தாரதம்மியங்கள் பருவ விளைவு முதிர்ச்சி இளமை திட்பம் முதலிய குண தாரதம்மியங்களும், ரத்தினங்களின் வகுப்பு விளைவு வடிவு முதிர்ச்சி இளமை மேன்மை தாழ்மை ஒளிமயக்கம் தேய்வு தாழ்வு குறைவு தோஷமுடைமை முதலிய ஜாதி குணம் இவைகளின் தாரதம்மியங்களும், விலை மதிப்பு சமயத்தகுதி பயன்பாடு ஒளியெழில் முதலியவைகளின் கவனிப்பு, மேன்மைப்படுத்தும் சாதனங்கள், பாதுகாப்பு முறைகள் முதலியவைகளும், கணக்கு வழக்குகளின் கோர்வை, க்ரமம், பகுப்பு, கூட்டுதல், ஆதாய முறைகள், லாப வழிகள், சிக்கனத் துறைகள், பங்கீடு முறைகள், கூட்டு வ்யாபாரத் தொழில் முறைகள், கைத்தொழில்கள், இயந்திர சாதனங்கள் முதலிய சகல சாதன நைபுண்ய வாணிஜ்ய விதானங்களை விஸ்தாரமாக எடுத்தோதல் தெளிவுபட விளக்குதலாதியவற்றைக் கண்டும் கேட்டும் களிப்பு மீதூர்வர்.

அன்றியும், அவர்கள் இயம நியம ஆசன ப்ராணயாம ப்ரத்யாகார தாரண த்யான சமாதி முதலிய அஷ்டாங்க யோகங்களையும், அப்யாசயோக கர்மயோக பக்தியோக ராஜயோக ஹடயோக ஞானயோக மார்க்கங்களையும், நிஷ்டானுபூதி முறைகளையும், சகஜ நிஷ்டையின் மகிமையையும், யோக க்ரியா விஷயங்களையும் திருத்தமாக ஐயந் திரிபறப் பயின்றும், உபன்யாச வாயிலாகப் கேட்டும், தன்மையில் உட்கார்ந்து சிந்தித்தும், மனத் தெளிவுற்று மகிழ்ந்தும்,

மைத்ரேயீ, கார்க்கீ, யாக்ஞ வல்க்யர், ஜனகர், சுகர் முதலியவர்களுடைய சரித்திரங்களையும், சம்பாஷணைகளையும், அனுஷ்டானங்களையும், உபதேசங்களையும், ஜகஜ்ஜேயமான உபநிஷதங்களாக சகல

மதசாரமாக விளங்கும் ஆத்ம தத்துவங்களையும், அறியும் விதமும், அப்யசிக்கும் விதமும், அனுஷ்டிக்கும் விதமும், அனுபவிக்கும் மார்க்கமும், அதன் முடிவும், பயனும் தெள்ளெனத் தெரிவிக்கும் ப்ரம்ம சூத்ரங்கள், வைசேஷிக நையாயிக கர்ம மீமாம்சயோக சூத்ரங்களின் வார்த்திக பாஷ்ய வ்யாக்யானங்களுடன் போதிக்கப்படுகிற வைபவத்தைப் பார்த்து ஆனந்தித்தும்,

ஒவ்வொரு தினத்திலும் ஒவ்வொரு கலா சாகைகளிலும் கூறும் ஒவ்வொன்றையும் கேட்டும், குறிப்பிட்டும், சாராம்சங்களைத் தவறுமல் வரைந்தும், ஆராய்ந்தும், பழையன களைந்தும், புதியன புகுத்தியும், சிற்சில இடங்களில் திருத்தியும், இல்லன கூட்டியும், குறைந்தன பெருக்கியும், மிகுந்தன குறுக்கியும், காலத்திற் கேற்ப அமைத்தும், தெளிவுபட விளக்கியும் விமர்சித்து வந்தனர்.

அந்த சரஸ்வதீ நிலயமாகிய குசும வித்யாலயத்தில் நாடோறும் உபாத்யாய சங்கமும், குலபதிகளின் கூட்டங்களும், குருக்களும், அத்யேத்ரு ஜனங்களும், அத்யாபக கோஷ்டிகளும், சிராவக சமூகங்களும், ஸ்ரோத்ரு வர்க்கங்களும், லேகக பாரிசிராமிக பரிசீலக ப்ருந்தங்களும் தம்மைப் புடை சூழ்ந்துநிற்க, விஞ்ஞான ஆராய்ச்சிப் பயனையும், ஏனைய பல விஷயங்களையும், ப்ரஞ்ஞானமயமாய், கடல் மடைதிறந்த வெள்ளம் போலவும், எரி குலம் கிணறு மடு தடாகங்களை நிரப்பியோடும் மகாநதி ப்ரவாகத்தைப் போலவும், ஞாயிற்றாரையினல் அனைவருளத்திலும் சம்பூர்ணமாக மெய்ஞ் ஞானத்தை நிரப்பி, ஞான நிறைவெனும் பேரின்ப வாரிதியில் மூழ்கி ஸ்தம்பீபூதராய் நிற்குமாறு, விஞ்ஞான சுஞ்ஞான ப்ரஞ்ஞான சமூஞ்ஞான விஷயங்களடங்கிய சொற்பொழிவுகளை நிகழ்த்தி தூய சிந்தையராய்த் தோன்றுவர்.

இத்தகைய கலாசாலையல்லவா மாணவ மாணவிகளுக்குச் சம்பூர்ண விவேகத்தைத் தடையின்றி யளிக்கும்? அதனல்தான் மடமை மாது நமது பெனுகொண்டாவிலேனும், இந்தப் பரதகண்டத்திலேனும் இருக்க இடமில்லாது, நிற்க நிழலில்லாது, தத்தளித்துத் தடுமாறித் தவித்துத் தவிடு பொடியாயினள்? அக்கால முதியோர்கள் இப்பூ மண்டலம் ப்ரளயமடையும் வரையிலும் விளங்கும்படி இப்

பிரபஞ்சத்திற்கு ஞான பொக்கிஷத்தை சாஸ்வத தானமாக வழங்கினர். அந்தோ! வேதகால இந்தியாவையும் தற்கால இந்தியாவையும் வாசகர்களே சற்று உற்று நோக்குங்கள்.

வேத நூல்களும், பண்டைய சாஸ்த்ரங்களும், இதிகாச க்ரந்தங்களும், அதற்கேற்ற பாஷ்யங்களும், வ்யாக்யானங்களும் எவ்வளவு ஆயிரக்கணக்காக புஸ்தக பாண்டாகாரங்களிலும், மடாலயங்களிலும், தேவாலயச் சுவர்களிலும், முகஸ்தி தமாக்கிப் பாராயணம் செய்த பெரியோர்களுடைய தூய உள்ளத்திலும் தங்கி நிற்கின்றன வென்பதும், இத்தகைய புத்தகங்கள் நிறைந்த நூல் நிலையங்கள் இந்தியாவின்கண்ணே எந்தெந்தப் புண்ய பூமிகளில், எந்தெந்த ஸ்தானங்களில், எவ்வாறு ஸ்தாபனமாகி, எப்படி பாதுகாக்கப்படுகின்றன வென்பதும் நம்மவர்களில் எவர்க்கேனும் தெரியுமா?

இப்போதுள்ள க்ரந்தங்களைத் தவிர, பாஷண்டர்கள் நமது தேசத்தின்மீது படையெடுத்துக் குடியேறி, மத வெறியில், எட்டுப் பிரதிகளில் எழுதப்பட்டிருந்த நமது பண்டை நூல்களையெல்லாம் ஒரு தென்னை அல்லது இரு தென்னை மர உயரம் குவித்துக் குவித்து நெருப்பிட்டுப் பொசுக்கினர்களென்றால் இவ்விஷயத்தை எண்ணும் போதே நமது உள்ளம் பதைக்கவில்லையா?

எவ்விடமிருந்து பார்த்தாலும் கண்களுக்குத் தெரியும்படி, தெய்வ நினைப்பை உண்டாக்கும்படி, வானளாவிய உயரமுடன் கட்டப்பெற்ற அதியுன்னத அழகு வாய்ந்த கோபுரங்களையும், எவ்வளவு தூரத்திலிருந்தபோதிலும் தீபாராதனை காலத்தைத் தெரிவித்து அனைவரையும் ஆண்டவனடித் தியானத்தில் ஈடுபடுத்தவும், அனைவரையும் ஆலயத்திற்கு வரும்படி விரைந்தழைக்கவும் வல்ல அற்புத நாதத்தை யெழுப்பக்கூடிய மிகப் பெரிய கண்டா மணிகளையும், (ப்ராதஃகால சாயங்கால பேரிகைகளையும் மேள வாத்யங்களையும் மங்கள கோஷங்களையும் வேத சப்தங்களையும் ஸ்தோத்ர வொலிகளையும் செவி மடுத்து அந் நகரத்தவர்களும் அந் நகரத்திற் புதிதாகப் பிரவேசித்தவர்களும் எல்லா எண்ணங்களையும் மறந்து, உட்சென்று, தீர்த்தத்தில் மூழ்கி, தெய்வத்தைத் தொழுது, பகவன் நிவேதனத்தைப் புசித்துக் களைப்பு நீங்கிப் பார்க்கும் காலையில்) சாமுத்ரிகா

சாஸ்திரத்தையும், சில்ப வாச்சியாயன மய விஸ்வகர்ம சூஸ்த்ரங்களை யும் அனுசரித்து செய்யப்பெற்று, பூர்வ சரித்திரங்களையும், சிருஷ்டி க்ரமத்தையும், லயக்ரமத்தையும், ராஜ்ய பரிபாலனத்தையும், சுவர்க்க லோக நரகலோக நியதிகளையும் விளக்கியவண்ணம் ஆங்காங்கு தோன் றும் தேவ ப்ரதிமைகளையும், ராஜ ப்ரதிபிம்பங்களையும், அப்ஸரஸாதி விக்ரகங்களையும், அவ்வவ் வெழில்களை இயற்கை யழகுடன் காட்டு வதைப் போலவும், முன்பு நடந்தவற்றை தற்காலம் கண்முன்னே நடக்கின்றன போலவும் தோன்றச் செய்யும் திட்பம், நுட்பம், திருத்தம், பூர்ண உருவம், குணங்கள், முகப்பொலிவு, அங்க சவுந் தர்யம், நடையுடை பாவனைகள், கழகங்கள், விவாகங்கள், யக்ஞங் கள், யாகங்கள், யுத்தங்கள், வெற்றிகள், பட்டாபிஷேகங்கள் இவை களை உண்மை வடிவங்களாகக் காட்டக்கூடிய (அவற்றின்) சிற்பத் திறன்களையும், சிலா ப்ரதி மாமய ஸ்தம்பங்களையும், மண்டபங்களையும், மதிற் சுவர்களையும், வெற்றி ஸ்தம்பங்களையும், சிறந்த வனப்புடன் செதுக்கப்பெற்று செம்மையாய்ப் பொலிந்து, " வாருங்கள் ! வாருங் கள் !! வந்து பாருங்கள் !!! களி கூறுங்கள் !!!! " என்று சொல்லா மற் சொல்வது போலவும், யுக யுகாந்தரங்களுக்கும் நிலைத்து நிற்கக் கூடியது போலவும் மிகவும் உறுதியாகத் தோன்றும் பல ப்ரதிமை களையும் தன்னகத்தே கொண்டு, அநேக நூல்களுக்கு ஆதாரமாயும், எடுத்துக் காட்டாயும், வழி காட்டியாயும், உண்மை யின்பத்தைப் பயக்கக்கூடியதாயும் விளங்கும் அநேக தேவாலயங்களை அந்த க்ரூர குணத்தவர்கள் பொடிப்பொடி யாக்கித் தரை மட்டம்செய்து இருந்த இடந்தெரியாமற் செய்துவிட்டனரென்றால், நமது உள்ளம் பதைத்து மனம் துடித்து உத்வேகம் பொங்கிக் கோபமூட்டவில்லையா ? " இனி யாவது நாம் நமது பாரத நாட்டில் யாத்திரை செய்து இந்நூலிற் கூறப்படுவன உண்மையா வென ஆராயவேண்டும் " என்றும், " நம் பாரத நாட்டில் பண்டைக் குருகுலம் தோன்றும் நாளென்னாளோ " என்றும், " கண்டிப்பாக நம் நாட்டுமக்கள் கல்வியிற் சீர்திருத்தம் அடையவேண்டும்; விஞ்ஞானம் நிறைந்த விற்பன்னர்களாகத் திகழ வேண்டும்; பண்டைப் பெருமையை நிலைநாட்டவேண்டும்; எல்லாத் துறைகளிலும் பாரத நாடு மேன்மையுடைத்தென உலகினர் யாவரும் மீண்டும் பறை சாற்றும்படி செய்வித்தே தீரவேண்டும்; " என்ற எண்ணம் தோன்றி நம் மனத்திற்கு உற்சாகத்தையும் நல்ல உணர்ச்சி யையும் உண்டாக்கவில்லையா ?

அவ்வளவுகூட சேவை செய்ய இயலாத நாம் இந் நாட்டிற் பிறந்ததால் யாது பயன் ? கல்வியில்லாமல், பண்டைத் தருமங்களை யறியாமல், நமது முன்னோர் நடந்த முறை தெரியாமல், இற்றைக்குச் சுமார் ஆயிரம் ஆண்டுகட்கு முன்னர் நம் நாடு எத்தகைய நாகரிகத்திலிருந்ததென்பதையும் எத்தகைய ஞான சம்பத்தைப் பெற்றிருந்ததென்பதையும் உணராமல், கிணற்றுத் தவளை நாட்டு வளப்பத்தை விசாரித்தறியாது உண்டு வளர்ந்து தான் வாழும் கிணறுதான் உலகத்தில் மிக விசாலமான இடம் என்று எண்ணியிருந்ததைப்போல நாம் கேவலம் *சிஷ்ணேதக பராயணர்களாய், ஆகார நித்ராபய மைதுனங்களை மாத்திரம் புருஷார்த்தமென நினைந்து, அதோடு மடிந்து முடிந்துபோகிற ஜந்து ஜீவியத்தையா நடத்தவேண்டும் ? கிடைத்தற்கரிய இம் மானிடப் பிறவி கிடைத்துள்ளதே ! இத்தருணத்தை நாம் வீணாக்கலாமா ? இச் சரீரத்தின் துணைகொண்டல்லவா நாம் அழியா மெய்யின்பத்தை அனுபவிக்க முயலுதல் வேண்டும் ? ஆத்மார்த்த உணர்ச்சி குன்று திலகிய காரணத்தாலன்றே நம் நாடு என்றும் உயர்வற் றெளிர்கிறது ? இவற்றை யெல்லாம் நாம் எண்ணினோமா?

" ஆவிந்து லிந்துபர்யந்தம் " என்று தொடங்கி, நம் இந்தியாவின் பண்டைய உன்னத நிலைமையை விளக்கும் ஸ்லோகத்தின் பெருமையை நாம் எப்போதாவது நினைத்தோமா ? இஃதன்றே நாம் பயிலவேண்டிய முக்ய கல்வி ? இவ் விஞ்ஞான தர்மங்களை யொட்டியல்லவா நாம் நடக்கவேண்டும் ? வீணே ஊனைப்பெருக்கி நூறு வருஷம் பிழைத்திருப்பதைக் காட்டிலும், விஞ்ஞான சம்பன்னனாய் ஒரு வினாடி வாழினும் போதாதா ? அந்தோ ! கடோபநிஷத்தில் " உத்க்ருஷ்டித ஜாக்ரத ப்ராப்ய வரான்னி போதித " என்று கூறுவதையும்,

" தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது " என்றும்,

" பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார் "

என்றும் திருக்குறள் செப்புவதையும்,

* " மந்திரவாள் பெற்றும் பகைவெல்லான் மற்றது கொண்(டு)
அந்தோ தன் மெய்யை யறிந்தான் போன்(று) - இந்தவுடல்
கொண்டு முத்தி செல்லும் குறிப்பின்றிச் சிற்றின்பம்
கண்டுவீணாக் காலாம் கணக்கு " (சித்தாந்த கரணம்)

" காயநீர்க் குமிழி; அதிலுறும் இன்பம்
கானலிற் புனல்;அது தனக்கிங்(கு)
ஆய அத் துயரம் அளவிலை; அதுநீ
ஆய்வுரு மையின்அழிந் தற்றுய்;
நீயினிக் கவலை மயல்களைத் தவிர்த்து
நெஞ்சமே வந்தெனக்(கு) உடன்பட்(டு)
ஆயஅச் சொரூபற்கு அன்பதே புரியில்
அரியதே(து?) ஆர்நமக் கெதிரே? "

என்று 'போதரத்னகரம்' எனும் புனித நூல் புகல்வதையும்,

" ஓரின், உள்ளமே! பாரில்மா னுடர்முத லுளவறு பிறப்பூடும்
சேரும் இன்பமொன் றில்லையென் பதுபிரத் தியக்கமாம் நீவல்லாய்
போர்க ளாதிதுன்பு இமையவர் அடைவதும் புகலநூ லுணர்ந்தாயே
நேரி லாவரன் கழலலால் மிகுசுக நிலைபிறி திலையன்றே "

என வைராக்ய சதகம் நவில்வதையும்,

" யானே தவமுடையேன் ;
என்னெஞ்சே நன்னெஞ்சம் ;
யனே பிறப்பறுப்பான்
எண்ணினேன் ; " எனவும்,

" அருளே உலகெலாம்
ஆள்விப்ப ஈசன்
அருளே பிறப்பறுப்ப
தானுல் — அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும்
விதியுடையேன் எஞ்ஞான்றும்
எப்பொருளு மாவதெனக்கு " எனவும்,

" ஒன்றே நினைந்திருந்தேன்
ஒன்றே துணிந்தொழிந்தேன்
ஒன்றேஎன் உள்ளத்தின்
உள்ளடைத்தேன் " எனவும்,

" இனியோ நாம் உய்ந்தோம்
இறைவன் அருள்சேர்ந்தோம்
இனியோர் இடரில்லோம்
நெஞ்சே — இனியோர்

விகைக்கடலே யாக்குவிக்கும்
மீளாப் பிறவிக்
கஞைக்கடலே நீந்திஞேம் காண் ”

எனவும் அற்புதத் திருவந்தாதியிற் காரைக்காலம்மையார் கழறியிருப்பதையும்,

“ ஒழித்தேன் பிறவியை; ஊர்ந்தேன் அறுபகை; ஓங்கிற்றுள்ளம்;
இழித்தேன் உடம்பினை; ஏலேன் பிறரிடை; இம்மனையும்
பழித்தேன்; பழியே விளைக்கும் பஞ்சேந்தியக் குஞ்சரமுந்
தெழித்தேன்; சிவனடி சேர்ந்தேன்; இனிமிகத் தெள்ளியனே ”

எனப் பொன்வண்ணத் தந்தாதியிற் சேரமான் பெருமாள் நாயனர் இயம்பியதையும்,

“ ஒளியில் விளைந்த உயர்ஞான பூதரத் துச்சியின்மேல்
அளியில் விளைந்ததொ ரானந்தத் தேஞ யனுதியிலே
வெளியில் விளைந்த வெறும்பாழைப் பெற்ற வெறுந்தனியைத்
தெளிய விளம்பிய வாமுக மாறுடைத் தேசிகனே ” என்றும்,

“ சொல்லுகைக் கில்லையென் றெல்லா மிழந்துசும் மாஇருக்கும்
எல்லையுட் செல்ல எனைவிட்ட வா ” என்றும்,

“ மரண ப்ரமாதம் நமக்கில்லை ” என்றும்,

“ ஒருபூதரு மறியாத் தனிவீட்டில் உரை உணர்(வு) அற்(று)
இரு; பூத வீட்டில் இராமல் என்ருன் ” என்றும்,

“ போக்கும் வரவும் இரவும் பகலும் புறம்பும்உள்ளும்
வாக்கும் வடிவும் முடிவும்இல் லாதொன்று வந்துவந்து
தாக்கும் மனேலயந் தானே தரும்எனைத் தன்வசத்தே
ஆக்கும் அறுமுக வாசொல் லொணுதிந்த ஆனந்தமே ”

என்றும் அருணகிரிநாதர் அருளியிருப்பதையும்,

“ காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர்; அகண்டா காரசிவ
போக மெனும்பே ரின்பவெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏக உருவாய்க் கிடக்கு(து); ஐயோ! இன்புற்றிடநாம் இனியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேரவாரும்! ஜெகத்தீரே! ”

எனத் தாயுமானவ சுவாமிகள் சாற்றியுள்ளதையும்,

" ஈசுவரனிடம் வித்தை, அவித்தை என்ற இரண்டும் உள்ளன. வித்யா மாயையானது மனிதனை ஈசுவரனிடம் சேர்க்கும். அவித்யா மாயையோ அவனை ஈசுவரனிடமிருந்து புறம்பே போகச் செய்யும். ஞானம், பக்தி, வைராக்யம், பூததயை இவையெல்லாம் வித்யா மாயையின் தோற்றங்களாம். இவைகளின் உதவியைக் கொண்டுதான் ஒருவன் ஈசுவரனை அடைய முடியும் "

என்றும்,

" மனத்தையும் உள்ளத்தையும் பரிசுத்தமாக்கும் ஞானந் தான் உண்மையான ஞானம். மற்றவை யெல்லாம் அஞ்ஞானமாம் "

என்றும்,

" கிரந்தங்கள் எல்லாம் ஈசுவரனிடம் போகும் வழியை, அதாவது ஈசுவரனை அறிந்து அனுபவிக்கும் மார்க்கத் தைத்தான் சொல்லுகின்றன. ஒருதரம் மார்க்கம் தெரிந்துவிட்டால், ஈசுவரானுபவமான அந்த முடிவு ஸ்தானத்துக்குப் போகவேண்டிய முயற்சி செய்வதுதான் அடுத்துச் செய்யவேண்டிய காரியம் "

என்றும்,

" ஈசுவரானுபவம் இரண்டு வகைப்படும். ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஐக்யமாவது ஒரு வகை; ஈசுவரனுடைய திவ்ய ரூபத்தை நேரில் தரிசிப்பது மற்றொரு வகை. முன்னதற்கு 'ஞானம்' என்றும், பின்னதற்கு 'பக்தி' என்றும் பேயர் "

என்றும்,

" ஈசுவரனது பிரத்தியட்ச ரூபம், சுத்தாத் மாக்களால் மட்டும் காணக்கூடிய ஆத்மிக உருவமாக இருக்கும். அதாவது, ஈசுவரனிடமிருந்து பெற்ற சரீரத்தை (பகவதி

தனுவைச் சேர்ந்த ஞானக் கண்களால்தான் இவ் வுரு வங்களைக் காண முடியும். ஆ தலா ல், பரிபூர்ண மடைந்த மனிதனுக்குத்தான் இந்தத் திவ்ய ரூபங்கள் கட்புலனாகும் ''

என்றும்,

'' ஊனக் கண்களால் கடவுளைக் காணமுடியாது. சாதனை செய்யும்போது அன்பு மயமான சரீரம் ஒன்று நமக்குள் உண்டாகின்றது. அச் சரீரத்திற்கு அன்பு மயமான கண்களும் காதுகளும் உண்டு. அவற்றால் நீ இறை வனைக் காணவும் கேட்கவும் முடியும் ''

என்றும்,

'' உயிருட னிருக்கும்போதே எவனொருவன் இறந்தவன் போலாகிறானே, அதாவது எவனுடைய ஆசாபாசங்கள் பிணத்தி னிடத்திற் போல் நசித்திருக்கின்றனவோ அவன்தான் உண்மையான ஆத்ம ஞானியாவான் ''.

என்றும்

ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்ஸர் மொழிந்ததையும், நாம் மனமார எண்ணி, கல்வியைப் பேணி, நற்போதனையைக் கடைப்பிடித்து, உண்மை யுணர்ச்சியைப் பெற்று, உலக நன்மையைக் கோரி, மானவ சேவையைச் செய்து, ஜீவதயையைப் பெருக்கி, அனைத்துயிரும் ஆண் டவன் அமர்ந்துறையும் ஆலயமென்ன இறைஞ்சி, அவனடி போற்றி, அன்பு நீராட்டி, ஆர்வ மலர் சாத்தி, மதி தூப தீபங்காட்டி, தற்போத நிவேதனம் சமர்ப்பித்து, அவன் வசமாகி அவனொடு கலந்து ஆனந்த மெய்துதல் அத்யாவசியமல்லவா? அஃதன்றே பிறவியினும் பெறும் பெரும் பேறென்னப் பெரியோர் பலரும் பேசியுள்ளார்கள்? அவர் களே ஆண்டனுபவித்துப் பேரின்பமெய்தி, தமது ஸ்வானுபவத் திரு வாக்குகளை உபதேசிக்க எண்ணி, அனைவரையும் அறைகூவி யழைத்து, சர்க்கரைப் பந்தரில் தேன்மாரி பொழிவதே போல மொழி மழையை வர்ஷித்து, பின்னரும் தோன்றும் நம்மனோர்க்காக அற்புத நூல்களாக

எழுதிவைத்தும் சென்றார்கள். அந்நூல்களை க்ரமமாய்ப் பயில்வதே கல்வியாகும்.

வேத விதிப்படி உபநயனம் செய்துகொண்ட நமது குசும குலோத்பவனுகிய விசுபாக்ஷனும், வைசியக் கொழுந்தாகிய வாச வாம்பிகையும் அத்தகைய சிறந்த கல்வியை வெகு விரைவிற் பயின்று, சகல வேதாகம சாஸ்த்ர இதிகாச புராணாதி நூல்களிலும், இலக்கணம் இலக்கியம் த்வைதம் அத்வைதம் விசிஷ்டாத்வைதம் சித்தாந்தம் வேதாந்தம் பௌதிகம் ஆத்மீகம் தாத்விகம் தார்க்கிகம் லௌகிதம் நாடகம் உபன்யாசம் கவித்துவம் சமூகோத்தாரணம் வ்யாவகாரிகம் ஆர்த்திகம் ராஜீயம் தேசீயம் விஞ்ஞானம் மெய்ஞ்ஞானம் ஆயுர் வேதம் நீதி சாஸ்த்ரம் வான சாஸ்த்ரம் ஜோதிஷம் மாந்த்ரீகம் வ்யா யாமம் வருணாச்ரம தர்மம் யோகாப்யாசம் தேகாப்யாசம் யானை யேற்றம் குதிரை யேற்றம் ரதாரோகணம் வில்வித்தை வாள்வித்தை மல்யுத்தம் அஸ்த்ர சஸ்த்ர ப்ரயோகம் இந்த்ர ஜாலம் மகேந்த்ர ஜாலம் முதலாய சகல கலைகளிலும் வல்லுநர்களாய், லோக விஞ்ஞான மேதாவிகளாய், சகல களா சமுதய பரிபூரணர்களாய், ஞான சம் பன்னர்களாய், மகா விற்பன்னர்களாய் குருகுலவாசத்தைப் பூர்த்தி செய்து, முறைப்படி குரு தக்ஷிணைகளைச் சமர்ப்பித்து, வருணாச்ரம தர்மப்ரகாரம் தீர்த்த யாத்திரை செய்யவுன்னி ஒரு நன்னாளில் புறப் பட்டு ஓராண்டில் தீர்த்த யாத்திரையை முடித்துக்கொண்டு திரும்பி, பெலுகொண்டாவுக்கு வந்து சேர்ந்து, ஆசார்யரிடம் விடைபெற்றுக் கொண்டு அரண்மனை சேர்ந்தனர்.

அதுகண்ட குசும ஸ்ரேஷ்டியாரும் குசுமாம்பிகையும் " தம் மிற்றம் மக்களறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க் கெல்லா மினிது " என்னும் பொதுமறை மொழியின் கருத்திற்கேற்பக் கரைகடந்த ஆனந்த வெள்ளம் பொங்கிப் பெருக, இருகண் குளிர்ந்து உதரங் குளிர்ந்து வடிவு குளிர்ந்து உள்ளங் குளிர்ந்து அருகோடி வந்து இரு மக்களையும் வாரியெடுத்து உச்சி மோந்து முத்தங்கொடுத்து மறை நாறும் அதரங்குளிர்ந்து மகிழ்வுடன் மிளிர்ந்ததைக் காணின், அற மெனும் குசுமனும், பொருளெனும் புத்ரனும், இன்பமெனுங் குசு மாம்பிகையும், வீடெனும் வாசவியும், அனைவர்க்கும் காட்சியளிப்ப தைப் போன்று விளங்கியது.

பின்னர் நமது அருள்விளக்கச் சுடர்கள் இரண்டும் வயதிலும் அன்பிலும் அறிவிலும் அருளிலும் அனைத்திலும் வளர்ச்சியுற்று அழகுறப் பொலிந்துவந்தனர். விருபாக்ஷச் செல்வனுக்கு இளவரசு காங்கத்தக்க பருவமும், வாசவாம்பிகைக்குக் கடிமணம் புரியத்தக்க பருவமும் வாய்த்தன. இவ்வாறு இவ்விரண்டு விளக்குகளும் இனிது ப்ரகாசித்துக்கொண்டு விளங்கின.



ஸ்ரீ வாசவீ விஜயம்.

மூன்றும் அத்தியாயம்.

செய்ய தாமரைப் பூவி லிருப்பாள்
திவ்ய வேத மொழியி லிருப்பாள்
துய்ய மேலவ ருள்ளத் திருப்பாள்
துகளில் பேரொளி தன்னி லிருப்பாள்
பொய்யில் சாத்திரத் துட்பொரு ளாவாள்
போத மோடுயர் நாதமு மாவாள்
வெய்ய தீமை யொழித்தரு ளீவாள்
வேண்டு வார்க்கு வரம்பல ஈவாள்.

துன்பம் யாவும் நொடியினில் தீர்ப்பாள்
தூய மெய்யடி யார்ரொடு சேர்ப்பாள்
பொன்பொ ருள்புகழ் யாவுந் தருவாள்
புனித நற்கலை ஞானந் தருவாள்
அன்பி னுலெம் அகத்தைக் குழைப்பாள்
அருளை நல்கிட அருகி லழைப்பாள்
இன்ப நல்லொளி யீந்து மகிழ்வாள்
ஈனரை மிக ஏசி யிகழ்வாள்.

அத்த கையநம் தாயைத் தொழுவோம்
அன்பொ டேயவள் தாளில் விழுவோம்
இத்த ரையினில் ஏழைகள் துன்பம்
எண்ணு தற்கும் மிகவரி தென்போம்
சித்த சுத்தியுஞ் சாந்தமுங் கேட்போம்
செல்வ முந்தொழில் கல்வியுங் கேட்போம்
பக்தி யோடு பணிந்திட வாரீர் !
பரையைப் போற்ற விரைவினில் வாரீர் !!

மூன்றும் அத்தியாயம்.

[முதற் பகுதி]

*

உலகமயல் ஆழ்ந்துதுயர் ஓங்குமட நெஞ்சே!
பலதினைவேன்? வாழ்வுமின்னல் பார்.

(தற்காலம்) ராஜமகேந்த்ரபுரத்திற்கு அருகிலுள்ள கோதாவரி நதியின் பாலம்.



சின்மயமாம் பாலமதிற் சேர்ந்தருளாம் சக்தியினுல், கன்ம நதியைக் கட.

ஓம்

ஸ்ரீ வாசவீ விஜயம்.

மூன்றும் அத்தியாயம்.

[முதற் பகுதி.]

வானேக்கி யெழுதூளி வரவு சொல மன்னன் சேனை சமுத்ரமொடு திக்விஜயம் செய்தல்.

வாக்குமனச் செயல்களினு ணுணர்வரிய மெய்ஞ்ஞான வடிவ மாகிப்
போக்குவர வொடுநினைப்பு மறப்புபக லிரவகன்று புனித மான
மோக்கமெனும் பேரின்ப வாழ்வளிக்கு மெமதன்னை முளரித் தாளில்
பூக்கள்சொரிந் தன்பினுடன் றுதிபரவிப் புவியின்மிசைப் பொலிந்து
வாழ்வாம்.

வேங்கி நாட்டு வளன்.

வாழ்க்கையின் முக்ய அம்சங்களாகிய அறம் பொருள் இன்பங் களை விளைவிக்கக்கூடிய அமிழ்த மாகிய மழையானது அவ்வப்பருவத்தே தவறுது வருவித்துச் செழுமையை நல்கலான், நீர்வளம் நிலவளம் குடிவளம் முடிவளம் கொடைவளம் குணவளம் பொருள் வளம் அருள்வளமாதிய எல்லா வளங் களும் செறிந்தும், விரும்பிய வனைத்தும் விரைவி லளிக்கக்கூடிய பெருஞ்சிறப்பு வாய்ந்தும் விளங்கும் வேங்கி நாட்டினிடையே,

ராஜமஹேந்திரச் சிறப்பு.

மிளகு கோட்டம் அகில் தக்கோலம் குங்குமப்பூ முதலிய மலைபடு பொருள்களும், அரக்கு இறால் தேன் மயிற்பீலி நாவி முதலான காடுபடு பொருள்களும், செந்நெல் செவ்விளநீர் சிறுபயறு வாழை கரும்பு

முதலிய நாடுபடு பொருள்களும், உப்பு பவளம் முத்து சங்கு ஓர்க் கோலை முதலிய கடல்படு பொருள்களுமாக நானில வளங்களும் தரை மார்க்கமாகவும், கப்பல் மார்க்கமாகவும் வந்து குவிந்து நனி திகழ்ந்திடவும், தண்ணைனுந் தன்மைய சாலைகள் பலவும் எங்கு பார்க்கினும் எழிலுடன் சிறந்தும்,

சோலை. தேமா பலா கிச்சிலி பொம்மிளிமாஸ் மாதுளை எலுமிச்சை நாரத்தை தெங்கு முதலிய பலன் தரத்தக்க நறுஞ் சோலைகள் பற்பல நாற்புறமும் வெகு ரமணீயமான இயற்கை அழகையும் குளிர்ச்சியையும் மனோகரமான இனிமையையும் அள்ளிப் பொழிந்துகொண்டு செழுமையுடன் பொலிந்தும்,

அரண். "அடக்கம் என்பதை அறவே மறந்து 'தானே பெரியவன்' எனக் கர்வித்து வாழ்வோர் யாவரும் மேலோரால் இழிக்கப்படுவார்கள்; அதற்கு உதாரணம் வேறெங்கும் சென்று தேடவேண்டிய தில்லை; என்னைப் பார்த்துக்கொண்டாலே போதும்; யான் கர்வித்து அதிக உயரம் வளர்ந்ததால் தேவர்களின் கால்களால் மிதிப்புண்டு, அவர்களுடைய காலின்கீழ் அகப்பட்டுத் துன்புறுகின்றேன்; ஆதலால் நீவிர் அகந்தையை அறவிடுமின்!" என நீதியை உணர்த்துவது போல வானுற வளர்ந்தோங்கிய அழகிய மதிலும்,

"நன்மையும் சிறப்பும் மதிப்பும் அடைய வேண்டுவோர் பலரும் பொறுமையும் அடக்கமும் தாழ்மையும் தெளிவும் ஆழ்ந்த கருத்தும் பூஷணங்களாகப் பூணுவீரேல் கண்டிப்பாக மேன்மையடைவீர்கள்; மிகத் தாழ்ந்து தாழ்ந்து சென்ற யான் பாதாளலோக வாசிகளாம் ஆதிசேஷன் முதலோரின் சிரங்களின்மீதில் திகழ்கின்றேனுகையால் யானே அதற்கு உதாரணம்" எனக் குறித்துக் காட்டுதல் போல, பாதாளலோகத்தை எட்டிப்பார்க்கின்ற அகழியும்,

ஆகிய (நீரரண், மதிலரண் என்னும்) இருவித அரண்களுடனும், காட்டரண் மலையரண் என்னும் ஏனைய இருவித அரண்களும் பொருந்தி நால்வகை யரணும் நன்கு சிறந்தும்,

ஆகாய கங்கையில் தோய்ந்து, சூர்யனுக்குத் தண்ணென்னும் படி குளிர்ந்த காற்றை வீசி ஸ்ரமபரிகாரந் தருதற்கும், அந்நகரை நோக்கி வருகின்ற உத்தமர்களை நல்வரவுகூறி யழைத்

கொடிகள்.

தற்கும் அமைந்திருப்பன போல, மேக மண்டலத்தை யளாவுகின்ற மாட மாளிகைகளின் பேரில் "தப" "தப" ("யோகத்தைச் செய்; யோகத்தைச் செய்; கர்ம யோகத்தைக் கடைப்பிடி; பக்தி யோகத்தில் மனத்தை நிறுத்து; ஞான யோகத்தில் ஈடுபடு") என்று தபஸ் சப்தத்தை யுணர்த்திக்கொண்டு அழகுற அசைந்து பொலிவதற்காக அமைந்தனவே போன்று அற்புத மான அழகைப் பொழிந்து விளங்கும் பல நிறக் கொடிகளும்,

"புண்ணியமும் புகழும் பெறுமின்!" என்றும் "வெள்ளைக் கலையுடுத்து, வெள்ளைப் பணிபூண்டு, வெள்ளைக் கமலத்தில் வீற்றிருக்கும் வெள்ளை மெய்யாளின் விரைமலர்க் கழல்களை விநயத்தோடும் விரும்பிப் போற்றி, வித்தைகள் பலவும் விரைவிற் பயின்று, வித்வத் சிகாமணிகளாய், வியனுலகத்தில் விழுமியர் புகழ வீறுடன் மிளிர்ந்து விளங்குமின்!" என்றும் வீரத்தொனியுடன் விளம்புதற்காக வித்தக வெழிலுடன் அமைந்தவே போன்று படபடவென்று பறக்கும் வெண் கொடிகளும்,

சூரியனையும் சந்திரனையும் தம்முள் நுழைந்து செல்லும்படி சொல்வதற்காக உயர்ந்ததே போன்று பொலியும்

மாட நிரை.

வானளாவிய பல மாட மாளிகைகளும், உப்பரிகைகளும், உயர்ந்த மாடங்களும், கனக மாளிகைகளும், கவின்மிகு கோபுரங்களும், பலவிதச் சிகரங்களும், சாலரங்களும், வாயில்களும், சூளிகைகளும், சோபானங்களும், கோட்டங்களும், கூடங்களும், ஆதுலர்க் கன்னமும் ஓதுவார்க் குணவும் அன்புடன் அளிக்கும் அன்ன சத்திரங்களும்,

வர்ண மண்டபம், சொர்ண மண்டபம், முத்து மண்டபம்,

மண்டபங்களும் பிறவும்.

மோகன மண்டபம், வயிர மண்டபம், வைடூர்ய மண்டபம், அரசவை நிகழும் ஆஸ்தான மண்டபம், ஆடவர் கூடிடும் அழகார் மண்டபம், அரிவையர் அமரும் அற்புத மண்டபம், இளைஞர்கள் இருக்கும் எழில்மிகு மண்டபம், சிறுவர்கள் பலரும் செறிந்துறை

மண்டபம், எல்லோரும் அமர் இங்கித மண்டபம், கவிஞர்களுறையுங் கவினுர் மண்டபம், அன்பர்க் கிருக்கை யளித்திடு மண்டபம், பக்தர்கள் மேவும் பாங்கார் மண்டபம், யோகியரைக் கொண்டொளிரும் மண்டபம், ஞானியர்கட் கிடம் நல்கும் மண்டபம், சலவைக் கற்களால் சமைந்திடு மண்டபம், நீலமணிகளே நிறைந்தொளிர் மண்டபம், படிகக் கற்கள் பதித்தபல் மண்டபம், நவரத்னங்க ளிழைத்த நன் மண்டபம், புருடராகத் தொளி பொலியும் மண்டபம், மாண்பா யொளிகால் மரகத மண்டபம், மாணிக்கத் தெழில் மல்கும் மண்டபம், நான்மறை யோதும் நலமிகு மண்டபம், வேள்விப் புகைமலி விழுமிய மண்டபம், கீதத் தொனி யெழுங் கின்னர மண்டபம், பாரோர் செறியும் பரிஜன மண்டபம், கிளிமொழி மடவார் கேளிக்கை மண்டபம், உல்லாசத்துட னுலவும் மண்டபம், சல்லாப மொழி சாற்றும் மண்டபம் ஆதிய பல அழகிய மண்டபங்களும்,

ஆயுதச் சாலையும், அறம் வளர் சாலையும், புருடரும் மகளிரும் புனிதமாய் ஸ்நானம் புரிதற்கேற்ற மஞ்சனச் சாலையும், பூஜாவிதி முடிக்கும் பொற்பார் க்ரஹங்களும், தேவதார்ச்சனை திருவாராதனை செய்யுமிடங்களும், ஆடை யாபரணங்க ளணிந்துகொள்ளும் அலங்கார அறைகளும், அரசர்களிருக்குந் துறையும், ஆலோசனை மண்டப முறையும், அரிவையர் கூடும் நிரையும், ராஜ ஸ்த்ரீகளிருக்கும் அந்தப் புரமும், சலவைக்கல் மேடையும், சந்தன வாடையும், சித்திர கூடமும், அஸ்திர மாடமும், சாது சங்கச் சாலையும், வேத வேள்விச் சோலையும், ஓம சாந்தித் திட்டும், கலியாண மண்டபக் கட்டும், கனதனப் பெட்டிகள் வைக்குங் கூடமும், கல்வி வல்லோரமரும் பீடமும், நாட்டியச் சாலைகளும், வேள்விச் சாலைகளும், வித்யா சாலைகளும், பல்லாயிரக் கணக்கான மக்கள் கைத்தொழிலை வளர்க்கும்படியான யந்திர சாலைகளும்,

ஆலயங்கள்.

சிற்பத் திறனும், பக்திப் பணிவும், கல்விப் பெருக்கமும், கணித நுணுக்கமும், அரசியல் முறையும், ஆராய்ச்சித் துறையும், பண்டை நாகரீகப் பண்பும், தெய்வத்தை வழிபடும் மார்க்கமும், அன்பின் நிறைவும், அருளின் பரிசும், ஞானப் பொலிவும், தத்துவக் கலையும், யாவு முணர்த்துந் தேவாலயங்களும்,

காவியக் கலையும், ஓவியக் கலையும், கணிதத் திறனும், செய்யுட் சுவையும், தொழிற்கலைப் பெருமையும், அவைபயில் முறைமையும், வீர வுணர்ச்சியும், வித்யா வன்மையும் பலவும் பயிற்றிப் பண்பைப் புகட்டும் கல்வி நிலயங்களும் கலைபல பயிற்றுங் கல்லூரிகளும், கழகம் கூடும் கட்டங்களும் ஆகிய பலவித வித்யாலயங்களும்,

யாவர் மனத்தையும் செம்மைப்படுத்தி, நல்லொழுக்கத்தை நல்கி யாதரித்து, சற்சங்கத்தைச் சாரத் தூண்டி, கேள்வி ஞானத் தொடு கீர்த்தியுந் தந்து, அனுபவ ஞானமு மடையச்செய்து, விஞ் ஞானத் திறன் வீறுடனுணர்த்தி, உலகின் தன்மையை யொருங்கே காட்டி, கடவுட் டன்மையைக் கருத்தி லிருத்தி, பலவித நூல்களைப் பார்க்கச் செய்து, ஆத்மானந்தமு மடையப் புரிந்து, எங்கும் இறை யொளி இலகக் கண்டே யின்புறச் செய்யும் இயல்பு மிகுந்த பல உத்தமோத்தம புத்தகங்களால் நிறைக்கப்பெற்ற நூல் நிலையங்களாம் புத்தகாலயங்களும்,

வில்வித்தை வாள்வித்தை மல்யுத்தம் முதலிய பயிலும் பல விசாலமான இடங்களும், யானைகள் கட்டும் அகன்ற கூடங்களும், தேர்கள் நிறுத்தும் திவ்யமாகிய இடங்களும், குதிரைப் பந்திகள் குலவுமிடங்களும், சேனை சமூகம் சேர்ந்துறை யிடங்களும், சேனைத் தலைவர்கள் சிறந்து வாழிடங்களும், மந்திரி ப்ரதானிகள் மல்கு மிடங் களும், வித்வத் கோஷ்டிகள் விரும்பி வதிந்திடும் வீடுகள் அமைந்துள விரிந்த பல் இடங்களும் யாவும் செவ்வனே யமைந்து சீருடன் பொலிந்தும்,

வீதிகள். கடை வீதி கணிகையர் வீதி வேளாளர் வீதி வைசியர் வீதி அரசர் வீதி அந்தணர் வீதி சைவர் வீதி வைணவர் வீதி வைதிகர் வீதி ஆதிசைவர் வீதி வீரசைவர் வீதி உட்சமயத்தா ருறையுள் யோகியர் யோகுபயி லிடங் கள் ஆத்மஞானியர் பலர் அமர்ந்துள இடங்கள் முனிவர்கள் வாழும் மடங்கள் தபசிகள் வதியும் பர்ணசாலைகள் முதலிய பலவும் அவ்வவற் றிற்குத் தக்க இடங்களில் அமைந்தும் பொலிந்திடவும்,

பிணியின்மை செல்வம் விளைவு இன்பம் காவல் என்னும் ஐவகை அணியும் அமையப் பெற்று, தள்ளா விளையுளும் தக்காரும்

தாழ்விலாச் செல்வரும் சேர்ந்து திகழும் சிறப்பைப் பெற்று, அற்புத அம்சங்கள் யாவும்நிறைந்து அழகுடன் விளங்கும் 'ராஜ மகேந்திரம்' என்னும் பெயரை யுடைய திவ்ய நகரம் ஒன்றுண்டு.

அந்தச் சிறந்த பட்டணத்தின்கண்ணே அதியற்புதமான அரச மாளிகை எல்லோர் மனத்தையும் எளிதில் கவரத்தக்க எழிலுடன் பொலிந்து நிலவும். அவ்வரண்மனையில் சகல செல்வ போகங்களும் பெருக அமர்ந்திருப்பவனும், அவ் வளமிகு நன்னாடாகிய வேங்கி நாட்டைப்பரிபாலிப்பவனும், 'விஷ்ணுவர்த்தனன்' என்னுந் திருநாமம் பூண்ந்தவனுமான சந்திர குல திலகன், அனேத்துயிர்கட்கும் இன்ப மூட்டிக்கொண்டு, ஆனந்தம் பொங்கிட, யாவரும் அக மகிழ்வுடன் போற்ற, அரியணைமீதமர்ந்து புகழும் பெயரும் பொலிவுற நிலைநாட்டி விளங்கிவந்தனன்.

கொற்றவன் குணநலன்.

அவன், நல்ல கல்விமான். தக்க கேள்வி யுடையவன். நல் லறிவு மிகுந்தவன். உதார குணன். உண்மை யுரைக்கும் உத்தமன். பெரியோரைப் பேணும் பேரன்புடையான். தன்னுயிரைப் போல் மன் னுயிரைக் காக்குந் தயாளன். சாந்தம் நிறைந்த தன்மையன். கோபத்தை யொழித்த குணாளன். பொறுமை மிகுந்த புண்ணியன். வாச்சல்ய மிக்க வள்ளல். அன்பும் அருளுமே உருக் கொண்ட அண்ணல். பக்தி மிகுந்த பண்பினன். மாசொன்றில்லா மனத்தன். தூய வொழுக்கமுடன் தோன்றுவோன். அனேவரையும் ஆதரிக்கும் ஆண்டகை. பாவச் செயல்களைக் கனவிலுங் கருதாப் பார்த்திபன். எல்லா வுயிர்களும் இன்புற்று வாழவே இறைவனே இறைஞ்சிடும் ஏந்தல். வீரம் மிகுந்த வித்தகன். தீரம் நிறைந்த செம்மல். வைராக்யம் சாதிக்க வல்லவன். பகைவரை த்வம்ஸம் செய்யும் படைவலி யுடையோன். புலவர் பலரும், புண்ணிய சீலரும், போதம் மிகுந்து பொலிகின்றவரும் போற்றும் புத்திமான். தார்மிக குணமிகு தாதை. தோள்வலி மிக்குயர் தோன்றல். புகழாற் பொலி வுறும் புரவலன். சமயாலோசனை நிறைந்த சற்குண விவேகி. எதை யும் தீர விசாரித் தறியும் சீரியன். செல்வத்திற் சிறந்த சீமான். குற்ற மொன் றின்றிக் குடிகளே யோம்பும் கோமான். நீதி நெறி வழுவாது நீணிலத் தரசு செய் நிருபன்.

அத்தகைய அரும் பெருந் திறல்வாய்ந்த விஷ்ணுவர்த்தனன் எனும் அரசு வள்ளல், கடவுள் ஒன்றே யென்று நிச்சயித் துணர்ந்தும், இம்மை மறுமை யிரண்டிற்கும் வேண்டிய நற்பேற்றைத் தேடியும், சாத்வீக ராஜஸ தாமஸ மென்னும் முக்குணங்களின் இயல் பினை யுணர்ந்து முதற் குணமாகிய சாத்வீகமே மிகுந்தும், †அறிவு நிறை ஓர்ப்பு கடைப்பிடி என்னும் ஆடவர்க்குரிய ஸ்ரேஷ்டமான நால்வகைத் தன்மைகளும் அமைந்தும், மந்திரி புரோகிதர் சேனாபதி தூதர் சாரணர் என்னும் அரசர்க்குரிய கூட்டம் ஐந்தையும் பொருத்தமுறப் பெற்றும், படை குடி பொருள் அமைச்சு நட்பு அரண் என்னும் அறுவகைப் பொருள்களையும் அடைந்தும், செங்கோல் மன்னவர்க் குரித்தாகிய அறம் பொருள் இன்பம் அன்பு புகழ் மதிப்பு மறுமை எனக் கூறத்தக்க எழுவகைப் பேற்றையும் உற்றும், ராஜாங்கம் மக்கள் சுற்றம் பொன் மணி நெல் வாகனம் குடிபடை என்னும் அஷ்ட ஐஸ்வர்யங்களும் அமிதமாய்ப் பெற்றும், மரகதம் பவளம் நீலம் வஜ்ரம் பத்மராகம் முத்து கோமேதகம் புருடராகம் வயிடூரியம் ஆகிய நவரத்தினங்களும் குவியல் குவியலாகப் பொக்கிஷத்தில் நிறைத்தும்,

செங்கோல் மலை ஆறு நாடு ஊர் மாலை புரவி யானை மூரசு கொடி என்கிற தசாங்கங்களையும் வகித்தும், கங்கை யமுனை சரஸ்வதி நர்மதை காவேரி குமரி கோதாவரி சிந்து தாமிரபரணி துங்கபத்ரி க்ருஷ்ணவேணி என்னும் பதினெரு திவ்ய நதி தீரங்களிலும் சத்திரங்க ளமைத்து, அன்னதானம் வித்யாதானம் முதலான பல தானங்களைச் செவ்வனே நடாத்தியும்,

அனல் இடியேறு குளிர் ஆயுதம் நஞ்சு மருந்து நீர் காற்று பசி தாகம் மூலிவருமை பிணி என்ன உயிர்களுக்குரிய பன்னிரு வேதனைகளும் நேராதபடி கூடியவரை உயிர்களைக் காப்பாற்றியும், உலகம் வெகு சுபிக்ஷமாக நிலவும்படி மிக நேர்த்தியான முறையில் மனுநீதி வழுவாது அரசு செலுத்தி யாண்டுவந்தனன்.

† அறிவு — ஞானம்; நிறை — காப்பன, காத்துக்கடிவன கடிந்தொழுகும் ஒழுக்கம் (மரட்சிமை); ஓர்ப்பு — ஆராய்தல்; கடைப்பிடி — துணிந்த ஒருண்மையினை விடாது பற்றுதல்.

அவனுடைய அரசாட்சியிலே முப்பத்திரண்டு வித தருமங்களும் யாதொரு தடையுமின்றிச் செவ்வனே நடைபெற்றுவந்தன. தேவாலயங்களில் காலந் தவறாது வேத விதிப்படி பூஜைகள் யாவும் மிகவும் சிறப்புற நடந்துவந்தன. உயிர்களும் பயிர்களும் செழிப்புற் ரோங்கிச் சீர்த்தியுடன் ஆனந்தமாக விளங்கின.

அவனது குடை நிழலில் வாழ்ந்துகொண்டிருந்த குடி ஜனங்களும் அவனைப்போலவே நீதி நெறி கோடாமல், நல் லொழுக்கத்திற் சிறந்து இல் லொழுக்கத்தை நடத்தியும், அற வொழுக்கத்துடன் பொலிந்து துற வொழுக்கத்தைப் பேணியும், தீநெறிக் கண்ணே சிறிதும் செல்லாதவர்களாய், ஈஸ்வர பக்தி மிகுந்தவர்களாய், சிறந்த உத்தம சீலனுகிய அரசனைத் தங்கள் கண்ணுங் கவசமுமாகக் கொண்டவர்களாய், ஒரு குறைவுமின்றி வாழ்ந்துவந்தார்கள்.

நால் வருணத்தவர்களும் தத்தமது வருணச்சிரம தருமத்திற் கேற்ப, வேத முறைப்படி தங்கள் தங்கள் தொழில்களைப் பேணியும்,

நால்வகை ஆசிரமிகள்.

பிரமசாரிகள் (ஏழு வயதில்) மூப்புரி நூலணிந்து மூகத்தில் உள்ள இரு கண்கள் தவிர ஞானத்தை வளர்ப்பதற் காக வெளியில் உருவத்துடன் தோன்றுதிலகும் (உப நயனம்) அகக் கண்ணைத் திறக்கப்பெற்று, பலவித வேத சாஸ்த்ர உண்மைத் தத்துவ ரகசியங்களையும் ஆய்ந்து தெளிதற்கு அருகர்களாகி, சற்குருவைச் சேர்ந்து, குரு கட்டளைவழிநின்று, பதினாறு வயதளவுமாவது ஆசிரியர் நிரூபித்த புகிப்பை அக்குரு வம்ச பரம்பரையிலேயே யாசித்துப் புகித்து, எண்ணெய் தேன் பரிமளம் புட்பம் தாம்பூலம் முதலியவற்றை நீக்கி, மகா புத்திசாலிகளாய், காலை மாலைகளில் சூரியன் அக்னி குரு இவர்களை வணங்கி, காமவழிச் செல்லாமல், தீநெறிகளைக் கனவிலும் நினையாமல், வேதாகம சாஸ்த்ரங்களைச் செவ்வையாகக் கற்றுணர்ந்து குருகுல வாசத்தை நடத்திக்கொண்டுவந்தனர்.

இல்லறத்தினர், பதினாறு வயதிற்கு மேல் ஒரு கன்னிகையை வேத விதிப்படி மணந்து, இருவருடைய மனை நிலையும், மலரும் மணமும், மணியும் ஒளியும், பாட்டும் சுதியும், கனியும் சுவையும், பாலும்

வெண்மையும், கல்லுந் திண்மையும், சொல்லும் பொருளும், காந்தக் கல்லும் ஊசியும், உயிரும் நாடியும், கண்ணும் ப்ரகாசமும் போல ஒத்தனவாகி, கூடுங் காலமறிந்து கூடி யின்புற்று, வாழ்க்கையைச் செம்மையாக நடாத்திக்கொண்டு,

பொருமை பேராசை சினம் கடுஞ் சொல் கொலை புலை பொய்மை ஆசாரஹீனம் முதலாகிய பாவங்களைக் கனவிலும் நினையா தொழித்து, சாந்தம் பொறுமை அவாவின்மை அடக்கம் இன்சொல் தயை ஜீவகாருண்யம் சத்யம் ஆசாரசீலம் பரோபகாரம் ஆதிய நற் குணங்களையே மேற்கொண்டு, அவரவர்க் கிசைந்த மாத்திரம் தரு மத்தைப் புரிந்து, மனோ வாக்குக் காயங்களால் இயன்றவரையில் பிறர்க்கு உபகாரம் செய்து, அவ்வுபகார பலன்களைத் தாம் வகித்தால், அப் புண்யங்களை அனுபவிக்கவேண்டி, மீண்டும் பிறவி யெடுக்க நேருமாதலால், அப் புண்ய பலன்க ளனைத்தையும் பகவதார்பிதம் செய்துகொண்டும்,

நியாயமான வழியிலே பொருள்களை சம்பாதித்துக்கொண்டும், அவ்வாறு சம்பாதித்த நிரவியங்களை சத் விஷயங்களுக்கே மனப்பூர்வ மாக தாராள சிந்தையுடன் செலவு செய்துகொண்டும்,

பிரமசாரி வானப்ரஸ்தன் சந்நியாசி ஆகிய மூவகை ஆசிரமி கட்கும் நோய் பசி முதலியன வராது காத்தும், அநாதைகளை யாதரித்து, ஆதுலர்க்குக் களிப்புற வுதவிபுரிந்து, பேன்மையுறுமாறு முன்னுக்குக் கொணர்ந்தும், தன்னிடத்தில் வந்து இறந்தவர்கட்கு நீர்க்கடன் முதலிய நடத்தியும், தெய்வத்திற்கு நித்ய பூஜை, திருவிழா முதலிய நடத்தற்குத் தக்க உதவிகள் புரிந்தும், நடத்தியும், பிதிர்த் தேவதைகளுக்கு யாகாதி கிருத்தியங்களாலும் நீர்க்கடனாலும் திருப்தி செய்வித்தும், வந்த விருந்தினரைப் பாதுகாத்து இனிவரும் விருந்தி னருக் கெதிர் பார்த்தும், சுற்றத்தார்க்கு மகிழ்வுண்டாக வேண்டுவன வற்றை இயன்றளவு கொடுத்து உதவியும்,

நடுவு நிலைமையை யனுசரித்தும், அன்பும் ஒழுக்கமும் நிறைந் தும், பிறர் பொருளிச்சித்தல் புறங்கூறுதல் பயனில்லாதன பேசல் ஆதியவற்றை யொழித்து, உலக நடையினையறிந்து, புகழுடம்பினராகி,

யாவரிடத்தும் உண்மை யன்புடையவர்களாய், இனிய வசனங் களேயே வசனித்து, புத்ர பாக்யம் முதலியவற்றைப் பெற்று, இம்மை யிலேயே அதிக இன்பத்தை யனுபவித்தும், மறுமையிற் பேரானந்த முறுதற்கு அருகதை யுடையவர்களாகத் திகழ்ந்தும், பரமானந்தமாக இல் வாழ்க்கையினை இனிது நடாத்திக்கொண்டுவந்தனர்.

வானப்ரஸ்தாச்சிரமிகள் :—

"நில்லாத வற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை" என்றும்,

"கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று" என்றும்,

"நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு" என்றும்,

"வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை
யாண்டு மஃதொப்ப தில்" என்றும்,

"இன்பம் இடையறு தீண்டும் அவாவென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின்" என்றும்,

"ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல" என்றும்,

"நாச்சென்று விக்குண்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்" என்றும்,

உத்தரவேதம் உரைப்பதை யுணர்ந்து, உலக போகங்களின் மீதுள்ள இச்சையை யகற்றிப் பரம்பொருளைச் சார நிச்சயித்து, மனைவியரோ டாவது, அல்லது மனைவியரை மைந்தரிடத்தில் விட்டாவது, தாம் வனம் சென்று,

"அடல்வேண்டு மைந்தன் புலத்தை; விடல்வேண்டும்
வேண்டிய வெல்லா மொருங்கு" எனவும்,

"ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றின்
எழுமையு மேமாப் புடைத்து" எனவும்,

கூறும் நாயனார் மொழிப்படி மெய் வாய் கண் மூக்கு செவி வழியாய் உண்டாகும் ஊறு சுவை ஒளி மணம் ஓசை என்னும் ஐவகை யிச்சை களையும் நாளாவட்டத்தில் சிறிது சிறிதா யடக்கி, விரதம் முதலிய

வற்றை யனுஷ்டித்து, ஒருயிர்க்கும் இடையூறு செய்யாமல், தவத்தில் நின்று, நல்ல முயற்சியை அதிகமாக அனுசரித்து, மனதை மிகவும் வருத்தாமல் (சிறு பிள்ளைகளை விநோத முன்னிலையில் சமாதானம் செய்து அணைத்துக்கொள்வது போல) நாளுக்கு நாள் ஒடுக்கி, மனம் அறிவோடு கலந்து தற்பதத்தை யுணருகிற வரையில் ஆசிரியன் கட்டுரையையும் சாஸ்திர விதியையும் கடைப்பிடித்து, கோப முதலிய வற்றை யகற்றி நின்று, யோக மார்க்கத்தி லீடுபட்டுத் தமதாச்சிர மாசார நிலையினின்றும் வழுவாது இருந்து வருவார்கள்.

சன்னியாசிகள் :—

ஸ்கந்தபுராண தத்துவம்.

சர்வ தத்துவங்களினது அந்தத்தில் உன்மனிக்கப்பால் சாந்த நிறைவாயுள்ள ஆறுதலாகிய சுத்த ஆன்ம அறிவாகிய உள்ளமே சுப்ரமண்யம் என்றும், சப்த அறிவின்மூலம் ஒளி யறிவின்மூலம் சுவை யறிவின் மூலம் பரிச அறிவின்மூலம் வாசனை யறிவின் மூலம் ஆத்ம அறிவின்மூலம் என்னும் ஆறு தத்துவங்களின் கூட்டறிவின் மூலகாரணப் பிரகாச விளக்கமென்னும் ஆறு முகங்களும், ஆறு ஆதாரங்களிலுள்ள ப்ரகாச அப்ரகாசங்களாம் பன்னிரண்டு கரங்களும்,

தீக்ஷண்ய வுணர்ச்சி யென்னும் வஜ்ஜிரமும், சக்தி என்னும் வேலும், அருளென்னும் அருளும், ஆன்ம விளக்கமாம் நாதமென்னும் மணியும், கீர்த்தி யென்னும் த்வஜமும், தயவென்னும் ஸ்ரஸிஜமும், மாச்சர்ய மில்லாத நிறைவென்னும் குக்குடமும், பாசநீக்கமென்னும் ப்ராகமும், வைராக்ய அறிவென்னும் தண்டமும், அன்பென்னும் பாணமும் ஆகிய தசாயுதங்களும், சமாதான உணர்ச்சி யென்னும் அபயமும், நிராபாரமான ஆதரவாகிய சகிப்பென்னும் வரதமும்,

அனுபவ விளக்கம், சாதன விளக்கம் என்னும் இரண்டு திருவடிகளும்கொண்டு, இயற்கை விளக்கமாய் விளங்கும் பரமாத்மாவான சுப்ரமண்யம்,

ஆன்ம இயற்கைக் குணமாகிய தயவென்னுங் கங்காநதிக் கரையில், சர்வ விஷயங்களிலும் அகங்காரமென்னும் தலை யெடாமல் கீழ்ப்படிந்த குணம் (என்னும் நாணல்) நிறைந்த ஆன்மாவின்

அனுபவ மத்ய நிலையாகிய சகிப்பென்னும் நாணற்காட்டில் தோன்றி, நவ தத்வ காரணமாகிய நவ வைராக தத்வங்களென்னும் வீரர்களைச் சகோதரர்களாகக் கொண்டு,

மூலாஞ் ஞான காரணமாயுள்ள கேவலமாகிய பிரகிருதி, மாயையின் அசுத்த கேவலமாகிய அசுத்தா சுத்த மகா அகங்கார மென்னும் இராக்ஷஸ அம்சமான சூரதத்வம், அதின் சோதரமான மூவகைத் தத்வங்களோடு, அஞ்ஞான தசையில், ஆன்ம அறிவையும், பிண்ட விளக்கமான தேவர்களையும், விஷய விளக்கமான இந்திரியங் களையும், நாடி விளக்கமான யந்திரங்களையும், பிராண விளக்கமான உயிரையும் விழுங்கித் தன்னரசு செலுத்துவது கண்டு,

விரைவினிற் சென்று, தயா சொரூபனுய் நின்று, பவ வினைக ளாகிய மலையைத் தகர்த்து, மகா மதமாகிய கஜமுகனை வதைத்து, மகா மோகமாகிய சிங்க முகனையும் கொன்று, அவாவென்னும் சூர பத்மன் மாமரமாய்த் தோன்றியகாலை சுத்த ஞானம் சுத்த க்ரியை என்னும் சக்திகளுடன் வேல் என்னும் விவேகத்தால் சம்ஹரிக்க, அதுகாலை மேற்படி தத்வங்கள் நஷ்டமானபோது அவற்றின் அக்ரமம் அதிக்ரமம் கெட்டு, க்ரமம் மாத்திரமாகித் தோன்றிய இரண்டுருவங் களில், பூர்வ வாசனைகள் பல வண்ணமாய் விரிந்தாடும் இயல்பைக் கொண்டதாகலின் அத்தகைய விசித்ர மாயையாம் விகல்ப ஜாலமாகிய மயில் வாகனமாகக்கொண்டு, அசையவொட்டாது மத்தியில் ஏறி யமர்ந் தடக்கியும், மாச்சர்ய குக்குடத்தைப் போதமாகிய கையால் அடக்கியும்,

சர்வ தத்வங்களையும் தன்வசமாக்கி, அகங்காரக் கொடிகட்டி, அஞ்ஞான நாடகம் செய்த தத்துவ அகங்கரிப்பை அடக்கி, பதி பசு பாசம் அநாதி நித்யம் என்னும் சித்தாந்தத்தை விளக்கிக் காட்டியும், ஆபாச தத்துவங்களைச் சம்ஹரித்தும், சுத்த விஷய புவனமாகிய தேவ லோகத்தை நிலைபெறச் செய்தும், இந்திர பதியான தேவேந்திர னுடைய பெண்ணாகிய தாந்தர தத்வமென்னும் தெய்வ யானையை இடப்பா லமைத்தும், இந்திரியங்களாகிய வேடர்களின் கண்ணிற் புலப்பட்ட மானசமென்னும் மானினது கர்ப்பத்திலுண்டான வள்ளி யாகிய சுத்த மனதை வலத்தில் வைத்தும்,

சகல கேவலங்களுக்கும் நினைப்பு மறப்புகளுக்கும் இடையில் விவேக வடிவாயும், பாத முதல் நாபி வரையில் உஷ்ண உருவாயும், நாபி முதல் கண்டம் வரையில் ஆதார நாடி உருவாயும், விசுத்தியாகிய ஹ்ருதய ஸ்தானத்தில் இடதுபுறத்தில் ஆறுதலையுடைய ஒரு நாடியுரு வாயும், கண்டமுதல் புருவ மத்தி வரையில் மணி யுருவாயும், புருவ மத்தியில் ஆறு பட்டையாய் உருட்சியாய் மிகுந்த ப்ரகாசத்துடன் பொலியும் ஜோதி மணியாயும், உச்சியில் ஒளி யுருவாயும், புத்தியில் சுத்த அறிவாயும், அனுபவத்தில் நித்தியமாயும், எங்கும் நிறைவாயும் விளங்கும் பரமாத்மாவே சுப்ரமண்யம் என்றும், ஸ்காந்த புராணத்தில் குறிப்பா லுணர்த்துவதையும்,

இராமாயண தத்துவம்.

காமம் க்ரோதம் லோபம் மோகம் மதம் மாச்சர்யம் டம்பம் தர்ப்பம் ஈர்ஷை அசூயை ஆகிய பத்துமே இராவணனுடைய தலைகள் என்றும், இவை யனைத்தையும் தன்னகத்தே கொண்ட ஆணவ மலமே இராவணன் என்றும், கர்மமே கும்பகர்ணன் என்றும், மாயையே விபீஷணன் என்றும், மும்மல வாசனை மிகுந்த பொய்யுலகே இலங்கை என்றும், மனம் அகங்காரத்தின் வசமாகி பொய்யுலகில் அகப்பட்டுத் துன்புறுவதே சீதை சிறைப் பட்டதென்றும்,

சீதையாகிய மனமும் பரத சத்ருக்னராகிய வாக்குக் காயங் களும் தம்வசம் கெட்டு ராமஸ்மரணையாகிய ஆத்மத்யானத்திலேயே இருக்க, ப்ராண வாயுவாகிய ஹனுமனின் உதவியாலும், ஐம் பொறிக ளாகிய சுக்ரீவன் ஜாம்பவான் அங்கதன் சம்பாதி நளனுகியவர்களி னுதவியாலும், எழுபத் தீராயிரம் நரம்புகளாகிய (எழுபத்திரண்டு வெள்ளம்) வானர சேனைகளி னுதவியாலும், ஆத்மாவாகிய ராமன் விவேகமாகிய லக்ஷ்மணனுடன் சென்று, அஞ்ஞான சாகரத்தின் நடுவண் வாசம்புரிந்த இராவணனோடு சம்பந்தப்பட்டிருந்தமையால் அசுத்த மாயை வடிவாயிருந்த விபீஷணனை அருளா லழைத்து சுத்த மாயையாக மாற்றித் தன் நட்பினைக்கிக்கொண்டு, ஆணவம் கர்மம் ஆகிய இராவண கும்பகர்ணர்களையும் அவர்களைச் சார்ந்த அசுர தத்துவங்களையும் அழித்து, மனமாகிய சீதையை மீட்டு,

ஞானலோகமாகிய அயோத்தி சேர்ந்து, ஆனந்தமென்னும் மகுடத்தைப் புனைந்து அருளாட்சி புரிந்து அனைத்துயிர்க்கும் நன்மை யளித்தானென்றும் ஸ்ரீமத் ராமாயணம் உணர்த்துவதையும்

பாரத தத்துவம்.

மனம் என்னும் திரௌபதி புலன்களின் வழியே சென்று விடாமல், அவ் வைம்புலன்களாகிய பஞ்ச பாண்டவர்களையும் தன் வசமாக்கிக்கொண்டு, தூய நெறியி லொழுகுமேல், அம் மனத்திற்கு துர்க்குணங்களென்னுந் துரியோதனாதியர்களால் எத்தகைய தீங்குகள் நேருங்காலையிலும் ஞானமென்னுங் கண்ணபிரான் உறுதுணையாய் முன்னின்று உடனே காத்தருளுவன் என்பதையும்,

அந்த ஞான சொரூபனுங் கண்ணனையே ஒப்பருந் துணையாய்க் கொண்டு நற்குணங்களிலே ஈடுபட்டொழுகிய ஐம்புலன்களென்னும் பஞ்சபாண்டவர்களும் மனமென்னுந் திரௌபதியும், அந்த மெய்ஞ்ஞானக் கண்ணனின் பேரருளுதவியால் துர்க்குணங்களாகிய துரியோதனாதியரை த்வம்சம் செய்து, உண்மை யின்பமாகிய திருமுடியைத் தரித்து உலக நன்மையைக்கோரி உத்தம அரசு செலுத்தினர் என்பதையும், மகாபாரதமென்னும் நூல் விளக்கியுணர்த்துவதையும்,

யோக வுணர்ச்சி

ஸத்யலோகம், வைகுண்டம், கைலாஸம் ஆதிய உலகங்களும், பிரம்மா, விஷ்ணு, ருத்ரன், மகேசன், சதாசிவன், சர்வேஸ்வரன், ஸ்கந்தன், கணேசன், அம்பிகை ஆதிய மூர்த்திகளும், க்ஷீராப்தி வடவாக்னி முதலியனவும், விந்து, நாதம், பரவிந்து, பரநாதம், திக்ராந்தம், அதிக்ராந்தம், துவாதசாந்தம், சுத்தசிவம் முதலான பதங்களும் பத மூர்த்திகளும், (மூலாதாரம் முதல் ஹ்ருதய ஸ்தானம்வரை வாயு நாடி வண்ணமாயும், அதற்குமேல் அக்னி வண்ணமாயும், அடியிற் பருத்து வரவர நேர்மையாயும், இந்திரிய காரணங்களுக்குப் புலப்படாமல் அணுவுக்கணுவாய் ஜீவனுக்கும் புலப்படாமல் அகண்டமாயும், ஆன்மக் காட்சியில் அருகித் தோன்றுவதாயும், இரண்டற நிற்பதாயும் விளங்கும் ஸ்தம்பமாகிய) சிவாகார பூரண ஸ்தம்பமும், ஸர்வ வல்லமைகளும், ஸர்வ சக்திகளும், ஸர்வ சித்தித்தன்மைகளும் அனைத்தும்

இந்த சரீரத்திற்குள்ளேயே யுள்ளனவென்றும், சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்ரகம் ஆகிய யாவும் உள்ளேயே சதா சர்வகாலமும் நடந்துகொண்டுள்ளன வென்றும், அவையனைத்தையும் ஆன்மானுபவத்தாலறிந்துணர்ந்தால் எல்லாம் செயல்கூடும் என்றும் யோக நூல்கள் உணர்த்துவதையும்,

"பற்றுக பற்றற்றான் பற்றினை; அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" என்றும்,

"ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு" என்றும்,

"ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து" என்றும்,

"இருள் நீக்கி யின்பம் பயக்கும் மருள் நீக்கி
மாசறு காட்சி யவர்க்கு" என்றும்,

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி" என்றும்,

பொதுமறையாகிய நீதிநூலுணர்த்துவதையும் ஆராய்ந்தறிந்து,

பேருண்டி, நெடுந்துயில், சோம்பல், நீதிவழுவு, ஒழுக்கக் குறைவு, வஞ்சகம், மறதி, பொய், கோபம், கொலை, காமம் ஆதிய வற்றிற் காதாரமாகிய தாமஸ குணத்தையும், மனவுக்கம், விஞ்ஞானம், வீரம், தவம், தருமம், தானம், கேள்வி முதலியவற்றைத்தரும் ராஜஸ குணத்தையும் அறவே விடுத்து,

ஞானம் அருள் தவம் பொறுமை வாய்மை மேன்மை மோனம் ஐம்பொறியடக்கல் முதலிய சன்மார்க்க நெறிகளைக் கொடுக்கும் சாத்வீக குணத்தினையே மேற்கொண்டவர்களாகி, வானப் பிரஸ்த வியல் முழுதுமமைந்து,

கொல்லாமை மெய்கூறல் கள்ளாமை பிறர்பொரு ளிச்சியாமை, இந்திரிய மடக்கல் ஆதிய இயம நிலையும்,

தவம் தூய்மை தத்வநூலோர்தல் மனங்களித்திருத்தல் கடவுளை வழிபடல் முதலிய நியமங்களும்,

சுவத்திகம் கோமுகம் பத்மம் வீரம் கேசரி பத்திரம் முத்தம் மயூரம் சுகம் ஆகிய ஆசன நிலைகளும்,

ப்ராண வாயுவை ரேசக பூரக கும்பகம் செய்யும் ப்ராணாயாமமும்,

உபாதியை நீக்கி உள்நோக்கும் ப்ரத்தியாகாரமும்,

கண்டம் இதயம் நெற்றி கபாலம் நாபி இவற்றிலொன்றில் சந்தகம் சிந்தைசெய்யும் தாரணையும்,

ஐம்புலனடக்கி சிவயோகம் சேரும் த்யானமும்,

இந்திரிய தத்துவச் சேட்டைகளுக் கேதுவாய் யாக்கையிலின்று அவற்றோடு கூடினும் அதிலிருக்கும் ஆன்மாவாகிய தன்னைத் தான் காணுதலாகிய சமாதி நிலையும் உணர்ந்து,

குத ஸ்தானத்தில் மூலாதாரத்தில் யோகாக்னியை ப்ராண வாயுவின்துணையால் மூட்டிக்கிளப்பி, குய்யத்தில் ஸ்வாதிஷ்டான ஒளியையும், நாபியில் மணிபூரக ஒளியையும், ஹ்ருதயத்தில் அனாகத ஒளியையும், அடிநாக்கில் விசுத்தியின் ஒளியையும், நெற்றி நடுவில் ஆக்ஞையின் ஒளியையும் கண்டு தரிசித்துக்கொண்டு, அஷ்டாங்க யோகமாகிய தவத்தைச்செய்து, தவத்தால் வாய்மையும், வாய்மையால் தூய்மையும் அடைந்து, தூய்மையால் அவாவைப் பற்றறச் செய்து, முதற்குணமாகிய சாத்விகத்தின் மூன்று படிகளில் முதற் படியாகிய 'சாத்வீகத்திற் சாத்வீகம்' என்னும் குணத்தை மேற் கொண்டு, சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு படிகளில் கடைசி படியாகிய ஞானத்தின் உட்பிரிவுகள் நான்கில் கடைசி நான்காம் பிரிவாகிய 'ஞானத்தில் ஞானம்' என்பதை யடைந்து, உலகையும் உடலையும் அறவே மறந்து, மனமிறந்து, ஜீவனும் பிரமமும் இரண்டறக் கலந்து, மறுபடியும் பிறவாத இயல்பை யுடைய பரத்துடனொன்றிப் பேதமற நிற்பர்.

கோல் திறன்

அவனுடைய அரசாட்சியில் சண்டை விவாதம் குற்றம் கொலை முதலாகிய யாதொருவித குறைபாடுகளும் எங்கும் நடவாது. எந்த மனுஷ்யர்கட்காவது, மிருகங்கட்காவது, பட்சிகட்காவது, மரம் செடி கொடி புல் பூண்டுகள் பயிர்கள் ஆகிய ஸ்தாவர

வர்க்கங்கட்காவது எவ்வகைத்தான குறைகளும் நேரா. மாத மூன்று மாரி தவறுமல் காலத்திற் பெய்து சுபிட்சம் நல்கும். விளைவுகள் பலவும் சற்றும் குறையாது தாராளமாக விளையும். கைத்தொழில்கள் யாவும் கவினுற்று மேன்மையுடன் எங்கணும் வளர்ச்சியுற்றுத் திகழும். எவ்விடம் பார்க்கினும் லக்ஷ்மீ விலாசம் தாண்டவமாடும். அந்நாட்டின் செழுமை அருங்கவி வாணர்க்கும் அளவிடற் கரிதாம்.

அவை நிகழ்ச்சி

'வருசெரு வொன் றின்மையினுல், மற்போரும், சொற்புலவோர் வாதப்போரும், இருசிறை வாரணப் போரும், இகல்மத வாரணப் போரு மிணைய கண்டே' என கலிங்கத்துப் பரணியிற் (கவிச் சக்ரவர்த்தி சயங்கொண்டாராற்) கூறப்பட்டுள்ளதை யொப்ப, ஒருவரும் எதிரின்றி, ஒப்புயர்வில்லாச் செவ்விய முறையில் செங்கோல் செலுத்தி யரசாட்சி புரிந்து வருகையில், ஓர் நாள் அரசன் தனது சபாமண்டபத்தின் கண்ணே, மந்திரிப்ரதானிகள் சேனைத்தலைவர்கள் தளகர்த்தர்கள் சேவகர்கள் வேவுகாரர்கள் ஊர் காப்பாளர்கள் நகர் சோதனைக்காரர்கள் தூதர்கள் ஒற்றர்கள் சாரணர்கள் முதலியோர்களும், அரச கூட்டங்களும், பந்துவர்க்கங்களும், வேத வேதாந்திகளும், சமய சாத்திரப் பிரசங்கிகளும், ஆத்ம ஞானிகளும், யோக் சீலர்களும், வித்வத்சிகாமணிகளும், கணித விற்பன்னர்களும், சபாலங்கார சம்பன்னர்களும், கவி பூஷணங்களும், இசைநூற்புலவர்களும், ஸங்கீத ஞானம் மிகுந்த மேலோர்களும், பலவித இசைக் கருவிகளை வாசிக்கும் நற்பயிற்சியுந் தேர்ச்சியும் மிக்க பல அறிஞர்களும், யுத்தரங்கத்தில் வெற்றியை நிலை நாட்டக்கூடிய வீர தீரர்களும், மகாபலசாலிகளும், பல துறைகளிலும் பயிற்றுவிக்கக் கூடிய ஆசிரிய கூட்டங்களும் சூழ, அற்புதமான அரியணைமீது அமர்ந்திருக்க, தெய்வஸ்தோத்திரம் பரத நாட்டியம் முதலியன நடந்தன. வித்வத் பரிசில்கள் வழங்கப்பட்டன. தேச விசாரணைகள் செய்யப்பெற்றன.

பாரதப் பிரசங்கம்

பிறகு, சில தினங்களுக்கு முன்பு ஆரம்பித்து தினமும் கொஞ்சமாக அச் சபையில் நடைபெற்று வருகின்ற மகாபாரத ப்ரசங்கத்தை நடத்த உத்தரவளிக்கப்பட்டது. புராணிகர் பிரசங்கத்தைத் துவக்கினர். அன்றையதினம் இராஜசூய கட்டம் நடைபெற

வேண்டியிருந்தது. ஆகலின், புராணிகர், பாண்டவர்கள் இராஜசூய யாகம் செய்ய நினைந்து திக்விஜயத்திற்குப் புறப்பட்ட முறைகளையெல்லாம் நன்கு எடுத்துரைத்து, அவர்கள் ஒவ்வொரு அரச வீரனையும் எதிர்த்து யுத்தம்செய்து ஜெயம் கொள்வதையும் இனிது விளக்கி

" நீல னிட்டதிறை யான கோலமணி
நீல மாதிநவ நிதியமுஞ்
சால மிக்கதன மியமும் வெளவியுயர்
சாரல் விந்தசயி லப்புறத்
தேல நெட்டடவி முறிய மோதிவெளி
யாக வேழ்கடலை யுங்கடைக்
கால முற்றியெழு காலை னும்படி
கலக்கி னனெழு கலிங்கமும் "

" சென்னி நாடுகுட கொங்க நாடுதிறை
கொண்டு தென்ன னுறை செந்தமிழ்க்
கன்னி நாடுறவு டன்பு குந்துமணி
நித்தி லக்குவைகள் கைக்கொளா
மன்னி நாடுகடல் கொண்ட கைம்முனிவன்
வைகு மாமலய நண்ணினன்
மின்னி நாடுறவி ளங்கு வெஞ்சமர
வீர வாகைபெறு வேலினன் "

முதலிய செய்யுட்களால் திக் விஜயம் செய்த விபரத்தையும்,

" ஆல்வரும் புரவித் திண்டே ரறன்மக னநுச ரான
நால்வருஞ் சென்று திக்கோர் நாலிரண் டினுந்தன் செய்ய
கோல்வரும் படியே யாக்கிக் கொணர்ந்தன திறைகள் கண்டான்
மேல்வரு மிராஜ சூய வேள்விநாம் விளம்பக் கேண்மோ "

என்னும் செய்யுளால் அவர்கள் திக்விஜயம் செய்து திறைகளைக் கொணர்ந்து யுதிட்டிரர்பால் சமர்ப்பிப்பதையும், கூறி, பின்னர் அவர்கள் வேள்வியை யாற்றும் சிறப்புகளையும் விளக்கி,

" முழுதுணர் வரம்பில் கேள்வி முனிவரர் குழாமு மென்றும்
அழிவிலா மலரோ னுதி யமரர்தங் குழாமுஞ் சூழ
எழுசுடர் முத்திப் பொங்க வெழுபக லோமஞ் செய்தான்
பழுதறு பாண்டு செய்த மாதவம் பலித்த தொப்பான் "

(வேறு)

" இம்முறை யிராஜ சூயமா மகத்துக்
கெழுதொணு நான்மறை யுரைத்த
அம்முறை யிமையோ ரானவர்க் கெல்லா
மரும்பெற லவியுண வருளி
மும்முறை வலம்வந் திருவருஞ் சுவாகை
முதல்வனீ முடியுற வணங்கித்
தெம்முறை யரச ரிடுதிறை யனைத்துந்
தானமுந் தியாகமுஞ் செய்தான் "

என்பன வாதிய செய்யுட்களால் வேள்வியைப் பூர்த்தி செய்த விதத்தையும் கூறினர்.

அரசன் மனே நிலை

அதுகேட்ட அரசனுடைய மனத்தின் கண்ணே திடீரென ஒருணர்ச்சி தோன்றியது. "நாம் ஏன் பிற தேசங்கள் மீது படையெடுத்துச்சென்று திக்விஜயம் செய்து நமது வெற்றிக்கொடியை ஆங்காங்கும் நிலை நிறுத்தக் கூடாது? நமது மூதாதையர்கள் உலகம் புகழும் உத்தம வீரர்களாக விளங்கி, எங்குந் தமது வெற்றிக்கொடியை ஸ்தாபித்து ஒப்பரும் ப்ரதாபத்துடன் பொலிந்துள்ளார்களே! அவர்களது வம்சத்தில் பிறந்த யான் அவர்களிலிவிட மேன்மை படைத்து கீழ விதேகம் மேலவிதேகம் வடவிதேகம் தென்விதேகம் வடவிரேபதம் தென்னிரேபதம் வடபரதம் தென்பரதம் மத்திமகண்டம் என்னும் நவகண்டங்களையும் ஆளாவிடினும், நாவல் இறலி குசை சிரவுஞ்சம் கமுகு தெங்கு புஷ்கரம் ஆகிய ஸப்த தீவுகளையும் என் ஆட்சிக்குட் படுத்தாவிடினும்,

நாவலந் தீவிலுள்ள அங்கம் – அருணம் – அவந்தி – ஆந்திரம் – இலாடம் – எவ்வனம் – ஒட்டியம் – கருசம் – கலிங்கம் – கன்னடம் – கருநாடம் – காசம் – காஸ்மீரம் – காந்தாரம் – காம்போஜம் – கிராடம் – குருகு – குடகம் – குந்தளம் – குரு – குலிந்தம் – கூர்ஜ்ஜரம் கேகயம் – கேரளம் – கொங்கணம் – கொல்லம் – கோசலம் – சகம் – சவ்வீரம் – சாலவம் – சிங்களம் – சிந்து – சீனம் – சூரசேனம் – சோழகம் – சோனகம் – திராவிடம் – துளுவம் – தெங்கணம் – நிடதம் – நேபாளம் – பப்பரம் – பல்லவம் – பாஞ்சாலம் – பாண்டியம்

புலிந்தம் – போடம் – மகதம் – மச்சம் – மராடம் – மலையாளம் மாளவம் – யுகந்தரம் – வங்கம் – வங்காளம் – விதர்ப்பம் ஆகிய ஐம் பத்தாறு தேசங்களுக்குமாவது திக் விஜயம் செய்து 'வீரசிகாமணி' என்று வியலுலகத்தினர் விறுடன் விளம்பும்படியான பெயரடைவது தான் சரி" என்று நினைந்து தனக்குள் நிச்சயித்தவனுகி யிருக்க, அன்றைய தினப்ரசங்கம் பூர்த்தியாகி, வேண்டிய அரச காரியங்களும் கவனிக்கப்பட்ட பின்பு சபை கலைவுற்றது.

திக்விஜய ஆயத்தம்

அரசனுடைய உள்ளக் குறிப்பை யுணர்ந்த மந்திரிகள் திக் விஜயத்திற்குப் புறப்படுவான் வேண்டி, சகலவித மான முஸ்தீப்புகளும் தயார் செய்து, ப்ரயாண பேரி முழக்கி, சகல சேனைகளும் புறப்பட ஆயத்தம் செய்துவிட்டு, அரசனிடம் சென்று, "ஸ்வாமீ! தங்கள் எண்ணைத்தின்படியே திக்விஜயம் செய்வதற்காக யாவும் தயார் செய்திருக்கின்றோம். இந்த க்ஷணமே புறப்படலாம்" என்று விண்ணப்பித்துக் கொண்டனர்.

புறப்பாடு

அவ் வார்த்தைகளைச் செவியுற்ற விஷ்ணு வர்த்தனன் மனமிக மகிழ்ந்தவனுகி, "அவ்வாறே காலையில் புறப்படு வோம்" என்றுகூறி, சில மந்திரிகளை யழைப்பித்து ராஜ்யத்தை ஒப்புவித்து, மறுநாட் காலையில் வாச நீராடி, பீதாம்பரந் தரித்து, ஜபதப நேமநிஷ்டைகளை முடித்துக் கொண்டு, திருநுதலில் சிந்துரத் திலகமணிந்து, கடவுளை ப்ரார்த்தித்து, "ஸ்வாமீ! அடியேன் திக்விஜயத்தில் வெற்றிகொண்டு வீரவாகை புனைந்து செவ்வனே திரும்புமாறு திருவருள் பாலித்தல் வேண்டும்" என்று விண்ணப்பித்துக்கொண்டு, பூஜையை முடித்து, அறுசுவை கலந்த உணவினை அருந்தித் தாம்பூலந் தரித்து, சந்தனம் களப கஸ்தூரி கள் அணிந்து, கச்சைவீக்கி, பொற்கவச மணிந்து, க்ரீடம் குண்ட லம் கண்டசரம் வாகுவலயம் பதக்கம் சரப்பளி கடகம் பொற் பூணூல் பொன்னரைஞாண் உதரபந்தனம் நவரத்ன மோதிரங்கள் வீரகங்கணம் பாதகிண்கிணி வீரக்கழல் ஆகிய திவ்யாபரணங்கள் புனைந்து, வீரப்பட்டங்கட்டி, வாகுப்பட்டை யணிந்து, வில் அம்பரைத் தூணி உடைவாள் கதை சக்கரம் எறிவேலையம் பொற்பிரம்பு ஆகிய யாவும் தாங்கி, யுத்த ப்ரசண்ட கோலனுய், வீரப்ரதாப லோலனுய்

வாயுவேகம், மனோவேகத்திலும் மிகுந்த வேகப்புரவிகளைப் பூட்டி யலங்கரிக்கப்பட்டு மகாமேருக் கொப்பாய் விளங்கிய தேரின்மீ தாரோகணித்துக் கொண்டனன்.

வாத்தியங்கள்

பேரிகை முரசு தாளம் மத்தளம் தாரை தக்கை சச்சரி சல்லரி மல்லரி சங்கு தம்பட்டம் பம்பை பாங்கா உறுமி தவுண்டை கொம்பு குழல் காகளம் கர்ணு குடமுழா துந்துமி பூரி டங்கா தவிதடி தப்பட்டை துடி டமாரம் எக்காளம் நாரதவீணை தும்புருவீணை இராவணஸ்தம் முதலிய (தோற்கருவி துளைக்கருவி கஞ்சக்கருவி மிடற்றுக்கருவி நரம்புக்கருவி முதலான ஐவகையானும்) முப்பத்திரண்டுவித வாத்தி யங்களும் முழங்கின.

மங்கல மங்கையர் மகிழ்ந்திரு புறமும் வெண்சாமரைகளை வீசி நின்றார்கள். மயில் விசிறி வெட்டிவேர் விசிறிகளைக் கரங்களிற் முங்கி இருபுறமும் பாங்கியர் எழிலுற விசிறிக்கொண்டிருந்தனர். பூச்சக்கரக்குடைகள் கவினுறக் கவிந்து நிழல்செய்து நெருங்கின.

பல தலைவர்கள்

பேரரசர்கள் சிற்றரசர்கள் இளவரசர்கள் பட்டவர்த்தனர் மகுடவர்த்தனர் மன்னர் மண்டலீகர் மகாரதர் சமரதர் அர்த்தரதர் மந்திரிகள் சாமந்தர்கள் யானைத்தலைவர் சேனைத்தலைவர் குதிரைத்தலைவர் இரதத்தலைவர் படைத்தலைவர் முடித்தலைவர் அணித் தலைவர் குடைத்தலைவர் கொடித்தலைவர் ஆயுதத்தலைவர் வாத்தியத் தலைவர் வேத்திரத்தலைவர் சேவகத்தலைவர் பொக்கிஷத்தலைவர் நவரத்ன கசித பூஷணத்தலைவர் பீதாம்பராதி வஸ்திரத்தலைவர் அஸ்திரத்தலைவர் சஸ்திரத்தலைவர் சாஸ்திரத்தலைவர் சூஸ்திரத்தலைவர் மல்யுத்தத்தலைவர் வில்யுத்தத்தலைவர் வாள்வீரத்தலைவர் வேல்வீரத்தலைவர் வேத வேதாந்தி யர் ஆகம சித்தாந்தியர் வித்வத் சிகாமணிகள் அனுபவமிக்க அறிஞர் கள் ஆதியபலரும் ஆடையாபரணலங்கிருதர்களாகி தத்தமக்குரிய வாகனங்களிலமர்ந்து இருபாலும் வந்துகொண்டிருந்தனர்.

பட்டாங்கு படிப்போர், கட்டியங்கூறுவோர், எச்சரிக்கை மொழிவோர், வந்திப்போர், புகழ்வோர் முதலியோர் தத்தமது தொழில்களைப் புரிந்துகொண்டு நடந்தனர்.

விருதுகள்

ஆலவட்டம் தாலவட்டம் பீலிக்குஞ்சம் மயிற்பீலி மேற்கட்டி மகரதோரணங்கள் வெண்கொற்றக் குடைகள் சந்த்ரவட்டக் குடைகள் பட்டுக்குடைகள் பல வர்ணக்குடைகள் வெள்ளைக் கொடிகள் வண்ணக் கொடிகள் பட்டுக்கொடிகள் பலநிறக்கொடிகள் ஈட்டி பாலா வேல் வகைகள் ஆகிய பிருதுகள் வெகு அலங்காரமாக முன்னே சென்றன.

நால்வகைச் சேனை

மும்மதம் செறிந்த யானைகள் பலவும், சோளை முகம்போல் மத மழை பொழிந்து, உரலடி பெயர்த்து, நிழலைக் கறுவி, நிலத்தை யுதைத்து, மேகத்தைப் பிழிந்து தாகத்துக்கருந்தி, கிம்புரிக் கோடோங்கி, கிளர் கத்தி தாங்கி, வீரப்பட்டமும், விபூதிரேகையும், சிந்தூரத்திலகமும், திகழ்பொற் கும்பமும், நான்கு காலுக்கும் வீர வெண்டையமும், கர்ணகவரியும், கந்துகச் செருக்கும், இருபுறந் தீரர்க ளிலங்கு பெற்றியும், முதுகில் வெகு அழகுறத்திகழும் அம்பாரி யும், வாலிற் கத்தியும், வாயிலுலக்கையும் கொண்டு, சுந்தரப்பட்டா லாகிய முகபடாமும், கழுத்திடு கயிறுகிய கச்சையும், வெண்கலமணி கள் ஒலித்திடு பொலியும், மேற்றவிசின்மேல் பாகரும் விளங்க, மதர்த்து இறுமாந்து சீறிக்கொண்டு எதிரிகளை எதிர்க்கத்தக்க சீற்றத் துடன் விண்ணுலகும் மண்ணுலகும் அஞ்சும்படி நடந்தன.

மேகமண்டலத்தை யளாவுவதாய், மகாமேருவை நிகர்ப்ப தாய், அதியற்புதமான அழகுடன் பொலிவதாய், அநேகவித விதா னங்(ஆடை)களாலும் மணிவகைகளாலும் அலங்கரிக்கப்பெற்றதாய் அதிவேகமாகச் செல்லத் தகுந்த புரவிகளைப் பூட்டப்பெற்றதாய் விளங்கிய அநேக ரதங்கள் தமது பொற்கலசங்களும் மணிக்குடை களும் முகிற்கூட்டங்களில் மறைய, சக்கரங்களின் சுவடுகள் நான்கு விரற்கடை புழியில் அழுந்த வெகு வேகத்துடன் சென்றுகொண்டி ருந்தன.

முத்துக் குஞ்சம் முத்துவாளி பொற்கலணை வீரகிண்கிணி செம்பொற்றவிசு திகழும்ஜேணம் பட்டுமேற்போர்வை ஆதிய பூனந்து அலங்காரத்துடன் வாயுவேகமாகச் செல்லக்கூடிய

தூரகத் திரள்கள் சுந்தரக்கோலமாய்த் தோன்றியே நடக்க, அவை களின்மேல் புருஷ சிங்கங்களாகிய பலவீரர்கள் யுத்த சந்நுத்தர் களாய் அமர்ந்து அப்பரிகளே யிவர்ந்து பாங்காய்ச் சென்றனர்.

வீரபட்டம் வீரசங்கிலி வீரகண்டை முதலிய அணிகளை அணிந்த வீரர்கள், கொடுதடி குண்டாந்தடி சுக்குமாந்தடி வளைதடி குலுக்குத்தடி முறுக்குத்தடி பாணுத்தடி குறுந்தடி கதை ஈட்டி எரி யீட்டி திருகீட்டி சொருகீட்டி உருகீட்டி குத்தீட்டி குறியீட்டி பாலா பல்லயம் பஜ்ஜீ பட்டா பாங்கு சாங்கு கத்தி கட்டாரி பிச்சுவா கவண் உண்டைவில் சுண்டுவில் அம்புவில் வாங்கு வஜ்ஜிரம் குந்தம் சூலம் வேல் தோமரம் இருப்புலக்கை வஜ்ஜிரதண்டம் உடைவாள் படைவாள் ஈர்வாள் கூன்வாள் கத்தி கேடகம் உறுவேல் எறிவேல் கைவேல் மழு சக்கரம் வில் அம்புக்கூடு எழு சுழற்படை பிண்டி பாலம் தாறு சலாகை நவியம் வேத்திரம் முதலிய சகலவித அஸ்த்ர சஸ்த்ர ஆயுதங்களையுந் தாங்கி வீரகர்ஜனை செய்து ஆர்ப்பரித்துச் சென்றனர்.

பேரியாழ் மகரயாழ் சகோடயாழ் செங்கோட்டியாழ் முக வீணை ருத்ரவீணை சுரமண்டலி புல்லாங்குழல் தவில் நாதஸ்வரம் முத லாய பல மங்கள வாத்யங்கள் தாம்தாமென்று முழங்கவும்,

சின்னங்களின் ஒலி

"அரசர்க் கரசர் அணிமுடி மன்னர் விஷ்ணு வர்த்தன பூபதி வருகிறார்" என்றும், "மூவுலகும் போற்றத்தக்க முடிமன்னர் வருகிறார்" என்றும், "மன்னர் மண்டலீகரும் மதித்திடவே அரசுபுரி மன்னதி மன்னர் வருகிறார்" என்றும், "ராஜாதிராஜ ராஜ மார்த்தாண்ட ராஜகம்பீர ராஜபூபால ராஜசங்க்ராம ராஜப்ரபூத ராஜ கோலாகல ராஜஓய்யார யோகபோகேந்த்ர விஜயவிஸ்தார வீரப்ரதாப விஷ்ணுவர்த்தன ப்ரபு வருகிறார்" என்றும், "பூமண்டலேச பூலோக புரந்தர மகுடாபிஷேக நிரந்தர தெய்வபூஜாதுரந்தர மகாபக்திசீல ஆசாரகுணசம்பன்ன வேதசாஸ்த்ர விற்பன்ன மனுநீதிசாஸ்த்ர நிஜநீதிராஜ மாசார்வபூம மகாராஜா வருகிறார்" என்றும்,

"ஆதிகாலத்தில் தேவர்களும் அசுரர்களும் கூடிராப்தி கடைகை யில் ஸ்தம்பமாய் நின்று உதவி புரிந்தோனும், ஸ்ரீகைலாசத்தில்

பார்வதி லோலனுகத் திகழும் பரமேஸ்வர மூர்த்தியின் திருமுடியின் கண்ணே நிவ்யமாய் விளங்குபவனும், தண்ணிலவைப் பொழியும் தயாபரனும், அனைத்துயிர்கட்கும் பயிர்பச்சைகட்கும் தனது அமுத க்ரணங்களால் செழுமையை யளிக்கும் அற்புதனும் முயற்கறையா கிய தன்னகவிருளிருந்த போதிலும் பரோபகாரத்தையே பெரிதென எண்ணித் தன்னிடத்துள்ள ஒளியை ஒளிக்காமல் உலகிற்கீயும் உத்த மனுமான சந்திரனுடைய குலத்திற் றோன்றிய சுந்தரமன்னர் வரு கிறார்" என்றும் பலவிதமாக சின்னங்கள் ஒலிக்கவும்,

உணவு வகைகளும் படுக்கைகளும் ஆசனங்களும் கூடார சாமான் வகைகளும் ஏனைய சகல சாமக்கிரியைகளும் ஆதிய பலவித முஸ்தீப்புகளும் யானைகள் குதிரைகள் ஒட்டகங்கள் வண்டிகள் முதலியவற்றின்மீது ஏற்றிக்கொண்டு சேவகர்களும் காவலர்களும் சென்று கொண்டிருக்கவும் நேர்த்தியாக ப்ரயாணம் தொடங்கிற்று.

வீதிகள் அலங்கரிப்பு

அந்த ராஜமகேந்திராபுரியின் வீதிகள் பலவும் வெகு விமரிசை யாக அலங்கரிக்கப்பட்டு, மலர் மாலைகள் தூக்கப் பட்டு, பூந்தோரணங்களாலும், மகரதோரணங்க ளாலும் நிறைக்கப்பெற்று வெகு விநோதமாய்ப் பொலிந்தன. வீடுகள் தோறும் பச்சைப் பந்தல்கள் போட்டு வாழை கமுகுகள் நாட்டி, பஞ்சவர்ணப் பட்டாடைகளால் மேற்கட்டி யமைத்து, விசித்ரமான ஜால்ரா வரிசைகளமைத்து, ஓலைகளினுல் பின் னல் வேலைகள் பற்பல விநோதமாகச் செய்து நாற்புறமும் தொங்க விட்டு, புஷ்பமாலை ஜரிகைமாலை முத்துமாலை ரத்னமாலை முதலான மாலை வகைகளை அணியணியாகத் தொங்கவிட்டு, நிலைக்கண்ணாடிகள் பல வற்றை நேர்த்தியாய் நிறுவி, அந்நகர் முழுவதும் விசித்ரமாக ஜோடித் துவைத்து, நகரினர் யாவரும் நவிலரு முவகையோ டொளிர்ந்தனர்.

நகரினர் வாழ்த்தொலி

மங்கல மங்கையர் பலரும் சந்துஷ்டியுடன் ஸ்நானம் செய்து திலகந்தரித்து ஆடையாபரண மணிந்து மிகுந்த மனோல்லாசத்துடன் மங்களம் பாடியும், மங்கலச் சொற்களைப் பேசியும், மங்கள வாழ்த்துகள் கூறி யும், பூந்தட்டேந்தியும், பொற்கும்பந் தாங்கியும், கவரியிரட்டியும், கண் ணாடி காண்பித்தும், மணி விளக்கேந்தியும், அஷ்டமங்கலங்கள் தாங் கியும், சுபசோபனங்கள் பாடியும் மகிழ்ச்சிகாண்பித்தனர்.

ஆடவர் அனைவரும் ஆர்வமொடு கண்டு வெற்றிமொழி கூறியும், வீரவுணர்ச்சி காட்டியும், தீரச்செயல்களைத் திறம்படப் பேசியும், "ஜெயபேரிகையுடன் திரும்பவேண்டும்" என ஆசிகள் கூறியும், "வாகை மாலை சூடி வாருங்கள்" என்று வாழ்த்துகள் மொழிந்தும், மங்கலச் சொற்களால் வாழ்த்தியும் அடக்கினர். மங்கலப் பாடகர் பாடினர். மங்கல மங்கையர் வாழ்த்தினர். நாடகக் கணிகையர் நடனம் செய்தனர்.

இராஜமகேந்திர புரமென்னும் திருநாமத்தைப் புனைந்த அச்சிறந்த பட்டணத்து ஆண்களும் பெண்களும் அகமகிழ்ச்சியோடும் அரசனைப் பலவாறுக வாழ்த்தியும் வழுத்தியும் புகழ்ந்தும் வியந்தும் பாராட்டுவது கண்ட பார்த்திபன் உள்ளம்பூரித்து உலவாக்களிப்புடன் நகர்வலம் வந்து, நகர மக்கள்மீது கருணை சுரந்தவனுகவிளங்கி, அவர்களிடத்தில் விடைபெற்றுக்கொண்டு, அந்த திவ்ய பட்டணத்தைக் கடந்து வேறு தேயங்களை நோக்கிச் செல்லலாயினன்.

வெற்றி பெறல்

அப்படிச் செல்கையில் இச் சேனை சமுகம் நடப்பதனல் தரையினின்றும் எழுந்த செந்தூள் மேலேக்கிக் கிளம்பி விண்ணுலகம் சேர்ந்து, இமையா நாட்டத்தவர்களையும் இமைக்கும்படி செய்யத்தக்க தாய் 'பூமியும் ஆகாயமும் ஒன்முகிவிட்டனவோ?' எனக் காண்போர் பலரும் கருத்தில் ஐயுறத்தக்கதாய், எங்கும் இடம் தெரியாது பரந்து மறைக்கவும், சமுத்ரம்போன்ற ஒலியெழவும், இவற்றை யுணர்ந்த சில அரசர்கள் " யாவர் வருகிறுர்கள்? " என்று விசாரித்தும், யூகித்தும், கேள்விப்பட்டும், 'விஷ்ணு வர்த்தன மன்னன் அளவிறந்த சேனை சமுகங்களுடனும் திக்விஜயத்திற்குப் புறப்பட்டுள்ளான்' என்பதைத் தெரிந்து, மரியாதையோடு எதிர்கொண்டு அழைத்துச் சென்று, அரசனையும் ஏனைச்சேனை வர்க்கங்களையும் தக்கவாறு உபசரித்து, அற்புதமான விருந்தூட்டி, பல காணிக்கைகளைக்கொடுத்துப் பணிந்து, நமது விஷ்ணுவர்த்தன மன்னனைப் புகழ்ந்து போற்றினர்.

சில அரசர்கள் உசிதமான ரத்னஹாரம் முத்தாஹாரம் மோகனஹாரம் சந்த்ரஹாரம் பட்டு பீதாம்பரங்கள் நவரத்ன ராசிகள்

யானைத் தந்தங்கள் யானைகள் குதிரைகள் ஒட்டகங்கள் தேர்வகைகள் காலாட்படைகள் சிவிகைகள் ஊர்திகள் பசுக்கூட்டங்கள் முதலாகிய பலவற்றையும் சமர்ப்பித்து குசலம் விஜ்ஞி ஆசிபெற்றுச் சென்றனர்-

சில மன்னர்கள் ஸ்வர்ணபரணங்களும், உயர்ந்த செம்பவளத் திரள்களும், மேலாகிய புனுகு ஜவ்வாது களபம் கஸ்தூரி குங்குமப்பூ கோரோஜனை பச்சைக்கர்ப்பூரம் ஆகியவற்றையும், பல திவ்யமான கனிவர்க்கங்கள் விலையுயர்ந்த ஆடைகள் முதலியவற்றையும் கொணர்ந்து கொடுத்து, தாளிற் பணிந்து, தங்கள் தங்கள் நாடுகளில் உள்ள குறைபாடுகளைக் கூறி நிவர்த்தி செய்ய வேணுமாய்க் கேட்டுக் கொண்டார்கள்.

சில வேந்தர்கள், "அரசரேறே! தேவரீரது அனுக்ரகத்தினால் எங்களுக்கு வராளமான சம்பத்து உண்டாகி மேன்மை யடைந்துள்ளோம்; எங்கள் தேசங்களில் சிறப்பாக இருக்கின்ற இந்த விளைபொருள்களை ஏற்றுக்கொண்டு ஆசி கூறுதல் வேண்டும்" என்று கூறி, முத்து பவளம் கோமேதகம் வைரம் செம்பொன் ரஜிதம் மிளகு தக்கோலம் கஸ்தூரி கோதுமை நெல் பயறுவகைகள் கனிவகைகள் சென்தேன் குடங்கள் கலைமாவினங்கள் காராம்பசுக்கள் ஒட்டகங்கள் யானைக்குட்டிகள் முதலிய பலவற்றைக் கப்பம்போல ஈந்து வணங்கி விடை பெற்றுச்சென்றனர்.

சில சிற்றரசர்கள், "விஷ்ணு வர்த்தன மகாராஜன் திக்விஜயத்திற்குப் புறப்பட்டிருக்கிறான்; நமது நாட்டெல்லையில் வருகிறான்" என்ற வார்த்தையைக்கேட்டதும், "ஏதாகுமோ? என்ன நடக்குமோ? எத்தகைய விபரீதம் விளையுமோ?" என்று பயந்து நடுக்கங் கொண்டு நாட்டைவிட்டு ஓடி யொளிந்துகொண்டனர்.

சில ராஜாக்கள் அகங்கரித்து, "இவன் என்ன அவ்வளவு சூரனு? வரட்டும் ஒரு கை பார்த்து விடலாம்" என்று எண்ணி இறுமாந்திருந்து, அவன் வருகையில் அவனைக் காண்பதற்கே அஞ்சி, திகிலடைந்து உயிர் துறந்து மாண்டார்கள்.

சில அரசர்கள், "இவன் ஏதோ ஏழையாகவும், சாதுரங்க சேனுபலம் அற்றவர்களாகவும், ஆண்மையில்லாதவர்களாகவுமுள்ள சிற்சில பொம்மை ராஜாக்களே வெல்வதுபோல யாவரையும் வென்று தனது திக் விஜயத்தை வெகு எளிதில் முடித்துவிடலாமென எண்ணி விட்டானேபோலும்! நம் போன்ற வீரசிங்கங்களின் எதிரில் இவனெல்லாம் எம்மாத்திரம்? இதோ இன்னும் சற்று நேரத்தில் இவன் படுகிற பாட்டைப்பார்த்து உலகினர் பலரும் உரைக்கும் மொழிகள் எவ்வாறு மாறுகின்றன பாருங்கள்!" என்று வெகுவாக வாய்முழக்கம் விடுத்து, பிறகு விஷ்ணுவர்த்தனன் வந்தபோது, தமது சேனைகளுடனே சென்று யுத்தம் புரிந்து சேனைகளெல்லாந் தொலைத்து, இறுதியில் தாம் மாத்திரந் தனிமையில் நின்று போர் செய்து ஆற்றமாட்டாமல் புறமுதுகிட்டோடினர்.

சில பூபாலர்கள் சேனைகளோடும் வந்து எதிர்த்துப்பார்த்து, வெல்லமுடியாதென்பதை யறிந்து, உடனே சரணுகதியடைந்து சமாதானமாகி, பல உசிதமான திரவியங்களைக் கொண்டுவந்து கொடுத்து உபசரித்துச் சென்றனர்.

பின்னும் சில நிருபர்கள் கர்வத்துடனே "இவனைக் கண்டிப்பாக வென்றே தீருவோம்" என்று வீரட்டகாசமாகப் பேசிக்கொண்டிருந்து, விஷ்ணுவர்த்தனனுடைய புகழையும் வெற்றியையும் சேனு சமூக பலத்தையும் அறிவாற்றல்களையும் புஜபல பராக்ரமத்தையும் வீரதீர விக்ரமத்தையும் பின்னர் கேள்விப்பட்டு, "அவன் வந்தால் சண்டை செய்யவும் நம்மாலியலாது. இவ்வாறு இதுவரை வீரம் பேசிவிட்டு, இனிமேல் சரணுகதி யடைவதும் மானக்கேடு" என்று எண்ணியவர்களாகி, மந்திரிகள்வசம் தத்தமது நாடுகளை ஒப்புவித்து, தாம்தாம் இஷ்டப்படி காடுமலை குகைகளிற்சென்று தங்கி, ஊணுறக்கமின்றி உடலை வாட்டித் தவநெறி பேணத் தலைப்பட்டோடினர்.

மற்றும் சில நரபதிகள் தங்களுக்கே வெற்றி கிடைக்கும் என்று நம்பியிருந்து படைத்துணையைக் கொண்டு கூடியவரை மும்மரமான சண்டைசெய்து, முடிவில் சேனைகளையும் சுற்றத்தார்களையு மிழந்து, தாமும் விஷ்ணு வர்த்தனனுடைய கணைகளுக் காளாகி மேலுலகு சென்றனர்.

வேறு சில பொருநர்கள் தங்கள் படைகள் முழுவதையும் நாட்டு மக்களில் சிறந்த வீரர்கள் யாவரையும் திரட்டிக்கொண்டு சென்று கோரமான யுத்தத்தைப் புரிந்து இறுதியில் எல்லா சேனைகளையும் பூர்ணமாக இழந்து, இனி தாம் மட்டும் தனியே நின்று என்ன சுகமடைவதென் றெண்ணித் தமது கூரிய படைகளை வானேக்கி யெறிந்து விரைவிற் றரையிற் படுத்து வேகமாக வருகிற ஆயுதங்களால் உயிர்விடுத்து வீரசொர்க்கம் சேர்ந்தனர்.

நகர் திரும்பல்

இவ்வாறுக அநேக தேசங்களுக்குச் சென்று ஆங்காங்கும் தனது வெற்றிக்கொடியை நிலைநாட்டி, அவ்வவ் விடத்தும் அளவிறந்த தானதருமங்களைப் புரிந்து மகிழ்ந்து மிகுந்த ஆனந்தமுற்றவனாகி, தனது சேனைகளுக்கு சிறிதுகாலம் ஸ்ரம பரிகாரம் தரல் வேண்டுமென நினைந்து, தனது பட்டணம் சேரத் தீர்மானித்துப் புறப்பட்டுச் சென்றுகொண்டிருந்த நாள்களில் ஓர் நாள்,

சோலை காணல்

மடலவிழ்ந்து இதழ்பரந்து மலர்விரிந்து மதுநிறைந்து மண முறைந்து தளிர்தழைந்து தலைசெறிந்து கிளைமிகுந்து மிகவுயர்ந்து இருளடர்ந்து கொடிபடர்ந்து காய் சொரிந்து கனி யுதிர்ந்து கதிர்மதி நுழைந்து செல் லும்படியாக மிக்க ரமணீயமாக விளங்கிய பூஞ் சோலையொன்று அரசனது கண் பார்வையிற்பட, அந்தச் சோலையின் அழகு தன் மனதை விரைவினில் ஈர்க்க, உடனே அம்மன்னன் தனது மந்திரிகளை யழைத்து, "எதிரிற் றேன்றும் பூங்காவனம் அதி யற்புதமாகத் தண்ணென் சோபையுடன் திகழ்கிறதாகையால், நாம் இதிலிறங்கி இளைப்பாறி நாளையதினம் புறப்படலாம். நமது நகரமும் இன்னும் அதிதூர மிருக்காததாலால், நாம் இன்றைய ஒருதினம் இங்கு தங்கிச் செல்வதில் யாதொரு பாதகமும் இல்லை. ஆனதுபற்றி இன்று இங்கேயே சேனைகளை நிறுத்துங்கள்" என்று கட்டளையிட் டனுப்பினன்.

மூன்றும் அத்தியாயம்.

[இரண்டாம் பகுதி.]

*

பிறவியினை மாற்றவெணில் பேதமிலா வுள்ளத்
துறவுதனைக் கொண்டுலகில் சூழ்.

ஓம்

ஸ்ரீ வாசவீ விஜயம்.

மூன்றும் அத்தியாயம்.

[இரண்டாம் பகுதி.]

கௌரவ மிழந்து புன் காமநோ யடைதல்.

கௌதமி யென்னுங் கோதாவரியின் பல்வளம் பெருகும் பண்ணைகள்சூழ்ந்த அந்நகருஞ் சோலையின்கண்ணே ஓர்நாள் தங்கி இளைப்பாற எண்ணி, அரசன் கூறிய அக் கட்டளையைச் சிரமேற்கொண்ட அமைச்சர் கள், அவ்வாறே ஆங்கு சகல சேனைகளும் தங்கும் படி ஏற்பாடு செய்தனர். சேனை வீரர்கள் எல்லாம் அச் சோலையைச் சார்ந்ததும் சொல்லொணா மகிழ்வுடன் சுற்றிச் சுற்றிப் பார்த்து அழகுகளைக் கண்டு அதிசயித்துக்கொண்டு இருந்தார்கள். விஷ்ணு வர்த்தன மன்னன் சோலையை யண்மி,

சோலையை யணுகல்.

அந்தச் சோலையானது, வானகத்திலுள்ள அரிசந்தனம், சந் தானம், மந்தாரம் பாரிஜாதம் கற்பகம் என்று சொல்லக்கூடிய பஞ்ச தருக்களின் கிளைகளோடு சென்று கலக்கத்தக்க நீண்ட கிளைகளையுடைத்தாகி வானுற வோங்கி வளம்பெற வளர்ந்திருக்கும் பேரழகையும், அந்தப் பைங்காவின் கண்ணே சந்தனம் அகில் பாதிரி மகிழ் கோங்கு நாரத்தை குருக்கத்தி வாகை செருந்தி அழிஞ்சில் குங்குமம் அரிச்சம் தேமா புளிமா தேக்கு சிந்தூரம் இலந்தை நாவல் கொன்றை அசோகம்

சோலையழகு.

கூவிளம் கருவிளம் வாழை கமுகம் கர்ஜூரம் அதிமதுரம் விளா களா வேம்பு கோஷ்டம் வன்னி குரூந்தம் இலவங்கம் ஏலம் கடு தான்றி திப்பிலி ஆல் அரசு நறுவிலி வனமல்லிகை ஜாதி மல்லிகை மூல்லை இருவாட்சி வெட்சி அலரி செவ்வந்தி நந்தியாவர்த்தம் காந்தள் குன்றி குமிழ் நொச்சி சண்பகம் முதலிய பலரக விருட்ச ஜாதிகளும் செடி கொடி வகைகளும் பசும் புற்றரைகளும் படிகக் கற்களால் படித்துறைகள் அமைக்கப்பெற்ற அற்புதமான தெண்ணீர்த் தடாகங் களும் குளங்களும் வாவிகளும் கூபங்களும் ஆகிய பலவற்றையும் பார்த்துக்கொண்டும்,

அந்த நறுங்காவில் உல்லாசமாக உலாவிக்கொண்டும் இன்ப வார்த்தைகளைப் பேசிக்கொண்டும் இனிய கீதங்களைப் பாடிக்கொண் டும் மன மகிழ்வொடு விளையாடிக்கொண்டும் பெட்டைகளோடு குலாவிக்கொண்டும் ஆனந்தகரமாய் இருக்கும் மயில் குயில் அன்னம் கிளி மைனை அசுணம் குக்குடம் நாரை கொக்கு வாத்து வண்டு தேன் வண்டு பொன் வண்டு கழுகு சிம்புள் வலியன் சக்ரவாகம் காடை கௌதாரி சிச்சிலி ராமனைத்தி மரங்கொத்தி சிட்டுக்குருவி முதலாய பலரகப் பறவைகளும் பாங்காய் நிலவும் பண்பை இருகண் குளிரப் பார்த்துக்கொண்டும் உட்சென்றனன்.

மண்டபத்தின் திறன்.

அவ்வாறு சென்ற பார்த்திபன், அந்த உய்யான வனத்தின் நடுவண் இனிதே யியற்றி யமைக்கப்பட் டிருந்ததும், உன்னத எழில் மிகுந்து ஓங்கி யுயர்ந்து ஒப்பின்றிப் பொலியும் உப்பரிகை களுடன் திகழ்ந்ததும், அதி யற்புதமான தோற்றத்துடன் விநோதக் காட்சிகளை யீந்து விசித்ரமாக விளங்கியதுமான பளிங்கு மண்டபத் தில் சென்று இறங்கி, மகா சம்ப்ரமத்துடனே திவ்யானந்தத்தோடும் ஓர் ஆசனத்தின் மீது அமர்ந்திருந்தனன்.

மேல்மாடி சேரல்.

பின்னர் சற்று நேரம் சென்று, அம் மாளிகையின் அற்புத விநோதங்களைக் காண விரும்பியவனாகி அம் மன்னன் அப்பளிங்கு மாளிகையின் உள்ளே நாற்புறத்தினும் சுற்றிப் பார்த்து ஆங்காங் குள்ள விசித்திரங்களையும் அற்புத அழகையும் கண்குளிரக் கண்டு

சொல்லொணு மகிழ் வெய்தி ஆநந்தித்துக்கொண் டிருக்கையில், அங்கே மேல் மாடிக்குச் செல்லும் படித்துறை தோன்ற, அதன் மூலமாக மேல் மாடி சென்று, அவண் விளங்கிய விநோத எழிலையும், அதி யாச்சரியமான அமைப்புகளையும் கண்டு களிப்புற்று, மேலுப் பரிகைக்குச் சென்று, அங்கிருந்து அவ்வுப்பரிகையின் எழிலையும், அச் சோலையின் அற்புத அழகையும், அச் சோலைக்கு வந்து சேர நாலாபக்கங்களிலும் அமைந்துள்ள பாதைகளின் திவ்விய அமைப் பையும், சுற்றிலும் விளங்கும் நிலங்களில் பயிர்கள் பொலியும் பாங் கார் அழகையும், சாலைகள் சோலைகள் திகழும் அழகையும், மலையின் அழகையும், ஆற்றின் அழகையும், இயற்கைக் கவின்களையும், ஏனைய எழில்களையும் இனிது நோக்கிக்கொண் டிருந்தனன்.

நகரைபில் காணல்.

அந்தப் பூஞ்சோலையானது நமது வைஷ்ய ப்ரமுகர்களின் தலை நகரமாகிய பெனுகொண்டா பட்டணத்தைச் சார்ந்ததாகையால், அத்திவ்ய நகரமும் சற்று தூரத்தில் விளங்கியதை உடனே அரசன் கண்ணுற்றனன். அந்நகரம் ஆதியில் சிவபெருமான் திருவருளால் விசுவகர்மா வென்னும் தேவகம்மியனுல் நிருமிக்கப்பட்டதாதலானும், அந் நகரம் என்றும் குன்று எழில் வளங்களுடன் இலகுதல் வேண்டு மென இறைவ னருளாலும் இமையவர்களாலும் ப்ரம்மதேவனுலும் வரம்பெற்ற தாதலானும், அந் நகரை அதுவரையில் நமது விஷ்ணு வீர்த்தன மன்னன் நேரிற் சென்று கண்டதில்லை யாதலானும், அவ் வரசனுக்கு அஃது ஓர் புதுமையாகத் தோன்றியது.

அந்நகரின் நல்லெழில் கண்ட நரபாலனுகிய விஷ்ணுவர்த்த னன் நாவினுல் நவிலமுடியாத நறுங் களிப்பும் பெரும் வியப்புமுற்றவ னுகி, "இஃதென்ன? சற்று தூரத்தில் ஓர் அற்புத நகரம் இருக் கின்றதுபோல் தோன்றுகின்றது! அந் நகரம் வானளாவிய மாட மாளிகைகளாலும் கூட கோபுரங்களாலும் ஸ்ரீ தேவியின் திருக் கடாக்ஷத்தாலும் சிறப்புற்றேங்குவது போலும்!

காமதேனு கற்பகச்சோலை ஐராவதம் உச்சயிச்சிரவம் வசந்த மாளிகை சுதன்மைமண்டபம் சிந்தாமணிக்கல் வஜ்ராயுதப்படை அரம்பை மேனகை ஊர்வசி திலோத்தமை யாதிய நடனமாதர்கள்

அப்ஸரஸ்த்ரீகள் புலோமசை தேவேந்திரன் முப்பத்து மூக்கோடி தேவர்கள் இனிமையான தேவகானங்கள் மரணத்தைத் தவிர்க்கும் அமிருதம் பிரகஸ்பதியாகிய தேவகுரு முதலாய பல அம்சங்களும் பொருந்தியுள்ள அமராவதி பட்டணமும்,

சங்கநிதி பத்மநிதி கச்சபநிதி கற்பநிதி நந்தநிதி நீலநிதி மகா நிதி மகாபத்மநிதி முகுந்தநிதி என்னும் நவநிதிகளும், புஷ்பக விமான மும், யக்ஷர் வீதிகள் அற்புதச் சாலைகள் நற்றருச் சோலைகள் மேடை கள் உப்பரிகைகள் தடாகங்கள் கூபவாவிகள் திருமஞ்சனச் சாலை கள் கொலுக் கூடங்கள் சேனைச் சாலைகள் யானைக் கொட்டாரங்கள் குதிரைப் பந்திகள் விமான நிரைகள் ஆயுதச் சாலைகள் பொன்மலைகள் வெள்ளிமலைகள் நவரத்னக் கேணிகள் தனக் குவைகள் நவதான்யக் குன்றுகள் பலதான்ய மாளிகைகள் பலரக பண்டங்களின் அம்பாரங் கள் ஆதிய அம்சங்கள் யாவும் நிறைந்த குபேரனுடைய மனோவதி பட்டணமும்,

இதற்கு நிகராகுமா ? ஆகாவா ? என யோசிக்கத் தகுந்த அத்தகைய சிறப்புற்று விளங்கும் இந் நகரத்தை நேரில் சென்று கண்டு, ஆங்கமைந்துள்ள கவின் பலவற்றையும் கண்ணுற்ற பின்பே நமது நகர் செல்லுதல் வேண்டும்" எனத் தீர்மானித்தவனாகி, மந்திரியை யழைத்து, "இந்தப் பூஞ்சோலைக்குச் சற்று தூரத்தில் அதோ தெரியும் அற்புத பட்டணத்தின் பெயர் யாது ? அந்தப் பட்டணத்தில் வாசம் புரியும் உத்தமர்கள் யாவர் ? என்பனவாதிய விஷயங்களைக் கூறவேண்டும்" என்றனன்.

அந் நகரின் பெயர் பெனுகொண்டா வென்பதையும், அந் நகரமும் அதைச் சுற்றிலுமுள்ள பதினெண் பட்டணங்களும் வைசி யர்கட் குரித்தானவை யென்பதையும், ஆதியில் அந் நகரம் தேவ கம்மியனால் சிருஷ்டிக்கப் பட்டதாதலால் அந் நகர் மிக்க உன்னத எழிலோடும் திகழ்கின்ற தென்பதையும், இறைவன் திருவருளால் என்றும் பொன்ற இணையறு பேரழகுடனும் பல்வளங் கொழித்துப் பண்புறப் பொலியும் பாங்குடனும் விளங்குவதென்பதையும் அம் மந்திரி விவரமாக எடுத்துரைத்தனன்.

அதுகேட்ட மன்னவன் "இந்தப் பட்டணத்தின் சிறப்பு களைப்பற்றி வெகு நாட்களாக நாம் கேள்

உட்செல்ல உன்னல். விப்பட்டிருந்தும், அதிலும், இந்நகர் நமக்கு இவ்வளவு அருகாமையில் இருந்துங்கூட, இத்தனை நாட்களாக இந்த நகரத்தைக் காணும் பாக்யம் நமக்குக் கிட்டாது போயிற்றல்லவா? ஆதலின் இத் தருணத்தில் நாம் ஒன் றிரண்டு நாள் தங்கியாவது, இந் நகரலங்காரத்தைக் கண்ணுற்று நேத்ரானந்தமடைந்து, பின்னர் நமது ராஜமகேந்த்ரபுரத்திற்கு நேராகச் செல்லலாம்" எனத் தீர்மானித்துக்கொண்டனன்.

மந்திரிப்ரதானிகளும் சேனை சமூகங்களும் அந்தச் சோலையின் கண்ணே அருமையான கூடாரங்களை யமைத்துக்கொண்டு, அற்புத மான ஆகாரங்களைத் தயார் செய்து உண்டு களித்து ஆநந்தித்து உல்லாசமாக யுத்தக் களைப்பு தீர இளைப்பாறிக்கொண் டிருந்தார்கள்.

இங்கு இவ்வாறாக, பெனுகொண்டாபுரியில் குசும ஸ்ரேஷ்டி

வைசியர்கள் வரவேற்றல். யாரும், ஏனையவைசியோத்தமர்களும், அந்நகர்ப் பூங்காவில் விஷ்ணுவர்த்தன மகாராஜன் சேனை சமூகங்களுடன் வந்திறங்கி யிருக்கும் விஷயத் தைக் கேள்விப்பட்டு "நமது நகருகில் வந் திருக்கின்ற அரச வள்ளலை நாம் சென்று வரவேற்கவேண்டும். ஆத லால் இதுபற்றி யோசிப்பதற்காக நமது நகரத்தார்கள் ஒருங்குகூடிப் பேசித் தீர்மானித்துக்கொண்டு புறப்படுவோம்" என நிச்சயித்தனர். உடனே கூட்டம் கூடியது. "நம் நகருக் கருகில் வந்திருக்கும் நரபாலனைத் தக்க மரியாதைகளோடும் வரவேற்பதுதான் தகுதி" என யாவரும் தீர்மானித்தனர்.

குடைகள் கொடிகள் மகர தோரணங்கள் சுருட்டிகள் முத முதலிய பிருதுகள் முன்னணியிற் செல்ல, தாங்கள் வாழை தேமா வேர்ப்பலா நிராட்சி எலுமிச்சை கர்ஜூரம் கிச்சிலி மாதுளை பொம் மிளிமாஸ் முதலான பல நறுங் கனி வர்க்கங்களும், மல்லிகை முல்லை இருவாட்சி சண்பகம் சாமந்தி ரோஜா பாரிஜாதம் முதலாகிய பல வகை மலர் மாலைகளும், ஜீனி கற்கண்டு முதலான இனிய வஸ்துக் களும், சந்தனம் பன்னீர் குங்குமப்பூ களப கஸ்தூரி பச்சைக்

கர்ப்பூரம் முதலாகிய கூட்டு வர்க்கங்களும், வெற்றிலே பாக்கு ஏலம் கிராம்பு ஜாதிக்காய் ஜாதிப்பத்ரி வால்மிளகு முதலாகிய தாம்பூல வாசனைத் த்ரவியங்களும், ஸ்வர்ணாபரணங்களும், பட்டு பீதாம்பரங் களும் எடுத்துக்கொண்டு, மங்கள வாத்யங்களுடன் பூங்காவனம் சேர்ந்து, யாவற்றையும் அரச சமூகத்தில் சமர்ப்பித்து, " ப்ரபோ ! தாங்கள் எழுந்தருளுதற்கு இந்தப் பூங்காவனமும் எங்கள் நகரும் நாங்களும் செய்த அருந் தவப்பயனின் திறனே விளம்பற்காகுமோ ? தங்கள் வரவினுல் எமது மனம் அளவு கடந்த மகிழ்வை யடைகிறது. எமது நகரத்தினர் அனைவரும் தங்களுடைய காட்சியைக் காண மிகவும் அவாவுற்றுள்ளனர். தவிரவும், இவ்வளவு அருகாமையில் வந்த தாங்கள் எமது நகருக்குள் பிரவேசித்து எம்மனோர்க்கு மன மகிழ்வியாது செல்வதும் நன்றல்ல. ஆகலின் தாங்கள் தயவுகூர்ந்து எமது பட்டணத்திற்கு விஜயம் செய்து யாவருக்குந் தரிசனமீந்து கருணை பாலிக்கவேண்டும் " எனப் பிரார்த்தித்தனர்.

அதுகேட்ட மன்னன், " மகரிஷிகளின் வம்சஸ்தர்களாகிய நீங்கள் வாசம்புரியக்கூடியதும், தெய்வ கடாக்ஷத்தால் சிறந்த எழி லுடன் திகழுவதுமாகிய உமது பட்டணத்தின் சிறப்புகளைப்பற்றி வெகு நாட்களாக யான் கேள்விப்பட்டிருந்தும், நேரில் வந்து கண் ணுறத்தக்க சந்தர்ப்பம் வாய்க்காது போயிற்று. தங்களுடைய நகருக்கு வரவேண்டுமென்றுதான் யானும் சற்று முன்புகூட சிந்தித் துக்கொண்டிருந்தனன். அச் சமயத்திலேயே நீங்களும் என்னை அழைக்க வந்துள்ளீர்கள். உமது அன்பின் பெருக்கும் அளவிடற் பாலதன்று. ஆகையால் உமது பிரியப்படியே யாம் நாளையதினம் காலையில் அவசியம் உமது பட்டணத்திற்கு வந்து சேருகின்றோம் " என்று கூறிவிட்டு, பிறகு நம் வைசிய ஸ்ரேஷ்டர்களின் க்ஷேம சமா சாரங்களை யெல்லாம் வெகு விநயத்தோடும் விசாரித்துக்கொண்டும், தனது திக் விஜயத்தைப்பற்றியும், ராஜ மகேந்திரபுரத்து சவிஸ்தாரங் களைப்பற்றியும், வேங்கி நாட்டின் அரசியல் நிலைமைகளைப்பற்றியும், வேறு பல விஷயங்களைப்பற்றியும், வேதாந்த சித்தாந்தங்களைப்பற்றி யும், மன மகிழ்ச்சியோடு வார்த்தையாடிக்கொண்டு இருந்தனன். வைசிய ப்ரமுகர்களும் அரசனோடும் அளவளாவிப் பேசிக்கொண் டிருந்துவிட்டு விடை பெற்றுக்கொண்டு நகர் சென்றனர்.

சென்றதும், விஷ்ணுவர்த்தன மன்னன் நாளை தினம் நமது நகர் காண வருகின்றமையால், நகர் முழுவதும் சிறப்பாக அலங்கரித்து வைத்தல் வேண்டும் என்று பிரஜைகளுக்கு ஆக்ஞாபித்தனர். உடனே நகரலங்காரம் ஆரம்பமாயது. மாட வீதிகளிலெல்லாம் பச்சைப் பந்தர் அமைத்து, புஷ்பவிதானம் நிறுவி, மகரதோரணங்களும் மாவிலை அசோகிலை முதலிய தோரணங்களும் கட்டி, பலவகைப்பட்ட நறு மலர் மாலைகளை வரிசை வரிசையாக எழிலுற நாற்றி, வாழை கமுகு கள் நாட்டி, விடுகள்தோறும் பூர்ண கும்பங்கள் மணித் தீபங்கள் நிலைக் கண்ணாடிகள் முதலிய மங்கலக் குறிகளை வைத்து, வீதிகளைத் தளம் செய்த தரைபோல் பண்படுத்தி, மேலே கோரை ஜம்பு ஆகிய வற்றைப் பரப்பி மெத்தெனச் செய்து, அதன்பேரில் உயர்ந்த சித்ர வேலைகள் செய்யப்பட்ட பல நிறப் பட்டாடைகளை விநோதமாக விரித்துவிட்டு, தெருக்கள் யாவும் வெகு ரம்மியமாய் விளங்கும்படி வெகு விரைவில் அலங்கரித்துவிட்டனர்.

நகரலங்காரம்.

பூங்காவில் தங்கியிருந்த மன்னவன் மறுநாட் காலையிலெழுந்து ஸ்நானாதிகளை முடித்துக்கொண்டு, திலகந் தரித்து, தெய்வ பூஜை முடித்து, ஆடையாபரணாலங்கிருதனாகி, சதுரங்கசேனைகளுடன் சர்வ மங்கலங்களும் சிறக்க வெகு உல்லாசமாகப் புறப்பட்டு வந்து பெனுகொண்டாபுரியின் மாட வீதியை அணுகினன்.

பட்டணப்பிரவேசம்.

அவ்வாறு வந்து சேர்ந்த வேந்தனாகிய விஷ்ணுவர்த்தனன் அந்த வீதிகளில் புரிந்துள்ள விநோதங்களின் அழகைக்கண்டு அவ் வீதிகளிலே யானை குதிரைகளை நடத்திச்செல்ல வசதியின்மையை யறிந்து, லகிய ஸ்ரேஷ்டர்களை யழைத்து, "யானை குதிரைகளெல் லாம் தாராளமாகச் செல்வதற்கின்றி என் இம்மாதிரி தெருக்களை அலங்காரம் செய்து வைத்தீர்கள்? என்று வினவினன்.

அதற்கு வைசியப்ரமுகர்கள், "அரசே! ஒரு காலமும் வந்தறி யாத தாங்கள் இன்று எம்பேரில் தயை கூர்ந்து எமது நகருக்கு எழுந்தருளியதால், தங்கள் அந்தஸ்துக்குத் தக்கபடி யாங்கள் அதிகமாகக் கௌரவியாவிடினும், எங்கள் அன்பின் காரணமாக

இம்மாதிரி அலங்காரம் செய்து வைத்தோம்" என்று கூறினர். அதுகேட்ட வேந்தன் மிகவும் சந்துஷ்டியுற்று, "இவர்களுடைய மனத்தூய்மையும் பக்தியும் விஸ்வாஸமும் பேரன்பும் கௌரவிக்கும் முறைமையும் திறமையும் எத்தகைய மேம்பாடுடைத்து?" என்று வியந்து உவந்து வாகனத்தை விட்டு இறங்கினன். அரசன் கீழே இறங்கியதும் ஏனையர் யாவரும் தத்தமது வாகனங்களினின்றும் இறங்கி நடக்கலாயினர்.

மங்கள வாத்யங்கள் முழங்கவும், வெண்கொற்றக்குடை நிழற்றவும், வெண் சாமரைகள் வீசவும், பலவித விருதுகளும் முன்னே செல்லவும், சின்னங்கள் ஒலிக்கவும், நாட்டியக் கணிகையர் நடனம் புரியவும், மங்கல மகளிர் மங்களம் பாடவும், இசை வல்லுநர்கள் ஸங்கீதத்தொனியினை எழுப்பவும், வீணை யாழ் குழல் முதலாகிய இன்னிசைக்கருவிகளின் இங்கித நாதம் இனிதே யொலிக்கவும், ஸர்வாடம்பர ஸம்ப்ரமங்களுடன் அரசன்முன்னே செல்லவும், ஏனைய யாவரும் பின்னே நடக்கவும், வைசியோத்தமர்கள் பலர் வந்து அரசனுக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்துகொண்டு உடன் செல்லவும், வீதிகளில் உள்ள ஆடவர் அரிவையர் இளைஞர் முதியோர் ஆதிய பலரும் கீழ்ப்பரிகைகளிலும் மேலுப்பரிகைகளிலும் வரிசை வரிசையாக நின்றுகொண்டு, ராஜபவனி விசேஷத்தைக் கண்குளிரப் பார்த்துக்கொண்டும், ராஜனுடைய எழிலும் புகழும் பொறையும் திறலும் கொடையும் குணமும் ஆகிய பலவற்றைப்பற்றியும் பல வாறுகப் பேசிக்கொண்டும் இருக்கவும், விஷ்ணுவர்த்தன மன்னன் ஸ்ரீ நரகேஸ்வரஸ்வாமி ஆலயத்திற்கும், ஸ்ரீஜனார்த்தன மூர்த்தியின் ஆலயத்திற்கும் சென்று, முறைப்படி சேவித்து, அவ்விரு ஆலயங் கட்கும் அநேகவித தருமங்களைப் புரிந்து திரும்பி, நகர்வலத்திற்குப் புறப்பட்டனன். புறப்பட்டு வெகு விமரிசையோடும் சென்று கொண்டிருக்கையில், அந்நகரின் கண்ணே ஆங்காங்குள்ள விசித்ர விநோதங்களையெல்லாம் கண்டு களித்துக்கொண்டும், ஒவ்வொரு கட்டடமும் கவினுற அமைந்துள்ளதையும், மேல்மாடிகளும் உப்பரிகைகளும் மிக்க அழகுடன் மிளிர்கின்றதையும், அந்நகர மாந்தர்களும் மகளிர்களும் குழந்தைகளும் முதியோர்களும் சிறந்த தேஜஸ்ஸுடன் திகழ்வதையும், அனைவரும் ஞானவந்தர்களாய்,

பக்திமான்களாய், பேரன்புடையவர்களாய், சத்ய சந்தர்களாய், மகாமேதாவிகளாய், சித்த சுத்தியுடையவர்களாய், பொதுநலம் பேணும் புனிதர்களாய், மகாலட்சுமியின் கடாட்சம் வாய்ந்தவர் களாய், புகழ் மிகுந்தவர்களாய், சதாசார சீலர்களாய், தரும குணந் தழைந்தொளிரும் சான்றோர்களாய், ஒப்பருஞ் சிறப்புடன் ஒளிரும் உத்தமர்களாய் விளங்குவதையும், அவர்கள் தோற்றம் முகப்பொலிவு நடையுடை பாவனைகள் பணிவு ஒழுக்கம் ஆதிய பலவும் அன்பின் உருவெனவே அமைந்துள்ளதையும் பார்த்துப் பார்த்துப் பரமானந்த மெய்திக்கொண்டும், கூரறிவுப் பெருங் குதூகலத்துடனும், மனக் குளிர்ச்சியுடனும், " இத்தகைய அற்புதப் பொலிவுடன் விளங்கும் இத்தெய்வீக வளம் மிகுந்த நகரையும், இங்ஙகரில் வதியும் நற்றவமிக்க உத்தமர்களையும் காணக்கிடைத்த இந்நாள் ஒன்றே நம் வாழ்நாட் களில் நன்னாளாகும் " என்றும், " இவர்களுடைய அன்பும் ஆர்வமும் கருணையும் கண்ணியமும் எண்ணுதற்கும் அரிதல்லவா? இத்தகைய சிறந்த குணம் இவ்வைசியர்கள்மாட் டுள்ளதால்தான் என்றும் இவர்கள் குன்று வளத்தொடும் பொன்றுப் புகழொடும் புவியினிற் பொலியப் பொங்கு பேரருளே இறைவன் பொழிந்துதவுகின்றான்" என்றும், பலவாறுக எண்ணியெண்ணி மகிழ்ந்து கொண்டும், செப்பொணவுவப்பொடும் நடந்தனன்.

அம்பிகை எழிலை அரசன் காணல்.

அவ்வாறு அம்மன்னவன் வெகு விமரிசையோடும் சென்று கொண்டிருக்கையில், அதிரமணீயமான அற்புத மாளிகை யொன்று புகலரும் எழிலுடன் பொலி வதைக் கண்ணுற்றனன். அந்த மாளிகையின் அருகிற் செல்கையில் நமது குசுமஸ்ரேஷ்டியார் அரசன் முன்பு வந்து சந்தன புஷ்ப தாம்பூலாதிகளை யெல்லாம் வழங்கி, அநேக கனிவர்க்கங்களை யீந்து, பலவித உயர்ந்த பொருள் களையுந் தந்து உபசரித்தனர். உடன்வந்த யாவருக்கும் ஏராளமான உபசாரங்கள் நடத்தப்பட்டன. அதுகண்ட அரசன், " இம்மாளிகை யாருடையது? " என அருகிலிருந்தோரை விசாரித்தனன். " இதுதான் இந்த நகரத்துக்கும் இதைச்சூழ்ந்த பதினெண் புரங்களுக்கும் தலைவ ராகிய ஸ்ரீ குசுமஸ்ரேஷ்டியாரின் அரண்மனை " என்று ஆங்கிருந்தோர் கூறினர். உடனே அரசனது நேத்திரங்கள் அம்மாளிகையின்

அழகிலும் சிற்பத்திறனிலும் சென்றன. சலவைக்கற்களிலுலும் கெம்பு முதலிய கற்களிலுலும் முத்து பவள வகைகளிலுலும் மணிகளாலும் மிகவும் அற்புதமான வேலைகளைச் செய்தமைத்து, செம்பொற்ஜோதி மயமாய் வெகு விநோத எழிலைப் பொழிந்து விளங்குமாறு கட்டப்பட்டிருந்த அக்கட்டடத்தின் கீழ்ப்பாகத்தில் செய்துள்ள ஒவ்வொரு சித்ரவேலையின் அம்சங்களையும் கண்டு ஆநந்தித்து, விசித்ர அழகுடன் பொலிவதைக் கண்டு, விளம்புதற்கரிய வியப்பினையடைந்து மகிழ்ந்த வண்ணமாக, அவ்வரசனது கண்ணோக்கம் மேல் மாடியிற் சென்றது. ஆங்கு அமைந்துள்ள அழகுகளைக் காணுங் காலையில் அவண் நின்றிருந்த மகளிர் கூட்டத்தின் பொலிவிலும் அவனது பார்வை சென்றது. நமது தவக்கொழுந்தாகிய வாசவி தேவியாரும் அம்மங்கையர் குழுவினுள் தம் தாயாராகிய குசுமாம்பிகையுடனும் பாங்கியர்களுடனும் நின்று அரசன் ஊர்வலம் வருகிற காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்தமையால், ஆண்டு நின்ற மகளிர் குழாத்தின் நடுவில் அநேக பூர்ண சந்திரர்கள் ஏக காலத்தில் தோன்றியதைப்போன்ற திவ்ய தேஜஸுடன் பொலியும் நம் அம்மையாரின் மீது உடனே அவன் பார்வை சென்றுவிட்டது. கரிய முகில் போன்ற அளகபாரம் சூழ்ந்த மதிமுகமாகிய பூர்ண சந்திர பிம்பமும், மின்னலொளி போலப்ரகாசிக்கும் தேக காந்தியும் அவ்வரசனுடைய பார்வையில் தோன்றியதும், (விதிவசத்தாலோ, ப்ராரப்த வினையாலோ, தெய்வச் செயலாலோ, மாயையின் சூழ்ச்சியாலோ, உலகத்தில் வைசியர் பெருமை என்றும் குன்றாது நிலவவேண்டிய ஒரு காரணத்தாலோ, அம்மையின் அருள் விளையாட்டை அனைவரு மறியவேண்டிய சந்தர்ப்பம் நெருங்கியதாலோ, உண்மை வீரத்தையும் உத்தம சத்யாக்ரஹத்தின் உயர்ந்த கருத்தையும் தியாக வுணர்ச்சியையும் வைசிய குலத்தின் மாண்பையும் இளைஞர்களின் எழுச்சியையும் உலகத்தார்க்கு உணர்த்துதல் வேண்டும் என்ற நோக்கங்கொண்டு பராசக்தி யியற்றிய ஓர் விளையாட்டாலோ, அம்மன்னன் தன் பழவினை தீர்ந்து தேவியின் திருவடி நிழலை யெய்திச் செப்பொணாப் பேரானந்தப் பெருவாழ்வில் திளைக்கவேண்டிய காலம் சமீபித்து விட்டதாலோ, அல்லது வேறு எக்காரணத்தினாலோ அறியேம்) என்றும் தீயவழிகளிற் பிரவேசியாத செங்கோல் மன்னனாகிய விஷ்ணு வர்த்தனனின் உத்தம மனம் அந்த க்ஷணத்தில் நியாய

வழியினின்றும் தவறி, "இம் மதிவதன மாதின் எழில்தான் என்னே! இத்துணைப் பேரழகு வாய்ந்த பெண்மணிகளும் இந்த பிரபஞ்சத்தின் கண்ணே யுள்ளார்களா?" என்பன வாதிய எண்ணங்களே யுண்டாக்கிவிட்டது.

மன மாறிச் சோலை சேர்தல்.

உடனே அரசன் பகரவொண்ணுத பற்பல வித சிந்தனைகளுக் காளாகி, ஒன்று மறியாப் பித்தன்போல "நாம் நகர் வலம் வருகின்றோம்" என்ற எண்ணத் தையும் ஒரு க்ஷணநேரம் மறந்துவிடலாயினன். இவைகளையெல்லாம் குறிப்பா லுணர்ந்த அரச னது ப்ரதம மந்திரி "இஃதேது? மோசம் வரும்போலிருக்கிறதே!" என்று எண்ணி, அரசனைத் தட்டி விழித்து, பலவித சாந்த மொழி களைக் கூறி, ஒருவாறு மனந்தெளியச் செய்து கொண்டு, ஆறுதல் கூறியவண்ணமே நகர்வலத்தை விரைவில் முடித்துக்கொண்டு, வைசியப்ரமுகர்களால் கொடுக்கப்பட்ட ஏராளமான மரியாதைப் பொருள்களை யெல்லாம் ஆட்கள் வசமாகவும் வாகனங்கள் மூலமாக வும் எடுப்பித்துக்கொண்டு, அரசனையும் சேனைகளையும் அழைத்துக் கொண்டு பூஞ்சோலைக்குச் சென்று சேர்ந்தான்.

மனச்சோர்வு.

அவ்வாறு செல்லும் பொழுதே அரசனுனவன் அருகில் வந்த சிலரைக்கொண்டு ஒருவாறுக விசாரித்து, அந்தப் பெண்மணி 'குசும ஸ்ரேஷ்டியாரின் குமாரத்தி' யென்பதை யுணர்ந்து, மிகுந்த வியாகுல முற்றவனுகிப் பெருமூச் செறிந்து கொண்டே உய்யான வனம் சென்று, பளிங்கு மண்டபம் சேர்ந்து, ஒரு சாரமர்ந்து, பித்தேறியவன் போல ஒன்றுந்தோன்றுது வாளாவிருந்தனன்.

அரச காரியங்களிலாவது, சேனைகளின் விஷயத்திலாவது, ராஜமகேந்திர பட்டணத்தைப் பற்றியாவது, அங்கு செல்லவேண்டிய ப்ரயாணத்தைப்பற்றி யாவது, அவனுடைய மனம் சென்றிலது. மந்திரிப்ரதானிகளிடத்திலாவது, இன்னும் வேறு யாரிடத்திலாவது, எத்தொழிலிலாவது, எவ்வகையிலாவது ஈடுபட அவனுடைய சிந்தை நாடிற்றில்லை. ஒரு பொம்மையைப்போல அவன் வாளா வமர்ந்திருக் கவும், அவனுடைய மனமானது வாசவியின் திருமேனி யொளியிலும்,

முகமதியின் எழிலும், கூந்தலின் பேரழகிலும் தோய்ந்து வெளிக்கிளம்பாமல், பலவாறு எண்ணியெண்ணி வேதனையுடனே ஊசலாடிக்கொண்டிருந்தது. ப்ரபஞ்சமே அவன் கண் முன் தோன்றவில்லை. மனம் கட்டுகிற மாயக் கோட்டையிலேயே அவனது சித்தம் அலைந்த வண்ணமாக இருந்தது.

அரசனுடைய மனச் சோர்விற்குக் காரணம் இன்னதென அறிய மாட்டாத அமைச்சர்கள் பலர் அருகில் வந்து வார்த்தை யாடிப் பார்த்தும் அரசன் யாதொரு பதில் மொழியும் வசனிக்க வில்லை. இவர்கள் கூறிய பற்பல மொழிகளில் ஒரு மொழியாவது அவனிரு செவிகளிற் புக்கிலது. அன்னபானாதி யுணவுகளையு முட் கொண்டானில்லை. அவனுடைய முகமே நற்கலையில் மதியென்ன வொளி குறைந்து நகையிழந்து சோபையின்றி சொல்லொணாத் துய ராற் சோர்வுறுந் தோற்றத்துடன் காணப்பட்டது.

மந்திரி தேற்றல்.

இவ்வாறு அரசன் ஓரே ப்ரம்மை பிடித்தவன் போல இருக்கின்றதை ப்ரதம மந்திரி கண்டு, "நம் மன்னன் மன வாட்டத்திற்குக் காரணம் காமப்பித்தே" என்று உணர்ந்து, ஒருவாறு நிச்சயித்தவனாகி, "அரசனைத் தேற்றுது வாளாவிருப்பது உண்மை யான மந்திரிகட்கழகல்ல வாதலின், நாம் சென்று சற்று தைரியங் கூறி, மனத்தைத் தெளியச்செய்வது தான் நலம்" என எண்ணி, அரசனிடம் சென்று, "சர்வ வல்லபமும் மிகுந்த ராஜ பூபதே! தாங்கள் இவ்வாறு மனவாட்ட முற்றிருக்க வேண்டிய காரணம் யாது? தேவரீர் இத்தகைய முக மாறுதலுட னிருப்பதைப் பார்க்க என்னுடைய மனம் சற்றும் சம்மதிக்கவில்லை. எனது உயிராக யான் தங்களை எண்ணியுள்ளேன். உமது மனத்திற்கு யாதொருவித கவலை யும் நேராத வண்ணம் பாதுகாக்க வேண்டியது என்னுடைய முக்ய கடமையன்றே? தங்களுக்கு எப்பொருள் தேவை யானாலும், அல்லது வேறெவ்வித உதவி கிடைக்க வேண்டுமானாலும், சப்த சாகரங்களுக்கும் அப்பால் உள்ள அற்புத வஸ்து வொன்று தேவை யானாலும் சரி; எதுவாயிருப்பினும் தயை கூர்ந்து தெரிவித்தால், அதற்கேற்ற யோசனை செய்து, அக்காரியத்தை ஜெயம் பண்ணித்தர அடியேன் சித்தமாகத் தங்கள் உத்தரவை யெதிர் பார்த்துக் கொண்டு

காத்திருக்கின்றேன். ஆதலால் தேவரீர் தாமதமின்றித் தமியேனிடத்தில் விஷயத்தை விவரமாகத் தெரிவித்தருளல் வேண்டும் ஸ்வாமீ!" என்று விண்ணப்பித்துக் கொண்டனன்.

இதுகேட்ட பூபாலன் சற்று தெளிவடைந்தவனாகி, "எனதருமை மந்திரீ! புத்திரர்களைக் காட்டிலும் புனித அன்பு பூண்ட புண்ணிய சீல! சோர்ந்த தழியும் சந்தர்ப்பங்களில் சொல்லவொண்ணா உற்சாகத்தை யூட்டும் தூய நற்குணா! உன்போல எனக்குத் தகுந்த நண்பர் வேறு யாவருளர்? உன்னிடத்திலன்றி வேறு எவரிடத்தில் எனது மன அயர்வைப் பற்றித் தெரிவிக்கப் போகின்றேன்? உன்னிடங் கூறாது வேறெவரிடமாவது தெரிவிப்பதால் யாது பயன் கிடைக்கும்? ஆதலால் எனது மனக் கிலேசத்திற்குக் காரணத்தை இதோ உன்னிடத்தில் தெரிவிக்கின்றேன். அதைக் கேட்டுத் தகுந்த யோசனையைச் செய்து உடனே எனது மனோபீஷ்டம் பூர்த்தியாகும்படி செய்வித்தல் வேண்டும். ஆதலால் நான் சொல்வதைக் கேட்பாயாக" என்று சொல்லத்தொடங்கினன்.

"மதியூக மிக்க மந்திரியே! நாம் அநேக தேசங்களுக்குச் சென்றோம். அநேக உத்தம வீரர்களுடன் கடும் போர் புரிந்தோம். எங்கும் வெற்றியையே நிலைநிறுத்தினோம். நாம் சென்ற இடங்களிலெல்லாம் அநேக லக்ஷக்கணக்கான அழகிய பெண்மணிகளைக் கண்டோம். ஆனால் இந்தப் பெனுகொண்டா நகரத்திலேயுள்ள குசுமஸ்ரேஷ்டியாரின் குமாரத்தியாகிய வாசவியைப்போன்ற ரூப லாவண்யம் மிக்க நங்கையர்களை நானிலத்தின்கண்ணே எங்கணும் கண்டதில்லையென நிச்சயமாய்க் கூறுவேன். அந்தப் பெண்மணியைச் சிருட்டிப்பதற்குப் பிரமன் எங்குதான் பயின்றானோ? எத்தகைய கைத் திறத்தால்தான் இயற்றினனோ? ஒருகால் அவன் இதுவரையில் சிருஷ்டித்த அழகியர்களின் அழகனைத்தையும் ஒருங்கே திரட்டி அவ் வழகிய உத்தமிகளனைவரையும் படைத்த கலைத்திறன் முழுமையும் சேர்த்து ஏக காலத்தில் உபயோகித்து இச் சித்திர வனிதையைச் சிருட்டித் திருப்பான்போலும்! ஹா! எப்படிப்பட்ட அழகிய மகளிரைக் கண்ணுற்றபோதும் சிறிதும் தளராததாய் சற்றும் உருகாததாய்த் திடமாய்த் திகழ்ந்த எனது நன் மனமுங்கூட இம் மதிமுக

வதனியைக் கண்டதும் அனலிடுமெழுகுபோல் அழிந்துருகிவிட்டதே! கனிந்து கரைந்து கசியலாயிற்றே! வியந்து வியந்து வியர்க்கலாயிற்றே! நினைந்து நினைந்து நெடு மூச்செறிய நேர்ந்துவிட்டதே! எண்ணி எண்ணி இதயமிக இளகி எங்கலாயிற்றே! அத்தகைய உத்தம அழகமைந்து, முத்தெனு முறுவல்பூத்து, சித்திரப் படமே யென்னச் சீருடன் திகழும் செங்கமல வதனியைத் திருமணம் புணர்த்தி வைப்பாயேயாயின், அப்போதே எனது மனக்குறை யகலும். அதுதான் எனது மனோபீஷ்டம். அதுதான் என் மனத்தில் குடிகொண்டிருக்கும் பேரவா. அதுதான் நான் விரும்பிக் கேட்கும் விண்ணமுதம். அதுதான் எனது அகக் குறை யகற்றும் அற்புத மருந்து. அதுதான் எனது உளங் குளிர்விக்கும் உத்தம இன்பம். அதுதான் என் சித்தத்தைத் தித்திக்கச் செய்திடும் செந்தேன். அதுதான் என் திக்பிரமை யகற்றும் தீஞ்சுவைக் கரும்பு. அதுதான் என் கருத்தினைத் திருத்தும் கருணை சொரூபம். அதுதான் என் உடலுக் குறுதிதரும் உயர்ந்ததோர் செல்வம். அதுதான் எனது ஆருயிர்க்கே சுகம் அளித்திடும் வஸ்து. அதுதான் எனக்கு ஆனந்தம் நல்கிடும் அருள் எனும் நற்பொருள். அதுதான் நீயும் அடியேற்குச் செய்யவேண்டிய பேருதவியாகும். அதுதான் உன்னை நான் எழேழு பிறவிகளிலும் மறவாது நினைக்கத் தகுந்த அவ்வளவு சிறந்த நன்றி" என்றெல்லாம் பலவாறாக எடுத்துரைத்து முடித்தான்.

இவைகளைக் செவியுற்ற மந்திரி ஸ்ரேஷ்டன், "சரி; இதற்குத் தக்கவாறு முயற்சி செய்யலாம். அதுபற்றித் தாங்கள் வருந்தவேண்டிய அவசியமே இல்லை. தைரியமாக மனச் சாந்தியுடனிருங்கள். யாவும் சாவதானமாக சௌகரியமாகவே முடியும். ஆகையால் மனக் கவலையை மாற்றி, உனவாதிகளைப் புசித்து சந்துஷ்டியுடன் இருங்கள்" என்று உபசார வார்த்தைகளால் தேறுதல் கூறி மனந் தெளியச்செய்து, பாங்கிகளையழைத்து அரசனுக்கு ஆகாரம் முதலியன அளிப்பதற்குத் திட்டஞ் செய்துவிட்டுச் சென்றான்.

ஸ்ரீ வாசவீ விஜயம்.

நான்காம் அத்தியாயம்.

வாசவி பாதங்கள் போற்றுவோம்;—அவள்
வண்புகழை வாயால் சாற்றுவோம்;
தேசப் பணியினை ஆற்றுவோம்;—நன்மை
செய்ய மனத்தினைத் தேற்றுவோம்;
பூசைக்கெல் லோரையுங் கூட்டுவோம்;—மிக்க
பொருளை நல் வழியினி லீட்டுவோம்;
ஆசையெனும் பேயை யோட்டுவோம்;—உண்மை
அன்பை யுளத்தினில் நாட்டுவோம்.

ஞான வுணர்ச்சியை நாடுவோம்;—என்றும்
நல்லவர் கூட்டத்திற் கூடுவோம்;
தேனென்ன மதுரமாய்ப் பாடுவோம்;—சக்தி
திருவருளின் துணை தேடுவோம்;
மானம் பெரிதென எண்ணுவோம்;—தேவி
மலரடிக்கே பக்தி பண்ணுவோம்;
ஊனமில்லா வின்ப முண்ணுவோம்;—யாரும்
ஒற்றுமையாய் வாழ நண்ணுவோம்.

கோழைத் தனத்தினைப் போக்குவோம்;—வெய்ய
கோபங் கொடுமையை நீக்குவோம்;
ஊழின் வலியினைத் தாக்குவோம்;—மெய்யை
உணர வகக்கண்ணுல் நோக்குவோம்;
வாழி புகன்றுநீர் யாருமே—அன்பாய்
வாசவியைப் போற்ற வாருமே !
ஏழைகட்கே வேலை தாருமே !! — மேலாம்
இன்ப வரத்தினைக் கோருமே !!!

நான்காம் அத்தியாயம்.

*

ஞானமதை நாடாமல் நல்லருளிற் கூடாமல்
எனிலெகி ழுய்நீ மிவண் ?

ஓம்

ஸ்ரீ வாசவீ விஜயம்.

நான்காம் அத்தியாயம்.

சதுரங்க சேனையொடு தன்னகர் திரும்பல்.

சகலவுல கங்களையு முயிர்களையு மின்றருளித் தபனன் சோமன் ககனமொடு வாயுவனல் புனல்தரையைப் படைத்துநனி காக்குமம்மை மகிதலத்தில் குசுமனியற் றியதவத்தால் வாசவியென் றுதித்துவைஸ்யர் புகழைநிறு வியதிறத்தை யன்பினெடு மனமுருகிப் போற்றி வாழ்வாம்.

சந்திரகுலத் தோன்றலாகிய விஷ்ணுவர்த்தன மன்னனுக்கு இவ்வாறுக ஒருவித ஆறுதல் கூறி விட்டுச் சென்ற ப்ரதம மந்திரியானவன் தனிமையாக ஓரிடத்தில் உட்கார்ந்து கொண்டு, " இப்போது நமது மன்னவரோ அந்த மயில் போன்ற சாயலையுடைய வாசவாம்பிகையிடம் மனத்தைப் பறி கொடுத்து மயங்கிக் கிடக்கிறார். இவரோ க்ஷத்திரிய குலத்தவர். அவர்களோ வைசியர் கள். பெண் கொடுக்கும்படி கேட்டால் அவ்வளவு சீக்கிரத்தில் அவர்கள் ஒப்புக் கொள்வதும் இயலாது. ஸ்ரமப் பட்டால் ஒருகால் ஒத்துக் கொள் வார்களோ என்னவோ அறியேம். நாம் இன்னும் எவ்வளவு கால தாமதம் செய்தபோதிலும், நமது அரசர், 'நகர்திரும்பவேண்டுமே!' என்ற எண்ணத்தைக் கொள்ளப் போவதேயில்லை. இது என்னவோ தர்ம சங்கடமாக வந்து நேர்ந்து விட்டது. இத்தருணத்தில் நாமிருந் தும் ஒருவித பரிகாரந் தேடாது வாளாவிருத்தல் நலமல்லவே !

மந்திரி, பெண் கேட்கச் செல்லல்.

இதற்கு என்ன யோசனை செய்யலாம்? எனப் பலவாறுக யோசித்து, "எது எப்படியிருந்தாலும் இருக்கட்டும். நாம் வைசியர்களிடம் சென்று, அவர்கள் நம் அரசனுக்குப் பெண் தரச் சம்மதிப்பார்களா? மாட்டார்களா? என்பதை உணர வேண்டும்" என்று முடிவுக்கு வந்து, உடனே புறப்பட்டு, "வைசியர்களிடத்திற் சென்று பெண் விவரமாகப் பேசி, அவர்களது அபிப்ராயம் தெரிந்து வருகின்றேன்" என அரசனிடம் கூறி விடை பெற்றுக்கொண்டு, குசும ஸ்ரேஷ்டியாரின் இல்லம் சேர்ந்தான். "விஷ்ணு வர்த்தன மகாராஜனின் ப்ரதம மந்திரி வருகிறார்." என அரண்மனை வாயிற் காவலர்கள் குசும ஸ்ரேஷ்டியாரிடம் தெரிவிக்க, அவர் வாயிற்படி வரை எதிர்கொண்டு வந்து, மந்திரியை வரவேற்று, உள்ளே அழைத்துச் சென்று, அருகிலிருந்த ஆசனத்தில் அமரச் செய்து, தானும் அமர்ந்து, "மதிவல்லபமிகுந்த மந்திரித் தலைவரே! தாங்கள் அடியேனுடைய கிரகத்தை நாடி இவ்வளவு சீக்கிரமாக வரவேண்டிய காரணம் யாதோ? தெரியக் கூறின், என்னாலாக வேண்டிய உதவி எதாவது இருப்பின், இயன்ற வரை செய்யச் சித்தமாயுள்ளேன்; ஆகலின் கூறுதல் வேண்டும்" என்று வினவினர்.

அதுகேட்ட மந்திரி, "சிறந்த தார்மீக சீலராகிய தேவரீருக்குயான் ஓர் மங்களச் செய்தி கொண்டுவந்திருக்கிறேன்; அதுபற்றி அநேகமாகத் தங்கள் மனம் சந்துஷ்டியுறுமென்றே யெண்ணுகிறேன். தாங்கள் அச்செயலைத் திருப்தியுடனே பூர்த்தி செய்தருளினால் மிகவும் நன்மையாக முடியும். அஃது என்ன வென்றால், தேவரீருடைய திருக்குமாரத்தியின் அழகைக் கண்டு எமது மன்னர் மிகவும் ப்ரேமை கொண்டு மணக்க விரும்புகிறார்.

ராஜாதி ராஜனுகிய எங்கள் விஷ்ணு வர்த்தன பூபதிக்கு இத்தகைய எண்ணம் தோன்றியதே தங்கள் வைசிய குலம் முழுதும் செய்த புண்ணியத்தின் பெருக்கினால் கிடைத்த பாக்கியம் என்று சொல்லவேண்டும். அவர் இதுகாறும் திக் விஜயம் செய்து வந்த அநேக ராஜ்யங்களில் அதி யற்புதமான அழகு வாய்ந்த எவ்வளவோ ஸ்த்ரீ ரத்னங்களைக் கண்ணுற்ற போதும், அவர்களை யெல்லாம் காதலிக்காமல் தங்கள் புத்ரிக்கே தனது ஹ்ருதயத்தை வாசஸ்தானமாக

வழங்கியுள்ளா ராதலின், தாங்கள் யாதொருவித ஆலோசனையு மின்றித் தமது திருமகளை எமது மன்னவருக்குக் கொடுத்துப் புகழும் பெருமையும் உற்றுப் பொலிவுடன் மேவிப் புவனியில் வாழ்வதை விடச் சிறந்த பேறு என்ன இருக்கின்றது?" என்று மிகவும் நயமாக வும் உத்ஸாகமாகவும் வார்த்தையாடி வருகையில், குசும ஸ்ரேஷ்டி யாரும் இன்னும் அங்கிருந்த வைஸ்யப் ப்ரமுகர்களும் இவ்விஷயங் களை யெல்லாங் கேட்டு, நாராசக் கம்பிகளைக் காய்ச்சிச் செவிகளில் புகுத்தும் போது வேதனைப் படுவதுபோல் மனவேதனை யடைந்து, "இஃதென்ன? விபரீதமாக முடிந்து விட்டதே! நாம் என்ன குலம்? அவ்வரசன் என்ன குலம்? நமது பெண்ணை அவனுக்கு எப்படி நாம் கொடுக்க இயலும்? நாம் அவ்வரசனை நகர் வலத்திற்கு வரச் செய் ததே பிசகாக முடிந்து விட்டது போலும்!" என்று பல வாறுகச் சிந்தித்துக் கொண்டிருக்க, இவர்களது உள்ளக் குறிப்பினை முகக் குறிகளா லுணர்ந்த அரச மந்திரி, "எது! இவர்கள் ஒப்புக் கொள்ள மாட்டார்கள் போலிருக்கிறதே!" என்று சற்று மனக் கலக்க மடைய,

அரசன் யோசனை.

இதற்குள்ளே, பைந்தண்காவிற் பளிங்கு மண்டபத்திற் பல வாறுக எண்ணிக்கொண்டிருந்த பார்த்திபன், "நாம் இப்போது மந்தி ரியை யனுப்பி வைத்தோம். அவன் சென்று பெண் கேட்கையில், வைஸ்யர்கள் 'கொடுக்க முடியாது' என்று சொல்லிவிட்டால் என்ன செய்வது? எதற்கும் அவ் வைஸ்யர்களை இங்கே அழைத்து வந்து நாமே நேரில் கேட்பது நலம்" எனத் திடீரென்று தோன்றிய ஓர் எண்ணத்தை மனத்திற்கொண்டு சேவகர்களை யழைத்து, "அடா சேவகர்களே! நீங்கள் சீக்கிரமாகப் பெனுகொண்டாபுரியிற் சேர்ந்து, அங்கே குசுமஸ்ரேஷ்டியாரின் மாளிகைக்குச்சென்றுள்ள நமது மந்தி ரியையும் அந்த குசும ஸ்ரேஷ்டியாரையும் இந்த க்ஷணமே கையோடு அழைத்துக்கொண்டு திரும்பிவரக் கடவீர்கள்" என்று கட்டளையிட் டனுப்பினன். அச் சேவகர்கள் உடனே வந்து, குசும ஸ்ரேஷ்டியா ரின் அரண்மனை சேர்ந்து, இருவரையும் அரசன் அழைத்த கட்டளை யைத் தெரிவித்தனர். உடனே மந்திரியும், குசும ஸ்ரேஷ்டியாரும், அவருடைய மந்திரியாகிய வைசியோத்தமரும் பூஞ்சோலை யுற்று

அரசனைக் கண்டு, தத்தமக்கென அளிக்கப்பட்ட ஆசனங்களி லமர்ந் தனர்.

அரசன் குசுமனைக் கேட்டல்.

உடனே அரசன் குசும ஸ்ரேஷ்டியாரைப் பார்த்து "ஐயா! வணிகர் குலத்து வளர்புகழ் வள்ளலே! குல விளக்கைப்போல, குல மணியைப் போல, ஒரு அற்புத ரத்தினத்தைப் பெற்றெடுத்த பெருந்தகையே! உமது செல் வப் புதல்வி யாகிய வாசவாம்பிகையை எனக்குக் கடிமணம் செய்து கொடுத்தல் வேண்டுமென யான் மிகவும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகின் றேன். இது விஷயத்தில் தங்களுக்கும், தங்கள் குமாரத்திக்கும், தங்கள் நகருக்கும், தங்கள் குலத்திற்கும், புகழும் கீர்த்தியும் பெய ரும் மிகுமே யன்றிக் குறைபடாது. ஆதலின் தாங்கள் யாதொருவித ஆக்ஷேபணையுமின்றிக் கருத்திசைந்து, கரையும் என் மனதைத் திடப் படுத்தித் தைரியம் ஊந்து, என் உயிரினும் உயிராகிய உத்தம வனிதை யாய் விளங்கும் அச் சுந்தரப் பெண்மணியைச் சுபமங்களகரமாகத் திருக் கல்யாணம் செய்து கொடுத்தல் வேண்டும்" என்று வெகு விநயத்துடனும் ப்ரார்த்தித்துக் கொண்டனன்.

குசுமன் பதில்.

அதுகேட்ட குசும ஸ்ரேஷ்டியார், "அரசர் திலகமே! தங்க ளுக்கு எனது பெண்மணியைத் திருமணம் செய்து கொடுக்கும்படி தாங்கள் கேட்கிறீர்கள். இவ் விஷயம் சமூகச் சார்பாயுள்ளதால் எமது சமூகத்தாரைக் கலந்து யோசித்துக் கொண்டும், பெண்ணின் மனோ நிலையைத் தெரிந்து கொண்டும்தான் நிச்சயமாய்ப் பதில் கூற வேண்டியுளது. சமூகத்தாரை யெல்லா மழைப்பித்து, அவர்களுடைய அபிப்ராயத்தை அறிந்துகொள்ளுதற்குச் சற்று காலதாமத மேற்படு மாதலால், அவர்களிடத்தில் கலந்து யோசித்து, அவர்களிடம் உத்த ரவு பெற்றுக் கொண்டு தங்களுக்குத் தெரிவிக்கின்றேன். அதன் பின்னர் முகூர்த்த நாள் நிச்சயித்துக் கலியாணம் நடாத்திக் கொள்ள லாம். மற்றபடி அடியேனால் என்ன தடை யிருக்கிறது? ஆதலால் தாங்கள் நிம்மதியாக ராஜமகேந்திரபுரம் சென்று சேருங்கள். இதைப் பற்றிய யோசனைகளும் கவலையும் தங்கட்குத் தேவையே யில்லை.

நான் எல்லா விவரங்களையும் கலந்து யோசித்து முடிவு செய்து கொண்டு சொல்லி யனுப்புகின்றேன்" என்றார்.

மந்திரி கூறல்.

இவற்றைச் செவியுற்ற மந்திரி அரசனை நோக்கி, "ஆம்; ஆம்; அதுவும் சரிதான்; ஒருவரிடத்தில் ஒரு பெண் இருக்குமாகில் அவர்கள் தங்கள் பந்து மித்திரர்களையும் சமூகத்தார்களையும் கலந்து அவர்களுடைய அபிப்ராயங்களை அறியாமலும், அனுமதியைப் பெறுமலும், பெண்ணின் மனதைக் கண்டறியாமலும், எப்படி மணம் செய்து கொடுப்பார்கள்? அவ்வாறே அவர்கள் கலந்து கொண்டு சொல்லி யனுப்பட்டும். கிணற்றுத் தண்ணீரை வெள்ளம் கொண்டு போய்விடப் போவதில்லை. ஆதலால் நாம் அதற்குள் ஏன் அவசரப் படுதல் வேண்டும்? அப்படி அவசரப்பட்டு இத்தகைய காரியங்களை நடத்தினால் அந்த வைபவம் அவ்வளவு சிறப்பாக ரமிக்காது. ஆனபடியினால், அவ்வாறு யோசித்தே சொல்லி யனுப்பும்படி அவர்களுக்கு உத்தரவு கொடுத் தனுப்பிவிட்டு நாம் நமது நகர் செல்வோம். பிறகு அவர்கள் சொல்லி யனுப்பட்டும். உடனே நாம் தக்க ஏற்பாடுகள் செய்து கொள்ளலாம்" என்று கூறினன்.

ராஜமஹேந்திரம் செல்லல்.

அரசனும் அதற்கு ஒருவாறு சம்மதித்து, சீக்கிரம் யோசித்து பதில் தெரிவிக்க வேண்டுமென்றும், தனது ஆருயிரனைய அற்புத அணங்காம் வாசவாம்பிகையை எப்படியாவது தனக்கு மணம் செய்து கொடுப்பதற்குத் தகுந்த முயற்சி செய்ய வேண்டுமென்றும், மணமுடித்துக் கொண்டுதான் மனங்குளிர வேண்டுமென்றும் பலவாறுகக் குசும ஸ்ரேஷ்டியாரிடம் கூறி பெனு கொண்டாவிற் கனுப்பி வைத்து, மறுநாட் காலையில் சேனு சமூகங்கள் யாவும் சூழப் புறப்பட்டு, தனது நகரமாகிய ராஜமஹேந்திராபுரி பட்டணத்தை நோக்கி ப்ரயாண மாயினன்.

நகரின் வரவேற்பு.

'விஷ்ணுவர்த்தன மன்னன் ஜெயத்துடன் திரும்பி வருகிறான்' என்பதை யறிந்த அந் நகரத்தார்கள், அந்த ராஜமகேந்திரபுரியை வெகுவாக அலங்கரித்து வைத்து, யாவரும் வந்து ஸர்வ மங்களங்களோடும் அரசனை எதிர்கொண் டழைத்துச் செல்லவும், அரசன்

ஸ்வாடம்பர சகிதனுக அரண்மனை சேர்ந்து, ஆசனத் தமர்ந்து ராஜ சபையை நடத்திக்கொண்டிருந்தான்.

மன்னன் மனோநிலை

எந்தக் காரியம் செய்தபோதிலும் ராஜனுடைய மனமானது அந்தப் பெண்மணியின் அழகினையே எண்ணி எண்ணி, ஆசைக் கடலில் மூழ்கி யமிழ்ந் தமிழ்ந்து கரை தெரியாமற் கலங்கித் திகைத் துத் தவித்துத் தடுமாறிக்கொண்டே கிடந்தது.

நீருட்குளிப்பினுங் குன்றேறி யொளிப்பினுங் காமத்திசுடாது விடுவதில்லை யாதலின், அத் தீய தீக்கு ஆளாகிய அரசன் அடைந்த அவதிக்கு அளவொன்று முண்டென்ன அறிதற்காகா. எக் காலத் தும் எச்சமயத்தும் எவ்வேலை செய்கையிலும் வாசவாம்பிகையின் நாமோச்சாரணம் இடைவிடாது நடைபெறும். கணப் போதேனும் அவனது நா அவ்வம்மையைத் துதிக்க மறவாது. அவ் வம்பிகையின் அற்புத எழிலின் உருவெளித் தோற்றத்தைக் காண்பதே அவனிரு கண்களுக்கும் தொழிலாயிற்று. அதைப்பற்றி நினைப்பதை அவ னுடைய மனம் மறுப்பதே யில்லை. இவ்வாறு அவ்வரசன் நமதன்னை யின் அழகை நினைந்து நினைந்து மனம் வெதும்பியும், மிகமிக வருந்தி யும், இன்னதுதான் செய்வது எனத் தெரியாது திகைத்தும், அறிவழிந் தும், ஆவி சோர்ந்தும், சற்று தெளிந்தும், பின்பு நினைந்தும், பெருமூச் செறிந்தும், முகச் சோர்வற்றும், மன வாட்டமடைந்தும் அல்லற் கடலி லாழ்ந்தவனையினன்.

சூரியாஸ்தமனம்

பொழுது அதிகரிக்க அதிகரிக்க அரசனது ஆசையும் அதிகரித் துக்கொண்டே வந்தது. "ஒரு பெண்ணின் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ளாது, அப் பெண்ணின்மீது இச்சைகொண்டு, மனந் தடு மாறி, அக்ரமமென்பதைச் சற்று மெண்ணுது, இவ்வாறு கரைந்துருகு கின்ற கயவனைக் காணுதலுந் தவறு" என்று எண்ணி, அவனைப் பார்த்துக் கொண்டிருக்கவும் மனமின்றி அகன்றதைப்போலவும், இத்தகையை துன்மார்க்கனை இதுவரை பார்த்துக்கொண்டிருந்ததனால் வந்தபாவத்தைத் தீர்த்துக்கொள்ள சமுத்ரஸ்நானம் செய்யச்சென்றது போலவும் ஏழ் பரித் தேரோன் இருங்கட லாழ்ந்தனன்.

"எங்களிடத்தில் இனிதமர்ந்து விளங்கும் ஈஸ்வரியினுடைய அவதாரமென்பதையும் எண்ணி யாராயாது இணையிலா மோகங் கொண்டு ஏதேதோ எண்ணி ஏங்கிவருந்தும் இந்தக் கொடியனை இனி ஏறெடுத்தும் பார்க்கொணாது" என்று இதயத் தெண்ணித் தமது இதழ்களைச் சுருக்கி, எழிலெலாங் குறைந்து, மன வருத்தத்தையும் முக வாட்டத்தையும் காண்பிப்பதே போல, கோகனதங்கள் கூம்புத லாயின.

தத்தமது பெடைகளுடன் வெளிச்சென்று சுற்றி இரை தேடியுண்டு, பொய்கைகளிடையும் பற்பலவயினும் பகற்போதைக் கழித்த புள்ளினம் யாவும் தாம்தாம் வாழும்படியான மரக்கிளைகளையும் கூடுகளையும் நாடி (வரும் வழியிலுள்ள புருடனைப் பிரிந்துள்ள பூவைமாரையும், மனைவியைப் பிரிந்துள்ள வாலிபர்களையும் சற்று மனக் கலக்கமடையச் செய்துகொண்டே) வந்து சேர்ந்தன.

செங்கோல் வேந்தன் தான் ஆண்டுவந்த ராஜ்யத்தைக் கொடுங்கோல் மன்னனுக்குக் கொடுத்துவிட்டுத் தவஞ் செய்யக் கான் சென்றாற்போல, பேரிருட்டுக்கு உலகை ஒப்புவித்துவிட்டு நேடும்பகல் நீங்கிற்று.

விரிந்த உணர்வு மங்கி, அற்ப நினைவுகளைக் கொண்டு, ஒரு பெண்ணின் மீது மோகங்கொண்டு, அப் பெண்ணின் மனப்பான்மையையும், பெண்ணைப் பயந்தார் மனப்பான்மையையும், நீதி நூல் கூறும் நெறியினையும், வேதங் கூறும் விதியினையும், யாதொன்றையும் பாராது, மனக்கோட்டை கட்டிக்கொண்டும், வீணவஸ்தைப் பட்டுக் கொண்டும், விருதாவாகத் தொந்தரவு படுகின்ற வெய்யவனுகிய விஷ்ணு வர்த்தனன் மீது அடங்காக் கோபங்கொண்டு ஆகாயவாணியின் கண்கள் சிவந்ததே போன்று செவ்வானம் பரவியது.

செங்கோல் நடத்திய சிறந்த அரசர்களின் காலங் கழிந்ததும், அவர்களுடைய பிள்ளைகட்குப் பட்டந் தரிப்பதற்குள்ளாக, அவ் விராஜ்ஜியத்தை யபகரிக்க வெண்ணிச் சில குறுநில மன்னர்கள் அனுப்பிய வாட்படை வந்ததே போல மயக்கம் செய்யும் மாலைக் காலமும் வந்து சேர்ந்தது.

கதிரவன் கரந்தான். இராக் காலம் வளரத் தொடங்கியது. வாடைக் காற்று வளமுற வீச ஆரம்பித்தது. ஆகாயத்தில் அனந்தம் மீன்கள் அரும்பி யொளிர்ந்தன. மாலைக் காலம் குறைதலாயிற்று.

செம்பஞ்சு பூசிய மென் சீரடிகளை யுடைய பாவையரின் கூந்தலையும், வஞ்சகர்களின் வல்வினையையும், ஈசன் நாமத்தை என்றும் நினைந்தறியா இழுதையர் நெஞ்சத்தையும் நிகர்த்து நில மெலாங் கவர வந்த நெடுங் கடல்போல நிறையிருள் பெருகியது.

" எம் மரபிற் ரோன்றிய இம் மன்னவன் இன்று ஒரு மங்கை யின் பொருட்டாக மானமிழந்து, மதியழிந்து, மயக்கமிகுந்து வருந்து கின்ரான். நமது குலப் பெருமையைக் கெடுக்கப் பிறந்த கோடரிக் காம்பை நிகர்த்த இந்தக் கொடியனை யான் என்னபாடு படுத்துகின் றேன் பாருங்கள் " என்று வாளை வீசிக்கொண்டு புறப்பட்டுவந்ததே போல, வெண்டிங்களானது வெகு விரைவாக விண்ணிற் ரோன்றி விளங்கத் தொடங்கியது.

அம் முழு மதியானது புறப்படுகையில், ஆதியில் வைகுண்ட நாதனாகிய ஸ்ரீமந் நாராயணமூர்த்தி தேவாசுரர்களைக் கொண்டு திருப் பாற் கடலைக் கடைந்து எடுத்த அமுதையும் ஏனைய பல சிறந்த பொருள்களையும் புரந்தராதி தேவர்கட்குப் பரிந்து பகிர்ந் தளித்து, மற்றும் மிச்சமாயிருந்த பொருள்களை யெல்லாம் உருளத் திரட்டிக் கடற்குள்ளிட, அவ் வமுத சாரத் திரளானது மேல் மிதந்து தோன் றியது போன்ற அற்புத தோற்றத்தையும், அமுத கிரணங்களையும், தண்மையான வெண்ணிலவையும் கொண்டு அனைவர்க்கும் ஆனந்த மளித்து விளங்காநின்றது.

அவ்வா றுதித்த வெண்டிங்கள் பொழிந்த தண்ணிலவானது, " சகல சாஸ்த்ரங்களையும் ஒருங்கே முறையுடன் ஓதியுணர்ந்து ஆசரித் தொழுகிய அருங்குண சீலனாகிய இவ்வுத்தம அரசனே இன்று காமத் திற் காளாகிக் கரைகிரு னென்ரால், காமத்தின் கொடுமை எத் தகையது பார்த்தீரா ? " என்று உலகினரிடத்தே கூறிப் புன்னகை பூத்தல் போலவும் பொலிந்து தோன்றியது.

வலிய வந்து துன்பம் செய்யும் கொடுங் குணக் காமுகர் களாகிய அந்நியர்களைக் கண்டு அழுங்கிக் கிடந்து, தமது ஆருயிர்க் கணவர் வந்ததும் அவருடைய அங்கை தீண்டப்பெற்று ஆனந்த மிகுந்து முகமும் மனமும் மொழியும் செயலும் அனைத்தும் மலரும் நற்குல மாதரைப் போல, பரந்து நிறைந்த வெம்பகற் கொல்கிப் பனிமதிக் கரங்கள் பட்டுத் தீண்டவும் பரிவுடனலர்ந்து கயிரவ மலர்கள் கண்களுக்கினிய காட்சியைத் தந்தன.

வானம் நிர்மலமாக விளங்கியது. திங்களும் நட்சத்திரங் களும் திவ்யமான வொளியுடன் ப்ரகாசிக்கலாயின. மெல்லிய பூங்காற்று அதிரமணீயமாக வீசி அனைத்துயிர்கட்கும் ஆனந்தத்தை யும், தனித்திருக்கின்ற ஒரு சிலருக்கு மட்டும் சற்று மன விசாரத் தையும் ஊட்டிக்கொண்டிருந்தது. பசுமரங்களும் பூங்கொடிகளும் மலர்ச் செடிகளும் நிலவொளியால் வெகு விநோதமான இயற்கை யழகைப் பொழிந்து யாவர் மனத்தையும் ஈர்த்துக் கரைத்து இன்பத் துறையில் ஆழ்த்திய வண்ணமாயிருந்தன. அதுகாலை திங்கள் வெண் குடைக்கீழ், தென்றற்றேரேறி, கரும்பு வில்லைக் கையிற் பிடித்து, வாரியாம் முரசு வளமுட னதிர, மீனக்கொடி நனி விசையொடு பறக்க, கங்குலாகிய களிறு புடை சூழ கிளிகளாகிய குதிரைகளைத் தூண்டி மன்மதனனவன் உலகெலாம் சுற்றிப் பவனி வரலாயினன்.

மன்னவனுகிய விஷ்ணுவர்த்தனன் ஆசை என்கின்ற பேராழி யின் கண்ணே யமிழ்ந்தவனுகி உண்டியுங் கொள்ளாது, ஒன்றுந் தோன்றுது, மயக்கந் தலைக்கேறித் திகைத்துத் தடுமாறிச் சோர்ந்து சோர்ந்து, அறிவழிந்து மூர்ச்சையாயினன். அப்போது அந்தப் புரத்திலிருந்து தோழியர் பலரும் ஓடோடியும் வந்து, அரசனை யெடுத்து மலரணை மீதிற் படுக்க வைத்துப் பனி நீர் தெளித்து, வெண்சாமரங் கொண்டும் ஆலவட்டம் கொண்டும் விசிறிப் பலவித ஸைத்யோபசாரங்கள் செய்யச் சற்று தெளிந்து கண் விழித்துப் பார்த்து, வரசனீ நாமத்தையே உச்சரிப்பவனுகி, பிறகு சோர்ந்து மலரணை மீதில் விழுந்து, பின்பு சற்று தெளிந்தெழுகையில், காமன் வாரி வாரி யெய்யுந் தாமரை முல்லை அசோகம் சூதம் என்னும் நால்வகைத்தாய கணைகளும் வந்து வந்து தாக்கித் தேகத்தைத்

துளைக்க, சந்திரனின் தண்ணமுத கிரணங்கள் சூரியனுடைய வெய்ய கிரணங்களைவிட அதிக வெப்பமுடன் தகிப்பது போலத் தோன்ற, தென்றற் காற்றும் கடலின் முழக்கமும் தாதியர் தெளிக்கும் பனி நீரும் வீசும் சாமரையின் மெல்லிய காற்றும் சேர்ந்து மிகுந்த துன்பத்தைத் தர, அரசனின் முனிவு அதிகமாக வளரத் தொடங்கியது.

மந்த மாருதம் மாண்புற வீசும் நிலா முற்றத்தின் கண், அற்புத எழிலுடன் அமைக்கப்பட்ட பைம்பொற் சாயை வீசும் பரியங்கத்திற் பண்புடன் மேவும் மயிற்றூவி இலவின்பஞ்சு செம் பஞ்சு வெண்பஞ்சு அன்னத்தூவி யாகிய பஞ்ச சயனங்களின்மீது, காம்பரிந்த முல்லை மலர் பரப்பி, அதன்மேற் படுத்திருந்த போதிலும், மாரன் விடுகிற மலர்க்கணைகளினல் வருந்திக் கொண்டுள்ளபடியால் அவ்வரசனுடைய நிலை பஞ்சாக்னி மத்தியிலிருந்து தவம் செய்ய முயல்பவனுடைய நிலையை யொத்திருந்தது.

சந்திரோபாலம்பனம்

அவன் சந்திரனிடத்துக் கோபம் மிகுந்தவனாகி பலவாறாக சந்திரனை வையத் தொடங்கினன். "ஓ வெண் மதியே! உன்னைத் 'தண்மதி' என்றும், 'இமகிரணன்' என்றும், 'தண்ணவன்' என்றும், 'குளிர் கிரணன்' என்றும் 'பசுங் கதிர்த்தே' என்றும் பல நூல்களிலும் பண்பிற் சிறந்த பாவலர் களாலே பகரப்பட்டிருப்பதும், பெரியோர்கள் எல்லாம் கூறி வருவதும், இதுகாறும் யானும் அவ்வாறே நினைந்திருந்ததும் பொய்மை என்பதை இன்றன்றே அறிந்தேன்?

உனது வெப்பத்தைக் குறைத்துக் கொள்வதற்காகவே சிவபெருமான் கங்கையையும் சிரமிசைச் சூடியிருக்கின்றார் போலும்! தன்னைச் சுட்டெரித்து உருவிலியாக்கிய பரமசிவனிடத்தில் தனது வலிமையைக் காட்டிப் போர் புரிய ஆண்மையற்ற மன்மதன் தான் 'தக்க காரணமின்றி ஒருவனிடம் சண்டைக்குச் செல்பவன் சுத்த வீரனல்ல' என்பதையும் உணராது, யாதொரு காரணமும் இன்றி என் மீது கணைகளைச் செலுத்தித் துயர்ப் படுத்தி வீரமற்ற கீழ்மகன் போல நடந்து கொள்கிறானென்றல்,

நீயும் அவ்வாறே உன் கலிகளெல்லாம் தேய்ந்து போகச் சபித்த பகைவனுகிய தகூனிடம் ஒருவித வீரத்தையும் அன்று காட்டாமல், நின்னை அடிக்கடி விழுங்கித் தொந்தரவு செய்யும் கேது என்னும் பாம்பினிடத்தும் உனது வீரத்தைக் காட்டாமல், பணம் என்கிற படத்தையுடையதாற் 'பணி' யெனப் பெயர்பெறும் பாம்பையொத்து (அதாவது) பணம் (பாம்புப்படம்) போன்ற அல்குலையுடைய 'பணி' யாகிய வாசவியிடத்திலாவது உனது வீரத்தைக் காட்டி காம நோயில் ஈடுபடுத்தி, என்றனை மணக்கச் செய்வதற்கியலாமல், வீணை என்னை வருத்தி, வீரத்தனமுள்ள ஆண்மகனைப் போல நடித்து, வேடிக்கை செய்து, விருதாவாக வீண் பழி சுமக்கிறாய். இது தான் உனது வீரத்தனமோ?

காமனும் நீயும் இருவரும் எனது உயிரைக் கொள்ளப் பார்க்கின், (எனக்குள்ளது ஒரு உயிர்தானதலின்) உங்களில் ஒருவர் கண்டிப்பாகத் தோல்வியடைய நேருமே யென்பதையும் சற்று யோசித்திலீர் போலும்! என்னே உமது பேதைமை!

நீ வாசவியிடத்தில் இவ்வளவு வேலைத்தனத்தைக் காண்பித்து என்னை மணக்கும்படிச் செய்ய முடியாதா? அவள் கதிரோன் கடல் புக்கதும் கரமலர் கூப்பிக் கடிதினிற் றொழுதுனைப் போற்றுதல் புரிவதால் அவளுக்கு மோகமூட்டி வருத்தந்தர நின்மன மொவ்வாது போலும்! நீ இத்தனை நாட்களாய் இதுபோற் கனல் விசி எனது தேகத்தைச் சுட்டதில்லையே! குளிர்ந்த அமுத க்ரணங்களை யன்றோ விசி வந்தனை? எரி வெங்கதிரால் இன்று என்னை வெதுப்ப எப்படிக் கற்றனையோ தெரியவில்லையே! ஒருகால் கூர சாகரத்திலிருந்து நீ பிறக்கும்போதே ஆலால விஷத்தினிடத்திற் கற்றுக் கொண்டனையோ? அன்றி அவ் வாழ்கடலுக்குள் அமிழ்ந்து கிடக்கும் வடவைத் தீயினிடந்தான் கற்றுக் கொண்டனையோ? அல்லது வேறெங்குதான் பயின்றனையோ? எதுவும் எனக்குப் புரியவில்லையே! உனக்கு இருவித சக்திகளு மிருக்குமாகில் முதலில் இப்போது என்னை இவ்வாறு துன்புறுத்துதலால் யான் இறப்பின், பிறகு உனது குளிர்ந்த க்ரணங்களால் எழுப்பி யருள வல்லையோ?

எல்லா மானவ வர்க்கங்களும், எல்லா ம்ருக ராசிகளும், எல்லாப் புட்குலங்களும், தத்தமது பெடைகளுடன் கூடி, ஆனந்த மாக மனச்சாந்தியுற்று, இன்பக் கடலில் அமிழ்ந்து இறுமாந்திருக்க, எழையேன் மாத்திரம் இத்தகைய துன்பக் கடலிற் மூழ்ந்து துயர்ந்து கரை காணுதவனுகிக் கஷ்டப்படுதல் நலனே? இவ்வாறு செய்வதும் உனக்கழ காகுமோ? இதுதான் தருமமோ? நீதியோ? நியாயமோ? முறைமையோ?

இச்செயல் நினக்குத் தகுமா? நின் பெயருக்குத் தகுமா? நின் குலுத்திக்குத் தகுமா? வேண்டாம்; வேண்டாம்; என்னைத் துன்புறுத்தாதே. என்னை வீணே துன்புறுத்துவதால் நீ என்ன பயன் பெறப் போகிறாய்? எதோ பின்னும் சில நாள் சுகஜீவியாய் சௌக்யமாய் வாழ். எனக்கு நீ சுகந் தராவிடினும் துன்பந் தராமலாவது இரு.

மாட்டாயா? சற்றும் உனதுளம் இரங்காதா? உன் மனம் கல்லா? இரும்பா? அல்லது அவற்றினுங் கடினமுடையதா? கொடுமை மிகுந்ததா? எவ்வளவு கூறினும் எப்படிக் கெஞ்சினும் உன் செவிகளிற் புகாதா? என் பேச்சுகள் உனதம்பலத்தி லேறுவ தில்லையா? நீ செவிடா? ஒன்றுமே பதிலில்லையா? ஓ! ஓ! ஓ! நீயும் தேவர் கூட்டத்தில் ஒருவன்! ஆஹா! நான்தான் யோசனையில்லாமல் இதுவரை ஏதேதோ கூறி உன்னிடங் குறையிரந்தேன். திருப்பாற் கடலில் நின்னோடு கூடப்பிறந்த சகோதரியாகிய இலக்குமி தேவியார் வாசம்புரியும் இல்லமாயிற்றே என்றும் இதயத்தெண்ணுது பங்கய மலர்களை க்ரணங்களாகிய கைகளால் வருத்தி முகவாட்டமடையச் செய்யும் (உடன் பிறந்த சகோதரி உற்றுறையும் வீட்டையே நிலை குலையச் செய்யும்) மூர்க்கனுகிய நினக்கு எவ்வாறு கருணை பிறக்கும்? உன்னைப் போலக் கடிய கொடிய வன்மன முடையாரை வேறெங் குங் காண எவராலு மியலாது. இது சத்தியம்! சத்தியம்!! மூக்காலும் சத்தியம்!!! உன்னை வெறுத்துப் பயனில்லை. என் பவ வினையே என்னை இத்தனை துன்பங்கட்கு மாளாக்குகின்றது போலும்!" எனப் பலவாறு கோபித்தும், வியந்தும், நயந்தும், வெறுத்தும் பலவிதமாகக் கூறினன்.

சமுத்ரோ பாலம்பனம்

பின்னர், அடுத்து மேன்மேலும் அலைத்தெழும் ஆழி ஆர்ப் புறும் ஒசை அளவிலாத் துயரை அடைவுடன் தரலை அரசனு முணர்ந்து வருந்தியவனுகி, " கரும் பெருங் கடலே! என் கருத்து மயங்கி யான் கவலுறுங் காலையில், கஷ்டப்படுத்தக் கருதியே முழங்கல் நின் கண்ணியத்திற் கழகோ? நீ இவ்வாறு உயிர் வர்க் கங்களைக் காரணமின்றி வருத்தினுல் இறைவன் உன்னைக் கண்டிப் பாகத் தண்டித்து விடுவான். வேண்டாம்; இவ்வாறு வருத்தாதே. சொல்வதைக் கேள். கேளாயா? உனக்கு கர்வம் மிகுந்துளதா? காரணமின்றி யெவரையேனும் கன வருத்தமுடன் கஷ்டப்படச் செய்வதென்றே கங்கணங் கட்டிக்கொண்டனேயா? பூர்வம் அகஸ் திய மகா முனிவரின் உள்ளங் கையில் நின்று, அவரால் ஆசமனீயம் செய்யப்பட்டு, உருத் தெரியாமல் மறைந்து கிடந்ததை மறந்துவிட் டாயோ? முந்திய சம்பவங்களை யறிந்துணர்ந்து முறையோ டொழு குதலை நீ யனுஷ்டிப்பதில்லையோ? உன் உருவம் மட்டும் விசாலமே யன்றி உனதறிவு விசாலமில்லை போலும்? என்னுடைய ஆசையோ உன்னுருவை விடப் பெரிதே யென்பதற்கும், நீ தரும் துயரம் அத னினும் பெரிதே யென்பதற்கும் எள்ளளவேனும் ஐயமிலது.

ஆகியில் அமுதத்தை யீந்து தேவர்களையும் காப்பாற்றி யருளிய நீ இன்று என்னை இவ்வாறு துன்புறுத்த எதற்கு எண்ணினையோ தெரியவில்லையே! நான் உனக்கு ஒருவித தீங்கும் செய்ததில்லையே! அப்படியிருக்க என்னை வருத்த ஏன் துணிந்தனையோ? ஊம்; தெரிந் தது; சிவபெருமானிடமே விஷத்தை யனுப்பிவைத்த பாதகனுகிய நீ என்னை வருத்த எண்ணியது என்ன ப்ரமாதம்? எண்ணியிருப்பாய்.

அவ்வாறு எனக்குத் துன்பந்தர நினைந்த நீ, முற் காலத்தில் தேவாசுரர்கள் அமுதங் கடைகையில் தோன்றிய விஷத்தில் ஒரு சிறு துளி அனுப்பி யிருந்தால் நான் இறந்துபோயிருப்பேன். இத்தனை துயரங்களை யான் படவேண்டிய காரணமில்லை. என்னைச் சித்ரவதை செய்யத்தான் உனது எண்ணம் முடிவு செய்ததோ? அல்லது கொல்லநினைந்தே (விஷத்தை யனுப்பினுல், சிவபெருமான் விஷத்தைக் கழுத்தி லடக்கியவராதலால் அவரைத் துதித்து அவர் திருவருளினுல்

ஒருக்கால் பிழைத்துவிட்டால் என்செய்வது? ஆதலால் அவனுல் இன்னதென்று அறிய முடியாத ஓர் பொருளே யனுப்பி, 'இதற்குப் பரிகாரம் எங்கு தேடுவது' என்றே யுணரலாகாத ஒன்றுல் வருந்தச் செய்வதே தகுதி என வுன்னி) அந் நஞ்சினுங் கொடியதோர் பொருளே உருத் தெரியா தனுப்பி என்னே வருத்துகின்றனே போலும்! என்னே நின் வஞ்சகம்!" என்று பலவிதமாகக் கடலொலியைக் கனன்று கரைந்தும், வியந்து, மொழிந்தும் வருந்தி மெலிந்தான்.

தென்றலைப் பழித்தல்.

பின்பு, தென்றல் தருகிற துன்ப மறிந்து, செப்பொணுத மன வருத்த மடைந்து, "ஏ மந்த மாருதமே! மலயக்காலே! வசந்த நற்காற்றே! மெல்லிய பூங்காற்றுல் நீ மேதினி யுள்ளோர்க்கெல்லாம் மிகுந்த இன்பத்தையும் மேலாஞ் சுகத்தையும் மேவ அளித்துக்கொண்டே மிருதுத் தன்மையொடு மிளிர்ந் துலவுகின்று யென்றன்றே இதுவரை யெண்ணி ஏமாந்து போனேன்? இவ்வாறு தயை தாட்சண்யம் இரக்கம் கருணே முதலிய எதுவும் எள்ளளவு மின்றி மண்டுந் தழலே மொண்டு மொண்டு, மாந்தர்கள் மீது கூசாது கொட்டும் கொடியதோர் தன்மை யுன்னிடமுளதென இன்றல்லவோ அறிந்தேன்?

ஆஹா! இவ்வளவு கொடுமை புரியவும் உனக்குத் தெரியுமா? நீ பிறந்த இடம் எங்கள் பெருமானுகிய அகஸ்திய முனிவர் வாசம் புரியும் பொதிகாசல மாயிற்றே! தண்மை மிகுந்து நன் மணங்கமழுஞ் சந்தன மரச் சோலைகள் செறிந்து விளங்கும் சிறப்புடைய மலையிலன்றே நீ மிளிர்ந்தாய்? நீ தவழ்ந்து வருவதும், வளர்ந்து வருவதும், தெய்வக் காவிரி திவ்யமாய்ப் பெருகிச் செழுமையும் பசுமையும் அன்பும் இன்பும் சோறும் சுகமும் யாவுந் தழைக்கும் தண்டமிழ் நாடாயிற்றே! 'தென்றல், உடம்பிற்கு நன்மையைத் தருமே யன்றி தீமையைத் தராது' என வைத்திய நிபுணர்களும் உன்னைப் புகழ்வார்களே! உன்னேடு கலந்து வரும் முத்தமிழின் இனிமை மொழிதற்கு மரிதென்பார்களே! அப்படியிருக்க, நீ இத்தகைய கொடுமை புரியயாண்டு கற்றனையோ தெரியவில்லை!" என்றெல்லாங் கூறித் தென்றலை நிந்தித்தும் சோர்வுற்றவனுகி அணைமேற் சாய்ந்தான்.

பின்பு சற்று நேரம் சென்று தெளிவுற்று, " இதுகாறும் நாம் மதியையும் கடலையும் தென்றலையும் வைதது தவறு. ஏனெனில், காமன் வாளிகளன்றே இவை யனைத்துக்கும் முதற் காரணமா யிருந்து, இத்தகைய துன்பங் கட் குட்படுத்துகின்றன? " என்று நினைந்தவனாகி, " எனது அங்க மூடொளித்தே ஆருயிர் கூட்டுணும் ஐங்கணைக் கிழவ! அங்கச! அநங்க! திங்கள் வெண் குடையோய்! தீங்கழை வில்லோய்! செங்கண் மால் மைந்தனுய்த் திகழ்ந்திடும் வேளே! எழில்மிகு மாரா! நீ என்மிசை மூனிந்தே தழலினை வீசுதல் தகுதியோ? வேண்டாம்; இதுவரை என்றனை வருத்தியது போதும்; இனியும் வருத்துதல் அழகல; நிறுத்து; தயவு செய்து நிறுத்து. நிறுத்தாயா ? ஆஹா ! நின் உருவ மழிந்துங்கூட இன்னும் நின் அகங்காரமும் மமதையும் கொடுமையும் ஜீவஹிம்சையும் அடங்காமல் இவ்வளவு துன்பத்தை விளைத்துக் கொண்டிருக்கிறயென்றல், அன்று உன்னைச் சிவபெருமான் தமது நுதற் கண்ணெரிக்காது விட்டிருந்து, இன்று உருவோடு பொலிவாயேல், எத்தகைய துயரை யளிப்பாயோ? திசைமுகனும் நினக்கு ஐம் மலர்களையே வாளிகளாய்த் தராமல், அநேக மலர்களைத் தந்திருந்தாலும், அல்லது இந்த ஐந்து மலர்க்கணைகளைத் தராமல், திவ்யமான ஐந்து வடிக்கணைகளைக் கொடுத்திருந்தாலும், நீ இந்த உலகினையே யழித்தொழித்து விடுவாய் போலும்!

சிவபெருமானல் அழிக்கப்பட்டவர்கள் ஒருவரேனும் பின்னர் பிழைப்ப தென்பது எப்பொழுதுங்கிடையாது. ஆனல் அந்தக் கண்ணுதற் கடவுளாலேயே எரிக்கப் பட்ட நீ திரும்பவும் உயிர் பெற்றதற்கு என்போல் வாருடைய தீவினைதான் காரணமோ? யாதோ? தெரியவில்லையே! " என்றெல்லாம் மொழிந்து மன்மதனை நிந்தித்தும்,

மன்மதோ பாலம்பனம்.

அந்தக் காமன் உருக் கரந் திருந்து ஓயாது சொரியும் மலர் வாளி யாலும், நிலவினெளியாலும், தென்றல் வீச்சாலும், வாசவி னினைவாலும் வருத்த மீதூர்ந்து வெதும்பிய வுளத்தனுய்த் துயருறுங் காலை, அருகிலிருந்து சேடியர் செய்யுஞ் சைத்யோபசாரங்கள் யாவும் எரியில் நெய் விட்டாற்போல அதிக வெப்பத்தைத் தரக்கண்டு

தாதியரை வைதல்

தாதியர் மீது கோபம் மிகுந்தவனாகி, "பெண்கள் சமூகத்திற்கு 'நல்லார்' என்று ஓர் பெயரிருப்பதாகச் சொல்லுகின்றனர். நீங்கள் சந்தனம் என்னும் பெயரைச் சொல்லி ஒரு கொடுந் தழலை அள்ளி யள்ளி, இன்னும் வெப்பத்தை அதிகப் படுத்தக் கூடிய மற்றேர்ர் பொருளையும் பன்னீர் என்ற பெயரோடு சேர்த்து அளவி, தடவித் தடவி என்னே மிகுந்த வெம்மையின்பாற் படுத்தி, அளவறுந் துயருறப் புரிந்து வருகின்ற உமக்கு எப்படி அப்பெயர் பொருந்துமோ அறியேன். ஒருவித காரணமு மின்றி என்னே இத்தகைய துன்பத்திற் காளாக்கி, வெந்தொழிலாற்றி, வீணவஸ்தைப் படுத்தும் உம்மை 'நல்லார்' என்ற பெயரா லழைப்பது, அமங்கள வாரத்தை 'மங்கள வாரம்' என்றும், நாகப் பாம்பை 'நல்லப்பாம்பு' என்றும் சொல்வது போலத்தா னிருக்கும். .

ஐம்மலர் வாளிகள் அழுந்தத் தைத்தும் அருவமாய்த்தோன்றி அளவிலாத் துயர்தரும் என் அங்கப் புண்களில் ஆரமாம் அங்கியை அள்ளி யள்ளி அடிக்கடி வீசும் அரிவையர்காள்! கொஞ்சமேனும் கருணையிலாத நீவிர் இன்னும் என்னதான் செய்யீர்கள்? நீங்கள் எனது சமஸ்தானத்திற்கு எப்படியோ வந்து தாதியர்களாக அமைந்து விட்டீர்கள். ஆஹா! ஒரு தினத்திலாயினும் உமது மனங் கோணும்படி யான் யாதொரு தீங்கும் செய்த தில்லையே! எவ்வித துன்பமும் இழைக்க வில்லையே! அப்படி யிருக்க, யான் இவ்வாறு துன்பப்படும் சமயம் பார்த்து, நீரும் எனக்குத் துன்பம் செய்யும் காரணம் தெரியவில்லையே! நீங்கள் 'உபசாரம்' என்ற பெயரால் எனக்குப் புரியும் துன்பத்தைச் சற்று நேரம் நிறுத்த மாட்டீர்களா? வேண்டாம்; வேண்டாம்; தயவு செய்து நிறுத்துங்கள்.

முடியாதா? சரி; சொல்வது யார் தெரியுமா? நானே சொல்கிறேன். அரசன். அரசன் சொல்லைக் கேளாவிடில் என்ன நடக்குமென்பது தெரியாதா? என் பேச்சைக் கேட்க மாட்டீர்களா? சாமரம் ஆலவட்டம் மயில் விசிறி வெட்டிவேர் விசிறி முதலான பாத்திரங்களால் உருத்தெரியா வொருவகை நெருப்பை வாரி என்மேல் வீசுவதை நிறுத்த மாட்டீர்களா? நிறுத்தாவிடில் தக்க தண்டனை கிடைக்கும்!" என்றெல்லாம் பலவாறுகப் பாங்கியர்களைக் கோபித்து வைதும், மன மாறுபாட்டால் ஏதேதோ பிதற்றியும் வருந்துவன்.

பிறகு, தன்னெதிரில் வாசவாம்பிகையின் உருவெளித் தோற்றத்தைக் கண்டு, " வாசவீ! நீ எனது கஷ்டத்தைச் சற்றுங் தவிர்க்க மாட்டாயா? நின் மனம் சற்றும் இரங்காதா? என் முன்பு பொற்சிலேபோலப் பொற்புடன் தோன்றி, எனை தறிவையே கலக்கி விட்டுக் கடிதினில் மறைந்தனை. உனைக் கண்ட அந்த க்ஷணமே எனது முடிப்பரிய வேட்கையினுல் நின துருவை என் இருகட்டுணை கொண் டிதயத் தெழுதினன். அதன்பின் எவ்வளவோ பெண்மணிகளைக் காணவும் வார்த்தையாடவும் நேர்ந்த காலத்தினும் உனது உருவந் தவிர வேறு உருவங்கள் என் கட்புலனுக்குப் படுவதே யில்லை. ' மின்னலைக் கண்டவர் வேறு பொருளைக் காணர் ' என்பது அனுபவ மல்லவா? எங்கு பார்க்கினும் நின் னுருவாகவே தோன்றும்படி நீ புரியும் ஜாலமே ஜாலம்! நினது சாகச லீலைகளை யாராலறிந்துணர இயலும்? நின் திறன்களைக் காட்டுதல் பிறகு ஆகட்டும்; ' உண்டோ? இலையோ? ' ' அகத்ததோ ? புறத்ததோ? ' என அறிய முடியா நிலையிலுள்ள என தாவியை நீங்காது நிற்கச் செய்வது நின் பொறுப்பு. வீணை என் உடலை விட்டு ஆவி பிரிகின்றதே! இது உனக்குச் சம்மதந்தானு? யான் இவ்வாறு எமாற்ற மடைய நீ பார்த்துக் கொண்டே வாளா விருப்பது நின் தண்ணளிக் கழகா? உன் அழகுக் கேற்றதோர் அருங்குணம் உன்னிடம் அணுவளவு மில்லையா ? எழிலுக்கேற்ற ஈரமனமும் இரக்கப் பான்மையும் எள்ளளவும் இல்லையா ? மன்னுயிர் காத்திடும் மாண்பும், தயையுடன் புரக்குந் தண்ணளியும், சுந்தர மிகுந்த உன்னிடம் தோன்றுவதே யில்லையா? கனின்மிகுந் தொளிரும் நின் கண்ணேக்கதனிற் கருணையுங் கடாக்ஷமுங் கடுகளவுகூடக் காணமுடியாதா ? நீங்குறும் எனது உயிரை நிறுத்தவேண்டுமென நின் இதயத்தனில் நீ நினைப்பது மிலையா?" என எண்ணி எண்ணி எக்கம் மிகுந்து வருந்தியும்,

உருவெளித் தோற்றம்

அவ் வாசவியின் அழகிய முகத்திற் கொப்பாயும், நறுங்கனியொத்த உருவ முடைத்தாயும், விளைகாம விதைக்கு எருவாயு மிருந்து, வெண்ணிலவு பொழியும் விண்மதியைக் கண்டு, " நீயாவது தனியே கவலுறுமெனக் குறவாக மாட்டாயா ? " எனக் கதறியும்,

பலவாறு வருந்தல்.

" காரணமின்றிக் கனற் கிரணங்களால் தகித்து வெதுப்புங் கொடிய னை உனக்குத்துணைபுரிந்து வெற்றிமாலைசூடுங் காமனுங் கொடியன்; உனக்குப் புலராத பேரிரவைக் கொடுத்து உலாவச் செய்து, தான் விரைவில் வராது தாமதம் செய்துகொண்டு இருக்கும் கதிரவனுங் கொடியன் என்பதை இப்போதுதான் நன்கு உணரலானேன் " என்றும்,

" ஊழிக்காலம் பலவும் சேர்ந்து இற்றைய ஓரிரவாக மாறி யுளது போலன்றே தோன்றுகின்றது ? கோழிகளின் குரல் அடை பட்டுப் போய்விட்டதா ? ஆழியானது எக்காலத்தும் ஒரு கணப் போதேனுங் கண்டுயில்கொள்ளாது கொல்லோ ? " என்றும் வெகு வாகப் பேசி, உளறிப் பிதற்றிக்கொண்டு, வெண் மதியங் கான்ற வெயிலால் உடலு முருகி, உள்ளு முருகி, அகமு முருகி, அனைத்து முருகி, ஒன்றுந் தோன்றாது மலரணைமீதிற் சாய்ந்தனன்.

பொழுது புலர்தல்.

பொதுமகளிர் தம் உள்ளத்தை யொத்த இராக்காலங் கழிந்து அருணோதயமாகவும், இருள் சற்று மறைந்தது. அரண்மனையெங்கும் ஆரவாரம் உண்டாயது. ஸ்நானம் பூஜை ஜெபம் தபம் த்யானம் தேகாப் யாசம் யோகாப்யாசம் சாஸ்த்ராப்யாசம் முதலியன புரிபவரும், பல்லாண்டு பள்ளி யெழுச்சி முதலியன பாடுபவரும், வாத்தியக்காரர் களும் பெருந் துழனி யெழுப்பலாயினர். " சூரியன் மறைந்தது முதற்கொண்டு இதுவரை எத்தனை ஊழிகள் சென்றனவோ ? இன்னும் எவ்வளவு காலம் சென்று பொழுது விடியும் ? " எனத் தோழியரை அரசன் கேட்க, " இதோ வெகு சீக்கிரத்தில் விடிந்து விடும் " என அவர்கள் விடை யிறுத்தனர். உடனே கோழிகள் கூப்பிட்டுக் குரல் காட்டின. காமன் போரும், வேலியினொளியும், நிலவின் ஒளியும், மதியின் வெம்மையும், இருளின் கொடுமையும், குமுத மலர்ச்சியும் யாவும் அடங்கின.

பூமாதேவி காட்டும் குரலொலி போல வரி தடாகம் முதலிய பெரு நீர் நிலைகளிலே ஆங்காங்குள்ள காலைச்சங்கங்கள் துயில்நீங்கித் தெளிந்து முழங்கலாயின. கரிக் குருவிகள் ஒலிக்கலாயின.

அப்பூமடந்தையின் எழில் முக மலர்வதேபோல் நளின மலர் பலவும் மலர்ந்து, நல்லழகை நல்கி, நறுமணம் பரப்பி, நாடுவோர் மனத்திற்கு நவிலரு முவகை யீந்து நன்மை யளித்தன. சூரியன் ஆகாய வீதியின் கண்ணே அற்புதமாய்ச் செல்வான் வேண்டி, குணதிசை தன்னிற் சுடரொளி பரப்பித் தோன்றுவானுயினன். எல்லா வுயிரும் ஆனந்த கரமாய் ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் தத்தமது வேலைகளிற் கருத்துள்ளவர்களாய்க் கடவுளைத் தொழுது கவனிக்கலாயினர்.

அரசன் மனக் கலக்கம்.

அரசனது மனம் மாத்திரம் சற்றும் தெளிவின்றி, மயக்கக் கடலில் மறுபடியும் வீழ்வதும், பிறகு சற்று பொறுத்து சிறிது தெளிவதும், பின்னர் மாறுவதுமா யிருந்தது. இஃதேபோன்று, ஒவ்வொரு பகலும் ஒவ்வொரு இரவும் யுகங்களாகத் தோன்றினமையால், மிகவும் கிலேச முற்றவனுகவே யிருந்துவந்தனன். புன்னகை முதலிய மகிழ்வுக் குறிகளை ஒரு கூஷண நேரமாயினும் அவனுடைய முகத்திற் காணுதலரிது. நற்கலியில் மதியென்ன நகையிழந்த முகத்தவனுய் நரபாலனுகிய விஷ்ணுவர்த்தனன் நங்கை வாசவியிடமே தன் மனத்தை வைத்து, "நனவிலுங் கனவிலும் நாடோறும் நின்னையே நாடி வருந்தும் நாயேன்பால் உனது நன்மனம் இரக்கங் காட்டாதா?" என்று நயந்து நவின்று, நலிந்து வருந்தி நைந்திடலாயினன்.

பகல் முழுவதும் அரசன் அவைக்கண் வந்தும், மனவருத்த முற்றவனுய், அரியணைமீ தமர்ந்து திகைப்புடனிருப்பன். அதுகண்டு மந்திரிகள் பலவித மொழிகளால் தேறுதல் கூறுவர். அரசன் மனத்தைத் தெளிவுபடுத்த முயற்சிப்பர். அம் மொழிகள் ஏதோ ஒரு சில சமயங்களில் சிறு பயன் தரும். ஆனுல் பெரும்பாலும் அரசன் மனம் திருப்தியின்றி, வருத்தக் கடலில் அமிழ்ந்து வாடியவண்ணந்தானிருக்கும். யாவர் எம்மொழி கூறினும், அவை அரசன் செவிகளில் ஏறுவதே கஷ்டம். அரசன் மனே நிலையானது ஓர் உன்மத்தனுடைய நிலையை யொத்ததா யிருந்தது.



ஸ்ரீ வாசவீ விஜயம்.

ஐந்தாம் அத்தியாயம்.

ஜோதி சுயஞ் சுடராய் — மிளிர்
தூய பரம் பொருளே !
ஆதி யந்தங் கடந்த — எங்க
ளற்புத மெய்ப் பொருளே !
வேத விழுத் துணையே ! — நல்ல
வித்தகச் செங்கனி யே !
நாத முடி மிசையே — உறை
நாயகியே ! பரை யே !

வாசவி யம்பிகை யே ! — நின்னை
வாழ்த்தி வணங்கிடு வோம்;
தேசொடு கல்வி நலன் — புகழ்
செல்வ மிவை தருவாய்;
பாச வினை களைவாய்; — உன்றன்
பாத நினை வருளாய்;
தேச பக்தி கொடுப்பாய்; — உண்மை
த்யாக புத்தி யளிப்பாய்.

ஊனமி லாச்சுகந் தா; — மன
உறுதியொ டொற்றுமை தா;
ஞான வுணர்ச்சியைத் தா; — ஒளி
நாடு மறிவினைத் தா;
மோன நிலையினைத் தா; — பர
முத்தி யின்பத்தினைத் தா;
ஆனந்த வாழ்வினைத் தா; — திவ்ய
அரு ளமுதத்தினைத் தா.

ஐந்தாம் அத்தியாயம்.

[முதற் பகுதி]

*

அன்பின் மயமாகி யானந்தத் தோய்ந்துமனத்
துன்பங் களையே தொலை.

ஓம்

ஸ்ரீ வாசவீ விஜயம்.

ஐந்தாம் அத்தியாயம்.

[முதற் பகுதி.]

வீறுடன் வைசியர்கள் யோசனை புரிதல்.

வீழ்தருதீ நெறிகளிலே புகுதாம லெமதுளத்தை விரைவில் நின்ரூள் சூழ்தருநற் றுதிபரவப் பணித்திடுதி சோதனைகள் புரிதல் வேண்டாம் பாழ்படுமிப் பிறவியினை மாற்றிடுதி பவக்கடலைக் கடத்திப் பாங்காய் ஏழ்நிலைக்கு மேல்நிலையி லிருத்திடுதி யெமதுவர மீதே யன்னாய் !

வீணை கானமும் வேய்ங்குழ லோசையும் யாழ் முரன்றிடு மோர் அழகிய தொனியும் பண்களி னெலியும் பலவும் சேர்ந்து அனைவர் செவிக்கும் அமுதென வூட்டி யானந் தந்தனி லாழ்த்துந் திறன்மிகு ராஜமகேந்திர பட்டணத்தின் கண் பார்த்திபன் படும் துயர் பகரொணதாகி, அவ்வா று வளர்ந்து கொண்டிருக்க, பெனுகொண்டா நகரில் என்ன நடந்ததென்று கவனிக்கச் செல்வோம்.

குசுமனின் திருமுகம்.

குசும ஸ்ரேஷ்டியார் தனது மந்திரிகளுடன் கலந்து யோசித்து பதினெண்புரவாசிகளுக்கும் இங்கு நடந்த விவரத்தைத் தெரிவித்து அவர்கள் கூறும் அபிப்பிராயங்களை யறிய வன்னியவராகி, வாசவாம்பிகையை விஷ்ணுவர்த்தன மன்னன் மணம்புரிய விரும்பிப் பெண்ணைக் கொடுக்கும்படி கேட்டுள்ளபடியால், அவ் விஷயத்தைப்

பற்றி ஆலோசிப்பதற்காகக் கூட்டம் ஒன்று நடைபெறுவதாகவும், அதனால் இந்தப் பதினெண் பட்டணவைசியர்களும் பெனுகொண்டா விற்கு வந்து சேரவேண்டுமெனவும் திருமுகங்களனுப்பினர்.

வைசியர் வருகை.

முத்திரையுடன் வந்த திருமுகங்களைக் கண்ணுற்ற பதினெண் புர வாசிகளும் வெகு விரைவிற் புறப்பட்டுப் பெனுகொண்டாபுரிக்கு வந்து சேரலாயினர். அவ்வாறு வந்து சேர்ந்த ஆடவர் மகளிரனைவரையும், பெனுகொண்டாபுர வைசிய ப்ரமுகர்களில் முக்யஸ்தராயுள்ளவர்கள் பலரும் சென்று தக்க மரியாதையுடன் எதிர் கொண்டழைத்து வந்து, அவர்கள் தங்குவதற்குத் தகுந்த வசதிகளுடன் தனித்தனி விடுதிகள் தந்து, அவரவர்களையும் இருக்கச் செய்து உபசரித்தனர். எல்லோரும் ஸ்நானம் முடித்து உணவருந்திய பின்னர் அரசவைக்கு வந்து சேருவர். ஆங்கு நடைபெறும் ராஜ்ய விசாரணைகளையும் அறிஞர்கள் நவிலும் அறமொழிகளையும், கவிஞர்கள் அளிக்கும் இனிய கவிரஸமா மழுதையும் செவிகளார வுண்டு நினைத்து மகிழ்வர். இவ்வாறு ஒரு சில தினங்கள் கழிய அஷ்டாதச நகரத் தினரும் ஆங்கு வந்து குழுமிவிட்டனர்.

மஹாசபை கூடல்.

பின்னர் அவர்கள் யாவரோடும் அந்தப் பெனுகொண்டா வாசிகளும் தேவாலயத்தில் ஒருங்கு சேர்ந்து பேச ஒரு மகாசபையைக் கூட்டினர். அவ்வாறு கூடிய சபையின்கண் குசும ஸ்ரேஷ்டியார் எழுந்து நின்று, "பேரன்பு மிக்க அனைவர்க்கும் மென் மனமார்ந்த வந்தனம்! இப்போது சில தினங்களுக்கு முன்பு நமது பட்டணத்திற்கு விஜயம் செய்த விஷ்ணுவர்த்தன மன்னன் அடியேனது குமாரத்தியாகிய வாசவாம்பிகையை மணம் புரிய வேண்டுமென மனத்தின்கண் எண்ணி, என்னை யழைத்துப் பெண் தருமாறு வினவினன். அதுகேட்டயான் 'என்ன பதில் கூறுவது' என்றே ஒன்றும் தோன்றாது திகைக்க நேர்ந்தது. தவிரவும், தாங்கள் யாவரும் 'நமது குசும ஸ்ரேஷ்டிக்குப் புத்ரபாக்யம் கிடைக்கவேண்டும்; வெகு நாளாய்த் தீராக்குறை தீரவேண்டும்' என இறைவனை ப்ரார்த்தித்தும் அடியேனை ஆசீர்வதித்தும், புத்ரகாமேஷ்டியாகம் புரியும்படி யோசனை

கூறியும் உதவி செய்தமையான், தங்கள் ஆசீர்வாத பலத்தினாலேயே தற்காலம் எனக்குப் புத்ர சம்பத்து கிடைத்துள தாகலின், தங்கள் யோசனையைக் கலக்காமலும் தங்கள் அனுமதியைப் பெறாமலும் யான் யாதொரு பதிலும் சொல்வது சரியல்ல வென்றும் யோசனை தோன்றிற்று. ஆதலால், 'அனைவரையுங் கலந்து யோசித்துப் பதில் சொல்லி யனுப்புகின்றேன்' எனக்கூறி அரசனை நகர் சென்று சேரும்படி யனுப்பிவைத்தேன். தாங்கள் இப்போது என்ன யோசனை கூறுகின்றீரோ, அதன்படி நடந்து கொள்ளவும், மன்னனுக்குச் சொல்லி யனுப்பவும் யான் சித்தமா யிருக்கின்றேன்" எனக் கூறி முடித்தனர்.

அதுகேட்ட வைசியோத்தமர்கள் குசும ஸ்ரேஷ்டியாரை நோக்கி "சாந்தம் நிறைந்த சகோதரரே! உமது மனதில் தோன்றும் அபிப்ராயத்தை முதலில் கூறுமின். பிறகு நாங்கள் எமது மனத்திற் றோன்றும் யோசனைகளை நவில்கின்றோம். யாவருங் கலந்து முடிவுசெய்துகொள்வதற்கு அப்போதுதான் வசதியாயிருக்கும்" என்றனர்.

உடனே குசும ஸ்ரேஷ்டியார், "அன்பிற் சிறந்தொளிர் ஆன்றோர்களே! உமக்குத் தெரியாதன எதுவும் அடியேன் மனத்தில் தோன்றப் போவதில்லை. ஆயினும், தங்கள் ஆக்ஞையின்படியே தமியேன் மனத்தில் தோன்றியதைக் கூறுகின்றேன்" என்று சொல்லத் தொடங்கினர். "வித்யாபி விருத்தியிற் சிறந்த விற்பன்னர்களே! இப்போது நமது பெண்ணைக் கேட்கின்ற அரசன் வைஸ்ய வம்சஸ்தன் அல்லன். க்ஷத்ரிய மரபைச் சார்ந்தவனுள்ளான். வேறு குலத்தானகிய அவனுக்கு நமது பெண்ணைக் கொடுப்பதென்பது அவ்வளவு உசிதமாகத் தோன்றவில்லை. அவனுக்குக் கொடுக்க வேண்டுமென்றால், 'அவனுடைய குல கோத்ராதிகளுக்கும் நம்முடைய குல கோத்ராதிகளுக்கும் பொருத்தங்கள் சரியாயுள்ளனவா?' எனப் பார்த்துத் தரப்போவதில்லை. அவனுடைய பயத்திற்காக அஞ்சிக் கொடுப்பதானால், உங்கள் ஆதரவு எனக்குப் பூர்ணமாக இருக்கையில் பயம் என்ன இருக்கின்றது? ஆதலால் தாங்கள் கூறுகின்றபடி நடந்து கொள்வதற்கு யாதொரு தடையுங் கிடையாது. என் மனத்திற் றோன்றியவற்றைக் கூறினேன். இனி, தங்கள் யோசனைகளைக் கூறவேண்டும்" என்றனர்.

உடனே சிலர் எழுந்து, குசும ஸ்ரேஷ்டியாரைக் கையமர்த்தி, "எம்குல விளக்கா யொளிருங் கோமானே! நமது பெண்ணை மணக்க விரும்பிக் கேட்கின்றவன் ஒரு அரசனுகவே யிருக்கின்றன். அவனுக்கு நமது பெண்ணைத் தருவதால், நமக்கு இன்னும் உயர்வு உண்டாகுமேயன்றி, யாதொருவித தாழ்வும் உண்டாக மாட்டாது. சகல சம்பத்துக்களும் சர்வ போக பாக்கியங்களும் புகழும் பெருமையும் பெருகுமேயன்றி வேறில்லை. வீரத்துடனே பல நாடுகளிலும் வெற்றியை நிலைநாட்டும் விஷ்ணு வர்த்தன மகாராஜனுடைய சம்பந்திகள் என்று இன்னும் மேலாகிய மதிப்பு உண்டாகும். அன்றியும், அவனுக்கு நமது பெண்ணைத் தராமல் மறுத்து, இது காரணமாக அவ்வரசனை விரோதஞ் செய்து கொள்வதும் அவ்வளவு யுக்தமாக இருக்கவில்லை. 'அவன் விரும்பியதே நமது பாக்யம்' என்று எண்ணி நமது கன்னிகையை அவனுக்கு விவாகம் செய்து கொடுத்து விடுவதே நலம்" என்று நவின்றனர்.

அதுகேட்ட மற்றுஞ் சிலர் "இப்போது 'இந்த அரசன் க்ஷத்திரிய குலத்தவ' னென்றும், 'சந்த்ர வம்சஸ்த' னென்றும் எண்ணி, 'அவனுக்கு நம் பெண்ணைத் தருவதால் மதிப்பும் புகழும் குறையா' தெனவும், 'இவ்வரசனை இது காரணமாக விரோதித்துக் கொள்வது தகா' தெனவும் யோசித்து நமது பெண்ணைக் கொடுப்பது சரியென்று எமக்குத் தோன்றவில்லை. ஏனெனின், இவ்வரசனைப் போல 'உயர்குல மாந்தர்களே இனியும் மன்னர்களாயிருப்பார்கள்' என நம்புதற்கில்லை. கலியின் காரணத்தால் பல இழிகுலத்தினரும் வேந்தர்களாகலாம். உயர்குலத் துதித்த உத்தம சீலனுகிய இவ்வரசனே வேறு குலத்தில் (வைசிய மரபில்) பிறந்துள்ள நமது கன்னிகையின் மீது காதல் கொண்டு, 'மணம் புரிந்தேயாக வேண்டும்' என பலாத்காரம் செய்கிறனென்றால், இக்கலி காலத்தின் கொடுமையால் தாழ்ந்த குலத்து மன்னர்கள் நம் வகுப்பிலுதிக்கும் மங்கையரை மணக்க மனங்கொள்வது ஆச்சரியமா? இத்தகைய நற்குண வேந்தனுடைய சொல்லுக்கும் செய்கைக்கும் வற்புறுத்தற்கும் அஞ்சி நமது பெண்ணைக் கொடுப்பதென்றால், அத்தகைய கொடுங்குண வேந்தர்களின் தீமைக்கும் அஞ்சி யன்றோ நமது பெண்களை மற்றோர் காலத்திலுங் கொடுக்க நேரும்? ஆதலால்,

'இவ்வரசன் உயர் குலத்தவன்' என்றெண்ணி நமது பெண்ணைத் தந்து, நம் குலத்தின் பெருமையைக் குறைத்துக் கொள்வது நலமல்ல" என்றனர்.

இவைகளைச் செவியுற்ற குசும ஸ்ரேஷ்டியார் மீண்டும் அனைவர்க்கும் வந்தனம் செலுத்தி, "இப்போது தகுந்த யோசனைகளை எடுத்துக்கூறி எனக்கு ஒரு வழி காட்டி யுதவல் வேண்டுமாதலால், எந்த விதமாகத் தாங்கள் முடிவு கூறினும், யான் அவ்வாறு நடந்து கொள்ளுகின்றேன். ஆனதுபற்றி அரசனுக்கும் நமக்கும் வீண் விரோத மூண்டாகாமலிருக்கவும், நமது பெண்ணையும் அவன் மணக்காமல் விடுக்கவும் ஒரு நல்ல யோசனை கூறியருளுங்கள்" என்று கூறினர்.

"நமது எண்ணத்துக்குக் குறைவு வராமலும், நமக்கும் அரசனுக்கும் வீண் மனஸ்தாபம் உண்டாகாமலும், நமது பெண்ணுக்கும், நமது குலத்தினர்க்கும், நமது பத்தொன்பது பட்டணங்கட்கும், ஸ்தாவர ஜங்கம சொத்துக்கட்கும், நமது ஆளுகைக் குட்பட்ட உயிர் வர்க்கங் கட்கும், பயிர்பச்சைகட்கும், யாதொருவித தீங்கும் சம்பவியாமலும், இருப்பதற்குத் தகுந்த சாம பேத தான தண்டாதி யுபாயங்களால் காத்துக் கொள்வது நலமேயன்றி, அனுவசியமாக ஒருவர்க் கொருவர் குரோதம் விளைத்துக் கொள்ளலாகாது" என்று மற்றும் சிலர் மொழிந்தனர்.

பாலர்க்கும் பார்த்திபர்க்கும் கண், முன் காணும் பொருள்களை வேண்டுமென விரும்பி இச்சிப்பதும், அவை தம் பார்வையை விட்டகன்றதும் அவற்றினை மறந்து விடுவதும் ஆகிய பழக்கமுண்டு. ஆகையால், நம்மில் ஒரு சிலர் அரசனிருக்குமிடம் சேர்ந்து, "நமது பெண்ணைப்பற்றியுள்ள அவனது தற்கால மனோ நிலை எவ்வாறிருக்கின்ற தென்பதைத் தெரிந்துகொண்டு, அதற்குத் தக்கவாறு பின்பு யோசித்துக்கொள்வது உசிதம்" என்று வேறு சிலர் புகன்றனர்.

குசும ஸ்ரேஷ்டியாரும் அவருடைய அமைச்சர்களும் 'இது நல்ல யோசனைதான்' என்று ஆமோதித்தனர்.

ருஷ்ய ஸ்ருங்க:, அகஸ்த்யஸ, பிங்களஸ, ஆஸ்வலாயன: (ஆச்சாயன:), சுந்தரஹ, குத்ஸ: (மஹாதேஜ), நாரத:

ஓரு சிலரை அரசனிடம் அனுப்பல்.

(உத்தமோஜாஹ), பாவன:, கௌசிக:, காண்வா யஸஹ, கௌன்தேய: (காம்யக:), கௌதம:, காஸ்யப:, பௌலஸ்த்யஸ, கௌண்டின்யஸ, ஜதுகர்ணஸ, சக்ரபாணிஸ, ஜாரத்கார:, ஸதக் குமார: (மாண்டவ்ய:, மஹாஸேன:), சாண்டில்ய: (தும்புர:), ஸௌ தீகூஷ்ண:, மரீசிஹி, க்ருஷ்ண: (கார்ஷ்ண:), மௌத்கல்யஸஹ, பாராசர்யஸ, த்ரிஜடஹ, சுகாஞ்சனஹ, கார்கயஹ, ப்ருஹதஸ்வஹ, பாரத்வாஜஹ, சுவர்ண: (போதாயன:), மைத்ரேயஸ, மானவஹ (மூனிராஜஹ), வரதந்துஹ (கபிலாசார்யஹ), மார்க்கண்டேயஸ, ஔலவித்யஹ (பிசாபர்ப்பஹ), ஆத்ரேயஸ, ஸாம்வர்த்தகஹ, வருணஹ (வைரோஹித்ய:), வாசிஷ்ட:, மாந்த பால:, ஸ்ரீவத்சஸ, ஷாகல்யஹ கோத்ரஸ்தர்களாய், சாஸ்த்ர ப்ரஜ்ஞான முள்ளவர் களாய், சபையைக் கண்டஞ்சாதவர்களாய், பேசும் முறையிற் பெருந்திறன் படைத்தவர்களாய், மிக்க நயமுடன் வார்த்தையாடி காரியத்தைச் சாதிக்கக்கூடியவர்களாய், நியாய முறையிற் சற்றும் பிசகாது நடக்கும் நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்தவர்களாய், அன்பும் அறனும் அமைந்து பண்பும் பயனும் வாய்ந்த இல்லற வாழ்வினை இனிது நடாத்தும் இயல்புடையோர்களாய், உத்தம சீலர்களாயுள்ள வாலிபர்கள் ஐம்பதின்மர் உடனே எழுந்து, "நாங்கள் அரசனுடைய நகர் சென்று, அவ்வரசனிடம் நேரிற் சென்று இதமுறப் பேசியோ, அல்லது அவனுடைய அமைச்சர் களைக் கலந்தோ, நகர் ப்ரமுகர்களைச் சந்தித்துப் பேசியோ, விலை யுயர்ந்த பொருள்களைப் பரிசாகத் தந்தோ, உபாயத்திறற் கலந்து வார்த்தையாடியோ, எவ்வகையானும் அவ்வேந்தனின் தற்கால மனோ நிலையை அறிந்துகொண்டு வந்து சேருகின்றோம்; எமக்கு ஆசி கூறி உத்தரவு கொடுத்தனுப்புங்கள்" என்று குசுமஸ்ரேஷ்டி யாரையும் சபையோர்களையும் கேட்டுக்கொண்டனர். அவ்வாறே சபையோர்களும் ஆலோசனை செய்து, "நல்லது நீவிர் சுகமாய்ச் சென்று அரசன் மனோ நிலையை அறிந்து கொண்டு செவ்வனே வந்து சேருங்கள்" என்று ஆசீர்வதித்து விடை கொடுத் தனுப்பினர்.

" செல்பவர்கள் திரும்பவும் பெனுகொண்டாவிற்கு வந்து பதில் கூறியபின்பு அதற்குத் தக்கபடி யோசனைகள் செய்துக்கொள் வோம்; இனி அடுத்தமுறை சபை கூடி இது விஷயத்தை ஆலோசிக்கிறபரியந்தம் யாவரும் இந் நகரிலேயே இருக்கவேண்டும் " என்று கூறப்பெற்று, அத்துடன் அன்றைய சபை கலைவுற்றது.

நகரத்தார் யாவரும் தத்தமது இல்லம் சேர்ந்தனர். ஏனைய ரெல்லாந் தத்தமது விடுதியை யடைந்தனர். இவ்வாறு ஒருவித சந் தர்ப்பம் நேர்ந்ததானது, அனைவருடைய மனத்தையும் கலக்கிக் கொண்டே இருந்தது. " நமது குலத்திற்கு ஒருவித மாசும் ஏற்படு தல் கூடாது " என்றும், " அரசனிடத்தில் நமக்கு அபாண்டமாக விரோதம் நேருதல் கூடாது " என்றும், " எல்லாவற்றிற்கும் இறை வன்தான் துணை புரியவேண்டும் " என்றும், " வெகு நாட்களாகத் தவம் செய்து இப் புத்ரப் பேற்றையடைந்த குசும ஸ்ரேஷ்டியார்க்கு இன்னும் இத்தகைய ஒரு கலவரம் சம்பவிப்பது தகுமா ?" என்றும், அவரவர்கள் செய்த வினைப் பயனை அவரவர்தானே அனுபவித்தல் வேண்டும்; அதைத் தடுக்க எவராலாகும் ? " என்றும், " தீராக் குறைக்குத் தெய்வந்தான் துணை " என்றும், " இப் புத்ரச் செல்வத் தைத் தந்து காத்த இறைவன் இச் சமயத்தில் மட்டும் காப்பாற்றுமற் போவானே ? " என்றும், " அவன் அவ்வாறு காக்காவிடில் அவனது பெருங் கருணைத்தன்மைதான் என்னவாகும் ? உண்மை யன்பர்க்கு உறுதுயரகற்றும் உத்தமனன்றே அவன் ? ஆதலால், எவ்வாற்றி னும் காத்தே தீருவன் " என்றும், " கடவுளை நம்பினோர் கைவிடப் படார்; இது சத்ய வார்த்தை யாயிற்றே " என்றும் பலவாறுகச் சிந்தித்தும், எல்லாம் வல்ல இறைவனை வந்தித்தும், அநேக விதமாக யோசித்தும், பகவான் அருளைப் பிரார்த்தித்தும், அரசன் நகர் நோக் கிச் செல்பவர்களைப்பற்றி நினைத்தும், " அவர்கள் செவ்வனே திரும்பி வந்து நல்ல பதிலைக் கூறவேண்டும். நம் குலப் பண்டைப் பெருமை குறையா திருக்கவேண்டும் " என்று மொழிந்தும் நகர மெங்கும் இதே நினைவுடனிருக்க,

ராஜ மகேந்த்ர புரத்திற்குப் புறப்பட்ட வைஸ்ய வாலிப சீலர் கள் ப்ரயாணக் கோலமாகி, தேவாலயம் சென்று, ஆங்கு அற்புதக்

கோலத்துடன் எழுந்தருளியிருக்கும் எம் பெருமானின் இணையடியிறைஞ்சி,

" பலஷுல கங்களைக் காப்பாற்று கின்ற பரம்பொருளே !
நிலமிசை யேயர சாள் விஷ்ணு வர்த்தனன் நீள்நகரில்
சிலமொழி கேட்டுமன் னன்றனெண் ணத்தைத் தெரிந்துகொண்டு
நலமுட னேயிவண் மீண்டிட வோர்வரம் நல்குகவே "

என ஏத்தித் துதித்து, வாழ்த்தி வழுத்தி, வணங்கிப் பணிந்து, விடை பெற்றுக்கொண்டு, தத்தமது வாகனங்களி லிவர்ந்து ப்ரயாண மாயினர்.

ராஜமகேந்த்ரபுரத்தைச்சார்ந்த சாரங்கதரா பர்வதமும், மஹிஷாசுர மர்த்தனி யாலயமும்.



பொறையென்னுங் குன்றேறிப் பூவுலகில் ஞான, நிறைவே பெறல்நன் னெறி.

Photograph by Veenus Studio, Rajahmundry.

ஐந்தாம் அத்தியாயம்.

[இரண்டாம் பகுதி.]

*

உலகக் கவலையொழித் தோயா நினைவற்
றலகில் சுகக்கடலி லாழ்.

ஓம்

ஸ்ரீ வாசவீ விஜயம்.

ஐந்தாம் அத்தியாயம்.

[இரண்டாம் பகுதி.]

வைசியர்கள் மன்னனிடம் வாதுசெய்திடுதல்.

வைசிய யுவர்கள் ராஜமஹேந்திரம் சேர்தல்.

வைசுவ தேவ க்ரியையை வளமுற வோம்பி வைகலும் நடாத்தும் வாட்டமில் மனத்து வைஸ்ய வாலிபர்கள் ஐம்பதின்மரும் ஆண்டவன் அருளையே அகமுற நினைந்து புறப் பட்டுச் சென்று, இடையிடையே யுள்ள புண்ய தீர்த்தங்களில் நீராடியும், திவ்ய க்ஷேத்ரங்களில் உள்ள அருட்டிரு மூர்த்திகளை வழிபட்டு வணங்கித் திருவருள் பெற்றுக்கொண்டும், தபோ வனங்களிற் செல்கையில், ஆங்காங்கு (தக்க ஆசனங்களி லமர்ந்து யோகாக்னியை யெழுப்பி ஞானஸ்வரூபியா யிருந்து உலகை மறந்து உத்தமோத்தமமாகிய ஒப்பிலா ப்ரம்ம ஸ்வரூபத்தை திவ்யமாய்த் தரிசித்து அளவிலா ஆனந்தம் அனுபவித்துக் கொண்டு) விளங்கும்படியான மகா தபஸ்விகளையும், பல மகான்களையும் கண்டு நேத்ரானந்தமடைந்து, அவர்களைச் சேவித்து, அவர்களது திவ்ய மங்கள ஆசீர்வசனங்களைப் பெற்றுக்கொண்டும் தாங்கள் கருதிய ராஜமகேந்திரா புரம் சென்று சேர்ந்தார்கள்.

அரண்மனை அணுகல்.

அந்த க்ஷேத்ரத்தின் கண்ணே எழிலுடன் விளங்கும் பத்ம மலை யென்கிற பர்வதத்தின் மீது திருக்கோயில் கொண்டு திவ்யானந்தமாய் வீற்றிருந்தருளி, வேண்டிய பக்தர்கட் கநுக்ரகம் புரியும் அருட்டிரு வள்ளலாகிய ஸ்ரீ மார்க்கண்டேசுவர ஸ்வாமியைத் தரிசித்து வணங்கி, ஆலயத்தைப் பஞ்சாவரண வலம் வந்து, திருவாயிலின் முன்னர் நின்று, அஷ்டாங்க பஞ்சாங்க முறைப்படி நமஸ்கரித்து, உட்சென்று, பேரன்போடும் ஸ்தோத்தரித்து, "ஸ்வாமீ! அடியேங்கள் அரசனிடம் சென்று வார்த்தையாடி ஜெயத்துடன் திரும்பி எமது பெனுகொண்டா நகர் சென்று சேருதற்கு அருள் புரிய வேண்டும்" எனப் பலவாறு ப்ரார்த்தித்துக் கொண்டு, பின்னர், அந்நகரைச் சுற்றிப் பார்த்து ஆங்காங்குள்ள விசித்ர விநோத அலங்காரங்கள் யாவற்றையும் கண்டு களித்து, உன்னத எழிலுடனும், வெகு உல்லாசத்துடனும் பொலியும் ராஜ அரண்மனையை அணுகினர்.

அரசனைக் கெய்தல்.

உடனே அங்கிருந்த வாயிற் காவலர்கள் மூலமாய் வைஸ்ய யுவர்களின் வருகையை யுணர்ந்த விஷ்ணுவர்த்தன மன்னன் மகா சந்துஷ்டி யுற்றவனாகி, வாசவாம்பிகையே எதிர்வரக் கண்டவன் போல மன மிக மகிழ்ந்து, அவர்களைத் தக்க மரியாதைகளுடன் விரைவில் அழைத்துவரும்படி மந்திரி ப்ரதானிகளிடமும் சேவகர்களிடமும் சொல்லியனுப்பி, தானும் கடிதிலெழுந்து, அவர்களை வெகு மரியாதைகளோடும் உபசாரங்களோடும் பண்புடன் வரவேற்று, பல வகையான ரத்னாங்க ளிழைத்த ஸ்வர்ண கசிதமான பல ஆசனங்கள் கொடுத்து அமரச் செய்து, சந்தன புஷ்ப தாம்பூலாதிகள் வழங்கி, குசல ப்ரஸ்னங்கள் யாவும் வெகு விநயத்துடனும் வினவினன்.

அவைத் திறன் காணல்.

அப்படி அரசன் அளித்த அரியாசனங்களில் அமர்ந்து, க்ஷேம லாபங்களைப் பற்றி உரையாடிக் கொண்டே, நமது வைசிய ப்ரமுகர்கள் அம்மன்னனின் அவைக்களத்தைச் சற்று கவனிக்க லாயினர். அவ்வேந்தனின் ஆணைக்கஞ்சி, அநேக சிற்றரசர்கள் சாமரை வீசிக்கொண்டும், இரத்ன விசிறிகள் விசிறிக் கொண்டும், மயிற் பீலிகள் ஆலவட்டங்கள் வெட்டிவேர் விசிறிகள்

வீசிக்கொண்டும், வெண் கொற்றக்குடை தாங்கிக் கொண்டும், அடைப்பை யேந்தி அருகினில் நின்றுகொண்டும், ஆக்ஞையை எதிர் நோக்கியபடியே அண்மையில் நின்றுகொண்டு இருப்பதையும்,

அதிரதர், மகாரதர், சமரதர், அர்த்த ரதர், தேர்வீரர், யானைவீரர், பரிக்காரர், வேவுகாரர், மந்திரிகள், தந்திரிகள், தள கர்த்தர்கள், சேனபதிகள், தனுதிகாரிகள், தூதர்கள், ஒற்றர்கள், சாரணர்கள், சகல சாஸ்த்ர விற்பன்னர்கள், வேத வேதியர்கள், ஆகம சித்தாந்திகள், பல கலாக்ஞான பண்டித சிரோமணிகள், வித்வத் கோஷ்டிகள், சிற்ப சாஸ்த்ரிகள், ஜோதிஷ சாஸ்த்ரிகள், கணித சாஸ்த்ரிகள், பூகோள சாஸ்த்ரிகள், தத்வ சாஸ்த்ரிகள், பௌதிக சாஸ்த்ரிகள், விஞ்ஞான சாஸ்த்ரிகள், மல்யுத்த வீரர்கள், யோகாப்யாசிகள், ஞானசாரியர்கள், சாந்தகுண சீலர்கள்,

தயாசிந்துவாய் சத்வ ஸ்வரூபராய் விளங்கும் உத்தமர்கள், யோசனையிற் சிறந்த யுவஜன வீரர்கள், பொதுப் பணியிற் சிறந்த புண்ணியர்கள், சேவையிற் சிறந்த த்யாகிகள், பக்தியிற் சிறந்த பான்மையர்கள், ஒழுக்கங் குன்ரு உத்தமர்கள், நீதி வழுவா நெறியி னர்கள், மெய்ம்மை தவரு மேலோர்கள், வேள்வி வளர்க்கும் விழுமியர்கள், நாட்டைப் பேணும் நல்லோர்கள், குடிகளைக் காத்துக் குறைகளைத் தவிர்க்குங் கோதிலாக் குணமுடைக் குரிசில்கள், புண் ணியமே புரி பூமான்கள், செல்வர்களாகிய சீமான்கள், அறம் பல வளர்க்கும் ஆன்ரோர்கள், மாசொன்றில்லா மாண்பினர்கள், வரையா தளிக்கும் வள்ளல்கள், அனைத்தும் உணர்ந்த அறிஞர்கள், காவியம் பலவுங் கருத்துட னேதிச் செம்மையா யொழுகுஞ் சீரியர்கள், சீர் திருத்தஞ் செயுஞ் செம்மல்கள், கவிதைகள் புனையுங் கலைஞர்கள், ஓவியத்திறன்முகு முரவோர்கள், சிற்பக் கலையினில் தேர்ந்தோர்கள், மேலாம் நூல் பயில் மேதையர்கள், சத் சங்கஞ்சார் சான்ரோர்கள், பொய்யறு நூல்வரை புலவோர்கள், ப்ரசங்க மழைபொழி ப்ரபன் னர்கள், சொன்மாரி சொரி தூயோர்கள், வாக் நயமிகுந்த வண்மை யினர், தர்க்கம் வியாகரணம் வேதாந்தம் மீமாம்ஸம் என்னும் சாஸ்த் ரங்களில் வல்ல சான்ரோர்கள், சபையை ரஞ்சிக்கச் செய்யும் சாமர்த் யர்கள் முதலாய பலரும் நெருங்கி நிறைந்திருப்பதும்,

சங்கீத சாமர்த்தியம் வாய்ந்த வித்வான்களும் பாடகர்களும் யாழ் வீணை புல்லாங்குழல் முதலிய இசைக் கருவிகளைக்கொண்டு தத்தமது திறன்களைக் காண்பித்து வேந்தனையும் அவையையும் அக மகிழ்விப்பதும், பரதநாட்டியத்தில் வல்லுநர்களாகிய கணிகை மாதர் கள் அநேகர் வந்து அவ்வவர்களது அருந்திறல் யாவும் அரசவைக்கு எடுத்து விளக்கி ராக பாவ தாளங்களில் ஒரு சிறிதும் பிறழாது அதி யற்புதமாக நடனம் புரிவதும், சகலவித வாத்ய கோஷங்களும் தாம் தாமென்று முழங்கி யதிர்வதும் ஆகிய அனைத்தும் கண்டு களித்து, தாங்கள் வேந்தற்கெனக் கொணர்ந்த வெகுமதிகளை விநயத்துடனும் விஷ்ணுவர்த்தன மன்னனுக்கு அளித்து மன மகிழ்வுடன் வார்த்தை யாடிக்கொண்டிருந்தனர்.

மன்னனின் மனோவேகம்.

"இவர்கள் கல்யாணத்திற்கு நாள் பார்த்து நிச்சயித்துக் கொண்டு, நம்மிடம் விபரத்தைச் சொல்லி, நம்மை அழைத்துச் செல்வதற்காகவே இங்கு வந்திருப் பார்கள்" என்று மன்னனவன், தனக்கு வாசவி மீதிருந்த ப்ரேமை காரணத்தினால் மனக்கோட்டை கட்டியவனாகி, அவர்களைப்பார்த்து, "எமக்கு சம்பந்திகளாகவும், உறவினர்களாகவும், எம்மோடொத்த பண்பினர்களாக விளங்கும் வைசிய ஸ்ரேஷ்டர்களே! நீங்கள் செய்த தபோபலத்தின் மகிமை யினால்தான் உங்களுக்கு எமது சம்பந்தமும், உமது பெண்ணுக்கு எமது அரண்மனையில் வாசமும், தேவேந்திர போகத்தைப் போன்ற சகல சௌபாக்கியங்களினிடையே ஓங்கி வளரும் இன்பமும், ஆனந்தமும், உமது குலத்திற்கே ஒரு சிறந்த கீர்த்தியும், யாவும் உண்டாகவேண்டிய சமயம் வெகு சீக்கிரமாக வந்து சேர்ந்துள்ளது. அடியேனுடைய மனமும் எண்ணிய நற்பொருளை யினிதடைந்து, இயம்பொணா மகிழ்வுடன் இன்பந் துய்த்து, என்றும் பொன்ரு இறும்பூ தெய்தி, இத்தரை மீதே எழிலுடன் பொலிந்து, செழிக்குங் காலமுஞ் சீக்கிரத்திலிருப்பதனால்தான், தாங்களே எனது க்ரஹத்தை நாடிக்கிளம்பி வந்தீர்கள். உமது குலப் புதல்வி இவ் வரியணை மீதமர்ந்து விளங்கும் மகாராணி யாகத் தக்க மங்கையாயிருப்பது எத்தகைய மேன்மை பாருங்கள்! அப்பெண்மணியாலல்லவா உமது மரபிற்கு சிறந்த ஸ்ரேயஸ் உண்டாகப்போகிறது?

தங்கப் பதுமையே உயிர் பெற்றுச் சார்ந்ததுபோலவும், புண்ணியத் திரளே யோருருக்கொண்டு போந்தது போலவும், வனப்பெலாந் திரண்டொரு வனிதையின் வடிவாய் வந்ததே போலவும், குலத்தவ மணித்துங் கூடியொன்றுகியோர் கொம்பனை யுருக் கொடு குறுகியது போலவும், உத்தம சாமுத்திகா லக்ஷணங்கள் அத்தனையும் பொருந்திய சற்குணவதியாகிய வாசவி உற்பவித்தருளிய உங்கள் மரபின் சீர்த்திகள் என்னால் உரைத்தற்பாலதோ? அத்தகைய புத்திரியைப் பெற்றெடுத்த குசுமஸ்ரேஷ்டியாரின் தவப்பயன் தான் என்னே!" என்று பலவாறுக விசேஷித்துக்கூறி,

"இதற்கு முன் யான் தங்கள் நகருக்கு வந்தபோது கூறியது போல, தங்கள் மரபின் ஆதரவும் அனுமதியும் கிடைக்கப் பெற்றிருக்குமென்பதில் தடை யொன்றுமில்லை. இத்தகைய மகத்தான சம்பந்தம் கிடைப்பதைப் பற்றி யார்தான் ஆக்ஷேபனை சொல்வார்கள்? எல்லோரும் 'சரி' யென்று ஒப்புக்கொண்டபடியால் தான் தாங்கள் இவ்வாறு மணி நாடி வரவும், எனதுள்ளம் பூரித்துப் பொங்குங் கடல் போலக் குதூகலித்து, சரீரமுழுதும் புளகமடைந்து, ஆனந்த சாகரத்தி லழுந்தி, அளவிடற்கரிய மனக்களிப்போடும் வார்த்தையாடிக் கொண்டிருக்கவும் நேர்ந்தது. ஆகையால் நம் சமஸ்தான புரோகிதரை யழைத்து, நல்ல நாள் வாரம் திதி நட்சத்திரம் யோகம் கரணம் லக்னம் ஆகிய சர்வாம்சங்களும் நன்கு பொருந்தியுள்ள சுபமுகூர்த்தம் பார்த்து நிர்ணயம் செய்து கொள்ளலாம். ஆனால், இதுவரை தாங்கள் ஒன்றும் உரையாது வாளா விருப்பதைப் பார்த்தால், தாங்களே கல்யாணத்திற்கேற்ற சுபதினம் பார்த்து நிச்சயித்துக்கொண்டு, அவ்விஷயத்தை அடியேனுக்குத் தெரிவிப்பான் வேண்டியே இங்ஙன் விஜயம் செய்துளீர் போலத் தோன்றுகின்றது. தாங்கள் கூறுகின்ற தினம் மிக்க மேலான ஆராய்ச்சியாளர்களைக் கொண்டே நிச்சயிக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஏனெனில், பெண்ணை மணஞ்செய்து கொடுப்பவர்கள், மாப்பிள்ளை வீட்டார் ஆராய்ச்சி செய்வதைவிட அதிக சிரத்தையுடன் தக்க முறையில் ஆராய்ந்து பார்த்துத்தான் எந்தக் காரியத்தையும் செய்வது வழக்கம். அதிலும், தங்கள் குலத்தில் வித்வாம்சர்களும், மகா பண்டித கோஷ்டிகளும், விசேஷமாக இருக்கின்றமையான், தாங்கள் நிச்சயித்த

முகூர்த்தம் மிகவும் உசிதமானதாகவே யிருக்கும். ஆதலால், தாங்கள் நிச்சயித்திருக்கும் நாளில் மணம் புரிந்து கொள்வதைப்பற்றி, யான் எவ்வித தடையுங் கூறமாட்டேன் என்று நம்பி, எக்காரியத்திற்கும் முன்னெச்சரிக்கையான யோசனைகளுடன் வேலைகளைச் செய்து முடிக்கக் கூடிய தன்மை வாய்ந்த குலத்திலுதித்த தக்கோர்களாகிய தாங்கள், அத்திருமண வைபவத்திற்காக முன்னரே தொடங்கிச் செய்யவேண்டிய நகரலங்காரம் செயல், மணப்பந்தர் ஜோடித்தல் முதலியவற்றைச் செய்து வைக்கும்படி சகல ஏற்பாடுகளும் செய்துவிட்டும் வந்திருக்கலாம். அப்படியிருப்பின், தங்களுக்கு இத்திருமண சம்பந்தமாக இங்கேயுள்ள எவ்வெப்பொருள்கள் தேவையெனினும், ஏராளமாக எல்லாப் பண்டங்களும் தாராளமாக எடுத்துச் செல்லுங்கள். இத்தகைய முக்ய சந்தர்ப்பங்களுக்கு உபயோகப்படாமல் என்னிடத்தில் எப்பொருள்களிருந்துதான் யாது பயன்? ஆதலால் தாங்கள் சற்றும் மனத் தயக்கமின்றி தாராளமாகப் பெற்றுச் செல்லலாம்" என்று கூறிவிட்டு, மந்திரியை யழைத்து, "இவர்களுக்கு யானைகள் குதிரைகள் ஒட்டகங்கள் பசுக்கூட்டங்கள் ரதங்கள் காலாட்கள் வஸ்த்ரங்கள் ஆபரணங்கள் சிவிகைகள் ஊர்திகள் பாத்திரங்கள் முதலான எவ்வகைப் பொருள்களாயினும், எவ்வளவு கேட்டபோதிலும், அவர்கள் விரும்புவனயாவும் யாதொருவித தடையுமின்றி உடனே பெறுகொண்டாபுரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்" என்று கட்டளையிட்டனன்.

யாதொரு வித குறுக்கு யோசனையு மின்றி, மனக் கோட்டையை வெகு விஸ்தாரமாகக் கட்டிக் கொண்டே சென்ற அரசனுடைய வார்த்தைகள் யாவும், நமது வைஸ்ய வீரர்களின் செவிகளில் தூஷித்துச் சென்று துன்பத்தையும், கோபத்தையும், பொறுமையையும், ஆழ்ந்த யோசனையையும், புன் சிரிப்பையும், தீர தைரியத்தையும், மனே திடத்தையும் உண்டாக்கின.

வைசியர்கள் தரும் விடை.

உடனே அவர்கள் அரசனே நோக்கி," மகாராஜனே! தாங்கள் எல்லா சிற்றரசர்களும் வணங்கத் தக்க கம்பீரமும் பெருமையும் மாண்பும் மதிப்பும் புகழும் பொலிவும் பெற்று விளங்குகின்றீர்கள். இவ்வளவு சிரேஷ்டத்வமுடைய க்ஷத்ரிய திலகராகிய தேவரீருக்கு, தேவரீரைப்

போன்ற கூத்திய புத்திரிகளாகிய யுவதிகளே இல்வாழ்க்கைக்குரிய இனிய மனைவியர்களா யிருந்தால்தான் கண்ணிரண்டு மொன் றையே காணுமாறுபோல ஒருவர்க்கொருவர் தகுந்த துணை யாக எக்காரியத்திலும் உதவி புரிந்துகொண்டு உலகோர் போற்ற உத்தம வாழ்க்கையை நடாத்தி, நற்பேரும் புகழும் பெற்று விளங்குதல் கூடும்.

அப்படியிருக்கத் தேவரீர் எமது குலப் பெண்ணை மணக்க விரும்புதல் அவ்வளவு உசிதமாக எமக்குத் தோன்றவில்லை. கூத்திய குலத்தவர்க்கும் வைசிய குலத்தவர்க்கும் (சதிபதிகளுக்கு) ஒருவர்க் கொருவர் மனம் வாக்குச் செயல்களாதி பொருத்தங்கள் யாவும் ஒத்திருப்பது அரிது.

தங்கள் குலத்தில், அழகு மிகுந்த பெண்கள், உத்தம லக்ஷணம் வாய்ந்த யுவதிகள், பலரும் புகழும் பண்பு வாய்ந் தொளிரும் பால்ய மங்கையர், சாந்த குணம் நிறைந்த சந்திர வதனியர் அநேக ரிருக்க, அவர்களில் ஒருவரை வேத விதிப்படி மணம் புரிந்து, பல்லறங் களினுஞ் சிறந்த நல்லறமாகிய இல்லற வாழ்வை இனிது நடாத்தி வருகின்ற தேவரீர்க்கு இனியொரு அழகிய கூத்திய நங்கை கிடைக் காதா? எத்தனை ஸ்திரீ ரத்னங்கள் வேண்டுமெனினும் தங்கள் குலத்திற் கிடைப்பார்கள். ஆகலான், தாங்கள் அவ்வாறு தங்கள் குலப்பெண்ணையே இனியும் மணந்து இன்பந் துய்த்து, அரசகாரியங்க ளனைத்தையும், செல்வனே கவனித்து, குடிகளை ரக்ஷித்து, சீரிய செங்கோலாட்சியை நடாத்தி, என்றும் சிறந்து நன்றே புவிமிசை பொன்றுப் புகழொடு பொலிதலே நலனும். ஆதலின் தங்கள் குலப் பெருமைக்கு மாசுண்டாகும் வண்ணம் நடவாமல்,

" ஹீனமே யான ஹுனிடை யிருக்கு
முயிரினைத் துறந்துமொண் பூணும்
மானமே புரப்ப தவனிமே லெவர்க்கும்
வரிசையுந் தோற்றமும் மரபும்;
ஞானமே யான திருவடி வுடையாய்!
ஞாலமுள் ளளவும்நிற் றலினுல்
ஈனமே யுயிருக் கியற்கையா தலினு
லென்றனன் வீமனுக் கிளையோன் "

என்னும் பாரதச் செய்யுளின் கருத்தை மனத்தே யிருத்தி, கௌரவத்துக்கு அழகல்லாத எக்காரியங்களிலும் ஈடுபடாமல், எங்கள் குலப் பெண்ணைப்பற்றிய நினைவை இனிக் கணப்போதாயினும் கனவிலும் நினையாது விடுத்து, வருணச்சிரம முறைப்படி யொழுகலே உசிதமான தென்று எங்களுக்குத் தோன்றுகிறது" என்றனர்.

விஜயஸிம்மன் விளம்பல்.

அவ்வார்த்தைகளைச் செவியுற்ற அரசனுடைய மந்திரிகளில் 'விஜய ஸிம்ஹன்' என்பவன் எழுந்து, "ஆர்ய வைஸ்ய குலத்தில் அவதரித் தொளிரும் அருங்குண சீலர்களே! எமது மன்னர், 'க்ஷத்திரிய குலத்தில் தகுந்த பெண்களில்லை' என்ற கருத்தோடு தங்கள் கன்னிகையை மணக்க விரும்பவில்லை. உங்களுடன் சம்பந்தம் செய்து உங்கள் குலத்துக்கும் ஒரு சிறந்த பெருமையையும் பாக்யத்தையும் உண்டாக்கி யுபகரித்தல் வேண்டுமென எண்ணி, உங்கள் மீதுள்ள பெருந்தயை காரணமாகவே உங்கள் பெண்ணைக் கடிமணம் புரிய விரும்புகின்றனர்" என்றான்.

மௌனி ஸ்ரேஷ்டியின் மறுமொழி.

அதுகேட்டு, வைஸ்யர்களிலே யிருந்த மவுத்கல்ய குல திலகமாகிய 'மௌனி ஸ்ரேஷ்டி' என்பவன் எழுந்து, அந்த மந்திரியைப் பார்த்து, "ஓ அமைச்சர் சிகாமணியே! தாங்கள் எம்மை இவ்வாறு பரிகசிப்பதற்குக் காரணம் தெரியவில்லை. ஏனெனில் இது வரை எந்த க்ஷத்ரியர்களாவது வைசிய குல மடந்தையை மணம் புரிந்து வாழ்ந்ததாக சுருதிகளிலேனும் ஆதார மூளதா? நீங்கள் எங்காவது கேள்விப் பட்டதுதான் உண்டா? ஒன்றுமில்லை யாதலால் நீங்கள் கூறுவதெல்லாம் வீண் யோசனையும் வீண் முயற்சியுமாகத் தோன்றுகிறதேயன்றி வேறல்ல. இத்தகைய நியாயமற்ற செயல்களில் ஈடுபட்டு, கண்டிப்பாகப் பிடிவாதம் செய்வது தங்களுடைய அரசாங்கத்தின் உயர்வுக்கும் கீர்த்திக்கும் பெருமைக்கும் கண்யத்துக்கும் தக்கதன்று. இனி இதுபோன்ற அவைசிய வார்த்தைகள் பேசிப் பொழுதுபோக்குவதில் யாதொரு பயனுமில்லை. எங்கள் பெண்ணைத் தாங்கள் மணப்பது நியாயமன்றென விடுத்து, வேறு ஒரு க்ஷத்ரியப் பெண்ணை மணப்பதே தங்கள் கண்யத்துக்குத் தகுதி" என்றனன்.

உடனே மந்திரித் தலைவன், "நல்லது; எமது யோசனையினால் உமக்கு ஏதேனும் தீங்கு நேரிடுவதாயின், உமது நியாயத்தையும் நாங்கள் யோசிக்க வேண்டுவது தான். சத்ர வம்சத்து நிருபனோடு சம்பந்தஞ் செய்ய உம்மை யாம் தூண்டி வற்புறுத்துவ தெல்லாம் உங்கள் குல க்ஷேமத்தின் பொருட்டே என்பதை நீவிர் யோசித்திலீர். க்ஷத்திரியர்கள் வைசிய குலப் பெண்ணைக் கொள்வது தகாதெனில் நாங்களன்றே பின்னிட வேண்டும்? நாங்கள் குற்றம் பாராட்டாது சிரேஷ்டமாகக் கொள்ளுகின்றபோது, நீங்கள் அதைப்பற்றி மனவருத்தம் பாராட்டி, ஆயாசப்பட்டு, எமக்கும் எடுத்துச் சொல்ல வந்துள்ளதைப் பார்த்தால் மிகவும் ஆச்சரியமாக வன்றே இருக்கிறது?" என்றான்.

வைசிய குல க்ஷேமத்திற் கெனல்.

மவுத்கல்ய குலத்திலுதித்த மற்றோரிளைஞனாகிய 'மல்லி கார்ஜுன ஸ்ரேஷ்டி' என்பவன் உடனே எழுந்து, "மதிவல்லபம் வாய்ந்த மந்திரியே! நாங்கள் அரச னுக்குப் பெண் தருவதனால், எங்களுக்கு ஏதோ கௌரவம் உண்டாகு மென்கிறீர். இப்போதில்லாத புதிய கௌரவம் அப்போது மாத்திரம் என்ன வந்து விடப் போகின்றது? அவ்வாறு உம்மிடம் சம்பந்தம் செய்து கொள்வதால், கலப்பின்றி ஸ்வயமாயிருந்துவந்த எமது குலம் அப்போது கலப்படைந்து மிச்ரமாகி, குலத்தின் பண்டைப் பெருமை மங்கி, கௌரவ ஹானியே யுண்டாகும்" என்று ஒரு சிறிதும் அஞ்சாமல் உரைத்தான்.

கௌரவ ஹானி யெனல்.

அதற்கு அமைச்சத் தலைவன் சபையைப் பார்த்து, "ஓ மகா சபையினரே! இந்த வைஸ்ய இளைஞர் சொல்லும் மொழிகள் தக்கன வன்று. எங்ஙனமோ வெனின், வருணாசிரமப் பாகுபாடுகளை விளக்கிக் கூறுவன வேதங்களாம். அவ்வேதங்களிலேயே, 'உயர்ந்த வருணத்து ஆடவன் தாழ்ந்த வருணப் பெண்ணை மணக்கலாம்' என்று விதிக்கப் பட்டிருக்கின்றது. ஆதலால் அரசன் வைசிய மங்கையை மணம் புரிவதில் தோஷமில்லை. வேதங்கள் நமனை நாடிக் கூறுமே யன்றிப் பிழைகளைக் கூறா. இவர்கள் பெண் கொடுக்கும் நியாயம்

வேதத்தில் விதி யுண் டெனல்.

வேத விரோத மன்ருகலின், இவர்களுக்குப் பேரும் புகழும் கண்ய மும் கௌரவமும் அதிகப்படு மென்பதில் ஆக்ஷேபணையில்லை" என்று சமாதானங் கூறினன்.

வேத விதியை விளக்கல்.

பின்பு, ஆத்ரேய குல திகாமணியாக விளங்கும் 'ஹரி பக்த ஸ்ரேஷ்டி' என்னும் வைசியோத்தமன் எழுந்து, "வரும்பொரு ளுரைக்க வண்மையா யிலகும் மந்திரிகளே! எந்தக் காலத்தில் எந்த அரசன் வைசியப் பெண்ணை வேத விதிப்படி மணந்திருக் கின்ருன்? தன் வருணத்திற் பெண் கிடையாதபோதும், இன்றி யமையாத அத்யாவசியம் நேருகின்ற போதுமன்ருே உயர் வருணத் தவன் தன்னிற் கீழிட்ட வருணத்துப் பெண்களை மணக்கலாம் என வேதங் கூறுகிறது? இப்போது உமது ப்ரவர்த்தகத்தில் அதற்குத் தகுந்த நியாயம் காட்டவல்லீரோ?" என்றெடுத் துரைத்தனன்.

யயாதி கதை கூறல்.

அப்போது 'விக்ரமசாலி' என்ற நாமம் வாய்ந்த மந்திரி எழுந்து, "இதற்கு முன்பு பிராமணப் பெண்ணகிய தேவயானியை 'யயாதி' என்னும் சந்த்ர குலத் தரசன் மணம் புரிந்துள்ளான். உயர்குல மாகிய பிராமண குலத்தில் க்ஷத்ரியன் பெண் கொண்டுள்ள போது, வைசிய குலத்தில் பெண் கொள்வதற்குத் தடை யாது?" என்று கூறினன்.

நாகையன் மறுத்தல்.

அதற்கு, அகஸ்திய குல தீபம் போன்ற 'நாகைய ஸ்ரேஷ்டி' என்பவன், "தேவயானி யென்னும் அவ்வந்தண மாது தன்னுயிரைக் காத்த மன்னனகிய யயாதியை யன்றி வேறு ஒருவரையும் மணந்திடுவதில்லை என உறுதி கொண்ட படியால், அப்பெண்ணின் பூர்ண அபிப்ராயத்தின் பேரில், அப்பெண்ணின் தந்தையான சுக்ராசாரியார் அன்புடனும் மணம் செய்து கொடுக்க, யயாதியு மதற்கிசைந்து மணந்தான். ஆனல், இப்போது எம் பெண்ணகிலும், எமது பெண் ணைப் பெற்ற எம்மனேராகிலும் அவ்வாறு உம்மை வற்புறுத்தவில்லை.

தவிரவும், துவாபர யுகத்து நியாயம் கலியுகத்துக் கொவ்வாது. ஆதலால் நாம் அவ்வாறு அக்கதையை யாசரிப்பது சரியல்ல" என்றுநவின்றனர்.

வீரசேனன் விளம்பல்.

இவைகள் யாவையுங் கேட்ட மந்திரியாகிய 'வீரசேனன்' என்பவன், ஐயா! வைசியப்ரபுக்களே! நீங்கள் கூறும் யோசனை போலவே, கலியுகத்துக்குத் தகுந்த படி நடந்துகொள்வதானாலும், இந்தக் கலியுகத்தில் உமது பெண்ணை எங்கள் அரச வள்ளல் விரும்பிக் கேட்கையிலேயே, "நாங்கள் வேறு குலத்தினருக்கு எக்காரணத்தை முன்னிட்டும் கொடுப்பது இயலாது" என்று கூறிவிட்டிருப்பின், அன்றைய தினமே எமது அரசர் கிட்டாப் பொருளை வெட்டென மறந்து வியாகூலமின்றி யிருந்திருப்பா ரல்லவா? தங்கள் தலைவ ராகிய குசும ஸ்ரேஷ்டியார் அந்நாளில் அவ்வாறு சொல்லி எங்களை அனுப்பாமல், "எங்கள் சமூகத்தினருக்குச் சொல்லி அவர்களைக் கலந்து யோசித்து பதில் கூறி விடுகிறேன். மற்றபடி என்னால் யாது தடையுளது?" என்று நவின்றனர். எங்கள் மன்னர் கபடு சூதின்றி, தாங்கள் இவ்வாறு ஏமாற்றி விடுவீர்க ளென்றுணராதவ ராகி, 'அப்பெண் நமக்குக் கட்டாயம் கிடைக்கும்' என்று முழு நம்பிக்கையோடும் மனப்பால் குடித்துக் கொண்டிருந்தார். நீங்கள் இத்தகைய கருத்தையுட்கொண்டு வெகு சாமர்த்திய மாகப் பேசி சமயத்தில் கைவிடுத்து இழிவான பெயர் பெறுவது உங்கள் குலத் துக்கு அகௌரவமா? அல்லது, உமது பெண்ணை ராஜாதி ராஜனுகிய எங்கள் பூபாலனுக்குத் தந்து 'ராஜ குடும்ப சம்பந்திகள்' என்று பெயருறுவது அகௌரவமா? என்பதைச் சற்றே யோசித்துப் பார்த்தால் நன்கு விளங்கும்" என்று பகர்ந்தான்.

சோமசுந்தரன் சொல்லும் மொழி.

இத்தகைய நிஷ்டூர வார்த்தைகளைக் கேட்டு மிகவுங் கோபங் கொண்டு, ஸ்ரீவத்ஸ குலச் சிரேஷ்டனுகிய 'சோமசுந்தர ஸ்ரேஷ்டி' என்பவன் விரைவில்எழுந்து, அந்த மந்திரியை நோக்கி, "நீங்கள் வீணுக எங்களிடம் நிஷ் டூரப்பட்டுக் கொள்வதில் யாதொரு பயனு மிலது. உமதுஅரசன் கேட்டபோதே, வெகு அவசரமாக 'முடியாது' என்று சொல்லி விட்டிருந்தால் அவரது

மனம் அப்போது எத்தகைய ஆயாச மடைந்திருக்கும் தெரியுமா? அவருடைய ப்ராணனே 'உண்டோ? இலையோ?' என ஐயுறத்தக்க அத்தகைய மனோவேதனையை யடைந்து சொல்லொணாத் துன்பத்துக் காளாய் விடுவர். அதனால் பலவித அசந்தர்ப்பங்களும் நேரும் என் பதை யெல்லாம் நன்குணர்ந்த எமது தலைவர் அத்தகைய பதிலைச் சொல்லி, தங்கள் அரசரது மனத்திற்குச் சற்று தேறுதலளித்து இங் கனுப்பி வைத்தார். இன்றேல், இம் மன்னர் இவ்வூருக்கு வந்து சேருவரா? அன்றியும் இவருடைய மனந்தான் எவ்வளவு வருத்தத் துக் கிடனையிருக்கும்? அவற்றையெல்லாம் நீங்கள் ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள். யாவும் வெள்ளிடை மலையெனத் தெள்ளிதிற் புலப்படும். அன்றியும், எங்கள் தலைவர் அப்போது கூறிய வார்த்தைகளில் யாது தவறுளது? "நாங்கள் எங்கள் சமூகத்தாரை யெல்லாம் கலந்து யோசித்து, அவர்களுடைய அனுமதிபெற்ற பிறகுதான் தங்களுக்குப் பதில் தெரிவிக்க இயலும்" என ஸ்பஷ்டமாகக் கூறியுள்ளார். நீங் கள், தீர்க்காலோசனை யின்றி இவ்வாறு அவசரப்பட்டு வார்த்தைகளை வீசி, வீண் மனஸ்தாபம் கொள்வது தகாது. சற்றே நிதானித்துப் பேசுங்கள்" என்றான்.

கலாதரனின் கர்ஜனை

உடனே பௌலஸ்த்ய குலோத்பவனாகிய 'கலாதர ஸ்ரேஷ்டி' என்பவன், "எக்காரணத்தை முன்னிட்டும் நாங்கள்வார்த்தை தவறி யாவது, மானக்குறைவாகவாவது நடந்துகொள்ள மாட்டோம். *நாங்கள், சத்யத்தையும் மானத்தை யும் ஆத்ம கௌரவத்தைம் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டு எங்கள் உயிரையும் 'த்ரணம்' என மதித்து அர்ப்பணம் செய்யச் சித்தமாயிருப்போம். இஃது உண்மை! உறுதி!! நிச்சயம்!!! சத்தியம்!!!! ஆதலால், தாங்கள் எம்மைக்

---

* "யானை யுடைய படைகாண்டல் முன்னினிதே;
ஊனைத்தின் றூனைப் பெருக்காமை முன்னினிதே;
கான்யாற் றடைகரை யூரினி(து); ஆங்கினிதே
மான முடையார் மகிழ்பு."
(இனியவை நாற்பது)

"இம்மையும் நன்றும் இயல்நெறியும் கைவிடா(து)
உம்மையும் நல்ல பயத்தலால் - செம்மையின்
நானங் கமழுங் கதுப்பினாய் நன்றேகாண்
மான முடையார் மகிழ்பு."
(நாலடியார்)

காரணமின்றி அலக்ஷியமாகப் பேசி, (நமக்குள்) வீண் விரோதம் செய்து கொள்வது அவ்வளவு நன்றாயில்லை. 'யாகாவாராயினும் நாகாக்க வேண்டும். அஃதின்றேல் சொல்லிழுக்குப்பட்டு சோகாப்பர்' என்பது தாயோர் கூற்று. பேசத் துணிவதிலும் எண்ணித் துணிய வேண்டும். ஆகையால் எந்தவார்த்தைகள் சொல்வதாயினும் ஆய்ந்தோய்ந்துபார்த்து நியாயமாய்ச்சொல்லுமின்! அநாவசியமாய்ப் பேசுதல் வேண்டாம்" என்று மிகவும் கம்பீரமாகக் கழறினன்.

சுமந்திரியின் சுந்தரச்சொல்

அவ்வுரைகளைச் செவியுற்ற 'சுமந்திரி' என்னும் நாமம்பூண்ட அமைச்சன் எழுந்து, "ஓ வணிகரேறே! தாங்கள் ஏன் சற்று கோபமாகக் கூறுகின்றீர்கள்? நாம் ஒருவர்க் கொருவர் சற்றும் க்ரோத மின்றி, சகஜமான முறையில் வார்த்தை யாடுதலே நலம். 'உலகிலே குடிகளை யெல்லாம் காத்து ரக்ஷிக்கின்ற வள்ளலாக விளங்கும் மன்னவன் கருணைக் கடலாகிய கடவுளின் அம்சம்' என்று ஆன்றோர் கூறுவர். அரசன் ஆக்ஞையைத் தட்டி நடப்பதும், அவர்மனம் ஆயாசப் படும்படி வார்த்தைக ளாடுவதும், அவரைக் கௌரவியாது அவர் எண்ணத்தையும் வேண்டுகோளையும் புறக்கணிப்பதும் கடவுளுக்கே கௌரவந்தர மறுப்பதை யொக்கும். ஆதலால், நீங்கள் அரசன் வார்த்தைகளைத் தள்ளினால் ஈசுவரத் துரோகம் செய்வது போலாகிறது. இதனை நன்கு யோசித்து மன்னன் விருப்பத்தைப் பூர்த்தி செய்து மரியாதையுடன் மாண்பும் மதிப்பும் மல்க மாநிலமீது வாழ்தலே சாலச் சிறந்ததாம்" என்றனன்.

வைசியர் மந்திரிகட்கு நியாயங்கூறல்

அத்தருணத்தில் நாரதகுல கோத்ரஸ்தனுகிய உத்தர ஸ்ரேஷ்டி என்னும் வைஸ்ய புங்கவன் அம்மந்திரியைக் கையமர்த்தி, "நீர் சொல்லுவது சரிதான்; ஆனால் தரும நியாயத்தையே கடைப்பிடித்து எங்களை யாளும் மன்னராகிய குசும ஸ்ரேஷ்டியாரின் வார்த்தைகளை நாங்கள் மீறுவது நியாயமா? அவ்வரச வள்ளலின் கட்டளைப்படி நாங்கள் நடவாவிடில் அது ஈசுவரத் துரோகமாகாதா? இவ்வாறு நீங்கள் பேசுவது முறையல்ல. எவர்களிடம் நீதியும் நியாயமும் இருக்கிறதோ, அவர்கள் வார்த்தைகட்கு

மதிப்புக் கொடுத்து ஆதரிக்க வேண்டும். எவரிடத்தில் நியாயம் தவறுகிறதோ, அவர்களிடத்து தூய முறையில் நீதிகளைப் போதித்து நன்னெறியிற் திருப்புதல் வேண்டும்.

அதுவுமன்றி, பின் வரும் பொருளை முன்னறிந் துணர்த்தி, அரசனுக்குக் கண்ணுங் கவசமுமா யிருந்து காத்து, சமயத்தில் வேண்டிய யோசனைகளைக் கூறி, அரசன் ஒருகால் நீதிதவறி நடக்க முயன்ற போதிலும், (யானையை அங்குசமானது நல்வழியில் நடத்த உபயோகப் படுவதேபோல்) நீதி மார்க்கங்களை எடுத்து விளக்கி சன்மார்க்கத்திற் திருப்பி விட்டு, ராஜ காரியங்களைச் செவ்வனே நடத்தி வருவதுடன், ராஜனுடைய உயிரையும் கௌரவத்தையும் புகழையும் பெருமையையும் ஒழுக்கத்தையும் கன்யத்தையும் காப்பாற்ற வேண்டுவது அமைச்சர்களாக இருக்கின்ற உமது கடமையா யிருக்க, உம்முடைய பொறுப்பாக இருக்க, நீங்கள் அவ்வாறின்றி,

அரசன் ' கல்லின்மேல் நெல் விளையுமா? ' எனில் ' கொத்தாலாயிரங் குலையாலாயிரம் ' என்றும், ' ஒருவர்க்கு ஆபத்து நேருங் காலத்தில் உதவி செய்யலாமா? ' என்றால், ' ஐயோ! அவ்வளவும் பாவமல்லவா? ' என்றும், ' நூறு பொய் சொல்வதிற் பிசகென்ன? ' என்கையில், ' அதில் என்ன பிசகு? பொய்ம் மொழிகள் ஏழாயிரம் வரை இயம்பலாமென்று எவ்வளவோ நூல்களில் எழுதப் பட்டிருக்கிறதே! ' என்றும், ' சாமார்த்தியத்தினால் விபசாரம் செய்வதால் தப்பென்ன உளது? ' என்று சொல்லுகையில், ' அடக்கத்தில் ஆயிரம் பேரோடு போனாலும் அதனால் யாதொரு குற்றமுங் கிடையாதே! ' என்றும், ' அநியாயமான கொலை நடக்கையில் அதைத் தடுக்கலாமோ? ' எனும்போது, ' ஐயோ வென்றாலே ஆறுமாத காலம் நரகம் சம்பவிக்குமே; அதை எப்படி நாம் தடுக்கப் போவது? ' என்றும், ' தாயைக் கொல்வது தக்கதுதானே? ' என்கையில், ' வேதத்தின் முதற் காண்டத்தில் அவ்வாறுதான் விதிக்கப் பட்டுளது ' என்றும், ' வெள்ளத்திற் கல் மிதக்குமோ? ' என்றால், ஆற்றில் ஒருநாள் அம்மி மிதக்கையில் அடியேன் நேரிற் கண்டேன் ' என்றும், ' என் பிள்ளையும் எதிர் வீட்டுக்காரன் பிள்ளையும் ஒரு பெரியவரை உதாசீனமாகத் திட்டினராம். இதற்கு என்ன செய்யலாம்? ' என்று கேட்டால்,

'உமது சற்புத்திரன் வாயில் சர்க்கரை யிட வேண்டும். மற்றவன் வாய்க்கு மண்ணிட வேண்டும்' என்று கூறுகின்ற துர்க்குண மந்திரிகளைப் போல உங்களரசன் "வைஸ்யப் பெண்ணை வற்புறுத்தி யேனும் மணந்தே தீருவேன்" எனக் காமாந்தகாரத்தினுற் கருத் தழிந்து பேசினுல், நீங்களும் உடன் கூடிக்கொண்டு, ஒத்துக்கு மத்த ளமாய்ப் பேசி, அவ்வரசனுடைய பெருமைகள் யாவும் அடியுடன் கவிழ்ந்துபோக யத்தனிக்கின்றீர்களே! இதுதான் 'உமது பெருந் தன்மைக் கழகோ? இதுதான் மந்திரித் தனத்தின் வண்மையோ? இதுதான் முன்னெச்சரிக்கையோ டிருந்து முடிமன்னனைக் காப்பாற் றும் முறைமையோ? இதுதான் அரசனுக்குச் சுகந்தரத்தக்க அமைச் சர்களுக் கழகோ? இதுதான் மந்திரித் தலைவர்களின் மதியூகமோ? இந்த ராஜமகேந்திரபுர சமஸ்தான மந்திரிகள் இவ்வளவு ப்ரமாதமான அசகாய சூர விவேக விற்பன்னர்களாக யிருப்பார்கள் என நாங்கள் இதுகாறும் எண்ணி யிருக்கவில்லை. உங்கள் மதியூகத்திறன் இன்று தான் வெட்ட வெளிச்சமாகிறது. 'ஊரைக் கொளுத்தும் ராஜா விற்கு ஊதிக் கொடுக்கும் மந்திரி' என்பதுபோல, நீங்கள் அமைந் திருக்கின்றீர்கள். இந்த ராஜ்யம் இனிமேல் வெகு மேம்பாடுற்று விளங்கும்! அந்தோ! பரிதாபம்! இதுவும் இறைவன் செயல் போலும்!

'தன்னைக் கொடுத்தாவது தர்மத்தை நிலைநாட்ட வேண்டும்' என்னும் பெரியோர் வார்த்தையைப் பிடிப்பது சற்குண மூடை யோர்க்குத் தகுதி யென்றும், 'சமன் செய்து சீர்தூக்குங் கோல் போல் அமைந்து, ஒருபால் கோடாமை சான்றோர்க்கு அணி' என்னும் நீதி நூற் பிரகாரம், தாய் தந்தை யிடத்திலாயினும் தராசுக் கோல்போலச் செப்பமாக நின்று தீர்ப்புக் கொடுக்க வேண்டுவது அரசர்க்கு அவசி யம் வேண்டிய சற்கருமமென்றும், அடிக்கடி அறிக்கையிட வேண் டிய நீங்கள், இன்று அதோகதியில் தள்ளிவிடத்தக்க அநியாயத் தீர்ப்பை அங்கீகரிக்க வேண்டியிருப்பினும் சம்மதிப்பீர்கள் போலும்! இது உம்மிடம் நேரிட்ட அவஸ்தைவசம் என்றுதான் எண்ண வேண் டும். எவ்வுயிர்களையுந் தன்னுயிர்போ லெண்ணுவதும், எப்பொருள் எப்ரகாரமாயிருப்பினும் அப்பொருளின் உண்மையையுணர்ந்துகொள் வதும், உருவு நோக்காது அறிவை நோக்குவதும், ஊழ்வினை நோக் காது செய்வினை நோக்குவதும் ஆகிய அத்தகைய லக்ஷணங்களுக்குப்

பொருந்த நடக்க வேண்டுமென்று போதிக்க வேண்டிய நீங்கள், இன்று 'வைஸ்யப் பெண்ணை வேந்தர்கள் மணக்கலாம்' என்றும், 'வேதத்திலும் இதற்கு விதியுளது' என்றும், 'அரசன் வார்த்தையைத் தட்டி நடப்பது ஈசுரத் துரோகத்துக்குச் சமானம்' என்றும், ('வாதியை மாத்திரம் வரவழைத்து வைத்துக் கொண்டு நடுக்கொள்ளைக்காரன் நியாயந் தீர்த்தான்' என்பது போற்) சொல்லி நின்றீர்கள்.

ஓகோ! அமைச்சர்களே! நீங்கள் அந்நாளில் வேங்கி நாட்டிலிருந்த அற்புத குண அமைச்சர்கள் அல்ல; இந்நாளில் இம்மன்னரைக் கெடுக்க நினைத்துக் கொண்டு எங்கேயிருந்து வந்தவர்களோவென்று எண்ணுகிறேன். ஐயோ! இவ்வரசருக்கு இப்படிப்பட்ட அநியாயங்களைக் கற்பித்தோ இம்மை மறுமை யின்பங்களை வருவிப்பீர்கள்? என்றும் மீளாத உத்தம இன்பத்தை எய்தத் தக்க உறுதி வார்த்தைகளைக் கூறவேண்டிய நீங்கள், இன்று, என்றும் மீளாத அவகதியை யடையத் தக்க இழிந்த நெறிகளையும் இனிதென எடுத்துக் காட்டுவதாக எண்ணியுள்ளீர் போலும்! ஆஹா! இத்தகைய சூழ்ச்சித் துறைகளை உற்று நினைக்குந் தோறும் நெஞ்சந் திடுக்கிடுகின்றதே! உங்கள் சொற்படியே இம்மன்னவர் எல்லாக் காரியங்களிலும் உடன்படுவாரானால் தருமமுந் தவமுஞ் சலிப்படையாதோ? இக்காலத்தில் தனக்கு மேற்பட்டவர் எவருமேயில்லை யென்று வழக்கழிவு செய்து வஞ்சகம் புரிந்து வன்னெறிகளிலே வலுவில் நுழைந்து வார்த்தைகள் பேசிச் செய்கையும் செய்தால், காலம் போகும் வார்த்தை நிற்குமே! 'மனு நீதியில் சொல்லிய நீதி முறையின்படி நடந்து வருகிறார்; சந்திர குலத்துப் பெயரை விளங்கச் செய்வார்; மகாவீர தீர பராக்ரமசாலியாய்ச் செவ்வனே செங்கோல் புரிந்து வருகிறார்' என்று உமது மன்னனை உலகம் இதுகாறும் புகழ்ந்த மொழிகள் யாவும், எழுத்தறியாதவனை இணையிலாச் சேடனென்றும், ஈகை யென்பதனைக் கனவிலுங் கூடக் கண்டறியாத கனலோபியொருவனைக் கர்ணபூபதியைப் போன்றவனென்றும், அழகென்பது ஓர் அணுவளவுமில்லாக் கோர ரூபியொருவனை மன்மத வடிவன் என்றும், ஆயுதமெடுக்கவும் வகையறியாத பேடியொருவனை ஆண்மை மிகுந்த அர்ஜுனனை நிகர்த்த அற்புத வீரனென்றும், பொய்யே

வடிவாய்ப் போந்தவனெருவனே புனிதமான அரிச்சந்திரனே யொத்த சத்ய சீலனென்றும், கண்களேயில்லாத பிறவிக் குருடனெருவனைக் கமலக் கண்ணனென்றும், பிச்சையெடுத்துத் தெருவிற்றிரியும் ஒருவனைப் பார்த்து 'இவன் பெயர் தனகோடி' என்றும், முண்டிதமாயிருக்கும் ஒரு ஸ்த்ரீயைப் பார்த்து 'இவள் பெயர் கூந்தலழகி' என்றும் சொல்வதைப் போன்ற வீண் மொழிகளாய் விட்டனவே!' என்று ஏழுலகத்தாரும் இகழ்ந்து பேசுவார்களே! நீங்கள் இம் மன்னர் நீதிமுறை தவறி நடக்கையில் இவருக்குச் சாதகமாகப் பேசிவிட்டு, நாளை வேறெருவர் விஷயத்தில் வேறுவித தீர்ப்புக் கூற முற்படுவீர்களானால், அதுபற்றி வரும் பழி பாவங்களனைத்தும் உம்மைச் சாராதிருக்குமோ? யார்தான் என்ன செய்ய இயலும்? நடக்க வேண்டுவன நடந்தே தீரும். ஆனால், எது எப்படிப் போயினும், எங்கள் குலப் பெண்ணை வலிந்து மணப்பதற்குத் தக்க யோசனைகளை நீங்கள் அரசனுக்குக் கூறுவீராயின், அதனால் அம் மன்னனுக்குத் தீங்கிழைப்பவர்களாவீரேயன்றி, நலனளிப்பவர்களாக மாட்டீர்கள்" என்முன்.

சந்திரசூடனின் சாதுர்யமொழி.

அதைக் கேட்டு வெகுண்ட சந்திரசூடன் என்னும் மந்திரி விரைவில் எழுந்து நின்று, "மிகவுந் தெரிந்தவர்களைப்போல இந்த ராஜ சபையில் வந்து, சற்றும் அஞ்சாமல், எங்கள் அரசனைப் பற்றியும், ராஜநீதத்தைப் பற்றியும் ஏளனித்துப் பேசுகின்ற வைசிய வாலிபர்களே! கேளுங்கள்; எங்கள் அரசனுக்கு நாங்கள் எடுத்துச் சொல்லத் தக்கனயாவள? அவரறியாத விஷயங்களே ஒன்றுமில்லை. அவரைவிட நாங்கள் கல்வி கேள்விகளிலேனும், அல்லது வேறெந்த வகைகளிலேனும் மேம்பட்டவர்களல்ல. ஆதலால் அவருக்கு எடுத்துக்கூறி விளக்கக்கூடிய யோக்கியதை எமக்கின்று. அவரிச்சையின்படியும் ஆக்ஞையின்படியும் நாங்கள் ஒழுகத் தக்கவர்களேயன்றி, அவருக்குப் புத்திமதிகள்கூறித் திருத்தத் தக்கவர்களல்ல மென்பதையும், அவர் எக் காரணத்தை முன்னிட்டும் இதுவரையிலும் இன்றும், இனியும், அக்ரமங்களுக்குப் பாத்யப்படுவ ரல்லரென்பதையும் நீங்கள் உங்கள் ஞாபகத்தில் கண்டிப்பாகக் கொண்டு இங்ஙன் வார்த்தையாடுதல் வேண்டும்" என்று கூறினன்.

பின்னர், கபிலாசார்யகுலத் தோன்றலாகிய 'அத்ரி ஸ்ரேஷ்டி' என்னும் வைஸ்ய புங்கவன் அம் மந்திரியைப் பார்த்து, "நீர், உமது அரசர் எப்போதும் நியாய வழியிலேயே நடப்பவர் என்று கூறியும், அவர் எமது பெண்ணை விரும்புவதும் நியாயந் தான் என்று கூறியும், அவ்வாறே பெண்ணைக் கொடுக்கும்படியாக எம்மிடத்திற் கூறியும் எங்கள் மனத்தைப் புண்படுத்தித் தொந்தரை யிவது அழகன்று. உமது வற்புறுத்தலுக்கும், கடுமொழிகளுக்கும் நாங்கள் ஒரு சிறிதும் அஞ்சப்போவது கிடையாது. உங்கள் அந்தஸ் துக்கும், அதிகாரத்திற்கும், ஆடம்பரச் சொற்களுக்கும், அநாவசிய அவஸ்தைகட்கும் பயந்து எங்கள் பெண்ணைக் கொடுத்துவிடப் போவதுங் கிடையாது. நீங்கள் என் ஷ்ணைக மனப்பால் குடித்துக் கொண்டு விபரீத மொழிகளை விளம்பிக்கொண் டிருக்கின்றீர்கள் ? உங்கள் யோசனைகளையும், ஆகாயக் கோட்டைகளையும், விருதா வார்த் தைகளையும் மூட்டைகட்டி ஓர்புறம் வைத்துவிட்டு, அரசியல் நெறியை செவ்வனே நடத்திச் சீர்பெற்றும், ஓர் அரசகுலப் பெண்ணைப்பார்த்து மன்னனுக்கு மணம் புரிவித்து, அவருடைய சிற்றின்ப வேட்கையை முடித்துவைத்துப் பெருமை பிறங்க வாழ்வித்தும் சுகமுறுமின் !" என்று கூறினன்.

பெண்ணைத் தர இயலாதெனல்

இதற்குள் 'லிம்ஹஜ்ஞன்' என்னும் மந்திரி எழுந்து சில வார்த்தைகள் சொல்லத் தொடங்குகையில், முதன் மந்திரியாகிய 'விஜய லிம்ஹன்' கையமர்த்தி, வைசியோத்தமர்களைப் பார்த்து, "வண்மையிற் சிறந்த வைசிய ரத்தினங்களே! உங்களுடைய சமத்காரங்களை சம்பூர்ணமாக உணர்ந்தறியாத யாங் கள் இதுவரை உம்மிடம் உரையாடிக்கொண் டிருந்தோம். நீங்கள் உண்மையிலேயே தெய்வ சம்பத்துடையவர்கள். இன் சொல்லே வடிவமானவர்கள். புன் சொற்களையே புகல வறியீர்கள். இத்தகைய பெருந் தன்மையுடைய தாங்கள் எங்கள் முன் நின்று வார்த்தை யாடுவதும், நாங்களும் ஏதோ உம்மைவிட அதிகமான அனுபவஞான முள்ளவர்கள் போல நியாயங் கூறுவதும் சரியல்ல. தாங்கள் எங்கள்பேரில் தயவுகூர்ந்து, எமதரசனுடைய மனோராஜ்யம் ஆயாச

விஜயசிம்மன் விநயமாய்க் கூறல்

மின்றிப் பூர்த்தியடையுமாறு தங்கள் செல்வக் கன்னிகையைத் திரு மணம் செய்துவைத்து, இம்மை மறுமை இரண்டிலும் சுகம் பெறு தலே உசிதம்.

காந்தார விஷ்ணு கதை

முன்னே 'காஞ்சி' என்னும் பட்டணத்தில் 'காந்தார விஷ்ணு' என்னும் அரசனொருவன் இருந்தான். அவன் நெடுங்காலம் புத்ரப் பேறின்றிப் பெரிதும் வருந்தி, எண்ணிறந்த தான தர்மங்கள் புரிந்தும், அநேக வ்ரதங்களை அனுஷ்டித்தும், ஈஸ்வர க்ருபையினால் இரு பெண் மகவுகளை யீன்றெடுத்து, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகக் கண்ணுங் கருத்துமாய் எண்ணி வளர்த்துவந்தான். அவ்விருவரில் மூத்தபெண்ணாகிய 'புண்ணியவதி' யென்னும் பொற்பார் புனிதையை, சர்வ சாஸ்த்ர சம்பன்னனும் மகா தபோ நிஷ்டனுமாகிய 'கேசவாசாரியன்' என்கிற பூசுரனுக் கீந்து மணமுடித்து வைத்தனன். இளைய பெண்ணாகிய 'பாக்யவதி' என்கிற வனிதையை, உஜ்ஜயினி நகரத்திறைவனும் சத்ய சீலனுமான விக்ரமாதித்த குப்தனுக்குத் திருமணம் செய்துவைத்தான். இதுகளை யோசிக்கையில், ஒரு குலத்துப் பெண் மற்றோர் குலத்திற் கணவனை வரித்துக் கடிமணம் புரிந்து, காசினிமீதில் ஆசிலா வாழ்க்கையை அடைவுடன் நடாத்தற் கிடமுண்டென்பது தெற்றெனத் தெரிகிறது.

நமக்கு இஃதோர் உண்மை யுதாரணமாதலின், தாங்கள் யாதொருவித ஆலோசனையு மின்றி கடிதினிற் சென்று கடிமணத்திற் கேற்ற ஏற்பாடுகளைக் கவனியுங்கள்" என்றான்.

குமார கண்டூரவன் கூறுதல்

பிறகு, "எங்கள் அரசன் தங்கள் குலப் பெண்ணை மணப்பதால், ஜாதிக் குற்றமும் வேத நீதி விரோதமும் ஏற்படுவதாயிருப்பின், தமது குலத்தின் பெருமையைத் தாமே குறைத்துக்கொள்ளச் சம்மதிப்பாரா? அவர் எண்ணிய எண்ணத்தில் யாதொரு குற்றங் குறைகளுங் கூறுதற் கிடனிராது. தங்களுக்கும் இச் சம்பந்தத்தால் அதிக கௌரவமே சித்திக்கும்" என்று 'குமார கண்டூரவன்' என்னும் மந்திரியும்,

ஜயத்வஜனின் சாமர்த்ய வார்த்தை

" உங்கள் பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டு எங்கள் அரசன், புத்திரப்பேறு முதலியன கிடைக்கப் பெற்ற பின்னர், (இப்போது ஓர் அழகிய மாதின்மீது பிரியப்பட்டு, மணப்பதற்கு மிகவும் விரும்புகின்றதைப் போல) மற்றோரிடத்திற் செல்லுகையில், அங்கே யாதானுமொரு பெண்ணைக் காணநேர்ந்தால், அப் பெண்மீது பிரியங்கொண்டு கடிமணம் புரிந்துகொண்டால், அப் பெண் க்ஷத்ரியப் பெண்ணையிருப்பின், அப் பெண்மீது பிரியங்கொண்டு உமது பெண்மீதுள்ள ப்ரேமையை மறந்துவிடுவாரோ? என்றுவது, அல்லது அப் பெண்வயிற்றுப் பிள்ளைக்கேனும், இப்போது பட்டத்திற்குத் தயாராயுள்ள பிள்ளைக்கேனும் பட்டம் சித்தித்துவிடுமே! உமது பெண் வயிற்றிற் பிறக்கிற பிள்ளைக்குப் பட்டம் கிடைக்காதே! என்றுவது எண்ணி நீங்கள் பெண்தர மறுக்க வேண்டியதில்லை. எங்கள் அரசனே மணந்துகொள்கின்ற உங்கள் வாசவ கன்னிகையின் வயிற்றிற் பிறக்கின்ற பிள்ளைக்கே இந்த ராஜ்யம் முழுவதையும் ஆளும்படி முடிசூட்டிப் பட்டாபிஷேகம் செய்துவைப்பதாக இப்போதே வேண்டுமானாலும் சாஸனம் செய்துதருகின்றோம். அதுபற்றி ஏதேனும் ஆக்ஷேபணையிருந்தால் விட்டுவிடுங்கள்" என்று 'ஜயத்வஜன்' என்னும் மந்திரியும்,

பிரதானியின் பேச்சு

" கண்ணுவரது திருமகளாகிய சகுந்தலையைத் துஷ்யந்த மகாராஜன் மணந்ததும் அவள் வயிற்றிற்பிறந்த 'பரதன்' என்ற பிள்ளைக்கே பட்டம் சூட்டியதும் அனைவரும் அறிந்த சரிதையாகும். ஆதலின், எங்கள் அரச வள்ளல் ஹிதமாகக் கூறும் வழிக்கிணங்கி நுமது பெண்ணைக் கொடுத்துப் பேறு பெறுங்கள். அதுதான் சிறந்த மார்க்கம். அதனால் உமக்கு எத்தனையோ வகையில் நன்மைகளுண்டாகும். எங்கள் மன்னர் மனத்தையும் திருப்தி செய்தவர்களாவீர். அவ்வாறின்றி அவருடைய வார்த்தைகளை அசட்டை செய்வீராயின், அருடைய குணம் திரும்பிப் பிடிவாத மாய்விடிலோ, உங்களுக்குச் சங்கடங்கள் சம்பவிக்குமென்பதிற் சந்தேகம் சிறிதுமில்லை" என்று சுபக்ரீவன் என்னும் ப்ரதானியும் கூறி முடித்தனர்.

துர்க்காசலன்றன் தூமொழிகள்

உடனே, பௌலஸ்த்ய குலத் தோன்றலாகிய 'துர்க்காசலஸ்ரேஷ்டி' என்கிற வைஸ்யோத்தமன், அம் மொழிகளைக் கேட்டு மிகவும் ரோஷ முற்றவனாகி யெழுந்து, "ஓ மந்திரிகளே! நீவிர் உமது மன்னவரைப் புகழ்வதும், †உமது ப்ரதாபங்களைக் கூறி, உம்மை நீரே மெச்சிக்கொள்வதும் எமக்குப் பரிகாசமாகவே யிருக்கின்றது. எற்றலோ வெனின், உமது அரசர் எவ்வளவு ராஜாக்களை வென்று ஜெயம் பெற்றபோதிலும், காமம் க்ரோதம் லோபம் மோகம் மதம் மாற்சரியம் டம்பம் தர்ப்பம் ஈர்ஷை அசூயை ஆதிய உட்பகைவர்களை இதுகாறும் வென்றபாடில்லை. உட்பகையாகிய ஐம்புலச் சேஷ்டைகளை ஒருங்கே யடக்கி, உயர்ந்த அறிவொளியைக்கண்டு, உத்தம இன்பத்தை எய்த விழைபவனன்றே உண்மை வீரனவன்? ஒரு அற்ப விஷயத்திற்காக இச்சைமேலிட்டுக் காமாதுரனைக் கஷ்டப்படுகிற வொருவனை எப்படி உண்மை வீரனென்றும், உத்தம வேந்தன் என்றும், நீதி நெறியாளன் என்றும் சற்குண சீலன் என்றும் கூசாது கூற முடியும்?

முற்காலத்தில் அமரேசனுகிய இந்திரன் அகலிகை மீது காமங் கொண்டதால் ஏற்பட்ட அவதிகளையும், எண்ணுதற்கரிய அதிகாரம் நடத்திய இலங்கேசனுகிய இராவணன் சீதா பிராட்டியின் மீது மோகங் கொண்டதால் விளைந்த விளைவையும் விளம்பவும் வேண்டுமோ? இஃதே போல காமத்தினால் விளையும் கஷ்டங்களைப்பற்றிக் காசினியோர்க்குக் கூறிக் கருத்தைத் திருத்துகின்ற காவியங்கள் எத்தனை யென்று கணக்கிடவும் முடியுமோ? அவற்றை யெல்லாம் உமது அகத்தின்கண்ணே அணுவளவாயினும் நினைந்திலீர் போலும்? இத்தகைய காம வுணர்ச்சி கேட்டையே விளைக்கு மென்பதைக் கெட்டியா யுணருங்கள்.

---

† "சடமதைக் கழுவ வுன்னிச் சகதியிற் புரேய்தல் போலும்
கூடினைத் தூண்டவேண்டி யூதியே தொலைத்தல் போலும்
மடமையால் தன்னைத் தானே புகழுவோன் வசைக ளெல்லாம்
புடவியே யெடுத்து ரைக்கப் பூணுவன் நிந்தையம்மா."

"தற்புகழ் வோன்றனைப் பழிக்கும் தாரணி
சொற்புகழ் விரும்பிடான் றனைத்து திக்திடும்
நற்புகழ் பெறுவழி நன்ன டக்கையோ(டு)
அற்பமுந் தற்புக ழாமை யாகுமே."

(நீதி நூல்)

தவிரவும், ஆதியில் பீஷ்மர் உலக வேந்தர்களையெல்லாம் யுத்தத்தில் வென்று மிக்க முயற்சியுடன் தேரில் கொணர்ந்த அம்பை அம்பிகை அம்பாலிகை என்னும் மூன்று க்ஷத்ரியப் பெண்களில் மூத்த பெண்ணாகிய 'அம்பை' முதலில் சாளுவ மன்னன் மேல் விருப்பங் கொண்டவள் என்பதையுணர்ந்ததும், *அந்த க்ஷணமே அப்பெண்ணை இரதத்திலின்றும் இறக்கி விடுத்துவிட்டு ஏனைய இருவரையும் இல்லம் சேர்த்து, தமது தம்பியாகிய விசித்ர வீரியற்குத் திருமணம் புரிந்து வைத்து, பின்பு அந்த அம்பை யென்னும் பெண்ணையும் ஏற்றுக் கொள்ளும்படி அநேகர் கூறியபோதும், தமது ஆசாரியராகிய பரசுராம மூர்த்தியேவந்து கூறியபோதும் கண்டிப்பாக மறுத்துவிட்டனர் என்பதையும், அவருடைய குலத்திலுதித்த இந்த மன்னர் இன்று இத்தகைய நெறியில் நடப்பது நியாயந்தானு? என்பதையும் இதயந்தனில் நீர் எண்ணிப் பார்த்திலீர் போலும்!

முதலில், ஓர் அந்நிய மாதைப் பார்த்து (அம்மாதின் கருத்தறியாது) காமங் கொள்வதே பெரியோர்க் கழகல்ல; அப்படியே பிரிய முண்டானபோதிலும், ஏதேனுங் கொஞ்சந் தடை யேற்படுவதாய்த் தெரிந்தால், அப்போதே அவ் வெண்ணத்தை அற வொழித்து விட்டு, மனதில் கவலையின்றிச் சுகமாயிருக்கவேண்டும். அப்படி உமது அரசருக்கு மனம் கேட்கவில்லையானால் சொல்லுங்கள்; இதோ நான் உடனே புறப்பட்டுச் சென்று, உலக முழுவதும் சுற்றி, ஒரு வரும் நிகரிலா உத்தம லக்ஷணம் பொருந்திய தேவகன்னிகை போல விளங்குகின்ற க்ஷத்திரியப் பெண்ணைக் கொண்டுவந்து நாளைய காலையில் மணம் முடித்துவைக்கின்றேன்" என்று கம்பீரமாகக் கூறினன்.

வீண்வாதம் வேண்டாமெனல்.

அதற்கு, 'விஜய ஸிம்ஹன்' என்கின்ற ப்ரதம மந்திரியானவன், "ஓ வைஸ்ய புங்கவ! கையிற்கிடைத்த கௌஸ்துப மணியை விட்டுவிட்டு, சாதாரணமான இரத்தினத்தைப் பெற யார்தான் விரும்புவர்? வீட்டிலிருக்குங் காமதேனுவை வேண்டாமென்று ஓட்டி

* "சமரின் முந்திய சாளுவன் மேல்மனம்
அமர நின்ற தறிந்துழி யம்பையை
எமக்க ஞக்கிஃ தியற்கையன் றென்னவே
அமர ழிந்த வவனுழைப் போக்கினன்" (வில்லி பாரதம் - குருகுலச் சருக்கம்)

அனுப்பிவிட்டு, சாமான்யமான பசுவைக் கொள்வதற்கு யாவர்மனங் கொள்ளுவர்? எப்படியும் உங்கள் நாரீ மணியாகிய வாசவி எங்கள் அரசன் பக்கலில் வரப்போவது நிச்சயமாயிருக்க, நீங்கள் ஏன் வீண் வாதம் செய்கின்றீர்கள்?" என்றனன்.

நாதப்ரம்மம் விடை கேட்டல்.

உடனே, போதாயன குலத் திலகனுகிய 'நாத ப்ரம்மம்' என்கிற வைஸ்ய வீரன் எழுந்து, †"நாங்கள் எவ்வளவுதூரம் கண்மையாய்ப் பேசியும், நியாய மார்க்கங்களை எடுத்துக் கூறியும் நீங்கள் கேட்க கில்லீர். நாங்கள் இந்த விவகாரத்தில் சற்றே னும் அஞ்சப்போவது கிடையாது. உங்கள் அரசன் எமது பெண்ணை அடைவது என்கிற எண்ணத்தை இந்த க்ஷணமே மறந்துவிட்டு, வேறு எதாவது விசேஷங்களிருந்தால் பேசுங்கள். இல்லையேல் எங் களுக்குப் பெணுகொண்டாபுரிக்குச் செல்ல விடை தாருங்கள்" என்று கண்டிப்பாகக் கூறினன்.

கொற்றவன் கொடுஞ் சினங் கொளல்.

இவையனைத்தையுங் கேட்டுக் கொண்டிருந்த பூபாலன் மனம் மிகவும் புழுங்கியவனுகி, "ஓ மந்திரிகளே! தந்திரி களே! அனைவரு மிங்கே வாருங்கள்" என்றழைத்து, கண்கள் சிவக்க, அனற்பொறி பறக்க, உதடுகள் துடிக்க, முகம் வியர்க்க, மீசை படபடக்க, மிகுந்த கோபாவேசமாகி, உரத்த குரலுடன், "முன்னும் பின்னும் மாறி மாறிப் பேசி நம்மை ஏமாற்றி ஏய்த்துவிட்டுச் செல்ல எண்ணங்கொண்டு வந்த இந்த துஷ்டர்களை உடனே பிடித்துச் சிறையிலடைத்து விட்டுக் கடிதினிற் சேனை சமூகங்களுடன் பெணுகொண்டாபுரி சென்று, அப்பெண்ணைக்

† "பூத்தாலும் காயா மரமுள; மூத்தாலும்
நன்கறியார் நாமு நவியுளர்; — பாத்தி
விதைத்தாலும் நாருத வித்துள; பேதைக்
குரைத்தாலும் தோன்று துணர்வு." (பழமொழி)

"வைகலும் நீருட் கிடப்பினும் கல்லிற்கு
மெல்லென்றல் சால அரிதாகும் — அஃதேபோல்
வைகலும் நல்லறம் கேட்பினும் கீழ்கட்குக்
கல்லினும் வல்லென்னும் நெஞ்சு." (அறநெறிச்சாரம்)

கவர்ந்து எடுத்துக்கொண்டு, அந்நகரையும் அக்னிக் கிரையாக்கி விட்டு உடனே திரும்ப வேண்டும். சற்றும் தாமதிக்க லாகாது" என்று கடுமையான உத்திரவிட்டனன்.

வீர வைசியர் விளம்பும் விடை.

இந்த † க்ரூர வார்த்தைகளைக் கேட்டு ஒரு சிறிதும் அஞ்சாத வைஸ்யப்ரமுகர்கள் யாவரும் வீராவேசத்துடன் எழுந்து, "சந்த்ர வட்டக் குடை நிழலில் சதுரா யமர்ந்து, சகல வுயிர்களும் சுபிக்ஷமாக வாழ வேண்டுமென ராஜ்ய பாரத்தை நடத்தி வருகின்ற ராஜமார்த்தாண்ட! உத்தம சீலராகிய உமது நாவில் இத்தகைய வாக்குகளும் வர நேர்ந்தது போலும்! கால ருத்ரர்கள் வந்து உலகத்தினை அழிக்கும் போதும், சப்த சாகரங் களும் பொங்கி மேலெழுந்து வழியும் போதும், அரசர்கள் நீதி மாறித் தலைகீழாகும் போதும் உலகம் எவ்வாறு நிலைக்கும்? அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய் நின்றது மன்னவன் கோலன்றே? உலகுயிர்கள் யாவர்க்கும் ஒரு குறைவும் நேரா வண்ணம், பாதுகாத்து ரக்ஷிக்கின்ற அரசச் சீமாட்டிகிய தாங்களே, எமது கால்களிற் றளையிடவும், எமது பெண்ணைக் களவாடவும், பலாத்காரமாய்க் கொண்டுவந்து சேர்க்கவும், ஒரு பெரிய நகரையே நெருப்புக் கிரையாக்கவும் அனுமதிப்பதெனில், எங்களுக்கு மிகுந்த ஆச்சரியமாகத்தா னிருக்கின்றது. அந்தோ! நீர் உத்தேசித்தபடி செய்தாலும் செய்யலாம். எங்களுக்கு அதைப்பற்றி யாதொரு கவலையும் அச்சமும் நிச்சயமாய்க் கிடையாது. நாங்கள் எமது

---

† "அறமனத்தார் கூறுங் கடுமொழியு மின்னு;
மறமனத்தார் ஞாட்பின் மடிந்தொழுக லின்னு;
இடும்பை யுடையார் கொடையின்னா; இன்னா
கொடும்பா டுடையார்வாய்ச் சொல்." (இன்னா நாற்பது)

"நேர்த்து நிகரல்லார் நீரல்ல சொல்லியக்கால்
வேர்த்து வெகுளார் விழுமியோர் - ஓர்த்ததனை
உள்ளந்தா னுள்ளி உரைத்துராய் ஊர்கேட்பத்
துள்ளித்தூண் முட்டுமாங் கீழ்."

"கல்லெறிந் தன்ன கயவர்வா யின்னாச்சொல்
எல்லாருங் காணப் பொறுத்துய்ப்ப - ஒல்லே
இடுநீற்றுள் பையவிந்த நாகம்போல் தத்தம்
குடிமையான் வாழிக்கப் பட்டு." (நாலடியார்)

மானத்தைக் காக்கவேண்டி, எமது ப்ராணனையும் ஓர் த்ரணமென மதிப்போம். எவ்வகையானும் நீர் பெண்ணைக் கொண்டு வருவ தென்பது முடியாத காரியம். நீங்கள் செய்யும் தொந்தரைகள் அப்பெண்ணின் உயிருக்கே ஆபத்து விளைவிப்பதானலும், தனது உயிருள்ள வரையிலும் அப்பெண் உம் கையில் சிக்குதலும் இயலாது. எங்கள் ஆவி யிருக்கும் வரையிலும், அப்பெண்ணை நீங்கள் வலிந்து கொணரும்படி விடப்போவதும் கிடையாது. இவ்வாறெல்லாம் பயமுறுத்தினல், நாங்கள் பயந்து, பெண்ணைக் கொடுத்து விடுவோ மென்றெண்ணி நீங்கள் ஒன்றும் பூச்சிக்காட்ட வேண்டியதில்லை. நீங்கள் கூறும் வார்த்தைகளுக்குப் பயந்து, நாங்கள் ஒருபோதும் பெண் கொடுக்க ஒப்புக்கொள்ள மாட்டோமென்பதைக் கண்டிப்பா யறியுங்கள். அவ்வாறின்றி, அக்ரம வழிக்குப் பாத்யப்பட்டு யாதொரு பயனையுமடையாமல் வீண் பழிக்கு ஆளாக வேண்டா. அத்தகைய அதர்ம வழிகளில் ப்ரவேசிப்பது உங்களுடைய பெருந் தன்மைக்கழகுமன்று. அதனலுமது சூக்ஷமத்திற்கே குறைவேற்படும்.

¶ வென்றி தருவது வேலன்று; கோல்; அதுவுங் கோடா தேனின். குடிதழீஇக் கோலோச்சும் மன்னனின் அடிதழீஇ யன்றே உலகம் நிற்கும்? இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்டிற்றன் பெயலும் விளையுளுந் தொக்கு நிலைக்கும்.

" எண்பதத்தா னேரா முறைசெய்யா மன்னவன்
றண்பதத்தாற் ருனே கெடும் "

" கொலைமேற்கொண் டாரிற் கொடிதே யலைமேற்கொண்
டல்லவை செய்தொழுகும் வேந்து "

" நாடொறு நாடி முறைசெய்யா மன்னவ
னுடொறு நாடு கெடும் "

" அல்லற்பட் டாற்ரு தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை "

¶ " மன்னவன் வலிசெங் கோலினு லன்றி வாளினாற் சேனையா லில்லை;
நன்னெறி வழுவா மன்னவன் றனக்கு நாடெலாம் பேரரண்; உலகில்
மன்னுயி ரெல்லாம் அவன்படை; அன்னேர் மனமெலாம் அவனுறை பீடம்;
இன்னதன் மையனுய் அரசளிப் பவனை இகல்செயுந் தெறுநரும் உளரோ? "

(நீதிநூல்.)

" கடுஞ்சொல்லன் கண்ணில னுயி னெடுஞ்செல்வ
நீடின்றி யாங்கே கெடும் "

" கடுமொழியுங் கையிகந்த தண்டமும் வேந்த
னடுமுரண் தேய்க்கு மரம் "

" இனத்தாற்றி யெண்ணுத வேந்தன் சினத்தாற்றிச்
சீறிற் சிறுகுந் திரு "

என்று தெய்வப் புலவராம் பொய்யா மொழியார் பின்னும் பின்னும் இடித்திடித் தெடுத்துரைக்கும் திடமொழிகளைச் சிறிதேனும் சிந்தித்துப் பார்ப்பீராக!" என்றனர்.

இவற்றைச் செவியுற்ற விஷ்ணு வர்த்தனன் முன்னிலும் அதிகமாகக் கோபமூண்டு மந்திரிகளை யழைத்து, " சற்றுந் தாமத மின்றி எனது கட்டளையை நிறைவேற்றுங்கள். இந்தத் துன்மார்க்கர் களிடம் கொஞ்சங்கூடச் சலுகை காட்டுதல் கூடாது " என்று கண்டிப்பான கட்டளையிட்டனன்.

ப்ரதம மந்த்ரியின் யோசனை.

அதுகேட்ட முதன் மந்திரியாகிய 'விஜய லிம்ஹன்' என்பவன் சற்று மனவருத்த முற்றவனாகி, மிகவும் யோசித்து " நமது ப்ரபுவுக்கு இத் தகைய † கோபமும் அவசரமும் உண்டானது சரியல்ல. அவர்களுடைய பெண்ணை அவர்கள் (வேறு குலத்தவர்க்குத்) தர இஷ்டமின்றி யிருந்தால், 'நம் கையில்

---

† " கன்மை வேண்டுங் கடிய பிறர்செய்த
நன்றியை நன்றுக் கொளல்வேண்டும் — என்றும்
விடல்வேண்டுந் தன்கண் வெகுளி அடல்வேண்டும்
ஆக்கம் சிதைக்கும் வினை. "

" இன்னுமை வேண்டி னிரவெழுக இந்நிலத்து
மன்னுதல் வேண்டின் இசைநடுக — தன்னெடு
செல்வது வேண்டின் அறம்செய்க வெல்வது
வேண்டின் வெகுளி விடல். "

" இனிதுண்பா னென்பா னுயிர்கொல்லா துண்பான்
முனிதக்கா னென்பான் முகனெழிந்து வாழ்வான்
தனிய னெனப்படுவான் செய்தநன் றில்லான்
இனிய னெனப்படுவான் யார்யார்க்கே யானும்
முனியா வொழுக்கத் தவன். " (நான்மணிக்கடிகை)

" வெல்வது வேண்டி வெகுளாதான் நோன்பினிதே
ஒல்லுந் துணையு மொன்றுய்ப்பான் பொறையினிதே. " (இனியவை நாற்பது)

அதிகாரமிருக்கிற'தென்று, நமதிஷ்டம்போல் செய்யலாமா? அதுதான் அரசநீதியாகுமா? அரசன் நடை தவறுகிறகாலத்தில் பக்கலிலிருந்து ஹிதம் சொல்லி நியாய முறையில் திருத்துவதல்லவோ நமக்குத்தகுதி?

" தெரிதலுந் தேர்ந்து செயலு மொருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு " என்றும்,

" அறனறிந் தான்றமைந்த சொல்லா னெஞ்ஞான்றுந்
திறனறிந்தான் றேர்ச்சித் துணை " என்றும்,

" அறிகொன் றறியா னெனினு முறுதி
யுழையிருந்தான் கூறல் கடன் "

என்றுமன்றே பொதுமறை புகலா நின்றது?

அரசன் 'தூளி' என்னுமுன் 'நிர்த்தூளி' என்றும், 'கரும்பு கசப்பு' எனின் 'வேப்பங்காய் போல் கசப்பு' என்றும் கூறுகின்ற துன் மந்திரிகளைப் போன்று, நமது அரசன் எதோ அவஸ்தை வசத்தால் தகாத யோசனை செய்த போதிலும் அதற்கு நாமும் உடன்படுவது தகுமா? அதுதான் நமக்குத் தர்மமா? மேலே தெய்வம் பார்த்துக் கொண்டே யிருந்து திடீரென்று கவிழ்த்து விடுமே! ஆதலால், இனி நாம், காரியம் மிஞ்சிப் போகாத முன்பே முயன்று, முடிவேந்தனுக்கு நியாயத்தை எடுத்துக் கூறி, ஆபத்தைத் தடுத்தல் வேண்டும்" என்று தனக்குள் உறுதி கொண்டவனாகி,

அரசனை வணங்கி (மெல்லிய குரலில் இனிய மொழிகளால்) "இணையிலாப் புகழுடன் தரணியைப் புரக்கும் **மந்திரி மன்னனை** தண்ணளி வேந்தே! இங்கு வந்து இதுகாறும் **சாந்தப்படுத்தல்.** நம்முடன் விவகரித்த வைசிய வாலிபர்கள் நமக்குப் பொறுப்பல்ல. பெனுகொண்டாவி லுள்ள குசுமஸ்ரேஷ்டியார் முதலிய பெரியோர்களன்றே நமக்குத் தக்க பதில் கூற வேண்டியவர்கள்? அப்படியிருக்க, நாம் நமது ஆட்களை அங்கனுப்பி அவர்களின் மனோபாவத்தை அறிந்து கொள்ளாமல், அவசரப் பட்டு எந்தக் காரியமும் செய்வது உசிதமல்ல. இன் சொல்லைப் போல வன்சொல் விரைவிற் பயன் தராது. முக்கியலட்சியத்தையும் செவ்வனே பெறச் செய்யாது. ஆதலால் இவர்களுக்கு ஹிதமான வார்த்தைகளைச் சொல்லி யனுப்பி வைத்து, நம்மவர்களில் ஒரு சிலர் அவண் சென்று அவர்களுடைய மனத்தை

இன்சொல்லால் திருப்பிக் காரியத்தைச் சாதிப்பதே நலம். தாங்கள் அவசரப்பட்டு இவர்களே ஒன்றும் செய்யாது விட்டுவிடுவதுதான் மேலானது. அப்போதுதான் நாம் பின்னிட்டு காரியத்தைச் செம்மையாய் முடிக்கச் சாத்தியமாகும். நமக்குக் காரியம் முடிப்பது பெரிதேயன்றி விரியம் படிப்பது பெரிதல்ல. அன்பினுலே செயலைக் கூட்டுவித்தல் வேண்டுமேயன்றி, வன்பினுலே சினத்தை மூட்டுவித்தல் நன்றன்று. ஆகலான், அவர்களுக்கு அடியேன் ஓர் வகைச் சமாதான மொழிகளைச் சொல்லி அனுப்பி வைக்கிறேன். பின்னர் எல்லாம் சௌகர்யமாக முடியட்டும். முதலில் நாமே கலவரம் புரிதல் கூடாது" என்றெல்லாம் பலவாருகச் சாந்தமாகப் பேசி, அரசன் மனத்தை ஒருவாறு தேற்றினன்.

வைசியர்கட்கு சமாதானங் கூறல்.

அதன் பின் வைஸ்யர்களே யழைத்து, "ஓ வைஸ்யகுல ப்ரமுகர்களே! எமது மன்னவர் அப்பெண்மீதுள்ள ப்ரேமைகாரணத்தால் ஒன்றுந் தோன்றுமல், அவசரத்தில் ஏதோ சில வார்த்தைகளைக் கூறிவிட்டார். அதற்காக நீங்கள் ஒன்றும் மனத்தில் ஆயாசங் கொள்ளவேண்டாம். உமது மனத்தில் தயவுகூர்ந்து, பெனுகொண்டாவிலுள்ள ப்ரமுகர்கட்கும் எமது மன்னருடைய சிறப்புகளே எடுத்துச் சொல்லி, எவ்வாற்றுலுவது, இன்னும் சில தினங்களுக்குள் ஓர் நன்னாளில் உமது வாசவ கன்னிகையை எமது அரசவள்ளலுக்கு மணம் செய்துகொடுத்து, 'ராஜ சம்பந்திகள்' என்று கீர்த்தியடையுங்கள்" என்று ஹிதமொழி கூறியனுப்பினன்.

புனித வைசியர்களின் பொறுமை.

அவற்றைக் கேட்ட வைசிய ப்ரபன்னர்கள் அவ்விடத்தில் யாதொருவார்த்தையும் கூறுமல், "‡இவர்களுடைய பெருந்தன்மையும் வாத்ஸல்யமும் ஹித மொழிகளும் மிகவும் நன்றுயிருக்கின்றன!" என்று மனத்தினில் நினைத்துக் கொண்டும், "நமது தலைவரின் அனுமதியின்றி, நாம் இப்போது

‡ "தன்றுனே யிலானே யுள்ளத் தன்மையை யறிவான்; பூமி
இன்றெரு வனேத் துதிக்கும்; ஏசிடும் அவனேப் பின்னும்;
நன்றினேத் தீதென் றுன்னும்; தீதைநன் றென்ன வுன்னும்;
பொன்றுமா னிடர்ப் புகழ்ச்சி புனலின்மே லெழுத்துக் கொப்பே." (நீதிநூல்)

இங்கு அதிகமாக யாதொன்றும் பேசிக்கொள்வது §சரியல்ல" என்று அகத்துட் கொண்டவர்களாயும்,

"அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
யிகழ்வார்ப் பொறுத்த றலை"

"ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்"

"துறந்தாரிற் றூய்மை யுடைய ரிறந்தார்வா
யின்னுச்சொ னேற்கிற் பவர்"

"பொறுத்தல் இறப்பினை யென்றும்; அதனை
மறத்தல் அதனினும் நன்று"

என்றெல்லாம் உத்தரவேதம் உரைக்கின்றதனை உன்னியவர்களாயும், "பெனுகொண்டாபுரியை யடைந்து, நமது பெருமானுகிய குரும ஸ்ரேஷ்டியாரிடங் கூறி, அவருடைய ஆக்ஞையின்படி நடந்துகொள்வதுதான் தக்கது" என்று எண்ணியவர்களாயும், விடைபெற்றுக் கொண்டு அவ்விடத்தைவிட்டுப் புறப்படலாயினர்.

அவர்கள் அவ்வாறு புறப்பட்டதும், ப்ரதம மந்த்ரி வேறு சில மந்த்ரிகளையும் சேவகர்களையும் அழைத்து, "நீங்கள் இவர்கள் பின்

---

§ "உனையொருவர் இகழ்ந்தனரேல் ஏதுக்கா விகழ்ந்தனரென் றுன்னி, உன்பால்
தினையளவு தப்புளதேல் அதைநீக்காய்; தப்பின்றேல் சினமு ருதே;
கனைகழையை வேம்பென்னில் கழைக்குமோர் குறையுண்டோ? கல்வில் மோதித்
தனையுடைப்போர்க் குணவுதரும் தேங்காய்போல் எவர்க்கும் நன்மை தனைச்
செய் நெஞ்சே!" (நீதிநூல்)

"கோதை யருவிக் குளிர்வரை நன்னாட
பேதையோ டியாது முரையற்க — பேதை
உரைப்பிற் சிதைந்துரைக்கும் ஒல்லும் வகையான்
வழுக்கிக் கழிதலே நன்று."

"நேரல்லார் நீரல்ல சொல்லியக்கால் மற்றது
தாரித் திருத்தல் தகுதி;மற் — ரேரும்
புகழ்மையாக் கொள்ளாது பொங்குநீர் ஞாலங்
கமழ்மையாக் கொண்டு விடும்" (நாலடியார்)

சென்று, இவர்கள் பெனுகொண்டாநகரை யடைந்தபின்பு அங்குள்ள வைசியர்களின் மனை நிலையும், அவர்களின் அரசனுகிய சுசும ஸ்ரேஷ்டியாரின் மனை நிலையும் எப்படி யுளவென்பதை யறிந்து கொண்டு வருவதுடன், அவர்களோடு இன் சொற்களாற் பேசி, எப்படியும் பெண் கொடுப்பதாக அவர்களே ஒப்புக்கொள்ளும் வண்ணம் சாமர்த்தியமாக முடிவு செய்துகொண்டு, முகூர்த்த நாளையும் நிச்சயித்துவிட்டு வந்து சேரவேண்டும். அவர்களிடத்தில் நீவிர் எக் காரணத்தை முன்னிட்டும் சினங்கொள்ளல் தகாது. " சிறுமையுள் நீங்கிய இன்சொல், மறுமையும் இம்மையும் இன்பந் தரும் " என்பது தெய்வப் புலவர் திருவாக்காகும். வன் சொற்கள் பேசி அவர்கள் மனதைப் புண்படுத்திவிட்டுக் காரியத்தைச் சிதறச்செய்தல் கூடாது " என்று பலவாருகப் புத்திமதிகள் கூறி அனுவர்க்கும் வேண்டிய வாகனுதி திரவியங்களைக் கொடுத்து அனுப்பிவைத்தனன்.

பெனுகொண்டாவிற்கு ப்ரயாணம்.

அனைவரும் உடனே ப்ரயாணமாகி விரைவில் வந்து பெனு கொண்டா நகரை யடைந்தனர். ராஜ மகேந்திரம்சென்ற வைசிய வாலிபர்கள் இவ்வாறு வருகின்றனர் என்பதை யறிந்த பெனுகொண்டா வாசிகளாகிய வைசிய விற்பன்னர்கள் உடனே சென்று, (இவர்களுடைய முகக் குறிப்பைப் பார்த்ததும்) " அரசன்மீது மன வருத்தத்துடன் வருகின்றார்கள் " என்று உணர்ந்தவர்களாகி, உடன் வரும் மந்திரிகளையும் சேவகர்களையும் தக்க மரியாதைகளுடன் வரவேற்று ஏராளமான உபசரணைகள் செய்தார்கள். வந்த அரச கார்ய வாதிகள் அவர்கள் செய்யும் உபசாரங்களையும், அவர்கள் காண்பிக்கும் ஆதரவையும் கண்டு, மிகவும் மகிழ்ந்து பூரிப்படைந்து அறுசுவைநிறைந்த அமுதினை யருந்தி, பஞ்ச வாசங் கலந்த அடைக்காய் தரித்து, உலவாக் களிப் புடன் உறங்கி யெழுந்து, அநேக சிற்றுணக்களை யயின்று மகிழ்ந்து, ஆனந்த சாகரத்தில் மூழ்கியவர்களாய், ஏகசுக போகமாய் இருந்து வந்தார்கள்.

ஸ்ரீ வாசவீ விஜயம்.

ஆரும் அத்தியாயம்.

செம்பொனே ! மாணிக்க மணியே! நல் வைரமே !
செல்வமே ! பொற் புதையலே !
சீரியமெய் யன்புமிகு தாய்தந்தையே! இனிது
திகழருட் குருவி னுருவே !

உம்பர்பணி தெய்வமே ! என்னிட்ட தெய்வமே !
ஒப்பிலாக் குல தெய்வமே !
உருகிநெகிழ் மனதினெடு முனதுதிரு வடிபரவு
முத்தமர்க் கருள் தெய்வமே !

அம்புவியி லமரவாழ் வீந்திடுந் தெய்வமே !
அருள்ஞான வமுத நிறைவே !
அற்புத மனோலய விளக்கினொளியே ! எங்கு
மாகிநிறை கின்ற வறிவே !

நம்பிநித முந்தொழுது போற்றுமடி யேற்குனது
நற்பத மளித்தருள் கவே !
நலிவினை யகற்றிநற் சிற்சுகப் பெருவாழ்வை
நல்கியினி தாண்டருள் கவே !!

ஆரும் அத்தியாயம்.

*

உணவோ டுடையுலக மாலன்றே வெல்லாங்
கணமே மறையுமெனக் காண்.

ஓம்

ஸ்ரீ வாசவீ விஜயம்.

ஆரும் அத்தியாயம்.

விக்கிரம வைசியர்கள் மீண்டு கூடுதலும், அக்கொடிய அரசன்நிலை அம்பிகைக் குணர்த்தலும்.

விஞைப்பயனுற் பலமுறையும் பிறந்துபிறந்
துழன்றலுத்து வீதல் வேண்டேம் ;
நினைப்பணிந்து போற்றிசெயு மெமக்குநெடுந்
துயர்தருதல் நீதி யாமோ ?
மனக்குரங்கு புரிந்திடுமோர் போராட்ட
மினிப்பொறுக்க மாட்டே மம்ம !
தினைத்துணையுந் தாமதியா தருள்புரிந்து
மெய்யின்பந் தினைக்கச் செய்வாய்.

இரகசியக் கூட்டம்.

விஷ்ணு வர்த்தனனுடைய மனோநிலை எவ்வாறுளதென் பதையும், அவனுடைய மனோநிலையை அறிய வேண்டி நமது வைசிய யுவர்கள் இராஜ மகேந்திராபுரி சென்றிருந்த காலையில் அவண் நிகழ்ந்த விவகார விஷயங்கள் யாவை. யென் பதையும் விபரமாகக் கண் டறிந்துகொண்டு, அதற்குத் தக்க யோசனைகளைச் செய்ய வேண்டுமென்று நினைந்து நிச்சயித்த வைசிய புங்கவர்கள், உடனே எல்லா வைசியர்களுக்கும் தெரியப்படுத்தி தேவாலயத்திலே வெகு

விரைவில் ஓர் இரகசிய சபைகூட்டி, அரசனிடம் சென்றுவந்தவர்களை யழைத்து, ஆங்கு (ராஜ மகேந்திராபுரியில், அரசவையில்) நடந்தசகல விருத்தாந்தங்களையும் சாங்கோபாங்கமாக விசாரித்துணர்ந்து, மேற் கொண்டு நடைபெறவேண்டிய விஷயங்களை ஆலோசிக்கலாயினர்.

அரசற்குப் பெண்தரல் நலமெனல்.

அப்போது ஒருசிலர் எழுந்து நமது கன்னிகையை அவ்வரசனுக்குக் கொடுத்தா லென்னை? அவனே மகா பராக்ரமசாலி; சத்ய சந்தன்; ஜீவ ரக்ஷகன்; ஏழைகளைக் காப்பவன்; நல்ல தார்மீக சீலன்; சிறந்த உதார குணன்; த்யாக புத்தி மிகுந்தவன்; பரோபகார சிந்தையும் ஜீவகாருண்யமு முடையவன்; மேலாங் கலைத்திறனும் விழுமிய ஒழுக்கமு முடைய வன்; தெய்வபக்தி மிகுந்தவன்; யாவத் ஜனங்களுக்கும் யாதொரு ஆபத்தும் நேராவண்ணம் செவ்வனே அரசாட்சி புரியும் ஆற்றல் வாய்ந்தவன். அப்படிப்பட்ட மன்னனுக்கு மிக்க மரியாதையோடும் பெருமையோடும் பெண்ணைக் கொடுத்துப் பீடுற வாழலாம். அவ் வாறு செய்வது சாஸ்த்ர விரோதமுமன்று. ஆதலால், நமது பெண்ணை ஆக்ஷேபணையின்றித் தந்து பெருமிதமாகப் பெரும்புவி யதனில் பிறங் குவோம்" என்றனர்.

ஒருசிலர் மறுத்தல்.

பிறகு வேறுசிலர் எழுந்து, அவர்களைக் கையமர்த்தி, "ஒரு வருணத்துப்பெண்ணை மற்றோர் வருணத் துப் புருஷனுக்குத் தருவது கலியில் கூடாது" என்று பராசர ஸ்மிருதியிலே கூறப்படுகின்ற மையால், அந்தவிதிக்கு மாறுக நடந்து, நாம் ஏன் நரகத்தையடைய வேண்டும்? நமது குல வொழுக்கமே புகழும் புண்ணியமுந் தரத்தக்க தாதலால், நாம்அரசனுக்குப் பெண்தருவது நியாயமன்று" என்றனர்.

அரச சம்பந்தம் அரிதெனல்.

அவற்றைச் செவியுற்ற வீரநாராயணபுர வாசிகளாகிய கமலாட்சன், விசாலாட்சன் என்கிற இருவரும் "க்ஷத்திரிய குல திலகனைய உத்தம அரசனுடைய சம்பந்தம் கிடைப்பது அரிதாயிற்றே. பூர்வ புண்ய பாக்ய மிருந்தால் தானே கிடைக்கப் பெறுவோம்? அத்தகைய அரும் பெரும் பாக்யம் நமக்குக்

கிடைத்தும், நாம் அப் பாக்யத்தைக் காலால் இடறித் தள்ளுதல் போல வெறுத்தல் அழகல்ல" என்றனர்.

பத்ரையன் பகருமுரை.

அதற்கு, ஜகந்நாதபுர வாசியாகிய பத்ரைய ஸ்ரேஷ்டி என்கிற பாரத்வாஜ குலோத்பவன் கோபித்து எழுந்து, "தன்னுடைய வருணச்சிரம தர்மங்களைக் கைநழுவவிட்டு, மாறுபட்ட தீயொழுக்கங்களைக் கைப்பற்றுவோன் நரகத்தை யடைவான் என்று சிறந்த நூல்களனைத்தும் சீரூற வெடுத் தோதுகின்றன வாதலின், நம் குலாசார முறைகளைக் கடைப்பிடிப்பதே நமக்கு மேன்மை யாகும்" என்று நவின்றனன்.

க்ஷத்ரியர் விஷ்ணு அம்சம் எனல்.

இதுகேட்ட மற்றுஞ் சிலரெழுந்து, உலகிற் சிறந்து விளங்கும் அரசர்கள் விஷ்ணு அம்சம் என்று மேலோர் கூறுவர். மிக்க பராக்ரமசாலியாய் திக்விஜயம் செய்து, ஜயங்கொண்டு, அநேக குறு நில மன்னர்கள் புடைசூழ்ந் நிறைஞ்சக் கொலு வீற்றிருந்து குவலய மோம்புங் கொற்றவனுகிய இவ்விஷ்ணுவர்த்தன மகாராஜன், ஆசார சீலத்திலாயினும், வீர பராக்ரமத்திலாயினும், கல்வி கேள்விகளிலாயினும், எவ்விதத்திலாயினும் நம்மிற் சற்றுங் குறைந்தவனில்லை. மேலும் க்ஷத்ரிய வம்சோத்பவன். விஷ்ணுவர்த் தனன் என்னுந் திருநாமமே அவனுடைய பெருந்திறனை விளக்குகின் றது. அப்படியிருக்க, நாம் பெண்ணைக் கொடுப்பதற்கு சந்தேகப் பட்டு யோசித்தல் நன்றல்ல" என்றனர்.

தருவது தகாதெனத் தர்க்கித்தல்.

அதன் பின்னர் வேறு சிலர் எழுந்து "பெரியீர்காள்! நீவிர் இவ்வாறு நமது வைஸ்யகுல தர்மத்தையே போக்கிக்கொள்ளத் தக்க வார்த்தைகள் கூறுவது சரியல்ல. அரசர்கள் க்ரூர குண முடையவர்களாயும், கர்வ முடையவர்க ளாயும், தாமே மேம்பட்டவர்களென எண்ணி ஏனையோர் பொருள் களை அபகரிக்கக்கூடியவர்களாயும், சிற்சில சந்தர்ப்பங்களில் ஆசார ஹீனமுடையவர்களாயும், பிறர் மனைவியர்களை இச்சிக்கக்கூடியவர்க ளாயும், திடீரென மூர்க்கங் காண்பிக்கக்கூடியவர்களாயும், சமயம்

பார்த்துக்கொண்டே யிருந்து சிலரை வஞ்சித்து மோச முறையில் நாடு நகரங்களையும், சொத்து சுதந்தரங்களையும், ஆவியையுங்கூட அபகரிக்க வழி பார்ப்பவர்களாயும், சில வேளைகளில் பழி பாவங்களுக்கு சற்றும் அஞ்சாது அநியாய மார்க்கத்திற் ப்ரவேசிக்கக் கூடியவர்களாயும் மாறுதல் கூடும். நாம் அப்படிப்பட்ட மூர்க்க குணங்களை எக் காரணத்தாலும் எப்போதுங் கொள்ளமாட்டோம். ஆதலால் அரசர்களுக்கும் நமக்கும் நடக்கும் சம்பந்தம் அயுக்தம்தான்" என்றனர்.

ரிஷிகளும் அங்கீகரித்தாரெனல்.

அதுகேட்ட பின்னுஞ் சிலரெழுந்து, "அவ்வா றிருக்குமேயானால், 'ப்ராம்மணர்கள் க்ஷத்ரிய மூன்று குலத்துப் பெண் மணிகளையும், க்ஷத்ரியர்கள் வைசிய சூத்ர மாதர்களையும், வைசியர்கள் சூத்ர மங்கையரையும் மணப்பதும் வேத சம்மதம்.' என்னும் ஆசாரத்தை ரிஷிகளுங்கூட அங்கீகரித்திருப்பார்களா? அவர்கள் ஆக்ஷேபணை சொல்லாமல் அங்கீகரித்துள்ளபடியால், நாம் இந்நிருபேசனுக்கு நமது கன்னிகையைத் தடையின்றித் தரலாம்" என்றனர்.

இத்தகைய சம்பந்தம் ஒவ்வாதெனல்.

இவைகளைக் கேட்டு வெகுண்ட வாலிபர்கள் சிலர், "நமக்கும் அந்த பூபதிக்கும் சம்பந்தம் ஒருக்காலும் ஈடுபடாது. ஏனெனில், தர்ம தத்பரர்களுக்கு தர்ம தத்பரர்களோடும், அதர்மவான்களுக்கு அதர்மவான்களோடும், தனிகர்களுக்கு தனிகர்களோடும், வறிஞர்களுக்கு வறிஞர்களோடும், அறிஞர்களுக்கு அறிஞர்களோடும், யோக்கியர்களுக்கு யோக்கியர்களோடும், கொடியவருக்கு கொடியவர்களோடும், ஸ்நேக சம்பந்தாதிகள் யுக்தமாகுமே யன்றி, இவ்வரசனுக்கும் நமக்கு முண்டாகும் சம்பந்தம் உசிதமாகாது" என்றனர்.

பெண் தந்தால் பெருமை எனல்.

உடனே இன்னும் சிலரெழுந்து, "ஓ பால வைசியர்களே! நீர் சொல்வது நியாயந்தான். ஆயினும் நாங்கள் கூறுவதும் நியாய விரோதமல்லவே. முற்காலத்தில், உத்தம அந்தணரும், சகல சாஸ்த்ர பரிஜ்ஞான மிகுந்தவரும், சர்வஜ்ஞ பூ ஜி த ரு ம ரா கி ய சுக்ராச்சாரியர்

தமது சௌந்தர்யமிக்க புத்ரியாகிய தேவயானி யெனும் யுவதியை சந்த்ரகுல வேந்தனாகிய யயாதிக்குத் தந்த சரிதையை நீங்கள் கேட்டிலீர் போலும்? அத்தகைய உயர்ந்த அறிவுடைய சுக்ராச்சாரியாரே க்ஷத்ரியனுக்குப் பெண்தர முன்வந்த போது நாம் ஏன் தருதல் கூடாது? தவிர அவ்வரசன் உயர்ந்த யானைகளும், குதிரைகளும், ரதங்களும் அளவிறந்த சேனை சமூகங்களும், விலைமதிக்க வியலாத நவரத்னக்குவியல்களும், ஏராளமான ஸ்வர்ணபரணங்களும், தன தான்யாதி சம்பத்துக்களும் உடைய மஹாப்ரபுவேயன்றி, நம்மில் தாழ்ந்தவனல்ல. அன்றியும், நமது பெண்ணை அம்மன்னனுக்குத் தந்ததும், 'அரச சம்பந்திகள்' என்று இப்புவி முழுதிலும் நமக்கு மிகுந்த செல்வாக்கு கிடைக்கும். அநேக தர்ம கைங்கர்யங்களை நாம் நிர்ணயமாகச் செய்து முடிக்கலாம். சாஸ்வத தர்மங்கள் அநேகமாக எங்களும் நிறுவலாம். ஏராளமான பொருட் செலவில் மிகச் சிறந்த பல யாகாதி க்ருத்தியங்களையும் நடத்திப் பெருங்கீர்த்தி பெற்றுய்யலாம்.. அவைகளையெல்லாம் நன்கு எண்ணிப் பாராமல், ஏதோ சிறு யோசனைகளைச் செய்து நீவிர் இவ்வாறு பெண்தர மறுப்பது சரியாகாது" என்றனர்.

அதுகேட்டுப் பின்னும் சிலர், "ஆம்; ஆம்; அது நியாயந்தான். பூர்வத்தில் கண்வ மஹரிஷியின் தனயையாகிய சகுந்தலையை துஷ்யந்த மகாராஜன் திருமணம் புரிந்து, அப்பெண்மணியின் வயிற்றுதித்த பரதனுக்கே பட்டம் சூட்டியதும், பரதர் (வலைஞர்) குலத்துதித்த பரிமளகந்தி யென்னும் வனிதையின் எழில் கண்டு மயல் கொண்ட சந்தனு மகாராஜன், அம்மங்கையை மணந்து, அம்மங்கையின் மைந்தர்களாகிய சித்ராங்கதன், விசித்ரவீரியன் என்பவர்க்கே பட்டத்தை யளித்ததும் சரித உண்மைகளாகும். இப்போது நமது பெண்ணை மணக்கவிரும்பும் இவ்வரசனும் நம் பெண் வயிற்றுப் பிள்ளைக்குத்தான் பட்டந்தருவதாகக் கூறுகின்றமையாலும், நாம் சற்றும் ஆக்ஷேபணையின்றிப் பெண்ணை விவாகம் செய்து கொடுத்துப் பெரும்புகழ் பெறுவதே சாலச்சிறந்ததாம். இதனை விடுத்து, வேறு பல யோசனைகளைச் செய்து கொண்டிருப்பது எமக்குச் சிறிதும் பிடிக்கவில்லை" என்றனர்.

சக்ரவர்த்திப் பட்டம் கிடைக்குமெனல்.

இவைகளைச் செவியுற்ற மற்றும் சிலர், "ஐயா! நீங்கள் அவசரப்படவேண்டாம். நம் பெண் வயிற்றுப் பிள்ளைக்கே அம்மன்னன் பட்டந் தந்த போதிலும், அதனால் நம் வைசிய மரபுக்குப் பெருஞ் சீர்த்தி கிடைக்குமென்று நாம் எதிர் பார்ப்பது நியாயமல்ல. ஏனெனில், நாற் குலத்துள் உயர் குலத்தாணும் இழிகுலப் பெண்ணும் கூடிப்பெற்ற பிள்ளையை அநுலோமன் என்றும், உயர்குலப் பெண்ணும் இழி குலத்தாணும் கூடிப்பெற்ற பிள்ளையை ப்ரதிலோமன் என்றும், அநுலோமத்தாணும் பிரதிலோமப் பெண்ணும் பயந்த பிள்ளையை அந்தராளன் என்றும், அநுலோமப் பெண்ணும் ப்ரதி லோமத் தாணும் ஈன்ற பிள்ளையை விராத்தியன் என்றும் கூற வேண்டும் என நூல்களில் பேசப்படுகின்றமையால், நமது பெண்ணை மணக்க விரும்பும் அரசன் தான் சொல்லும் வண்ணமே நமது பெண் வயிற்றுப் பிள்ளைக்குப் பட்டங்கொடுத்த போதிலும், அப்பிள்ளையை 'அநுலோமன்' என்றுதான் கொள்ள வேண்டுமே யன்றி 'வைசியன்' என்று கொள்ள இயலாது. ஆகலின் அவனால் நம் வைசிய மரபுக்குச் சிறந்த கீர்த்தியுண்டாகுமென்று எண்ணுவதற் குச் சிறிதும் இடமில்லை. தவிரவும், 'அரச சம்பந்தம் ஏற்பட்ட பிறகு அநேக தர்ம ஸ்தாபனங்களையும் சிறந்த யாகங்களையும் நடத்திக் கீர்த்திபெற இயலும்' என்று கூறுகிறீர்கள். அஸ்வமேதம், கோமேதம், ராஜசூயம் முதலிய பெரிய யாகங்களைப் புரிதலும், அதியற்புதமான மந்த்ர சக்தியால் தேவர்களை வரவழைத்து, அவர் களால் மகப்பேறு பெறலும், ஸ்ரார்த்த காலத்தில் மாம்ஸதானம் செய்தலும் இக்கலியுகத்திலே நிஷேதம் என ஒதுக்கப்பட்டிருப்பதாக ஸ்மிருதிகள் கூறுகின்றமையினால், அவைகளுக்காக நாம் யோசிக்க வேண்டிய அவசியமேயில்லை. 'நாம் அவ்வரச சம்பந்தம் செய்து கொண்டுதான் த்ரவிய வந்தர்களாகவும் கீர்த்திமான்களாகவும் கல்விமான்களாகவும் ஞானிகளாகவும் மாறவேண்டும்; இன்றேல் மூடியாது' என்ற நிலையில் நாமிருக்கவில்லை. ஆதலால் அதைப்பற்றி யும் நாம் யோசிக்க வேண்டிய அவசியம் இல்லை.

அதனால் நமக்குப் பெருமை யின்றெனல்.

அதுவுமன்றி, கலியின் காரணத்தால் இனி புளிந்தர் பர்பரர் சூரர் ஸகர் யவனர் சிங்களர் காந்தாரர் மத்ரகர் மேச்சர் கிராதர்

முதலான குரூர குணமுடைய இழிகுலத்தார்களும் அரசர்களாய் வரநேரும். இப்போது நாம் இந்த அரசன் க்ஷத்ரிய குலச் சிரேஷ்டன் என்றெண்ணி, நமது பெண்ணைக் கொடுத்தால், பிறகு அவ்விழி குலத்தினர்க்கும் 'அரசன்' என்ற முறையில் இவனுக்குப் பயந்ததைவிடப் பன்மடங்கு பயந்து பெண்ணைக் கொடுக்கவேண்டி வரும். இன்றேல் அவர்கள் அதர்மம் அநியாயம் திருட்டு கொடுமை அபசாரம் ஆசார ஹீனம் பாபகிருத்தியம் பஞ்சமாபாதகம் முதலிய கோரச் செயல்களுக் காளாகி, கொஞ்சமும் அச்சமின்றி மனத்துணிவுடன், (ஸத்கர்ம சீலர்களாயும் தேவ பக்தர்களாயும் ஞானிகளாயும் ஆசார சீலர்களாயும் உள்ள) வைசியோத்தமர்களின் புத்திரிகளை விரும்பி, "இதற்கு முன்னிருந்த உங்கள் மூதாதையர்கள் விஷ்ணு வர்த்தன மன்னனுக்குப் பெண் தந்திருக்கையில், மன்னர்களாகிய நாங்கள் மட்டும் ஏன் உமது குல யுவதிகளை வரிக்கக் கூடாது?" என்று பலாத்காரமாக நம் மரபின் பெண்களைத் தூக்கிக் கொண்டே போய் விடவும் நேரும். அவற்றிற் கெல்லாம் காரணமாயுள்ள இச் செயலுக்கு நாம் சற்றும் இடந்தருதல் தகாது. ஆதலால் நமது பெண்ணை நம் குலத்துதித்த ஒரு சிறந்த வாலிபனுக்கு வேத விதிப்படி திருமணம் செய்வித்துக் கண்கள் குளிரக் கண்டு ஆனந்தமெய்தலே நலம். இவைகளை யெல்லாம் நன்கு ஆலோசியாமல் எண்ணிப் பாராமல் அவசரப்பட்டு வார்த்தையாடுதல் நலமன்று" என்றனர்.

அரசனுக்குப் பெண்தர அநேகர் சம்மதித்தல்.

அநேகர்க்கு இவ்வுரைகள் நியாயமெனத் தோன்றவில்லை. நியாயமானதாயினும் இச்சமயத்திற்குத் தகுந்த யோசனையாகத் தோன்றவில்லை. ஆதலால் அவர்கள், "நீங்கள் கூறும் யோசனை இச்சமயத்திற்குத் தக்கதல்ல. ஏனெனில் நாம் அவ்வாறு இந்த அரசனுக்குப் பெண் தர மறுத்தால் அம்மன்னனுக்குச் செப்பொணாத கோபமுண்டாகும். அதனால் பலவித ஹானிகள் சம்பவிக்கும். நமது குல மக்களுக்கும் நமது தலைவராகிய குசுமஸ்ரேஷ்டியாருக்கும் நமது பதினெண் பட்டணங்களுக்கும் தீங்கு நேரிடும். இவற்றை யெல்லாம் எண்ணிப்பார்த்தால் நாம் எவ்வித ஆலோசனையுமின்றிப் பெண்ணை மன்னனுக்குக் கொடுத்து விடுவதே நலம்" என்றனர்.

நூற்றிரு கோத்திரத்தோர் நுவலுமுரை.

இவ்வார்த்தைகள் சிலருடைய செவிகளில் நாராசம் போலச் சுட்டன. நூற்றிரண்டு கோத்திரத்தவர்களுக்கு பெண்ணே அரசனுக்குத் தருவது சரியல்ல என்று நிச்சயமாய்ப் தோன்றியது. அவர்கள் மற்றவர் களைப் பார்த்து, "நாம் அரசனுடைய கொடுமைக் காகப் பயந்து நியாய விரோதமாக நடந்து கொண்டு நமது குலப் பெருமைக்கு ஹானியுண்டாகுமாறு செய்வது சற்றும் தகாது. பூமியில் பிறந்த ஒவ்வோருயிரும் இறப்பது நிச்சயம். * மானத்தைவிட உயிர் பெரிதன்று. உயிருக்குப் பயந்தோ, செல்வம் முதலியவற்றிற்குப் பயந்தோ, நாம் நமது குலாசார தர்மத்தை விடுத்து, அதனின்றும் வழுவி, நமது மரபிற்கே ஒரு அபகீர்த்தியை விளைவிக்கக்கூடிய முறையை அனுஷ்டிக்க நாங்கள் ஒருக்காலும் பிரியப்படோம். ஒருவன் பூமியில் ஜனனமெடுத்தால் தன் குலப் பெருமையை அபிவிருத்தி செய்ய வேண்டுவதுதான் அவன் கடமையே யன்றி, குலத்துக்கு இழிவை யுண்டாக்குவது பெருமை யன்று. என்றும் மாறுத ஓர் களங்கத்தை யுண்டாக்குவதற்கா நாம் இக்குலத்திற் பிறந்தோம்? இல்லை. இல்லை. ஒருக்காலும் இல்லை.

ஆதலால் இவ்விஷயத்தில் நமக்கு எத்தகைய தீங்குகள் நேருவதாயினும் சிறிதும் பின்வாங்கக்கூடாது. நமது குல தர்மத்தைக் காக்கும்போருட்டு உடல் பொருள் ஆவி அனைத்தையும் பரிபூர்ணமாக அர்ப்பணம் செய்ய நம்மவர்களில் ஒவ்வோருவரும் தயாராயிருத்தல் வேண்டும். நடப்பது நடந்தே தீரும். எதற்கும் அஞ்ச வேண்டுவதில்லை.

---

* "மான மழிந்தபின் வாழாமை முன்னினிதே;
தான மழியாமைத் தானடங்கி வாழ்வினிதே;
ஊனமொன் றின்றி யுயர்ந்த பொருளுடைமை
மானிடவர்க் கெல்லா மினிது." (இனியவை நாற்பது)

"நில்லா வுயிர்கொடுத்து நின்ற புகழ்படைக்கை
நல்லார் கடன்." (பெருந்தேவனார் பாரதம்)

"கடமா தொலைச்சிய காணுறை வேங்கை
இடம்விழ்ந்த துண்ணு நிறக்கும் — இடமுடைய
வானகங் கையுறினும் வேண்டார் விழுமியோர்
மான மழுங்க வரின்." (நாலடியார்)

நாம் 'அரசனுக்குப் பெண்கொடுக்க முடியாது' என்று தாராளமாகச் சொல்லி யனுப்பிவிடுவோம். அதற்காக நம்மை அம் மன்னன் ஒன்றும் செய்துவிட முடியாது. ஒருக்கால் அவ் வேந்தன் நம்மீது சினந்து யுத்தத்திற்கு வந்தாலும் சரி. நாம் தயாராக இருத்தல் வேண்டும். நமது சேனைகளைக்கொண்டு போர்புரிந்து கண்டிப்பாக வெற்றி பெறலாம். அப்படி அம் மன்னனைப் போரில் கொன்று ஜயம் பெறுவதில் யாதொரு பிசகுமில்லை. எத்தகைய காரணமுமின்றி நம்மைச் சிறையிலிடவும், நமது குலமணியாகிய வாசவியைத் தீயவழி யில் அபகரித்துச் செல்லவும், நம்நகரத்தில் தீயிடவும் சற்றுந்தயங்காது துணிந்து உத்தரவிட்ட அக்கொடியனைக் கொல்வதால் என்னதோஷம்? நம் கைகளால் மாண்டாலாவது அவனுடைய பாபங்கள் பலவும் இத்துடன் தொலைந்து மறுமையில் சுகம் பெறுவான். அதனல் நாம் அவனை நரக வாசனைக்கு அனுப்பாமல் சுவர்க்க லோகத்துக்கு அனுப்பும் பெரிய உதவியையே செய்தவர்களாவோம். நாம் கண் டிப்பாய் ஜயம் பெறுவோம். கடவுள் துணை நமக்குக் கட்டாயம் கிடைக்கும். இது உறுதி. இதற்குக் கொஞ்சமும் அஞ்சவேண்டிய அவசியமில்லை. ஒருக்கால் நமக்கு வெற்றியின்றி மாளினும் வீர சொர்க்கம் நிச்சயம். ஆதலால் நமது பெண்ணை மன்னனுக்குத் தருவதென்பது ஒருக்காலும் இயலாது. இதுவே நிச்சயம். இதுவே உறுதி. இதுவே சத்தியம்" என்றனர்.

அநேகருக்கு (அறுநூற்றுப் பன்னிரண்டு கோத்திரத்தவர் கட்கு) இவ் வார்த்தைகள் பிடிக்கவில்லை.

ஏனையர் பிரிதல். அரசனுல் ஏற்படும் தொந்தரவுகளுக் காளாக அவர்கட்குச் சம்மதமில்லை. அவர்கள் அனைவ ரும் உடனே எழுந்து, "உங்கள் யோசனை ஒன்றும் எமக்குப் பிடிக்க வில்லை. ஒரு பெண்ணின் விஷயத்தில் ஆலோசனையின்றிப் பேசிக் கொடிய துன்பத்திற் காளாகப் பார்க்கின்றீர்கள். உயிரைக் கொடுக் கவும் சம்மதித்துவிட்டீர்கள். எமது உயிரைக் கொடுக்கவோ, அல்லது அரசனுடைய பிற்காலத் தொந்தரவுகளுக் கிலக்காகவோ எமக்குச் சம்மதமில்லை. ஆகையால் நாங்கள் இனி இங்கு வாழ்வ தற்கு இஷ்டமில்லை. இத்தேசம் விட்டகன்று எங்கேனும் சென்று பிழைத்துக்கொள்ளுகிறோம். நீங்கள் எங்களைக் 'குலத் துரோகிகள்'

என்று வைதாலும் சரி. வேறு எவ்விதமாகக் குறை கூறினாலும் சரி. அவற்றைப்பற்றி எமக்குக் கவலையில்லை. உயிர் இருந்தால் உப்புமாறிப் பிழைக்கலாம். உயிரை விடுவதால் வரும் லாப மொன்றுமில்லை. அரசனிடம் விரோதம் செய்துகொண்டு துன்பமுறுவதைவிட வேறு இடம் சென்றுவிடுவதே நல்லது.

'சமயத்தில் உதவி செய்யாமல் பிரிந்துவிட்டார்களே' என் றெண்ணி நீங்களெம்மை அலக்ஷியம் செய்துவிட்டாலும் எங்களுக்குக் கவலையில்லை. இனிமேல் உங்கள் தயவிருந்து எமக்கு ஆகப்போவது ஒன்றுமில்லை. ஒருக்கால் அரசனுல் உமக்கு எவ்வகைத் தீங்கும் நேராது சௌக்யமாய் வாழ்வீரானுல், அக் காலத்தில் எம்மோடு நீர் சம்பந்தா சம்பந்தங்கள் செய்துகொள்ளாவிடினும், வேறு எவ்வித சலுகையும் காண்பிக்காவிடினும் அதைப்பற்றி எமக்கு பாதகமில்லை. இவைகளையெல்லாம் விரும்பி உம்முடன் உறைந்து பலவகைத்துன்பங் களை அனுபவிக்க எமக்குச் சம்மதியில்லை. ஆதலால் நாங்கள் சென்று வருகிறோம்" என்றுகூறி, குசும ஸ்ரேஷ்டியார் மிக்க வருத்தத்துடன் இருக்கையில், அவருடைய பதில் மொழிகளையும் எதிர்நோக்கி நில்லா மல் தத்தமது மனைவி மக்களுடன் விரைந்து நடந்தனர்.

இறுதியில் இயம்பும் உறுதி.

அவர்கள் அவ்வாறு சென்றதைக் கண்ட நூற்றிரண்டு கோத்திரத்தவர்களும் குசும ஸ்ரேஷ்டியாரைப் பார்த்து, "மஹா ப்ரபோ! இவர்கள் போய் விட்டார்களே! என்ற கவலையே தேவரீருக்கு ஒரு சிறிதும் வேண்டியதில்லை. நமது நாட்டுக் காகவும், சமூகத்துக்காகவும், சமயத்திற்காகவும், ஞானயத்திற்காகவும், மானத்திற்காகவும், நியாயத்திற்காகவும், அறத்திற்காகவும், அன்பிற் காகவும், அருளுக்காகவும், சத்தியத்திற்காகவும், தாய் தந்தை குரு வாக்ய பரிபாலனத்திற்காகவும், ஆன்றோர்களுக்காகவும், நண்பர்களுக் காகவும், பக்திக்காகவும், நமது உயிரையும் (பரிபூர்ண வாழ்க்கையை யும்) கொடுக்கத் தயாராயிருத்தல் வேண்டும்.

நமது குலப் பெருமை விளங்கவேண்டுமென்றால், நீதி நிலைத்து நிலவவேண்டுமென்றால், நாம் உண்மையான த்யாகிகளாயும், சத்ய சந்தர்களாயும், சேவையிற் சிறந்தவர்களாயும், தரும சீலர்களாயும்,

அன்புருக் கொண்டோர்களாயும், பாவத்தை யறியாதவர்களாயும், பரமோ தர்மமாகிய அஹிம்ஸையைக் கைக்கொண் டொழுகுபவர்க ளாயும், குலாசாரத்தைக் காப்பவர்களாயும் இருப்பது உண்மையா னால், நமது குல சேவைக்காகவும், ஸத் தர்மங்களுக்கு ஹானி யுண்டா காமல் காப்பாற்றுவதற்காகவும் நமது உயிரையும் அர்ப்பணம் செய்யச் சற்றும் தயங்குதல் கூடாது.

நாம் அனைவரும் இதுகாறும் செய்துவந்த தான தருமங்களும், பரோபகாரங்களும், குலாபிமானச் சேவைகளும், பொது நலத் தொண்டுகளும், தெய்வப் பணிகளும், சேர்ந்து இத்தகைய தருணத் தில் நம்மைக் காப்பாற்றுமேயன்றித் தீங்கை விளைக்காவாகலின் நாம் சற்றும் ஆயாசமுற வேண்டுவதில்லை. அரசனுக்கு ஒருக்கால் நல்ல யோசனை தோன்றி, நமது பெண்ணின் ஞாபகத்தை மறந்துவிடுவா னகில் நமக்கு எவ்வித யோசனைகளுமே தேவையில்லை. அவ்வாறின்றி, 'கண்டிப்பாக மண்ந்தே தீருவேன்' என்ற உறுதிகொண்டு கொடிய மார்க்கத்தில் பெண்ணைக் கைப்பற்றிச் செல்ல முயற்சித்தானுயினும், அதற்குத்தக்க வழிகளால் தொந்தரவு செய்வானுயினும், நமது பெண் தன் உயிருள்ளவரையில் அவன் கைவசமாகச் சிக்கிவிடும் என்று நாம் எண்ணவேண்டிய அவசியமே யில்லை. நம் பெண்ணே மஹா புத்திசாலி. சகல கலைகளும் ஆய்ந்து தெளிந்த சீரிய அறிவைப் படைத்த செல்வச் சிரோமணி. அப்பெண்ணுக்குத் தெரியாத நியாய மும் தர்மமும் நீதியும் ஆலோசனையும் சமயோசித புத்தியும் நுட்பமும் திட்பமும் எவருக்குமே தெரியாது. ஆதலால் நாம் யாதொருவித மனக் கவலையுமின்றி தெய்வத் துணையை நம்பி, 'அரசனுக்குப் பெண் தர முடியாது' என்று நிச்சயமாகச் சொல்லி விடுவதுதான் சரி" என்றனர்.

அமைச்சர்கள் ஆலோசனை.

இவற்றையெல்லாம் சாவதானமாகக் கேட்டுக்கொண்டிருந்த குசும ஸ்ரேஷ்டியாரைப் பார்த்து அவருடைய மந்திரிகள், "எம் குலசேகரராகிய குண சீலரே! இவ் விஷயத்தில் நமது குல விளக் காகிய வாசவாம்பிகையின் மனே பீஷ்டம் எப்படி யுள்ளது? என்பதை நாம் முதலில் கேட்டறிந்து, அதன் பிறகு ஏனைய விஷயங்களைத் தீர்மானிப்பது நலம்" என்றனர்.

அதுகேட்ட குசும ஸ்ரேஷ்டியார் "ஆம்; ஆம்; அதுவும் தக்க யோசனைதான்" என்று கூறி உடனே ஒரு தோழியை யனுப்பி, பெண்கள் சமூகத்தில் குசுமாம்பிகையார்க் கருகில் அமர்ந்திருந்த குணக் குன்றுகிய வாசவீ மணியை வரவழைத்து, தனிப்பட எல்லா விஷயங்களையும் விபரமாக எடுத்துரைத்து, "உனது அபிப்ராயம் யாது? என்பதை எமக்குத் தெளிவுறக் கூறுதல் வேண்டும்" என்றனர்.

அம்பிகையை வினவல்

ஸ்ரீ வாசவீ விஜயம்.

ஏழாம் அத்தியாயம்.

உண்மையன் பாந்தகளி தன்னிலே யார்வநெய்
யூற்றிமன மாந்திரி யினில்
உணர்வரிய மெய்ஞ்ஞான வங்கிசேர்த் தேதெய்வ
வொளிவீசு தீப மேற்றி

தண்மைநிலை பெற்றதொரு சாந்தமெனு மேடைமேற்
சகலருங் காண வைத்தே
ஜகமதை மறந்துடல நினைவினை மறந்துனருள்
தன்னிற் கலந்து கொண்டே

திண்மைபெறு மோனநிலை மேவியரு ளமுதைத்
தெவிட்டா தருந்தி யினிதே
திகழுமா றருளுவாய்; வேதாந்த வடிவமே!
சித்தாந்த சித்து ருவமே!

நுண்மையினும் நுண்மையே! நோக்கரிய வஸ்துவே!
நூல்பலவு மான வறிவே!
நூதன புராதன சுகோதய விலாசமே
நுகர்வரிய ஞான வமுதே!

ஏழாம் அத்தியாயம்.

[முதற் பகுதி]

*

முத்திநலந் தந்தருளி மூவுலகுங் காக்குமருட்
சத்திபதத் தைத்துணையாய்ச் சார்.

ஓம்

ஸ்ரீ வாசவீ விஜயம்.

ஏழாம் அத்தியாயம்.

[முதற் பகுதி.]

ஜகதீஸ்வரீ வாசவாம்பிகையு மாங்கே மகிழ்வோடு ஞானமொழி மழையைவருஷித்தல்.

ஜயஜயவென் றன்பரெலா மொலிமுழக்கத் திவ்யதரி சனமு மீந்து பயமகற்றிப் பிறப்பிறப்புப் பந்தமறக் கடைக்கணிஞற் பரிந்து நோக்கி வியனுலகர் தொழுதேத்தி விளம்புதற்கு மரிதாய [வீட்டுப் பேற்றை மயலறுமெய்த் தவர்போற்றும் வாசவியே மனமுவந்து வழங்கு வாயே.

ஜலம் சூழ்ந்த இப் பூமண்டலத்தையும் இஃதே போன்ற எண்ணற்ற கோடி அண்டங்களையும் எண்ணிலா வுயிர்களையும் தோற்றுவித்து, வாழ்வித்து, குற்றம் நீக்குவித்து, பக்குவம் வருவித்து விளக்கம் செய்விக்கும் சாகூபாத் பராசக்தி (யின் திருவவதாரம்) ஆகிய வாசவாம்பிகையார், குசும ஸ்ரேஷ்டியார் கூறிய மொழிகளைக் கேட்டு, திருத்தந்தையார்க்கு வந்தனம் சமர்ப்பித்துப் பதில் மொழி பகரத்தொடங்கினர்.

அம்பிகை அருள் மொழி.

"அடியேனை அருமையாக ஈன்று வளர்த்து இதுகாறும் ஆதரவு காட்டிக் காப்பாற்றிய அருங்குண சீலராகிய எனது செல்வத் திருத்தந்தையே! தாங்கள் இதற்காக ஒரு சிறிதும் வருந்தவேண்டிய அவசியமே இல்லை. உலகில் எது எது எப்படியெப்படி நடக்கவேண்டுமோ அவை யாவும் அப்படி யப்படியே நடக்குமாறு ஒருவருக்குந் தெரியாது ஒரு அற்புதச் சக்தி நடத்திக் கொண்டு வருகிறது. ஒருவன் தனது ப்ரயத்தனத்தினும் எண்ணத்தினும் சாமர்த்தியத்தினும் எக்காரியத்தையும் நடத்தவோ நிறுத்தவோ இயலாது. எல்லாம் தெய்வச் செயல். ஆகையால் அதைப் பற்றிய கவலை எவர்க்குந் தேவையில்லை.

'அப்படியல்ல; நாம்செய்யவேண்டிய முயற்சிசெய்வதுதான் நலம்; நீதி நிலைப்பதற்காகச் செய்யவேண்டிய கர்மங்களை அசட்டை செய்யும் ஒருவன் அவசியம் செய்ய முயலுதல் வேண்டும்' என்பீரேல், அம்முறையால் யோசிக்குமிடத்து உயிரைவிட மானமே பெரிதாகையால்மானத்தைக் காக்கவேண்டி, குலதர்மத்தை ரக்ஷிக்கவேண்டி, நம் குல மக்கள் அவ்வரசனோடு போர் புரியவும் நேரும். அம்மன்னனுடன் யுத்தம் செய்து வெற்றிக்கொடி நாட்டுவதற்கு நம்மாலியலுமெனினும், இந்த காரியத்திற்காக நாம் அவ்வேந்தனைக் கொல்வது மன்றி, அவனுடைய சேனைகளிலும் நம்முடைய சேனைகளிலும் எண்ணற்ற வுயிர்கள் மாளும். ஒருவித பாவத்தையும் அறியாத அத்தனை உயிர்கள் அநியாயமாய் இறந்துபடும்படிச் செய்வதும் நியாயமன்று. பரமோதர்மமாகிய அஹிம்ஸா நெறியைக் கடைப்பிடித்தொழுகும் மக்களே சிறந்தவர்களாவர்.' ஆதலின் நமக்கு யுத்தமும் பிறவும் தற்போது தேவையில்லை. தெய்வச் செயலின் வண்ணம் யாவும் நடைபெறட்டுமென்று விட்டுவிடவேண்டும். தவிரவும் † வீரமற்ற ஒருவன் எதிரிமேற் பாயாது பொறுத்தல்

† "இளையா னடக்க மடக்கம்; கிளைபொருள்
இல்லான் கொடையே கொடைப்பயன்; — எல்லாம்
ஒறுக்கு மதுகை உரனுடை யாளன்
பொறுக்கும் பொறையே பொறை."

(நாலடியார்)

பெருமையன்று. உண்மை வீரமும் தகுந்த சேனபலமும் உள்ள ஒருவன் எதிரியைக் கொல்லாது விடுத்தால் அதுதான் பெருமையுடைத்து. ஒறுத்தார்க் கொருநாளை யின்பம்; பொறுத்தார்க்குப் பொன்றுந் துணையும் புகழ். இன்ஞ செய்தாரை யொறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல். நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது அன்றே மறப்பது நன்று. ஆகையால் நாம் இவ்வரசனிடம் விரோதங் கொண்டு போர் புரிந்து வெற்றி பெற நினைப்பது உசிதமன்று.

மானிடப் பிறவி தாங்கிப் பூமியில் பிறந்தபின் இத்தகைய யுத்தங்களில் வெற்றி பெருவதால் அடையும் இன்பத்தைவிட, இன்னும் ஒரு யுத்தத்தில் வெற்றி பெற்றால் அளவிடற்கரிய இன்பத்தை அனுபவிக்க இயலும். அந்த யுத்தத்தில் வெற்றி பெற்று அந்த மெய்யின்பத்தை அடைய முயலாதார் மாந்தராகிறார்களில்லை. அந்த யுத்தமாவது காமம் க்ரோதம் முதலிய ஹரிஷட் வர்க்கங்களையும் தாரம் புத்ரர் தனம் என்னும் ஈஷணைத்ரயங்களையும் ஐம்புலச் சேஷ்டைகளையும் ஞானவாளால் தகர்த்து வீழ்த்தி த்வம்சம் செய்து தொலைத்து ப்ரம்ம வொளியைப் பெற்று ஜெயபேரிகை முழக்கி வெற்றிச்சங்கு ஊதிப் பேரின்ப நிலையை யெய்தி ஆனந்தமனுபவித்தலாம். அதுதான் சிறந்த யுத்தம். அதனாலடையும் வெற்றியே வெற்றி. அதனால் எய்தும் இன்பமே உண்மையான இன்பம். அழியாத இன்பம். அவ்வின்பத்தை அடைவதற்காகத்தான் மானிடப் பிறவி கொண்டு இவ்வுலகில் தோன்றியுள்ளோம் என்பதை ஒவ்வோர் உயிரும் உணருதல் வேண்டும்.

ஞானவுணர்வு நல்குதல்.

எவ்வுயிரும் துக்கத்தையடையச் சம்மதிப்பதில்லை. 'சுகத்தையடையவேண்டும்' என்றே பிரியப்படுவது உண்மை. ஆனால், எந்தச் சுகத்தை யடைந்தால் என்றும் கெடாமல் நிலைத்திருக்குமோ, மீண்டும் எவ்வகைத் துன்பங்களும் வந்தணுகி நம்மைப் பாதிக்காவோ, அத்தகைய உண்மைச் சுகத்தை நாம் ஒவ்வொருவரும் அடைந்தே தீரவேண்டுமென்ற திடவைராக்யம் ஒவ்வோருயிர்க்கும் அவசியம் வருதல் வேண்டும். சுகமென்பது ஆத்மாவின் சொரூபமே; சுகமும் ஆத்ம சொரூபமும் வேறன்று. ஆத்ம சுகம் ஒன்றேயுள்ளது.

அது ஒன்றே சத்யம். ப்ரபஞ்சப் பொருள் ஒன்றிலாவது சுக மென்பது கிடையாது. அவைகளிலிருந்து சுகம் கிடைப்பதாக நாம் நமது அவிவேகத்தால் நினைக்கின்றோம். மனம் வெளியில் வரும் போது துக்கத்தை யனுபவிக்கிறது. உண்மையில் நமது எண்ணங்கள் பூர்த்தியாகும்போதெல்லாம் அது தன்னுடைய ஸ்தானத்திற்குத் திரும்பி ஆத்ம சுகத்தையே அனுபவிக்கின்றது. அப்படியே தூக்கம் சமாதி மூர்ச்சை காலங்களிலும், இச்சித்த பொருள் கிடைக்கிற போதும், வெறுத்த பொருளுக்குக் கேடுண்டாம்போதும் மனம் அந்தர்முகமாகி ஆத்ம சுகத்தையே அனுபவிக்கின்றது. இப்படி மனம் ஆத்மாவை விட்டு வெளியே போவதும் (நிழலை விட்டு வெயிலில் உழல்வதும்) உள்ளே திரும்புவதுமாக (நிழலுக்குத் திரும்பிவந்து குளிர்ச்சி யடைவதுமாக) ஓய்வின்றி யலைகிறது. இவ்வாறு அலையும் மனத்தோடுள்ளவன் அவிவேகி. ஆனால் விவேகியோ நிழலை விட்டு நீங்கான். நினைவே மனமாம். ஜகமே நினைவாம். ஜகந்தோன்றும் போது துக்கந் தோன்றும். ஜகம் மறையும்போது (நினைவறும்போது) துக்கந் தொலைகிறது. ஆனந்தந் தோன்றுகிறது. இவ்வானந்தமே மோக்ஷம் எனப்படும்.

கிடைத்தற்கரிய இம் மானிடப் பிறவி கிடைத்த காலத்தும் அம்மோக்ஷானந்தத்தை யடைய ப்ரயத்தனம் செய்யாவிடில் வேறு எக்காலத்தில் அவ்வானந்தத்தை யடைய முயல்வது? அத்தகைய மோக்ஷம் ஞானத்தினால் கிடைக்கும். விசாரத்தினால் தான் ஞானம் சித்திக்கும். அத்தகைய ஆத்ம விசாரம் செய்வதற்குக் குருவருள் அவசியம்.

உத்தம குருவைக்கொண்டு முதலில் ஞானோபதேசம் பெறுதல் வேண்டும். கடவுளும் சற்குருவும் உண்மையில் வேறல்லர். புலி வாயிற்பட்டது எவ்வாறு திரும்பாதோ, அவ்வாறே சற்குருவினருட் பார்வையிற் பட்டவர்கள் அவரால் ரக்ஷிக்கப்படுவதேயன்றி, ஒருக் காலும் கைவிடப்படார்; எனினும், குரு காட்டிய வழிப்படி தவறாது நடக்கவேண்டும். உண்மையான பக்தியும் சிரத்தையும் ஒருவர்க் கிருக்குமாகில், அவருடைய பக்குவமறிந்து அப்பரம்பொருளே குரு வடிவாய்த் தோன்றி, அத்திவ்ய ஞான உபதேசத்தைப் புரிந்து அருளொளியை விளக்கியருளுவர்.

நித்ய சுகத்தை யடைவதற்குத் தத்தமது ப்ரயத்தனமே முக்ய மாகும். வாங் மாத்ர ஞானத்தாற் சுகங் கிடைத்துவிடாது. சிரவணாதி விசாரமே மோக்ஷ சாதனமாகும். ஆத்மாவின் உண்மை யொளியைக் காணவேண்டுமென்று முயற்சி செய்தல் அத்யாவசிய மாகும். அப்படி முயல்கின்ற காலையில் பூர்வ வாசனைகள் பலவும் அதி திடமாயுதித்துத் தடை செய்யத் தொடங்கும். மூவகை யாசை களையும், இவற்றிற்கு வித்தாகிய அகங்காரத்தையும், இதன் விருத் திக்கு ஹேதுவாகிய வெளியுலக வாசனையையும், இவையனைத்துக்கும் மூலகாரணமான விக்ஷேப ஆவரண சக்திகளையும் நீக்கி, பக்தி யோகம் த்யானம் என்று சொல்லக்கூடிய முறைகளால் (அரணி, தயிர் இவற்றிலுள்ள அக்னி, வெண்ணெய் இவைகளை வெளிப்படுத்து வதற்காக ஒரு மத்தைக்கொண்டு கடைவதுபோல) ஹ்ருதயத்தின் கண்ணே இடைவிடாது தைலதாரைபோல் நிரந்தரம் செய்யும் ப்ரம்மாப்யாச மதன பலத்தினால் ஏற்படும் ஸஹஜ நிர்விகல்ப சமாதி யில் பிரயத்தனமின்றியே அகம் புறமெங்கும் எக்காலமும் ஏகமாய் ப்ரகாசிக்கும் அப்ரதிபந்த அபரோக்ஷ ப்ரம்ம சாக்ஷாத்கார ஞானானு பவம் லித்தியாகும். அதனால் சகல வாசனைகளும் சம்சயங்களும் கர்மங்களும் அவற்றில் விளைந்துகொண்டிருந்த அநேக துன்பங்களும் இவையனைத்துக்கும் ஆதாரமான அஞ்ஞானமும் நாசமடைந்துவிடும். இத்தகைய அகண்டானந்த முத்தியை யடைவதுதான் புருஷார்த்த மாகும். இதனையடைந்தவனே ஜீவன் முக்தன்; உத்தம ஞானி. இத்தகைய ஸ்வானுபவம் வாய்க்கப் பெறுதவன் மனுஷ்ய சரீரம் பெற்றதனால் லடைந்த பயன் யாதுமில்லை.

ஜீவர்களுக்கு மனுஷ்ய ஜன்மங் கிடைப்பதே மிகவும் அரிது. மிகச் சிறந்த புண்ய பூமியாகிய இப்பாரத நாட்டிற் பிறப்பது அதனி லும் அரிது. வேதமோதவும், வைதிக கர்மத்தை ஆசரிக்கவும்வாய்ந்த உத்தம வருணத்தில் பிறப்பது அதனிலும் அரிது. சகல சாஸ்திர உண்மைகளையும் உள்ளவா றுணர்தல் அதனிலும் அரிது. ஆத்ம அனாத்ம விசாரம் பிறத்தல் அதனிலும் அரிது. ஸ்வானுப ஞானம் அடைதல் அதனிலும் அரிது. அத்தகைய ஞானத்தால் ஸதா ப்ரம்மா காரமாய் இருக்கும் மோக்ஷானந்தமான்று அனந்தகோடி ஜன்மாந் தரங்களிற் செய்த சுகிர்தங்களாலன்றிக் கிடைக்காது. இவைகள்

எல்லாவற்றையும் க்ரமமாயடைய இயலாவிடினும், ஈஸ்வராநுக்ரஹத்தால் மனுஷ்யத்வம் முமுக்ஷுத்வம் சாதுசங்கம் ஆகிய இம்மூன்றுங் கிடைத்தாலே மோக்ஷ மடைந்துவிடலாம்.

கிடைத்தற்கரிய மனுஷ்ய சரீரத்தை எத்தவத்தாலோ பெற்று, சுருதிகளின் பொருள்களை யுணரக்கூடிய புருஷத்வம் இருந்தும், அசத்தான தேகாதிகளில் அபிமானத்தை வைத்துக்கொண்டு சாஸ்வத மோக்ஷத்தை யடைய எத்தனம் செய்யாத மூடன் ஆத்ம ஹத்தி செய்தவ (தன்னையே கெடுத்துக்கொண்டவ) னகிறான். ஆகையால் ஒவ்வொருவரும் அந்த நித்திய இன்பத்தை யடையக் கண்டிப்பாக முயலுதல் வேண்டும்.

வேதாந்த விசாரத்தால் உத்தமமான தத்வஞான முண்டாகும். அதனால் இவ்விடத்திலேயே சம்சாரபந்தம் அத்யந்தம் நாசமாம். முமுக்ஷுக்களாவோர் பக்தி த்யானம் யோகம் ஆகிய உத்தம சாதனங்களைக்கொண்டு நிரந்தரம் சாதித்துவரின் அஞ்ஞானத்தால் வந்த தேஹபந்தம் நீங்கிப்போகும். ஆத்ம அனாத்ம விசாரத்தாற் பிறந்த ஞானமாகிற அக்னி, அஞ்ஞான காரிய சம்சார பந்த துக்கத்தை வேரோடு எரித்துவிடுவதால், எத்தகைய துன்பமுமின்றி எப்போதும் பரமாத்ம ஸ்வரூபமாகவே யிருக்கலாம். அவித்யா காம கர்மாதி ரூபமான பாச பந்தங்களை நீக்க வேறு உபாயங்களைக் கொண்டு எத்தனை கோடி கற்பகாலங்கள் முயன்றபோதிலும் இயலாது. தனது ஸ்பஷ்டமான ஞான நேத்ரத்தாலன்றி, வேறெவ்வகையாலும் அப்பரமாத்ம ஸ்வரூபத்தைக் காண முடியாது. ப்ரம்மாத்மைக்ய ஞானத்தாலன்றி வேறு வழிகளால் மோக்ஷானந்தத்தை யடையவு மியலாது.

தேகப்பற்று சாஸ்த்ர வாசனை வெளியுலகப் பற்று முதலிய ஜால மஹாரண்யங்களைக் கடந்து உண்மையான ஆத்ம தத்துவத்தை அறிதல் வேண்டும். அஞ்ஞான சர்ப்பத்தாற் கடியுண்டவர்கட்கு ஆத்மஞான சஞ்ஜீவியையன்றி ஏனைய மருந்துகளும் மந்த்ரங்களும் புற விஷயங்களும் பலன் தராது. முயற்சியின்றி ஞானம் எய்த இயலாது.

ஒருவன் 'நான் ராஜா' என்று சொல்வதனால் அரசனாகிவிட முடியாது. தன்னுடைய பராக்ரமத்தினால் சத்ருக்களை நாசஞ்செய்து,

அகில பூமண்டல சாம்ராஜ்யத்தை யடைந்தபொழுதே அரசனுவன். பூமியில் புதையலிருப்பதாக அறிந்த ஆப்த நண்பன் சொன்னுல், பூமியை வெட்டி, அதன்மேல் மூடியுள்ள கல்லை நீக்கி வெளியே யெடுத்தகாலையில்தான் அவன் அப்புதையலை அடையமுடியும். அது போலவே, ஆத்மஞானமும் தன் ஸ்வப்ரயத்தனத்தினு லடையமுடியுமேயன்றி (தானே செய்தாலன்றி) வாய் வேதாந்தம் பேசுவதாலடைந்துவிட முடியாது.

ஒருவன் ஆன்மலாப மடையவேண்டுமென்றுல், மு த லி ல் விஷய வாசனைகளிலிருந்து விடுபடவேண்டும். ஏனெனில், விஷயம் விஷத்தினுங் கொடியதாம். க்ருஷ்ண சர்ப்பத்தின் விஷம் உட்கொண் டவனையே கொல்லும். விஷயமோ, கண்டவனையும் கேட்டவனையும் நினைத்தவனையும் நசிக்கச் செய்துவிடும். நீக்கற்கரிய இவ்விஷயாசை களை எவனொருவன் திடவிராகத்தா லறுத்துத் தள்ளுகிறனே, அவனே மோக்ஷமடைவன். ஆகையால் திடவைராக்யம் அவசியம்வேண்டும். இன்றேல், பவசாகரங் கடந்து மோக்ஷதீரஞ் சார யத்தனிக்கும் முமுக்ஷுவின் கழுத்தை ஆசையாம் முதலை பிடித்து அதி வேகமாய் இழுத்துச் சென்று அச்சம்சார சமுத்திரத்தின் மத்தியில் அமிழ்த்தி விடும். ஆகையால் விஷயாசை யென்னும் அம் முதலையைத் திட வைராக்யமாம் வாளினுல் முதலில் வெட்டி மாய்த்தல் வேண்டும். ப்ரபஞ்ச விஷயங்களில் விரக்தியுற்றவன் மோக்ஷ இச்சையால் ப்ரம்ம நிஷ்டையை யடைந்து, அகங்காராதிகளோடுள்ள அகப்பற்றையும், பாஹ்ய விஷயங்களோடுள்ள புறப்பற்றையும் ஒழிக்கவல்ல சமர்த்த ஞகையால், அவனுக்கே அகத்துறவு புறத்துறவு இரண்டும் ஸித்திக் கும். அன்றியும், அத்யந்த வைராக்யமுற்றவனே சமாதியை யடை வன்; சமாதி யுற்றவனே திடஞான மெய்துவன்; அத்தகைய திடஞானம் வாய்த்த தத்வஞானியே ஜீவன் முக்தியைப் பெறுவன். அம் முக்தனே நித்யானந்தத்தை யடைவன். ஆதலின் மோக்ஷ காங்ஷையைக் கூடி சுகமனுபவிக்க விரக்தியே முக்ய மார்க்கமாகும். இதனையின்றி சுகமனுபவிக்கும் வழி வேறெங்குங் கிடையாது. இவ் வைராக்யம் அதி சுத்தமான ஆத்ம ஞானத்தோடு சேருங்கால் அவசி யம் மோக்ஷ சாம்ராஜ்ய சுகத்தை யளிக்கின்றது. பக்ஷிக்குள்ள இரண்டு சிறகுகளைப்போல மோக்ஷ உப்பரிகை (மாடி)யிலேற நமக்கு

அத்யாவசியமாக வைராக்யம் ஞானம் என்னும் இரண்டும் வேண்டும். இரண்டில் ஒன்றின்றேனும் முத்தி சித்தியாது. ஆதலால் விஷய ஆசைகளை யறுத்து, ஜாதிகுல ஆசிரம அபிமானங்களையும், சர்வ கர்மங் களையும் தூரத் தள்ளி, அவ்வஸ்தியை தேகாதிகளில் உள்ள பற்றினை விடுத்து, வாஸ்தவத்தில் என்றும் உள்ள பொருளாகிய ஆத்மாவினிடத் தில் (ப்ரம்மத்தினிடத்தில்) ஸதா நாட்டம் வைத்திருத்தல் வேண்டும். சரீர போஷணையிற் புத்தியுள்ளவனுய் எவன் ஆத்மாவை யறிய இச் சிக்கிருனே, அவன் முதலையைக் கட்டுமரமென்றும் தெப்பமென்றும் எண்ணிப் பிடித்து அதனுதவியால் நதிதாண்டச் செல்பவன் அடையுங் கதியையே அடைவன். சுபுத்தியுடையவன் தன் யுக்தியைக்கொண்டு குருபதேச மார்க்கமே சென்று நற்கதி யெய்துவன்.

(அன்னமய சம்பந்தமான) இந்த ஸ்தூல சரீரம் கிருஹஸ்த னுக்குக் கிருஹம்போல விஷய போகங்களை ஜீவாத்மா இருந் தனுப விக்க ஓர் போகாலயமாம். நானு விசித்ர ஸ்தூல போக்ய பதார்த் தங்களை பாஹ்யேந்திரியங்களால் ஆத்மா தானே இத்தேகத்துடன் அத்தியாசத்தாற் (கற்பனையாற்) கூடி யனுபவிக்குங்காலம் 'ஜாக்கிரம்' எனப்படும். பிறப்பு இறப்பு, பெருத்தல் சிறுத்தல், இளமை முதுமை முதலிய அவஸ்தைகள் இச்சரீரத்திற்கே யன்றி, ஆத்மாவைப் பற்றி யனவன்று.

அபஞ்சீகிருத பஞ்ச சூக்ஷ்ம பூதங்களா லானதாய், வாசனை யோடுங்கூடிக் கர்ம பலமான போகங்களை ஜீவாத்மா அனுபவித் தற்குச் சாதனமாய் இருப்பது (ப்ராணமயம், மனோமயம், விஞ் ஞானமயம் என்னும் மூப் பிரிவுகளைக்கொண்ட) சூக்ஷ்மதேகமாம். இதனவஸ்தை 'ஸ்வப்னம்' எனப்படும். இவ்வவஸ்தையில் மனமே நானுவித ஜாக்ரத் வாஸனையால் கர்த்ரு முதலிய பாவங்களை யடைந்து விளங்கும். அப்பொழுது ஸ்வயம்ப்ரகாசித்துக்கொண்டிருக்கும் ஆத்மா, மனமாத்ரத்தை யுபாதியா யடைந்து அதனுற் செய்யப்படுங் கர்மத்திற் பற்றின்றி அவைக்கெல்லாம் சாக்ஷி மாத்ரமாயிருக்கும். செவிடு குருடு ஊமை முதலிய தன்மைகள் இவ்விந்திரிய தர்மங்களே யன்றி, பரிசுத்தமான ஆத்மாவினதன்று. உச்வாச நிச்வாசங்கள், கொட்டாவி, தும்மல் முதலியன பிராணிகளின் தர்மங்களாம்.

ப்சி, தாகம் மூதலியன ப்ராணன் ஒன்றன் தர்மம். அகங்காரமே கர்த்தா போக்தா அபிமானியாய் மூக்குண வசத்தால் மூவகை யவஸ்தைகளே யனுபவித்து, அனுகூல விஷயங்களில் சுகத்தையும், பிரதிகூல விஷயங்களில் துக்கத்தையும் அடையும்.

விஷயங்க ளனைத்தும் ஆத்மாவின் பொருட்டுப் பிரியமாய்த் தோன்றுவதேயன்றி சுயமே யுள்ளவாறு பிரியமாகா. உண்மையில் ஆத்மாவே யாவர்க்கும் அத்யந்தம் பிரியமாம். அவ்வாத்மா சதானந்த சொரூபம். அதில் துக்கமே ஒருசிறிது மில்லை. இந்த நிர்விஷய ஆத்மானந்தம் சுஷுப்தியில் அனைவர்க்கும் அனுபவம். இவ்வவஸ்தையில் ' ஒன்றுமறியாது சுகமாய்த் தூங்கினேம் ' எனல் உலகானுபவமாம். இங்கு எல்லாவித ஞானமும் சாந்தமாகி, மனம் லயப்பட்டு ப்ரம்மானந்தத்தை யனுபவிக்கின்றது. தேகம், இந்திரியம், மனம், அகங்காரமாதி விகாரங்கள், விஷய சுகாதிகள், ஆகாசாதி பஞ்ச பூதங்கள், அவ்யக்தபரியந்தமான ஜகம் இவையாவும் அனாத்மா. இவ்வனாத்மா கானல் ஜலம்போல அசத்தாகும்.

லக்ஷிதமான அர்த்த ஸ்வரூபமாய், அவஸ்தாத்ரய சாக்ஷியாய், பஞ்சகோச விலக்ஷணமாய், ஜாக்ர ஸ்வப்னங்களில் மன விருத்தியின் பாவத்தையும், சுஷுப்தியில் அதன் அபாவத்தையும் அறிவதாயுள்ள சொரூபமே ஆத்மா. எது சர்வத்தையும் சுயமே பார்க்கின்றதோ, அச்சர்வமும் எதனைச் சிறிதும் பார்க்கிறதில்லையோ, எது புத்தியாதிகளை ப்ரகாசிக்கச் செய்கிறதோ, எதனை அவை ப்ரகாசிக்கச் செய்கிறதில்லையோ, எதனால் இஜ்ஜகமானது வியாபிக்கப் பட்டிருக்கிறதோ, எதனை இஜ்ஜகம் சிறிதும் வியாபிக்கவில்லையோ, யாதொன்றன் ப்ரகாசத்தால் ஜடமான இச்சகலமும் விளங்குகின்றனவோ, எதனது சந்நிதி மாத்திரத்தால் தேக இந்திரிய மன புத்திகள் பிரவேசிக்க (ஏவ) ப்பட்டவை போலத் தத்தம் காரியங்களில் ப்ரவேசிக்கின்றனவோ, நித்ய ஞான சொரூபமான எதனால் அகங்காராதி தேகாந்தமாயுள்ளவையும், விஷயங்களும் சுகாதிகளுங் கடத்தைப் போலத் திருஷ்யமா யறியப்படுகின்றனவோ, எதனால் உயிரும் வாக்கும் மற்றவையும் சரிக் (அசை) கின்றனவோ அந்த அந்தராத்மா, பூரண புருஷனுய், நிரந்தரமாய், அகண்ட பரிபூரணமாய், ஆனந்த சொரூபமாய், ஏகமாய், ஸத்ரூபமாய், ப்ரதி தேகத்திலும் சாக்ஷி (ஞான)

மாத்ரமாய் இருக்கிறது. இத் தேகத்தின்கண் ஹ்ருதய குகையில் அவ்யாக்ருத ஆகாசத்தைப் போலத் தன் தேஜஸால் இவ்வுலகை ப்ரகாசிப்பிக்கின்றது. இவ்வாத்மா அனேத்துக்கும் சாக்ஷி மாத்ரமாய் இருப்பதேயன்றி ஒரு தொழிலேச் செய்வதுமில்லே. ஒரு விகார முறுவதுமில்லே. கடம் நசிக்கினும் நசியாத கடாகாசம் போல் இத் தேகம் மரிக்கினும் மரணமுரு நித்யஸ்வரூபமாய் பிரகிருதி (காரணமாயை) விகிருதி (அதன் காரியங்) கட்கு விலட்சணமாய், சுத்தஞான சொரூபமாய், சத்து அசத்துக்களைப் பிரகாசிப்பித்து, நிர்விசேஷமாய், ஜாக்ரதி அவஸ்தைகளில் புத்திக்கு சாக்ஷியாயிருந்து 'அஹம், அஹம்' எனவே நித்யாபரோக்ஷமாய்ப் பிரகாசிக்கும் அப்பரமாத்மாவை, ஏகாக்ர சித்தத்தால் விடாது த்யானிக்கும் அனுபவத்தால் அறிதல் வேண்டும்.

சூரியனது கிரணத்தாலுண்டான மேக பந்திகள் அச்சூரியனே மறைத்துப்படர்ந்து விருத்தியாதல் போல, ஆத்மாவில் அஞ்ஞானத்தாலுண்டான அகங்கார பந்தம் அவ்வாத்மாவை மறைத்துத் தானும் விருத்தியாகின்றது. மழைக்காலத்தில் மேகங்களால் சூரியன் மறைபட்ட தினத்தில் பனியும் குளிர் காற்றும் அதிகமாய் ஜனங் கட்குத் துக்கந் தருவது போல, தமோகுண ஆவரண சக்தி ஆத்மாவை மறைக்கும்போது, ரஜோகுண விக்ஷேப சக்தி அவ்வஞ்ஞானியை மோகத்தால் தானல்லாத் தேகந் தானாக மயங்கச் செய்து, நானாவித துக்கங்களால் மிகவுந் துன்புறச் செய்வதால், இவ்விரண்டு சக்திகளாலுமே பந்தம் வந்தடைகிறது. இச் சம்சார விருட்சத்திற்குத் தமஸ் (ஆவரணம்) பீஜம்; தேகாத்ம புத்தி அங்குரம்; ராகம் தளிர்; கர்மம் ஜலம்; தேகம் அடிக்கட்டை; உயிர்கள் சாகைகள்; இந்திரியங்கள் அவற்றின் நுனிகள்; விஷயங்கள் புஷ்பங்கள்; நானா கர்மத்தாலுண்டாகும் நானாவித துக்கம் பழம்; அம்மரத்திலுள்ள ஜீவன் இதனைப் பக்ஷிக்கும் பக்ஷியாகும். வேத கர்மங்கள் யாவையும் நிஷ்காம்யமாயனுஷ்டிப்பதனாலுண்டான அந்தக்கரண சுத்தியோடு நிரந்தரம் செய்யும் த்யானத்தால் மாலின்யமின்றித் தீட்டப்பட்ட ஆத்மாபரோக்ஷ ஞானமென்னுங் கூரிய வாளினால்தான் இக்கோடிய விருட்சத்தை வேரோடு நாசம் செய்து வெட்டி வீழ்த்தமுடியும். அஃதன்றி, மற்ற அஸ்த்ர சஸ்த்ரங்களாலும்,

வாயு அக்னிகளாலும், பலகோடி வகையான கர்மங்களாலும் அதனைச் சேதிக்க இயலாது.

பஞ்சேந்திரியங்க ளென்னும் பஞ்ச ஹோதாக் (ஹோமம் செய்வோர்) களால், சப்தாதி விஷயங்களாகிற நெய்யினாலும், வாசனைகளாகிற சமித்துக்களினாலும் வளர்க்கப்பட்டு, மிகவும் ஜ்வலிக்கின்ற மனோமய அக்னி இந்த ப்ரபஞ்ச முழுவதற்கும் தாபத்தை யுண்டாக்குகின்றது. மனத்தையன்றி வேறு அவித்தை இல்லை. அதுவே பவபந்த ஹேது. அது பெருத்தால் அனைத்தும் பெருக்கும். அது நசிக்கி னனைத்தும் நாசமாம். மனம் என்னும் நாமமுள்ள அப் பெரும்புலி, விஷயமாகின்ற மகாரண்ய ப்ரதேசத்தில் எப்போதும் சஞ்சரிக்கின்றதால், சாதுக்களான முமுக்ஷுக்கள் அம்மார்க்கமாய்ப் போகவே கூடாது. அத்தியாச தோஷத்தால் மனமே புருஷனுக்கு இப்பொய்யான சம்சார பந்தத்தைக் கற்பிக்கின்றது. ராஜஸ தாமஸ குண தோஷங்களுடன் கூடின அவிவேகிகட்கு இதுவே ஜனனமரணாதி துக்கங்களைக் கொடுக்கும் மூல காரணமாம். முமுக்ஷுவின் ஸ்வப்ரயத்தனத்தால் இம்மனம் சோதனை செய்யப்பட்டுப் பரிசுத்தமாம்போது (சங்கற்ப நாச மெய்தும்போது) மோக்ஷம் கரதலாமலகமாகும்.

பிராந்தி மோகத்தாற் கற்பிதமான வஸ்துக்களை யெல்லாம் ப்ரமாணத்தால் நன்முக விசாரிக்குங்கால், ரஜ்ஜுவில் ப்ராந்தி காலத்தில் தோன்றி, அப் பிராந்தி நாசத்தில்நாசமுறும் சர்ப்பாதிகள் போல, பிராந்தியுள்ளவரையில் தோற்றுமவை அப் பிராந்தி நீங்கவே யதார்த்த வஸ்துவாகாது அசத்தாய் நசித்தலால், அசங்க நிஷ்கிரிய நிர்க்குண நிர்விகார நிராகார சச்சிதானந்த ப்ரத்தியக் சாக்ஷி சொரூபமாய் ஆகாசத்தில் நீலாதிபோலப் பிரமையாலன்றி யொருவஸ்து சம்பந்தமுமுற்ற ஆத்மாவுக்குப் பிராந்தி ஞானத்தால் வந்த புத்தியாகிற அனாதி மித்யா வுபாதியில் தாதாத்மிய சம்பந்தத்தால் கானல் ஜலம்போற் கற்பிதமாகிற அசத்ய ஜீவ பாவம் அனாதியே யாயினும் வஸ்துவாகாது. அழுக்கு ஜலத்தின் அழுக்கை நீக்கவே நிர்மலமாய்த் தோன்றும் ஜலம்போல, ஆத்மானாத்ம விவேகத்தால் ஆத்மாவினின்றும் அனாதி யவித்தை, அதன் காரியம், அஹங்காரம் ஆகிய

அசத்துபாதிகளை நேதி செய்து நீக்குங்கால், நிர்மலமாய் சுயம்ப்ரகாசிக்கும் (சுருதி சம்பந்த) ப்ரம்மாத்மைக்ய சத்ய ஞானத்தால் அப் பிராந்தி நசிக்கவே, அனுதி பிராகபாவம் அந்தமுறல் போலவும், ஜாக்ரத்தில் ஸ்வப்னப்பிராந்தி நஷ்டமாதல் போலவும் சமூலம் (அனுதி யவித்தை யாதி யுபாதிகளோடு) நாசமடையும்.

பஞ்ச கோசங்களையும் ஆத்மா வன்றென நீக்கும்போது, அவ்வபவாதத்தின் முடிவில், இவற்றின் விலக்ஷணமாய், அவஸ்தாத்ரய சாக்ஷியாய் சுயஞ்ஜோதியாய், நிர்விகார நிரஞ்சன நித்ய போதானந்த சொரூபமாய், திருஷ்ய கடமு மாகாது அதன் தர்மமு முறுது அதனை யறிந்து கொண்டிருக்கும் தேவதத்தனைப் போல, திருஷ்ய பஞ்ச கோசங்களுமாகாது அவற்றின் தர்மமு முறுது அவற்றை யறிந்து கொண்டு ஏகமாய் மிஞ்சித் தோன்றும் இவ் வாத்மாவையே அறிதல் வேண்டும்.

"பஞ்ச கோசங்களையும் 'சுத்த மித்தை' யென்று நேதி செய்து நீக்கிய பின், சுத்த சூன்யமன்றி, 'நான்' என்று ஒன்றுங் காணேமே! ஆதலால் 'அஹம்' என்று அறியத் தக்க ஆத்ம வஸ்து வேறேதிருக்கின்றது?" என்றால், "எது எதனை 'இது' என்று அறிகின்றதோ, அது அதற்குச் சாக்ஷி; அறியாதது சாக்ஷியன்று" என்னும் நியாயத்தால், ஸ்திரமற்ற, நானாரூப விகாரத்தோடு கூடிய அஹங்காராதி திருஷ்ய வஸ்துக்களின் பாவத்தை (இருப்பை) யும், அவற்றின் அபாவ ரூபமான சூன்யத்தையும் இவற்றின்மேல் ஞான சொரூபமாயிருந்தறிவதால், அவற்றின் சாக்ஷியாய், மேல் தன்னை யறிதற் கொன்றின்றித் தன்னைத் தன் தேஜஸால் தான்றானே யறிவதால் தனக்கும் சாக்ஷியாயிருந்து, ஜாக்ர ஸ்வப்ன சுஷுப்திகளில் ஏகமாய், ப்ரத்யகாத்மாவாய், ஹ்ருதயத்தில் 'அஹம், அஹம்' என்று ஸதா தானாகவே ஜ்வலித்துக்கொண்டிருக்கும் நித்ய ஞானனந்த ஆத்மாவை அதி சூக்ஷ்ம புத்தியால் 'அஹம்' என உணர்ந்து கொள்ளவேண்டும்.

மூடன், கடஜலத்தில் தோன்றும் சூரிய பிம்பத்தைச் சூரியனென்பன். விவேகி, கடம், ஜலம், ப்ரதிபிம்பம் இவற்றை விட்டு, ஆகாசத்தில் ஏகமாய்த் தாக்கற்று இம்மூன்றையும் ப்ரகாசிப்பித்து,

சுயம் ப்ரகாசித்துக் கொண்டிருக்கும் சூரியனை யுள்ளபடி யறிவன். அஃதேபோல், அஞ்ஞானமய மூடன், பிராந்தியால் தேகத்தின் கண் புத்தியுபாதியில் தோன்றும் ஆத்ம ப்ரதிபிம்ப ஜீவனை அஹமென் றெண்ணுவன். விவேக ஞானி, இவையனைத்துக்கும் அந்தியமாய் சாக்ஷி மாத்ரமாய் நின்று இவை யனைத்தையும் ப்ரகாசிப்பித்துக் கொண்டு, அகம் புறமின்றி சுயம் ப்ரகாசமாய்த் திகழும் அகண்ட ஞானவடிவமாகிய ஆத்மாவை நன்முய் விசாரித் தறிந்து, நிர்மலனாகி, ஜனனமரணாதிகளற்று, துக்க ரஹிதனாய் நிச்சலானந்த கன சொரூபத்தை யடைவன். எவனொருவன் இத்தகைய ஆத்ம ஞானத்தை உள்ளவாறுணர்கிறானே அவனே மானிடச் சட்டை தாங்கியதால் பெறவேண்டிய லாபத்தைப் பெற்றவனாவன்.

ஆதலால் நீவிரனைவரும் உலகக் கவலைக ளனைத்தையும் அறவே மறந்து, இப்பேரின்பத்தைப் பெறுவதற்கு வேண்டிய முயற்சிகளை உடனே தேடுங்கள். அவ்வாறு முயற்சிப்பதற்காக வன்றே நாம் வெகு சிரமப்பட்டு இம்மனித வுடலைப் பெற்று வந்துள்ளோம்? அதை விட்டு விட்டு இவ்வுலகில் இப்பிறப்பில் குறுக்கே தோன்றுகிற இந்தப் பாசபந்த சம்பந்தமான விவகாரங்களில் ஈடுபட்டு அவற்றிலேயே காலத்தைக் கழித்துவிடுவது மிகவும் இழிதகைச் செயலாகும். ஆதலால் தாங்கள் யாவரும் இப்பொய்யின்ப துன்பங்களைக் கருதாது உண்மையின்பமடைய முயற்சிப்பதே உறுதி" எனக்கூறி முடித்தனர்

அம்பிகையை ப்ரார்த்தித்தல்.

வாசவாம்பிகை எடுத்துக் கூறிய மொழிகள் யாவும் அனைவர் செவிகளிலும் அற்புதத் தீஞ்சுவை யமுதம் போலும் இன்பத் தேனின் பெருக்கைப் போலும் சென்று பாய்ந்து ஆனந்தத்தை யூட்டிக்கொண் டிருந்தன. அவர்கள் யாவரும் உலக நினைவுகளை யெல்லாம் மறந்து, உத்தம உணர்ச்சியுடன் உலவா இன்பத்தை உறுவதற்கான முயற்சிகளைப் புரியவேண்டுமென உன்னுவாராயினர். அவர்களுடைய மனம் நிர்மலமாக விளங்கியது. அன்பு ததும்பிப் பொங்கி வழிந்துகொண் டிருந்தது. சாந்தம் நிரம்பித் தண்ணளி மிகுந்து தழைந்து பொலிந்தது. சாத்வீகத்திற் சாத்வீகம் என்னும் உத்தம குணமே ஓங்கித் திகழ்ந்தது. பால்ய வயதில்

உபநயனம் செய்துகொண்டதும், குருகுல வாசத்தில் குருமூலமாய் உணர்ந்த வேதாந்த விஷயங்களும், பல நூல்களும் பன்முறையும் பறைசாற்றும் ஞான யோக மார்க்க ரகசியங்களும், இன்னோரன்ன பலவும் அவர்களுடைய மனத்தகத்தே தோன்றி மாறிலா மகிழ்வை விளைவித்துக்கொண் டிருந்தன. உலகத்தின்மீ திருந்த பற்றுகள் யாவும் பையப் பைய ஒன்றொன்றாய் அற்றுக்கொண்டே வந்தன. 'எப்போது நமக்கு உத்தம குரு கிடைப்பது?' 'எந்நாளில் நாம் அவ்வுத்தம ஞானத்தைப் பெறுவது?' 'அப் பேரின்ப வாழ்வில் ஈடுபட்டு நாம் எக்காலத்தில் ஜீவன் முத்திச் சுகத்தை யனுபவித்து ஆனந்திப்பது?' 'எத் தினத்தில் நாம் அப் பரமாத்ம வொளியில் இரண்டறக் கலந்து இணையிலா இன்பந் துய்ப்பது?' 'பிறவிப் பெருங்கடலைக் கடப்பது எப்போது?' 'முத்திக் கரையை யடைவது எப்போது?' 'அந்நாள் மிக விரைவில் வருமா?' என்றெல்லாம் பலவாறுக எண்ணியவர்களாகி ஆங்கு எதிரில் நின்றுள்ள வாசவாம்பிகையைப் பார்த்து, "எங்களை வாழ்விக்க வந்த குலவிளக்கே! ஞானக் கொழுந்தே! உனது திருவாயினின்றும் தோன்றிய இத்தூய மொழிகள் யாவும், எம்மை 'அவ் வுண்மையின்பம் என்னும் இடத்தைச் சேரவேண்டிய பாதையில் உடனே புறப்படவேண்டும்' என்று ஊக்கந் தந்து இழுக்கின்றன. ஆனால், உத்தம குருவின் மூலமாய் ஞானோபதேசம் பெற்று, அவ்வழியே சென்றாலன்றே அவ்விடத்திற்குச் சிரமமின்றி எளிதிற் செல்ல இயலும்? அத்தகைய குரு எங்களுக்கு எப்போது கிடைப்பதோ? தெரியவில்லையே! ஆனால் 'உண்மையான பக்தியும் சிரத்தையும் கொண்டு, நன்னெறியைப் புகட்டக்கூடிய உத்தம குரு நமக்குக் கிடைக்கவேண்டும் என்று உறுதியான நம்பிக்கையுடன் திடவைராக்யங்கொள்ளுஞ் சமயத்தில் அப் பரம்பொருளே குரு வடிவாய்த் தோன்றி ஞானோபதேசம்செய்து உண்மை நிலையை உணர்த்தியருளுவர்' என்று சற்று முன்பு நீ கூறியதிலிருந்தும் நாங்கள் உணர்ந்தோம். ஆனால், நாங்கள் இப்போது அவ்வாறு உண்மையான பக்தி வைராக்யத்துடனே 'குரு கிடைத்தல் வேண்டும்' எனப் பிரார்த்திக்கின்றோம். இத் தருணத்தில் எங்களுக்குக் குரு கிடைப்பாரா? நாங்கள் ஞானோபதேசம் பெறுவோமா? இப் பிறவியிலேயே நாங்கள் அந்த ஜீவன் முத்திச் சுகத்தை யனுபவிப்போமா?

நீ இத்தகைய விஷயங்களை எடுத்துக் கூறியதிலிருந்தும் எங்களுடைய பூர்வ ஜன்ம புண்யவசத்தாலோ, பரம்பொருளின் திருவருளாலோ, உன்னுடைய அமிர்தஸம் மிகுந்த இனிய வசனங்களாலோ, எக் காரணத்தாலோ எமது உள்ளம் அவ் வுத்தம ஞான மெய்துவதிலேயே செல்லுகிறது. இத்தனை விஷயங்களையும் விளக்கியருளிய நீயே என் அந்த ஞானோபதேசத்தினைப் புரிதல் கூடாது? எங்களை ஈடேற்றுதல் கூடாது? ஆகலின், நீயே அவ் வுத்தம குருவாய்த் திகழ்ந்து எமது பவ வினைகளைப் போக்கி முத்தியங்கரையில் சேர்ப்பித்தல் வேண்டும்.

ஆதியில் நீ ஜனிக்கின்றபோதே உனது திவ்ய சொரூபத்தைக் காண்பித்ததும், அச்சமயத்தில் ஆகாயவாணி கூறியருளிய அசரீரி வாக்கும் இப்பொழுதல்லவா எங்களுக்கு ஞாபகத்தில் தோன்றுகின்றன? சகல வுலகங்களையும் காத்து ரக்ஷிக்கும் சர்வேஸ்வரியாகிய நினது மகிமைகளை யுணராது ஒரு சாமானியப் பெண் என் றெண்ணியல்லவா இதுகாறும் ஏமாந்துபோனேம்? ஆகையால், எம்மை ரக்ஷிக்கவேண்டுமெனத் திரவுளத்தில் இரக்கங்கொண்டு பரம கருணையுடன் எங்களுக்கு வேண்டிய புத்திமதிகளையும், மேல்வரும் வினைகளையும், உய்யவேண்டிய மார்க்கங்களையும் இத்தனையும் புகன் றருளிய நீயே நினது உண்மையுருவை எமக்குக் காண்பித்து, ஞானோபதேசம் புரிந்து பேரின்ப வாழ்வைக் கொடுத்தருளல் வேண்டும். எமக்கு வேறு துணை எவருமில்லை. மெய்யன்பர்கட்கு நலந் தரற்காக எவ் வமயத்திலும் எவ்விடத்திற்கும் எளிதில் எழுந்தருளி அவ்வன்பர்கள் எவ்வண்ணம் வேண்டுகினும் அவ்வண்ணம் அந்த க்ஷணமே கருணையுடன் ஈந்தருளுங் கற்பக விருக்ஷம் நீயேயாகும். எம்போன்றவர்க்கும் பொன்போன்ற கருணை தந்து இதயத்திருக்கும் ஈஸ்வரியே! எம்முயிரே! எம் முயிருக்குயிரே! எம்மறிவே! எம தறிவிற்கறிவே! எம தன்பே! எம தன்பிற்கு வித்தே! எம் தவமே! எம தருந் தவப் பயனே! எம்மிரு கண்ணே! கண்ணுள் மணியே! மணியில் ஒளியே! எம்மிரு கண்களுக் கினிய நல்விருந்தே! எம தமெய்ச் செல்வமே! உலவாச் செல்வத்திற் குற்ற வருவாயே! எம் பெரிய வாழ்வே! எமதுளக் களிப்பே! சேம நன்னிதியே! எமக்குத் தாயுந் தந்தையும் சுற்றமும் நட்பும் குருவும் தெய்வமும் நீயே

அன்றே ? எம் குலத் தெய்வமே ! எமதிஷ்ட தெய்வமே ! எமது பொறிகளுக் கெல்லாம் நல் விஷயமாம் பொருளே ! எம்மனோர் கட்கு எழுமையிலும் உதவி செயும் இறைவியே ! எமது குறைகளைத் தவிர்த் தாட்கொள்ளும் குணக் குன்றமே ! எம் போல்வார்க்கு எய்ப்பில் வைப்பா யொளிர் இனிய நல்லமுதமே ! எல்லோருக்கும் அருள்மழை பொழியும் அற்புதக் கொண்டலே ! எல்லோருக்கும் அனுக்ரஹம்புரிந்து, எல்லாஞ் செய்யும் வல்லப மருளி, இணையிலாத் துணையாய் இலங்கிடும் அன்னையே ! எழுமன முடைந் துடைந் துருகி நெகிழ் பக்தர்கட் கின்னமுதமாகியே இனித்திடும் இன்பமே ! பாலும் பாகும் தேனும் நெய்யும் முக்கனியும் சர்க்கரையும் கழைரஸமுங் கற் கண்டும் கலந்ததைப்போன்ற நன் மதுரந்தரு நான் மறை முதற் பொருளே ! 'எங்கள் தெய்வம் !' 'எங்கள் தெய்வம் !' என்று சமயத்தவரெல்லாம் எங்குந் தொடர்ந்து எதிர்வழக்கிடவும், தொன்னூற் பர சமயந்தோறும் அதுவதுவே நன்னூல் எனத் தெரிந்து நாட்டுவித்து, எவ்வெவ்வுருவாய் எவ்வெவர் போற்றினும், அவ்வவ் வுருவோ டவரவர்க் கருளும் ஆதி பராபரியே ! ஈறிலாப்பதங்களை இனிதே நல்கி இன்ப வெள்ளத்தினை எங்கணும் பெருக்கும் இறைவி வாசவியே ! எமக்கெல்லாம் உண்மை யின்பந் தருவதற்காகவே இப்புவி மீதில் தோன்றியதாக ஆதியில் கூறியுள்ளாயாகலானும், உன்னை யன்றி யெமக்குதவுவோர் எவருமில்லையாகலானும், இப் பொழுதே நீ யுன் திவ்ய சொரூபத்தைத் தரிசிப்பித்து அப்பேரின்ப வாழ்வில் ஈடுபடுத்துதல் வேண்டும் " என்று உள்ளன்புடனும் உருகிய மனத்துடனும் உண்மைப் பக்தியுடனும் மகா சிரத்தையுடனும் பணிந்து ப்ரார்த்தித்துக் கொண்டனர்.

ஏழாம் அத்தியாயம்.

[இரண்டாம் பகுதி.]

*

துரியவெளி மீதிலகும் ஜோதியருட் டேவை
உருகுமனத் தோடினிதே யுன்.

ஓம்

ஸ்ரீ வாசவீ விஜயம்.

ஏழாம் அத்தியாயம்.

[இரண்டாம் பகுதி.]

விரைவில் பேரொளியோடு வாசவாம் பிகையும் விரைவில்தன் விஸ்வரூ பத்தினைக் காட்டல்.

வணக்கத்துடனே வைசியர் யாவரும் பலவித மொழிகளால் வாசவாம்பிகையைத் துதித்து, தமக்குத் திவ்ய தரிசனமீந்து அருண் மொழிகளை யுபதேசித்து ஆனந்த வாழ்வை நல்குமாறு ப்ரார்த்தித்துக் கொண்டிருக்குங் காலையில், அங்கே திடீரென ஒரு பெருஞ் சப்தமும் ஒரு பேரொளியும் தோன்றியது. அனைவரும் அச்சமுற்று ஒன்றுந் தோன்றுதவர்களாகித் தத்தமது கண்களை மூடிக் கொண்டனர். உடனே ஆங்கோர் ஒலியுண்டாகியது. (அதாவது) "நீங்கள் ஒருவரும் அஞ்சுதல் வேண்டாம். உம்மை யெல்லாங் காப்பாற்றி உத்தமச் சுகத்தைக் கொடுத்து மேன்மைப்படுத்துவதற்காகவே பராசக்தியாகிய நாம் இங்கவதரித்துள்ளோம். உமது அபீஷ்டப்படியே இப்போது நம்முடைய திவ்ய தரிசனத்தைக் காணலாம். இத்திவ்ய சொரூபத்தை உங்களுடைய சாதாரண கண்களால் காணுதற்கு இயலாது. நமது திவ்ய சொரூபத்தைக் காணத்தகுந்த (உள் நோக்கமென்னும்) அகக் கண் ஒன்று எல்லோரிடத்திலும் எப்போதும் உண்டு. ஆனால் அக்கண்ணுக்கு முன்பு

அம்பிகையின் அருட்காட்சி.

மாயாசம்பந்தமான ஒரு திரை யிருந்துகொண்டு அந் நோக்கத்தைத் தடுத்து நிற்கும். இப்போது உமக்கு எம்முடைய திருவருளினால் அத்திரையை விலக்கியுள்ளோ மாதலால் நீங்கள் அவ்வகக்கண்ணினுதவியினால் எமது திருமேனியின் திவ்யப்ரகாசத்தைக் கண்டு ஆனந்தமெய்துமின் !" என்னும் மொழிகள் அவ்வொலியினின்றும் எழுந்தன.

அம்மொழிகளைச் செவியுற்ற யாவரும் தமது செவிகளில் இன்பத்தேன் வந்து பாய, மூச்சில் ஒரு அற்புதச் சக்திபிறக்க, உடல் முழுதும் புளகாங்கிதமடைய, உள்ளந் தண்ணெனக் குளிர, கண்கள் இரண்டும் ஆனந்த பாஷ்பத்தைப்பெருக்க, கரங்களிரண்டுஞ் சிரமிசை சென்று குவிய, நாத்தடுமாற, உரை குழற, தம் வசமழிந்து, பரவசராகி, அம்மையின் அருளொளியை அவ்வம்மையின் அனுக்ரஹத்தால் அகக்கண்ணைக்கொண்டு தரிசித்து, ஆனந்தக் கடலில் மூழ்கிக் கரைகாணுதவராயினர்.

திருமேனி தரிசனம்.

அநேக கோடி சூரியர்கள் ஏக காலத்தில் உதயம் செய்ததே போன்ற ப்ரகாசமும், அநேக கோடி சந்திரர்கள் உதித்தாற்போன்ற அமுத க்ரணத் தண்மையும், அநேக கோடி மாற்றுக்கலுடைய ஒரு பொற் பிரதிமையைப் போன்ற திவ்ய சரீரமும், மின்னலொளி வீசும் நவ ரத்னங்களா லிழைக்கப்பெற்ற அதி யற்புதமான க்ரீடமும், பிறைச் சந்திரனையொத்த திரு நுதலின்கண்ணே திவ்யமாக விளங்கும் பொட்டழகும், பருவம்வாய்ந்து முகை விண்ட பங்கயங்களைப்போன்று சோமனும் சூரியனும் திகழும் திரு நேத்திரங்கள் அருளைப் பொழியும் அற்புதமும், போய பிழையும் புகுதருவான் நின்றனவுமான அன்பர் பவங்களை அடியோடு தீயின் முன் தூசெனச் சுட்டெரிக்கும் (அக்னிக் கண்ணுகிய) பால நேத்ரமும், சூரிய சந்திரர்களாகிய இரு சுடர்களும் இருபாலும் ஒளி வீசுவதைப்போலப் பொலியும் வைரத் தோடுகளும், வெண்ணிலவைப் போன்று புன் முறுவல் பூத்திலகும் பூங்குமுதச் செவ்வாயும், ஜென்ம விடாய் தீர்க்கும் திரு மொழியும், க்ருபை பொங்கி வழியும் திருமுக மண்டலமும், ரத்ன மாணிக்க வைரங்களா லிழைக்கப்பட்ட ஹாரம் கேயூரம் கங்கணம் மேகலை நூபுரம் ஆதிய ஸ்வர்ணபரணங்களும், அதி சோபையுடன் ஒளி வீசக்கூடிய மிக விநோதமான பச்சைப் பட்டாடையும்,

கூறுதற்கரிய சிறந்த நறுமணம் மிகுந்த திவ்யமலர்களால் தொடுக்கப் பெற்ற அநேக புஷ்ப மாலைகளும், (பத்மம் பாசம் தாங்கிய திருக் கரங்களும், அபயத் திருக்கரமும், வரதத் திருக்கரமும் ஆகிய) சதுர்ப் புஜங்களும், மெய்ஞ்ஞானமே யாகிய திருமேனியுங்கொண்டு, அங்கே திருவருளால் தோன்றிய ஆயிரம் இதழ்களைக் கொண்ட அற்புதத் தாமரை மலரின்மீதில் (உடலும் உடலுயிரும் நிலைபெறுதல் பொருள் என, உலகம்ஒருவி வரும் அனுபவ நல் சிவயோக சாதனையில் ஒழுகு மவர்,பிறிது பரவசம் அழிய விழி செருகி, உணர்வு விழிகொடு நியதி தமதூடு நாடுவதும், உருவெனவும் அருவெனவும் உளதெனவும் இலதெனவும் உழலுவன பரசமய கலி ஆரவாரம் அற, உரை அவிழ, உணர்வுஅவிழ, உளம் அவிழ, உயிர் அவிழ, உள படியை யுணருமவர் அனுபூதி யானதுவும், உறவுமுறை மனைவி மகவு எனும் அலையில் நமது இதய வுருவுடைய மலின பவ சலராசி யேறவிடும் உறுபுணையும், அறிமுகமும், உயர் அமரர் மணி முடியில் உறைவதுவும், உலவு இலதும், அடியார் மனோரதமும், முருகு கமழ்வதும், அகில முதன்மை தருவதும், விரத முனிவர் கருதரிய தவம் முயல்வார் தபோபலமும், 'சரணம்' என அருள்பாடி ஆடி மிக மொழிகுழற அழுது தொழுது உருகுமவர் விழி அருவி முழுகுவதும் வருக என அறை கூவி ஆளுவதும், சதுர் மறையின் முதல் நடு முடிவின் மனம் நாறுவது மான) திருவடிகள் இரண்டும் நின்று பொலிய தமது கிரீடம் அத் தேவாலய மண்டபத்தின் மேற்பாகத்தில் படும்படி மிகப் பெரிய திருவுருவோடும் விளங்குவதை அவ்வைசியர்கள் யாவரும் அம்பிகை யின் திருவருட்டுணையால் அகக்கண் நோக்கத்தினால் முதலிற் கண்டார்கள்.

விஸ்வரூபத் திருக்கோலம்.

அவ்வாறு பார்த்துக் கொண்டிருக்கையிலேயே சிறிது நேரத் திற்கெல்லாம் அங்கிருந்த மண்டபமும் தேவாலய மும் ஏனைய யாதும் இவர்கள் கண்முன் தோன்றா தாகி, எங்கு காணினும் நமதம்பிகையின் சொரூப மாகவே காணப்பட்டது. அவ்வம்மையின் சரீரத் தின் கண்ணே பல நூறுகவும் பல ஆயிரங்களாகவும் பல கோடிகளா கவும் வகைகளும் நிறங்களும் அளவுகளும் கொண்ட எண்ணற்ற வடிவங்களைக் கண்டார்கள். சூரியர்களும், சந்திரர்களும், நட்சத்திரக்

கூட்டங்களும், வசுக்களும், அசுவினி தேவர்களும், மருத்துக்களும், திக்குப் பாலகர்களும், தேவர் குழாங்களும், பூதகணத் தொகுதி களும், தாமரைமலரில் வீற்றிருக்கும் சிருஷ்டி கர்த்தர்களாகிய எண் ணற்ற பிரமர்களையும், சத்ய லோகத்தையும், காப்புக் கடவுளராகிய நாராயணர்களையும், வைகுண்டத்தையும், க்ஷீராப்தியையும், ஆதிசேஷ உருவங்களையும், சங்கார கிருத்தியர்களாகிய ருத்ர கூட்டங்களையும், கைலைமலையையும், விநாயக மூர்த்தியையும், சுப்ரம்மண்ய மூர்த்தியை யும், ஸ்கந்த வெற்பையும், பரமேஸ்வர மூர்த்தியையும், எல்லா ரிஷிக் கூட்டங்களையும், முனிவரர்களையும், தபோதனர்களையும், யோகிகளை யும், ஞானிகளையும், தேவ ஸர்ப்பங்களையும், பாதாளலோக வாசிகளை யும், ஸ்வர்க்க நரகாதி யுலகங்களையும், இந்திராதி வானவர்களையும், விஸ்வே தேவர், பிதிர் தேவதைகள், கந்தருவர், யக்ஷர், கின்னரர், கிம்புருஷர், சித்தர், வித்தியாதரர், அசுரர், அந்தரர், நிருதர், பைசாசர், போகர், உரகர் முதலான பற்பல கூட்டங்களையும், அநேக கோடி பர்வதங்களையும், எண்ணிறந்த நதிகளையும், கடல்களையும், வனங்களை யும், வயல்களையும், சாலி சோலிகளையும், பல நகரங்களையும், பல உலகங்களையும், இவ்வாறே பல்லாயிரகோடிக்கணக்காகத் தோன்றும் அண்ட அடுக்குகளின் அமைப்புகளையும் ஆங்காங்கும் நிகழும் அதி யற்புதமான ஆச்சரியச் செயல்களையுங் கண்டார்கள்.

அவ்வுருவத்திலே எண்ணற்ற கோடி தலைகளையும், எத்தனையோ கோடி கைகால்களையும், சரீரங்களையும், கண்களையும், காதுகளையும், வாய்களையும் கண்டார்கள். அண்ட முகட்டைக் கடந்து அளவிட முடியாத அதியுயரத்திற் பொலியும் பற்பல விதரத்னகசிதமான ஸ்வர்ணக்ரீடங்களையும், சகல மாயைகளையுந் தோற்றுவித்து மீண்டுந் தன்னிடத்திலேயே வருவித்துக் கொள்ளக்கூடிய இருளையொத்த கூந்தலையும், குடிலையின் பொலிவு திகழ்வதும், அன்பர்கட்கு உள்ளொளி நல்குவதும், ஞானியர்கட்கு நல்லருள் வழங்குவதும், யோகிகட்கு அருளமுதம் பொழிவதுமாகிய ஞான நேத்திரம் வாய்ந் திலகும் திருநுதலும், அடியார்கட்கு அனுக்ரஹம் புரியும் திருக்கண் களும், வேதமும், ஆகமமும், ஞானோபதேசமும் நவிலும் திருவாயும், அடியார்கள் துதிக்கும் தோத்திரங்களைக் கேட்டு மகிழ்வுறும் திருச் செவிகளும் கொண்டு விளங்கும் பல திருமுகங்களையும், கொண்டல்

முழக்கைப்போலவும், அம்புவியைக் கடல் கொண்டெழுதற் கெதிருஞ் சண்டமாருதத்தின் முழக்கைப்போலவும் அண்டமுகட்டுற நின்று சிரித்து, அங்கணெருப்பெழ, வஞ்சமனத்தவரையும் அகங்காரங் கொள்பவரையும் த்வம்சமாக்கும் வண்ணம் நோக்கும் திருமுகங்களை யும், அண்டகடாகங்களும் தவிடுபொடியாகுமாறு கோரச் சிரிப்பு சிரித்து சிவந்துருண்ட கண்களில் அக்னிப் பொறிகள் பறக்க மகா கோபத்துடன் நோக்கி அஞ்ஞான விருளூத்தை அறச் சுட்டெரித்துச் சாம்பராக்குந் திருமுகங்களையும், அநேக கோரப் பற்களையும், பகுவாய் களையும், வடவையைக் கக்குவதைப் போன்ற கோபச் சிரிப்புடன் தோன்றும் பல முகங்களையும், மிகவும் பயங்கரமான பல வடிவங்களை யும் அவ்வுருவில் கண்டார்கள்.

அத்திருவுருவின் கண்ணே இந்தப் பூவுலகத்தையும், நமது பாரத நாட்டையும், கோதாவரி நதியையும், பெனுகொண்டா நகரத்தை யும், பதினெண்புரங்களையும், தேவாலயத்தையும், வாசவாம்பிகையை யும், வைசியர் குழாங்களையும், தம்மையும் கண்டார்கள். விஷ்ணு வர்த்தன மன்னனையும் அவனது நாடு நகரங்களையும், குடிபடைகளை யும் ஏனைய யாவற்றையும் கண்டார்கள். அம்மன்னனுடைய அகங்காரமும் காமாதி துர்க்குணங்களும் தனியே பிரிந்து ஓர் வடிவந் தாங்கி அவ்வம்பிகையின் குரூர உருவங்களுள் ஒன்றின் வாய்க்குள் புகுந்து கோரப்பற்களுக்கிடையே சிக்கிக்கொண்டு அரைபட்டுத் தவிடுபொடி யாவதையுங் கண்டார்கள். எத்தனையோ உலகங்களை எரித்துச் சாம்பராக்கத்தக்க சுடரொளியைப் பரப்பும் பல முகங்களை யும், பக்தர்கட்கு உற்ற இடுக்கண் அகற்ற இனிதே அருள் செயும் எண்ணற்ற பல முகங்களையும், எல்லா வுலகங்களையும் இனிதே காத்து இன்புற இரட்சித்தருளும் திருநோக்கத்தையும், அடியார்கட்குஆனந்த இன்பமாகிய அற்புதத்தேன் பெருகும்படி கருணை பொழியும் அழகிய திருக்கண்களையும், எவ்வுலகிற்கும் ஜீவிப்பையும் தண்மையையும் சுபிக்ஷத்தையும் நல்கவேண்டி கதிர்மதி யொளியைக் கண்யமுடன் பரப்பும் திருவிழிகளையும், சூழும் பலரும் படிக்கும் பழ மறைகளையும் ஆகமங்களையும் முடிக்கும் வண்ணம் திருவருள் புரியும் பல முகங்களை யும், சாஸ்திரங்களையும் மந்திரங்களையும் எளிதே விளக்கும் எழில் முகங்களையும், மந்திரம் புகன்று மாண்புற நடாத்தும் யாகங்களை

யெல்லாம் சரிவர நடாத்துவித்துத் திருவருள் புரியும் மதிவதனங்களையும், எட்டுத் திசையிலும் எவ்வெவ்விடத்தும் இன்பம் பொங்கிடற்கின்னருள் புரியும் இயல் செறி முகங்களையும்,

எறிதிரையால் தமருக வொலி தரும் சகல சமுத்ரங்களிலும் உள்ள நீரையெல்லாம் ஒரு நொடியில் அள்ளி ஆசமனம் செய்யும் பல கரங்களையும், தேவ தருக்களையெல்லாம் எளிதிற் பற்றி முறிக்கும் பல கரங்களையும், அஷ்டகுல பர்வதங்களையும் திக் கஜங்களையும் எளிதில் எடுத்து ஒன்றேடொன்றை மோதுவிக்கும் பல கரங்களையும், மேரு மலையையும் சக்ரவாள கிரியையும் தவிடுபொடியாக்கும் பல கரங்களையும், அண்டகடாகங்களனைத்தையும் இடம் மாற்றியமைக்கும் பல கரங்களையும், எல்லாவற்றையும் பழையபடி திருத்தியமைக்கும் பல கரங்களையும், அண்டகடாகங்களும் அதிரும்படியாகவும், அமரர் காதுகளும் அசுரர் காதுகளும் செவிடுபடும்படியாகவும், வெற்றிச் சங்கத்தை எடுத்துச் செம்பவளம் போன்ற திருவாயில் வைத்து ஒலியெழச் செய்விக்கும் பல கரங்களையும், உலகமெல்லாம் வெருவும்படி சூலம் மழு தோமரம் வேல் முதலிய ஆயுதங்களைச் சுழற்றும் பல கரங்களையும், மகா அட்டகாசத்துடனே விற்களை வளைத்து நாலுலி கிளப்பி அஸ்த்ரங்களைப் பூட்டி அனைவரையும் அச்சுறுத்தும் பல கரங்களையும், குந்தம் முசலம் வஜ்ரம் சுரிகை சக்ரம் இவைகளைத் தாங்கி எவ்வுலகு மஞ்சி நடுங்க எங்கணும் சுழற்றும் பல கரங்களையும், வாள்களை வீசும் பல கரங்களையும், தேர்களையும் யானைகளையும் குதிரைகளையும் வீரர்களையும் அசுரர்களையும் வாரிவாரி எற்றும் பல கரங்களையும், திருவடிகளிலே வீரக்கழல்களைக் கட்டும் பல கரங்களையும், பொய்யடியார்களையும் வேடதாரிகளையும் வஞ்சகர்களையும் வம்பர்களையும் வீணர்களையும் குறும்பர்களையும் புரட்டர்களையும் மோசக்காரர்களையும் மூர்க்கர்களையும் வன்கண்ணர்களையும் கொடுங்கோல் மன்னர்களையும் பாபிகளையும் இருகரங்களால் நெருப்பெழத் தேய்த்தும் ஒருகையினுலேயே நசுக்கிப் பொடி பொடியாக்கியும் சென்றுளெழுப்பும் திருக்கரங்களையும், மாலைகளையும் ஆபரணங்களையும் சரியாகத் திருத்தி யமைக்கும் பல திருக்கரங்களையும், நாத விளக்கத்தை யுணர்த்தவேண்டியும், அன்பர் பாடும் அரும் பாடல்களைக் கேட்டுவந்து மகிழ்ச்சி காண்பிக்க வன்னியும் மணிகளை யசைக்கும் பல திருக்கரங்களையும், சகல

வுலகங்களிலும் உள்ள உயிர்களும் பயிர்களும் செம்மையாய் வாழச் செழு மழையைப் பொழிவிக்கும் பல செங்கைகளையும், அனைவரையும் 'அஞ்சேல்! அஞ்சேல்!!' என அபய ஹஸ்தம் தந்து காத்தருளும் அற்புதத் திருக்கைகளையும், வானமுதத்தை வழங்கும் கரங்களையும், ஞானவமுதினை நல்குங் கரங்களையும், உலக வின்பத்தை உவந்தருள் கரங்களையும், பேரின்பந் தந்து பேணுங் கரங்களையும், அகங்குழைந் துருகும் அன்பரை யருகினில் அழைக்குங் கரங்களையும், அவர்க் கேதேனுந் துன்பங்கள் நேரின் அப்பொழுதே சென்று அவர்களைத் தாங்குங் கரங்களையும், அவர்க்குறு மிடர்களை யகற்றுங் கரங்களையும், புல்லாங்குழலை வாயில் வைத்து ஓலியெழச் செய்யும் ஒண் கரங்களை யும், வீணையை மீட்டும் வியன் கரங்களையும், யாழ் வாசிக்கும் அற்புதக் கரங்களையும், இசைக் கருவிகளை இனிதே மீட்டும் எழிலார் கரங்களையும், துடி, முரசு, குடமுழா; முதலிய அநேகவித வாத்தியங் களை முழக்கும் பல கரங்களையும், வேதம் ஆகமம் புராணம் இதிகாசம் சாஸ்த்ரம், மந்த்ரம், பூஜை, யோகம் முதலியன பயிலுமிடங்களிலும், பல பாஷாப்யாசமும், பல மொழி நூல்களும் பயிலுமிடங்களிலும், நீதி மன்றுகளிலும், குளங்களிலும், நதிகளிலும், கடல்களிலும், மலைகளிலும், மண்ணுலகத்திலும், விண்ணுலகத்திலும், கீழுலகத்திலும், மேலுலகத்திலும், எனைய வுலகங்களிலும், எண்ணற்ற புவனங்களி லும், பலகோடி அண்டங்களிலும் சென்று சென்றுலாவி, ஆங்காங் குற்ற குற்றங்களைந்து நன்மையை நல்கும் நளினமலரனைய நற்பூங் கரங்களையும், என்றும் இன்பமே பெருக்கிக்கொண்டு இனிதே இலகும் எழிற்கரங்களையும் கண்டார்கள்.

நால்வகைத் தோற்றத்துள் எழுவகைப் பிறவிகளையும் தீர்வரிய கன்மத்துக் கீடாயடைந்து கறங்குஞ் சகடமும்போற் ஜெனித்து இருந்து வாழ்ந்து மரிக்குந் தன்மைவாய்ந்த எண்பத்துநான்கு லக்ஷம் வகைகளையுடைத்தாய எண்ணற்றகோடி ஜீவராசிகளும், ஸ்வர்க்க மத்ய பாதலமாதிய மூவுலகங்களும், இவைகளுண் டாவதற்கான ஸ்தூல பஞ்ச பூதங்களும், அவற்றின் தத்வங்களும், ஆண் பெண் பாகுபாடுகளும், தேவ மானுஷ ராக்ஷஸ கூட்டங்களும், தேவ மாதர் களும், அஷ்டகுல பர்வதங்களும், அஷ்டதிக் கஜங்களும், அஷ்டதிக் குப் பாலர்களும், இவைகளையெல்லாம் சிருட்டிக்கும் பிரமனும்,

இவையனைத்துக்குங்காப்பும் எல்லையுமான அண்டச்சுவரும் ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது ஒரு அண்டமாதலால் அத்தகைய அளவை வாய்ந்த அனந்தகோடி (கோடானுகோடி) அண்டங்கள் அளவிடற்கரிதாகி அவ்வம்மையின் சரீர முழுமையும் அமைந்து காணற்கரிய காட்சியுடன் திகழ்வதையும் கண்டார்கள். எத்தனையோ கோடி அண்டங்கள் அவ்வம்மையின் திருமேனியின்கண்ணே தோன்றித் தோன்றி அவ்வன்னையின் கடைக்கண் நோக்கத்தின் சக்தியால் அந்தரத்தில் நின்று சுழன்று பொலிந்து கொண்டிருப்பதையும், அவ்வவையும் தோன்றியவாறே அவ்வம்பிகையின் திருமேனியிற் சென்று மறைந்து விடுவதையும், மீண்டும் மீண்டும் புதிது புதிதாய்ப் பற்பல விதமான அண்டங்கள் தோன்றி அருளொளியில் இயங்குவதையும், அநேககோடி உயிர்கள் பிறந்து பிறந்து வாழ்ந்து திரிந்து இறந்து படுவதையும், அநேகர் சரியை .கிரியைகளை யனுஷ்டித்து சாலோக சாமீப பதங்களை யெய்துவதையும், யோக மார்க்கத்தி லீடுபட்டு சாரூப்யபதம் பெறுவதையும், அநேகர் உண்மை ஞானவொளியை யுணர்ந்து அவ்வம்மையின் ஜோதியொளி மேனியில் இரண்டறக் கலந்து, இரும்புண்ட நீர்போல் சாயுஜ்ஜிய மெய்துவதையும், ஆதியும் நடுவும் அந்தமும் இன்னதென அறிதற் கியலாத அவ்வம்மையின் உயர்ந்த நிலையையும் கண்டார்கள். இவ்வாறு பல்லாயிர கோடியண்டங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் அத்திவ்ய சொரூபத்தை மீண்டும் மீண்டும் பார்த்துப் பார்த்துப் பரமானந்த மெய்தித் தம்வசமழிந்து பரவசமடைந்து நின்றார்கள்.

யாவரும் வியந்து இறைவியை இறைஞ்சல்.

இவ்வண்ணமாக அவ்வம்பிகையின் திருக்கோலத்தை ஞானவொளி கொண்டு நன்கு தரிசித்துப் பேரானந்த மெய்திய அவ்வைஸ்ய புங்கவர்கள் அனைவரும், நமதம்மையின் அருளை வியந்து போற்றி, "எல்லா வுலகங்களையும் தோற்றுவித்து ரக்ஷித்து அருளியும், பஞ்ச பூதங்களாயும், சகல வுலக வுயிர்வர்க்கங்களாயும், தேவ மானுஷ பூத கூட்டங்களாயும், மஹரிஷிகளாயும், முனிபுங்கவர்களாயும், நாகலோக பாதாளலோக வாசிகளாயும், ம்ருகம் பட்சி ஜலஜந்து க்ருமி கீட முதலான பலவித ஜீவராசிகளாயும், அவைகளின் ஸ்தூல சூக்ஷ்ம காரண சரீரங்களாயும், அவையனைத்துக்கும் மேம்பட்ட ஆத்மஞான ஜோதி ஸ்வரூபமாயும்,

எங்கும் நிறைந்ததாயும், எல்லாம் வல்லதாயும், சாந்தி மிகுந்ததாயும், சத்வ ஸ்வரூபமாயும், ஆதியாயும், அனுதியாயும், அகில பரம நிலைய மாயும் எத்தொழிலிலும் எக்காலத்திலும் எவ்விடத்திலும் கலந்தொன்றி யுளதாயும், ஒளி ஒலி வேதம் வேள்வி கல்வி கேள்வி க்ரியை பக்தி சாதனம் யோகம் ஞானம் ஆத்மார்த்தம் முதலிய அனைத்தின் மயமாயும்,

கலைமகள் திருமகள் மலைமகள் ஆகிய மூவகை யுருவாயும், சரஸ்வதி லக்ஷ்மி பார்வதி மஹேஸ்வரி மனோன்மணி என ஐவகையா யும், பிராம்மி மஹேஸ்வரி கௌமாரி வைஷ்ணவி வராகி இந்த்ராணி சாமுண்டி என எழுவகையாயும், எக்ஞரூபி ஸ்யாமலை மஹேஸ்வரி மனோன்மணி பராபரி கௌமாரி ரௌத்ரி வைஷ்ணவி புவனேஸ்வரி என நவ வடிவாயும் தோன்றித் தோன்றி பின்பு யாவும் ஒன்றுகியும் விளங்குகின்ற மகாசக்தியின் ஸ்வரூபத்தை இன்று தரிசிக்கப் பெற்றோம்.

அண்டர்களும் முனிவர்களும் உலகங்களும் உயிர்களும் எனைய பலவும் தன்னகத்தே காண்பிக்கும் இவ்வம்மையின் வடிவ முழுவதையும் காணுவதென்றல் யாவராலியலும்? எண்ணற்ற கண்களைச் சரீரமெங்கணுங் கொண்டவர்களாயினும் இவ்வம்மையின் வடிவ முழுமையும் காணவுன்னி எத்தனைகோடி கற்பகாலங்கள் காணினும் காணுதற் கொண்ணுமோ? இவ்வம்பிகை கொண்டருளிய இத்தகைய திருப்பெரு வடிவத்தில் பொலிவுறும் ஒளியும் இளமையும் எழிலும் எனைய நலன் பலவும் வேறெவர்க்குள? இத்திவ்ய ஸ்வரூபத் தினை அற்புதத்தோடும் பல்காற் பார்க்கினும் நம்முடைய பார்வை யின்னமுந் தெவிட்டிற்றில்லையே! இஃதென்ன விந்தையோ தெரிய வில்லை! யாதொன்றையும் ஒப்புவமை கூறமுடியாத இத்தகைய பேருருவதனைப் பார்க்கையிலேயே அனைவரும் அச்சுறுவார்களே யன்றி எளிதிற் கண்டுணர இயலாது. நாம் அநேக ஜென்மங்களில் இயற்றிய தவத்தின் பயனும் அவ்வம்மையின் திருவருளாலும் கிடைக்கப்பெற்ற ஞானவொளியின் துணையினுமன்றே இச்சீரிய வுருவினைக் காணற்கு இவ்வளவாகிலும் இயலுகின்றது? ஆயிரகோடி அழகியர்களையும், ஆயிரகோடி அப்ஸர ஸ்த்ரீகளையும், ஆயிரகோடி ரதி தேவிகளையும், ஆயிரகோடி மன்மதர்களையும் ஒ ரு ங் கே க

வரவழைத்து அவர்களுடைய அழகினைத்தையும் சேர்த்துத் திரட்டினும் இவ்வன்னையின் திருவடியில் ஒரு பக்கத்திலிருக்கும் அழகிற்கு இணையாகாதே! அவ்வாறிருக்க இம்மாதாவின் வடிவழகு முழுமைக்கும் உவமை கூற எவ்வாறியலும்? எழுதுதற்கு ஏடும் எழுத்துக்களும் இரா. சொல்லவென்றால் வாய்கள் காணா. நினைப்பதற்கும் மனத்திற்குச் சக்தி போதாது. அவ்வாறிருத்தலான் இத்திருவுருவின் சிறப்பினை வகுக்க எவராலுமாகாது.

ஞானப் பிழம்பாகிய இவ்வன்னையின் திருமேனியை அடிமுதல் முடியின் காறும் எண்ணிலா வூழிக்காலங்களாக எத்துணைத் திறத்துடன் நோக்கினும் கண்ணுக்கடங்காது. உன்னினாலும் கருத்துக்கடங்காது. இத்தகைய வம்மை நமது மரபில் வந்து தோன்றவும், தரிசனம் தரவும் நமது குலஞ் செய்தவமே கோதிலாச் சிறப்புடைத்து" என்றெல்லாம் நினைக்கலாயினர்.

அவர்களுக்குள் ஒருசிறிதிருந்த வெகுளி முதலிய குற்றங்களகன்றன. ஊக்கந் தோன்றியது. உரோமஞ் சிலிர்த்தது. விழியிற் நீர் பெருகியது. தேவியின்பால் அன்பு பிறந்து வளரத் தொடங்கியது. உள்ள முருகியது. உலையிடுமெழுகுபோல் என்புங் கசிந்தது. அகந்தை முழுவதும் அறவே தொலைந்தது. போதம் புகுந்தது. வலது தோளும் கண்ணும் துடித்தன. புவனமெங்கணும் உள்ள யாவும் அவர்கள் முன் தோன்றின. உலகப்பற்றும் உடற்பற்றும் நீங்கின. தம் வசமழிந்து பரவச மெய்தினர்.

" இவ்வம்மை இத்தனை தினங்களாய் நமது குழந்தைபோலத் தோன்றிய தெல்லாம் அருள்வினையாட்டன்றே? என்பதை எண்ணுந் தோறும் இதயங்கசிந்தது. இவ்வம்மை நினைத்தால் விஷ்ணுவர்த்தனனுவது, இன்னும் அவனிலிடச் சிறந்தவனுவது எம்மாத்திரம்? உயிரைக் கொள்ளைகொள்ளும் நமனையே ஜயித்துவிடலாமென்றால் எனையவற்றைப்பற்றி இயம்பவும் வேண்டுமா? இவ்வம்மை சாடவேண்டுமென்று நினைத்து மூனிந்தால் யாவர் எதிர் நிற்பார்கள்? எந்த வுலகம் மிஞ்சும்? ஆஹா! இத்தகைய பராசக்தியின் திவ்ய தரிசனங்காண என்ன புண்ணியம்செய்தோம்! ஆஹா! அதிசயத்திலும் அதிசயமன்றே இது? நம்முடைய வாழ்நாட்களில் இன்றே புண்ணிய நன்னாள்!

நமது பவமனைத்தும் இன்றே பஸ்மீகரிக்கப்பட்டு நாசமாயின! நமது ஜன்மம் சாபல்ய மடைந்துவிட்டது! ஞான நோக்கத்தைக் கொண்டு அம்மையின் திருக்கோலத்தைத் தரிசிக்கப்பெற்ற நாம் இன்றே பவசாகரத்தைக் கடந்து முத்தியங்கரையை யடைந்தவர்க ளொத்தோம்! நாமும் நம் பெரியோர்களும் செய்த தவமே நற்றவ மாகும்!" என்றெல்லாம் பலவாருக எண்ணி எண்ணியும், உவந்து வியந்தும், த்ரிகரண சுத்தியாக மிருந்த பேரன்புடனும் அம்மையின் திருவடிகளை மனமலரில் அமர்த்தி, ஸ்தோத்தரிக்கலாயினர்.

"வேதமுடி மீதிலமர் தேவிநம;
எமதுகுலம் வீறுடன் விளங்கி யொளிர
சீதமதி வதனமொடு நான்குகர
மும்பொலிய சேவைதரு வாசவி நம;
ஆதிநடு வீறில்பத ஞானசுக
போகமரு ளம்பிகை க்ருபாகரி நம;
ஜோதிசுய ரூபவொளி மேவிமிளிர்
கௌரிநம; தூயவபி ராமி நமவே;

வாசவியெ னப்புவியில் வந்தருளும்
வனிதைநம; வானவர்கள் மண்ணவர் களும்
பூசைபல செய்துதொழு தேத்தவரு
ளீசப்பொழி புராதனி மஹேஸ்வரி நம;
தேசுதிகழ் கோடிமதி யுதயமென
வருளினெடு சேவைதரு பூரணி நம;
வீசுபுகழ் மேவிடவும் வினைபலவு
மாய்ந்திடவும் விரைவிலருள் விமலி நமவே.

எங்கள்குல மங்கையென வந்தொளிரு
மன்னைநம; எண்ணிலடி யார்களிட ரைத்
தங்குமகிழ் வோடுகளை சாம்பவி
நமோநம; தராதல மிசைவணிகர் சீர்
எங்குமிக வேபெருக பொங்குபுகழ்
தந்தருளு மீஸ்வரி மனோன்மணி நம;
பங்கயம கிழ்ந்துறை யிலக்குமி
நமோநம; பராபரி பவானி நமவே.

கல்விநல மீத்தருள வாணியுரு
மேவிவரு காயத்ரி பாரதி நம;
செல்வமதை யருளமலர் மகளாகு
மன்னேநம; திகழ்வீரம் நல்கி யுதவும்
நல்விஜய லக்குமி நமோநம;
உமைசக்தி நாராய ணீபரை நம;
பல்வர மளித்திடப் பாரில்வரு
வாசவி பராக்ரமி பகீரதி நம.

நிராமய பராமுத நிராதர
சுகோதய நிலாவவருள் நிர்க்குணி நம;
பராபர வனுமய வகோசர
பதாம்புய மளித்துதவு பண்ணவி நம;
தராதல மிசைப்புலவர் மெய்யடிய
ரன்பர்பலர் சார்ந்துபணி சங்கரி நம;
இராவொடு பகற்பொழுது போக்குவர
வற்றெளிரு மின்பருளு மம்மை நமவே.

பற்பலசி ரங்களொடு பற்பலமு
கங்களொடு பற்பலக ரங்களுட னே
பற்பலரு வங்களொடு பற்பலுல
கங்களொடு பற்பலுயி ராகியொளி செய்
தற்பரைநின் மேனிதனில் நிற்பவைய
னேத்துமிவண் சாற்றுவது மிக்கவரி தே
அற்புதமி தற்புதமி தற்புதமி,
தாமிதடி யேங்களுணை ரற்கெளிய தோ?

[வேறு]

ஒன்பது சக்திக ளாக வருக்கோடிவ் வுலகின ருக்கருள் வாய்
அன்பர்ப வங்கள னேத்தும றுத்தரு ளார்வமு டன்றரு வாய்
பொன்பவ ளஞ்செறி பூஷண மேபல பூண்டுபொ லிந்திடு வாய்
இன்பம ளித்திட வாசவி யாய்வரு மீஸ்வரியே நம வே.

எமது குலத்தினில் நல்லெ
டுதித்தரு ளிறைவி பரா பரியே
விமல சிரோமணி யடியர்
மனத்தொளிர் வித்தக ரூப மணி

சமய மனைத்தினு மருவி
நிறைந்த தயாபர வடிவ மணி
அமரரு முனிவரு மனைவரு
முவகையொ டடிபணி மணி நமவே.

பிழைக ளனைத்து மறந்தருள் செய்திடு பிஞ்ஞகி யம்பிகை யே
குழையு மனத்துட னடியர் தொழப்புவி குலவு முயிர்களெ லாம்
விழையு மனைத்தையு மீந்திடுவாய் நின தருளே விரும்பு கிறேம்
குழையென வலர்கதிர் மதியணி சுந்தரி கோமளே யேநம வே.

குசும னியற்றிய தவமென வந்தனை கூறவொ ணாப்புக ழை
அசைவில் மனேதிட தைர்ய மதைத்தர வவனியி லுற்றனை யால்
பசுபதி யுலக மெனப்படு மூப்பொருள் வகையுணர் பான்மையி னை
இசைபெற விரைவினி லருள்புரி வாசவி யிறைவி நமோநம வே.

கன்னிகை யெனவ வதார மெடுத்திடு காரிகை யேநம வே.
உன்னரி தாமொரு பேரொளி வீசி யுதித்த சிவைநம வே
மன்னு சதுர்ப்புஜ மோடு கிரீடமு மணிபணி நூபுர மும்
மின்ன வெழுந்தரு ளன்னை நமோநம மீன்விழி யாய்நம வே.

யாமறி யாம லிழைத்த பிழைக ளியாவு மனித்தரு ளாய்
ஓமெனு மோருரு வாகி விரிந்த வுமைதிரு நாமக ளே
மாமறை நான்குட னுகம சாத்திர மற்றுள நூல்களெ லாம்
தாமரை நேர்நின தாள்பர வத்துணை சாரு மனைநம வே.

ஆரணி யேசுக ஞான பதந்தனை யன்ப ரடைந்திட வே
பூரண மாயருள் செய்திடு நின்புகழ் போற்றி யிறைஞ்சிடு வோம்
வாரணி மாதன வாசவி யேகம லாசனி வாணி நம
நாரணி யேநம நாதவொ ளியருள் நாயகி யேநம வே.

நின்றரி சனமது காணுத லேமிக நேர்த்திய தாமடி யேம்
இன்றுன திவ்விய தேசொடு கண்டன மெங்கள்ப வங்களெ லாம்
துன்றிய ழிந்திட நல்லொளி வீசினை தூயமெய்ஞ் ஞான வொளி
நன்றடை தற்கருள் செய்தனை யெங்களின் நற்றவம் நற்றவ மே,

[வேறு.]

பூதலத்திற் பொருந்துதிருத் தலங்கள் தோறும்
போய்ப்பணிந்து மெய்யன்பாற் போற்றி செய்தும்
ஏதமறப் பலபுண்ய தீர்த்தந் தோய்ந்து
மிசைபெருகு மாவேள்வி களைப்பு ரித்தும்

வேதமைநத் தினம்பயின்றும் விரைசேர் பூக்கள்
பலசொரிந்து விருப்பொடருச் சனைகள் நேர்ந்தும்
மாதவங்க ளாற்றியுங்கண் டறிதற் கொண்ணு
வடிவினைக்கண் ணுறும்பேறு வாய்த்த தன்றே.

பலகோடிப் பாஸ்கரர்போல் தோன்றி யெங்கள்
பவமனைத்தும் வடவையின்முன் பஞ்சே யென்ன
நிலைகுலைந்து தொலைந்திடநல் லருளால் ஞான
நிறையுருவைக் காட்டினையிந் நெடிய கோலத்
திலையெனுமோர் பொருளுமுள தோவிங் கம்ம
விவ்வுருவ முழுவதையு மெளியேங் காணற்
கலகில்யுகம் பலப்பலவும் போதா தென்னி
லறிந்துரைக்க வல்லவரா ரன்னு யன்னுய்?

எண்ணறுபல் கோடியெனு மண்ட மெல்லா
மிலகிடுநின் றிருவடியி லோரு ரோமக்
கண்ணிலிருந் தொளிரவதைப் போன்ற பல்லா
யிரங்கோடி யண்டவடுக் கமைப்புங் காணில்
எண்ணரிய வொளிப்பெருக்கி லெவையுந் தோயு
மியல்பனைத்து மிங்கடியே மியம்பற் காற்றேம்
பண்ணவரும் மண்ணவரும் முனிவர் யாரும்
பரிந்துதொழும் வாசவிதின் பரிசுந் தேரேம்.

உன்னரிய நினதுதிருப் புகழை யெல்லா
மும்பர்களு முனிவரரு முணரா ரென்றுல்
என்னெனவே யாங்கருதி யிசைக்க வல்லே
மெளியேங்கட் குறுமிடரைக் கனைந்தே யின்ப
நன்னெறியைப் புகன்றருளுந் தாயே வேத
நாயகியே நவிலருமரீ தவமே நாவாற்
பன்னரிய சுகவொளியே பகர்வே தாந்தப்
பெருநிலையே பரவமுதம் பெருகு மூற்றே.

[வேறு.]

கிடைப்பதற்கு மிகவரிய மானிடயாக்
கையை யடைந்தேம் கிர்த்தியென்றும்
படைத்தொளிரும் பாரதநாட் டினிற்பிறக்கும்
பாக்கியமும் பெற்றேம் பாரில்

படர்புகழி ஞெடுநான்கு மறைகள்முதற்
கலைகளெலாம் பயின்றேம் பாவங்
கெடப்புரியும் நினதுதிரு வருளொளியைக்
கண்டுள்ளக் கிளர்வுற் றேமே.

தேம்பயின்ற விளங்குதலைச் சிறுமியென
வுதிக்கையில்நின் சேவை கண்டேம்
சாம்புனதப் பணிபுனைந்து சிறுவிளையாட்
டுகள்புரிந்த தகவுங் கண்டேம்
ஆம்பல்மலர்க் கருகுமெழிற் றிருவாயா
லருண்மொழிக ளுரைப்பக் கண்டேம்
யாம்புரிந்த தவத்தாலிவ் வுருக்கண்டே
மினிப்பேரொன் றுறுவ துண்டோ?''

என்று பலவாறுக ஸ்தோத்திரம் செய்து நின்று, அவ்வம்பிகையின் மலரடிகளே மனமொழி மெய்களால் வாழ்த்தி வழுத்தி, சிந்தை நைந்து நைந்து கசிந்து கரைந்து, அனலிடு மெழுகா யுருகி நெகிழ்ந்து, இரு கரங்களையுஞ் சிரமேற் கூப்பி அஞ்சலி செய்து, "அனைத்துயிர்களையும் அன்புடன் இரக்ஷிக்கும் ஆதி பராபரியே! நின்னுடைய புகழையும், பெருமைகளையும், திருவிளையாடல்களின் மகிமைகளையும் என்னென்று கருதி ஏதென்று துதிக்க எளியேங்களா லியலும்? அனைத்துல குயிர்களையும் ஆண்டருள்புரிந்தே ஆனந்தம் நல்கும் அமுதக் கலஞ் சியமாம் நின்னை,

அன்பே யென்கோ? அறிவே யென்கோ?
இன்பே நல்கிடும் ஈஸ்வரி யென்கோ?
பொங்கும் அருள்புரி புங்கவி யென்கோ?
தங்கிடும் இன்பருள் சங்கரி யென்கோ?
அன்னே யென்கோ? அருளே யென்கோ?
பொன்னே யென்கோ? பூஷண மென்கோ?
மன்னே யென்கோ? மாதவ மென்கோ?
தன்னே ரில்லாத் தற்பரை யென்கோ?
நான்மறை போற்றிடும் நாயகி யென்கோ?
தேன்மொழி பயிலும் தேவீ யென்கோ?
மனமலர் மீதுரை மணியே யென்கோ?
முனிவர் வழுத்திடு முதல்வீ யென்கோ?

கலிமக ளெங்கோ ? காசினி யென்கோ ?
மலிமக ளென்கோ ? மலர்மக ளென்கோ ?
ஆரணி யென்கோ ? அம்பிகை யென்கோ ?
பூரணி யென்கோ ? புகழொளி யென்கோ ?
கண்ணே யென்கோ ? கண்மணி யென்கோ ?
விண்ணே யென்கோ ? விண்ணமு தென்கோ ?
தீங்கனி யென்கோ ? செங்கனி யென்கோ ?
நீங்கரு மின்பருள் நித்தியை யென்கோ ?
கல்வி மழைபொழி கருமுகி லென்கோ ?
பல்வர முந்தரு பண்ணவி யென்கோ ?
செல்வ மளித்தருள் செந்திரு வென்கோ ?
வல்வினை மாய்த்தருள் வாசவி யென்கோ ?
எவ்வுயி ருந்தொழு மிறைவீ யென்கோ ?
செவ்விய தேசருள் செல்வீ யென்கோ ?
ஆதியொ டந்தமி லருளொளி யென்கோ ?
போத மளித்தருள் புண்ணியை யென்கோ ?
அண்ட மனைத்தையு மாக்குவை யென்கோ ?
எண்டரு மண்ட மியக்குவை யென்கோ ?
காணரி தாமொளி காட்டுவை யென்கோ ?
வேண வரந்தரும் வித்தகி யென்கோ ?
ஒருவரு மறியா வுயர்பொரு ளென்கோ ?
உருகிடு மடியார்க் குறுதுணை யென்கோ ?
கவலை யொழித்தருள் கற்பக மென்கோ ?
எவையு முவந்தரு ளெழில்மணி யென்கோ ?
என்னென் றுனையா மேத்திட வல்லேம் ?
இன்னல் களைந்துன திணையடி நிழலில்
எங்களை யன்பொடு மினிதே சேர்ப்பாய் ;
எங்கு நிறைந்துள இன்னரு ளொளியில்
தங்கிட நீயருள் தருவாய் தாயே ;
மங்கலில் மெய்ச்சுக வாழ்வருள் நீயே ;
வாசவி யேயிரை வினிலருள் வாயே.

சர்வஜீவ தயாபரீ ! எங்களை இப்பிறவிப் பெருங்கடலினின்றும் எடுத்துப் பேரின்பக் கரையிற் சேர்த்தருளல் வேண்டும் " எனப் பல வாறுகப் குறையிரந்து நின்றனர்.

அவ்வமயத்தில் நமது குல தீபமாகிய வாசவாம்பிகை தனது திருவருட் கிருபா நோக்கத்தால் இவர்

தேவிகூறும் திருவாக்கு. கள் யாவரையும் கடைக்கணித் தருளி, "அன்பும் உருக்கமும் பணிவும் மிக்க வைஸ்ய குல மணிகளே! அஞ்சற்க! உமக்கு யாதொருவித துன் பமும் நேராது. உமக்குறுமிடர்களை யெல்லாம் அகற்றி, உத்தம இன்பத்தை நல்குதற்கென்றே நாம் உமது குலத்தின்கண் திருவவ தரித்தோம். உமக்குக் கூடிய விரைவில் முத்தியின்பத்தை யருளுகின் றோம். ஏனெனில், நீங்கள் யாவரும் பூர்வ ஜன்மத்தில் எம்மை நோக்கி அநேககாலந் தவங்கிடந்தீர்கள். தற்சமயம் சூசும ஸ்ரேஷ்டி யாகப் பொலியும் இவ்வுத்தமன் அப்போது 'சமாதி' என்ற பெயரை யுடைய வைஸ்யனுய் இருந்தான். அவனுடன் நீங்கள் யாவருந் தவம் செய்துகொண்டிருந்தீர்கள். அதே சமயத்தில் 'சுரதன்' எனும் க்ஷத்ரிய னொருவனும் உம்முடன் தவம் செய்துகொண் டிருந் தான். அதுகாலை நாம் ப்ரஸன்னமானேம். (சுரதன் தனக்கு மனுப் பதவி வேண்டுமென்று வரம் பெற்று, இப்போது 'ஸாவர்ணிகமனு' என்ற பெயருடன் மனு உலகத்தில் இருக்கின்றன்.) அப்போது 'சமாதி' என்பவன், 'தாங்களே எனக்குத் தனையையாகத் தோன்றி எங்கள் குலத்தை விளங்கச் செய்வதுடன், இங்கே என்னுடன் தவம் புரியும் அனைவருக்கும் அடியேனுக்கும் தங்கள் திருவடி நிழலாகிய முத்தியின்பத்தைக் கொடுத்தருளல் வேண்டும்' எனப் பிரார்த்தித்துக் கொண்டனன். 'அவ்வாறே யாகுக!' என அனுக்ரஹித்து மறைந் தோம். ஆதலால் உமக்குக் கூடிய விரைவில் ஜீவன்முத்தியின்பத் தைக் கொடுத்தருள்கின்றேம். ஆனல், இளைஞர்களும் யுவதிகளும் பாலர்களும் சிறுமிகளும் இன்னும் சில நாட்கள் இப்புவிமிசை வாழ்ந்து அநேக தருமங்களைப் புரிந்து உயிர்களுக்கு நன்மை செய்து பின்பு நம் திருவடிப் பேற்றை யடையட்டும். உலக சம்ரக்ஷணைக் காக சாக்ஷாத் மஹாவிஷ்ணுவே விரூபாக்ஷனுகிவந் தவதரித்திருக் கின்றமையினல், அவரால் யாவர்க்கும் சௌக்யம் உண்டாகும். நீதி நிலைபெறும். இராஜ்யம் செவ்வனே காப்பாற்றப்படும். எல்லோருக்கும் கண்டிப்பாக மெய்ஞ்ஞான இன்பம் வாய்க்கும். ஆதலால் யாதொருவித சந்தேகமுங் கொள்ளாமல் இளைஞர்களும் சிறுமிகளும் இன்னும் சில நாள் இவ்வுலக இன்பங்களில்

ஈடுபட்டிருந்து விரூபாக்ஷனுக்கு உதவியாக இருப்பதுடன், எமது பாதாரவிந்தத்தில் நினைவை வைத்து நிஷ்காம்யமாக எல்லாக் கர்மங்களையும் நடாத்தி உலகிற்கு நன்மை யளித்தல் வேண்டும்.

'விஷ்ணுவர்த்தன மன்னனுல் யாது தீங்கு நேரிடுமோ?' என்று நீங்கள் சற்றும் அஞ்சவேண்டுவதில்லை. அவ்விஷயங்களையெல்லாம் நாம் கவனித்துக்கொள்வோம். அவனும் இப்பிறவியில் முத்தியின்பத்தை யடையவேண்டியவன். ஏனெனில், அவன் பூர்வத்தில் பரமேஸ்வரனுடைய நெற்றிக்கண்ணினுல் எரிக்கப்பட்ட மன்மதனுடைய சரம்பரினின்றும் தோன்றி, 'பண்டாசுரன்' என்ற பெயருடன் உலகங்களைப் பீடித்துவந்தான். அப்போது நாம் 'லலிதை' என்னும் உருவந்தாங்கி அவனை ஸம்ஹரித்தோம். பின்னர் அவன் 'சும்பாசுரன்' எனத் தோன்றிப் பலரையும் வாட்டி ஹிம்ஸித்தான். அப்போது நாம் 'சண்டிகை' வடிவந்தாங்கி அவனை த்வம்ஸம் செய்தோம். அதன் பின் அவன் (முற்பிறப்பில்) 'சித்ரக்கண்டன்' எனும் கந்தர்வனுகத் தோன்றி நம்மைப் பூஜித்து வந்தான். அதனுல்தான் இப்பிறவியில் அவனுக்கு மோட்ச சுகம் கிடைக்கப் போகிறது. அவனுடைய ஆரம்பத் தோற்றம் காமன் சாம்பரினின்றும் உண்டானதாதலால் அந்தப் பூர்வ வாசனைதான் அவனைக் காமத்திற் குள்ளாக்கியதேயன்றி வேறல்ல. அவன் தனது அகங்காரங்களெல்லாமழிந்து செம்மையுறு மனத்தனுய் நம் திருவடிப் பேற்றையெய்துவன். ஆதலால் தாங்கள் ஒன்றும் அஞ்சவேண்டுவதில்லை. கூடிய விரைவில் யாம் உமக்கு ஞானோபதேசம் செய்தருளுகின்றோம். ஜீவன் முக்திப் பேரானந்தத்தை நல்குகின்றோம். உலவாப் பேரின்பத்தைப் பெற்று நீவிர் உய்ய வேண்டிய காலம் மிகவும் சமீபித்துவிட்டது" என்று கூறி முடித்து, தமது விஸ்வரூபத்தினை மாற்றி எப்போதும்போல சாதாரணப் பெண் வடிவமெய்தி நின்றனர்.

அதுகண்ட வைசியர் குழாங்கள் யாவரும் கண்களைத் திறந்து நோக்கி, ஒரு சாமான்யப் பெண்மணி போல எதிரில் நிற்கும் வாசவாம்பிகையைக் கண்டு வணங்கி, "இதுகாறும் நாம் கண்டவனைத்தும் கனவோ? நினைவோ?" என எண்ணி ஒன்றும் புரியாது அம்மஹா சக்தியின் திருவருட் பெருமையை உன்னி உன்னி ஒப்பிலா மகிழ்வை யெய்தி விளங்கினர்கள்.

பெனுகொண்டாபுரியில் தற்காலம் உள்ள தேவாலயத்தின் உள்தோற்றம்.

(1) ஸ்ரீ நகரேஸ்வர ஸ்வாமி கோயில். (2) ஸ்ரீ M. V. G. காண்பிப்பது ஸ்ரீ வாசவாம்பிகை ஆலயம். (3) ஸ்ரீ மஹிஷாசுர மர்த்தனி ஆலயம்.



உள்ளமெனுங் கோயிலிலே யுள்ளபொரு ளீச்சேவித் துள்ளுருகி யுள்ளே யுறை.

Photograph by Veenus Studio, Rajahmandry.

ஏழாம் அத்தியாயம்.

[மூன்றும் பகுதி.]

*

முக்திக் கனியருந்தச் சித்தம் விழைந்திடுமேல்
பக்திக் குருகிப் பணி.

ஓம்

ஸ்ரீ வாசவீ விஜயம்.

ஏழாம் அத்தியாயம்.

[மூன்றும் பகுதி.]

இளைஞர்கள் கடமையும் ஏனை நீதிகளும்.

இகபர சுகங்களை எளிதினில் ஈந்துதவ வல்ல அற்புதப் பேரருள் வடிவமான ஆதி பராசக்தியின் அவதாரமாகிய நம் வாசவாம்பிகையின் திருக்கோலத்தைத் தரிசித்த அனைவர்க்கும் மனம் சிறிதும் மாசின்றி மிகவும் அமைதியுற்றிருந்தது. அவ்வம்பிகையின் திருக்காட்சியே அவர்கள் கண்களின் முன் தோன்றிக்கொண்டிருந்தது. அன்னை மொழிந்தருளிய விண்ணமுதனைய விழுமிய செஞ் சொற்கள் அவர்தம் செவிகளில் மீண்டும் மீண்டும் ஒலிப்பதுபோலத் தோன்றித் தோன்றி ஆனந்தத் தழுத்தியவண்ணமா யிருந்தன.

அருட்சக்தியின் ப்ரபாவம், தெய்வீகம், ஞானவொளி, சாந்தக் கதிர், பேரழகு, அழியா இளமை, உயர்வலிமை, சொல்லின் இனிமை, அதிலொளிர் தூய்மை, அருளைப் பொழிந்திடும் கடைக்கண் நோக்கம், ஆதிய பலவற்றையும் அவர்களுள்ளம் நினைவுக்குக் கொண்டுவந்த வண்ணமாயிருந்தது. அதுகாலை நம் வாசவாம்பிகை யுவர்களுக்கும் யுவதிகளுக்கும் சில நீதி மொழிகளைப் புகலத் தொடங்கினர்.

வாசவீ உபதேசம்.

இன்பமயமே எங்கும் நிறைந்தது. இடையற நிறைந்தது. அணுவுள்ளணுவாய், அறிவுக்கறிவாய், உயிருக்குயிராய்த் தழைவது. சத்தியமானது. நித்தியமானது. உயர்ந்தது. ஒப்பற்றது. அனைத்தையும் தன்மயமாய்க் கொண்டுள்ளது. அனைத்தையும் தன்னிடத்திலிருந்தே தோன்றச் செய்வது. அனைத்தும் தானுகவே பொலிவது.

அதுவே உருவம். அதுவே அருவம். அதுவே உருவருவம். இரவும், பகலும், இரண்டுமானதும், இரண்டு மல்லாததும் அதுவே. எல்லாம் செய்யவல்லதும், எல்லாம் செய்வதும், சும்மா இருப்பதும் அதுவே. அநேகமாய்ப் பொலிவதும், ஏகமாயிருப்பதும் அதுவே. சொல், மனம், செயல் ஆதிய கடந்ததும் அதுவே. அதுவே பரமாத்மா என்றும், ப்ரம்மம் என்றும் பலவித பெயர்களாலும் பேசப்படுவது. அதுவே அறிவு வெள்ளம். அவ்வெள்ளத்திற் படிந்து ஆனந்தமாய் மூழ்கி (அறிவு மயமாகிச்) சுகித்தலே உண்மைச் சுகம். பரமாத்ம மயமான அவ்வருள் வெள்ளத்தில் மூழ்கி ஆனந்தித்த பெரியார்கள் பலர் ஏனையரையும் அறைகூவி அழைக்கின்றனர். அவர்களது உத்தம ஸ்திதி பரமாத்ம மயத்தில் கலந்துள்ளமையால் அங்கே ஜீவ போதமே சிறிதும் இல்லை. அவர்களது வாக்கு கடவுள் வாக்காக வெளிவருகிறது. அத்தகைய உத்தம மஹான்களால்தான் உலகில் சுபிக்ஷம் தழைகிறது. இன்பம் ஓங்குகிறது. கீர்த்தி நிலைபெறுகிறது. நம் பாரதநாடு ஆதிகாலந்தொடங்கி குன்றுப் பேரொளியுடன் திகழ்கின்ற தென்றல், அதற்கு இத்தகைய ஞானசிகாமணிகளின் தூய வாழ்க்கையும், அவர்களது மனோபாவமும், தூயஸ்வாசமும், அருள் மொழிகளுந்தான் காரணம் என்று கூறினல் அது மிகையாகாது.

'அவர்களது தூய மொழிகளின் மஹிமையால்தான் இன்றும் இப்பாரததேசமும், இவ்வுலகமும் சுகமடைகிறது; கீர்த்தி யெய்துகிறது' என்று கூறலாம். அத்தகைய தூய மொழிகளே வேதங்கள் என்பனவாம்.

வேதங்கள்.

அவ்வேதங்கள் அத்ரி, மரீசி, ஆங்கீரசு, பராசர், பரத்வாஜர் முதலிய மஹரிஷிகளின் தெய்வப் புலமையினின்று இயல்பாகப் பொங்கிய அருளறிவுக் கடலான சுருதியாகும். அதனை வியாச பகவான் நுணுகியாராய்ந்து, முறை வகுத்து, ருக், யஜுஸ், சாமம், அதர்வணம் என்று நான்காகப் பாகு படுத்தி, பைலர், வைசம்பாயனர், ஜைமினீ, ஸுமந்து என்னும் நான்கு மஹரிஷிகளுக்குப் பயிற்றினர். இவர்கள் வழி வழி வழங்கிய வேதம் காலப் போக்கில் பல கிளை (சாகை) களாகப் பிரிந்தது. ருக் வேதம் 21-சாகைகளையும் யஜுர்

வேதத்தில், க்ருஷ்ண யஜுஸ் 94-சாகைகளையும், சுக்ல யஜுஸ் 15 சாகைகளையும், சாமவேதம் 1000-சாகைகளையும், அதர்வண வேதம் 50-சாகைகளையும் கொண்டதாய்ப் பிரிந்தன. இக்கிளைகளில் இப்போது மிகச் சிலவே உலகத்தில் வழங்கி வருகின்றன.

கலியுகத்தில் தோன்றும் மனிதர்கள் வேதம் முழுவதையும் அத்யயனம் செய்வது அசாத்யம் என்று எண்ணிய கிருஷ்ணத் வைபாயனர், ஒரு மனிதன் எவ்வளவு பாகத்தை எளிதில் அத்யயனம் செய்து கிரியையை உண்டாக்கிக் கொள்ள இயலுமோ, அவ்வளவை ஒரு பிரிவாகப் பிரித்து வைத்தார். அப்பிரிவுகளே சாகைகள் எனபனவாம். வேதங்களை எளிதிற் பயிலுமாறு வகுத்துத் தந்தமையால் அவருக்கு வியாசர் என்றும், வேதவியாசர் என்றும் பெயர்கள் ஏற்பட்டன. 'வியாசர்' என்றால் 'வகுத்தவர்' என்று பொருள். அநேகமாக இருந்த வேதங்களில், கலியுகத்துக்கு முக்கியமானவற்றை மாத்திரம் தொகுத்து நான்கு வகையாக்கி, 1180 சாகைகளாகப் பிரித்துக்கொடுத்தார். அவற்றில், ருக் வேதத்தில் ஐதரேய சாகை என்று ஒன்றும், யஜுர் வேதத்தில் காண்வ சாகை, தைத்ரீய சாகை, மாத்யந்தின சாகை என்ற மூன்றும், சாமவேதத்தில் கௌதம சாகை, தலவகார சாகை, என்னும் இரண்டு சாகைகளும் இப்போது உள்ளன.

ஒவ்வொரு சாகையும், ஒருவன் பிறந்தது முதல் இறக்கும் வரையில் உள்ள கர்மாக்களுக்கு உபயோகமான விஷயங்களை விளக்குகின்றது. ஒவ்வொரு சாகையிலும் மூன்று பிரிவுகள் உண்டு. அவற்றில், அருட் போதத்திற்கு இருட் போதத்தை ஊணாக்குவதாகிய உத்தம வேள்விக்கு உரிய பாட்டுகளடங்கிய 'ஸம்ஹிதை' என்ற பகுதியும், மந்த்ர விரிவுரை, மந்த்ர வேள்வி, வழங்குமுறை, இதிஹாஸம், புராணம், கல்பம் (வாழ்வு நெறி), கீதம், பொது வாழ்வு முதலியவற்றைப் போதிக்கும் ப்ராம்மணம் என்ற பகுதியும் கர்மகாண்டத்தை விளக்குகின்றன. அதாவது எந்த மந்த்ரம் எந்த தேவதையின் ஸ்வரூபத்தை அறிவிக்கிறதோ, அந்தத் தெய்வத்தை உத்தேசித்து, அந்த மந்திரத்தை உச்சரித்து, 'நமம' (என்னுடையது இல்லை)

என்று (எல்லாவற்றையும்) ஈஸ்வரார்ப்பணமாக ஒரு கிரியத்தை ஆஹுதி செய்யக்கூடியவாறு மந்திரங்களைச் சொல்வது ஸம்ஹிதை. இன்னகர்மா இன்னதை உத்தேசித்து இன்னவிதமாகச் செய்யப்பட வேண்டும் என்று சொல்வது ப்ராம்மணம்.

மூன்றுவது பாகந்தான் ஆரண்யகம் எனப்படுவது. அதுதான் ஞானகாண்டம். அதில்தான் உபநிஷத் வித்தைகள் அடங்கியுள்ளன. அருள் வளரும், ஆத்மஞானமும், இயற்கையும், தெய்வீகமும் சாந்தியும் மிகுந்த தூய தனி வனங்களில் பொங்கி யெழுந்த அறிவுற்றே உபநிஷதங்களாம். இவையே ஆன்மவித்தை, ப்ரம்மவித்தை, வேதாந்தம் என்றெல்லாம் கூறப்படும். இப்போது கிடைத்துள்ள உபநிஷத்துகள் 108. அவற்றினும் மிக முக்கியமானது 14. அவற்றுள் ஐதரேயோபநிஷத் ருக்வேதத்தைச்சார்ந்தது. தைத்திரீயோபநிஷத், கடோபநிஷத், ஸ்வேதாஸ்வதரோபநிஷத், நாராயணோபநிஷத் ஆகிய இவை கிருஷ்ண யஜுர் வேதத்தைச் சார்ந்தவை. (ஈசாவாஸ்யோபநிஷத்) ஈசோபநிஷத், ப்ருஹ தாரண்யோபநிஷத், ஜாபாலோபநிஷத் ஆகிய இவை சுக்ல யஜுர் வேதத்தைச் சார்ந்தவை. கேநோபநிஷத், சாந்தோக்யோபநிஷத் ஆகிய இரண்டும் சாமவேதத்தைச் சேர்ந்தவை. முண்டகோபநிஷத், மாண்டுக்யோபநிஷத், ப்ரஸ்நோபநிஷத் ஆகிய இவை அதர்வ சிகையைச் சார்ந்தவை.

வேதம் நித்யமானது. யுக்தி புத்திகளுக்கு எட்டாத உயர் பொருளை எடுத்து விளக்கிச் சொல்லக்கூடியது. எதைக் கருவிகளால் தெரிந்துகொள்ள இயலாதோ, எதை ரூஜுவினுல் நிரூபிக்க முடியாதோ, எங்கே நமது மனோசக்தி சென்று காண இயலாதோ அதை எடுத்துச் சொல்வது வேதம். இந்திரியங்களுக்கு அகப்படாததைத் தெளிவுற விளக்குவது வேதம். திவ்ய திருஷ்டி உள்ள முனிவர்கள் திரட்டி வைத்த செம்பொருள் வேதம். மெய்ப்பொருள் பற்றி எந்நாட்டு அறிஞர்களும் செய்யும் ஆராய்ச்சிகளைவிடச் சிறந்ததாகிய (பாரத நாட்டு மஹரிஷிகளுடைய) ஆராய்ச்சியின் பயனே வேதம். பரிபூர்ண வஸ்துவாகிய ப்ரம்ஹ சைதன்யத்தை யடைய வழி காண்பிப்பது வேதம். ப்ரம்ஹ ஸ்வரூபத்தைப் பலவாருக வருணித்து மனத்தை அதனிடத்து லயிக்கச்செய்வது வேதம். இருப்பதெல்லாம் இறைவன் இருக்கை என்றும், எல்லாவுலகமும் அவன் மயமென்றும்

அறிவிப்பதுவே வேதம். அப் பரம்பொருளை அனுபவிக்க அனைவரும் அவாவுறுதல் வேண்டும். செயல் அடங்கி, சொல்லடங்கி, மனம் அடங்க வழி தேடவேண்டும். அது எளிதில் இயலாது. இன்னின்ன வற்றை இப்படி இப்படி செய்யவேண்டும் என்று முதலில் ஒருவாறு வரையறை செய்துகொண்டு, அவ்வாறு செய்து பழகி, பிறகு சிறிது சிறிதாய் அடக்குதல் வேண்டும்.

உலகத்திலுள்ள எல்லா மனிதர்களும் எப்போதும் ஏதாவது ஒன்றைச் செய்துகொண்டுதான் உள்ளார்கள். அதாவது உண்ணல், உடை கட்டல், நடத்தல், ஓடல், ஆடல், பாடல், பேசல், வாதிடல், சிந்தித்தல், துக்கித்தல், மகிழ்தல், துயிலல் முதலிய ஏதேனும் ஒரு தொழிலில் ஈடுபட்டுத்தான் உள்ளார்கள். யாதொரு சிந்தனையு மின்றிச் சும்மாயிருக்கின்றதே பெருஞ் சுகமாம். ஆனால் ஒரு க்ஷண நேரமேனும் ஒருவரும் சும்மா இருக்க இயல்வதில்லை. ஏனெனில் மனம் என்னும் ஒரு காரணம் உள்ளே இருந்துகொண்டு ஏதேனும் ஒன்றைவிட் டொன்றைப் பற்றிக்கொண்டேயிருக்கிறது. அதனால் தான் பல எண்ணங்களும் செய்கைகளும் தோன்றியவண்ணமாகவே யிருக்கின்றன.

தரித்ரமும், உயிர்கட்குள்ள எத்தனையோ துன்பங்களில் பசி என்னும் ஓர் தீராப் பிணி மிகுந்த துன்பத்தைத் தருகிறது. பசி நோயை நீக்க உணவு தேவையாகிறது. அவ்வுணவு தேட முயல்கை யில், சேர்ந்தாற்போல் சில தினங்கட்குத் தேடிக்கொள்ள வேண்டு மென்றும், பின்பு, பல தினங்கட்குத் தேடிக்கொள்ளவேண்டுமென் றும், வெகு காலத்திற்கு உபயோகமாகுமாறு தக்க பொருளை (திரவி யத்தை)ச் சம்பாதித்துக்கொண்டால் அதுகொண்டு சுகமாகச் சாப் பிடலாமென்றும் எண்ணங்கள் அதிகப்பட்டுப் பேராசையும் வளர்ந்து விடுகிறது.

இவ்வெண்ணங்கள் யாவும் சேர்ந்து மனிதர்களை பல தொழில் களில் ஈடுபடுத்திக்கொண்டே யுள்ளன. அதனால் உலகோர் பல செயல்களைப் புரிந்துவருகின்றார்கள். இத்தகைய செயல்களைப் புரி வதற்கு ஒரு துணை வேண்டுமெனத் தேடுகையில் தாம்பத்ய வாழ்க்கை உண்டாகிறது. அதனால் பல சுற்றத்தார்கள் ஏற்படுகின்றனர்.

இதனிடையே பல குறுக்குச் சுகதுக்கங்கள் தோன்றுகின்றன. முதுமைக்காலத்தில் தம்மை ஆதரிப்பதற்கு ஓர் ஆதரவு தேவையாகிறது. இதற்குள் புத்ர புத்ரிகளும், பௌத்ர தௌஹித்ராதிகளும் சேர்ந்து குடும்பம் பெரிதாகிறது. தனக்கென்றும், தன் குடும்பத்திற்கென்றும், தன் ஊர்க்கென்றும், தன் நாட்டுக்கென்றும், பொதுவாக உலகத்திற்கென்றும் அநேக காரியங்கள் செய்யப்பட வேண்டியுள்ளன. இவை யாவுமன்றி, தன் ஆக்மார்த்த விஷயத்திற்காக முக்யமான சில காரியங்களையும் செய்யவேண்டியுளது. இவைகட்காக, என்றும் அழியாததாய், சமய சஞ்ஜீவி போல உதவிபுரியக் கூடியதாய், எந்தக் காலத்தும் உபகாரமாய் இருந்து காக்கக்கூடியதாய் உள்ள பொருளைத் தேடினுல்தான் இத்துணை வழிகட்கும் உபயோகமாகும். அத்தகைய சிறந்த பொருளைத்தான் ஆன்றோர்கள் "தர்மம்" என்று சொல்லிவைத்தனர். தர்மம் என்பது நீதி என்றும், அறம் என்றும், ஒழுக்கம் என்றும் பல பெயர்களாற் கூறப்படுகிறது.

மனிதரால் செய்யப்படும் செயல்கள் யாவும் ஒரு முறையாக ஒரு கட்டுப்பாட்டின் கீழ் செய்யப்படுதல் நன்றெனவும், இன்றேல் பலவித தீமைகளுக்குள்ளாகி, அவர்கள் பின்னிட்டுத் துன்புற நேருமெனவும் எண்ணிய பெரியார்கள், தங்கள் அனுபவங்களின் உயர்ந்த உண்மைகளையெல்லாம், தொகுத்துப் பிற்சந்ததியாருக்கு நன்மைபயக்குமாறு வரைந்து வைத்துச் சென்றனர். அவைகளே தர்ம ப்ரமாணங்கள் என்றும், நீதி நூல்கள் என்றும், ஒழுக்க முறைகள் என்றும், அறநெறிகள் என்றும் வழங்கப்படுகின்றன. இந்நூல்களிற் கூறப்பட்டுள்ள விஷயங்களை அவசியம் உணர்ந்து அவ்வாறு நடத்தல் வேண்டும்.

மனிதருடைய அறிவை வளர்த்து தூய உண்மைகளைப் புகட்டி நன்மையளிக்கும் நூல்கள் யாவையெனில் :—

ருக், யஜுஸ், ஸாமம், அதர்வணம் எனும் வேதங்கள் நான்கு. சிக்ஷை, வியாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம், கல்பம் எனும் அங்கம் ஆறு. மீமாம்ஸை, நியாயம், புராணம், தர்ம சாஸ்த்ரம் எனும் உபாங்கம் நான்கு. ஆயுர்வேதம், அர்த்தசாஸ்த்ரம், தநுர்வேதம் காந்தர்வ வேதம் எனும் உபவேதங்கள் நான்கு. ஆக மொத்தம்

18 வித்தைகள் ஆகின்றன. ஈற்றில் கூறிய உபவேத மல்லாத ஏனைய பதிஞன்கும் தர்ம ஸ்தானங்கள் என்றும், வித்தியா ஸ்தானங்கள் என்றும் வழங்கப்படும். இவை நான்கும் சேர்த்தால் பதினெட்டும் வித்தியா ஸ்தானங்கள் என்று வழங்கப்படும். மனிதராய்ப் பிறந்தோர் யாவர்க்கும் ஞானம் முக்யமான சாதனம். அதனை வேட்டலும் பேணலும் வேண்டும். ஞானமின்றேல் மனிதன் மிருகமாகிவிடுகிறன். ஞானத்தைப்பெற முக்யமான சாதனம் வேதாத்யயனம். ஆதலால் யாவரும் அவசியம் வேதாத்யயனம் செய்தல் வேண்டும். வேதங்களின் அர்த்தங்களை, உட்பொருள்களை நன்கு உணர்தல் வேண்டும்.

வேத ஷடங்கங்கள் :- ஷடங்கங்களையும் தெரிந்துகொள்ள வேண்டும். வேத புருஷனுக்கு சிக்ஷை - மூக்கு; வியாகரணம் – வாய்; ஜ்யோதிஷம் – கண்; நிருக்தம் – காது; கல்பம் – கை; சந்தஸ் — பாதம்; என்று சொல்லப்படுகிறது.

சிக்ஷை.

வேத புருஷனுக்கு சிக்ஷை நாஸிகாஸ்தானம். இந்தச் சிக்ஷை தான் எழுத்துக்களுக்கு ரக்ஷையாக இருப்பது. எழுத்துக்களின் உற்பத்தி, சப்தம், உச்சரிப்பு முதலியன இந்நூலில் கூறப்பட்டுள்ளன. வேதங்களை உச்சரிக்கும்போது அவற்றிற்காக ஏற்பட்டுள்ள கீழ், மேல் ஸ்தாயிகளாகிய உதாத்த, அனுதாத்த, ஸ்வரித சுரங்களுடன்தான் உச்சரித்தல் வேண்டும். இன்றேல் அர்த்தம் மாறுபட்டுவிடும். விபரீத அர்த்தங்களும் உண்டாகிவிடும். ஸம்ஸ்கிருதத்தில் 51 எழுத்துக்கள் சிரேஷ்டம். அவற்றை "மாத்ருகா" என்பர். இவை சக்தியாகிய என்னைக் குறிக்கும். ஒவ்வொரு எழுத்தும் எனது ஒவ்வோர் அங்கமாகக் கருதப்படும். இவற்றில் இன்னொரு ரஹஸியமும் உண்டு. ஆறுதாரங்களில் உள்ள எழுத்துக்கள் மொத்தம் 51. இவைகளும் 51. ஆறுதாரங்களில் உள்ள 51 அக்ஷரங்களின் பிரகாசத்தையும் மஹிமையையும் காணவேண்டில், ஸ்வாஸ மார்க்கத்தால் (பிராணயாமத்தால்) தான் காணவேண்டும். 51 எழுத்துக்களால் அமைந்துள்ள வேதமும் பரம்பொருளின் ஸ்வாஸமாகக் கருதப்படுகிறது. சிக்ஷை என்னும் சாஸ்திரம் 30 உண்டு. அவற்றுள் சிறந்ததாக எண்ணப்படுவது யாஜ்ஞவல்க்ய சிக்ஷையே.

வேத பகவானுக்கு இரண்டாவது அங்கமாகிய வியாகரணம் முகம்; முகம் என்பது இங்கே வாய். வேத சப்தங்களின் பிரகிருதி பிரத்தியய ஞானத்தைக் கூறுவது வியாகரணம்.

வியாகரணம். வியாகரணங்கள் பல உள. அவற்றுள் முக்யமாக வழங்கப்படுவது பாணினீ மஹரிஷியால் செய்யப் பட்டதே. அந்த வியாகரண சூத்திரங்களுக்கு ஒரு வார்த்திகம் உண்டு. அதைச் செய்தவர் வரருசி. வியாகரணத்திற்குப் பாஷ்யம் செய்தவர் பதஞ்ஜலி. இந்த மூன்றும் முக்யமான வியாகரண சாஸ்திரங்கள். சூத்ரத்தை விட வார்த்திகத்திற்கும், வார்த்திகத்தை விட பாஷ்யத்திற்கும் கௌரவம் அதிகமாய் இருத்தலே இந்த வியாகரண சாஸ்திரங்களிலுள்ள புதுமை.

(வியாகரணம், வேதாந்தம், வைசேஷிகம், பாட்டம், பிரபாகரம், மீமாம்ஸை என்பன) ஆறு சாஸ்திரங்கள் என்று ஒரு பிரிவு உண்டு. அவற்றுள் வியாகரணம் ஒன்று. நான்கு சாஸ்திரங்கள் மிக்க பிரசித்தியுடையன. தர்க்கம், மீமாம்ஸை, வியாகரணம், வேதாந்தம் என்பவைகளே அவை. அவைகளிலும் வியாகரணம் ஒன்றுக உளது. ஆறு அங்கங்களிலும் ஒன்றுக உளது.

ஒவ்வொரு சாஸ்திரத்திற்கும் பாஷ்யம் உண்டு. அவற்றை யெல்லாம் இன்ன இன்ன பாஷ்யம் என்று குறிப்பிட்டுச் சொல்வர். ஆனால் வியாகரண பாஷ்யத்தை மாத்திரம் "மஹாபாஷ்யம்" என்று சொல்வர். அதிலிருந்தும் இதன் பெருமை விளங்கும்.

எவராலும் செய்யமுடியாத உயர்ந்த நடனத்தை இறைவன் செய்கிறார். அவ்வாறு ஆடுகையில் "நடராஜன்" எனப் பெயர் பெறுகிறார். பரமேசுவரர் நிருத்தம் செய்கிறார். உயிர்கள் எல்லாம் இவ்வுலகில் நடிக்கவேண்டி அவர் நடிக்கிறார். பஞ்சகிருத்தியத் தாண்டவம், ஆநந்தத் தாண்டவம், அனவரதத் தாண்டவம், சிற்றம்பலக் கூத்து, சிதாகாச நடனம் என்றெல்லாம் ஆன்றோர்கள் அத் திருநடனத்தைக் கூறுவர். அத்தகைய திரு நடனம் நடக்கிறது. ஸநகாதியரும், பதஞ்ஜலியும், வியாக்ரபாதரும், வேறைய பல மஹரிஷிகளும் சுற்றிலும் நின்று தரிசிக்கிறார்கள்.

பரமேஸ்வரனுடைய நடன தரிசனத்தை அனைவரும் காண்பது அரிது. ஞான நேத்திரம் உடையவர்கள்தான் அத்திரு நடனத்தைக் காண முடியும். ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய விசுவ ரூபத்தைத் தரிசிக்கும் சக்தி வியாஸ மஹரிஷியால் சஞ்ஜயனுக்கும், கிருஷ்ண பகவானால் அர்ஜுனனுக்கும் கிடைத்தன. என்னுடைய திவ்ய ஸ்வ ரூபத்தை எனது திருவருளாலே நீங்களெல்லாம் சற்று முன்பு தரிசித் தீர்கள். ஆனால் மற்றவர்கள் யாவரும் காணமுடியாது. அவர்கள் மஹா தபஸ்விகளாதலால் இறைவனின் திருநடனத்தைக் கண்குளிரக் கண்டு ஆனந்திக்க வேண்டுமென்று பல வித ப்ரயத்தனங்கள் செய்து இறைவன் திருவருளால் திவ்ய திருஷ்டி பெற்றார்கள். அத் தகைய அருட் பார்வையை (நிஜமான திருஷ்டியை)ப் பெற்ற தேவர் குழாங்களும், மஹரிஷிகளும், யோகிகளும் பரமனின் திரு நடனத்தை ஆனந்தமாகப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். விஷ்ணு மத்தளம் கொட்டுகிறார். பிரம்மா தாளம் போடுகிறார். சொல்ல வொண்ணாத ஆனந்தம். நிருத்தம் முடியப்போகிறது. முடிகிற சமயத்தில் பரமேஸ்வரனின் வலக்கரத்திலிருக்கும் தமருகத்தினின் றும் 14 சப்தங்கள் எழுந்தன. அந்த சப்தங்களின் கணக்கும் (தர்ம) வித்தைகளின் கணக்கும் 14 ஆகவே உள. அந்தப் பதினான்கு சப்தங் களும் ஸனகாதிகளே உத்தாரணம் செய்வதற்கே உண்டாயின.

அந்த சப்தங்கள் சிவ ஸ்வரூபத்தை ஏகபோகமாக அனுபவித் தற்கு மார்க்கமாக இருந்தன. அந்த சப்தங்களே சிவபக்தி சூத்திரங் களென்று வைத்துக்கொண்டு அவைகளுக்கு நந்திகேஸ்வரர் பாஷ்யம் எழுதினார். அப்பொழுது அங்கே இருந்தவர்களுள் பாணினீ என் பவரும் ஒருவர்.

பாடலீபுரத்தில் வருஷோபாத்யாயரிடம் வரருசியும் பாணினி யும் பாடங் கேட்டுவந்தனர். பாணினிக்குப் படிப்பு வரவில்லை. அதனால் அவரை ஹிமாசலத்திற்குச் சென்று தவம் பண்ணும்படி வர்ஷோபாத்யாயர் அனுப்பிவிட்டார். அவ்வாறு சென்ற பாணினி ஈசுவர க்ருபையால், திருநடன தரிசனம் காணும் சக்திபெற்று, தரி சித்து, தாண்டவம் முடியப்போகிற சமயத்தில் எழுந்த 14 சப்தங் களையும் பதினான்கு ஸூத்திரங்களாக, வியாகரணத்திற்கு மூலமாக

வைத்துக்கொண்டு அஷ்டாத்தியாயியை எழுதினர். அந்தப் பதினைன்கு சூத்திரங்கள்தான் நீங்கள் பிரதி வருஷமும் ஆவணி யவிட்டம் நடாத்தும் நாளில் கேட்பது.

பரமேஸ்வரனுடைய மூச்சு வேதம். அவருடைய கைக் காற்று அக்ஷரவேதம். அதாவது மஹேசுவர சூத்திரம். 'சப்தானு சாஸனம்' என்பது அதன் பெயர். "பாணினி நாதத:" என்பதற்கு, 'பாணிகளால் சப்தம் பண்ணினைய்' என்றும், 'பாணினிக்குச் சப்தம் எற்பட்டது' என்றும் இரண்டு அர்த்தங்கள் உண்டு.

(சூத்திரம்) சப்தம் கையிலிருந்த தமருக ஒலியிலும், பாஷ்யம் காலிலிருந்த பாத சரமாகிய ஆதிசேஷனின் அவதாரமாகிய பதஞ் ஜலியின் வாயிலாகவும் உண்டாயினமையால், வியாகரண சாஸ்திரத் தின் சூத்திரமும், பாஷ்யமும் பரமசிவனிடமிருந்தே உண்டாயின எனலாம். இவ்வாறு பல காரணங்களால் வியாகரண நூலிற்கு மூல புருஷன் பரமசிவனுயிருப்பதால் சிவாலயங்களில் 'வியாகரண தான மண்டபங்கள் ஏற்படுத்தப்பட் டிருக்கின்றன. நவ வியாகரணங் கள் உண்டு. ஹநுமார் அவற்றை சூர்யனிடம் பயின்று நவ வியாகரண பண்டிதராய்த் திகழ்ந்தார். பேரகத்தியம், தொல்காப்பியம் முதலியன தமிழ் மொழிக்கு சிறந்த வியாகரண நூல்களாகும்.

சந்தஸ்.

சந்தஸ், வேத புருஷனுக்குப் பாதமாகக் கூறப்படுகிறது. காலில்லாமல் நிற்க முடியாது. வேத மந்த்ரங்களைச் சந்தஸின் அமைப்பு நிற்கவைக்கின்றது. சப்தங்கள் எல்லாவற் றிற்கும் ரக்ஷையாக இருப்பது இந்த சந்தஸ்தான். வேத மந்த்ரங்கள் எல்லாம் சந்தஸ் வடிவம்தான். வசனத்தை 'கத்யம்' என்றும், சந்தஸை 'பத்யம்' என்றும் சொல்வதுண்டு. விருத்தத்தின் லக்ஷணமே சந்தஸ் எனப்படுகிறது. ஒவ்வொரு சந்தஸுக்கும் அளவுகள் உண்டு. 'ஆர்யா' என்று ஒரு சந்தஸ் உளது. அதற்கு மாத்திரைக் கணக்கு உண்டு. குறில், நெடில் கணக்கு உள்ள சந்தஸுக்களும் உண்டு. சார்த்தூல விக்ரீ டிதம், சிகரிணி முதலிய பலவகைச் சந்தஸுக்கள் உள. அநுஷ்டுப் சந்தஸுக்கு 4 பாதங்களும் 32 எழுத்துக்களும் இருக்கும். இந்திர

வஜ்ரா, உபேந்திர வஜ்ரா, ஸ்ரக்தரா, முதலிய வேறு பல சந்தஸுக்களும் உண்டு. காயத்ரீ மந்த்ரமே ஒரு சந்தஸின் பெயரால் வழங்கப்படுகிறது. காயத்ரீ சந்தஸில், நிசிருத் காயத்ரீ, த்ரிபதா காயத்ரீ, உஷ்ணிக் காயத்ரீ, பிருஹதீ காயத்ரீ முதலிய பல பேதங்கள் உண்டு. இவைகளுக்குள் உட் பிரிவுகள் பல உண்டு.

ஒவ்வொரு மந்த்ரத்துக்கும் சந்தஸும், ரிஷியும், தேவதையும் உண்டு. ரிஷிகள் மந்த்ரங்களைச் செய்தவர்கள் அல்ல; கண்டவர்கள்; மந்த்ரதிரஷ்டாக்கள்; மந்த்ரங்களை உலகத்தில் ப்ரசாரத்துக்குக் கொண்டுவந்தவர்கள். எந்த மந்த்ரம் எந்த ரிஷியின் பெயரால் உலகத்திற்குக் கொண்டுவரப் பட்டதோ அந்த ரிஷி அந்த மந்த்ரத்தின் ரிஷியாவர். அவர்கள் பெயரைச் சொல்லித் தலையில் கையை வைத்துக்கொள்வது, அவர்கள் பாதங்களைச் சிரசில் வைத்துக்கொள்வதற்கு அறிகுறி. அவர்களால்தான் முதலில் நமக்கு அம்மந்த்ரங்கள் கிடைத்தன வாதலின் அவர்கட்கு முதல் வணக்கம். மந்த்ரத்திற்கு ப்ராணன் சந்தஸ். அதனால் சந்தஸைச்சொல்லி ப்ராணன் ஸ்தானமாகிய மூக்கில் கையை வைப்பது. மந்த்ரத்தின் அதிதேவதையை ஹ்ருதய பூர்வமாய் த்யானித்து ஹ்ருதய ஸ்தானத்தில் எழுந்தருளச் செய்ய வேண்டுமாதலால், மந்த்ர தேவதையின் பெயரைச்சொல்லி ஹ்ருதயத்தைத் தொடுவது. சந்தஸுக்கு சூத்திரம் பண்ணினவர் பிங்கள நாதர். பலவகையான சுலோகங்களுக்கும் வேதங்களுக்கும் உரிய சந்தஸ் அவர்செய்த கிரந்தத்தால் விளக்கப்படுகிறது.

நிருக்தம்.

வேத புருஷனுக்கு சுரோத்திர ஸ்தானமாயிருப்பது நிருக்தம். நிருக்தம் என்பது வேதத்துக்கு அகராதி. 'கோசம்' என்றும் ஸம்ஸ்கிருதத்தில் சொல்வர். அதாவது நிகண்டு என்பது. வேதத்திலுள்ள அரிய வார்த்தைகளுக்கு இன்ன இன்ன பொருள் என்று அது சொல்லும். இந்தப்பதம் இன்ன காரணத்தால் இங்கே இவ்வாறு உபயோகிக்கப்பட்டுளது என்று அது விளக்கிக்கூறும். நிருக்த சாஸ்த்ரம் பலரால் செய்யப்பட்டுளது. முக்யமாகக் கருதுவது யாஸ்கர் செய்ததைத்தான். வேத நிகண்டுவில் ஒவ்வொரு பதத்திற்கும் காரணம் கூறப்படுகிறது.

பிரகிருதி, பிரத்யயம் என வியாகரணத்திற் கூறப்படுகின்றன. பிரகிருதி என்பதுதான் தமிழில் பகுதி எனப்படுவது. பிரத்யயம் அல்லது விகிருதி என்பதுதான் தமிழில் விகுதி எனப்படுவது. சம்ஸ்க்ருதத்தில் ஒவ்வோர் பதத்திற்கும் தாது உண்டு. ஆதியில் உலக முழுவதும் ஸம்ஸ்க்ருதம்தான் பேசப்பட்டு வந்தது. அம் மொழியினின்றும் காலப்போக்கில் பல மொழிகள் பல வகையாகத் தோன்றிப் பிரிந்தன. ஆனாலும், எல்லா பாஷைகளிலுமுள்ள பதங் களையும் எடுத்து ஆராய்ந்தால், அது ஸம்ஸ்கிருத தாதுவினின்றும் தோன்றி, பலவாறு திரிந்து புதுப்பெயர் பெற்றதைப்போல் தெரியும். ஒவ்வொரு பதத்திற்கும் பெயர் வந்ததைக் கூர்ந்து ஆராய்வது நிருக்தம் எனப்படும். பாஷா சாஸ்திரம் ஏற்படுவதற்கு வியாகரண மும் நிருக்தமும்தான் மூல காரணங்கள்.

ஜ்யோதிஷம் என்பது வேத புருஷனுக்கு நேத்ரஸ்தானம். ஜ்யோதிஷ சாஸ்த்ரம் சித்தாந்த ஸ்கந்தம், ஹோரா ஸ்கந்தம், ஸம்ஹிதா ஸ்கந்தம் என்னும் மூன்று ஸ்கந்தங்கள் அடங்கியது. **ஜ்யோதிஷம்.** அதனால் அதற்கு "ஸ்கந்த த்ரயாத்மகம்" என்றும் பெயர். கணிதங்களெல்லாம் சித்தாந்த ஸ்கந்தத்தில் அடங்கியுள்ளன. வ்யக்த கணிதம் (பீஜ கணிதம்), அவ்யக்த கணி தம், சேஷத்ர கணிதம், ஸமீகரண கணிதம் முதலான பல கணித வகை கள் இப்பகுதியில் உள்ளன. உலகத்தின் பல பாகங்களிலும் புதிது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டதாக அநேகர் எண்ணக்கூடிய வகையில் தோன்றும் எத்தனையோ கணிதமுறைகள் இதனில் உண்டு. இதுவரையில் இதிலுள்ள எல்லாக் கணிதங்களின் நுட்பங்களும் கண்டு பிடிக்கப்பட்டு பூர்த்தியாக ஜனங்களின் மனதில் பதிக்கப் பட்டுவிடவில்லை. இன்னும் எவ்வளவோ கணித முறைகள் இதற் குள் இருப்பதை ஜனங்கள் உணரவில்லை. அந்த முறைகளை யெல் லாம் எந்த நாட்டாரும் எளிதில் புதிதாய்க் கண்டுபிடிக்க இயலாது. அவைகளையெல்லாம் நீவிர் இதிலின்றும் உணர்ந்து, வருங்கால உல கிற்கு நன்மையளித்தல் வேண்டும். எத்தனை நாட்டினர் எவ்வளவு காலங்கள் வருந்தி எத்தனை புதிய கணிதங்களைக் கண்டுபிடித்தாலும் அவையெல்லாம் இதனுள் ஏற்கனவே இருப்பதை நீங்கள் உணர்வீர் கள். ஆறுவது அங்கமாக இருக்கும் கல்ப சூத்ரங்களுக்கு சித்தாந்த ஸ்கந்தத்தின் உதவி முழுவதும் வேண்டும்.

கணித சாஸ்திரங்களெல்லாம், நக்ஷத்திரங்கள், ஒன்பது கிரஹங்கள் என்பவைகளின் கதியைப்பற்றியும் ஸ்திதியைப்பற்றியும் சொல்பவைகளே. கிரஹங்கள் ஏழுதான். ராகு கேதுக்கள் என்பவை நிழல்கள். சூரியனுக்கும் சந்திரனுக்கும் நேர் விரோதமாக அவை ஓடும். கணனம் எவ்வளவுக்கெவ்வளவு அதிகப்படுமோ, அவ்வளவுக்கவ்வளவு சூக்ஷ்ம பலன்கள் தெரியவரும். சூரியனுக்கு ஏழு குதிரைகள் பூட்டிய தேர் உண்டென்பது, சூரியன் ஏழுவித நிறங்களைக்கொண்ட கிரணங்களை உடையவன் என்பதை உணர்த்துகிறது. (ஒரே வகையான கிரணந்தான் ஏழு தினுசாகப் பிரிகிறது.)

கணிதத்தையும் கிரஹ கதிகளையும் சொல்வது சித்தாந்த ஸ்கந்தம். மனிதனுடைய சுகதுக்க பலனைக் கூறுவது ஹோரா ஸ்கந்தம். ஹோரை என்பது ஜாதகம். ஏனைய எல்லாம் ஸம்ஹிதை. பூமிக்கு உள்ளே எங்கெங்கே ஜலம் ஓடுகிறது? அங்கே ஜலம் இருப்பதற்கு மேலே அடையாளம் என்ன? வாசனைத்திரவியங்கள் எப்படிச் செய்வது? வீடு கட்டவேண்டிய அளவுகள் யாவை? கிருஷி எப்படி நடத்துதல் வேண்டும்? சகுனங்களின் பலன் என்ன? நிமித்த சாஸ்திரம் என்ன சொல்கிறது? என்பன முதலிய வற்றைத் தெரிவிப்பதுதான் ஸம்ஹிதாஸ்கந்தம். உலகத்தில் ஒன்றுக் கொன்று சம்பந்தம் உண்டு. ஸரியான கணக்குத் தெரிந்தால் எல்லாம் தெரிந்துகொள்ளலாம். எல்லாம் ஒரே பரம்பொருளின் ஆஜ்ஞையால் ஒரு கணக்காக நடக்கின்றன. ஒன்றினால் எல்லாம் கண்டுபிடிக்கலாம். கைரேகை, பக்ஷி சாஸ்த்ரம், ஆரூடம், கிரஹ நிலை, தாது நிலை, மாந்த்ரீகம், தர்ம சாஸ்த்ரம், விஞ்ஞான சாஸ்த்ரம், மனை தத்துவம், பூர்வ கர்ம பலன், புண்ய பாபங்கள் முதலிய எல்லாம் ஒன்றையொன்று ஒட்டியே, ஒரு சிறிதும் பேதமின்றி, சம்பந்தப் பட்டு வருகின்றன.

கல்ப ஆரம்பத்தில் எல்லாக்ரஹங்களும் ஒரே நேராக இருந்தன. காலக்ரமத்தில் கொஞ்சங்கொஞ்சமாக மாறி வருகின்றன. மற்றோர் கல்ப ஆரம்பத்தில் மறுபடியும் நேராக வந்துவிடும். நீங்கள் செய்யுங் கர்மாக்களில் முதலில் சொல்லும் சங்கல்பம் முழுவதும் ஜோதிஷ விஷயந்தான். அனைத்துக்கும் முக்ய ஆதாரம் வேதமே. வேதம்

ரிஷிகளால் சொல்லப்பட்டவைகளேயன்றி, ரிஷிகளால் புதிதாக உண்டாக்கப்பட்டவைகள் அல்ல. வேதம் அநாதி. பரமசிவன் எப்போதும் வேதம் பாடுகிறான். வேதம் இல்லாது சிவன் இல்லை. சிவன் இல்லாது வேதமில்லை. வேதத்துக்கும் பரமேஸ்வரனுக்கும் ஆதியந்தம் கிடையாது. வேதமே ஈஸ்வரனின் பேச்சும் மூச்சும்.

ஒரு மாபெரும் வீரன் தூங்குகையில் அவனுடைய வீர சக்திகள், வேலைத்திறன்கள் அவனுள் அடங்கியுள்ளன. எழுந்து தொழிற்படுகையில் வெளித் தோன்றுகின்றன. அஃதேபோல் பரமாத்ம சைதன்யமாகிய நிர்க்குண வஸ்துவிலிருந்து ஒரு சக்தி கிளம்புகிறது. அச்சக்தியில் தோன்றுபவரே ப்ரம்மா. அனாதி சப்தமாகிய வேதவொலியின் துணை கொண்டு உலகத்தை அவர் சிருஷ்டிக்கிறார். வேதங்கள் அளப்பில. சிருஷ்டியும் பலவிதம்.

அநந்த வேதங்கள் உண்டு. அவைகள் எவராலும் அளவிடற்கரியன. பிரம்மா உண்டானதும் வேதங்கள் அவருக்குச் சிருஷ்டி செய்யும் வகையை (வழியை) விளக்கின. ரிஷிகளுக்குச் சில சில மந்த்ரங்களே தோன்றின. மஹா ஆகாசத்தையும் மன ஆகாசத்தையும் ஒன்றுபடுத்தி அபேதமான நிலையை அடைந்த உத்தமர்களுக்கே திவ்ய ஸ்ரோத்திரம் உண்டாகும். அந்தக்காதுகள்தான் வேத மந்த்ரங்களைக் கிரஹிக்கும். அவ்வாறு தபஸ் பண்ணின மஹரிஷிகளின் மூலமாகக் கிடைத்துள்ளவைகளே வேத மந்த்ரங்களாம். பரமேஸ்வரனின் அனுக்ரஹத்தால் பிரம்மா எல்லா வேதங்களையும் உணர்ந்து நான்கு முகங்களாலும் நான்கு வேதங்களைச் சொல்லிக் கொண்டு சிருஷ்டி செய்வார். 2000 சதுர்யுகம் கொண்டது பிரம்மாவின் ஒருநாள். அத்தகைய நாள் 36500 கொண்டது ஒரு பிரம்மாவின் ஆயுள்காலம். அதாவது நூறு வருஷங்கள். இது ஒரு பரம் எனப்படும். அதில் பாதி ஒரு பரார்த்தம். ஏகாதி பரார்த்த பரியந்தம் சங்கியை என்று சொல்வதுண்டு. பரார்த்தம் என்பது பதினெட்டாவது ஸ்தானம். இப்பொழுது இருக்கும் பிரம்மாவிற்குப் பாதிக்குமேல் ஆயுள் தீர்ந்துவிட்டது. அவர் ஆயுள் ஏழு கல்பம். இப்போது நான்காவதாகிய ஸ்வேதவராஹ கல்பம் நடக்கிறது. இதற்கு முன்பு நடந்தது லக்ஷ்மீ கல்பம். ருத்ரர்

பிரளயம் வருவித்து எல்லாவுயிர்களுக்கும் ஸ்ரமத்தைக் குறைத்து விஸ்ராந்தியளிக்கிறார். ப்ரம்ம விஷ்ணு ருத்ரர்கள் பரமேஸ்வரனின் திருவுளப்படி உலகைப்படைத்து அளித்து அழிக்கின்றனர்.

பிரம்மாவுக்கு ஒரு பகலில் 14 மனுவந்தரங்கள் நடைபெறுகின்றன. இப்பொழுது வைவஸ்வத மனு என்னும் ஏழாவது மனுவின் காலம். ஒரு மனுவந்தரத்துக்கு 71 சதுர் யுகங்கள். இந்த வைவஸ்வத மனுவந்தரத்தில் இப்போது நடப்பது 28-வது சதுர்யுகம். அதில் இது கலியுகம். இவ்வளவும் நம் சங்கல்பத்தில் திதி, லக்னம் நவாம்சம் வரையில் வந்து விடுகின்றன. இவ்வளவு அருமையான கணிதங்கள் ஜோதிஷ சாஸ்திரங்களில் உள்ளன. பிரம்மாவினுடைய ஒவ்வொரு ராத்திரியிலும் அவாந்தர ப்ரளயம் உண்டாகும். அது பூலோகம், புவர்லோகம், ஸுவர்லோகம் என்ற மூன்றையுமே பாதிக்கும். மஹாப்ரளயத்தில் ப்ரம்மாவின் ஆயுள் முடிவடையும்.

சூர்ய சந்திரர்களே இச்சாஸ்திரத்துக்கு சாக்ஷிகள். கர்க்கர், நாரதர், பராசர், முதலிய பல மஹரிஷிகளும், தேவர்களும் ஜோதிஷ சாஸ்திரங்களைச் சொல்லியுள்ளனர். சூரிய பகவான் அசுரத்தச்சனை மயனுக்கு உபதேசித்ததாக ஓர் ஜோதிஷ கிரந்தம் உளது.

கல்பம். வேதபுருஷனுக்குக் கல்பம் கரமாகும். காரியங்களைச் செய்வதனால் கரம் என்று பெயர் வந்தது. செய்யும் தொழில் கலை உடையதால் தெலுங்கில் 'செய்' என்று வழங்கப்படுகிறது. ஒரு மனிதன் வேதம் முதலிய யாவும் பயின்றபின். பிறகு ஏதாவது ஒரு காரியம் செய்யத் தொடங்குகிறான். அவ்வாறு செய்கையில் பாபங்களையெல்லாந் தொலைத்து, தன்னை நல்வழிப்படுத்தும் காரியங்களைச் செய்தல் வேண்டும். அதற்கு மந்த்ரம், திரவியம், வாஸ்து லக்ஷணமுடைய வீடு முதலியன வேண்டும். இவையனைத்தையும் தேடிக் காரியத்தைச் செய்து, அதனால் வரும் பலனை ஈஸ்வரார்ப்பணம் பண்ணுதல் வேண்டும். இவை சம்பந்தமான விஷயங்களைத் தெரிவிக்கும் அங்கமே கல்பம்.

எந்த எந்த கர்மாக்கள், எந்த எந்த வர்ணச்ரமத்தினரால் எப்படி எப்படிச் செய்யப்படவேண்டும்? அவ்வவற்றிற்குரிய

மந்த்ரம், திரவியம், தேவதை முதலியன எவை? என்பனவற்றை கல்பம் விளக்கும். கல்ப சாஸ்திரத்தை அநேக ரிஷிகள் செய்திருக்கிறார்கள். ருக் வேதத்திற்கு ஆச்வலாயனர் என்பவர் செய்திருக்கிறார். கிருஷ்ணயஜுர் வேதத்திற்கு ஆபஸ்தம்பர், போதாயனர், வைகானஸர், ஸத்யாஷாடர், பாரத்துவாஜர், அக்கினி வேசர் என்னும் அறுவர் கல்பசூத்திரங்கள் செய்துள்ளனர்.

சுக்லயஜுர் வேதத்திற்குக் காத்யாயனர் செய்துள்ளார். ஸாமவேதத்தில் கௌதம சாகைக்குத் திராஹ்யாயணரும், தலவகார சாகைக்கு ஜைமினியும் சூத்திரங்கள் செய்துள்ளனர். ஒவ்வொரு சாகைக்கும் கிருஹ்ய சூத்திரமென்றும், சிரௌத சூத்திரமென்றும் இரண்டு வகை உண்டு. கர்ப்பம் உண்டாவது முதல் தேஹம் அக்னிக்கு ஹோமம் பண்ணப்படும் வரையில் செய்யப்படும் கிரியைகளைச் சொல்வது கிருஹ்ய சூத்ரம்.

நாற்பது சம்ஸ்காரங்களும் எட்டு ஆத்ம குணங்களும் கல்ப சூத்ரங்களில் சொல்லப்பட்டுள்ளன. அவற்றுள் ஸப்தஸோமயஜ்ஞமும், ஸப்த ஹவிர்யஜ்ஞமும் ஆகப் பதினெது கர்மாக்களைக் கூறுவது சிரௌத சூத்ரம். மற்றவையனைத்தையும் கிருஹ்ய சூத்ரம் கூறும். தயை, பொறுமை, அசூயையின்மை, சுத்தி, பிடிவாதமின்மை, மனங்குளிர்ந்திருத்தல், லோபமின்மை, நிராசை என்னும் எட்டும் ஆத்ம குணங்கள் ஆம். இவை எட்டும் சாமான்ய தர்மங்களைச் சேர்ந்தவைகளே.

தாம் இன்ன சூத்திரத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லுகின்றனர். அது சிரௌத சூத்திரத்தைத்தான் குறிப்பிடுகின்றது. யஜ்ஞ கர்மானுஷ்டானங்கள் விசேஷமாகச் செய்யப்படவேண்டும். கிருஹ்ய கர்மாக்களை லகுவான பொருட்செலவில் மந்த்ர லோபமின்றிச் செய்தால் போதுமானது. ஸோமயஜ்ஞம் செய்பவர்கள் 'ஸோம யாஜிகள்' எனப்படுவர். யஜ்ஞ விசேஷத்தில் 'சயனம்' என்று ஒன்று சொல்லப்படுகிறது. அதனுடைய லக்ஷணங்கள் முதலியவைகளைச் சொல்லும் 'கல்ப சூத்திரம்' என்ற ஒரு பிரிவு உண்டு. கல்ப சூத்திரங்கள், 'சாமான்ய சூத்ரங்கள்' 'விசேஷ சூத்ரங்கள்' என இருவகைத்து. ஹிரண்யகேசர் முதலிய பலர்

இவற்றை இயற்றியுள்ளனர். ருக், யஜுஸ், சாமம் ஆகிய மூன்று வேதத்தாலும் யஜ்ஞம் நடக்கவேண்டும். நித்ய யஜ்ஞங்களும், லோகாந்தர பலனை உத்தேசித்துச் செய்யப்படும் யஜ்ஞங்களும் செவ்வனே நடைபெற வேண்டும். எதைப் படித்தாலும், எதைச் சொன்னாலும், எதைச்செய்தாலும், ஆத்ம லாபத்தைத் தருவதாக இருக்கவேண்டும். ஈஸ்வர ப்ரீதியாயாகவும் அர்ப்பணம் செய்யப்பட வேண்டும்.

இவை ஆறும் வேதத்தின் அங்கங்கள். இவற்றிற்கு உபாங்கங்கள் நான்கு. முதல் உபாங்கம் மீமாம்ஸை. 'மீமாம்ஸை' என் பதற்கு 'மாங்' என்பது தாது. 'ஸன்' பிரத்தி யயம். மீமாம்ஸை என்றால் 'பூஜித விசாரம்' (நல்ல விஷயத்தை விசாரிக்கிறது) என்று பொருள். வேதம் பல சட்டங்களை விதிக்கின்றது. அவைகட்கு அர்த்த நிர்ணயம் செய்வது மீமாம்ஸை. அநேக விதமான விஷயங்களை எடுத்துக் கொண்டு எவ்வளவு யுக்தியுண்டோ அவ்வளவினாலும் ஆலோசனை செய்து அவ்வளவையும் சித்தாந்தம் மூலமாய் நிர்ணயம் செய்வது மீமாம்ஸை. ஓர் விஷய நிர்ணயம் ஓர் அதிகரணமாக இருக்கிறது. **மீமாம்ஸை.**

வேதத்தின் பூர்வ காண்டமாகிய கர்மகாண்டத்தைப்பற்றி அர்த்த நிர்ணயம் செய்வது பூர்வ மீமாம்ஸை. இது ஆயிரம் அதிகரணங்களோடுள்ளமையால் 'ஸஹஸ்ராதிகரணி' என்றும் பெயர் பெற்றுளது. இதற்கு சூத்திரக்காரர் ஜைமினி என்னும் ரிஷி. பாஷ்யக்காரர் சபரஸ்வாமி என்பவர். வார்த்திகக்காரர் குமாரஸ்வாமியின் அவதாரமாகிய குமாரில பட்டர்.

வேதத்தின் உத்தரகாண்டமாகிய ஞான காண்டம் என்னும் உபநிஷத் பாகத்திற்கு அர்த்த நிர்ணயம் செய்வது உத்தரமீமாம்ஸை. ஒரு விருக்ஷத்தில் இலைகள், இலைகள் அதிகமாக இருந்தாலும் மலர்கள் கொஞ்சமாகவே இருப்பதுபோல அளவிடற்கரிய மாபெரும் வேத விருட்சத்தில் உபநிஷத் புஷ்பங்கள் கொஞ்சமாய்த்தான் உள்ளன. உப நிஷத்துக்களாகிய வேதாந்தம்தான் வேதசிரஸ் என்று சொல்லப் படுவது. அந்த சட்டத்திற்கு அர்த்த நிர்ணயம் செய்தவர் வியாச பகவான். அதில் 192 அதிகரணங்கள் உள. அதற்குப் பாஷ்யம்

செய்தவர் ஆதி சங்கரர். எல்லாவற்றிற்கும் முடிவான வேதாந்த சூத்ர பாஷ்யம் செய்ததால்தான் அவரை 'ஜகத் குரு' என்று பலரும் கூறலாயினர். இந்தச் சூத்திரத்திற்கு வார்த்திகக்காரர் ஸுரேஸ்வராசாரியர். அவருடைய பூர்வாசிரமப் பெயர் மண்டனமிசிரர் என்பது. அவர் பிரம்மாவின் அவதாரம். அவர் பத்னியாகிய ஸரஸ்வாணி என்பவள் ஸரஸ்வதியின் அவதாரம். மண்டனமிசிரர் முதலில் கர்மகாண்டத்தின்படி அனுஷ்டித்துப் பிறகு ஆசார்ய தரிசனத்தால், ஞானம் அடைந்தவர். அவரே பின்பு வார்த்திகம் செய்தார். தைத்தீயத்துக்கும் பிருஹதாரண்யத்திற்கும் வார்த்திகம் செய்திருக்கிறார். இந்த இரண்டிற்கும் ஆதிசங்கரர் பாஷ்யம் செய்துள்ளார். வேதாந்த சூத்திரங்களுக்கு ராமானுஜர், மத்வர், நீலகண்டர் முதலிய இன்னும் பலரும் பாஷ்யம் செய்துள்ளனர்.

மீமாம்ஸை சிரவணத்துக்கு உபயோகம். மனனத்துக்கு சாதகமானது **நியாய சாஸ்திரம்.** இதுதான் இரண்டாவது உபாங்கம். நியாய சாஸ்திரம் கௌதம மஹரிஷியால் செய்யப்பட்டது. இந்த உலகத்துக்கெல்லாம் கர்த்தா பரமேஸ்வரன் என்பதை யுக்திகளைக்கொண்டு நிர்மானிப்பதுவே நியாய சாஸ்திரம். இது அனுமானத்தால் ஈஸ்வரனை சாதித்துக் கொடுக்கின்றது. வேதம் சொல்லும் பொருளை மீமாம்ஸை நிர்ணயித்தாலும், ஸந்தேஹத்தை நிவர்த்திபண்ணுவதற்கு, யுக்திகளைக் கொண்டு நிர்மானித்து, நிடப்படுத்துவதற்கு நியாய சாஸ்திரம் உதவுகின்றது. கணாதர் என்பவர் 'வைசேஷிகம்' என்னும் ஒரு நியாய சாஸ்திரம் செய்துள்ளார். **நியாயம்.**

வேதங்களையும் உபநிஷத்துக்களையும் சாந்தமான மனதுடன் (சித்த சுத்தியுடன்), குருமுகமாக உணர்தல் வேண்டும். சாந்தி நிலவும் நல்ல மனமாகிய உழுத பூமியில், குருபக்தி யென்கிற ஜலத்தைப் பாய்ச்சி, பிரம்மோபதேசம் என்ற விதையை ஊன்ற (விதைக்க) வேண்டும். குருமூலமாய்க் கேட்டுணர்ந்த விஷயங்களை புத்தி யுக்திகளைக் கொண்டு நன்கு சிந்தித்து ஆராய்ந்து தெளிவு பெறவேண்டும். நிச்சயம் செய்யவேண்டும். யார் எதைச் சொன்னாலும் அதனால் சந்தேஹ விபரீதங்கள் ஏற்படாமல், எத்தனைவித யுக்திகளுண்டோ

அத்தனையும் செய்து சந்தேஹ நிவர்த்தியடைந்து திட நிர்ணயம் பெற வேண்டும். அவ்வாறு பிரமாணங்களைக்கொண்டு ஆராய்வதே நியாய சாஸ்திரம். ரூபம், சப்தம் முதலியவற்றை நிர்ணயிக்க கண்ணும் காதும் பிரத்தியக்ஷ ப்ரமாணங்களாக உள்ளன.

பதார்த்தங்களை, திரவியம், குணம், கர்மா, ஸாமானியம், விசேஷம், சமவாயம், அபாவம் என ஏழு பெரும் பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். ஒவ்வொன்றும் பலவாய்ப் பிரிகின்றன. திரவியம் பிருதுவி, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசம், காலம், திக், ஆத்மா, மனது என்று ஒன்பது பிரிவுகளாகவும், குணம் 24 பிரிவுகளாகவும், கர்மா 5 பிரிவுகளாகவும் இப்படிப் பல வகையாய்ப் பிரிகின்றன. இந்திரியங்களுக்குப் புலப்படாத ஆயிரக்கணக்கான பதார்த்தங்கள் உலகில் உள. அவற்றைத் தெரிந்துகொள்ள சாதாரண மனிதர்கட்குச் சக்தியில்லை. அப்படியிருக்க, இந்திரியங்கட்கும் அகோசரமான ஐந்து பரமாத்ம ஜீவாத்ம ஸ்வரூபங்களையும் மோக்ஷத்தையும் சாதாரணமாக ப்ரத்தியக்ஷ ப்ரமாணங்களால் உணர இயலாது. அநுமான ப்ரமாணத்தால்தான் நிச்சயிக்கமுடியும். வேத (சுருதி) வாக்கியம் "ஈஸ்வரன் இருக்கிறான்;" "மோக்ஷ இன்பம் உயர்ந்தது" என்று சொல்லுகிறது. "இருந்துதான் ஆகவேண்டும்" என்று அநேகவிதமான ஆக்ஷேப சமாதானங்களோடு சரியான அநுமானத்தைக்கொண்டு திடமாக நிர்ணயித்து சித்தாந்தம் செய்வது நியாய சாஸ்திரம்.

புராணம் என்பது மூன்றுவது உபாங்கம். அது வேதத்திற்கு பூதக்கண்ணாடி போன்றது. புராணம் என்பது பழைய சரித்திரங்கள்.

புராணம். வேத வாக்யங்களை ஆசரித்தவர்கள் அடைந்த சுகத்தையும், ஆசரியாதவர்கள் அடைந்த தீமையையும் விளக்குவன. வேதம் என்பது "ப்ரபுஸம்மிதம்"; அதாவது ஒரு யஜமான் இடும் உத்தரவைப்போன்றது. புராணம் என்பது "ஸுஹ்ருத் ஸம்மிதம்"; அதாவது ஒரு சிநேகிதன் ஹிதமாய்ச் சொல்வது போன்றது. காவியம் என்பது "காந்தா ஸம்மிதம்"; அதாவது மனைவி அன்புடன் சொல்வது போன்றது. புராணங்கள் மனதை விரைவில் எளிதில் பக்குவப்படுத்தி நல்வழியில் புகுத்தக்கூடிய சக்திவாய்ந்தவை. வேதத்திலிருப்பதை எல்லோருக்கும் நன்றாக விளங்கவைக்கும் புராணங்கள் 18. இவை நாலுலக்ஷம்

கிரந்தங்கள் உடையன. (கிரந்தம் என்பது 32 எழுத்துக்கள் கொண்டது.) இவற்றின் ஆசிரியர் வியாச பகவான். இவற்றுள் சிவ புராணம் 10. அவைகளுள் ஸ்காந்தம் ஒன்று மட்டும் லக்ஷம் கிரந்த முடையது. இவைதவிர உப புராணங்கள் 18 உள்ளன.

தர்ம சாஸ்திரம்.

வேதத்திலே நம்முடைய கர்ம அனுஷ்டானத்திற்கு உபயோகமாகச் சொல்லப்பட்டுள்ள விஷயங்களை சுலபமாக எடுத்துச் சொல்லும் சாஸ்திரம்தான் ஸ்மிருதி எனப்படும். இது தான் தர்ம சாஸ்திரம். இதுவே வேதத்தின் நான்காவது உபாங்கம் (வேதத்தில் உண்டான) அநுபவத்தை மீண்டும் நினைப்பதுவே ஸ்மிருதியாம். ஸ்மிருதிக்கு மூன்று காரணங்கள் உண்டு. 1. அநுபவம், 2. ஸ்மிருதி, 3. அதீந்திரியம் அல்லது ஸம்ஸ்காரம். ஒருவன் காசிக்குச் சென்று பல அற்புதங்கள் கண்டான். வீடு திரும்பினன். ஒரு மாதம் கழித்து மீண்டும் நினைத்தான். அந்த நினைப்பே "ஸ்மிருதி". காசியில் நேரில் கண்டதுவே "அநுபவம்". இடையில் ஒரு மாத காலம் அந்த நினைவு அவனுக்குள் இருந்தும் வெளித்தோன்றுதிருந்ததே, அதுதான் "அதீந்திரியம்". அநுபவம்தான் ஸ்மிருதி. ஸம்ஸ்காரத்தால் ஏற்படுவது ஸ்மிருதி. பர்த்தாவைப் பதிவிரதை பின்பற்றுவதைவிட உசிதமாகவே வேதத்தை ஸ்மிருதி பின்பற்றும். ஸ்மிருதி சட்டமல்ல. குறிப்புப்போன்றது. மனு, யாக்ஞவல்கியர், பராசரர், கௌதமர், ஹாரீதர், யமன், விஷ்ணு முதலியோர் ஸ்மிருதிகளைச் செய்திருக்கிறார்கள்.

ஆயுர்வேதம்.

மேற்சொன்ன யாவும் (பதினைந்தும்) தர்ம ஸ்தானங்களென்றும், வித்யா ஸ்தானங்களென்றும் சொல்லப்படும். வித்யா ஸ்தானங்களாக மட்டும் இருப்பன இன்னும் நான்கு உள. அவைதான் உப வேதங்கள். அவற்றுள் முதன்மையானது ஆயுர்வேதம். ஒவ்வொரு மனிதனும் ஞானமார்க்க மெய்ததல் வேண்டும். அம்மார்க்கத்தின் முக்ய லக்ஷணமாகிய பேரின்பானுபவத்தை அடையும் வரையில் இந்தத் தேகத்திற்கு யாதொரு கெடுதியும் வராமல் காப்பாற்ற வேண்டும். பிணி வந்தபின் மருந்து சாப்பிடுவதைவிட பிணியே வராமல் தடுத்துக் கொள்வதுதான் உசிதம். தேகத்தின் குணங்களையும், தோல்,

எலும்பு, மனது முதலியவற்றைப்பற்றிய வியாதிகள் வரும் காரணத்தையும், அதற்குத்தக்க மருந்து செய்ய வேண்டிய முறைகளையும், உபயோகப்படுத்தும் மார்க்கங்களையும் தெரிந்துகொள்ள வேண்டிய தவசியம். அவற்றைக் கூறுவதுதான் ஆயுர்வேதம். தேக அமைப்பு தேக தத்வ சாஸ்த்ரம், பிராணி தத்வ சாஸ்த்ரம், தாவர தத்வ சாஸ்த்ரம், ஔஷத தத்வ சாஸ்த்ரம், ரஸாயன சாஸ்த்ரம் முதலியன இதனுள் அடங்கியுள்ளன. இனிவரும் உலகில் என்னென்ன புதுப்புது விதமான சிகிச்சைகள் கண்டுபிடிக்கப்படுமோ, அவை யெல்லாம் இதில் உள்ளன. வேத ப்ரமாணப்படி பர சுகத்தை யடையலாமென நம்புபவர்கள் ஆஸ்திகர்கள். அவர்களுக்கு அனுஷ்டான சாதனமாக இருப்பது இந்த தேகம். அநுஷ்டான சாதனமே ஆத்ம சிரேயஸைத் தரும். அவர்களுக்கு ஆயுள்வளர்ச்சி வேண்டும். பிணிகளால்தான் ஆயுள் குறைகிறது. ஆதலால் பிணிகள்நெருங்காமல் ஆஸ்திகர்கள் நம் உடம்பைக் காப்பாற்றிக்கொள்ளும்பொருட்டு உபயோகப்படும்படி இந்த ஆயுர்வேதம் மஹரிஷிகளால் சொல்லப்பட்டுள்ளது. ஞானம், யோகம், நிஷ்டை, ஜபம் முதலியவற்றைச் சாதிக்கவும் தேக சௌக்யம் வேண்டும். பத்தியம் மருந்தைக்காட்டிலும் முக்யம். உபவாஸம் (லங்கனம்) பரம ஔஷதம். (லங்கனம் - தாண்டுதல்.) ஆகார காலத்தைத் தாண்டுவதால் உபவாசத்திற்கு இப்பெயர் வந்தது. சஸ்த்ர லிகித்ஸை, இலேபனம் (மேல் பூச்சு), மருந்தை உள்செலுத்தி ரத்தத்துள் சேர்த்தல் முதலிய பல விதங்களேயன்றி, ஔஷதி, ரஸவர்க்கங்கள் முதலியவற்றைச் சேர்த்து செய்யப்பட்ட மருந்துகளாற் செய்யப்படும் சிகித்ஸையும் உண்டு. வமனம் (வாயிலெடுக்கச் செய்வது), விரேசனம் (பேதியாகச் செய்வது), ஸ்நேஹனம் (எண்ணெய் தேய்த்துக்கொள்வது) முதலிய பல முறைகள் உண்டு. ஒரே ஔஷதம் அநுபானவகையில் பலவித வியாதிகளைக் குணப்படுத்தும். இனி வருங்கால உலகில் புதிது புதிதாக எத்தனை வைத்திய முறைகள் தோன்றினாலும் அவை அனைத்தும் இதற்கு நிகராகா. ஆனால், அது போன்ற எத்தனையோ முறைகளை வெகு எளிதில் செய்வதற்கும் இதில் சொல்லப்பட்டுளது.

நோயை யுணர்ந்து, அதுவரும் முதற்காரணத்தை யுணர்ந்து, அதைத் தீர்க்கு முபாய முணர்ந்து, அதனைச் செய்யும் வழி தவறாமல் செய்தல் வேண்டும். நோயுற்றவன், நோய் தீர்ப்பவன்,

மருந்து, அதனைத் தவறு தியற்றுவான் ஆகிய நான்கு அங்கங் களும் முக்யமாய்க் கவனிக்கப்படல் வேண்டும். நோயுற்றவன்- பொருளுடைமை, மருத்துவன் வழி நிற்றல், நோய் நிலையுணர்த்தும் வன்மை, மருத்துத்துன்பம் பொறுத்தல், எனும் நான்கையும், நோய் தீர்ப்பான்—நோய்கண்டஞ்சாமை, ஆசிரியனை வழிபட்டோதிய கல்வியும் நுண்ணறிவுமுடைமை, பலகாலுந் தீர்த்துவருதல், மன மொழி மெய்கள் தூயவாதல் எனும் நான்கையும், மருந்து—பலபிணி கட்கும் ஏற்றல், சுவை வீரியம் விளைவாற்றல்களால் மேம்படுதல், எளிதின் எய்தப்படுதல், பகுதியோடு பொருந்துதல் என்னும் நான் கையும், அஃதியற்றுவான்- ஆதுரன்மாட் டன்புடைமை, மனமொழி மெய்கள் தூயவாதல், சொல்லியன அவ்வாறே செய்தல்வன்மை, அறிவுடைமை எனும் நான்கையும் கொண்டிருத்தல் அவசியம்.

உணவும் செயல்களும் ஒருவன்பகுதிக்கொத்த அளவினவன்றி மிகினுங் குறையினும் வாத பித்த சிலேஷ்ம சம்பந்தமான பிணிக ளுண்டாமாதலால், இம்மானுட யாக்கையை அரிதிற் பெற்றுன் நெடுங்காலங் கொண்டு செலுத்தல் வேண்டு மென்பதை யுன்னி, மூன் உண்டஉணவும் அதன்பயனும் இரதமும் அற்றதரிந்து (துவரப்பசித்து), (உண்பான்) பகுதியோடு மாறுகொள்ளாமையும் கால இயல்போடு மாறுகொள்ளாமையும், சுவை வீரியங்களால் தம்முள் மாறு கொள்ளாமையுமான தூய வுணவைக் காலாகாலத்திற்கேற்ப, (தன் உளம் வேண்டிய அளவினு னன்றி, பிணி வாரா அளவினுல்) சற்று குறைந்த அளவில் உண்டால், அவன் யாக்கைக்கு மருந்தே தேவையில்லை. சிரசிலுள்ள துர்நீர்களை இறக்கி, தேக சுகங் கொடுக்கக்கூடிய காலை ஸ்நானம், அதிலும் தண்ணீர் முழுக்கு, நேத்திர சம்பந்தமான வியாதிகளை (விஷ நீர்களை) போக்கக் கூடிய தான (அதாவது கருடனின் சிறகுகளின் மூலமாய் சூர்ய ரஸ்மி கண்ணில் படுமாறு) கருட தரிசனம் செய்தல், பல வியாதிகளைக் குணப்படுத்தத் தக்க அஸ்வத்த ப்ரதக்ஷிணம், இன்னும் பசு மாட்டு மந்தையிலே இருந்துகொண்டு செய்யும் சில ரஸாயன சேவைகள், நெல்லி மரத்தினடியிலிருந்து செய்யும் சேவைகள், பலவித அற்புத மூலிகைகள் நிறைந்துள்ள மலைகளிலும், வனங்களிலும் வசித்தல், அல்லது அடிக்கடி சென்றுவரல் முதலியவை சிறந்த ஆரோக்கியத் தையும் காயசித்தியையும் நல்கும்.

உடம்பு திடமாயிருக்கவும், அபமிருத்யு வராமலிருக்கவும், வ்யாயாமம், ப்ராணாயாமம், யோகம், தபஸ், ஞானப்யாசம் முதலியன பயிலுதல் வேண்டும்.

அர்த்த சாஸ்திரம். பொதுவாகப் புருஷார்த்தங்கள் நான்கு உண்டு. அவை, தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷம் என்பபடும். (அதிருஷ்டமாக இருந்து) பிரத்யக்ஷபலனை விட உத்கிருஷ்டமான விசேஷ பலனைத் தரத்தக்கது தர்மம். திருஷ்டமான பிரயோஜனத்தைத் தரக்கூடியது அர்த்தம். தற்கால சுகத்தைத் தருவது காமம். எந்நாளும் சுகமாயிருப்பது மோக்ஷம். அநேகமாக உபதேசங்கள் நான்கும் பிரத்யக்ஷபலனைத் தரத்தக்கனவே. ஆஹாரம், வஸ்திரம், வீடு, பிறரால் துன்பம் நேராமல் காப்பு இவையெல்லாம் அர்த்தம். உணவுப் பொருள்களைச் சேமித்து வைத்தால், அது சில பலிஷ்டர்களால் கவரப்பட்டால் அதைத் தெரிவித்துக்கொள்ள ஒரு இடம் வேண்டும். அதுதான் ராஜாங்கம் என்பது. அதாவது ஜனங்களுக்குத் துன்பம் ஏற்படாமல் ரக்ஷித்துக்கொடுப்பது. அதற்கு ஒரு கர்த்தன் வேண்டும். அவனே ராஜா. அவன் பக்ஷபாதமில்லாமல் சமமாக ரக்ஷித்தால் தான் ராஜாங்கமும் ரக்ஷிக்கப்படும். தன்னை ரக்ஷித்துக்கொள்ளவும், பிரஜைகளை ரக்ஷிக்கவும், பலஹீனர்களை வெகு ஜாக்ரதையாய் ரக்ஷிக்கவும், சத்துரு அரசர்கள் துஷ்டர்களாயின் அவர்களால் நாட்டிற்குக் கெடுதி வராமல் காப்பாற்றவும் வேண்டிய வழிகளைச் சொல்வதுதான் அர்த்த சாஸ்திரம்.

துஷ்டர்களாலும், சத்ருக்களாலும் உண்டாகும் ஹிம்ஸையைத் தடுக்க நான்கு வழிகள் உள்ளன. சாமதான பேத மார்க்கங்களை இந்நூல் கூறும். இம்மூன்றினால் முடியாவிடில் கடைசி மார்க்கம் தண்டோபாயம். அதைப்பற்றி மற்றோர் உபவேதமாகிய தநுர்வேதம் சொல்கிறது. விதிக்கு விரோதமாக நடக்கும் (துஷ்டத்தனம்வாய்ந்த) பிரஜைகளைத் தண்டிக்கும் மார்க்கம் மாத்திரம் அர்த்த சாஸ்திரத்திலேயே கூறப்பட்டுளது. துஷ்ட சத்ருக்களைத் தண்டிக்கும் யுத்த முறை தநுர் வேதத்திலுளது.

அர்த்தசாஸ்திரத்துள்ளவாறு பிரஜைகளின் வஸ்துக்களை ரக்ஷித்துக் கொடுக்கவேண்டும். ஏதாவது இடையூறு நேருங்கால்,

அதைச் செய்வோரிடம் முதலில் அன்போடு பழகி, அவர்தம் மனத்தைத் திருத்த முயலவேண்டும்; வேண்டியவர்களைக் கொண்டாவது, அறிஞர்களைக்கொண்டாவது நல்ல வார்த்தைகளைச் சொல்லச் செய்ய வேண்டும். மனதில் சாந்தியோடு பிரயத்தனம் செய்யவேண்டும். அதுதான் ஸாமோபாயம். அதுவே சிறந்தது.

அன்புதான் உத்தம உபாயம். அதற்கிரண்டாவது தானம். அதாவது நாம் பிரியமாக வைத்திருக்கிற பொருளைக் கொடுப்பது. (அது த்யாகம் எனவும் படும்.) அன்பு (பிரியம்) இருந்தால் தானம் வேண்டியதில்லை. என்னுடையது, உன்னுடையது என்ற பேத பாவனையே அங்கு இல்லை. தானோபாயம் வருகையில் கொஞ்சம் வேறு பாடு தோன்றுகிறது. அப்பொழுது, என்னுடையதைக் கொடுக்கிறேன் என்ற ஞாபகம் உண்டாகிறது.

மூன்றாவது நான்காவதான பேத தண்ட உபாயங்கள் கெடுதலான உபாயங்கள். காரியம் மிகவும் பெரியதாயின், பேத உபாயம் அநுசரிக்கப்படலாம். ஒருவன் நாம் (நியாயமாகச்) சொல்லுவதை ஒப்புக்கொள்ளாவிடில், அவனுக்குக் கெடுதல்வரும்படி ஒரு காரியம் செய்வதும், அவனுக்கு வரும் பிரயோஜனத்தைக் கிட்டாமல் தடுப்பதும், நம்மை அவனிடமிருந்து பிரித்துக்கொள்வதும் பேதமாம். அதாவது பொருளுக்காவது, ஒற்றுமைக்காவது ஹானி யுண்டாக்கல்.

அதிலும் சாத்யமாகாவிடில் நான்காவது உபாயம் செய்யப்படுகிறது. அதாவது தண்டம் அல்லது சிக்ஷை. (தேகத்திற்கு நேராக ஹிம்ஸையை உண்டாக்குவது.) பலசாலிகள் பலஹீனர்களையும், பெருங் கூட்டத்தினர் சிறு கூட்டத்தினரையும், பலர் ஒருவனையும் இப்படிப் பலவாறாக ஹிம்ஸித்து அவர்தம் உடைமைகளைப்பற்றிக் கொள்ளும் தியாகட்கு, 'அத்தகைய ஹிம்ஸையைச் செய்தால் அதைவிட அதிக ஹிம்ஸை நேரும்' என்பதை உணர்த்திவைப்பது தண்டோபாயம். (துஷ்ட நிக்ரஹத்தால் சிஷ்டர்களைப் பரிபாலிப்பது.)

குற்றம் நடந்த பிறகு செய்யப்படுவது (சிக்ஷை) தண்டம். குற்றம் செய்யும் எண்ணமே தோன்றாமலிருக்கச் செய்வதுதான்

(சிறந்ததென்பது) அர்த்த சாஸ்திரத்தின் முக்ய நோக்கம். ஒருவரும் குற்றம் பண்ணுமலிருப்பதற்காக, பண்ணினவனை சிக்ஷித்துக் காட்டி, ஹிம்ஸையைக் குறைப்பது இரண்டாவது வழிதான். முதல் வழிக்கு அர்த்த சாஸ்திரம் தர்ம சாஸ்திரத்தை நாடுகிறது. தர்ம சாஸ்திரத்தின்படி நடக்குமாறு உபதேசம் செய்தல் வேண்டும். பிரஜைகளின் மனம் செம்மைப்பட்டுவிட்டால் நாட்டில் குற்றங்கள் நடவா. அறிஞர்கள் சாந்தத்தோடு பிரதிப்பிரயோஜனங் கருதாது ஜனங்களின் மனத்தைத் திருத்துதல் வேண்டும். அதற்காக அரசனும், அரசாங்கமும் தகுந்த முயற்சியை எடுத்துக்கொள்ளவேண்டியது முதற்கடமை. அவ்வாறு மிகவும் சாந்தமாக எல்லா தர்மங்களையும் (நீதிகளையும்) எல்லோருடைய மனத்திலும் பசுமரத்தாணிபோல் பதித்துவிட வேண்டும். நியாயஸ்தலங்களை அதிகப்படுத்தாமல் தர்மஜ்ஞர்களை அதிகப்படுத்தவேண்டும். ஹிம்ஸா மார்க்கத்தை வளர்க்காமல், அஹிம்சா மார்க்கத்தைக் கைக்கொள்ளவேண்டும். ஆத்மார்த்தமாக சன்மார்க்கத்தைப் போதிக்கக்கூடிய ஞானிகள் ஏராளமாக நாட்டில் சிறக்கவேண்டும். அவர்களுக்கு வேண்டிய சகல சௌகரியங்களையும் ராஜாங்கம் செய்துகொடுத்து, அந்த உத்தமக்கூட்டத்தை அபிவிருத்தி பண்ணல் வேண்டும். ஜனங்கள் உள்ளத்தில் துர்ப்புத்திகளே தோன்றுதிருக்கும் வண்ணம் ஆத்மார்த்த ஞானத்தை விருத்தி செய்யவேண்டும். யார் சொன்னால் ஜனங்கள் கேட்டு அவ்வாறு நடப்பார்களோ அத்தகைய உத்தமர்கள் உண்டாவதற்குரிய வழிகளைத் தேடவேண்டும். இவ்வாறு நடக்கும் தர்ம பரிபாலன ராஜ்யம் என்றும் அழியாது.

ஜனங்களிடத்து காமம் குரோதம் முதலிய தீய குணங்களை விலக்கி சாந்தி நிலவச்செய்தல் வேண்டும். வருணாசிரம தர்மங்களைத் தவறாது அனுஷ்டித்து வந்தால் எல்லாம் தானாக நடக்கும். அதுவே சாந்தத்தையும் சமாதானத்தையும் கொடுக்கும். அதனால் வருணாசிரம தர்மம் குறையாமலிருக்க ராஜாங்கம் வழி செய்ய வேண்டும். ஸத்யம், பரோபகாரம், சாந்தம், அன்பு, வைதீகாநுஷ்டானம், சதாசாரம், தெய்வபக்தி, முதலியவற்றைப் புகட்டும் தூய மஹான்களிடம் பக்தியோடு உணர்ந்து நடக்கச் செய்யவேண்டும். பக்தி வந்தால் குயுக்தி குலைந்துவிடும். தூய பக்தி நிறைந்த இடத்தில்

எல்லா நன்மைகளும் உண்டாகின்றன. அதுதான் அரசியல் முறையின் முக்ய தத்துவம். நிதியம், அதிகாரம், பட்டம், குயுக்தி, சாமர்த்தியம், பலம் இவற்றுல் பூர்ண சமாதானம் உண்டாகாது. தூய மஹான்களின் தரிசனமும் ஹிதோபதேசமும் அதனை எளிதில் உண்டாக்கும். ஆயுதபலத்தைவிட அறிவு பலமே சிறந்தது. ஆதலால் மஹான்களை ஆதரிப்பது ராஜாங்கத்தின் முதற்கடமையாம்.

தநுர் வேதம்.

ஒரு தேசத்திற்கு மற்ற அரசர்களால் தீங்கு நேரிடும்போது செய்யப்படும் தண்டோபாயத்தைப்பற்றிச் சொல்வது தநுர் வேதம். துஷ்ட அரசர்கள் தமது தேசத்தில் புகுந்து அலங்கோலம் செய்யாமல் தடுக்க, ஒவ்வொரு அரசனும் தநுர் வேதப்படி யுத்தம் புரிய எப்பொழுதும் தயாராயிருத்தல் வேண்டும். அனைவரும் அறிவு பலத்தோடு சரீர பலமும் சம்பாதித்துக் கொள்ளவேண்டும். தநுர் வேதத்தை யாவரும் கற்றல் நலம். விசேஷமாகத் தெரிந்துகொள்ளவேண்டியவர்கள் க்ஷத்ரியர்கள். இந்நூலில் ஆயுத விசேஷங்கள், துஷ்ட சம்ஹார முறைகள் முதலிய பல விஷயங்கள் கூறப்பட்டுள்ளன.

பலவிதமான தவம்செய்து தேவதைகளால் அடைந்தும், அதர்வவேத மந்த்ரங்களை அத்யயனம் பண்ணி சித்தி பெற்றும், தூய அநுஷ்டானம், தேகபரிசுத்தி முதலியவற்றைக் காத்தும், காலத்துக்கேற்ப உச்சரித்து ப்ரயோகம் பண்ணக்கூடிய பல அஸ்திரவகைகள், (கையைவிட்டு எரிவதான) முக்தம், (கையில் வைத்துக் கொண்டே ஹிம்ஸிக்கும்) அமுக்தம், (கையிலிருப்பதும், வெளியில் போவதும், திரும்பி வருவதுமான) முக்தா முக்தம், ஆதிய வகைகளையுடைய சஸ்த்ர வகைகள், பத்மம், சக்ரம், தநுர், கருடம் முதலிய வியூக வகைகள், நால்வகைத் தானைபின் லக்ஷணம் முதலியவைகள், ஆதிய் பலவித யுத்த முறைகள், யுத்தகாலத்தில் அநுசரிக்கப் படவேண்டிய தர்மங்கள், ஆபத்தர்மங்கள் முதலியவற்றைச் சொல்வதே தநுர் வேதமாகும்.

அறிவும், பொருளும், தேஹ பலமும் யாவர்க்கும் அவசியமாதலால், ஞானசாஸ்த்ரம், அர்த்த சாஸ்த்ரம், தநுர் வேதம் முதலியவற்றை அனைவரும் தெரிந்துகொண்டிருத்தல் வேண்டும்.

உத்ஸாகத்தை மாத்திரம் தருவது காந்தர்வ வேதம். சித்திரம், சங்கீதம், நாடகம், முதலியன இதனில் சேரும். இவை இந்திரிய சுகத்தை மட்டும் தருபவை. இவற்றிற்கு அதிஷ்டான தேவதைகள் கந்தருவர்கள். அவர்கள் இம்மாதிரி உத்ஸாகங்கொடுக்கும் விஷயங்களிலேயே பொழுது போக்கிக்கொண்டிருப்பவர்கள். காந்தர்வ வேதத்தில் நிருத்தம், கீதம், வாத்யம் முதலியன முக்யம். இவையன்றி சித்திரம், சமையல் முதலான பலவித ருசிகளுக்குத் தக்கபடியுள்ளவையும் இருக்கின்றன. 64 கலைகளில் பல இந்த காந்தர்வ வேதத்தில் அடங்கிவிடுகின்றன. இந்நூல் கடைசியாகத் தெரிந்து கொள்ளவேண்டியது. ஆனல் (கலியுகத்தில்) வருங்கால உலகில் இவைகளில்தான் ஜனங்களுக்கு அதிக ஆசை இருக்கும்.

காந்தர்வ வேதம்.

நிருத்தம் என்பது மனோபாவத்தை வாயினல் சொல்லாமல் சைகை மூலமாகவே (உடலசைவு முதலிய அபிநயத்தாலேயே) காட்டுவது. இது நடனம், நாட்டியம், பரதம், கூத்து என்றெல்லாம் பலவாறு கூறப்படும். பாவம், ராகம், தாளம் முதலியன இதில் அனுசரிக்கப்படும். இதில் தாண்டவம், லாஸ்யம் என இரு பிரிவுகளுண்டு. நிருத்தம் பூஜையிலும் ஓரங்கமாக உளது. ராஜோபசாரத்தில் ஒன்று. பரத சாஸ்திரத்தில் நாடக விஷயங்களும் கூறப்படுகின்றன. அதில் ஸ்திரீ புருஷர்கள் கலந்து நடிப்பர்.

புருஷனும் மனைவியும்தான் நாடகத்திலும் புருஷனும் மனைவியுமாக நடிக்கவேண்டும். புருஷ வேஷம் போட்ட பெண்ணையும், பெண்வேஷம் தரித்த புருஷனையும் பார்க்கக்கூடாது. ப்ராம்மணன், வேஷம் போட்டுக்கொண்டு நடிக்கக்கூடாது. எல்லாத் தொழிலும் எல்லோருக்கும் தெரிந்திருக்கவேண்டும். ஆனலும், தத்தம் வருண சிரமத்துக்கேற்ற ஒரு முக்ய தொழிலைத்தான் விசேஷமாய்த் தெரிந்து கொண்டு நடாத்துதல் வேண்டும்.

நீதிகளை விளக்கும் புராண இதிகாசங்களிலுள்ள சரிதங்களை நாடகமாக நடிக்கையில் பார்த்தால் அநேக பாமர மக்களின் உள்ளம் திருந்தும். துர்க்குணங்கள் விலகி, சற்குணங்கள் சாரும். அற்புதம், ரௌத்திரம், கருணை, குற்சை (இழிபு), சாந்தம், சிங்காரம்,

பயம், பெருநகை, வீரம் என்னும் நவரசங்களும் இந்நாடகக் கலையில் தோன்றலால் யாவர் மனமும் எளிதில் திரும்பும். பலவகை வாத்தியங்களும் சங்கீதமும் இதில் சிறந்த பங்கு கொள்ளும். வாத்தியங்களில் தந்திரீ வாத்தியம், ரந்ர வாத்தியம், சர்ம வாத்தியம், உலோஹ வாத்தியம் என நான்கு வகை உண்டு. அர்த்தம், ஸ்வரானந்தம் முதலியன பாட்டுகளில் அமைந்து ஆனந்தமளிக்கின்றன. காவியம், ஓவியம், சில்பம், கவித்வம், ஸங்கீதம், நிருத்தம், வாத்யம், சமையல் பாகம், முதலிய எத்தனைக் கலைகளை எவரெவர் கற்றாலும், அத்தனையும் ஆண்டவன்பால் உபயோகித்து, அர்ப்பணம் செய்து, பக்தி புரிந்து அவனருளில் ஈடுபடுவதே சிலாக்கியம்.

தர்மம், தொழில் முறை, அநுஷ்டானம், ஒழுக்கம், கலையறிவு, ஆன்ம அறிவு, ஆகிய அனைத்தும் அமைந்தவர்கள் ராஜ்யத்தை நடாத்தவேண்டும். எங்கும் தர்மராஜ்யத்தின் ஒளி பரவ வேண்டும். தத்தமது ஸ்வாதந்திரியத்தைப் பிரயோஜனப்படுத்தி, ஆண்டவன் திருவுளம் களிக்குமாறு அற நெறிப்படி யொழுகி, பிறரையும் ஒழுகச் செய்து பரமேஸ்வரனது அனுக்ரஹத்தைப் பெறுதல் வேண்டும்.

ஸம்ஸ்காரங்கள்.

சுகமே இருக்கும் உலகம் பர உலகம். அதுவே ஸத்ய உலகம், வைகுண்டம், கைலாசம் என்றெல்லாம் சொல்லப்படும். துக்கமே யுள்ள உலகம் நரகலோகம். அதிலும் மிகவும் கொடூரமானது ரௌரவம் என்பது. துக்கமும் சுகமும் கலந்து இருக்கும் மிஸ்ர லோகம் இந்தப்பூலோகம். தேவலோகம், பிதிர்லோகம், நரகலோகம் முதலிய எல்லா உலகங்களிலும் உள்ளவர்களுக்கு இந்தப் பூவுலகத்தார்தான் திருப்தி செய்யவேண்டும். இவ்வுலகத்திலிருந்து கொண்டு செய்யும் கர்மாக்களால் எவ்வுலகத்தை வேண்டுமானாலும் பெற்றுக்கொள்ள வசதியுண்டு. ஏனைய உலகங்களில் இத்தகைய வசதியில்லை. புண்ய பூமியாகிய இந்தப் பாரத நாட்டில் அவ்விதவசதிகள் நிரம்ப உண்டு. இதற்குக் கர்மபூமி என்றே பெயர். வைதிக சம்பந்தமான சத்கர்மாக்கள் செய்யப்படவேண்டும். காலம், இடம் தக்கனவாயிருத்தல் வேண்டும். தூயமனத்துடன் செய்தல் வேண்டும். கர்மாவும் குணமும் சேர்ந்து ஒருவனை ஏனைய

உலகங்கட்கு அழைத்துச் செல்கின்றன. தோஷத்தைப் போக்கி, குணத்தைப் புகட்டுங் கர்மா 'ஸம்ஸ்காரம்' எனப்படுகிறது. 40 ஸம்ஸ்காரங்களும் 8 ஆத்ம குணங்களும், ஸ்மிருதிகளில் சொல்லப்பட்டுள்ளன. அவற்றை அநுஷ்டித்தால் போதுமானது. எல்லாவற்றிற்கும் ஆதார மூலமான பரத்திலொன்றிச் சுகித்திருக்கும் பெரு வாழ்வை அடைய வழியேற்படும். வாஸ்தவமான கர்மாநுஷ்டானம் பக்தியோடு கலந்தது. மனோ வாக்குக் காயங்களால் ஏற்படும் பாபங்களை நிவர்த்தித்துக்கொள்வதற்காக அந்த மூன்று காரணங்களாலும் ஸம்ஸ்காரம் செய்தல் வேண்டும். யாவும் பரமேஸ்வர ப்ரீதிக்காக என்று சங்கல்பித்துக்கொண்டு செய்யவேண்டும். எல்லாவற்றையும் பரமேஸ்வரார்ப்பணம் பண்ணவேண்டும். எதையும் காலத்திற் செய்தல்வேண்டும்.

நாற்பது ஸம்ஸ்காரங்களாவன :—

1. கர்ப்பாதானம்.
2. பும்ஸவனம்.
3. ஸீமந்தம்.
4. ஜாதகர்மம்.
5. நாமகரணம்.
6. அன்னப்ராஸனம்.
7. சௌளம்.
8. உபநயனம்.

9 முதல் 12 வரை : வேதவிரதம். 4 :—

(i) பிராஜாபத்தியம், (ii) ஸௌம்யம்,
(iii) ஆக்னேயம், (iv) வைஸ்வதேவம்.

13. ஸ்நானம் அல்லது ஸமாவர்த்தனம்.

14. விவாஹம் அல்லது ஸஹதர்மசாரிணீ ஸம்ப்ரயோகம்.

15 முதல் 19 வரை : பஞ்சமஹாயஜ்ஞங்கள் :—

(i) தேவயஜ்ஞம், (ii) பூதயஜ்ஞம்,
(iii) பிதுர்யஜ்ஞம், (iv) ப்ரம்மயஜ்ஞம்,
(v) மனுஷ்ய யஜ்ஞம்.

20 முதல் 26 வரை :— ஸப்தபாகயஜ்ஞங்கள் :—

(i) ஔபாஸனம், (ii) அஷ்டகை,
(iii) அன்வஷ்டகை, (iv) பார்வணம்,
(v) ஸ்ராவணி, (vi) சைத்ரி,
(vii) ஆஸ்வயுஜி.

27 முதல் 33 வரை : ஸப்த ஹவிர் யஜ்ஞங்கள் :—

(i) அக்னியாதானம், (ii) அக்னிஹோத்ரம்,
(iii) தர்ஸபூர்ணமாஸம், (iv) ஆக்ரயணி,
(v) சாதுர்மாஸ்யம், (vi) நிரூடபசுபந்தம்,
(vii) ஸௌத்ராமணி.

34 முதல் 40 வரை : ஸப்த ஸோமயஜ்ஞங்கள் :—

(i) அக்னிஷ்டோமம், (ii) அத்யக்னிஷ்டோமம்
(iii) உக்த்யம், (iv) ஷோடசி,
(v) அதிராத்ரம், (vi) அப்தோர்யாமம்.
(vii) வாஜபேயம்

இவற்றில் தினந்தோறும் செய்யவேண்டியவை சில. குறிப்பிட்ட சிற்சில காலங்களில் செய்யவேண்டியவை சில. ஆயுளில் ஒரு தரம் பண்ணவேண்டியவை சில. பஞ்சமஹா யஜ்ஞங்களும், ஔபாசனமும் அக்னிஹோத்ரமும், தினேதினே செய்யவேண்டியவை. தர்ச பூர்ணமாசம் பக்ஷத்திற்கு ஒருதரம் செய்யவேண்டியது. ஔபாஸனம் தவிர மற்ற ஆறு பாக யஜ்ஞங்களும் வருஷத்துக் கொருதரம் செய்யவேண்டியன. ஸோமயஜ்ஞங்கள் முதலியன ஜன்மத்தில் ஒருதரம் பண்ணினாலும் போதும்.

தாயார் வயிற்றில் தேஹம் ஏற்படுகிற க்ஷணம் முதல் ஸம்ஸ்காரங்கள் ஆரம்பமாகின்றன. தேஹம் வெளியில் வருவதற்கு முன்பு பண்ணப்படுபவை கர்ப்பாதானம், பும்ஸவனம், ஸீமந்தம் என்னும் மூன்றும். இவை தாயார் தேகத்திற்காகச் செய்யப்படுபவனவல்ல. உள்ளே இருக்கிற ஜீவனே (பிண்டத்தை)க் குறித்தே செய்யப்படுவன. அந்த ஜீவனுடைய பரிசுத்திக்காக செய்யப்படுகின்றன. தாயார் முதலியவர்களுக்கு இவற்றில் பொறுப்பு அதிகம். வேறொரு ஜீவனின் நன்மையை உத்தேசித்திருப்பதால் அநாதரவு பண்ணக்கூடாது.

கர்ப்பாதானம் என்னும் முதல் ஸம்ஸ்காரம் உலகக்ஷேமத்தை உண்டாக்கக்கூடிய நல்ல குழந்தையைப் பெறுவதற்காகச் செய்யப்படுவது. உலக தர்மங்கள் பொலிவுற நடந்துவரவும், ஆத்மஞான அபிவிருத்தி யுண்டாகவும், சத் குணங்களுடன் சத் காரியங்களைச் செய்யும் சாது ஸ்வபாவமுள்ள சத் சந்ததி பிறக்கவேண்டுமென்று [கர்ப்பத்துள் ஏற்படும் சந்தானம் (சுக்ரூபம்) குணம், ஆயுள், ஆசாரம், ஆரோக்யம், தேகவலிமை, ஆத்மஞானம் முதலிய சகல சுகுணங்களும் பொருந்தி, உலகத்திற்கு உத்தம க்ஷேமத்தை உண்டாக்கக்கூடிய உயர் பிறவியாக உற்பத்தியாதல் வேண்டுமென்று பிரார்த்தித்துக்கொள்ளலே உட்பொருளாய்க் கொண்டுள்ள] "ஆரோஹோரு" என்று தொடங்கும் மந்த்ரமாதியாக அந்த அனுவாகத்தையே பூரணமாய்ச் சொல்லி, அதன் தாத்பர்யத்தைத் தன் மனதுக்கு விளக்கிக்கொண்டு, பரமாத்மாவை த்யானம் செய்தவண்ணமாய் (தன்னுடைய மனைவி புஷ்பவதியாய் மங்கள ஸ்நானமான நாளிரவு, அதாவது ஐந்தாம் நாளிரவு) சுபலக்னத்தில் தான் சம்பந்தப்படல் வேண்டும்

பும்ஸவனம் மூன்றுவது மாதக் கர்ப்பத்தில் செய்ய வேண்டும். ஆறுவது அல்லது எட்டாவது மாதத்தில் ஸீமந்தம் பண்ணவேண்டும். குழந்தை பிறந்தவுடன் ஜாதகர்மா செய்ய வேண்டும். பதினோராவது நாள் நாமகரணம் செய்யவேண்டும். ஆறுவது மாதத்தில் அன்னப்ராசனம் பண்ணவேண்டும். அதன் பிறகு செய்யப்படுவது சௌளம். அதாவது சிகை வைக்கிறது.

ஸ்கர்மாவுக்கு உபயோகமாக இருக்கும்படி அது செய்யப்பட வேண்டும். மந்த்ரபூர்வமாக சிகை எடுக்கவேண்டும். மந்த்ரபூர்வமாக வைத்துக்கொண்ட சிகையை, பரமேஸ்வரனுக்கு முன்பு பண்ணின பிரதிஜ்ஞைக்கு விரோதமாக, பின்னர் இஷ்டப்படி எடுத்து விடுவது தவறு. பரமேஸ்வரப்ரீத்யர்த்தமாக ஸங்கல்பம்பண்ணிக்கொண்டு ஸம்ஸ்காரம் செய்து, வைத்துக்கொண்டதை, கிள்ளுக் கீரையாக எண்ணி மனம் போனபடி எடுக்கக்கூடாது.

மாதா பிதாக்களிடத்தில் ஏதாவது பாப தோஷங்களிருந்தால், அவை அவர்களிடத்துண்டாகிற ஜீவனையும் பாதிக்கும். தாய் தந்தையருடைய தோஷங்கள், துர்க்குணங்கள் முதலியன அந்த ஜீவனுக்கு ஏற்படாமலிருத்தற்காக இவ் வாரம்ப ஸம்ஸ்காரங்களைச் செய்ய வேண்டும். தாயால் உண்டாகும் 'கார்ப்பீகம்' எனும் தோஷமும், தந்தையால் உண்டாகும் 'பைஜிகம்' எனும் தோஷமும் நிவாரணமாவதற்காக உபநயனம் வரையில் உள்ள ஸம்ஸ்காரங்கள் செய்யப்படுகின்றன. உபநயனம்வரையில் ஸம்ஸ்காரங்களைச் செய்துகொள்ள புத்ரனுக்குத் தக்க வயது வரவில்லை. அதனால் அவற்றைச் செய்ய வேண்டியவர்கள் மாதா பிதாக்கள்.

உபநயனம்.

உபநயனம் அறிவு வந்தபோது செய்யப்படும் ஸம்ஸ்காரம். ப்ராம்மணர்கள் ஏழு வயதிலும், க்ஷத்ரியர்கள் ஒன்பது வயதிலும், வைசியர்கள் பன்னிரண்டு வயதிலும் உபநயனம் செய்துகொள்ள வேண்டும். இன்னும் இரண்டு வருடங்கள் முந்தியும் பண்ணலாம். அது காம்யோபநயனம் எனப்படும். விசேஷ அபிவிருத்தி யடைய வேண்டுமென்றால் இவ்வாறு பண்ணலாம். உபநயன காலத்திற்கு முன்பே ஸம்ஸ்க்ருதஜ்ஞானம் அடைந்திருக்கவேண்டும். அப்பொழுதுதான் உபநயன மந்த்ரம் சொன்னால் இன்னதென அர்த்தம் தெரியும். அர்த்தம் தெரிந்தால்தான் பக்தி ஏற்படும். குழந்தைப் பருவத்திலேயே பக்தி ஏற்பட்டால்தான் அது பலமாக இருக்கும். மனிதனுக்கு ஏற்பட்ட ஆஸ்ரமங்கள் நான்கு. அவற்றுள் முதலாவது ப்ரம்மசர்யம். அது வேதாத்யயனம் பண்ணுவதற்கேற்பட்ட ஒரு தீக்ஷை. அதற்குப் பூர்வாங்கமாக ஏற்பட்டது உபநயனம். நயனம்

என்றால் கண். கண் ஒருவனை (நல்ல வழியில்) அழைத்துச் செல்கிறது. 'உப' என்றால் சமீபத்தில் என்று அர்த்தம். 'உபநயனம்' என்றால் '(குருவுக்கு) அருகில் அழைத்துச் செல்வது' என்று பொருள்படும். வித்தையைக் கற்றுக்கொள்வதான முதல் ஆசிரமத்துக்குக் குரு வேதவித். ஞானத்தைத் தெரிந்துகொள்வதான கடைசி ஆசிரமத்துக்குக் குரு பிரம்மவித்.

உபநயனம் முதல் ஸமாவர்த்தனம் வரை பிரம்மசர்யாசிரமம். அத்யயனத்தைப் பூர்த்தி பண்ணிவிட்டு அகத்திற்குத் 'திரும்பி வருவது' ஸமாவர்த்தனம். பிரம்மசரிய காலம் முழுவதும் குரு சந்நிதானத்தில் இருத்தல்வேண்டும். 'ப்ரம்ம' என்பதற்குப் பல பொருள்கள் உண்டு. விஷ்ணு, பரமசிவன், ப்ராம்மணஜாதி, தபஸ், பரமாத்ம ஸ்வரூபம் என்றெல்லாம் கூறலாம். 'ப்ரம்மா' என்றால் சதுர்முகனைக் குறிக்கும். இங்கே 'ப்ரம்ம' என்றால் வேதம். வேதத்தை ஸ்வாதீனப்படுத்தும் ஆசிரமமே ப்ரம்மசரியம். உபநயனம் செய்துகொண்டு வேதாத்யயனம் செய்யாமலிருந்தால் பரிஷேசனம் பண்ணிச் சாப்பிடாமலிருப்பதை யொக்கும்.

வேதம் என்பது மந்த்ரஸமூகம். அதை அத்யயனம் பண்ணுவதற்கு நியமங்களோடு இருக்கவேண்டும். வேத சமூகம் முழுவதற்கும் ஏற்பட்ட நியமம் ப்ரம்மசரிய விரதமாகும். வேதம் நான்கு காண்டமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றை நான்கு மஹரிஷிகள் பிரவர்த்திப்பித்துள்ளனர். அவர்களை உத்தேசித்து ப்ரம்ம யஜ்ஞம் பண்ணப்படுகிறது. 'ப்ரம்ம யஜ்ஞம்' என்பதற்கு 'வேத யஜ்ஞம்' என்றுதான் அர்த்தம். ஒவ்வொரு காண்டத்திற்கும் தனித்தனி விரதம் உண்டு. ஒவ்வொரு காண்டமும் அத்யயனம் பண்ணப்படும் வரையில் அதற்காக ஏற்பட்டுள்ள விரதத்தை, (பிரமசரிய விரதத்தோடு) அநுஷ்டித்தல் வேண்டும். பிராஜாபத்யம், ஸௌம்யம், ஆக்னேயம், வைஸ்வ தேவம் என்றும் நான்கு விரதங்களும் கிருஷ்ண யஜுர் வேதத்துக்கு ஏற்பட்டவை. கோதான விரதம், உபநிஷத் விரதம் முதலிய நான்கும் ருக்வேதத்துக்கு ஏற்பட்டவை. ஒவ்வொரு வேதத்திற்கும் தனித்தனி விரதங்கள் உண்டு.

எந்த மந்த்ர சித்திக்கும் நியமம் வேண்டும். ஜீவாத்மாவைக் கடைத்தேற்றுவதற்கு வேதம் இருக்கிறது. வேதாத்யயனம்

செய்யும்போது அவ்வகக் காண்டத்திற்கு எற்பட்ட தனி நியமத்தோடும் பிரம்மசரியத்திற்கு ஏற்பட்ட பொது நியமத்தோடும் செய்தால் மந்த்ர ஸித்தி உண்டாவது நிச்சயம். ஒரு ஜீவன் பிறந்து, வளர்ந்து, நன்முக இருந்து, கிருஹஸ்தனகி, புத்ர ப்ரஜைகளை அடைந்து, அவர்களும் கடைத்தேற வழிபண்ணித் தன்னுடைய ஜன்மாவுங் கடைத்தேற வழிபண்ணிக்கொள்வதற்கு எந்த மந்த்ரங்களைச் சொல்லிக் கர்மாக்களை அநுஷ்டிக்க வேண்டுமோ, அத்தகைய மந்த்ரங்களின் சேர்க்கையே வேதம். வேதத்தில் ஒரு சாகையை ஐயந்திரிபற அத்யயனம் பண்ணினவன் 'சுரோத்ரியன்' எனப்படுவான். ஸமாவர்த்தனத்திற்கு 'ஸ்நானம்' என்றும் பெயர். அதைச் செய்து கொண்டவன் 'ஸ்நாதகன்' ஆவன்.

ஒவ்வொருவரும் ஒரு வேதத்தையும் வித்தைகளையும் அத்யயனம் பண்ணவேண்டும். சிராவண பூர்ணிமையில் ஆவணி அவிட்டம் வரும். அன்று வேதாத்யயனம் ஆரம்பித்துக்கொள்ள வேண்டும்.* தை மாஸ பூர்ணிமையில் உத்ஸர்ஜனம் பண்ணவேண்டும். மற்ற ஆறு மாதங்களில் (வேத) அங்கங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும். பிரதிமாதத்திலும், சுக்லபக்ஷத்தில் வேதத்தையும், கிருஷ்ண பக்ஷத்தில் அங்கங்களையும் அத்யயனம் செய்தல்வேண்டும். புதிய காண்டத்தை உபாகர்மத்தன்றுதான் ஆரம்பித்தல் வேண்டும். அந்தந்தக் காலங்களில்தான் புதிய மந்த்ரங்கள் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

உபநயனத்துக்கப்புறம் சந்த்யாவந்தனம் மிகவும் முக்யம். எனென்றால் அதில் மிக முக்யமான பிராணயாமம், அர்க்யப்ரதானம் காயத்ரீ ஜபம் முதலியவைகளெல்லாம் உள்ளன. அவற்றால் ஆன்ம வொளியுண்டாகிறது. தேஜஸும் கிரேயஸும் உண்டாகின்றன. காயத்ரீ, முதல் மூன்று வேதங்களின் சாரம். அதர்வண வேதத்திற்கு வேறு காயத்ரீ உண்டு. அதர்வ வேத அத்யயனம் பண்ண வேறு உபநயனம் பண்ணிக்கொள்ளவேண்டும். தேவதைகளை மந்த்ர சக்தியால் எளிதில் வரவழைக்கும் வழிகள், யுத்த முறைகள் முதலிய அநேக அற்புத விஷயங்கள் அதர்வ வேதத்துள்ளன.

* (ஸியாசர் வேதங்களை முறை வகுத்த காலத்தில் ஆவணி மாதத்தில் உத்தராயண ஆரம்பமாயிருந்தது. உத்தராயண ஆரம்பத்தில் உபாகர்மம் செய்தல் வேண்டும் என்ற கருத்தை யொட்டியே இவ்வாறு சொல்லப்பட்டுள்ளது.)

ஒருவன் குருவினிடத்தில் தப்பு பண்ணினாலும், குருவை அலக்ஷியம் செய்தாலும் அவனை வீட்டில் சேர்க்கக்கூடாது. குருகுல வாசம் செய்கிறபரியந்தம் பிக்ஷான்னமே புசித்தல் வேண்டும். பாதி பிக்ஷையை குருவுக்குக் கொடுத்துவிட்டு, பாதி பிக்ஷையைத் தான் உண்ணவேண்டும். பிரம்மசாரி உப்பில்லா உணவே கொள்ளவேண்டும். ஒவ்வொரு நாளும் அக்னி காரியம் அதாவது சமிதா தானம் பண்ணவேண்டும்.

பிராம்மணன் பலாச தண்டமும், க்ஷத்திரியன் அசுவத்த தண்டமும், வைசியன் அத்தி தண்டமும் வைத்துக்கொள்ள வேண்டும். வேத மந்த்ர சக்தியைத் தாரணம் பண்ணுவதற்கு அந்தத் தண்டத்திற்கு ஒரு (இயற்கைச்) சக்தி இருப்பதனால், தான் கற்ற எல்லா (வேத) மந்த்ரங்களும் மறவாமல் மனதில் இருக்கும்படி பாதுகாக்க இத் தண்டம் வேண்டும். பிரம்மசாரிக்கு மேல் வேஷ்டி கூடாது. கிருஷ்ணாஜினத்தை மேல் போட்டுக்கொள்ள வேண்டும். இவ்வாறு, காலநியமம், விரதநியமம், ஆஹாரநியமம் முதலிய வற்றை அனுஷ்டிப்பது பிரம்மசரியம். அத்யயன காலத்தில் ஏற்படும் ஸ்வரலோபம், வர்ணலோபம், வேதஉச்சாரணப் பிழைகள் முதலிய வற்றால் உண்டாகும் பாபங்களை நிவர்த்தித்துக் கொள்ளவேண்டி உபா கர்மத்தன்று சிறிது எள் மாத்திரம் சாப்பிட்டு, அன்று முழுதும் விரதமிருந்து மறுநாள் 1008 சமித்துக்களால் ஹோமம் பண்ணவேண்டும். பிரதி வருஷமும் உபாகர்ம பூர்ணமைக்கடுத்த பிரதமையில் இந்த ஹோமத்தை யாவரும் அவசியம் பண்ணவேண்டும். பலாசசமித்துக்களால் பண்ணவேண்டும். இல்லாவிடில் அசுவத்த சமித்துக்களால் பண்ணவேண்டும். கடைசிபக்ஷம் தர்ப்பையாலாவது பண்ணவேண்டும். 'மித்யாதீத ப்ராயச் சித்தார்த்தம்' என்று சங்கல்பம் பண்ணிக்கொண்டு செய்யவேண்டும்.

ஒவ்வொருவரும் அவசியமாகப் பன்னிரண்டு வருஷங்கள் குருகுலவாசம் செய்யவேண்டும். பிரம்மசாரி குருகுலவாசம் முடிந்ததும் குருவுக்குத் தக்ஷிணை சமர்ப்பித்துவிட்டு வீடு திரும்பவேண்டும். பொருள் வசதி யில்லாதார் யாசித்துக் குருதக்ஷிணை தரலாம். அல்லது குரு கோரும்வகையில் வேறுவித உதவிசெய்து குரு மனதைத் திருப்தி பண்ணிவைக்கலாம். ஸமாவர்த்தனம் பண்ணாமல், குருவினிடத்திலேயே இருந்து வாழ்க்கை முழுவதையும் அவருக்கே அர்ப்பணம்

பண்ணுவதுமுண்டு. அதற்கு 'நைஷ்டிக ப்ரம்மசரியம்' என்று பெயர். ஸமாவர்த்தனம் பண்ணிக்கொண்டு விவாஹம் பண்ணிக் கொள்ளாமல் இருப்பவன் ஸ்நாதகன். காசி யாத்திரை பண்ணுகிற வன் அவன்தான்.

பிரம்மசரியம், குருகுலவாசத்தாலும், விரதானுஷ்டானத்தாலும், வேதாத்யயனத்தாலும், பிக்ஷாசரணத்தாலும், சத் சங்கத்தாலும், இயற்கைப் பொலிவுமிக்க வனங்கள் சோலைகள் பர்ணசாலைகளின் வாசத்தாலும் சிறந்த புத்தி தீக்ஷண்யத்தை உண்டாக்குகிறது.

ஸமாவர்த்தனத்திற்குப் பிறகு செய்யப்படவேண்டிய ஸம்ஸ்காரம் 'விவாஹம்' என்பது. நைஷ்டிக ப்ரம்மசாரியாயிருப்பவன் ஸந்யாஸ ஆச்ரமத்தைக் கைக்கொண்டு தனக்குரிய சொத்தாகிய ஆத்ம ஞானத்தைத்திரட்டி, (யோக சக்தியைத் திரட்டி,) அதன் பலனைக் கொண்டு உலகுக்கு நன்மை செய்ய முற்படுகின்றான். பௌதிக பிரம்மசாரி அவ்வாறின்றி பொதுச் சொத்தாகிய கிருஹ்ய தர்மத்தைக் காப்பாற்றி, அதன் மூலமாய் உலகக்ஷேமத்தை உண்டாக்குகின்றான். இல்லறமாகிய கிருஹஸ்த ஆச்ரமமே ஏனைய எல்லா ஆச்ரமிகட்கும் எப்போதும் நன்மை பயக்கக்கூடியது. இல்லறத்திற் சிறந்த நல்லறமொன்றில்லை. ஆனால் இல்லறத்தான் அன்புடன், அறத்தைப் பேணி பரோபகார சிந்தனையுடன் பொது நலத்திற்காக வாழ்க்கையை நடாத்தல் வேண்டும். உலகக்ஷேமமே (பல்லுயிர்க்ஷேமமே) அவனுடைய முக்ய லக்ஷ்யமாக இருத்தல் வேண்டும். இப் பெருங் காரியத்தில் ஈடுபடுதற்கு தனக்கு ஓர் துணை வேண்டியுளது. உசிதமான ஒரு துணை வேண்டும். தன்னுடன் சேர்ந்து தர்மானுஷ்டானம் பண்ணக்கூடிய துணை வேண்டும். கொஞ்சமும் பேதமின்றித் தன்னுடனொத்த மனதுடைய துணை வேண்டும். அன்பும் கருணையும் உருவமான துணை வேண்டும். நல்ல இடமாக, தர்மத்துக்கு அநுசரணையாக இருக்கத்தக்க இடமாகப் பார்த்து அத்துணையைக் கிரஹிக்க வேண்டும். அந்தத் துணைதான் பத்தினி. பதியும் பத்தினியும் சேர்ந்து கிருஹ்ய தர்மத்தை அநுஷ்டிக்க வேண்டும்.

விவாஹம்.

அறிவு வந்தபின் செய்யப்படும் முதற்கர்மாவாக, தன் வாழ்க்கையின் முக்ய லக்ஷ்யத்தை நோக்கிச் செல்லும்படி தூய பாதையில்

சேர்க்கக்கூடியதாக, ஒப்பற்ற துணையாயிருந்து என்றென்றும் காப் பாற்றும் இனிய நீதி நெறிகளைப் புகட்டி இறைவ ஞெளியில் ஈடுபடுத் தும் உண்மைகளை உணர்ந்தனுசரிக்கச் செய்யும் வழியிலீடுபடுத்த முதல் தொடக்கமாக இருப்பது புருஷர்களுக்கு உபநயனம். அவ் வாறே ஸ்த்ரீகளுக்கு விவாஹம்.

புருஷன், வேத வித்தாகிய குருவை அடைகிறான். ஸ்த்ரீ, பதியாகிய குருவை அடைகிறாள். புருஷன் குருவைக் கடவுளெனக் கொள்ளவேண்டும். ஸ்த்ரீ பதியையே கடவுளெனக் கொள்ள வேண்டும். புருஷன் வித்யாகுரு, ஞானகுரு என்ற இரு குருமார் களின் அடைய வழி உண்டு. ஆனால், ஸ்த்ரீக்கு வித்தியாகுரு, ஞானகுரு, கடவுள் எல்லாம் பதியே. பதியைத் தவிர வேறு எந்த விதமான குருவும் கடவுளும் ஸ்த்ரீக்குக் கிடையாது. பதிபக்திதான் எல்லாவற்றிலும் சிரேஷ்டம். அதனால் கன்னிகையின் மனதை அர்ப் பணம் பண்ணுவதற்குத் தக்க இடம் எதுவோ, அதுதான் பதி உருவம்; பதி உயிர்; பதி உள்ளம். இருவருமாகச் சேர்ந்து உலகத் திற்கு நல்ல பிரஜைகளை உண்டாக்க வேண்டும். ஏகபத்னீ விரதம் என்பது புருஷன் அநுசரிக்கவேண்டிய விரதம். அதாவது அவன் உள்ளத்தில் ஒரு பெண்மணிக்குத்தான் இடமுண்டு. ஸ்த்ரீ பதிவிர தையாயிருத்தல்வேண்டும். பதி சம்பந்தமான விரதமாவது, பதியைத் தெய்வமாக எண்ணி, தன் மனதை அர்ப்பணம் பண்ணிவிட்டு, தனக் கென்று, ஒரு மனதோ, எண்ணமோ, செயலோ, முயற்சியோ எதுவு மின்றி, யாவும் பதிக்கென்றுகொண்டு, பதியின் ஆக்ஞைப்படி, குறிப் பறிந் தொழுகிக் கொழுநனின் மனத்தைத் திருப்தி செய்விப்பதே யாகும். பதிவிரதம் என்றால் பதிக்குத் துரோகம் பண்ணுமலிருப்பது என்று மாத்திரம் அர்த்தமில்லை. பரமேஸ்வரனே நம் பதி என்று கொண்டு மனப்பூர்வமான பக்தி ஸ்ரத்தையுடன் யாவும் அப்பதியின் திருவுளப்படி நடத்தி வழிபட்டு வணங்கிப் பூஜித்துவருதல் வேண்டும். 'இவன் பணக்காரன்;' 'அழகாயிருக்கிறான்;' 'நன்றாய் சம்பா திக்கிறான்;' 'நன்றாக உடை அணிகிறான்;' 'பலரையும் வெல்லும் வீரன்;' என்பதற்காக பிரியம் காட்டுவது பதிவிரதம் ஆகாது. தன் மனது என்பதே ஒன்றின்றி, சகலமும் பதியினிடத்தில் அர்ப்பணம் செய்துவிட்டு பதியின் கட்டளை வழி நிற்றலே பாதி விர்த்தியம்,

பதிவிரதை யென்று பிறர் மெச்சிக்கொள்ளும்படி நடப்பது பாதிவிர்த்தியமன்று. உண்மையான தூயசிந்தையோடு, திரிகரண சுத்தியோடு ஒப்புயர்வற்ற பக்தியோடு அநுஷ்டிக்கப்படுவது. பெண்களுக்கு 'இவன் பணக்காரன்' 'இவன் அழகா யிருக்கிறான்' என்பன முதலிய எண்ணங்கள் தோன்றுத முன்பே, அப் பெண்ணின் மனது அர்ப்பணமாவதற்கு ஒரு இடம் கிடைத்துவிடவேண்டும். அத்தகைய இடத்தைத் தேடி வைக்க வேண்டியது பெற்றோர்களின் கடமை. ஆணுக்குக் குருவையும், பெண்ணுக்குப் பதியையும் தேடி வைக்க வேண்டியவர்கள் தாய் தந்தையர்கள். தகுந்த இடமாகத் தேடித் தான்வேண்டும். உபநயனம் செய்துவைக்கும் குரு, வேதாப்யாசம், ஞானப்யாசம் முதலியன பயிற்றும் குரு, கேவலம் பொருளாசைக் கின்றி, சிஷ்யன் நன்கு கற்று உண்மை லக்ஷியத்தை அடையும்படி சத்யமாகப் பாடுபட்டுக் கற்பிக்கத்தக்கவராக இருத்தல் வேண்டும். அவ்வாறே பெண்ணுக்கு வாய்க்கும் புருஷனும், கேவலம் மனைவியின் சரீர அழகுக்காகவும், அல்லது காம இச்சைக்காகவும், வரதட்சிணைக்காகவும், இதுபோன்ற பல ஸ்தூல சுகங்களுக்காகவும், பிரியம் வைப்பவனாயிருத்தல் கூடாது. தன்னையே கடவுளெனக் கொண்டு வழிபடும் பத்தினியின் சகல சுகங்களையும், ஆத்ம வுணர்ச்சியையும், அதாவது இகம், பரம் ஆகிய இரு லாபங்களையும் அநுசரித்து நடத்தி, தன் வாழ்க்கையுடன் அவள் வாழ்க்கையையும் தூய்மைப் படுத்தல் வேண்டும். அதற்கேற்ற புருஷனாக இருத்தல் வேண்டும்.

மனோபாவத்திற்குத் தக்க நற்குணங்களாகிய துறந்தார்ப் பேணல், விருந்தயர்தல், வறியார் மாட்டருளுடைமை முதலியனவும், வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்களறிந்து கடைப்பிடித்தல், சமையல்தொழில் வன்மை, ஒப்புரவு செய்தல், வருவாய்க்குத் தக்கவாறு வாழ்க்கை நடத்தல் வேண்டுமென்று முதலியறிந்து அதற்கியைய அழித்தல் முதலான நற்செய்கைகளும் ஆகிய மனோமாட்சி ஒருவனது இல்லாளிடத்தில்லையாயின், அவ்வில்வாழ்க்கை செல்வத்தானும், அல்லது வேறெவ்வகையானும் எத்தனை மாட்சிமை யுடைத்தாயினும் அஃதுடைத்தன்று. இல்லவள் நன்மாண்பினளாயின் யாவும் உடைத்தே. "கற்பு" என்னுங் கலங்கா நிலைமை யுண்டாகப்பெற்ற இல்லாளைப்போல,ஒருவனுக்கு அறம்முதலிய மூன்றற்கும் ஏதுவாவன பிற எவையும் இல. மகளிர் தமது நிறையால் தம்மைக் காத்தலே தலை.

மகளிரைத் தலைவர் சிறையாற் காக்குங் காவல் பயனின்று. தற்கொண்டாற் பேணிய மகளிர் புத்தேளிரால் பேணப்படுவர். தகைசான்ற சொற்காக்கும் மனையாளை யடையாதார்க்கு, தம்மை இகழ்ந்துரைக்கும் பகைவர்முன் சிங்க ஏறுபோல் நடக்கும் பெருமித நடை இல்லை. மனையாளது நற்குண நற்செய்கைகளே ஒருவற்கு மங்களமாவது. அத்தகைய வாழ்க்கைத் துணைக்கு ஆவதோர் அணி நலம் மகப்பேறுகும்.

தெய்வபலத்தால் வாழ்க்கை செவ்வனே நடைபெற வேண்டும். தெய்வாராதனை முக்யம். தெய்வத்தை அக்னி ரூபமாக வழிபடுதல் நன்று. பரமேஸ்வரன் அக்னி ஸ்வரூபம். ஒப்பற்ற பேரின்ப சுகத்தைத் தருவதும் ஞானக்கனியே. அக்னியே ப்ரம்மம் என்று வேதம் கூறுகிறது. ப்ரம்மமே எங்கும் நிறைந்தது; அகண்டானந்த வடிவமானது; ஜோதிமயம்; தேஜோரூபம்; அதுதான் ஜோதிர் லிங்கம். பிரம்மா, விஷ்ணு, ருத்ர ஸ்வரூபம் அதுவே. காயத்ரியிலும், சூரியனிலும், அக்னியிலும் பரமேஸ்வர ப்ரஸன்னம் நிறைந்துளது. திருவண்ணாமலையிலும் (அருணாசல க்ஷேத்திரத்தில்) இன்னும்பல இடங்களிலும் பரமேஸ்வரன் அக்னி வடிவாக(ஜோதிவடிவாக) யாவராலும் ஆராதிக்கப்படுகிறார். ஜோதியே சக்தியாகிய எனது சொரூபம். தீபம் ஏற்றிவைத்து அம்பிகை என்றும், லக்ஷ்மீ என்றும் வணக்கம் புரிவார்கள். தீபம் ஏற்றும் அகலிலும், எதிரில் எனது பிம்பம் காமாக்ஷி வடிவமாக அமைக்கப்பட்டுளது. நானும் பரமேஸ்வரனும் வேறல்ல. இருவரும் ஒரே வடிவுதான். அதுதான் ப்ரம்ம ஸ்வரூபம். அதுதான் நித்யானந்த ஜோதி. அதைத்தான் அக்னியாக வழிபடல் வேண்டும். அக்னியை மந்த்ர பூர்வமாக வழிபடல் வேண்டும். அவ்வாறு வழிபட்டால் இகபரசுகங்கள் யாவும் கிடைக்கும். எவ்வித துன்பங்களும், பயமும், பூத, ப்ரேத, பைசாசாதிகளின் இடையூறுகளும் எவையும் அணுகா.

விவாஹத்தில் அக்னி சம்பந்தம் ஏற்படுகிறது. ப்ரம்மசாரியாயிருக்கையில் சமிதா தானம் பண்ணவேண்டும். ஸ்வயாகி அக்னியை ஆத்மாவில் வைத்துக்கொள்ளுகிறான். அவ்வாறு ஆத்மாவில் அக்னி (சம்பந்தப்படுகிற) ப்ரவேசமாகிறவரையில், அதாவது மூலாக்னி மூட்டி ஞானமார்க்கத்தில் ஈடுபடுகிற வரையில் வெளியில் இந்த

அக்னியை ஒம்புதல் வேண்டும். விவாஹ சமயத்தில் ஔபாஸனக்னி ஏற்படுகிறது. அதனை தம்பதிகள் இருவரும் என்றும் காத்து, ஆராதித்து வருதல் வேண்டும். கல்ப ஸூத்திரங்களில் கிருஹ நிர்மாணம் சொல்லுகையில் ஔபாஸனத்திற்கு இடம் சொல்லப்பட்டுளது. அவ்வாறு அதற்கென அமைந்த இடத்தில் அந்த ஔபாஸனக்னியை வைத்துப் போற்றிவருதல் வேண்டும். புருஷன் வெளிச்சென்றுள்ள தினங்களில் ஸ்த்ரீ ஔபாஸனம் பண்ணலாம். சுக்ல ப்ரதமையிலும், கிருஷ்ண ப்ரதமையிலும் ஸ்தாலீ பாகம் பண்ணவேண்டும். அது ஸ்த்ரீ இல்லாமல் புருஷன் மாத்திரம் பண்ணக்கூடாது. இருவரு மிருந்துதான் செய்யவேண்டும். வருணச்சிரமத்தை அனுசரித்து கிருஹ நிர்மாணம் சொல்லப்பட்டுள்ளதால், இன்ன இன்ன துவாரத்தில் வைசுவதேவபலி செய்யவேண்டுமென்று அதில் சொல்லப்பட்டுளது. அதன்படி செய்தல்வேண்டும்.

ஒவ்வொரு கர்மாவும் அதற்காக ஏற்பட்டுள்ள மந்த்ரங்களைச் சொல்லி, நிரிகரண சுத்தியாய் செய்யப்பட வேண்டும். எல்லாக் கர்மாக்களுக்கும் மந்த்ரங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு சத் கர்மாவினாலும் தனக்கோ, பிறருக்கோ, உலகிற்கோ நன்மை உண்டு. ஆனால் அவ்வவற்றிற்கு அவ்வவையும் பயனுமாறு செய்வித்தல் வேண்டும்.

விவாஹம் எவ்வளவு குறைந்த பொருட் செலவில் செய்யப்பட்டாலும் அதனால் தப்பு இல்லை. ஆனால் மந்த்ர லோபம், கிரியா லோபம் சற்றும் கூடாது. கலியாண க்ரியைகளைச் சரிவரச்செய்தல் வேண்டும். எல்லா க்ரியாநுஷ்டானங்களும் ஸ்ரேயஸைத்தருவனவே. சம்பத்தை வளர்ப்பனவே. வறுமையை வளர்ப்பனவன்று. ஆகலால் ஒவ்வொரு கர்மாவும் விதிப்படி செவ்வனே நடத்தப்பட வேண்டும். பிராசீனமான தர்மத்தை விடாது ஆசரித்து வந்தால் தர்ப்பலம் உண்டாகாது. வியாதி வராது. வறுமை வராது. ஆயுளும், ஆரோக்யமும், லக்ஷ்மீகரமும், சமஸ்த சௌபாக்யங்களும், சித்த சுத்தியும், பரிபூர்ண சாந்தியும், ஆத்ம ஞானமும் அனைத்தும் எய்தலாம். இகம், பரம் ஆகிய இருவகைச் சுகங்களையும் இனிதடைந்து இன்புறலாம்.

இப்போது ஏன் இவைகளைப்பற்றி இவ்வளவு வற்புறுத்திக் கூறுகின்றேனெனில், இனிவருங்காலத்தில் சில நூறுண்டுகளுக்குப். பின், உலகில் கலியின் மகத்வத்தால், ஆசாரசீலம் குறையும். பிராசீன தர்மாசரணை மறையும், வேதாத்யயனம் முதலியன நடைபெறுவது குறையும் டாம்பீகமும், படாடோபமும் வளரும். பிறர்மெச்சுவதற் காகச் சிலர் உள்ளன்பின்றி வெளிவேஷத்திற்காக ஒரு சில கர்மங் களைப் புரிவர். புருஷர்கள் பக்தி, ஞானம், சத்யம், நீதி, ஒழுக்கம் முதலியவற்றை அநேகமாய் மறந்து விடுவர். பலம் வாய்ந்த புருஷர் கள் பிறப்பதே அரிதாகும். ஸ்த்ரீகள் மாத்திரம் சிற்சில தர்மங்களை விடாது ஆசரிப்பர். ஸ்வல்பப் பழக்கமாவது அவர்களிடமிருக்கும். அதனால் உலகில் ஸ்த்ரீ ப்ரஜைகள் அதிகமாக உற்பத்தியாவர். வர தக்ஷிணைத் தொந்தரவு முதலான பல துன்பங்கள் வந்து சேரும். ஆனால் அவ்வப்போது பல மஹான்கள் தோன்றி, தர்மத்தை நிலைநாட்டப் பெரிதும் பாடுபடுவார்கள். அவர்களால்தான் கொஞ்சபாகமாவது அந்தத் தருமத்தின் வாசனை வீசிக்கொண்டிருக்கும்.

ஜனங்கள் பொருட் செலவு அதிகம் செய்வார்கள். ஆனால் வைதீகத்தைக் காப்பாற்ற மாட்டார்கள். கடைசியில் செலவுகளைக் குறைக்க சரியான வழியையறிய இயலாமல், கர்மாக்களைக் குறைத் துக்கொள்ள முயல்வர். அரை நாளில் விவாஹத்தை முடித்துக்கொள்ள முயல்வர். அவர்கள் செலவுகளைக் குறைத்துக்கொண்டு, விசேஷ வைபவங்கள் அனைத்தும் ஒரே தினத்தில் வைத்துக்கொண்டாலும் கிரியைகளை (கர்மாக்களை) மந்த்ரலோபமின்றி நடாத்தி, மிகுதியை மாப்பிள்ளையின் அகத்திலோ, அல்லது மாப்பிள்ளை வீட்டார் இறங்கி யுள்ள விடுதியிலோ, இன்னும் இருதினங்கள் மாப்பிள்ளையையும் பெண்ணையும் ஆசார்யரையும், இன்னும் வேண்டிய காரியங்களை உதவி யாக இருந்து நடத்த இரண்டொரு முக்யஸ்தர்களையும் மாத்திரமாவது தங்கச்செய்து, ஔபாசனாதி கிரியைகளை நன்கு நிறைவேற்றிக் கொள்வதே நலம். உயிரினும் சிறந்ததாக ஒப்பப்படுவன ஸம்ஸ்காரங்கள்.

ஸம்ஸ்காரங்களால் எவ்வுலகிலிருப்பவர்களையும் திருப்தி செய் யலாம். நரகலோகத்தைத் தவிர மற்றை லோகங்களில் பிதருக்கள் இருந்தால் அமாவாசைத் தர்ப்பணபலன் அவர்களுக்குச் சேரும்.

நரகலோகத்தில் இருப்பவர்கட்குச் சேரா. அவர்களுக்குச் சேரக் கூடியவை அழுக்கு வேஷ்டியில் உள்ள ஜலம், தலைமயிர் ஜலம், கை அலம்பும் ஜலம் முதலியன. இவைகள் அவர்களே உத்தேசித்துக் கொடுக்கப்படுமானால் அவர்களுக்குச்சேரும். அதனால்தான் வேஷ்டி பிழியவும், சிகோதகம் பிழியவும் மந்த்ரங்கள் ஏற்பட்டுள்ளன. போஜனகாலத்தில் உத்தராபோசனத்துக்குப்பின் மீதியுள்ள நீரை 'பலகோடிகாலமாய் ரௌரவாதிநரகங்களில் கஷ்டப்பட்டுக்கொண்டு உள்ளார்களே, அவர்களுக்கு இந்த தீர்த்தத்தைக் கொடுக்கிறேன்; அவர்களுக்குள்ள அக்ஷயமான தாகம் தீரட்டும், என்று ("ரௌரவே அபுண்ய நிஷேயே அர்த்தினம் உதகம் தத்தம்" என்னும்) மந்த்ரத்தைச் சொல்லி இலைக்கு வலது புறத்தில் விட்டுவிட வேண்டும்.

பாரத நாட்டில் ஆகார நியமம் முதற்கொண்டு ஆரோக்யம், ஆயுர்வேதம், இந்திரிய ஒழுக்கம், கரண ஒழுக்கம், ஞான வளர்ச்சி முதலியவற்றை ஒட்டி ஏற்படுத்தப்பட்டுள்ளன. தேகசுத்திக்கு ஸௌசமும், ஆசாரமும், வாக்கு சுத்திக்கு அத்யயனமும், சித்த சுத்திக்கு பக்தியும் அவசியமாகும். ஸ்நானம், ஸந்த்யாவந்தனம், வேதாத்யயனம், தேவபூஜை, அதிதியாராதனம், ப்ரம்மயஜ்ஞம், ஔபாஸனம், வைஸ்வதேவம், முதலியவற்றை அவசியம் கடைப் பிடித்துக்காத்தல் வேண்டும்.

ஔபாஸனம் விவாஹ காலத்தில் ஆரம்பித்து, ஆயுள்பரியந்தம் காப்பாற்றப்பட வேண்டும். மந்த்ரவீர்யம் குறையாமலிருப்பதற் காக பக்ஷத்திற் கொருமுறை ஸ்தாலீபாகம் பண்ணவேண்டும். வரு ஷத்தில் ஆறு கர்மாக்கள் ஔபாசனக்ரியையில் செய்யப்பட வேண்டும். சித்திரை மாதத்தில் பரமேஸ்வரனே உத்தேசித்து ஈசானபலி கொடுக்க வேண்டும். ஏனைய காலங்களில் தேவதைகளின் மூலமாக பரமேஸ் வரனுக்கு ப்ரீதிபண்ணுதல் வேண்டும். ஆஸ்வயுஜ மாசத்தில் விளைந்து வரும் குறுவை நெல்லை அவ்வக்னியில் முதலில் ஆஹுதி பண்ணுவ தாகிய ஆஸ்வயுஜீ என்பதை ஆஸ்வயுஜ மாசத்தில் செய்யவேண்டும். சிராவண மாசத்தில் ஸர்ப்பங்களே உத்தேசித்துப் புற்றுக்களில் பலி போட வேண்டும். சம்பாநெல் வருங்காலத்தில் (மார்கழி மாசத்தில்) ஆக்ரஹாயணம் பண்ணவேண்டும்.

ஒரு பிள்ளை பிறந்தபின், மயிர் நரைப்பதற்கு முன், அக்னி ஹோத்ரம் பண்ணவேண்டும். பிள்ளை பிறக்காவிட்டால் அக்னி ஹோத்ரம் கிடையாது. அக்னி ஹோத்ரத்தின் ஆரம்பம் அக்னியாதானம் எனப்படும். வஸந்த காலத்தில் செய்யப்படும் விவாஹத்தால் ஔபாஸன சித்தியும், அக்னியாதானத்தால் அக்னிஹோத்ர சித்தியும், உண்டாகும். ஸ்தாலீபாகத்தைப்போல பசுத்திற்கொருமுறை தர்சபூர்ணிமாஸ இஷ்டி செய்யவேண்டும்.

ஔபாஸன அக்னி அணைந்தால் அக்னிசந்தானம் செய்ய வேண்டும். அக்னி ஹோத்ராக்னியையும் புனராதானம் பண்ணலாம். அதற்காக வருஷத்திற்கொருமுறை பசுபந்தம் பண்ணவேண்டும். மார்கழி மாதம் ஆறவனீயம், கார்ஹபத்யம், தக்ஷிணாக்னி எனும் திரேதாக்னி. பிறகு சாதுர்மாஸ்யம் செய்யவேண்டும். கிருஹஸ்தனுக்கு அது ஒரு யாகம். ஸந்யாசிக்கும் 'சாதுர்மாஸ்யம்' என்று ஒன்று உண்டு. சாதுர்மாஸ்யம், ஸௌத்ராமணி, புனராதானம், முதலியன பலமுறையும் பண்ணலாம். ஆத்மஜ்ஞான அங்கம் யஜ்ஞம்.

வேதத்தில் சுமார் 400 வகை யாகங்கள் கூறப்பட்டுள. ஸோமயாகங்கள் 7. முதலாவது அக்னிஷ்டோமம். அதைச் செய்தவர்கள் சோமயாஜிகள். கடைசியில் இருப்பது வாஜபேயம். அதைச் செய்தவர்கள் 'வாஜபேயர்கள்' வாஜபேயம் பண்ணினவர்களுக்கு அவபிருத ஸ்நான காலத்தில் அரசர்கள் சுவேதச் சத்ரம் பிடிக்க வேண்டும். ஸோமயாகம் பண்ணும்போது சோமலதைச் சாற்றைப் பிழிந்து ஸோமபானம் பண்ணுவர். ஸோமயாகம் மூத்தவன்தான் செய்யலாம். அக்னிஷ்டோமத்திற்கே "ஸோமயாகம்" என்று பெயர். அதுதான் எல்லாவற்றிற்கும் பிரகிருதி. ஜோதிஷ்டோமம் ஜன்மாவில் ஒரு தடவை பண்ணவேண்டும்.

யஜ்ஞம், உபவாசம், தானம், தபஸ் இவை சித்த சுத்தியை உண்டாக்கி மோக்ஷமடையும் மார்க்கத்தில் ஈடுபடுத்துகின்றன. தாயார் வயிற்றில் எந்த தினத்தில் தேக காரணமான பதார்த்தம் இருக்க ஆரம்பித்ததோ, அதுமுதல் தேகம் அக்னிக்கு ஆஹுதியாகிற வரையில் ஸம்ஸ்காரங்கள் உண்டு. கர்ப்பாதான (நிஷேகமுகூர்த்த)மும் அக்னிசாக்ஷியாகச் செய்யப்படுகிறது. ஸ்மாசன கர்மாவும் அக்னி

சாக்ஷியாகச் செய்யப்படுகிறது. கர்ப்பத்துள்ளிருக்கையிலும், சிறு பிராயத்திலும், தாய் தந்தையர்களாலும், பிரம்மசரியாச்சிரமத்தில் சமிதா தானத்தாலும், கிருஹஸ்த ஆசிரமத்தில் ஔபாசனாதிகளாலும், வானப்ரஸ்தத்தில் கஷ்டாக்னி யோம்பலாலும், அக்னி காக்கப்படுகிறது. சந்நியாசிக்கு ஞானாக்னி யுளதால் இவ்வக்னி தேவையில்லை. சந்நியாசியின் தேகத்திற்கு அக்னி ஸம்ஸ்காரம் கிடையாது. அவனது சரீரத்தை நான்கு கூறுக வெட்டிக் காட்டில் நாலு திக்குகளில் போட்டுவிட வேண்டும். அது அங்குள்ள பிராணிகளுக்கு உணவாகும். அப்படிச்செய்யாவிட்டால், பூமியில் புதைத்து விட்டு, மேலே வில்வம் அரசு முதலியமரங்களை வைத்தல் வேண்டும். அப்போது அது, அம்மரம் செடிகளுக்கு எருவாக ஆகிறது. சந்நியாசம் ஏற்காதோர், நெய்யைப்போட்டு (ஹோம) திரவ்வியமாகக் காத்து வந்த இச்சரீரத்தை, கடைசியில் தேவதைகளுக்கு ஆஹுதியாக ஹோமம் செய்துவிட வேண்டும். (அதுதான் ஸ்மசான கர்மா எனப்படுவது).

மூன்று தலைமுறைகள் கர்மானுஷ்டானம் தவறுமானால் ஜாதிப் பிரஷ்டம் செய்ய வேண்டியுளது. மஹரிஷிகளால் ஏற்படுத்தப்பட்டு எண்ணிறந்த காலமாக நடந்துவரும் அநுஷ்டானங்களைத் தனது காலத்தில் கபளீகரம் பண்ணிவிட்டு பின் சந்ததிகளைத் திகைக்க வைப்பதற்கு ஒருவரும் எக்காரணத்தைக் கொண்டும் ஈடுபடலாகாது.

சகல ஸம்ஸ்காரங்களுக்கும் ஆதாரம் வேதம். தர்ம சூத்ரங்களில் நாற்பது ஸம்ஸ்காரங்களும் எட்டு ஆத்ம குணங்களும் சொல்லப்படுகின்றன. ஸம்ஸ்காரங்கள் எல்லாம் இருந்தாலும், ஆத்ம குணங்கள் இன்றேல் பிரயோஜனமில்லை. அவையும் இருந்தால் உத்கிருஷ்டம். எல்லாக் கர்மாக்களும் "பரமேஸ்வர ப்ரீத்யர்த்தம்" என்ற சங்கல்பத்துடன் செய்யப்படவேண்டும். யாவும் பரமேஸ்வரனுக்கே அர்ப்பணம் செய்யப்படவேண்டும்.

அரசன் கடமை.

நற்குண நற்செய்கைகளே உலகபாலருருவாய் நின்று உலகத்தைக் காக்கக்கூடியவை. அதனால், அவ்வரசன் (அறநூலும், நீதிநூலும், யானை, குதிரை, தேர், படைக்கலமென்றிவற்றின் நூல்களும் பயின்று) கல்வியறிவும், (தூயநூற் பொருள்களைக் கற்றறிந்தார் கூறக்கேட்ட)

கேள்வி யறிவுமேயன்றி, உண்மையறிவும் உடையவனுயிருத்தல் வேண்டும். காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதமெனும் அறுகுற்றங்களையும் கடிந்தவனுயிருத்தல் வேண்டும். நல்ல தன் நலனும் தீயதன் தீமையும் இல்லை யென்போரும், விடரும், தூர்த்தரும், நடருமுள்ளிட்ட குழுவைச்சேரா திருத்தல் வேண்டும். தீநெறி விலக்கி, நன்னெறிச் செலுத்தும் போறிவுடையாரையும், அரசர்க்கும், அரசுக்கும், அங்கங்கட்கும் மாறுடத்தெய்வக் குற்றங்கள் வாராமற் காத்தற்குரிய அமைச்சராதியரையும் துணையாகக்கொள்ளல்வேண்டும். தான்செய்யும் வினைகளை ஆராய்ந்து செய்யும்திறம் வேண்டும். வலிமை, காலம், இடம் ஆகியவைகளை அறிந்து காரியம் செய்தல் வேண்டும். அமைச்சர் முதலாயினோரை பிறப்பு, குணம், அறிவு என்பனவற்றையும், செயலையும், காட்சி கருத்து ஆகமமென்னும் அளவைகளால் ஆராய்ந்து தெளிதல் வேண்டும். அவ்வாறு தெளியப்பட்டாரை அவர் செய்யவல்ல வினைகளை அறிந்து அவற்றின்கண்ணே ஆளுந்திறம் வேண்டும். தன் கிளைஞரையும் ஆதரித்தல் வேண்டும். உருவும் திருவும் ஆற்றலும் சால அடைந்திருத்தல் வேண்டும். தற்காத்தல், பகையழித்தல் முதலியவற்றில் சோர்வின்மை வேண்டும். அரசு செய்யப்படும் முறை, செவ்விய கோல்போல் ஒருபால் கோடாமை வேண்டும்; அதாவது செங்கோன்மை வேண்டும். எக்காரணத்தைப் பற்றியும் கொடுமை செய்தல் கூடாது. குடிகளஞ்சுமாறும், மந்திரி முதலாரைஞ்சுமாறும், தானஞ்சுமாறும் எத்தொழிலும் செய்தல் கூடாது. சிறந்த கண்ணோட்டம் உடையனுயிருத்தல் வேண்டும். பகை, அயல், நட்பு என்னும் மூன்று திறத்தார் மாட்டும் நிகழ்ந்தன அறிதற்கு ஒற்றரை ஆளுதல் வேண்டும். கருதிய செய்யுங்கால் சற்றேனும் சோம்பலின்றி (மனமெலிவின்றி), வினையின்கண் இடைவிடாத ஊக்கமுடைமை வேண்டும். அவ்வாறு வினைக்கண் முயலுங்கால், தெய்வத்தாலாவது, பொருளின்மையாலாவது, மெய்வருத்தத்தாலாவது தனக்கிடுக்கண்வந்துழி, அதற்கு மனங்கலங்காமை வேண்டும். எல்லா அங்கங்களையும் மாசற்றனவாகக் கொண்டிருத்தல் வேண்டும். தன்னுயிர் போலவே மன்னுயிரையும் காத்தல்வேண்டும். நாட்டிலுள்ள சகல உயிர்க்கும், தன்னுலும், தன் பரிஜனத்தாலும், தீய பகைவர்களாலும், கள்வர்களாலும், ஏனைய உயிர்களாலும் எவ்வித தீங்கும் நேராவண்ணம் பாதுகாத்தல் வேண்டும். சத்யத்தைக் கடைப்பிடித்து, தர்ம ராஜ்யத்தை நடாத்துதல் வேண்டும்.

இளைஞர்கள் கடமை.

இளைஞர்கட்கு இன்றியமையாதன பல உள. கல்வி, (தூய கல்வி, அறிவுவளர்ச்சியை ஊட்டக்கூடிய கல்வி, உலகியற் கல்வி, பண்டைக் கல்வி, பலமொழிக் கல்வி, அரசியற் கல்வி, வேளாண்மைக் கல்வி, காவியக் கல்வி, ஓவியக் கல்வி, கைத் தொழிற் கல்வி, சங்கீதக் கல்வி, பல தொழிற் கல்வி, வாணிபக் கல்வி, பக்திக் கல்வி, தெய்வீகக் கல்வி, யோகக் கல்வி, ஆன்மக் கல்வி, ஞானக் கல்வி) சிறந்த கேள்வி, சாதுசங்கப் பழக்கம் இவை முதலி யன மிகவும் முக்யம். மாசிலா நெஞ்சம் வேண்டும். மனம், வாக்கு, செயல் மூன்றும் தூயவாயிருத்தல் வேண்டும். நல்ல ஒழுக்கம்வேண் டும். சீரிய அன்பையும் அறத்தையும் உயிரினும் பெரிதாய் ஓம்புதல் வேண்டும். தினந்தவிர்ந்து, சாந்தமாயிருத்தல் வேண்டும். அடக்க மும், பணிவும் அஹிம்ஸையும் வேண்டும். சுத்தவீரமும், தீர தைர்ய மும், மகாபராக்ரமமும், திடவைராக்யமும், உறுதியும், அஞ்சாமையும், துணிவுடைமையும், பொறையும், புகழும் பூஷணங்களாய்க் கொண் டிருத்தல் வேண்டும். நியாய வழியிற் பொருள் ஈட்டி, விழுமிய துறையில் செலவு செய்து, நற் கீர்த்தி எய்தவேண்டும். சேவையும் தியாகமும் சிறந்ததென்றெண்ணி ஈடுபடுதல் வேண்டும். எதையும் பிறரிடம் இரவாமை வேண்டும். பிறர் செய்ந்நன்றியை மறவாமை வேண்டும். விடாமுயற்சியும் சோம்பலின்மையும் மிகவும் அவசியம். மாதா பிதா குரு வாக்யபரிபாலனம், தர்ம பரிபாலனம், சத்ய பரிபா லனம், சற்குண பரிபாலனம், தூய அநுஷ்டானம், ஆசாரம், இந்திரிய மடக்கல், விசால புத்திபுடைமை, பரந்த நோக்கமுடைமை, நிஷ்காம்ய கர்மம், தெய்வபக்தி, சன்மார்க்கநிலை, யோகசாதனம், ஆத்ம ஞான சாதனம், பேரின்ப விழைவு முதலிய அனைத்தும் வாழ்க்கையைச் செம்மைப்படுத்தக்கூடியன. வாழ்வை உண்மையான மனித வாழ்வாகச் செய்யக்கூடியன; ஏன்? அமரத் தன்மையையே அடைய வழி காட்டக்கூடியன.

உலகில் தோன்றியது, உண்டுடுத்துறங்கி, ஒன்று பலவாக ஜனத்தொகையைப் பெருக்கி, ஒழிந்து மடிவதற்கன்று. திரிகரணங் களாலும் பரோபகாரம் செய்ய; சமூகத் தொண்டுபுரிய; தேசத் தொண்டு செய்ய; உலக சேவைகள் ஆற்ற; அருட்பணி செய்ய;

ஆண்டவன் அடித் தொண்டு செய்ய; அருளறிவுப் பெருக்கை அறிந்து வழிபட்டுய்ய; அதற்கேற்ற மார்க்கங்களைக் காண; பல உயிர்களும் இன்பமடைவதற்குத் தகுந்த மார்க்கங்களில் ஈடுபட்டு உழைக்க; தான் அநுபவிக்கும் அற்புதச் சுகத்தை அனைவர்க்கும் உரியதாகப் பங்கிட்டுத்தந்து, பலரோடும் கலந்து உண்டு திளைத்து, ஒப்பிலா ஆனந்தமெய்தி, உயர் பரம்பொருளை உத்தம மகிழ்வோடேத்திப் பரவ. இவையெல்லாம் உணர்ந்து அருட்பணி புரிய அவாவுறுகிறவனே மனிதன். அவனே மனித தேகம் எடுத்ததனாலான பயனை அடைவான்.

மாதர்கள் கடமை.

பெண்களால்தான் சகல தர்மங்களும் காப்பாற்றப்படல் வேண்டும். பெண்களால்தான் ஒவ்வோர் வீடும் புனிதமுறுகிறது. பெண்கள் தான் உலகை ஓம்புதல் வேண்டும். பெண்களால்தான் உலகில் சுபிக்ஷம் ஓங்குதல் வேண்டும். பெண்களுக்கு இன்றியமையா அணிகலன் கற்பு ஆகும். அதுவே எவ்வுலகுக்கும் இன்பம் ஊட்டும் மருந்து. அதுவே சகல சௌபாக்யங்களையும் நல்கும் கற்பகத்தரு. அதுவே யோகக்கனல். அதுவே வீரசக்தியின் சூலாயுதத்தினும் கூரியபடை. அதுவே துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனத்தை நடாத்தக் கூடிய அருளரசு. நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு எள்ளும் நான்குமே அவ்வரசுக்குத்தக்க நால்வகைச் சேனை. தூய நெறியில் செல்லும் ஐம்புலனே நல்லமைச்சு. மென்சீரடிகளில் விளங்கி ஒலிசெயும் சிலம்புகளே முரச வாத்யம். தீயன யாவையும் தொலைத்து உலகத்தில் நன்மை தழைக்குமாறு செய்விக்க உதவும் வேற்படையும் வாளும்போல இருப்பன, பலவுயிர்களையும் காப்பாற்றும் பொருட்டுக் கருணையுடன் நோக்கி, ரக்ஷிக்கக்கூடிய (சகோதரபாவமாய் ஆதரிக்கக் கூடிய) திருக்கண்களேயாம். ஜீவதயவே ஓர் வடிவமாய் வந்தாலொப்ப மிளிரும் மதிவதனமே அவ்வரசிற் கணிகலனை சந்திர வட்டக்குடையாம்.

ஆதலால் அவர்கள் முக்யம் கடைப்பிடிக்க வேண்டியது, கடவுளே யென்னக் கணவனைப்பேணல். வணக்கமுடைமை. உபசாரம் புரிதல். மலர்ந்த முகமுடைமை. குளிர்ந்தமொழி கூறல். கனிந்த அன்புடைமை. மரியாதை யுடைமை. கிரமச் செலவு செய்தல்.

தூயவொழுக்கம். வைகறைத்துயிலெழல். ஆடைகள் துவைத்தல். தலை நனைய நீராடல். மஞ்சள் பூச்சு. தோய்த்துலர்த்திய புத்துடை யுடுத்தல். நெற்றிக்கணிதல், (அதாவது திலகந்தரித்தல்) குங்குமதாரணம். கோபூஜை. நாட்டுப் பொருள்களை உபயோகித்தல். கைத்தொழிலை வளர்த்தல், மண்பாண்டங்களை உபயோகித்து ஆரோக்யாபிவிருத்தி செய்தல். புலைசம்பந்தமான மருந்தருந்தாமை. டம்பம் வெறுத்தல். தீயன எதையும் உபயோகியாமை. மாமிமாமார்க் கிதம்புரிதல். எதிர் பேசாமை. கடுஞ்சினமின்மை. வந்தியிலாமை. உண்மைக் காதல். பிறரில் செலாமை. உத்தம பக்தி. கணவனுட னெத்திருந்து, தேச, சமூக, தெய்வப் பணிகளில்நாடுபடல், தன் கணவன் ஊரிலில்லாக் காலத்தில் தன் சரீரத்தை வெகுவாய் அலங்கரித்துக் கொள்ளாமை. தேவாலயம் முதலிய இடங்கட்குச் செல்லுகையில் பக்தி சிரத்தையுடனும், அதற்கேற்ற (அதாவது அடக்கம், பணிவு, பக்தி ஞானம் இவை எற்படத்தக்கவாறு சாமான்ய) உடை, பரிசுத்தமான உடை அணிந்து செல்லல். கணவனோடு செல்லல். சத் சந்தான விருத்தி. குழந்தைகளை நல்ல முறையில் வளர்த்தல். தன்மகன் மஹா வீரபுருஷனாக, வித்வத் சிகாமணியாக, அருட்கவியாக, சிறந்த த்யாகியாக, ஒப்பற்ற ஞானியாக விளங்குமாறு வேண்டல். அவ்வாறு விளங்கக்கண்டு மகிழ்தல். தனக்கென்று ஓர் மனமே இன்றி, அம் மனத்தையும் பதியின்பால் அர்ப்பணம் செய்து அவர் சொல் வழியே சன்மார்க்கமாக ஒழுகல், சத்தியத்தையே கடைப்பிடித்தல், தர்ம மார்க்கத்திலேயே நடத்தல், வீரப்பெண்மணியாக, ஞானதிலகமாகத் தானும் விளங்கி, அவ்வாறு விளங்கத்தக்க பெண்மணிகளை ஈன் றெடுத்து நாட்டுக்கு நன்மையளித்தல். இவை முதலியன பெண்மக் கட்குச் சிறந்த மார்க்கங்கள். பெண்மக்கள் யாவரும் இங்ஙனமாக வாழ்ந்து என்னிடத்தே தாராளமாகப் பக்திசெய்து வழிபட்டு வேண்டிய யாவும் பெற்று உலகத்திற்கு நன்மையளிக்கட்டும்.

பொது நெறிகள்.

சுயநலத்தைக் கருதவேகூடாது; பொதுநலம் பேணுவதே புண்ணியர் தொழிலாம். அடிமை எண்ணம் அருகிலும் வரக்கூடாது. என்றும் சுதந்தரமாக வாழ்தல் வேண்டும். கோழைத்தன்மை சிறிதும் கூடாது; உண்மை வீரமே ஒப்பிலா வெற்றிதரும். பேதப்படுத்தி எவரையும் எதையும் நோக்குதல் தகாது; சமரச நோக்கமே சர்வ

சுகமும் கொடுக்கவல்லது. கோபம் என்பது கொடிதிலும் கொடிது; சாந்த மொன்றே சந்துஷ்டி யீயும். எதிலும் டம்பமும், வீண் பெருமையும் சற்றும் இருக்கக்கூடாது; தத்தம் கடமை எனத் தாம் தாம் தொழில் செய்தல் வேண்டும். என்னல்தான் யாவுமாயிற்று என்று சிறிதும் கர்வம்கொள்ளத் தகாது; அடக்கமாய் யாவும் செய்து, எல்லாம் ஆண்டவனருளால் நடைபெறுகிறது என்பதை உணர்ந்து, அனைத்தையும் ஈஸ்வரார்ப்பணம் செய்தல் வேண்டும். பொய்யெனும் ஒன்றைப் போக்குதல் வேண்டும்; சத்யமே ஜயந்தரும் என்று சாதித்துவரல் வேண்டும். அதர்மச் செயல்களை அகத்திலும் நினைக் கொணாது; தர்ம காரியங்களையே சந்ததமும் புரிதல் வேண்டும். அநியாயப் பாதையில் அடிவைக்க வொண்ணாது; நியாய மார்க்கத்திலேயே நிதமும் நடத்தல் வேண்டும். ஹிம்ஸா மார்க்கத்தை எக் காரணத்திலும் கைக்கொளல் தகாது; அஹிம்ஸா நெறியே அனைத்திலும் சிறந்ததென்று அதன் வழி யொழுகவேண்டும். எவ்வாற்றலும் எவ்வமயத்தும் எவரிடத்தும் விரோதம் பாராட்டல் கூடாது; ஒற்றுமையுடனிருந்து உலகிற்கு நன்மை செயல் வேண்டும். நன்மை தருவன எவற்றிலும் பிற்போக் குற்றிருத்தல் ஆகாது; முன்னேற்ற முறவே முயலுதல் வேண்டும். சோம்பல் என்பதைச் சுத்தமாய்த் தொலைத்தல் வேண்டும். மிகுந்த உற்சாகத்துடன், விடா முயற்சியுடன் நற்பணிகளில் கடைசிவரை பெரிதும் பாடுபட்டு காரியத்தைச் சாதித்தல் வேண்டும். எவ்வகையானும் அவமானம் வரச் சகித்தல் கூடாது; மானத்தைக் காத்தலே மாணுயிர் காத்தலென்று மனந் தனிற்கொண்டு வாழ்ந்திடல் வேண்டும். எதிலும் இகழ்ச்சியெய்துதல் கூடாது. ஒப்பற்ற புகழையே உலகின்கண் நிலைநாட்டுதல் வேண்டும். உலகசுகபோக விஷயங்களில் பேராசையுற்று, அவற்றிலேயே ஓயாது ஈடுபட்டு உழைத்து மனச் சஞ்சலமடைந்துகொண் டிருக்கக்கூடாது; யாவும் அப் பரம்பொருளின் செயல் என்றெண்ணிப் பணிகளனைத்தும் புரிந்து, பலனை பகவதார்ப்பிதம் பண்ணிவிட்டு, தாமரையிலை நீர் போல் உலக விஷயங்களினின்றும் தனித்திருத்தல் வேண்டும். புலன் வழிச்சென்று புவிமிசை யுழன்று போத மிழந்து வருந்துதல் தகாது; இந்திரிய நிக்ரஹத்தைக் கைக்கொண்டு தூயவழியில் வாழ்வினை நடாத்துதல் வேண்டும். மனம்போன போக்கிலெல்லாம் செல்லக்கூடாது; மனக்குரங்கை அடக்கி வாழ்க்கையை அருட்பணியில் ஈடுபடுத்தல் வேண்டும். பலவகைச் சித்திகளை விரும்பி யோகம்செய்தல் கூடாது;

அனைத்திலும் உயர்ந்த ஆன்ம சித்தியாகிய மெய்ஞ் ஞான இன்பத்தில் ஈடுபடுதற்காகவே சிறந்த யோகக் கனலை எழுப்புதல் வேண்டும். அருளறிவுக் கடலில் திளைத்து ஆனந்தித்தவண்ணமாக, அனைத்துலகையும், ரக்ஷிக்கும் வல்லமை பெற்று, எவ்வுயிர்க்கும் இன்பமளித்தற்கெண்ணி முயன்று, அடைந்து, தந்து, பலரும் சுகித்தலைக் கண்டு பரமானந்தமடைதல் வேண்டும்.

கடைசி வார்த்தை.

இதுகாறும் நான் கூறியவற்றுள் அநேகம் நீங்கள் ஏற்கனவே படித்த விஷயங்களே. பெரும்பாலும் நீவிர் அநுஷ்டித்துவரும் அநுஷ்டானங்களே. படிப்பதென்றால் சிறு வயதில் மாத்திரம் படிப்பதன்று. வாலிப காலத்தும், வயது முதிர்ந்தகாலத்தும்கூடப் படித்தல் வேண்டும். படித்தவை அனைத்தையும் மனத்தினி லிருத்துதல் வேண்டும். படித்தவாறு நடக்கப் பழகுதல் வேண்டும். கேவலம் இந்திரியங்களின் வாயிலாகவே சென்றுவிடாமல், பரம பொருளை யடையவேண்டிய சன்மார்க்கத்தைச் சார்வதற் கேற்ற தூய ஒழுக்கத்தைக் கைக்கொள்ள வேண்டும். பிறர் மெச்ச வாழாது, தன் கடமைகளைத் தான் நிறைவேற்றி, சித்த சுத்தியும் மனச் சாந்தியும் எய்தி, அகங்காரமின்றி அடங்கி வாழவேண்டும்.

ஏன் இவ்வாறு பலமுறை வற்புறுத்திக் கூறுகின்றேனென்றால், இன்னும் சில நூற்றாண்டுகளுக்குப் பின், உலகில் வருணசிரம தர்மம் குறைந்து, நீதி குறைந்து, அதர்மம்மேலிட்டு, ஒழுக்கம் குன்றி, ஆசாரம் மறைந்து, வேதாநுஷ்டானங்கள் வெகுவாய்த் தொலைந்து, பலவிதமான பேத பாவனைகள் ஏற்பட்டு ஒருவாறு மாறுதலடையும். ஆனால் ஒரு சிலர் பல இடையூறுகளுக் கிடையும் இவற்றையெல்லாம் விடாது காத்துவருவர். அம் மஹான்களின் தூய எண்ணமும் ஸ்வாசமும் உலகத்தில் ஒரு சிறிது மழையையும் விளைவையும் க்ஷேமத்தையும் கொடுத்துக்கொண்டிருக்கும். இப்படி நடக்கும் காலையில் பல அவதார புருஷர்கள் தோன்றித் தோன்றி மாசினை அகற்றி, அடிக்கடி சிறிது சிறிது ஒளியைப் பரப்புவர். பாமர ஜனங்களின் மனம் கலியின் காரணத்தால் மாறுபட்டிருக்குமாதலால், அவர்கள் மொழிகளை எல்லோரும் ஆதரிக்கமாட்டார்கள். ஒரு சிலரே ஆதரிப்பர். அவர்கள்

தேகம் மறைந்த பின்னர் அவர்களது உத்தம மகிமையை ஒரு சிலர் உணருவர். ஆனல், உலகில் எப்போதும் கூேமம் குறையாதிருக்கவேண்டி, வைசியர்கள் சரியாக இருத்தல் வேண்டும். வைசியத்வம் வைசியர்களிடமிருந்து விலகாதிருத்தல் வேண்டும். வைசியர்கள்தான் உலகை ரகூஷிக்க வேண்டியவர்கள். வைசியர்களாகிய உம்மிடமே காராம்பசுக் கூட்டங்கள் உள்ளன. அஸ்வராசிகள் உள்ளன. தானியங்கள் உள்ளன. எல்லாவித உணவுப் பொருள்கள் உள்ளன. தனராசிகள் உள்ளன. ஸ்வர்ணம், ரத்னம் ஆதிய பலவும் உள்ளன. அஷ்ட ஐஸ்வரியங்களும் உள்ளன. சகல சம்பத்தும் உள்ளன. அக்னி கார்யமும் உளது. தர்மம் உளது. ஆசாரம் உளது. தெய்வபக்தி உளது. பரோபகார சிந்தை உளது. ஞானச் செல்வமும் உளது. உலகத்திற்கு உபகாரம் செய்யவேண்டியவர்கள் நீரே. எந்த வகையில் வேண்டுமானலும் நீவிர் உலகத்திற்கு உபகாரம் செய்ய இயலும்.

'வைசியர்கள் சுகமாய் வாழவேண்டும்! அவர்களுக்காக உலகில் நல்ல மழை பொழியுமாறு தேவர்கள் அனுக்ரஹித்தல் வேண்டும்! விளைவுகள் பெருகவேண்டும்! வைசியர்களின் இல்லங்களில் தன தான்ய சம்பத்துகள் நிறையவேண்டும்! அவர்களால் உலகில் தர்மம் நிலைபெற வேண்டும். அவர்களால் எல்லாவுயிர்களும் கூேம முறவேண்டும்!' என்று சொல்லித்தான் அனுதினமும் அந்தணராதியோரும் வேள்வி காரியங்களைச் செய்கின்றார்கள். ஆகையினல் லோகோபகாரம் செய்வதற்கென்றே ஏற்பட்டுள்ள குலத்தில் நீவிர் பிறந்துள்ளீர்கள். இக் குலத்திற்கு கூேமத்தை உண்டாக்கவே நான் அவதரித்தேன்.

ஆதலால், நீங்களும் உங்கள் சந்ததியாரும் என் துணையைக் கொண்டு எல்லாக் காரியங்களும் செய்து உலகத்திற்கு நன்மை புரியுங்கள்! உலக முழுதும் சௌக்யமாய் வாழ வழி தேடுங்கள்! உணவு, உடை, கல்வி, அறிவு, அனுபவம், பக்தி, யோகம், ஞான சாதனம், நித்ய சுகம் இவற்றை யாவரும் சிரமமின்றி அடைய முயற்சி செய்யுங்கள்! நீங்கள் எக்காலத்தில் எச்சமயத்தில் என்னை நினைத்தாலும் நான் உமக்கு உறுதுணையாயிருந்து எல்லாவித

நன்மைகளையும் செய்துவைக்கின்றேன். எவர்களுள்ளம் மாசற் றிருக்கிறதோ, அங்கே நான் எப்பொழுதும் குடிகொண்டுள்ளேன். ஆதலால் உமது மனத்தை மாசின்றி வைத்துக்கொள்ளுங்கள்.

மனத்தூய்மையே இன்பத்தை நல்கும். ஞானத்தை நல்கும். ஞானமற்ற பாண்டித்யம் (புஸ்தகப் படிப்பு) பயன் தராது. 'ஞானி' என்று தன்னை ஒருவன் நினைத்துக்கொண்டாலும், 'நான் ஞானி' என்று சொல்லிவிட்டாலும், அவன் ஞானியாய்விட மாட்டான். எவனுடைய ஹ்ருதயத்தில் இருக்கும் எண்ணங்கள் எரிக்கப் பட்டனவோ, எந்த ஹ்ருதயம் மாசின்றித் தூய்மையாயுளதோ, எந்த ஹ்ருதயம் எனக்கு வாசஸ்தானமாயாக்கப்பட்டுளதோ, அந்த ஹ்ருதயத்தையுடையவனே ஞானியாவான். பக்தியின்றி ஞானம் வாய்ப்பது அரிது. என்னருள் இன்றிப் பக்தி ஞானங்களை எய்த எவராலும் இயலாது. என்னருளால்தான் எவ்வுயிரும் எதையும் பெறுதல் வேண்டும். நான் அன்றி இவ்வுலகமில்லை. உலகம் என்னிலிருந்தே உண்டானது. என்னருளாலியங்குவது. என்னிஷ் டப்படி தோன்றி, இருந்து, மறைவது. உலகம் மலர்; நான் மணம் உலகம் வீணை; நாதம் நான். உலகம் ஒரு ரதம்; நான் அதன் சாரதி. உலகம் நீர்; நான் தண்மை. உலகம் தீ; நான் சூடு. உலகம் தீபம்; நான் அதன் ஒளி. உலகம் சொல்; நான் அதன் பொருள். உலகம் மணி; நான் அதன் ஓசை. என்னையன்றி எதுவும் இல்லை. நானே உலகம்; நானே உயிர்கள்; நானே கல்வி (சரஸ்வதி); நானே செல்வம் (லக்ஷ்மி); நானே கருணை (பார்வதி); நானே வீரம் (விஜய லக்ஷ்மி); இச்சை, கிரியை, ஞானம், மூன்றும் நானே; பஞ்ச சக்தி களும், ஸப்த மாதர்களும், அஷ்ட லக்ஷ்மிகளும் நானே; நவநிலைகளும் நானே; நானே சிவம்; நானே சக்தி.

சிவமும் சக்தியும் ஒன்றே. தனியாய்ப் பிரிக்க இயலாது. சிவத்துள் சக்தியும், சக்தியுள் சிவமுமாய்க் கலந்துள்ளது. நானே அனைத்தும். என்னை உள்ளபடி உணர்பவனே ஞானி; வெறும் தர்க்கங்களால் வாது செய்பவன் ஞானியல்லன். என்னை உள்ளபடி உணர்ந்தவன், என்னை உண்மையாய்க் கண்டவன் வேறு எவ்வித பொருளிலும் விருப்பமுறான். உலக சம்பந்தமான இச்சையே அவனிடத்திராது. என்னுடைய திவ்ய தரிசனம் பெற்றவன், என்றும்

அவ்வாறு சேவித்துக்கொண்டிருக்கும் பேரானந்தத்தையே விரும்புவன். அகங்காரம் உடையவன் ஒருக்காலும் என்னை அணுக இயலாது. எவ்விடத்தில் அகங்கார மமகாரங்கள் வேரோடு பொசுக்கப்பட்டனவோ, அவ்விடந்தான் எனது திருவடிகளைத்தரிசிக்கத் தக்க இடம். அகங்காரம் கொள்பவன் இறுதியில் அவமானத்தையும், துக்கத்தையுமே அடைவன். அனைத்தையும் என்பால் ஒப்புவித்து விட்டு, என் திருவுளப்படி, தான் அகர்த்தாவாயிருந்து, (கருவியாயிருந்து) வாழ்க்கையை நடத்துபவன் என் திருவருளுக்குப் பாத்திரனாகிச் சுகமடைவன்.

உண்மையன்பர்கள் என்ன என்ன விரும்பினாலும் நான் உடனே அளிக்கத் தயாராயுள்ளேன். அன்பு என்னும் ஓர் வலையைத் தவிர வேறு எதுவும் என்னைக் கட்டுப்படுத்தமாட்டா. தாய்ப்பசு கன்றுக்குப் பாலூட்டி வளர்த்தல்போல் நான் உலகை (அதிலும் உண்மையன்பர்களை) எக்காலமும் ரக்ஷிக்கின்றேன். ஓங்காரம் என்னும் வீட்டில் நான் சதாசர்வகாலமும் வாசம் செய்கிறேன். ப்ரணவமே என் ஸ்வரூபம். ப்ரணவமே என் ஸ்வாசம். ப்ரணவமே என் வார்த்தை. அதனை உணர்ந்தவர்கட்கு நான் ஞான இன்பம் அருள்கிறேன். தாம் கற்ற எந்தக் கலையையும் எனக்காக, என்னைத் துதிப்பதற்காக, என்னைத் திருப்தி செய்வதற்காக உபயோகப்படுத்த எவர் எண்ணுகின்றனரோ, எவர் எனக்குப் பக்தியுடன் எப்பொருளையும் அர்ப்பணம் செய்கின்றனரோ, அவர்கட்கு நான் உறுதுணையாயிருந்து காத்தருளுகின்றேன்.

நான் எல்லா உலகங்களிலும் நிறைந்துள்ளேன். எங்கும் நீக்கமற நிறைந்துள்ளேன். ஒவ்வோர் அணுவுள்ளும் நான் அமைந்துள்ளேன். என்னை வழிபடுபவர்கள் எல்லா இன்பத்தையும் எளிதில் எய்தும்படி அருள்புரிந்துகொண்டுள்ளேன். இன்பமயமே எனது ஸ்வரூபம். அருட்கடலாக நான் எங்கும் பரவியுள்ளேன். என்னை வழிபடுவதற்காகவே எல்லாக் கலைகளும், எல்லாப் பொருள்களும், எல்லா மார்க்கங்களும் ஏற்பட்டுள்ளன. எத்துறையில் எவ்விதமான அறிவை எவரெவர் அடைந்திருந்தாலும் அது எனக்காக உபயோகிக்கப்படாவிட்டால், என்பால் அர்ப்பணம் செய்யப்படாவிட்டால்

அவ்வறிவு பயனற்றதேயாகும். எத்தனையோ அவதார புருஷர்கள் (மஹான்கள்) அடிக்கடி தோன்றி உலகிற்கு இன்பம் ஊட்டிச் செல்கின்றனர். எல்லா அவதாரபுருஷர்களும் நீயும் இன்பமெல்லாம் என்னுடைய பேரானந்தமயத்தில் ஒரு சிறு துளியே யாகும். என்னுடைய திருவருளைச் சாதாரணமாய் எளிதில் பெற எவராலும் இயலாது. மழைகாலத்தில் கிணற்றுள் எளிதில் ஜலம் கிடைப்பது போல, இவ் வவதார சமயத்தில் நீங்கள் யாவரும் எளிதில் என்னைத் தரிசித்து என்னருளைப் பெற்றுக்கொண்டீர்கள். உமக்கும் உம் குலத்தாருக்கும் இனி யாதொரு குறையும் நேராது. ஆதலால், நான் சொல்லிய எல்லாவற்றையும் நீங்களும் உமது குலத்தாரும் மனத்துட் கொண்டு, செயல்முறையில் நடத்தி, பரிபூர்ணமாக எனது திருவருள் துணையை நம்பி வாழ்ந்து ஒப்பற்ற பெருஞ் சுகத்தினை அனுபவிப்பீர்களாக" என்று கூறி முடித்தருளினர்.

ஸ்ரீ வாசவீ விஜயம்.

எட்டாம் அத்தியாயம்.

சூரியர் கள்பல கோடி யுதயம்போல்
தோன்றுஞ் சுயஞ் சுடரே !

சீரிய ருள்ளத்தைக் கொள்ளைகொள் ளும்பர
தேவி ! மகேஸ் வரியே !

நேரிய பேரன்பர் கட்கின்ப மேயருள்
நித்திய மெய்ப் பொருளே !

ஆரியஞ் செந்தமி ழாந்திர நன்மொழி
யாகிய சிற் சக்தியே !

கள்ள நினைவினை மாற்றிநின் காட்சியைக்
காணும் வழி புகல்வாய்;

உள்ள பொருளினை யுள்ள படியுணை
ருள்ளத் தணைக் கொடுப்பாய்;

துள்ளிக் குதிக்கும் மனமடக்கி யின்பந்
தோயும் நிலை தருவாய்;

தெள்ளத் தெளிந்த பரானந்த மென்னுஞ்செந்
தேன் பருக வருள்வாய்.

எட்டாம் அத்தியாயம்.

*

எவ்வுலகும் எவ்வுயிரும் ஈன்றளிக்கும் ஈஸ்வரியின்
செவ்வியநற் முள்களிலே சேர்.

ஓம்

ஸ்ரீ வாசவீ விஜயம்.

எட்டாம் அத்தியாயம்.

"யஜ்ஞ பூஜைக்கும் மண வைபவத்திற்கும் இந்நகர் அங்கரிமின்" என்று பறை சாற்றல்.

யமன்பாச வலைபுகுந்து துன்புறற்கே
யாங்கள் இனி ஒப்போரும் ஒப்போம்
தமஸகற்றி யெஞ்ஞான்றும் ஆனந்தம்
தழைத்திடவே சாந்தம் மேவி
சமநிலையாய்ப் பலவுயிர்க ளையும்நோக்கித்
தத்துவத்தின் தன்மை ஆய்ந்தே
அமையுமனத் தொடும்பொலிந்து பேரின்ப
வாழ்வுபெற அருள்வாய் அன்னாய்.

யதி ராஜரெல்லாம் எஞ்ஞான்றும் போற்றி இனிதே வழுத்திட மெய்ஞ்ஞானப் பிழம்பாய் விளங்கிப் பொலிவுறும் வித்தகியாகிய நம் வாசவாம்பிகை, தேவாலயத்தில் வைசியர்கட்கு உபதேசம் செய்துகொண்டிருக்கையில், விஷ்ணு வர்த்தன மன்னனின் வினைகளைப் மகற்றி வீட்டுப்பேற்றுக்கு வேண்டிய விழுமிய முறையினைக் கடைப்பிடிக்கச் செய்யவேண்டுமென்று தமதுளத்தின் கண்ணே கருணை கொண்டனர். குசுமஸ்ரேஷ்டியாருடைய அரசவையில் எப்போதும் போல குசும ஸ்ரேஷ்டியாரும் ஏனைய எல்லா வைஸ்யர்களும் அமர்ந்திருப்பது போலவும், ராஜசபை நடந்துகொண்டிருப்பது போலவும், அம்மையாரின் மாயையால் ஏனையோர் கண்களுக்குப் புலப்படலாயிற்று.

வாசவியின் மாயலீலை.

இஃது இவ்வாறுக, விஷ்ணு வர்த்தன மன்னனுடைய சமஸ்தானத்திலிருந்து பெனுகொண்டாவிற்கு ராஜகாரியத்தை முன்னிட்டு வந்து, இங்கு நடைபெற்ற உபசரணைகளின் விசேஷத்தைக் கண்டு ஆனந்தமாக சுகித்துக் கொண்டிருந்த மந்திரி ப்ரதானிகளும் சேவகர்களும் மிக்க சந்தோஷத்துடன் குசும ஸ்ரேஷ்டியாரின் அவைக் களத்திற்கு வந்து சேர்ந்தார்கள். வந்ததும் அவர்களைத் தகுந்த உபசாரங்களுடன் மந்திரிகளும் சேவகர்களும் வரவேற்று, தக்க ஆசனங்கள் அளித்து அமரச்செய்து, குசல ப்ரச்னங்கள் விஜ்ஞவதைப்போல அவர்களுக்குத் தோன்றியது.

பின்னர் அவ்வரச காரியவாதிகள் ஆங்கு அரியணைமீது பார்க்கையில், குசும ஸ்ரேஷ்டியார் அமர்ந்திருப்பதைப்போலத் தோன்றுவதைக் கண்டு, " தார்மீக சீலமும், தயாளத்வமும், பரோபகாரமும், உதாரத்வமும், யாவரிடத்திலும் அன்பும், அளவு கடந்த ஆர்வமும் கொண்டுள்ள மஹா ப்ரபோ ! இங்ஙகரத்தில் எங்கள் அரசவள்ளல் வந்து, தங்கள் தவப் புதல்விமீது ப்ரியங்கொண்டு, தமக்கு விவாஹம் செய்து தரும்படி கேட்கையில், ' அனைவரையும் கலந்து யோசித்து அனுமதி பெற்றுக் கொடுக்கின்றோம் ' என்று பதிலுரைத்தீர்கள். ஆனல், இப்போது தங்களால் அனுப்பப்பெற்ற வைசிய ஸ்ரேஷ்டர்கள் அங்கு வந்து, பெண்தரும் அபிப்பிராயம் சற்று முடையவர்களாகவே பேசவில்லை. ஒரு சிறிதும் அபிப்பிராயமற்ற தாங்கள், அன்றே அவ்வாறு சொல்லிவிட்டிருந்தால், எமது மன்னர் அப்பெண்மீதுள்ள விருப்பத்தை அன்றே மறந்து விட்டிருப்பார். அவ்வாறு தாங்கள் ' முடியாது ' என்று கண்டிப்பாகக் கூறுமையினல், அவர் இப் பெண்மணியின் மீதே தமது ப்ரேமை முழுமையும் வைத்துப் பெரிதும் ஏக்கத்துட னிருந்துவருகின்றார். தங்கள் பெண்ணுக்கு ஜனிக்கின்ற பிள்ளைக்கே பட்டம் சூட்டி மகுடாபிஷேகம் செய்து வைப்பார். அவருக்கு நீங்கள் உமதுபெண்ணைக் கொடுத்துவிட்டால் உம்மைப் போன்ற பாக்யசாலிகளும், பெருமை யுடையவர்களும், செல்வாக்கு மிகுந்தவர்களும், நன்மதிப் புள்ளவர்களும், உமக்கு ஈடானவர்களும் இந்த உலகத்திலேயே எவரும் ஆகார்கள். ஆதலால் தாங்கள் இச்சமயத்தில் யாதொருவித ஆக்ஷேபணையுமின்றித் தங்கள் குமாரத்தியைத் தந்து, சீருஞ் சிறப்புமுறச் செவ்வையாக்கப் புவிமிசை பிறங்குதலே பீடுசான்ற நல்வழி யாகும் " என்று கூறினர்.

இவற்றை யெல்லாம் அந்தக் குசும ஸ்ரேஷ்டியார் சாவதான மாகக் கேட்டதைப்போலவும், " ஓ மந்திரி ப்ரதானிகளே ! நீங்கள் கூறுவதைப் பார்த்தால் ஏதோ ஒரு விதமாக நியாயம் போலத்தான் தோன்றுகிறது. ஆனால், 'நமது ஜாதி யாசாரத்தை விடுத்து வேறு ஜாதியாருக்குப் பெண்தர நேர்ந்ததே' என்ற ஒரு வருத்தந் தவிர, வேறென்ன உளது? அந்த ஒரு மனவருத்தங் காரணமாகவே அங்கு வந்த எமது குலத்து ப்ரமுகர்களும் ஏதாவது பேசியிருப்பார்கள். அதைப்பற்றி இனி வருந்துவதிற் பயனில்லை. நாம் ஒரு வைசிய னுக்குப் பெண்ணைக் கொடுத்துவிட்டு அரசர் மனத்தை அதிகமாக வருந்தச் செய்வதும் அவ்வளவாக நன்றுயில்லை. ஆதலால் தாங்கள் இனி எவ்வித யோசனை கூறுகின்றீர்களோ, அவ்வாறு நடந்துகொள் வோம் " என்று பதில்மொழி பகர்ந்ததைப்போலவும், அவர்களுக்கு ஸ்ரீ வாசவியின் மாயையால் தோன்றினமையினால், அந்த மந்திரி ப்ரதானிகள் மிகவும் சந்துஷ்டி அடைந்தவர்களாய், " ஓ மஹா ப்ரபோ ! தங்களுடைய பெருந்தன்மையை நாங்கள் என்னென்று கூற இயலும் ? தங்கள் பெருமை இப்படிப்பட்டதென உள்ளவாறு அறியாத நாங்கள், அங்கு வந்த வைசிய ப்ரமுகர்களிடத்தில் எமது அறியாமையினால் ஏதேனும் வார்த்தைகள் அவசரமாகப் பிழைபடக் கூறியிருப்பினும், தாங்கள் அடியேங்கள்பால் கருணைகூர்ந்து மன்னித் தருளி, எமது அரசர் பெருமான், தங்கள் பெண்மணியின்மீது கொண் டிருந்த அமோகமான ப்ரேமை காரணமாக அவசரப்பட்டு ஏதேனும் பிசகான வார்த்தைகள் கூறிவிட்டிருந்தாலும், அவற்றை யெல்லா மும் மனத்திற் கொள்ளாது மன்னித்தருளித் தங்கள் பெண்ணை எமது அரச சிகாமணிக்கு விவாகம் செய்து வைப்பதற்குத் தகுந்த பொருத்தங்கள் யாவும் நிறைந்த சுபதினமும் சுபலக்னமும் பெரி யோர்களைக் கொண்டு நிச்சயம் செய்துவிட்டீர்களானால், எமது அரச பூபதிக்கு நாங்கள் சென்று தெரிவித்து, அவருடைய மனை வேதனை யைச் சற்று சாந்தியுறச் செய்யலாம் " என்று நவின்றனர்.

அவ் வார்த்தைகளையும் குசும ஸ்ரேஷ்டியார் கவனித்துக் கேட் டதைப்போலவும், " ராஜ விஸ்வாஸ மிக்க ரஞ்சித மந்திரிகளே ! அவ்வாறு உமது அரசர் மிகுந்த மனை வேதனையுடன் இருப்பதானால், கல்யாணத்திற்கு இருவருக்கும் பொருத்த நிமித்தங்கள் யாவும் பொருந்திய லக்வாங்கங்களும் அமைந்த சுப முகூர்த்தத்தைப்

பெரியோர்களைக் கொண்டு பார்த்து நிச்சயம் செய்கின்ற வரையிலுங் கூட தாங்கள் இங்கே தாமதித்திருப்பது நியாயமன்று; அங்கே ராஜ சமஸ்தானத்தில், கணித சாஸ்த்ர விற்பன்னர்கள், யாவுந் தெரிந்த மேலோர்கள் அநேகர் இருக்கவில்லையா? அரசரும் தாங்களும் அந்த ஜோதிஷ சக்ரவர்த்திகளும் சோதித்துப் பார்த்து நிர்ணயம் செய்யும் சுப முகூர்த்தத்தில் திருமணம் நடத்த நாங்கள்தான் தடை சொல் வோமா? ஏதாவது ஒருவித சிறுபிழை இருந்தபோதிலும் அத்தகைய (முகூர்த்த) லக்னத்தைத் தாங்கள் ஸ்திரம் செய்வீர்களா? எவ ருக்கும் எவ்விதமான இடையூறும் நேராதவண்ணம் நல்ல சுப ஓரை யைத்தானே நிச்சயப்படுத்த நேரும்? ஆனபடியால், யாதொருவித தயக்கமுமின்றி தாங்கள் தங்களுடைய நகர்சென்று, பெண் கொடுப் பதற்கு நாங்கள் யாதொருவித ஆக்ஷேபணையுங் கூறவில்லை என்பதை அரசரிடத்துத் தெரிவித்து, அவருடைய மன ஆயாசத்தை மாற்றித் தெளிவுறச் செய்து, சாந்தியுற்ற பின்னர், ஜோதிஷ சாஸ்த்ர சமர்த்தர் களைக் கொண்டு சமஸ்த அம்சங்களும் செவ்வனே பொருந்தியுள்ள சுப தினத்தில் முகூர்த்தம் செய்வதென நிச்சயித்துக்கொண்டு, அந்த நாள், லக்னம் முதலானவற்றை எமக்கு உடனேதெரிவித்துவிடுங்கள். நாங்கள் கல்யாணத்திற்காக முன்னரே செய்யவேண்டிய ஏற்பாடு களை யெல்லாம் சாவதானமாகச் சிறப்புறச் செய்யச் சௌகர்யமா யிருக்கும். தவிரவும், நாங்கள் திருமணத்திற்கு முதல்நாள் மிக விசேஷ மான அக்னி பூஜை யொன்று செய்யவேண்டி யிருக்கின்றது. ஆதலால் தாங்கள் தினம் நிச்சயித்துவிட்டதும் உடனே சொல்லி அனுப்புதல் வேண்டும்" என்று பதிலுரைத்ததைப் போலவும், அவர்களுக்குச் சகலவித உபசார மரியாதைகளையும் நடத்தி ராஜமகேந்திர நகருக்குச் சென்று சேருமாறு அனுப்பிவைத்ததைப் போலவும் அவர்களுக்குத் தோன்றியது.

அமைச்சாதியோர் அரசனுக்கு உரைத்தல்.

அதனால் அந்த மந்திரி ப்ரதானிகளும், சேவகர்களும் பெரு கொண்டாவினின்றும் மிகவும் சந்துஷ்டியுடனும் புறப்பட்டு வெகு விரைவிற் சென்று ராஜமகேந்த்ராபுரியை அடைந்து அரசவையைக் குறுகினார்கள். இவர்களுடைய குளிர்ந்த நோக்கத்தை யும் புன்னகை பூத்த முகவிலாசத்தையும் கவனித்த சபையினரும் அரசனும் உள்ளக் களிப்பெய்தி அவர்களை

அழைத்துச் சென்று நடந்த விருத்தாந்தங்களைக் கேட்டார்கள். அதற்கு அந்த மந்திரிகள், "ஓ ராஜ ப்ரபோ! அந்தக் குசும ஸ்ரேஷ்டியாரும் அவருடைய மந்திரி ப்ரதானிகளும் அவரைச் சார்ந்த ஏனைய பலரும் தங்கள் மீது கொண்டுள்ள அன்பின் பெருக்கை நாங்கள் என்னென்று கூறி விவரிக்கப் போகிறோம்? அவர்கள் எங்களை ஆதரித்து வரவேற்று உபசரித்த மார்க்கங்களை எவ்வாறு பகர எம்மாலியலும்? அவர்களுடைய குல விளக்காகத் திகழும் பெண்ணரசத்தினைத் தேவரீருக்குத் திருமணம் முடித்து வைத்தலைப்பற்றி அவர்களுக்கு யாதொருவித ஆக்ஷேபணையும் இருப்பதாகத் தோன்றவில்லை. ஆனால், 'வைசிய குலத்து வரனை மணக்கவேண்டிய நியாயத்தை விடுத்து க்ஷத்ரிய மன்னனுக்கு நமது பெண் மாலையிட நேர்ந்ததே!' என்ற ஒரு வருத்தம் மட்டும் உளதே யன்றி வேறு எத்தகைய தடையும் அவர்கள் கூறுவதாகத் தோன்றவில்லை. 'அவர்கள் குலத்தினர்கள் இங்கு வந்து நீதி மார்க்கங்களை எடுத்து நம்முடன் தர்க்கிக்கின்ற போது நாம் அவசரப்பட்டு அவர்களை அவதூறுக அநேக தகாத வார்த்தைகளால் பேசிவிட்டோமே! என்னை நம்முடைய மதி சென்றவாறு?' என்று எண்ணி எமது மனம் அவ்விடத்தில் சற்று புண்படவும் நேர்ந்தது. ஐயோ! பாவம்! நாம் அவர்கள் மீது யாதொரு விதமான அபாண்ட வார்த்தைகளுங் கூறுவது தகாது. நம்மீது அவர்கள் எவ்வளவோ கருணைபாராட்டுகின்றார்கள். அவர்கள் நம்மில் யாரைப்பற்றியும் எவ்வித தீய மொழிகளும் எள்ளளவுங் கூறவில்லை. தங்கள் மனம் வருந்த அவர்கள் சற்றும் சகிக்கவில்லை. தங்கள் மனத்திற்கு சாந்தியளிக்கவே அவர்கள் எம்மை விரைவிற்செல்லுமாறு அனுப்பி வைத்தனர்.

முகூர்த்த தினம் வாரம் லக்னம் ஆதியவற்றைத் தாங்கள் பார்த்து நிச்சயித்துவிட்டால் அவர்களுக்குச் சந்தோஷமென்று கூறிவிட்டார்கள். உடனே சுப ஓரை யொன்றைத் திருமணத்திற்குத் தக்க நற் பொருத்தங்கள் பொருந்த இருக்கும் வண்ணம் கணித சாஸ்த்ரிகளைக் கொண்டு ஸ்திரம் செய்துவிட்டுப் பெனுகொண்டாபுரிக்குச் சொல்லியனுப்பச் சொன்னார்கள். அப்படிச் சொல்லியனுப்பிவிட்டால் திருமணத்திற்காக முன்னர் செய்ய வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்கு நலமாகும் என்றும் தெரிவித்தனர். தவிர,

கல்யாணத்திற்கு முதல் நாள் அவர்கள் அக்னி பூஜை யொன்று நடத்துதல் வேண்டுமாம். ஆகையால் நாம் பெரியோர்களைக்கொண்டு நிச்சயம் செய்யுங் கடிமண ஓரையைக் கடிதினிற் றெரிவித்துவிட்டால் அவர்களுக்கு எல்லா வேலைகளுக்கும் சௌகரியமாக இருக்கும்" என்றனர்.

அதுகேட்ட அரசன் தேவாமுதம் உண்டவன்போல சந்தோஷ சித்தனுய்ப் புளகாங்கிதமடைந்து, "ஆஹா! நான் செய்த தவமே நற்றவத்திலும் நற்றவம்! எனது தவத்தின் பலன் இன்றே சித்தித்தது. புண்ணியத்தின் பொலிவை, அழகின் திரட்சியை, கல்விக் கடலை, அமுதப் பிழம்பை, தெள்ளிய தேனை, தீஞ்சுவைப் பாகை, கட்டாணி முத்தை, கட்டிக் கரும்பை, மாணிக்க மணியை, மாசிலா மணியை, மாட்சிசால் மணியை, என் மனமுறை மணியை, கண்ணின் மணியை, பண்ணின் சுவையை, பொன்னின் ப்ரதிமையை, மின்னின் ஒளியை, நளின மலர் நிகர் நகைமுக நங்கையை, நவரத்னப் புதையலை, சித்திர மயிலை, வித்தக மணியை, விண்ணு ரமுதை, தண்ணுர் மதிவதனத் தையலை, ஆராவமுதை, அற்புதக் கனியை, ஜீனி கற்கண்டை, நிகழு முக்கனியை, தெவிட்டாதினிக்கும் தீஞ்சுவை செஞ்சொல் திவ்யமாய்ப் புகலும் சீர்சால் செல்வியை, அன்பின் உருவை, இன்பப் பெருக்கை, என்னகத் தமர்ந்த எழில்மிகு புனிதையை, அடியே னுளத்தை அரைக்கணப் போதில் கொள்ளை கொண்டொளிர்ந்த குணநிறை கோதையை, உன்னத எழில்மிகு உத்தம மங்கையை, பன்னரும் பண்புசால் பைங்கிளி மாதை, குயில் போற் குரலொலி தொனிக்கும் வனிதையை, அன்ன நடை பயில் அணியாரணங்கை, என தாவியைப் போன்ற அம்பொற் பாவையை, திருவை நிகர்க்கும் செவ்விய தெரிவையை, மூவுலகத்தினும் காணக் கிடையாக் கற்பக வடிவை, மாந்தளி ரன்ன மேனிவாய்ந் திலகும் மரகதப் பதுமையை அடையும் பாக்யம் அடியேற்கு முண்டோ? என அலமந்துக் கிடந்த எனதகமுங் குளிர்ந்தது—முகமும் மலர்ந்தது—சொல்லும் தழைந்தது-எல்லாம் விழைந்தது" என்று உளத்தின்கண்ணே யுவகை பூத்துப்—பெரும் பேருண்டைப் பெற்றதே போல, காணற் பொருளைக் கண்டதே போல, தேடிய நற்பொருள் சிக்கினற் போல,

மன்னன்றன் மனமகிழ்ச்சி.

மறைந்த ஓர் வஸ்து மறுபடியுங் கிடைத்ததே போல, என்றும் இல்லா இன்பம் பொங்கி, அன்புடன் தனது மந்திரிகளை யழைத்து, ஜோதிஷ சாஸ்திரிகளை வரவழைக்கச் செய்தனன்.

உடனே வெகு விரைவில் ஜோதிஷ சிகாமணிகள் யாவரும் வந்தனர். அவர்கள் அனைவரும் அரசனுடைய பெயருக்கும் வாசவியின் பெயருக்கும், இருவருடைய ஜனன நக்ஷத்ர ராசி லக்னங்களுக்கும் பல்வகைப்பொருத்தங்களும் சரியாக அமைந்துள்ளதாக ஓர் நன்னாள் பார்த்து நிச்சயித்தல் வேண்டுமென எண்ணி நன்காராய்ந்து "மாசி-மீ சுக்லபக்ஷம் த்ருதியை சுக்ரவாரம் ரேவதி நக்ஷத்திரம் அமிர்தயோகம் கூடிய சுபதினம் காலை ஏழரை நாழிகைக்கு மேல் மீன லக்னத்தில், திருக்கல்யாணம் செய்ய மிகவும் உசிதமான ஓரையாக இருக்கிறது" எனக் கூறினர். அதுகேட்ட அரசன், அந்நாளும் சிக்கிரத்தில் வருவதை அறிந்து மிகவும் மனக்களிப் புற்றவனாகி, அந்த ஜோதிஷ சாஸ்திரிகளுக்குத் தக்க சன்மானங்கள் கொடுத்தனுப்பி, பின்னர் சில சேவகர்களை அழைத்து, ஜோதிடர்கள் குறிப்பித்துள்ளதினம் வாரம் நக்ஷத்ரம் திதி யோகம் லக்னம் முதலியவற்றைத் தெரிவித்து வரும்படி பெனுகொண்டாபுரிக்கு அனுப்பி வைத்தனன். அந்தச் சேவகர்கள் பெனுகொண்டாபுரி யடைந்து அரண்மனை சேர்ந்து (மாயா) குசும ஸ்ரேஷ்டியாருடைய சபையைக் குறுகி அரசன் தந்த திருமுகத்தைக் கொடுத்தனர்.

திருமணத் திருமுகம்.

உடனே அத்திருமுகம் வாசிக்கப்பட்டதாகவும், "முகூர்த்த தினம் மிகவும் நெருக்கத்திலிருக்கின்றமையால் நாம் நமது வேலைகள் யாவையும் கூடிய சீக்கிரம் செய்து முடித்தல் வேண்டும்" என்று குசும ஸ்ரேஷ்டியார் கூறியதைப்போலவும், மந்திரிகளிடம் சொல்லி, ராஜமகேந்திரபுரியிலிருந்து வந்தசேவகர்களைத்தக்கவெகுமதிகளோடும் உபசரித்தனுப்பச் செய்ததைப்போலவும் அனைவர்க்கும் புலப்பட்டது.

அதனால், "சுக்லபக்ஷம் த்ருதியை சுக்ரவாரம் ரேவதி நக்ஷத்ரம் அமிர்தயோகம் கூடிய சுபதினம் காலை ஏழரை நாழிகைக்குமேல் மீன லக்னத்தில் ராஜாதி ராஜனுகிய ஸ்ரீ விஷ்ணுவர்த்தன பூபதிக்கும், நமது குசும ஸ்ரேஷ்டியாரின் குமாரத்தியாகிய ஸ்ரீ வாசவாம்பிகைக்கும் திருமணம் நடப்பதாக நிச்சயித்திருப்பதாலும், அதற்கு முதல் நாள், அதாவது

கடிமண முரசு.

குருவாரம் த்விதியை உத்திரட்டாதி நக்ஷத்ரம் சித்தயோகம் கூடிய சுபதினத்தில் அதைச்சார்ந்த **அக்னி பூஜை** நடக்க வேண்டியிருப்பதாலும் நமது நகர் முழுதும் அலங்காரம் செய்தல் வேண்டும்" என்று யாவரும் அறியும் வண்ணம் அந்தப் பெனுகொண்டா நகரத்தின் கண்ணே பறை சாற்றப்பட்டது.

புரோகிதர்களைப் புரவலன் அனுப்பல்.

இஃது இங்ஙன மிருக்க, ராஜமகேந்திர புரத்தில் விஷ்ணுவர்த்தன மன்னன் உவகை மீதூர்ந்தவனுய், "அப்ஸர ஸ்த்ரீகளும் அஞ்சலி செய்து வணங்கத்தக்க அற்புத எழில்மிகும் அணங்கினை மணத்தற்கு அடியேன் ஆற்றிய அருந்தவப் பயனின் அளவை யென்னென்பேன்? இவ்வுலகில் இனி எனக்கு நிகராவார் எவருமே இல்லை. அப்படிப்பட்ட உத்தமி வந்து தனது செந்தாமரை மலரைப் போன்ற திருவடியைத் தரைமீது படிய வைத்து அன்னம் எனவே அழகுறநடந்து அருமையாய் நுழைவதற்கு இந்த அரண்மனைசெய்த நற்றவப்பயனை நவிலவும் முடியுமோ?" என்று பலவாருக எண்ணி எண்ணி, வியந்து மகிழ்ந்து, புன்முறுவல் பூத்தும், அளவிலா ஆனந்த மேலிட்டும், சந்தோஷ சித்தனுய், தனது சமஸ்தானப் புரோகிதர்களில் சிலரை வரவழைத்து, "அறிவாற்றலிற் சிறந்த புரோகிதர்களே! எனது ஆவியைப் போன்று அருமையாய் விளங்கும் ஆரணங்காகிய வாசவாம்பிகையை யான் திருமணம் புரியும் சீரிய நன்னுள் சிக்கிரத்திலுளது. ஆதலால், நீவிர் இன்றே புறப்பட்டுப் பெனுகொண்டாபுரி நகரை யடைந்து, அங்கு அரசு வீற்றிருக்கும் அருங்குணக் குன்றுகிய குசும ஸ்ரேஷ்டியாரைக் கண்டு, "கல்யாணத்திற்கு வேண்டிய சகலவித முஸ்தீப்புகளும் (சாமக்ரியைகளும்) சித்தமா யுள்ளனவா? அல்லது இன்னும் ஏதேனும் தேவையா யிருப்பின் சொன்னுல் இதோ கூடிய சீக்கிரம் அரச சமூகத்திலிருந்து வந்து சேர்ந்து விடும்; ஆதலால் தயவு செய்து தெரிவித் தருளல் வேண்டும்" என்று கேட்டு, அவர்கள் தேவையானவற்றைச் சொல்வதற்குச் சற்று தயங்கிய போதிலும், நீங்கள் அவர்கள் செய்துள்ள முஸ்தீப்புகளைக் கவனித்து, "இன்னும் என்ன தேவை?" என்பதை யுணர்ந்து, சொல்லி யனுப்புதல் வேண்டும். உடனே இங்கிருந்து அனுப்பி வைக்கின்றோம். மறுக்ஷணமே அங்கு வந்து சேர்ந்துவிடும்.

நீங்கள் அங்கேயே இருங்கள். யான் குருவாரத்தன்று வந்துசேருகின்றேன். தாமதமின்றி நீங்கள் உடனே புறப்படுங்கள்" என்று கூறிஅவர்களுக்கு வேண்டிய திரவியங்கள் முதலானவற்றைத் தந்து சில சேவகர்களையும் உடன்கூட்டி அனுப்பி வைத்தனன்.

புரோகிதர்கள் குசுமனின் அவை சேரல்.

அவர்கள் வெகு விரைவில் நடந்து ப்ரயாணம் செய்து மங்கள வாரம் அமாவாசை யன்று காலையில் பெனுகொண்டாபுரி பட்டணமுற்று, குசும ஸ்ரேஷ்டியாரின் அரண்மனையடைந்தார்கள். வாயில் காவலர்கள் வரவேற்றுச்சென்று உள்ளேயனுப்ப, சபையிற்சென்று, ஆங்குள்ள யாவரும் அன்புடன் வரவேற்று உபசரிக்க, ஆசனங்களில் அமர்ந்து குசல ப்ரஸ்னங்கள் வினவிக்கொண்டிருந்தனர். பிறகு அந்த புரோகிதர்கள் அரியணையைப்பார்க்க அங்கே குசும ஸ்ரேஷ்டியார்ரமர்ந்திருப்பதைப் போலத் தோன்றினமையால் அவர்கள், "ஓ மஹா ப்ரபோ! எமது அரசபூபதி எம்மை இங்கே முன்னதாகவே அனுப்பி வைத்துள்ள காரணமென்ன வென்றால், இங்கே திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் யாவும் செவ்வனே செய்யப்பட்டிருப்பினும், இன்னும் ஏதேனும் தேவையான பொருள்கள் உளவா? ஒருகால் யாதாயினும் தேவையா யிருந்தால் சொல்லியனுப்பினால் வெகு விரைவில் வந்து சேர்ந்துவிடுமாதலால் விபரமறிந்து சொல்லியனுப்பும்படி எம்மை முன்னதாக அனுப்பி வைத்துள்ளார். ஆதலின் உமக்குத் திருமண சம்பந்தமான பொருள்கள் ஏதேனும் தேவையுண்டா? தயவு செய்து கூறி யருள வேண்டும்" எனப் பிரார்த்தித்தனர்.

புரோகிதரிடத்துப் புகலும் விடை.

அவற்றையெல்லாம் குசும ஸ்ரேஷ்டியார் கேட்டுக்கொண்டிருந்ததாகவும், "ஓ புரோகித சிகாமணிகளே! உமது ஆசீர் வசன பல விசேஷத்தாலும், உமது அரச வள்ளலின் பெருந்தயவினாலும், தெய்வ கடாக்ஷத்தாலும், எமக்கு யாதொரு குறைவும் கிடையாது. கல்யாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் யாவும் நடந்து கொண்டிருக்கின்றன. தற்போது எமக்குத் தேவையான பொருள்கள் ஒன்றும் கிடையாது. அப்படி ஏதேனும் தேவையிருப்பின், நாங்களே சொல்லியனுப்புகின்றோம். அவ்வாசர்

பெருமான் எதைக்கேட்ட போதிலும் கொடுப்பதற்குச் சற்றும் தயங்காத் தார்மீக சீலர் என்பது எமக்கு மிக நன்கு தெரியும். ஆதலால் நீங்கள் எவ்வித ஆயாசமும் இன்றி சாவதானமாக அமர்ந்திருங்கள்" என்று கூறியதாகவும், அவர்களுக்குத் தோன்றியது. சமஸ்தான சிப்பந்திகள் இவர்களுக்கு பாயசபலகார வர்க்கங்களுடன் உணவளித்து உபசரிக்குமாறு தகுந்த ஏற்பாடுகள் செய்தார்கள். அவர்கள் இனிதே உண்டு இளைப்பாறி இதயக்களிப்புடன் எழில் மிகும் அரசவை யெய்தியகாலை, அந்தச்சிப்பந்திகள் பலவித உபசாரங்களைச் செய்தும், தாங்கள் அந்நகர் முழுவதையும் அலங்கரித்து வைத்திருக்கும் வினோதங்களையும், வீதிகளெல்லாம் விழாக்கோலமாக விளங்கும் காட்சியையும் அவர்களுக்குக் காண்பித்தும், திருமணச் சிறப்பு களைச் செவ்விதின் நடாத்த வேண்டிய சீரிய முறைகளைப்பற்றித் திவ்யமாக எடுத்தோதியும் சந்தோஷிப்பித்தனர்.

நகரலங்காரப் பொலிவு.

வீதிகளெங்கும் மகரதோரணங்கள் நாற்றி, மலர் மாலைகள் தூக்கி, வாழை கமுகு தெங்கு முதலியவற்றால் வாகாயலங்கரித்து, பலவித காய்கனிக் குலைகளையும் பூங் கொத்துகளையும் வரிசை வரிசையாகத் தொங்கவிட்டு, அநேக வர்ணக் கொடிகளை அணியணியாகக் கட்டி, தெருக்களில் கீழே சந்தனம் பனிநீர் பச்சைக் கர்ப்பூரம் ஆதிய வாசனைத்திரவியங்களைக் கரைத்துத் தெளித்துத் தூளி யெழாமல் தளம்செய்து, முத்துப்பொடியால் கோலமிட்டு, பலவித வர்ணங்களைக் கலந்த அரிசி மாவினால் சித்திரச் சுதைகள் தீட்டி, வாயிற்படிக் கெதிரில் முத்துமாலை பவளமாலை ரத்தினத் தொங்கல்கள் முதலியவற்றை வெகு விநோதமாகத் தொங்கவிட்டு, தெருக்கள் முழுதும் மிக விசித்திரமான விசாலப் பந்தர்களமைத்து, அப்பந்தரில் பலவித பட்டுகளாலும், பீதாம்பரங்களாலும், சீனம்பரங்களாலும், கனகாம்பரங்களாலும், நீலாம்பரங்களாலும், பலவர்ணக் கண்ணாடிகளாலும், பலவிதமாக முகங்காட்டக்கூடிய வேடிக்கைக் கண்ணாடிகளாலும், படிகக்கற்களாலும், மணிவகைகளாலும், பலவகையான சித்திரப் படங்களாலும், பலதினுசான மர ப்ரதிமைகளாலும், வர்ணந் தீட்டப்பெற்ற பொம்மைகளாலும், பல உலோகங்களினாற் செய்யப்பெற்ற அழகியபல்வகை ப்ரதிமைகளாலும், பன்னிறப்

புஷ்பவகைகளாலும், பலவித மாலைகளாலும், ஜரிகைப் பின்னலாலும், ஜால்ரா வேலைகளாலும், தென்னை பனை ஈந்து முதலிய ஓலைகளாலும், பலவகைக் கண்ணாடிக் குழைகளாலும் இன்னும் இவைபோன்ற பல அரிய பெரிய நுண்ணிய விலையுயர்ந்த உன்னத ஸ்ரேஷ்டப் பொருள்களாலும், அநேகதச்சர்களும், அளவில்லாக் கொற்றர்களும், எண்ணற்ற சிற்பிகளும், ஏராளமான கம்மியர்களும், அளவுகடந்த முத்துவேலைக்காரர்களும், கணக்கிறந்த ஓவியக்காரர்களும், பற்பல தையற்காரர்களும், சகல கலா சமர்த்தர்களும், மஹா மேதாவிகளுமாகப் பலரும் கூடி, தத்தமது கைத்திறனனைத்துங்காட்டிக் கவினுற இயற்றிய அலங்காரங்கள் அனைத்துங் காண்போர் மனத்தைக் கடிதினிற் கவரத்தக்க தன்மையதாகக் காணப்பட அமைத்து, மிக்க ரமணீயமாக விளங்கும்படிச் செய்துள்ள அந்த விசித்திர விநோத அலங்காரங்களையும்,

வரிசை ஜரிசையாக அமைந்து இயற்கை யழகை எடுத்து எடுத்து இனிதே வழங்குவதைப்போல் வீதிகளின் இருபுறமும் பைந்தளிர்க் குருத்துகளோடும் அழகிய தோற்றத்தோடும் பூங்கொத்துகளோடும் பற்பல மொக்குகளோடும் பலவித நறுமலர்களோடும் பாங்காய் விளங்கும் பற்பல புஷ்பச்செடிகளும், ஆங்காங்கு விளக்குகளமைக்க விசித்ரமாய் விளங்கும் விநோதமான மாடங்களும், பன்னீர் தெளிப்பதுபோல நீரை மெல்லிதாய் விசிறும்படி அமைந்துள சிவிறிகளும், சாமரை, கவரி, மயில் விசிறி, வெட்டிவேர் விசிறி, இரத்ன விசிறி, ஆலவட்டம் முதலியவற்றைத் தாங்கி, மெல்லெனப் பூங்காற்றெழுமாறு வீசுவதற்காக அமைந்துள்ள சூஸ்த்ரப் பாவைகளும், வீணை யாழ் குழல் தவில் நாதசுரம் தாளம் ம்ருதங்கம் கடம் முதலான பலவித வாத்யக் கருவிகளை ஒலிக்கக்கூடிய சூஸ்த்ர ப்ரதிமைகளும், வருவோர் போவோர்களை அன்புடன் வரவேற்று இன்மொழிகள் கூறி உபசரித்து மனக்களிப்பூட்டக்கூடிய சூஸ்த்ரப் பதுமைகளும் இவைபோன்ற இன்னுமநேக விசித்ர விநோத அமைப்புகளும் அலங்காரங்களும் செய்துள்ளதையெல்லாம் அவர்களுக்குக் காண்பித்தும்,

திருமண வைபவத்திற்காக நூதனமாய் நிருஷ்டித்துள்ள வேதமண்டபங்களையும், யாகசாலைகளையும், பாகசாலைகளையும், போஜன சாலைகளையும், நடன சாலைகளையும், உபன்யாச மேடைகளையும், சங்கீத சாலைகளையும், புராண ப்ரசங்க கதாகாலக்ஷேப சாலைகளையும்,

சயன சாலைகளையும், ஆங்காங்கு அமைந்துள்ள அற்புதங்களையும், ஆங்காங்கும் செய்துள்ள வசதிகளையும் தனித்தனியாகக் காண்பித்து விசேஷங்களை விளக்கமாக விவரித்தும் அவர்கள் மனத்திற்குப்பெருங் களிப்பீந்தனர்.

அவர்கள் இந்த வேடிக்கை விநோதங்கள் எல்லாம் தமது அரசவள்ளலின் விவாகத்திற்காகத்தான் செய்திருக்கின்றார்கள் எனத் தெரிந்ததும் எண்ணற்ற மனமகிழ்ச்சியடைந்து, இவர்கள் காண்பித்த ப்ரேமையையும், மரியாதையையும், கருணை விசேஷத்தையும், செய்கின்ற அபரிமிதமான உபசாரங்களையும் எண்ணி எண்ணி இறுமாந்து இயம்பவொண்ணா இறும்பூதெய்தி, சம்ப்ரமமாக உண்டு களித்து உறங்கிக் கொண்டும், கேளிக்கை விநோதங்களைப் பார்த்துக் கொண்டும், தாங்கள் வந்த காரணத்தையும் மறந்தவர்களாகி ஆனந்தக் கடலில் அமிழ்ந்தவர்களாயினர்.

சமஸ்தான புரோகிதர்களின் சந்தோஷம்.

இங்ஙனம் இவ்வாறுக, ராஜமகேந்த்ராபுரியில் விஷ்ணுவர்த்தன மகாராஜன் தனது திருமண வைபவத்திற்கு விஜயம் செய்யும்படித் தனது உற்றார் நட்பினர்கட்கும் ஐம்பத்தாறு தேசத் தரசர்கட்கும் திருமுகம் விடுத்தனன். திருமணம் பெனுகொண்டாபுரியில் நடப்பதாயும், யாவரும் நேரே இராஜமகேந்திராபுரிக்கு வந்து, பின்பு எல்லோரும் ஒருங்கே பெனுகொண்டாபுரிக்குச் செல்லலாம் என்றும் அத் திருமுகங்களிலேயே குறித் தனுப்பிவைத்து, அளவிடற்கொண்ணா அகமகிழ்வுற்றனன். அவன் அடைந்த பெருங் களிப்புக்கு அளவு கூறவே எவராலும் இயலாது.

அரசர்கட்கு மணவோலை அனுப்பல்.

'நாம் "வாசவீ" யென்னும் வனிதா ரத்தினத்தை யடையப் போகிறோம்' என்று மனக்கோட்டை கட்டிக்கொண்டும் அதே எண்ணமாகச் சிந்தித்துக் கொண்டும் இருந்தனன். அப்பெண்ணின் உருவமே தன் எதிரில் வந்து நடனமாடுகின்றாற் போலவும், தான் உண்ணச் செல்லும் அன்னத்திலும், பருகச் செல்லும் பாலிலும், கையினற்றொடுகிற எல்லாவஸ்துக்களிலும், தான் அமரநினைக்கும்

மன்னன் மனச் சலனம்.

ஆசனத்திலும், படுக்க விரித்திருக்கும் பஞ்சணையிலும், பார்க்கப் படுகிற பல இடங்களிலும் இருப்பது போலவும் தோன்றக்கண்டு, உளம் பூரித்துத் தேக முழுதும் புளகம் போர்த்தும், ஆசை வார்த்தைகள் பேசியும், பின்பு 'உருவெளித் தோற்றம்' என் றுணர்ந்து வருந்தியும், "கூடிய விரைவில் மணம் புரிந்து கொள்வது நிச்சயமாயிருக்க, நாம் ஏன் இவ்வாறு அவசரப்பட்டு வருந்தி அலைந்து மனத்தைப் புண்படுத்திக் கொள்ளவேண்டும்? மனம் பொறுத்தாலன்றே மண்ணும் பொன்னுகும்? 'பதறுத காரியம் சிதறுது' என்பது ஆன்றோர் மொழியல்லவா? நாம் சற்று நிம்மதியாயிருப்பதுதான் நலம்" என்று மனத்தேர்ச்சியுற்றும், ஒவ்வொரு நாளையும் ஒவ்வொரு யுகமாய்க் கழித்துவந்தான்.

பிரயாண ஆயத்தம்.

திடீரென்று அம் மன்னன் மனத்தின் கண்ணே ஓர் மகிழ்ச்சி தோன்றவும், மணநாள் சமீபித்துவிட்டதென்று நினைத்து, மந்திரிகளையும் சேனுதிபதிகளையும் தளகர்த்தர்களையும் யாவரையு மழைப்பித்து, "நாளையதினம் காலையில் சாதுரங்க சேனைகளும் சூழ நாம் திருமணக் கோலத்துடன் பெனுகொண்டாபுரிக்குப் புறப்படவேண்டுமாதலால் சகல சேனு சமூகங்களும் தயாராக இருக்கவேண்டும்" என்று பறைசாற்றிப் பிரயாணத்திற்கு ஆயத்தமாகுமாறு கூறினன். இதற்குள் திருமுகங் கண்ட ஐம்பத்தாறு தேசத் தரசர்களும், விஷ்ணு வர்த்தன வேந்தனின் உற்றூர் நட்பினர்களும் யாவரும் ஸர்வாடம்பர சகிதர்களாய் வந்து சேர்ந்தார்கள். அவரவர்கட்கும் தக்க விடுதிகள் தந்து சகல உபசாரங்களையும் மந்திரி ப்ரதானி வர்க்கத்தினர்கள் செவ்வனே நடாத்தி, காலையில் ப்ரயாணம் என்பதை அனைவர்க்கும் தெரிவித்து, பயணத்திற்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் தயார் செய்தார்கள்.

அரசன் அடைந்த அவதி.

அரசன் சாயங்கால சந்தி முடித்துக்கொண்டு, அந்தப்புரம் சென்று ஆகாரம் அருந்துதற் கமர்ந்தனன். அன்றிரவு மன்னனுக்கு ஆகாரம் சற்றும் பிடிக்கவே யில்லை. பொற் பாத்திரத்தில் பரிமாறப்பட்டிருந்த அன்னமும் பதார்த்த வகைகளும் கனி வர்க்கங்களும் பக்ஷணங்களும் யாவும் சிறிதும்

சுவையில்லாதனவாகக் காணப்பட்டன. மண்ணையும் மரத்தையும் மெல்லுவது போலத் தோன்றியது. அன்றியும் வாய் குமட்டத்தக்க துர்மணம் வீசத் தொடங்கியது. காரணம் இன்னதென்று ஒன்றும் புரியவில்லை. பரிசாரகர்களைக் கடிந்தும், வேலைக்காரத் தாதியர்மீது வெகுண்டும், பலவாறுக வைது தூற்றியும், ஆகாரத்தைப் புறக்கணித்துத் தள்ளிவிட்டுப் படுக்கைக்குச் சென்றனன். பாகசாலையிலுள்ளார் யாவரும் அரசனுடைய மன மாறுதலுக்குக் காரண மறியாது திகைத்தார்கள். பிறகு அவர்கள் மிகவும் பயந்தவர்களாகி, 'கொஞ்சம் பாலாயினும் கொண்டுபோய்த் தந்து பருகச் செய்வோம்' என எண்ணியவர்களாகிப் பக்குவமாகப் பண்புறக் காய்ச்சிய பசுவின் பாலிற் கற்கண்டுப் பொடி தூவிக் கலந்து பொற் பாத்திரத்திற் கொண்டுபோய்த் தந்தனர். அரசன் அதை வாங்கிப் பார்க்கையில் சிவந்த நிறத்துடன் இரத்தம்போற் காணப்பட்டதால், மிகவும் கோபம் மூண்டு, எடுத்துக்கொண்டுவந்து கொடுத்தவர்கள் மீது எரிந்து விழுந்து பலவாறுக வைதுவிட்டு, மகா மனவருத்தத்தோடும் படுக்கைக்குச் சென்றனன்.

இவ்வாறு பள்ளியறை சென்ற அரசன் பாதி ராத்திரி வரை துயில் லின்றி, துக்கங் கொண்டவன்போல ஒன்றும் புரியாமல் சிறிது நேரம் சும்மா இருப்பதும், பிறகு 'நாம் என் வருந்தவேண்டும்? வாசவி நமக்கு மனைவியாக வாய்ப்பதில் இன்னும் என்னதடையுளது? ஒன்றுமில்லையே! இதுவரையில் குதூகலத்துடன் இருந்த நமது மனம் இப்போது ஏன் இவ்வாறு ஒரு மாதிரியாகத் துடிக்கிறது?" என்று எண்ணிச் சற்று தெளிவதும், பிறகு முன்போல் நெஞ்சம் துடிப்பெய்தி திகைப்பதும், மனம் மாறுதலடைந்து நிலை தடுமாறுவதுமாகி, எதுவும் புரியாமல் இருந்து மஞ்சத்திற் சாய்ந்தான்.

வேந்தன் கனவுகண்டு வெருளுதல்.

அவ்வாறு சோர்வுற்றுச் சாய்ந்து சிறிதே கண்ணயர்ந்த சமயத்தில், ஷோடச புஜங்களோடும், பலவித ஆயுதங்களோடும், கோர ரூபத்தோடும், லிம்ஹ வாஹனத்தோடும், சிவந்து உருண்டு நெருப்புப்பொறி பறக்கக் கோபத்தாற் கொதிக்கும் கண்களோடும், கோரப் பற்களோடும், கோபச் சிரிப்போடும், அக்னி ஜ்வாலை வீசுகின்ற ஸ்வாசத்தோடும், கையில் வெகு

பள பளப்போடு விளங்கும் மிகப் பெரிய சூலாயுதத் தோடும் வீரமா காளி போன்ற ஒருசக்தியின் வடிவம் மிக்க பயங்கரக் கோலத்துடன் அவ்வரசன் கண்முன் தோன்றவும், அவன் பெரும் பீதியடைந்து நடுங்குகிற காலத்தில், அவ்வுருவம் தன்னை எட்டிப் பிடித்து வாளா யுதத்தால் மடித்து, சூலாயுதத்தினற் கோபமுடன் குத்திக் தூக்கிக் கொண்டதாகக் கனவுகண்டு, மிகவும் பயந்து, சரீர முழுதும் விட விடத்து, வாய்குழறிக் கதறிப்பதறிப் பேய்க்கூச்சலிட்டு, மஞ்சத்தி னின்றும் புரண்டு திடீரென விழிந்தான். அவ்வரசன் கூயிய உரத்த குரலையும், அவன் கீழே விழுந்த அதிர்ச்சியையும் கேட்டு, தேவிமார் களும், அந்தப்புர ஸ்த்ரீகளும், அருகிலிருந்த தாதியர்களும், பாங்கியர் களும், சேவகர்களும், அரண்மனையிலுள்ளார் யாவரும் திடுக்கிட் டெழுந்து, ஓடோடி வந்து, அரசனை வாரி யெடுத்துக் கட்டிலிற் கிடத் திப் பனி நீர் தெளித்து, விசிறிகொண்டு வீசிப் பலவித உபசாரங்கள் செய்து, சற்று மனந் தெளிவித்து, 'என்ன' என்று வினவினர். அரசன், தான் கண்ட மஹா கோரமான அந்தக் கனவைப்பற்றி எடுத்துக் கூறித் திகில் மாறுமல் வெருண்டு கிடந்தான்.

அதுகேட்ட மந்திரிகள் "இது நேர்ந்ததற்குக் காரணம் யாதெனில் நாம் நமது கல்யாணத்திற்காக நமது க்ராம தேவதை யாகிய காளிக்குப் பூஜை செய்யவில்லை. அதன் காரணமாக இருக்க லாம்" என்றார்கள். உடனே ஆலயத்திற்கு வேண்டிய சகலவித மான பூஜாத்ரவியங்களையும் பரிக்காரர்கள்

காளி பூஜை செய்து கொண்டு கல்யாணத் திற்குப் புறப்படுதல்.

வசம் அனுப்பி, சில முதியோர்களும் மந்திரிகளும் உடன் சென்று திருமஞ்சனம் செய்வித்து, அர்ச்சனை தூபதீப நைவேத் யாதி பூஜைகளை முடித்துக்கொண்டு வந்து அரசனிடம் கூற, அதுகேட்டு மன்னன் சற்று திகில்மாறி, மனந் தெளிந்தவனாகி எழுந்து ஸ்நானபான ஜப தப நேம நிஷ்டைகளை முடித் துக்கொண்டு, போஜனமருந்தச் சென்று, போஜனம் பிடிக்காததால் எழுந்துவந்து ஆடையாபரணலங்கிருதனாகித் திருமணக் கோலத் துடன் புறப்பட்டு வந்து, வாயுவேக மனோவேகமாகச் செல்லக் கூடிய எட்டுக் குதிரைகள் பூட்டப்பெற்ற எழில் மிகுந்த இரதத்தின் மேல் ஏறியமர்ந்தனன். தனது தேவிமார்களும், புத்ரனும், மந்திரி

ப்ரதானிகளும், தளகர்த்தர்களும், சேனைத் தலைவர்களும், ஐம்பத்தாறு தேசத்தரசர்களும் சிற்றரச கூட்டங்களும், ஆஸ்தான வித்வான்களும், பண்டித கோஷ்டிகளும், சகல சாஸ்த்ர சம்பன்னர்களும் தத்தமது வாஹனங்களில் ஏறிச் சூழ்ந்து நின்றனர். சகலவித மேள வாத்யங்களும் முழங்க மிக்க ஆடம்பரத்துடன் சதுரங்க சேனை சமூகங்களோடும் ப்ரயாணம் தொடங்குகையில், அரசனுடைய இடக்கண்ணும் இடது தோளும் துடித்தன. அவனுடைய தேவி மார்களுக்குப் பொல்லாத குறிகள் தோன்றின. துச்சகுனங்கள் பற்பல தென்பட்டன. இவைகளையெல்லாம் சற்றும் கவனியாது; வேந்தன் வாசவியின்மீது கொண்ட ஆசை வெள்ளத்தில் மூழ்கித் தலை தெரியாதவனுக சேனைகளை நடத்திக்கொண்டு பெனுகொண்டாபுரியை நோக்கிச் செல்லலாயினன்.



ஸ்ரீ வாசவீ விஜயம்.

ஒன்பதாம் அத்தியாயம்.

அருளருவி வழிகின்ற ஆனந்த மலையே ! என்
அன்பிற் கனிந்த கனியே !
அறிவிற் கலந்த மெய்ஞ் ஞானிய ருளத்தூறும்
அமுதே ! சுகப் பெருக்கே !

தெருளே ! தெவிட்டாத தேனே ! உயர்ஞான
சித்தியே ! முத்தி முதலே !
திகழ்கின்ற மெய்யின்ப மாம்விருந்தே ! எனது
செல்வமே ! எண்ணிலாப் பல்

பொருளே ! பரானந்த போகமே ! யோகமே !
போக்குவர வற்றெளிரு மோர்
புராதன சொரூபமே ! புண்யமே ! விண்முதற்
பூதவடி வான பரமே !

இருளே கடிந்துகழ லீந்தருளு மன்னையே !
ஏகாந்த மோன வுருவே !
இப்புவியி லுழலுமிவ் வேழையைக் காத்தருள்க;
இறைவியே ! ஆதி பரையே !

ஒன்பதாம் அத்தியாயம்.

(முதற் பகுதி.)

*

ஊனப் பிறவிதரும் ஆசையினை யுட்சுடவே
ஞானப் பெருநெருப்பை நாடு.

ஸ்ரீ வாசவீ விஜயம்.

ஒன்பதாம் அத்தியாயம்.

(முதற் பகுதி.)

"முக்தியருள் சக்தி பத முளரிகள் துதித்தே
பக்தி யொடு ஞானங்கி பாய்ந்து மூழ் கிடுதல்.

முத்தியினை விழைகின்றேம் மோசமிகு காசினியில்
மூனைத்தல் வேண்டோம்
நித்தியமாம் பேரின்ப வாழ்வினையே வேண்டுகிறேம்
நீத்தார் போற்றும்
உத்தமியே உதவிடுவாய் உதவாயேல் உயிர்விடுவோம்
ஓலங் கூவி
நத்துபவர் தமக்கருளா திருத்தல்மிக நலமாமோ ?.
நவில்வாய் அன்னாய் !

முத்தர்க ளெல்லாம் போற்றி வணங்குப் முளரி மலர்த் தாள் வாசவாம்பிகை, தேவாலயத்தின் கண்ணே திருவாய் மலர்ந்தருளும் மொழிகளனைத்தையும் முறையுடன் கேட்டுணர்ந்த வண்ணமாக, வைசியப் பெரியார்களும் அரிவையர்களும் யுவஜனங்களும் மக்கா சந்தோஷ சித்தர்களாய், எண்ணங்களே யெல்லாம் மறந்தவர்களாகி, வேறு ஒன்றும் தோன்றுது அளவிறந்த மனக் களிப்போடும் அமர்ந்திருந்தார்கள். ஸ்ரீ வாசவியின் க்ருபையினல் அவர்களுக்குப் பசி முதலான யாதோருணர்ச்சிகளும் தோன்றவேயில்லை. சூரியன்உதிப்பதையாவது, மறைவதையாவது, தினங்கள்

வைசியர் யாவரும் வீடு சேரல்.

கழிவதையாவது அவர்கள் உணர்ந்தாரல்லர். பகலென்றும் இரவென்றும், காலை என்றும் அந்தியென்றும், மத்யான மென்றும் நடு நிசியென்றும், அவர்களுக்கு ஒன்றும் புலப்பட்டவே யில்லை. யாதொருவித உபாதிகளுமின்றி, அவர்கள் அவ்வாறு தேவாலயத்தில் வாசவாம்பிகையின் அருண் மொழிகளை இரு செவிகளார இனிதே பருகி, இன்ப வெள்ளத்தில் மூழ்கியவராயினர். ப்ரதமையன்று மாலைவரையில் நம தம்பிகை எல்லா வைசியர்கட்கும் அருட் போதனை செய்வித்து அனைவருளத்திலும் அரு மகிழ்ச்சி வினைவித்தனர். பின்னர் அவர்கள் யாவரும் நம தன்னையின் ஆக்ஞைப்படி தத்தமது அகம் சென்று சேர்ந்தனர். குசும ஸ்ரேஷ்டியாரும் குசுமாம்பிகையும் அவர்களைச் சார்ந்தவரும் அரண்மனை சேர்ந்தனர். பதினெண்புர வாசிகளும் தத்தமது விடுதிகளை யடைந்தனர். இவர்கள் யாவரும் இவ்வாறு இல்லம் சேர்ந்தசமயம் இராக்காலமாதலால், அவரவர்களும் வேறு யாதோ ராலோசனையுமின்றி, ஸ்நானம் செய்து, பூஜை முடித்து உணவருந்திக் கண் துயின்றனர்.

மறுநாள் (த்விதியை-உத்திரட்டாதி-கூடிய-குருவாரத்தன்று) விடியற்காலை ஒரு ஜாம நேரத்திற்கு வைசியர்கள் யாவரும் துயில்விட்டெழுந்து, மங்கள ஸ்நானம் முடித்து திவ்யமான வஸ்த்ரந் தரித்து, தத்தமது பத்னி புத்ர. வர்க்கத்தார்களுடன் சக்தியைத் தொழுது துதித்துக்கொண்டே குசும ஸ்ரேஷ்டியாரின் இல்லம் சேர்ந்தனர்.

ஆலயத்திற்குப் புறப்படுதல்.

குசும ஸ்ரேஷ்டியாரும் விரூபாக்ஷனும் ஸ்நானம்செய்து, தூய வுளத்தராய், துல்லியமான வஸ்த்ரந் தரித்து, திலகமணிந்து, தேவாலயத்திற்குப் புறப்படத் தயாராயிருந்தனர். இதற்குள் குசுமாம்பிகையும் பாங்கியரும் ஸ்நானம் முடித்துக்கொண்டு, மகா பரிசுத்த மனத்தராய், வாஸவாம்பிகைக்கு மங்கள ஸ்நானம் செய்வித்து, கூந்தலுக்கு அகிற்புகை யூட்டி, கோதி முடித்து, தேக முழுதுங் களப கஸ்தூரிகள் பூசி, பட்டு பீதாம்பர ஆடைகளால் அலங்கரித்து, ஸ்வர்ண ரத்ன ஆபரணங்களையும், முத்துமாலை மோஹனமாலை ரத்ன ஹாரம் சந்த்ரஹாரம் நவரத்ன க்ரீடம் குண்டலம் ஆதிய எண்ணிறந்த திவ்ய பூஷணங்களைப் பூணவித்து, மிக்க மனோகரமாகவும், பயபக்தி

விஸ்வாஸத்துடனும் அத்யந்த ப்ரேமையுடனும் மகா வணக்கத்துட னும் அழைத்துவந்தனர்.

அம்பிகையின் சிலம்பொலி.

"இந்த அம்மையின் அம்சமே கலிமகளாதலால் கல்வி விரும்பு வோர் யாவரும் வம்மின்! இவ் வன்னையின் அம்சமே திருமகளாத லால் செல்வம் வேண்டுவோர் யாவரும் வம்மின்! இவ் வம்பிகையின் அம்சமே மலை மகளாதலின் வீரம் வேண்டுவோர் யாவரும் வம்மின்! இவ் வுத்தமியேதான் இச்சா சக்தி, க்ரியாசக்தி, ஞானசக்தி, ஆதிசக்தி, பராசக்தி, சிற்சக்தி, மாயாசக்தி எனப் பல்விதப் பாகுபாடுகளாய்ப் பிரிந்து தொழிற் படுகின்றன ராதலின், சரியை, கிரியை, யோகம், ஞானமெனும் பரமபத சோபா னங்களையும், சாலோக சாமீப சாரூப சாயுஜ்யாதி பதவிகளையும், தர்ம அர்த்த காம்ய மோக்ஷமாதிய புருஷார்த்தங்களையும், எத்தகைய சுக போகங்களையும், எத்தகைய உயர் பதங்களையும், எத்தகைய விழுமிய இன்பங்களையும் எய்த விரும்புபவர் யாவரும் இங்ஙனே விரைந்து வந்து பெற்றுக் கொள்ளுமின்! விரைவில் வம்மின்! விரை வில் வம்மின்!!" என்று கூறி உலகினரைப் பரிந் தழைப்பதே போல அவ்வம்மையாரின் பங்கயம் போன்ற பாதங்களில் அணிந்துள்ள பரி புரங்கள் பகர்ந்தொலி பெருக்க, நம தன்னையாகிய வாசவாம்பிகை அன்னம் போல அழகுற நடந்து வந்தனர்.

ஆலயம் சேர்ந்து அம்பிகையை இறைஞ்சல்.

சகல வாத்யங்களும் முழங்கலாயின. கொடிகளும் குடை களும் சுருட்டிகளும் மகரதோரணங்களும் மங்கள கோஷங்களும் வேதகோஷங்களும் வித்வான்களும் பண்டிதர்களும் வேதாந்திகளும் பக்திமான்களும் புண்ணிய சீலர்களும் மந்த்ரி ப்ரதானிகளும் சகல சாஸ்த்ர சம்பன்னர்களும் யாவரும் யாவும் புடைசூழ, அந்தப் பெரு கொண்டாபுரியை வலமாக வரத் தொடங்கினர். நமதம்பிகை முன்னே நடக்கவும் ஏனைய எல்லா வைசிய கூட்டங்களும் பின்னே நடக்கவும், சகல மங்கள த்ரவியங் களையும் தாங்கிக் கொண்டு நகரத்தை வலமாகச் சுற்றிக்கொண்டு சென்றனர். நகர் முழுதும் கூறமுடியாத பேரெழிலோடும் அலங்காரம் செய்திருப்பதற்குக் காரணம் யாதென இவர்கட்குப்

புலப்படவில்லை. ஒவ்வோர் வீட்டிலும் திண்ணைகள்தோறும் பூர்ண கலசங்களும், பொற்பாவைகளும், மூலைப்பாலிகைகளும், முக விளக்குகளும், வெண்சாமரைகளும், இணைக்கயல்களும், கண்ணாடி களும், பூந்தட்டுகளும் மங்கலமாக வைத்து அலங்கரித்துள்ளதையும், பலவிதக் கொடிகளாலும், மாவிலைத்தோரணங்களாலும் மலர்மாலை களாலும் வாழை கமுகுகளாலும் ஒவ்வொரு வாயிலினும் வெகு விநோதமாக அலங்கரிக்கப் பெற்றுள்ளதையும் கண்டு, ஆனந்தித்த வர்களாய்ச் சென்றனர். அஷ்டமங்கலங்களை ஏந்திய அரிவையரும், நீராஞ்சனம், ஹாரதி, முதலியன தாங்கிய தையலரும், மங்கள கீதங் களைப் பாடும் சுமங்கல்ய ஸ்த்ரீகளும் எங்குந் திகழ்ந்தனர். இசை வல்லவர் பண்கள் இசைத்தனர். சங்கீதமுணர்ந்தோர் யாழ் வல்லோர் வீணை வாசிப்போர் வேய்ங்குழலூதுவோர் ம்ருதங்கம் மூழக்குவோர் கடம் வாசிப்போர் நடனம் புரிவோர் முதலிய பலரும் தத்தமது திறனெலாம் காட்டிக்கொண்டு செல்ல அனைவரும் தேவால யத்தைச் சென்றடைந்தனர். அங்கே வேதவிதிப்படி நடந்த தீபாரா தனையைக் கண்ணுற்றதும் வைசியப் பெரியார்கள் யாவருடைய மனத்திலும் ஸ்ரீ வாசவாம்பிகையின் திருவருளால் ஓர் நூதன வுணர்ச்சி தோன்றலாயிற்று. அவர்கள் எல்லா நினைவுகளையும் மறந்து, அருட்பசி அதிகரித்து, ஞானமுதத்தை யருந்த நினைந்தவர்களாகி ஆண் பெண் ஆகிய இரு பாலாரும், "இனியிலா இன்பவாழ்வினை எளியேம் எய்திடுமாறு விரைவினிலே திருவருள் புரிதல் வேண்டும்" என்று இறைவியின் இணையடித்துணையை இதயத்திருத்தி ப்ரார்த்திப்பா ராயினர்.

உழவ ரேருழும் மண்ணி லொளிர்கிருய்
பழகு கின்ற தொழிலிற் படர்கிருய்
செழுமை நல்குஞ் சிறந்தமெய்ஞ் ஞானிகள்
தொழுது வாழ்த்தச் சுகத்தை யருள்கிருய்.

பார்க்கு மெங்கும் பரந்துசற் ருயினும்
நீக்க மின்றி நிறைந்து விளங்கினுய்
தேக்கு மன்பு செறிந்துநின் பங்கய
மாக்க ழற்றெழு மல்கரு ளீவையே.

மந்தி ரங்களும் மற்றெதும் வேண்டிலேம்
பந்த மங்கிமுன் பஞ்சென மாய்ந்திடச்
சிந்தை நைந்து கசிந்துரு குந்திரந்
தந்து நின்றிருத் தாண்மலர் சேர்ப்பையே.

அங்கண் மாவுல காகி யுயிர்களாய்த்
தங்கி யேமிளிர் கின்றனை சங்கரீ
இங்க ணேழைக ளின்பம தேபெறப்
பொங்கு பேரருள் நல்குவை புங்கவீ.

வேத மாகி விளங்கு கலைகளாய்
நாத மாகி நவசக்தி ரூபமாய்
பூத மாகிப் பொறிபுலன் யாவுமாய்
போத மான பொருளைப் புகல்கவே.

ஆதி காரணி யாரணி நாரணி
நீதி யெங்கணு நிற்கச்செய் பூரணி
ஜோதி மன்றெழுந் தூயமெய்ப் பேரொளி
ஏத மிங்கற யாம்பெற வீவையால்.

மாசி லாதொளிர் மாணிறை கண்மணி
வாச வீயென வந்தருள் பெண்மணி
பாச மேகெடப் பாரில வாவறத்
தேசு மேவிடச் செம்பொரு ணல்குவாய்.

பூமக ளெனிற் பொன்னை யுதவுவாய்
நாமக ளெனில் நற்கலை நல்குவாய்
வாமமா தெனில் ஞானம் வழங்குவாய்
யாமெனை சொல வல்லவ ரீசையே ?

மூவ ராகி மொழியைவ ராயினுய்
தேவ மாத ரெனவுறுஞ் சீரினுய்
யாவு மாகி யிகம்பர மீவைநீ
ஏவர் பேச வியலினின் சீரையே?

ஞான வங்கி படிந்திடு நற்றவர்
ஊன மங்க ணைழித்தரு ளுத்தமி
வான வின்பம் வழங்கிடும் வாசவி
மோன துங்க நிலையை மொழிவையே.

எவ்வண் டங்களு மீன்றிடு மன்னீ
செவ்வை யாயவை காத்தருள் தேவிநீ
எவ்வ ரங்களு மீந்தெம் பிறவியாம்
பவ்வ மேழுங் கடத்துவை பார்வதீ.

அந்த மாதியி லற்புதச் சக்திநீ
வந்து தங்கி மயல்தரு மாயைநீ
ஐந்தொ ழில்களு மாற்றிடு மம்மைநீ
சிந்தை நின்றருள் செய்குவை தேவியே.

சத்தி ஸாரஸை தாமரை வாழ்திரு
சுத்தி யாகிய சொற்பொரு ணல்கீன
சித்தி யேதரு செல்வி பராபரி
முத்தி சேருமெய்ஞ் ஞானம் மொழிவையே.

இத்த ராதல மெந்தையர் வாழ்தலம்
வித்தி யாதரர் விண்ணவர் வாழ்தலம்
எத்த லங்களு மேத்திவ ணங்குநின்
சத்தி யாமிவண் சாற்றுதற் பாலதோ ?

முத்தர்க் கேயின்ப மோனம ருளுவாய்
சித்தர்க் கேயட்ட சித்தியை நல்குவாய்
பத்தர் பாடிடும் பாடற்கு ருகுவாய்
நத்திக் கேட்பவை நல்குவை நாயகீ.

மெத்த வன்பொடு மேவித் துதித்தனம்
சித்த சுத்தியுஞ் சீலமும் நல்குவாய்
வத்து தத்துவ வாய்மை விளம்புவாய்
சத்து சித்தொளி ரானந்தஞ் சாரவே.

கீர்த்தனை.

(பல்லவி)

இன்பம் பெருக ஞான மளிப்பாய் — வாசவீதேவீ
துன்ப விருளைத் தொலைப்பாய்.

(சரணங்கள்)

இந்தப் பொய் யுலகினில் எண்ணிலா இடர்ப் பட்டோம்
இறைவீ — இறைவீ — இறைவியென் றுரைத்திட்டோம் (இன்)

பந்த வினை களைந்தே பரபோகந் தருக வெம்
பரையே — பரையே — பரையே யென் றுருகுவேம். (இன்)

அன்னைதன் பிள்ளைகளுக் கருள்தாரா திருப்பதும்
அழகோ — அழகோ — அழகோவென் றலறினேம் (இன்)

தன்னை யுணருந் தன்மை தன்னைத் தெரிவிக்காமை
தகுமோ — தகுமோ — தகுமோவென் றுரைத்தோம் மெய் (இன்)

முத்திச் சுகம் பெறுது மூதுலகில் வருந்தல்
முறையோ — முறையோ — முறையோவென் றேம் நிறைந்த (இன்)

தித்தித் துளத்தி லூறுந் திவ்யவா னந்தமருள்
திருவே — திருவே — திருவேயென் றேம் மெய்ப்பொருள் (இன்)

ஒப்பில் பரமானந்த உத்தம வாழ்வை யீவாய்
உமையே — உமையே — உமையே யிவண் விரைவாய் (இன்)

தப்பிதங் களைதீக்கிச் சாந்தானந் தபதத்தைத்
தருவாய் — தருவாய் — தருவாய் குரு தேவியே (இன்)

[வேறு]

(பல்லவி)

அறிவுச் சுடர் கொளுத்தி யான்ம விளக்கந் தந்து
அருளமு தத்தை யள்ளிப் பொழிவாய்.

(அநுபல்லவி)

செறியும் பரமானந்தத் தேனைப் பருகவே
தேவீவா சவீயிவண் மேவுங் குருமணியே ! (அறிவு)

(சரணங்கள்)

பேராசை யெனும் பேய்க்குப் பிரியாவ டிமைப்பட்டே
பீடுசால் பக்தி ஞானம் யாவு மறவே விட்டே
ஏராரு மில்லந்தனம் இல்லாள் மகவென்றிட்டே
என்றுங்கெட் டலையுமெம் மனதிற் பக்தியை நட்டே (அறிவு)

ஐம்புலன் களைவென்றங் கன்பில் மனம் நிலைத்தே
ஆருதா ரமேறியட் டாங்கயோ கந்நிலைத்தே
செம்பொருள் கண்டறிந்து திவ்யாநு னம்மிலைத்தே
சீரிய மெய்யுணர்வால் ஜீமை களைத் தொலைத்தே (அறிவு)

உலகவா தனையொழித் துடலநி னைவை நீக்கி
உற்றபல் பற்றினையு மொருங்கே யகலத்தாக்கி
மலவிரு ளினைப்போக்கி மாண்பார்சு கத்தைத் தேக்கி
மாசகன்ற வுட்கண்ணு லறியுமா றெமை நோக்கி. (அறிவு)

ஓடும் மூச்சினை யீர்த்து ஊர்த்வ நாடியிற் சேர்த்து
ஒன்றே பொருளென்றுர்த்து வுண்மையொளியைப் பார்த்து
நீடும் கோபத்தைத் தீர்த்து நிறையகந்தையைப் பேர்த்து
நீள்ஜன்மப் பௌவந்தூர்த்து நிலைசார் பொலிவைப்போர்த்து (அறிவு)

("ஐயே மெத்தக் கடினம்" என்ற மெட்டு.)

(பல்லவி)

அன்னே யெமக் கருள்வாய் — இனிவிரைவில் (அன்னே)

(அநுபல்லவி)

தன்னேரி லாதொளிரும் பொன்னை நின்னருளை
இன்னேகொ டுத்துதவற் கென்னேயி னுந்தாமதம் (அன்னே)

(சரணங்கள்)

வேதாக மம்பலவும் வேதாமு தற்றேவரும்
ஏதாயெ டுத்துரைத்து மோதா வுணர்வுமிகு
சொல்லையே — யெமக் — கொல்லையே —
சொல்லில் தொல்லையே — சற்று மில்லையே (அன்னே)

மோகாதி கூனவென்றுத் தேகாதி யெண்ணமின்றி
யோகானு பவமொன்றி ஏகாதிசய மன்றைக்
காணவே — மயல் நாணவே —
ஞானம் பூணவே — மோனம் பேரணவே (அன்னே)

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளைப்
பின்னைப் புதுமைகட்கும் புன்னைப் புதுப்பொலிவை
நாடவே — உண்மை தேடவே —
நாடியோடவே — ஒன்றுய்க் கூடவே (அன்னே)

தத்வங்க ளாக்கடந்து சத்வந்த னிற்பொருந்த
அத்யந்த ப்ரேமையுந்த நித்யந்த வங்கிடந்து
சார்வே — அருள் சேரவே —
பவம் மாறவே — மனந் தேறவே (அன்னே)

(கந்தரனுபூதி மெட்டு.)

நிலையா வுடலை நிலையென் றுநினைந்
தலையா வணைமெய் யருளே புரிவாய்
கலையா வுணர்வே கடிதிந் தருள்வாய்
உலையா தொளிர்ஞா னசுகோ தநியே.

முறையோ வெனுமெம் மொழியேற் றருளிக்
குறையே தவிர்வாய் குணகோ சரமில்
நிறைஞா னமுறும் நெறிபே சுவையால்
மறைநா லுமுணர்ந் தறியா மணியே.

அரிதா கியமெய்ப் பொருளை யடியேற்
குரிதா வுபதே சமுணர்த் திடுவாய்
பரிதா பமதே பரிவாய் தவிர்வாய்
பெரிதா மறைபே சிடுமம் பிகையே.

அந்தோ வினுமெம் பவமாய்த் தருளா
தெந்தா யெனுநீ யிடரீ வதுவோ
சந்தோ டமிதோ தருமோ விவைதான்
மந்தா கினியே யுமைபார் வதியே.

பரஞா னமுணர் பதம்நீ யருள்வாய்
திரமோ னநிலை திகழ்வாழ் வருள்வாய்
உருவா யருவா யொளிர்வா சவியே
திருவே குருமா மணியே சிவையே.

எங்குஞ் செறிநின் னெழிலா ரொளியைக்
கங்குல் பகலின் றிசதா கருதிப்
பொங்கும் பரபோ தசுகப் பொலிவிற்
றங்கும் படியே யருள்வா சவியே.

இதமே யுணரா வெளியேம் மனதைச்
சதகோ டிகதிர் நிகர்நின் சரணம்
பொதுளுந் கமலப் புதுமா மலராம்
விதமே புரிவாய் விமலா பரையே.

என்றும் நினருட் சுகமே யினிதென்
றொன்றும் பரவாழ் வுறநீ யருள்வாய்
என்றம் புலியோ டெரியா மிவையே
சென்றொன் றுமிடத் தினில்வாழ் சிவையே.

பலவா மெனவே பகர்பே தமிலா
நிலையே தருவாய் நீநா னெனவே
அலையா விதமெய் யருளைப் பொழிவாய்
நலிவே தவிர்ஞா னபரா பரியே.

ஊன்மெய் யெனவாழ்ந் துணர்வின் றிகெடும்
பான்மை தனில்யாம் படரே மினிநீ
மேன்மை தருஞா னமதே மிளிர
ஆன்மச் சுகமே யருள்நா யகியே.

உண்மையன்புடனும் உருகி நெகிழ் உளத்துடனும் இவ்வா றெல்லாம் பல முறையும் ப்ரார்த்தித்துக்கொண்ட வைசிய மக்களைப் பார்த்த வாசவாம்பிகை திருவுளமிரங்கி, தமது திருவருளினால் அவர்களது வினைகளை யகற்றி வீட்டுப்பேற்றை நல்கிடும் பொருட்டு, ஆமை யானது கரைக்கண் ஈன்ற முட்டையைத் தனதகத்திற் பாவிப்பது போல, அஞ்ஞான மொழிந்து இவர்கள் தமது நிஜ ரூபத்தை யெய் துப்படி தமது திருவுள்ளத்திற் பாவித்து (அதாவது மானஸ தீட்சை புரிந்து), பின்பு, மீனனது தனது சினைகளைப் பார்ப்பதுபோல, இவர் களது சஞ்சித வினைகள் கெடும்படியும் ஆனந்தம் நல்கும் நித்யாநு பூதியை யடைப்பும்படியும், விளங்காநிற்கும் தமது க்ருபாவீக்ஷணத் தால் ஈக்ஷித்து (அதாவது நேத்ரவீக்ஷண்ய தீட்சையைப்புரிந்து), அதன் பின்னர் ஒவ்வொருவரையும் தனித்தனி யழைத்து, பறவையானது தன் சிறகினால் முட்டையைத் தடவுவதுபோல, (முடிவான ஆன்ம விசாரம் இவர்களுக்கு உதயமாகுக) ஆன்மஞான சூரியன் இவர் களிடத்து உதயமாக வேண்டுமென அஸ்தமஸ்தகஸையோகம் செய்து (அதவாது ஸ்பரிச தீட்சையைப் புரிந்து), தமது சந்நிதியில் இருத்தி "உம்முடைய பிறவியை மாற்றும் உபாயம் ஒன்றுண்டு. அதைச் சொல்லுகின்றேன். சொல்லும் வண்ணம் அனுஷ்டிப்பீரேல், அநேகாலமாய் உம்மைத்தொடர்ந்துவரும் பவங்களனைத்தும் தொலையும். உத்தம இன்பம் சித்திக்கும்" என்று கூறியருளினர்.

தீக்ஷை செய்தல்.

"தொடர் பவந்தொலையும்; உத்தம இன்பம் வாய்க்கும்" என்று சொன்னதைக் கேட்டபோதே தடமடு மூழ்கினர்போல் மனவெப்பந்தணிந்து, சரீரமுங்குளிர்ந்து, அடரும் அன்பு ஒழுகுமா போல் ஆனந்த பாஷ்பம் பெருக, அவ்வம்பிகை யின் மடல் மலர்ப் பாதங்களை மீண்டும் வணங்கி நின்று, "சொன்னபடி கேட்டு நடக்குந்திறமை எம்மிடம் இல்லாவிடினும், அத்திறமை அடி யேங்கட்கு வாய்க்குமாறு திருவருள் புரிந்து எம்மை யாட்கொண்டு, பிறவியை மாற்றும் பேரின்ப நெறியினை இன்னதென்றெமக்குக் காட்டி யீடேற்றல் வேண்டும். உலகின்கண் அரசராயினோர், தமது ஆணைவழிச் செல்லாதோரைச் சதுர்வித வுபாயங்களான் வசமாக்கி

வைசியரின் வேண்டுகோள்.

தமது ஆணைவழியே செலுத்தி யாள்வதுபோல (நீர் எமக்கரசியாக லானும், நீரே எம் தாய் தந்தை குரு அரசன் தெய்வம் அனைத்துமாக லானும், யாங்கள் நுமது அடியார்களாகலானும்,) எவ்வாற்றானும் எம்மையாண்டருள்புரிதல் உமக்குக் கடனேயாகலானும், எவ்வகை யானும் நீரெம்மை யாளலாமே! ஆகலான், இனித் தாமதியாமற் கருணைகூர்ந்து எம்மை உய்விப்பீராக!" என்று மீண்டும் மீண்டும் பணிந்து விண்ணப்பித்துக் கொண்டனர்.

இவர்கள் அகம்பாவ விருத்தி யொடுங்கினவர்களென்பதை யுணர்ந்த நமதம்பிகை, (குளவியானது புழுவைக் கொட்டிப் பார்த்து, மிகத்துடிப்பதையும் துடியாமற் கிடப்பதையும் ஒழித்து மத்திய துடிப் புடையதைச் சோதித்து எடுத்துவந்து நெருங்கிய மண்ணிலுளாகிய கூட்டுக்குள்ளே வைத்து, அப்புழுவுக்குமுன்னே யிருந்து, அக் கூடந் தன்னுருவமாகும்படி தொனிசெய்யுமாறு போல) இவர்கள் சாபாச வந்தக்கரணவுபகிதமான தமது விசேட ரூபத்தைத் தாதான்மிய மாகப் பொருந்தவேண்டி, இவர்களது தேகத்தினுள்ளே சாபாச வந்தக்கரண விசிட்டனை ஜீவனைப்பார்த்து உபதேசஞ் செய்வாராயினர்.

ஆத்ம ஞான உபதேசம்.

"பிரத்தியகபின்ன பரமான்மாவான தன்னை 'நான்யார்?' என்று விசாரித்தறியாதவன், சுர நர திரியக்காதி யோனிகளிற் ஜனித்து மரித்து, நீங்காத சுழல்காற்றிலகப்பட்ட த்ரணம்போல, இகலோகத்தினின்று பரலோகத் திற்குப் போவதும், பரலோகத்தினின்றும் மீட் டிகலோகத்தில் தலைகீழாக வீழ்வதுமாய், ஒழி யாத கால சக்ரமாகிய சுழற்சியிற் சுழலாநிற்பன். ஞானதிருஷ்டி யினல் யானுரென்று விசாரித்தரியத்தக்க பிரத்தியகான்மாவான தன்னைப்ரம்மமென்று சாட்சாத்கரிக்கும் பரியந்தமும் இச்சுழற்சியிற் சுழலவேண்டியவனுகிருன்.

ஆபாசனை தன்னையும், தனக்கு ஆதாரமாகிய கூடஸ்தனையும், ஒருவன் கண்டானுயின், கண்டபின்னர், அத்தலிவன் தானுய், கூடஸ்தனை நானே ப்ரம்மமெனும் அனுபூதிபுடையவனுய், ஜனனத் தினின்றும் விடுபடுவன். நீவிர் இப்படி உமது நிஜஸ்வரூபமான கூடஸ்தனை 'அஹம்ப்ரம்மம்' என்று அறிந்தீராயின், உமக்குச் சம் ஸார அனர்த்தங்களுள்ளே ஓரனர்த்தமும் உளதாகவில்லை. நீவிர்

அந்த ஆனந்தக்கடல் வடிவேயாவீர். என்னை நீர் சரணடைந்து கேட்டமையினாலே அதிரஹஸ்யமான இதனை உமக்கு உபதேசிக்கின்றேன். இது ஏனைய உபதேசங்களைப்போலச் சாதாரணமாக உபதேசிக்கத் தக்கதன்று. இஃது மிகவும் அருமையானதாகும்.

ஒப்பற்ற ப்ரம்ம ஸ்வரூபமே எங்கும் ஏகமாய் பிரகாசிக்கின்றது. அத்விதீயமாய், அரூப அக்கிரிய அவ்யக்த அவ்வியய அப்பிரமேய ஆதியந்தரஹித சத்திய சாந்த பரிசுத்த ஆனந்தரஸ சொரூபமாய், மாயையாற் செய்யப்பட்ட சர்வ பேதங்களுமின்றி, நித்ய நிரந்தர நிஷ்கள நிரஞ்சன நிர்நாம நிர்விகற்ப சுயஞ்ஜோதியாய், ஞாதுரு ஞான ஞேய மென்னும் த்ரிபுடிசூன்ய கேவல அகண்ட சின்மாத்ரமாய் சதா ப்ரகாசிக்கும் பரப்ரம்ம தத்துவத்தை அறிகின்றவனே ஞானி.

மஹாவாக்ய உபதேசம்.

பற்றவும் விடவும் கூடாததாய், மன வாக்குகளுக்கு அகோசரமாய், அப்பிரமேயமாய், ஆதியந்தமற்றதாய் விளங்கும் பரிபூர்ண ப்ரம்மமே யானும், நீங்களும், இவ்வுலகமும், இன்னும் அனேக மஹா வாக்யங்களும் ஸ்வபாவ ஐக்கியத்தை நன்றாய்க் கூறுகின்றன.

சாமவேதத்தில், சாந்தோக்ய உபநிஷத்தில், ஸ்வேதகேது என்பவனுக்கு அவனது பிதாவான உத்தாலக முனிவர் வாயிலாக இந்தத் 'தத்துவமஸி' மஹா வாக்யம் கூறப்பட்டுள்ளது.

அதன் சுருக்கமான பொருளை ஞாபகப்படுத்துகின்றேன். 'தத்' என்றது—அது; ஜகத்தை யுற்பத்தி செய்கின்ற சர்வ சக்தி, சர்வஜ்ஞத்வம் ஆதிய தர்ம சகிதனை ஈசுவரன். 'துவம்' என்றது-நீ: அற்ப சக்தி, கிஞ்சித்ஜ்ஞத்வம் ஆதிய தர்மங்களையுடைய ஜீவன். 'அஸி' என்றது—ஆகின்றாய்; இங்கே 'அது நீ ஆகின்றாய்' என்பது அதனுடைய வாச்சியார்த்தமாகும்.

இப்படிச் சொல்லுவதனால் (வாச்சியார்த்தத்தினால்) ஈசுவரனுக்கும் ஜீவனுக்கும் ஏகத்வம் (ஐக்யம்) தோன்றவில்லை. அது கூடாது; எனெனில், ஈசுவரன் சர்வ சக்திமான்; ஜீவன் அற்ப சக்திமான். ஈசுவரன் சர்வஜ்ஞன்; ஜீவன் அற்பஜ்ஞன். ஈசுவரன் விபு; ஜீவன் பரிச்சின்னன். ஈசுவரன் ஸ்வதந்திரன்; ஜீவன் கர்மாதீனன். ஈசுவரன் பரோக்ஷன்; ஜீவன் பிரத்யக்ஷன். ஈசுவரன் மாயையைத் தன் வசம் பண்ணினவன்; ஜீவன் அவித்யா மோஹிதன்.

இவ்வாறு நோக்குகையில் வாச்சியார்த்தத்தினால் ஐக்யம் கூடாது. அதனால் இதற்கு வேறு உபாயம் தேடவேண்டும். என்ன வென்றால், சுருதிகளில் சொல்லும் வாக்கிய அர்த்தங்கள் பொருந்தாமல் விரோதமாமேல், விரோதமின்றி நன்கு அர்த்தமாகும் வண்ணம் இலட்சணை வாக்கியத்தால் பொருள் கொள்வதென்பது வடநூல் மரபு. ஆதலால் அவ்வாறு இலட்சணை வாக்கியத்தால் பொருள் கொளல் வேண்டும். அத்தகைய இலட்சணைகள் மூன்று வகைப்படும். அவை யாவன :- (1) ஜஹல் (விட்ட) லட்சணை; (2) அஜஹல் (விடாத) லட்சணை; (3) ஜஹதஜஹல் (விட்டு விடாத) லட்சணை; என மூன்றும்.

அவற்றுள், வாச்சியார்த்த முழுவதும் விட்டு வாச்சியார்த்தத்தோடு சம்பந்தப்பட்டதை யுணர்த்துவது ஜஹல் (விட்ட) லட்சணை எனப்படும். ஒருவன் 'கங்கையில் கிராமம் இருக்கிறது' என்று சொல்லுகிறான்; அங்கே 'கங்கை' என்னும் பதத்தின் வாச்சியார்த்தம் தேவ நதியின் நீர் ப்ரவாகமாம்; அதன் கண்ணே கிராமத்தின் ஸ்திதி இருக்க நியாயமில்லை. ஆகலின் நாம் அக் கங்கா ப்ரவாஹத்தோடு சம்யோக சம்பந்தப் பட்டுள்ள தீரத்தில் (கங்கா நதிக்கரையில்) அந்த கிராமம் இருக்கிறதென்று பொருள் கொள்ளுகின்றோம். 'கங்கை' என்ற பதத்தின் வாச்சியமாகிய பிரவாகத்திற்குத் தீரத்தோடு உளதாகும் சம்பந்தமே லட்சணை என்பது. வாச்சிய முழுதும் தியாகம் பண்ணுவதால் (விட்டு விடுவதால்) இது **விட்ட லட்சணை.**

வாச்சியார்த்தத்தோடு கூட அத்துடன் சம்பந்தப்பட்டுள்ளதின் ஞானமும் சேர்ந்து பொருள் தரும் இடங்கள் சில உள. எங்ஙனமெனின் :— ஒருவன் இரண்டு பசுக்கள் சந்தையில் வாங்கி வந்தான்; ஒன்று கறுப்பு நிறமுடையது; ஒன்று வெண்மை

நிறமுடையது; இவற்றை வாங்குகையில் அவனுடைய நண்பனும் உடனிருந்தான். பசுக்களை வாங்கினவன் விட்டுக்குப் பசுக்களுடன் வந்து சேர்ந்தான். இரண்டு நாட்கள் சென்ற பின், ஒரு தினம் இரவு கறுப்புப் பசு எங்கேயோ ஓடிவிட்டது. வாங்கி வந்தவன் மறு நாட் காலை பசுத் தொழுவத்திற்குச் சென்றபோது கறுப்புப் பசு காணவில்லை. ஓடிவிட்டதென்பதை உணர்ந்தான். அப்போது அவனுடைய நண்பன் அங்கு வந்தான். உடனே பசுவின் சொந்தக்காரன் தன் நண்பனைப் பார்த்து "அண்ணே! கறுப்பு ஓடிவிட்டது; வெள்ளை தான் நிற்கிறது" என்று சொல்லுகிறான். "கறுப்பு" "வெள்ளை" என்னும் பதங்கள், கருமை, வெண்மை என்ற நிறங்களைத் தெரிவிக்கத்தக்கன; ஆனால் கருநிறம் வெண்ணிறம் இரண்டும் ஓடவும் நிற்கவும் வல்லனவா? அல்ல; ஆதலால் இங்கே கருமையும் வெண்மையும் நிறத்தை யுணர்த்துவது மாத்திரமன்றி, அந்நிறங்களை யுடைத்தான பசுக்களையும் உணர்த்துகின்றன. கருமை வெண்மை எனும் குணங்கள், குணிகளான பசுக்களோடு யாதொரு தாதாத்மிய சம்பந்தத்தைக் கொண்டுள்ளனவோ, அச் சம்பந்தந்தான் (வாச்சியத்தை விடாமல் அதிகத்தைக் கிரஹணம் செய்யக்கூடிய) விடாத லட்சணையாம்.

எந்த இடத்தில் பதத்தின் வாச்சியார்த்த மத்தியில் ஓர் பாகம் நியாகமும், ஓர் பாகம் கிரஹணமும் ஏற்படுகிறதோ, அந்த இடத்தில் பாகத் நியாக லட்சணை (ஜஹதஜஹல் லட்சணை) உண்டாகின்றது. அதாவது வேங்கி நாட்டில் ஒரு அரசன் இருந்தான். அவனுக்கு கோபாலன் என்ற ஒரு ஆப்த நண்பன் இருந்தான். கோபாலன் பூ வலம் செய்யவேண்டுமென்றெண்ணினான்; புறப்பட்டுவிட்டான்; சுமார் 20, 30 வருஷ காலம் பிரயாணம் செய்தான்; அதன் பின் காசி க்ஷேத்ரத்தில் வந்து சேர்ந்தான். அதே சமயத்தில் வேங்கிநாட்டரசனும் காசி யாத்திரை சென்றிருந்தான். ஆனால் அவன் அரச வேஷத்தோடு இல்லை. அவன் தனது அரச பட்டத்தைத் தன் குமாரனுக்கு அளித்துவிட்டு, பக்தி, யோக மார்க்கங்களில் ஈடுபட்டவனாகி, சந்நியாசக் கோலங்கொண்டு க்ஷேத்ராடனம் செய்து வருகிறான்; இத்தகைய சந்தர்ப்பத்தில் இருவரும் ஸ்ரீ விசாலாட்சி ஸந்நிதியிலே சந்தித்தார்கள்; சந்நியாசி வேடத்தோடு சென்ற அரசனது முகத்தைக் கோபாலன் பன்முறையும் உற்று நோக்கினான்; முன்பு நன்கு

பரிச்சயமுள்ள முகம்போலத் தோன்றுகின்றது. சந்நியாசி வேடத்துடன் இருந்ததால் நன்கு புலப்படவில்லை. பிறகு தன் மடியில் வைத்துக்கொண்டிருந்த பொன் தகட்டை எடுத்தான். அதில், ஏற்கனவே அவன் வேங்கி நாட்டிலிருந்தபோது, அரசன் தன் உருவத்தை அமைத்துத் தன் நண்பனுக்குத் தந்திருந்தானதலால், அவ்வுருவத்தை ஒப்பிட்டு நோக்கலானான். அரச உடைகளையும், சந்நியாச உடைகளையும், கருதினால் விரோதம் தோன்றுகின்றன. முகம், கை, கால், அவயவங்கள் முதலியன ஒத்திருக்கின்றன. பேசும் குரலும், நடையும், குண நலனும் தன் நண்பனுகிய அரசனைப்போன்றே இருக்கின்றன. உடனே வேஷ விரோதத்தை யகற்றி, அரசன் என்பதை மனதில் திடம் செய்துகொண்டு அளவளாவினான். இங்கே அவ்வரசனுடைய நாடு இல்லை; காலம் இல்லை; ராஜ்யபாரம் இல்லை; அதிகாரம் இல்லை; அரச உடைகள் இல்லை; ராஜ பிருதுகள் இல்லை; இவற்றையெல்லாம் கவனிக்காது தள்ளினான்.

அங்க அமைப்பு, நடை, குரல், குணம், இவை உள; அவற்றைக் கொண்டான்; "அரசனே சந்நியாசியாக மாறி வந்துள்ளான்" என நிச்சயித்தான். தேசகால வர்த்தமானங்களை விடுத்து, தேஹ, குண அமைப்புகளைமட்டும் கொள்வதால் இது விட்டு விடாத லட்சணை எனப்படும்.

இந்த மூன்று வகைகளில் மூன்றுவதாய்ச் சொன்ன விட்டு விடாத லட்சணையால்தான் நாம் இம் மஹா வாக்யத்தின் பொருளை நிச்சயித் துணரவேண்டும். ஐக்யங் கூட்டவேண்டும்.

எப்படியென்றால் ஈஸ்வரனுக்கும் ஜீவனுக்கும் பெயரிலும் வேடத்திலும் தொழிலிலும்தான் விசாசப்; ஆனால் அவன் என்று உண்டோ, அன்றே இவனும் உண்டு. அவன் எப்படி அறிவுமயனோ, அப்படியே இவனும் அறிவுமயன். அவனும் அழிவிலான், இவனும் அழிவிலான்; நாமரூபங்க ளனைத்தும் நாசமாகத்தக்கன; ஆதலால் அவற்றை (நேதி செய்து) அல்லவென்று நீக்கி, கற்பிதமாய் அசத்தியமான திருஷ்டி விருத்த உபாதிகளை இரண்டிடத்தும் யுக்திகொண்டு நீக்கி, முறையே ராஜ்யபார காஷாயாதி உபாதிகளை நீக்கியபோது, அரசனும் சந்நியாசியும் மனுஷ்யத்துவத்தாலொன்றானது போல,

(அவனே இவன்; இவனே அவன்; என்றுற்போல) ஈசுவர ஜீவ ரெனும் பேதமின்றி, (சின்மாத்ரமாய்) '**அதுவே நீ;**' '**நீயே அது;**' என்று அகண்டேக ரஸமாய், விருத்தமின்றிச் சேஷித்து (மிஞ்சி) நின்ற சுத்தமான லட்சியார்த்தத்தால் சுபாவ ஐக்கியத்தை நன்றாய் உணருதல் வேண்டும்.

அப்படியே "**அயமாத்மா ப்ரஹ்மம்**" என்னும் மஹா வாக்யம் 'எல்லோருக்கும் அபரோக்ஷமான ஆன்மாவே ப்ரம்மமாம்' என்பதையும், "**அஹம் ப்ரஹ்மாஸ்மி**" என்னும் மஹா வாக்யம் 'நான் ப்ரம்மமா யிருக்கிறேன்' என்பதையும், "**ப்ரஜ்ஞான மானந்தம் ப்ரஹ்மம்.**" என்னும் மஹா வாக்யம் 'ஆன்மாவுக்கு அபின்ன மான ப்ரம்மம் ஆனந்த ரூபமாம்' என்பதையும் வாக்கியார்த்தங்க ளாகக் கொண்டு விளங்குகின்றன.

மஹா வாக்யங்களிற் போல அந்நிய வாக்யங்களிலுள்ள சத்திய ஞானானந்த பதங்களும் சுத்த ப்ரம்மத்தைப் பாகத்தியாக லட் சணையினாலேயே உணர்த்துகின்றன;

"அது நீயாகும்" "நீ யதுவாகும்" என்று ஓதப்புரோத பாவமாக அபேதம் சொன்னது, முறையே பரோட்ச ப்ராந்தியும், பரிச்சின்னத்வ ப்ராந்தியும் நிவர்த்தியாகும் பொருட்டாம். "**அது நான்**" "**நான் அது**" என மாறிச் சிந்திப்பதை ஓதப் புரோத பாவம் என்பர்.

இந்த ப்ரம்மாத்ம ஐக்ய அகண்ட பாவத்தைச் சதா சர்வகால மும் பரிசயித்துக் கொண்டிருப்பவர்களே ஞானிகள் எனப்படுவர். ஆதலால் ஒவ்வொருவனும் தேகாதி அசத்துக்களை 'நானன்று' என நன்றாய் அபவாதித்து, சொத சித்தமாய் ஆகாசம் போல் அதிசூக்ஷ மமாய் எப்போதும் பிரகாசிக்கும் சத்திய ஞானானந்த பரிபூர்ண ப்ரம்மமே நான் என்று தெளிவான புத்தியால், தன்னைத்தான் அறிதல் வேண்டும்.

மண்ணிலுண்டாகி மண்மயமாகவே இருக்கும் கடாதி சகல மும் மண்ணே. அஃதேபோல், சத்ரூபப் ப்ரம்மத்திலுண்டாகி ப்ரம்ம மயமாகவே இருக்கும் இவ்வுலகனைத்தும் ப்ரம்மமே.

சொப்பனத்தில் நித்ரையால் கற்பிக்கப்பட்டு அன்னியம்போல் தோன்றும் தேக கரண பிராண அஹங்காராதி ஜகம் சுத்த மித்தை. தன்னில் அன்னியமாய் எதுவும் இன்றி சத்தியமாய், ஆத்மாவாய் இருக்கும் அதிசாந்த நிர்மல அத்வைத ப்ரம்மம் எதுவோ, சத்தியமாக **அது நீயாகிறாய் (தத்வமஸி)**. ஜன்மாதி ஷட்பாவ விகாரங்களும், பசி தாக சோக மோக ஜரா மரண மென்னும் ஷடூர்மிகளும், தேச கால விஷயாதிகளுமின்றி, சுயம் ப்ரகாஸமாய்ப் பொலிவது ப்ரம்மம்; சகல வாக்குகளாலும் அறியப்படாது ஞானக்கண்ணால் அறியப் படுவது ப்ரம்மம்; யோகிகளது ஹிருதயத்தாற் பாவிக்கப்படுவது ப்ரம்மம்; மற்றக் கரணங்களாற் பாவிக்கப்படாதது ப்ரம்மம்; ஸ்தூல புத்தி அறிதற்கரியது ப்ரம்மம்; பிராந்தி கற்பித மித்யா ஜகத்திற்கும் தனக்கும் தானே ஆதாரமாய், ஜகத் சிருஷ்டி ஸ்திதி நாசங்கட்கு ஹேதுவானதாய் விளங்குவது ப்ரம்மம்; காரிய நாமரூப சர்வ ஜகத்திற்கும், தனக்கும் வேறு காரணமின்றிய பரமகாரணமாயினும், காரணகாரிய விலட்சணமா யொளிர்வது ப்ரம்மம்; ஸத் அஸத் விலட்சணமானது ப்ரம்மம்; கூஷர (மாயா காரியம்) அகூஷர (மாயை) விலகூஷண பரமாகூஷரமானது ப்ரம்மம்; பிரமையால் சுவர்ணம்போல் நாமரூப குண விகார பேதமாய்த் தோன்றினும் நிர்நாம நிரூப நிர்க்குண நிர்விகார நிர்ப்பேதமானது ப்ரம்மம்; நிஸ்தரங்க சமுத்திரம் போல நிச்சலமானது ப்ரம்மம்; நித்ய நிஷ்கள நிரஞ்ஜன நிருபம நிர்விகற்ப நித்ய முக்த அவ்யய அனுதிபரிசுத்த பராத்பர பிரத்யக் அகண்ட பரிபூர்ண சத்திய ஞானகன அனந்த ஆனந்த ஏகரசமா யுள்ள அந்த பிரம்மமெதுவோ சத்தியமாய் "**அது நீ ஆகிறாய்**" **(தத்வமஸி)**. இதனையே எல்லா மஹாவாக்யங்களும் விளக்குகின்றன.

இவ் வர்த்தத்தை யுக்தியோடு சூக்ஷ்ம புத்தியால் ஹ்ருதயத்தில் பின்னமின்றி எப்போதும் சிந்தை செய்யவேண்டும். அதனால் கரதல ஜலம்போல் சம்சயமின்றிய தத்துவஞான முண்டாகும். சேஷ சமூக மத்தியில், தேகாதி சங்காதங்கட்குள் ஞானமாத்ரமாயிருக்கும் பிரம்மரூப ஆத்மாவை விவேசித்து அறிந்து, அதற்கு அன்னியம்போல் தோன்றும் திருஷ்ய வர்க்கங்களை அவ்வஸ்துவாகவே பிரவிலாபித்து, அவ்வாத்மாவாகவே எப்போதுமிருந்து ஆனந்தமுற்று உபசாந்தநிலை எய்தவேண்டும்.

புத்தியாகின்ற குகையிலே ஸத்அஸத்துக்கு விலட்சணமான அத்விதீய சத்திய ப்ரம்மவஸ்து இருக்கின்றது. எவன் அவ்வஸ்து வாகவே எப்போதும் அந்த ஹ்ருதய குகையில் ஸ்திரமாய் வசிக்கின் றானே அவனுக்குப் பின்னர் சரீரகுகையிற் பிரவேசமேயில்லை (பிறப்பில்லை).

ஞானயோகி.

தானே தானாகி அன்னியமென்னாது, தன்னிலை யொளிர்ந்து தனது யோக சக்தியைப் பரப்புவோனே, மஹா முனிவரிற் சிறந்த ஜீவன்முக்தன். தன்னையடைந்தவரின் ஆத்ம ப்ரகாசத்தைத் தனது கண் பட்ட மாத்திரத்தில் கருணையுடன் தூண்ட வல்லவனே மஹா யோகி. தனது அகண்ட தவ மஹிமையால், தன் சந்நிதி மாத்திரத்தில் சாந்தமளித்து, ஆத்ம ஞானத்தைத் தூண்டுபவனே மக்களிடை அமுதக் கடல் போலப் பொலிபவன். ஜோதிமலை போன்றவன். அவன் எதுவும் பேசாவிடினும், எதையும் செய்யாவிடினும் அவன் எண்ணம் நிறைவேறும்; அவன் உண்மை எங்கும் பரவும். அவன் எதொன்றையும் எண்ணிவிடினும் தக்கன யாவும் தன்னால் நடக்கும். அத்தகைய உத்தம மஹான்களால் எல்லா உலகங்களும் நன்மை யடைகின்றன என்றால் அது மிகையாகாது.

உள் நோக்கம்.

உத்தம ஞானியின் கண் பார்வை பட்டாலே எவ்வகைத் துன்பமும் இருக்குமிடம் தெரியாது மாயமாய்ப் பறக்கும். துன் பம் என்பது அவரவருடைய மனதில் தோன்றும் பிராந்தியே யாகும். ஒவ்வொருவரும் தமது உள் நோக்கத்தினால் தம்முள்ளே பரமாத்ம வொளியைக் கண்டார்களேயானால் அப்போது அந்த பிராந்தி அனைத் தும் அடியோடு தொலைந்துவிடும். அப்பரமாத்ம வொளியை மூளை யில் காணவேண்டும். ப்ரம்மரந்த்ர ஸ்தானத்தில் காணவேண்டும்.

நித்யானந்த வஸ்துவாகிய பரப்ரம்மத்தின் ரஹஸ்யத்தைப் பார்த்து தெளிந்து கொண்டாட வேண்டும். ஹ்ருதயாகாசத்தில் அவனைப் பார்க்கவேண்டும். ஸ்தூலக் கண்ணினால் பார்க்கக்கூடியதல்ல; சூக்ஷ்ம த்ருஷ்டியினால் பார்த்தல் வேண்டும். உள் பார்வையினால் ராஜமார்க்கத்தில் பார்த்தல் வேண்டும். கீழே போகும் மார்க்கத்தை

விட்டு, நடுவழியைப் பிடித்துச் சேரவேண்டும். கடவுளின் ரஹஸ்யத்தை அறியாமல், தங்கள் வெறும் சரீரங்களை அலங்கரித்துக் கொள்ளுபவர்கள் செல்லும் மார்க்கம் அதோகதி (கீழ் நோக்கிய மார்க்கம்) ஆகும்.

உலக சுகத்தை விடுத்து, சூக்ஷ்மமாய் நோக்கி, நித்திய ஆனந்தத்தை அனுபவிக்க முயலவேண்டும். சாதாரண தூக்கத்தை விட்டு, சூக்ஷ்ம நித்ரையைச் செய்யவேண்டும். எப்பொழுதும் இடைவிடாத ஆனந்த நித்திரையைச் செய்யவேண்டும். **மனதின் பிரமையை சுட்டுத் தொலைத்துவிட வேண்டும்.**

நீங்கள் இளம் வயதில் உபநயனம் செய்துகொண்டுள்ளீர்கள். மூப்புரி நூல் அணிந்துள்ளீர்கள். உபநயனம் என்பது ஞான நேத்திரமாம். அந்த மூன்றும் கண்ணிலல், அன்னிய பாவனைகளின்றி, சம பாவனையைச் செய்தல் வேண்டும். எல்லா உயிரும், எல்லா இடமும், அகமும் புறமும், அல்லும் பகலும் அனைத்தும் ப்ரம்ம ஸ்வரூபமாகக் காணவேண்டியதுதான் **உபநயனத்தின் முக்ய லக்ஷியம்.**

பூணூலணியும் காரணம்.

முக்குண சம்பந்தமான இந்தத் தேகம் நானன்று. மும்மல சம்பந்தமான இந்த சரீரம் நானன்று; மனம் வாக்கு செய்கை யாதிய த்ரிகரணங்களும் நானன்று; ஸ்தூல சூக்ஷ்ம காரணங்களாகிய மூன்று தேகங்களும் நானன்று; ஜாக்ர ஸ்வப்ன சுஷுப்தி யாகிய மூன்று அவஸ்தைகளும் எனக்கின்று. த்ரிபுடி சம்பந்தமான இவ்வுலகம் என்னைப் பற்றவில்லை. தாரபுத்ர தனஷணைகள் என்னைப் பற்று. காமம் வெகுளி மயக்கம் என்னும் முக்குற்றங்களும் என்னை அணுகா. ஆகாமியம் சஞ்சிதம் ப்ராரப்தம் எனும் மூன்று வினைகளும் என்னைவிட்டு விலகிவிட்டன. என்னை எதுவும் அணுகாது. நான் உலகுடன் ஒட்டவில்லை. நான் உலகில் இருந்தாலும், மோரில் கிடக்கும் வெண்ணை உருண்டையைப் போலும், தாமரையிலை மேல் இருக்கும் நீரைப் போலும், ஓட்டுக்குள்ளே இருக்கும் புளியம்பழம் போலும், உடலோடும், உலகோடும், வாசனைகளோடும் சம்பந்தம் சிறிதுமின்றி தனித்துள்ளேன், என் பதத்

தெரிவித்தற்காகவல்லவா நீங்கள் பூனூல்(முப்புரிநூல்) தரித்துக்கொண்டிருக்கின்றீர்கள்? ஆதலால் இவை அனைத்தையும் புறம்பே விலக்கி, தனிமையில் நின்று, தன்னுள் அனைத்தும் கண்டு, 'யாவும் நானே; எங்கும் நானே; நானே ப்ரம்ம ஸ்வரூபம்;' என்று ஏகாந்தப் பேரொளியின் திவ்ய திருக்காட்சியைக் கண்டு அதோடு கலந்து, அதனுள் மூழ்கி அதன் மயமாகி ஆனந்தமெய்துதல் வேண்டும்.

நிராசை.

உலக சம்பந்தமான ஆசைகளை வேருடன் அறுத்துத் தள்ளும் விஷயத்தில் திடமான தைரியம் கொள்ளவேண்டும். மஹா அறிவாளர்கட்கும் அஞ்ஞான சந்தேக விபரீதங்கள் தோன்றிவிடும். ஏனெனில், பூர்வம் நானாவித ஜனனங்களிற் பழகிவந்த பழக்கத்தினால் அந்தப் பூர்வ வாசனைகள் அதி திடமாயுதித்து உயர் ஞானசாதனத்தைக் கெடுக்கும். அப்பியாசி அத் தருணத்தில் மிகுந்த ஜாக்கிரதையுடன் இருத்தல் வேண்டும். இவ்வஞ்ஞான சந்தேக விபரீதங்களை, கேட்டல் சிந்தித்தல் தெளிதல் என்கிற ஸ்ரவண மனன நிதித்யாஸனங்களினாலே தைரியத்தோடு கூடி நின்று நாசம் பண்ணுதல் வேண்டும். ஹ்ருதயத்தில் நிராசையை நிலைநாட்டவேண்டும். வேண்டாமையன்ன விழுச் செல்வத்தைப்போல யாண்டுங் கிடைக்காது. ஆதலால் 'உலக சம்பந்தம் வேண்டாம்' என்கிற நிலையிலேயே இருந்து பார்க்க வேண்டும். பேத புத்தியை விட்டுவிடவேண்டும். 'நான்' 'நீ' என்கிற பேதங்களைச் சுட்டுத் தள்ளிவிடவேண்டும். அப்போதுதான் ப்ரம்மாத்மைக்ய ஞானம் சித்திக்கும்.

சந்தேக விபரீதங்கள்.

பிரம்மபாவனையை மூடிப் பேதங்காட்டுவது, அதாவது 'நான் பிரம்ம மல' என்று எண்ணச்செய்வது அஞ்ஞானம். குரு வாக்கியத்தை நம்பாமற் குழம்புவது, அதாவது 'நான் பிரம்மோ? அலனோ?' என்று சமுசயப்பட்டுக் கலங்குவதே சந்தேகம். அநித்யமான உலகை ஸ்திரமென்றும், மாமிசத்தாலான தேகமே நான் என்றும் அகத்தே பொருந்துவதாகிய மோகமே விபரீதம். தத்துவ அநுபோகமாகிய பிரம்மாகார விருத்தியை வேதாந்த அர்த்த சிந்தனத்தினாலே, தான் அடிக்கடி ஆவிர்த்தி செய்தலாகிய ஸ்ரவணமும், ஸ்ரவண சம்மதமான பொருளை, அபேதத்தைச் சாதிப்பதும் பேதத்தை வாதிப்பதுமாகிய யுக்தியினால் ஆராய்தலாகிய மனனமும், சித்தம் ப்ரம்மாகார

மாத்ர மாகவே நிற்கும் அனுபவமாகிய நித்யாசனமும் ஆகிய இம் மூன்று ஔஷதங்களால்தான் மேற்சொன்ன ப்ரதிபந்த வியாதிகளைத் தீர்க்க இயலும் என்று மீண்டும் ஞாபகப்படுத்துகின்றேன்.

சமரச அன்பு.

ஆதி மதம் ஒன்றே யாகும்; அதுதான் **அன்பு மதம்**; அது தான் உண்மையான மதம்; அதுதான் ஒப்புயர்வற்ற மதம்; அது தான் சுகந்தரத்தக்க மதம்; அதுதான் ராஜமார்க் கம்; அதுதான் ஞான மார்க்கம். அன்பு மதத்தைக் கைக்கொள்வோர்க்குப் பேதபாவனையே இருத்தல் கூடாது; முதலில் 'ஸ்த்ரீ' 'புருஷன்' என்பதே ப்ரகிருதி குணத் தில் (வெளிப் பார்வையில்) தான். சூக்ஷ்ம த்ருஷ்டியில் எல்லாம் ஒன்றுதான். எங்கும் சமத்வம்; சகோதரத்வம்; ஏகத்வம் நிலவுதல் வேண்டும். உள்ளே இருக்கிற சூக்ஷ்ம ஆத்மாவுக்கு குணதோஷங் கள் இல்லை. அந்த சூக்ஷ்ம ஆத்மாவுக்கு ஒரே லக்ஷணம்–இடைவிடாத ஆனந்தந்தான். பார்ப்பது, கேட்பது முதலான யாவும் மனதின் பிரமை. உலகத்தில் எவையும் ஸ்திரமல்ல.

மருள்.

நிழலைப் பார்த்து மருள்வது வேண்டாம். மாயை என்பது பாசத்திற்கு உட்படுத்தி மருட்டுவது. அது சூக்ஷ்மத்தையும் மறைவு படுத்தும். ஸ்தூலத்தையும் மறைவு படுத்தும். 'இது ஸ்தூலம்' 'இது சூக்ஷ்மம்' என்று அறியாமையால் பிரமை கொள்வது மாயை (பிரமை)யே. ஸ்தூல பிரமை ஒரு நாழிகைக்குள் அளவற்ற வகைகளாய் மாறும். நானாவித மருட்சிகளும் தோன்றும். "அது வேறு" "இது வேறு" என்ப தெல்லாம் மருளே யாகும். எல்லாம் அவரவரது மனதின் பிரமை. தமது ஹ்ருதயத்துக் குள்ளே நித்யானந்தமாய் இருக்கும் நித்யாத்மா வைப் பார்க்கவேண்டும். உண்மையர்கப் பார்க்கவேண்டும். கேட்ட வார்த்தைகள் சாஸ்வத மாகா. கேட்ட வார்த்தைகள் ஆனந்தமு மாகா. பிடித்த பிடியாய்ச் சாதித்து அனுபவித்துப் பார்ப்பதில் ஏற் படும் விளைவே ஆனந்தமாகும்.

மனமற்ற நித்ரையில் தினம் அனுபவிக்கிற தன் ஸ்வபாவமான அச்சுகத்தை விழிப்புடன் அடைதல் வேண்டும். அவ்வாறு அடை தற்குத் தன்னைத்தான் அறிதல் வேண்டும். அதற்கு **'நான் யார்?'** என்னும் ஞான விசாரமே முக்ய சாதனம்.

நான் யார் ?

சப்த தாதுக்களாலாகிய ஸ்தூல தேகமா? அல்ல. சப்த ஸ்பரிச ரூப ரஸ கந்தமென்னும் பஞ்ச விஷயங்களையும் தனித்தனி அறிகின்ற சுரோத்திரம் துவக்கு சக்ஷுஸ் **ஆத்ம விசாரணை.** ஜிஹ்வை கிராணமென்கின்ற ஐந்து ஞானேந்திரியங்களா? அல்ல. வசனம் கமனம் தானம் மல விசர்ஜனம் ஆனந்தித்தல் என்னும் ஐந்து தொழில்களையும் செய்கின்ற வாக்கு பாதம் பாணி பாயு உபஸ்தம் என்னும் ஐந்து கர்மேந்திரியங்களா? அல்ல. சுவாஸாதி தொழில்கள் ஐந்தையும் செய்கின்ற பிராணாதி பஞ்ச வாயுக்களா? அல்ல. நினைக்கின்ற மனமா? அல்ல. சர்வ விஷயங்களும் சர்வ தொழில்களுமற்று, விஷய வாசனைகளுடன் மாத்திரம் பொருந்தியிருக்கும் அஞ்ஞானமா? அல்ல. மேற் சொல்லிய யாவும் 'நானல்ல', 'நானல்ல' என்று நேதி செய்து தனித்து நிற்கும் **அறிவே நான். அறிவின் சொரூபம் சச்சிதானந்தம்.**

இந்த உண்மை சொரூபமாகிய சச்சிதானந்தத்தை அறிய வொட்டாமல் தடுப்பவை பலநினைவுகள். நினைவுகள் மனத்தால் உண்டாகின்றன. நினைவுண்டாம்போது ஜகம் தோன்றுகிறது. உடனே விஷய வாசனைகளில் மனம் ஈடுபட்டு விடுகிறது. இவை அனைத்துக்கும் காரணமான மனத்தை முதலில் அடக்கவேண்டும். மனது அடங்கினால், நினைவும் ஜகமும் அடங்கிவிடும். மனம் என்பது ஆத்ம சொரூபத்திலுள்ள ஓர் அதிசய சக்தி. அதுதான் எல்லாக் கற்பித வஸ்துக்களையும் சிருஷ்டித்துக் கொள்ளுகின்றது. மனமே நினைவு. நினைவே ஜகம்.

இந்தத் தேகத்தில் 'நான்' எனும் நினைவு தோன்றுகிறது. நான் எனும் நினைவே முதல் நினைவு. அது ஹ்ருதயத்தினின்றும் தோன்றுகிறது. அதுவேமனதின் பிறப்பிடம். அம் மனத்தை அழிக்கவேண்டும். 'நான் யார்?' என்னும் விசாரத்தினால்தான் மனத்தை அழிக்கமுடியும்.

'நான் யார்?' என்னும் நினைவு மற்றை நினைவுகளையெல்லாம் அழித்துப் பிணஞ்சுடு தடிபோல் முடிவில் தானும் அழியும். பிற எண்ணங்கள் எழுந்தால் அவற்றைப் பூர்த்தி பண்ணுவதற்கு எத்தனிக்கக்கூடாது. 'அவை யாருக்குண்டாயின?' என்று விசாரிக்க வேண்டும். எத்தனை எண்ணங்கள் எழினும் என்ன? ஜாக்ரதையாய் ஒவ்வோர் எண்ணமும் கிளம்பும்போதே 'இது யாருக்குண்டாயிற்று?' என்று விசாரித்தால், எனக்கென்று தோன்றும். 'நான் யார்?' என்று விசாரித்தால் மனம், தன் பிறப்பிடத்திற்குத் திரும்பிவிடும்; எழுந்த எண்ணமும் அடங்கிவிடும். இவ்வாறு பழகப் பழக மனதிற்குத் தன் பிறப்பிடத்தில் தங்கி நிற்கும் சக்தி அதிகரிக்கின்றது. சூக்ஷ்மமான மனம் மூல இந்திரியங்கள் வாயிலாய் வெளிப்படும்போது ஸ்தூலமான நாம ரூபங்கள் தோன்றுகின்றன. ஹ்ருதயத்தில் தங்கும்போது நாம ரூபங்கள் மறைகின்றன. மனத்தை வெளிவிடாமல் ஹ்ருதயத்தில் வைத்துக்கொண்டிருப்பதற்குத்தான் 'அகமுகம்' அல்லது 'அந்தர்முகம்' என்று பெயர். ஹ்ருதயத்திலிருந்து வெளிவிடுவதற்குத்தான் 'பகிர்முகம்' என்று பெயர். இவ்விதமாக மனம் ஹ்ருதயத்தில் தங்குவதால், எல்லா நினைவுகளுக்கும் மூலமான நான் என்பது போய், எப்பொழுதும் உள்ள தான் மாத்திரம் விளங்கும். நான் என்னும் நினைவு கிஞ்சித்தும் இல்லாத இடமே சொரூபமாகும். அதுவே 'மௌனம்' எனப்படும். இவ்வாறு சும்மா இருப்பதற்குத்தான் 'ஞான திருஷ்டி' என்று பெயர். சும்மா இருப்பதாவது மனதை ஆத்ம ஸ்வரூபத்தில் லயிக்கச் செய்வதே. அன்றி, பிறர்கருத்தறிதல், முக்கால முணர்தல், தூர தேசத்தில் நடப்பன அறிதலாதிய இவை ஞான திருஷ்டியாக மாட்டா.

யதார்த்தமாக வுள்ளது ஆத்ம சொரூப மொன்றே. ஜக ஜீவ ஈசுவரர்கள், சிப்பியில் வெள்ளிபோல் அதிற் கற்பனைகள்; இவை மூன்றும் ஏக காலத்தில் தோன்றி ஏக காலத்தில் மறைகின்றன. சொரூபமே ஜகம்; சொரூபமே நான்; சொரூபமே ஈசுவரன்; எல்லாம் ப்ரம்ம (சொரூப) மயம்.

மனத்தின்கண் எதுவரையில் விஷய வாசனைகள் இருக்கின்றனவோ, அதுவரையில் 'நானுர்?' என்னும் விசாரணையும் வேண்டும். நினைவுகள் தோன்றத் தோன்ற அப்போதைக் கப்போதே

அவைகளை யெல்லாம் உற்பத்தி ஸ்தானத்திலேயே விசாரணையால் நசிப்பிக்கவேண்டும். அன்னியத்தை நாடாதிருத்தல் வைராக்யம் அல்லது நிராசை; தன்னை விடாதிருத்தல் ஞானம். உண்மையில் இரண்டும் ஒன்றே. முத்துக் குளிப்போர் தம் இடையில் கல்லைக் கட்டிக்கொண்டு மூழ்கிக் கடலடியிற் கிடக்கும் முத்தை எப்படி எடுக்கிறார்களோ, அப்படி ஒவ்வொருவரும் வைராக்யத்துடன் தன்னுள் ஆழ்ந்து மூழ்கி, ஆத்ம முத்தை அடையவேண்டும். ஒருவன் தான் சொரூபத்தை அடையும் வரையில் நிரந்தர சொரூப ஸ்மரணையைக் கைப்பற்றுவானுயின் அது ஒன்றே போதும். கோட்டைக்குள் எதிரிகளுள்ள வரையில் அதிலிருந்து வெளியே வந்துகொண்டேயிருப்பர். வரவர அவர்களை யெல்லாம் வெட்டிக்கொண்டே இருந்தால் கோட்டை கைவசப்படும். ஆன்ம சிந்தனையைத் தவிர வேறு சிந்தனை கிளம்புவதற்குச் சற்று மிடங்கொடாமல் ஆத்ம நிஷ்டாபரனுயிருப்பதே தன்னை ஈசனுக்களிப்பதாம்.

தான் யாரென உணரவேண்டும். தன்னையும் பிறவற்றையும் சமபாவனையாய்க் காணவேண்டும். எங்கும் பிரம்ம மயமாய்க் காணவேண்டும். 'சமதிருஷ்டி' என்பது துண்டு துண்டாக இல்லாதது; அகண்டமானது; பரமானந்தமானது; சூக்ஷ்ம வஸ்துவைத் தெரிவிக்கக் கூடியது; சாஸ்வதமானது; எவற்றையும் தெரிவிக்கக்கூடியது; எவற்றையும் கொடுக்கக்கூடியது; எல்லாம் தானுய் ஒளிர்வது.

மூலையில் பிரம்ம ரந்த்ர ஸ்தானத்தில் பரமாத்மாவைக் கண்டு ஆனந்திக்கவேண்டும். அந்த நித்யானந்த சமுத்திரத்தில் நின்று, இடை பிங்கலை சுஷும்னை நாடிகளில் நின்று **குண்டலி சக்தி.** பேரொளியைக் கண்டு கொண்டாடவேண்டும். அதற்கான முயற்சிகளை ஒவ்வொருவரும் அத்யாவசியமாய்த் தேடுதல்வேண்டும். "ஓ குண்டலினீ சக்தியே! எழு!" என்று அந்தர்முகமாய் எழுப்பவேண்டும். (அப் பெட்டிக்குள் உள்ள நெருப்புக் குச்சியில் ப்ரகாசம் இருப்பதனுல்) அந்தக் குச்சியை உறைத்து அக்னியை உண்டாக்கவேண்டும். அப்போது அஞ்ஞானம் எனும் இருள் நீங்கி, ஞானமாகிய ப்ரகாசம் உண்டாகும். ஹ்ருதயாகாசத்தில் நித்யானந்தத்தைப் பயக்கத்தக்க குண்டலியானது கோடி சூர்ய ப்ரகாசத்தையுடைய மஹா தேஜஸாகிய ப்ரம்ம தேஜஸையாக

உள்ளது. அதுவே சூர்ய தேஜஸ்; அதுவே சூக்ஷ்ம தேஜஸ். நாடி மூன்றுகும். இடாநாடி என்பது நட்சத்திர நாடி. பிங்கலா நாடி என்பது சந்திர நாடி. சுஷும்ணா நாடி என்பது சூர்ய நாடி. மூன்றுவது கண்ணிலுடைய நாடியில் ஞானம் இருக்கிறது. அந்த நாடியில் ஞான நித்ரை செய்யவேண்டும். அந்த நாடியில் சுஷுப்தி அவஸ்தை; ஆனல், சுஷுப்தியாகிய நித்ரையில் விழிப்பு (ஜாக்கிரதை) இல்லை. அந்த நித்ரையை அவரவரும் ஜாக்கிரதையுடன் (விழிப்புடன்) செய்து பார்க்கவேண்டும். ஸ்வாஸ அஸ்வாஸங்களில் கவனிப்புடன் சூக்ஷ்ம நித்ரை செய்து (பிராண அபானங்களைச் சமப்படுத்தி) அந்த நிஜானந்தத்தைப் பார்த்து அனுபவிக்கவேண்டும். ப்ராண அபானங்களைச் சமமாக்கின், அதன் ரஹஸ்யம் உண்மையாகிய ஆத்மாவில் இருப்பதாக விளங்கும். உள்ளே ஆகாச மண்டலம். அந்த மண்டலத்தில் நித்யானந்த கோபுரம். அந்த நித்யானந்த கோபுரத்தில் சாஸ்வதமான சாந்தி. அத்துய சாந்தியை எய்தித் தெளிவுள்ள நித்ரை செய்யவேண்டும். மிருகங்கள் கொள்ளுகிற தூக்கம் அல்ல. உத்தம புருஷரின் தூக்கங் கொள்ளவேண்டும். புருஷார்த்தத்தையளிக்கிற தூக்கங் கொள்ளவேண்டும். உபநயனத்தாற் பெற்ற தூக்கத்திலீடுபட்டுத் தூங்கவேண்டும். பேசிக் கொண்டிருந்தாலும், உட்கார்ந் திருந்தாலும், எத்தொழில் செய்துகொண் டிருந்தாலும், வித்தியாச மில்லாம லிருக்கிறதும், நானு சங்கல்பங்க ளில்லாததும், விகல்ப ஜாலங்க ளெதுவுந் தோன்று திருக்கிறதுமான யோக நித்ரை செய்யவேண்டும். தூங்காமல் தூங்கவேண்டும். சொல்லொணாச் சுகத்தை அடையவேண்டும்.

ஸ்வாஸம்.

ப்ராண அபானங்களின் மீது குறிப்பு வைத்து, மனதில் பக்தியுடன் சாதனை செய்து முத்தியை அனுபவிக்க வேண்டும். விட்டு விட்டல்லாமல் தொடர்பாய், இடைவிடாது சாதனை செய்து, ஸ்வாசத்தை ஆசாபாசங்களிலிருந்து இழுத்து ப்ரம்ம ரந்திரத்திற் கொண்டுபோய்ச் சேர்த்து நிறுத்த வேண்டும். அவ்வாறு நிற்கும் நிலைதான் ஆத்மாவின் உண்மையான ஸ்தானம்.

கீழ்மேல் ஸ்வாசங்களிலுல் அக்னியை (எழுப்பி) ஜ்வலிக்கச் செய்து, எல்லா நாடிகளையும் சுத்தப்படுத்தி, வாத பித்த கபங்களை

விசாரம் (அதாவது இடைவிடாது செய்யும் உள்நோக்க ஆராய்ச்சி) **என்னும் அக்னியில் சுட் டெரிக்கவேண்டும். விசாரம் என்பது அக்னி; யோகாக்னி; ஜடராக்னி. விசாராக்னி என்பது சூர்ய ப்ரகாசம்.** இது பரமாத்ம சைதன்யமாக இருக்கிறது. அநேக சங்கற்ப விகற்பங்களாகிய பாவனைகளால் இவ் வுலக முதலிய பல அஸத்ய வஸ்துக்களைத் தோற்றுவிக்கும் **மனத்தைச் சுட் டழிக்க இவ் விசாராக்னி யொன்றினல்தான் இயலும்.** அப்போதுதான் சமபாவனை தோன்றும். சம (ஆத்ம) பாவனையில் சிருஷ்டியே கிடையாது; அதாவது புதிதாகத் தோன்றுவதோ, பலவாறுகப் பேதமுற்றுத் தோன்றுவதோ இல்லை.

சூக்ஷ்ம அவஸ்தை ப்ராணிகளுக்கும் தாவரங்களுக்கும் ஒன்றே. ஸ்தூலத்தில் மட்டும் பேதம். பேதம் என்பது பிராந்தி. அங்கங்களில் வித்யாஸம். அங்கங்கள் ஒரே ஸ்திர ரூபத்தை யுடையவைகளல்ல. எல்லா ப்ராணி கோடிகளிலும் இருக்கிறது ஸ்வாஸம் ஒன்றுதான். காரணமாயிருக்கிற வஸ்துவும் ஒன்றுதான். யோகம் செய்து பார்த்தவர்களுக்கு ஒன்றே என விளங்கும். செய்யாமலும் பார்க்காமலும் இருக்கிறவர்களுக்கு ஆசா பாசங்களில் பற்றுடன் காணப்படும். ஆகையினல் ஆசா பாசங்களில் சிக்கிக்கொள்ளாமல் நிராசைசெய்து, ஜீவன் முக்தியை அனுபவிக்கவேண்டும். ஸ்தூலத்திற்குள் சூக்ஷ்மத்தைப் பார்ப்பது இடையறுத முத்திக்கு மார்க்கம். அகண்டமாய் இருக்கிற வஸ்துவில் இடையறுதல் ஈடுபட்டு இருப்பதுவே முத்தி. இதன் உண்மைத் தத்துவத்தைப் பார்ப்பதற்காக எவனொருவன் தன்னுடைய சித்தத்தைத் திருப்பிவிட்டானே அவன்தான் மனுஷ்யன். அவனுக்குள் எல்லா ஜகத்தையும் பார்க்கலாம். எல்லாம் அவனுக்குள் உள்ளது. எல்லாம் அவனல் ஆகும். எல்லாம் அவனே. அவனே எல்லாம்.

ஜகத்துக்குள் அலைகிற மனது ஸ்திரமாக நிற்காது. ஹ்ருதயத்தில் சிவ ஸ்வரூபம் (ப்ரம்ம ஸ்வரூபம்) ஸ்திரமாக ப்ரகாசிக்கிறது.

ப்ரணவம். சிவமே ஓங்காரம். ஓங்காரத்தின் ஸ்வரூபம் ப்ரணவம். 'ப்ரணவம்' என்றல் ஆகாரத்தில் (உருவத்தில்) எல்லாம் ஒன்றுகக் கூடியிருத்தல். 'ஓங்காரம்' என்றல் சரீர பாவனையை விட்டு சாக்ஷியா யிருத்தல்.

ஓங்காரம் எல்லாவற்றிற்கும் ப்ரமாணமாகி மேன்மைப் பட்டது. ஓங்காரமே சூர்யோதய ப்ரமாணம். அதுவே மிக மேன்மையான ப்ரமாணம். சர்வ சாக்ஷி நிலையே ப்ரமாணம். ஓங்காரமே சர்வ வேத சாஸ்த்ரங்களின் சிகரம். "ஓம்" என்பதே எல்லா மந்த்ரங்கட்கும் மூலாதாரம். "ஓம்" என்பதே நித்ய ஆத்மா. எல்லாம் அதனிடத்தே லயிக்கும். அது எல்லாவற்றையும் தன்னிடத்தே அடக்கிக் கொண்டுள்ளது. ஓங்காரமே சாஸ்வத சத்யம். ஓங்காரமே ஞானம். ஓங்காரமே ஸ்ருஷ்டி கர்த்தா. ஓங்காரமே ரக்ஷண கர்த்தா. ஓங்காரமே ஸம்ஹார கர்த்தா. "ஓம்" என்பதிலேயே புன ஸ்ருஷ்டியும் ஸம்ஹாரமும் ஆம். ஓங்காரமே சர்வ தீமைகளையும் தொலைக்கக்கூடியது. ஓங்காரம் ஸர்வ பயங்கர ஸ்வரூபத்தை யுடையது. **"ஓங்காரமே" சர்வ பாபங்களையும் பஸ்மீகரிக்கும் ஞானாக்னி ஸ்வரூபம்.** அக்னியை விட ஸ்ரேஷ்டமான வஸ்து ஜகத்தில் இல்லை. உள்ளிலும் வெளியிலும் நிறைந்திருப்பது அக்னி மயம். இடையில் தோன்றியிருப்பது பூமி.

முதலாவது வாயு; இரண்டாவது அக்னி. முதலாவது உள் நோக்கம் எனும் விசாரம்; இரண்டாவது சப்தம். நிசப்தமே வாயு ரூபம்; நிசப்தமே நித்யானந்தம்; அதுவே சச்சிதானந்த பதவி. அதாவது, நிசப்தத்தில் தானாகித் தன்மயமாய் இருத்தல்; தனக்குத் தோன்றுகிற எல்லாம் தன்மயமாகக் காணுதல். "தன்மயம்" என்பது சித்தும் சத்தும் கூடிய ஆனந்தம்; விவேகத்துடன் கூடிய ஆனந்தம்; ப்ரம்மானந்தம்; அதுவே பரமானந்தம்; அதுவே நித்தியானந்தம்; அதுவே சச்சிதானந்த பதவி; அதுவேதான் மனுஷ்ய னென்பது; அதுவேதான் ப்ரம்ம ஞானம்; யோக ஞானம்; கால ஞானம்; அது ஹ்ருதயத்துக்குள் மூன்று காலங்களையும் தெரிவித்துக் கொண்டிருக்கும்; அதுவே ஹ்ருதயத்தில் இடை விடாதிருக்கும் நித்யானந்த முக்தி. சாந்தி எனும் நீரின்மேலுட்கார்ந்திருப்பது யோகானந்தம்; போகங்களை விடுத்து யோகானந்தத்தை அடைய வேண்டும். தேக பாவனையை விட்டு, ஹ்ருதயத்தில் ஏற்படுகிற ஜீவன் முக்தி என்னும் சத்வாசனையில், சாதனையினல் ஈடுபட்டு, அனுபவித்து, அங்கேயே வாசம் செய்து, அப்படி அதிக காலம் இருந்து இருந்து பழகி, நிராசையைக் கடைப்பிடித்துச் சமபாவனையைச் செய்தல் வேண்டும்.

ஸ்தூல புத்தி என்பது லகான் இல்லாதிருப்பது. சூக்ஷ்ம புத்தி யாவது ஞான புத்தி. அது ஒரே இடத்தில் நிலைத்து நிற்கும் உட்பார்வையாகும். உடலெடுத்ததன் பயனை அறியாதவன் மிருகத்துக்குச் சமம். பயன் என்பது நிராசை எய்துவதே. இதை அறியாதவன் மனுஷ்யன் அல்ல. நீரிலிருக்கும் தவளை ஒரு தடவை மேலுக்கு வந்து, ஒரு தடவை கீழுக்குப் போகின்றது. அப்படியே, இந்த மனித ஜன்மத்தை மிருக ஜன்மத்தைப்போல் கீழுக்கு விடலாகாது. எப்பொழுதும் இந்த ஜன்மம் கிடைப்பதல்ல. மிகவும் அருமையானது. அத்தகைய அபூர்வ மனித ஜன்மம் கிடைத்துள்ளபோது பிரயோஜனப் படுத்திக்கொள்ள வேண்டும். பக்குவப்படுத்தி அனுபவித்துவிட வேண்டும். விசாரம்தான் அவசியம் வேண்டற்பாலது. 'விசாரம்' (ஆராய்ந்தறிதல்) என்பது அக்னி. புத்தி யென்னும் பாத்திரத்தை வைத்துக்கொண்டு முத்தியெய்தும் சாதனத்தைப் பெற வேண்டும்.

எல்லா ஜீவ கோடிகட்கும் உள்ளது ஒரே ஒரு வாசஸ்தானம்; அதுதான் என்றும் அழியாதது; அதுதான் சாஸ்வதமான முக்தி ஸ்தானம்; அந்த ஸ்தானமே ஓங்காரம். அந்த இடத்திற்கு உருவமில்லை; மாறுபாடு இல்லை. அது அகண்டமாக உள்ளது. நேற்று என்பதல்ல; இன்றைக்கே, இப்பொழுதே சுகத்தைப் பயக்கும் தினம். நாளை அல்ல; நாளை மறுநாள் அல்ல; ஒன்பது நாழிகை நேரம், பத்து நாழிகை நேரம் கடந்தல்ல; இப்பொழுதே காலம்; இதுவே தருணம்; இதுதான் தக்க தருணம்; இதுகாறும் கழிந்த காலமெல்லாம் வீண் காலம். எனெனில், விவேக விசாரத்தினால் ஏற்படும் அகண்டமான காலமே காலம். தன் நிஜ (யதார்த்த) ஸ்தானத்தை விட்டிருக்கிற காலம் இகழ்ச்சியான காலம். ஆதலால் இனி தவப்பொழுது அவப்பொழுதாகலாகாது.

சர்வாந்தர்யாமியை (எல்லாப் பதார்த்தங்களுள்ளும் நிறைந்த பரம்பொருளை) தலைக்குள்ளே காண வேண்டும். உண்மையாகப் பார்த்து, தன்னை நித்யானந்த வடிவமாய்ச் செய்துகொள்ள வேண்டும். ஒரு தயத்தில் இம்மாதிரி நித்தியானந்த மயமாய் அமைந்துள்ள ஒளியைப் பார்க்க வேண்டும்.

'ஓம்' என்னும் ஸ்வரமே சிருஷ்டி லயமான இடம். மனதும் அங்கேயே லயமாகிறது. 'ஓங்காரத்தை அனுபவிக்கிறது' என்றால்

இந்த உலகினுடைய லயத்தை (இல்லாமற் போவதை) அனுபவித்தல். தற்பெருமையை விட்டதே ஆனந்தம். அதே சாஸ்வதமான ஆனந்தம். அதுவே உண்மை. அந்நிலையில் காணப்படுவ தனைத்தும் ஆனந்தமே.

ஆதார நிலை.

'ஆரூரில் பிறக்க முக்தி' என்றது, மூலாதாரத்தில் யோகாக்னியை எழுப்பியவர்கள் முத்தியடைவார்கள் என்பதற்காம். 'அருணையை நினைக்க முத்தி' என்றது, ஜோதி தரிசனம் காணவேண்டி மணிபூரக ஸ்தானத்தில் ஞானாக்னியைப் பொருத்துகிறவர்கள் முத்தியடைவார்கள் என்பதற்காம். 'தில்லையைத் தரிசிக்க முத்தி' என்றது, ஸ்ருதய கமலத்தில், சிதாகாச குகையில் இறைவனது பேரொளியை, திருநடன தரிசனத்தைக் கண்டு இன்புறுவோர் முத்தியெய்துவர் என்பதற்காம். 'காசியில் இறக்க முத்தி' என்றது, புருவ மத்திய ஸ்தானத்தில் ஜோதி தரிசனம் காண்போர் முத்தியடைவர் என்பதற்காம். அந்த சூக்ஷமமான காசி என்பது சங்கல்பங்கள் (எல்லாவிதமான எண்ணங்களும்) அற்ற இடம் 'கைலாய பதவி' என்பது ப்ரம்ம ரந்திரத்தில் ஆயிரந் தோட்ட மல கமலமிசை அமர்ந்துள்ள பரமாத்மாவை குண்டலி சக்தியின் உதவியால் கண்டு ஆனந்தமெய்துவது. இத்தகைய உத்தமமான ஆனந்தத்தை அடைந்தவரே பிறவிப் பெருங்கடலை நீந்தி என்றும் பொன்றாப் பேரின்ப வாழ்வைப் பெறும் உன்னத நிலை அடைகின்றனர். இறைவன் எழுந்தருளி இருக்குமிடம் சாஸ்வதமான சாந்திக்கு மூல ஸ்தானம்.

ஞானாக்னி.

'யக்ஞம்' என்பது 'ஞானம்' என்கிற அமிர்தம். குண்டலினீ சக்தியின் சூக்ஷ்ம சக்தியை, புத்திமார்க்கமாக நுண்மையான உள் நோக்கத்தினால், 'ஆராய்ச்சி' என்னும் நெருப்பைக் கொண்டு, பிராணனைச் சுழிமுனையில் பாயும்படிச் செய்து, பாலைச் சூடேற்றி காய்ச்சுவதுபோல்பிராணனைத் தலை நரம்புக்குள் (ஸஹஸ்ராரத்தில்) பிரவேசிக்கச் செய்து, உள்நிலை அறிந்து சேரவேண்டும். ஒவ்வோர் சக்கரத்தைத் தாண்டும்போதும் ஒவ்வொரு குணம் வித்யாஸப்பட்டு வரும்; ஒவ்வொரு குணம் வித்யாஸம் என்றால் ஒவ்வொரு ஜன்மம் மாறுகிறது. ஒவ்வொரு சக்கரத்தில் உள் நோக்கமாக வேலை செய்கிற ப்ராண வாயுவை ஊர்த்வ (மேல்) மார்க்கமாக நடத்தும்போது, சாந்தி, சுகிப்பு முதலிய

சுகுணங்களுண்டாகின்றன. ஐந்து சக்கரங்களையும் அவைகளின் ஐந்து ஒதுக்குகளையும் தாண்டி, ஆறுவது சக்கரத்தை அடைந்து, ஆறு குணங்களில்லாதவனுய், சத்து சித்து ஆனந்தனுய் இருக்க வேண்டும். ஆக்ஞா சக்கரத்தில், நல்ல ப்ரபலனுய், ஆகாசத்தில் நெருப்பு மண்டலத்தில் சேரவேண்டும். சக்தியும் சிவமும் ஒன்றுய் ஆடவேண்டும். 'த்ரிகால பீடம்' என்பது மூக்காலங்களும் உணரும் படியான இடம். ஆத்மாவின் இடம் விந்து ஸ்தானம். விந்துவில் 'ஞானம்' என்பது ஒரு பெரிய அக்னிக் கேணியாகும். அக்னி ரூபமான ஞானம் தனக்குள் இருப்பதை நன்கு அறிந்து, அதில் நோக்கம் வைத்து, ப்ராண லிங்கத்தைச் சேரவேண்டும். ப்ராணனும் சிவனும் கூடியொன்றுகி, தன்மயமான நிலையில் ஆடி வழக்கப்படவேண்டும். யந்த்ர மந்த்ரங்களை ஜயித்து, அவைகட்கு மேற்பட்ட நிலையில் நின்று நடனமாடவேண்டும். புத்தி ஆகாச மார்க்கமாய்ப் போய் சிரசி லுள்ள ஆத்மாவின் மகோதயத்தைச் சேரவேண்டும். காமங்களை நடத்துகிற குணங்களை அர்ப்பணம் செய்து சுத்த ஆகாச மார்க் கத்தில் ஜீவன் சென்று ஆத்மாவைக் கூடவேண்டும். 'ஜீவ பவனம்' என்கிற சுஷும்னையில் அகர பாகத்தில் (முதன்மையான இடத்தில்) ஆத்மாவினுடன் சேர்ந்து இருக்கவேண்டும். ஜீவ குணங்களை யெல் லாம் ஆத்மாவுக்குக் கொடுத்துவிடவேண்டும். 'என்னுடையது', 'உன்னுடையது' எனும் தோற்றங்கள் இல்லாமல் அடங்கவேண்டும். ஜீவ குணங்களும் ஜீவன் எனும் எண்ணமும் ஆத்மாவினிடம் ஐக்ய மாகி, நித்ய சித்தனுய் (எப்போதும் சம்பூர்ணனுய்), புத்தியிலேயே நின்ற தீரனுய் இருக்கவேண்டும். ஆத்மாவின் நிலையை சம்பூர்ண மாய் அடையவேண்டும். ஆத்மாவையே சதா பார்த்து, தானுய் நின்று, ஜனனமரணங்களை ஜயித்து நிற்கவேண்டும். அவ்வாறு எப்போதும் தன்நிலையில் தன்னை அறிந்துகொண்டேயிருக்க, புத்தி, ஞானத்தினுல் விஸ்தாரப்பட்டு வரவர அவரவர் குணதோஷங்கள் தெளியப்படுகிறது. மனதினுல் ஆக்கப்படுவதும், இவை நிலைத்திருப் பதும் மனதில்தான் தெரிகிறது. கண்ணுடியில் எப்படித் தன்னுரு வைக் காண்கிறுனே, அதுபோல மனதின் கற்பனைகள் புத்திக்குத் தெரிந்துவிடுகிறது. நீரினில் ஆகாசம், நீர் வேறு ஆகாசம் வேறுகக் காணப்படுகிறபடி, சரீரங்களாய், உள்ளமாய்த் தோன்றுகிற மாய்கையான ப்ரகிருதி வேறுகவும், அதில் உள்ளாராய்ச்சி செய்யும் நுட்பமான சூக்ஷமம் வேறுகவும் (ஆத்மானுபவம் உள்ளவர்களுக்குக்)

காணப்படுகின்றன. அவர்களுக்கு எல்லாத் தோற்றங்களிலும் ஆத்மீயமான உண்மையொளி புலப்படும். தற்போதம் நாசமாகி எங்கும் இறையொளி இலகிக்கொண்டிருக்கும். ஆத்மாகாரமே காவுளின் (பரம்பொருளின்) ஸ்வரூபமாதலால் அவ்வாத்ம சமுத்ரத்தில் அவர்கள் அமிழ்ந்திருப்பார்கள். ஆத்மஞான ஜோதியிற் கலந்து அத்தூய அக்னிமயமாக இருப்பர். ஆத்மமயமாக ஆவதே முக்தி. அதுவே ஞானம்; அதுவே பக்தி, யோகம் ஆதியவற்றின் முடிவு. அதுவே உத்தமமான சித்தி. ஏனைய சித்திகளெல்லாம் உண்மையான சித்திகளல்ல. ஆன்ம சித்தியே அழியாத (உண்மையான) சித்தியாகும். ஆன்ம சித்தி அடைந்தவனே நித்ய சித்தன். அவனே ஞானி. அவன் அவனியை அளந்த மென்னன். தன்னிலும் புவியை அன்னியமாய்க் காணன். தன்னையும் தன்னைச் சூழ்ந்துள்ள அனைத்தையும், இப்புவனி முழுவதையும், எனைய எல்லா உலகங்களையும் தன்மயமாகவே (ஆத்மமயமாகக்) காண்பான். தான் என்றும் பிறர் என்றும் எவ்வுயிரிடத்தும் பேதம் காணன். சர்வபூத சமத்வமே ஞானியின் அறிகுறி. காயத்ரீ மஹாமந்த்ரம் இதனையே கூறுகின்றது.

காயத்ரீ.

நீங்கள் இளம்பருவத்தே உபநயனம் செய்துகொண்டபோது உணர்ந்ததனை மீண்டும் நினைவூட்டுகின்றேன். வேதமாகிய கனியின் ரஸத்தைப் பிழிந்து கட்டியாகத் திரட்டிய பொருள் தான் காயத்ரி. அதுதான் பாரத நாட்டு மஹரிஷிகளுக்கு வீரம், தீரம், ஆயுள், ஆரோக்யம், ஆன்ம ப்ரகாசம் ஆதிய அனைத்தையும் அளித்த அற்புதப் பொருள். அம் மஹா மந்த்ரத்தின் பொருளும் ஏற்ருதய வானில், சிதாகாச வெளியில் சுயம் ப்ரகாசித்துக் கொண்டிருக்கும் ஆத்ம சூரியனையே குறிக்கின்றது.

அம் மந்த்ரம் இருபத்துநான்கு எழுத்துக்களால் பொலிகின்றது. முதலெழுத்தாகிய ஓங்காரமே அதன் முழுக் கருத்தையும் விளக்க வல்லது எனினும் பொருந்தும். உலக, ஜீவ நிலைகளை யொழித்து சிவ (ப்ரம்ம) நிலை யெய்தவேண்டுமென்பதை உணரவேண்டும். உலகம், உயிர், சிவம் யாவும் சிவ (ப்ரம்ம)மயமே. உலகம் போலவும், உயிர் போலவும், ப்ரம்மத்திற்கு அன்னியம் போலவும் தோன்றும் தோற்றம் மாயை. மண், நீர், அனல், காற்று, ஆகாயம், காலம், திக், மனது

எனும் (உலக சம்பந்தமான) எட்டையும் நீக்கி, பராதீனன், துக்க தேகி, செயற்கை உணர்வினன், சிற்றறிவுடையவன், பந்தன், காடின் னியன் (கருணையற்ற, கடின சித்தமுடையவன்), நிர்பவன் (தானு யுண்டாகாமல், வேறொருவரால் உண்டாக்கப்பட்டவன்), மலதேகி எனும் (ஜீவ சம்பந்தமான குணங்கள்) எட்டையும், (ஸ்வாநு பூதியினல் மாயை யென்று உணர்ந்து) நீக்கி, தன் வயத்தனதல், தூய உடம்பினனதல், இயற்கை யுணர்வினனதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்குதல், பேரருளுடைமை, முடி வில் ஆற்றலுடைமை, வரம்பிலின்ப முடைமை என்னும் (சிவ சம் பந்தமான குணங்கள்) எட்டும் எய்தி, அச் சிவமயமாகவே பொலி தல் வேண்டும். அதாவது அஸத்யமான உலக, உயிர்ப் பாவனைகளை நீக்கி, சத்யமானதும், நித்யமானதும், ஒப்புயர்வற்றதுமான ப்ரம்ம பாவனையில் ஈடுபட்டு, ப்ரம்ம மயமாக விளங்குதல் வேண்டுமென் பதையே அது குறிக்கின்றது.

ஓம் பூர் புவஸ் ஸுவ: தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி தியோயோ ந: ப்ரசோதயாத்

'ஓம்' என்பதில் (அ+உ+ம்) அ, உ, ம் என்னும் மூன்று அம் சங்கள் உள்ளன. 'அ' என்பது—ஸத்; 'உ' என்பது—சித்; 'ம்' என்பது—ஆனந்தம். உலகம், உயிர், கடவுள் என்னும் மூன்றையும் உணர்த்துகிறது. இவற்றையே பாசம், பசு, பதி என்பர் மேலோர். 'ம்' என்னும் எழுத்தை வாய் விட்டு உச்சரிக்க இயலாது. அஃதே போல் பரமாத்மாவின் திருவருட் பிரபாவங்களை, பரமாத்மாவின் உண்மை அம்சங்களை, பரமாத்மாவின் சக்திகளை, பரமாத்மாவின் ஸ்வரூபத்தை, பரமாத்மாவின் (ஸ்வபாவத்தை) இயல்பை வாயினல் சொல்ல சாத்யமாகாது. அனுபவ மூலமாய்த்தான் உணரவேண்டும் என்பதும் அங்ஙனே தோன்ற நிற்கிறது.

ஆகவே, 'ஓம்' என்பது—சச்சிதானந்தப் பொருள் (ஆம்)
பூ —ஸ்தூல உலகம்
புவ: —வீர்ய பலம் நிறைந்த உயிருல கம் (அல்லது அந்தரிக்ஷம்)

ஸ்வ:	—விண், அல்லது சுத்த மனோமய உலகம் (ஆதிய எல்லா இடங்களிலும் நிறைந்து)
ய:	—எவன்
ந:	—நமது
திய:	—நினைப்புகளை
ப்ரசோதயாத்	—ஞான வொளிபெற வுக்குகின்றனே, அவன்
வரேண்யம் ஸவித:	—ப்ரமாத்ம சூரியன்.
தத் தேவஸ்ய	—அத் தெய்வத்தின்
பர்க:	—பெருமையை (ப்ரகாசத்தை)
தீமஹி	—தியானிப்பாம்.

என்பதே அதன் முக்ய தாத்பர்யமாம். சூரியன் என்பது ஒளி, உண்மை, அறிவிற்கு அறிகுறி எனவும் கூறப்படும்.

பூமி ஆகாசம் சுவர்க்கம் முதலாய எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்தது 'ஓம்' என்று வேதங்களால் அழைக்கப்படும் சச்சிதானந்தப் பொருள். அதுவே தகராகாசத்தில், சிதாகாசத்தில் இலங்கும் ஆத்ம சூரியன். அதுதான் சூர்ய சாவித்ரி. அதுதான் சகல உலகங்களையும் காத்து ரக்ஷிக்கும் லோகமாதா. அதுதான் மிக மிக மேன்மையான கருணை ஸ்வரூபம். அதுதான் உமது எண்ணங்களை (சர்வ ப்ராணிகளின் அந்தரிந்திரியங்களையும்) மேன் மேலும் தீய வாசனைகளிற் செல்லாது விலக்கி, உண்மை யொளியைப் பெறுமாறு தூண்டுகிறது. அந்த ஆன்ம தேவதையை அடைய வேண்டுமென்றல், அதன் பெருமையை, அதன் இயற்கை விளக்கத்தை, அதன் பரந்த நிலையை, அகண்டாகார ஸ்திதியை ஒவ்வொருவரும் தத்தமதுள்ளத்தில் எக்காலத்தும் இடைவிடாது தைலதாரை போன்று சிந்தித்தல் வேண்டும். அவ்வாறு சிந்தித்தால்தான் அவ் வொளியை அடையமுடியும். நினைப்பே மனிதன். நினைத்தவாறே மனிதன் ஆய்விடுகிறான். 'நான் அவன்; என் உளத்தில் ஒளிர்பவன் அந்தச்

சச்சிதானந்த மயமான ஆன்ம சூரியன்; நான் மாமிச சம்பந்தமான தேகமல்ல. நான் இவ்வுலகல்ல; நான் மனமாதிய எவையுமல்ல; மனம் வாசகம் தொழில் ஆதிய அனைத்தும் கடந்த அகண்டபரிபூர்ண ப்ரம்ம வஸ்து. நான் நித்யானந்தன். நான் சத்ய வஸ்து. நான் சச்சிதானந்த ஸ்வரூபமான பரப்ரம்ம மயம். நானே எல்லாம். என்னுள் யாவும் அடங்கியுள்ளன. நானே அனைத்தின் மயமாய் பிரகாசிக்கின்றேன். நானே பிரம்மம்; பிரம்மமே நான் (அதுவே நான்; நானே அது)' என்று சதா தியானித்து உள்ளடங்கி உண்மை யொளி பெற்று அதுவாகித் திகழ்வதே ஆனந்தமாகும்.

ஐக்யாநுபூதி நிலை.

எங்கும் வியாபகமான ப்ரம்மமும், சாட்சியும் எப்போதும் ஏகம் ஆதலால், இவ்வைக்யானுபவத்தை சம்சயாதி ப்ரதிபந்தமின்றித் திடமாயுணரும் பொருட்டு 'சிவோஹம்' ('சிவமே நான்', 'நானே சிவம்') என்று நிதித்யாசித்து, அந்த நிதித்யாசன பரிபாகத்தால் உளதாகும் ஸ்வாநுபூதியாகிய ப்ரம்மாநுபூதியில் ஆனந்தமாய்ச் சுகித்திருப்பீர்களாக!" என்று கூறிமுடித்து, "இப்போது இங்கே அமர்ந்துள்ள வைசிய' ப்ரமுகர்களும், அரிவையரும் அப்பரமாத்ம வொளியை யடையவேண்டும்; அருட்ஜோதி ஸ்வரூபமான நமது திவ்ய தரிசனத்தை அகமுகமாகக்கண்டு ஆனந்த மெய்தவேண்டும்; பிறப்பிறப்பென்னும் பெருங்கடல் கடந்து, பேரின்பந்துய்த்து, ஜீவன் முக்தி நிலையெய்தி, பரமஹம்ஸர்களாகவும், ஹம்ஸினிகளாகவும் திகழ்ந்து உலகுக்கு உண்மையை விளக்கிக் கொண்டு விளங்கவேண்டும்" என்று எண்ணி ஸ்ரீ வாசவாம்பிகை தனது திருக்கடைக்கண்ணால் திருவருள் புரிந்தனர்.

அக்னி ப்ரவேசம்.

அப்போது அங்கனே திடீரென ஓர் பெருஞ் சப்தம் தோன்றியது. சுற்றிலும் பார்த்துக் கொண்டிருந்த ஜனங்கள் யாவரும் அஞ்சி நடுங்கித் தத்தமது கண்களை மூடிக் கொண்டார்கள். ஆன்ம ஞானம் விழைந்த அனைவர்க்கும் ஓர் அற்புத உணர்ச்சி தோன்றலாயிற்று. உடனே அவர்கள் யாவரும் அம்பிகையின் திருவடிகளைத் தியானித்து உள் நோக்கத்தில் ஈடுபடலாயினர். இறைவியின்

திருவருள் துணையினால், அவர்கள் வெகு விரைவில் மூலாதாரத்தினின்றும் ஞானாக்னியை மூட்டிவிட்டனர். அம்பிகை கூறிய நெறியிற் சிறிதும் பிறழாது, பஞ்ச கோசமும் கடந்து, அவைகட்கு விலட்சணமாய் அதற்கு மேலே கண்ட பஞ்சகோசங்களின் அபாவரூபமான சூனியத்தையும் ஒழித்து, அகத்தில் பஞ்சகோச சூனியங்களையும் காணுகிற்கும் அநுபவ ரூபமான சாட்சி தானென்றிருந்த அற்பமாகிய ஸ்திதியையும் விடுத்து, அஹம் ப்ரம்மமென்னும் அகண்டாகார விருத்தியும் (நிதித்யாசன பரிபாக வசத்தால், உறங்கினவன் கையிலிருந்த பதார்த்தம் கழுவியதுபோல) கழுவி, அகண்டைக ரசமாயுள்ள பரிபூர்ணமான ப்ரம்மானுபவத்தை எய்தி ஞானைக்த மயமாயினர். ஞானக்னியில் மூழ்கி ஒன்றுபட்டு கலந்து உலவா இன்பந் துய்த்தனர்.

வெளித் தோற்றம்.

அதுகாலை கண் விழித்துப்பார்த்த ஜனங்கட்கு அங்கே ஓர் பெரிய (அக்னி) ஜோதி தோன்றுவதைப் போலவும், அதனுள் இவர்கள் மூழ்கி அமர்ந்திருப்பதைப் போலவும் கண்டு 'ஐயோ இவர்கள் அக்னியில் மூழ்கி விட்டார்கள்போல் இருக்கிறதே!' என்று ஐயுற்றனர். வைசிய புவர்களும் யுவதிகளும் ஒன்றும் புரியாமல் திகைத்தனர். சுற்றுமுற்றும் திரும்பிப் பார்த்தனர். ஒருவர்க்கும் ஸ்ரீ வாசவாம்பிகை இருந்த இடம் புலப்படவில்லை. இப்படி எதுவும் தோன்றுமல் இரண்டொரு விநாடி நேரம் யாவரும் தத்தளித்துவிட்டனர். அம்மையின் அருளை அறிதற் கியலாமல் அவ் வம்பிகையின் திருவடிகளை த்ருகரண சுத்தியாக த்யானிக்கலாயினர்.

சுற்றிலும் சூழ்ந்திருந்தவர்களுடைய கண்களுக்கு ஒரு பெரிய அக்னி குண்டம் வளர்வதைப்போலும், அதில் அகன்றுயர்ந்து கொழுந்து விட்டு வானளாவிய வண்ணம் அக்னி தன் ஜ்வாலையை விசிரிம்பித்துக்கொண்டு விளங்குவது போலும் தோன்றலாயிற்று. திருக் கல்யாணத்திற்கு முதல் நாள் அக்னி பூஜை நடைபெறப் போவதாக அந்நகரின்கண்ணே எற்கனவே பறை சாற்றப்பட்டிருந்தமையால், 'அந்த அக்னி பூஜைதான் இதுவோ?' என்று எண்ணியும், அக்னி பூஜை செய்வதென்றால் இவ்வளவு ஆடவர்களும் அரிவையர்களும் அதனுள் மூழ்கி அமர்ந்திருக்க வேண்டிய காரணம் என்ன?' என்று எண்ணியும், 'இந்த அக்னி சாதாரண நெருப்பாயிருந்தால்

இதுகாறும் இவர்களுடைய சரீரமே சாம்பராகி விட்டிருக்குமே! நாழிகை அதிகமாய் செல்லச் செல்ல அவர்களுடைய சரீரங்கள் ஒளி அதிகமாகி மாற்றுயர்ந்த ஸ்வர்ணம் போல அல்லவா ப்ரகாசம் வீசிக்கொண்டுள்ளன? ஆஹா! இஃதென்ன விந்தை! இஃதென்ன அதிசயம்! ஆச்சரியம்! அற்புதம்! புதுமையினும் புதுமை!' என்றெல்லாம் பலவாறுக எண்ணியும், அதி யாச்சரியத்துடனும், மிகுந்த பயபக்தி ஸ்ரத்தையுடனும், 'மேல் நடப்பனவற்றைக் கவனிக்க வேண்டும்' என்னும் பேரவாவுடனும் இமை கொட்டாமற் பார்க்கத் தொடங்கினர்.

இராஜமகேந்த்ரபுரத்தினின்றும் சகல சேனா சமூகங்களோடும் புறப்பட்ட விஷ்ணுவர்த்தன மன்னன் அவ்வமயத்தில் ஆங்கு வந்து சேர்ந்தான். வானேக்கி எழுகின்ற அக்னியையும் அதனுள் மூழ்கி அமர்ந்துள்ள வைசிய மக்களையும் கண்டான். மிகுந்த கோபங்கொண்டான். "ஹா! இப்படியா என்னை வஞ்சித்தீர்கள்?" என்று கூச்சலிட்டான். அதே க்ஷணத்தில் திடீரென்று ஓர் பெருஞ் சப்தம் உண்டாயிற்று. அரசன் ஏற்கனவே கனவில் தோன்றிய கோர உருவத்தைக் கண்முன் கண்டான். நடுநடுங்கினான்: பெரும் பீதியுற்றுப் பிதற்றிக் கதறிப் பேய்க் கூச்சலிட்டான். இதற்குள் ஆகாய வீதியினின்றும், 'அடா! மூர்க்கா! உனது அகங்தை முழுதும் இந்த க்ஷணமே அழிந்தோழியக் கடவது!' என்ற ஓர் திருவாக்கு அசரீரியாக எழுந்தது. அதற்குள் அரசன் ஒன்றுந் தோன்றாது தேரிற் சாய்ந்து மூர்ச்சையடைந்தான். அம்பிகையின் மாயாசக்தியினால் அவனுள்ளிருந்த ஆணவ மலமாகிய அகங்காரமானது தனது வர்க்கங்களாகிய காமாதி துர்க்குணங்களுடன் அவனைப்போலவே ஒருருக் கொண்டு தோன்ற, அதே க்ஷணத்தில் அந்த மாய வுருவின் சிரமானது அநேக ஆயிரம் சுக்கல்களாக வெடித்துப் பொடி பொடியாகிப் பூமியிற் சிதற, இரத்தம் ஆறுகப் பெருகியது. அவ்வரசனின் தேவிமாரும் புத்திரனும் ஒன்றும் தெரியாது திகைத்தனர்கள். சேனைகள் யாவும் அல்லோகலப்பட்டன.

அகந்தையின் வீழ்ச்சி.

ஆகார்யத்தில் தேவதுந்துமி முழங்கத் தொடங்கியது. வான வர்கள் புஷ்ப மழை சொரிந்து எங்கணும் தேவ மலர்மய மாக்கினர். திருச்சின்னங்களின் ஒலியும், வாத்தியங்களிஞெலியும் எழுகட லொலியினும் அதிகமாய்க் கேட்கத் தொடங்கின. அதியற்புதமான ஒரு பேரொளி தோன்றலாயிற்று. பேரிகை மத்தளம் தாளம் சங்கம் சச்சரி தடாரி குடமுழா முதலான வாத்தியங்களின் முழக்கம் செவிப்பட்டது.

இறைவன் திருக் காட்சி.

ஸ்ரீகண்டர் அனந்தேசர் காலச்செந்தியுருத்திரர் துவாத சாதித்தர் ஏகாதச ருத்திரர் புத்தியட்டகர் கூர்மாண்டர் ஆடகர் சதவருத்திரர் அஷ்டமூர்த்திகள் நீலலோகிதர் கங்காளகபாலர் அஸ்வாரோஹணர் அஷ்டபயிரவர் வீரபத்திரர் சக்ரதார் நான்முகர் முதலான பதமூர்த்திகளும், கபாலிகன் அஜன் புதன் வஜ்ரதேகன் பிநாகி கிருதசாதிபன் உருத்திரன் பிங்கலன் சாந்தன் கூடியாந்தகன் பலவான் பாசாத்தன் மகாபலவான் சுவேதன் ஜயபத்திரன் தீர்க்க பாகு ஜலாந்தகன் மேகவாகனன் சௌமியகேசன் ஜடாதரன் லக்ஷ்மீதரன் ரத்நந்திரன் ஸ்ரீதரன் பிரசாதன் பிரகாசன் வித்தியாதிபன் ஈசன் சர்வஜ்ஞன் பலிப்ரியன் சம்பு விபு கணாத்யக்ஷன் கிரியக்ஷன் திரிலோசனன் முதலான பதத் தலைவர்களும், இந்திரர் சந்திரர் சூரியர் முதலான தேவர்களும், எண்ணற்ற தபோமுனிவர்களும், மஹரிஷிக் கூட்டங்களும், அசுரர் அந்தரர் ஆகாசவாசிகள் விஞ்சையர் வித்தியா தரர் கருடர் காந்தருவர் யக்ஷர் கின்னரர் கிம்புருஷர் சித்தர் நிருதர் பூதர் பைசாசர் போகபூமியர் உரகர் முதலான கணங்களும், நந்தி பிருங்கிரிஷி சங்குகன்னன் வாணன் அந்தகன் கும்போதரன் விரூ பாக்ஷன் முதலான பிரமத கணங்களும், திக்குப்பாலகர் எண்மரும், அஷ்டவசுக்களும், சப்தமருத்துக்களும், நவக் கோள்களும் ஆதிய பலரும் துதி செய்தவண்ணமாய் ஆகாய வீதியில் நின்றனர்.

"அங்குச பாசமேந் தைங்கரன் வந்தான்
பொங்கும் அருள்புரி புங்கவன் வந்தான்"

எனவும்,

"அயில்வே லேந்திய அறுமுகன் வந்தான்
மயிலிவர் சுப்பிர மணியன் வந்தான்

கந்தன் வந்தான் காங்கேயன் வந்தான்
சந்த மறைபுகழ் சரவணன் வந்தான்''

எனவும்,

''எல்லாம் வல்ல இறைவன் வந்தான்
நல்லோர்க் கருளும் நாயகன் வந்தான்
மூப்புர மெரித்த முன்னோன் வந்தான்
தப்பிலார்க் கருள்செயும் தயாநிதி வந்தான்
வள்ளல் வந்தான் மகாதேவன் வந்தான்
எள்ளி லெண்ணெய்போ லிருப்பவன் வந்தான்
அன்பர்க் கருளும் ஐயன் வந்தான்
இன்பங் கொடுக்கும் இறைவன் வந்தான்
முத்தொழில் நடத்தும் முதல்வன் வந்தான்
பக்தர்கள் புகழும் பதத்தோன் வந்தான்
தேவர்கள் போற்றும் தேவன் வந்தான்
மூவர்கள் வாழ்த்தும் முக்கணன் வந்தான்
தத்துவா தீதத் தற்பரன் வந்தான்
எத்திசை யும்புகழ் ஈசன் வந்தான்
பூரண ஞானப் புண்ணியன் வந்தான்
காரண காரியங் கடந்தோன் வந்தான்
அகில காரணனும் அண்ணல் வந்தான்
சகல வுயிர்களின் தந்தை வந்தான்
கரையறு மின்பருள் கர்த்தன் வந்தான்
புரைதவிர் சாந்தப் புனிதன் வந்தான்
மங்கள வடிவுடை மறைமுதல் வந்தான்
எங்களு மேசுக மீபவன் வந்தான்
திவ்விய தேசருள் தினகரன் வந்தான்
செவ்விய நுதல்நடு திகழ்பவன் வந்தான்
கயிலையில் மேவுங் கடவுள் வந்தான்
மயல்தவிர்த் தருளும் மருத்துவன் வந்தான்''

எனவும்,

''மாயன் வந்தான் மாதவன் வந்தான்
தூய துழாயணி சுந்தரன் வந்தான்

அச்சுத னும்பஞ் சாயுதன் வந்தான்
நச்சர விற்றுயில் நாரணன் வந்தான்
பச்சை முகில்நிற பகவன் வந்தான்
இச்சைப் படிவர மீவோன் வந்தான்
உலகளந் தருளிய உத்தமன் வந்தான்
உலகுண் டுமிழும் ஒருவன் வந்தான்
பாற்கடல் பள்ளிகொள் பண்ணவன் வந்தான்
பார்க்கவி தேவிப் பாகன் வந்தான்
பரம பதந்தரு பராபரன் வந்தான்
இருமை நலந்தரு மெம்பிரான் வந்தான்''

எனவும்,

"மேதினி படைத்தருள் வேதா வந்தான்
வேதநான் முகனும் விரிஞ்சன் வந்தான்
நாமகள் வாழும் நாவினன் வந்தான்
பூமக ளின்றருள் போதன் வந்தான்''

எனவும் திருச் சின்னங்களின் சீரிய ஒலி கேட்கத்தொடங்கியது.

"இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்''
திருவருட் பெருமையைச் செப்புநர் ஒருபால்
மன்னுமெய் யன்பினுள் வாழ்த்துநர் ஒருபால்
மகிழ்விஞ்சு வசமழிந் தாடுநர் ஒருபால்
சிந்தையுள் ளேகசிந் திளகுநர் ஒருபால்
தேவர்கள் முனிவர்கள் சித்தர்கள் ஒருபால்
மந்திரங் கழறியே மகிழ்பவர் ஒருபால்
மாயையா மிருளினை மாய்த்தவர் ஒருபால்
சந்ததம் சாந்தமா யொளிர்பவர் ஒருபால்
சகலமும் பிரமமாய்க் காணுநர் ஒருபால்
பந்தமற் றிலகுமெய்ஞ் ஞானியர் ஒருபால்
பரசுகப் பாயசம் பருகுநர் ஒருபால்

தோன்றினர்.

தும்புரு நாரதர் யாழிசை ஒருபால்
தூயவெண் சாமரைக் கவரிகள் ஒருபால்
உம்பர்கொள் மங்கல விருதுகள் ஒருபால்
உருத்திர கணிகையர் நாட்டியம் ஒருபால்
அம்பர மறைக்கும்வெண் குடைநிரை ஒருபால்
அமரதுந் துமிகளின் முழக்கமும் ஒருபால்
எம்பிரா னேயெனுந் துழனியும் ஒருபால்
இனியதே னெனவருங் குழலிசை ஒருபால்

அற்புதமாய்த் திகழ்ந்தன.

அங்குசம் பாசம் மோதகம் கொம்பு ஆகிய நான்கையும் தாங்கிய நான்கு திருக் கரங்களும், பரிபக்குவமடைந்த ஆன்மவர்க்கங்களைத் தன்னருகே தூக்கி வைத்துக்கொள்ளத் தக்கவாறு அமைந்ததே போன்ற துதிக்கையும், ஓங்கார உருவத்தை உணர்த்தும் யானை முகமும் கொண்டு பொலிவுறும் விநாயகக் கடவுள், சித்தி, புத்தி (என்ற தத்துவங்)கள் சகிதமாய் ஆகு வாகனமீது விளங்கினர்.

மூவிரு முகமும் முந்நான்கு கரமுங்கொண்டு, அடியார்களின் பவங் களைந்து அருளமுதத்தைப் பொழியும் அறுமுகக்கடவுள், இச்சை கிரியை யாகிய வல்லி தேவயானை சமேதமாய், ஞானவேல் தாங்கி மயில்வாகன மீது தோன்றினர்.

ஆறும் பிறையும் அணிந்திலகு ஜடையும், நீறுபூசு நெற்றியும், திரிநேத்திரங்களும், காளகண்டமும், சதுர்ப்புஜங்களும், தமருகமும், மானும், மழுவும், சூலமும், புலியதளும், யானையுரிவையும், நாகபூஷணமும், அக்கமணி மாலையும் பொலிய விளங்கும் சர்வ மங்கள சக்தியான திருமேனியுடன், அருட் சக்தியான உமாதேவியாருடன் ஸ்ரீ நகரேஸ்வரப் பெருமான் தரும சொரூபமாகிய இடபவாகனத்தின் மீது எழுந்தருளினர்.

நவரத்ன கிரீடமும், திருமண் தரித்து விளங்கும் திருநுதலும், மகர குண்டலங்களணிந்து பொலியும் செவிகளும், கருணை ததும்பும் திருமுகமண்டலமும், சங்கு சக்ரம் கதை சார்ங்கம் வாள் ஆகிய பஞ்ச ஆயுதங்களைத்தாங்கிப் பாங்குடன் பொலியும் நான்கு

திருக்கரங்களும் பைந்துழாய் மாலையும், கௌஸ்துப மணியும், பலவகை யான ஹாரங்களும் புனைந்து மிளிரும் திருமார்பும், பீதாம்பர உடை யும், வீரக்கழலணிந்து விளங்கும் திருவடிகளும் மரகதமலைபோன்ற சாயையும், ஸர்வ வியாபக சக்தியாகிய திருமேனியுங் கொண்டு விளங்கும் ஸ்ரீ ஜனார்த்தன மூர்த்தியானவர் ஸ்ரீதேவி பூதேவி சகிதமாய் கருடாழ்வார்மீதெழுந்தருளினர்.

சத்யலோக வாசியாய், சதுர்வேத பாரங்கதராய், சகல உலகங்களையும் படைக்கவல்ல சிருஷ்டி கர்த்தாவாய் விளங்கும் நான்முகப்பெருமான் அறுபத்து நான்கு கலைகளின் வடிவாகிய சாவித்ரீ காயத்ரீ சரஸ்வதீ என்னும் தேவிகளுடன் அன்னவாஹன மீது தோன்றினர்.

அமராவதி நகருக்கிறைவனுகிய தேவேந்திரன் இந்திராணி சஹிதமாக ஐராவதமென்னும் வெள்ளையானையின்மீது தோன்றினன். அளகாபுரிக் கிறைவனும் நவநிதிக்கதிபதியும், பரமேஸ்வரனின் நண்ப னுமான குபேரன் தனது தர்மபத்னியாகிய சித்ரரேகையுடன் புஷ்பவிமானத்தில் தோன்றினன்.

நவசக்திகளும், சப்த மாதர்களும், அப்ஸரஸ்த்ரீகளும், நாக கன்னியர்களும், அருந்ததி உலோபா முத்திரை அநுசூயை அகல்யா முதலிய பல உத்தம வனிதையர்களும் தத்தமது ஊர்திகளில் தோன்றினர்.

நூற்றிரண்டு கோத்ரங்களின் தலைவர்களாகிய,

1. அகஸ்த்யர்
2. ஆத்ரேயர்
3. ஆச்சாயனர்
4. உக்ரசேனர்
5. உதக்ருஷ்டர்
6. உத்தமோஜஸர்
7. ருஷ்யச்ருங்கர்
8. ஔசித்யர்
9. கண்வர்
10. கந்தூர்ப்பர்
11. கபிலர்
12. கபீதர்
13. கஸ்யபர்
14. குத்ஸர்

15. கௌண்டின்யர்
16. கௌந்தேயர்
17. கௌசிகர்
18. க்ருஷ்ணர்
19. கார்க்யர்
20. க்ருத்ஸன்மதர்
21. கோபகர்
22. கௌதமர்
23. சக்ரபாணி
24. சாமர்ஷணர்
25. ஜடபரதர்
26. ஜதுகர்ணர்
27. ஜம்பஸுதனர்
28. ஜரத்காரர்
29. ஜாபாலி
30. ஜாப்ரி (அல்லது) பாப்ரி
31. ஜீவந்தி
32. தரணி
33. தித்திரி
34. த்ரிஜடர்
35. தைத்ரேயர்
36. தூல்ப்யர்
37. தூர்வாஸர்
38. தேவராதர்
39. தேவவல்க்யர்
40. நாரதர்
41. நேத்ரபாதர்
42. பரஸ்பராயணர்
43. பல்லவர்
44. பவித்ரபாணி
45. பாராசர்யர்
46. பிங்களர்
47. புண்டரீகர்
48. பூதிமாஷர்
49. பௌண்ட்ரகர்
50. பௌலஸ்த்யர்
51. ப்ராசீனர்
52. ப்ராபாதர்
53. ப்ருஹதச்வர்
54. போதாயனர்
55. பாரத்வாஜர்
56. பார்க்கவர்
57. மந்துபாலர்
58. மனு
59. மரீசி
60. மார்க்கண்டேயர்
61. முனிராஜர்
62. மைத்ரேயர்
63. மௌஸலர்
64. மௌஞ்ஜாயனர்
65. மௌத்கல்யர்
66. யஸ்கர்
67. யாஜ்ஞவல்க்யர்
68. வடுகர்
69. வரதந்து
70. வருணர்
71. வசிஷ்டர்
72. வாமதேவர்

73.	வஸுதேவர்	88.	சௌனகர்
74.	வாயவ்யர்	89.	ஸத்யர்
75.	வால்மீகி	90.	ஸனகர்
76.	விஷ்வக்ஸேனர்	91.	ஸனத்குமாரர்
77.	விச்வாமித்ரர்	92.	ஸனந்தனர்
78.	விஷ்ணுவ்ருத்தர்	93.	ஸம்வர்த்தகர்
79.	வைரோஹித்யர்	94.	ஸுகாஞ்சனர்
80.	வ்யாஸர்	95.	ஸுதீக்ஷ்ணர்
81.	சரபங்கர்	96.	ஸுந்தரர்
82.	சார்ஞ்ரவர்	97.	ஸுவர்ணர்
83.	சாண்டில்யர்	98.	ஸுப்ரஹ்மண்யர்
84.	ஸ்ரீவத்ஸர்	99.	ஸௌபர்ணர்
85.	ஸ்ரீதரர்	100.	ஸௌம்யர்
86.	சுக்லர்	101.	ஸௌவர்ணர்
87.	சௌசேயர்	102.	ஹரிவல்க்யர்

நூற்றிரண்டு (வைஸ்ய) மஹரிஷிகளும் ஆகாய வீதியில் தோன்றினர்கள். தென்திசைக் கதிபனை யமதர்ம ராஜனும் எல்லாப் பிதிர்த் தேவதைகளும் தோன்றினர்கள்.

வாசவி தரிசனம்.

அச் சமயத்தில் நமது வாசவாம்பிகை பத்மம் பாசம் வீணை கிளி இவற்றைத் தாங்கிய நான்கு திருக் கரங்களோடும், வைரத் தோடணியோடும், தேகமுழுதும் நவரத்தின கசிதமான ஸ்வர்ணபரணங்களோடும், அதியற் புதமான கிரீடத்தோடும், திருவடிகளில் பொற் சிலம்புகளோடும், பச்சைப் பட்டாடையோடும், கோடி சந்திரோதயம் போன்று கருணை ததும்புந் திருமுக மண்டலத்தோடும், கோடி சூர்யோதயம் போன்ற தேக காந்தியோடும் விண்ணகத்தே தோன்றி விளம்பற்கரிய பேரொளியோடும் விளங்கினர்.

அப்போது அங்கர மாந்தர் அனைவரும் தம்மை யறியாத பெருங் களிப்பெய்தியவர்களாய் " அற்புதம்! அற்புதம்!! அற்புதம்!!! அற்புதம்!!!! " என்று ஆடினர்கள்.

மாந்தரெய்திய மகிழ்ச்சி. சிலர் " பண்ணிய பூஜை பலித்தது! பலித்தது!! " என்று பாடினர்கள். சிலர் " ஆர்ய வைசியர் குலம் தோன்றியது! தோன்றியது!! " என்று துதித்தார்கள். சிலர் " குறையெலாந் தீர்ந்தது! குறையெலாந் தீர்ந்தது!! " எனக் கொண்டாடினர்கள். சிலர் " துக்கம் நீங்கியது! சுகம் கிடைத்தது!! " என்று துள்ளினர்கள். சிலர் " கும்பிட்ட தெய்வம் குறுக்கே வந்துவிட்டது! " என்று குதித்தார்கள். சிலர் " எம்பிராட்டி அருள் இருக்கையில் என்னதான் முடியாது? " என்று எக்களித்தார்கள். சிலர் " கலக்கந் தீர்ந்தது! களிப்பு மிகுந்தது!! " என்று கை கொட்டினர்கள். சிலர் " வாழ்வு வந்தது! தாழ்வு தவிர்ந்தது!! " என்று மனம் பூரித்தார்கள். சிலர் " வாசவி தேவியின் திருவருள் வாழ்க! வாழ்க!! பல்லாண்டு வாழ்க!!! " என்று வாயார வாழ்த்தினர்கள். சிலர் " சக்தியின் பேரருள் ஜகமெலாந் தழைக்க! " என ஜயகோஷம் செய்தனர். சிலர் அம்பிகையின் மகிமை அளவிடற் கொண்ணுமோ? " என ஆரவாரித்தனர். சிலர் " ஆர்ய வைசியர் செய்த அருந்தவப் பயனே சிறந்ததாம் " என்று செப்புவாராயினர். சிலர் " இவ் வருட் சேவை காணுதற்கு அடியேம் புரிந்த அருந்தவப் பயனே பெருந்தவப் பயனெனிற் பிழையாது? " என்று அடிக்கடி புன்னி அகக்களிப் பெய்தினர்.

வைசியர் வணங்கி வழுத்தல். வைசிய யுவர்களும் யுவதிகளும் யாவரும் ஆகாய வீதியில் தோன்றும் அற்புதக் காட்சியைக் கண்குளிரக் கண்டு களிப்படைந்தும், ஐந்து பேரறிவுங் கண்களே கோள்ள, அளப்பருங் கரணங்கள் நான்கும் சிந்தையேயாக, குணமொரு மூன்றும் திருந்து சாத்வீகமேயாக, அந்தரத் திலகும் அமர நாதனையும் அம்பிகை வாசவியினையும், முந்துபே ராவத்தோடும் மெய்யன்பால் மொழியோணு முறைமையால் நோக்கி, வந்த பேரின்ப வெள்ளமே பருகி மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார். ஆனந்தக் கண்ணீர் ஊற்றுபோல் சுரந்து சுரந்து, விழுந்து விழுந்து, மார்பிலிடத்து வண்டலாடியது.

உடல் குழைந்து விதிர் விதிர்த்துச் சிலிர் சிலிர்த்துப் புளகாங்கிதம் எய்தியது. என்பு நெக்குவிட் டுருகியது. மனங் கனிந்து கசிந்து கரைந்து நெகிழ்ந்து உருகி யுருகி ஆனந்தவெள்ளத்தி லழுந்தி யழுந்திப் பரவச மாயது.

" பூதமெனு மோரைந்தா கியபொருளே ! உள்ளும்
புறம்புமெனும் பொருளே ! நற் புண்ணியமாம் பொருளே !
ஓதருமா யிரகோடி யண்டமுமாம் பொருளே !
ஒற்றுமைவேற் றுமைகளிலா தெர்ளிர்ந்திடுமோர் பொருளே !
வேதமொடா கமம்பலசாத் திரங்களுமாம் பொருளே !
வித்தெனவாய் விளைவெனவாய் விளங்கிடுமொண் பொருளே !
பேதமு மபேதமுமாய்ப் பிறங்கிமிளிர் பொருளே !
பெண்ணுருவாய் ஆணுருவாய்ப் பேணவரும் பொருளே !

நால்வகைத்தோற் றங்களுமாய் நண்ணிடுமோர் பொருளே !
நலமொடுபல் லுயிர்களையும் காத்தருளும் பொருளே !
நால்வயினுந் துரிசுகளை நாஸ்திசெயும் பொருளே !
நாதாந்தப் பெருவெளியில் நடனமிடும் பொருளே !
கோல்வழியிற் குலவிடுநல் லவருணருந் தெளிவே !
கோதில் தனிப்பொருளே ! மெய்ப்பொருள் நிலையே ! பரமே !
மேல்விளைசிற் சுகபதமே ! ரகசியமே ! வெளியே !
மிக்கவருள் வல்லபமே ! மெய்த்துணையே ! நட்பே !

எம்முயிரே ! எம்முறவே ! எம்மியற்கைச் சத்தே !
எமதியற்கைச் சித்தே ! ஆனந்தமெனும் அமுதே !
எம்மருளே ! ஒளிமணியே ! மந்திரமே ! மருந்தே !
இன்னதென மாற்றறியா இயலுடைப்பைம் பொன்னே !
இம்மையிலும் அம்மையிலும் உலவாமெய்ந் நிதியே !
இயற்கையெனும் பொருள்வடிவே ! இருள்கடியும் சுடரே !
எம்மையெலாம் மூழ்குவிக்கும் அமுதத்தெண் கடலே !
எமதுபவக் கடல்கடந்த இடத்தொளிருங் கரையே !

துன்பமெனும் சோடையினை நீக்கிடுபைங் காவே!
தூநீர்த்தண் பூந்தடமே! துகளில்படித் துறையே!
இன்பமருள்கிற தருவே! அத்தருவின் நிழலே!
இனிதசையும் பூங்காற்றே! எழில்மலரே! மணமே!
அன்புடனே வருகருணைப் பேரூற்றே! அடியார்
அகமகிழத் தினமுண்ணும் சுவையுணவே! கனியே!
மன்பதைகள் பருகிடுசெவ் விளநீரே! பாலே!
மருவியவேர்ப் பலவினுறும் மதுரமிகும் சுளையே!

கரும்பினுறுந் தீஞ்சாறே! கனிரசமே! தேனே!
கருதுபதந் தருபாகே! கரையாக்கற் கண்டே!
அரும்பிடுமெய்ஞ் ஞானமெனும் சர்க்கரையின் திரளே!
ஆசையெலாந் துறந்தவர்கள் அருந்திடும் ஐயமுதே!
விரும்புபவர்க் கறிவொளியை விளக்குமருள் விளக்கே!
வேதாந்த முணர்த்துமருட் கண்ணே! கண்மணியே!
பெரும்பதமெல் லாங்கொடுக்க வல்லவருள் நிலையே!
பிறவியெனுங் கடல்கடத்தும் பெரியவருட் புணையே!

எங்களுமே யொளிபெருக்கி யொளிர்ஜோதி மலையே!
இன்புருவ மாக்கிடுதற் கெழுந்தனிமெய் யன்பே!
துங்கமுறு சத்தியநித் தியவிளக்கே! என்றுந்
தூண்டாத மணிவிளக்கே! ஜோதியருட் பிழம்பே!
செங்கதிரே! நிறைமதியே! செழுங்கருணை மழையே
சிறக்கநனி பெயுமுகிலே! சக்தியருட் கனலே!
கங்குல்பக லறவொளிரும் பரஞ்சுடரே! எங்குங்
கலந்தவருட் பெருஞ்ஜோதிச் சுகந்தருபே ரறிவே!"

என்றெல்லாம் பலவாமுக வாய்நீர் சுரந்து பாடிப்பாடி நாக்குழறித் தழும்பேறியும், ஆநந்தக்கூத்தாடியும், தண்டுபோல் அநந்தமுறை கீழே விழுந்து விழுந்து வணங்கி உடம்பிற் புழுதியாடியும், குளிர்ச்சி பொருந்திய சுந்திர பிம்பம்போன்ற முகத்தின்கண் முத்துமாலை யணிந்ததுபோன்று வியர்வரும்பி, இளநகை தோன்றி மலர்ந்து,

இரு கைகளையும் கூப்பிச் சிரசின்மேல் வைத்துக்கொண்டு, அன்பே வடிவமாகி நின்று, "தேவர்கள் முனிவர்கள் எல்லாம் அரிய தவம் செய்தும் கனவிலும் காண்பதற்கருமையாகிய அம்பிகையே! அன் பென்பது அணுவளவுமில்லாத அடியேங்களுக்கும் நினது அருமை யாகிய அருட்டிருமேனியை நனவிலே எளிதாகக் காட்டியருளிய பெருங் கருணைத்திறனே என் னென் று துதிப்போம்? பொய் யுலகத்தை மெய்யென்று நம்பி, புன்மையாகிய போகத்தை விரும்பி, புவியில் வீணே திரிந்துழன்று, பாவமூட்டையைக் கட்டிச் சேர்த்து, மீளாநரகில் விழத்துணிந்த அஞ்ஞானத்தையுடைய அடியேங்களையும் ஓர் பொருளாகத் திருவுளத்திற்கொண்டு காட்சி தந்தருளிய கருணைக் கடலே! கடலெழும் அமுதே! கண்ணுண் மணியே! கணிப்பில் பேரொளியே! கட்டிக்கரும்பே! கரும்பின் சுவையே! கற்பகக் கனியே! கருணைநிதியே! நினது திருவருட் பெருமையை என் னென்று சொல்லுவோம்?

அகப்பற் றென்னுமோர் ஆணவப் பேயும்
புறப்பற் றென்னுமோர் போல்லாப்பேயும்
காம மென்கின்ற கசடப் பேயும்
மூளும்வெங் கோபமாம் மூர்க்கப் பேயும்
கடுகடுப் பென்கின்ற காட்டுப் பேயும்
உலோப மென்கின்ற உதவாப் பேயும்
மோஹ மென்கின்ற மூரட்டுப் பேயும்
செருக் கென்கின்ற தீயதோர் பேயும்
அழுக்கா றென்னுமோர் அற்பப் பேயும்
ஜகமாயை யென்னும் சஞ்சலப் பேயும்
பேராசை யென்னும் பெரியதோர் பேயும்
சோம்ப லென்னுமோர் துர்க்குணப் பேயும்
சூழ்ச்சி யென்னுமோர் துஷ்டப் பேயும்
டாம்பீக மென்னுமோர் இடும்பைப் பேயும்
பணவெறி யென்னுமோர் பாழும் பேயும்
ஜாதிபேத மெனும் சண்டாளப் பேயும்
மததூஷண மெனும் மாயப் பேயும்
அஞ்ஞான மென்னும் அல்லற் பேயும்

அடங்காப் பேயாகிய மனப்பேயோடு கூடி அல்லும் பகலும் ஆட்டம் ஆடியாடி பல ஜால வித்தைகள் புரிய, உடன் ஓடியாடி ஒன்றுமறியாமல் அல்லற்பட்டுக்கொண்டுள்ள அடியேங்களைக் காத்தருளல் வேண்டுமெனத் திருவுளமிரங்கி இருமுறையும் தரிசனம் தந்து துன்பத்தை நீக்கி இன்பத்தை யளித்தருளிய எம்பிராட்டியே! எம் தாயே! எம் சற்குருவே! எம் தெய்வமே! எம் குலதெய்வமே! எம் இஷ்ட தெய்வமே! எம் உயிர்த்துணையே! எமதறிவுக்கறிவே! எமதுளத் தமர்ந்தே என்றும் காத்தருள் இறைவியே! நினது திருவருட் பெருமையை வேதங்களுமறியாது விழித்துக்கொண்டு தேடித் தேடிக் கூறிக்கூறி யினைத்து நின் திருவடித் துணையை யண்மி சிலம்புகளாய்த் திகழ்ந்து நின் அருட்டுணை கொண்டு இன்னும் நின் மஹிமையையே ஒலித்துக்கொண்டுள்ளன வென்றால், கிருமி கீடங்களிலும் கீழ்ப்பட்ட அசேதனர்களாகிய அடியேங்கள் எப்படியறிந்து துதித்தற்கியலும்? நின்னுடைய திருவருட் கோலத்தையும், ஸ்ரீ கைலாசவாசனை ஸ்ரீ சிவபெருமானின் திருக்கோலத்தையும், ஸ்ரீ வைகுண்ட நாதனை ஸ்ரீமந் நாராயண மூர்த்தியின் திருக்கோலத்தையும், நான்முகக் கடவுளின் திருக்கோலத்தையும் ஏனைய தேவ ரிஷி சித்த பூத கண கூட்டங்களுடன் திவ்யமாக தரிசுக்கப்பெற்ற அடியேங்கட்கு இனி என்ன குறை இருக்கின்றது? அன்பர்கட்கு இன்பம் அளித்த அருட் பிழம்பே! நினது கிருபா நோக்கத்தால் உடல் பூரித்தோம். உள்ளங் குளிர்ந்தோம். உயிர் தழைந்தோம். தாழ்வு தவிர்ந்தோம். வாழ்வடைந்தோம். துக்கம் நீங்கினோம். சுகம் பெற்றோம். மனதுக்கும் அடங்காத மகிழ்ச்சி கொண்டு நின்றோம். நின் திருவருள் துணை எமக்கு எக்காலத்தும் உடனிருந்து ஒப்பிலா இன்பத்தை நல்குமாக!" எனப்ரார்த்தித்தனர்.

விஷ்ணுவர்த்தன மன்னனின் தேவியும் புத்திரனும், ஈசனையும் திருமாலையும் பிரமனையும் வணங்கி, எட்டுத்திக்கிலும் எட்டின மட்டும் பேரொளி வீச ஆகாய வீதியில் **மன்னனின் பிழையை** தோன்றுகிற வாசவியைப் பார்த்து, **மன்னிக்க வேண்டல்.** "அருளே வடிவான அன்னையே! லோக மாதா! லோக ரக்ஷகி! சர்வ ஜீவதயாபரீ! சிற்பரீ! தற்பரீ! திகம்பரீ! பரம்பரீ! வேதவித்தகீ! விமலீ!

பகவதீ! மஹேஸ்வரீ! மஹேன்மணீ! ஞானஸ்வரூபிணீ! மஹா மந்த்ரரூபிணீ! தேவதேவீ! வாசவீ! சாம்பவீ! பார்க்கவீ! ஸ்ரீ தேவீ!. பூதேவீ! வாணீ! காயத்ரீ! சரஸ்வதீ! பாரதீ! அபிராமீ! அந்தர்யாமீ! கௌரீ! பராசக்தீ! பரம கருணாகரீ! பார்வதீ! சகல புவன புயிர்கட்கும் சகல செல்வ போகங்களையும் ஈந்தருளும் மஹா லக்ஷ்மீ! கலைஞானங்க ளனைத்தையுங் கடிதினில் தந்தருளுங் கலாரூபிணீ! எல்லா வடிவங்களாயு மிருந்து உலகை யியக்கிடும் உத்தமீ! ஏழையேங்கள்பால் சற்று தயவு கூர்ந்து எமது அரசனுகிய விஷ்ணுவர்த்தனனைக் காத்தருளவேண்டும். நினது மஹிமை யுணராமல் அஞ்ஞான காரணத்தால் அறியாதியற்றிய பிழைகளை யெல்லாம் மன்னித்தருளவேண்டும். . அம்மன்னன் மீண்டும் இவ்வுலகில் சத்புருஷனுகத் திகழத் திருவருள் பாலித்தல் வேண்டும்" என்று பலவாருகக் கதறிக் கண்ணீர்விட்டு, மிகுந்த பக்தி ஸ்ரத்தையுடன் பிரார்த்தித்துக்கொண்டனர்.

இதுகாறும் ஒன்றும் புரியாது இறைவியின் கருணை சமுத்திரத் தில் மூழ்கித் தம்வச மழிந்திருந்த வைசிய யுவர்களும் யுவதிகளும் இறைவியின் அருளால் சற்று உலக நினைவெய்தினர். இவ் விஷயங்க ளெல்லாம் புலனுயின. உடனே அவர்கள் மனமிரங்கி, தேவியைப் பார்த்து "சர்வலோக மாதாவான பரமேஸ்வரீ! அநந்த சக்திகளா யிருந்து அகிலத்தை ஆட்டிவைக்கும் அன்னையே! அம் மன்னவன் அறியா தியற்றிய கொடுஞ் செயல்களை மன்னித் தருளி, அவனுடைய பாபங்களையும் பஸ்மீகரப்படுத்தி, நினது திவ்ய தரிசனத்தைத் தந்து, நல்லுணர்வு நல்கித் தண்ணருள் பாலித்தல்வேண்டும்" எனப் பிரார்த் தித்துக் கொண்டனர்.

உடனே ஸ்ரீ வாசவாம்பிகை தனது திருக்கண்களால் கடைக் கணித்தருள, அத் திருவருள் வலத்தால், (தேரில் மூர்ச்சையுற்று மரணவஸ்தை யடைந்தவன் போல ப்ரேதத்தை யொத்துக்கிடந்த) விஷ்ணுவர்த்தன மன்னன் (உறங்கியவன் விழிப்பதைப் போல) விழித் தெழுந்து, திவ்ய ஞானவுணர்ச்சி பெற்றவனுகித் தேரினின்றும் கீழே இறங்கி வந்து, அருகிலிருந்த வைசிய யுவர்களை யண்மித் தன்னுடைய தீச்செயல்களை யெல்லாம் (மறந்து)

விஷ்ணுவர்த்தனன் ஞானவுணர்வுறல்.

மன்னித் தருளி, நல்லாசி கூறவேண்டுமெனக் கேட்டுக்கொண்டு, தன் அரசு முழுவதையும் ஏற்றுக்கொண்டு அரசாளும் வண்ணம் பிரார்த்தித்தனன்.

பின்னர், ஆகாய வீதியில் தேவர் கூட்டங்களும் அம்பிகையும் எனைய மூர்த்திகளும், தோன்றுவதைக் கண்டு, தரிசித்து, வணங்கி, கண்களிலிருந்து ஆனந்தபாஷ்பம் பெருக, உரை குழற, நாத் தடுமாற, நெஞ்சம் படபட வென்று துடிக்க, ஒன்றுந் தோன்றாது பரவசனாகி, சற்று நேரம் ஸ்தம்பித்து நின்று, பின்னர்த் தன் நினைவெய்தி, அண்ட பிண்ட சராசரங்கள் அனைத்தையும் படைத்துக் காத்து அருள் பாலிக்கும் அம்பிகையின் பேரொளியை மீண்டும் மீண்டும் கண்கொட்டாது பார்த்து, இரு கண்குளிரச் சேவித்து, மனமாரத் தியானித்து, "ஸ்ர்வ லோக ரக்ஷகீ! ஸர்வாத்ம ரூபிணீ! ஜகதோத்தாரிணீ! லோக சோக விநாஸினீ! வசுதாரிணீ! பத்மினீ! பத்மகந்தினீ! ப்ரசன்ன வதனீ! சந்த்ரவதனீ! ஆஹ்லாதஜனனீ! விஸ்வஜனனீ! தாரித்ர நாசினீ! ப்ரீத புஷ்கரிணீ! யசஸ்வினீ! ஹேமமாலினீ! த்ரிகால ஜ்ஞான சம்பன்னீ! மஹாபாதக நாசினீ! வித்யுன் மாலினீ! விந்த்ய வாஸினீ! ப்ரம்ஹஜ் ஞானைக சாதனீ! ஸுவாஸினீ! த்ரிகுணீ! சாஸ்த்ர ரூபிணீ! சுர வாஸினீ! தூமலோசன மர்த்தனீ! மஹிஷா ஸுர மர்த்தனீ! நிரஞ்சனீ! ஹம்ஸாஸனீ! கமலா! காந்தா! சாந்தா! இந்த்ரா! நவதுர்க்கா! சந்த்ரலேகா! பாமா! சண்டிகா! ஸுபத்ரா! ஸுஸீலா! காமாக்ஷீ! பத்மாக்ஷீ! மீனாக்ஷீ! விசாலாக்ஷீ! பத்ம சுந்தரீ! பத்மோத்பவீ! பத்ம மாலாதரீ! சந்த்ர ரூபீ! பாஸ்கரீ! தன தான்யகரீ! ப்ரஸன்னாக்ஷீ! மஹா காளீ! புவனேஸ்வரீ! வைஷ்ணவீ! சாவித்ரீ! திவ்யாலங்கார பூஷித சுந்தரீ! வராக்தேவீ! கோமதீ! ப்ராம்ஹீ! வித்யா ரூபீ! ஸ்வேதானனீ! தேவ தேவீ! மஹா மாரீ! பைரவீ! ருத்ராணீ! க்ருபாகரீ! பேரருள் பொழிந்து பிரஜைகளைக் காக்கும் பிஞ்ஞகீ! தேவர்கள் முனிவர்கள் யாவரும் சூழ அடியேனுக்கும் காட்சி தந்தருளும் கௌமாரீ! பாக்கியம் எனக்கும் பரிவுடன் சேவை தந்தருளும் பராபரீ! என் பிழை யனைத்தையும் எண்ணாது மறந்து இனிது மன்னித்து ஈடிலாப் பேரருளை எளிதினில் நல்குதற்கு எழுந்தருளிய ஈஸ்வரீ! எனது ஜன்மம் சாபல்யமாயிற்று! எனது உயிர் தூய்மையுற்றது! எனது வாழ்க்கை மேன்மை பெற்றது! யான் அடையாப் பேறு

அடைந்தவனுயினேன்! சொல்ல வொண்ணுத கொடிய பாவங்களெல் லாம் தொலைந்து போயின! உலக மாதாவாகிய நின் ஒப்பிலாக் கருணை யால் யானும் மன்னிக்கப்பெற்றேன்! உயிர் பெற்றேன்! உளம் பெற்றேன்! உணர்வுற்றேன்! உளம் பூரித்தேன்! ஞான வுணர்ச் சியும் நல்கப் பெற்றேன்! பொய்யுலக வாழ்வின் புன்மையும் கண் டேன்! புனித மெய்ஞ்ஞானப் பொருள்நிலை யுணர்ந்து பொன்ரு இன்பப் புணரியில் மூழ்கி சதானந்த வாழ்வில் சார்ந்துய்யுமாறு திரு வருள் பாலித்தல் வேண்டும் தாயே!" என்று பலவாருக, உருகிய சிந்தையுடன், உள்ளெழும் பேரன்புடன், கசிந்து கசிந்து, நொந்து வருந்தி, நைந்து நைந்து திளகி ஸ்தோத்தரித்து நின்றனன்.

அச் சமயத்தில் "ததாஸ்து" என்று ஓர் சப்தம் ஆகாயத்தி னின்றும் தோன்றியது கேட்டு ஆனந்தமடைந்த அரசன் மிகுந்த பக்தி ஸ்ரத்தையுடன் பன்முறையும் தரையில் வீழ்ந்து வீழ்ந்து வணங்கி, ஞானோபதேசத்தைச் செய்ய வேண்டுமென்று அம்பிகையை ப்ரார்த் தித்துக்கொண்டனன். அம்பிகையும் அவ்வாறே உபதேசித் தருளுவதாய்ச் சொன்னதைக் கேட்டு மிகுந்த சந்துஷ்டி யடைந்த விஷ்ணுவர்த்தனன் மீண்டும் இறைவியைநோக்கி, "தாயே! இவ்வைசியர்கள் எல்லாம் தீயில் மூழ்கவேண்டிய காரணம் யாது? என்னுல் அவர்கள் உயிர் விடுவது என்முல், அது நியாயமா? நீ அவர்களையும் காப்பாற்றவேண்டாமா? தயவுகூர்ந்து அவர்களையும் உயிர்பெற் றெழும்படிச் செய்தருள வேண்டும். உலகில் யான் பழிக் குள்ளாகாமல் அத்தீன ஜனங்களையும் நீதான் காப்பாற்றவேண்டும். என் கண் முன்னுல் அவர்கள் இப்பொழுதே உயிர்பெற் றெழுந் திருக்காவிட்டால் யான் ஓர் க்ஷணமும் உயிர் தரிக்கமாட்டேன். இது நிச்சயம். சற்று கருணை பாலிப்பாய் தாயே" என்று பலவாருகக் குறையிரந்து கொண்டனன்.

மன்னவன் வேண்டுகோள்.

உடனே அம்பிகை விஷ்ணுவர்த்தனனைப்பார்த்து "மன்னனே! அவர்கள் ஒருவரும் உயிர் துறக்கவில்லை. அவர்கள் யாவரும் ஞானக்கனியில் மூழ்கி என்னுடைய திவ்ய ஜோதி ஸ்வரூபத்தில் கலந்து ஆனந்தம் அனுபவித்துக்கொண்டுள்ளார்கள். அவர் கள் ஜீவன் முக்தி நிலையை எய்திவிட்டார்கள். அவர்கள்

வைசியப் பெரியார் யோகுவிட் டெழுதல்.

இனிப்பிறப்பது இறப்பது கிடையாது. பிறவிப் பெருங்கடலை நீந்தி முத்தியங்கரையை அடைந்துவிட்டார்கள். இதோ அவர்களே சிறிது நேரத்தில் யாவும் உரைப்பார்கள்" என்று கூறி அவ் வைசியர்கள் யாவரும் துரியாதீதப் பெருவெளியிற் பரத்துடனென்றிப் பேரானந்தத்திற் சுகித்துக்கொண்டிருக்கும் அவ்வுயர் நிலையிலிருந்து சாதாரண உலக நிலையை அடையுமாறு செய்வித்தனர்.

அப்பொழுது அவர்கள் யாவரும் கண்விழித் தெழுந்து, உலகமெங்கும் ஓர ஜோதிமயமாகக் கண்டு, அம்பிகையின் திருவருளைத் துதிப்பாராயினர். "அருளறிவு வெள்ளமே! ஆனந்த சமுத்திரமே! சாகாக் கல்வியே! அகில உலகங்களையும் ஆக்கிக் காத்தே அழிக்கும் வல்லபமே! காயெலாங் கனியெனக் கனிவிக்கும் ஒரு பெருங் கருணையாம் அமுதமே! கண்கண்ட தெய்வமே! அற்புதக் காட்சியே! கனக நன் மலையே! அருள் பெருகு நதியே! ஒப்பற்ற தாயே! ஒரு தனித் தலைவியே! நினைத்திட மதித்திட அறிந்திடற் கரிதான தன்மையுறு பெரிய பொருளே! வாயெலாம் தித்திக்க, மனமெலாம் தித்திக்க, மதியெலாம் தித்திக்க, அறிவெலாம் தித்திக்க வளர்கின்ற இன்ப மயமே! பார்த்தாலும், நினைத்தாலும், படித்தாலும், படிக்கப் பக்கம் நின்று கேட்டாலும், பரிந்துள்ளே உணர்ந்தாலும், துதித்தாலும், ஜெபித்தாலும், சொன்னாலும், சொல்லறவே அமைதி நிலைத்தாலும் இத்தனைக்கும் தித்திக்கும் இனித்த சுவைக் கரும்பே! எய்ப்பற எமக்குக் கிடைத்த பெரு நிதியமே! எல்லாம் செய்ய வல்ல வொரு சித்தே! எம் கையில் அகப்பட்ட ஞான நன் மணியே! எழுமையும் காப்பாற்றும் இணையிலா நட்பே! காயத்ரி யென்கின்ற கற்பக வனத்திலே கவினுற்ற நிழலிற் கனிந்த நற் கனியே! எமது கண்கள் காண இவண் வந்த கதியே! மெய்ப்பய னளிக்கின்ற குரு தேவியே! வினையெலாந் தீர்த்த மெய்ஞ் ஞானமெனு மழுவே! வேதாந்த நிலை விளக்கும் மெய்யான தெய்வமே! சுத்த சிவபோக விளைவே! சத்யப் பொலிவே! சத்வப் பெருக்கே! நீங்கா உறவே! அன்பான துணையே! உலவாத இன்பமே! சன்மார்க்க போதமே! துரிய வெளி மீதிலொளிர் ஜோதி ப்ரகாசமே! கருணை பொழி வானமே!

ஜீவன் முக்தர்கள் தேவியை வாழ்த்தல்.

கருதரிய மோனமே ! கற்பனை கடந்திலகு ஞானமே ! நின் அருட் பிரபாவத்தை என்னென்று புகல்வது ? என்னென்று நினைப்பது ? ஆஹா ! அற்புதம் ! அற்புதம் !! ' எமக்கு உண்மையான ஞானச் சுகத்தைத் கொடுத் தருளல் வேண்டும் தாயே ' என்று,

[ஓம் = அ + உ + ம்]

அ

அன்புடன் போற்றி செய்தோம் வாசவியே
அன்னைபோ லெம்மை யாண்டாய் வாசவியே
அன்னந் தனை மறந்தோம் வாசவியே
அறிவை யுரை லாஞ்சொம் வாசவியே
அகங்குழை யச்செய் திட்டாய் வாசவியே
அமர நிலைத்ந் திட்டாய் வாசவியே
அகம்புற மின்றிச் செய்தாய் வாசவியே
அறுபகை களைக் கொய்தாய் வாசவியே
அற்ப நினைவ ழித்தாய் வாசவியே
அருளமு தங்கொ ழித்தாய் வாசவியே
அல்லும் பகலு மின்றி வாசவியே
அருளொளி காணச் செய்தாய் வாசவியே
அண்ட புவன மெல்லாம் வாசவியே
அளிக்க வல்லபத் தந்தாய் வாசவியே
அண்டர் புலவ ரெல்லாம் வாசவியே
அமையா ரெமக்கு நிகர் வாசவியே
அனைத்தையு முள்ளே காண வாசவியே
அனுக்கிர ஹம்பு ரிந்தாய் வாசவியே
அனவர தமு மெம்முள் வாசவியே
அஹ மஹ மென்றெளிர்ந்தாய் வாசவியே
அதுவிது வென் றில்லாமல் வாசவியே
அத்வித மாகச் செய்தாய் வாசவியே
அதுமுடி வென்று ரைத்தாய் வாசவியே
அனந்தமும் நீயாய் நின்றுய் வாசவியே

ஒ

உள்ளுணர் வாயொ ளிர்ந்தாய் வாசவியே
உலகெலாங் காட்டு வித்தாய் வாசவியே
உள்ளபொ ருளொன் றென்றே வாசவியே
உணர்நிலை கூட்டு வித்தாய் வாசவியே
உண்டி யுறக்க மெல்லாம் வாசவியே
உத்தமர்க் கல்ல வென்றாய் வாசவியே
உண்டு சுகமொன் றென்றாய் வாசவியே
உள்நோக்கி ஞல றிந்தோம் வாசவியே
உடலசம் பந்த மெல்லாம் வாசவியே
உடனே தொலைந்த தம்மா வாசவியே
உடைமை வறுமை யெல்லாம் வாசவியே
உலைந்து குலைந்த தம்மா வாசவியே
உத்தர தக்ஷி ணங்கள் வாசவியே
உளவென்ப தை மறந்தோம் வாசவியே
உத்தம ஞான மெம்முள் வாசவியே
உதய மாகிச் சிறந்தோம் வாசவியே
உந்திக் கமல மதில் வாசவியே
உண்மை யொளியைக் கண்டோம் வாசவியே
உந்து மூச்சை யடக்கி வாசவியே
உன்னையுட் கண்டு கொண்டோம் வாசவியே
உன்னையெம் முள்ளே காண வாசவியே
உளத்தைத் திருத்தி விட்டாய் வாசவியே
உன்னரு ளின்றி யெம்மால் வாசவியே
உன்னைக் காண வொண்ணுமோ வாசவியே ?

ம்

மகளிர் புகழ் விளங்க வாசவியே
மகவென வந்து தித்தாய் வாசவியே
மகிழ்வொ டெமையாட் கொண்டாய் வாசவியே
மறைப்பை யகற்றி விட்டாய் வாசவியே

ம்னமலர் மீத மர்ந்தாய் வாசவியே .
மதிநலத் திச்சை தீர்த்நாய் வாசவியே
மனிதரெ னப்பி றந்தோர் வாசவியே
மற்றும் பெறுவ துண்டோ வாசவியே ?
மண்ணு முலக மெல்லாம் வாசவியே
மருவுமுன் றன் வடிவாம் வாசவியே
மன்னர்செங் கோலில் நின்றுய் வாசவியே
மண்ணில் வளங் கொழித்தாய் வாசவியே
மரமாய் நிழல் கொடுத்தாய் வாசவியே
மலையாய் மருந்த ளித்தாய் வாசவியே
மருள்கடிந் தின்பந் தந்தாய் வாசவியே
மட்டில் பற்றைக் களைந்தாய் வாசவியே
மலியு மெண்ணந் தொலைத்தாய் வாசவியே
மந்திரப் பொருளு ரைத்தாய் வாசவியே
மலரடி சேர வைத்தாய் வாசவியே
மவுனெப தேசம் செய்தாய் வாசவியே
மயக்க மொழித்து விட்டாய் வாசவியே
மகிமை யுணரச் செய்தாய் வாசவியே
மயிர்க் கூச்சுண் டாகுதம்மா வாசவியே
மங்கள மெங்கும் பொங்க வாசவியே !

வேறு

பொன்னே நிகர்க்கப் பொழியும் மொழிகளெம்
புன்மை தவிர்க்கு தம்மே !
நின்னே நினைக்க நினைக்க நினைக்கவெம்
நெஞ்சு கரையு தம்மே !
தன்னே யுணர்ந்திடல் வேண்டுமென் றேர்விதச்
சக்தி பிறக்கு தம்மே !
உன்ன வுரைக்க வொண்ணுத மெய்யின்ப
வுததி பெருகு தம்மே !

எங்கணு முள்ளதொன் றேபொரு ளென்னுமோர்
எண்ணமுண் டாகு தம்மே !
கங்கு கரைக ளெவையுமில் லாவருட்
காட்சி தெரியு தம்மே !
தங்கு தடையற வந்துவந் தேவுப
சாந்த மொளிரு தம்மே !
அங்கென விங்கென வின்றியெங் கும்பர
மானந்த மேவு தம்மே !

சக்திக் கனலும் பெருகி யொளிரச்
சமரச மோங்கு தம்மே !
சித்தக் கதிருஞ் சிறந்து பொலிந்துசத்
சித்தொளி காட்டு தம்மே !
சுத்த பரானந்த மேவிட வேஹம்ஸஸ்
ஸோகம் சிவோஹ மென்றே !
உத்தம மாயொலிக் கச்சச்சி தானந்த
உண்மை விளங்கு தம்மே !

வேறு

ஓம்தத் ஸத்தென வொளிர்தரு மந்த்ரத்
துட் பொருளா மணியே !
உணர்வுட னுரைசெய லாதி கடந்த
வுயர் பொருளா மணியே !

காந்தத் தினைநிக ராகி யமர்ந்து
கணக்கி லுயிர்த் தொகையைக்
கருதரு பலவுல கங்களி லாட்டிக்
கருணை புரிந் துதவும்

சாந்தக் கதிரே ! சுகவமு தம்பொழி
தன் மதியே ! வெளியே !
தத்வ மளிப்பொரு ளுட்கொளு நற்றவர்
சத்வ குணப் பொலிவே !

மாந்தர்க் குற்ற மயல்க ளகற்றிட
மண்ணி லுதித் தணியே !
வாசவியே ! நின தருளினை யாமிவண்
வாழ்ந்துவ தெங் ஙனமே ?

["ராமா நீ க்ருபை செய்வாய்" என்ற மெட்டு.]

(பல்லவி)

அறிவொளி வீசுதம்மா — வாசவீ நின்பே
ரருளொளி வீசுதம்மா

(அநுபல்லவி)

அறிவும யமாய் நின்றே அண்டமெ லாம்நி றைந்தாய்
செறியும்ப ரமா னந்தத் தேனமு தம்பொ ழிந்தாய் (அறி)

(சரணங்கள்)

வேதாந்த சித்தாந்தமும் நாதாந்த போதாந்தமும்
யோகாந்த கலாந்தமும் யுக்திபுத் தியும்தாண்டி
நீதான்நான் நான்தான்நீயென் றொன்று யபேதமாகி
நின்றுவ்யா பிக்கும்மேலாம் நிலையையு ணர்த்திநின்றாய் (அறி)

சுத்தச மரசசன் மார்க்கநெ றியில்நின்று
தோய்ந்துந்தோ யாமல்தனித் திலகுமா காயம்போல
நித்திய ப்ரம்மமாம்சொ ரூபமா கியவொன்றே
நிலவுமு லகுயிராய் நிற்பது ணர்ந்துநோக்கில் (அறி)

ஞானக்கண் ணைத்திறந்து நாடியொ ளியைக்கண்டு
நானென்றி ருந்திடுமோர் ஞாபக முமறந்து
மோனச மாதிநிலை முற்றிச்சி வபோகத்தில்
மூழ்கியொன் றுகிஜீவன் முத்தியின் பமெய்தினேம் (அறி)

என்றெல்லாம் பலவாறுக ஸ்தோத்தரித்ததைக் கண்ட ஜனங்கள் யாவரும் ஒப்பற்ற பெருங்களிப் பெய்தினர்.

ஒன்பதாம் அத்தியாயம்.

(இரண்டாம் பகுதி.)

*

எவ்வுயிரும் ஈசனுறை ஆலயமென் றேயெண்ணிச்
செவ்விய அன் பாற்சேவை செய்.

ஓம்

ஸ்ரீ வாசவீ விஜயம்.

ஒன்பதாம் அத்தியாயம்.

(இரண்டாம் பகுதி.)

சரந்த விருபாட்சற்ற சக்தி முடிசூட்டல்.

சாற்றுதற்காரிய பெருமகிழ் வோடும் யாவரும் அம்பிகையின் மஹிமையை உன்னி உன்னி உவகைமிகுந்து ஸ்தோத்தரித்துக் கொண்டிருக்குந் தருவாயில், ஸ்ரீ வாசவாம்பிகை தனது திருவருளினால் அந்த இடத்தில் அரைக்கண நேரத்தில் ஓர் அற்புத மண்டபத்தை நிருமித்தனர்.

இயற்கை மண்டபம்.

அம்மண்டபத்தின் முகவாயிலிலும் சுற்றுப்புறங்களிலும் செம்பொன்மயமான தேர்களும், நீலமணிகளின் பிரகாசம் வீசும் யானைகளும், செம்மணியொளிகாலும் சிங்கங்களும், யாளிகளும், துரகத்திரள்களும் அழகைப் பொழிந்த வண்ணமாய்ப் பொலிந்தன. பளிங்கிறற் செய்த சுவரும், மரகதச் சாளரங்களும், உள்ளே விளங்கும் ஆயிரம் செம்பவளத் தூண்களும், அதன்மேல் விளங்கும் இந்த்ர நீலப் போதிகைகளும், பொன்னுத்தரங்களும், ரத்ன விட்டங்களும், சந்த்ர காந்தக் கல்லாலான மேற்கோப்பும் சிறந்து திகழ்ந்த பேரெழில் செப்புதற் கியலா. எவ்வளவு ஜனங்கள் வரினும் தாராளமாக இருக்குமாறு ஏழு அடுக்கு மாடிகளுடன் அவ்வற்புத மண்டபம் அழகுறப் பொலிந்தது.

அத்தகைய மண்டபத்தின் நாற்புறமும், முத்தினாற்பாலிகைகளும் மரகதத்தாற் பச்சிலைகளும், பவளத்தாற் பழங்களும், வெள்ளியால் அடியும், உள்ளதாகி விளங்கும் கழுகுகளும், மரகதத்தாலிலைகளும் பைம்பொன்னாற் கனிகளும் திகழும் பல கதலிகளும், நாட்டப்பட்டிருப்பதேயன்றி, வண்டுகள் பாடவும், தேன்துளி சிந்தவும், தென்றல் சாளர வழியாய் வீசுகையில் ஆடி அசைந்து அனைவரையும் 'வருக! வருக!!' என அழைக்கவும், இயற்கையழகினை இனிதே விளக்கி, யாவர் மனத்தையும் சாந்தப் படுத்தவும், அமைந்தனவே போன்று பொலியும் பல பைந்தருக்களும், மலர்ச் செடிகளும், பூங்கொடிகளும் எழிலுற அமைந்து பொலிந்து கொண்டிருந்தன. யாகசாலையும் வேதிகையும் ஹோமகுண்டமும் விதிப்படியமைக்கப்பட்டிருந்தன. கண்ணாடி முதலான அஷ்டமங்கலங்களும் தாங்கிய வண்ணம் அநேக சூஸ்த்ரப்பதுமைகள் நின்று கொண்டிருந்தன. வாசனைச் சந்தனத்திலே குங்குமப்பூ கலந்து ஜவ்வாது கஸ்தூரியும் சேர்த்துக் குழப்பி நிலமெழுகப் பெற்று, மிக விநோதமாக அலங்கரிக்கப்பட்டிருந்த அம்மண்டபத்தினுள் இரு புறத்திலும் அனேக பாவைகள் மணித் தீபங்களேந்தச் சூரிய மண்டலம்போல் தோன்றியது. ஆகாயத்தில் நட்சத்திரங்கள் பூத்ததே போன்று நவரத்னங்கள் பதித்த மேற்கட்டி பிரகாசித்துக்கொண்டிருந்தது. முன்புறத்தில் வானளாவப் பச்சைப் பந்தரிட்டு, மூலே தெளித்துப் பொற்பாலிகைகள் வைக்கப்பட்டிருந்தன.

மண்டபத்திற்குள்ளே அனைவரும் அமர்வதற்குத் தக்கபடி ஆசனங்கள் அமைக்கப்பட்டிருந்தன. பிரப்பம் பாய்கள், செம் பொற்ஜோதி வீசும் ரத்ன கம்பளங்கள், பலவித சித்ரவேலை செய்த மேல்விரிப்புகள் விரிக்கப்பட்டிருந்தன.

செம்மணிகளாற் செய்யப்பெற்ற சிங்கங்களின் பிடரியின் மேற் சதுரமாகப் பச்சை மணியாற்றூண்கள் நிறுத்திப் பளிங்கினால் உத்திரமிட்டுப் பவளத்தினாலே கொடுங்கை கூட்டிப் பொற்பலகையினைப் பொருந்தப் பரப்பி, மூன்றடுக்கு பவளக் குடம் வைத்த விமானம் பலவித ரத்னங்களாலும் விளங்க அமைத்து, அவ் விமானத்தின் நாப்பண் அதியற்புதமான நவரத்ன ஸிம்ஹாஸனம் நிறுவி, வஸ்த்ரங்கள் ஸ்வர்ண பூஷணங்கள் பலவகை யாபரணங்கள் பலவித நாணயங்கள், பஞ்சாமிர்தம், அறுசுவையுண்டி கனிவர்க்கங்கள் சந்தனம்

புஷ்பம் பன்னீர் தாம்பூலம் முதலான சகலவித சாமான்களும் தக்க இடங்களில் அமைக்கப்பட்டிருந்தன. கங்கை, காவேரி முதலிய சகல புண்ய நதி தீர்த்தங்களும் ஸப்தசாகர தீர்த்தங்களும் ஏனைய எல்லாப் பொருள்களும் தயாராக வைக்கப்பட்டிருந்தன.

ஆகாய வீதியில் நின்றுகொண்டிருந்த நம் வாசவாம்பிகை உடனே அம்மண்டபத்துள் சார்ந்து எல்லா ஜனங்களையும் அழைத்து அவரவர்கட்குத் தக்கபடி அமைந்துள்ள ஆசனங்களில் அமர்த்தினர். ஜீவன் முத்தி நிலைமையை எய்திய பெரியார்களும், தேவர் குழாங்களும், அப்ஸரஸ்திரீகளும், மஹரிஷிக் கூட்டங்களும், கருட காந்தர்வ சித்த வித்யாதர யக்ஷ கின்னர கிம்புருஷாதி யாவத் கூட்டங்களும், பூதகணத் தொகுதிகளும், மூர்த்திகளும் திக்குப் பாலகர்களும், பதத் தலைவர்களும், யாவரும் மேல் மாடிகளிலே தத்தமக்கென இருந்த ஆசனங்களில் அமர்ந்தனர்.

அப்போது அம்பிகை விரூபாட்சனை அழைத்து அரியணை மீதிலமரச்செய்தனர். அம்பிகையின் அனுக்ரஹத்தால் விரூபாட்சனும், ஏனைய மந்த்ரிப் பிரதானிகளும், சேவகர்களும், தள கர்த்தர்களும், ஏனைய பலரும் பட்டாபிஷேக வைபவத்திற்குத் தகுந்த ஆடையாபரணாதி அலங்காரங்களுடன் விளங்குவதை அனைவரும் கண்டு அதிசயமடைந்தனர். வேத விதிப்படி யாக பூஜைகள் அனைத்தையும் நான்முகக் கடவுளாகிய பிரமதேவனைக்கொண்டு நடைபெறச் செய்தனர். வேத கோஷங்கள் விரவியெழுந்தன. வேள்விப் புகை விண்ணளாவியது. கீத இசைகள் கிளர்ந்து தொனித்தன. தும்புரு நாரதர்களின் யாழொலியும், ஸரஸ்வதி தேவியின் வீணை யொலியும், பாணுகம்பன், பாணாசுரன் முதலியோர் பலர் தத்தமது வாத்தியங்களை முழக்கு மொலியும் ஒன்றன் பின் ஒன்றாக அனைவர் செவிகட்கும் ஆனந்தத் தேனை அள்ளி எடுத்து ஊட்டிக்கொண்டிருந்தன.

யாக பூஜை.

நல்ல சுபலக்னம் சேருங்காலையில் ஸ்ரீ வாசவாம்பிகை, திருவருளாலுண்டாகிய அதி யற்புதமான ஒரு ஈவரத்ன கிரீடத்தை திருக்கரத்தே தாங்கி "வைசிய உலகம் பல்லாண்டு பல்லாண்டு சிறந்து விளங்கி உலக மக்கள் அனைவர்க்கும் நன்மையை வளர்க்கக் கடவது!" என்று

மகுடாபிஷேகம்.

வாயார வாழ்த்தி, உலகம் எங்கும் மங்களம் பெருகுமாறும், எல்லா வுயிரும் இன்பமுறுமாறும் திருவருள் பாலித்த வண்ணமாய் விரூபாட்சச் செல்வனின் திருமுடியில் சூட்டி மகுடாபிஷேகம் செய்வித்தனர். சகலவித வாத்யங்களும் தாம் தாமென்று முழங்கின. தேவ துந்துமி கண கண வென்று ஒலித்தது. அமரர்கள் மலர் மாரி தூர்த்தனர். ஆன்றோர்கள் ஆசி கூறினர். யாவரும் தீத்தமது மங்களாசீர் வசனங்களைப் பல்வகையானும் தெரிவித்தமையான், எங்கு காணினும், செஞ்சொல் மழையும், நறுமலர் மழையும், அட்சதை மழையுமாக வருவித்து அடங்கவொண்ணாப் பெருமகிழ்வை யுண்டாக்கிய அந்த ஒரு க்ஷணத்தை அனுபவித்தவர்கள் தான் பாக்யம் செய்தவர்களாவர்.

மந்திரி ப்ரதானிகள் முதலிய யாவரும் தத்தமது காரியங்களில் ஈடுபட்டு மகிழ்ந்தனர். பாவலர் புகழ்ந்தனர். ஜோதிஷர் வாழ்த்தினர். அறிஞர்கள் ஆசீர்வதித்தனர். பாடகர் பாடினர். ஆடுவோர் ஆடினர். விஷ்ணுவர்த்தன மன்னனும், அவனது பத்னி புத்ர வர்க்கங்களும், பந்துக்களும், நட்பினர்களும், அவனது திருமணங் காண வேண்டுமென்றெண்ணி அவனுடன் வந்த ஐம்பத்தாறு தேசத் தரசர்களும், எனைய பல வீரர்களும், தீரர்களும், உத்தமர்களும், யாவரும் கண்டு உள்ளங் குளிர்ந்து, ஒப்பரு முவகையால் வியந்து புகழ்ந்தனர்.

எங்கும் மங்கள ஒலி. எங்கும் அம்பிகை ப்ரார்த்தனை. எங்கும் சக்தித் திருவருளின் பொலிவு. எங்கும் சக்தியின் க்ருபாசாகரம். எங்கும் அன்பு மயம். எங்கும் இன்ப ஒளி.

எவர்க்கும் ஒரே எண்ணம். எவர்க்கும் தூயமனம். எவர் மனத்தும் அமைதி. சாற்றற்கரிய சாந்தம். சத்வம். சமரசம். சந்துஷ்டி. சன்மார்க்கப் பொலிவு. சத்ய விளக்கம். சத்சங்கக் கூட்டுறவு. சக்தியருளில் தோய்ந்து ஆனந்த அமுதினை அருந்தி மகிழ்ந்து செவ்வையாய் விளங்கும் திருவுள்ளம். இவ்வழகினை, இம் மகிமையை எடுத்துரைக்க எவரால்லியலும்? எழுத்துக்கு அடங்குமா? அல்லது எண்ணத்தான் இயலுமா? ஆஹா! அற்புதம்!! அற்புதம்!!! பரமாற்புதம்!!!!

தூய அமைதி.

அசீர் வசனம்.

"உண்மை வீரர்களாக, உத்தம புருஷர்களாக, மஹா ஞானிகளாக உலகினில் என்றென்றும் விளங்குவீராக!" எனப் பார்வதி சமேதனுகிய ஸ்ரீ பரமேஸ்வரனின் அருள்மொழிச் செல்வம். "சகல செல்வ போகங்களுடன் சந்ததமும் வாழ்வீராக!" என ஸ்ரீதேவி பூதேவி களுடன் ஸ்ரீமந் நாராயணன் தரும் மங்களாசி. "சர்வ கலா ஞானமும் தீர்க்காயுளும் நிறைந்து தரணிமிசை தழைந்து பொலிவுறுமின்!" என நாமகள் சகித நான்முகப் பெருமான் நல்கும் ஆசீர் வசனம். "எல்லா நலனும் எய்தப் பெற்று இப்புவி மீதில் என்றும் வாழிய!" என ஸ்கந்த கணேச மூர்த்திகள் தந்தருளும் வண் மொழி. "எவ்வித துன்பமும் எய்தப் பெருமல் இன்பத் துடனே இலகுவீராக!" என நவக்ரஹ மூர்த்திகள் நல்கிடும் ஆசி. "பல்லாண்டு பல்லாண்டு பாரிமிசை நிலவிப் பரவிய புகழுடன் பண் புற்று வாழ்க!" எனச் சகல தேவர்களும் சாற்றிடும் தூமொழி.

"அவனியின் மீதே அமரவாழ் வெய்தி அற்புதப் புகழொடும் அனவரதம் வாழி!" என அமரேசனின் ஆசீர்வாதம். "பொன்றுப் புகழொடு புவிமிசை மேவி என்றும் உயிர்கட் கின்பமே ஈந்து பலநூ றாண்டுகள் பண்புடன் வாழி!" என அளகேசனின் அன்புமொழி. "உலக நன்மையையே ஓயாது நாடி பிறர்க் கின்பளித்து நீடும் சுக மடைந்து நீடூழி வாழ்க!" என மஹரிஷிக் கூட்டத்தினர் மகிழ்ந்து கொடுக்கும் மங்கள வாழ்த்து. "எங்கள் வம்சத்தில் எழிலுறத் தோன்றிய நீவிர், ஈறிலாப் பெரும்புகழ் படைத்து, ஈடிலா இன்பத்தை எனையர்க்குமீந்து, எம் பெயர் விளங்க அருஞ் செயல் பல புரிந்து, அனைவர்க்கும் வழி காட்டிகளாக மிளிர்ந்து, ஆனந்த வாழ்வினை அடைவீராக!" என நூற்றிரு கோத்திரத் தலைவர்களாகிய நூற் றிரண்டு மஹரிஷிகள் நுவலும் வாழ்த்துரை. "எங்கும் வெற்றி நிலவுக! வையியர்களால் உலகில் நன்மை வளர்க! நன் மழை பொழிக! பல விளைவு மல்க! விவசாயம் வளர்க! தன தான்யம் பெருக! கலை வளர்ச்சி மிளிர்க! வியாபாரம் ஓங்க! வைதீகம் தழைக்க! ஆசார சீலம் சிறக்க! சேவை ஒளிர்க! த்யாகம் பொலிக! வைராக்யம் வளர்க! வீரம் மிளிர்க! மங்களம் பொங்குக! சத் சங்கம் தழைக! சன்மார்க்கம் நிலைக்க! ஞானவொளி

விளங்குக! உண்மை யின்பம் மேவுக! அழியாப் புகழ் தோன்றுக! ஆனந்தம் உதயமாகுக!" என்று பலவாறுகப் பல உத்தம மஹான் கள் உள்ளன்போடும் உவந்து கொடுக்கும் ஆசீர்வாத மொழிகள். யாவும் எங்கும் சிறந்து நிறைந்து குவிந்த வண்ணம் இருந்த சிறப்பே சிறப்பு. எங்கும் வெற்றிச் சங்க முழக்கம். எங்கும் ஜெய கோஷம்.

"ஸ்ரீ வாசவாம்பிகைக்கு ஜே!
வைஸ்ய குல மாதாவுக்கு ஜே!
குசும குலோத்பவிக்கு ஜே!
தர்ம சம்ஸ்தாபனம் செய்த தாய்க்கு ஜே!
ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரிக்கு ஜே!
வீர சக்திக்கு ஜே!
அருள் மயமான அம்பிகைக்கு ஜே!
ஞான வுருக்கொண்ட நாயகிக்கு ஜே!
வேத முரைத்தருள் வித்தகிக்கு ஜே!
பல வுலகங்களையும் பாதுகாத் தருளும் பரதேவிக்கு ஜே!"

எங்கு பார்க்கினும் சக்திக்கனல் பெருகி சாற்றுறுதை ஆனந்த மாகிய திவ்ய ப்ரகாசத்தை விசிரிம்பித்த வண்ணம் திகழ்ந்தது. யாவர் மனத்தும் சாந்தி நிலவியிருந்தது. அன்பு தழைந்து விளங்கி யது. அறிவும் அருளும் கலந்து அமுதமாகி இனித்து அனைவர்க்கும் அற்புதச் சந்துஷ்டியை அளித்தவண்ணமாய்ப் பொலிந்த சிறப் பைப் புகலுதற்கியலா.

அத்தருணத்தில் நமது குலக்கொழுந்தாகிய ஸ்ரீ வாசவீ தேவியார் தமது செம்பவளம் போன்ற திருவாயைத் திறந்து வைசியர் குழாங்களைப் பார்த்து பல அருள் மொழிகளை உப தேசிக்கலாயினர். "வைசியர்களே! நீவிர் **பொன் மொழிகள்.** ஸ்ரீ நகரேஸ்வரப் பெருமானையும், ஸ்ரீ ஜனர்த் தன மூர்த்தியையும், என்னையும் என்றும் மறவாது வழிபட்டு வருதல் வேண்டும். நாங்கள் மூவரும் வேறு வேறு தெய்வங்கள் அல்ல. மூவரும் ஒரே பொருள்தான் என்பதை

உமக்கு இனி ஒருமுறை நான் எடுத்துக்கூற வேண்டிய அவசிய மில்லை. நீங்கள், இதுகாறும் உமது மூதாதையர்கள் செய்துவந்ததே போன்று எத்தொழில் செய்யினும் தெய்வபலத்தைக் கொண்டே செய்தல் வேண்டும். அப்பொழுது அத்தொழிலும் விரைவில் நடை பெறும். உமக்கும் மனச் சஞ்சலமும் வருத்தமும் நேரா. வேலையும் செவ்வனே சம்பூர்ணமடையும். நீங்கள் பக்தி ஞானம் அஹிம்சை நீதி பரோபகாரம் தருமம் கோசம்ரக்ஷணம் வியாபாரம் வீரம் தீரம் வைராக்யம் சேவை த்யாகம் சாந்தம் ஒழுக்கம் பொறுமை சன்மார்க் கம் மெய்க்கீர்த்தி ஆத்மார்த்தம் முதலியவைகளை உயிரினும் பெரி தாகக் காப்பாற்றவேண்டும். உம்மால் உலகில் உள்ள எல்லாருக் கும் நன்மை உண்டாகவேண்டும். உலகுயிர்களனைத்தும் க்ஷேம மடையும் பொருட்டு நீவிர் உமது வாழ்க்கையை நடாத்துதல் வேண்டும்" என்று கூறி, திருவருளினுலே சமைந்த அருட்கொடி யொன்றை அவர்கள் கையில் தந்து, "வைசிய இளைஞர்களே! வைசிய யுவதிகளே! நீங்கள் இந்தக்கொடியினை வெகு ஜாக்ரதையாகக் காப்பாற்றி வருதல் வேண்டும். இதுவே நான் எனது ஞாபகார்த்த மாக உம்மிடம் கொடுக்கும் உத்தம வஸ்து. உயர்ந்த வஸ்து. அற்புத வஸ்து. உமக்கு சகல நன்மைகளையும் தேஜஸையும், சிரேயஸையும் கொடுக்கக்கூடிய சிறந்த வஸ்து. அநேக சிறந்த தத்வங்கள் இதனிற் பொருந்தியுள்ளன. ஆதலால் நீங்கள் இதனை மிகவும் ஜாக்ரதை யாகப் பேணுதல் வேண்டும்.

என்னிடத்தில் நீங்கள் எப்போதும் உத்தம பக்தி பண்ணி, வேண்டிய யாவும் பெற்று இன்புறுங்கள். என்னுடைய திருவரு ளின் துணையைக்கொண்டு உலகில் வாழுங்கள். அக்னி காரியத்தை விடாது காப்பாற்றுங்கள். வேதோக்த கர்மங்களை அனுசரியுங்கள். காமதேனுவின் அம்சமாகிய பசுக்கூட்டங்களைக் காப்பாற்றுங்கள். சகல உயிர்களுக்கும் ஊட்டவேண்டி விவசாயத்தைச் செவ்வனே நடாத்துங்கள். வியாபாரத்தைச் சீரிய முறையில் விருத்தி செய் யுங்கள். தேசதேசாந்தரங்களிலும், கண்டாந்தரங்களிலும் உமது வியாபாரத்தை நிறுவுங்கள். கப்பல் வாணிபத்தை ஏன்கு காமின்கள். சத்ய முறையில் நியாயப்படி மாபெரும் வாணிபம் பேணி, கணக்கற்ற திரவியத்தைத் திரட்டி அநேக சிறந்த தர்மங்களை நிலைநாட்டுங்கள்.

உலகம் முழுதும் சுபிக்ஷம் அடையுமாறு நன்மையைப் புரியுங்கள். சத்யமாக வாழ்க்கையை நடத்திப் பலன் முழுவதையும் எனக்கு அர்ப்பணம் செய்துவிட்டு, வினைகளினின்றும் விடுபட்டுப் போனந்த மெய்திச் சுகித்திருங்கள்.

'உலகம் எங்கும் சுகமாக வாழ வேண்டும்' என்ற சத்சங்கல்பத்துடன் எவன் வாழ்க்கையை நடத்துகின்றானே, எவன் அதற்காக எக்காலமும் பாடுபடுகின்றானே, அவன் மிக விரைவில் எனது திருவருளைப் பெறுகின்றான். பூமியில் எந்த இடத்தில், இவ்வுலகுயிர்கள் சுகமாக உண்டு களிக்குமாறு உணவுப் பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டுமென்ற சத்சங்கல்பத்துடன் உழவு செய்யப்படுகின்றதோ, அந்த இடத்தில், அந்த மண்ணில், ஏர் உழும் சாலில், அந்தக் கலப்பையின் கொழுமுனையில் நான் ப்ரஸன்னமாயிருக்கின்றேன். அதற்காக வேண்டிய (விவசாய) கருவிகளைத் தயார் செய்வதற்காகக் கொல்லன் இரும்பைக் காய்ச்சி அடிக்கையில், அப்படி அடிக்கும் சம்மட்டியிலும்(கூடத்திலும்), பழுக்கக் காய்ந்த இரும்பிலும், அந்த இரும்பைத் தாங்கும் பட்டடையிலும், உலையில் ஜ்வலிக்கும் அக்னியிலும், கலப்பையைத் தயார் செய்யும் தச்சனின் உளியிலும், ஏனைய ஆயுதங்களிலும் நான் ப்ரசன்னமாயுள்ளேன். எல்லா உயிர்களும் வாழ வேண்டி, தன்னிடத்துள்ள பொருள்களை நியாயமான முறையில் விற்பனை செய்ய எண்ணி, சத்யத்தைக் கடைப்பிடித்துச் சரியாக உபயோகிக்கும் தராசு முனையிலும், நாழி(படி)யிலும் நான் ப்ரசன்னமாயுள்ளேன். உலகுக்கு நன்மையைப் புகட்டவேண்டி இயற்றப்படும் ஆலயங்களிலும், கோபுரங்களிலும், மண்டபங்களிலும், திருமடங்களிலும், வீடுகளிலும், ஏனைய கூட்டங்களிலும் விளங்கும் சிற்பத்திலும், பலவித உயர்ந்த ஞானமார்க்கக் கலைகளிலும், சிறந்த அருள் நிறைந்த பாக்களிலும், அத்தகைய உத்தமக் கவிகளில் அமைந்துள்ள, உண்மை உயிர்ப்பு வாய்ந்த ஜீவாட்சரங்களிலும் நான் ப்ரசன்னமாயுள்ளேன். பர்ப்ரம்மத்தின் தன்மையை விளக்கும், இயற்கையின் எழிலினை இனிதே காட்டும் ஓவியங்களிலும் நான் ப்ரசன்னமாயுள்ளேன். உலகுயிர்கள் சுபிக்ஷமெய்துதற்கு அனுக்ரஹிக்க வேண்டுமென்று வேள்வி காரியங்களைச் செய்வதற்கும், பரம்பொருளுக்குப் படைத்துப் பல்லுயிர்க்கும் விநியோகிக்க வேண்டி தூய உணவைச்

சமைத்தற்கும் காய்ந்த மரத்தின் விறகை எவனொருவன் வெட்டுகின் றனனோ அக் கோடரி (பரசு) முனையில் நான் பிரசன்னமாயுள்ளேன். தர்ம நீதியின் வண்ணம் யுத்தம் புரிபவனுடைய ஆயுத முனையில் நான் பிரசன்னமாயுள்ளேன். எவ்வுயிர்க்கும் இதமே புரியும் சீரிய மன்ன னின் செங்கோலின் கண்ணே நான் பிரசன்னமாயுள்ளேன். சகல உலகங்களையும் அற்புதமாய் காக்கவும், அனைத்துயிர்கட்கும் உறுமிடர் களைந்து உண்மையின்ப மருளவும், தான் பெறும் இன்பத்தைப் பல ரும் பெறுமாறு அருள்பாலிக்கவும் வேண்டி, ஒப்பற்ற யோகம் செய் யும் ஆத்ம ஞான சாதகர்களாகிய, ஞான யோகிகளின் பேருணர் வில் நான் பிரசன்னமாயுள்ளேன்.

எங்கே சோம்பல் இன்றித் தொழில்கள் நடைபெறுகின் றனவோ, எங்கே உலக நன்மைக்காக உழைக்கப்படுகின்றதோ, எங்கே சத்வமும், சாந்தமும், சத்தியமும், நீதியும், வீரமும், பொறுமை யும், விடா முயற்சியும், உத்தம பக்தியும் மிளிர்கின்றதோ அங்கெல் லாம் நான் பிரசன்னமாயிருந்து அருள்புரிகின்றேன். ஆதலால் நீங்கள் பிறர்க்கென வாழுங்கள்! உலக (மானவ) சேவை செய்யுங்கள்! அருட்பணி புரியத் தலைப்படுங்கள்! அவனியி லவதரித்தது அருட் பணி புரிதற்கே யாகும்! உமது உடல் பொருள் ஆவி அனைத்தையும் அந்த உத்தம லக்ஷியமாகிய **தியாகாக்னியில் ஆஹுதி கொடுக்க** எந்த க்ஷணத்திலும் தயாராயிருங்கள்!

இந்த வைஸ்ய குலத்திலுதிக்கின்றவர்கள் ஆசார சீலர்களாய், சத்வகுண சம்பன்னர்களாய், கல்வியிற் சிறந்த கலை ஞானிகளாய், செல்வத்திற் சிறந்த ஸ்ரீமான்களாய், வீரஞ் செறிந்த விற்பன்னர்க ளாய், ஊக்கம் மிகுந்த உத்தமர்களாய், சொல் வன்மை மிக்க தோன் றல்களாய், அவைகண்டஞ்சா ஆற்றல் வாய்ந்தவர்களாய், பழமை பிறங்கும் பண்பினர்களாய், பேதைமை நீக்கிய பெரியர்களாய், துன்பந் தருகிற சூதறியாத நற் றாயர்களாய், மானங் காக்கும் மாண்புடையவர்களாய், மதிநுட்பம் வாய்ந்த மஹன்னீயர்களாய், ஒழுக்கத்திற் சிறந்த விழுமியர்களாய், அன்பு நிறைந்தொளிர் அண் ணல்களாய், வேதநெறி பேணும் வித்தகர்களாய், கற்புடை மங்கை யரைக் கடிமணம் புரிந்து இல்வாழ்க்கை நடத்தும் கண்ணியர்களாய்,

வரு விருந்தினரை வைகலு மோம்பும் வண்மையாளர்களாய், இனிய நன் மொழிகளே இதமுறக் கூறும் எழில் நல மூடையவர்களாய், பொறுமை மிகுந்து பொலிபவர்களாய், அறம்பல வளர்க்கும் வள்ளல்களாய், பரிவுட னுவந்து பல்லுயிர் பேணும் பான்மையராய், தெய்வபக்தி நிறை சீரியராய், நடுநிலை மாறாத நல்லோர்களாய், வாய்மையிற் சிறந்த தூய்மையராய், புகழ் மிகுந் தொளிரும் புண்ணியர்களாய், மெய்யின்ப மறிந்த மேலவர்களாய், தெரிந்து தெளிந்த நற் சிந்தையராய், பேரின்பம் விழையும்பீடு சான்றவர்களாய் விளங்கி, உலகெங்கும் ஒப்பிலாக் கீர்த்தியை நிலை நாட்டுக! உமது குலத்தில் தூய புருஷ ஸ்ரேஷ்டர்களும், தூய பெண்களும் தோன்றி உலக க்ஷேமத்தை உண்டாக்குக! வைசியர்களால் உலகில் என்றும் இன்பம் பெருகுமாக! நம்முடைய திருவருள் யாவர்க்கும் துணையாயிருந்து எங்கும் மங்களத்தை நல்குமாக!" என வாழ்த்திய வண்ணம், விஷ்ணுவர்த்தனரே யழைத்து விரைவில் ஞானோபதேசத்தைப் புரிந்த பின், சகல தேவரிஷி கூட்டங்களுடன் விண்ணேகலும், அவ்வம்மையின் திருமேனியின் வடிவம் மறைந்து ஒரே ஜோதிப் பிழம்பாக மாறி, அந்த அருட் ஜோதியானது ஒன்பது கதிர் (பிரிவு) களாகப் பிரிந்து, ஒன்று சரஸ்வதியிடத்தும், ஒன்று லக்ஷ்மியிடத்தும், ஒன்று உமாதேவியிடத்தும், ஒன்று மஹேஸ்வரியிடத்தும், ஒன்று மனோன்மணியிடத்தும், ஒன்று விந்து தத்துவத்திலிடத்தும், ஒன்று நாத தத்துவத்திலிடத்தும், ஒன்று ஆதி சக்தியினிடத்தும், ஒன்று சிற் சக்தியினிடத்தும் சென்று கலந்துவிட்டதையும், அதே க்ஷணத்தில் ஆகாய வீதியில் நின்ற எல்லா தேவர் கூட்டங்களும் மஹரிஷிகளும் ஏனைய கணங்களும் அந்தர்த்தானமாய் விட்டதையும் கண்டு, அனைவரும் "அற்புதம்! அற்புதம்!!" என்று ஆரவாரித்துத் தேவியின் திருவருளின் மகிமையைப் புகழ்ந்து பரவி, அவ்வன்னையின் சரணரவிந்தங்களைச் சிந்தையிலிருத்தித் தியானித்தார்கள்.

வைசியர் குழாங்கள் யாவரும் அம்பிகையின் திருவடிமலர்களை மன மொழி மெய்களால் வாழ்த்தி வணங்கி ஸ்தோத்தரிக்கலாயினர்.

தரணியிற் சிறந்த தான மானிடப் பிறவி தந்தாய் ;
விரவுமுத் தமிழு மோம்பும் வியன்குலத் தொளிர வைத்தாய் ;
அருமறை நெறிவ ழாம லனுதின மொழுகச் செய்தாய் ;
திருவொடு கலையு மன்புஞ் சீர்த்தியு மளித்துக் காத்தாய்.

எங்குல வெழில்வி ளங்க வினிதுவந் தவத ரித்தாய் ;
சங்கடம் பலவும் தீர்த்துச் சாந்தமும் தயவும் தந்தாய் ;
பொங்கருள் புரிந்தி யார்க்கும் போதநல் கிடுந்தாய் நீயும்
இங்குதித் தியற்று மாட லெம்மனே ரியம்பற் காமோ ?

புன்னெறி யான காம விருள்தனைப் போக்க வென்றே
நின்னுளந் தனிலே நன்கு நினைந்திவ ணுதித்தா யென்கோ ?
வன்னிமுவ் வகையு மோம்பும் வைசிய ரகங்க டோறும்
அன்னமுந் தனமுங் கோவு மஸ்வமும் நிறைக்க வென்கோ ?

ஆரிய வைஸ்யர் வீட்டி லற்புதத் தகூ ணுக்னி
சீருடன் பொலித லிந்த ஜெகத்துளோ ரறிதற் கென்கோ ?
பாரத நாட்டிற் பண்டைப் பயிர்த்தொழில் வணிகம் வீரம்
ஏருடன் புகழும் ஞான வின்பமும் வளரற் கென்கோ ?

" சந்திர சூர்ய ருள்ள நாள்வரை, சாந்த சீலர்,
நந்தலில் குணக்குன் றன்னுர், நன்குதித் திதமே நல்க !
இந்தநன் னுட்டி லன்ன மென்றுமோங் கிடுக !" என்றே
சுந்தரி யன்ன பூர்ணி தோன்றினீ போலு மென்கோ ?

கலியுக மெமக்குச் சீர்த்தி கவினுற வளிக்கு மென்றும்,
குலம்விளக் கிடுமக் கான்கள் கோதிலா ருதிப்ப ரென்றும்,
நலமிக விளைப்ப ரென்றும் நானிலம் புகழு மென்றும்,
உலகினர்க் குணர்த்த வேண்டி யுதித்தனீ போலு மென்கோ ?

" துலைபசு கலப்பை ராட்டை தூயவா ளங்கி யோடம்
நிலைபெற வேண்டு மென்று நினைப்பவ ரெவரோ ? ஆன்ற
கலையுணர்ந் தறங்கள் பேணக் கருதுகின் றவர்கள் யாரோ ?
அலைவறு மனத்தர் யாரோ ? அறிமினே ! அறிமின் !" என்றே

புவியினர்க் கெடுத்துக் காட்டப் போந்திவண் பொலிந்தா யென்கோ
நவநிலை கலையு மோர்ந்து நங்கைநின் னருளு மோர்ந்து
மவனியில் நினது சேவை யகங்குளிர்ந் திடவே கண்டு
மூவகையங் கடலில் யாங்கள் மூழ்கிட வுதித்தா யென்கோ ?

"காசினி தன்னிற் ரேன்று மனைவருங் களங்க நீக்குந்
தேசுறு பிரம ஜோதி தெரிசனஞ் செயலே நன்றும் :
மாசறு மதனைக் காணுந் நோறுமிம் மனித யாக்கை
நாசம தடையா வண்ணங் காத்திட நல்லுண் வேண்டும் ;

ஆதலி னன்னம் வேண்டு மரும்பொருள் விளைவு வேண்டும் ;
மாதமும் மழைகள் பெய்து வளமெலாஞ் சுரத்தல் வேண்டும் ;
தீதிலை யகற்றுந் தேவர் செழுமழை முகிலே யேவ
மாதுநின் னருளைக் கோரி வளர்க்குமு வேள்வி வேண்டும் ;

அத்தகு வேள்வி யாற்ற, அறம்பல வளர்க்க, யார்க்கும்
சுத்தநன் மனத்தி னோடுஞ் சொற்களும் பொருளும் நல்க,
இத்தரை மீது வைஸ்ய ரெழிலுற நிலவல் வேண்டும் ;
வித்தகத் தேவர் காள்தீர் விசர்களுக் கருள்வீர்" என்றும்,

"அவர்களுக் காகப் பூமேல் மழைபெய வருள்வீர்" என்றும்,
"அவர்களுக் காக வெல்லா வளங்களு மளிப்பீர்" என்றும்,
அவனியி லந்த ணுள ரனுதினம் வேட்ப ரென்றே
இவணறி வுறுத்தல் வேண்டி யெய்தினுய் போலு மென்கோ ?

மிக்கதற் புகழி னோடு மிளிர்வரிவ் வைஸ்ய ரென்றும்,
தக்கநூற் றிருகோத் ரங்கள் தழைந்தொளி பரப்பு மென்றும்,
இக்கலி யுகத்திற் சங்க மிலங்கிடல் நலமா மென்றும்,
மக்களுக் குணர்த்தற் காக மகிழ்வுட னுதித்தா யென்கோ ?

நின்புக ழனைத்தும் நாங்கள் நினைந்துரைத் திடுதற் காற்றேம் ;
புன்பவ வினையை மாய்க்கும் பொய்யறு நெறியுந் தேறேம் ;
அன்பினை யறியேம் ; நின்ற னடிதொழு திறைஞ்சி நின்றேம் ;
துன்பம தகற்றி நின்ருட் சுகமெமக் களிப்பா யன்னுய் !

என்று பலவாருக ஸ்தோத்தரித்து, திருவருள் மகிமையைப் புகழ்ந்த வண்ணம் தேவாலயத்துட் சேர்ந்து, ஸ்ரீ நகரேஸ்வரப் பெருமானுக்கும், ஸ்ரீ ஜனர்த்தன மூர்த்திக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகளைப் புரிந்து வழிபட்டு வாழ்த்தித் தத்தமது கிரஹம் சேர்ந்தனர்.

ஜீவன் முக்தி நிலையை யெய்திய (வைசியப்) பெரியார்களும், அகந்தை யழிந்து புனர்ஜன்ம மெய்தி அம்பிகையினிடத்தே அருள் ஞான உபதேசம் பெற்றுக்கொண்ட விஷ்ணுவர்த்தனனும் யோகானுபவத்தி லீடுபட்டு, ஒப்புயர்வற்ற மோன சமாதி நிலையில் பேரானந்த சுகத்தை அனுபவித்துக்கொண்டிருந்தனர்.

விரூபாட்ச மன்னன் தனது மந்திரி பிரதானிகளுடன், சேனை சமூகங்களுடன், விஷ்ணுவர்த்தனனின் குமாரனையும் எனைய அரச கூட்டங்களையும், சேனைகளையு மழைத்துக் கொண்டு இராஜ மகேந்திரபுரம் சேர்ந்து (தனதுபிரதிநிதியைப்போல இருந்துகொண் டாவது,) வேங்கிநாட்டை (அரசாண்டு வரும்படியாக,) விஷ்ணுவர்த் தன மன்னனின் குமாரன் (ராஜ ராஜன்) வசம் ஒப்புவித்து, மகுடாபி ஷேகம் செய்து வைத்துவிட்டு, பெனுகொண்டாவிற்குத் திரும்பிவந்து இராஜ்ய விஷயங்களிலும், மாபெரும் வாணிஜ்யத்திலும், ஆன்மார்த்த சாதனைகளிலும், ஈடுபடலாயினன். தர்ம ராஜ்யம் தழைந்தது.

வேங்கிநாட்டு ஆட்சி.

ஸ்ரீ வாசவாம்பிகைக்கு ஓர் ஆலயம் அமைப்பதற்காக விரூ பாக்ஷனும், ராஜராஜனும் விரைவில் யோசித்து, ஓர் நல்ல சுபதினத்தில் சுப லக்னத்தில் அம்பிகையின் திருவருளி னால் (அஸ்திவாரம் கோலி) திருப்பணி வேலையைத் தொடங்கினர். மதில்கள், கோபுரங்கள், ப்ராகாரங்கள், தீர்த்தக் குளங்கள், கிணறுகள், கர்ப்ப க்ரஹம், அர்த்த மண்டபம், மஹா மண்டபம், ஸ்நபன மண்டபம், அலங்கார மண்டபம், சபா மண்டபம், (நமது சரீரத்திலுள்ள குண் டலீ சக்தியைக் குறிப்பிக்கும்) ஒருகால் மண்டபம், (மூது கெலும் பின் கீழ்ப் பாகத்தில் மூலாதார ஸ்தானத்திலுள்ள நான்கிதழ்க் கம லத்தைக் குறிக்கும்) நாலுகால் மண்டபம், ஸ்வாதிஷ்டானத்திலுள்ள ஆறிதழ்க் கமலத்தைக் குறிக்கும் அறுகால் மண்டபம், (நாபியில் மணிபூரகத்தில் உள்ள தசதள தாமரையைக் குறிக்கும்) பத்துக்கால் மண்டபம், (ஹ்ருதயத்தில் அனுகத ஸ்தானத்திலுள்ள துவாதச தள தாமரையைக் குறிக்கும்) பன்னிருகால் மண்டபம், (அண்ணாக்கில் விசுத்தி ஸ்தானத்திலுள்ள ஷோடச தள தாமரையைக் குறிக்கும்) பதினாறுகால் மண்டபம், (புருவ மத்தியில் ஆஜ்ஞை ஸ்தானத்திலுள்ள த்விதள தாமரையைக் குறிக்கும்) மூன்றுகால் மண்டபம், (ப்ரம்ம ரந்திரத்திலுள்ள ஸஹஸ்ர தள தாமரையைக் குறிக்கும்) ஆயிரக்கால் மண்டபம், (96 தத்துவங்களையும், அவற்றில் சம்பந்தப்பட்ட ஜீவனை யும், சம்பந்தப்படுத்தும் மாயையையும், இவற்றை எல்லாம் ஆட்டி வைக்கும் ஈசுவரனையும், அனைத்துக்கும் சாக்ஷி சைதன்ய மாகிய உண்மை யறிவென்னும் பரப்ரம்ம வஸ்துவையும் உணர்த்தக்கூடிய)

ஸ்ரீ வாசவி ஆலயம்.

நூற்றுக்கால் மண்டபம், (ஜீவ ப்ரம்மைக்ய விசேஷத்தைக் காண்பிப் பதற்காக ஏற்பட்ட திருமணச் சடங்கை நடாத்துமிடமாகிய) திருக் கல்யாண மண்டபம், பள்ளியறை, (ஆத்ம நிவேதனம் அருளறிவை நல்கும் எனும் அற்புத உணர்ச்சியை ஊட்டத்தகுந்த) மடைப்பள்ளி, (ஊர்த்வ நாடியாகிய சுஷும்னையில் ஸ்வாசத்தைச் சேர்த்து, மேல் நோக்கத்திலுள் இன்ப வொளிபெற்றுச் சந்த்ர மண்டலத் தண்ணமு துண்ணுதல் வேண்டுமென்றுணர்த்தும்) த்வஜ ஸ்தம்பம் முதலியன யாவும் சிற்ப சாஸ்த்ர முறைப்படி யமைத்து, மூல ஸ்தானத்தில் ஸ்ரீ வாசவாம்பிகையின் திருவுருவத்தை ப்ரதிஷ்டைசெய்து, அன்பர்க ளிருக்கு மிடங்கட்குச் சென்று அநுக்ரஹிப்பதற்காக வெளியில் புறப்பட்டு (மாட வீதியின்கண்) பவனி வந்து, யாவருக்கும் திரு வருளைப் பொழியத்தக்க உற்சவ அம்மனுக்குத் தனியிடம் அமைத்து, எல்லா உத்ஸவாதிகளுக்கும் வேண்டிய சகலவிதமான வாகனாதிகளும் விமானங்களும் இரதங்களும் ஏனைய பல சாமான்களும் தயார்செய்து, ஆறுகால பூஜைகளும் சகல உற்சவாதிகளும் எந்தக் காலமும் மூட் டின்றி நடைபெறுவதற்குத் தகுந்த ஏற்பாடுகள் யாவும் செய்து, அம்பிகையின் திருவருட்டுணையால் எல்லாத் திருப்பணிகளையும் பூர்த்தி செய்து, ஓர் சுபதினத்தில் கும்பாபிஷேக வைபவத்தை வெகு விமரிசை யாக நடத்தினர். ஆடவர், மகளிர், சிறுவர், சிறுமியர் யாவரும் குழுமி, அம்பிகையை மனமாரவாழ்த்தி வழுத்திப் பலவாறுக ஸ்தோத் தரித்துத் திருவருளின் மஹிமையைப் பன்முறையும் புகழ்ந்து கொண் டாடி ஆனந்தித்துக்கொண் டிருந்தனர்.



ஸ்ரீ வரலக்ஷ்மி துதி

பக்தியினிற் பழுத்தமனங்
கனிந்துருகல் வேண்டும்
பாரினில்வாழ் பல்லுயிர்க்கும்
அன்புசெயல் வேண்டும்

திருமகளங் கமர்ந்தருளில்
தினைத்திடுதல் வேண்டும்
சரியமெய்ந் நூலொலி
திகழ்ந்திடுதல் வேண்டும்

கூந்தலுறி யினைப்பிடித்தே
சுகமுறுதல் வேண்டும்
ஜோதிநர் சனமனைப்பார்த்
துகமெழுதல் வேண்டும்

சக்திதரு வடிவினிலே
சரண்புகுதல் வேண்டும்
சாதல்பிறப் தகன்றுவிட்டே
சாந்தியுறல் வேண்டும்.

நந்தனைத் தென்ன னுட்கொண் டெயர்த்தெயில்
தானின் மாபுனை

சுற்ற மின்கற் றிருந்து சம்மாச்சுத்
தழுந்து வினைதுதை

பச்சை யுந்து முடலிற் றுதியை
நண்ண முறிந்திடை

நடனை யிருத்தெந்து மோங்கி யொளிருக
நும்நுஞ்ஞுத் நும்நுஞ்ஞுத் நும்.

நன்னுக நல்ல மனந்தனிலை சுத்த
யுனை யினிதெனினிலை

பன்னுக பூசை புரிவதற்குள் ளெவரினும்
பரப்பிரம மதினுக்கை

எண்ணமெல் லாம்விரித் தெங்குந்தா னுயிர்ப்பை
நின்ப மடைந்திடை

உன்னுக வென்ன வுழுந்துந் தொழுக
நும்நுஞ்ஞுத் நும்நுஞ்ஞுத் நும்.

மாந்தரெ லாமுலையில் யின்பமு நெய்யினிம்
மன்னவி னுளதென

நான்கு தென்றிழு கின்றபு ராக்கள்
நகர்ந்து சிறந்திடை

நாடுக மாகவரண் ஞானம் விளிக
நன்மை யெங்கும்பெரிக

நும்நுஞ்ஞுத் நும்நுஞ்ஞுத் நும்நுஞ்ஞுத் நும்நுஞ்ஞுத்
நும்நுஞ்ஞுத் நும்நுஞ்ஞுத் நும்.

கோத்ர விஷயங்கள்.

ஸ்ரீஸ்ரீஸ்ரீ பண்டிதராய - மாநிடி - வேங்கடார்யுலுகாரு.



தூய்மை துணிவுடைமை சோர்வின்மை நற்சேவை
வாய்மை விளக்கும் வளம்.

கோத்ர ப்ரவர விபரம்.

1 அகஸ்த்ய மாஹேந்த்ர மாயோபவேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித அகஸ்த்யஸ கோத்ர :

2 ஆத்ரேய அர்ச்சநாநஸ ச்வாவாச்வேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித ஆத்ரேயஸ கோத்ர :

3 ஆங்கிரஸ ஆச்வலாயன ஆச்சாயநேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித ஆச்சாயநஸ கோத்ர :

4 பார்க்கவ ஔர்வசேந ஔர்வசேநேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித உர்வசேநஸ கோத்ர :

5 பார்க்கவ ஔதக்ருஷ்டேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித உதக்ருஷ்டஸ கோத்ர :

6 ஆங்கிரஸ நாரத ஔதத்தமோஜஸேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித உதத்தமோஜஸ கோத்ர :

7 ஆங்கிரஸ ருஷ்ய ச்ருங்கேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித ருஷ்ய ச்ருங்கஸ கோத்ர :

8 ஆங்கிரஸ ஔசித்யேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித ஔசித்யஸ கோத்ர :

9 ஆங்கிரஸ ஆஜமீட காண்வேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித கண்வஸ கோத்ர :

10 ஆங்கிரஸ காஞ்சந காந்தர்ப்பேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித கந்தர்ப்பஸ கோத்ர :

11 ஆங்கிரஸ காபிலேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித கபிலஸ கோத்ர :

குறிப்பு:- இந்த கோத்ர விபரம் ஸ்ரீ சோமயாஜுலு அவர்கள் இயற்றிய "வைச்ய தர்ம ப்ரகாசிகா" என்ற நூலில் உள்ளவாறு (தெலுங்கு) அகாராதி எழுத்து முறைப்படி அமைக்கப்பட்டுள்ளது.

அநேகர் ஸங்கேத நாமங்களையே 'கோத்ரங்களென்று சொல்லுகிறார்கள். அது தவருகும். ரிஷியின் பெயரை கோத்ர மென்றும், இந்நூலில் குறித்துள்ள சாஸ்த்ர, சம்மதமான ப்ரவரைகளை ப்ரவரைகளென்றுந்தான் சொல்ல வேண்டும்.

12 ஆங்கிரா தமபாதய உருக்ஷயேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித கபீதஸ கோத்ர :

13 காஸ்யப ஆவத்ஸார ஆஸிதேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித காஸ்யபஸ கோத்ர :

14 ஆங்கிரஸ மாந்தார கௌதமேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித குத்ஸஸ கோத்ர :

15 பார்க்கவ கௌண்டிந்ய த்ர்யார்ஷேய ப்ரவராந்வித கௌண்டிந்யஸ கோத்ர :

16 பார்க்கவ கௌந்தேயேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித கௌந்தேயஸ கோத்ர :

17 பார்க்கவ கௌசிகேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித கௌசிகஸ கோத்ர :

18 பார்க்கவ கார்ஷ்ணேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித க்ருஷ்ணஸ கோத்ர :

19 ஆங்கிரஸ ஸைந்ய கார்க்யேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித கார்க்யஸ கோத்ர :

20 பார்க்கவ சௌனஹோத்ர கார்த்ஸன்மதேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித க்ருத்ஸன்மதஸ கோத்ர :

21 ஆங்கிரஸ கோண்டக கௌபகேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித கோபகஸ கோத்ர :

22 ஆங்கிரஸ ஆயாஸ்ய கௌதமேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித கௌதமஸ கோத்ர :

23 ஆங்கிரஸ சாக்ரபாணீதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித சக்ரபாணிஸ கோத்ர :

குறிப்பு:- இந்த கோத்ர விபரம் ஸ்ரீ சோமயாஜுலு அவர்கள் இயற்றிய "வைச்ய தர்ம ப்ரகாசிகா" என்ற நூலில் உள்ளவாறு (தெலுங்கு) அகாராதி எழுத்து முறைப்படி அமைக்கப்பட்டுள்ளது.

அநேகர், ஸ்கேத நாமங்களையே கோத்ரங்களென்று சொல்லுகிறார்கள். அது தவறாகும். ரிஷியின் பெயரை கோத்ர மென்றும், இந்நூலில் குறித்துள்ள, சாஸ்த்ர சம்மதமான ப்ரவரைகளை ப்ரவரைக ளென்றும் தான் சொல்ல வேண்டும்.

24 பார்க்கவ சாமர்ஷ்ணேதி த்வ்யார்ஷேய ப்ரவராந்வித சாமர்ஷ்ணஸ கோத்ர :

25 பார்க்கவ ஜாடபரதேதி த்வ்யார்ஷேய ப்ரவராந்வித ஜாடபரதஸ கோத்ர :

26 ஆங்கிரஸ சாங்க்ர சிஷ்ட ஜாதுகர்ணேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித ஜதுகர்ணஸ கோத்ர :

27 பார்க்கவ ஜம்பஸ்ருதேதி த்வ்யார்ஷேய ப்ரவராந்வித ஜம்பஸ்ருதஸ கோத்ர :

28 ஆங்கிரஸ ஜாங்ஹாவ ஜாரத்காரேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித ஜரத்காரஸ கோத்ர :

29 பார்க்கவ ஜாபாலேதி த்வ்யார்ஷேய ப்ரவராந்வித ஜாபாலஸ கோத்ர :

30 பார்க்கவ சாண்டில்யேதி த்வ்யார்ஷேய ப்ரவராந்வித பாப்ரேயஸ கோத்ர :

31 பார்க்கவ ஜைவந்தீதி த்வ்யார்ஷேய ப்ரவராந்வித ஜீவந்திஸ கோத்ர :

32 பார்க்கவ தாரணீதி த்வ்யார்ஷேய ப்ரவராந்வித தாரணிஸ கோத்ர :

33 ஆங்கிரஸ கவிபூதி தைத்திரியேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித தித்திரிஸ கோத்ர :

34 பார்க்கவ த்ரைஜடேதி த்வ்யார்ஷேய ப்ரவராந்வித த்ரிஜடஸ கோத்ர :

35 ஆங்ரகிஸ தைத்ரேயேதி த்வ்யார்ஷேய ப்ரவராந்வித தைத்ரேயஸ கோத்ர :

குறிப்பு:- இந்த கோத்ர விபரம் ஸ்ரீ சோமயாஜுலு அவர்கள் இயற்றிய "வைச்ய தர்ம ப்ரகாசிகா" என்ற நூலில் உள்ளவாறு (தெலுங்கு) அகாராதி எழுத்து முறைப்படி அமைக்கப்பட்டுள்ளது.

அநேகர் ஷங்கேத நாமங்களையே கோத்ரங்களென்று சொல்லுகிறார்கள். அது தவருகும். ரிஷியின் பெயரை கோத்ர மென்றும், இந்நூலில் குறித்துள்ள சாஸ்த்ர சம்மதமான ப்ரவரைகளை ப்ரவரைகளென்றுதான் சொல்ல வேண்டும்.

36 ஆங்கிரஸ பாலக தால்ப்யேதி தர்யார்ஷேய ப்ரவராந்வித தால்ப்யஸ கோத்ர :

37 பார்க்கவ நைர்வாஸேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித தூர்வாஸஸ கோத்ர :

38 ஆங்கிரஸ தைவராதேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித தேவராதஸ கோத்ர :

39 பார்க்கவ ஹரிவக்த்ர தைவவல்க்யேதி தர்யார்ஷேய ப்ரவராந்வித தேவவல்க்யஸ கோத்ர :

40 பார்க்கவ நாரதேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித நாரதஸ கோத்ர :

41 பார்க்கவ நைத்ரபாதேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித நைத்ர பாதஸ கோத்ர :

42 ஆங்கிரஸ ஸம்க்ருதி கௌரவேதி தர்யார்ஷேய ப்ரவராந்வித பரஸ்பராயணஸ கோத்ர :

43 ஆங்கிரஸ காண்டாஸ்தூல பால்லவேதி தர்யார்ஷேய ப்ரவராந்வித பல்லவஸ கோத்ர :

44 ஆங்கிரஸ பாவித்ரபாணீதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித பவித்ர பாணிஸ கோத்ர :

45 ஆங்கிரஸ ப்ரௌடசீல ப்ராக்பால காமதேநு பாராசர்யேதி பஞ்சார்ஷேய ப்ரவராந்வித பாராசர்யஸ கோத்ர :

46 ஆங்கிரஸ அம்பரீஷ யவ்வநாஸ்வேதி தர்யார்ஷேய ப்ர்வராந்வித பிங்களஸ கோத்ர :

47 ஆங்கிரஸ பௌண்டரீகேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித புண்டரீகஸ கோத்ர :

குறிப்பு:- இந்த கோத்ர விபரம் ஸ்ரீ சோமயாஜுலு அவர்கள் இயற்றிய "வைச்ய தர்ம ப்ரகாசிகை" என்ற நூலில் உள்ளவாறு (தெலுங்கு) அகாராதி எழுத்து முறைப்படி அமைக்கப்பட்டுள்ளது.

அநேகர், ஐங்கேந நாமங்களையே கோத்ரங்களென்று சொல்லுகிறார்கள். அது தவருகும். ரிஷியின் பெயரை கோத்ர மென்றும், இந்நூலில் குறித்துள்ள சாஸ்த்ர சம்மதமான ப்ரவரைகளை ப்ரவரைகளென்றுந்தான் சொல்ல வேண்டும்.

48 ஆங்கிரஸ கௌரவீத ஸாம்க்ருத்யேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித பூதிமாஷஸ கோத்ர :

49 ஆங்கிரஸ ப்ரெளல்லேக பௌண்ட்ரகேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித பௌண்ட்ரகஸ கோத்ர :

50 ஆங்கிரஸ பௌலஸ்த்யேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித பௌலஸ்த்யஸ கோத்ர :

51 பார்க்கவ ப்ராசீநேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித ப்ராசீநஸ கோத்ர :

52 ஆங்கிரஸ ராவிசிஷ்ட ப்ராபாதேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித ப்ராபாதஸ கோத்ர :

53 ஆங்கிரஸ பார்ஹ்வதச்வேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித ப்ருஹதச்வஸ கோத்ர :

54 பார்க்கவ போதாயநேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித போதாயநஸ கோத்ர :

55 ஆங்கிரஸ பார்ஹஸ்பத்ய பாரத்வாஜேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித பாரத்வாஜஸ கோத்ர :

56 பார்க்கவ பாதிர்வசிஷ்டேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித பார்க்கவஸ கோத்ர :

57 பார்க்கவ மாந்தபாலேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித மந்தபாலஸ கோத்ர :

58 ஆங்கிரஸ மாநவேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித மாநவஸ கோத்ர :

59 பார்க்கவ மாரீசேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித மாரீசஸ கோத்ர:

குறிப்பு:- இந்த கோத்ர விபரம் ஸ்ரீ சோமயாஜுலு அவர்கள் இயற்றிய "வைச்ய தர்ம ப்ரகாசிகா" என்ற நூலில் உள்ளவாறு (தெலுங்கு) அகாராதி எழுத்து முறைப்படி அமைக்கப்பட்டுள்ளது.

அநேகர் ஐந்தேத நாமங்களையே கோத்ரங்களென்று சொல்லுகிறார்கள். அது தவறாகும். ரிஷியின் பெயரை கோத்ர மென்றும், இந்நூலில் குறித்துள்ள சாஸ்த்ர சம்மதமான ப்ரவரைகளை ப்ரவரைகளென்றுந்தான் சொல்ல வேண்டும்.

60 பார்க்கவ மார்க்கண்டேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித மார்க்கண்டேயஸ கோத்ர :

61 பார்க்கவ மௌநிராஜேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித முநிராஜஸ கோத்ர :

62 பார்க்கவ தைவோதாஸ வாத்ர்யச்வேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித மைத்ரேயஸ கோத்ர :

63 பார்க்கவ ஜாம்பஸ்ஸுத மௌஸலேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித தௌலம்யஸ கோத்ர :

64 பார்க்கவ மௌஞ்ஜாயநேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித மௌஞ்ஜாயநஸ கோத்ர :

65 ஆங்கிரஸ பார்ம்யச்வ மௌத்கல்யேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித மௌத்கல்யஸ கோத்ர :

66 பார்க்கவ வைதஹவ்ய ஸாவேதநேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித யாஸ்கஸ கோத்ர :

67 ஆங்கிரஸ யாஜ்ஞவல்க்யேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித யாஜ்ஞவல்க்யஸ கோத்ர :

68 ஆங்கிரஸ வாடுகஸ்தைலகிரஸ்கேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித வடுகஸ கோத்ர :

69 ஆங்கிரஸ வாரதந்தவேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித வரதந்துஸ கோத்ர ;

70 பார்க்கவ வாருணேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித வருணஸ கோத்ர :

71 வாசிஷ்ட ஐந்த்ரப்ரமத ஆபரத்வஸவ்யேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித வசிஷ்டஸ கோத்ர :

குறிப்பு:- இந்த கோத்ர விபரம் ஸ்ரீ சோமயாஜுலு அவர்கள் இயற்றிய "வைச்ய தர்ம ப்ரகாசிகா" என்ற நூலில் உள்ளவாறு (தெலுங்கு) அகாராதி எழுத்து முறைப்படி அமைக்கப்பட்டுள்ளது.

அநேகர், ஸங்கேத நாமங்களே கோத்ரங்களென்று சொல்லுகிறார்கள். அது தவறாகும். ரிஷியின் பெயரை கோத்ர மென்றும், இந்நூலில் குறித்துள்ள சாஸ்த்ர சம்மதமான ப்ரவரைகளே ப்ரவரைகளென்றுந்தான் சொல்ல வேண்டும்.

72 ஆங்கிரஸ ப்ருஹதுக்த வாமதேவேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித வாமதேவஸ கோத்ர :

73 பார்க்கவ வாஸ்துதேவேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித வாஸ்துதேவஸ கோத்ர :

74 ஆங்கிரஸ ஹயக்ரீவ வாயவ்யச்சேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித வாயவ்யஸ கோத்ர :

75 பார்க்கவ வால்மீகேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித வால்மீகிஸ கோத்ர :

76 பார்க்கவ விஷ்வக்ஸேநேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித விஷ்வக்ஸேநஸ கோத்ர :

77 வைச்வாமித்ர மாதுச்சந்தஸ அகமர்ஷணேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித விச்வாமித்ரஸ கோத்ர :

78 ஆங்கிரஸ பௌரகுத்ஸ த்ராஸதச்யவேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித விஷ்ணுவ்ருத்தஸ கோத்ர :

79 பார்க்கவ வைரோஹித்யேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித வைரோஹித்யஸ கோத்ர :

80 பார்க்கவ வ்யாஸேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித வ்யாஸஸ கோத்ர :

81 பார்க்கவ சாரபங்க த்ர்யார்ஷேய ப்ரவராந்வித சாரபங்கஸ கோத்ர :

82 பார்க்கவ சார்ஞ்ஜவேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித சார்ஞ்ஜவஸ கோத்ர :

83 பார்க்கவ சாண்டில்யேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித சாண்டில்யஸ கோத்ர :

84 பார்க்கவ ச்யாவன ஆப்நுவாநேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித ஸ்ரீவத்ஸஸ கோத்ர :

குறிப்பு:- இந்த கோத்ர விபரம் ஸ்ரீ ஸோமயாஜுலு அவர்கள் இயற்றிய "வைச்ய தர்ம ப்ரகாசிகா" என்ற நூலில் உள்ளவாறு (தெலுங்கு) அகாராதி எழுத்து முறைப்படி அமைக்கப்பட்டுள்ளது.

அநேகர் ஸங்கேத நாமங்களையே கோத்ரங்களென்று சொல்லுகிறார்கள். அது தவறாகும். ரிஷியின் பெயரை கோத்ர மென்றும், இந்நூலில் குறித்துள்ள சாஸ்த்ர சம்மதமான ப்ரவரைகளை ப்ரவரைகளென்றுந்தான் சொல்ல வேண்டும்.

85 பார்க்கவ ஸ்ரீ தரேதி த்வ்யார்ஷேய ப்ரவராந்வித ஸ்ரீதரஸ கோத்ர :

86 பார்க்கவ சௌக்லேதி த்வ்யார்ஷேய ப்ரவராந்வித சுக்லஸ கோத்ர :

87 பார்க்கவ க்ருஷ்ணத்வைபாயநேதி த்வ்யார்ஷேய ப்ரவராந்வித சௌசேயஸ கோத்ர :

88 பார்க்கவ சௌநகேதி த்வ்யார்ஷேய ப்ரவராந்வித சௌநகஸ கோத்ர :

89 ஆங்கிரஸ ஸாத்யவ்ரத ஸாத்யேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித ஸாத்யஸ கோத்ர :

90 ஆங்கிரஸ சாகல்ய த்வ்யார்ஷேய ப்ரவராந்வித ஸாகலஸ கோத்ர :

91 பார்க்கவ ஸாநத்குமாரேதி த்வ்யார்ஷேய ப்ரவராந்வித ஸாநத் குமாரஸ கோத்ர :

92 பார்க்கவ ஸாநந்தநேதி த்வ்யார்ஷேய ப்ரவராந்வித ஸாநந்தநஸ கோத்ர :

93 பார்க்கவ ஸாம்வர்த்தகேதி த்வ்யார்ஷேய ப்ரவராந்வித ஸாம் வர்த்தகஸ கோத்ர :

94 பார்க்கவ ஸௌகாஞ்சநேதி த்வ்யார்ஷேய ப்ரவராந்வித ஸௌகாஞ்சநஸ கோத்ர :

95 ஆங்கிரஸ த்யாந்த ஸௌதீக்ஷ்ணேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித ஸௌதீக்ஷ்ணஸ கோத்ர :

96 ஆங்கிரஸ ஸௌநந்தர்யேதி த்வ்யார்ஷேய ப்ரவராந்வித ஸௌநந்தரஸ கோத்ர :

97 பார்க்கவ ஸௌவர்ணேதி த்வ்யார்ஷேய ப்ரவராந்வித ஸௌவர் ணஸ கோத்ர :

குறிப்பு:- இந்த கோத்ர விபரம் ஸ்ரீ சோமயாஜுலு அவர்கள் இயற்றிய "வைச்ய தர்ம ப்ரகாசிகா" என்ற நூலில் உள்ளவாறு (தெலுங்கு) அகாராதி எழுத்து முறைப்படி அமைக்கப்பட்டுள்ளது.

அநேகர், ஸங்கேத நாமங்களே கோத்ரங்களென்று சொல்லுகிறார்கள். அது தவறாகும். ரிஷியின் பெயரை கோத்ர மென்றும், இந்நூலில் குறித்துள்ள சாஸ்த்ர சம்மதமான ப்ரவரைகளை ப்ரவரைகளென்றுந்தான் சொல்ல வேண்டும்.

98 பார்க்கவ ஸௌப்ரம்ஹண்யேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித ஸௌப்ரம்ஹண்யஸ கோத்ர :

99 பார்க்கவ ஸௌபர்ணேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித ஸௌபர்ணஸ கோத்ர :

100 பார்க்கவ ஸௌம்யேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித ஸௌம்யஸ கோத்ர :

101 ஆங்கிரஸ ஸௌவர்ணேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித ஸௌவர்ணஸ கோத்ர :

102 பார்க்கவ ஹரிவல்க்யேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித ஹரிவல்க்யஸ கோத்ர :

ஆக,	த்ர்யார்ஷேய கோத்ரங்கள்	63	மொத்தம் 102 கோத்ரங்கள்.
	த்ர்யார்ஷேய கோத்ரங்கள்	38	
	பஞ்சார்ஷேய கோத்ரம்	1	

இதில் கூறப்பட்டுள்ள 102 கோத்ரங்களும் தனித்தனி கோத்ரங்களாகும். ஒன்றுக்கொன்று தாராளமாக சம்பந்தம் செய்து கொள்ளலாம். பார்க்கவர், ஆங்கிரஸர் ஆகிய இருவர்களால்தான் இத்தனை கோத்ரங்களும் ஏற்பட்டு விஸ்தாரமானபோதிலும், இந்த நூற்றிரண்டு கோத்ரங்களும் தனித்தனியாகவே கருதப்பட்டு, ஒன்றுக்கொன்று சம்பந்தம் செய்துகொள்ளலாம் என்பது சாஸ்த்ர சம்மதம்.

ஒவ்வொருவரும் சந்த்யாவந்தனம் செய்கையில், மேல்கண்டவாறு தத்தமது கோத்ரத்தின் பெயரை ப்ரவரசஹிதம் சொல்லிக் கொண்டு, பின்னர்த் தம் பெயரைச் சொல்லிக்கொள்ள வேண்டும். அதாவது, கோத்ரம், வேதசாகை, அநுஷ்டிக்கும் சூத்ரத்தின் பெயர், தன் பெயர் ஆகியவற்றை முறையே சொல்லுதல் வேண்டும். உதாரணமாக:- "ஆங்கிரஸ ராவிசிஷ்ட ப்ராபாதேதி த்ர்யார்ஷேய ப்ரவராந்வித ப்ராபாதஸ கோத்ர:, யஜுஸ் சாகோத்யாயீ ஆபஸ்தம்ப ஸூத்ர:, வேங்கடரமண சுப்தோஹம்போ அபிவாதயே" என்று சொல்லிக் கொள்ளவேண்டும். "யஜுஸ் சாகோத்யாயி ஆபஸ்தம்ப ஸூத்ர:" என்ற பதத்தையே சேர்த்து எல்லா கோத்ரஸ்தர்களும் சொல்லிக் கொள்ளவேண்டும்.

கோத்ரங்களும் ஸங்கேத நாமங்களும்.

———:oOo:———

எண்	கோத்ரங்கள்.	ஸங்கேத நாமங்கள்.
1	அகஸ்த்யஸ	அநபகுல, அநபாலகுல, அநுபகுல, அநுபால.
2	ஆத்ரேயஸ	அரிசிஷ்டகுல, அரஸகுல, அரிசட்லகுல, எலிசிஷ்டகுல, யரசிஷ்டகுல, ஹரிசிஷ்டகுல.
3	ஆச்சாயநஸ	அக்ரமூலகுல, அக்யமூல, அர்க்யமூலகுல, அமலகுல.
4	உக்ரசேநஸ	குமாரசிஷ்ட, குமிரிசிஷ்ட, கொமரசிஷ்டகுல.
5	உத்க்ருஷ்டஸ	கந்யகுல, காநுகுல, க்ராநுகுல, க்ராநு.
6	உத்தமோஜஸ	உதகாலகுல, உதகுல, உதஸிஷ்டகுல, உத்தமகுல.
7	ருஷ்யச்ருங்கஸ	அநந்தகுல.
8	ஔலசித்யஸ	யஸஸகுல, யாநஸககுல, யாநஸபிகுல.
9	கண்வஸ	கர்ணகுல, கர்ணுகுல, கர்ணடகுல, காடகுல, காடுகுல, கோடகுல, கௌடுகுல,
10	கந்தர்ப்பஸ	சரகுல, சேகோட்லகுல, சேகோள்ளகுல, மநகுல, ச்ரேஷ்டகுண்டலகுல.
11	கபிலஸ	மண்டு, மந்துகுல, ஹஸ்தகுல.

குறிப்பு:- இந்த கோத்ர விபரம் ஸ்ரீ சோமயாஜுலு அவர்கள் இயற்றிய "வைச்ய தர்ம ப்ரகாசிகா" என்ற நூலில் உள்ளவாறு (தெலுங்கு) அகாராதி எழுத்து முறைப்படி அமைக்கப்பட்டுள்ளது.

அநேகர் ஸங்கேத நாமங்களையே கோத்ரங்களென்று சொல்லுகிறார்கள். அது தவறும். ரிஷியின் பெயரை கோத்ர மென்றும், இந்நூலில் குறித்துள்ள சாஸ்த்ர சம்மதமான ப்ரவரைகளை ப்ரவரைகளென்றுந்தான் சொல்ல வேண்டும்.

ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஆத்மூரி - லக்ஷ்மீ நரஸிம்ம
ஸோமயாஜுலு அவர்கள் B. A., B. L., F. R. A. S.

பன்னருமெய் யன்பூறிப் பாரிற்செய் சேவையுடன்
தன்னலமி லாமை தவம்.

எண்	கோத்ரங்கள்.	ஸங்கேத நாமங்கள்.
12	கபீதஸ	வெங்காலகுல.
13	காஸ்யபஸ	கணமுககுல, கணமுகிகுல, கணமுகு குல.
14	குத்ஸஸ	இக்ஷ்வாகுகுல.
15	கௌண்டிந்யஸ	கரலோல, கரஹீல, கரஹீலகுல.
16	கௌந்தேயஸ	காமசிஷ்ட.
17	கௌசிகஸ	கரகபால.
18	க்ருஷ்ணஸ.	தரகுல, தரதகுல, தேநுகுல.
19	கார்க்யஸ	ப்ரஹிணிகுல, ப்ரஹீணுகுல, பைடிகுல.
20	க்ருத்ஸன்மதஸ	இஸபகுல, இஸுபகுல, இஷுபகுல, சந்நகுல, ஜநகுல, ஜ்யாநுகுல.
21	கோபகஸ	இஞ்சுபகுல, இஞ்சுபாஹ்வய, கோப குல, கோண்டகுல, கொண்டகுல.
22	கௌதமஸ	கந்தஹீல, கந்தஹீலகுல, கந்தஸீல, க்ரந்தி ஹீல.
23	சக்ரபாணிஸ	சக்ரமூலகுல, சக்ரமூலஸகுல.
24	சாமர்ஷணஸ	பெத்தச்ரேஷ்ட, பெத்திசிஷ்ட, பத சிஷ்டகுல, பத்தசிஷ்டகுல.
25	ஜடபரதஸ	குண்டகுல, தூரசிஷ்ட, தூரசிஷ்டகுல.
26	ஜதுகர்ணஸ	சந்த்ரகுல, சந்த்ரமசிஷ்ட, சந்த்ரமூல, சந்த்ரசிஷ்ட.
27	ஜம்பஸுதநஸ	த்ரிமூல, த்ரிமூலகுல.
28	ஜரத்காரஸ	சந்நகுல, ஜநகுல, ஜ்யாநுகுல.

குறிப்பு:- இந்த கோத்ர விபரம் ஸ்ரீ சோமயாஜுலு அவர்கள் இயற்றிய "வைச்ய தர்ம ப்ரகாசிகா" என்ற நூலில் உள்ளவாறு (தெலுங்கு) அகாராதி எழுத்து முறைப்படி அமைக்கப்பட்டுள்ளது.

அநேகர், ஸங்கேத நாமங்களையே கோத்ரங்களென்று சொல்லுகிறார்கள். அது தவறாகும். ரிஷியின் பெயரை கோத்ர மென்றும், இந்நூலில் குறித்துள்ள சாஸ்த்ர சம்மதமான ப்ரவரைகளை ப்ரவரைகளென்றுந்தான் சொல்ல வேண்டும்.

எண்	கோத்ரங்கள்.	ஸங்கேதநாமங்கள்.
29	ஜாபாலிஸ	ஸாரிசிஷ்டகுல, ஸாரசிஷ்டகுல.
30	பாப்ரேயஸ	சாகசிஷ்ட, சாகிசஷ்டகுல.
31	ஜீவந்திஸ	ப்ரூதிவாசிஷ்குல, ப்ரூமசிஷ்டகுல, வ்ருந்திகுல.
32	தரணிஸ	த்ரிவிக்ரமசிஷ்டஸ, த்ரிவிக்ரமசிஷ்டகுல.
33	தித்திரிஸ	பமதகுல, ப்ரமதகுல, ப்ரமரகுல, ப்ரவதகுல.
34	த்ரிஜடஸ	உபரகுல, உசிரிகுல.
35	தைத்ரேயஸ	தித்ருபேள்ளு, தித்ருபேள்ளு, தித்ரூப, தித்ரூபகுல.
36	தால்ப்யஸ	படாசிஷ்டகுல, படாமசிஷ்ட, படிசகுல, பலகுல, பலகலகுல.
37	தூர்வாஸஸ	திதச, திதசகுல, தெந்தசுல, தெந்தாசுல, தெதசகுல.
38	தேவராதஸ	ஹிராராசிகுல.
39	தேவவல்க்யஸ	உலிரகுல, உலிரிகுல, தேசிஷ்டகுல.
40	நாரதஸ	பாலககுல, பாலகுல.
41	நேத்ரபாதஸ	சந்தோகு, சந்தோகு குல.
42	பரஸ்பராயண்யஸ	துவ்விசிஷ்டகுல, பௌலஸ்த்யகுல, ஸ்ரீபும்சிககுல.
43	பல்லவஸ	கணபகுல, கண்டகுல, கண்டாசுலகுல, கண்டஸாகுல, கண்டாஸ்தூலகுல.

குறிப்பு:- இந்த கோத்ர விபரம் ஸ்ரீ சோமயாஜுலு அவர்கள் இயற்றிய "வைச்ய தர்ம ப்ரகாசிகா" என்ற நூலில் உள்ளவாறு (தெலுங்கு) அகாராதி எழுத்து முறைப்படி அமைக்கப்பட்டுள்ளது.

அநேகர், ஸங்கேத நாமங்களையே கோத்ரங்களென்று சொல்லுகிறார்கள். அது தவருகும். ரிஷியின் பெயரை கோத்ர மென்றும், இந்நூலில் குறித்துள்ள சாஸ்த்ர சம்மதமான ப்ரவரைகளை ப்ரவரைகளென்றுந்தான் சொல்ல வேண்டும்.

எண்	கோத்ரங்கள்.	ஸங்கேத நாமங்கள்.
44	பவித்ரபாணிஸ	தயசிஷ்டகுல, தயாசிஷ்டகுல, தசிஷ்டகுல, தைசெட்டகுல, தேசெட்டலகுல, தேசிஷ்டகுல, தைசிஷ்டகுல.
45	பாராசர்யஸ	காமதேநுகுல, படகசிலகுல, பாஞ்சாலகுல, பாஞ்சாளகுல, ப்ராணஸாலை, ப்ராணுஸாலகுல, ப்ராணசிலகுல, ப்ராணஸீலகுல, ப்ராக்பாலகுல, ப்ரௌடசிலகுல, பாபால, பாம்பாள.
46	பிங்களஸ	அயநகுல.
47	புண்டரீகஸ	அநுசிஷ்ட, அநுசிஷ்டகுல, க்ராநுகுல, தொண்டிகுல.
48	பூதிமாஷஸ	துர்வாடிகுல, துலாசிஷ்டகுல, துர்யாடகுல, துலசிஷ்டகுல, துலஸிகுல, தோடகுல, தோடிகுல.
49	பௌண்ட்ரகஸ	புஸ்கிமாம்சுகுல, புஸ்மிமாஸகுல, ப்ரோசிஷ்டகுல, ப்ரோலி, ப்ரோலேககுல.
50	பௌலஸ்த்யஸ	கோசில, உத்தமகோசில, பல்லவகோசில, படுகோசில, ஸ்ரீகோசில, பீமகோசில, ஸத்யகோசில, நந்திகோசில, புநகோசில, ஸௌர்யகுல, உத்தமஸீல, புநகோர்சில, பட்டுகோசில, ஸ்ரீபுஸ்குல, புநகசிலகுல.
51	ப்ராசீநஸ	வநிசிஷ்டகுல, வெநசிஷ்டகுல, வெளிசிஷ்டகுல.

குறிப்பு:- இந்த கோத்ர விபரம் ஸ்ரீ சோமயாஜுலு அவர்கள் இயற்றிய "வைச்ய தர்ம ப்ரகாசிகா" என்ற நூலில் உள்ளவாறு (தெலுங்கு) அகாராதி எழுத்து முறைப்படி அமைக்கப்பட்டுள்ளது.

அநேகர் ஸங்கேத நாமங்களையே கோத்ரங்களென்று சொல்லுகிறார்கள். அது தவருகும். ரிஷியின் பெயரை கோத்ர மென்றும், இந்நூலில் குறித்துள்ள சாஸ்த்ர சம்மதமான ப்ரவரைகளை ப்ரவரைகளென்றுந்தான் சொல்ல வேண்டும்.

எண்	கோத்ரங்கள்.	ஸங்கேத நாமங்கள்.
52	*ப்ராபாதஸ	உத்வாஹகுல, பெள்ளிகுல, ரவிசிஷ்டகுல.
53	ப்ருஹதச்வஸ	பேருசிஷ்ட, பேரிசிஷ்டகுல, பைருசிஷ்டகுல.
54	போதாயநஸ	புத்திகுல, புத்தி, புதநகுல.
55	பாரத்வாஜஸ	பலசிஷ்ட, பலசேஷ்ட, பலிசிஷ்ட.
56	பார்க்கவஸ	ப்ருதிவிசிஷ்ட, ப்ருத்விச்ரேஷ்ட.
57	மந்தபாலஸ	விந்நஸ, விந்நகுல, விஜுகுல, வெந்நகுல.
58	மாநவஸ	மந்யகுல, மந்யுஸகுல, மாநஸகுல, மாநாச்சகுல.
59	மரீசிஸ	தீக்ஷுமசிஷ்டஸ, தீக்ஷுமகுல, தீக்ஷுமசிஷ்டகுல, தீக்ஷுமச்ரேஷ்ட.
60	மார்க்கண்டேயஸ	மொதுகுல, மொர்க்காலகுல, மொருக, மொருஸ.
61	முத்கராஜஸ	பத்மசிஷ்டஸ, பத்மசிஷ்டகுல, பத்மச்ரேஷ்ட.
62	மைத்ரேயஸ	மத்திகுல, மதநகுல, மத்யஸகுல, மிதுநகுல, மைத்ரிகுல.
63	ஹிரண்யஸ	சந்த, சந்தகுல சந்தகுல, சங்காலகுல.
64	மௌஞ்ஜாயநஸ	முஞ்ஜகுல, மௌஞ்ஜிஸ, மௌஞ்ஜிகுல.
65	மௌத்கல்யஸ	நாபிள்ளகுல, நாபீலகுல, நாபீலஸகுல, மூநிகுல, மூலகுல.

* ஸ்ரீ வாசவாம்பிகை அவதரித்த கோத்ரம்.

குறிப்பு:- இந்த கோத்ர விபரம் ஸ்ரீ ஸோமயாஜுலு அவர்கள் இயற்றிய "வைச்ய தர்ம ப்ரகாசிகா" என்ற நூலில் உள்ளவாறு (தெலுங்கு) அகாராதி எழுத்து முறைப்படி அமைக்கப்பட்டுள்ளது.

அகேகர், ஸங்கேத நாமங்களையே கோத்ரங்களென்று சொல்லுகிறார்கள். அது தவறாகும். ரிஷியின் பெயரை கோத்ர மென்றும், இந்நூலில் குறித்துள்ள சாண்டில்ய சம்மதமான ப்ரவரைகளை ப்ரவரைகளென்றுதான் சொல்ல வேண்டும்.

எண்	கோத்ரங்கள்.	ஸங்கேத நாமங்கள்.
66	யாஸ்கஸ	வ்யாளகூலஸ, வெலிகோள்ள, வேலி கோள்ள.
67	யாஜ்ஞவல்க்யஸ	அபிமஞ்சிகுல.
68	வடுகஸ	அநுமர்ஷணகுல.
69	வரதந்துஸ	மாஸந்த, மாஸந்தகுல.
70	வருணஸ	ஏலசிஷ்டகுல, வெலசிஷ்டகுல, வெலி சிஷ்டகுல, சிரிசெஷ்டகுல.
71	வசிஷ்டஸ்	வஸ்தி, வஸ்திஸ, வஸ்திகுல, வஸ்த்ரகுல.
72	வாமதேவஸ	உபலாலகுல, உபமகுல, உபநகுல, உப மந்யகுல.
73	வாஸுதேவஸ	பீமசிஷ்ட, பீமசிஷ்டகுல, பீமச்ரேஷ்ட குல.
74	வாயவ்யஸ	ம்ரங்கமகுல, வ்ரகசிஷ்டகுல, வ்ரகால குல, வ்ரக்காலகுல, வ்ரங்கமகுல, வ்ரங்கமூலகுல.
75	வால்மீகிஸ	சுகாலகுல, ஸகாள்ளகுல, ஸுசாலகுல, ஸுஸாலகுல, ஸுஸோள்ளகுல.
76	விஷ்வக்ஸேநஸ	உபரிசிஷ்ட, விபரிசிஷ்ட.
77	விச்வாமித்ரஸ	விக்ரமசிஷ்ட, விக்ரமசிஷ்டகுல.
78	விஷ்ணுவ்ருத்தஸ	பிப்பலகுல, புப்பாலகுல.
79	வைரோஹித்யஸ	வஸந்த, வஸந்தகுல.
80	வ்யாஸஸ	நகு, நகுல, நகுகுல, நகுண்ட குல.

குறிப்பு:- இந்த கோத்ர விபரம் ஸ்ரீ ஸோமயாஜுலு அவர்கள் இயற்றிய "வைச்ய தர்ம ப்ரகாசிகா" என்ற நூலில் உள்ளவாறு (தெலுங்கு) அகாராதி எழுத்து முறைப்படி அமைக்கப்பட்டுள்ளது.

அநேகர் ஸங்கேத நாமங்களையே கோத்ரங்களென்று சொல்லுகிறார்கள். அது தவருகும். ரிஷியின் பெயரை கோத்ர மென்றும், இந்நூலில் குறித்துள்ள சாஸ்த்ர சம்மதமான ப்ரவரைகளை ப்ரவரைகளென்றுதான் சொல்ல வேண்டும்.

எண்	கோத்ரங்கள்.	ஸங்கேதநாமங்கள்.
81	சரபங்கஸ	க்ரமசிஷ்ட, க்ரமசிஷ்டகுல, க்ரமச்ரேஷ்டகுல.
82	சார்ஞரவஸ	குண்டககுல, கோண்டகுல.
83	சாண்டில்யஸ	துப்பால, துப்பாலகுல.
84	ஸ்ரீவத்ஸஸ	சிலகுல, ஸ்ரீரங்ககுல, ஸ்ரீலகுல.
85	ஸ்ரீதரஸ	சிரிசெஷ்ட, சிரிசெஷ்டகுல, ஸ்ரீசிஷ்ட.
86	சுக்லஸ	ஸ்ரீசாலகுல, ஸ்ரீஸாள்ள, ஸ்ரீஸாள்ளகுல.
87	சௌசேயஸ	இலமஞ்சிகுல, யலமஞ்சிகுல, ஹேலமஞ்சிகுல.
88	சௌநகஸ	கமலகுல, த்ருகசிஷ்ட, த்ருகசிஷ்டகுல, நநதகுல, சநகாலகுல, சௌனக:.
89	ஸாத்யஸ	அந்திரகுல, சிந்தகுல, சிந்தமசிஷ்ட, சிந்த்யகுல, சிந்தால.
90	ஸாங்கஸ	சாநகுல, ஸநகுல.
91	ஸாந்த்குமாரஸ	டங்காரகுல, முத்துகுல.
92	ஸாங்க்ருத்ஸஸ	ஸமசிஷ்டகுல.
93	ஸாம்வர்த்தகஸ	ரெண்டகுல, ரெண்டுகுல.
94	ஸாகாஞ்சநஸ	புச்சகுல, புச்சகசில, புநித, புநீதஸ, புநீதகுல.
95	ஸாதீக்ஷ்ணஸ	தந்தகுல, த்யந்தகுல, த்வந்தகுல, தெந்தகுல, தேவிசெட்ல, தொந்தகுல.
96	ஸாங்க்ருதஸ	இந, இநகுல, இநகோல, வீநுகுல.

குறிப்பு:- இந்த கோத்ர விபரம் ஸ்ரீ வேமயாஜுலு அவர்கள் இயற்றிய "வைச்ய தர்ம ப்ரகாசிகா" என்ற நூலில் உள்ளவாறு (தெலுங்கு) அகாராதி எழுத்து முறைப்படி அமைக்கப்பட்டுள்ளது.

அநேகர், ஸங்கேத நாமங்களையே கோத்ரங்களென்று சொல்லுகிறார்கள். அது தவறாகும். ரிஷியின் பெயரை கோத்ர மென்றும், இந்நூலில் குறித்துள்ள சாஸ்த்ர சம்மதமான ப்ரவரைகளை ப்ரவரைகளென்றுந்தான் சொல்ல வேண்டும்.

எண்	கோத்ரங்கள்.	ஸங்கேத நாமங்கள்.
97	ஸ்ரீவர்ணஸ	ப்ரொடயாசகுல, ப்ரொடயாஜகுல, ப்ரௌடயாஜ.
98	ஸ்ரீப்ரம்ஹண்யஸ	சந்தநகுல, ஸ்ங்கிக்தகுல.
99	ஸௌபர்ணஸ	புதுருகுல, புதுருக்ஸகுல.
100	ஸௌம்யஸ	ஹஸ்திகுல.
101	ஸௌவர்ணஸ	சுசாலகுல, ஸகாள்ளகுல, ஸ்ரீசாலகுல, ஸ்ரீஸோள்ளகுல, ஸ்ரீஸாலகுல.
102	ஹரிவல்கீயஸ	கபட, குரட, கொரட்குல, கோரண்ட குல.

ஸமாந கோத்ரங்கள்.

(3) ஆச்சாயந, ஆச்வலாயந. (4) ஔக்ரஸேந:, ஔர்வஸேந: (5) ஔதக்ருஷ்ட:, ப்ரமத: (8) ஔசித்ய:, பிசாபர்ப்ப: (12) காபீ தர:, சக்தி:, வே த நி தி : (14) கௌதஸ:, மஹாதேஜஸ்க: (16) கௌந்தேய:, காம்யக: (18) க்ருஷ்ண:, கார்ஷ்ண: (19) கார் க்ய:, அங்கிரஸ: (20) கார்த்ஸன்மத:, க்ருத்ஸ்ந, விஷ்ணுவ்ருத்த: (24) சாமர்ஷண:, ப்ரீதமநஸ்க:, புதுரு: (27) ஜம்பஸ்ரீதந:, தருண:, மாதவ: (28) ஜரத்கார:, ஜஹ்நு: (29) ஜாபால:, ஸநத்குமார: (30) பாப்ரி:, பாப்ரேய:, சாண்டில்ய: (31) ஜைவந்தி:, ப்ருஹஸ்பதி: (32) ஜாபாலி:, தாரணி:, த்ரிஜட: (33) தித்திரி:, கார்க்ய: (35) தைத் ரேய:, பவித்ரபாணி:, மந்தங்க: (40) நாரத:, பாவந: (41) நைத்ர பாத:, அத்ரி: (42) பாரஸ்பராயண:, காலவ:, பு ல ஸ் த் ய :

குறிப்பு:- இந்த கோத்ர விபரம் ஸ்ரீ ஸோமயாஜுலு அவர்கள் இயற்றிய "வைச்ய தர்ம ப்ரகாசிகா" என்ற நூலில் உள்ளவாறு (தெலுங்கு) அகாராதி எழுத்து முறைப்படி அமைக்கப்பட்டுள்ளது.

அநேகர் ஸங்கேத நாமங்களையே கோத்ரங்களென்று சொல்லுகிறார்கள். அது தவருகும். ரிஷியின் பெயரை கோத்ர மென்றும், இந்நூலில் குறித்துள்ள சாஸ்த்ர சம்மதமான ப்ரவரைகளை ப்ரவரைகளென்றுந்தான் சொல்ல வேண்டும்.

(44) பாவித்ரபாணி:, தேவல:, தெளர்வாள: (46) பிங்கள: (48) பூதிமாஷ:, ஸம்க்ருதி: (51) ப்ராசீந:, ஆச்வலாயன:, சமிக: (54) போதாயந:, பார்க்கவ: (58) மது:, மாண்டவ்ய:, மூகிராஜ: (59) அகூய:, ஜமதக்நி:, மரீசி: (61) ச்யவந:, மூகிராஜ: (62) மித்ரியு:, மைத்ரேய: (63) ஜம்பஸுதந:, தௌம்ய:, மௌஸுல: (64) மலஹார, முஞ்ஜிவ்ரத:, மௌஞ்ஜாயந: (66) யாஸ்க:, ஜைமிகி:, வாதூலஸ:, வீதஹவ்ய: (68) வாடுக:, ஸ்தூலசிரஸ்க: (69) கபிலா சார்ய:, ஜமதக்நி, வரதந்து: (70) சந்த்ரமௌளி:, வருண: (73) வாஸுதேவ:, ஜாபாலி: (74) வாயவ்ய:, ஹயக்ரீவ: (76) விஷ்வக்ஸேந:, வாலகில்ய: (78) பெசல:, விஷ்ணு:, விஷ்ணு வ்ருத்த: (79) வருண:, வைரோஹித்ய: (80) வ்யாஸ:, ஸம்வர்த்தக:, (81) சரபங்க:, காங்க்ஷிவத: (83) சாண்டில்ய:, தும்புரு: (85) சாண்டில்ய:, ஸ்ரீதர: (86) சுக்ல:, காக்ஷிதப: (87) சௌசேய:, சுநி:, க்ருஷ்ணத்வைபாயந: (88) துர்யவ்ரத:, சுக:, சௌநக:, சரபங்க: (89) ஸத்யவ்ரத:, ஸாத்ய: (90) சாகல்ய:, ஸநக: (91) மஹாஸேந:, மாண்டவ்ய:, ஸாநத்குமார: (96) விஸ்வதந்ய:, ஸுந்தர: (97) பாதிர்வ:, மௌஸல:, ஸௌவர்ண: (99) போதாயந:, ஸௌபர்ண: (101) ஆங்கிரஸ:, ஸ்ரீகண்ட:, ஸௌவர்ண: (102) மதங்க:, ஹாரிவல்க்ய:

ஸமான கோத்ரங்கள் என்றால் ஒரே கோத்ரத்திற்கு உள்ள பல பெயர்களைக் கூறுகிறது. இதில் காணப்படும் எண்கள் ஏற்கனவே கொடுக்கப்பட்டிருக்கும் அகாராதிவரிசையிலுள்ள கோத்ரங்களின் எண்களேயாகும். ஒரு எண்ணுக்கும் மற்றோர் எண்ணுக்கும் இடையிலுள்ள பெயர்கள் ஒரே கோத்ரமாகும். விபரம் தெரிந்து கொள்வதற்காக இந்த அட்டவணை கொடுக்கப்பட்டிருக்கிறது. வழங்கிவருவதற்கு 102 தனித்தனி பெயர்களுடன் உள்ள கோத்ரங்களையே உபயோகிப்பது நலம். இந்த அட்டவணையும் ஸ்ரீ ஸோமயாஜுலு அவர்களியற்றிய வைச்ய தர்ம ப்ரகாசிகா என்ற நூலில் இருந்துதான் எடுக்கப்பெற்றது.

குறிப்பு:- அநேகர், ஏங்கேத நாமங்களையே கோத்ரங்களென்று சொல்லுகிறார்கள். அது தவறாகும். ரிஷியின் பெயரை கோத்ர மென்றும், இந்நூலில் குறித்துள்ள சாஸ்த்ர சம்மதமான ப்ரவரைகளை ப்ரவரைகளென்றுந்தான் சொல்ல வேண்டும்.

*எச்சரிக்கை.

ஏகம்பொரு ளென்றேயறி விக்கின்றதொ ரறிவே
எங்கும்பிரி வறவேயொளிர் மெய்ஞ்ஞான நிறைவே
யோகம்புரி வோர்போற்றிடு துரியப்பெரு மலையே
யுகமாயிர மேயாயினு மாருத்தவ நிலையே
சோகம்பல வுந்தீர்த்தருள் புரிவாயருட் கலையே
ஜோதிச்சுட ரொளியீந்தருள்; வேரூர்துணை யிலையே
மாகந்தவழ் மாடஞ்செறி பெனுகொண்ட புரிக்கே
மல்கும்புகழ் தரவந்தருள் மணியே எச்சரிக்கை.

உருவாயரு வெனவாய்த்திரு குருவாயிவண் வருவாய்
உனதாள்தொழு மடியார்களுக் குடனேயருள் தருவாய்
மருவாய்ப்பல மலராய்மிளிர் மணியாயத னொளியாய்
மண்டுந்தழ லெனவாய்க்கதிர் மதியாய்ப்பர வெளியாய்
கருமாமுகில் நிறைவிண்ணெடு காலாய்க்கடல் நீராய்
காலங்களு மூன்றுய்ப்பல பண்டந்தரு பாராய்
அருமாமறை யுணர்சீரிய ருளமாம்நக ருக்கே
அணியாயொளிர்ந் துலகோர்க்கரு ளன்னுய் எச்சரிக்கை.

தனமுந்திகழ் வளமும்பல தான்யங்களு மாவாய்
தரைமீதுறு பலகோடி யுயிர்க்குச்சுக மீவாய்
நனவுங்கன வுந்தூக்கமு நண்ணுந்துரி யமுமே
நவிலற்கரு நின்பேரொளி யதனுற்பொலி வுறுமே;
மனமும்பொறி புலனுஞ்செலும் வழியான்செலல் முறையோ?
மாயைத்திரை நீக்கிக்கழ லருளற்குள மிலையோ?
தினமும்பல பெயரால்நினை யர்ச்சிக்க வெனக்கே
சீரார்வர மீவாயருட் செல்வீ எச்சரிக்கை.

ஓம் ஓம் ஓம்.

---

*இம் மூன்று பாடல்களும் ஸ்ரீ வாசவாம்பிகை பலனி வந்து ஆலயம் சேருஞ் சமயத்தில் பாடக்கூடியவை.

வேதாங்க கானம்
விளம்பற் கதிநம்
நாதாந்த நாதம்
நவில்ராஜ யோகம்
போதாந்த தீபம்
பொலியும் ப்ரகாசம்
வேதாந்த ஞானம்
விளங்கும் சிவோஹம்.

சதானந்த போதம்
தபோமந்த்ர சாரம்
உதாரத்வம் ஏகம்
உபாயம் விநோதம்
யதார்த்த ஸ்வரூபம்
யதிந்த்ர ப்ரபோதம்
சிதாகாச வாசம்
சிவோஹம் சிவோஹம்.

ஓம்

சாந்தி சாந்தி சாந்தி:



இந்நூலை அச்சியற்றித் தந்த

உடுமலை கோபால் மின் இயக்கிப் பதிப்பக உரிமையாளர்

ஸ்ரீ T. V. ராதாகிருஷ்ண செட்டியார்.



நற்குடியி லேதோன்றி நற்செயல்க ளேசெய்து
நற்புகழை யெய்தல் நலம்.

* பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
-[13]-	14	சங்கர் ஷிணீ	சங்கர்ஷிணீ
-[22]-	11	புஷ்பாணீ	புஷ்பாணி
க	3	மானிடர்கள்	மானிடர்கள்,
,,	25	தரும்.	தரும்.)
உ	11	வழங்கப்பட்டார்கள்	வழங்கப்பட்டார்கள்.
,,	23	பதமான்து	பதமானது
ரு	15	முந்தி	முந்தி)
v	7	ஹ்ரூணர்கள்	ஹ்ரூமணர்கள்
vi	14	வெட்டல்	வேட்டல்
viii	7	மாமிடி	ஸ்ரீ மாமிடி
xviii	23	காணப்படுகிறது	காணப்படுகிறது.
,,	24	விஷ்ணுவர்த்தனன்	விஷ்ணுவர்த்தனன்.
xix	4	வேங்டகஸ்வாமி	வேங்கடஸ்வாமி
xxiv	7	'ஒம்'	'ஓம்'
,,	29	ஏனக்	ஏனக்
I	17	கிரியயைக்	கிரியைக்
II	14		ஆதிபகவன்
9	26	புஷ்பப்	புஷ்பச்
11	2	ம்ாடிகளும்	மாடிகளும்
18	4	அறுகுதாலை	அறுகுமாலை
20	5	பல்லாயிர	பல்லாயிரங்
24	23	நாம	நாம்

* இந்து பழனி, முனிசிபல் உயர்தரக் கலாசாலையின் தலைமைத் தமிழாசிரியராகிய வித்வான் உயர்திரு **R. S.** மயில்சாமி நாயுடு P. O. L. அவர்களால் எழுதப்பெற்றது.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
25	22	பரலோகமாகியலா யத்திலே	பரலோகமாகிய லாயத்திலே
32	29	சூடைந்து	ஆட்டி
35	27	விடடையும்	வீடடையும்
38	31	தொழுப்பாய்ப்	தொழும்பாய்ப்
42	10	திறைகளெலாந்	திரைகளெலாந்
43	35	நீறை	நீரை
46	10	ஓவ்வொருவர்	ஒவ்வொருவர்
,,	19	சமயங்	
53	7	சைவாகமங்களே	சைவாகமங்களே
60	17	Dath	Dutt
61	21	உளதோ	உளதோ
64	3	விருக்கப் படுஉங்	விறுக்கப்படுஉங்
90	27	விசிரிம் பித்துக்	விசிரிப்பித்துக்
91	8	அப்பாய சாந்தத்தைத்	அப் பாயசாந்தத்தைத்
98	11	இணையுல்	இணையில்
112	18	நிறைந்து	நிறைந்து
115	20	மூந்தந்	மூத்தந்
117	1	,,	,,
132	27	நேத்தி	நேர்த்தி
133	28	க முகில்கள்	கருமுகில்கள்
,,	30	தி வனைய	திருவனைய
134	10	மெஞ்ஞான	மெய்ஞ்ஞான
150	24	உத்க்ருஷ்டித	உத்திஷ்டத
,,	,,	வரான்னி போதித	வரான் நிபோதத
165	5	கட்டங்களும்	கட்டடங்களும்
195	25	முத	
200	9	சென்றது	சென்றது.
203	27	கலைதிறன்	கலைத்திறன்
217	28	வரசவி	வாசவி

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
222	22	சந்தணை	சந்தன
227	25	ப பன்	பயன்
237	21	கண், முன்	கண்முன்
245	3	கொண்டு இருப்பதையும்,	கொண்டும் இருப்பதும்,
,,	25	திறன்முகு	திறன்மிகு
249	12	வர்ய்ந்த	வாய்ந்த
,,	20	செல்வனே	செவ்வனே
251	4	சத்த்ர	சந்த்ர
267	9	பூச்சிக் காட்ட	பூச்சி காட்ட
295	9	பெருவதால்	பெறுவதால்
307	16	திரவளத்தில்	திருவளத்தில்
325	9	மலர்க்	மலர்
,,	20	கலஞ்	களஞ்
326	1	ளெங்கோ	ளென்கோ
327	27	யடையட்டும்	யடைவார்களாக
328	,,	குழாங்கள்	குழாத்தினர்
333	18	இப்போது	இப்போதும்
336	11	தேடினல்தான்.	தேடினல்தான்
341	8	திரஷ்டாக்கள்	திருஷ்டாக்கள்
349	13	இந்திரியங்கட்கும் அகோசரமான ஐந்து	ஐந்து இந்திரியங்கட்கும் அகோசரமான
357	31	சிங்காரம்	சிருங்காரம்
360	14	ஸௌதிராமணி	ஸௌத்ராமணி
361	5	பவனவல்ல.	வனவல்ல.
367	32	பாதி விர்த்தியம்.	பாதிவிர்த்தியம்.
368	26	வேண்டுமென்று	வேண்டுமென்று,
369	2	புத்தேளி ரால்	புத்தேளிரால்
371	5	குறையும்	குறையும்.
389	5	அங்கரிமின்	அலங்கரிமின்

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
394	29	அலமந்துக்	அலமந்து
403	8	விழிந்தான்.	விழுந்தான்.
404	,,	துச்சகுனங்கள்	துற்சகுனங்கள்
413	28	வியலினின்	வியலுனின்
416	8	திவ்யாஞ	திவ்யஞா
417	1	வென்றுத்	வென்று
,,	4	மோனப் போணவே	மோனம் பேணவே
,,	6	புன்னைப்	பின்னைப்
,,	22	பொருளை யடியேற்	பொருள்சீ னடியேற்
420	24	விசாரித்தரியத்தக்க	விசாரித்தறியத்தக்க
423	21	ஜஹதஹல்	ஜஹதஜஹல்
429	1	பூணால்	பூணூல்
437		எழாம்	ஒன்பதாம்
450	22	8. ஔரித்யர்	8. ஔசித்யர்
457	18	தரிசுக்கப்பெற்ற	தரிசிக்கப்பெற்ற
470	2	வெள்ளியால்	உள்ளதாகி
,,	3	அடியும், உள்ளதாகி விளங்கும் கழுகுகளும்,	விளங்கும் கழுகுகளும், வெள்ளியால் அடியும்
473		அசீர்வசனம்	ஆசீர்வசனம்
478	8	விழையும்பீடு	விழையும் பீடு

குறிப்பு :— இந்நூலின் கண்ணே ஸ்ரீ வாசவி அஷ்டோத்ர சதநாமாவளியிலும், கோத்ர விஷயங்களிலும், இன்னும் சில இடங்களிலும் சப்தங்களை காண்பிக்கும் பொருட்டு பெரிய எழுத்துக்கள் உபயோகிக்கப்பட்டுள்ளன. அவற்றை உச்சரிக்கவேண்டிய விதம் :—

க = ka, க = ga, ச = ஸ, ச = cha, ட = ta,
ட = da, த = dha, ப = pa, ப = ba.

వా స వి

సంపుట. 1.	అక్షయ. 1926—27.	సంచిక. 6 పుట. 3.

విష్ణువర్ధనరాజుల చరిత్రము

(శ్రీయుత తుం. భగవన్తగుప్తగారు)

చంద్రవంశజులైన చాళుక్యరాజులు ఉత్తరహిందూస్థానమును విడిచి దక్షిణహిందూస్థానమున పశ్చిమభాగమందు రాజ్యము స్థాపించుకొనిరి. ఇట్లు చాళుక్యవంశమును స్థాపించినది మొదటి పులకేశనుడు. రెండవ పులకేశనుని కాలమున అతని సోదరుడగు కుబ్జవిష్ణువర్ధనుడు కృష్ణాగోదావరి నదుల మధ్యనుండు వెంగిదేశమునకు రాజైన సాలంకాయనుని జయించి ఆన 609-వ సం॥ లో ఆ దేశమునకు పశ్చిమ చాళుక్యరాజు పరమున ప్రతినిధిగా నేర్పడెను. అనంతరము ఆన 615-వ సం॥ లో కుబ్జవిష్ణువర్ధనుడు తన సోదరుని విడనాడి స్వతంత్రుడై తూర్పు చాళుక్యవంశమును స్థాపించెను. ఈతని వంశజుడే శ్రీ కన్యకాపురాణమందు చెప్పబడిన విష్ణువర్ధనుడు.

ఇట్లు వెంగిదేశమున రాజ్యముచేసిన తూర్పు చాళుక్యరాజులు:- (1) కుబ్జవిష్ణువర్ధనుడు, 18 ఏండ్లు. (2) మొదటి జయసింహవల్లభుడు, 30 ఏండ్లు. (3) రెండవ రాజానంద విష్ణువర్ధనుడు, 9 ఏండ్లు. (4) మంగి రాజు, 25 ఏండ్లు. (5) కొక్కిలి, 6 నెలలు. (6) రెండవ జయసింహ

వల్లభుడు, 13 ఏండ్లు. (7) మూడవ విష్ణువర్ధనుఁడు, 18 ఏండ్లు. (8) నాల్గవ విష్ణువర్ధనుడు, 30 ఏండ్లు. (9) విజయాదిత్యనరేంద్ర మృగ రాజు, 48 ఏండ్లు. (10) అయిదవ కలివిష్ణువర్ధనుడు, 1½ ఏండ్లు. (11) మూడవ గుణక విజయాదిత్యుడు, 44 ఏండ్లు. (12) తర్వ ఒక నెల. (13) యుద్ధమల్ల, 7 ఏండ్లు. (14) చాళుక్యభీమ, 30 ఏండ్లు. (15) కొల్లభిగండ, 6 నెలలు. (16) విక్రమాదిత్య, 11 నెలలు. (17) మొదటి అమ్మరాజు లేక ఆరవ విష్ణువర్ధనుడు, 7 ఏండ్లు. (18) రాజభీమ, 12 ఏండ్లు. (19) రెండవ అమ్మరాజు లేక విజయాదిత్య, 25 ఏండ్లు. (20) దానార్ణవ, 3 ఏండ్లు. (21) చోళరాజులు, 27 ఏండ్లు (22) శక్తివర్మ, 12 ఏండ్లు. (23) వివలాదిత్య, 7 ఏండ్లు. (24) రాజరాజు.

కుబ్జవిష్ణువర్ధనుడు గోదావరీతీరమున రాజ్యము చేయుచుండెను. ఆరవ విష్ణువర్ధనుడు రాజమహేంద్రుడను బిరుదువహించి పట్టణము నకు రాజమహేంద్ర వరమని పేరు పెట్టెను.

తూర్పు చాళుక్యరాజులు సుమారు నాలుగు శతాబ్దములు నిర్భయముగ రాజ్యపరిపాలన చేసిరి. వెంగిదేశము నేగాక దానికి ఉత్తర మున నుండు కళింగదేశములో కొంతభాగమునుకూడ ఏలుచుండిరి. రాజరాజ నరేంద్రునికి తర్వాత వెంగిదేశము చోళరాజుల పరిపాలన లోనికి పోయెను. ఈ చోళరాజులు 1228 వ సం॥లో ఒరంగల్లు గజపతి రాజులవలన ఓడింపబడిరి.

ఆరవ విష్ణువర్ధనుడు అన 918—925 వరకును; రెండవ అమ్మ రాజు 945—970 వరకును; ఈతని తమ్ముడు దానార్ణవుడు 970—973 వరకును రాజ్యముచేసిరి. తర్వాత వెంగిరాజ్యము 27 ఏండ్లు చోళ రాజుల స్వాధీనములో నుండెను. అనంతరము దానార్ణవుని కుమారు

డైన శక్తివర్మ ఆన 999 సం॥లో రాజ్యమునకు వచ్చెను. ఈతడే కన్యకాపురాణమందు చెప్పఁబడిన విజయార్కుఁడు. ఇతఁడు 12 ఏండ్లు రాజ్యముచేసెను. గనుక ఇతని రాజ్యకాలము 999—1011 గా ఉండవలెను. అనంతరము విమలాదిత్యుఁడు ఆన 1011 వ సం॥ మే 10 వ తేది గురువారమున రాజ్యమునకు వచ్చెను. కాని వెంటనే చోళదేశాధీశుఁడైన రాజేంద్ర చోళునిచే తంజావూరుకు ఖయిదీగా తీసుకొని పోబడి 1015 వ సం॥లో విడువబడెను. గనుక ఈతని రాజ్యము 1015 మొదలు 1022 వరకు 7 ఏండ్లుగా ఎన్నబడుచున్నది. ఇతఁడే కన్యకాపురాణమందు చెప్పఁబడిన విష్ణువర్ధనుఁడు. ఇతఁడు ఏడవ విష్ణువర్ధనుఁడు. ఇతఁడు చోళదేశమున నుండగా రాజేంద్రచోళుని, చెల్లెలైన కుందవను వెండ్లియాడెను. నన్నయభట్టు భారతము ప్రాసినది ఈరాజరాజ నరేంద్రునికాలములోనే. వై శ్యులుగుండ ప్రవేశమైన తర్వాత బాలనగరులను ఓడార్చినది ఈరాజరాజ నరేంద్రుడే.

వా స వి

సంపుటం. 3.	విభవ. 1928—29.	సంచిక. 2 పుట. 56.

కన్యకా పురాణము

(శ్రీయుత బుగ్గరపు సుబ్బయ్యగారి వెంకటసుబ్బయ్యశెట్టిగారు, రాజంపేట.)

శ్రీయుత తుంపూడి భగవంతగుప్తగారు వాసవిలో "శ్రీకన్యకా పురాణము స్కాందపురాణములోనిదని వ్రాయునదేగాని అందుల కానరాకుండుచేల" అని వ్రాసినారు. శ్రీయుత వాటంపాటి వెంకట నరసింహులుగారు చిత్పురస్థాపితముగా బ్రహ్మశ్రీ సరస్వతీ వెంకట సుబ్బరామశాస్త్రులుగారిచే ఆంధ్రతాత్పర్యము విశేషార్థములుచేర్చి వ్రాయించి శ్రీమాన్ ఉ. వె. సౌందరరాజయ్యంగారిచే పరిష్కరింప బడిన శ్రీ కన్యకాపురాణము స్కాందపురాణములో 185000 వేల శ్లోకములలో దనరారుచున్నదనియు అందు ఉత్తరఖండంబున ననత్సు జాత సంహితయను నొక భాగముగలదనిన్ని ఆర్యవైశ్య బృందము నకు నా వేదవ్యాసమునీంద్రులు సుమారు 2000 వేల శ్లోకములతో నా పరాశక్తి తత్వమన శ్రీ కన్యకాపరమేశ్వరి కావ్యఫక్కిని రచి యించి యుండిరనియు వ్రాయించియున్నారు గాన శ్రీయుత భగవంత గుప్తగారు స్కాందపురాణములో కానరాకుండుట యున్నదనుటకు కారణము ఎయ్యెదో తెలియరాకున్నది. ఇందువలన శ్రీ కన్యకాపర

మేశ్వరివైన అపారముగా యున్నటువంటి ప్రేమ, భక్తి, విశ్వాసము పోయి మన ఆర్యవైశ్యులకు కొన్ని గ్రామాదులలో మనస్పర్ధలు బయలుదేరి మామూలుగాయున్న కట్టుబాటులు దేవాలయములకు యిచ్చు రుసుములకు లోటుకలుగుచున్నది. కాన యిందులకు స్కాందపురాణములో ఎచ్చటయుండె విషయము అందులో ఏభాగములో నిది అందులో నిశ్చయాభిప్రాయము మరల వాసవికి తెలుపుకొన్న చో చిత్తూరు కాపురస్తులగు శ్రీయుత వారుంపాటి లక్ష్మీనరసింహులు గారున్ను రచియించిన బ్రహ్మశ్రీ వేదమూర్తులయిన సరస్వతి వెంకట సుబ్బరామశాస్త్రులున్ను బరిష్కరించిన శ్రీమాన్ ఉ. వె. సాందర రాజయ్యంగారు వారున్ను పైనుదహరింపబడిన దేవాలయములలో జరుగబోవు లోపములకు భాధ్యులని నాయొక్క విధేయత అభిప్రాయ ముగాన త్వరలో వాసవి అను పత్రికకు స్కాందములోని విషయ ములు వెలువరించెదరని ప్రార్థించుచున్నాడను.

ఇట్లు తపవైశ్యాభిమాని.
బుగ్గరపు సుబ్బయ్యగారి వెంకటసుబ్బయ్యశెట్టి,
రాజంపేట.

(శ్రీయుత తుం. భగవన్నగుప్తగారు)

తమ గ్రంథమునకు పురాణమనిపేరు పెట్టదలచిన గ్రంథకర్త లందరు, తమ పురాణము స్కాందములోనిదని చెప్పుటవాడుక ఇందు వల్ల స్కాందమునకు పరిమితములేదు. సంపూర్ణమైన స్కాంధము ఫలానిచోట నున్నదనిగాని అందులో లేని గాథలు స్కాందములో నివి కావనిగాని చెప్పువారు ఉన్నయెడల దానిని విశదీకరింపవచ్చును. గుండ్రవేశము విష్ణువర్ధనరాజుకాలమున జరిగినట్లు కన్యకాపురాణ

మందు ఉండుటయే గాక ఆర్యవైశ్యులు అందరు నమ్మియున్నసంగతి ఈ విష్ణువర్ధనరాజులు రాజమహేంద్రవరమున, రాజ్యము చేయు చుండిరనియు, గుండప్రవేశము జరిగినది పశ్చిమ గోదావరిజిల్లాలోని వెనుగొండపురములో ననీయుగూడ నమ్మియున్నారు. విష్ణువర్ధనుడు మృతిచెందినది క్రీ. శ. 1022-వ. సంవత్సరములో వ్యాసులు ఉండినది ద్వాపరయుగములో కలియుగము ఆరంభించి 5028 సంవత్సరములు అయినవి. వ్యాసులు కన్యకాపురాణము వ్రాయుట ఎట్లు సంభవము కాగలదు? భాస్కరాచార్యులు గూడ ప్రవేశకాలమున వైశ్యపురో హితుడుగ నుండినట్లు మనము నమ్మియున్నాము. ఆయన వ్రాసిన వైశ్యపురాణమును తెలుగు పద్యములుగల గ్రంథముకలదు. ఇది నన్నయభట్టుకు రాజరాజనరేంద్రునకుతర్వాత వ్రాయబడిన గ్రంథము. రాజరాజనరేంద్రుడు గతించినది క్రీ. శ. 1063-వ సంవత్సరములో అప్పటికిని వ్యాసులు ఉండిరా? వ్యాసులు సంస్కృత గ్రంథమును భాస్కరాచార్యులు తెలుగు గ్రంథమును వ్రాయుట ఏల తటస్థించి నది? కన్యకాపురాణము వ్యాసప్రోక్తముకానంత మాత్రముచే తోటులేదు. కన్యకా చరిత్ర గుండ ప్రవేశము వాస్తవము. భాస్కర పంతులు తర్వాత యేర్పడిను. గ్రంథములు తర్వాత వ్రాయబడినవి. శాపములు మొదలుగునవి నమ్మదగినవి కావు.

వా స వి

సంపుట. 3.	విభవ. 1928—29.	సంచిక. 4 పుట. 131.

శ్రీ కన్యకా పురాణము

(కవిభూషణ శతావధాని దోమా వేంకటస్వామి గుప్తగారు)

శ్రీ. బు. సుబ్బయ్యశెట్టిగారు శ్రీ కన్యకాపురాణంబు స్కాందపురాణాంతర్గతంబని, శ్రీ చిత్తూరి వాటంబాటి వేంకట నరసింహులు శెట్టిగారిచే ప్రకటింపబడిన ప్రతివల్ల దేలుననియు, ఆవిషయంబును, మ॥ తుం. భగవన్త గుప్తగారు గమనింపలేదనియు వ్రాయుచు, శ్రీ కన్యకా పురాణంబు స్కాందపురాణాంతర్గతంబయినట్లు వ్రాయకుండుటచేత ఆర్యవైశ్యులకు అమ్మవారి యందలి గౌరవభావంబు తగ్గునని వ్రాసినారు. దీనినిగూర్చి నే నొకించుక వ్రాయబూనెద.

(1) చరిత్ర పరిశోధన గావించురీతిగా శ్రీ భగవంతముగారు తమ యనుమానంబును నుడివిరి. (2) స్కాందపురాణంబున జన్మపుస్తకంబుగాదు; ప్రతికథయును దానిలోనున్నదని (చాలవఱకుగాను) అందురు. శ్రీ కన్యకాపురాణంబు అటువంటిదే యన సాహసింపను. అయినను కొందఱు కలదనుచున్నారు. కొందఱు లేదనుచున్నారు. ఈ సందర్భంబున కాలపరిస్థితినిగూర్చి— వ్యాసమహర్షి ద్వాపర యుగంబులోనివాడై యుండగా వేయియేండ్ల క్రిందటి యమ్మవారిని గూర్చి వ్రాయుట యెట్లు పొసగునని శ్రీ భగవంతము గుప్తగారు

ప్రాసినదియు బాగుగానే యున్నది. ఇందులకుగూడ మహర్షులు త్రికాల వేత్తలను ప్రత్యుత్తరంబు రానోపును. బ్రాహ్మణులు ద్రవ్యార్థులై యితరులకు నచ్చజేయుటకొఱకు కొన్నికొన్ని శ్లోకంబులను బద్యంబులను రచించి పూర్వగ్రంథంబులలో దూర్చుటకలదు గదా? శ్రీమద్రామాయణంబునం దటువంటి ప్రక్షిప్తంబులయిన శ్లోకంబు లనేకంబులు కలవు. ఎవ్వరే చమత్కార శ్లోకంబును రచించినప్పటికి అయ్యది కాళిదాసునిచే రచింపబడినదని ప్రతీతి గల్గించుటయును, ఎవ్వడే శృంగార పద్యంబును రచించినను దానియొక్క కర్తృత్వంబు శ్రీనాథమహాకవి కంటగట్టుటయును, ఎవరే హాస్యకథ నల్లినను దానిని సామాన్యముగా తెనాలిరామలింగని కథగా జేయుటయును జరిగినది. వేమన పద్యంబు నొక్కొక్క దేశములో నొక్కొక్క సంఖ్యగానున్నవి. ఈరీతిగానే యన్మవారి చరిత్ర స్కాందపురాణాంతర్గతంబనుట యనుమాన ప్రస్తంబు.

ఇంకొకమాట, ఒకానొక కథ పురాణాంతర్గతంబన్నంతమాత్రమునచే దానికి గౌరవ ప్రపత్తులు గలుగవలయు ననునట్టి నిర్ణయంబా? అందలి మంచిచెడ్డల విచారింప నవసరంబులేదా? అనుమాన ప్రస్తంబులయిన విషయంబులవలన గౌరవమేర్పడిన మాత్రమున లాభములేదు. చర్చింపబడిన విషయంబులనుండియే గౌరవం బేర్పడవలయును. మూఢ విశ్వాసమువల్ల విశేషలాభంబుండదు. ఆ లాభంబు బుద్బుద ప్రాయం బయినది. వివేచనముచేత నేర్పడిన నిర్ణయమయిన యభిప్రాయంబు స్థిరంబుగా నుండగలదు.

---

*பிரார்த்தனை.

ஆர்ய வைஶ்ய குல மணிகாள்! நமஸ்தே.

ஓதல் வேட்டல் பசுக்காத்தல் பயிர் செய்தல் வாணிபம் நடாத்தல் முதலியவற்றைத் தமது தொழில்களாகக் கொண்டவர்கள் அனைவரும் வைஶ்யர்கள் என்று நூல்கள் யாவும் கூறுகின்றன. நாம் "ஆர்ய வைஶ்யர்கள்" என்று சொல்லிக்கொண்டு வருகிறோம். அதாவது மேலான வைஶ்யர்கள் என்பதாம். எனெனில், ஒரு குடும்பத்தில் ஓர் உத்தம ஞானி உதயம் செய்தால் அப்பரம்பரையில் பின் உதிக்கும் அநேகருங்கூடப் பாவனமடைகிறார்களென்பது ஆன்றோர் துணிபு. ஸ்ரீ வாஸவாம்பிகை உற்பவித்தமையால், அவ்வன்னையின் கருணையால் திருக்காட்சி கண்டு ஞானோபதேசம் பெற்று ஆத்மஞானமடைந்து ஜீவன் முக்தியெய்திய வைஶ்யோத்தமர்களின் வழித்தோன்றல்களாகிய நாம் அவ்வம்பிகையின் உபதேசங்களைக் கைக்கொண்டு அனுஷ்டித்துவந்தமையால் நமக்கு அப்பெயர் உரித்தாயிற்று. அம்பிகையின் அவதார காரணத்தினால்தான் அத் தூய ஸம்ஸ்காரமும் ஆர்ய வைஶ்யர்கள் என்னும் பெயரும் நம்மவர்கட்குக் கிடைத்தன என்பது யாவரும் அறிந்ததே. அதனால் அம்பிகையின் அவதாரமும் ஆர்ய வைஶ்யர்களின் தோற்றமும் பிரிக்கமுடியாத சம்பவங்களைக்கொண்டன. அதனால் இந்நூலை ஆர்ய வைஶ்ய புராணம் என்றும் கூறலாம். இந்நூலை நம்மனோரனைவரும் பக்தியுடன் படித்துப் பயன்பெறவேண்டியது மிகவும் அவசியமாகும்.

இத்தகைய அற்புதமான நூல் வெளிவருவதற்கு எங்களூரில் சமூக சம்பந்தமாக நடந்த ஓர் விழா முதற்காரணமாக இருந்ததையுன்னினால் இவ்வருணைநகர் வாசிகட்கே ஓர் பெருமகிழ்ச்சியுண்டாகின்றது.

---

* இஃது அகில இந்திய ஆர்ய வைஶ்ய மஹாசபையின் காரியக்கமிட்டி & மத்தியக்கமிட்டி அங்கத்தினரும், தக்ஷிணகண்ட ஆர்ய வைஶ்ய மஹாசபையின் உபதலைவரும், சென்னைமாகாணச் சர்வகலாசாலையின் ஸெனெட்சபை அங்கத்தினரும், திருவண்ணாமலை ஆர்ய வைஶ்ய சமாஜத் தலைவருமான ஸ்ரீமான் **P. S. M.** கிருத்தினர் செட்டியார் அவர்களால் வரையப்பெற்றது.

இதனை வெளியிடற்கு வேண்டிய ஆதரவுகள் அளித்துந் தந்து உதவிபுரிந்த பெருங் கருணைவள்ளலாகிய வைய்ய பூஷணம் ஸ்ரீ P. A. ராஜு செட்டியார் அவர்கட்கும், கடைசிவரையில் அளவிடற்கரிதான பெருமுயற்சி எடுத்துக்கொண்டு, சற்றும் மனமிளைக்காது மிகுந்த ஊக்கத்துடன் ஓயாதுழைத்து, இக் கைங்கரியத்தைக் கூடிய விரைவில் நிறைவேறச் செய்த ஸ்ரீ S. V. நாகசுப்ரமண்யம் செட்டியார் அவர்கட்கும், இந்நூலாசிரியர்கட்கும் நாம் அனைவரும் என்றென்றும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

இந்நூல் மிகவும் சிறந்த முறையில் அமைந்துள்ளதென்பதை வாசகர்கள் யாவரும் உணர்ந்திருப்பீர்கள். விரைவில் அச்சிட்டு வெளியிட நேர்ந்த காரணத்தினால், இதில் ஆங்காங்கு எழுத்து, சொல், பொருள் ஆகியவற்றின் குறைகள் ஏதேனும் ஒரு சில இருத்தலும் கூடும். அறிஞர்கள் அன்புடன் திருத்தம் செய்ய விரும்புவாராயின், **சேலம் ஸ்ரீ M. V. கோபால் செட்டியார்** அவர்களின் விலாசத்திற் கெழுதியனுப்பினால் இரண்டாம் பதிப்பில் திருத்தம் செய்து செவ்வனே வெளியிடச் சௌகரியமாயிருக்கும்.

இந்நூல் வெளிவருவதற்கு ஆதி காரண கர்த்தாவும், ஆர்ய வைய்ய மஹாசபையின் கூட்டுக் காரியதரிசியும், தக்ஷிண கண்ட ஆர்ய வைஸ்ய மஹாசபையின் பொதுக் காரியதரிசியுமாகிய ஸ்ரீ M. V. கோபால் செட்டியார் அவர்கள் வெகுநாளாக ஒரு பெரிய ஆலோசனை செய்துகொண்டுள்ளார். நம் வைய்ய சமூகத்தவர் யாவரையும் சிறந்த மஹா புருஷர்களாக, ஞான மணிகளாக, தெய்வீக அம்சம் பொருந்தியவர்களாகக் காணவேண்டுமென்பது அவருடைய பேரவா.

இந்தப் பவித்ரமான ஸ்ரீ வாசவீ விஜயத்துடன் நிற்காமல், நித்ய நைமித்தியக கர்மானுஷ்டானங்கள், சரித்ராத்மகமான கிரந்தங்கள், வேத வேதாங்க இதிஹாஸ புராணச் சாராம்சங்கள், இந்தியாவின் மூர்த்தி ஸ்தல தீர்த்த மஹிமைகள், வரலாறுகள், ஆர்ய வைய்ய சமூக முன்னேற்றத்திற்கு இன்றியமையாத கல்வி, கைத்தொழில், விவசாயக் குறிப்புகள், பொருளாதார வழிகள், பக்தி யோக ஞான மார்க்க ரஹஸ்யங்கள் முதலியவை சம்பந்தமான வெளியீடுகளையும், ஸம்ஸ்கிருத ஆந்த்ர பாஷாபிவிருத்திக்கான வெளியீடுகளையும், மாணவ

மாணவிகளுக்கான புஸ்தகங்களையும் பிரசுரிக்க எண்ணங்கொண்டுள்ளார். இவைகளைச் செய்யப் பல பாஷைகளிலும் தேர்ச்சி பெற்ற பண்டிதர்களும், ஒரு சிறந்த நூல் நிலையமும் அவசியம் வேண்டும்.

இந்தியாவிலுள்ள பல மஹான்களுடன் தொடர்பு வேண்டும். பல வித்வான்கள், பேராசிரியர்கள், பலதுறைக் கலைகளில் பயிற்சி பெற்றுப் பட்டம் வகித்த பண்டித சிகாமணிகள் ஆலோசனை வேண்டும். ஒரு நல்ல அச்சாபீஸ் வேண்டும். முக்யமாகத் தமிழில் ஓர் பத்திரிகை வேண்டும். இவை எல்லாவற்றையும் விட நம் எல்லோருடைய ஒத்துழைப்பும் பூர்ண ஆதரவும் முதன்மையாக வேண்டும். இவையாவும் விரைவில் ஏற்படுதல் வேண்டும். எனெனில் நம் சூலதிபமாக விளங்கும் கோவை உபயபாஷாப்ரவீண பண்டிதராய ஸ்ரீ கிரந்தி வேங்கட கோபால மஹரிஷி அவர்களின் ஜீவிய காலத்திலேயே இப் பிரசுரக் கிளை மிக நன்முக வேரூன்றி நிலைத்து நற்பயனைத்தர முயலவேண்டும். இதுபோன்ற தூய எண்ணங்கள் ஸ்ரீ M. V. கோபால் செட்டியார் அவர்களின் உள்ளத்தின் கண்ணே உள்ளன. அத் தூய எண்ணங்கள் யாவும் நன்கு நிறைவேற, அவர் காணும் கனவனைத்தும் மெய்ப்பட, நம் அனைவரின் பூர்ண உதவியுமில்லாமல் அவர் தனிமையாக ஒன்றும் செய்வதற்கியலாது.

நம் சமூகம் பரிபூர்ண சுகத்தை அனுபவிக்கத் தக்க தருணம் வாய்த்துள்ளது. தகுந்தகண்ட மஹாசபையும் ஏற்பட்டிருக்கிறது. தலைசிறந்த வள்ளல் அதற்குத் தலைவராக விளங்குகிறார். நம்மவரில் அநேகர் தியாகவுணர்ச்சி மிகுந்து சீர்திருத்தத் துறையில் ஈடுபடத் துணிந்து முன்வந்துள்ளனர். இச்சமயம் நம்மவர் அனைவரும் தூய மனம், சொல், பொருள், செயல் முதலிய பல துறைகளிலும் உதவி புரிந்து, அவசியம் ஒத்துழைத்து, வேண்டிய ஆதரவு காண்பித்து, அநேக ஞான பொக்கிஷங்களை வெளிவரச் செய்து, அனைவர்க்கும் அறிவுவளர்ச்சி தந்து, ஒப்பற்ற பேரின்பத்திற்கு வித்தாகிய உத்தம அன்பினால் யாவரையும் ஒற்றுமைப் படுத்தி, எவ்வுயிர்க்குள்ளும் இறையொளிகண்டு இன்புறச் செய்து, நம் சமூகத்திற்கும் தேசத்திற்கும் நன்மையளித்தல் வேண்டுமென யான் ஆர்ய வைச்ய சமூகத்தாரனைவரையும் பணிவுடன் பிரார்த்தித்துக் கொள்ளுகின்றேன்.

யாவும் இனிது நிறைவேறுமாறும், நம் நாடு சிறந்த உன்னத நிலையெய்தி விளங்குமாறும், எவ்வுயிரும் இன்பம் எய்திடுமாறும் திருவருள் புரியவேண்டுமென எல்லாம்வல்ல இறைவியின் இணையடிகளை இதயபூர்வமாய் இறைஞ்சுகின்றேன்.

(Sd.) P. S. M. Theerthagiri Chetty.

இப் புத்தகமானது நமது வைஸ்ய சமூகத்தினர்க்கு ஓர் வரப்ரஸாதமாகவும், சமூக முன்னேற்றத்திற்கு உயிர்க் கருவியாகவும், ஆண் பெண் இருபாலாருக்கும் குடும்ப பொக்கிஷமாகவும் ஏற்றுக்கொள்ளக்கூடியது. அவ்வாறு அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனக் கோருவதுடன் நில்லாது, சமூகம் உயர்நிலை அடையவும், சமூகத்தவர் பெருங்கீர்த்தி யெய்தவும், உன்னத இன்பமடையவும், இன்னும் அநேக புத்தகங்களை எழுதி வெளியிடுமாறு கிரந்த கர்த்தர்க்கு நீண்ட ஆயுளும், திடகாத்திரமும், அன்னவர்க்கு ஏற்ற எல்லாமும் கொடுத்து உதவி, அன்னை வாசவி அருள் புரிய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

(Sd) E. S. மணி.

சுபம்.

---

† இந்து பழனி, ஆண்டவன் ஸ்டோர்ஸ் உரிமையாளர் ஸ்ரீமான் E. S. மணி செட்டியார் அவர்கள் எழுதியது.

ஓம் தத் ஸத்.